2375

172/376

உ

கடவுள் துணை.

அதிவீரராமபாண்டியர்

திருவாய்மலர்ந்தருளிய

# நைடதமூலமும்

திருத்தணிகை-கந்தப்பையர்குமாரர்

சரவணப்பெருமாளையராலும்

இவர் - குமாரர்

கந்தசாமிஐயராலும்

செய்யப்பட்டபதவுரையும்

களத்தூர் - தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியாரால்

செய்யப்பட்டகருத்துரையும்

பலவிலக்கணமேற்கோளுமாகிய

இவை

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பிழையறப்பரிசோதித்து.

தி-இருசப்பமுதலியார் குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

தாது ௵

O-15AP,N
1976
116609



கடவுள்துணை.

# படல அகராதி.



| பக்கம் | அத்தியாயம் | படலங்களின்பெயர். | விருத்தத்தொகை. |
|---|---|---|---|
| ௪௮௩ | ௨௮ | அரசாட்சிப்படலம் | ௰௫ |
| ௩௪ | ௩ | அன்னத்தைக்கண்ணுற்றபடலம் | ௭௪ |
| ௯௪ | ௪ | அன்னத்தைத்தூதுவிட்டபடலம் | ௱௩௪ |
| ௱௭௯ | ௰ | இந்திரப்படலம் | ௨௧ |
| ௩௮௪ | ௰௭ | இளவேனிற்படலம் | ௰ |
| ௩௭௮ | ௰௯ | கலிதோன்றுபடலம் | ௰௪ |
| ௪௯௫ | ௨௯ | கலிநீங்குபடலம் | ௰௭ |
| ௪௨௮ | ௨௨ | கான்புகுபடலம் | ௨௧ |
| ௱௨௯ | ௫ | கைக்கிளைப்படலம் | ௨௩ |
| ௱௫௧ | ௮ | சந்திரோபாலம்பனப்படலம் | ௩௭ |
| ௨௩௬ | ௰௨ | சுயம்வரப்படலம் | ௱௭௫ |
| ௪௱௧ | ௨௰ | சூதாடுபடலம் | ௨௮ |
| ௪௭௨ | ௨௭ | தேவியைக்கண்ணுற்றபடலம் | ௨௬ |
| ௰௯ | ௨ | நகரப்படலம் | ௪௨ |
| ௪௱௰௧ | ௨௧ | நகர்நீங்குபடலம் | ௪௬ |
| ௱௮௯ | ௰ | நளன்றூதுப்படலம் | ௱௩௯ |
| ௪ | ௧ | நாட்டுப்படலம் | ௨௭ |
| ௱௪௨ | ௭ | நிலாத்தோற்றுப்படலம் | ௨௰ |
| ௪௩௯ | ௨௩ | பிரிவுறுபடலம் | ௩௭ |
| ௩௬௪ | ௰௬ | புனல்விளையாட்டுப்படலம் | ௨௨ |
| ௩௮௬ | ௰௮ | போர்துகொய்படலம் | ௰௪ |
| ௩௱௰௭ | ௰௩ | போர்புரிபடலம் | ௭௮ |
| ௩௪௭ | ௰௪ | மணம்புரிபடலம் | ௯௮ |
| ௱௬௬ | ௬ | மன்மதோபாலம்பனப்படலம் | ௰௯ |
| ௱௩௭ | ௯ | மாலைப்படலம் | ௰௨ |
| ௩௭௩ | ௰௫ | மீட்சிப்படலம் | ௰௫ |
| ௪௫௭ | ௨௫ | வீமன்தேடவிட்டபடலம் | ௰௬ |
| ௪௫௰ | ௨௪ | வேற்றுருவமைந்தபடலம் | ௰௮ |



ஆக படலம்-௨௮-இ-செய்யுள்-௲௭௧.

உ

கடவுள் துணை.

# விருத்த அகராதி.


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| அன்னங்கண்படு | ௪ | அன்னகாலை | ௱௭௬ |
| அரக்கெறி | ௰௧ | அத்திறங் | ௱௭௭ |
| அல்லியங் | ௰௧ | அத்தகைய | ௱௮௩ |
| அவிரிழை | ௰௨ | அருந்தவனே | ௱௮[illegible] |
| அருமறை | ௰௨ | அண்டருல | ௱௮௬ |
| அகனிலாமணி | ௨௪ | அன்னமுளை | ௱௮௭ |
| அருளின | ௩௩ | ஆத்தமுன் | ௱௯௧ |
| அனங்கனை | ௩௫ | அங்கலுழ் | ௨௱௪ |
| அணங்கினுக் | ௩௯ | அண்ணறன் | ௨௱௭ |
| அரும்பிள | ௪௫ | அங்கண்மா | ௨௨௪ |
| அளிமூர | ௪௯ | அன்றியுங் | ௨௩௪ |
| அலையொலி | ௫௩ | அவ்வுரை | ௨௩௮ |
| அன்னைமூப் | ௬௧ | அக்கிரு | ௨௪௩ |
| அணிச்சமென் | ௬௨ | அயில்வளி | ௨௫௪ |
| அணிக்கொரு | ௬௩ | அள்ளிக் | ௨௫௮ |
| அணியின | ௬௫ | அலங்குளை | ௨௭௨ |
| அருந்தவத் | ௬௮ | அமைத்தட | ௨௯௫ |
| அணித்தா | ௮௬ | அவ்வழி | ௨௮௩ |
| அவிர்பூ | ௮௯ | அயினிகர் | ௨௮௯ |
| அறைபொற் | ௯௯ | அறக்கருங் | ௨௯௰ |
| அலர்வார் | ௱௰௫ | அரியசிறடி | ௨௯௨ |
| அன்னமுளைத்த | ௱௨௰ | அமிழ்திளை | ௩௱௧ |
| அன்னன்கொடர் | ௱௨௨ | அள்ளிலை | ௩௱௮ |
| அன்னமுறை | ௱௨௫ | அஞ்சனமெழுத | ௩௱௰௧ |
| அல்லலுற் | ௱௨௭ | அலைகட | ௩௱௰௫ |
| அலைத்தடங் | ௱௩௰ | அழகினைச் | ௩௱௰௭ |
| அங்கண் | ௱௪௰ | அருமருந் | ௩௨௯ |
| அகல்விசும் | ௱௪௬ | அமைப்பருந் | ௩௩௩ |
| அல்லிருண் | ௱௫௪ | அயிலெடுத் | ௩௩௬ |
| அந்தாமரையின் | ௱௫௬ | அறைகழற் | ௩௩௬ |
| அறுகான் | ௱௬௩ | அல்லலுழந் | ௩௪௫ |
| அலைவாய் | ௱௬௬ | அங்கண்வானத் | ௩௪௬ |
| அலரின் | ௱௭௰ | அழகுவாய்ப் | ௩௪௮ |
| அருவமாயனு | ௱௭௰ | அரும்புமென் | ௩௫௬ |
| அருவமாயு | ௱௭௨ | அலஞ்சலங் | ௩௬௧ |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| அள்ளிலைமணி | ௩௬௬ | ஆங்கவண் | ௱௮௩ |
| அன்னைதா | ௩௬௯ | ஆங்கது | ௱௯௯ |
| அல்லியங் | ௩௭௧ | ஆற்றல்சாலனையே | ௨௩௩ |
| அன்னைய | ௩௭௨ | ஆற்றல்சான் | ௨௯௮ |
| அண்ணலங் | ௩௭௩ | ஆண்டகைக் | ௩௪௫ |
| அருமணமுனி | ௩௭௭ | ஆற்றுவேள்வி | ௩௪௭ |
| அகழியங் | ௩௭௭ | ஆம்பலம் | ௩௬௰ |
| அருந்ததி | ௩௮௰ | ஆற்றுவஞ் | ௪௨௪ |
| அருமறை | ௩௮௨ | ஆயினுமினி | ௪௨௪ |
| அணங்குநோய் | ௩௮௬ | ஆயிடையுயிர் | ௪௨௯ |
| ஆரவமேகலை | ௩௯௧ | ஆங்கதுகேட் | ௪௩௨ |
| அரசர்கோன் | ௩௯௭ | ஆயிடையின் | ௪௩௮ |
| அர்துகி | ௩௯௯ | ஆயிடைக்கான் | ௪௩௯ |
| அலர்முலை | ௪௱ | ஆவியன்ன | ௪௫௪ |
| அரிக்குரற் | ௪௱ | ஆழிகும்புவி | ௪௮௮ |
| அனைத்தையுந் | ௪௱௰௧ | இன்னதன் | ௩௪ |
| அலமருக்க | ௪௱௰௮ | இளைத்தயர் | ௫௮ |
| அடிதொரு | ௪௨௧ | இன்னபொன்னிற | ௫௯ |
| அள்ளிலை | ௪௨௬ | இழையிடை | ௭௩ |
| அறந்தலை | ௪௨௭ | இத்தகைவினைப்பின் | ௭௭ |
| அள்ளிலைப் | ௪௨௯ | இவ்வாறு | ௯௯ |
| அனிச்சமென் | ௪௩௪ | இன்பக்கலவி | ௱௰௮ |
| அடைந்த | ௪௪௫ | இவ்வாறிருந் | ௱௨௰ |
| அணுகியாங் | ௪௪௬ | இன்னகாரிருட் | ௱௫௰ |
| அடைந்தமர்ந்தர் | ௪௪௭ | இன்னவாறு | ௱௭௩ |
| அனையமட | ௪௪௯ | இடுக்கணே | ௱௭௬ |
| அழலினின் | ௪௫௧ | இவணமுற் | ௱௯௨ |
| அதிர்பொலன் | ௪௫௩ | இனையன | ௱௯௯ |
| அன்னவாறு | ௪௫௬ | இழைவளர் | ௨௱௭ |
| அழுவதென் | ௪௫௮ | இன்னிசை | ௨௱௮ |
| அதுமிளர்தலு | ௪௬௰ | இருவிசும் | ௨௱௰௪ |
| அழுதஉண்கணு | ௪௬௨ | இனையனத் | ௨௱௰௬ |
| அழவிலாதுண | ௪௬௪ | இன்னவாறுளத்தி | ௨௨௩ |
| அழலுமீறு | ௪௭௭ | இருதடம்புயமும் | ௨௨௬ |
| அடைந்த | ௪௭௭ | இங்கிவர் | ௨௩௰ |
| அலர்முலை | ௪௭௯ | இன்னணர் | ௨௩௨ |
| அன்னகாலை | ௪௮௰ | இன்னண | ௨௩௬ |
| அன்னவா | ௪௮௫ | இன்னவை | ௨௩௯ |
| ஆடவரோ | ௨௫ | இழைபரந் | ௨௪௪ |
| ஆகுலத்துடன் | ௬௩ | இடரொதுவிரா | ௨௫௮ |
| ஆயவெள்ளம | ௱௨௧ | இமிழ்கடி | ௨௬௰ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| இருங்கடற | உசுச | உருவின்மைந்தரில் | உய |
| இன்னசைத் | உஎக | உள்ளமொன்று | ஙக |
| இழைசுட | உகூய | உலனூறுசெய்த | கூங |
| இழைபாந்திமைக்கு | உகூஎ | உலகமெலாம் | ௱ரு |
| இழைபுனை | ஙூ௱எ | உயிருதவி | ௱கூ |
| இன்னரிச் | ங௱யச | உளத்தன | ௱யக |
| இன்னணங் | ஙஙகூ | உருவிளை | ௱ஙச |
| இகன்மிகு | ஙசய | உருகியுளங் | ௱அக |
| இன்னகளத் | ஙசஉ | உன்றுழை | ௱கூஉ |
| இன்னபோணி | ஙருய | உண்ணெகிழ் | ௱கூங |
| இன்னவை | ஙருச | உரவுநீர்ச் | ௱கூ[illegible] |
| இன்னமிழ் | ஙசுஎ | உடைப்பெரு | ௱கூரு |
| இருங்கடற்று | ஙஎச | உரியதங்கொழுநர் | உ௱க |
| இனையன | ஙஅய | உருவெளியாக | உ௱அ |
| இந்நகர் | ஙஅங | உண்ணனிண | உஉரு |
| இன்றுனைக் | ஙஅச | உருவுகண்டு | உசரு |
| இன்னதன் | ஙஅகூ | உலகொரு | உசஎ |
| இணைவிழ் | ஙகூச | உரவுநீர்க் | உஎஉ |
| இன்னனை | ஙசுசு | உரையது | உஅச |
| இந்திரசேனனென் | ச௱யங | உளங்கனிந் | ங௱உ |
| இன்னுயிருய்ய | சஉக | உரிமையிற் | ங௱யஅ |
| இன்னகிற்புகை | சஙச | உடல்சின | ஙஉங |
| இவ்வாறு | சசங | உதகநல்குநல் | ஙருஉ |
| இன்னதன்மையன் | சருரு | உடைதிரைப் | ஙசுசு |
| இருதுபன் | சருரு | உள்ளங்கொண் | ஙஅகூ |
| இனையனுகிய | சருஎ | உரவுநீர்க் | ச௱சு |
| இன்னளென்றனை | சசுய | உயிர்கிகர் | ச௱ய[illegible] |
| இன்னவாய் | சசுய | உயிர்த்து | சருசு |
| இனைய்விஞ்சை | சஎய | உரைசெய் | சசுக |
| இருதுபன் | சஎகூ | உறுவவோ | சஅஉ |
| இழைத்த | சஎக | உரங்கனிந் | யங |
| இருதுபன்னன் | சஎங | ஊழியல் | ௱அ |
| இன்னவிந் | சஎரு | ஊத்தனவா | ௱அ |
| இன்னகூறனு | சஎசு | ஊர்சுணங் | [illegible] |
| ஈங்கிவன் | அஉ | ஊன்பயில் | ஙஉச |
| ஈட்டுமணிகள் | ௱யங | ஊறுசெய் | சஉகூ |
| ஈங்கிவ்வாறு | ௱உங | எனவினவ | ருஉ |
| ஈர்க்கிடை | உஎச | என்றின் | கூய |
| ஈங்கிவனி | ஙஎஅ | என்னுள்ந் | ௱சு |
| ஈங்கடைந்த | சஎங | என்குறை | ௱ய |
| ஈய்ந்தவாலரி | சஎசு | என்னைவாங்கு | ௱யஉ |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| என்றுகூறி | ௱ஙரு | ஏந்தலோ | ருச |
| என்னணி | ௱எச | ஏகாவிசும்பி | கூங |
| என்றுமுனி | ௱அஉ | ஏதமில்குணத்தின் | உ௱யங |
| என்றுமற் | ௱கூரு | ஏர்குடி | உருய |
| என்னருந் | ௱கூரு | ஏற்றுரி | உருங |
| என்னும்விள்ளா | ௱கூஎ | ஏழ்நிலவனைப்பில் | உஅக |
| எப்பொரு | ௱கூஅ | ஏழுறுமன்னர் | உகூஉ |
| என்னவேந்து | ௱கூகூ | ஏந்திளமுலையா | ங௱கூ |
| எதிர்முகமா | உ௱சு | ஏனையுள்ளயாவு | ஙருங |
| எய்தியமகளிர்தம்மில் | உ௱யச | ஏந்திளவனமுலை | ச௱க |
| எம்மிறை | உ௱யரு | ஏந்தலேகிய | சருஉ |
| என்னுளத் | உ௱யஎ | ஐயமுறே | எஎ |
| என்றிவன் | உஙஉ | ஐயரிக்கண் | ௱ஙங |
| என்றவா | உஙச | ஐந்தருநீழலி | ௱கூச |
| என்றிவன்புகன்ற | உஙரு | ஐங்கணைக் | உஉங |
| எய்தியது | உஙசு | ஐந்தருநீழல்வே | உஙய |
| என்றுார்வ | உருரு | ஐயரிபாந்து | உசரு |
| என்றுவெந் | உருகூ | ஐயரிசிதறு | உசுக |
| எழிறிகழ் | உசுங | ஐயநீயாடு | ச௱கூ |
| எரிகதிர் | உசுஅ | ஐயன்கமல | சசஉ |
| என்றலும் | உகூச | ஒழுகுதீம்புனல் | சு |
| என்னமற் | ங௱ய | ஒற்றையாழியக் | யஎ |
| என்றியலனைங் | ங௱யங | ஒன்னலர் | ஙஉ |
| என்றுறவேனை | ங௱யங | ஒழுகொளி | எஉ |
| என்றலுங் | ங௱யகூ | ஒள்ளிர்பொன் | சுக |
| எரிதிரைசுருட்டு | ஙசுஎ | ஒற்றையாழியான் | ச௱ஙஎ |
| என்றலுமமார் | ஙஎகூ | ஒளிமுகமிழப்ப | ௱கூச |
| என்னனைல | ச௱ரு | ஒருத்தியா | உ௱யக |
| என்ஞக | ச௱கூ | ஒள்ளழல் | ஙஉரு |
| என்றலுமுறுவலி | ச௱யக | ஒளிகிளர் | ஙசய |
| என்னவிவந் | ச௱யங | ஒற்றர்கூற | ஙசஅ |
| என்றவ | ச௱யச | ஒற்றரோகியவ் | சஅகூ |
| என்னலும் | ச௱யசு | ஓவியத் | ஙகூ |
| என்றலுக | ச௱யஎ | ஓங்குயர் | உருஉ |
| எண்டிசைத் | சஉஉ | ஓவியமொழுத | உஅய |
| எண்ணியது | சஙஎ | ஓவியமொழுகரு | ஙகூகூ |
| எழுமகன்முலினி | சஙஎ | ஓர்துகிலிருவரு | சஙக |
| என்னுஉருகி | சசஉ | ஓரிடக்கனு | சசுங |
| என்றுகூறி | சசுரு | ஓகையோடெனக் | சசுங |
| என்றுகூறனு | சசுங | கருவிமாமழை | ச |
| என்றுகண் | சஎகூ | கங்கையென் | ரு |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| கறுவொடு | கூ | கடிமலர்ப் | உ௱அய |
| கடல்படு | யச | கனிமகிழ் | உ௱அரு |
| கன்னைகன்ற | யஎ | கலத்தொடு | உ௱அகூ |
| கணங்கொண் | உக | கஞ்சமென் | ஙாக |
| கட்புனைகொண் | ஙஎ | கழைமெனத் | ஙாச |
| கல்வியின் | சய | கலைவளர் | ஙாய |
| கல்வியினகன்றிடு | கூய | கண்டவர் | ஙாயஅ |
| கலைகடிச் | கூஅ | கந்தடுதருகட் | ஙஙஉ |
| கஞ்சவர் | கூஉ | களத்திடைக் | ஙஙஉ |
| கரும்புயன் | எஅ | கருணையா | ஙஙச |
| கட்புலன் | அங | கண்ணாதன் | ஙசங |
| கண்ணுளை | அச | கள்ளாருமலர் | ஙருஉ |
| களிமாமயில் | கூய | கமலமீதுசெங் | ஙருஉ |
| கருந்தானா | கூஅ | கழிமடநாண | ஙருக |
| கந்தடுகிம் | ௱கூ | கத்திகைக் | ஙகூக |
| கன்னிமன்ற | ௱எ | களிக்கயல்பொருது | ஙகூக |
| கடல்குழ் | ௱யங | கலவியின் | ஙகூங |
| கருத்திறாடெழு | ௱சய | கவிகெழு | ஙஎச |
| கதிர்செய் | ௱சங | கதிர்மணி | ஙஎகூ |
| கனிசெய் | ௱சகூ | கலைவலா | சஅஉ |
| கனிகொள் | ௱சஅ | கடிமனை | ஙஅரு |
| கஞ்சுலைய் | ௱சகூ | கள்ளுயிர்க் | ஙஅங |
| கன்றுகுனிலாக் | ௱ருங | களிச்சுரும் | ச௱ |
| கன்னல் | ௱அஉ | கலைகணைதாவி | ச௱க |
| கழைகளிபுகா | ௱கூய | கள்ளுறை | ச௱அ |
| கண்ணைகன் | உ௱உ | கலைக்கடல் | ச௱க |
| கனைக்குழை | உ௱ச | கழைகனி | ச௱ய |
| கள்ளவிழ் | உ௱கூ | கற்றையங் | ச௱யஉ |
| கருந்தடங் | உ௱ய | கனிமயில் | ச௱உஅ |
| கழிபெருங் | உஉரு | கருந்தடங் | சஙக |
| கடிந்மழ் | உஉஎ | கல்லதர்க்கந்து | சஙஉ |
| கலைசிலா | உஉக | கண்ணைகன் | சஙச |
| கழைமலர் | உஙக | கற்பினமுலா | சசச |
| கழைகளிகளி | உசஉ | கள்ளுயிர்க்கு | சருய |
| கள்ளுயிர்த் | உருக | கலைசெழுங் | சருக |
| கலைவேணி | உருகூ | கதமெரிக்க | சருகூ |
| கழலா | உருஅ | கருணைசெய் | சருஉ |
| கதிர்மதி | உகூஉ | கந்தவார் | சருய |
| கலைவலாவென்று | உஎரு | காண்டலு | எஎ |
| கருணையங் | உஎஎ | காதலங் | அக |
| கண்டுகன் | உஎஅ | கார்க்கும் | ௱யரு |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| காலமென்று | ௱ஙக | குவட்டிளமுலை | ஙாங |
| காமுறுமொருத்தி | உ௱ங | குடங்கையி | ஙாச |
| கானமாலங்கன் | உ௱யங | குருதிகொப்புளி | ஙஉஅ |
| கானமா | உஉக | குருமணிவலய | ஙகூய |
| காதிகை | உஙஅ | குழுமியபறவை | ஙகூரு |
| கார்தெரிகதுவுந் | உசக | குன்றிடைப் | ஙஅச |
| காதளவோடி | உகூஎ | குழைமுகங்கிழித்து | ச௱உ |
| காம்புறழ் | ஙாகூ | கூனிருப்பி | அ |
| கார்த்திரன் | ஙஉரு | கூறும்மங்கை | ௱ஙரு |
| காஞ்சபடி | ஙஉஅ | கூற்றமென் | ௱எக |
| காஞ்சயின் | ஙஎக | கூற்றெனக் | உஙச |
| காமெரிமணி | ஙஅஎ | கூன்பயின் | உருஉ |
| காகலாமுலைக் | ௱கூக | கூற்றிநு | உஎய |
| காவிலன்புடை | ஙகூஉ | கூற்றெனக் | ஙஉய |
| கான்றுருவி | சசய | கூற்றெனவுரதி | உஙரு |
| காதல்கூர்ந்து | சசக | கூற்றெறுமின் | உஙஎ |
| காட்டினன் | சகூஉ | கூன்பிறைக் | ஙஙக |
| கிளிபொருவிளவி | ஙகூக | கூற்றுறழ் | ஙருஅ |
| குரும்பைமென் | அ | கூற்றுறழ்குருதி | ச௱யரு |
| குடவளைக் | யகூ | கூந்தன் | சகூஅ |
| குவிர்பனிக்கு | ஙய | கேழ்கிளர் | எஅ |
| குளிர்கறுங் | சஅ | கேட்டவளவி | சசரு |
| குனிசிலைவேனி | ருக | கேட்டவாருவன் | சஎஎ |
| குடவளையினமணி | ருக | கைப்படு | ருஅ |
| குருமணியிமை | ருக | கைம்மாறு | ௱க |
| குடவளையினக் | கூஎ | கொடியன | யச |
| குயிற்பிசை | எய | கொல்லுலை | யரு |
| குயின்மென் | கூஎ | கொட்புற | சங |
| குடங்கை | ௱யச | கொய்யுளைப் | எச |
| குரல்விழ்ந்த | ௱ஙங | கொல்லும் | ௱யகூ |
| குறைவில் | ௱சரு | கொங்குவிம்மு | ௱உச |
| குவலைமொழியீர் | ௱ருக | கொங்குவிரியு | ௱கூய |
| குயிப்பதிங் | ௱கூங | கொங்கிற் | ௱கூச |
| குருமணிமே | ௱கூஎ | கொன்செய் | ௱எங |
| குழைமெதிர் | உஉய | கொய்புனைவயப் | ௱அஅ |
| குடைந்து | உஉய | கொய்யுளைக் | உசய |
| குருமணியிமை | உஙங | கொந்தார் | உருச |
| குழவிவெண்டி | உகூக | கொய்துணர் | உகூக |
| குளிர்மதி | உஎஉ | கொங்ககவி | உஅக |
| குருமணி | உஎக | கொள்ளைவன்ன | ங௱ |
| குழமுகங் | உகூங | கொல்லுலைவேற் | ஙஎச |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| கொய்புனேக்கலின | ங உ௰ | சிலைகுழைத் | ங உக |
| கொடுங்குணில் | ங உ௰ | சில்லியந்தடங் | ங ங ச |
| கொன்னவில் | ங உச | சிலையுயிர்த் | ங ங எ |
| கொலைத்தடங் | ங உஎ | சிலைபொருதி | ங சக |
| கொள்ளைகொண் | ங ங௰ | சிற்றிடை | ங கூகூ |
| கொய்யுளைப்புரவி | ங ங ச | சிலதியர் | ச௱௰கூ |
| கொடிகருநெ | ங எஎ | சில்லரிகெடுங் | ச ங எ |
| கொல்சின | ச௱எ | சில்லியந்தடந்தோர் | ச எ உ |
| கொன்னுனே | ச உரு | சீதையொருத்தி | ௱ கூச |
| கொள்ளைவன் | ச கூக | சீற்றமிகுந் | ங ச உ |
| கொங்குவாய் | ச எச | சீலகற்றருக் | ச௱ அ |
| கொங்குண் | ச அங | சுழிகொள் | சச |
| கோங்கின | சரு | சுனைதரு | எச |
| கோறல்செய்தா | கூ௰ | சுலவுற்றெதிர் | அரு |
| கோடுந்திய | அக | சுணங்குபூத்து | ௱௰உ |
| கோளைக் | கூச | சுறிந்த | ௱உ அ |
| கோறமெருடிகளன் | உ௱௰எ | சுடர்காள் | ௱ருரு |
| கோட்புலி | ங ங அ | சுடரும்வடவை | ௱ருஎ |
| கோதினன் | ங ரு ச | சுடரும்வெண்மதி | ௱ எரு |
| கோத்தமேகலை | ங க௰ | சுருப்பிமிர் | ங ங ங |
| கோதைமார்ப | ங கூங | சுற்றகல் | ங ரு அ |
| கோலனன் | ங கூக | சுடர்விடு | ங எரு |
| கோவடுகுருதி | ச௱ங | சுன்னைமென் | ங கூஎ |
| கோற்றெருடிசெல் | ச௱௰எ | சுடர்செய் | சருச |
| கௌவைக | கூக | சுருதிநூற்று | சகூகூ |
| சுந்தரு | உஎ | சூழ்வளியுடன் | ருஎ |
| சுகரர் | ௱ங அ | சூழிருஞ்சடை | ங ௱௰ அ |
| சுழலமன்று | ௱எ உ | சூழ்சுடர் | ங உ கூ |
| சாந்தமூழ்கி | ங உ | சூழ்வினை | ச௱௰ |
| சாந்தமூழ்குதட | ங சஎ | செருக்களத் | கூ௰ |
| சாந்தமூழ்குதடம்புய | ங ரு உ | செய்யது | எ உ |
| சாந்தணிந் | ங எ கூ | செய்தொழில் | எ கூ |
| சாமரையிரட்டு | ச௱௰உ | செய்பட்ட | அ அ |
| சாதலொழிந் | ச ச கூ | செப்புநோ | ௱ உ கூ |
| சாந்தமென் | ச எ ச | செயிர்ப்பின் | ௱ உ கூ |
| சிறையணி | சக | செய்யவெங் | ௱ ங கூ |
| சிறையொளிர் | ருகூ | செறிந்த | ௱ ச ங |
| சிறைவண்டு | கூரு | செருவிமாண்ட | ௱ ச எ |
| சிறப்புநூல் | உ ச உ | செய்யகமல | ௱ ரு உ |
| சில்லரிச் | உ கூ உ | செய்யகண் | ௱ உ ங |
| சிதாரிகெடுங் | ங ௱ எ | செழுமணிப் | உ௱௰உ |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| செழுங்கடை | ங உ உ | தரங்கவாரிதி | சரு அ |
| சென்னிதாழ்க் | ங ரு ங | தன்ருதுன் | ச கூக |
| செம்மையிற் | ங அ க | தணந்தவெங் | ச எ௰ |
| செயிரறு | ச௱ங | தமரவேலையி | ச அக |
| செல்லும் | ச ங அ | தாதளைக் | ங ரு |
| செஞ்ஞாடாச் | ச ரு௰ | தாமரை | ங அ |
| செய்யதா | ச அ உ | தாதுகமழு | ௱ உ உ |
| சேயிதழ் | ருரு | தாழும்வண்டி | ௱ ச எ |
| சேற்றிதழ் | ௱ கூ உ | தார்வாய் | ௱ கூ எ |
| சேயுபர் | உ ச அ | தாதொடு | உ௱௰ கூ |
| சேட்டினம் | உ ரு க | தானதாயமை | ங ௱ கூ |
| சேனையர் | உ கூ௰ | தாவருஞ்சீற்றத் | ங ௱௰ கூ |
| சேவடி | உ கூ ங | தார்புல | ங ச ரு |
| சேயரிசிந்தி | உ கூ ரு | தாமரைப் | ங கூ ச |
| சொல்லரு | உ ௱ கூ | தாழ்சினை | ங அ அ |
| சொல்லலுங் | ச ௱ ரு | தாழ்தடங்கை | ச௱௰ ங |
| சொல்லிய | கூ௱ எ | தாயினுமருள் | ச உ௰ |
| சோலைவாயிற் | அ ச | தான்றிமா | ச கூகூ |
| ஞாலத்திரு | ச ச க | திங்கள்வெண்மதி | உ ங |
| தழைவிரி | க | திங்களுநல்லா | உ கூ |
| தடங்கொடாமரை | உ ங | திங்கட்கலைமின் | கூ கூ |
| தண்ணருந் | ச ௰ | திருந்தார் | ௱ உ ச |
| தளர்வொடு | ச உ | தினைநெடுங் | ௱ ச ச |
| தண்ணரு | ச கூ | திங்கள்வெக் | ௱ ச கூ |
| தண்ணருக் | ருஎ | திங்கட் | ௱ ரு கூ |
| தழைபூசிறைய | ௱ க | தினைசெய் | ௱ கூ கூ |
| திருவினருங் | ௱ உ | திருத்தகு | ௱ கூ கூ |
| திருவினருங்கொழு | ௱ ச | தினைகடலு | உ ௱ எ கூ |
| தினைந்தவென் | ௱ ச௰ | திருநுதற் | ங கூ ங |
| திருவுமணியு | ௱ ரு கூ | திருத்துயி | ங கூ அ |
| தண்ணங்கதிர் | ௱ கூ ரு | திருவனார் | ங கூ௰ |
| தடங்கொள் | ௱ கூ எ | திருகுவெஞ்சி | ச உ ச |
| தண்டாள | ௱ எ கூ | திருத்துமாமணி | ச அ எ |
| தகைமலர்க் | உ ச கூ | துனிதூங் | கூ உ |
| தனிவருந் | உ ரு கூ | துலங்கு | ௱ ரு௰ |
| தனியுருத் | உ அ ங | துணர்த்தா | ௱ கூ க |
| தளிரிடை | உ கூ அ | துஞ்சாதயர் | உ ரு ரு |
| தண்ணர்தா | ங ரு க | துதைகாண் | உ ரு எ |
| தண்டவில் | ச௱௰ அ | துணங்கை | ங ங ரு |
| தழுவியதாதை | ௱௰ அ | துன்றுகளத் | ங ச ங |
| தடங்கணிர் | ச ங ரு | துளங்குதெண் | ங ரு௰ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| துன்னிருங் | ௩௯௭ | நன்னறா | ௨௫௭ |
| துணிபட்டோ | ௪௪௭ | நளிர்மதி | ௨௯௫ |
| துருவுமொற்றரி | ௪௯௩ | நன்னிலங் | ௩௱ |
| தூவியந் | ௫௪ | நகைமதிமுகத் | ௯௱௰௧ |
| தூயதிங்கள் | ௱௩௪ | நமருஞ்செங்கரங் | ௩௮௪ |
| தூறியோகத் | ௨௱௰௮ | நகைநிலாத் | ௪௱ |
| தூம்புடைக் | ௩௩௯ | நஞ்சினிற் | ௪௱௭ |
| தெய்வத் | ௮௫ | நண்ணருங் | ௪௩௯ |
| தெள்ளாரமு | ௯௨ | நன்னிருட் | ௪௩௮ |
| தெள்ளுதென் | ௱௪௩ | நவ்விநோக்கிதன் | ௪௫௫ |
| தெண்பனி | ௱௪௫ | நவ்விநோக்கியர் | ௪௮௯ |
| தெரிவைவென் | ௨௱௩ | நாகிளவரி | ௫௰ |
| தெரியல்குழ | ௨௭௯ | நாவிமென் | ௱௭௪ |
| தெண்டிரை | ௨௯௯ | நாமவேல்வலனுயர் | ௨௱௰௨ |
| தெண்டிரைப் | ௯௩௰ | நாணமீதூர | ௨௨௭ |
| தெறுஞ்சின | ௩௩௮ | நாள்விழ | ௩௯௯ |
| தெளியுமின் | ௯௬௪ | நாட்டமூன்றுடை | ௪௯௫ |
| தெளித்தூம் | ௪௪௰ | நாளைநண்பணம் | ௪௯௯ |
| தேங்கமழ்துள | ௪௰ | நிலவுபொழி | ௩ |
| தேங்கமழ்மலர்நறு | ௫௩ | நிலவுவெண்முத்த | ௰௩ |
| தேற்றொளிருமணி | ௱௰௪ | நிலவுவெண்கதிர் | ௨௮ |
| தேற்றுவார்கிலர் | ௱௭௩ | நிறங்கிளர் | ௪௨ |
| தேர்கடவுகம்பலே | ௱௮௯ | நின்சீருருவு | ௱௰௯ |
| தேவர்கண் | ௨௯௯ | நிரைத்த | ௱௫௮ |
| தேடினர்புகுமிடங் | ௪௨௫ | நிழலொடு | ௨௯௫ |
| தேண்டியெங் | ௪௫௯ | நிறங்கிளர்வைப் | ௯௩௫ |
| தொலைவறு | ௫௯ | நிலவுவெண் | ௩௭௪ |
| தொடர்ந்தாள் | ௮௮ | நிழல்கனி | ௯௮௨ |
| தொய்யின் | ௱௫௫ | நிழலுமிழ்துதி | ௪௱௩ |
| தொல்குல | ௨௮௮ | நிழலுமிழ்வைர | ௪௱௰ |
| தொன்னை | ௨௯௧ | நிடதர் | ௪௭௯ |
| தொழுதமங்கை | ௪௮௭ | நின்றமன் | ௪௮௰ |
| தோளாமணியை | ௯௯ | நீங்கரிய | ௨௪ |
| தோட்டுமென்மலர் | ௱௪௧ | நீடுமாவண | ௨௯ |
| தோட்டலர்மாலே | ௨௪௭ | நீனிறமுகிலோ | ௯௯ |
| தோற்றதங்பெரும்ப | ௯௯௯ | நீனிறத்தங்கண்வானை | ௨௫௨ |
| நலனுறு | ௰௫ | நீங்கருங் | ௩௨௩ |
| நஞ்சமிழ் | ௫௩ | நீடியதுயில் | ௪௩௯ |
| நள்ளிருட் | ௱௪௯ | நுனைமொழி | ௯௱௨ |
| நங்கமைந்த | ௱௪௯ | நெடிபடுகானிடை | ௪௱௰௪ |
| நறைகொய் | ௱௩௯ | நெஞ்சமெலிவே | ௪௪௧ |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| நெய்த்தோ | ௪௬௩ | பாசிலையிடையிற் | ௪௯ |
| நெமிசூழ்ந்த | ௩௫௧ | பாட்டுவரிச் | ௱௩ |
| நோலார்போரோ | ௪௪௰ | பாந்தண்மேங் | ௱௯௰ |
| நையுநன் | ௱௩௯ | பாணிகர்வன் | ௨௱௰ |
| நையுமென் | ௭௰ | பாசிழைபரந்த | ௨௱௰௮ |
| நொறில்பரித் | ௯௩௰ | பாட்டளி | ௨௭௪ |
| நொறில்வயப் | ௪௯௭ | பாயிருண் | ௨௮௮ |
| பண்ணைவாய் | ௭ | பாற்றிரை | ௩௱௰௨ |
| பனிக்குமேனிலத் | ௨௰ | பாகடுவெந்து | ௯௩௫ |
| பளிக்கறைபுகுந்தனர் | ௨௫ | பாற்றினங் | ௩௩௯ |
| பத்திமாட | ௯௰ | பாரினின்றவ | ௩௩௭ |
| பன்னகஞ் | ௬௩ | பாந்தளேந்திய | ௩௫௰ |
| பசியகெட்டிலைய | ௫௯ | பாயிருட்பிழம்பு | ௯௫௫ |
| படைப்புழி | ௭௪ | பாம்பினைப் | ௩௫௭ |
| பனிக்கிற் | ௱ | பாவலரிழங் | ௪௨௭ |
| பருந்துங் | ௱௰௪ | பிரிவெனு | ௬௨ |
| பண்ணமைந்த | ௱௩௫ | பிறைவடங் | ௯௪ |
| பட்டகாரிருட் | ௱௪௧ | பிள்ளைமாமதி | ௨௫௩ |
| பணைத்தாழ்வுண் | ௱௫௪ | பிள்ளைமாறேக்கி | ௯௱௫ |
| பணைத்தாழல் | ௱௫௮ | பிதிர்ந்த | ௪௪௫ |
| பதுமமலர்மேல் | ௱௯௧ | பின்னர்மன்ன | ௪௫௩ |
| பண்ணமைகூர்தன் | ௨௱ | புதுமணத் | ௰௯ |
| படவரவல் | ௨௨௫ | புலவுநீக்கி | ௨௮ |
| பற்றிய | ௨௱௧ | புல்லுவிட்ட | ௯௧ |
| பண்ணமைகளினைப் | ௨௪௰ | புள்ளினை | ௯௫ |
| பணிமைக்கடலிற் | ௨௫௪ | புளினத் | ௮௭ |
| பணிமுடிக் | ௨௭௭ | புனைமேகலை | ௮௭ |
| பங்தொடுகெழ | ௨௮௭ | புற்றறு | ௯௫ |
| பண்ணமையினிய | ௨௯௫ | புலவுநாறும் | ௱௰௯ |
| பகட்டின | ௩௱௩ | புதைத்த | ௱௩௭ |
| பரிதிவடிவாள் | ௯௪௧ | புலவுநாறு | ௱௪௪ |
| பண்ணமைதிவவினல் | ௩௫௯ | புனைமென் | ௱௯௰ |
| பகைக்கடல் | ௯௫௯ | புலவுத்திரை | ௱௯௭ |
| பண்ணமைகளைமான் | ௩௭௰ | புலிகுழல் | ௨௮௫ |
| பன்மணிவரன்றி | ௯௮௯ | புரிவடந் | ௨௯௮ |
| படவரவல் | ௩௯௫ | புலத்தினுமட | ௩௩௯ |
| பறவைகள் | ௪௨௫ | புனிற்றிளம் | ௩௪௮ |
| பன்மலர் | ௪௯௰ | புயங்கவொன் | ௩௪௯ |
| பணிதலே | ௪௮௫ | புலவியிற் | ௩௯௨ |
| பரிதிவான் | ௪௮௭ | புல்லுமகிழ்ச்சி | ௩௯௨ |
| பாளைவாய் | ௩௯ | புறுவலிற | ௩௯௨ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| புதையிருள் | ௩௰௫ | பொங்கெழுந்தழல் | ௩௫௩ |
| புனை துகில் | ௪௱௩௨ | பொழிகதிர் | ௩௯௧ |
| பூமலிதடங் | ௮ | பொருதினைப் | ௩௭௰ |
| பூங்கரும் | ௰ | பொழிகதிர் | ௩௭௧ |
| பூங்கழைக் | ௪௭ | பொருந்துய | ௩௭௨ |
| பூங்கழைகுழை | ௭௯ | பொருவருந் | ௩௭௮ |
| பூசுசாந்தமெய் | ௱௩௨ | பொறையினுக் | ௪௱௰௫ |
| பூங்கமடல் | ௱௮௭ | பொய்யுறு | ௪௨௧ |
| பூந்துகள் | ௨௱௯ | பொங்கழல் | ௪௪௩ |
| பூணுலாக் | ௩௱௰௫ | பொன்னம் | ௪௪௭ |
| பூமலர்ச்செழுங் | ௩௪௯ | போதருநெறியின் | ௮௨ |
| பூசல்வண்டார்ப்ப | ௩௮௫ | போர்வேளனன் | ௯௮ |
| பெருகிய | ௯௧ | போர்த்தொழில் | ௱௧௧ |
| பெறலரும் | ௨௱ | போர்களி | ௨௱௰௮ |
| பெய்தொடி | ௩௯௫ | போந்தவள் | ௨௯௪ |
| பேதைகீர் | ௯௯ | போதரிநெடுங் | ௩௱௰௨ |
| பைந்தரு | ௨௨௩ | போயிறுமருங்கு | ௩௫௫ |
| பைம்மலைத் | ௩௩௨ | போயதாதுவர் | ௪௮௪ |
| பொரியலாத்தேமா | ௰௨ | மறுவிகந்த | ௰௮ |
| பொருந்துருத்தனம் | ௨௯ | மழைக்கண் | ௰௯ |
| பொருசிலை | ௩௩ | மலயமாதவ | ௨௯ |
| பொறிவழி | ௪௩ | மணியெழு | ௩௮ |
| பொன்னிதழி | ௪௮ | மணங்கமழ் | ௫௰ |
| பொன்னிறத் | ௯௪ | மல்லலம் | ௯௪ |
| பொன்னினிற் | ௯௭ | மன்னுமாநகர் | ௮௩ |
| பொலன் சிறை | ௭௯ | மலர்மேலயன் | ௯௰ |
| பொறியின் | ௮௯ | மயிர்வாய்ச் | ௯௯ |
| பொய்ம்மை | ௱௨ | மனமுறுமோர் | ௱௨ |
| பொறிசெறி | ௱௰௧ | மருவுபுரி | ௱௩ |
| பொன்னே | ௱௰௮ | மறங்கிளரு | ௱௫ |
| பொன்னனுந் | ௱௨௩ | மடைவாய் | ௱௰௯ |
| பொருவிலாழி | ௱௩௮ | மழைமதர் | ௱௨௮ |
| பொன்னகரந் | ௱௮௧ | மதுப்பிலி | ௱௩௧ |
| பொற்றடங் | ௱௮௯ | மலையவெற் | ௱௩௨ |
| பொருந்திய | ௱௯௯ | மட்டுவிரியு | ௱௫௩ |
| பொன்னடிப் | ௨௱௰ | மழலைத்திருஞ்சொன் | ௱௯௨ |
| பொருவரு | ௨௱௰௩ | மன்றல்குழ | ௱௯௨ |
| பொன்னகர்புர | ௨௯௯ | மங்குலூடு | ௱௯௮ |
| பொன்னவிர் | ௨௯௭ | மன்றறைறு | ௱௭௧ |
| பொருசமர்தொ | ௩௨௩ | மருவுயிர்க்கு | ௱௭௯ |
| பொருசமத்துடன் | ௩௩௧ | மழுங்கிநிருபுடை | ௱௮௰ |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| மண்ணுலகின் | ௱௮௫ | மழலைமென் | ௪௭௭ |
| மதர்நெடுங் | ௱௮௫ | மழைத்த | ௪௭௮ |
| மண்டமர்கடங் | ௱௪௰ | மறுவில்கற் | ௪௭௮ |
| மணங்கவர் | ௨௱௧ | மணிகளி | ௪௮௧ |
| மலர்பயில்வாவி | ௨௱௨ | மழைமத | ௪௮௩ |
| மடவாளுறுவெள்ளி | ௨௱௮ | மாதர்மென் | [illegible] |
| மண்டமர்கடந்த | ௨௱௰௧ | மானகீராணஞ் | [illegible] |
| மலர்ந்தசெந்தாழை | ௨௱௰௨ | மால்புரி | ௭௩ |
| மன்னினிற் | ௨௱௰௫ | மாந்தளிர் | ௭௫ |
| மணிமுடி | ௨௨௧ | மாயிருஞாலத்து | ௱௮௯ |
| மடலவிழ் | ௨௨௨ | மாயிருஞாலந் | ௨௱௰௫ |
| மங்கையர் | ௨௭௮ | மாதுபால் | ௨௨௯ |
| மழைமதர் | ௨௩௭ | மாயிருஞாலத்தா | ௨௨௮ |
| மண்ணகவரைப்பின் | ௨௪௰ | மாதுகண் | ௨௩௯ |
| மன்னனவன் | ௨௭௯ | மாங்குயிற் | ௨௩௭ |
| மன்னவனினைவை | ௨௯௩ | மாங்குயிலனை | ௨௪௪ |
| மன்னவர்தருக்கும் | ௩௨௧ | மாங்குயிற்குதலைச் | ௨௮௨ |
| மண்ணினிடத் | ௩௨௯ | மாழைமென் | ௩௭௯ |
| முன்பெருங் | ௩௩௮ | மாதர்மென் | ௩௱௰௪ |
| முன்றன்மலர்த் | ௩௪௨ | மாங்குயிற் | ௩௯௨ |
| மழகளிறன்ன | ௩௪௩ | மாயிருஞாலமும் | ௪௩௩ |
| மல்லற்றோளிணு | ௩௯௮ | மாசுபூத்தொ | ௪௫௮ |
| மழையுமழ் | ௩௯௯ | மாதுகேட்டு | ௪௫௯ |
| மற்றிவைநிகழும் | ௩௭௩ | மின்னிலங்குவே | ௩௫ |
| மழலையந் | ௩௭௫ | மிடைந்திரு | ௫௪ |
| மறைநெறி | ௩௮௧ | மின்னிடையாம்பை | ௨௱௰௧ |
| மல்லலம் | ௩௮௧ | மிடல்கெழு | ௩௪௪ |
| மங்கையர்செறி | ௩௯௪ | மிக்கவெஞ்சமத் | ௪௱௰௭ |
| மழகளிறனைய | ௪௱௩ | மிகைப்படு | ௪௱௰௯ |
| மன்னவர்கெ | ௪௱௯ | மீதுலாய | ௮௪ |
| மன்னவனியை | ௪௱௧ | மீண்டதன்ன | ௱௨௪ |
| மடவாறன்னையு | ௪௱௰௮ | முல்லையந் | ௰ |
| மடவாறன்றெடு | ௪௱௰௯ | முருகுயிர்த்த | ௨௰ |
| மண்ணிய | ௪௨௰ | முருகவிழ் | ௭௯ |
| மல்லடுதிணி | ௪௨௰ | முருந்திள | ௩௮ |
| மன்னவனேகு | ௪௨௨ | முகிழ்மென் | ௮௭ |
| மலர்ப்பசுங் | ௪௨௯ | முருகுண்டு | ௯௪ |
| மற்றுமோ | ௪௩[illegible] | முருகன்வேலு | ௱௰௭ |
| மன்னவனே | ௪௪௧ | முள்ளரைச்செழு | ௱௪௮ |
| மக்கள்வான்முக | ௪௯௨ | முழைவாய் | ௱௯௩ |
| மருவுபாகனை | ௪௭௩ | முடங்களின் | ௱௫[illegible] |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம் |
|---|---|---|---|
| மூற்றிழை | ௱௯௭ | வளமயிலங்கர் | ௩௨ |
| முருகவிழ் | ௨௱௯ | வள்ளைற்று | ௩௭ |
| முருக்கிதழ் | ௨௩௧ | வனப்பினில் | ௩௯ |
| முனம்வானவர் | ௨௫௬ | வயிரியர் | ௪௫ |
| முகிறவழ் | ௨௯௭ | வரிச்சிறைத் | ௫௫ |
| முருந்துறழ் | ௨௯௨ | வள்ளவாய் | ௫௮ |
| முயற்கறை | ௨௯௯ | வருந்தமுன் | ௯௯ |
| முழவுறழ் | ௩௨௯ | வள்ளைவார் | ௭௧ |
| முரிதிரைப் | ௩௩௩ | வழிந்துதெள்ளமு | ௮௫ |
| முன்னுருமே | ௩௪௩ | வடியுண்கணி | ௮௮ |
| முருகுவாய்மடுத் | ௩௫௪ | வண்டார் | ௯௩ |
| முழைழயுறை | ௪௱௫ | வளைத்தடக்கை | ௱௩௨ |
| முனரியால் | ௪௨௩ | வடவானலத்தி | ௱௫௪ |
| முருகுயிர்த் | ௪௩௩ | வடிக்கண்டுயினா | ௱௯௫ |
| முத்தவெண் | ௪௯௯ | வழங்கிய | ௱௯௮ |
| முன்னைகல் | ௪௮௰ | வடிவமை | ௱௯௮ |
| முதெயிற் | ௪௮௪ | வடிவகிரினைய | ௨௩௭ |
| மெலியுநுண் | ௪௱௨ | வண்டுழா | ௨௭௩ |
| மேனிவந் | ௨௩ | வடிநெடுங் | ௨௮௨ |
| மேவருஞ்சூதினிற் | ௪௨௩ | வணங்கிடை | ௨௮௯ |
| மேவியவிஞ்சை | ௪௭௫ | வரிவளைக் | ௨௮௯ |
| மையன்மதி | ௱௨௧ | வஞ்சமொசன் | ௨௯௰ |
| மைம்மறந் | ௱௨௭ | வள்ளுறைதி | ௨௯௧ |
| மையரிக்கண் | ௱௨௯ | வண்ணமே | ௨௯௭ |
| மையுண்கண்ணியை | ௱௩௮ | வளைமலர்க் | ௩௱௧ |
| மைத்தடங் | ௱௭௫ | வடிநெடுங் | ௩௱௫ |
| மையவரச் | ௨௪௯ | வடிவகிர் | ௩௱௮ |
| மைந்தரோ | ௨௯௧ | வடிமலர் | ௩௱௰௪ |
| மையல்கூர்ந்தவோர் | ௩௯௰ | வயவரோரிரு | ௩௨௮ |
| மொழிதல் | ௪௭௯ | வண்ணமேகலை | ௩௪௯ |
| மோட்டிளங் | ௨௭௰ | வரிமுலையோடுக் | ௩௫௭ |
| மோட்டிளமுலையாய் | ௩௪௰ | வணங்கிநுண் | ௩௭௰ |
| மோட்டிளமுலைகள் | ௩௨௭ | வந்தவெங் | ௩௭௯ |
| மௌவலக்தெரியல் | ௨௨௨ | வஞ்சிநுண்ணிடை | ௩௯௧ |
| யாணர்மேய | ௩௰ | வடிவகிர் | ௩௯௫ |
| யாவனேனிவ | ௨௨௯ | வருகவிபுட் | ௪௱௪ |
| வள்ளவார்ப்ச் | ௯ | வசைபடுமன்ன | ௪௨௩ |
| வடிகொள்வெண் | ௰௮ | வருந்திமுன் | ௪௨௩ |
| வள்ளவாய்மலர் | ௨௰ | வளைகடலுல | ௪௩௫ |
| வரிவளைக் | ௨௨ | வந்தபடமான் | ௪௪௮ |
| வண்ணமுலை | ௨௫ | வஞ்சர்வெஞ்சி | ௪௫௩ |





| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| வளைமலர்க்கு | ௪௯௰ | விரிந்தவேணி | ௱௭௨ |
| வடபுலத்தினி | ௪௮௧ | விஞ்சையர் | ௱௮௰ |
| வயிரவாட்படை | ௪௮௫ | விண்ணகத்தும் | ௱௮௪ |
| வாய்ந்த | ௨௭ | விரிகதிரொளிக்கு | ௱௮௮ |
| வாணிலாமணி | ௩௧ | விட்புலந்தனி | ௨௱ |
| வாட்டிறல் | ௱௮ | விழைவுவெனும் | ௨௱௪ |
| வாட்டங்கண் | ௱௨௯ | விளங்கிழை | ௨௱௫ |
| வானவரொண்சுட | ௱௭௮ | விண்ணவர் | ௨௱௰௯ |
| வாம்பரித்தேதி | ௨௱௧ | விரிந்தசெங் | ௨௨௰ |
| வாட்டிறன் | ௨௱௫ | விரைகமழ் | ௨௨௪ |
| வாங்குவிற் | ௨௮௪ | விரும்பிய | ௨௨௭ |
| வார்மயிர்க் | ௩௩௭ | விரைகமழ்தருவி | ௨௪௫ |
| வாசனைகமழுஞ் | ௩௫௯ | விரைசெறி | ௨௪௭ |
| வாட்டடங்கரு | ௩௫௮ | விரிகதிர் | ௨௪௮ |
| வானுயர்சோலை | ௩௮௯ | விரிகதிர்ப்பரப்பி | ௨௫௰ |
| வாங்குவிற்கை | ௩௯௨ | விண்ணோர் | ௨௫௫ |
| வாணெடுங் | ௩௯௪ | விரைகமழ்முல்லை | ௨௯௯ |
| வாமமேகலை | ௩௯௮ | விண்ணகத் | ௨௯௮ |
| வாம்பரித் | ௪௱௧ | விரிகதிரொளிக்கும் | ௨௮௰ |
| வாட்டிறல்வேக் | ௪௱௪ | விரியிருள்சிக்கும் | ௨௮௭ |
| வாட்டிறன் | ௪௱௰௨ | விரிகதிர் | ௩௱௰௭ |
| வான்மதர்த்தன துளி | ௪௨௯ | விளைமசர்க் | ௩௨௨ |
| வாம்பரியிமுங் | ௪௨௭ | விண்ணவரின்ன | ௩௩௪ |
| வாவியின்மருங் | ௪௱௩௰ | விண்ணவர | ௩௭௯ |
| வாவுமினமான் | ௪௪௨ | விண்டொடர் | ௩௮௭ |
| விலகிவில்லுமிழ் | ௫ | விரைகமழ் | ௩௯௫ |
| விழுந்தவஞ் | ௭ | விரைகமழ்சுண்ண | ௩௯௮ |
| வில்லுமிழு | ௨௯ | விட்புலத் | ௪௱௪ |
| விரும்பிய | ௪௯ | விரிகடலமிழ் | ௪௱௰௯ |
| விண்புகுவியன் | ௪௯ | விம்மிமின்னுழை | ௪௱௰௯ |
| விழைபுனரவி | ௫௧ | விள்ளருமதரிடை | ௪௨௮ |
| விழைவுறு | ௫௭ | விண்படுமினவெனன் | ௪௩௯ |
| விண்ணின் | ௮௯ | விரிமலர்ப் | ௪௩௯ |
| விண்ணும் | ௩௧ | விடுத்தவாம் | ௪௪௮ |
| விரைசேர் | ௯௭ | விண்டமென் | ௪௭௨ |
| விழைபுமனத் | ௱௧ | விரிமலர் | ௪௭௪ |
| விரையுயிர் | ௱௭ | விட்டதூது | ௪௮௪ |
| விரிதெண்டிரை | ௱௫௧ | வீழுமெற்படு | ௪௯௰ |
| விரவுகரிய | ௱௫௨ | வீமன்புதல்வி | ௪௪௮ |
| விரிந்ததிரைப் | ௱௫௭ | வெங்கதிர்ச்சுடர் | ௩௭ |
| விரைசிசுரும்பர் | ௱௯௨ | வெங்கலிமிருன் | ௩௩ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| வெண்மதிக்கவிகை | ௪௭ | வெள்ளத்தானை | ௪௮௯ |
| வெங்கதிர்தென்ற | ௫௨ | வேழவெண் | ௫ |
| வெண்ணிறத் | ௫௫ | வேனில்வேள்வனப் | ௭௧ |
| வெங்கதிர்க் | ௭௫ | வேண்டல் | ௱ |
| வெண்ணகைத் | ௮௰ | வேட்டைச் | ௱௪ |
| வெங்கதிர் | ௮௧ | வேற்றரசர் | ௱௰ |
| வெவ்வரா | ௱௪௨ | வேயைவென்ற | ௱௩௰ |
| வெந்நீயதனிற் | ௱௬௮ | வேலைசூழ் | ௱௭௮ |
| வெயில்விரி | ௱௯௯ | வேயினைப்பழித் | ௨௩௬ |
| வெற்பினை | ௨௱௭ | வேளாண்மை | ௨௫௭ |
| வெதிர்புரை | ௨௩௧ | வேலெனமிளிர்ந்து | ௨௭௮ |
| வெந்திறற் | ௨௩௫ | வேனிலா | ௨௮௩ |
| வெள்ளியந் | ௨௪௧ | வேற்றுருத் | ௨௮௯ |
| வெங்கதிர் | ௨௪௩ | வேலெனப் | ௩௱௩ |
| வெண்மதிக் | ௨௯௩ | வேரியந்தொடை | ௩௪௭ |
| வெள்ளியங்கிரி | ௨௯௯ | வேனிலைந் | ௩௫௧ |
| வெதிர்புரை | ௩௱௮ | வேந்தனைவ்வுரை | ௪௫௯ |
| வெருளலை | ௩௱௰௧ | வையமேழு | ௱௭௯ |
| வெய்யவாவின் | ௬௪௬ | வையகமொரு | ௨௩௩ |


## விருத்த அகராதி.



உ

கடவுள் துணை.

# நைடதமூலமும் உரையும்.

## பாயிரம்.

### விநாயகர்வணக்கம்.

* அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்,

தழைவிரிகடுக்கைமாலைத் தனிமுதற்சடையிற்சூடுங்
குழவிவெண்டிங்களிற்ற கோட்டதுகுறையென்றெண்ணி
புழைநெடுங்கரத்தாற்பற்றிப் பொற்புறவிணைத்துநோக்கு
மழைமதக்களிற்றின்செய்ய மலரடிசென்னிவைப்பாம்.

இதனதுபதப்பொருள்:

தழை-செழித்த—விரி-மலர்ந்த—கடுக்கை-கொன்றைமலர்களாலாகிய—மாலை-மாலையையுடைய—தனி-ஒப்பில்லாத—முதல்-மாமனவன்—சடையில்-சடையினிடத்தில்—சூடும்-தரிக்கப்பட்டிருக்கிற—குழவி-இளமையாகிய—வெள்-வெள்ளிய—திங்கள்-சந்திரனை—இற்ற-ஒடிந்த—கோட்டது-(தன்)கொம்பினது—குறையென்று-சேதமென்று—எண்ணி-நினைத்து—புழை-துளைபொருந்திய—நெடும்-நீண்ட—கரத்தால்-துதிக்கையினால்—பற்றி-பிடித்து—பொற்பு-அழகானது—உற-பொருந்த—இணைத்து-(அதிற்)பொருத்தி—நோக்கும்-பார்க்கின்ற—மழை-மழையைப்போலும்—மதம்-மதத்தையுடைய—களிற்றின்-யானைமுகவிநாயகமூர்த்தியினது—செய்யமலர்-செந்தாமரைமலர்போலும்—அடி-திருவடிகளை—சென்னி-சிரசின்மேல்—வைப்பாம்-(யாம்) அணிந்துகொள்ளுவாம்—என்றவாறு.

---

* (யாப்பருங்கலம்) "கழிநெடிலடியேசட்டகத்தினைப்பி-னறுசீர்முதலாவையீரடிமுவருவனபிறவும் அருத்தனர்கொளலே,,

தளைமுகிழ்விரிகடுக்கை என்றது; தளைமுகைவிரிக்கின்றகடுக்கை எனினும் பொருந்தும்; தளைமுதலாகியகாரணத்தால் தளை என்றாயிற்று. மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந்தருளிய (குவலயானந்தசூத்திரம்) "வழிபடு தெய்வவணக்கஞ்செய்து மங்கலமொழிமுதல்வகுவாதுரைக்க- வெடுத்துக்கொண்டவிலக்கணவிலக்கியமிடுக்கணின்றியினிதுமுடியுமே-இவ்விலக்கணத்தினால் கடவுள்வணக்கங்கூறினார்,, யாம் என்னும் எழுவாயெஞ்சிநின்றது. வைப்பாம் என்றது; பயனிலை. அடியென்றது, செயப்படுபொருள். தளை-விரி - என்கிறபெயரெச்சத்தொகைகளடுக்கிக் கொன்றைமலரென்கிற வினைமுதல்பெயர்கொண்டனவாகும்.

மலரடிசென்னிவைப்பாம் என்று, தன்மைப்பன்மைவினைமுற் றாக்கம்மைப் புகழ்ந்துகூறியதற்கிலக்கணமென்னையெனின் "முனைபுனைசேவகன் முனிந்தார்ப்பதும்போற்-கடகத்தகல்வியாதலை ற- நன்னைபுகழ்ந் தகுமெனச் சாற்றினர்,, என்றதனாலறிக. இற்றகோடு என்றது, விநாயகர் தம்மாலொடிக்கப்பட்டகோடு என்றகருத்தாம். இதற்கிலக்கிய மென்னையெனின், கந்தபுராணம், கேசமுகனுற்பத்திப்படலம் (உ௫௮-ம்,பாடல்)(உ௫௯-ம்,பாடல்.)

நின்றவன்றன்னைநோக்கி நெடியபல்படைகளேவிச்
சென்றிவன்றன்னைக்கொல்லாச் சிவனருள்வரத்தின்சீரா
லின்றினிச்செய்வதென்னென் றிறைவரையுன்னியெந்தை
தன்றிருக்கோட்டிலொன்று தடக்கையின்முறித்துக்கொண்டான்.

தடக்கையிலேந்துங்கோட்டைத் தந்தியாமவுணன்மீது
விடுத்தலுமனையன்மார்பை வெய்தெனக்கீண்டுபோகிப்
படர்ப்படிமிசையேவீழ்த்தியொல்லையிலொடித்தெண்ணீர்க்
கடற்படிந்தமலன் அங்கை காத்திலுற்றிருந்ததன்றே.

இச்செய்யுட்களில் கஜமுகனைக் கொல்லக்கோட்டை யொடித்தனரென்றது, புராணசித்தாந்தம். இக்கருத்தறியாதார் பாரதமெழுதக் கோட்டை ஒடித்தாரென்று உரைவரைந்திருக்கின்றார். அவர் இதனறியார்போலும். குழவி-என்றதும் "குழவு-என்றதும், ஒருபொருட்கிளவி ※ (சூத்திரம்) "மழவுங்குழவுமிளமைப்பொருள,, பொற்பு-என்றது, அழகு. பொற்புபொலிவுஇவையொருபொருட்கிளவியாம். ※ (சூத்திரம்),, பொற்பேபொலிவு (என்றதனாலறிக) [பிறையைக்கொம்பின் குறையென்று மயங்கினமையால் மயக்கவலங்காரம்.]

(கருத்துரை) சிவன்முடியிலிருந்த பிறையையொடித்தக் கொம்புக்கிணைபார்க்கும் விநாயகரை வணங்குவோமென்பதாம். (க)

※ மாணிக்கவாசகர் குவலயானந்தம். ※ தொல்காப்பியம்.

உ

கடவுள் துணை.

# சிறப்புப்பாயிரம்.

நிலவுபொழிதனிக்கவிகைநிடதர்கோன்புகழ்ச்சரிதநெடுநீர்வைப்பிற் புலவர்களியமுதொழுகுப் புதுமொழி கூட்டுணத்தமிழாற்புனைதல்செய் தான், வலனுயர்த்தவண்ணலஞ்சேல் வான்றொடுபொற்கோட்டிமயவ ரையிற்றீட்டி; யலர்தலமாநிலம்புரக்கு மதிவீரராமனிகலரசரேறே.

(இ-ள்.) இகல்-பகைத்த—அரசர்-மன்னராகிய (யானைகளுக்கு) —ஏறு-ஆண்சிங்கம்போன்றவனுமிய—வலன்-வெற்றியினால்—உயர்த்த-உயர்த்தப்பட்ட—அண்ணல்-பெருமைபொருந்திய—அம் - அழகிய—சேல்-மீனக்கொடியை—வான்-ஆகாயத்தை—தொடு-அளாவிய—பொன்-பொன்னாகிய—கோட்டு - சிகரத்தையுடைய—இமயவரையில் - இமயமலையினிடத்து—தீட்டி - (தனக்குரியவெல்லைக்கல்லாக) வெழுதி—அலர்-பரந்த—தலம்-இடத்தையும்—மா-பெருமையையுமுடைய—நிலம்-பூமியை—புரக்கும்-காக்கின்ற—அதிவீரராமன் - அதிவீரராமபாண்டியராஜனானவன்—நிலவு-சந்திரிகையை—பொழி-பொழிகின்ற,தனி-ஒப்பற்ற—கவிகை-(முத்துக்)குடையினையுடைய—நிடதர்கோன் - நளமகாராஜனது—புகழ் - புகழ்ச்சிபொருந்திய—சரிதம்-சரித்திரமாகிய—களி-களிப்பைத்தருகிற—அமுது-அமிழ்தத்தை—நெடுநீர் - கடலாற்சூழப்பட்ட—வைப்பில் - பூமியிலுள்ள—புலவர் - புலவரானவர்கள்—கூட்டுண-கொள்ளைகொள்ளும்படியாக—ஒழுகு-(அவ்வமிழ்தம்பெருகுகின்ற)-புதுமொழி*புதியகாவியத்தை—தமிழால்-தமிழ்மொழியினாலே—புனைதல்செய்தான் - அலங்கரித்துப்பாடினான்-எ-று.(குவலயானந்தம்) "பெயருடனே சிறுமிக்கும்பொருளாயவனைத் தமடக்கிக்காட்டுதல்-பரியாயமென்று பகரப்படுமே.ஒருதான்முகத்தினுரைத்திடும்பாயிரஞ்-சிறப்பெனவல்லோர்செப்பினர்தாமே-எனவும்,,கூறியவாறுசிறப்புப்பாயிரங்கூறினார் (இதுவகைதேசவுருவகவணி) (கருத்து) அதிவீரராமபாண்டியராஜனானவன் நளமகாராஜனது சரித்திரத்தைத்தமிழிற்பாடினனென்பதாம்.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

* (தண்டியலங்காரம்) அமுதனென்கிலுக்குறையாடுடையது-சுப்பிசமென்று கருதப்படும்.

உ

கடவுள் துணை.

# நாட்டுப்படலம்.

* கலித்துறை.

கருவிமாமழைக் கலைமகளுருவென விளங்கி
யிருவிசும்பிடைப் படர்ந்து சென்றிணைமணி கொழிக்கும்
பரவைவெண்டிரைமேய்ந்துயர் பனிவரையுயிர்த்த
வுருவவோடரித் தடங்கணாளுருக்கொடுமீண்ட.

(இ-ள்) கருவி-உலகத்திற்குத் துணைக்காரணமாகிய—மா - பெருமைபொருந்திய—மழை-மேகங்களானவை—கலைமகள்-கல்வித்தெய்வத்தினது—உருவென - வடிவம்போல்—விளங்கி - (வெண்மையாக) விளங்கி—இரு-பெரிய, விசும்பிடை-ஆகாயத்தினிடத்தே—படர்ந்து-பரந்து—சென்று-போய்—இணை-இணையாகிய—மணி-இரத்தினங்களை—கொழிக்கும்-கொழிக்கின்ற—பரவை-கடலினது—வெண்-வெள்ளிய—திரை-அலைகளையுடைய (நீரை), மேய்ந்து-குடித்து—உயர் - உயர்ந்த—பனிவரை-மலையரசனால், உயிர்த்த-புதல்வியாகத்தரப்பட்ட—உருவ -(காதுகளுக்கு) ஓரக—ஓடு-ஓடுகின்ற—தடம்-விசாலமாகிய—கண்-கண்களையுடைய(பார்வதியினது)-உரு-கருநிறத்தை—கொடு - பெற்று—மீண்ட-திரும்பின-எ-று. இதுமுதல் (௨) பாடலும் மழைச்சிறப்பு, (இது உபமானம் உபமேயம்-விரிந்து-நிற்கையால்-விரியுவமையணி)(கருத்து)மேகங்களானவை சரஸ்வதிவடிவம்போலத்தோன்றிக் கடற்சலத்தையுண்டு பார்வதிவடிவம்போலத் திரும்பின-என்பதாம். (௧)

அன்னங்கண்படுதண்பணை விடதநாட்டளிக்கு
மன்னர்மன்னவன் மண்டமர் கடந்தவொள்வேலின்
மின்னியாங்கவன் முரசென விண்ணிடையதிர்ந்து
பொன்னங்குன்றின்மேலவன்கொடைபோன்மெனப்பொழிந்த.

(இ-ள்) அன்னம்-அன்னங்களானவை—கண்படு - தூங்குகின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—பணை - கழனிகளையுடைய—விடதநாடு-விடதேயத்தை—அளிக்கும்-காக்குகின்ற—மன்னர் - அரசர்களுக்கு—மன்னவன் - அரசனாகிய(நளனது),மண்டு-நெருங்கிய, அமர்-போரை—கடந்த-முடித்த—ஒள்-ஒள்ளிய—வேலின் - வேல்போல்—மின்னி-மின்னுதல்செய்து—அவன்-அவனது—முரசென-முரசம்போல—விண்ணிடை-ஆகாயத்தினிடத்து—அதிர்ந்து-சத்தித்து—பொன்-பொன்னாகிய—அம்-அழகிய—குன்றின்மேல் - இமயமலையின்மேல்—அவன்-அவனது—கொடை-ஈகையை—போன்மென - ஒக்குமென்றுசொல்லும்படியாக—பொழிந்த - (அம்மேகங்கள்)நீரைச்சொரிந்தன-எ-று;

* (யாப்பு) பருக்கலும், நெடிலடிநான்காய் நிகழ்வது கலித்துறை.



(ஆக்கு-அசை)இது உவமானங்கூறுதலால் உவமையணி) (கருத்து) அந்தமேகங்களானவை நளனது வேல்போல்மின்னி அவன்பேரிகை போலச்சத்தித்து அவன்கொடையைப்போலநீரைச்சொரிந்தன-எ-ம்()

விலகியில்லுமிழ் விரிகதிர்மணிபல்வான்றிப்
பொலன்முகட்டுயர்பொன்னெடுங்குன்றின்வீழருவி
குலவுவெண்டிரைக் குரைகடலுடுத்தபார்மடந்தை
யலர்முலைத்தலைத் துயல்வருமாரமொத்துளதால்.

(இ-ன்)உயர் - மலைகளிலுயர்ந்த—நெடு-நெடிய—பொன்-குன்றின்-இமயமலையின்மேல்—பொலன் -அழகிய—முகட்டு-சிகரத்தினின்று—விலகி-இடைவிட்டு—வில்-ஒளியை—உமிழ்-வீசுகின்ற—விரி-விரிந்த—கதிர்-கிரணங்களையுடைய—பல-பலவகைப்பட்ட—மணி - முத்துக்களையும்—வான்றி-வாரிக்கொண்டு—வீழ்-வீழ்கின்ற; அருவி-வெள்ளமானது—குலவு-விளங்கிய—வெண்-வெள்ளிய—திரை - அலைகளையுடைய—குரை-ஒலிக்கின்ற,கடல்- கடலாகிய(ஆடையை),உடுத்த-உடுத்திருக்கின்ற—பார்மடந்தையை - பூமிதேவியினுடைய; அலர்-அடிபரந்த—முலைத்தலை-அம்முலையாகிய முலையினிடத்து—துயல்வரும்-புரளுகின்ற—ஆரம் - முத்துமாலையை—ஒத்துளது-ஒத்திருக்கின்றது—எ-று(இது உருப்புறுபமிக்கலவையணி) (கருத்து) மலைவெள்ளமானது பூமிதேவியினது முலையின்மீதணிந்த முத்துமாலையையொத்திருக்கின்றதென்பதாம்.இதுமுதல்-௩-பாடலாற்றுச்சிறப்பு.

வேழவெண்மருப் பெறிந்துவெண்ணித்திலம்வாரிக்
காழகிற்றுணி சந்தொடுங்கையரிக்கொண்டு
கோழரைச்செழுங் குங்குமத்தடக்கிளைசாடி
யாழ்திரைக்கட லகடுகீண்டொழுகியதன்றே.

(இ-ன்) வேழம் - யானைகளுடைய—வெள் - வெள்ளிய—மருப்பு-கொம்புகளை—எறிந்து - வீசிக்கொண்டும்—வெள் - வெள்ளிய—நித்திலம் - முத்துக்களை—வாரி - வாரிக்கொண்டும்—காழ்-வைரம்பொருந்திய—அகில்-அகின்மரங்களினுடைய—துணி - துண்டங்களை—சந்தொடு-சந்தனமரங்களோடு,கையரிக்கொண்டு- சேர்த்துக்கொண்டும், —கோழ்-கொழுவழுப்பாகிய—அரை-அரையையுடைய—செழு-செழிய—குங்குமம்-குங்குமமரங்களின—தடம்- விசாலமாகிய—கிளை-கிளைகளை—சாடி-முறித்துக்கொண்டும்—ஆழ்-ஆழ்ந்த—திரை - அலைகளையுடைய—கடல்-கடலினது—அகடு-வயிற்றை—கீண்டு- கிழித்து—ஒழுகியது,(அவ்வெள்ளம்)சென்றது—எ-று-அன்று-அசை.(தன்மையலங்காரம்)(“குணம்பலபாட்டொருவினைகொளும்,,என்றதனாற் றன்மையணி.)(கருத்து)அந்தவெள்ளமானது யானைத்தந்தத்தின்முத்துக்களையும் அகிற்றுண்டையுஞ்சந்தனத்தருவையுங் குங்குமத்தருவையுமுறித்துச் சமுத்திரத்துட்சென்றதென்பதாம். (௪)

கன்னவியன்றுல கேதகியடவுண்மாதவிவென்ற
சகுருவோர் தறைவியடம் பணைதழந்து

கொக்குயிர்த்தபூந் தடத்துலாய்க்குளம்பல நிரப்பி
மக்கண்மாநிலத் தழுதெனப்பாற்றதையன்றே.

(இ-ள்) கங்கையென்று-கங்காநதியென்று, உலகு-உயர்ந்தோரால்; —வந்திய-துதிசெய்யப்பட்ட—கடவுள் - தெய்வத்தன்மைபொருந்திய—மா - பெரிய—நதி-நதியானது—வெள்- வெள்ளிய—சங்கு-சங்குகளானவை—சூல் - சூலிறலே—உளைந்து- வருந்தி—அலறிய- இறைபுரம்படியாக—தடம் - விசாலமாகிய—பணை - கழனிகளிலே—தவழ்ந்து உலர்ந்து—கொக்கு - வாசனையை—உயிர்த்த-வீசுகின்ற—பூ-மலர்களையுடைய—தடத்து-தடாகங்களில்—உலாய்-திரிந்து—பல - பலவகைப்பட்ட—குளம்-குளங்களையும்—நிரப்பி-நிறைத்து—அங்கண் - அழகிய இடத்தையுடைய—மா-பெரிய—நிலத்து - பூமிக்கு—அழுதென - அமிர்தமென்று சொல்லும்படியாக—பாய்ந்தது - பரவியது—எ-று. சீரீமை. அன்று-ஏ-அசைகள். இது-உவமையணி(கருத்து) நதியானது கழனிகளையுந்தடாகங்களையுங்குளங்களையு நிரப்பிப்பூமிக்கு அமிர்தமாகப்பரவியதென்பதாம். (௫)

ஒழுக்கிம்புனல் சிறைசெய்மோதையுமுழுநர்
குழுவின்சம்மையுமுழந்தியர்குரவையினாப்பும்
கழனிவாழ்கென வானமுழவித்துநர்களிப்பும்
மழைமுழக்கொடுமாறுகொண்டொலித்தனமாதோ.

(இ-ள்) ஒழுகு-பெருகிவருகின்ற—நீம் - ம்புனல் - பொருந்திய—புனல் நீரை—சிறைசெய்யும்-கரைகோலித்தடுத்தற்கனுண்டாகின்ற, ஓதையும் - ஓசையும்—உழுநர்(ஏ)ருழுகின்றவருடைய—குழுவின் - கூட்டத்தினது—சம்மையும் - ஓசையும்—உழத்தியர்-கடைசியரது—குரவையின்-குரவைக்கூத்தினது, ஆர்ப்பும்-ஓசையும்—கழனி - வயல்களானவை—வாழ்கென-வாழ்கவென்று, வால்-வெள்ளிய—முளை-நெல்லுமுளைகளை—வித்துநர் - விதைக்கின்றவருடைய, களிப்பும்-ஓசையும்—மழை - மேகத்தினது—முழக்கொடு- ஓசையுடனே—மாறுகொண்டு-பகைமைகொண்டு—ஒலித்தன-முழங்கின—எ-று-மா-து-ஓ-அசைகள்(இது-உவமையணி(கருத்து) அணைகட்டுதலாலுண்டாமோசையுமுழுகின்றவருமுழத்தியர்குரவைக்கூத்தோசையும்நெல்விதைக்கின்றவரோசையுமழைமுழக்கத்தோடு மாறுகொண்டனவென்பதாம் - இது முதல் (௫) பாடல்-சிறப்பு.

வள்ளவாய்ச்செழுங் கமலத்தின்வண்டுபாண்மிழற்று
மள்ளலங்குழுஞ்சுற்றிடையாமைகண்படுக்கும்
பள்ளநீர்ச்செழும்பணைதொறும்பணிலமுத்துயிர்க்குங்
கள்ளுலாமலர்ப் பொதும்பரிற்கனிமயிலகவும்

(இ-ள்) வண்டு-வண்டுகளானவை—வள்ளம்-கிண்ணம்போன்ற—வாய்-வாயையுடைய—செழும்-செழிய—கமலத்தில்-தாமரைமலர்களிலே—பாண்-இசைகளை—மிழற்றும்-பாடிக்கொண்டிருக்கும்—ஆமைகளானவை, அள்ளல் குழம்பாகிய—சுறும் - கரிய—சேற்றிடை-

சேற்றின்கண்—கண்படுக்கும் - தூங்கிக்கொண்டிருக்கும்—பணிலம்-சங்குகளானவை—பள்ளம்-ஆழமாகிய—நீர் - நீரையுடைய—செழும்-செழிய—பணைதொறும்-கழனிகளிலெல்லாம்—முத்து - முத்துக்களை—உயிர்க்கும்-சொரியும்—களி-களிப்பையுடைய—மயில் - மயில்களானவை, கள் - தேனானது—உலா-பெருகுகின்ற—மலர்- மலர்களையுடைய—பொதும்பரில்- சோலைகளிலே—அகவும் - ஆடிக்கொண்டிருக்கும்—அம்-சாரியை—எ-று(கருத்து)வண்டுகள் தாமரையிற்பாடும்-ஆமைகள்சேற்றிலே நித்திரைசெய்யும்-சங்குகள் கழனிகளில்முத்துக்களைச்சொரியும்-மயில்கள்சோலைகளிலாடும்-எ-ம்(பணிலம்-சலஞ்சலம்) (௭)

பண்ணைவாய்த்தவழ்பணிலங் கருவுயிர்த்தவெண்முத்துங்
கண்ணுடைக்கரும்பீன்ற வெண்முத்தருந்தமழுத்
தண்ணந்தாமரைசொரிந்த வெண்முத்தருந்தயங்கி
வெண்ணிலாக்கதிர்விரித்த விறகுழுதவாய்மின்னும்.

(இ-ள்) பண்ணைவாய்-கழனிகளிடத்து—தவழ்-தவழ்கின்ற, பணிலங்கள் - சங்குகளால்—உயிர்த்த - தரப்பட்ட—வெள் - வெள்ளிய—முத்தும்-முத்துக்களும்—கண் - கணுக்களை—உடை - உடைய—கரும்பு-கரும்புகளால்—ஈன்ற - தரப்பட்ட—வெள்-வெள்ளிய—முத்தும்-முத்துக்களும்—கமழும்- பரிமளிக்கின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—அம்-அழகிய—தாமரை-தாமரைமலர்களால்—சொரிந்த-தரப்பட்ட—வெள்-வெள்ளிய—நிலா-சந்திரனது—கதிர் - கிரணங்களை—விரித்தவேன - பரப்புதலிலே—முகுதம் - அல்லிமலர்களானவை—வாய்விள்ளும்(சந்திரோதயமில்லாதகாலத்திலும்)மலரும்—எ-று(இது காட்சியணி (கருத்து)சங்கின் முத்துக்களும் கரும்பின் முத்துக்களும்-தாமரைமுத்துக்களும்கிரணங்களை விரித்தலால் அல்லிமலர்களமலரும்-எ-று. (௮)

விழுந்தவஞ்சிறைவண்டினமிதிப்பமெல்லரும்பு
கிழிந்தவார்தருதேறலுங்கிளைசினைப்பலவின்
பழங்களிந்துவீழ்தேறலும்பழனக்கோடும்
வழிந்துபாய்தலின்வாளுறவளர்வனசெந்நெல்

(இ-ள்) விழுந்த-(மேல்)விழுந்த—அம் - அழகிய, சிறை-சிறகுகளையுடைய—வண்டு-வண்டுகளின்—இனம்-கூட்டங்களானவை—மிதிப்ப - மிதிக்க—மெல்-மெல்லிய—அரும்பு-அரும்புகளானவை—கிழிந்து- கிழிய—வார்தரு(அவைகளினின்று)ஒழுகுகின்ற—தேறலும்-தேனும்—கிளை-விளங்குகின்ற—சினை - கிளைகளையுடைய—பலவின்-பலாமரங்களின்—பழம்-பழங்களானவை—களிந்து-கனிந்து—வீழ் (அவைகளினின்று)வழிகின்ற—தேறலும் - தேனும்—வழிந்து - பெருகியெடுத்து—பழனக்கோடும் - கழனிகளிலெல்லாம்—பாய்தலின்-பாய்தலினாலே—வாள் - ஆகாயத்தை—உற- தொடும்படி—செந்நெல்-செந்நெற்பயிர்களானவை—வளர்வன-வளரும்—எ-று - (இது தொடர்புயர்வுநவிற்சியணி)(கருத்து)மலர்களின் தேனும் - பலாப்பழங்களின்தேனும் கழனிகளிற்பாய்தலினாற்செந்நெல்விளைவன-எ-ம். (௯)

கூனிரும்பினிற்குறைத்தரிசும்மையிற்கொடுபோய்
மேனிவத்துயர்வரையெனப்போர்பலவேய்ந்து
ஈனிறக்கரும்பகட்டினைநெற்றெறித்தனவீத்த
தானிறக்கநெற்பண்டியிற்பறபலர்தொகுப்பார்.

(இ-ள்)கூனிரும்பினில் - அரிவாளினால்—குறைத்து- அறுத்து—அரி-(அவ்வறுக்கப்பட்ட)அரிகளை—சும்மையில்-சுமைகளாய்—கொடுபோய்-கொண்டுபோய்—மேல்-மேல்—வைத்துயர்- ஓங்கிய—வரையென-மலைகள்போலத்தோன்ற—பல் - பலவாகிய—போர் - போர்களை—வேய்ந்து-போட்டு—ஈனிறம் - கீழ்நிறம்பொருந்திய—கரு - கறுத்த—பகட்டினால்-கடாக்களினாலே—தெறித்து - தாவைப்பித்து—வைவனைக்கோலை—நீத்த - கழித்த—தா - பரிசுத்தமாகிய—நிறத்த-காந்தியையுடைய—நெல் - நெற்களை—பண்டியில் - பண்டிகளாற் (கொண்டுபோய்)பறபலர்-பலபலசாதியார்களும்—தொகுப்பார்- (களஞ்சியங்களிலே) நிறைப்பார்கள்—எ-று-நெற்கதிரையறுத்துக்கடாக்களால் மிதிப்பித்து வைக்கோலைத்தள்ளி அந்நெற்களைப்பண்டியிற்கொண்டு போவார்கள் எ-ம். (௰)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய-விருத்தம்.

குரும்பைமென்முலையாராடக் கூந்தலினறவந்தோய்ந்த
விரும்புனலாறுபாயவெறிதிரைச்சுருட்டுந்தெண்ணீர்க்
கருங்கடற்புலவுநீங்கி நறுமணங்கமழுமென்றால்
மருந்தநறு மலர்த மிகுதியைமொழியலாமோ.

(இ-ள்)குரும்பை-தென்னம்பிஞ்சுபோன்ற—மெல் - மெல்லிய—முலையார் - முலைகளையுடையமாதர்—ஆட-முழுக—கூந்தலில்-(அவர்) கூந்தலிலிருந்து—நறவம்- சாந்தத்தோடு—தோய்ந்த-கலந்த—இரும்-பெரிய—புனல்-நீரானது—ஆறு-ஆற்றினாலே(போய்)பாய- விழ—எறிகின்ற—திரை - அலைகளை—சுருட்டும்- மடக்கும்—தெள்-தெளிவுபொருந்திய—நீர்-நீரையுடைய—கரும் -கரியகடல்- கடலானது—புலவு-புலால்நாற்றத்தை—நீங்கி- நீங்கி—நறுமணம்-நல்லமணமானது,கமழுமென்றால் - மணக்குமென்றால்—மருந்து - மயிர்நறியடிசை—உதழுநிந்த—மலர்-சந்தங்களையுடைய அவர்களது—மிகுதியை, பெருக்கத்தை—மொழியலாமோ-(காண்) சொல்லலாமோ—எ-று.தம்சாரியை—இ-ன் நிர்மறை(அந்நாட்டுமகளிரது செல்வமிகுதியைச் சொல்லுதலால் வீழுகோளணியாம்)(கருத்து)மாதர்களாடிய நீரிலேகடலானது புலால்நாற்றநீங்கிமணம் வீசுமானால் அம்மாதர்பெருக்கத்தைச்சொல்லலாமோ-எ-ம். (௰௧)

பூமலிகடங்கடோறும் புனல்குடைமகளிரீட்டம்
காமருகழனிதோறுங் கடைசியர்குரவையீட்டம்
தேமலர்ச்சோலைதோறுஞ் செழுங்குயிற்றொழுதியீட்டம்
கோமறுகிடங்கடோறுங் குணில்பொருமுரசினீட்டம்.



(இ-ள்)பூ-மலர்களாலே—மலி-நிறைந்த—கடங்கடோறும் - குளங்களிலெல்லாம்—புனல்குடை-நீர்விளையாடுகின்ற—மகளிர்- மாதரது—ஈட்டம்-கூட்டமும்—காமர் -அழகிய—கழனிதோறும் - வயல்களிலெல்லாம்—குரவை-கைக்கோத்தாடுதலையுடைய—கடையர் - உழத்தியரது—ஈட்டமும்-கூட்டமும்—தேம்-வாசனைபொருந்திய—மலர் மலர்களையுடைய—சோலைதோறும் - சோலைகளிலெல்லாம்—தொழுதி -ஒலித்தலையுடைய—செழு-செழிய—குயில் -குயில்களது—ஈட்டம் - கூட்டமும் —கோ-அரசரது—மறுகு-வீதிகளுடைய—இடங்கடோறும்-இடங்களிலெல்லாம்—குணில்-குறுந்தடியால்—பொரு - அறுக்கப்படுகின்ற—முரசின் - முரசங்களது—ஈட்டம் - கூட்டமும்(இருக்கும்)—எ-று(காமருவென்பதில் - உகரம்-சாரியை,தொழுதி -புள்ளொலி;கோ-சாதியொருமை) (கருத்து) குளங்களெங்கும் நீராடுமாதர் கூட்டங்கள் வயல்களெங்குங்குயில் கூட்டங்கள் இராசவீதிகளெங்கும் பேரிகைக் கூட்டங்கள்-எ-ம். (௰௨)

கறுவொடுமொன்றோடொன்று காரணமின்றிச்சீறிப்
பொறியுடைக்குறும்பூழ்தம்மிற் போர்செயப்பொருத்துமோதை
செறிமயிர்த்தகர்கடம்மிற் றீயெழத்தாக்கநோக்கி
யறைகழல்வீரரார்க்கு மமலையவிக்குமன்றே.

(இ-ள்)பொறியுடை-புள்ளிகளையுடைய—குறும் பூழ்- காடைகளானவை—தம்மில்-தம்முள்ளே—ஒன்றோடொன்று -ஒன்றுடனொன்று—காரணமின்றி-ஏதுவில்லாமல்—கறுவொடும் -கறுவுதலுடனே—சீறி-சீறிக்கொண்டு—போர்-சண்டையை—செய -செய்யும்படியாக—பொருத்தும்-(அவற்றைக்) கூட்டுதற்கணுண்டாகின்ற, ஓதை-(சிறுவர்) ஓசையானது—செறி-நெருங்கிய—மயிர்-மயிர்களையுடைய—தகர்கள்- ஆட்டுக்கடாக்கள்—தம்மில் - தம்முள்ளே—தீ - நெருப்பானது—எழ-தோன்ற—தாக்கல் - ஒன்றையொன்றிடித்தலை—நோக்கி - பார்த்து—அறை-ஒலிக்கின்ற—கழல்-வீரக்கழலையுடைய—வீரர் - வீரரானவர்—ஆர்க்கும்(ஆச்சரியப்பட்)டொலிக்கின்ற—அமலையை-ஓசையை, அவிக்கும்-அடக்கும்—எ-று.அன்று-ஏ-அசைகள்(கருத்து) காடைகளைச்சண்டைசெய்விக்குஞ் சிறுவர்கள் சத்தமானது ஆட்டுக்கடாக்களைச் சண்டைசெய்வித்துப்பார்க்கும் வீரசத்தத்தையடக்கும்-எ-ம். (௰௩)

மாதர்மென்முல்லையீன்ற வான்முகையனையமூரல்
கோதறுகருணைநெய்பால் கொழுங்கனியிவற்றினோடு
மாதுலர்யாவரென்ன வதிர்குரன்முரசிற்சாற்றி
வேதியர்க்கருத்திப்பின்னர் விருந்தொடுநுகர்வர்மாதோ.

(இ-ள்)ஆதுலர்-யாசகர்—யாவரென்ன-யாவரென்று—அதிர்-அதிர்கின்றகுரல்-ஓசையையுடைய—முரசின்-முரசினாலே,சாற்றி - விளம்பி(வருவித்து)-மாதர்-அழகிய—மெல்-மெல்லிய முல்லை-முல்லைக்கொடியினால்—ஈன்ற-தரப்பட்ட-வால்-வெள்ளிய,முகையனைய - அரும்புகள்போலும்—மூரல்-சோறும்—கோதறு-குற்றமற்ற—கருணை-பொரிக் கறியு

ந்தீ-தித்திப்பாகிய—பால்-பாலும்—கொழு-செழிய—கனி-பழமும்—இவற்றினேடும்-ஆகியவிவற்றோடு மற்றபுனைவுகளையும்—வேதியர்க்கு-அந்தணரை—அருத்தி-(முன்னே) உண்பித்து—பின்னர்-அதன்பின்பு—விருந்தோடும்-சுற்றத்தார்முதலியோரோடன்றிவிருந்தினரோடும்—நுகர்வர்-(அந்நாட்டோர்)உண்பார்—எ-று.மாது-ஓ-அசைகள்(உம்மையிரண்டுமெச்சம் வேதியர்க்குஉருபுமயக்கம்) (கருத்து) யாசகரைவரும்படி முரசறைவித்து முன்பிராமணரை உண்ணச்செய்து பின்விருந்துடனுண்பார்-என்பதாம். (௰௪)

முல்லையங்கோதைநல்லார் முகமதிவெயர்வுதோன்ற
வல்லிநுண்மருங்குனோவ வால்வளைவாய்விட்டார்ப்ப
மெல்விரல்காந்தள்சேப்ப வெண்டயிர்கடையுமோதை
கொல்புலிமுழக்கமென்ன வயின்றொறுங்குளிறுமாதோ

(இ-ள்)முல்லை-முல்லைமலர்களைச்சூடிய—அம்-அழகிய—கோதை-கூந்தலையுடைய—நல்லார்-இடைச்சியர்,முகமதி-(தமது) முகமாகியசந்திரனிடத்து—வெயர்வு-வெயர்வையானது—தோன்ற-உண்டாகவும்—வல்லி-பூங்கொடிபோலும்—நுண்-நுட்பமாகிய—மருங்குல்-இடையானது—நோவ-வருந்தவும்—வால்-வெள்ளிய—வளை-சங்கவளையல்களானவை—வாய்விட்டு-ஒன்றோடொன்றுதாக்குண்டு—ஆர்ப்ப-ஒலிக்கவும்—மெல்-மெல்லிய—விரல்-விரல்கள்—காந்தள்-காந்தள்மலர்போல—சேப்ப-சிவக்கவும்—வெள்-வெள்ளிய—தயிர்-தயிரை—கடையும்-கடைதலினாலுண்டாகின்ற, ஓதை-ஓசையானது—கொல்-கொல்லுகின்ற—புலி-புலியினது—முழக்கமென்ன-உறுமுதல் போல—வயின்றொறும்-(அவர்)வீடுதோறும்—குளிறும்-ஒலிக்கும்—எ-று.மாது-ஓ அசைகள்(இதுசேர்வையணியாம்)(கருத்து) இடைச்சியர் தயிர்கடையுஞ்சத்தமானது கொல்லும்புலிமுழக்கம்போல வீடுகளெங்குஞ்சத்திக்கும்-எ-ம. (௰௫)

பூக்கரும்புடைந்தநீஞ்சாறடுபுகைபுயலென்றெண்ணி
மாங்குயிற்றொகுதியாவும் வாய்விடாதொழிந்தமஞ்ஞை
ஆங்கிசைவண்டுந்தேனுஞ் சுரும்பொடுஞிமிறும்பாடத்
தேங்கமழ்சோலைதோறுஞ் சிறைவிரித்தாடுமாதோ.

(இ-ள்) உடைந்த-(ஆலையிற்)சிதைந்த—பூ-அழகிய—கரும்பு-கரும்புகளையுடைய—நீ-தித்திப்பாகிய—சாறு-சாற்றை—அடு-காய்ச்சுமிடத்தெழுகின்ற—புகை-புகையை—புயலென்று-மேகமென்று—எண்ணி-நினைத்து—மா-மரங்களிலுள்ள—குயில்-குயில்களுடைய—தொகுதியாவும்-கூட்டங்களெல்லாம்—வாய்விடாதொழிந்த-கூவாதொழிந்தனவாக—மஞ்ஞை-மயில்களானவை—ஆங்கிசை-காட்டியராகத்தை—வண்டும்-கருவண்டுகளும்—தேனும்-தேன்வண்டுகளும்—சுரும்பொடு-பொறிவண்டுகளுடனே—ஞிமிறும்-பொன்வண்டுகளும்—பாட-பாடுதல்செய்ய—தேம்-தேனை—கமழ்-மணக்கின்ற—சோலைதோறும்-சோலைகளிலெல்லாம்—சிறை-கலாபத்தை—



விரித்து-விரித்துக்கொண்டு—ஆடும்-கூத்தாடும்—எ-று.மாது ஓ அசைகள்(புகையைமேகமென்றுமயங்குதலால்-மயக்கவணியாம்) (கருத்து) கரும்பஞ்சாற்றைக்காய்ச்சுகையிலெழும்புகையைமேகமென்று குயில்கள்கூவாதடங்கின வண்டுகள்பாடமயில்கள்நடனமாடின எ-ம. ( )

அரக்கெறிகுமுதச்செவ்வா யலர்முலையந்நலார்தந்
திருக்கிளர்கமலம்பூத்த சேயரிக்கண்ணும்வாவி
யுருக்கிளர்குவளைப்போதும் வேற்றுமையுணராதுற்ற
வரிச்சிறைத்தும்பியோடு வண்டினமருளுமாதோ

(இ-ள்) அரக்கு-சிவப்புநிறத்தை—எறி-வீசுகின்ற—குமுதம்-ஆம்பல்மலர்போலும்—செவ்-செய்ய, வாய்-வாயையும்—அலர்-அடிபரந்த, முலை-முலைகளையுடைய—அந்நலார்-அந்நாட்டு மாதருடைய—திரு-அழகினால், கிளர்-விளங்குகின்ற—கமலம்-தாமரைப்பூவாகிய—(முகங்களிடத்து)பூத்த-மலர்ந்த, சேய்-செய்ய—அரி-இரேகைகளையுடைய—கண்ணும்-கண்களுக்கும்—வாவி-குளத்தினிடத்து—உரு-அழகினால்—கிளர்-விளங்குகின்ற, குவளைப்போதும்-நீலோற்பலமலர்களுக்கும்—வேற்றுமை-பேதத்தை—உணராது-அறியமாட்டாமல்—உற்ற-(தேனுண்ண) வடைந்த—வரி-கீற்றுக்களையும்—சிறை-சிறைகளையுமுடைய, தும்பியோடு-தும்பிகளுடன்—வண்டு-வண்டுகளின்—இனம்-கூட்டம்—மருளும்-மயங்கும் எ-று.மாது-ஓ அசைகள்(இதுபொதுமையணி) (கருத்து) அந்நாட்டுப்பெண்கள் கண்களிவையென்றுங்குவளைமலரிவையென்றும) அறியாது வண்டினங்கள்மயங்கும்-எ-ம. (௰௭)

அல்லியங்கோதைமாதரன்பொடுவளர்த்தமுல்லை
மெல்லநம்பீன்றதென்று விழாவயர்முழவினோடு
மல்லுயர்திணிதோண்மைந்தர் மங்கையர்வதுவையாற்றும்
பல்லியமுழக்கமார்க்கும் பரவையொடிகலுமாதோ

(இ-ள்) அல்லி-அகவிதழ்களாகிய—அம்-அழகிய—கோதை-மாலையையுடைய—மாதர்-மகளிரானவர்—அன்பொடு-அன்புடனே—வளர்த்த-(தம்மால்)வளர்க்கப்பட்ட, முல்லை-முல்லைக்கொடியானது—மெல்-மெல்லிய, அரும்பு-அரும்புகளை—ஈன்ற-தென்று-தந்ததென்றுநினைத்து; விழா-(அதற்குத்) திருவிழாவை—அயர்-செய்யுமிடத்துண்டாகின்ற—முழவினோடு-வாத்தியவொலியோடு—மல்-மற்போரில்—உயர்-உயர்ந்த—திணி-வலிமைபொருந்திய, தோள்-தோள்களையுடைய—மைந்தர்-காளையரானவர்—மங்கையர்-மங்கைப்பருவப்பெண்களை, வதுவையாற்றும்-விவாகஞ்செய்தற்குண்டாகின்ற—பல்லியம்-பலவகைவாத்தியங்களது—முழக்கம்-ஓசையானது ஆர்க்கும்-ஒலிக்கின்ற—பரவையோடு-கடலொலியோடு—இகலும் பகைக்கும்—எ-று.மாது ஓ அசைகள்(இதுதொடர்புயர்வுநவிற்சியணி) கருத்து)முல்லைமலர்க்கதென்று திருவிழாநடத்துகின்றவாத்தியவோசையும் விவாகம்நடத்துகின்றவாத்தியவோசையும் கடலோசையோடு மாறுபடும்-எ-ம. (௰௮)

அவிரிழைசுமக்கலாற்றா தங்கலார்பரிந்துநீத்த
இவரொளிமணியுமுத்துஞ் சிந்தியமுன்றிறோறுங்
குவிமுலைகயவாய்ச்செங்கட் குடம்புரைசெருத்தன்மேதி
கவையடிபெயர்ப்பமாழ்கிக் காறளர்ந்தொதுங்குமன்றே.

(இ-ள்) அங்கலார்-அத்தேயத்துமாதரால்—சுமக்கலாற்றாது-சுமக்கமாட்டாமல்—பரிந்து-வருந்தி—நீத்த-களைந்தெறியப்பட்ட—அவிர்-ஒளிசெய்கின்ற, இழை-ஆபரணங்களில்—இவர்-அசையாநின்ற—ஒளி-ஒளியையுடைய, மணியும்-பலவிதமணிகளும்—முத்தும்-முத்துக்களும்—சிந்திய-இறைந்துகிடக்கின்ற—முன்றிறோறும்—வீட்டின்முன்னிடந்தோறும்; குவி-குவிந்த—முலை-முலைகளையும், கய-பெரியதாகிய—வாய்-வாயையும், செம்-செய்ய, கண்-கண்களையும்—குடம்புரை-குடம்போலும், செருத்தல்-மடியையுமுடைய—மேதி-எருமைகளானவை—கவை-பிளப்பையுடைய, அடி-அடிகளை, பெயர்ப்ப-எடுத்துவைக்க, மாழ்கி-வருந்தி, கால்-கால்களானவை, தளர்ந்து-சோர்ந்து, ஒதுங்கும்-பக்கங்களிலேவிலகும்—எ-று. அன்று-ஏ-அசைகள் (செல்வமிகுதியைச்சொல்லுதலால் வீறுகோளணியாம்) (கருத்து) பெண்கள்களைந்தெறிந்த ஆபரணங்களின் நவமணிகளின்மேல் எருமைகள்பிளவடிவையாமல்விலகிப்போமென்பதாம். (௰௯)

பொரியரைத்தேமாநெற்றிப் பூங்கனியிழிந்ததேனும்
விரிதலையரம்பையீன்ற மென்பழமுகுத்ததேனு
முருகவிழ்சுளைவாய்விண்ட முட்புறக்கனியின்றேனுங்
குருகுபாய்தடமுமியாறுங் குறைவறப்பெருகுமன்றே.

(இ-ள்) பொரி-பொருக்குகளையும்—அரை-அரையையுமுடைய—தேமா-தேமாவினது, பூ-அழகிய—கனி-பழங்களானவை, நெற்றி-முதிர; இழிந்த-(அவைகளினின்று)ஒழுகிய, தேனும்-மதுவும்—விரி-விரிந்த—தலை-தலையையுடைய—அரம்பை-வாழைகளால்—ஈன்ற-தரப்பட்ட—மெல்-மெல்லிய—பழம்-பழங்களால்—உகுத்த-சொரியப்பட்ட—தேனும்-மதுவும்—விண்ட-வெடித்த—முட்புறக்கனியின்-பலாப்பழங்களினுடைய—முருகு-பரிமளமானது—அவிழ்-விரிகின்ற—சுளைவாய்-சுளைவாயினின்றொழுகிய—தேனும்-மதுவும்—குருகு-பறவைகளானவை—பாய்-பாய்கின்ற, தடமும்-ஏரிகளிலும்—யாறும்-நதிகளிலும்—குறைவற-குறைவுதீர—பெருகும்-பெருகிப்பாயும்—எ-று. (முக்கனிகளின்சாற்றிற்கும் ஏரிநதிகளுக்குஞ் சம்மந்தமில்லாமையிருந்தும் சம்மந்தத்தைக் கற்பித்தலினாலே தொடர்புயர்வுநவிற்சியணியாம்)(கருத்து)மாங்கனித்தேனும்வாழைக்கனித்தேனும்பலாக்கனித்தேனும்,ஏரிகளிலும் நதிகளிலும்பெருகும்—எ-ம்.

அருமறைக்கிழவருள்ளத் தவாக்கெடவன்பினல்கும்
பெருநிதிக்குப்பையோடு பெய்புனல்பெருகியோடி
வரிவளையலறியீன்ற மணியிளநிலவுகாலுந்
திருவின்கழனிதோறுஞ் செந்நெலைவளர்க்குமாதோ.



(இ-ள்) அரு-அரிய—மறைக்கிழவர்-வேதத்திற்குரியபார்ப்பாருடைய—உள்ளத்து-மனத்திலுள்ள—அவா-பொருளாசையானது, கெட-அழிய, அன்பின்-பத்தியினாலே—நல்கும்-கொடுக்கப்படுகின்ற—பெரு—பெரிய—நிதி-பொருள்களது—குப்பையோடு-குவியல்களோடு—பெய்-விதிப்படிவார்க்கப்படுகின்ற—புனல்-நீரானது—பெருகி-பெருக்கெடுத்து—ஓடி-விரைந்துபோய்—வரி-இரேகைகளையுடைய—வளை-சங்குகளால்—அலறி-கூவி—ஈன்ற-தரப்பட்ட, மணி-முத்துக்களானவை—இள-இளமைபொருந்திய—நிலவு-சந்திரிகையை, காலும்-வீசுகின்ற—திரு-அழகிய—நீள்-நீண்டிருக்கின்ற—கழனிதோறும்-கழனிகளிலெல்லாம்—செந்நெலை-செந்நெற்பயிரை—வளர்க்கும்-வளர்க்கும்—எ-று. அகரம்சாரியையமாது-ஓ-அசைகள் (இஃதுஉறுப்புறுப்பிற்கலவையணி)(கருத்து) பார்ப்பாருக்குப் பொருட்குவியலைத் தத்தம்பண்ணுநீரானது செந்நெலைவளர்க்குமென்பதாம்.)

நிலவுவெண்முத்தும்பொன்னு நீனிறமணியுஞ்சாந்துந்
தலைமயக்குற்றவாற்றாற் றண்மதிதவழுங்கோட்டு
மலைவளம்பெரிதென்கோயான் வால்வளைபரந்துமேயு
மலைவளம்பெரிதென்கோயா னியாதெனவறைவன்மாதோ.

(இ-ள்) நிலவு-சந்திரிகையையுடைய—வெண்-வெள்ளிய—முத்தும்-முத்துக்களும்—பொன்னும்-கனகங்களும்—நீனிறம்-நீலநிறத்தையுடைய—மணியும்-மணிகளும்—சாந்தும்-சந்தனக்கட்டைகளும்—தலைமயக்குற்றவாற்றும்-கலந்துகிடைக்கையால்—தண்-தண்ணிய, மதி-சந்திரனால்—தவழும்-உராய்ந்துசெல்லப்படுகின்ற—கோட்டு-சிகரத்தையுடைய, மலை-மலையினது—வளம்-வளத்தை, யான்-நான்—பெரிதென்கோ-அதிகமென்றுசொல்லுவேனோ, வால்-வெண்மைபொருந்திய—வளை-சங்குகளானவை-பரந்து பரவி—மேயும்-மேய்கின்ற—அலை-அலைகளையுடையகடலினது—வளம்-வளத்தை—யான்-நான், பெரிதென்கோ-அதிகமென்றுசொல்லுவேனோ,யாதென-இவற்றுள்ளே யாதை(அதிகமென்று)—அறைவன்-யான்சொல்லுவேன்—எ-று. மாது ஓ-அசைகள் (இதுஐயவணியாம்) (கருத்து) மலைவளத்தைப் பெரிதென்றுசொல்லுவேனோ கடல்வளத்தைப்பெரிதென்றுசொல்லுவேனோ என்றார் நூலாசிரியர். (௨௨)

உளங்கனிந்தாயரூதும் வேயிசைசெவியினேர்ந்து
துளங்குவெள்ளருவிக்குன்றிற் றோகைகண்டுஞ்சுந்தெண்ணீர்
வளங்கொழுமருதவேலி வண்டுதாலாட்டவெய்த
விளங்கனிகுமரியன்ன பின்றுயில்கூருமாதோ.

(இ-ள்) ஆயர்-முல்லைநிலத்துள்ள இடையரால்—உளங்கனிந்து-மனமகிழ்ந்து—ஊதும்-ஊதப்படுகின்ற—வேய்-புல்லாங்குழல்களுடைய—இசை-இராகத்தை—செவியின்-காதுகளினாலே—நேர்ந்து-கேட்டு—துளங்கு-அசைகின்ற—வெள்-வெள்ளிய—அருவி-வெள்ளங்களையுடைய—குன்றில்-குறிஞ்சிநிலத்தில்—தோகை-மயில்களானவை:

—கன்றுந்தும் - தூங்கும்—தெள் - தெள்ளிய—நீர்-நீரினது—வளம்-வளமானது—செழு-பொருந்திய—வேலி-வேலியையுடைய—மருதம்-மருதநிலத்தில்—வண்டு- வண்டுகளானவை, தாலாட்ட-தாலாட்டிசைபாட—செய்தல்-நெய்தனிலத்தில்—இளம்- இளமைபொருந்திய—களி-களிப்பையுடைய—குயிலன்னம் - பெட்டையன்னங்களானவை—இன்-இனிய—துயில்கூரும்- நித்திரைமிகும்—எ-று. (கருத்து)இடையர்புள்ளாங்குழலிசைகேட்டுமலையில்மயில்கள் நித்திரைசெய்யும்மருதநிலத்தில்வண்டுகள் தாலாட்டிசைபாடநெய்தனிலத்தி லன்னங்கள் நித்திரைசெய்யுமென்பதாம். (௨௩)

கொடியனமகளிர்தங்கள் குழையுநுண்மருங்கேவாளாப்
படுகொலைபுரிவமாதர் படைநெடுங்குவளைக்கண்ணே
யடிமிசைமுறையிட்டென்று மாற்றுவசிலம்பேசூழ்ந்து
கடிமதுநுகர்வவன்றினர் கருங்குழற்காமர்வண்டே.

(இ-ள்) மகளிர் - மாதருடைய—குழையும் - வாடுகின்ற—நுண் - நுண்ணிய—மருங்கே-இடைகளே—கொடியன -கொடுமை யுள்ளனவாம்— (இங்கேமருங்கேகொடியனவென்பதற்கு) — மருங்கே - இடைகளே—கொடியன-கொடிபோல்வன—என்பது-(கருத்தாகக்கொள்க) (அன்றேர்) அவருடைய—மாதர்-அழகிய,படை-வாளும், குவளை -நீலோற்பலமும்போலும்—நெடு-நெடிய, கண்ணே-கண்களே, வாளா-வீணாக, படு-இறந்துபடுகின்ற—கொலை;கொலைத்தொழிலை-புரிவ, செய்வனவாம்—இங்கேகண்ணேவாளாப்படுகொலைபுரிவவென்பதற்கு, கண்ணே-கண்களே—வாளா-காரணமில்லாமல்—படு-வருந்துகின்ற, கொலை-வருத்தத்தை—புரிவ-செய்வன; என்பது (கருத்தாகக்கொள்க) சிலம்பே-நூபுரங்களே—(அன்றேர்)-அவருடைய—அடிமிசை- அடிகளின்மேல்விழுந்து—முறையிட்டு - தங்குறைகளைமுறையிட்டு—என்றும் - எந்நாளிலும்—ஆற்றுவ - புலம்புவனவாம் (இங்கேசிலம்பேயடிமிசைமுறையிட்டென்றுமாற்றுவவென்பதற்கு)—சிலம்பே- சிலம்புகளே—அடிமிசை- அடிகளின்மேல்—முறை - முறையாக—இட்டு- தரிக்கப்பட்டு—என்றும் - எக்காலமும், ஆற்றுவ - ஒலிப்பன—என்பது(கருத்தாகக்கொள்க)—அன்னோர்-அவருடைய—கரு - கரிய—குழல்-கூந்தலிலுள்ள—காமர் - அழகிய—வண்டே - வண்டுகளே,சூழ்ந்து சூழ்ந்து—கடி-(வேதத்தினலே)விலக்கப்பட்ட,மது- கள்ளை, நுகர்வ-குடிப்பனவாம்(இங்கேவண்டேசூழ்ந்துகடிமதுநுகர்வ வென்பதற்கு) வண்டே-வண்டுகளே,சூழ்ந்து-மொய்த்து,கடி-பரிமளம்பொருந்திய, மது-(பூந்)தேனை, நுகர்வ - குடிப்பன, என்பது (கருத்தாகக்கொள்க) தம் சாரியை - கள் --பகுதிப்பொருள்விகுதி இதுகொடுமை முதலானவற்றை மனிதர்களிடத்தொழித்து இடைமுதலானவற்றிற்காட்டலால் -ஒழித்துக்காட்டணியாம். (௨௪)

கடல்படுமமுதுமல்லற்கான்படுமமுதுமோங்கு
கடவரையமுதுமொன்றித் தலைமயக்குற்றவாற்று



னுடைதிரையமுதமொன்றேயுடையவிண்ணாடுகொல்லோ
நிடதநாடதற்குநேரா நிகழ்த்தலாந்தகைமைத்தம்மா

(இ-ள்)கடல்-கடலினிடத்து,படும்-உண்டாகிய,அமுதும்,(உப்புமுதலாகிய)வமுதமும்; மல்லல்-வளம்பொருந்திய, கான் - காட்டினிடத்து, படும்-உண்டாகிய—அமுதும் - (பால்முதலாகிய)வமுதமும், ஓங்கும் உயர்ந்த, கடம் - பெரிய—வரை - மலையினிடத்து—படும் - உண்டாகிய—அமுதும் - (தேன்முதலாகிய)வமுதமும்—ஒன்றி - பொருந்தி—தலைமயக்குற்ற - கலந்திடுகின்ற—ஆற்றல் - காரணத்தால்—உடை-(கரையை)யுடைக்கின்ற—திரை - அலைகளையுடைய, (கடலினிடத்து)-படும்-உண்டாகிய—ஒன்றமுதமே - ஓரமிர்தத்தையே—உடைய (தன்னிடத்தி)லுடைய—விண்ணாடோ - தெய்வநாடோ—நிடதநாடதற்கு-நிடததேயத்திற்கு—நேரா-ஒப்பாக—நிகழ்த்தலாம்,- சொல்லலாம்—தகைமைத்து - குணத்தையுடையது—எ-று(கொல் - அசை, ஓ - எதிர்மறை)இதுவேற்றுமையணி(கருத்து)கடலில்மலையில்காட்டில்படு திரவியம்பொருந்தியிருப்பதால் இந்நாட்டைப் பொன்னாட்டுக்கொப்பாகச் சொல்லலாம்-என்பதாம். (௨௫)

நலனுறுகுமரியார்க்கு நண்ணியவிருந்தோடுண்டும்
பலகலைகேள்வியாய்ந்தும் பகற்பொழுதினிதுநீங்கு
மலர்முலையங்கலார்த மலர்த்தகமலர்த்தாணீவிப்
புலவிகடீர்த்துஞ்சேர்ந்து நள்ளிருட்பொழுதும்போமால்

(இ-ள்)நலன் - நற்குணங்களை—உறு - பொருந்திய—குமரியார்க்கு - ஆடவரெல்லார்க்கும்—நண்ணிய (தம்மிடத்துவந்த விருந்தோடும் விருந்தினரோடு—உண்டும்-உண்ணலாலும்—பல -பலவாகிய,கலை - கலைகளை—கேள்வி - கேள்வியினலே; ஆய்ந்தும் - ஆராய்தலாலும்,பகற்பொழுது-பகற்காலமானது—இனிது - இனியதாக—நீங்கும் -கழியும், அலர்-அடிபரந்த—முலை-முலைகளையுடைய; அங்கலார் -அழகியமங்கையருடைய—அலர்த்தகம்-செம்பஞ்சூட்டிய,மலர் - தாமரைமலர்போலும்—தாள்-அடிகளை —நீவி-தடவி—புலவிகள்- ஊடல்களை—தீர்த்தும் தீர்க்குதலாலும்—சேர்ந்தும்(அவரைச்) சேர்தலாலும்—நள்ளிருட்பொழுதும்-நடுவிராக்காலமும்—இனிது-இனியதாக—போம்-கழியும் எ-று தம்-சாரியை-ஆல் - அசை (கருத்து)வாலிபர்களுக்குப் பகற் பொழுதானது விருந்துண்ணுதலாலும்கல்விப் பயிற்சியினாலும் நீங்கும் இராப்பொழுதானது பெண்களாபிணக்கை நீக்குதலாலும் அவர்களைச் சேர்தலாலும் நீங்கும் என்பதாம். (௨௬)

கொல்லுலைவேற்கணல்லார் கொழுநரோடிநீத்த,
வில்லுமிழ்கலன்களியாவு மினிர்சுடரொரிக்குமாற்று
செல்வியும்பகலுந்தோன்று நிமையவருலகமேய்க்கு
மல்லன்மாவிந்தமெனனும வளநகர்கூறலுற்றும்.

(இ-ள்)கொல்-கொல்லனது—உலை - உலையிலேகாய்ச்சப்பட்ட—வேல் - வேல்போலும்—கண்-கண்களையுடைய;நல்லார் - மாதரால்—கொ

பூங்கோடு - கணவரோடு-ஊடி, பிணங்கி—நீத்த- களைந்தெறியப்பட்ட—வில்-காந்தியை,உமிழ்-வீசுகின்ற; கலன்களியாவும்- ஆபரணங்களெல்லாம்—மிளிர்-விளங்குகின்ற—சுடர்- கிரணங்களை—எரிக்கும்-வீசும்—ஆற்றல்-காரணத்தால்—எல்லியும்-இரா (வினு) வென்றும்—பகலும்-பக(லினு)வென்றும்—தோன்றாது-அறியமாட்டாமல்—இமையவர்-தேவரது—உலகம் - உலகத்தை—ஏய்க்கும் - ஒத்திருக்கின்ற—மல்லல்-செல்வத்தையுடைய—மாவிந்தமென்னும் - மாவிந்தமென்று சொல்லப்பட்ட—நகர்-பட்டணத்தினது—வளம் - சிறப்பை—கூறலுற்றாம்-(யாம்)சொல்லத்தொடங்கினோம்-எ-று. இது கலவையணி (கருத்து) மாதர்கள்கழற்றியெறிந்த ஆபரணப்பிரகாசத்தினால் தெய்வலோகத்தைக் கொப்பாகு மாவிந்த நகர்வளப்பத்தைச்சொல்லுவா மென்றார் - என்பதாம். (உக)

நாட்டுப்படலம்-முற்றிற்று.

உ

# நகரப்படலம்.

அஃதாவது-நகரத்திலுள்ள-சிறப்பைச்சொல்லுதலாம்.

(கலித்துறை)

குடவளைக்குலம்வயிறுளைந்தினமணிகொழிக்கு
மடிவில்வானகருருவுகாட்டியதுபோன்மதில்சூழ்
கடிகொண்மாநகர்கிழல்கதுவிடாதகன்ற
புடைகொணீர்கருமுத்தலை பொங்குபேரகழி

(இ-ள்) மதில்-மதிலை—சூழ்-சூழ்ந்த—கடி-காவலை—கொள் - கொண்டிருக்கிற—மா-பெருமைபொருந்திய—நகர் - முன்சொல்லப்பட்ட,நகரமானது—குடம்-குடம்போலும்—வளை - சங்குகளின்—குலம்- கூட்டமானவை, வயிறுளைந்து - வயிறுநொந்து, இனம்-ஒரேயினமாகிய—மணி - முத்துக்களை—கொழிக்கும்-சொரிதற்கிடமாகிய—மடிவில் -ஒருகுட்டாகததுள்—வானகர் - அமராவதி பட்டணத்தினால்—காட்டியது-காட்டப்பட்டதாகிய—உருவு-நிழலை—போன்-போலும்—நகர் - அந்நகரத்தினால்—உடுத்து - உடுக்கப்பட்டு—அலை - அலைகளால்—பொங்கு-விளங்குகின்ற—பேர் - பெரிய—அகழி - அகழியானது—அந்நிழல்-அந்நிழலினால்—கதுவிடாது பற்றப்பாடாமல்—அகன்ற - நீங்கிய, புடை - சுற்றுப்பக்கத்தை—கொள்-(தனக்கிடமாகக்) கொண்ட—நீர் - நீரை—(போன்)போலும்-எ-று. வயிறுளைந்தீன்மணி எனப்பாடமோதலும்பொருந்தும் - போலும்என்னுஞ்செய்யுமென்னும் - வாய்பாட்டு முற்றுவினைஈற்றியலுகரங்கெட்டுலகரமெய்னகரமெய்யாகத் திரிந்தது தொல்காப்பியம்வினையியல் (௪௧) அவற்றுள்செய்யுமென்னும் பெயரெ



ச்சகிளவிக்கு-மெய்யொடுங்கெடுமேயீற்றுமிசையுகர - மவ்விடனறிதலென்மனார்புலவர்இதனைஅறிக(இது தற்குறிப்பணி)(கருத்து)மாவிந்தநகரமானது ஒருகுட்டாகத்துள்ளே தோன்றியதேவநகரைப் போலுமிருந்தது - அம்மாவிந்தநகரத்தினகழியானது அந்தத்டாகத்திற்றோன்றியதேவநகரைச் சூழ்ந்தசலத்தைப்போலுமிருந்தது—எப்படியெனில் கண்ணாடியுள்ளேமுகந்தோன்றிய விடத்தில் கண்ணாடிவடிவுந்தோன்றாது- அம்முகமேதோன்றுமிடத்தில் அக்கண்ணாடி வடிவந் தோன்றுமிறுபோலவேதடாகத்துள்ளே தேவநகரந்தோன்றியவிடத்தில் சலந்தோன்றாது அத்தேவநகரந்தோன்றுமிடத்தில் சலந்தோன்றும் ஆகையால்தேவநகரத்தின்பிரதிபிம்பத்தை யேமாவிந்தநகரமாகவும்-பிரதிபிம்பத்தைச்சூழ்ந்த சலத்தையேமாவிந்தநகரத்தினகழியாகவும்கொள்க என்பதாம். (௧)

கண்ணகன்றபேரகழியினுழக்கியகரிக
ட்டண்ணந்தாமரைத்தாளெனத்தடக்கையாற்பிலத்தி
னண்ணுஞ்சேடனையெடுத்ததன்சுடிகையினறி
யுண்ணிவந்தொளிர்மணியினுற்கையென்றெறியும்.

(இ-ள்) கண்ணகன்ற - இடம்பரந்த—பேர் - பெரிய—அகழியின் அகழியினிடத்து, உழக்கிய - கலக்கிய, கரிகள்-யானைகள்—தண்-தண்ணிய அம்-அழகிய,தாமரை - தாமரையினுடைய—தாளென, தாளென்று நினைத்து—தடம்-பெரிய;கையால் - துதிக்கையினாலே—பிலத்தில்-பாதாளத்தில்—நண்ணும்-வாசஞ்செய்கின்ற—சேடனை-சேடனென்னும் பாம்பை,எடுத்து-மேலெடுத்து,அதன்- அப்பாம்பினது,சுடிகையில்-உச்சியினிடத்து—உள்-(அதனு)ளிருந்து,நிவந்து-மேலெழும்பி—நாறு-காணப்பட்டு—ஒளிர் - விளங்குகின்ற—மணியினால்-இரத்தினத்தினாலே—உற்கையென்று-கொள்ளியென்றஞ்சி—எறியும்—அதனைவீசும் -எ-று.(இது மயக்கவணி)(கருத்து) அகழியிற்கலக்கியயானைகள்தாமரைத்தண்டென்று ஆதிசேடனையெடுத்து அதன்முடியின்மணியொளியாற் கொள்ளிக்கட்டையென்றெறியும் என்பதாம்.இது-அகழிச்சிறப்பு(௨)

ஒற்றையாழியந்தேரவனுயர்மதில்கடக்கப்
பெற்றிலாமையிற்பிறங்குபொற்கதவங்கடிறக்கு
மற்றநோக்குவனங்கலாரியல்புறவணியக்
கற்றைவெண்மதிசர்ளரத்தாடியிற்காட்டும்.

(இ-ள்)ஒற்றையாழி-ஒருருளையையுடைய—அம் - அழகிய—தேரவன்-தேரையுடையசூரியனானவன்,உயர்- தன்வழியின் மேலுமுயர்ந்த—மதில்-மதிலை—கடக்க - தாண்டுதற்கு—பெற்றிலாமையின்-வல்லமைபெற்றில்லாமையால்—பிறங்கு-விளங்குகின்ற—பொன் - பொன்மயமாகிய—கதவங்கள்-(அம்மதில்வழிக்)கதவுகளை—திறக்கும்- திறக்கும்—அற்றம்-சமயத்தை—நோக்குவன் - பார்த்துக்கொண்டிருப்பான்—அங்கலார்-அழகியமகளிரானவர்—இயல்புற - திருத்தமுண்டாக—அ

ணிய-(திலதமுதலானவற்றைத்)தரித்துக்கொள்ள—கற்றை-கிரணக்கற்றையையுடைய—வெள்-வெள்ளிய—மதி - சந்திரனானவன்—சாளரத்து-(அம்மதின்மேற்)பலகணியின் புறத்திருந்து—ஆடியின் - நிலைக்கண்ணாடிபோல—காட்டும்-(அவருக்குத்)தனைக்காட்டுவன்-எ-று. நிலைக்கண்ணாடி - நிலையாகமுன்வைக்கப்படுவது. இது தொடர்புயர்வுநவிற்சியணி (கருத்து) சூரியனானவன் மாவிந்தகரமதிலைக் கடக்கமாட்டாமல் கதவுகளைத்திறக்கும் சமயம்பார்த்திருப்பான் சந்திரனானவன் பெண்கள் திலதமுதலியபணிகளையணிந்துகொள்ளத்தன்னை நிலைக்கண்ணாடிபோலக்காட்டுவான் என்பதாம்-இது மதிலின்சிறப்பு. (௩)

மறுவிகந்தவெண்மதியெனவயங்கியபித்தி
செறியுமாடங்கள்வெண்கதிர்பரப்பியசெவ்வி
நறவுயிர்த்தபைந்துணர்மலிகற்பகநாட்டை
வெறுவிதாமெனவெண்ணகைபுரிவனபோலும்.

(இ-ள்) மறு - களங்கத்தினின்றும்—இகந்த- நீங்கிய—வெள்-வெள்ளிய, மதியென - சந்திரன்போல—வயங்கிய - விளங்கிய—பித்தி-பளிங்குச்சுவர்களால்—செறியும்-நெருங்கிய—மாடங்கள் - மாளிகைகளானவை—வெள்-வெள்ளிய—கதிர் - கிரணங்களை—பரப்பிய - விரித்திட்ட—செவ்வி-அழகினாலே—நறவு - தேனை—உயிர்த்த - தருகின்ற—பை - பசிய—துணர் - பூங்கொத்துகளால்—மலி - நிறைந்த—கற்பகம்-கற்பகத்தருக்களையுடைய—நாட்டை - சுவர்க்கத்தைக்குறித்து—வெறுவிதாமென -வறுமையுடையதென்று—வெள்-வெள்ளிய—நகை -சிரிப்பை—புரிவன - செய்வன—போலும்- ஒக்கும்-எ-று.(இது பொருட்டற்குறிப்பு)(கருத்து) மாடங்களானவை கிரணங்களை விரித்திட்ட வழகினாலே பொன்னகரத்தைப்பார்த்து புன்னகைபுரிவனபோலு மிருக்கின்றன என்பதாம். இதுமுதல் (௩௪) பாடல்களுள்வீடு முதலியவற்றின் சிறப்பு. (௪)

வடிகொள்வெண்சுதைதீற்றியமாடநீள்கழுத்திற்
படியமைம்முகில்கதிர்விடுபாணிலாக்குழவி
முடியின்மீதுறத்தவழ்தலான்முழுமையும்வெள்ளைப்
பொடியணிந்தருள்கறைமிடற்றண்ணலைப்பொருவும்.

(இ-ள்) வடிகொள் - வடித்துக்கொள்ளப்பட்ட—வெள் - வெள்ளிய—சுதை - சுண்ணச்சாந்தை—தீற்றிய-பூசிய—மாடம் - மாளிகையானது—நீள் - நீட்சிபொருந்திய—கழுத்தில்-(அதன்) கண்டத்தின்கண்—மை-கரிய—முகில் - மேகமானது—படிய - படிந்திருக்க,கதிர் - கிரணங்களை—விடு - வீசுகின்ற, பால்-வெண்மைபொருந்திய—நிலாக்குழவி - பிறையானது—முடியின்மீது-(அதன்) முடியின்மேலே—உற-பொருந்த—தவழ்தலால்-ஊர்தலால்—முழுமையும் - திருமேனிமுழுதிலும்—வெள்ளைப்பொடி-விபூதியை—அணிந்தருள் -பூசியருளிய—கறை-(நஞ்சக்)கறைபொருந்திய—மிடற்று - கண்டத்தையுடைய—அண்ணலை - பரமசிவனை—பொருவும்-ஒத்திருக்கும்-எ-று (இது உவமையணி) (கருத்து) மாளிகையானது வடிவத்தின் சுண்ணச்சாந்தும் கழுத்திற்கரிய மேகமும் முடியிலிளம்பிறையும் பொருந்தியிருத்தலாற் பரமசிவனுக்கொப்பாகும் என்பதாம். (௫)

மழைக்கண்மங்கையர் பயிறரமரகதமணியி
னிழைத்தசெய்குன்றின் பைங்கதிர்பொன்னிலத்தெய்தக்
குழைத்தவைந்தரு நிழலிற்குலவுமானினங்க
ளுழைத்தபுல்லென விரைவொடுதனித்தனிகறிக்கும்

(இ-ள்)மழை-குளிர்ச்சிபொருந்திய,கண்-கண்களையுடைய,மங்கையர்-மகளிரானவர்—பயிற - விளையாடுதற்கு, மரகதமணியின்-மரகதமணிகளாலே—இழைத்த - பதிக்கப்பட்ட—செய்குன்றின்- விளையாட்டுமலைகளுடைய—பை-பசிய—கதிர் - கிரணங்களானவை—பொன்னிலத்து - தேவலோகத்தின்கண்—எய்த - அடைய—குழைத்த,தளிர்த்த—ஐந்தரு - பஞ்சதருக்களது—நிழலில் நிழலினிடத்தில்—குலவும்-குலவுகின்ற—மான் - பசுக்களுடைய—இனங்கள் - கூட்டங்களானவை—தழைத்த-செழித்த—புல்லென-புற்களென்று நினைத்து—விரைவொடு - சீக்கிரத்தில்—தனித்தனி - ஒவ்வொன்றாக—கறிக்கும்-(அக்கிரணங்களைக்) கௌவும்—எ-று. மரகதத்தினொளியைப்புல்லென்று மயங்கினதால் மயக்கவணியாம் (கருத்து) செய்குன்றிலிழைத்தமரகதக்கிரணங்களைத் தெய்வப்பசுக்கள் புற்களென்று கடிக்கும் என்பதாம். (௬)

புதுமணத்தமென்மகளிர்சாளரத்திடைப்பொருந்து
மதியையின்னுயிர்ப்பாங்கியர்மறைந்தனர்நோக்குங்
கதிர்கொள்வாண்முகமென்றுதங்காதலர்ப்புல்லுந்
ததும்மென்கரநீக்கிநீன்படைவிழிபுதைப்பார்.

(இ-ள்) புது-புதிய,மணத்த - விவாகத்தையுடைய—மெல் - மெல்லிய—மகளிர்-மங்கையரானவர்—சாளரத்திடை-(மேல்வீட்டின்) பலகணியின்புறத்து—பொருந்து-சேர்ந்த—மதியை - சந்திரனை—இன் - இனிய—உயிர்-உயிர்போலச்சிறந்த—பாங்கிய - தோழியரானவர்—மறைந்தனர்-மறைந்தவராகி—நோக்கும் - பார்க்கின்ற—கதிர் - கிரணத்தை—கொள்-கொண்ட—வாள் - ஒளியையுடைய—முகமென்று-முகமென்றுநினைத்து—தம் - தம்முடைய—காதலர்-நாயகரை, புல்லும்-தழுவிக் கொண்டிருக்கின்ற—ப்துமம் - தாமரைமலர்போலும்—மெல்-மெல்லிய—கரம்-கைகளை;நீக்கி-(அவரினின்று) நீக்கி—நீள்-நீண்ட—படை-வாள்போலும்—விழி-கண்களை—புதைப்பார் - மூடிக்கொள்வர் - எ - று. (மதியைப்பாங்கியர்முகமென்று மயங்குதலால் மயக்கவணியாம்) (கருத்து) புதிதாகவிவாகஞ்செய்துகொண்டபெண்கள் பலகணியின் புறத்துத்தோன்றிய சந்திரனைமறைந்து பார்க்குந்தோழியர் முகமென்றெண்ணி நாயகரைத்தழுவிய கைகளால் கண்களைமூடிக்கொள்வார் என்பதாம். (௭)

வள்ளவாய்மலர்முகத்தியர்வதியுமேனிலையிற்
கள்ளறுமலர்நாற்றியசுருங்கையிற்கதிர்க
ளுள்ளுறப்புகுந்துலாமதியுடலுரிந்தலாற்
பிள்ளைவெண்மதியாதனைநன்றெனப்பெரிதுவக்கும்.

(இ-ள்) உலா-பர்வதூலத்திலேதோன்றுகின்ற—வெள்-வெள்ளிய, மதி-சந்திரனானவன்—வள்ளவாய்மலர்-தாமரைமலர்போலும்—முகத்தியர்-முகத்தையுடையமாதரானவர்—வதியும்-வாசஞ்செய்கின்ற;மேனிலையில், மேல்வீட்டில்—கள்-தேனை அறு-நீங்காத—மலர்-மலர்களை—நாற்றிய-தொங்கக்கட்டிய—சுருங்கையில்-நுழைவாயிலிலே—கதிர்கள்-கிரணங்களானவை—உள்-உள்ளே—உற-பாய,புகுந்து-நுழைந்து—மதி-யாவராலும்மதிக்கப்படுகிற—உடல்-(தன்பெரிய)உடம்பு—உரிந்தலால்-தேய்தலினாலே—பிள்ளையாதல்-குழந்தையாதலை, நன்றென-(தனக்கு) நல்லதென்றுநினைத்து—பெரிது-மிகவும்—உவக்கும்-(அப்பருவத்தை) விரும்புவான்—எ-று. (இதுவேதுவணி) (கருத்து) பூரணசந்திரனானவன்மேன்மாடச்சாளரவாயிலில் நுழைந்துஉடலானது தேய்தலினாலே இளம்பிறைப்பருவமேநன்றென்றுமகிழுவான் என்பதாம். (௮)

உருவின்மைந்தரில்வேனில்வேட்குடைகுநரில்லை
பொருளிலார்களிற்றனதனைப்பொருவிலாரில்லை
தெருளிலார்களிற்சேடனிற்றாழ்குநரில்லை
யருளிலார்களிற்றருநிகர்க்கிலாரில்லை

(இ-ள்) உருவு-அழகு—இல்-(தம்மிடத்) தில்லாத—மைந்தரில்-ஆடவருள்—வேனில்-வசந்தகாலத்தையுடைய—வேட்கு-மன்மதனுக்கு—உடைகுநர்-தோற்பவர்—இல்லை-இலர்—பொருள்-செல்வப்பொருள்—இல்லார்களில்-(தம்மிடத்)தில்லாதவருள்—தனதனை-குபேரனை—பொருவிலார்-ஒவ்வாதவர்—இல்லை-இலர்—தெருள்-கல்வியறிவு—இல்-(தம்மிடத்) தில்லாத;மாக்களில்-மனிதருள்—சேடனில்-ஆதிசேஷனில்—தாழ்குநர்-குறைபவர், இல்லை-இலர்—அருள்-கருணையானது—இல்லார்களில்-(தம்மிடத்) தில்லாதவருள்—ஐந்தரு-பஞ்சதருக்களுக்கு—நிகர்க்கிலார்-ஒப்பாகாதார்—இல்லை-இலர்—எ-று(கருத்து) அழகிலாரில்மன்மதனிற்குறைந்தவரில்லை, வறியரில்குபேரனிற்குறைந்தவரில்லை; மூடரில் ஆதிசேடனிற்குறைந்தவரில்லை. கொடாதவரில் பஞ்சதருக்களிற்குறைந்தவரில்லை என்பதாம். (௯)

பளிக்குமேனிலத்தன்பர்பாற்பயில்வுறுகலவி
யிளைத்துமார்பிடைத்துயில்பவர்முகத்தில்வெண்டிங்கள்
விளைத்ததண்கதிர்பரப்புதல்கிளர்ந்தசாளரத்தி
னொளித்துவாண்முகச்செவ்வியைக்கவர்வதொத்துளதால்.

(இ-ள்) வெள்-வெள்ளிய—திங்கள்-சந்திரனானது—பளிக்கு-பளிங்கினாலாகிய—மேனிலத்து-மேல்வீட்டினுள்—அன்பர்பால்-நாயகரிட



த்தில்; பயில்வுறு-நாள்தோறும்பழகிய—கலவி-புணர்ச்சியை—இளைத்து-அனுபவித்து—மார்பிடை-அவர்மார்பினிடத்தே—துயில்பவர்-தூங்குகின்றமகளிரது—முகத்தில்-முகத்தினிடத்தே—விளைத்த-தழைத்த—தண்-தண்ணிய—கதிர்-கிரணங்களை—பரப்புதல்-விரித்தலினாலே—கிளர்ந்த-விளங்குகின்ற—சாளரத்தின்-பலகணியின்புறத்து—ஒளித்து-மறைந்துநின்று—வாள்-ஒளிபொருந்திய—முகம்-அவர்முகத்திலுள்ள—செவ்வியை-அழகை—கவர்வது-திருடுவதை—ஒத்துளது-ஒத்திருக்கும்—எ-று. (இதுபொருட்டற்குறிப்பணி) (கருத்து) மேன்மாளிகையிற் கணவருடன்புணர்ந்து அவர்மார்பின்மேல் தூங்குகிற பெண்களின்முகத்தில் சந்திரன்கிரணங்களைவிரித்தல் அப்பெண்கள்முகத்தழகைத்திருடுவதை ஒத்திருக்குமென்பதாம். (௰)

கணங்கொண்மாமணிகுயிற்றியொண்கதிர்செய்மேனிலையிற்
சுணங்குபூத்தணிபருமிதத்துணைமுலைமகளிர்
மணங்கொடாமரைமுகமுமவெண்மதியுமறியா
தணங்குராமதிமருண்டுபார்த்தையுறவெய்தும்.

(இ-ள்) கணம்-கூட்டத்தை—கொள்-கொண்ட—மா-பெரிய—மணி-மணிகளானவை—குயிற்றி-பதிக்கப்பட்டு—ஒள்-ஒள்ளிய—கதிர்-கிரணங்களை—செய்-செய்கின்ற—மேனிலையில்-மேல்வீட்டில்—சுணங்கு-தேமலால், பூத்து-படர்ந்து—அணி-அலங்கரிக்கப்பட்ட—பருமிதம்-பருத்துவளாவதான—துணை-இரண்டாகிய—முலை-முலைகளையுடைய—மகளிர்-மாதரது—மணம்-வாசனையை—கொள்-கொண்ட—தாமரை-தாமரைமலர்போலும்—முகமும்-முகத்தையும், வெள்-வெள்ளிய—மதியும்-சந்திரனையும்—அறியாது-அறியமாட்டாமல்—அணங்கு-தெய்வத்தன்மைபொருந்திய—அரா-இராகுவானது—மதிமருண்டு-புத்திமயங்கி—பார்த்து-நோக்கி, ஐயுறவு-(இவற்றுள்முகம்யாதோசந்திரன்யாதோவென்கிற)-சந்தேகத்தை—எய்தும்-அடையும்—எ-று-(இதுசந்தேகவணி) (கருத்து) இராகுவென்னும்பாம்பானதுமேல்வீட்டில் உலாவும்பெண்கள்முகமோசந்திரனோவென்றும் அறியாதசந்தேகம் அடையும் என்பதாம் மாளிகை - சந்திரமண்டலத்தை அளாவியதென்றறிக. (௰௧)

மேனிவந்தொளிர்மாடத்தின்விழுத்தகுஞ்சுதைத்த
பானிலாமணித்தகட்டினிற்றண்கதிர்பரப்பக்
கானறும்புனனிறைந்துறுஞ்சந்திரவனற்றடங்கேந்த
மானினங்குடித்துயர்வுயிர்த்தாம்பரிவுறாவும்.

(இ-ள்)மேல்-ஆகாயத்தில்-நிவந்து-உயர்ந்து, ஒளிர்-விளங்குகின்ற மாடத்தின்-மேல்வீட்டில்—விழுத்தகு-சிறப்புப்பொருந்திய—சுதைத்த-வரிசையாக வைக்கப்பட்ட—பால்-வெண்மைபொருந்திய—நிலாமணி-சந்திரகாந்தத்தாலாகிய—தகட்டினில்-கூட்டங்களிலே—தண்-தண்ணிய—கதிர்-கிரணங்களை, பரப்ப-(சந்திரன்) விரிக்க—கால்-கக்கப்பட்ட—நறு-நல்ல—புனல்-நீரானது, நிறைந்துறும்-அவற்றுள்ளேநிறை

தவும்—கதிரவன் - சூரியனது—தடம்-விசாலமாகிய—தேர் - தேரினுடைய—மான்-குதிரைகளின்—இனம்-கூட்டமானது—குடித்து (அக்கிரணக்) குடித்து—அயர்வுயிர்த்து - இளைப்பாறிக்கொண்டு, உம்பரில்-ஆகாயத்திலே—வாவும்-தாவும்—எ-று. (இது மேனிலைக்குஞ்சூரியமண்டலத்துக்கும் சம்பந்தங்கற்பித்தலால் தொடர்புயர்வுநவிற்சியணி) (கருத்து) மேல்வீட்டில்வைக்கப்பட்ட சந்திரகாந்தக்கற்றுடங்களிலே சந்திரனுற்கக்கப்பட்ட சலத்தைச் சூரியன் குதிரைகள் குடித்திளைப்பாறிடக்குமென்பதாம், மாளிகைசூரியமண்டலத்தையும் அளாவியதென்றறிக.

முருகுயிர்த்தவெள்ளகிற்புகைமுகிலொடுமுழக்
குருமணிச்சுடர்வெயில்விரிமாடநீள்கொடிகள்
பரிதிவானவனடவுதேர்ப்பரியினைப்புடைத்தவ்
வருணனிற்றொழில்புரிந்தவன்கரஞ்சிறிதாற்றும்,

(இ-ள்) முருகு - பரிமளத்தை—உயிர்த்த-தருகின்ற—ஒள் - ஒள்ளிய—அகில்-அகிற்கட்டைகளது—புகை - புகையானது—முகிலொடும்-மேகத்தோடு—உழக்கு - ஒத்துத்தோன்றுகின்ற—அ - அந்த, குரு-நிறமுள்ள - மணி-மணிகளது, சுடர்-கிரணமானது—வெயில்-வெயில்போல—விரி-விரிகின்ற—மாடம் - மாளிகையிற்கட்டிய—நீள் - நீட்சிபொருந்திய—கொடிகள் - கொடிகளானவை, பரிதிவானவன் - சூரியனாகிய தேவனது—நடவு - நடத்தலையுடைய—தேர் - தேரிற்பூட்டிய—பரியினை - குதிரைகளை, புடைத்து - அடித்து—அவ்வருணனில்-அவ்வருணன்போல்—தொழில் - நடத்துகைத்தொழிலை—புரிந்து - செய்து—அவன் - அவ்வருணனது—கரம்-கைவருத்தத்தை, சிறிது - சற்றே—ஆற்றும் - தீர்க்கும் எ-று (இது கலையணி) (கருத்து) மேல்வீட்டிற்கட்டிய கொடிகளானவை சூரியன்தேரிற்பூட்டியகுதிரைகளையடித்துச்சாரதித்தொழிலை நடத்தி அருணன்கைவருத்தத்தைத்தீர்க்குமென்பதாம். (௰௩)

வரிவளைக்குலக்குவையினுன்மணிகளான்மணிக
டெரிதருங்கரவலவனுன்வயின்றிரண்ட
விரிகருப்புரவெண்மணற்குன்றினுமொலியாற்
பொருவிலாவணமறிதிரைக்கடலினைப்பொருவும்.

(இ-ள்) வரி - இரேகைகளையுடைய—வளைக்குலம்-சங்குச்சாதிகளின்—குவையினுல்-இராசிகளாலும்—மணிகளால் - இரத்தினங்களினுலும்—மணிகள்-இரத்தினங்களை—தெரிதரும் - எண்ணுகின்ற—கரம்-கைகளாகிய—அலவனுல்-நண்டுகளாலும்—வயின்வயின் - இடந்தோறும்—திரண்ட - குவிந்த—விரி-விரிந்த—கருப்புரம் - கர்ப்பூரங்களாகிய—வெள் - வெள்ளிய—மணல்-மணற்குன்றினுல் - குன்றுகளாலும், ஒலியால்-ஓசையினாலும்—பொரு-ஒன்றையொன்றொத்திருக்கின்ற—இல்-மாடமாளிகைகளையுடைய—ஆவணம் - கடைத்தெருவானது—மறி-மடங்குகின்ற—திரை-அலைகளையுடைய—கடலினை - சமுத்திரத்தை—பொருவும் - ஒக்கும்—எ-று. (இது உவமையணி) (கருத்து) கடைத்தெருவானது கடலினையொப்பாகுமென்பதாம், வளைகளென்பதற்குக்கடலிலேசங்கென்றும் கடைவீதியிலேவளையலென்றும், மணிகடெரிதருங்கரவலவன் என்றதற்கு கடலிலேமுத்தையொப்பாகும் வடிவுதெரிகின்றகைகளையுடைய நண்டென்றும், கடைத்தெருவிலே கரங்களிலேமணிகளைவைத்துக் குறைகுணங்களை அறிகிறவல்லவனென்றும், சிலேடையாக்கினும் பொருந்துமென்பதாம். (௰௪)



திங்கள்வெண்மணிநிலத்துவாமதிச்செழுங்கதிர்க
டங்கவீழ்புனற்பெருக்கொடுதலைப்பெய்துவிசும்பிற்
கங்கையாழ்கடற்றலைமகன்களிப்புறக்களித்துப்
பொங்குகற்புநூலுரைத்தவைபுகரறவிளக்கும்.

(இ-ள்) விசும்பில்-ஆகாயத்திலுள்ள—கங்கை-கங்கையானவள்—வெண்-வெள்ளிய—திங்கள்மணி - சந்திரகாந்தக்கற்கள்பதித்த—நிலத்து-மேல்வீட்டிடத்தே—உவா - பூ[illegible]த்திலுண்டாகிற—மதி - சந்திரனுடைய, செழு - செழிய—கதிர்-கிரணங்கள்—தங்க - தங்க—வீழ்-(அதிலிருந்து) வீழ்கின்ற—புனல் - நீரினது—பெருக்கொடு - வெள்ளத்தோடு—தலைப்பெய்து-கலந்து—ஆழ் - ஆழ்ந்த—கடற்றலைமகன்-கடலாகிய (தன்) கணவனுனவன்—களிப்புற - அப்போதுகளிக்க—களித்து - (தானுங்) களித்து—பொங்கு-விளங்குகின்ற—கற்புநூல் - கற்பிலக்கணநூலில்—உரைத்தவை - சொல்லப்பட்டவிதிகளை—புகரற-குற்றமற—விளக்கும்-விளக்குவாள்—எ-று. (இது தற்பொருட்காட்சியணி) (கருத்து) ஆகாயகங்கையானவள் சந்திரகாந்தக்கற்கள் பதித்து மேல்வீட்டில்சந்திர கிரணங்களால் வீழ்கின்றவெள்ளத்தோடுகலந்து கடலாகிய கணவன்களிக்கதானுங்களித்துத் அணையாகச்சென்றுகற்பிலக்கணவிதிகளை விளக்குவாள்—எ-ம். (௰௫)

தடங்கொடாமரைத்தளிரியலுறையுமிந்நகர
மிடங்கொள்பூதலநகரெலாம்வென்றனமினிவா
னடங்கவெல்லுதுமென்னவோர்வஞ்சினமறையாப்
படங்கணாற்றியபோன்றனபசியபொற்கொடிகள்.

(இ-ள்) பசிய - பசுமையுள்ள—பொன்-பொன்மயமாகிய—கொடிகள்-கொடிகளானவை; தடம்-விசாலத்தை—கொள்-கொண்ட - தாமரை, தாமரைப்பூவிலிருக்கின்ற—தளிரியல் - தளிர்போலுமெல்லியவடிவுடையசீதேவியானவள்—உறையும் - வாசஞ்செய்கின்ற—இந்நகரம்-இந்த (மாவிந்த) நகரமானது—இடம்-இடத்தை—கொள்- கொண்ட—பூதலம் - பூமியிலுள்ள—நகரெலாம் - எல்லாநகரங்களையும்—வென்றனம்-வென்றோம்—இனி-இனிமேல்—வான் -தெய்வலோகத்தை, அடங்க -(எமக்கு) கீழ்ப்பட—வெல்லுதும் - வெல்லுவோம்—என்ன - என்று—ஓர்வஞ்சினம் - ஒருசபதத்தை—அறையா - சொல்லி—நாற்றிய-(எழுதித்) தொங்கவிட்டபட்டனவாகிய—படங்கள் - படங்களை—ப்போன்றன - ஒத்திருக்கின்றன—எ-று. (பொருட்குறிப்பிணி) (கருத்து) கொடிகளானவை மாவிந்தநகரம் எல்லாநகரங்களையும் வென்றோம் இ

னித்தேவலோகத்தை வெல்லுவோமென்றுபடங்களெழுதிக் கட்டியது போலு மிருக்கின்றன—எ-ம். (௰௬)

அகளிலாமணிவட்ட நீள்சிமதர்மழைக்கண்
மகளிர்வாண்முகமதிகண்டுதிம்புனன்மல்கப்
புகரிறென்மலைத்துவக்குறவுரிந்தசுபூந்தேய்வைப்
பகருமின்னுயிர்ப்பால்விரையூட்டினர்பகர்வார்.

(இ-ள்) நீள்-நீண்ட—அரி-இரேகைகளையும்—மதர்-செருக்கினையும்—மழை-குளிர்ச்சியையும்பொருந்தின—கண்-கண்களையுடைய—மகளிர்-மாதரானவர்—வட்டம்-வட்டமாகிய—அகல்-பாத்த—நிலாமணி-சந்திரகாந்தக்கல்லானது—வாள்-காந்திபொருந்திய—முகமதி-(அவர்)முகமாகியசந்திரனை—கண்டு-காணலால்—திம்-மதுரமாகிய—புனல்-நீரானது—மல்க-(அதிலே) நிறைய, புகரில்-குற்றமில்லாத—தென்மலை-பொதியமலையி(லுண்டா)கிய—த்து-மணம்பொருந்திய—குறடு-கட்டைகளை, உரிந்த-(அவ்விடத்தே)தேய்த்துண்டாக்கப்பட்ட, பூ-அழகிய—தேய்வை-சந்தனத்தை—பகரும்-புகழப்படுகின்ற—இன்-இனிய—உயிர்ப்பால்-சுவாசத்தினாலே—விரை-வாசனையை—ஊட்டினர்-ஏற்றினவராகி—பகர்வார்-விற்பார்—எ-று. (கருத்து) உத்தமசாதிப் பெண்களானவர்கள் சந்திரகாந்தக்கல்லில்சந்தனத்தை உரைத்துச்சுவாசத்தினால்வாசமூட்டிவிற்பார்களென்பதாம். (௰௭)

* கலிவிருத்தம்.

நீங்கரியகூலமணி நீண்மறுகுதோறும்
மாங்குயிலின்மென்குதலைமாலைபகர்மாதர்
தேங்கமழுயிர்ப்பின்விரைசேர்த்தினர்கள்விற்கும்
கோங்குமலர்சண்பகமென்கோதையினுங்கொள்வார்

(இ-ள்) நீங்கரிய-ஒதுக்குதற்கிடமில்லாத—மணி-நவமணிகளையுடைய—நீள்-நீட்சிபொருந்திய, கூலமறுகுதோறும்-கடைத்தெருவெல்லாம், மா-மாமரத்திலுள்ள, குயிலின்-குயிலிசைபோலும், மென்மெல்லிய—குதலை-மழலைச்சொற்களையுடைய—மாலை-மாலைகளை—பகர்-விற்கின்ற—மாதர்-மங்கையரானவர்—தேம்-பரிமளமானது—கமழும்-கமழ்கின்ற—உயிர்ப்பின்-சுவாசத்தால்—விரை-வாசனையை—சேர்த்தினர்கள்சேர்த்தவராய்—விற்கும்-விற்கப்படுகின்ற—கோங்குமலர்-கோங்குமலர்களாகிய—கோதை-மாலையை—மென்-மெல்லிய—சண்பகம்-சண்பகமலர்களாலாகிய—கோதையினும் மாலையினுஞ்சிறந்ததாக—கொள்வார்-வாங்குவார்—எ-று.(கருத்து) உத்தமசாதிப்பெண்கள்சுவாசத்தினால்வாசனையூட்டி விற்கின்றகோங்குமலர்மாலைகளைச் சண்பகமலர்மாலைகளைப்பார்க்கிலுஞ்சிறந்ததாகக்கொள்வார்கள்-எ-ம்()

* யாப்பருங்கலம்-அளவடிநான்கின்கலிவிருத்தம்மே.



ஆடவரோடியெழுமஞ்சொன்மடநல்லார்
நீடொளியதாளின்முகங்கோட்டியெதிர்நிற்ப
வாடியிடையாரென்மருண்டிறைவர்பாவைத்
தாடொழுதுமெய்த்துனிதகைப்பநகைசெய்வார்

(இ-ள்) ஆடவரோடு-தங்கணவரோடு—ஊடி-பிணங்கி—எழும்-புறப்பட்ட—அஞ்சொல்-அழகியசொற்களையுடைய—மடம்-பேதைமைபொருந்திய—நல்லார்-மாதரானவர்—நீடு-நீட்சிபொருந்திய—ஒளிய-காந்தியையுடைய—தாண்-(சித்திரத்)தூணுக்கு—எதிர்-எதிராக—முகம்-முகத்தை—கோட்டி-வளைத்துக்கொண்டு—இல்-அறைவீட்டின்—நிற்ப-நிற்க—இறைவர்-அக்கணவரானவர்—பாவை-(அத்தூணிலேதோன்றுகிற)பாவையைநோக்கி—வாடும்-வாடுகின்ற—இடையர்-இடையையுடைய அம்மாதரென்று—மருண்டு-மயங்கி—தாள்-(அப்பாவையின்) பாதங்களை—தொழுதும்-வணங்கியும்—மெய்-மெய்யாகிய—துனி-அப்பிணக்கைத்—தகைப்ப-தடுக்கவும்—நகைசெய்வார்-(அவர்)சிரிப்பார்—எ-று. (இதுபாவையைமாதரென்றுமயங்குதலால்மயக்கவணி) (கருத்து) மாதர்கள் கணவரோடு பிணங்கித் தூணுக்கெதிராகமறைந்துநிற்க அக்கணவர்கள் தூணிலேதோன்றும் பாவையை நோக்கிமாதர்களென்றுபாதத்தைவணங்கவும் பிணக்குநீங்கவும் அம்மாதர்கள்சிரிப்பார்களென்பதாம். (௰௯)

வண்ணமுலைமாதர்பகர்வரியசெழுஞ்சாந்தங்
கண்ணொளிகள்பாயநரந்தங்கலந்ததென்னும்
வெண்ணகைபரத்தல்கருப்பூரம்விரவிற்றென்
றெண்ணரியநறுங்கலவையென்றிளைஞர்கொள்வார்.

(இ-ள்) வண்ணம்-அழகிய—முலை-முலைகளையுடைய—மாதர்-மங்கையரால்—பகர்-விற்கப்படுகின்ற—அரிய-கலப்பில்லாத—செழும்-செழிய—சாந்தம்-சந்தனத்தில்—கண்ணொளிகள்-(அவர்)கண்களினொளிகள்—பாய்-பாய்தலினாலே—நரந்தம்-கஸ்தூரியானது—கலந்ததென்னும்-கூட்டப்பட்டதென்னும்—வெண்-வெள்ளிய—நகை-பல்லொளிகள்—பரத்தல்-பாய்தலினாலே—கருப்பூரம்-பச்சைக்கர்ப்பூரமானது—விரவிற்றென்னும்-கூட்டப்பட்டதென்னும்—எண்ணரிய-நினைத்தற்கரிய—நறு-நல்ல—கலவை-கலவைச்சந்தனமென்று-கூட்டப்பட்டதென்று—இளைஞர்-ஆடவர்—கொள்வார். (அவ்விலைக்கு) வாங்குவார்—எ-று (இதுகண்ணொளியைக்கஸ்தூரியென்றும் பல்லொளியைக்கருப்பூரமென்றும் மயங்கலால்மயக்கவணி. (கருத்து) உத்தமசாதிப்பெண்கள் விற்கப்படுஞ்சந்தனத்தை அவர்கள்கண்ணொளிகள் பாய்தலாற் கஸ்தூரிகலந்ததென்றும் பல்லொளிகள் பாய்தலாற் கருப்பூரங் கலந்ததென்றும் வாங்குவார்களென்பதாம். (௨௰)

பளிக்கறைபுகுந்தனர்களபாயொளியின்வாயில்
வெளிப்படுதலென்றிமருண்மேவித்துறைத்த

அளக்கருமிடத்துவிரைதோய்ந்துவருதென்ற
லிளைத்துலவுவெள்ளிடையின்வாயிறெளிதிறப்பார்.

(இ-ள்) பளிக்கு-பளிங்காலாகிய—அறை-அறையினுள்ளே—புகுந்தனர்கள்-நுழைந்தவர்கள்—பாய்-பரந்த—ஒளியின்-ஒளியினாலே—வாயில்-வாயிலானது—வெளிப்படுதலின்றி-அறியப்படுதலில்லாமையினால்—மருள்-மயக்கத்தை—மேவி-அடைந்து—அளக்கருமிடத்து-அசைவற்ற பெரியமலையிலிருந்து—விரை-(சந்தன) வாசனையில்—தோய்ந்து-படிந்து—வரு-வருகின்ற—தென்றல்-தென்றலானது—இளைப்பு-குளிர்ச்சியோடு—நாறி-தோன்றி—இளைத்து-அசைந்து—உலவு-சஞ்சரிக்கின்ற—வெள்ளிடையின்-வெளியினாலே—வாயில்-வந்த வாயிலை—தெளிதிறப்பார்-அறிந்துகொள்வார்—எ-று. (இது சிறப்பணி) (கருத்து) பளிங்கறையுட்புகுந்தவர்கள் ஒளியால்வாயிலறியாது மயங்கி தென்றலால்வாயிலறிந்தார்கள் என்பதாம். (உக)

வில்லுமிழுமாமணிகுயிற்றிமிளிர்மாடத்
தொல்கியதுகிற்கொடிகளும்பருலகெய்தி
பல்லவமுயிர்த்துவளர்பைந்தருவின்மேவும்
வல்லிபடர்கின்றகொழுகொம்பெனவயங்கும்.

(இ-ள்) வில்-காந்தியை—உமிழும்-வீசுகிற—மா-பெருமைபொருந்திய—மணி-மணிகளானவை—குயிற்றி-பதிக்கப்பட்டு—மிளிர்-விளங்குகின்ற—மாடத்து-மாளிகைகளின்மேல்—ஒல்கிய-அசைகின்ற—துகிற்கொடிகள்-சீலைக்கொடிகளானவை—உம்பர்-தேவருலகு-உலகத்தை—எய்தி-அடைந்து—பை-பசிய—தருவில்-கற்பகத்தருவின்மேல்—மேவும்-அடைதற்குரிய, பல்லவம்-தளிர்களை—உயிர்த்து-ஈன்று—வளர்-வளர்கின்ற—வல்லி-கொடிகளானவை—படர்கின்ற-படர்தற்குக்காரணமாயிருக்கின்ற—கொழுகொம்பென-கொழுகொம்புகள்போல—வயங்கும்-விளங்கும்—எ-று. (இது குறிப்பணி) (கருத்து) மணிமாடத்திற்கட்டியகொடிகளானவை கற்பகத்தருவின்கீழ்வளர்கொடிபடர்கொழுகொம்பென்றிருக்குமென்பதாம். (உஉ)

திங்களுநல்லார்முகமுஞ்செவ்விதெரிகொண்ணு
வங்கழுமேனியுமின்பிரிக்கலாகா
மங்குறவழ்வெண்கொடியும்வானதியுமணியால்
வெங்கதிர்செய்மாடமிசைவேறறியலாகா.

(இ-ள்) மணியால்-மாணிக்கங்களால்—வெங்கதிர்-சூரியவொளியை—செய்-செய்கின்ற—மாடமிசை-மாளிகையின்மேல்—திங்களும்-சந்திரனும்—நல்லார்-மாதரது—முகமும்-முகமும்—செவ்வி-அழகினாலே—தெரிகொண்ணு-வேறுபடுத்தப்படாவாம்—அம்-அழகினாலே—கழுமும்-விளங்குகின்ற—மேனி-(அவர்)சரீரமும்—மின்-மின்னற்கொடியும்—பிரிக்கலாகா-பிரிக்கப்படாவாம்—மங்குல்-மேகங்களானவை—தவழ்-(மேலே)தவழ்கின்ற; வெண்கொடியும்-வெள்ளைக்கொடியும்—வானதியும்-ஆகாயகங்கையும்—வேறு-வேறாக—அறியலாகா-



அறியப்படாவாம்-எ-று. (இதுபொதுவையணி) (கருத்து) சந்திரனும்பெண்கண்முகமும் மின்னலும் பெண்களுடையமேனியும் வெண்கொடியும் ஆகாயகங்கையும்வடிவினால்வேறுபடுத்தப்படாவாமென்பதாம். (உ௩)

சந்தநறுமென்புகைதவழ்ந்திலமெங்கும்
பந்துபயில்கோதையர்பசும்பொனணியாவு
மைந்தருவியன்சினையணிந்தனரதன்றே
வந்தவரியேற்பவர்மகிழ்ந்திடவழங்கும்.

(இ-ள்) சந்தம்-சந்தனக்கட்டைகளது—நறு-மணமுள்ள—மெல்-மெல்லிய—புகை-புகையானது—தவழ்ந்த-படிந்த—இலமெங்கும்-மேல்வீடெங்கும்—பந்து-பந்தாட்டத்தில்—பயில்-பழகுகின்ற—கோதையர்-மாதரானவர்—பசும்பொன்-பசியபொன்னாலாகிய, அணி-ஆபரணங்களையும்—யாவும்-மற்றெல்லாவற்றையும்—ஐந்தரு-பஞ்சதருவினுடைய—வியன்-பெரிய—சினை-கிளைகளில்—அணிந்தனர்-வைத்தார்—அதன்றே-அதனாலன்றோ—வந்து-(தம்மிடத்து)வந்து—ஏற்பவர்-இரப்பவர்க்கு—மகிழ்ந்திட-மகிழும்படி—சால-மிகுதியாக—வழங்கும்-விரும்பப்பட்டவற்றைக்கொடுக்கும்—எ-று. (இது கற்பகதருவுக்குளது குறித்தமையால்) ஏதுத்தற்குறிப்பணி(கருத்து) மேல்வீட்டிற்பந்துவிளையாடுகின்றபெண்கள் ஆபரணமுதலியவற்றைக் கழற்றிப்பஞ்சதருக்களில் அணிந்தனர் அதனாலல்லவோ அத்தருக்களிரந்தவர்களுக்கு ஈகின்றன என்பதாம். (உ௪)

இதுவும் கலிவிருத்தம்.

வாய்ந்தமின்னைமடந்தையராக்கிவிண்
போந்திடாமலன்றேமலர்ப்புங்கவன்
சாந்தணிந்தகமனியக்குன்றென
வேந்துவெம்முலைப்பாரமியற்றினன்

(இ-ள்) மலர்-தாமரைப்பூவிலிருக்கின்ற—புங்கவன்-நான்முகக்கடவுளானவன்—விண்-மேகத்தின்கண்—வாய்ந்த-பொருந்திய—மின்னை-மின்னற்கொடிகளை—மடந்தையராக்கி-மங்கையராக்கி—போந்திடாமலன்றே-(அம்மேகத்தினிடத்தே)போகாதிருத்தற்கன்றோ—சாந்து-சந்தனத்தை—அணிந்த-பூசிய—ஏந்து-சுமக்கப்படுகின்ற—வெம்-விரும்பத்தெய்வின்ற—பாரம்-பாரமாகிய—முலை-முலைகளை—கமனியக்குன்றென-பொன்மலையைப்போல—இயற்றினன்-(அவருக்கு) உண்டாக்கினன்—எ-று. (இது பயன்றற்குறிப்பணி) (கருத்து) பிரமதேவனானவன் மின்னல்களைப்பெண்களாக்கி அம்மின்னல்களாகிய பெண்கள் மேகத்திற்செல்லாமலிருக்கப்பொன்மலைகளைப்போலே தன்முலைகளைப்படைத்தான்-எ-ம். (உ௫)

வெங்கதிர்க்கட்சேக்கியதேர்ப்பரிக்
கங்குலின்குளம்பிற்றகர்த்திட்டன

தெங்கினெனும்பழத்தெள்ளமுதத்தினுந்
பங்கமெய்துமாறுகினைபயப்பெலாம்

(இ-ள்) வெம்-வெவ்விய—கதிர்-கிரணங்களையுடைய—சுடர்-சூரியனானவன்—மேவிய-தங்கிய—சேர்-தேரிற்பூட்டிய—பரி-குதிரைகளுடைய—வல்-வலிமை—தங்கு-தங்கிய—குளம்பில்-குளம்புகளாலே—தகர்க்கிட்டன-உடைந்தனவாகிய—தெங்கின்-தென்னைமரங்களுடைய—ஒள்-ஒளியுள்ள—பழம்-கனிகளினது—தேன்-தெளிவு பொருந்திய—அமுதத்தினால்-ரசத்தினால்—மருங்கின்-பக்கங்களிலுடைய—பயப்பெலாம்-வரிகளெல்லாம்—பங்கம்-சேறுகளை—எய்தும்-அடையும்—எ-று (தெங்கிற்கு சூரியமண்டலத்திற்குந் தொடர் புகற்பித்ததனால் தொடர்பு நவிற்சியணி) (கருத்து) சூரியனது தேரிற்பூட்டிய குதிரைகளுடைய குளம்பால் உடைபட்ட தெங்காய்களின் நீரால் வீதிகள் சேறடையுமென்பதாம். (உசு)

நிலவுவெண்கதிர்நீள்மணிமாடமேற்
குலவுபாதிமதியைக்கொம்பனார்
நிலவுகொள்வாணுதல்சேர்த்தியவாடவ
ருலகமேத்துமுழுமதியென்பரால்

(இ-ள்) நிலவு-நிலவைச்செய்கின்ற—வெண்கதிர்-சந்திரனுடைய—மணி-மணிகளாகிய—நீள்-நீண்ட—மாடமேல்-வீட்டின்மேலே—குலவு-விளங்குகின்ற—பாதிமதியை-பாதிச்சந்திரனை—கொம்பனார்-பூங்கொம்புபோல்வார்—நிலவு-ஒள்ளிய—கொள்-கொண்ட—வாள்-ஒளிபொருந்திய—நுதல்-(தமது) நெற்றியோடு—சேர்த்திய-கூட்ட—ஆடவர் (அதுகண்ட) நாயகரானவர்—உலகம்-உயர்ந்தோரால்—ஏத்தும்-துதிக்கப்படுகின்ற—முழுமதி-பூரணச்சந்திரன்—என்பர்-என்றுசொல்லுவார்—எ-று. (இது பொருத்தமையணி) (கருத்து) வீட்டின்மேலே உலாவிய பெண்களானவர்கள் சந்திரனைப்பிடித்துத் தம்முடைய நெற்றியோடு சேர்க்க அதுகண்டவர்கள் பூரணச்சந்திரனென்று சொல்லுவார்களென்பதாம். (உஎ)

புலவுநீக்கிப்புனைமுடிமாதர்கள்
நிலவுபூந்துகிலாடைநீக்கலும்
கலைவிழைந்தனர்காணிவெண்டிங்களின்
கலையைமெல்லக்கலையெனச்சேர்த்துவார்

(இ-ள்) ஆடவர்-கணவரானவர்—புலவு-பிணக்கை—நீக்கி-நீக்கி—புனை-பொருந்திய—முடி-முடிகளையுடைய—மாதர்-மகளிரது—நிலவு-சந்திரிகைபோல விளங்குகின்ற—பூ-அழகிய—துகில்-ஆடையை—நீக்கலும்-அவிழ்க்கவனால்—நாணி-வெட்கப்பட்டு—கலை-மேகலையை—விழைந்தனர்-(அவர்க்கு) உண்டாக்கினவராகி—வெண்-வெள்ளிய—திங்களின்-சந்திரனது—கலையை-நிலவை—மெல்ல-மெல்லிய—அக்கலையென-அவ்வாடையென்று நினைத்து—சேர்த்துவார் (அவர் அரையிலே) சேர்ப்பார்—எ-று. (இதில் நிலவை ஆடையென்று மயங்கல்



மயக்கவணி) (கருத்து) கணவரானவர்கள் தங்கள் மாதர்களதுடையை அவிழ்த்தமாத்திரத்தில் அம்மாதர்கள் வெட்கித் தங்கள் கலையென்று சந்திரகலையை அரையிற்சேர்ப்பார்கள்-எ-ம். (உஅ)

பொருந்துருகனம்பூஞ்சிலம்பார்ப்பறக்
கரந்துசம்முயிர்காதலர்பாற்செல்வார்
திருந்துவாண்முகத்திங்களென்றுடிலா
வருந்தவுக்கபுள்ளார்த்தலர்தூற்றுமால்

(இ-ள்) அனம்-அன்னங்களானவை—பொருந்துருந்த (நம்மாதர்) களுடைய திருசக—பூ-அழகிய—சிலம்பு-சிலம்புகளது—ஆர்ப்பு-ஓசையானது—அற-நீங்கும்படியாக—கரந்து-மறைந்து—தம்முயிர்போலும்—காதலர்பால்-அன்பரிடத்து—செல்வார் (செல்லுகின்ற மங்கையர்)—திருந்து-திருத்தமாகிய—வாள்-ஒளிபொருந்திய—முகம்-முகத்தை—திங்களென்று-சந்திரனென்று நினைத்து—அல்லா-அதனதுஇல்லவை—அருந்த-உண்ண—வருந்த-வருந்துகின்ற—புள்-சகோரங்களானவை—ஆர்த்து-ஒலித்து—அலர்தூற்றும்-வெளிப்படுத்தும்—எ-று (இது முகத்தைச்சந்திரனென்று மயங்கலால் மயக்கவணி) (கருத்து) மயக்கமாகிடத்து மறைந்துசெல்கின்ற மாதர்களுடைய முகத்தைச் சந்திரனென்றெண்ணி, அச்சந்திரகிரணங்களை உண்ண வருக சகோரங்களானவை சத்தித்து அவரை வெளிப்படுத்தி யலர்தூற்றும்-எ-ம். (உகூ)

மலயமாதவனுண்டமணிக்குலைக்
குலவுவார்கடனேர்சொலிற்குற்றமே
யலகில்பல்வளஞ்சேர்த்தியவாவண
முலகமுண்டருண்மால்வயிறொக்குமே

(இ-ள்) மலயம்-பொதியமலையிலிருக்கின்ற—மாதவன்-அகஸ்தியமுனிவனால்—உண்ட-குடிக்கப்பட்ட—மணி-மணிகளது—குலை-கூட்டத்தையுடைய—குலவு-விளங்காநின்ற—வார்-நெடிய—கடல்-கடலை—அலகில்-கணக்கில்லாத—பல்வளம்-பலவளங்களையும்—சேர்த்திய-(தன்னுள்ளடக்கிய, ஆவணம்-கடைகளுக்கு)—நேர்-ஒப்பென—சொலின்-சொன்னால், குற்றமே-(அச்சொல்)குறையுடையதாம்—உலகம்-உலகத்தை—உண்டருள்-விழுங்கியருளிய, மால்-திருமாலினது—வயிறு-வயிற்றை—ஒக்கும்-(அது) ஒத்திருக்கும்-(ஆதலால்)-எ-று (இது செயப்படுபொருள் [illegible]) (கருத்து) கடைகளுக்குக் கடலை ஒப்பென்று சொன்னால் குற்றமாம் அக்கடை திருமால் வயிற்றை ஒத்திருக்குமென்பதாம் ([illegible])

நீடுமாவணத்திலப்பந்துருட்
கேடில்கம்பலையாலிசைகேட்கிலார்
பாடல்வண்டொடுகோணம்பகர்ந்திடக்
கோடல்செய்யர்நிறைகுன்றாயினரென

(இ-ள்) நீடும்-நீண்டிருக்கின்ற,சித்திலப்பந்தருள்-முத்துப்பந்தல்களிலுள்ள—ஆவணம்-கடைகளிலே—பாடல் - பாடுதலையுடைய—வண்டொடு-வண்டுகளோடு—நானம் - கஸ்தூரியை—பகர்ந்திட - (விற்றுக்)கொடுக்க,கேடில்-(எப்போதும்)நீங்காத,கம்பலையால்-(களகள)வென்கின்ற ஓசை-(அப்பாட)லோசையை, கேட்கிலார்-கேட்கின்றிலருமாகி, விற்கப்பட்டபொருளிலே—குறை-யாதொருகுறையும்—இன்றென - இல்லையென்றுநினைத்து,கோடல்செய்வர்-விலைக்குக்கொள்ளுவார்—எ-று.(இது கஸ்தூரிக்கும்வண்டுக்கும்பேதந்தோன்றாமையால் பொதுமையணி) (கருத்து)கடைகளிலே வண்டுகளோடே கஸ்தூரியை-விற்கவிற்கக்குறைவில்லையென்றுகொள்ளுவார்கள்-எ-ம். ()

குளிர்பனிக்குநீண்மாடக்கொடிகள்வான்
வெளிமுகட்டுயர்வெண்மதிதோய்வன
ஒளிகொள்வெங்கதிர்வெம்மையொழித்திட
களிகொடண்களங்கநக்குவபோன்றவே.

(இ-ள்) குளிர்-குளிர்ச்சிபொருந்திய—பனிக்கு- பனிக்காலமாகிய—நீள்-நீண்ட—மாடம்-மாளிகைகளிற்கட்டிய—கொடிகள் - கொடிகளானவை—வெளி-ஆகாயவெளியினது—முகட்டு - முகட்டின்கண்—உயர்-உயர்ந்த—வெண்மதி-சந்திரனை—தோய்வன-தடவுவன—ஒளி - சூரியனிடத்து—கொள் - (தம்மால்) கொள்ளப்பட்ட—வெங்கதிர் - உஷ்ணகிரணத்தாலாகிய—வெம்மை-வெப்பத்தை—ஒழித்திட - நீக்கும்படியாக—களி-பெருமையை—கொள்-கொண்ட, தண்-குளிர்ச்சிபொருந்திய—களங்க-(அச்சந்திரனிடத்துள்ள)வடுத்தன்னை—நக்குவ-நக்குவனவற்றை—போன்றனவே-ஒத்திருக்கின்றன—எ-று. (இது பொருட்குறிப்பணி) (கருத்து) சந்திரனை அளாவியகொடிகளானவை வெங்கதிர்க்காய்ச்சலைநீக்கிடத்தண்கதிரைநக்குவபோன்றிருந்தன-எ-ம். ()

பத்திமாடமணிக்கொடிபானுவின்
மெய்த்தழும்புறத்தைவரல்வெங்கதிர்
கைத்தலங்களிற்றளிர்த்திடையமடி
கைத்திருந்துகாலாட்டிருந்தன்மானுமே

(இ-ள்) பத்தி-ஒழுங்காயுள்ள—மாடம்-மாளிகையினது—மணிக்கொடி-நீலக்கொடியானது—பானுவின் - சூரியனது—மெய் - உடம்பில்—தழும்பு-தழும்புபொருந்த—தைவரல்-தடவுதலால், வெங்கதிர்-அச்சூரியனானவன்; காளிதத்தை-காளிதமென்பவனை, கைத்தலங்களிலேற்றிப் பிடித்தில்—மடியின்மேல்—வைத்திருந்து - வைத்துக்கொண்டிருந்து—காலாட்டுதல் போலும்—எ-று. (இது பொருட்குறிப்பணி) (கருத்து) நீலக்கொடியானது சூரியனைத் தடவுதலாற் சூரியன் காளிதத்தைக் காலாட்டுக்கொண்டிருந்தது போலிருந்ததென்பதாம்.

யாணர்மேயவிரவியைகண்பகற்
காணுந்தோறுங்கனன்றுகனலுமிழ்



கோனைவெம்மணிக்கொம்மைசெய்யெயில்
வாணனூர்சூழ்புரிசையின்மானுமே

(இ-ள்) இரவியை-சூரியனை—கண்-நல்ல—பகல் - பகலிலே—காணுந்தோறும்-பார்க்குந்தோறும்—கனன்று-எரிந்து—கனல்-நெருப்பை, உமிழ்-சொரிகின்ற—புறம்-புறத்தையுடைய—கோனை - அழியாத—வெம்மணி-சூரியகாந்தத்தாலாகிய—யாணர்-தச்சர்களால்—மேய - விரும்பிச்செய்யப்பட்ட—கொம்மை - வலயமாகிய—எயில் - மதிலானது—வாணன் - வாணனூரான—சூழ்-(சோணிதபுரத்தைச்)சூழ்ந்த—ஆழல்மிருந்தநெருப்புமயமாகிய—எயில் - மதிலை—மானும் - ஒத்திருக்கும்—எ-று.(இது உவமையணி) (கருத்து) சூரியகாந்தக்கற்களாற்செய்த மதிலானது சூரியனைக்கண்டக்கினிக்கலலால்வாணனூரன் கோட்டையையொக்குமென்பதாம். (௩௪)

உள்ளமொன்றுதங்காதலரோதிய
கள்ளமேயக்கலவியின்வாய்மையை
வள்ளவாயமுதுண்டிளமடக்
கிள்ளைமெல்லகிளத்தலுநாணுவார்

(இ-ள்) உள்ளமொன்று-ஒருமனப்பட்ட—தம் - தம்முடைய—காதலர்-நாயகரால்—ஓதிய-சொல்லப்பட்ட—கள்ளம்-(தம்மிருவருக்குமுள்ளே)மறைக்கத்தக்க—மேயம்-அன்புபொருந்திய—கலவியின் - புணர்ச்சியினுடைய—வாய்மையை-சொல்லுகளை—வள்ளவாய் - கிண்ணத்திலிட்டுத்தந்த—அமுது-பாலை—உண்டு - குடித்து—வளர்-வளர்கின்ற—மடம்-இளமைபொருந்திய—கிள்ளை - கிளிகள்—மெல்ல-மெள்ள—கிளத்தலும்-(பிறர்அறியச்) சொல்லுதலும்—நாணுவார் (மங்கையர்) வெட்கப்படுவார்—எ-று (கருத்து) தங்கள்புருஷர்கள்சொல்லியபுணர்ச்சிச்சொற்களைக்கிளிகள் சொல்லக்கேட்டு மாதர்கள்நாணமடைவார்களென்பதாம். (௩௫)

வாணிலாமணிமாடத்தொளித்தெமைக்
காணுகென்பதர்மெய்க்கிழல்கண்ணுறீஇப்
பூணுலாமுலையார்புல்லியின்மையி
னாணினின்றுநகைமுகங்கோட்டுவார்

(இ-ள்) பூண்-ஆபரணங்கள்—உலாம் - புரளுகின்ற—முலையார்-கொங்கையுடையமகளிரானவர்—வாள் - காந்திபொருந்திய—நிலாமணி-சந்திரகாந்தத்தாலாகிய—மாடத்து - வீட்டினுள்ளே—ஒளித்து—மறைந்து—எமை-எங்களை—[illegible] என்பவர் - காணவேண்டுமென்றுகணவர்—மெய்-உடம்பி[illegible] நிழல்-சாயையை—கண்ணுறீஇ-கண்டு—புல்லி-(அச்சாயையை) [illegible]—இன்மையின் - கைக்ககப்படாமையினாலே—நாணி-வெட்கப்பட்டு—நின்று-நின்று,நகை - நகையோடுகூடிய, முகம்-முகத்தை—கோட்டுவார்-வளைப்பார்—எ-று. (இது மயக்கவணி) (கருத்து) நிலாமணிமாடத்தொளித்துக்கொண்டகணவர்களதுநிழலைக் கணவரென்றுதழுவியமாதர்கள்நாணமடைவார்கள்-எ-ம். (௩௬)

சாந்தமூழ்கிவளர்ந்ததடமுலைக்
காந்துபன்மணிமேகலைக்காழல்குல்
ஏந்திமின்னினியங்கலரிதெனாப்
போந்தமங்கையரிந்நகர்ப்பொன்னனார்

(இ-ள்) இந்நகர் - இந்நகரத்துள்ள—பொன்னனார் - இலக்குமிபோல்வார்—சாந்தம் - சந்தனத்துள்—மூழ்கி-முழுகி—வளர்ந்த-பருத்த—தடம்-மலைபோலும்—முலை-முலைகளையும்—காந்து - விளங்காநின்ற—பன்மணி-பலமணிகளாகிய—மேகலை-மேகலையின—காழ் - சரங்களையுடைய—அல்குல் - அல்குலையும்—ஏந்தி - சுமந்துகொண்டு—மின்னின்-வானத்திலே—இயங்கல் உலாவுதல்—அரிதெனா-(சிரமமேலுமிடிய)தன்றென்றுநினைத்து—போந்த-இறங்கிவந்த—மங்கையர் - தெய்வமகளிரோ—எ - று. (இது பொருட்டற்குறிப்பணி) (கருத்து) தனதனங்களையும் அல்குலையுஞ்சுமந்துலாவலரிதென்று பொன்னகர மாதர்களே இந்நகர மாதர்களாகவந்தார்களென்பதாம். (௨௭)

கலிவிருத்தம்.

எண்மலியிந்நகர்மன்னர்மன்னவன்
தளையவிழ்நறுமலர்த்தண்ணந்தாரினன்
களைகணாயுலகொருமூன்றுங்காத்தரு
ணளனெனப்பெயரியநாமவேலினன்

(இ-ள்) உலகொருமூன்றும் - (தன்னையுச்சரிக்கின்ற) மூன்றுலகத்தோரையும்—களைகணாய் -ஆதாரமாய்—காத்து-(ஆபத்தினின்றுங்)காத்து—அருள்-(விரும்பப்பட்டவற்றைத்) தருகின்ற—நளனெனப்பெயரிய-நளனெனப்பெயர்பெற்ற—வளம் - செல்வத்தினாலே—மலி - நிறைந்த—இந்நகர் - இம்மாவிந்தநகரத்திலுள்ள—மன்னர்மன்னவன் - அரசர்க்கரசனானவன்—தளையவிழ் - கட்டவிழ்ந்த—நறு-நல்ல—மலர் - மலர்களாகிய—தண் - குளிர்ச்சிபொருந்திய—தாரினன் - மாலையையுடையவன்—நாமம்-அச்சத்தைச்செய்கின்ற—வேலினன் - வேற்படையையுடையவன்—எ-று. (கருத்து) இம்மாவிந்தநகரத்தை ஒரு அரசாக்காசன் மூன்றுலகத்தையுங்காத்தருள்செய்யும் நளனென்னும் பெயரையுடையவன் என்பதாம். இது முதல் (௫) பாடல்கள் நளனது சிறப்பு (௨௮)

ஒன்னலர்பணிமுடியுரிஞ்சுதாளினன்
கன்னவில்தோளினன்கமலக் [illegible] ணன்
றன்னுயிராமெனவுலகிற்றங்
மன்னுயிரனைத்தையும்புரக்கு [illegible]

(இ-ள்) ஒன்னலர்-பகைவரது— [illegible] மணிகளையுடைய—முடி-மகுடங்களை—உரிஞ்சு-தேய்க்கின்ற [illegible] —தாளினன்-அடிகளையுடையவன்—கல்-கல்லோடு—நவி [illegible] —தோளினன் - புயங்களையுடையவன்—கமலம்-தாமரைமலர்போ [illegible] —கண்ணினன்-நேத்திரங்களையுடையவன்—தன் - தனது—உயிராமென - உயிர்போலநி



னைத்து—உலகில்-உலகினிடத்து—தங்கிய-பொருந்திய—மன் - நிலையுள்ள—உயிரனைத்தையும்-எல்லாவுயிர்களையும்—புரக்கும்-காப்பாற்றுகின்ற—மாட்சியான் - பெருமையையுடையவன்—எ-று. (கருத்து) பகைவர்முடிபடுந்தாட்களையும்கல்லொபெழுகியதோட்களையும் தாமரைநிகர்கண்களையுமுடையவன்தன்னுயிரைப்போலு மன்னுயிரைக்காப்பவன் என்பதாம். (௨௯)

பொருசிலைவேனில்வேளனையபொற்பினன்
அருவரையாமெனவகன்றமார்பினன்
கரைபொருமுடைதிரைக்கடலந்தானையான்
திருகுவெஞ்சினக்களிறனையசீற்றத்தான்.

(இ-ள்) பொரு-போர்செய்கின்ற—சிலை - (கருப்பு) வில்லையுடைய—வேனில்-வசந்தகாலத்துக்குரிய—வேளனைய- மன்மதனைப்போலும்—பொற்பினன்-அழகினையுடையவன்—அரு - அரிய—வரையாமென -மலையைப்போலும்—அகன்ற-பரந்த—மார்பினன் - மார்பினையுடையவன்—கரை-கரையோடும்—பொரு-போர்செய்கின்ற—முடை - புலானாற்றம்பொருந்திய—திரை-அலைகளையுடைய—கடல் - கடல்போலும்—தானையான்-சேனைகளையுடையவன்—திருகு- வஞ்சனையும்—வெஞ்சினம் - வெவ்வியகோபத்தையுமுடைய—களிறனைய - களிறுபோலும்—சீற்றத்தான்-கோபத்தையுடையவன்—எ-று. (கருத்து) மன்மதனையொக்குமழகையும் மலையைநிகர்மார்பையும் கடலைநிகர்சேனைகளையும்யானையைநிகர்கோபத்தையுமுடையவன் என்பதாம். (௩௰)

வெங்கலியிருள்கெடவெண்ணிலாவுமிழ்
திங்களங்கவிகையான்றிகிரியானினா
லங்கண்மாநிலமுழுதளிக்குமாற்றலான்
மங்குலினெழுமடங்குதவும்வண்கையான்.

(இ-ள்)வெங்கலி-இயவறுமையாகிய—இருள் - இருளானது—கெட-அழிய—திங்கள்-சந்திரன்போல—அம்-அழகிய—வெள் - வெள்ளிய—நிலா-நிலவை—உமிழ் வீசுகின்ற—கவிகையான்- குடையையுடையவன்—திகிரியானினால்-ஏகசக்கரத்தினாலே—அங்கண்-அழகியவிடத்தையுடைய—மா - பெரிய—நிலமுழுதும்-பூமியனைத்தையும்—அளிக்கும்-அரசாளுகின்ற—ஆற்றலான் - வல்லமையுடையவன்—மங்குலின்-மேகத்தினும்—எழுமடங்கு-ஏழுபங்கதிகமாக—உதவும்-கொடுக்கின்ற—வண் - வளம்பொருந்திய—கையான் - கையையுடையவன்—எ-று. (கருத்து) உலகெல்லாமொருகுடையிலாண்டவன் மேகத்தைப் பார்க்கினும்எழுபங்கதிகமாகக் கொடுக்குங்கையையுடையவன்-எ-ம். ()

அருளினதுறையுணல்லறத்தின்வேலிசொற்
றெருளுறுகல்வியந்தெய்வமாக்கடல்
குளிர்கடற்புவிபுகழ்குணக்குன்றஞ்சுட
ரெரிதவழலங்கல்வேலரசரேறனான்.

ரு

(இ-ள்) அருளினது-கருணையினது—உறைவுள்-வீடாயுள்ளவன்—நல்லறத்தின்-நல்லதருமமாகிய (பயிரி)னது—வேலி-வேலியாயுள்ளவன்—சொல் - நூல்களாலே—தெருளுறு-(பலவகைப்பொருள்களையு ம்) அறிந்த—கல்வி-கல்விக்கு—தெய்வம்-தெய்வத்தன்மைபொருந்திய—மாக்கடல்-பெரியகடலாயுள்ளவன்—குரை-ஒலிக்கின்ற, கடல்-கடல் போல—புவி-பூமியிலுள்ளோரால்—புகழ்-புகழப்படுகின்ற—குணம்-நற்குணங்களெல்லாஞ்சேர்ந்த—குன்றம்-மலையாயுள்ளவன்—சுடர்-ஒளியையுடைய—எரி-நெருப்பானது—தவழ் - தவழுகின்ற—அலங்கல்-மாலையைத்தரித்த—வேல் வேலையுடைய, அரசர்-பகையரசராகிய; (யானைகளுக்கு) ஏறு-ஆண்சிங்கம்போல்பவன்—எ-று. (கருத்து) இந்நளன் கருணைக்குவீடானவன் தருமத்திற்குவேலியானவன் கல்விக்குக்கடலானவன் குணத்திற்குக் குன்றானவன் பகை மன்னர்க்குச் சிங்கமானவன் என்பதாம். (௰௨)

நகரப்படலம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

# அன்னத்தைக்கண்ணுற்றபடலம்.

அஃதாவது-நளமகாராஜன்-அன்னத்தைக்கண்டதாம்.

கலிநிலைத்துறை.

இன்னதன்மையனாகியவேந்தெழிற்கனிதோள்
மன்னர்மன்னவன்மாணெழில்வகைநலங்கேட்டுக்
கன்னலஞ்சுவைகனிந்தசொற்றமயந்தியென்னும்
பொன்னங்கொம்பனாள்மயலொடும்வைகலும்புலம்பும்.

(இ-ள்) கன்னல் - சர்க்கரைபோல—அஞ்சுவை - மதுரச்சுவையினாலே—கனிந்த-முதிர்ந்த—சொல்-சொல்லையுடைய,தமயந்தியென்னும் - தமயந்தியென்கிற—பொன்னங்கொம்பனாள் - கற்பகப்பூங்கொம்பு போல்பவள்—இன்ன-இப்படிப்பட்ட—தன்மையனாகிய-குணநிசயங்களையுடையவனாகிய—வேந்து -(பூமிபாரத்தை) தாங்குகின்ற—எழில்-அழகும்—கனி-வலிமையும்பொருந்திய—தோள் - தோள்களையுடைய—மன்னர்- அரசர்களுக்கு—மன்னவன்-அரசனாகியவனது—மாண்-குணங்களையும்—எழில்-அழகினது—வகை-வகைகளையும்—நலம் - செல்வத்தையும்—கேட்டு- (அறிந்தோர்சொல்லக்) கேட்டு—மயலொடும்-மயக்கத்தலோடும்—வைகலும்-தினந்தோறும்—புலம்பும்-புலம்புவாள்—எ-று. * தொல்காப்பியம்-வினையியல்-நூ-கூ- பல்லோர்படர்க்கை



முன்னிலைதன்மை,யவ்வயின்மூன்றுநிகழுங்காலத்துச் - செய்யுமென்னுங்கிளவியொடுகொள்ளா, இவ்விதியாற்புலம்புமென்றதுபுலம்புவாள்-என்றாயிற்று (கருத்து) தமயந்தியானவள்நளனுடையகுணநிசயங்களைக்கேட்டு, மயலுற்றுப்புலம்புவாள்-என்பதாம். (இதுமுதல் - ௯- பாடல் தமயந்திகாமசசெய்கைகூறல்.) (௧)

தாதளைந்தினவண்டுகண்படுகுழற்றையல்
லேதமற்றதன்னெழிற்கிணையாமெனவெண்ணி
யாதரத்தின்வேளாணையிற்பயிலுநெஞ்சகத்தைத்
தூதுவிட்டனடோன்றல்பாற்றுறந்தனடுயிலே.

(இ-ள்) இனம்-கூட்டமாகிய—வண்டு-வண்டுகளானவை—தாது-மலர்ப்பொடியை—அளைந்து- பூசி—கண்படு - நித்திரைசெய்வதற்கிடமான—குழல்-கூந்தலையுடைய—தையல்-தமயந்தியானவள்—ஏதமற்ற - குற்றமற்ற; தன-தனது,எழிற்கு-அழகுக்கு—இணையாம்-ஒக்குமென்று—(இவனழகு) ஒக்குமென்று—எண்ணி-நினைத்து—ஆதரத்தின் - ஆசையினாலே—வேள்-மன்மதனது—ஆணையில்-ஆக்கினையிலே—பயிலும்- தங்குகின்ற—நெஞ்சகத்தை-(தன்)மனத்தை—தூது-தூதாக—தோன்றல்பால்-அரசனிடத்திலே—விட்டனள் - அனுப்பினவளாகி—துயிலை - நித்திரையை—துறந்தனள்-இழந்தாள்—எ-று. (கருத்து) தமயந்திதன்மனத்தை நளனிடத்துத்தூதுவிட்டனள் அதனால்நித்திரையைவிட்டாள்-என்பதாம். (௨)

மின்னிலங்குவேனளன்பெயர்கேட்டிடும்விழைவாற்
பொன்னின்வார்கழல்விதர்ப்பர்கோன்பேரவைபோந்து
மன்னரியாரினும்வந்தியர்நிடதனைத்தெரிப்ப
வன்னவன்புகழ்கேட்டலும்புளகமுற்றயரும்.

(இ-ள்) மின் - மின்னல்போல—(இலங்கு)விளங்காநின்ற—வேல்-வேலையுடைய—நளன்-நளமகாராஜனது—பெயர்- நாமத்தை—கேட்டிடும்-கேட்கவேண்டுமென்கிற—விழைவால் - ஆசையினாலே—பொன்னின்-பொன்னாலாகிய—வார்-நீட்சிபொருந்திய—கழல் - வீரக்கழலையுடைய—விதர்ப்பர்கோன் - விதர்ப்பதேசத்தாருடையவரசனது—பேரவை-பெரியசபையினிடத்து, போந்து-(அவனைத்தொழுதற்குச்செல்கின்றவன்போலச்) சென்று—மன்னரியாரினும்-அரசர்பலரினும்—வந்தியர் - புகழ்வோரானவர்—நிடதன்- நிடதேசத்தரசனை—தெரிப்ப - அதிகமாகப்புகழ—அன்னவன்-அப்படிப்புகழ்பெற்றவரசனது—புகழ்-கீர்த்தியை—கேட்டலும்-கேட்டவளவிலே—புளகம் - மெய்ம்மயிர்ச்சிலிர்த்தலை—உற்று - அடைந்து—அயரும் - (தமயந்தி) வாடுவாள்—எ-று. (கருத்து) தமயந்திதன்பிதாவின்* அவையிற்சென்றுவந்தியர் நளனைப்புகழக்கேட்டுவருந்துவாளென்பதாம். * தொல்காப்பியம்,வாரநல்போகலொழுகன்மூன்றுநேர்பு நெடுமையுஞ்செய்யும்பொருள. (௩)

அறுசீர்க்கழிநெடிலடி-விருத்தம்.

அங்கணேயொழியாமன்னனிலாடவற்றெரிந்தென்றுக்—
கனக்குழையவரான்மன்ர்க்கொருத்துற்றங்காட்டி

னைஞ்செய்வண்டிமிருந்தண்டார்நளனலாதில்லையென் று
மனங்களித்துரைப்பக்கேட்டுமம்மர்நோயுழக்குமாதே.

(இ-ள்) அநங்கனை-மன்மதனை—ஒழியா - ஒழித்து—மண்ணில்-பூமியின்கண்—ஆடவன்-ஒருகாளையை—தெரிகிலென்று - ஆராய்ந்தேன் என்றுசொல்லி—கனம்-கனம்பொருந்திய—குழையவரால் - காதணியையுடையமகளிரால்—மன்னர்க்கு-மற்றையரசர்களுக்கு—ஓரோருகுற்றம்-ஒவ்வொருகுற்றத்தை—காட்டி - சொல்வித்து—இனைஞ்செய-கூட்டஞ்செய்கின்ற—வண்டு - வண்டுகளானவை—இமிரும்-ஒலிக்கப்பெறுகின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—தார்-மாலையையுடைய—நளனலாது-நளராஜனல்லாமல்—இல்லையென்று-(ஒருவனு) மில்லையென்று—மனம் - நெஞ்சத்தில்—களித்து - மகிழ்ந்து—உரைப்ப-(அவர்) சொல்ல—கேட்டு-(தான்)கேட்டு, மம்மர்-மயக்கமாகிய—நோய்-நோயிலே—உழக்கும் - (தமயந்தி) வருந்துவாள்—எ-று. இலக்கணக்கொத்து ஒழிபியல் - யாட-அது அங்ஙனங்குவிவருமொழிப்பொருளை-யின்மையிற் றுமறைபினுமொன்றுக்கும் இவ்விதியால் அங்கயிலான் அநங்கன்னென்றாயிற்று (கருத்து) நளனே அழகுள்ளவனென்று மாதர் சொல்லக்கேட்டுத் தமயந்திவருந்துவாள் என்பதாம். (சு)

பாளைவாய்கமுகிற்றாவிப்படுபழஞ்சிதறிவாளை
தாளதாமரையிற்றுஞ்சுந்தண்பணைவிடதநாட்டி
னீள்வளங்கேட்டாள்போலச்சுதர்பாலிருபன்சீர்கேட்
டாளிமொய்ம்பினனையண்ணியணிமுலைநோக்கிச்சோரும்.

(இ-ள்) பாளை-பாளைகளானவை—வாய்-பொருந்திய—கமுகில்-பாக்குமரத்தின்மேலே—தாவி-பாய்ந்து—படு-குலைகளிலுள்ள—பழம்-கனிகளை—சிதறி-உதிர்த்து—வாளை-வாளைமீன்களானவை—தாள - தாளத்தையுடைய—தாமரையில்-தாமரைமலர்களிலே—துஞ்சும்-தூங்கப்பெறுகின்ற, தண்-தண்ணிய, பணை- கழனிகளையுடை, விடதநாட்டின-விடதேசத்தினது—நீள்வளம் - பெரியவளத்தை—கேட்டாள்போல் -கேட்பவள்போல—சுதர்பால் - (அங்கிருந்துவந்து) புகழ்வோரிடத்து—நிருபன்-அரசனது—சீர்-கீர்த்தியை—கேட்டு- கேட்டறிந்து—ஆளி சிங்கம்போல்பலமுடைய—மொய்ம்பு - தோள்களாகிய—இனை - இணைத்தை—அண்ணி-நினைத்து—அணி- ஆபரணங்களையுடைய—முலை-(தன்) முலைகளை—நோக்கி-பார்த்து—சோரும் (தமயந்தியானவள்) வாடுவாள்—எ-று. (இதுபிறிதினவிழ்ச்சியணி) (கருத்து)தமயந்திபுகழாளரிடத்துவிடதநாட்டுவளங்கேட்பவள்போல நளன்கீர்த்தியைக்கேட்டு அவனைச்சேர்க்கைதனங்களைப்பார்த்துவருந்துவாள் என்பதாம். (எ)

ஓவியத்துறைகைபோயவொருவனையுருவின்மிக்க
காவலனொருவன்மற்றோர்கன்னிநீயிட்டுகென்னத்
தாவருமெழிலிற்கோட்டத்தானுமந்நளனுமாக
மேவரவினிதினோக்கிமெய்ம்மயிர்பொடிக்குமன்றே.



(இ-ள்) ஓவியம்-சித்திரவித்தையினது—துறை - வழியிலே—கைபோய - வல்லவனொருவனை - ஒருவனைப் (பார்த்து) —உருவின்-அழகினிலே—மிக்க-(யாவரினும்) மேற்பட்ட—காவலனொருவன் - ஒரு அரசகுமாரனையும்—மற்றோர் - வேறொரு—கன்னி - கன்னிகையும்—நீ இட்டுகென்ன-நீயெழுதுகவென்றுசொல்ல—தாவரும்-வருத்தஞ்சேர்தலில்லாத—எழிலில்-சித்திரச்சாலையிலே—கோட்ட-(அவ்விருவர்வடிவங்களையுமவ)னெழுத—தானும்-(விரும்பிய)தானும்—அந்நளனுமாக(விரும்பப்பட்ட) அநளராஜனுமாக—மேவர-பொருந்த—இனிதின்-இனிதாக—நோக்கி-பார்த்து—மெய் - உடம்பிலுள்ள—மயிர் - மயிர்களானவை—பொடிக்கும்-சிலிர்க்கப்பெறுவாள் (தமயந்தியானவள்)—எ-று. (கருத்து) சித்திரனெழிதிக்கொடுத்த இருபடங்களையுந்தமயந்தி பார்த்துப்புளகமடைந்தாளென்பதாம். (அ)

வள்ளற்றாரகலந்தன்னில்வனமுலைநினைக்கவென்று
முள்ளத்தாள்கனவிற்காணாதொழிந்தநாளுண்டோகங்கு
னள்ளிற்கூர்துயிலிற்காணாநற்பொருள்காணுங்கொல்லோ
மெள்ளத்தான்விதியாற்கூட்டுஞ்செயல்வினைவிலக்கலாமோ.

(இ-ள்) வள்ளல்-நளமகாராஜனது—தார் - மாலையையுடைய—அகலந்தன்னில்-மார்பினிடத்தே—வனம் - சித்திரத்தையுடைய—முலை-முலைகளானவை—நினைக்க - அழுந்தாநிற்க—என்னும் (அவனை) இடைவிடாதுநினைக்கின்ற—உள்ளத்தாள் - மனத்தையுடையதமயந்தியானவள்—கனவில்-சொப்பனத்திலே—காணாது-காணாதிருக்க—ஒழிந்தநாள்-கழிந்தநாளும்—உண்டோ-உண்டோ—(இல்லை) காணா(முன்)காணப்படாமல்—நல் - நல்ல—பொருள்-ஒருபொருளை—கங்குல் - இரவினது—நள்ளில்-நடுவிலே—கூர்-செய்யப்பட்ட—துயிலில்-நித்திரையிலே—காணுங்கொல்-(ஒருவன்)காண்பானோ—(வெளியின்)விதியால்-ஊழினால்—கூட்டும்-(அதனைக்)கூட்டுகின்ற—செயல்வினை(அந்நித்திரையின்) செய்கையை—மெள்ளத்தான் - விரையாமலேனும்—விலக்கலாமோ (அசம்பவமென்று) விலக்கலாமோ-ஆகாது—எ-று. (கருத்து) தமயந்தி நளனைக்கனவிற்காணாதொழிந்தநாளில்லை கண்ணிற்காணாதபொருள் கனவிற்காணாது காணாநளனைக்கனவிற்கண்டது விதிகூட்டுஞ்செயல் என்பதாம். (கூ)

நட்புலனென்னுந்தூயகதவடைத்திதயமேய
வுட்புலனொடுங்கநோக்கியுறுதுயிலென்னுந்தோழி
பட்குலஞ்சூழும்வைவேலிறையெழிற்பொலிவுகாட்டு
முட்பொதிபசுந்தாட்செய்யமுளரிபோன்றுசகதிணட்கே.

(இ-ள்) தூய-நீர்த்துளிகளைத்தூவிய—நட்புலனென்னும்-கண்ணிமைகளென்கிற—கதவு-கதவுகளை—அடைத்து - சாத்திக்கொண்டு—இதயம்-நெஞ்சமாகிய; (தன்வீட்டின்) மேய-தங்கிய—உட்புலன்-மனமனது—ஒடுங்க-அடங்க—நோக்கி - அச்சமயம்பார்த்து—உறு - அடைந்த—துயிலென்னும்-நித்திரையென்கிற—தோழி - பாங்கியானவள்—பு

...குலம்-பிறைமயினமானது—கழலும்-வட்டமிட்டப்பெறுகின்ற—வை-கூர்மைபொருந்திய—வேல்-வேலையுடைய—இறை-நளமகாராஜனுடைய—தாழில்-அழகினது—பொலிவு-பெருக்கத்தை—முன்-முன்னுக்காலே—பொதி-நிறைந்த—பசு-பசிய—தாள்-தண்டையுடைய—செய்ய முளரிபோல்-செந்தாமரைமலர்போலும்—முகத்திற்கு-முகத்தையுடையதமயந்திக்கு—காட்டும்-காண்பிப்பாள்—எ-று. (இது உருவகவணி) (கருத்து) இந்திரையென்னும் பாக்கியமானவள் நளனது அழகைத் தமயந்திக்குக்காட்டுவாளென்பதாம். (௮)

தாமரைமுகங்கள்வாட்டுந்தண்பனிக்காலந்தன்னிற்
காமர்வெம்பகனீட்டித்தவண்ணமுங்கணவர்த்தீர்ந்தோர்
சேமுறவேனிற்காலமிரவுநீட்டித்தவாறுந்
தாமமென்கூந்தற்செவ்வாய்த்துடியிடையாயவன்றே.

(இ-ள்) தாமரை-தாமரைமலர்களுடைய—முகங்கள்-முகங்களை—வாட்டு-வாடச்செய்கின்ற—தண்-தண்ணிய—பனிக்காலம்-பனிக்காலமானது—தன்னில்-தன்னிலே—காமர்-அழகிய—வெம்பகல்-வெவ்வியபகலை—நீட்டித்தவண்ணமும்-நீள்வித்தபடியும்—கணவர் (தம்முடைய) நாயகரினின்றும்—தீர்ந்தோர்-நீங்கினமாதர், எம்மையிலே; உள—அவிடத்துக்காரணமாகிய, வேனிற்காலம்-வெயிற்காலமானது (தன்னில்) தன்னிலே—இரவு-இரவை, நீட்டித்தவாறும்-நீள்வித்தபடியும்—தாமம்-புகைபோலும்—மெல்-மெல்லிய—கூந்தல்-கூந்தலையும்—செவ்-செய்ய—வாய்-வாயையும்—துடி-உடுக்கைபோலும்—இடை-இடையையும்; உடைய-தமயந்தியானவள்—ஆய-துன்பப்படுத்தற்கேயாகும்—அன்றே-இது ஆச்சரியம்—எ-று. (கருத்து) பனிக்காலம்பகலை நீட்டித்ததும் வேனிற்காலம் இரவை நீட்டித்ததும் தமயந்தி ஆயாசப்படத்தான். (௯)

மணிவெயுழுவனையதோளார்மனவலியகற்றுந்திப்
பணைவரவல்குற்செவ்வாய்ப்பைந்தொடிகுணநூலாக
வணிகிளர்சீர்த்திமுத்தங்கோர்த்தனனரசர்சென்னி
தணிவறவிளங்கும்பைம்பொற்றாமரைத்தாளினானே.

(இ-ள்) அரசர்-அரசருடைய—சென்னி-தலைகளிலே—தணிவற-ஒழிவில்லாமல்—விளங்கும்-விளங்குகின்ற—பைம்பொற்றாமரை-பசியபொற்றாமரைமலர்களாகிய—தாளினான்-அடிகளையுடைய, (நளமகாராஜனானவன்) அரவு-பாம்பினது—துத்தி-கரும்புள்ளிகளையுடைய—படம்-படம்போலும்—அல்குல்-அரைமுன்பக்கத்தையும்—செவ்வாய்-செய்யவாயையும்—பைந்தொடி-பச்சைவளையல்களையும் உடைய தமயந்தியினது—மணிவெயுழுவனைய-மணித்தூண்போலும்—தோளார்-தோள்களையுடையகாளையரது—மனவலி-தைரியத்தை—அகற்றும்-நீக்குகின்ற—குணம்-குணமானது—நூலாக-இழையாக—அணி (தன்) னழகிலே—கிளர்-விளங்காநின்ற—சீர்த்தி-கீர்த்தியாகிய—முத்தம்-முத்துக்களை—கோர்த்தனன்-(அவ்விழையிலே) கோர்த்த



—ன-று. (இதுகுணத்தினூலையும்-கீர்த்தியின்முத்தையும்ஆரோபித்ததால்உருவகவணி) (கருத்து) நளமகாராஜன் தமயந்திகுணமேநூலாகவும், தன்கீர்த்தியேமுத்துக்களாகவும்-கோத்துக்கொண்டிருந்தான் என்பதாம். இதுமுதல்-௫-பாடல்களனுகாமங்கூறல். (௰)

வனப்பினில்வென்றவேந்தைவயங்கொளுங்காலமென்றுங்
கணைத்துவண்டிமிருங்கூந்தல்கருதியவிலக்கந்தப்பாத்
தனிப்படையாகவேற்கெண்ணினன்றரளஞ்சிந்தக்
குனிக்குமென்கரும்பான்மேருவில்லினைவெல்லுங்கோளான்.

(இ-ள்) தரளம்-முத்துக்களானவை—சிந்த-உதிராநின்ற—குனிக்கும்-வளைக்கப்பட்ட—மென்கரும்பால்-மெல்லியகருப்புவில்லினாலே—மேருவில்லினை-மேருவைவில்லாகக்கொண்டகடவுளையும்—வெல்லும்-வென்ற—கோளான்-(பெருமையையுடைய) மன்மதனானவன்—வயம்-வெற்றியை—கொளும்-கொள்ளுதற்கேற்கின்ற—காலமென்று-காலம்(மிதுவே)யென்று—வண்டு-வண்டுகளானவை—கணைத்து-ஒலித்து—இமிரும்-ஏறப்பெறுகின்ற—கூந்தல்-கூந்தலையுடையதமயந்தியானவள்—கருதிய-(தன்னாலே) குறிக்கப்பட்ட—இலக்கம்-குறியினின்றும்—தப்பா-தப்பாத—தனி-ஒப்பற்ற—படையாக-ஆயுதமாக—வனப்பினில்-அழகினால்—வென்ற (தன்னை) வென்ற—வேந்தை-நளமகாராஜனை—வேறற்கு-(அப்படையால்)வெல்லுதற்கு—எண்ணினன்-ஆலோசித்தான்—எ-று. (கருத்து) மன்மதனானவன் தமயந்தியைப்படையாகக்கொண்டு நளனைவெல்லநினைத்தான் என்பதாம். (௰௧)

அணங்கினுக்கணங்குசெய்யுமணிகிளரஞ்சில்லோதி
குணங்கமழ்குருதிவைவேற்கொற்றவன்செவியுறுமுன்
மணங்கமழ்தென்றற்றேரோன்வாங்குபைங்கழைவிற்பூட்டுங்
குணஞ்செவிப்பட்டதன்றோவன்மையார்குணிக்கற்பாலார்.

(இ-ள்) அணங்கினுக்கு-தெய்வமகளிருக்கு—அணங்கு-வருத்தத்தை—செய்யும்-செய்கின்ற—அணி-அலங்கரித்தலாலே, கிளர்-விளங்காநின்ற—அம்-அழகிய—சில்-பொன்வட்டத்தகட்டணிபொருந்திய—ஓதி-கூந்தலையுடையதமயந்தியினது—குணம்-குணமானது—கமழ்-கமழாநின்ற—குருதி-உதிரத்தையுடைய—வை-கூர்மைபொருந்திய—வேல்-வேலைத்தாங்கிய—கொற்றவன்-நளமகாராஜனது—செவி-காதிலே—உறுமுன்-அடைவதன்முன்னே—மணம்-மணமானது—கமழ்-மணக்கப்பெற்ற—தென்றல்-தென்றலாகிய—தேரோன்-தேரையுடையமன்மதனால்—வாங்கு-வளைக்கப்பண்ட, பைங்கழைவில்-பசியகருப்புவில்லிலே—பூட்டும்-ஏறிடப்பட்ட—குணம்-குணமானது, செவி-(அம்மன்மதன்) காதிலே—பட்டது-அடைந்தது—அன்றோ-அப்படிப்பட்டமன்மதனது—வன்மை-வல்லமையை—யார்-யாவர்—குணிக்கற்பாலார்-அளவுசெய்யவல்லவர்—எ-று. (கருத்து) தமயந்திகுணநிசயமானது நளன்காதில்விழுமுன் மன்மதனுவன்விற்பூட்டும் வல்லமையையார்சொல்லவல்லாரென்பதாம். (௰௨)

கல்வியினூனெறிக்கட்போயகாவலன்றன்னையின்னே
வெல்குவலென்னநெஞ்சின்விழைவுறக்கருப்புவில்லான்
மல்லலம்புவனமூன்றும்வென்றதன்வரம்பில்சீர்த்தி
யல்கலிலையமென்னுமாழியினுகுத்துநின்றான்.

(இ-ள்) கல்வியின்-கல்வியினது—நெறி-வழியில்—கைபோய-வல்லவனாகிய—காவலன்றன்னை-அரசனை—இன்னே-இப்போதே—வெல்குவலென்ன-வெல்வேனென்று—நெஞ்சின்-(தன்)மனத்தில், விழைவுற-ஆசைகொண்ட—கருப்புவில்லான்-கருப்புவில்லையுடைய (மன்மதனானவன்), புவனமூன்றும்-உலகமூன்றையும்—வென்ற-(அதனால்) வென்றுசம்பாதிக்கப்பட்ட—தன்-தனது—மல்லல்-வளமைபொருந்திய—வரம்பில்-அளவில்லாத—சீர்த்தி-கீர்த்தியை—அல்கலில்-குறைதலில்லாத—ஐயமென்னும்-சந்தேகமென்கிற—ஆழியின்-கடலுள்—உகுத்து-முழுகச்செய்து—நின்றான்-(திகைத்து)நின்றான்—எ-று. (கருத்து) நளனைவெல்ல விருப்புற்றமன்மதனானவன் தன்கீர்த்தியைச்சந்தேகக்கடலிற்சொரிந்து மயங்கிநின்றானென்பதாம். (௰௩)

தண்ணறுந்துளிக்குங்கூந்தற்றமயந்திமுலையும்போர்வே
லண்ணறன்புயமுங்கூட்டும்விதிவலியழுதிற்றம்மா
மன்னனம்முழவுந்தோளான்மனவலிக்கவசமாக
மென்மலர்வாளியாலுமுரணறப்பிளந்ததன்றே.

(இ-ள்) தண்-தண்ணிய—நறு-மலர்த்தேனை, துளிக்கும்-துளிக்கின்ற—கூந்தல்-கூந்தலுள்ள—தமயந்தி-தமயந்தியினுடைய—முலையும்-முலைகளையும்—போர்-போர்க்குரிய—வேல்-வேலைத்தாங்கிய—அண்ணல்-நளமகாராஜனுடைய—புயமும்-தோள்களையும்—கூட்டும்-சேர்க்கும்—விதி-தெய்வத்தினது—வலி-நினைப்பானது—அழுதிற்றுவைய ...உடைத்தாயிற்று—மன்-அரசனைத்தரித்த—அனைய-அனையதாகிய—முழவு-மத்தளம்போலும்—தோளான்-தோள்களையுடைய அவ்வரசனது—மனவலி-தைரியமாகிய—கவசம்-கவசமானது—மாரன்-மன்மதனது—மென்-மெல்லிய—மலர்வாளியாலும்-பூவம்பினாலும்—உரணற-உரங்கெட—பிளந்தது-பிளந்தது—எ-று. (கருத்து) தமயந்திமுலைகளையும்நளனிருதோள்களையும்சேர்க்கும்விதிவசம்வலுமையுள்ளதாதலால் நளனுடைதரியமாகியமன்க்கவசமானது மன்மதபாணத்தாற்பிளந்ததென்பதாம். ()

தேன்கமழ்தாளவிழுமுளரியாய்முகத்தேவுமாகும்
தாங்கருங்காமவெம்மைதரிக்கிலராகியன்றே
வாங்குதண்டிகையிற்றன்னொண்மலர்வயின்வதிந்தார்மன்னன்
வீங்குருசிறுசிற்றேன்றுமதனைவெவ்வாறுநீக்கும்.

(இ-ள்) தேன்-தேனானது—கமழ்-மணக்கப்பெற்ற—தாளவிழு முளரி-அளவில்லாமல்லையுடையகடவுளும்—நான்முகத்தேவும் - நான்குமுகங்களையுடையகடவுளும்—ஈசனும் - எங்கோனும்—தாங்கரு (தாவராவும்) தாங்குதற்கரிய—காமவெம்மை - மன்மதனாலுண்டாகிய வெப்பத்தை—தரிக்கிலராகி-பொறுக்கமாட்டாதவராகி—வாங்கு - வளைந்த—தண்



டிகையில்-குளிர்ச்சிபொருந்தியபாற்கடலின்கண்ணும்—தன்னொண்-குளிர்ச்சிபொருந்திய—மலர்வயின் - தாமரைப்பூவின்கண்ணும்—வதிந்தாரன்றே வாசஞ்செய்கின்றாரன்றோ—மன்னன்-அரசனானவன், நீங்கரு.. நீங்காத—தீ....(தன்து) சாயைவடிவமாக—தோன்றும் - தோன்றுகின்ற—தனை-மன்மதனின்றும்—எவ்வாறு எவ்வுபாயத்தினாலே—நீங்கும் - நீங்கமாட்டுவான்—எ-று. (கருத்து) பிரமனும் விஷ்ணுவும் காமக்கனலுக்காற்றாமல் கடலிலும்மலரிலுமிருக்கிறார்கள் அவ்வையார்களன்மதனை விட்டெவ்வாறுநீங்குவான்-எ-ம். (௰௫)

மானநீராணைத்தூழ்ந்த மன்னவனுளந்தினூடே
நானலம்பருவமென்னுந்தேர்பூழியனபொழுதல்கு
கானமும்புழுகுங்கொட்டி நகைமணிமுத்தஞ்சூட்டு
நீனிறமணிகட்கொங்கைக் குடத்தினனிப்புக்காள்

(இ-ள்) மானம்-நாணமாகிய—நீராணம் -அகழியினாலே; சூழ்ந்த-சூழப்பட்ட—மன்னவன-அரசனது—உளத்தினூடு-மனத்தினுள்ளே—நா-குற்றமற்ற—நலம்பருவமென்னும் - நலமாகிய பருவமென்கிற—தேர்பூழி-பாக்கியினாலே—அனபொழுத-(அவன்பே)லனபுபெறுக—நல்கு-கொடுக்கப்பட்ட—கானமும்-கஸ்தூரியையும்—புழுகும் -புழுகையும்—கொட்டி-அப்பி—நகை-காந்திபொருந்திய—மணி - அழகிய—முத்தம்-முத்துவடத்தை—சூட்டும்-சூட்டப்பெற்ற—நீனிறமணி -நீலமணிபோலும்—கண்-குசுகத்தையுடைய—கொங்கை - முலைகளாகிய—குடத்தினால்-குடங்களினாலே—நீந்தி-(அவ்வகழியைக்)கடந்து, புக்காள்-சென்றாள்—எ-று (கருத்து)தமயந்தியானவள்நாணமென்னுமகழியைக்கொங்கைக் குடங்களாலேநீந்தி அவனுள்ளத் துட்புகுந்தாள்-எ-ம். (௰௬)

சிறையளிகுடைந்துபாடுந்தேமலர்ப்பசுழிமாரி
நிறைவிரியலங்கன்மார்பிற் றினைத்தவினையுந்தன்பந்
திறைமதிவிளங்குங்குறகாலையுமணையுமல்லாற்
பிறரியாமலுள்ளத்திடக்கினன்பிறங்குதோளான்

(இ-ள்) பிறங்கல்-மலைபோலும்—தோளான் - தோள்களையுடையவனானவன்—சிறை-சிறைகளையுடைய—அளி -வண்டுகளானவை—குடைந்து - துளைத்து—பாடும்-பாடப்பெறுகின்ற—தேம் - பரிமளம்பொருந்திய—மலர்ப்பசுழி-பூவம்புகளது—மாரி-மழையானது—நிறை-நிறைந்த—விரி-மலர்ந்த—அலங்கல்-பூமாலையணிந்த—மார்பில்-மார்பின்கண்ணே—தினைத்தவினை - (தினைத்தலினாலே—வெயும் - தினைத்தலுண்டாகின்ற—அன்பம்-தன்னதுன்பத்தை—சிறை-மதி-சந்திரன்—விளங்கும்-விளங்காநின்ற, குறைகாலையும்-இராக்காலமும—(சிறைமதி) சந்திரன்போல—(விளங்கும்) விளங்காநின்ற, அணையும்-பாயலும்—அல்லால்-அல்லாமல்—பிறர்-மற்றொருவரும்—அறியாமல்-அ

றியாதிருக்க—உள்ளாந்து- தன்மனத்தின் கண்—அடக்கினன்-மறைத்தனன்—எ-று.(கருத்து) மன்மதபாணத்தாலுண்டான துன்பத்தை நளமகாராஜன் பிறர்அறியாமலடக்கினனென்பதாம். (௰௭)

தண்கொடிமெலிந்துமையைத் தனிக்குடைநிழற்றுமைம்பொற்
கிளையொளிப்பூணன்வீமன் பாவையைக்கேட்டல்செய்யா
வளிசெயவுயிரோயுங்கொடி யறத்திரையறவிட்டானு
மின்னிலன்வெண்ணிலாமண் பூண்டவிர்ப்பார்கொல்லோ

(இ-ள்) வையம்-பூமிக்கு—தனி-ஒப்பற்ற—குடை-குடையினாலே—நிழற்றும்-நிழலைத்தருகின்ற—ஐம்பொன்-பசும்பொன்னாலாகிய—கிளர்-விளங்காநின்ற—ஒளி-ஒளியையுடைய—பூணன்-ஆபரணத்தையுடையவரசன்—தண்கொடி-உள்ளத்தளர்ச்சியால்—மெலிந்து-மெலிந்து—வீமன்-வீமராஜனுடைய—பாவையை-புத்திரியாகிய தமயந்தியை, அறிவெனாதுகுவென்று, கேட்டல்செய்யான்—அவனையாசிதிலன்—இனிவெனி-(ஏற்ப)இசைச்சியன்று—வெண்ணிலா-விலாநத்து—மாணம்-மானமாகிய(பூண்)—பூண்டவர்-தரித்தவர், உயிரொழிவினையும்—உன்னை பின்னுள்ளதாகிய—அறத்திரை—தருமத்தையும்—அற-பற்றற—விட்டாலும்-கைவிட்டாலும்—இரப்பார்கொல்-இரப்பாரோ இரவார்—எ-று.(கருத்து) மானமுள்ளவர் இரவார்போல நளமகாராஜன் வீமராஜன்மகளைக் கேளானென்பதாம். (௰௮)

திறங்கிளர்ச்சமைதந்தேதாளமெட்டுயிர்ப்பெறியுந்தோறும்
பிறங்குகல்சிறிதுமின்றிக்கெறுக்குமென்றாக்குமெப்பட்டான்
மறங்கிளர்வேறகண்மாதிறுமுலெளிகயத்தநெறி
கறங்கிலைக்கழலவனறுட்குளைப்பதுகாககமாட்டான்

(இ-ள்) திறம்-காத்திரத்தாலே—கிளர்-விளங்காநின்ற—சுவாசம்-நாசிகாபுகம்போலும்—தோளான்-தோள்களையுடைய அரசனானவன்—கெட்டுயிர்ப்பு-பெருமூச்சை—எறியுந்தோறும்-விடும்போதெல்லாம்—பிறங்குதல்-(அவற்றினகாரணமாகியகாமம்) வெளிப்படுதல்—சிறிதாயினும்—இன்றி-இல்லாமல்—வெறுமை-வெறுமை—தாக்கால்—மறைக்கும்-(பிறருக்கு அதனை)மறைப்பான், மறம்-வீரத்தன்மையினால்—கிளர்-விளங்காநின்ற—வேல்-வேல்போலும்—கண்-கண்களையுடைய—மாதின்-தமயந்தியினது, உருவெளி-(பிராந்தியால்)வெளியிலேதோன்றுகிறவுருவத்திற்கு—வயத்தனாகி-வசப்பட்டவனாகி—நெறிகாறு-வழிதோறும்—கெருக்கு-மனமாது—உழை-கழல—அன்றோடு—அப்பொய்யாக்கோன்றுகிறதையுந்திக்கு—வெட்பால்-ஆசையால்—உரைப்பது-சொல்லுதலைத்தவிர்ந்து, காக்கமாட்டான்-மறைக்கமாட்டான்—எ-று.(கருத்து) பிறரறியாமல் காமத்தை மறைக்கும் நளமகாராஜன் உருவெளித்தோற்றத்தையுந்தியோடு ஏப்பசுவனத மறைக்கமாட்டான். (௰௯)

* பிரமிதாதம் (௫௯-ம்பாடல்) விசோழியம்(௰௭)-ம் உ-பாடல் வீரபுத்திரசி-னையும்-என்றறிக.



பொறிவழியுள்ளம்போகாப்புரவலன்காமநோயை
மறைசெயமறையாதாகமம்மரினுளுட்கொள்ளா
வறைகழலவனிவேந்தர்நெருங்குபேரவையினீங்கி
நறைகமழ்சோலைசெல்வானுளத்தினியைதல்செய்தான்

(இ-ள்) பொறி-ஐம்பொறிகளது—வழி-வழியினாலே—உள்ளம்-மனத்தை—போகா-செலுத்தாத—புரவலன்-அரசனானவன்—காமநோயை-காமவியாதியை—மறைசெய்-வேறுகாரணங்களால் மறைக்க—மம்மரின்-உன்மத்தத்தினாலே—மறையாதாக-வெளிப்பட—காண்-காணத்தகாத—உட்கொள்ளா-உள்ளேகொண்டு—அறை-ஒலிக்கின்ற—கழல்-வீரகழலையுடைய—அவனி-பூமியிலுள்ள—வேந்தர்-அரசர்களானவர்கள்—நெருங்கு-நெருங்கப்பெற்றிருக்கின்ற—பேரவையின்-பெரியசபையினின்றும்—நீங்கி-நீங்கி—நறை-தேனானது—கமழ்-மணக்கப்பெற்ற—சோலைசெல்வான்-சோலைக்குப்போகும்படியாக—உளத்தின்-மனத்தின்கண்—இயைதல்செய்தான்-அவன்விரும்பினான்—எ-று.(கருத்து) நளமகாராஜன் காமத்தை மறைக்க அதுகாமம் வெளிப்பட வெட்கங்கொண்டு சபையைவிட்டுச் சோலைக்குப்போக விரும்பினன்-எ-ம். (௨௰)

கொட்புறவுலவுந்தேனுஞ் சுரும்புந்தாதுகளின்குப்பை
அட்டமாரநுக்கவென்னு நாவலர்மனத்தின்கூட்டம்
கட்புலன்கதுவல்செல்லாக் கடிப்பிணைக்கற்பானாலை
வெட்புறப்பிடித்தல்போலப் பிறங்குமாக்கொண்டலென்றான்.

(இ-ள்) கொட்பு-சுழற்சிபொருந்த—உலவும்-உலாவுகின்ற—தேனும்—சஞ்சரிக்கின்றதேனும்; சுரும்பு-சுரும்புகளினின்றும்—அடை-கால்களையுடையனவாகிய—தாதுகளின்-புழுதியினது—குப்பை-கூட்டமானது, கட்புலன்-கண்ணறிவிற்கு—கதுவல்செல்லா-பற்றுதல்கூடாத—கடிப்பிணை-தோடுகளை—கற்பான்-கற்கும்பொருட்டு—காலை-கால்களை—வெட்புற-ஆசைமிக—பிடித்தல்-பிடித்தலையுடைய—நட்பமார்-நண்பரைப்போன்ற—அநுக்கவென்னும்-அநுக்கவென்கிற—நாவலரும்-சொல்லைக் கூட்டாத—மனத்தின்-மனங்களது—கூட்டம்-கூட்டத்தைப்போல—ஒத்துத்தோன்றிநிற்க—பிறங்கு-விளங்குகின்ற—மா-குதிரையை—கொண்டலின்-கொண்டுவாருங்கள்—என்றான்-என்றுசொன்னான்(அரசன்)—எ-று.(கருக்கசம்பிரகருத்திரம்)மனம் அநுவென்றதற்குவிதி-இன்பமுந்தியபன்புறத்ததுஉன், கருவியாம்பொறி மனம்ஓடுதோறிற்றே நின்றி, மனமயானுவென்டவிறப்பவா, மனுவாயிற்று எனமனுநூற் புலவர். (கருத்து) நளன் குதிரையைக்கொண்டுவாவென்றானென்பதாம். (௨௧)

பண்ணைக்குஞ்சமந்தலைப்போர்தேரிவிற்பரிக்குமன்னர்
மன்னனைப்பரிப்பல்யானை வருகதேர்விரைதன்னை
என்னனோதீர்தாங்குமாதென நேழுபரியினோக்கிக்கன்ன
மின்னிழுளிகிக்குவெண்புகழ் கூட்டமார்கொண்டோர்

(இ-ள்) பன்னகம்-ஆதிசேடனுலே—சுமக்க-(ஆயிரந்தலைகளாலே) சுமக்கப்படுகின்ற—வைப்பு - பூமியை—ஓர் கோளினில்-(தனது) ஒரு தோளினுலே—பரிக்கும்-தாங்குகின்ற—மன்னர்மன்னனை - அரசர்க்கரசனை—யானே-நான் தனியாக—பரிப்பல்-சுமக்கவல்லேனை—வரு -வருகின்ற—கதிர்-கிரணங்களையுடைய—இரவி தன்னை,சூரியனை—தீர் (பலவாகிய) தீங்கள்—தீர்க்குமறு-தாங்குஞ்செய்யகை—என்னை - என்தன்மைத்து—என்று-என்று பழித்து; எழுபரிநை- (அச்சூரியனதுதேரிலுடைய) ஏழு குதிரைகளைப் (பார்த்து), நக்கென்ன - சிரித்தல்போல—வெண்பல்-வெள்ளைப்பற்களது—மின்-விளங்காநின்ற—ஒளி-ஒளியை—விரிக்கும்-பரப்புகின்ற—கூந்தல்-புறமயிரையுடைய—மா -குதிரையின்மேல்—மேற்கொண்டான்-அரசனேறினன்—எ-று.(கருத்து) நளமகாராஜன் அக்குதிரையின்மேலேறினனென்பதாம். (உ௨)

கொய்யுளைப்பரியிற்செல்லுங்குரிசில்வாண்முகத்திற்செவ்விச்
செய்யபங்கயமென்றெண்ணித் தெரிவையர்முகத்துலாய
வையரிபரந்தமைக்க ணளியினந்தொடர்ந்துவீழ
மையலங்களிற்றுவேந்தர் மலரடிபரவச்சென்றான்

(இ-ள்) கொய்-கொய்யப்பட்ட—உளை -கழுத்துமயிரையுடைய—பரியில்-குதிரையில்—செலலும்-போகாநின்ற—குரிசில் - அரசனது, வாள்-காந்திபொருந்திய—முகத்தில்-முகத்தினில்—செவ்வி- பருவமுள்ள—செய்யபங்கயமென்று-செந்தாமரைப்பூவென்று,எண்ணி -(அதனை) நினைத்து—தெரிவையர் - மங்கையருடைய—முகத்து - முகங்களிலே—உலாய-உலாவுகின்ற—ஐயரி-திஞ்சவரிகள்—பரந்த -பரவப்பெற்ற—மை-அஞ்சனத்தையுடைய—கண்-கண்களாகிய—அளி -வண்டுகளது—இனம்-கூட்டமானது—தொடர்ந்து-சென்று—வீழ -விழாநிற்கவும்—மையலங்களிற்று-மதயானைபோலும்—வேந்தர்- அரசர்களின்—மலர்-தாமரைமலர்போலும்—அடி - பாதங்களை—பரவ-துதிசெய்யாநிற்கவும்—சென்றான்-(அரசன்) போயினன்—எ-று. (கருத்து) நளமகாராஜன் அரசர்கள்வணங்கச்சோலையிற்சென்றானென்பதாம ()

கழிகொள்வாம்பரியிழிந்து துன்னலர்மௌலிதேய்க்குங்
கழல்களிற்கழல்கள்சேர்த்தகாட்சிமுன்வெருவித்தோற்றத்
தழனிறத்தளிருஞ்செய்யதாமரைமலருமல்கி
விழைவுறுவனமென்றெண்ணி விசித்தபொற்கவசம்போன்றே

(இ-ள்) கழி-கழியை—கொள்-கொண்ட,வாம்-தாவாநின்ற—பரி-குதிரையிலிருந்து—இழிந்து-இறங்கி—துன்னலர்-பகைவரது—மௌலி-மகுடத்தை—தேய்க்கும் - தேய்க்கின்ற—கழல்களில் -அடிகளிலே—சேர்த்த-தொடுக்கப்பட்ட—கழல்கள்-செருப்புகளானவை—காட்சி—காண்கைக்கு—முன்-முன்னே—வெருவி-அஞ்சி—தோற்ற-தோற்றுப்போன—தழல்-தீயினது—நிறம்-நிறத்தையுடைய—தளிரும்-தளிர்களும்—செய்யதாமரைமலரும்-செந்தாமரைமலர்களும்,மல்கி- பெருக்கமடைந்து, விழைவுறு-(அவற்றுலே தடுக்கப்படாமையாக)விரும்பப்பட்ட,வ



னமென்று—பொழிலென்று-(நினைந்து)—எண்ணி-ஆலோசித்து—விசித்த-(அவ்வடிகளாற்)போர்த்துக்கொள்ளப்பட்ட—பொன்னைப்போன்ற—கவசம்-கவசங்களை—போன்ற-ஒத்திருந்தன—எ-று.(கருத்து) கால்களிலணிந்தசெருப்புகள்கவசங்களையொத்திருந்தனவென்பதாம். ()

வயிரியர்பாடற்றீந்தேன்செவிபுலத்தினிதுமாந்திக்
கயிரவமனையவாயார்கவரிகாலசைப்பக்காமப்
பயிரெனப்படருமாதர்வெள்ளடைப்பாகுநல்கச்
செயிருறுவனங்காப்பாளர்செறிவளங்காட்டக்கண்டான்

(இ-ள்) வயிரியர்-பாடகரது—பாடல்-பாடலாகிய—தீந்தேன்-மதுரத்தேனை—செவிப்புலத்து-செவியறிவாகிய (வாயிலுலே)—இனிது-இனிதாக—மாந்தி-குடித்து—கயிரவமனைய-செவ்வல்லிமலர்போலும—வாயார்-வாயையுடையமாதர்கள்—கவரி-சாமரத்திலுலே—கால் - வாயுவை—அசைப்ப-எழுப்பவும்—காமப்பயிரென- மன்மதனதுபயிர்போல—படரும்-உடன்செல்கின்ற—மாதர் - மாதரானவர்—வெள்ளடை-வெற்றிலைச்சுருளையும்—பாக்கும் - பாக்குப்பிளவையும்—நல்க-கொடுக்கவும்—செயிர் உறு-குற்றமற்ற—வனம்-வனத்தை—காப்பாளர்-காப்பவர்—செ-செறிந்திய—வளம்-சோலைவளத்தை—காட்ட-காண்பிக்க—கண்டான்-(அரசன)பார்த்தான்—எ-று. (கருத்து) காவலாளர்வனவளப்பத்தைக்காட்டநளன்கண்டானென்பதாம். (உ௩)

கோங்கிளமுலைகடாங்கிக்கொடியிடைதுடங்கக்கூவு
மாங்குயிற்கிளவிதன்னுல்வருகெனமுகமன்கூறித்
தேங்கமழ்வனமான்புன்னைப்பூம்பொரிதூவிசெவ்வி
தாங்குமென்றளிர்க்கைதன்னுற்கனிதரத்தகவிற்கண்டான்

(இ-ள்)தேம்-பரிமளமானது—கமழ்-(தன்கண்) மணக்கின்ற—வனமான்-அவ்வனமாகிய மங்கையானவள்,கோங்கு-கோங்கரும்புகளாகிய, இளமுலைகள்-இளமைபொருந்தியமுலைகளை—தாங்கி-சுமந்து—கொடி-பூங்கொடியாகிய—இடை - இடையானது—துடங்க- அசைய—கூவும்-கூவுகின்ற—மா-மாமரத்திலிருக்கின்ற—குயில்-கோகிலத்தினது—கிளவிதன்னுல் -இசையினுலே—வருகென-(அரசனே) வாவென்று—முகமன்-இன்சொல்லை—கூறி-சொல்லி—புன்னை - புன்னையினுடைய—பூ-மலர்களாகிய—பொரி-பொரிகளை—தூவி - இறைத்து—செவ்வி-அழகை—தாங்கு-தாங்கிய—மென்றளிர் - மெல்லியதளிராகிய—கைதன்னுல்-கையினுலே—கனி-பழத்தை—தர -(தனக்குக்) கொடுக்க—தகவிற்-தகுதியாக—கண்டான்-அரசன்பார்த்தான்—எ-று.(கருத்து) வனமென்னும் பெண்கனிகொடுக்க நளன்கண்டானென்பதாம். (உ௪)

அரும்பிளநகையிற்றோன்றமுறுவலர்விற்றோன்றச்
சுரும்பியிர்முல்லைவீசுசெந்தமிழ்நுகருநிதலம்
விரும்பினர்ப்புணர்ந்தமாதர் மெய்யெழில்காட்டக்கண்டு
பொருந்தலர்வணங்குஞ்சேவலாந்தகைமுகிழ்த்த

(இ-ள்) அரும்பு-அரும்புகளி(லுள்ள), இளகனைப்பின்-சிறுநகைபோல—தோன்ற-விளக்கவும்—அழிஞ்ற-சிதறிய தேன்(துளிகள்), வெயர்வின்-வெயர்வுபோல—தோன்ற-தோன்றவும்—வீசும்-எறிகின்ற—தென்றலால்-தென்காற்றால்—துவளும்-அசைகின்ற—தோற்றம்-தோற்றத்தையுடைய—சுரும்பு-வண்டுகள்—நிமிர்-ஒலிக்கப்பெற்ற—முல்லை-முல்லைக்கொடியானது—விரும்பினர்-விரும்பிய தூடவரை—புணர்ந்த-கூடிய—மாதர்-மாதருடைய—மெய்-வடிவங்களது—எழில்-அழகை—காட்ட-காண்பிக்க—கண்டு-(அதனைப்பார்த்து) பொருந்தலர்பகைவரானவர்—வணங்கும்-தொழப்பெறுகின்ற—வேலாற்கு-வேலையுடையதுர்தன்கண்—அச்சமும்-அருந்துதலும்—மகிழும்-மகிழ்தலும்—பூத்த-உண்டாயின—எ-று. (கருத்து) முல்லைக்கொடியானது புணர்ந்தமாதரைப்போலுங்குறிகளைக்காட்டுதலால் அச்சமும் மகிழ்வும் உண்டாயின. ()

விரும்பியகணவர்கண்டார்மெய்புளகுற்றமென்ன
வரும்புகண்டகத்தலாகுமர்தனைப்பருவத்தன்றித்
தரும்புகையிடையிற்றோன்றுங்கனிதயபந்திகொம்மைக்
குரும்பையைநிகர்ப்பப்பொன்னங்குடத்தவமுயல்வபோன்ற

(இ-ள்) விரும்பிய-(தம்மால்) விரும்பப்பட்ட—கணவர்-நாயகரை—கண்டார்-கண்டமகளிருடைய—புளகுற்ற-மயிர்கூச்சுற்ற—மெய்யென்ன-உடம்புகள்போல—அரும்பு-அரும்பிய—கண்டகத்தலாகும்—முள்ளுகளையுடையனவாகிய, மாதளை-மாதளைமரங்களில்; பருவத்தன்றி-(பழுத்தற்குரிய) காலமல்லாதகாலத்திலே, தரும்-(பழுக்கத்) தரப்படுகின்ற—புகை-புகையினது—இடையில்-நடுவிலே, தோன்றும்-தோன்றுகின்ற—கனி-கனிகளானவை—தயத்தி-தயந்தியையுடைய—கொம்மை-முலைகளாகிய—குரும்பை-குரும்பைகளை—நிகர்ப்ப-ஒப்புடைய தவம்-தவத்தை—முயல்வ-செய்கின்றனவாகிய—பொன்குடம்-பொற்குடங்களில்—போன்ற-ஒக்குந்தோன்றின (அரசனுக்கு)—எ-று. (கருத்து) மாதளங்கனிகளானவை தயத்திமுலைகளை ஒப்புறத்தவம்பண்ணும் பொற்குடங்களையொத்திருந்தன என்பதாம். (௨௮)

தன்னுறுக்கொழிக்குஞ்செய்யசண்பகங்களைகள்வெளி
வன்னல்பாசறைவிளக்கம்போன்றனவைவமேல்வண்டு
நன்னியதாமம்போன்றனசயுகர்துயரமேவிட்
டென்னைநம்பகழிபோன்றுங்கனிதனிவிருந்தமாதோ

(இ-ள்) தன்-குளிர்ச்சிபொருந்திய—நறு-தேனை—கொழிக்கும்-சொரிகின்ற—செய்ய-சிவப்பாகிய—சண்பகம்-சண்பகத்திருவுடைய, களைகள்-அரும்புகளானவை—வெளில்-வசந்தகாலந்திறந்திரிய—தன்னல்-நல்லவனது—பாசறை-(சோலையாகிய) படைவீட்டிலுள்ளவைக்கப்பட்ட—விளக்கம்-தீபங்களை—போன்ற-ஒத்திருந்தன—அவைமேல் அவ்வரும்புகளின்மேல்—வண்டு-(வீழுகின்ற) வண்டுகளானவை, நன்னிய-பொருந்திய—தாமம்-புகையை—போன்றும்-ஒத்தும்—நகை



புணர்-காமிகள்—துயர-துன்புற—வேள்-மன்மதனால்—சுட்டு-சம்பாதிக்கப்பட்ட—எண்ணரும்-எண்ணுதற்கரிய—பகழி-பாணங்களை—போன்றும்-ஒத்தும்—தனித்தனி-வெவ்வேறாக—இருந்த-இருந்தன—(அரசனுக்கு)—எ-று. (கருத்து) சண்பகத்தரும்புகளானவை தீபங்களை ஒத்திருந்தன அவ்வரும்புகளின்மேல் வீழும்வண்டுகளானவை தீபத்தினின்றெழும்புகையையொத்திருந்தனவன்றியும் மன்மதபாணங்களையுமொத்திருந்தன-எ-ம். (௨௯)

பூங்கழைக்குமரனைவாரம்புலம்புகொண்டினைவார்துன்ப
மாங்குயிலுரைப்பமுகமணிமுரல்வாசத்
தேங்கமழ்பொழில்வாய்விட்டுக்கேட்பதுசிலைறுங்கூறு
மாங்கதறக்கன்றிலோதையதிசயித்தாற்றல்போலும்.

(இ-ள்) பூ-அழகிய—கழை-கருப்புவில்லையுடைய—குமரன்-மன்மதனது—வரவால்-அம்பினாலே—புலம்பு-துன்பத்தை—கொண்டு-அடைந்து—இனைவார்-இளைக்கின்றவராது—துன்பம்-துன்பத்தை—மா-மாவிலுள்ள—குயில்-குயில்கள்—உரைப்ப-சொல்லாநிற்க—வரிமுரல்-இசைபாடுவனவாகிய—முகசும்-மொய்க்கின்ற—அளி-வண்டுகளுக்கு—வாசம்-இருப்பிடமாகிய—தேம்-தேனினால்—கமழ்-மணக்கின்ற—பொழில்-சோலையானது—வாய்விட்டு-உளங்கொடுத்துக்கேட்பது இசையும்-கேட்பதுபோலுமிருந்தன—கூறும்-சொல்லப்படுகின்ற—அக்கு-அவ்விடத்திலே—அறற்கு-அச்செய்திக்கு—அன்றில்-அன்றிற்பறவைகளுடைய—ஓதை-ஒலிகளானவை—அதிசயித்து-ஆச்சரியப்பட்டு—ஆற்றல்போலும்-கூவுதல்போலுமிருந்தன (அரசனுக்கு)—எ-று; (கருத்து) காமிகளுடைய துன்பத்தைக்குயில்கள் சொல்லச்சோலையானது வாய்திறந்துசோலைகேட்பதுபோலுமிருந்தன. அன்றில்களின் சத்தங்கள் அதிசயித்தார்ப்பனபோலுமிருந்தன என்பதாம். (௩௰)

வெண்மதிக்கவிகைவேந்தன் விழாவையர்வனமான்பிடித்தாட்
டண்மலர்க்காந்தள்கைபறித்தளித்தைதயபோலு
மெண்மலர்பொருந்தேர்த்தமாதளிர்விரலைத்துன்றுமா
தன்னுகர்மன்னடிறாப்புற்றுகர்ச்சினவல்போலும

(இ-ள்) வெண்மதி-வெள்ளியசந்திரனே—கவிகை-குடையாகவுடைய—வேந்தன்-மன்மதனது—விழா-உற்சவத்தை—ஆயர்-செய்தற்கிடமாகிய—வனமான்-வனமாகிய மங்கைக்கு—காந்தள்-காந்தள்மலரானவை—பைந்தாள்-பசியதாளையுடைய—தண்மலர்-குளிர்ச்சியுள்ள கைகளாகிய—அங்கை-அழகியகைகளை—பறித்து-நீட்டி—அச்செய்திக்கேனென்றுதந்திதனது—அளி-வண்டுகள் இருப்பதுபோலும்-இதழ்ந்திருப்பதுபோலும்—எண்மலர்-ஒளியுள்ள மலர்களால்—பொருந்தும்-நிறைந்திருக்கின்ற—தேமா-தேமாமரங்களானவை—தளிர்-தளிரினால்—விரல்-விரலை—அசைத்து-ஆட்டி—உன்றுதும்-உன்றியொன்றுடுகின்ற—கள்-தேனை—நுகர்-உண்கின்ற—வண்டுகள்-வண்டுகளுடைய—பாடல்-ஒலியினாலே—காமுகர்-காமிகளை, சினவல்போலும்-(உங்களைக்கு

செய்து) கொளிக்கின்றனபோலும் (அரசனுக்கு)—எ-று. (கருத்து) காத்தன்களானவைவண்மெல்லும் பெண்ணைமலரென்னுங்காக்களாலேஅருகுபில்லவர் சொர்ணக்கொளாதே என்றுகயிற்றுகளிருதையிலிறக்கன போதுமிருக்கனமாமரங்களானவை தளிரெனனும்விரலாலசைத்துவண்டுகளாம்பால்கள் ருகமைக்கொவிப்பனபோலுமிருந்தனஎன்பதாம்.

> பொன்னிறழ்ச்சண்பகத்திற்புரிமுறுக்கவிழத்தாங்கி
> யின்னறாத்துளியிறைமகரத்தமிழைப்பழுதிக்
> தெள்ளிலிக்களிதொவண்டுசேர்க்கமைகாமவேக்கோய்
> துன்னினார்க்கின்னல்காட்டுந்தூமகேதுவினைப்போன்ற

(இ-ள்) புரி-கட்டினது—முறுக்கு-முறுக்கானது—அவிழ-விரிய—தாங்கி-ஆடி—இன்-இனிதாகிய—நறா-தேனினது—துளியிசைந்து-துளியுடனே—மகரந்தம்-மகரந்தப்பொடியை—யிறைப்ப-உதிர்க்க—ஊதி-(வாயினால்) ஊதி—தெள்ளிடம்-இசைபாடுகின்ற—களிகொள்-களிப்பைக்கொண்ட—வண்டு-வண்டுகளானவை—பொன்-பொன்னிறம் பொருந்திய—இதழ்-இதழ்களையுடைய—சண்பகத்தில்-சண்பகப்பூக்களிலே—சேர்த்தமை-சேர்க்கையால்—(அம்மலர்கள்)காமம்-காமமாகிய—வெங்கோய்-வெப்பநோயை—துன்னினார்க்கு-அடைந்தவர்க்கு—இன்னல்-பின்வருந்துன்பத்தை—காட்டும்-காண்பிக்கின்ற—தூமகேதுவினை-வாணமீனை, போன்ற-ஒத்துத்தோன்றின (அரசனுக்கு)—எ-று. (கருத்து) வண்டுகள்சேர்ந்த சண்பகமலர்களானவைவாணமீனை ஒத்திருந்தனவென்பதாம். (௩௨)

> குளிர்கழுஞ்சாத்தநறுங்கூவிளங்கனிமுன்னோறுவன்
> டொளிர்வனகனிகைமாதர்வரிமுலைக்குவமைசான்ற
> தளையவிழ்பாடலத்திற்கவரினர்சம்பாரி
> யுளைவுறவிருவர்மேலுமுளத்தினப்பகழிபோன்ற

(இ-ள்) முன்-முன்னிறையிலே—ஏறுண்டு-விழுக்கப்பட்ட—ஒளிர்வன-விளங்குகின்றனவாகிய—குளிர்-குளிர்ச்சிபொருந்திய—கழுஞ்சாந்தம்-கலவைச்சந்தனம்போல—நாறும்-மணக்கின்ற—கூவிளங்கனி-வில்வப்பழங்களானவை—கனிகைமாதர்-பரத்தையருடைய—(சாந்தம்) சாத்தனத்திலே—(நாறும்)-மணக்கின்ற—வரி-ரேகைக்குறிகளையுடைய, முலைக்கு-முலைகளுக்கு—உவமை-ஒப்புவமையில்—சான்ற-சிறந்த, தளையவிழ்-கட்டவிழ்த்த—பாடலத்தின்-பாதிரி மரங்களுடைய—கவர்-கவர்த்துறிய, இணர்-பூங்கொத்துகளானவை, சம்பாரி-மன்மதனாலவன்—உளைவுற-வருந்தும்படியாக—இருவர்மேலும்-நாயகனாயகிகளிருவர்மேலும்—உளத்து-கோபித்தற்கு (வைத்திருக்கப்பட்ட)—இனப்பகழி போன்ற-அம்புகட்டடம்போன்றன (அரசனுக்கு)—எ-று. (கருத்து) வில்வப்பழங்களானவைவேசைகள்முலைகளுக்கொப்பாகவிருந்தன-பாதிரிமரங்களின் பூங்கொத்துக்களானவை மன்மதபாணங்களுக்கொப்பாக விருந்தனவென்பதாம். (௩௩)



> பாசிலைமிடையிற்பூத்தபைந்துணரகத்திதூய
> மாசறுநிலவுகாலுமதியினைவிழுங்குநாளிற்
> றேசுறுகலைகளியாவுந்தின்றுதின்றுமிழுந்துத்திக்
> காசறுகடிகைச்செங்கட்கருநிறப்பாந்தள்போன்ற

(இ-ள்) பாசிலை-பச்சிலைகளையும்—இடையில்-நடுவிலே—பூத்த-மலர்ந்த—பைந்துணர்-குளிர்ச்சிபொருந்தியமலர்களையுமுடைய—அகத்தி-அகத்திமரங்களானவை—தூய-பரிசுத்தமாகிய—மாசறு-குற்றமற்ற—நிலவு-சந்திரிகையை—காலும்-வீசுகின்ற—மதியினை-சந்திரனை—விழுங்குநாளில்-உட்கொள்ளுகிற நாளிலே—தேசுறு-காந்திபொருந்திய—கலைகளியாவும்-கலைகளையெல்லாம்—தின்றுதின்று-துவ்வொருகலையாகத்தின்று—உமிழும்-உமிழ்ந்துகொண்டிருக்கின்ற—துத்தி-படப்புள்ளிகளையும்—காசறு-இரத்தினம்பொருந்திய—கடிகை-உச்சியையும்—செங்கண்-செய்யகண்களையும்—கருநிறம்-கரியநிறத்தையுமுடைய—பாந்தள்போன்ற-பாம்பாகியஇராகுபோன்றன (அரசனுக்கு)—எ-று. (கருத்து) அகத்திமரங்களானவைகரும்பாம்பிற்கொப்பாயிருந்தன. (௩௪)

கலிவிருத்தம்.

> விண்புகுவியன்சினைத்தருக்கண்மேவிய
> தண்களிப்பொறையிறுந்தலைவணங்கின
> தெண்கடற்கலைபுனைசெல்வமாநிலப்
> பெண்கொடிதாடொழுதெழுமற்றிபோன்றவே

(இ-ள்) மேவிய-விரும்பப்பட்ட—தண்-தண்ணிய—களி-பழங்களது—பொறையிறுல்-பாரத்தினாலே—தலை-தலைகள்—வணங்கினவாகிய—விண்-ஆகாயத்தில்—புகு-நுழைந்த—வியன்-விசாலமாகிய—சினை-கிளைகளையுடைய—தருக்கள்-மரங்களானவை—தெண்-தெள்ளிய—கடல்-கடலாகிய—கலை-ஆடையை—புனை-உடுத்த—செல்வம்-செல்வத்தையுடைய—மா-பெரிய—நிலப்பெண்கொடி-பூமிதேவியினது—தாள்-அடியை—தொழும்-வணங்குகின்ற—பெற்றி போன்ற-தன்மையுடையனபோன்ற (அரசனுக்கு)—எ-று. (கருத்து) மரங்களானவைபூமிதேவியினடியைவணங்குகின்றனபோலுமிருந்தனவென்பதாம். (௩௫)

> அணிமுரலணிமலரசோகம்பூத்தன
> தெளிவருகாரணப்பெயரின்செவ்வியா
> லெளிவருகாமுகர்க்கிரங்கிவேணறுந்
> தளிர்மறையழற்கணைதரித்தபோன்றவே

(இ-ள்) பூத்தன-மலர்ந்தனவாகிய—அளி-வண்டுகளானவை—முரல்-ஒலிக்கப்பெற்ற—அணி-அழகுபொருந்திய—மலர்-மலர்களையுடைய—அசோகம்-அசோகமரங்களானவை—தெளிவரு-தெளியவந்த—காரணப்பெயரின்-காரணப்பெயரினது—செவ்வியால்-அழகினு

லே— எளி-எளிமையோடு—வரு-(தம்மிடத்திலே)வருகின்ற—காமுக ர்க்கு-காமிகளுக்கு—இரங்கி-உள்ளிரங்கி—வேள்-மன்மதனது—அழ ற்கணை-நெருப்பம்புகளை—நறுந்தளிர்-நல்லதளிர்களிலே—மறை-மறை ந்து—தரித்தபோன்ற-தரித்திருக்கின்றவைபோன்ற(அரசனுக்கு)எ-று (கருத்து)அசோகமரங்களானவை அக்கினிக்கணைகளைத்தரித்தல் போ லுமிருக்கின்றன என்பதாம் (௩௬)

* அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

மணங்கமழ்முடவெண்டாழைமலரின்வார்நறவமாந்திக்
கணங்கொள்வண்டினமுந்தேனுங்களித்திடைவதிந்ததோற்ற
மிணங்கரவசைத்தோனீத்தவருமபழிசுமந்ததென்ன
நிணங்கமழ்வேலான்கண்டுநெஞ்சுறவிழித்துச்சொல்வான்

(இ-ள்)நிணம்-(பகைவரது)கொழுப்பானது—கமழ்-நாறுதற்கிட மாகிய—வேலான்-வேலையுடையவன்—முடம்-முடமாகிய—தாழை-தாழையினது—மணங்கமழ்-மணக்கின்ற—வெள்-வெண்மை பொருந் திய—மலரின்-பூவின்—வார்-ஒழுகாநின்ற—நறவம்-தேனை—மாந்தி-குடித்து—கணம்-கூட்டத்தை—கொள்-கொண்ட—வண்டு-கருவண் டுகளின்—இனமும்-சாதிகளும்—தேனும்-தேனவண்டுகளும்—களி த்து-மகிழ்ந்து—இடை-(அத)னடுவில்—வதிந்த-தங்கிய—தோற்றம்-தோற்றத்தை—கண்டு-பார்த்து—அணங்கு-அரவசைத்தோன்-பரமசிவ னால்—நீத்த-தள்ளிவிடப்பட்ட—அரும்பழி-நீக்கக்கூடாத பழியை—சுமந்ததென்ன-(இம்மலர்)சுமந்ததென்று—நெஞ்சுற-நினைப்புண்டாக—இழித்து-இகழ்ந்து—சொல்வான்-கூறுவான்—எ-று. கேட்குநபோ லவுங்கிளக்குநபோலவு;மியங்குநபோலவுமியற்றுநபோலவு, மஃறிணை மருங்கினுமறையப்படுமே இவ்விதியால்தாழையொடு கூறினன் (கருத் து)ளமகாராஜன்தாழைமலரைப்பார்த்துஇகழ்ந்துசொல்லுவானெ-ம.

நாகிளவரிவண்டுண்டு நறவுகொப்பளிக்குங்கைதாய்
பாகுறுகழைவேளெய்யிற் பறிப்பரிதாயுள்ளாவி
போகமெயதளர்ந்தோர்நெஞ்சமீர்ந்திடுமுள்ளம்மென்றே
வாகைவின்மதனைச்செற்றோன்வனைந்திடாதிகழ்ந்தவாறே

(இ-ள்) நாகிள-இளமைபொருந்திய—வரி-இசைபாடுகின்ற—வண்டு-வண்டுகளானவை—நறவு-தேனை—உண்டு-குடித்து—கொப்பளிக்கும்-உமிழ்தற்கிடமான—கைதாய்-தாழம்பூவே—பாகு-சாறுனது—உறு-பொருந்திய—கழை-கருப்புவில்லினால்—வேள்-மன்மதனை வன்—எய்யின்-எய்தால்—பறிப்பரிதாய்-பிடுங்கப்படாததாகி—உள் -உள்ளிருந்து—ஆவி-உயிரானது—ஏக-நீங்க—மெய்-உடம்பு—தளர் ந்தோர்-தளர்ந்தவிரகிகளுடைய—நெஞ்சம்-மனத்தை—ஈர்ந்திடும்-அறுக்கின்ற—முள்ளம்மென்றே-முள்ளம்மென்று (உன்கொடுமை யைநினைத்தே)வாகை-வெற்றிபொருந்திய—வில்-வில்லையுடை—

* தொல்காப்பியம்,மூவாறெழுத்தே கழிநெடிற்கள வேயீரொழுத்து மிகுதலுமியல்பெனமொழிப * நன்னூல்



ம்மதனை-மன்மதனை—செற்றோன்-வென்றபரமசிவன்—அணைந்திடாது-சூடாமல்—இகழ்ந்த-(என்னை)யிகழ்ந்ததற்கு—ஆறு-காரணமாம்—எ-று.(கருத்து) தாழம்பூவே நீமுள்ளம்மென்றுசிவன் அணியா திருந் தானென்றுநளன்சொன்னான்-என்பதாம்.

பசியநெட்டிலையதாழை மடலெலுமீர்வாள்பற்றி
வசையறுகாமத்தச்சன் மையலாம்வளியினுரு
மசைவொடுதளர்ந்துகல்வியருந்தழையுகுத்துசிற்கு
நசையுகர்நெஞ்சதாரு நடுவுறப்போழு மாதோ

(இ-ள்)பசிய-பசுமைபொருந்திய—நெடு-நெடிய—இலைய-இலைக ளையுடையனவாகிய—தாழை-தாழம்பூவே—மடலெனும் (உன்) னிதழென்கிற—ஈர்வாள்-பல்வாள்—பற்றி-பிடித்து—வசையறு-பழிபற்ற—காமத்தச்சன்-மன்மதனாகியதச்சனானவன்—மையலாம்-மயக்கமாகிய—வளியின்-காற்றினாலே—நாளும்-பலநாளும்—அசைவொ டு-அசைதலுடனே—தளர்ந்து-வாடி, கல்வி-கல்வியறிவாகிய—அருந் தழை-அரியதழையை—உகுத்து-உதிர்த்து—நிற்கும்-நிற்கின்ற—ந சையுகர்-காமிகளுடைய—நெஞ்சம்-மனமாகிய—தாரு-உலர்ந்தமரத் தை—நடு-நடுவிலே—உற-பொருந்த—போழும்-பிளப்பான்—எ-று. (கருத்து) தாழம்பூவேஉன்னிதழென்னும்வாளாலே மன்மதனாகிய தச் சன்காமிகளுடையநெஞ்சமாகிய மரத்தை யறுப்பான் என்று நளன் சொன்னான்-எ-ம். (௩௭)

விழையுனராவிபோழும் வேனிலானிரதமூறும்
கழைகுழைத்தளிகாணேற்றிக் கணைமலர்தொடுக்கிற்றீங்தேன்
மழையிளிற்கரங்களுறும் வழுவழுத்திழுக்காவண்ணந்
தழைமடற்கைதாய்நின்பொற் றூளைகதிமிர்ந்தெய்வானல்

(இ-ள்)விழையுநர்-விரும்பினவருடைய—ஆவி-உயிரை—பொழு ம்-பிளக்கின்ற—வேனிலான்-மன்மதனானவன்—இரதம்-சாறானது—ஊறும்-ஒழுகுகின்ற—கழை-கருப்புவில்லை—குழைத்து-வளைத்து—அளிநாண்-வண்டுநாரியை—ஏற்றி-பூட்டி—கணைமலர்-பூவம்புகளை—தொடுக்கின்-எய்யும்போது—தீம்-மதுரம்பொருந்திய—தேன்-தேனி னது—மழையினில்-மழையினாலே—கரங்கள்-(தன்)கைகளானவை—நாளும்-தினந்தோறும்—வழுவழுத்து-நழுவிநழுவி—இழுக்காவண்ண ம்-தப்பிப்போகாதபடி—தழை-தழைத்த—மடல்-மடல்களையுடைய—கைதாய்-தாழம்பூவே—நின்-உனது(பொன்னிறம்பொருந்திய)—தா து-தாதுகளை—கை(அக்)கைகளிலே—திமிர்ந்து-பூசிக்கொண்டு—எய் வான்(அவன்மேற்)செலுத்துகிறான்—எ-று.(கருத்து)தாழம்பூவேமன் மதன்கருப்புவில்வளைத்துஅளிநாணேற்றிமலர்க்கணைதொடுக்கில்வழு க்காதிருக்க உன்மகரந்தங்களைத்திமிர்ந்து அக்கணையெய்கிறான் என் றுநளன்சொன்னான் என்பதாம். (௩௮)

ஞெளிசிலைவேனிலான் கைக்குருகிகோரய்ப்பிறையாயம்பின்
றளியெழில்கவர்ந்துதோன்றித் தணந்தவர்தமை பெருஞான்ற

தனிபுறமுறக்குகின்ற தொழிலினாலன்றோ நின்னை
முனிவுடனுலகில்யாரு முருக்கலொன்கின்றாரே

(இ-ள்) குனிசிலை - வளைக்கப்பட்ட வில்லையுடைய—வேளிலான் - ஐசர்ந்தகாதைத்திற்குரிய மன்மதனது—கை - கைபிடிக்கின்ற—குருதி - உதிரத்திலே—தோய் - முழுகிய—பிறைவாயம்பின் - பிறைவாயம்பினது—தனி-ஒப்பற்ற—தொழில்-அழகை—கவர்ந்து - வெவ்வகி—தோன்றி-விளங்கி—தனைத்தவர்தமை-பிரிந்தவரை—எருத்தானும் - எந்நாளிலும்—துனிபுற-துன்பத்தையடைய—முருக்குகின்ற - கொல்கின்ற—தொழிலினலன்றோ-செய்கையினாலன்றோ—நின்னை-(முருக்கம்பூவே) உன்னை—முனிவுடன்-வெறுப்புடனே—உலகில் உளகின்ற கண்ணே—யாரும்-எவரும், முருக்கலொன்கின்றார் - முருக்கலொன்று சொல்லுகின்றார்—எ-று. (கருத்து) முருக்கம்பூவே கொல்லுகின்ற தொழிலால் அல்லவோ உன்னை முருக்கலொன்கின்றார்களென்றான் நளமகாராசனென-று. ( )

கலிவிருத்தம்.

எனவிவைமொழிந்தனைத்தின்னதன்மைய
பனிமலர்க்காவினிற்பயிலுமாங்குயில்
குனிசிலைமாரனைக்கூவக்கேட்டது
மனநிலைதளர்வுறமயங்கினான்

(இ-ள்) என-என்று—இவை-இவைகளை—எடுத்து-எடுத்துச்சொல்லி—இன்னதன்மைய-இப்படிப்பட்ட தன்மையையுடைய—பனி-குளிர்ச்சிபொருந்திய—மலர் - மலர்களையுடைய—காவினில்-சோலையில்—பயிலும்-பழகியிருக்கின்ற—மா - மாவிலுள்ள—குயில்-குயில்களானவை—குனி-வளைக்கப்பட்ட—சிலை - வில்லையுடைய—மாரனை-மன்மதனை—கூவ-அழைக்க—கேட்டலும் - கேட்டவளவிலே—மனநிலை-தைரியமானது—தளர்வுற-சோர—மயங்கினான் (அரசன்) அறிவுகலங்கினான்—எ-று. (கருத்து) குயில்களானவை மன்மதனை அழைக்கக்கேட்டு மயங்கினான்-எ-ம். (௩௨)

வெங்கதிர்தென்றலிற்குளிர்க்கும்வீழ்நறுத்
தங்கியமலர்நறுந்தளிக்குண்மூழ்கியும்
பொங்குபூங்கைதைவெண்டாதுபூசியும்
திங்களிற்றோன்றலான்மகிழ்சிறந்திலான்

(இ-ள்) வெங்கதிர்-சூரியகிரணமானது—தென்றலின்-தென்றற்காற்றால்—குளிர்க்கும்-சீதளிக்கும்—மலர்-மலர்களிலே—தங்கிய - பொருந்திய—நறு-தேனையுடைய—வீழ் வீழுகின்ற—நறுந்தளிக்குள் - நல்ல துளிகளுள்—மூழ்கியும்-படிந்தும்—பொங்கு-எழும்புகின்ற—பூ - அழகிய—கைதை-தாழைமலரது, வெண்டாது - வெள்ளைப்பொடியை—பூசியும்-இயிர்க்கும்—திங்களின் - சந்திரகிரணம்போல—தோன்றலெல-காணப்படலால்—மகிழ்சிறந்திலான் - (அரசன்) களிகூர்ந்திலன்—எ-று (கருத்து) நளமகாராசனவெயிலானது நிலவைப்போலத் தோன்றலால் மகிழ்ச்சியடைந்திலர் என்பதாம். (௩௩)



அலைபொலிமுழவெழுஞ்சுரியின் * கம்பலை
குலவியசுருதியாக் குயில்கள்பாண்செய
விலவுபூந்தண்டலை யரங்கினீடிய
கலவமாமயில் களித்தாடக்கண்டனன்.

(இ-ள்) அலைபொலி - அலையினொலியாகிய—முழவு - மத்தளவோசையானது—எழ-உண்டாகவும்—அளியின் - வண்டுகளது—கம்பலை - ஒலியானது—குலவிய-கொண்டாடப்பட்ட—சுருதியா - சுருதியாகவும்—குயில்கள்-குயில்களாகிய(பாடகர்)—பாண்செய-இசைபாடவும்—விலவு - விளங்குகின்ற—பூந்தண்டலை-பூஞ்சோலையாகிய—அரங்கில் - சபையில்—நீடிய-நீண்ட—கலவம்-கலாபத்தையுடைய—மாமயில் - பெரியமயில்களாகிய(மகளிர்)—களித்து - மகிழ்ந்து—ஆட-கூத்தாட—கண்டனன்-(அரசன்)பார்த்தான்—எ-று. (கருத்து) மயில்களாட நளன் கண்டானென்பதாம். (௩௪)

சுடருமிழ்வேலினன் * சீர்த்திநாடொறு
மஞ்சொலார்பயிற்றலாலந்தண்காவினின்
மஞ்சரியிடையிடை வதிந்தபூவையும்
பைஞ்சிறைக்கிள்ளையும் பாடக்கேட்டனன்

(இ-ள்) சுடர்-சுடரை—உமிழ்-கக்குகின்ற—வேலினன்-வேலையுடைய நளராஜனானவன்—சீர்த்தி-தன்கீர்த்தியை—நாடொறும்-தினந்தோறும்—அஞ்சொலார் - அழகியசொற்களையுடைய மகளிரானவர்—பயிற்றலால்-கற்பித்தலால்—அம் - அழகிய—தண் - தண்ணிய—காவினில்-சோலையிலே—மஞ்சரி - பூங்கொத்துகளின்—இடையிடை - நடுவேநடுவே—வதிக்க-தங்கிய—பூவையும் - நாகணவாய்ப்பறவைகளும்—பைஞ்சிறை-பசியசிறகுகளையுடைய—கிள்ளையும் - கிளிகளும்—பாட-படிக்க—கேட்டனன் (அரசன்) கேட்டான்—எ-று. (கருத்து) நளமகாராஜன் தன்கீர்த்தியைப் பூவைகளும் கிளிகளும்பாடக் கேட்டான் என்பதாம். (௩௫)

தேங்கமழ்மலர்நறு வருந்திச்சீர்கெழு
தூங்கிசையளிமுரல் சுண்ணமாடிமென்
பூங்கொடிமடந்தைய ராடப்போர்வள
மாங்குயிலுரைசெய வசந்தனெய்தினன்.

(இ-ள்) தேங்கமழ்-பரிமளிக்கின்ற—மலர் - மலர்களது—நறு-தேனை—அருந்தி-உண்டு—சீர்கெழு-சிறப்புப்பொருந்திய—தூங்கிசை-நாட்டியராகத்தை—அளி-வண்டுகள்—முரல்-பாட, சுண்ணம் - பரிமளப்பொடியை—ஆடி-பூசிக்கொண்டு—மென்பூங்கொடி-மெல்லியபூங்கொடிகளாகிய—மடந்தையர்-மகளிர்—ஆட-கூத்தாட—போர்வளம்- போர்க்குரியவளத்தை—மா - மாவிலுள்ள—குயில் - குயிலாகிய(மந்திரி) உ-

* தொல்காப்பியம்(கம்பலை-சும்மை.)
* சீர்த்தி-மிகுபுகழ்.

னைசெய்-சொல்ல—வசந்தன்-தென்றலாகிய (பகைவன்) எய்கின்றான் - வந்தான்—என-று.(கருத்து) சோலையின்கண்தென்றற்காற்றுவந்ததென்பதாம்()

மிடைந்திருவிசும்பினையமரர்வெற்பினைக்
கடைந்துதன்வளமெலாங்கவர்வாரெனக்
குடைந்துவண்டியிர்பொழிலிடையிற்கொள்கட்
லடைந்தனவாவியையன்னமேறுகின்றான்

(இ-ள்) இருவிசும்பு-பெரியவிண்ணுலகத்தில்—இடைந்து-நெருங்கி—உறை-வாசஞ்செய்கின்ற—அமரர்-தேவரானவர், வெற்பினால்-மந்திரகிரியினால்—கடைந்து - (இன்னும்வந்து)கடைந்து—தன்வளமெலாம் - தன்செல்வத்தையெல்லாம்—கவர்வாரெனறு - வெளவுவாரென்றெண்ணி—குடைந்து-கின்டு—வண்டு-வண்டுகளானவை—இயிர்-ஒலிக்கப்பெறுகின்ற—பொழில்-வனத்தினது—இடையில்-நடுவிலே, அடைந்து-அடைந்ததாகிய—கொள-(அவ்வனங்களைக்)கொண்ட—கடலன - பாற்கடல்போலிகற—வாவியை - தடாகத்தை—அன்னால் - அரசன்—நோக்கினான் - பார்த்தான்-எ-று. (கருத்து) நளமகாராஜன் தடாகத்தைக்கண்டானென்பதாம். (௨௭)

ஆவியந்திறைபகந்துயிறுநாண்மலர்
வாவியுட்டாமரைவனையங்கோன்றுவ
பூவலர்கற்பகப்பொதும்பர்நாட்டுற
கோவிளங்களிற்றினக்கோடுபோன்றவே

(இ-ள்) ஆவி-இறைகையும்—அந்திறை-அழகியசிறையையுமுடைய—அனம்-அன்னங்களானவை—துயிறும - ஆகுதற்கிடமாகிய—நாள்-அன்றலர்ந்த—மலர்-மலர்களையுடைய—வாவியுள் - தடாகத்தினுள்ளே—தோன்றுவ-தோன்றுகின்றவையாகிய—தாமரை - தாமரைகளுடைய—வளையம்-தளிர்சுருள்களானவை—பூ - அழகிய—அலர்-மலரையுடைய—கற்பகப்பொதும்பர்-கற்பகச்சோலையையுடைய—நாட்டு-நாட்டின்கண்—உறை-வாசஞ்செய்கின்ற—கோ - அரசனாகியவிந்திரனுடைய—இளங்களிற்று(அதினுள்ளிருக்கிற)இளமைபொருந்தியயானைக்கனது—இனம்-இனத்திறனுடைய—வெண்கோடுபோன்ற-வெள்ளைக்கொம்புகள்போன்றிருந்தன—எ-று.(கருத்து) தடாகத்துள்தோன்றியதாமரைவளையங்களானவை தேவலோகத்தின்யானைக்கொம்புகளை ஒத்திருந்தனவென்பதாம். (௨அ)

வந்தலோடவ்வுழியிருந்தவெண்ணனும்
கூந்தன்மாசிறுநடத்திடைக்குலாவுவ
காந்தளங்காந்தமகளிர்காமுறும்
வேந்தனற்புரவியின்விள்ளம்போன்றவே

(இ-ள்) வந்தலோடு-அரசனோடு—அவ்வுழி - அவ்விடத்தே—இருந்த-அடைந்த—எண்ணனும்-எண்ணில்லாத—கூந்தல் - மயிர்செருந்தியமா-குதிரைகளுடைய — தடத்திடை - தடாகத்தின்கண்—குலாவுவ-தோன்றுவனவாகிய—நிழல்-சாயைகளானவை—காந்தள்-காந்தளமலர்



லர்போலும்—அம்-அழகிய—காந்தை - கைகளையுடைய—அரமகளிர்-தெய்வமங்கையரால்—காமுறும்-இச்சிக்கப்படுகின்ற—வேந்தன் - இந்திரனுடைய—நல்-நல்ல—புரவியின்-குதிரைகளுடைய,வெள்ளம்போன்ற (அதினுள்ள) கூட்டம்போன்றன—எ-று. (கருத்து) தடாகத்தில் தோன்றியகுதிரைகளின் சாயலானவை இந்திரன்குதிரைகளை ஒத்திருந்தனவென்பதாம். (௨௯)

வரிச்சிறைத்தும்பிகளுழுசல்வள்ளவாய்
விரித்தவெண்டாமரைவிளங்கித்தோன்றுவ
தரித்திடுகளங்கமெய் தங்கத்தன்னொளுந்
திருக்கிளர்நிலவுமிழ்திங்கள்போன்றவே.

(இ-ள்) விளங்கி-பிரகாசித்து—தோன்றுவ-(தடாகத்திலே) காணப்படுகின்றவையாகிய—வரிச்சிறை-கீற்றுக்கள்பொருந்தியசிறகளையுடைய—தும்பிகள்-வண்டுகளால்—உழு கின்டப்படுகின்ற—நல் - நல்ல—வள்ளவாய்-கிண்ணம்போலும்வாயை—விரித்த-திறந்திருக்கிற—வெண்டாமரை -வெண்டாமரைமலர்களானவை, தரித்திடு-தாங்கப்பட்ட—களங்கம்-களங்கமானவை—மெய்-வடிவங்களிலே, தயங்க- தோன்ற—தன்னொளும்-குளிர்ச்சியாயிருக்கிற—திரு - அழகினாலே—கிளர்-விளங்காநின்ற—நிலவு-சந்திரிகையை, உமிழ்-கக்குகின்ற, திங்கள்போன்ற(அதிலுள்ள)சந்திரர்கள்போன்றிருந்தன—எ-று. (கருத்து) தடாகத்துள்தோன்றியவெண்டாமரைமலர்களானவை சந்திரர்களை ஒத்திருந்தனவென்பதாம். (௩௰)

சேயிதழ்க்குவளையென்னவீகொட்டெண்டிரைத்
தூயநற்றடத்திடைத்தோன்றுகின்றன
மேயவர்கண்கவர்வனப்பின்மிக்கவாயப்
பாயொளிசிறந்தசெம்பவளம்போன்றவே.

(இ-ள்) தெண்டிரை-தெளிவுள்ளஅலைகளையுடைய—தூய-பரிசுத்தம்பொருந்திய—நற்றடத்திடை - நல்லதடாகத்திலுள்ளே—தோன்றுகின்றன-காணப்படுகின்றவையாகிய—சேயிதழ்-சிவப்பிதழ்களையுடைய—குவளை-உற்பலங்களுடைய—மென் மெல்லிய—வீகொட - அரும்புகளானவை—மேயவர்-அடைந்தவருடைய—கண் - பார்வையை—கவர்-வெளவுகின்ற—வனப்பில்-அழகில்—மிக்கவாய்-மிகுந்தனவாகி, பாயொளி-விரிந்தவொளியால்—சிறந்த - விசேஷித்த—செம்பவளம் போன்ற-(அதிலுள்ள)செம்பவளங்கள்போன்றன—எ-று.(கருத்து) தடாகத்துள்தோன்றியசெங்குவளை அரும்புகளானவை பவளத்தை ஒத்திருந்தவென்பதாம். (௩௧)

வெண்ணிறத்தாமரைமருங்கேவரியன்
தின்சுருளுருகியுந்தடத்துள்தோன்றுவ
வெண்ணிமதிலைபகிரினிள்ளிட்டுற
முன்னிவனியவிடந்தொளியும்போன்றவே.

(இ-ள்) தடத்துள்-தடாகத்திலுள்ளே—தோன்றுவ - தோன்றுகின்றவையாகிய—வெண்ணிறம - வெண்மைநிறம்பொருந்திய—தாமரைம

லரும்-தாமரைப்பூவுகளும்—வெரி-தேனையுடைய—தண்-தண்ணிய—கருங்குவளையும்-நீலோற்பலமலர்களும்—உள் (அத)னுள்ளே—நிலவிய-விளங்குகின்ற—எண்ணிறுகலை-பதினாறுகலைகளையுமுடைய—மதி-சந்திரனது—நிலவினீட்டமும-ஒளிச்செறிவும்—விடத்து-ஆலகாலத்தினது—ஒளியி(னீட்டமும்)-ஒளிச்செறிவும்—போன்ற-ஒத்திருந்தன—எ-று. (கருத்து) தடாகத்துள்தோன்றிய வெண்டாமரை மலர்களும், நீலோற்பலமலர்களும், சந்திரவொளிகளையும், விஷத்தொளிகளையுமொத்திருந்தன என்பதாம், (௫௨)

குடவளையிணையணிகொழிக்குந்தண்புனற்
றடமெறியலைகளினலையுஞ்சைவலம்
படர்தருமழற்கிளைபரப்புஞ்செந்நிற
வடவையின்புகையெனவயங்கித்தோன்றின

(இ-ள்) குடம்-குடம்போலும்—வளை-சங்குகளானவை—இணம்-இணமாகிய—மணி-முத்துக்களை—கொழிக்கும்-சொரிதற்கிடமாகிய—தண்புனல்-தண்ணீரையுடைய—தடம்-தடாகத்திலே—எறி-வீசப்படுகிற—அலைகளின்-அலைகளினாலே—அலையும்-அலைகின்ற—சைவலம்-கொடிப்பாசிகளானவை—படர்தரும்-வளர்கின்ற—அழல்-கூடுள்ள—கிளை-கவர்களை—பரப்பும்-பரப்புகின்ற—செந்நிறம்-சிவப்புநிறமாகிய—வடவையின்—(அதினுள்ள) வடவாமுகாக்கினியினது—புகையென-தூமம்போல—வயங்கி-விளங்கி—தோன்றின-காணப்பட்டன—எ-று. (கருத்து) தடாகத்திலிருக்குங்கொடிப்பாசிகளானவை வடவாமுகாக்கினியின்புகைகளைப்போலக்காணப்பட்டன என்பதாம். ()

குருமணியிமைக்குநீள்கூலமேயவான்
றருநிழலலையிடையலைவதண்கதி
ரருமணிப்பொலன்குவட்டணிமைநாகத்தில்
வரைசிறையடிக்கொளுமாட்சிபோன்றவே

(இ-ள்) அலையிடை-அலைகளாலே—அலைவ-அலைகின்றனவாகிய—குரு-நிறம்பொருந்திய—மணி-மணிகளால்—இமைக்கும்-விளங்குகின்ற—நீள்-நீளம்பொருந்திய—கூலம்-கரையின்கண்—மேய-தங்கிய—வான்றரு-பெரியமரங்களுடைய—நிழல்-நிழல்களானவை—சிறை-சிறகளை—அடிக்கொளும்-அடித்துக்கொள்ளுகின்ற—மாட்சி-அழகையும்—தண்-சீதளத்தையும்—கதிர்-கிரணங்களையும்—அருமணி-அரியமணியையும்—பொலன்-பொன்னையும்—குவட்டு-சிகரத்தையுமுடைய—அணி-அழகிய—மைநாகம்-மைநாகங்களாகிய—மால்வரை-பெரியமலைகள்—போன்ற-ஒத்திருந்தன—எ-று. (கருத்து) தடாகத்துத்தோன்றியதருக்களின்நிழல்களானவை மைநாகபர்வதங்களை ஒத்திருந்தனஎன்பதாம். (௫௪)

தொலைவறுபலவளமினையதொக்கவல்
லலைதவழ்வாவியிற்பயிலுமாய்பெடை
கலவியின்குறிப்புரைகாட்டப்பின்றொடர்
பொலன்வடியன்னத்தின்பொற்புநோக்கினன்



(இ-ள்) தொலைவறு-ஒழியாத—இனைய-இத்தன்மையனவாகிய—பலவளம்-பலவிதவளங்களாலும்—தொக்க-நிறைந்த—அலை-அலைகளானவை—தவழ்-தவழப்பெற்ற—அவ்வாவியில்-அத்தடாகத்தில்—பயிலும்-வாசஞ்செய்கின்ற—ஆய்-ஆராய்ந்துகொள்ளப்பட்ட—பெடை-பெட்டையானது—கலவியின்-புணர்ச்சியினது—குறிப்பு-குறிப்பையுடைய—உரை-சொல்லுதலைப்போல—காட்ட-காண்பிக்க,பின்(அதன்)-பின்னே—தொடர்-தொடர்கின்ற—பொலன்-பொன்வடிவாகிய—வடிவம்-ஒளியுள்ள—அன்னத்தின்-அன்னத்தினது—பொற்பு-அழகை—நோக்கினன்-(அரசன்) பார்த்தான்—எ-று. பொன்னன்னமென்றதால் பொன்னுலகத்தன்னமெனவிளங்கிற்று (கருத்து) நளமகாராசன் அன்னத்தைக்கண்டான் என்பதாம், (௫௫)

தண்ணறுந்தாமரையணையிற்றங்கிய
வன்னமேலொதிமந்துனியகற்றிப்பேடையை
மின்னிறச்சிறகாற்றழீஇப்பொடு
முண்மகிழ்கூர்தரவுவந்துபுல்லிற்றே.

(இ-ள்) தண்-தண்ணிய—நறு-நறிய—தாமரை-தாமரைப்பூவாகிய—அணையில்-சயனத்தின்கண்ணே—தங்கிய-வாசஞ்செய்கின்ற—அன்னமேலொதிமம்-அவ்வரசவன்னமானது—துனி-ஊடலை—அகற்றி-நீக்கி—பேடையை-பெட்டையை—மின்-பொன்னுலகத்திலுள்ள—நிறம்-ஒளிபொருந்திய, சிறகால்-சிறைகளினாலே—தழீஇ-தழுவி—இருப்பொடும்-ஆசைபடனே—உள்-அக(முள்ளத்தே)—மகிழ்-மகிழ்ச்சியானது—கூர்தர-மிகும்படி—உவந்து (தானு) மகிழ்ந்து—புல்லிற்று-புணர்ந்தது—எ-று. (கருத்து) அரசவன்னமானது பெட்டையன்னை மகிழ்த்தாலுமகிழ்ந்துபுணர்ந்தது-என்பதாம். (௫௬)

விழைவுறுகலவியின்மெலிந்தோர்தாளின்
றெழில்திகழ்பொன்னிறவெருத்தங்கோட்டுபு
தழைவுறுசிறகான்முடித்தன்னணுறல்
வழிமலர்ச்சேக்கையினவண்துஞ்சிற்றால்.

(இ-ள்) விழைவுறு-விரும்பப்பட்ட—கலவியின்-புணர்ச்சியால்—மெலிந்து-இளைத்து—ஓர்தாளின்-ஒருகாலினால்—நின்று-நின்று—எருத்தம்-பிடரியை—கோட்டுபு-வளைத்து—தழைவுறு-தழைவுற்ற—சிறகால்-சிறையால்—முடி-(தலையை) மறைத்துக்கொண்டு—தன்ன-தன்னியபனால்—நறு-நறுமணமானது—அழி-வழியப்பெறுகிற—மலர்-தாமரைப்பூவாகிய—சேக்கையில்-சயனத்தில்—எழில்-அழகினால்—திகழ்-விளங்குகின்ற—பொன்-பொன்வடிவமாகிய—நிறம்-காந்தியுள்ள—அன்னம்-அவ்வன்னமானது—துஞ்சிற்று-தூங்கிற்று—எ-று. (கருத்து) அவ்வரசவன்னந்தாமரையினிடத்திலேநித்திரைசெய்தது என்பதாம். (௫௭)

குழவொளியுடன்சூழ்சருகிற்றோன்றிய
ஆழவழிமனஞ்செலத்துன்னையன்னுகொ

ஏழ்புலன்வழிமனஞ்சாரவோதிமம்
பாழியந்தோளினான்கையிற்பற்றினான்.

(இ-ள்) குழுவளியுடன் - அலைகாற்றுடனே — சுழல்-சுழன்றுசெல்கின்ற — சருகின்-சருகுபோல — ஊழ்வழி - விதியின்வழியிலே — தோன்றிய-(அதன்பய)னுண்டாக — மனம்(உயிர்களது)மனமானது — செலல்-செல்லுதல் — உண்மையன்றுகொல் - சத்தியமன்றோ — ஏழ்புலன் வழி-அற்பவிதேயமாகிய —(அவ்வன்னத்தின்கண்)மனம் - மனமானது — சார-வழிமுறையுடைய — ஓதிமம்-அவ்வன்னத்தை, பாழி-வலிபொருந்திய — தோளினான்-தோள்களையுடையநளராசன் — கையில் -கையினாலே — பற்றினான்-பிடித்தான — எ-று.(கருத்து)நளமகாராசன் விதியின்படி மதியுஞ்சொல்ல அவ்வன்னத்தைப்பிடித்தானென்பதாம். (௫௮)

கைப்படுசிறையனக்கலங்கிவாய்வெரீஇத்
துப்புறழ்தோலடிதுடிப்பத்துன்புழந்
தெய்ப்பொடுசிறையடித்தேகலாமையின்
மைப்புயலனையகைம்மலரிற்கொத்திற்றால்,

(இ-ள்) கை-(அரசனது)கைக்கு — படு- அகப்பட்ட — சிறை-சிறகுகளையுடைய — அனம்-அன்னமானது — கலங்கி - அறிவழிந்து — வாய்வெரீஇ- அச்சவொலிகள்செய்து — துப்புறழ் - பவளம்போலும் — தோல்-தோலையுடைய — அடி- அடிகளானவை — துடிப்ப - நடுங்க — துன்புழந்து-துயரமடைந்து — சிறையடித்து - சிறைகளையடித்து — ஏகலாமையின்-போகமாட்டாமையால் — எய்ப்பொடு - இளைப்புடனே — மைப்புயலனைய-(கொடையால்) கரியமேகம்போலும் — கைம்மலரில்-(அவனது கையாகிய) மலரில் — கொத்திற்று - கொத்தியது — எ-று. (கருத்து) அன்னமானது வருந்தமுற்றுநளன்கையைக்கொத்திற்று-எ-ம். (௫௯)

இரைத்தயர்புள்ளுக்கிரங்கிப்புட்குலம்
விரித்தெழுசிறைவளிவீசமெல்லிதழ்த்
திருத்தகுதாமரையலைதல்சேர்தடம்
வருத்தலையென்றுகைம்பறித்தல்போன்றதே,

(இ-ள்) புட்குலம்-பறவைக்கூட்டமானது — விரித்து- பரப்பி — எழு-எழும்புகையில் — சிறை-சிறகுகள் — வளி-காற்றை — வீச-எறிதலால் — மெல்-மெல்லிய — இதழ் - இதழ்களையுடைய — திருத்தகு - அழகு பொருந்திய — தாமரை - தாமரைமலர்களானவை — அலைதல் - அசைதலானது — சேர் - சேரிடமாகிய — தடம் - தடாகமானது — இரைத்து- கூவி — அயர்-வருந்துகின்ற — புள்ளிற்கு - அவ்வன்னத்திற்கு — இரங்கி-இரக்கமுற்று — வருத்தலையென்று - (அதனை) வருத்தாதேயென்று — கை-(தன்) கைகளினாலே — பறித்தல்போன்றது - தடுத்தல்போன்றது — எ-று. (கருத்து) பறவைகளெழுதலால் தாமரைகளசைதலானது தடாகமானது வருத்தாதேயென்று தடுத்தல்போலிருந்தது-எ-ம். (௬௰)

வள்ளவாய்த்தாமரைவதிந்துபோதரு
புள்ளெலாந்தனித்தனிபுலம்பல்வாவியி



னுள்ளுறுவறுமைகண்டொதுங்குபூமக
டெள்ளரிச்சிலம்புகள்சிலம்பல்போன்றவே.

(இ-ள்) வள்ளம்-கிண்ணம்போலும் — வாய் - வாயையுடைய — தாமரை-தாமரைமலர்களில் — வதிந்து-வாசஞ்செய்திருந்து, போதரு-(அப்போது) போகின்ற — புள்ளெலாம் - பறவைகளனைத்தும் — தனித்தனி-வேறுவேறாக — புலம்பல்-புலம்புதலானது — வாவியினுள் - தடாகத்திலுள்ளே — உறு-நேரிட்ட — வறுமை-(அரசவன்னம்) இல்லாமையை — கண்டு - பார்த்து — ஒதுங்கு - விலகுகின்ற — பூமகள் - திருமாதினுடைய — தெள்-தெள்ளப்பட்ட — அரி - பருக்கைக்கல்லுகளையுடைய — சிலம்புகள்-பாதச்சிலம்புகளானவை — சிலம்பல்போன்றது - ஒலித்தல்போன்றது — எ-று. (கருத்து) பறவைப்புலம்பலானது தடாகத்தைவிட்டிலக்குமிநீக்கும்பாதச்சிலம்பொலிபோலிருந்தது-எ-ம். (௬௧)

இன்னபொன்னிறவனங்கண்டிலேனென
மன்னர்மன்னவன்மதிவதனநோக்கியே
யன்னவன்கரமலரமர்ந்தவோதிம
நன்னயமொழிசிலவிலவுற்றதே.

(இ-ள்) இன்ன — இப்படிப்பட்ட — பொன்-பொன்மயமாகிய — நிறம்-ஒளிபொருந்திய — அனம்-அன்னத்தை — கண்டிலேனெனும் - (இதுவரையிற்) பார்த்திலேனென வியக்கின்ற — மன்னர்மன்னவன் - அரசர்க்கரசனது — மதி-சந்திரன்போலும் (விளக்கம்பொருந்திய) வதனம்-முகத்தை — நோக்கி-பார்த்து — அன்னவன் - அப்படிப்பட்டவனது — கரம் ஆகிய — மலர்-தாமரைப்பூவின்கண் — அமர்ந்த - தங்கிய — ஓதிமம்-அன்னமானது — நல்-நல்ல — நயம் - நீதிநலப்பற்றிய — சிலமொழி-சிலசொல்லுகளை — விலவுற்றது-சொல்லத்தொடங்கிற்று — எ-று. (கருத்து) நளன்கையிலிருந்தஅன்னமானது அவன்முகத்தைப்பார்த்துச்சிலநீதிசொல்லத்தொடங்கிற்று-எ-ம். (௬௨)

சிறையொளிர்பொன்னிறைசெல்வநல்குமோ
வறைகடல்பனியினிறைவதாங்கொலோ
கறைகெழுவேலிறையகத்தினுள்ளுற
நிறைதருவிழைவினைநீத்தல்வேண்டுமால்

(இ-ள்) கறைகெழு உதிரம்படிந்துள்ள — வேலிறை - வேலையுடையவரசனே — சிறை(என்) சிறைகளிலே — ஒளிர் - விளங்காநின்ற — பொன்-பொன்னானது — நிறைசெல்வம் - குறைவில்லாதசெல்வத்தை நல்குமோ (உனக்குத்) தருமோ — அறை - ஒலிக்கின்ற — கடல் (பெரிய) கடலானது — பனியின்- (அற்பமாகிய) பனியினாலே — நிறைவதாங் கொலோ-நிறையுமோ — அகத்தினுள் - (உன்) மனத்தினுள்ளே — உற- பொருந்த — நிறைதரு - நிறைந்த — விழைவினை - அப்பொன்னாசையை — நீத்தல்வேண்டும்-நீக்கவேண்டும் — எ-று. (கருத்து) நளமகாராசனே என்பொன்னிறகானது செல்வந்தருமோ கடலானது பனியால்நிறையுமோ நீ உன்னாசையைநீக்கவேண்டுமென்றன்னங்கூறிய [illegible]

கோறல்செய்தாலுயிர்க்கொலையொன்றேயலாற்
றேறினர்ப்பிழைத்தவன்பழியுஞ்சேருமாற்
ஞறுபாய்கவுண்மதத்தருகண்யானையாய்
மாறுகொள்பகைஞர்க்குமீதுமனங்கொளார்

(இ-ள்) தாறு-முட்கோல்கள்—பாய்-பாயப்பெறுகின்ற—கவுள்-கதுப்பையும்—மதம்-மதத்தையும்—தறுகண்-கோபகண்களையுமுடைய—யானையாய்-யானைபோலபவனே—கோறல்செய்தால் (உன்னை விசுவாசித்திருந்தவன்னைக்) கொல்வையேயானால்—உயிர்க்கொலையொன்றேயலால்-உயிரைக்கொல்லுதற்பாதகமொன்றேயல்லாமலும்—தேறினர்-நம்பினவர்க்கு—பிழைத்த-தீங்குசெய்த, வன்பழியும்-கொடியபாதகமும்—சேரும்-(உன்னை) யடையும்—மாறுகொள்-மாறுபாடுகொண்ட—பகைஞர்க்கும் - விரோதிகளுக்கும்—இது - இவ்விசுவாசகாதகஞ்செய்தலை—மனங்கொளார் - நினையார்—எ-று. (கருத்து) நளமகாராசனே என்னைக்கொன்றாலுயிர்க்கொலை அல்லாமலும் நம்பினவர்க்குத்தீமைசெய்தபழியுமுன்னையடையுமென்றன்னங்கூறியது-எ-ம். (௯௪)

செருக்களத்தேற்றவர்ச்செகுத்தலன்றிபு
னருட்கிடனுமெனையடர்த்தனீதியோ
முருக்கிதழ்மடந்தையர்முலைதிளைத்திடுங்
குருக்கிளர்மணிபுனைகுலவுத்தோளினாய்.

(இ-ள்) முருக்கு-முருக்கம்பூப்போலும்—இதழ் - உதடுகளையுடைய—மடந்தையர்-மாதருடைய—முலை - முலைகளானவை—திளைத்திடும்-அழுந்தப்பெறும்—குரு-நிறத்திலே—கிளர் - விளங்காநின்ற—மணி-இரத்தினங்களைத்தால்—புனை-அலங்கரிக்கப்பட்ட—குலவு -திரட்சியையுடைய—தோளினாய் - தோள்களையுடையவனே—செருக்களத்து-போர்க்களத்தில்—ஏற்றவர்(உன்னோடே)யெதிர்த்தவரை, செகுத்தலன்றி-கொல்லுதல்(நீதியா)மன்றி—உன்-உனது—அருட்கு-கருணைக்கு—இடனும் - பாத்திரமாகிய—எனை-(ஒருபுல்லியபறவையாகிய) என்னை—அடர்த்தல்-கொல்லுதல்—நீதியோ - நீதியாமோ—எ-று. (கருத்து) அரசனே போரிலெதிர்த்தவரைக் கொல்லுதல்நீதி உம்மையடுத்தவென்னைக்கொல்லுதல்நீதியோவென்று அன்னஞ்சொல்லிற்று-எ-ம். ()

கல்வியின்கன்றிகெருணைவேந்தனுத்
தொல்கலுங்கருணையுமுவப்புந்தோன்றிட
வல்கலின்மொழிசிலவறைந்துபின்னரும்
பல்பலதுயர்மொழிபகரலுற்றதே.

(இ-ள்) கல்வியின் -கல்வியறிவுபோல—அகன்றிடு -பெருக்கத்தையடைந்திருக்கின்ற—கருணை -அருளையுடைய—வேந்து- நளராசனது, உளத்து-உள்ளத்தின்கண்—ஒல்கலும்-தளர்வும்—கருணையும் - அருளும்—உவப்பும்-மகிழ்ச்சியும்—தோன்றிட - ஏககாலத்திலுண்டாக—அல்கலில் (பொருளாற்)சுருங்குதலில்லாமல்—சிலமொழி - சிலசொற்களை—அறைந்து-சொல்லி—பின்னரும்-(அதன்)பின்பு, பல்பல-பலபல



வாகிய—துயர்மொழி (அரசனுக்குத்) துன்பத்தையுண்டாக்குகின்ற சொற்களை—பகரலுற்றது(அன்னம்)சொல்லத்தொடங்கிற்று—எ-று. (கருத்து) அன்னமானது நளனுள்ளத்து நாணமுங்கருணையுமகிழ்ச்சியுந்தோன்றிடச்சிலமொழிகூறிப்பலதுயர்மொழிகூறத் தொடங்கிற்றுஎன்பதாம் (௯௬)

பெருகியமூப்பினிற்றளர்ந்துபேதுறு
மிருமுதுகுரவருமென்செய்கிற்பரோ
கருவுயிர்த்தயர்வுறுகாதற்பேடையு
மொருதுமேயென்னநெட்டுயிர்ப்புவீங்கிற்றே

(இ-ள்) பெருகிய-நிறைந்த—மூப்பினில் - முதுமையால்—தளர்ந்து-மெலிந்து—பேதுறும்-மதிமயக்கங்கொண்டிருக்கின்ற, இருமுதுகுரவரும்(என்னுடைய)தாயுந்தகப்பனும், என்செய்கிற்பரோ -இனியாது செய்வரோ—கரு-கருப்பத்தை;உயிர்த்து-ஈன்று—அயர்வுறு - சோர்வையடைந்திருக்கின்ற—காதல்-(என்மே) லன்புடைய, பேடை-மனைவியானவள், உளருதுமே-மனமுருகுவாளே—என்ன-என்று, நெட்டுயிர்ப்புவீங்கிற்று-பெருமூச்சுவிட்டது—எ-று.(கருத்து) அரசனே என்தாயுந்தகப்பனுமென்செய்குவார்களோ என்மனைவிமனமுருகுவாளேயென்று அன்னம்சொல்லிற்றுஎன்பதாம் (௯௭)

அன்னைமூப்பழிதரவார்கொலாற்றுவார்
மன்னனெற்பிடித்தலும்வெருவிவாவியிற்
றுன்னியாவிருந்தபுள்சொறறபோழ்தினி
வின்னலங்கடலுளாழ்ந்திறக்குமேகொலாம்

(இ-ள்) அன்னை (என்னுடைய)தாயானவள், மூப்பு -முதுமையினாலே—அழிதாவு - வருந்துதலை, ஆர் - எவர், ஆற்றுவார் - நீக்குவார், மன்னன் - இவ்வரசனாகியவன்—எற்பிடித்தலும் - என்னைப்பிடிக்க வவாவியிலே—வாவியில்-தடாகத்திலிருந்து—வெருவி - அஞ்சிப்போய்—ஆங்கு - அவ்விடத்தே—துன்னி-நெருங்கி— இருந்த - தங்கிய—புள்-பறவைகள்—சொற்றபோழ்தினில் -(இச்செய்தியைச்) சொன்னபோது—இன்னல் - துன்பமாகிய—கடலுள்-சமுத்திரத்தினுள்—ஆழ்ந்து - அமிழ்ந்து—இறக்குமே(அவள்)இறந்துபோவாளே-எ-று.(கருத்து) அரசனென்னைப்பிடித்துக்கொண்டானென்று பறவைகள் சொன்னவளவிலென்தாய் இறக்குமென்றன்னஞ்சொல்லியதுஎன்பதாம். (௯௮)

புல்லுவிட்டுஞ்சிறைநெகிழுறும்பொரு
தல்லல்கூர்பெடையவர்யாதுற்றொளிற்
சொல்லரும்புட்குலங்களுழுந்துன்பமாய்த்
தெல்லையிற்றுயரொடும்றக்குமேகொலாம்

(இ-ள்)புல்லுவிட்டு-தழுவுதலைவிட்டு—அஞ்சிறை (என்) னழகியசிறைகளானவை—நெகிழுறும்-விலகிடுநும்—பொருது - மனமபொருமல்—அல்லல்கூர்-துன்பமிகுகின்ற—பெடை-(என) மனைவியானவள்—அவர் - எங்கணவர்—யாங்கு-எவ்விடத்தே—உற்றொளின் - வந்தானென்றுவினவில்—சொல்லரும்-அதற்குஉத்தரஞ்சொல்லமாட்டா

து—புட்குலம்-பறவைக்கூட்டமானது, கலுழும்-அழாநிற்கும்—அன்பம்-அந்தன்பத்திலே—ஆய்க்தூ-என்செய்திலை) ஆமோசித்தறிக்து—எல்லையில்-அளவில்லாத, துயரோடு-துன்பத்துடனே, இறக்குமே(அவன்)இறந்துபோவானோ-எ-று(கொல்-ஆம்-அசைகள்) (கருத்து) அம்மனைவியானவள்எனசெய்தியைக்கேட்டிறந்துபோவாளென்றன்னஞ்சொல்லியது என்பதாம். (௫௯)

அனிச்சமென்மலரினுநொய்யவாய்ச்சிறைத்
தனிப்பெடையமைக்குமென்றளிர்க்கையாலயன்
றனிப்படும்பிரிவெனுந்துகடொலைவுறல்
நினைந்துமுன்னெழுவனிலைக்கோட்டினான்

(இ-ள்) அனிச்சமென்-அனிச்சமென்னப்பட்ட—மலரினும்-பூவினும்—நொய்ய-மெல்லிய—ஆய்-தேடத்தக்க, சிறை-சிறகுகளையுடைய—தனி ஒப்பற்ற—பெடை-(என்)மனைவியை, அமைக்கு-உண்டாக்குதலையுடைய—மென்றளிர்-மெல்லியதளிர்போனூர்—கையால்-கையினலே—அயன்-நான்முகக்கடவுள்—துனிப்படு-துன்பம்விளைதற்குக் காரணமாகிய—பிரிவெனூ-பிரிவென்கிற—துகடு-குற்றம்—தொலைவுற-சொல்லிய, நினைந்து-கருதி—முன்-முன்னே—என்-என்னது, தலை-தலையில்—எவ்வண்ணம்-எழுதியாக—நிலவ-விளங்க—கோட்டினன்-எழுதினன்—எ-று (கருத்து) பிரமனெப்படிக்குஎன்தலையி லெழுதினுன் என்பதாம். (௬௰)

வீழுமெய்ப்பிடித்தவிக்கொடுஞ்சொன்மென்னிறத்
தாழுசிறை டப்பெடை, செவியில்சார்தலு
மாழ்துயர்க்கடலிடையாழ்ந்தியானிலாப்
பாழ்படுதிசையெலாமருண்டுபார்க்குமே

(இ-ள்)வீழும்(தன்னுடைய)-விரிக்கப்பட்ட—என்-என்னை, பிடித்த-பிடித்த—இகல்கொடுஞ்சொல்-இகல்கொடுமையைப்புணர்த்துகிற—சொல்லானது—செவியில்-(கள்)காதில்; சார்தலும்-சேர்ந்தவளவிலே—மெல்-மெல்லிய; நிறம்-ஒளிபொருந்திய; தாழ்-நீண்ட, சிறை-சிறகுகளையும், மடம்-பேதைமையையுமுடைய, பெடை-(என்)மனைவியானவள்; ஆழ்-ஆழம்பொருந்திய—துயர்க்கடலிடை-துன்பமாகியகடலுள்ளே, ஆழ்ந்து முழுகி—யான்-நான், இலா-இல்லாமையால்—பாழ்படு-பாழடைந்த—திசையெல்லாம்-திக்குகளனைத்தையும்—மருண்டு-மயங்கி—பார்க்குமே-பார்ப்பாளே—எ-று.(கருத்து)என்மனைவியானவள் துன்பக்கடலுள்ளேழுந்திநானில்லாமையால்பாழடைந்த திக்கனைத்தையும் மயங்கிப்பார்ப்பாளென்றன்னஞ்சொல்லியது என்பதாம். (௬௧)

பிரிவெனுமழற்சுடப்பெடையிறக்குமே
யரிதினிற்பெற்றவெம்பார்ப்பெலாமயர்ந்
திளைபெருக்குடம்பையுளாற்றிவெய்திய
பரிவினிறக்குமெனப்பதைத்துச்சோர்ந்ததே



(இ-ள்) பிரிவெனும்-பிரிவென்கிற—அழல்-நெருப்பானது—சுட-(தன்னைச்)சுட—பெடை-(என்)மனைவியானவள்—இறக்குமே-இறந்துபோவாளே, அரிதினில்-அரியதவத்தினலே—பெற்ற-ஈன்ற—எம்-எம்முடைய—பார்ப்பெலாம்-குஞ்சுகளெல்லாம்—அயர்ந்து-தளர்ந்து, இளை-இளைப்பை, பெருக்கு-பெருகுதல்—குடம்பையுள்-கூண்டினுள்ளே—ஆற்றி-கூவி—எய்திய-தமக்குநேரிட்ட—பரிவினில்-துன்பத்தினலே—சாய்-இறந்துபோம்—என என்று—பதைத்து-துடித்து—சோர்ந்தது (அன்னம்)மூர்ச்சித்தது எ-று.(கருத்து)பெண்சாதிபிள்ளைகள் இறக்குமென்றன்னமூர்ச்சித்தது என்பதாம். (௬௨)

அளிக்கொருகடலனை னந்தனைக்கண்டுகள்
ளிளித்திடுதன்புனற்றுவலைவீழ்தலிற்
றளிர்த்தமென்சிறையனக்தளர்வுநீங்கியுட்
களித்ததுகாவலன்கருணைநோக்கியே

(இ-ள்) அளிக்கு-அருளுக்கு—ஒருகடலனைன்-ஒருகடல்போல்பவன்—அதனை-அம்மூர்ச்சையடைந்தமையை; கண்டு-பார்த்து—கண்-பார்த்தகண்களால்—துளித்திடும்(அவனுலே) சொரியப்படுகின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—புனல்-நீருடைய—துவலை-மழையான—வீழ்தலின்-(தன்மேல்)வீழ்தலினலே—தளிர்த்த-உணர்வடைந்த—மென்-மெல்லிய—சிறை-சிறைகளையுடைய—அனம்-அன்னமானது—தளர்வுநீங்கி-துயரத்தைநீங்கி—காவலன்-அரசனது—கருணை-அருளினை (பெருக்கத்தை)நோக்கி-பார்த்து—உள்-(தன்)னுள்ளே—களித்தது-மகிழ்ந்தது—எ-று (கருத்து)அன்னமானது அரசனதிருபையைக்கண்டுமகிழ்ந்தது-எ-ம. (௬௩)

அருளுடன் படவன்னத்தைநோக்கியின்
செருநுபொனவிறக்கிறகர்நோக்குறு
மோகமேபிடித்தனன் முழுதுநோக்கினை
னேகுதியெனவிடையுடுத்தனன்

(இ-ள்) இறைஎனாஜனைவன்—அருளுடன் - அன்புடனே—படம்-இளமைபொருந்திய—அனத்தை - அவ்வன்னத்தை—நோக்கி-பார்த்து, பின்-உனது, செருநுபொற்றுயர்ந்த பொன்-பொன்மயமாகிய, நிறம்-ஒளிபொருந்திய; சிறகர்-சிறைகளை, நோக்குறும்-பார்க்கவேண்டுமென்கிற—மோகமே-ஆசையினலேயே—பிடித்தனன் (உன்னைப்)பிடித்தேன்—முழுது-முழுதையும்—நோக்கினன்-பார்த்தேன்—ஏகுதி-போகத்தக்கவிடத்திற்கு, ஏகென-போவென்று—விடுத்தனன் (அதனை)விட்டான்-எ-று.(கருத்து)அரசன்அன்னத்தைவிட்டான் என்பதாம். (௬௪)

அன்னத்தைக்கண்ணுற்றபடலம்-முற்றும்.

# அன்னத்தைத் தூதுவிட்ட படலம்.

அதன்பின் நளமகாராஜன் அன்னத்தைத் தூதுவிட்டதாகும்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பிறைநுதல் மடந்தைக் கிடங்கு அணங்குகுப் பூத்தொளிரும் பேரிளவனமுலைதிளை
ப்ப, நறவுகொப்பளிக்குந்தெரியல்சூழ்மார்பனுண்மலர்ப் பொருவு மெ
ன்கரத்தின், துறவுகொண்டெழுந்தபொலஞ்சிறையன்னந் தொல்வினை
த்தொடர்பறுத்தின்ப, நிறைகடற்றிளைக்குமவரினின்புற்று நீடுவாவி
புக்கதுவே.

(இ-ள்) நறவு-தேனை — கொப்பளிக்கும்-கக்குகின்ற — தெரியல்-பூ
மாலையினால் — சூழ்-சூழப்பட்ட — மார்பன்-மார்பையுடைய நளமகாரா
சனுடைய — பிறைவடம்-சந்திரகாரமான — இடங்கு - தங்கியுள்ள —
கணங்கு-தேமலானது — பூத்து-படர்ந்தும் — ஒளிரும் - விளக்கப்பெற்
றுள்ள — பேரிளவனம்-பெருமையுமிளமையுமழகும் பொருந்திய — மு
லை-(தமயந்தியினுடைய) முலைகளை — திளைப்ப - அனுபவிக்கும்படியா
க — நாண்மலர்பொருவும்-அன்றுபூத்த தாமரைமலர்போலும் — மென்
கரத்தின்-மெல்லிய (அவன்) கைகளினின்றும் — துறவுகொண்டு - துறத்த
லைக்கொண்டு (தொல்வினை) முன்னைச்செயலது (தொடர்) சம்பந்தத்தைத்
(அறுத்து) ஒழித்து — எழுந்து — புறப்பட்ட — பொலம் - பொன்மய
மாகிய — சிறை - சிறகுகளையுடைய — அன்னம் - அன்னமானது —
(துறவுகொண்டு துறவறத்தைக்கொண்டு — தொல்வினை - பழவினை
யாகிய — தொடர்பு — சங்கிலியை — அறுத்து - கட்டறுத்து — இன்பநி
றைகடல்-பேரின்பக்கடலிலே, திளைக்குமவரின்-முழுகுகையோர்போல
— இன்புற்று-இன்பத்தினாலே மிகுந்து — நீள்-நீளுகின்ற, நிரை - அலைக
ளையுடைய — வாவி-தடாகத்தின்கண் — புக்கது-சென்றது — எ-று. (கரு
த்து) அன்னமானது தடாகத்திலிடத்துச் சென்றதென்பதாம். (௧)

பொன்னிறத்தூவிப்பவளவாய்ச்செங்காற்பொற்புறு பசியகுட்ட
ரச, வன்னமெய்ப்புரிச்சிறைபுளர்ந்தயல்குழனக்குழாக் கிடைவதி தா
துயல், தன்னவிர்ந்தோளிறைகரத்தழுந்து சிறையினைக் காண்டலும்
வெருவி, முன்னையதன்றென்றிருந்தபுட்குலங்கண்முளரியந்தடத்தகன்
றனவே.

(இ-ள்) பொன்-பொன்வடிவமாகிய — நிறம் - காந்திபொருந்திய —
தூவி-இறகையுடைய — பவளம்-பவளம்போலும் — வாய் - வாயையும் — செ
ம்-சிவப்புநிறம்பொருந்திய — கால்-அடிகளையும் — பொற்புறு - அழகா
னமிகுந்த — பசிய-பசுமைபொருந்திய — குட்டு - உச்சிக்கொண்டையை
யுமுடைய — அரசவன்னம்-அரசவன்னமானது — மெய் - (தன்) உடம



பை — உதறி-(சிலிர்த்து)உதறி — சிறை-சிறகுகளை — உளர்ந்து - (மூக்கினா
லே)கோதிக்கொண்டு — அயல்-பக்கத்தில், சூழ் - (தன்னைக்கண்டுவந்து)சூழ்
ந்த — அனம்-அன்னங்களது — குழாத்து-கூட்டத்தினது — இறை - நடு
வில் — வதிதாலும்-தங்கியவளவில் — இருந்த-(அங்கு) இருந்த — புட்குலங்
கள்-அப்பறவைக்கூட்டங்களானவை — கல்-மலைபோல் — கவின் - செ
ய்யப்பட்ட, திரள்-குவிந்த, தோள்-தோள்களையுடைய — இறை-அரசனை
து — கரத்து-கையிலுள்ள — அழுந்தும்-அழுந்திய — சிறையினை-(அதனது)
சிறகுகளை — காண்டலும்-பார்த்தவளவில் — முன்னையது - அரசனாற்
கொண்டுபோகப்பட்ட வரசவன்னம் — அன்றென்று - அன்றென்று நி
னைத்து — வெருவி-அஞ்சி — முளரி-தாமரையையுடைய — தடத்து - த
டாகத்தினின்றும் — அகன்றன - நீங்கிப்போயின — எ-று. (கருத்து) த
டாகத்திலிருந்தவன்னங்களானவை இவ்வன்னமுன்னையதல்லவென்
று நீங்கிப்போயின என்பதாம். (௨)

புள்ளினமிரியமதுக்குடம்புரிந்தாற்போலுமென்மலர்நறும்பொகுட்
டி, னுள்ளுறையன்னங்கொலைத்தொழில் சிறிதுமுஞற்றிலனென வையனை
த்தேறிக், கள்ளவிழ்கமலமலரெனவன்றகரத்தினின் மீட்டும் வந்தெய்
தி, யள்ளிலைநெடுவேலண்ணறனுளத்தின் விசயமிகவிளைத்துவாக்கும்()

(இ-ள்) புள்-பறவைகளது — இனம்-கூட்டமானது — இரிய-அஞ்சி
யோட — (அதன்பின்) மதுக்குடம்-தேன்குடமானது — விரிந்தால்-வாய்
மலர்ந்ததாயின் — போலுமென்-ஒக்குமெனப்படுகின்ற — மலர் - தாம
ரைப்பூவினது — நறும்-பரிமளம்பொருந்திய — பொகுட்டினுள் - கொட்
டையின்கண்ணே — உறை-தங்கிய — அன்னம்-(அவ்)வன்னமானது —
கொலை-கொலையாகிய — தொழில்-தொழிலில் — சிறிதும் - சிறிதையாயி
னும் — இறை-அரசனானவன் — உஞற்றிலனென் - (என்னிடத்தே) செய்
திலனென்று — தேறி-தெளிந்து — கள்-தேனையுடைய — அவிழ் - மலர்
ந்த — கமலமலரென - தாமரைப்பூவென்று — (மயங்கியதுபோல்) அவனது
(முன்னதா)ன் நகப்பெற்ற, கரத்தினில்-கையின்கண்ணே — மீட்டும் -
திரும்பியும் — வந்து-வந்து — எய்தி-அடைந்து — அள்-செறிவைப்பொருந்
திய — இலை-இலைபோலும் — நெடு - நெடிய — வேல் - வேலையுடைய — அ
ண்ணல்-அவ்வரசனது — உளத்தில்-மனத்தின்கண்ணே, அதிசயம் - ஆ
ச்சரியத்தை — மிக-மிகுதியாக — விளைத்து - உண்டாக்கி — உரைக்கும்-
சொல்லும் — எ-று. (கருத்து) அன்னமானது திரும்பவும் நளன்கையில்
வந்ததிசயம்விளைத்துச்சொல்லுமென்பதாம். (௩)

அரிவையின்முரண்டு சூளிருவருந்தமைக்கணைக்கிழவனன்னெறிக
ட், ளிவுறாரெலார்க்கும்வேட்டமன்னவர்தஞ் செய்தொழிலென்பதெற்ப
டுத்து, மெளிவருமென்றனயர்வினைநோக்கிவிடுத்தனெனிரங்குநீத்தாரங்
க, நனிர்கட்டுலம்பித்தபுடவியிற்றருமகாட்டியதனைதுபோனியே.

(இ-ள்) அளியினம்-வண்டினமானது—முரன்று-ஒலித்து, நுகர்கின்ற—நறு - தேனை—அருந்தும்-உண்ணப்பெறுகின்ற—ஐங்கணை-பஞ்சபாணத்திற்கு—இழவு-உரிய தன்மைதனை—நன்னெறிகள்-செல்வழிகளை—தெளிவுறு-ஐயந்திரிபின்றியுணர்ந்த—நூலோர் - தருமநூலையுடையோராகிய—மன்னவர்-அரசரும்—வேட்டம் - வேட்டையை—தம்-தமக்கு—செய்- செய்தற்குரிய—தொழில்-தொழிலாகும்—என்பார் என்று சொல்லுவர் (அப்படியிருக்க) இரங்கு-ஒலிக்கின்ற—நீர் - குணம்பொருந்திய—தரங்கம்-அலைகளையுடைய—தண்ணீர்- குளிர்ச்சிபொருந்திய—கடல்-கடலை—உடுத்த-மருங்கிற்கொண்ட—படவியில்- பூமியின்கண்; எதற்பொருத்தும்-(நீ) என்னைப்பிடித்தாய்; எளிவரும்- எளிதிற்கிடைத்த—என்-என்னது—அயர்வினை- வருத்தத்தை—நோக்கி-பார்த்து—விடுத்தனை-விடுத்தலால்—தருமம்-இந்தத்தருமத்தை—காட்டியது-(உன்னிடத்தே) நிறுத்தியது—உன் அது-உனது—பேர் - பெரிய—அளியே - கிருபையே (இதற்கையமில்லை)—எ-று (இலக்கணக்கொத்து) முதனிலையன்றிப்பிறதொழிற்பெயர்மொழிகுவர், இவ்விதியால்வேட்டம் என்றது முதனிலையில்லாததொழிற்பெயர் (கருத்து) அன்னமரசனைப்புகழ்ந்துசொல்லிற்றென்பதாம். (௬)

வருந்துமுன்புகன்றகொடியவென்மொழியின்வரும்பிழையினைத் தையுமின்னே, திருந்தலர்கடந்தோய் மகிழுமாசெய்துதிக்கு வன்றினைச்செய்வோன்வெய்தா; விரிந்ததன்கதிரினலைகடலுடுத்த மேதினியிடைத்தபைங்கூழ்கள், கரிந்தனதளிர்ப்பவெள்ளி வீழ்ன்னகணை மழைபொழிவதுகடுப்ப.

(இ-ள்) திருந்தலர்-பகைவரை—கடந்தோய்-வென்றவனே—முன்-முன்பிடிபட்டிருந்தபோது—வருந்த-(நீ)வருந்தும்படி—புகன்ற - சொல்லப்பட்ட—என்-எனது—கொடிய-கொடிதாகிய—மொழியில் -சொல்லினால்—வரு-வந்த—பிழையினைத்தையும் - குற்றமுழுமையும்—மகிழுமா-(வருந்தியநீ)மகிழும்படியாக—செய்து - ஒருபெரியவுபகாரத்தைச்செய்து—அலை-அலைகளையுடைய—கடல்-கடலை—உடுத்த -மருங்கிற்கொண்ட—மேதினியிடைத்த-பூமியிலுள்ளனவாகிய—பைங்கூழ்கள்-பயிர்களானவை—(வருந்த)- வருந்தும்படி—இனஞ்செய்வோன் - சூரியனானவன்—வெய்தா-கொடிதாக—விரிந்த - விரிக்கப்பட்ட—தன் -தனது—கதிரின்-கிரணத்தினால்—(வரு)-வந்த,(பிழையினைத்தையும்)-குற்றமுழுமையும்—கரிந்தன-வாடிய அப்பயிர்கள்—தளிர்ப்ப - செழிக்கும்படியாக—வெள்ளிவீழ்ன்ன-வெள்ளிவிழுதுகளைப்போலும்—கணை - தாரைகளையுடைய—மழை-மழையை—பொழிவதுகடுப்ப - பொழிதலைப்போல—திருத்துவன்-(நான்)தீர்ப்பேன்—இனையே - இப்போதே—எ-று (கருத்து) அரசனோடு தான்செய்தகுற்றத்தை நீ மகிழும்படி தீர்ப்பேனென்று அன்னஞ்சொல்லியது-எ-ம். (௭)

பல்லவம்புவனம்பொதுவறப்புரக்கு மன்னவர் மன்னநின் றனக்கோர், புல்லியபறவையியற்றுகைம்மாறொன்றில தெனும்புணர்ப்பரிதாஞ், மொல்லையிற்கைம்மாறியற்றுதியென்னுமருத்தியென் னுளத்தி



னதாகியல்லலுற்றழுந்தவிருமாலதனை யடிகள்கேட் * டருடியென்றனையும்.

(இ-ள்) பல்லவ்-வளம்பொருந்திய—புவனம் - பூமியை—பொதுவற-பொதுமையின்றும்—அற-நீங்க—புரக்கும் - காக்கின்ற—மன்னவர் மன்ன-ராஜாதிராஜனே—நின்றனக்கு-உனக்கு—ஓர்புல்லியபறவை- ஒருசிறியபறவையால்—இயற்று-செய்யத்தகும்; கைம்மாறொன்று -ஒரெதிர்நன்றி—இலதெனும்-இல்லையென்கிற, புணர்ப்பு-நியாயத்தை, அறிதராதும்(யா)னறிந்திருந்தும்—ஒல்லையில்-விரைவிலே—கைம்மாறு -ஒரெதிர்நன்றியை—இயற்றுதியென்னும் - செய்யென்றேவுகின்ற—அருத்தி-ஆசையானது—என்-எனது,உளத்தினதாகி-மனத்திலுள்ளதாகி—அல்லலுற்று-துன்பமிகுந்து—அழுந்த (அதில்) அழுந்தும்படியாக—அடிகள்-சுவாமி—அதனை - அந்நன்றியை—உறும்-அருந்துகின்றது—கேட்டருடியென்றுகேட்டருளென்று, அறையும்-(அன்னம்)சொல்லும்—எ-று.(கருத்து)சக்கிரவர்த்தியே என்வார்த்தையைக்கேட்டருளுமென்றுசொல்லிற்று-எ-ம். (௮)

பொன்னினிற்செய்தவள்ளவாயமுதம் பூவையைக்கிள்ளையையருத்திக், கன்னலினமிழ்திற்கனிந்தமென்சொற்கள் பயிற்றியுங் கேட்டுளக்களிப்பார், மன்னவர்மன்னநின்னுளத்தேருமட மொழியா யினுமீ தோ; அன்னமென்சொல்லென்றதிசயஞ்சிறப்பவக மலர்ந்தினிது கேட்டருள்வாய்.

(இ-ள்) பொன்னினில்-கனகத்தினாலே—செய்த - செய்யப்பட்ட—வள்ளவாய்-கிண்ணத்திலுள்ள—அமுதம் - அமிர்தத்தை—பூவையை-நாகணவாய்ப்புள்ளையும்—கிள்ளை-கிளியையும்—அருத்தி- குடிப்பித்து—கன்னலின்-சர்க்கரையினும்—அமிழ்தின் - அமிர்தத்தினும்—கனிந்த-மதுரமுதிர்ந்த—மென்-மெல்லிய—சொற்கள் -சொற்களை—பயிற்றியும்-கற்பித்தும்—கேட்டு(அவைபேசக்) கேட்டு—உளக்களிப்பார் - உலகத்தார்மனமகிழுவார் (ஆகையால்) மன்னவர்மன்ன - ராசாதிராசனே—ஈது - இச்சொல்லானது—நின்னுளத்து - உனதுமனத்தில்—தேரு-வறமாட்டாத—மடம் - அறியாமையோடுகூடிய—மொழியாயினும்-சொல்லாயினும்—அன்னம் - அன்னத்தினது—மென் - மெல்லிய—சொல்லென்று-மொழியென்று—அதிசயம் - ஆச்சரியமானது—சிறப்ப-சிறந்துதோன்ற—அகமலர்ந்து-மனமகிழ்ந்து—இனிது - இனிதாக—கேட்டருள்வாய்-(நீ)கேட்டருளு—எ-று.(கருத்து) அன்னம்தன்சொல்லை விரும்பிக்கேட்கவேண்டுமென்றுசொல்லியது-எ-ம். (௯)

குடவளையினங்கள் வயிறுளைந் தீன்றகுருமணிகரு வெனவயிர்த்து, மடன்முழுகவிழுங்கமலமென்பொகுட்டில்வரிசிறைக்குருகுகிடக்குந், தடநிறைவாவிபகட்டினமுழக்குந் தண்பணையிடந்தொறுமுடை யோன், விடசுடர்பரப்பிவிளக்குபொற்கழலான்வீமனென்றுரைசெய் வேந்தன்.

* தொன்னூல்விளக்கம்-ஏவலொருமைக்குஇ விகுதியால் அருள்தி அருடி-என்றுமியற்று.

(இ-ள்) குடம்-குடம்போலும்—வளையினங்கள்-சங்கினங்களால்—ஈயிறு-(தம்) வயிறு—உளைந்து-நொந்து, ஈன்ற-தாம்பெற்ற—தரு-நிறம் பொருந்திய—மணி-முத்துக்களை—கருவளை-முட்டையென்று—அயிர்த்து-மயங்கி—மடல்-இதழ்களாலாகிய—முழுக்கிவிழும்-கிட்டவிழ்ந்த—கமலம்-தாமரைப்பூவினது—மேல்-மெல்லிய—பொருட்டுடைய கொட்டையின்கண்ணே—வரி-கீட்டுப்பொருந்திய—சிறை-சிறகுகளையுடைய—குருகு-நாரைகளானவை—அடைகிடக்கும்-அடைகாக்கப்பெறுகின்ற—நடம்-நடனத்தையும்—திகழ்-பொருந்த—வாளை-ஆண்வாளைகளானவை—பகட்டு-எருமைக்கடாக்களுடைய—இனம்-இனத்தின்மேல்—உகளும்-குதிக்கப்பெறுகின்ற, தனவு-தன்னுடைய—பழனக்கழனிகளையுடைய—விதர்ப்பநாடு-விதர்ப்பதேசத்தை—உடையோன், ... நடையலனும்—வீடு-வீசப்படுகின்ற—சுடர்-கிரணங்களை—பரப்பி-விரித்து—விளங்கு-விளங்காநின்ற—பொன்-பொன்னாலாகிய—கழலான்-வீரக்கழலையுடையவனுமாகிய—ஒருவேந்தன்-ஒரு அரசனானவன்—வீமனென்று-வீமனென்றுசொல்லப்பட்டு—உளன்-இருக்கிறான் எ-று. (கருத்து) விதர்ப்பதேசத்தையாளும் வீமராசனென்னுமோரரசனிருக்கின்றானென்றது எ-ம். (அ)

அருந்தவத்தமனமுனியருள்வரத்தாலாயிழை யம்மையார் தம்மின், முருக்கிளமுறுவனாகமங்கையரின்முகிழ்முலைப்புவிமடந்தையரின்; ஒருத்தியுமுவமைகூறுதற்கரிதாவனப்பொருவடிவெடுத்தனைய, கருந்தடநெடுங்கட்கதிர்முலைத்துவர்வாய்க்கன்னியையரிதினிற்பயந்தான்.

(இ-ள்) அரு-அரிய—தவம்-தவத்தையுடைய—தமனமுனி-தமனமுனிவனுடைய—அருள்-அருளாற்பெறப்பட்ட—வரத்தால்-வரத்தினாலே—ஆய்-ஆராய்ந்தெடுக்கப்பட்ட—இழை-ஆபரணங்களையுடைய, அம்மையார்தம்மின்-தெய்வமங்கையர் தன்னிலும்—முருக்கு-முருக்கம்பூவைப்போலும்—இளமுறுவல்-சிறியபல்லுகளையுடைய—நாகமங்கையரின்-நாககன்னிகைகளுள்ளும்—முகிழ்-தாமரை அரும்புபோலும்—முலை-முலைகளையுடைய—புவிமடந்தையரின்-பூலோகத்துமங்கையருள்ளும்—ஒருத்தியும்-வருத்தியும்-வருத்தமுற்றும்—கூறுதற்கு-சொல்லுதற்கு, உவமை-உபமானம், அரிதா-இல்லாததாக, வனப்பு-அழகானது, ஒருவடிவு-ஒருமங்கைவடிவத்தை; எடுத்தனைய-எடுத்தாற்போலும்—கரு-கரிய—தடம்-விசாலம்பொருந்திய—நெடு-நெடிய—கண்-கண்களையும்—கதிர்-காந்திபொருந்திய—முலை-முலைகளையும்—துவர்-பவளம்போலும்—வாய்-வாயையுமுடைய—கன்னியை-ஒருபெண்ணை—அரிதின்-அரியசெயலால், பயந்தான்-(அவ்வீமராசன்)பெற்றான்—எ-று. (கருத்து) தமனமுனிவரத்தால்வீமராசனொருபெண்ணைப்பெற்றான் எ-ம். (௯)

களைகடிந்தொதுங்குங்கடைசியர்நெடுங்கண்காவி மென்மலரொடு கருதி, விளரிவண்டினங்களலமருங்கழனிவிதர்ப்பர்கோன் றவத்தின் விளைந்தொன்றிமுளரியந்தவிசினினிதுவீற்றிருக்குமுகிழ்முலை மதர்விழித் திருவே; தளிர்மலர்க்குழலைத்தகமலர்த்தாடமயந்தி யெனும்பெயர்தரித்தாள்.



(இ-ள்) முளரி-தாமரைப்பூவாகிய—அம்-அழகிய—தவிசில்-ஆசனத்தில்—இனிது-இனிதாக—வீற்றிருக்கும்-எழுந்தருளியிருக்கின்ற—முகிழ்-தாமரையரும்புபோலும்—முலை-முலைகளையும்—மதர்-மதர்த்த—விழி-கண்களையுமுடைய—திருவே-சீதேவியேயனை—(பயிர்க்) களைகளை—கடிந்து-பிடுங்கி—ஒதுங்கும்-நடக்கின்ற—கடைசியர்-உழத்தியருடைய—நெடுங்கண்-நெடியகண்களை—காவி-நீலோற்பலங்களுடைய—மென்மலரொடு-மெல்லியமலர்களென்று—கருதி-நினைந்து—விளரி-விளரிராகத்தைப்பாடுகின்ற—வண்டு-வண்டுகளுடைய—இனங்கள்-இனங்களானவை—அலமரும்-சுழலுகின்ற—கழனி-கழனிகளையுடைய—விதர்ப்பர்-விதர்ப்பதேசத்தாருக்கு—கோன்-அரசனுடைய—தவத்தினில்-தவத்தினாலே—தோன்றி-பிறந்து—தளிர்-தளிர்களினிறத்தை—தவழ்-வருத்துகின்ற—அலர்ந்தகம்-செய்யதாமரையையுடைய—மலர்-செந்தாமரைமலர்கள்போலும்—தாள்-பாதங்களையுடைய—தமயந்தியென்னும்-தமயந்தியென்கிற—பெயர்-பெயரை—தரித்தாள்-தரித்திருக்கின்றாள்—எ-று. (கருத்து) இலக்குமியேதமயந்தியென்னும்பெயர்தரித்திருக்கின்றாள் எ-ம். (௰)

நீனிறமுகிலோபசியசைவலமோநெடுந்திரையொழித்ததெள்ளறலோ, பானலங்கொண்டபணிமொழித்துவர்வாய்ப்பைந்தொடி கரியமென்கூந்தல், தேனினமூரன்றுஅகைந்துநாறாடுஞ் சிலைமலர்த்தொடையொடுஞ்சேர்ந்து, கானமும்புழுகுங்கமழ்தரச்சீவிநன்னிறுநெறித்திருந்தவே,

(இ-ள்) பால்-பாலினது—நலம்-இனிமையை—கொண்ட-(தன்னிடத்திலே)கொண்ட—பணி-வணக்கம்பொருந்திய—மொழி-சொல்லையும்—துவர்-பவளம்போலும்—வாய்-வாயையுமுடைய—பைந்தொடி-தமயந்தியினது—கரிய-கருமைபொருந்திய—மென்-மெல்லிய—கூந்தல்-கூந்தலென்றுசொல்லப்படுகின்றபொருள்—நீனிறம்-நீலநிறம்பொருந்திய—முகிலோ-மேகமோ—பசிய-பசுமைபொருந்திய—சைவலமோ-கொடிப்பாசியோ—நெடுந்திரை-நெடியகடலலைகளாலே—ஒழித்த-ஒழிக்கப்பட்ட—தெள்ளறலோ-தெள்ளியகருமணலோ—தேன்-வண்டுகளது—இனம்-கூட்டமானது—மூரன்று-ஒலித்து—அகைந்து-நெருங்கி—நாறு-மகரந்தத்தில்—ஆடும்-விளையாடப்பெறுகின்ற—சிலைமலர்-கோட்டுப்பூக்களாகிய—தொடையோடும்-மாலையோடும்—சேர்ந்து-கூடப்பெற்று—கானமும்-கஸ்தூரியையும்—புழுகும்-புழுகையும்—கமழ்தர-பரிமளிக்க—சீவி-தடவப்பெற்று—நன்னிறு-பாகுபிரிவினையான—நெறித்து-குடியிருக்கப்பெற்றது அப்பொருள் எ-று. (கருத்து) அன்னத்தமயந்திகூந்தற்சிறப்பைச்சொல்லியது. (௰௧)

கன்னவார்வனப்பிற்சிந்துரத்திட்டிக்கவின்செய்பொன் னிறத்தகரப்பிறந்த, தன்பிறைநெகொழுந்தோன்றுனநெற்றிலகந் தைபல்வார

னுர்கவினேயிவர்க்கும்; தென்கடலமிழ்தின் கனிந்தவமிழ்தசொற்றேயி மைமுகத்தொளிர்ப்புருவம், வெண்கதிர்குடையிலிரதியுமதனும் வைத்த கைவில்லினைப்பொருவும்.

(இ-ள்) கண்-கண்களின் பார்வையை—கவர் - தன்னிடத்தேயீழுத்துக்கொள்ளுகிற—வனப்பின் - அழகையுடைய—சிந்தூரம்-சிந்தூரதிலகத்தை—தீட்டி-எழுதப்பெற்று—கவின்செய்-அழகைச்செய்கின்ற—பொன்னிறத்ததாய்-பொன்னிறத்தையுடையதாகி—சிறந்த-உயர்ந்த—தீஞ்-குளிர்ச்சிபொருந்திய—பிறைக்கொழுந்தொன்று - ஓரிளம்பிறையானது—உளதெனின்-உளதாயின்—மையல் - மயக்கத்தினது—திலதம்-சிறந்ததிலகத்தையுடைய—வாள்- ஒளிபொருந்திய—நுதலினை-நெற்றியை—நிகர்க்கும்-(அது) ஒக்கும்—தெள்-தெள்ளிய; கடல்-பாற்கடலினது—அமிழ்தின்-அமிர்தம்போல—கனிந்த- முதிர்ந்த—அம்-அழகிய—இம் மதுரம்பொருந்திய—சொல் - சொற்களையுமுடைய—தேயிழை-தமயந்தியினது—முகத்து - முகத்திடத்தே—ஒளிர்-விளங்காநின்ற—புருவம்-இரண்டுபுருவங்களும்—இரதியும் - இரதிதேவியும், மதனும்-மன்மதனும்—வெண்கதிர்-சந்திரனாகிய—குடையில்-குடையின்கண்ணே—வைத்த-வைக்கப்பட்ட—கைவில்லினை - (அவர்கை) வில்லிரண்டையும்—பொருவும்-ஒத்திருக்கும்-எ-று (கருத்து) நெற்றிச்சிறப்பும்புருவங்களின் சிறப்புஞ்சொல்லியது எ-ம். (௬௨)

குமிழ்மிசைபதிந்து குழையெதிர்சென்று கொலைத்தொழின் மறலியைப்பயிற்றியமிழ்தினின்விளர்த்துக்கடுவினிற்கருகி யையரி சிதறி மைதோய்ந்து, கமலமென்மலரை வளம்படுத்திய வேற்கண்ணிணைமா ன்மருணோக்கந் தமதெனக்கவர்ந்துகொண்டவோ மடமான்றடங்கணி ன்செயல்கவர்ந்தனவோ.

(இ-ள்) குமிழ்-குமிழம்பூவினது—மிசை - மேற்பக்கத்தில்—பதிந்து-பொருந்தி, குழை-குழையெனப்படுகின்றகாதுக்கு—எதிர் - முன்பக்கத்து-சென்று—கொலை-கொல்லுதலாகிய—தொழில் - தொழிலை, மறலியை-யமனுக்கு—பயிற்றி-கற்பித்து— அமிழ்தினில் - அமுதத்திலும்—விளர்த்து-வெளுப்புற்று—கடுவினில்-விடத்திலும், கருகி-கறுத்து, ஐயரி-அழகியரேகைகள்—சிதறி-சிதறப்பெற்று—மை- அஞ்சனத்திலே—தோய்ந்து-மூழ்கி—கமலமென் - தாமரையெனப்படுகின்ற—மலரை-பூவை—வளம்-காட்டில் (நீரில்) படுத்திய-அடைவித்த—வேல்- வேல்போலும்—கண்ணிணை (தமயந்தியின) கண்களிரண்டும்—மான் - மானினது—மருள் - மருட்சிபொருந்திய—நோக்கம்-பார்வையை—தமதென - தம்முடையதென்று—கவர்ந்துகொண்டவோ-கொண்டதோ—மடமான்- தமயந்தியினுடைய—தடம்-விசாலம்பொருந்திய—கணின்-கண்களினது—செயல்-செய்கையை—கவர்ந்தனவோ (அம்மான்கண்கள்) வெளவிக்கொண்டனவோ-எ-று* (இவைகளைக்கொண்டு-வேற்றுமையியல் உடம்-குறிப்பு(மொழுகுபெயராகு-) இவ்விருபாலர்க்கும்-என்றுகூறுப வென்றனவாகுமென்றறிக) (கருத்து) கண்களின்சிறப்புச்சொல்லியது என்பதாம். (௬௩)



வேனில்வேள்வனப்பு நோக்குதற்கமைத்த விளங்குகண்ணடி போலொளிரும், பானலங்கண்வாடீட்டியகிடந்தசாணையின்படிவமோ கபோலம்; கான்வழிந்தொழுகுஞ்சண்பகமலரைக்கடிந்துமென்குமிழி னைத்தூர்த்துள், ளூனையுமுருக்குமொழுகுபொற்கொடி மூக்குவமையியா முரைக்குமாறரிதே.

(இ-ள்) ஒழுகு-நேர்மைபொருந்திய—பொன் - பொன்மயமாகிய—கொடி-பூங்கொடிபோலும்மவளது—கபோலம்-கதுப்பென்றுசொல்லப்படுகின்றபொருள்களானவை—வேனில் - வசந்தகாலத்திற்குரிய, வேள்-மன்மதனானவன்—வனப்பு-அழகை—நோக்குதற்கு- பார்த்தற்காக—அமைத்த (தானமைத்துக்கொண்டு) உண்டாக்கப்பட்ட—விளங்கு - விளங்குகின்ற—கண்ணடிபோ-கண்ணாடிகளோ—ஒளிரும்- விளங்குகின்ற—பானலம்-கருங்குவளைமலர்போலும்—கண்-கண்களாகிய, வாள்-ஆயுதமுடையவாள்களை—தீட்டிய-தீட்டுதற்பொருட்டு—கிடந்த - தங்கிய—சாணையின்-சாணைக்கல்லினுடைய—படிவமோ- வடிவங்களோ—கான் வாசனையானது; வழிந்து-பெருகப்பெற்று—ஒழுகு - நீண்ட—சண்பகமலரை-சண்பகப்பூவை—கடிந்து-கோபித்து—மென்குமிழினை- மெல்லிய குமிழம்பூவை—தூர்த்து-தூர்த்தி—உள்-(கண்டோர்)உள்ளத்தையும்—ஊனையும்-உடம்பையும்—உருக்கும்-உருக்காநின்ற—மூக்கு (அவளது) மூக்குக்கு—உவமை-உபமானத்தை—யாம்-நாம்—உரைக்குமாறு-சொல்லுமவழி—அரிது-இல்லை—எ-று (கருத்து) கபோலங்களின் சிறப்பும்மூக்கின்சிறப்புஞ்சொல்லியது என்பதாம். (௬௪)

வள்ளைவார்காது நோக்கினருள்ளமகிழ்ந்தினிதாடுபொன்னூசல் கள்ளவிழாம்பற்செய்யவாய்பவளக்கடிகைவாணகையொளிதளந் தெள்ளிநிற்கோத்துப்பவளவள்ளத்திற்சேர்த்தியதாகுமஞ் செறிசொல், கிள்ளையங்கிளவிகுயின்மொழியலகியாதெனக்கிளக்கலாவதுவே.

(இ-ள்) வள்ளை-வள்ளையிலைபோன்ற—வார் - நீட்சிபொருந்திய—காது(அவள்) காதுகளானவை—நோக்கினர் - பார்த்தவர்களுடைய, உள்ளம்-உள்ளங்களானவை—மகிழ்ந்து-களித்து, இனிது-இனிதாக—ஆடி-ஊசலாடப்பெறுகின்ற—பொன்னூசல்- பொன்னூஞ்சல்களாகும்—கள் - தேனையுடைய—அவிழ்-மலர்ந்த—ஆம்பல்-அல்லிமலர்போலும்—செய்ய-சிவப்புநிறம்பொருந்திய—வாய்- (அவள்)உதடானது—பவளக்கடிகை-பவளத்துண்டாகும்—வாள்-காந்திபொருந்திய—நகை-(அவள்)வாயைச்சேர்ந்த பல்வரிசையானது—ஒளிர்-விளங்குகின்ற—தளம்-முத்துக்களை, பவளவள்ளத்தில்-பவளக்கிண்ணத்தினுள்ளே, தெள்ளி-தெளிவுடையதாக—கோத்து - கோத்தல்செய்து—சேர்த்தியதாகும்-சேர்க்கப்பட்டகோவையாகும்—அஞ்செறி - அழகாணிறைந்த சொல்(அவள்) சொல்லுக்கு—கிள்ளை - கிளியினது, கிளவி-சொல்லும் குயில்-குயிலினது, மொழி-சொல்லும், அலகு (உபமானங்கள்)எல்லாம் யாதென (வேறே)யாதென்று—கிளக்கல்-சொல்லுதல்—ஆவது-ஆகும்-எ-று (கருத்து) செவியால்பல்சொல் இவற்றின்சிறப்புச் சொல்லியது என்பதாம். (௬௫)

ஒருகோளரிசிரிந்தசிர்மகரிவன்னனுந்தியக்காட்சியை புறைவேசான், முழுமதிக்கலையுளிதைந்தபேர்முகைமொண்டுகொண்டயரியந்தகைன்ற, மைழுமகர்செவிக்கட்டமயந்திவதனம்வகுத்தனன்கரத்திறல்செய்த, புழைவழித் * தோன்றும்விசும்பினையன்றேகளங்கமென் றினைரும்புகல்வார்,

(இ-ள்) ஒருகு-நின்கின்ற—ஒளி-காந்தியையும்—விரிந்த- பரந்த—கதிர்-கிரணங்களையும், மணி-நீலமணிபோலும்—வண்ணன் - நிறத்தையுடைய திருமாலது—உந்தி-நாபியிலுண்டாகிய—தாமரை - தாமரைப் பூவில்—உறைகின்றவன்-வாசஞ்செய்கிறவன் முகக்கடவுள்—முழுமதிக் கலையாள்-பதினாறுகலைகளாலும் நிறைந்தசந்திரனிடத்தே, சிறந்த - சிறம்பிய—பேரழகை - உயர்வாகியசாரத்தை—மொண்டுகொண்டு (கையினாலேமொண்டுகொண்டு—அரி-இரேகைகள்—படர்ந்து- படரப்பெற்று—அகன்ற-விசாலித்த—மழை - குளிர்ச்சிபொருந்திய—மகர்-கனித்திருக்கின்ற—செகிடு-செவிய—கண்-கண்களையுடைய—தமயந்தி-தமயந்தியினது—வதனம்-முகத்தை—வகுத்தனன் - படைத்தான்—கரத்திறல்-கையிறல்—காடுத்த-வடுக்கப்பெற்ற—புழைவழி- துவாரத்தின்வழியே—தோன்றும்-காணப்படுகிற—விசும்பினையன்றே - நீலநிறமுள்ள) ஆகாயத்தையன்றோ; களங்கமென்று களங்கமென்று—இனைமும்-இப்போது—புகல்வார்-சொல்லுவார்(உலகத்தார்)—எ-று. * இலக்கணக்கொத்து, வினையியல்-௩௬-ஞ்சூத்திரம், ஒருமுதொகையை துவைரிவடையார்பலர் - படுதொகையொடுதொகையேமுன் பார்சிலர், இவ்விதியால்தோன்றப்படுவிசும்பெனப்படுதொகைவிரிக (கருத்து) தமயந்தியினதுமுகத்தின் சிறப்புச்சொல்லியதுஎன்பதாம், (௰௬)

செய்யபுயமழுகப்பக்கரும்பேய்ப்பதிரண்டழகொழுகுமென்றடக்கைதான், பெய்வளைமுன்னைக்கிணையயன்வகுத்தபொருள்களிற்பேசுவதேவனுசெய்யவன்கதிர்களலர்த்துசெங்கமலமெல்லடிக்குடைந்தைவென்றல், கைகளினைமலருக்கிணையெனவுரைத்தல்கழிமடமையல்லது வேறிலையே.

(இ-ள்)மெல்-மெல்லிய—தடம் - பெரிய—தோள் - தமயந்தியினுடையத்தோள்களானவை—செய்ய—கமுனியிலிருக்கிற—அழகமை அதிர்ந்ததையுடைய—பசுங்கரும்பேய்ப்ப - பசியகரும்புபோல—திரண்டு-நரட்சிபொருந்திய—அழகொழுகும்- அழகுபெருகப்பெற்றிருக்கும்—பெய்வளை -இடப்பட்டவளையல்களையுடைய—முன்கைக்கு -(அவண்)முன்னங்கைகளுக்கு—இணை - உபமானம்—அயன்-பிரமதேவன்—வகுத்த-படைக்கப்பட்ட—பொருள்களில் - பொருள்களுள்ளே—பேசுவது-சொல்லத்தகுவது—எவன்-யாது—செய்யவன்-சூரியனுடைய—கதிர்கள்-கிரணங்களால்—அலர்த்து-மலர்த்தப்படுகின்ற—செங்கமலம்-செந்தாமரைமலர்களானவை—மெல்லடிக்கு - மெல்லியஅடிகளுக்கு—உடைந்தனவென்றல்- தோற்றனவென்றுசொன்னம்—இணை-இரண்டாகும்—கை - கைகளாகிய—மலருக்கு-மலர்களுக்கு—இணையென-உபமானமென்று, உரைத்தல்-சொல்லுதற்குக்காரண



ம்—கழி-மிகுந்த—மடனலது- அறியாமையல்லாமல்—வேறு-மற்றொருகாரணம்—இலை-இல்லை—எ-று. (கருத்து) தோள்கள் முன்னங்கைகள் இவற்றின்சிறப்புச்சொல்லியது-எ-ம். (௰௭)

இழையிடைபுகாதுமார்பிடங்கொண்டவேரிளவனமுலைவள்ளைக் குழைபொருங்கண்ணிஎழிற்கடற்பிறந்தகுமிழியோ வதனிடைநீந்த, விழைவுறுமதனும்பருவமுமமைத்துவிளங்குபொற் குடங்கொலோவதனிற், றழைசிறைநேமிப்புட்கொலோகமலமுகைகொலோவென்கொல்சாற்றுவதே.

(இ-ள்.) இழை-நூலும்—இடை-நடுவிலே—புகாது-நுழையாதிருக்கும்படி—மார்பு-மார்பை—இடம்-(தமக்) கிடமாக—கொண்ட-கவர்ந்த—ஏரிளவனம்-அழகும் இளமையும் சந்தனக்கோலமும் பொருந்திய—முலை- முலைகளென்றுசொல்லப்படுகிற பொருள்களானவை—வள்ளை- வள்ளைபோலுங்காதுகளைச்சூழ்ந்த—குழை - குழைகளோடு—பொரும்-போர்செய்கின்ற—கண்ணி-கண்களையுடையவளது—எழில்- அழகாகிய—கடல்-கடலின்கண்ணே—பிறந்த - உண்டாகிய—குமிழியோ- குமிழிகளோ—அதனிடை-அக்கடலின்கண்ணே—நீந்த-நீந்துதற்கு—விழைவுறு-ஆசைகொண்ட—மதனும்- மன்மதனும்—பருவமும்- மங்கைப்பருவத்திறலும்—அமைத்து-உண்டாக்கப்பட்டு—விளங்கு-விளங்குகின்ற—பொற்குடங்கொல்-பொற்குடங்களோ—அதனில்- அக்கடலிலிருக்கின்ற—தழை- தழைந்த—சிறை - சிறைகளையுடைய நேமிப்புட்கொல்-சக்கரவாகப்பறவைகளோ—(அதனில்)அக்கடலிலே தோன்றிய, கமலமுகைகொல்-தாமரையரும்புகளோ—என்-(இவற்றுள்ளே) யாது—சாற்றுவது (என்றுஞ்) சொல்லப்படுவது—எ-று. (கருத்து) முலைகளின் சிறப்புச்சொல்லியது-எ-ம். (௰௮)

மால்புரிமுலைமென்கமலநாண்முகையில் வண்டுவீழ்மாலையோபசும்பொற், சேலையீதணிந்தமேகலைமணியிலொருசுடர் செவ்வனின்றதுவோ, நாவிலுநடக்குமருங்கிற்றரங்கனுண்ணிதிற்சலாகைசேர்த்தியதோ, வாலிளந்தளிரினழகுவீற்றிருந்தவவ்வயிறணி மயிரொழுங்கே.

(இ-ள்.) ஆல்-ஆலினது—இளந்தளிரின் - சிறுதளிரினது—அழகு- அழகானது—வீற்றிருந்த-கொலுவிருக்கப்பெற்ற—அவ்வயிறு - அந்தமயந்திவயிற்றை—அணி-அலங்கரித்துக்கொண்டிருக்கின்ற—மயிரொழுங்கு-மயிரொழுங்கென்றுசொல்லப்படுகிறபொருளானது—மால்-ஆசையை—புரி-செய்கின்ற—முலை-முலைகளாகிய—நாள் - மலரும்பருவத்தையுடைய—மெல்-மெல்லிய—கமலம்- தாமரையினுடைய—முகையில்-அரும்புகளில்—வீழ்- (வந்து) விழுகிற—வண்டு-வண்டுகளது,மாலையோ-வரிசையோ—பசும்பொன் - பசியபொன்மயமாகிய—சேலையீது-புடைவையின்மேல்—அணிந்த- தரிக்கப்படுகிற—மேகலை-மேகலாபரணத்தினது—மணியின்-நீலமணியினது—செவ்வன் - நேராக—நின்றது-மேலெழுந்துநின்றதாகிய—ஒருசுடரோ - ஒருசுதிரோ—நாவி

லும்-இறைமீனுமதிகளாக—நடக்கும்- ஆர்கின்ற—மருக்கு-இடைப் பனவாது—இறு-அழியாதிருக்க—அக்கன்- மன்மதனைல்—அன்னமி தின் - அன்னிதாக—சேர்த்திய அ - சேர்க்கப்பட்டதாகிய—சலாகை யோ.இரும்புக்கம்பியோ—எ-று. () குவலயாகந்தம்-அணியியல்-குத்தி ரம்—வடமொழித்திரிபினிலவ்வென்மொழிகளி-லங்காரியையு மகரமு முன்வரும்.இவ்விதியால் அங்கயிலான் அகங்கனென்றாயிற்று(கருத்து) வயிற்றுமயிரொழுங்கின்சிறப்புச்சொல்லியது-எ-ம். (௰௯)

படைப்புழிவேதன்கமலமென்மலரைப்பழிக்குமென்காத்திறன் னைவப், பிடித்தசனும்விரல்களழுந்தியவளையோவெட்புறு மங்கையம்ப ருவ, மடித்தலஞ்சேர்த்தியேறுசற்கமைத்தபடிகொலோவவ்வயிறணி ந்த,மடிப்புறுவளையினழகினுக்குவமைநாமுரைக்குமாறினையோ

(இ-ள்.) அவ்வயிறு-அத்தமயந்தியின்வயிற்றினன்—அணிந்த-தரிக் கப்பட்டிருக்கிற—மடிப்பு - மடிப்புகளென்றுசொல்லப்படுகிற் பொரு ள்களானவை—படைப்புழி- (அவளைப்) படைத்தபோது—வேதன்-நா ன்முகக்கடவுளானவன்—கமலமென் - தாமரையெனப்படுகிற—மல ரை-பூவை—பழிக்கும்-இகழ்கின்ற—மென் - மெல்லிய—கரத்தினன் கையினலே—இவை-இடையை—பிடித்தலும் - பிடித்தளவிலே— விரல்கள் - (அவன்கை) விரல்களானவை—அழுந்திய-அழுந்துதலா லுண்டாகிய—வளையோ - மடிப்புகளோ—வெட்புறு - விரும்பப்படுகின் ற—மங்கையம்பருவம்-மங்கைப்பருவமாகிய—(பெண்)அடித்தலம் - அடித்தலங்களை—சேர்த்தி - ஊன்றி, ஏறுதற்கு - ஏறுதற்காக—அமைத் த(அவனுலே)உண்டாக்கப்பட்ட—படிகொலோ-சோபானங்களோ, அ வையின்-அம்மடிப்புகளது—அழகு - மிகுந்த—அழகினுக்கு- சொல்லத்தி யத்தக்கு—உவமை-உபமானம்—நாம்-நாம்—உரைக்குமாறு-சொல்லும் மாறு—எவன்-யாது—எ-று. (கருத்து) வயிற்றுமடிப்புகளின் சிறப்புச் சொல்லியது—எ-ம். (உ0)

கணைக்குபூத்தொருகாழ்ப மணிவடங்கிடந்ததுணையிள வனமுலைக ளேந்தி, வணங்கினாடோறுந்தேய்ந்ததோபெருகும் வனப்பெனும் கடலு ளாழ்ந்ததுவோ, கணங்கொள்வண்டார்க்குங்கணைமதன்கண்ணேறெய் தலுங்கழிந்ததோவன்றி, யணங்கரவல்குற்றேர்மிசைவதியு மகங்கனே விடையறிகிலேமால்.

(இ-ள்.) இடை-(அத்தமயந்தியினது) இடையென்றுசொல்லப்படு கிறபொருளானது, கணைக்கு-தேமல்—பூத்து-படரப்பெற்று,ஒருகாழ்- ஒளவாகியசரங்களையுடைய—மணிவடம்-ரத்னஹாரம்—கிடந்த- கிட க்கப்பெற்ற—துணை-இரண்டாகிய—இளவனம்-இளமையுஞ் சந்தனக் கோலமும்பொருந்திய, முலை-முலைகளை,சுமந்து-சுமந்தலால்,வணங்கி வளைந்து—நாடோறும் - தினந்தோறும்—தேய்ந்ததோ- (சிறிதுசிறிதா கத்) தேய்ந்துபோயிற்றோ—பெருகும்-பொங்குகின்ற—வனப்பெனும்- அழகென்கிற—கடலுள்-கடலுள்ளே—ஆழ்ந்ததுவோ - மூழ்கிப்போ யிற்றோ—கணம்-கூட்டத்தை—கொள்-கொண்ட—வண்டு - வண்டுக



ளானவை—ஆர்க்கும்-ஒலிக்கப்பெறுகின்ற—கணை - பூவம்பையுடைய —மதன் - மன்மதனது—கண்ணேறு -பார்வைக்குற்றமானது—எய்த லும்-அடைந்தமாத்திரத்திலே—கழிந்ததோ-இறந்துபோயிற்றோ—அ ன்றி-அல்லாமல்—அணங்கு-அழகாகிய—அரவு - பாம்பின்படம்போ லும்—அல்குல் - அல்குலாகிய—தேர்மிசை - தேரின்மேலே—வதியு ம்-இருக்கின்ற—அகங்கனே-அங்கமில்லாதமன்மதனே—அறிகிலேம்- (யாம்) அறிந்திலோம்—எ-று. (கருத்து) இடையின்சிறப்புச்சொல்லிய து-என்பதாம். (உக)

வெங்கதிர்க் () கடவுள்கொடிஞ்சியந்தேர்க்குவியப்புறவாழியொ ன்றமைத்த, பங்கமில்தொழிலின்பயிற்சியாலநங்கன்பைங்கிளிக் கூந்தன் மான்றேர்க்குச்,செங்கரமருந்தமலரயன்வகுத்ததிகிரியோசெய்யபொ ற்றட்டோ, வங்கரவல்குலதனளவுணர்கிறெடவாவாவினதளவே.

(இ-ள்.) அங்கு-அவ்விடத்தைச்சேர்ந்த—அரவு-பாம்பின்பட ம்போலும், அல்குல்-அல்குலென்றுசொல்லப்படுகின்ற பொருளான து—மலர்-தாமரைப்பூவின் நகின்ற—அயன்- நான்முகக்கடவுளானவ ன். வெங்கதிர்க்கடவுள்-சூரியதேவனுடைய, கொடிஞ்சி- மேன்மொட் டையுடைய, தேர்க்கு-இரதத்திற்கு—வியப்புற- ஆச்சரியப்பட்ட,ஆழி யொன்று-ஓருருளையை, அமைத்த - அமைவித்த,பங்கமில்-பழுதில்லா த—தொழிலின்-தொழிலினது—பயிற்சியால்-பழக்கத்தினலே. அநங்க ன்-மன்மதனது—பைங்கிளி-பச்சைக்கிளியாகிய—கூந்தன்மான்- குதி ரையையுடைய, தேர்க்கு- இரதத்திற்கு, செங்கரம் - செய்யகைகளான வை—வருந்த - வருந்தும்படி—வகுத்த-(அவனுலே) படைக்கப்பட்ட— திகிரியோ-ஓருருளையோ—செய்யபொற்றட்டோ-(அக்கடவுளால் அம் மன்மதனுக்குப்படைக்கப்பட்ட) செம்பொற்கொடிகமோ—அதன்-அ வ்வல்குலினது—அளவு(பரப்பி)னளவு—உணர்கின்-சொன்னல்—ஆ டவர்-காளையரது—அவாவினது (அதன்மேலுள்ளதாகிய) ஆசையினது —அளவே-அளவேயாகும்(அது)எ-று. அகத்தியக்குத்திரம். அது வு மாதுவுமவ்வுமுடையவு- மாறனுருபென்றறைதல்வேண்டும். இவ்விதி யாலுடையவுருபுஞ்சிறப்பேனமறிக (கருத்து) அல்குற்சிறப்புச்சொ ல்லியது-என்பதாம். (உஉ)

மாந்தளிர்மேனியரம்பையைவனப்பின்வென்றமான் றிரண்மணி க்குரங்கு, கூந்தலம்பிடியின்கொழுங்கரந்தாங்குதுகுலவிய கவின்குடியி ருந்து, செந்தனுண்பஞ்சின்மெனமயவாகிச்செழுமணி மேகலைதாங்கி, யேந்தெழிற்கன்னியரம்பையின் குலங்களியாவையு மெளிதின் வென் றனவே.

(இ-ள்.) மா-மாவினது—தளிர்-தளிர்போலும்—மேனி - வடிவத் தையுடைய—அரம்பையை-அரம்பையென்பவளை—வனப்பின்-அழகி னலே—வென்ற-வென்ற—மான் - தமயந்தியினுடைய—திரண்மணி-தி ரட்சியும் அழகும்பொருந்திய; குரங்கு - துடைகளானவை—கூ கூந்தலையுடைய—பிடியின்-பெண்யானையினது—கொழுங்கரம்,

யதுகிக்கைகளை—தூக்கு-தூக்கி—குலவிய-விளங்குகின்ற—கலிட்—காந்தியானது—குடியிருந்து-குடியிருக்கப்பெற்று, சேந்த-சிவந்த—துன்-துன்னிய—பஞ்சின்-பஞ்சினுமதிகமான, மென்மயவாகி- மெல்லிய குணத்தையுடையனவாகி—செழுமணி- செழியநவமணிகளாலாகிய மேகலை-மேகலையை—தாங்கி-சுமந்து—வந்து- வந்தப்பட்ட—எழில்-அழகையுடைய—கன்னியரம்பையின்- இளவாழைகளது—குலங்களியாவையும்-குலங்களையெல்லாம்—எளிதின்- வருத்தமில்லாமல்—வென்றன-வென்றன—எ-று.(கருத்து)அவைகளின் சிறப்புச்சொல்லியது-எ-ம்

பூங்கழைகுழைக்கும்வேனில் வேள்பகழிபொதிந்த பொன்னாலம் வெங்கொடிப்ப, வாகைவெற்றிகுறித்திட விரிஞ்சனமைத்தகாளம் வெரீஇயரற்றத்; தேங்கமழ்வாவிநீரிடைக்குளித்துச்சினைவரால் மறைந்திடவரையிற், றூங்குதேன்பெய்தபசிளங்கழையைத்தோழமைகொண்டனகணைக்கால்.

(இ-ள்) கணைக்கால்-(தமயந்தியினுடைய)கணைக்கால்களானவை—பூங்கழை-அழகியகருப்புவில்லை—குழைக்கும்-வளைக்கின்ற, வேனில்-வசந்தகாலத்திற்குரிய—வேள்-மன்மதனது—பகழி - பூவம்புகளால், பொதிந்த-நிறைந்த—பொன்-பொன்மயமாகிய—ஆலம் -அம்புக்கூடானது—வெங்கொடிப்ப-(தோற்றுப்) புறங்கொடுக்கவும்—ஆங்கு- அந்தக்காலத்தில்—அவன்-அம்மன்மதனது,வெற்றி-வெற்றியை—குறித்திட-குறிக்கும்படியாக—விரிஞ்சன்-நான்முகனால்—அமைத்த- படைக்கப்பட்ட—காளம்-காளமானது—வெரீஇயரற்ற- அஞ்சியொலிக்கவும்—தேங்கமழ்-தேன்மணக்கப்பெற்றிருக்கின்ற—வாவி- தடாகத்திலுள்ள—நீரிடை-நீரின்கண்ணே—குளித்து-முழுகி—சினை - முட்டையுள்ள—வரால்-வராலானது—மறைந்திட - ஒளித்துக்கொள்ளவும்—(செய்து) வரையில்-மலையின்கண்ணே, தூங்கு-தங்கிய—தேன்- தேனை—பெய்த-வார்த்துவளர்க்கப்பட்ட—பசிளங்கழை- பசுமையுமிளமையும் பொருந்திய மூங்கிலோடு—தோழமை - நட்பை—கொண்டன-கொண்டிருக்கின்றன—எ-று. (கருத்து) கணைக்கால்களின் சிறப்புச்சொல்லியதுஎன்பதாம். (௨௪)

முருகவிழ்செய்யகமலமுன்னெனைமுழ்க்குமுகமலர்ந்துறுகணீர்சிந்தி, யொருபகந்தாளின் வனத்தினின் றரிதினுஞற்றிய தவத்தினாலன்றோ விரிமலரசோகின்றளிர்கலைக்கவற்றிமென்சிறையனமெனமிழற்றும், பரிபுரமணிந்துபஞ்சியூட்டிய பொற்பதத்தினைச் சிறுதுபோன்றனவே.

(இ-ள்.) முருகு-பரிமளமானது—அவிழ்-விரியப்பெற்றிருக்கின்ற—செய்யகமலம்- செந்தாமரைமலர்களானவை—உன்னெனமுழ்க்கு- மனமுருகி(உட்கட்டுவிட்டு, முகமலர்ந்து-முகமகிழ்ச்சிகொண்டு(மகிழ்ந்து விரிந்து) உறு- மிகுந்த—கணீர் - ஆனந்தக்கண்ணீரை (தேனையுங்கொ)சிந்தி-பொழிந்து—ஒருபகந்தாளின்-பசியநெருகாலிலே(ஒருகாலாந்திறலே)வனத்தில்-காட்டிலே(நீரிலே) நின்று-நின்று—அரிதின்-அரி



தாய்—உஞற்றிய-செய்த—தவத்தினாலன்றோ-யோகத்தினாலன்றோ—விரி-விரிந்த—மலர்-மலர்களையும்—அசோகின் - அசோகத்தினது—தளிர்கலம்-தளிர்களுயர்ந்ததையும்—கவற்றி - துன்பப்படுத்தி—மென்சிறை-மெல்லியசிறைகளையுடைய—அனமென- அன்னம்போல—மிழற்றும்-ஒலிக்கின்ற—பரிபுரம்- சிலம்பை—அணிந்து - தரித்து—பஞ்சி-செம்பஞ்சையூட்டிய- அப்பப்பெற்ற—பொன் - பொன்னிறம்பொருந்திய—பதத்தினை - அடிகளை—சிறிதுபோன்றன-சிறியவளவிலொத்தன—எ-று(கருத்து)பாதங்களின் சிறப்புச்சொல்லியதாமென்பதாம். (௨௫)

இத்தகைவனப்பின்மடவரறன்னையெவ்வழிக்கண்டனையென்னிற், பைத்தபாம்பல்குலரம்பையர்வதியும்பதிதுறந்திம்பரிற்போந்து, மொய்த்தபூம்பொய்கைகாணியதேயமுழுவதுங்குறுகினனவற்றுள், கைத்தலமமர்ந்தநெல்லியங்கனியிற்கண்டனன் விதர்ப்பர்கோனகரில்,

(இ-ள்)இத்தகை-இப்படிப்பட்ட—வனப்பின்-அழகினையுடைய,மடவரறன்னை-மங்கையை—எவ்வழி - எவ்விடத்தே—கண்டனையென்னின்-பார்த்தாயென்றுவினவினால்—பைத்தபாம்பு - படம்விரித்தபாம்புபோலும்—அல்குல்-அல்குலையுடைய—அரம்பையர் - தெய்வமாதர்—வதியும்-தங்கும்—பதி-நகரத்தை—துறந்து-விட்டுநீக்கி—இம்பரில்-இவ்வுலகத்தில்—போந்து-வந்து—மொய்த்த-நெருங்கிய—பூ - மலர்களையுடைய—பொய்கை-தடாகங்களை—காணிய - பார்க்கும்படியாக—தேயமுழுவதும்-தேயங்களனைத்தையும்—குறுகினன் - அடைந்தேனு—அவற்றுள்-அத்தேயங்களுள்ளே—கைத்தலம்-உள்ளங்கையில்—அமர்ந்த-தங்கிய—நெல்லியங்கனியின்- நெல்லிப்பழத்தைப்போல—விதர்ப்பர்கோன் வீமராஜனது—நகரில்-பட்டணத்தில்—கண்டனன்(அவளைப்)பார்த்தேன்—எ-று(கருத்து)இவ்வழகுள்ள தமயந்தியைவீமராஜன்பட்டினத்திற்கண்டேனென்றன்னஞ்சொல்லியதாமென்பதாம். (௨௬)

காண்டலுமவட்குநேராமகளிர்தம்மிலுங் கண்டிலேன்கதித்துப், பூண்டயங்கிளைய வனமுலைதிளைக்கும் புயமுடையிளைஞன்யாரொன்று, தேண்டினன்மும்மையுலகிலுங்காணேனிருந்தலர்க்கசனியேறன்ன, னாண்டகாய்நின்னைக்காண்டலுநினைந்தேனவ்வளைத்தோளவைக்கினையே,

(இ-ள்) திருந்தலர்க்கு-பகைவருக்கு, அசனியேறன்ன-இடியுஞ்சிங்கமும்போலும்—ஆண்டகாய்-ஆண்மையுடையவனே—காண்டலும்-கண்டவளவிலே—அவட்கு-அவளுக்கு—நேர்-நிகர்வாளை—அராமகளிர்தம்மிலும்-தெய்வமங்கையருள்ளும்—கண்டிலேன்- பார்த்திலேன்—கதித்து-பருத்து—பூண்-ஆபரணங்களால்—தயங்கு - விளங்காநின்ற—இளைய-இளமைபொருந்திய—வனம் - சந்தனக்கோலத்தையுடைய—முலை-முலைகள்—திளைக்கும்-தழுவுதற்குத்தகுதியுள்ள—புயம்-தோள்களை—உடை-உடைய—இளைஞன்-காளை—யாரொன்று - எவனென்று—தேண்டினன்-தேடினேன். மும்மையுலகிலும்-மூன்றுலகங்களிலும்—காணேன்-கண்டிலேன்—நின்னை-உன்னை—காண்டலும்-கண்டவுடன்

ளவிலே — அவ் - அந்த — வளை - வளையல்களையுடைய — தோள் - தோள்களையு
முடைய — அணங்கினை - கன்னிகையை, சினைக்கேதன் - சினைக்கேதன் — என - என
ச்சொல்காப்பியம் வினையியல் - ௨௰ - சூத்திரம், யான் அவளை உம்பெருமிவர்
கிளவி - பக்கத்தினை யருங்கின் முப்பாற் குமரிக்கே (கருத்து) இவ்வருக்குக்
யதின் முன் நூலசிறுங்காலே என்னுடன் சேர்க்கண்ட வனே தினைத்தேனே, என்(௰)

கேழ்இளர் தாரவட மிளமுலையிற் கிடப்பினன்றே சிறப்பெய்து,
மாழையோ ரன்ன கண்ணனி மார்பிடங்கொண்டு வளரிளவன முலையினைத், பழி
யுந்தடந்தோட் குவட்டிணை நெருங்கப்புல்லினன்றே பயன்பயக்கு,
மாழியாய் சினக்குவளைப்பல்லிலம் வளைவர்ந்த பாடலிமயால்.

(இ-ள்) ஆழியாய் - சக்கிரவர்த்தியே — கேழ் - நிறத்தினாலே — இளர் -
விளங்காநின்ற — தரளவடம் - முத்துமாலையானது — இளமுலையில் - இ
ளமைபொருந்திய முலையின் கண்ணே — கிடப்பினன்றே - கிடந்தாலன்
றே — சிறப்பெய்தும் - விளங்கும் — மாழை - மாவடுப்போலும் — ஒள் - ஒ
ளிபொருந்திய — கண்ணனி - கண்களையுடையவளது — மார்பு - மார்பை,
இடங்கொண்டு - இடமாகக்கொண்டு — வளர் - வளர்கின்ற — இளவனமு
லை - இளமையுஞ்சந்தனக்கோலமும் பொருந்திய முலைகளானவை — தின்
அ - உன்னுடைய — பழியத்தடந்தோள் - வலிமையும் விசாலமும்பொரு
ந்தியதோள்களாகிய — குவட்டிணை - மலைகளை — நெருங்க - அழுந்த — பு
ல்லினன்றே - சேர்ந்தாலன்றே — பயன்பயக்கும் - விளங்கும், இனக்கு -
உனக்கு — வளப்பு - அழகானது — அவன் - அந்தமயந்தியினாலேயே - இ
தனாயின் — அலர்ந்த - மலர்ந்த — பாடலம் - பாதிரிப்பூவிற்கு — ஆராய்
ந்துபார்க்கும் - என - து [பாதிரிப்பூத்துக்காயா து] (கருத்து) சக்கிரவர்த்தியே த
மயந்தி முலைகளானவை உன்னுடைய தோள்களைச் சேர்ந்தாற்பயனடையுமே
அவளில்லாவிடில் உனக்கழகுப்பயன்படாதென்பதாம். (௨௫)

கரும்புயன் மறைக்கு மதிகதிர் வேட்டல் நகாவமலர் ❊ பெறுதற்
போ, லரும்பிளமுறுவலின் முகிழ்ப்போகமையக்கியெய்துற்கரிதால், வி
ரும்பினராகிய மாருயிருந்தார் விண்ணவரிடத் தவளார்வம், புரிந்திடக்
கு நாந்தேபொழிலவட னுனத்தினைப்பொறிபயன் காணுதியால்.

(இ-ள்) ஐய - அரசனே — அமரரும் - தேவர்களும் — விரும்பினராகி
யிருந்தார் (அத்தமயந்தியை) விரும்பியிருந்தார் — அகாவமலர் - அல்லிய
லரானது — கருப்புயல் - கரியமேகத்தினாலே — மறைக்கும் - மறைக்கப்ப
ட்டிருக்கின்ற — மதி - சந்திரனது — கதிர் - கிரணத்தை — வேட்டல் - அ
னுபவித்தல் — பெறுது - பெறமாட்டாது — அதுபோல் - அம்மலர்போ
ல் — அரும்பிளமுறுவல் - அரும்புகின்றபுன் சிரிப்பையுடையவளாகிய
(அந்தேவராலவிரும்பப்பட்டிருக்கின்ற தமயந்தியினது) இளமுலை - இ
ளமுலையினது — போகம் - அனுபவமானது — நீ - நீ — எய்துதற்கு - அ
டைவதற்கு — அரிது - அரிதாயிருக்கும், விண்ணவரிடத்து - அந்தேவர்
களிடத்தே — அவள் - அம்மங்கையாளவளது — ஆர்வம் - ஆசையை — புரிந்தி
டாது — செய்யாதிருக்கும்படியாக — உனது - நினது — பேரெழில் - அப்பு
ர்வில்லாதவழகை, அவள் - அவளது — உளத்திடை - மனத்தின்கண்



ணே — பொறிப்பன் (யான்) எழுதிவைப்பேன் — காணுதி - (நீ அவ்வல
வ்வாறாயப்) பார் - என - து ❊ இலக்கணத்திரட்டு தொன்னூல்விளக்கம் எதிர்
மறையெச்சந்திரனுமவிகுதி - யாமலாதாயைப் பெயலவாமே (கருத்து)
உன்னமுனைத்தமயந்தியுடன் சேர்த்துவைப்பேன் என்று சொல்லியது
என்பதாம். (௨௬)

செய்தொழில்யாதென்றுரைப்ப பயன்றித் தெளிகுநர் தேர்வுரை
யார், செயலுறுநடன்பாடெய் தவளைப்புன்னா மேறைந்தனவெனவட
வன்னம், மெய்தசொல்லுதமுன்னேலாம்பொருள்வெறு சிபெல்லவழித
ல் போனகைப்பாக், கையினும்பகமபொற்சிறகர்தைவந்து காதல்கூர்மொ
ழிசிலபுகன்றார்.

(இ-ள்) ஐய அரசனே — தெளிகுநர் - விவேகிகள் — செய்தொழில் -
(தம்மால்) செய்யப்படும் உபகாரத்தை — பயனால் (அதன்) காரியத்தினாலே
— உரைப்பரேயன்றி - சொல்லுவரேயல்லாமல் — உரையினால் - வாக்கி
னால் — உரையார் - சொல்லார் — முற்று - முழுதும் — உடன்பாடு - (உடன்)ச
ம்மதியை — எய்துவாள் - அடையும்பொருட்டாகவே — முன்னர் -
முன்னுக்கு — அறைந்தனள் என - சொல்லினேனென்று சொல்லியதாக
— மடவன்னம் - இளமைபொருந்திய அன்னத்தினாலே — மெய் - மெய்யா
ய்ப்பட்ட — சொல்லுறுதம் - சொல்லாகிய அமிர்தமானது — உள்ளெல்லா
ம் - உள்ளிடமெல்லாம் — பாய்ந்து - பரவி — பொருகி - பெருகியெடுத்
து — மேல் - மேலே — வழிதல்போல் - (வாயவழியால்) வெளிப்படுதல்
போலும் — நகையா - நகைசெய்து — கையினால் - கரத்தினாலே — பசும
பொன் - பசியபொன்வடிவமாகிய — சிறகர் - சிறகுகளை — தைவந்து - தட
வி — காதல்கூர்மொழிசில - ஆசையிகுஞ்சிலமொழிகளை — புகன்றான் -
(அரசன்) சொன்னான் - என - து ❊ இலக்கணத்திரட்டு - பொருவியற்படலம்
தொழிற்பொர்க்கிடையிற்றோன்றுமேகாரம் (கருத்து) அரசன் அன்னத்
தைத்தடவிக்கொடுத்து ஆசையோடுசிலவார்த்தைசொல்லுவான் என்
பதாம். (௨௭)

பொலன்சிறைப்பேரனத்துக்கூறவேயடை நின்பொற்பினுக்குவமை
வேறின்று, நலங்கெழுகுணனுமுரைப்பதற்கரிதல்லெழில்பகருமுன
னூலோர், இலங்கெழிலளவுகுணமெனவுரைப்பதரிற்குமேற்கோளென
நின்னைத், தலக்குறக்கண்டேன் வீரகேசரிக்குமருந்து நின்சொல்லி
ன்மேலுளதோ.

(இ-ள்) பொலன் - பொன்வடிவமாகிய — சிறை - சிறைகளையும் — வ
ளக்கைகை - வளைத்தூண்டுபோலும் — வாய் - வாயையும் உடைய — அ
னம் - அன்னமே — நின - உனது — பொற்பினுக்கு - அழகுக்கு — உவமை
வேறு - வேறுவமை — இன்று - இல்லை — நலங்கெழு - கண்மைபொருந்திய
— குணனும் - உன்குணமும் — உரைப்பதற்கு - சொல்லுதற்கு, அரிது -
அரிதாகும் — நல்லெழில் - நல்லவழகினிலக்கணத்தை — பகரும் சொல்
லுகின்ற — முன்னூலோர் - பழையநூலோர் — இலக்கு - (ஒருபொருளி
லே) விளங்காநின்ற — எழிலளவு - அழகினளவாகவே — குணமொடு

ணமுமம்-அதிவிருக்கு)மென்று, உரைப்பார்-சொல்லுவார், இதற்கு-இந்தச்சித்திரகதத்திற்கு—மேற்கோளை-உதாரணமாக—துலங்குறி-விளங்காநிற்க—நின்னை-உன்னை—கண்டேன்-(நான்) பார்த்தேன்—விரகம்-விரகத்தாலாகிய—நோய்-காமவியாதியை—தீர்க்கும்-நீக்குகின்ற—மருந்து-ஔஷதம்—நின்சொ[illegible]ன்றுசொல்லின், வேறு-வேறாக—உளதோ-(எனக்கு)இரு[illegible]தோ-எ-று(கருத்து) அன்னமேஎன் விரகநோய்க்குமருந்துஉன்மொழிசொல்லேயல்லாதுவேறுண்டோ என்றான்னன்பதாம். (௬௧)

வெண்ணகைத்துவர்வாயணங்கெழில்பாரும் விளம்பினார் நின்மொழியவளென், கண்ணெதிர்ப்பட்டாள்போலுமெய்த்துணையாற்கருத்திலுற்காண்டலேகாண்ட, நண்ணிமுற்றேறுன்றும்பொருளுநண்ணியமேத்தவிதற்கரியலாமுகத்திற், பண்ணியநோக்கநோக்குகாகழகு பயப்பதையறிவேனாகேன்.

(இ-ள்) வெண்ணகை-வெள்ளியபற்களையும்—துவர்வாய்-பவளம்போலும்வாயையுமுடைய—அணங்கு-தமயந்தியினது—எழில்-அழகை-பலரும்(விதர்ப்பதேசத்திலிருக்கு)லந்த) பலருமே—விளம்பினார்-(எனக்குச்) சொன்னார்கள்(ஆயினும்)நின்மொழி-உன்சொற்களாலே—அவள்-அம்மயிலை—கண்-கண்ணு—கண்ணெதிர்ப்பட்டாள்போலும்-கண்முன்பார்க்கப்பட்டாள்போலிருக்கின்றாள்—மெய்-மெய்மையாக—துணையால்-கட்பாளறிவும்—கருத்திறு(அவள்) மனத்திறுலும்—காண்டலே-பார்வைக்காணலே—காண்ட[illegible]—நண்ணி-பொருந்தி—தோன்றும்-தோன்றுகின்ற—பொருளும்-பொருளையும்—நண்ணியதேல் - நட்பமானதாயிருக்கின்—அறிதற்கரியலா-காணுதற்குச்சானறாக—முகத்தில்-முகத்திடத்தே—பண்ணிய-உண்டாக்கப்பட்ட—நோக்கம்-கண்ணானது—நோக்குநோக்கு-(அப்படித்துணைவறுலுக்குத்திறலும்) நாணிறையுடையோர்க்கு—அழகு-அழகை, பயப்பதையறி-(அம்முகத்துக்குச்)செய்வதல்லாமல்—வேறு-மற்றொருபயனை(செய்தற்கு) உள்ளதோ, இருக்கின்றதோ, [illegible]லக்கணத்திட்டு-பொருவியற்படலம்-எ-சூத்திரம். உயர்திணையிறுபோலஃறிணைவருதலும்- மஃறிணையிறுபோலுயர்திணைவருதலு மருகல்விதியெனவறைாக்கனான்றோர்-இவ்விதியால்துணை - வேந்து-அரசு-அமைச்சு-உயர்திணை அஃறிணையிறுபோலாயின(கருத்து)அன்னமே உனசொல்லானது தமயந்தியென்முனவந்தாற்போலுமிருக்கின்றது என்றான்ளனன்பதாம். (௬௨)

முருந்திளமுறுவ லழகுணைத்தெலரு மூட்டியகாம வெந்தீயிற், சொரிந்திடுநெய்யிற்றுணைனலாமுணைத்திசொல்லுமவ்வழவிடைப்பெய்து, கரிந்தபைங்கிளியின்வாடுமெற்குறித்துக்கன்னுகூற்றுமுதிசையமர்ந்து, வருஞ்சிறுதென்றன்மலையவெவ்விடங்கால்வாளராவுயிர்ப்பெனலாமால்.

(இ-ள்) முருந்து-மயிலிறகினடிபோலும்—இளமுறுவல் - சிறியபற்களையுடையவளது—அழகு-அழகை—உரைத்து - (எனக்குச்) சொ



ல்லி—எவரும்-(விதர்ப்பதேசத்திலிருக்துவந்த) பலராலும்—மூட்டிய-(அச்சொற்களாகியவிறகிலே மூட்டப்பட்ட, காமம்-காமமாகிய—வெந்தீயில் - வெப்பம்பொருந்தியநெருப்பிலே—சொரிந்திடு-சொரியப்பட்ட—நெய்யின் - நெய்யாக—துணைனலாம்-(அவ) ளழகையெல்லாம்—உரைத்தி-சொல்லினை—சொல்லும்- சொல்லப்பட்ட—அவ்வழலிடை-அக்காமநெருப்பில்—பெய்து-இடப்பட்டு—கரிந்த-கரிகின்ற—பைங்கிளியின்-பசுங்கிளியாக—வாடும்-வாடுகின்ற—எற்குறித்து - என்னைக்குறித்து—கன்னு - சுட்டுக்கொண்டு—கூற்று-யமனுள்ளவன்—உறு-வாசஞ்செய்யப்பெற்ற—திசை-தென் திசையில்—அமர்ந்து-பொருந்து—வரும்-வருகின்ற—சிறு-தென்றல்-இளந்தென்றலே—மலையம்- பொதியமலையிலுள்ள—வாள்-ஒளிபொருந்திய—அரா-பாம்புகளது—வெவ்விடம் கொடியநஞ்சத்தை—கால்-பொழிகின்ற—உயிர்ப்பெனலாம்- ஊதுகாற்றென்றுசொல்லலாம்—எ-று.(கருத்து)தென்றற்காற்றைப்பாம்புகளினதுஉயிர்ப்பென்றுசொல்லலாம் என்பதாம். (௬௩)

வெண்கதிர்பரப்பித்தணந்தவரிதயமெழுகெனவுருக்கும் வெண்டிங்கள், கண்கவர்வனப்பினணங்கினைநினைந்து, கவலுமென்னுளத்தினைக்கனற்றத், தண்கதிர்பெறுவென்றழற்றுவெங்கதிர்கடனித்தனிக்கவர் வதற்கன்றோ, வொண்சுடரிரவியிடத்தினிற் றிங்களொடுமினி துறவு செய்குவதே.

(இ-ள்.) வெண்கதிர்-வெள்ளியகிரணங்களை—பரப்பி-விரித்து—தணந்தவர்-பிரிந்தவரது—இதயம்-மனத்தை—மெழுகென - (தீயிற்பட்ட)மெழுகென்னும்படி—உருக்கும்-உருக்காநின்ற—வெண்டிங்கள்-சந்திரனது—ஒண்சுடர் - ஒள்ளியகிரணங்களையுடைய—இரவியிடத்தினில்-சூரியனிடத்தே—திங்களொடும்-மாதந்தோறும்—இனிது - இனிதாக—உறவு-நட்பை—செய்குவது-செய்துவருகிறது—கண்-கண்களை—கவர்-கவர்கின்ற—வனப்பின்-அழகையுடைய—அணங்கினை- அந்தமயந்தியை—நினைந்து-எண்ணி—கவலும் - துன்பப்படுகின்ற—என்னுளத்தினை-எனதுமனத்தை—கனற்ற-சுடுதற்கு—தண்கதிர்- சீதளகிரணங்கள்—பெறுவென்று-(வல்லமை) பெறுவனவல்லவென்று—அழற்று-சுடுகின்ற—வெங்கதிர்கள்-உஷ்ணகிரணங்களை—தனித்தனி- ஒவ்வொன்றாக—கவர்வதற்கன்றோ-வௌவுதற்கன்றோ—எ-று. (கருத்து) சந்திரன்என்னைச்சுடுதற்கோமாதந்தோறுஞ் சூரியனிடத்தில் உறவுசெய்கின்றதுஎன்றான் நளனென்பதாம். (௬௪)

காதலங்கட்டின்கரைபெறற்கயனுற் காரணமின்றியேகாட்டப், போதரும்புணையதாகியென்னுள்ளம் புலம்புகொண்டினைவது தவிர்ப்பான், றூதுநீபோய்முன்னுனாத்தவாமுடித்தன்றோஎற்றுபுகழ்வினக்கென்று, வாதரம்பெருகன்மொழிபுகன்றவ்வனத்தினைமடந்தைபால் விடுத்தான்.

(இ-ள்.) காதல்-ஆசையாகிய—கடலின்-கடலினது—கரை-கரையை—பெறற்கு-(நான்)பெறுதற்கு—காரணமின்றி-ஏதுவில்லாமல்—காட்ட-(அதனைக்)காண்பிக்க—அயனால்-விதியினால்—போதரும்-வந்த—புணையதாகி-தெப்பமாகி—என்னுள்ளம்-என்மனமானது—புலம்புகொண்டு-துன்பத்தைக்கொண்டு—இனைவது-வருந்துதலை—தவிர்ப்பான்-தீர்க்கும்படியாக—நீ-நீ—தூது-தூதாக—போய்-சென்று—முன்-முன்னே—உரைத்தவா-(உன்னால்)சொல்லப்பட்டவாறு—முடித்தல்-நிறைவேற்றல்—சேமது-குற்றமற்ற—புகழ்-கீர்த்தியாகும்—நினக்கென்று-உனக்கென்று—ஆகம்-அன்பானது—பெருக-வளர—நன்மொழி-முகமன்சொற்களை—புகன்று-சொல்லி—அவ்வனத்தினை-அவ்வன்னத்தை—மடந்தைபால்-தமயந்தியினிடத்து—விடுத்தான்-அனுப்பினான்—எ-று. (கருத்து) நளமகாராசன் அன்னத்தைத் தமயந்தியினிடத்துத் தூதுவிட்டானென்பதாம். (௬௫)

போதருநெறியினன்மைகள்பயக்க* பொருந்துமாகியொடுபுல்லி
யாதரம்பெருகுமெளியனைமறவேலா யிழையருண்முகம்பெற்றுத்
தீதறவினையின்வருகெனவுரைத்துத் திங்களினருஞ்சுதைதிகழுந்
தாதவிழ்தாமமாடமேற்றானுந் தனியுமாயிருந்துடறளர்ந்தான்.

(இ-ள்.) போதரும்-போகின்ற—நெறியில்-வழியில்—நன்மைகள்-சுபங்களானவை—பயக்க-(உனக்கு)உண்டாருக,பொருந்து-பொருந்திய—கிளையொடு-(உன்)சுற்றத்துடனே—புல்லி-கூடி—ஆதரம்-ஆசையானது—பெருகும்-வளரப்பெற்றிருக்கின்ற—எளியனை-எளியேனை—மறவேல்-மறவாதே—ஆயிழை-தமயந்தியினது—அருள்முகம்-அருளோடுகூடியவார்த்தை—பெற்று-அடைந்து—தீதற-குற்றமற—வினையில்-சீக்கிரத்தில்—வருகென-வாவென்று—உரைத்து-சொல்லி—திங்களின்-சந்திரன்போலும்—அருஞ்சுதை-அரியசுண்ணச்சாந்தை—திகழ-திகழப்பெற்றுள்ள—தாது-பொடியையுடைய—அவிழ்-மலர்ந்த—தாமம்-பூமாலைகள்பொருந்திய—மாடமேல்-மேல்வீட்டிலே—தானும்-தானும்—தனியுமாய்-ஒருவருமில்லாமையுமாகி—இருந்து-இருந்து—உடல்-உடம்பு—தளர்ந்தான்-தளரப்பெற்றிருந்தான்—எ-று. (கருத்து) நளன் அன்னத்தைத் தூதுபோய்வாவென்றுசொல்லியனுப்பித் தனித்திருந்துடல்வருந்தினனென்பதாம். (௬௭)

ஈங்கிவன்மாழாந்தன்னமென்சொல்லாளின்னுயிர்தாங்கினனிருப்பத்
தீங்கரும்பனுக்குமாங்குயிற்கிளவிசெவ்விகண்களிப்புறநோக்கி
யாங்கனுற்றிற்றைப்பகலைநற்பகலதாக்குவலென்னமஞ்சலியாப்
பூங்கனிநிறைநீர்பொற்குடமெதிரப்போயதுபொலன்சிறையன்னம்.

(இ-ள்.) ஈங்கு-இவ்விடத்தே—இவன்-இவ்வரசன்—மாழாந்து-அறிவுகலங்கி—அன்னம்-அன்னத்தினது—மென்சொல்லால்-மெல்லியசொல்லால்—இன்னுயிர்-இனிதாகியவுயிரை—தாங்கினன்-தாங்கியவனாகி—இருப்ப-இருக்க—தீங்கரும்பு-மதுரமாகியகன்னலை—அனுக்கு-





ம்-கெடுக்கின்ற—மாங்குயில்-மாங்குயிலினைப்போலும்—கிளவி-சொல்லையுடையவளது—செவ்வி-அழகை—ஆங்கண்-அவளிருக்கின்ற வீட்டினை—உற்று-அடைந்து—கண்களிப்புற-(என்)கண்களிகூற—நோக்கி-பார்த்து—இற்றைப்பகலை-இத்தினத்தை—நற்பகலதாக்குவலென-நல்லதினமாக்குவனென்று—மனம்வலியா-மனத்தி லெண்ணி—பூங்கனி-அழகியபழமும்—நிறைநீர்-நிறைந்தநீரையுடைய—பொற்குடம்-பொற்குடமும்—எதிர-தனக்கெதிர்ப்பட—பொலன்சிறை-பொற்சிறைகளையுடைய—அன்னம்-அன்னமானது—போயது-போயிற்று—எ-று. (கருத்து) அன்னமானது அரசகுமரியைக்காணச்சென்றதென்பதாம்.

கட்புலன்கதுவாதுயர்ந்துபின்னெவருங்காண்வரவெள்ளிடைப்பறந்து
புட்செறிவாவிப்புகாதகல்விசும்பிற்பொன்னுரைத்தாலெனப்போகி
நுட்பமாய்குநர்க்குமதிசயம்பயப்பக்கொடிவரைப்புகுந்ததவ்வன்னம்
வட்கிவெண்மதியஞ்சவிகெடவொளிருமாடமார்குண்டினபுரமே.

(இ-ள்) அவ்வன்னம்-அவ்வன்னமானது—கண்-கட்பொறிகளுக்கு—புலன்-விஷயமாக—கதுவாது-பற்றப்படாமல்—உயர்ந்து-மேலெழும்பி—பின்-(அதன்)பின்பு—எவரும்-யாவரும்—காண்வர-(தன்னைக்)காண—வெள்ளிடை-ஆகாயத்தில்—பறந்து-பறந்து—புள்-பறவைகளானவை—செறி-நெருங்கப்பெற்ற—வாவி-தடாகங்களிலே—புகாது-செல்லாமல்—அகல்விசும்பில்-விரிவுள்ள—வானமாகிய (உரைகல்)லில்—பொன்-(தன்சிறகளின்)பொன்னை—உரைத்தாலென-உரைத்ததுபோல—போகி-சென்று—நுட்பம்-காலநுட்பத்தில்—ஆய்குநர்க்கும்-ஆராய்கின்றவருக்கும்—அதிசயம்பயப்ப-ஆச்சரியமுண்டாக—கொடிவரை-கொடியளவில்—வெண்மதியம்-வெள்ளைச்சந்திரனானது—வட்கி-நாணி—சவிகெட-அழகுகெட—ஒளிரும்-விளங்குகின்ற—மாடம்-மாளிகைகளால்—ஆர்-நிறைந்த—குண்டினபுரம்-குண்டினபுரத்திலே—புகுந்தது-சென்றது—எ-று. (கருத்து) அன்னமானது குண்டினபுரத்திற்சென்றதென்பதாம். (௬௮)

*கலிவிருத்தம்.

மன்னுமாநகர்மேயவளமெலா
மன்னங்கண்ணுற்றதிசயித்தேகலு
முன்னங்கண்டறுமூசவண்டார்த்தெழப்
பொன்னந்தாதவிழ்பூந்துணர்ச்சோலையே.

(இ-ள்.) அன்னம்-அன்னமானது—மன்னும்-நிலைபெற்ற—மா-பெருமைபொருந்திய—நகர்-குண்டினபுரத்தில்—மேய-தங்கிய—வளமெலாம்-சிறப்புக்களையெல்லாம்—கண்ணுற்று-பார்த்து—அதிசயித்து-ஆச்சரியப்பட்டு—ஏகலும்-போமளவிலே—முன்னம்-(தன்)னெதிரே—மூச-மொய்க்கின்ற—வண்டு-வண்டுகளானவை—ஆர்த்து-ஒலிசெய்து—எழ-எழும்பாநிற்க—பொன்-பொன்னிறம்பொருந்திய—தாது-பொ

டியுட்னே—அவிழ் - விரிகின்ற—பூ - மலர்கள்பொருந்திய—துணர்-கொத்துக்களையுடைய—சோலை-(தமயந்தியினது) வனத்தை—கண்டு-பார்த்தது—எ-று. தொல்காப்பியம்செய்யுளியல்-௩௭-ம்-சூத்திரம்-பத்தெழுத்தென்பநேரடிக்களவே-யொத்தநாலெழுத் தொற்றலங்கடையே(கருத்து) அன்னமானது குண்டினபுரத்தைப்பார்த்துப்போம் போது தமயந்திவனத்தைக்கண்டதென்பதாம். (௫௯)

சோலைவாயிற்சுடருநிலாமணி
யாலவாலத்தவிர்மதியாற்புனல்
காலவாய்ந்தகதிர்மணிமுல்லையின்
கோலநாண்மலர்கொய்வதற்கெய்தினள்.

(இ-ள்.) சோலைவாயில்-அச்சோலையின்கண்ணே—ஆலவாலத்துப்-பாத்திகளில்—சுடரும்-விளங்குகின்ற—நிலாமணி - சந்திரகாந்தக்கல்—அவிர்-விளங்காநின்ற—மதியால்-சந்திரகிரணத்தாலே—புனல் - நீரை—கால-கக்க—வாய்ந்த-(அதனால்)நிலைபெற்ற—முல்லையின் - முல்லைக்கொடிகளுடைய—கதிர் - கிரணத்தையுடைய—மணி - முத்துப்போலும்—கோலம்-அழகிய—நாள்-அன்றுபூத்த—மலர்- மலர்களை—கொய்வதற்கு-பறிப்பதற்கு—எய்தினள் (தமயந்தி)வந்தாள்—எ-று. (கருத்து) தமயந்திமலர்கொய்தற்குச்சோலைக்குவந்தாளென்பதாம். (௬௰)

மீதுலாயவெண்டாரகைநாப்பணிற்
சீதவொண்கதிர்த்திங்கள்கண்டாலென
மாதர்நோக்கின்மடந்தையர்நாப்பணிற்
காதல்கூர்தமயந்தியைக்கண்டதே.

(இ-ள்.) மீது-ஆகாயத்திலே—உலாய்திரிகின்ற—வெண்டாரகை-உடுக்களது—நாப்பணில்-நடுவில்—சீதம்-குளிர்ச்சிபொருந்திய—ஒள்ளிய—கதிர்-கிரணங்களையுடைய—திங்கள் - சந்திரனை—கண்டாலென-கண்டதுபோல—மாதர்- அழகிய—நோக்கின் - பார்வையையுடைய—மடந்தையர்- மாதரது—நாப்பணில்-நடுவில்—காதல்கூர்-விரும்பப்படுகிற—தமயந்தியை- தமயந்தியென்பவளை—கண்டது(அவ்வன்னமானது)பார்த்தது—எ-று.(கருத்து) அன்னந்தமயந்தியைக்கண்டதென்பதாம். (௬௧)

கண்ணுங்கையுமுகமுங்கமலமா
கண்ணுஞ்சண்பகநாண்மலர்மேனியா
வண்ணல்வேளைவழிபடற்காற்றிய
வண்ணமாலைகொலென்றுமருண்டதே.

(இ-ள்.) கண்ணும்-கண்களும்—கையும்-கைகளும்—முகமும்-வதனமும்—கமலமா-தாமரைமலர்களாகவும்—மேனி—வடிவமானது—கண்ணும்-பொருந்திய—நாள் - அன்றுபூத்த—சண்பகம்-சண்பகத்தினுடைய—மலரா- மலர்களாகவுங்கொளலால்—அண்ணல் - தலைவனாகிய—வேளை- மன்மதனை—வழிபடற்கு- பூசித்தற்பொருட்டு—ஆற்றிய - செய்யப்பட்ட—வண்ணம்-அழகிய—மாலையொன்று-தொடையென்று



—மருண்டது-மயங்கிற்று அன்னம்-எ-று (கருத்து) அன்னமானது தமயந்தியைமாலையென்றுமயங்கியதென்பதாம். (௬௨)

வழிந்துதெள்ளமுதூறவளர்ந்துமா
சொழிந்ததிங்களையூர்வளைந்தாலெனச்
செழுந்தண்கோதைதிருமுகமுள்ளுறச்
சுழன்றுதாழ்ந்ததுதூயச்சிறையன்னமே

(இ-ள்) தூ-பரிசுத்தமாகிய—சிறை-சிறைகளையுடைய—அன்னம்-அன்னமானது—வழிந்து-பெருக்கெடுத்து—தெள்ளமுது -தெள்ளியஅமிர்தமானது—ஊற-சுரக்க—வளர்ந்து-நிறைந்து—மாசு - குற்றத்தின்—ஒழிந்த-நீங்கிய—திங்களை-சந்திரனை—ஊர் -பரிவேடமானது—வளைந்தாலென-சூழ்ந்ததுபோல—கோதை - தமயந்தியினது—செழுந்தண்-செழுமையுங்குளிர்ச்சியும்பொருந்திய—திரு - அழகிய—முகம்-முகமானது—உள்-நடுவில்—உற - பொருந்த—சுழன்று-சுற்றிவந்து-தாழ்ந்தது-இறங்கிற்று-எ-று (கருத்து) அன்னமானதுதமயந்தியைச் சுற்றிவந்திறங்கினதென்பதாம். (௬௩)

* தெய்வத்தாமரைப்போதுறைசெல்வியுங்
கொவ்வைவாயயிராணியுங்கூறுமிக்
கவ்விநோக்கிக்கிணையெனநாட்டுத
லெவ்வமென்னவிகழ்ந்துவியந்ததே.

(இ-ள்) தெய்வம் - தெய்வத்தன்மைபொருந்திய—தாமரைப்போது-தாமரைப்பூவின்கண்—உறை-வாசஞ்செய்கின்ற—செல்வியும்-திருமாதும்—கொவ்வை-கோவைப்பழம்போலும்—வாய் -வாயையுடைய—அயிராணியும்-இந்திராணியும்—கூறும் - சொல்லப்பட்ட, இக்கவிநோக்கிக்கு-மான்கண்போலுங்கண்களையுடையஇவளுக்கு, இணையென-உபமானமாவனென்று—நாட்டுதல் - நிறுத்துதல்—எவ்வமென்ன-குற்றமென்று—இகழ்ந்து- (அவ்விருவரையு) மிகழ்ந்து—வியந்தது-(இவளழகைக்குறித்து)ஆச்சரியப்பட்டது அன்னம்—எ-று (கருத்து) அன்னமானது இலக்குமியையும்,இந்திராணியையும்மிகழ்ந்து தமயந்தியைப்புகழ்ந்ததென்பதாம்*[தெய்வம்-அடங்காவழிச்சந்த.] (௬௪)

* (இதுவுங்கவிவிருத்தம்.)

கலவுற்றெதிர்போகியதூவியனங்
குலவுற்றபொலஞ்சிறையைக்குவியா
நிலனுற்றெறிநீள்சிலைமெல்லவிரியா
லலைவுற்றமருங்கினளாஞ்சினளால்.

(இ-ள்) கலவுற்று-சூழ்ந்து—எதிர்(தமயந்தி)-முன்பு, போகிய-சென்ற—தூவி-இறகுகளையுடைய—அனம் - அன்னமானது—குலவுற்ற-விளைவுபொருந்திய—பொலன்-பொன்மயமாகிய—சிறையை - சிறகுகளை—குவியா-குவித்து—நிலன்-பூமியின்கண்ணே—உற்று - பொருந்தி—எறி-(அப்போது)உதறப்பட்ட—நீள்-விரிந்த—சிறை(அதன்)-சிறகு

சனது—மெல்லவரியால்-மெல்லியகாற்றோசையால், அலைவுற்றமருங்கினள்-அசைவுற்றவிடையையுடையதமயந்தியானவள், அஞ்சினள் - அச்சமுற்றாள்-எ-று. * தொல்காப்பியம்-செய்யுளியல்-சூத்திரம் * எழுத்தளபெழாஅந்தினுஞ்சீர்நிலைதானே- குன்றலுமிகுதலுமில்லெனமொழிப (கருத்து) தமயந்தியானவள் அன்னத்திறகுகளின் காற்றோசையால் அச்சமுற்றாளென்பதாம். (௪௫)

பொறியின்வழிநெஞ்சபுகுத்தியிடா
தறிவின்னறிவாயவரும்பொருளைப்
பிறிதொன்றறநோக்குதல்போற்பிறழு
மறியுண்கணிளமங்கையர்நோக்கினரால்.

(இ-ள்) பொறியின்வழி-ஐம்பொறிகளின்வழியிலே—நெஞ்சு-மனத்தை—புகுத்தியிடார்-செலுத்தாதயோகிகள்—அறிவின் - ஞானக்கண்ணிலே—அறிவாய - அறிவுருவாகிய—அரும்பொருளை - பிரமத்தை—பிறிதொன்று-மற்றொருவிஷயசம்பந்தம்—அற-நீங்க—நோக்குதல்போல்-பார்த்தல்போல், மங்கையர்-தோழிகளானவர்—(பிறிதொன்று)-மற்றொருவிஷயசம்பந்தம்—அற-நீங்க, பிறழும் - புரளுகின்ற—மறி-மான்கணைபோலும்—உண்-மையுண்ட—கணின் - கண்களாலே—(அறிவாய)-அறிவையுடையதாகிய, அரும்பொருளை - அபூர்வமாகிய அன்னத்தை—நோக்கினர்-பார்த்தல்செய்தார்-எ-று (கருத்து) பாங்கிமார்களன்னத்தைப்பார்த்தார்களென்பதாம். (௪௬)

அணித்தாயரிதாயவரும்பொருளைப்
பிணிப்பானசைவைத்தமர்பெற்றியர்போ
லணித்தாயவனங்கவர்வானசையான்
மணிப்பூணசையாதுவதிந்தனளால்,

(இ-ள்) அணித்தாய்-தேகத்திலுளிருக்கின்றதாய்—அரிதாய -(பெறுதற்) கரிதாகிய-அரும்பொருளை-பிரமத்தை, பிணிப்பான்-கண்டுபிடித்தற்பொருட்டு—அசைவைத்து - (அதனிடத்தே) ஆசைவைத்து—அமர்-ஆசைவற்றுநிற்கின்ற—பெற்றியர்போல்- மனச்செய்கையையுடையமுனிவர்போல்—அணித்தாய்-சமீபத்திலுள்ளதாய்—(அரி) தாய-அபூர்வமாகிய—அனம்-அன்னப்பறவையை, கவர்வான் - பிடித்தற்பொருட்டு—அசையால் - (அதன்மேல்) வைக்கப்பட்டஆசையினாலே—மணி - நவமணிகளாலாகிய—பூண் - ஆபரணமானது—அசையாது-அசையாதிருக்கும்படி—வதிந்தனள் - (தமயந்தி) தங்கினள்—எ-று- (கருத்து) தமயந்தி அன்னத்தைப்பிடிக்கும்படியசைவற்றிருந்தாளென்பதாம். * இலக்கணத்திரட்டு-வான்பான்பாக்குப்பொருட்டாமே. )

அவிர்பூணொலியாமலடக்கினளாய்க்
கவர்வான்வரல்கண்டுமகன்றிலதாய்த்
துவர்வாய்மயிலொட்டிடலாகுமெனு
நவைதீரனமெல்லநடந்ததுவே.



(இ-ள்) அனம் - அன்னமானது, அவிர் - விளங்காநின்ற, பூண் - பூண்களை, ஒலியாமல்-ஒலியாதிருக்க, அடக்கினளாய்- அடக்கினவளாகி—கவர்வான-(தன்னைப்) பிடிக்கும்படியாக—வரல்- வருதலை—கண்டும் பார்த்தும்—அகன்றிலதாய் (தைரியத்தினால்) ஓடிப்போகாததாகி—துவர்-பவளம்போலும்—வாய் வாயையுடைய—மயில் - மயில்போல்பவளாலே—தொட்டிடலாகுமெனும் - பிடிக்கக்கூடுமெனகிற—நவை-இகழ்ச்சியானது—தீர்-தீர—மெல்லநடந்தது -மெள்ளநடந்தது-எ-று. (கருத்து) அன்னமானது தமயந்தி தன்னைப்பிடிக்கும்படி மெள்ளநடந்ததுஎன்பதாம். (௪௮)

புளினத்தடமேவியபோகுமன
மெளிதிற்றனகைம்மலரெய்துறுமோ
வுளம்வைத்தமையென்னெனவொண்ணுதலார்
நளினக்கைபுடைத்துநகைத்தனரால்

(இ-ள்) ஒள்-காந்திபொருந்திய—நுதலார்-நெற்றியையுடையதோழிகள்—புளினம்-மணற்குன்றுகளையுடைய— தடம்-தடாகத்திலே—மேவிய - வாசஞ்செய்யும்படியாக — போகும் - போகின்ற—அனம்- அன்னமானது—எளிதில் - எளிதிலே—தன்-தன்னுடைய—கைம் - கைகளாகிய — மலர்-தாமரைமலர்களிலே—எய்துறுமோ - அடையுமோ—உளம்வைத்தமை (எம்பிராட்டி அதனிடத்தே) மனம்வைத்தமைக்குகாரணம்—என்னென - யாதென்று, நளினம்-தாமரைமலர்போலும்—கை (தங்) கைகளை—புடைத்து - தட்டி—நகைத்தனர்-சிரித்தார்—எ-று. (கருத்து) தமயந்தி அன்னத்தைப்பிடிக்க மனம்வைத்ததைப் பாங்கியர் கண்டு கைகொட்டி நகைத்தார்கள் என்பதாம் (௪௯)

புனைமேகலையீர்கைபுடைத்துநகைத்
தனமேகவியற்றுதலன்போவென
தனியேகுவனின்மினெனத்தகையாத்
துனியோடுரைசெய்துதொடர்ந்தனளே.

(இன்-) புனை-அலங்கரிக்கப்பட்ட—மேகலையீர் - மேகலாபரணத்தையுடையவரே—கைபுடைத்து-கைதட்டி—நகைத்து - சிரித்து—அனம்-அன்னத்தை—ஏக- ஓடிப்போக—இயற்றுதல் - செய்தற்குகாரணம்—அன்போ (என்மேலுள்ள) அன்போ—தனி - தனியாக—ஏகுவன்(நான்) போவேன், நின்மினென-நீங்கள் நில்லுங்களென்று, துனியோடு-கோபத்தோடு—உரைசெய்து, சொல்லி—தகையா - ஆணையிட்டு—தொடர்ந்தனள்(தமயந்தியானவள்) அதன்பின்போயினள்-எ-று.(கருத்து) தமயந்தியானவள் பாங்கிமாரைநிறுத்திவிட்டுத்தனியே அன்னத்தின்பின்போனாள் என்பதாம் இலக்கணத்திரட்டுயின்னிசொஇ மறையேவறபண்மையாம். தொன்னூல்விளக்கம்-ஈ-சூத்திரத்திலுங்காண்க.()

முகிழ்மென்முலைவாணுதன்மொய்குழலார்
நகைசெய்வதுகண்டுளநாணினளா
யகல்கின்றபொலன்சிறையன்னநிழ
னிகவொன்னவொதுங்கினனேரிழையே

(இ-ள்) சேரிழை-திருந்தவணிகளையுடைய தமயந்தியானவள்—மூரிழ்-தாமரையரும்புபோலும்—மென்முலை-மெல்லியமுலைகளையும்—வாணுதல்-ஒளிபொருந்தியநெற்றியையும்—மொய்குழலார்-நெருங்கிய கூந்தலையுமுடைய தோழிகள்—நகைசெய்து-பரிகாசஞ்செய்தலைக் கண்டுபார்த்து—உளம்-மனத்திலே—நாணினளாய்-வெட்கமுற்றவளாகி—அகல்கின்ற-நீங்குகின்ற—பொலன்-பொன்மயமாகிய—சிறை-சிறகுகளையுடைய—அன்னம்-அன்னத்தினது—நிழல்-நிழலானது—திகிரொன்ன(தனக்கு)ச்சீகாமென்ன—ஒதுங்கினள்-நடந்தாள். எ-று.(கருத்து) அன்னத்தின்னிழல்தன்மேற்செல்லுதல்போலதமயந்தி அன்னத்தின்பின்சென்றாளென்பதாம் (௫௧)

வடியுண்கண்ணிமாமுலைதாங்கியதா
* லிடுகும்மிடையென்படுமேகலெனப்
பிடிமென்னடைமங்கையர்பேசமறுத்
தடிமென்மலர்பேர்த்தனளாயிழையே

(இ-ள்) வடி-கூர்மைபொருந்திய—உண்-(மை)யுண்ட—கண்ணி-கண்களையுடையவளே—மாமுலை-பெரியமுலைகளை—தாங்கியதால்-சுமத்தலால்—இடுகும்-துவளுகின்ற—இடை-(உன்னிடை)யானது—என்படும்(நடத்தலாலே) என்னபாடுபடும், ஏகலென-போகாதேயென்று—பிடிபெண்யானைபோல—மென்னடை-மெல்லியநடையையுடைய—மங்கையர்-தோழிகள்—பேச-சொல்ல—மறுத்து (அதை) மறுத்து—ஆயிழை-ஆராய்ந்து கொள்ளப்பட்டவணிகளையுடையவளாகியதமயந்தியானவள்—அடி-அடியுருக்கொண்ட—மென்மலர்-மெல்லியதாமரைமலர்களை—பேர்த்தனள்-எடுத்தனள். எ-று(கருத்து)தோழிமார்தடுக்கத்தமயந்தியன்னத்தைத்தொடர்ந்தாளென்பதாம்.தாதுவிளக்கம்இடுகுதல்தளைதலாம் (௫௨)

செய்ப்பட்டசெழுங்கமலத்தினனங்
கைப்பட்டதுபட்டதெனக்கருதா
மைப்பட்டமலர்ப்பொழின்மாதவிவாய்ப்
பொய்ப்பட்டமருங்கினள்புக்கனளே

(இ-ள்) பொய்ப்பட்ட-பொய்கூறுதற்கிடமாகிய—மருங்கினள்-இடையையுடையதமயந்தி யானவள் — செய்ப்பட்ட - கழனியிலுண்டாகிய—செழுங்கமலத்தில் - செழியதாமரைப் பூவிலிருக்கின்ற—அனம்-அன்னமானது—கை(என்)கையிலே—பட்டது பட்டதென - அகப்பட்டது அகப்பட்டதென்று—கருதா-நினைத்துக் கொண்டு—மைப்பட்ட-மேகத்தையளாவிய—மலர்-மலர்களையுடைய—பொழில் - சோலையிலே—மாதவிவாய்-குருக்கத்திப்பந்தரிடத்தே—புக்கனள்-சென்றாள் எ-று (கருத்து) தமயந்தி அன்னமகப்பட்டதென்று குருக்கத்திப்பந்தரினிடத்தேசென்றாளென்பதாம் (௫௩)

தொடர்ந்தாள்கழுந்தூமுகம்வேரொழுக
நடந்தாயிழையெய்த்தனளென்னநயந்



திடந்தேர்ந்தவளின்புறுநன்மொழிகள்
மடந்தாழிளவன்னம்வழங்கியதே.

(இ-ள்.) மடந்தாழ் - அறியாமைபோகிய—இளவன்னம்- இளமை பொருந்தியஅன்னமானது—தொடர்ந்தாள் (என்பின்னே)தொடர்ந்தவளாகி—கழும்-விளங்குகின்ற—தூ-பரிசுத்தமாகிய—முகம்-முகத்தினின்றும்—வேர்-வெயரானது—ஒழுக-ஒழுகாநிற்க—நடந்து- நடந்து, ஆயிழை-தமயந்தியானவள்—எய்த்தனளென்ன-இளைத்தாளென்று—நயந்து-விரும்பி—இடம்-தகுதியான இடத்தை—தேர்ந்து -அறிந்து, அவள்-அத்தமயந்தியானவள்—இன்பு-இன்பத்தை—உறு-அடைதற்குக் காரணமானவாகிய—நன்மொழிகள்- நல்லசொற்களை—வழங்கிய-சொல்லிற்று—எ-று. (கருத்து) அன்னமானதுதமயந்தியின்பமடையநல்லவார்த்தைகளைச்சொல்லிற்றென்பதாம். (௫௪)

கோ * டுந்தியகொம்மைமுலைப்பொறையால்
வாடும்மிடைமாமயில்வாரலெனத்
தோடுண்குழன்மங்கையரிற்றுணர்மா
வாடுந்தளிரங்கைமறித்தனபார்.

(இ-ள்.) துணர்-பூங்கொத்துக்களையுடைய—மா - மாமரங்களானவை—கோடு- யானைக்கொம்புகளை—உந்திய - கீழ்ப்படுத்திய—கொம்மை-திரட்சிபொருந்திய—முலை-முலைகளது—பொறையால் -பாரத்தினாலே—வாடும் - வாடுகின்ற—இடை - இடையையுடைய—மாமயில்-பெருமைபொருந்தியமயிலே—வாரலென (நடந்து) வாராதேயென்று—தோடு-மலரிதழ்களை—உண்-உட்கொண்ட—குழல்-கூந்தலையுடைய—மங்கையரின் - (உன்னுடைய) தோழிகள்போல—ஆடும்-அசைகின்ற—தளிர்-தளிர்களாகிய—அங்கை - அழகியகைகளாலே—மறித்தன (உன்னை) விலக்குகின்றன—பார்-(நீ அவற்றைப்) பார்—எ-று.(கருத்து) மாமரங்களானவை தளிர்களாகிய விரல்களாலேவாராதே என்றுவிலக்குகின்றனபார் என்பதாம். ○ தாதுவிளக்கம் உந்தறள்ளுதலுயர்த்தியேறுதலே. (௫௫)

○ விண்ணின்னியங்குமெனைமேவரநீ
மண்ணின்னடந்தெவ்வணம்வெளவுதியா
லெண்ணின்னிதுகண்டவர்யார்நகையார்
பெண்ணின்னமுதேவரல்பேதைமையே.

(இ-ள்)பெண்-பெண்களிலே—இன்னமுதே-இனியவமிர்தம் போல்விளங்குகின்றவளே—விண்ணின்-ஆகாயத்திலும—இயங்கும்- திரிகின்ற—எனை-என்னை—மேவர-அடைதற்கு—நீ-நீ—மண்ணில்- பூமியின்மேல்—நடந்து-நடந்துவந்து—எவ்வணம்-எவ்விதத்தினாலே, வெளவுதி - பிடிக்கமாட்டுவாய்—எண்ணின் -ஆலோசிக்குமிடத்து—இது-இச்செய்கையை—கண்டவர்-பார்த்தவருள்—யார்-யாவர்—நகையார்- சிரியார்—வரல் (மங்கைப்பருவமடைந்தவுனது) வருதல்—பேதைமை-

பேதைப்பருவத்தின்செயலாயிருக்கின்றது—எ-று. () நன்னூல்-உயிர்த்
துய்ப்புணரியல்-வலித்தன்மெலித்தனீட்டல்குறுக்கல்விரித்த றொகுத்த
லும்வருஞ்செய்யுள்வேண்டுழி- இவ்விதியால் மின்னனையக்குவிரித்
தல்விகாரமாம் (கருத்து) தமயந்தியே நீயென்னைப்பிடிக்கவருதலறிவின்
மென்றன்னஞ்சொல்லிற்று என்பதாம். (ருசா)

என்றின்னபோதுமிவட்கிளையப்
பின்னம்மொழிபேசவல்லென்றயனு
மன்னந்தனதன்புறுசுற்றமியாம்
பொன்னின்னகர்யாங்கள்பொருந்திடமே.

(இ-ள்) என்று-என்றுசொல்லி—இவட்கு- இவளுக்கு—இயையப்
பொருந்த—பின்-பின்பு—அம்மொழி- அவ்வாசகன்காரியத்தை—பேச
வல்லேன்று-சொல்வேனென்றெண்ணிக்கொண்டு—இன்மாபு - இனிதா
கிய(தன்) வரலாற்றை—ஓதும்-சொல்லுகின்றது—யாம்-யாங்கள்—அ
யன்-நான்முகக்கடவுளால்—ஊர்- செலுத்தப்படுகின்ற—அன்னந்தன
து-அன்னவாகனத்தினது,அன்பு- அன்புமிகுந்த,சுற்றம்- உறவினே
ம்—யாங்கள்-யாங்கள்—பொருந்து- தங்கப்பெற்ற—இடம் - இடமான
து—பொன்னின்னகர்-தேவநகரமாகும்—எ-று. [தன்னினத்தைச்சூழ்
வியமென்றும்பாங்களென்றுங்கூறிற்று](கருத்து) அன்னமானது தன
தாதியையும் இருக்குமிடத்தையுங்கூறிற்றென்பதாம். (ருஎ)

மலர்மேலயன்மானதவாவியினுட்
பொலன்மெல்லிதழ்பூத்தசெழுங்கமல
நலனூர்களையம்பலநாளுமயின்
றுலவாதொளிர்பொன்னிறமுற்றனமால்.

(இ-ள்) மலர்மேல்-தாமரைப்பூமேலுள்ள, அயன் - நான்முகனது
—மானதவாவியினுள் - மானசதடாகத்திலுள்ள,பொலன்-பொன்மய
மாகிய—மெல்-மெல்லிய—இதழ்-இதழ்கள்—பூத்த - விரியப்பெற்ற,
செழுங்கமலம்-செழியதாமரைமலர்களையும்—நலனூர் - நலம்பொருந்தி
ய—களையும்- இளவிலைச்சுருள்களையும்—பலநாளும்-பலதினமும், அயி
ன்று-தின்று—உலவாது-அழியாமல்—ஒளிர்- விளங்குகின்ற—பொ
ன்னிறம்-பொன்னுருவத்தை—உற்றனம் - அடைந்தோம், எ-று. () தா
துவிளக்கம், தொழிற்பெயர்ப்பகுதிகள் விளக்குறுதாதா (கருத்து) அ
ன்னமானது தன்வடிவு பொன்னிறமுற்றகாரணத்தைச் சொல்லிற்று
என்பதாம். (ருஅ)

களிமாமயிலன்னவர்காதலுறு
மளிநாண்மலரைங்கணைவேளனையா
னளன்மாநகர்நாண்மலர்வாவியினல்
வளநோக்குறமண்ணிடைவந்தனமால்.

(இ-ள்.) களி-களிப்பைத்தருகின்ற—மா- பெருமைபொருந்திய—
மயிலன்னவர் - மயில்போலுஞ்சாயலுடையவராகியமகளிரால்—காத
லுறும்-விரும்பப்படுகின்ற—அளிநாண் -வண்டுகளினொழுங்காகிய நாணி



னையும்—நலனைங்கணை - மலர்களாகியபஞ்சபாணத்தையுமுடைய—
வேளனையான்-மன்மதன்போலழகினனாகிய, நளன்- நளமகாராஜனது
—மாநகர் - பெரியபட்டணத்திலேயுள்ள—நாள்- அன்றுபூத்த—மலர்-
மலர்களையுடைய—வாவியின் - தடாகத்தினது—நல்வளம்- நல்லவள
த்தைத—நோக்குற-பார்த்தற்பொருட்டு—மண்ணிடை- பூமியினிடத்து
—வந்தனம்(யாம்வானுலகத்தைவிட்டு) வந்தோம்—எ-று(கருத்து) நள
னதுவாவியைப்பார்க்கப் பொன்னுலகத்தைவிட்டு இவ்வுலகிற்குவந்
தோமென்றன்னஞ்சொல்லிற்றுஎன்பதாம். (ருகூ)

விண்ணம்புவிபாதலமேவுகினு
நண்ணுந்துயரின்றெனநல்வரமுன்
றன்னக்கமலத்திறைதந்தனனமைக்
கண்ணென்றயில்கொண்டகனங்குழையாய்.

(இ-ள்.) மை-மையெழுதப்பெற்ற—கண்ணென்று-கண்களென்று
(பெயர்வைத்து) அயில் - (நஞ்சம்பூசப்பெற்ற) வேல்களை—கொண்ட-
கொண்டிருக்கிற—கனங்குழையாய் - கனம்பொருந்தியகாதணியையு
டையவளே—தண்ணாங்கமலத்து- குளிர்ச்சிபொருந்தியதாமரைப்பூவி
லிருக்கின்ற—இறை-தலைவன்—விண்ணம்புவிபாதலம் - தேவலோகம்
பூலோகம்பாதாளலோகம்இவ்வனைத்தையும்—மேவுகினும்-ஒழிவின்றி
யடைந்தாலும்—நண்ணும் - (உன்னை) யடையக்கடவதாகிய, துயர்
(களிர்சித்) துயரமானது—இன்றென- இல்லையென்று—நல்வரம்-நல்ல
வரத்தை—முன்பு—தந்தனன் - எனக்குக்கொடுத்தான்—எ-று. (கருத்
து) தமயந்தியேயாங்கள்மூவுலகிற்சென்றாலும் துன்பமில்லையென்றுபி
ரமன்வரங்கொடுத்தானென்றன்னஞ்சொல்லிற்றுஎன்பதாம். (சா௰)

கௌவைக்கடல்சூழ்தருகாசினியிற்
றெய்வத்திறமேவியசீர்நளனே
வௌவற்றிடனன்றியிம்மானிடர்தா
மெவ்வப்படிவெளவினுமெய்துவமோ.

(இ-ள்) கௌவை - ஒலியையுடைய—கடல் - கடலாலே—சூழ்த
ரு-சூழப்பட்ட—காசினியில் - பூமியிலே—தெய்வத்திறம்- தேவபோக
த்தை—மேவிய-பொருந்திய—சீர்-பாக்கியத்தையுடைய—நளன் - நள
ராஜன்—வௌவற்றிடலன்றி - பிடித்தாலன்றி—இம்மானிடர் - இம்
மனிதர்தாம்—எவ்வெப்படி - எந்தவிதமாக—வௌவினும்-பிடித்
தாலும்—எய்துவமோ—அகப்படுவமோ—எ-று. (கருத்து) அன்னமா
னதுயாம்நளன்கையிலகப்படுவதன்றி- மற்றவர்கையிலகப்படோமென்
றதுஎன்பதாம். (சாக)

ஒளிர்பொன்னுலகத்துறையும்பர்பிரா
னளியாற்புகலேவலு மாற்றுகிலேம்
வளர்பூவுறைவானவனேவலுமிக்
களனேவலுமேகனிசெய்குவமால்.

(இ-ள்) ஒளிர்-விளங்குகின்ற—பொன்னுலகத்து - தெய்வலோகத்திலே சென்—உறை- வாசஞ்செய்கின்ற—உம்பர்கோனை - இந்திரனது—அளியால்- அன்பினாலே—புகழ்-சொல்லப்பட்ட—ஏவலும் -ஏவலையும்—ஆற்றுகிலேம் (யாம்) செய்யோம்—வளர்-வளர்கின்ற—பூ- தாமரைப்பூவினின்—உறை-இருக்கின்ற—வானவன் - நான்முகக்கடவுளது—ஏவலும் - ஏவலையும்—இந்நாள் - இக்காளைது—ஏவலுமே- ஏவலையுமே—களி-மிகுதியாக—செய்குவம் (யாம்) செய்வோம்—எ-று. இலக்கணத்திரட்டு பொதுவியற்படலம், எழுத்து சொற்பொருடையதாகி பேறில்வினையால் ஆற்றுகிலேமென்றது வினைமாற்றுப்பு) (கருத்து) இந்திரனேவலும் பிரமனேவலும் நளனேவலும் செய்வோம் என்றன்னங்கு சொல்லிற்றென்பதாம். (௯௨)

அளிதூங்கியவானநிறைநாய்த்தூதுவன்
குளிர்தூங்குருதுவக்குளிமென்னிறையாத்
களிதூங்கியகாமனிடாயகரு
ளன்மேனியில்வீசுவன்குறமே.

(இ-ள்) துளி- அளித்தலோடு—தூங்கிய- தங்கிய—வானநி- ஆகாயகங்கையிலே—தோய்ந்து - முழுகி—தறங்குர் - கல்லகுளிர்ச்சியானது—தூங்கு- மிகவுறப்பெற்ற—குறுந்துளி - சிறியதுளிகளை—பொன்சிறையால் - மெல்லியசிறகுகளினாலே—களி - களிப்பானது—தூங்கிய - தங்கும்படியாகவும்—காமம் - காமத்தாலாகிய—விடாய் - தளர்ச்சியானது—அகல- நீங்கும்படியாகவும்—நளன்- நளனது—மேனியில்- () உடம்பில்—வன்குற - நன்றாகப்பட—வீசுவம். (யாம்) வீசுவோம்—எ-று. (கருத்து) ஆகாயகங்கையிலேமுழ்கித்துளிகள்பொருந்தியசிறகுகளினாலேயன்னது நளனுடைய திருமேனியில்வீசுவோமென்பதாம். () தருக்கசங்கிரகம்-அதுவுடல்வெறிவிடயமெனமூவகைப்படும். (௯௩)

கலித்துறை.

தெள்ளாரமுதத்தெளிவொத்தயந்திதேசாலைவாய்
வள்ளார்முரசங்காந்குமணிமுன்றில்வேந்தன்
கள்வாயுமிழ்பூங்கணைவேந்தியகாமனன்று
வள்ளார்வணங்குநளனென்றுமோர்காமவேள்.

(இ-ள்) தெள்ளார்-தெளிவுபொருந்திய—அமுதம்-தேவாமிர்தத்தினது—தெளிவொத்த-சாரம்போன்ற—அம்- அழகிய—தீ- தித்திப்பாகிய—சொல்-வாக்கையுடைய—நல்லாய்- தமயந்தியே—வள்ளார் - வாரினாலிறுக்கப்பட்ட—முரசம் - முரசவாத்தியமானது—காக்கும்-ஒலிக்கப்பெற்றிருக்கின்ற—மணி-நவமணிகளையுடைய—முன்றில் - வீட்டின்முன்னிடத்தையும்—நளனென்னும் - நளனென்றுசொல்லப்படுகிற—ஓர்காமம்-ஒப்பற்றகாமதேயத்தைநயமுடைய—வேந்தன் - அரசனொருவன், கள்-தேனை—வாய்-இதழ்வாயினால்—உமிழ்-கக்குகின்ற—பூங்கணை - மலரம்புகளை—ஏந்திய-தாங்குகின்ற, காமனனன்- மன்மதனைபோல அழகுடையவன், கள்ளார்-பகைவர்—வணங்கும் -(தன்னை)வணங்குதற்கு

முலைமேற்பொடித்தபுளகத்தினைமொய்த்தசெங்கண்
மலர்நீருடுத்தண்டலைவானவேந்தன்.

(இ-ள்) உலன்-இரண்டாகப்பிளந்து—நறுசெய்த-பொடிசெய்த—உயர் உயர்வாகிய—மா-பெரிய—மணித்தூண்-கம்பத்தூண்கள்போல—செய்-செய்யப்பட்ட—தோளான்-தோள்களையுடையனாகிய நளனுடைய—நற்குணத்தை—யாம்-யாங்கள்—உரைப்ப-சொல்லக் (கேட்டு), நசைசால்-(அவன்மேல்) ஆசைமிக்க—அரிவை-இந்திராணியினுடைய, கொம்மை-இளமைபொருந்திய—முலைமேல்-முலைகளின்மேலே—பொடித்த-உண்டாகிய—புளகத்தினை-மயிர்சிலிர்த்தலை, மொய்த்த-(கண்வடிவத்திலே) நெருங்கிய—செம்-செவ்விய—கண்மலர்-நேத்திரகமலங்களில்—நீர்-ஆனந்தநீரான அது—அருவியுமிழ்கின்ற தோள்தலால், வானவேந்தன்-தேவேந்திரனாகிய அவன்—கண்டிலன்-பார்த்திலன்—எ-று. (கருத்து) நளன்கீர்த்தியைக்கேட்டிந்திராணிமுலைகள் பூரித்ததைஇந்திரனுக்காயிரங்கண்ணீர்சோர்தலாற்கண்டிலனென்பதாம். (௮௭)

முருகுண்டுவண்டுபெயிருர்களனாண்முகத்தைப்
பெருவெண்மதியங்கவிழ்த்தப்பெருமையன்றே
கருநுங்கமலத்துறைநான்முகன்கைவருந்த
வருதிங்கடோறும்புதிதாகவகுத்தல்செய்வான்

(இ-ள்) கருதும்-நினைக்கின்ற—கமலத்து-தாமரைப்பூவின்கண்—உறை-இருக்கின்ற—நான்முகன்-நான்முகக்கடவுள்—வண்டு-வண்டுகளானவை—முருகு-தேனை, உண்டு-குடித்து—பயில்-வாசஞ்செய்யப்பெற்ற—தார்-மாலையையுடைய—நளன்-நளராசனது—வாண்முகத்தை-காந்திபொருந்தியவதனத்திற்கு—பெருவெண்மதியம்-கலைநிறைந்தசந்திரன், நிகர்-ஒப்பை—ஆய்த-ஆகிய—பெருமையன்றே-பெருமையாலன்றோ—கை-(தன்) கைகள்—வருந்த-நோவ—வரு-வருகின்ற—திங்கடோறும்-மாதந்தோறும்—புதிதாக-நூதனமாக—வகுத்தல் செய்வான்-உண்டாக்குகிறான்—எ-று. (கருத்து) நளன்முகத்துக்குச்சரிநிகராயிருப்பதால் பிரமன் அச்சந்திரனைமாதந்தோறும் புதிதாகப்படைக்கிறானென்பதாம். (௮௮)

கோனைக்களிற்றானனவாண்முகங்கூறுகென்று
யானோர்ந்திருமாலருள்செய்ததும்யாங்கள்கூற
நானிக்கமலமயனேடுமுகிழ்ப்பநாடிப்
பூணிற்பொலிந்தமுலைப்பூமகட்புல்லுமன்றே.

(இ-ள்) கோண்-மாறுபாடுபொருந்திய—களிற்று-யானைகளையுடைய-நளன்-நளராசனது—வாள்-காந்திபொருந்திய—முகம்-முகச்சிறப்பை—கூறுகென்று-சொல்லக்கடவீரென்று—யானோர்-அழகிய—திருமால்-மகாவிஷ்ணு—அருள்செய்ததும்-சொல்லியவளவில்—யாங்கள்-யாம்—கூற-சொல்ல—நானி-கொப்பூழ்—கமலம்-நாபிக்கமலமானது—அயனேடு-நான்முகனோடு—முகிழ்ப்ப-குவிய—நாடி-அத்தருண



ம்பார்த்து—பூணின்-ஆபரணத்திறலே—பொலிந்த-விளங்குகின்ற—முலை-முலைகளையுடைய—பூமகள்-திருமாதை—புல்லும் (அக்கடவுள்) கூடுவான்-எ-று. நசாதியை (கருத்து) விஷ்ணு நளன்முகத் தழகைச் சொல்லெனயாங்களசொல்லத்தமது நாபிக்கமலம்பிரமனுடன் மூடஅதைக்கண்டவிஷ்ணுவானவரிலக்குமியை அணைந்தாரென்பதாம். (௮௯)

இறைவண்டுதண்மென்முகைசூழ்ந்துபைந்தேறன்மாந்தி
யுறைகின்றதண்டார்புனைபுந்திறலாடல்வேந்தன்
பொறையுந்தெரினப்புவிமாதனைப்போங்குசெஞ்சூட்
டுறைவாளரவைக்கொன்னவியம்பலாமே.

(இ-ள்) சிறை-சிறைகளையுடைய—வண்டு-வண்டுகளானவை—தண்மென்-குளிர்ச்சிபொருந்திய—முகை-அரும்புகளை—சூழ்ந்து-சுற்றிக்கொண்டு—பைந்தேறல்-பசியதேனை—மாந்தி-குடித்து—அறைகின்ற-ஒலிக்கப்பெற்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—தார்-மாலையை, புனையும்-தரித்திருக்கின்ற—திறல்-வலுமையாலுண்டாகிய—ஆடல்-வெற்றிபொருந்திய—வேந்தன்-நளராசனுடைய—பொறை-குற்றம் பொறுத்தலையும்பூமிபாரந்தாங்குதலையும்—தெரின்-ஆராய்ந்தால்—அக்கண்-அகன்றவிடத்தையுடைய—புவிமாதினை-பூமிதேவியையும்—பொங்கு-விளங்காநின்ற—செஞ்சூட்டு-சிவப்பாகியசூட்டையுடைய—வாள்-காந்திபொருந்திய—இறை-(பாம்புகளுக்கெல்லாந்) தலைவனாகிய—அரவு-ஆதிசேஷனையும்—இன்னா (அவனுக்கு) உபமானங்களாக—இயம்பலாம்-அறிவுடையோருக்குச்சொல்லுதல்கூடும்—எ-று. (கருத்து) நளன்பொறுமையிலேபூமிதேவியையும் ஆதிசேஷனையும்ஒப்பானவன்-இலக்கணத்திரட்டு-இஉஜுள்ளமெய்யினுவிதாழிற்பெயர்-எ-ம்.

புற்றுதமால்முறைவாளிப்புயங்கமுண்ணச்
செற்றார்தமாவிநுகர்விக்குஞ்சிலைக்கையோற்குக்
குற்றேவல்செய்யுங்கொடியன்னவர்பாண்டகைக்
கற்றேமவையியல்வானடைகாட்டுகிற்பேம்.

(இ-ள்) அலமாரும்-தூணியாகிய—புற்று-புற்றிலுள், உறை-இருக்கின்ற—வாளி-அம்புகளாகிய—புயங்கம்-பாம்புகளானவை—உண்ண-உண்ணும்படியாக—செற்றார்-பகைவரது—ஆவி-பிராணவாயுவை—நுகர்விக்கும்-உண்பிக்கின்ற—சிலை-வில்லையேந்திய—கையாற்றுகையையுடையவனுக்கு—குற்றேவல்-சிறியவேவல்களை—செய்யும்-செய்கின்ற—கொடியன்னவர்பால்-பூங்கொடிபோல்பவரிடத்தே—நடைகடத்தற்கு—கற்று(யாம்)-கற்றுக்கொண்டு—ஆடு (தெய்வச்சபையி)லாடுகின்ற—அரம்பை-அரம்பையானவள்—பயில்வான-கற்கும்படியாக—நடை-அன்னநடையை—காட்டுகிற்பேம்-கற்பிப்போம்—எ-று. இலக்கணக்கொத்து-ஒழிபியல்-சூ-அ௬-எழுத்துச்சொற்றிரிபெனப்படுமென்றிப்-பொருட்டிரிபெனக்குறும்பொருதுமென்ப, இவ்விதியால் காட்டுகிற்பேமென்றதுசொற்றிரிபு (கருத்து) யாங்கள்நடத்தலைவல்

செய்யும்பெண்களிடத்து நடைபயின்று அரம்பைக்குக் கற்பிப்போம் என்பதாம். (எக)

அறைபொற்கழற்காலரசன் னரசாஞ்சொன்னல்லார்
மறைசொற்கள் யாவுமறையாமலெங்கட்குரைப்பார்
பொறிமுற்றடக்கிப்புலன்போம்வழிபோக்கல்செய்யா
நெறியிற்பிறக்குப்புகலாதனெஞ்சிலெண்ணி.

(இ-ள்.) அறை-ஒலிக்கின்ற—பொன்-பொன்னலாகிய—கழல் - வீரக்கழலையணிந்த—கால்-பாதத்தையுடைய—அரசன் - நளராசனது—நகர்-அரண்மனையிலுள்ள—அஞ்சொல்- அழகியசொல்லையுடைய—நல்லார்-மாதரானவர்—பொறிமுற்று-ஐம்பொறிகளையும்—அடக்கி-அடக்கி—புலன்-ஐம்புலன்களிலும்—போம்வழி - செல்லும்வழியில்—போக்கல்செய்யா-(அவற்றைச்) செலுத்தாத—நெறியின் - ஒழுக்கத்திலே—பிறர்க்கு-அயலாருக்கு—புகலாதன - சொல்லாதனவற்றை—நெஞ்சில்-மனதிலே—எண்ணி-நினைத்து—மறை -, மறைக்கத்தக்க—சொற்கள்யாவும்-எல்லாச்சொற்களையும்—மறையாமல் - ஒளிக்காமல்—எமக்கு-எங்களுக்கு—உரைப்பார்-சொல்லுவார்—எ-று (கருத்து) நளன் அரண்மனைப்பெண்கள் இரகசியங்களை எங்களிடத்திற் சொல்லுவார்களென்பதாம். (எஉ)

திங்கட்கலையின்செழும்பூங்கதிர்செவ்விவாய்ப்பக்
கங்குற்கமலமலர்தோய்ந்துகளிப்புறுமல்
லைபங்கட்குமுதமுறல்போலுமின்பாலுறுமற்
றெங்கற்புயத்தான்பிறமாதரைத்தோய்தன்மாதோ.

(இ-ள்) திங்கட்கலையின்-சந்திரகலையினது—செழு - செழிய—பூம் - அழகிய—கதிர் - அழகியகிரணத்தை—செவ்வி- அழகானது—வாய்ப்ப-பொருந்த—கங்குல்-இரவின்கண்—கமலமலர்- தாமரைமலரானது—தோய்ந்து-சேர்ந்து —களிப்புமகிழ்ச்சியை, உறுமல் - அனுபவியாதிருக்க—பங்கள் - சியதேகயுடைய—குமுதம் (அந்தாமரைமலரிற்குறைந்த)அல்லிமலரானது—உறல்போலும்- (அப்படி அம்மகிழ்ச்சியை) அனுபவித்தல்போலும்—நின் - உன்னுடைய—பால்- இடத்து—உறுமல்-பொருந்தாமல்—தொங்கல்-மாலையணிந்த—புயத்தான் - புயத்தையுடையநளராசன்—பிறமாதரை-வேறுமாதரை—தோய்தல் -சேர்தல்—எ-று. மாது ஓ இரண்டும் அசைகள்(கருத்து) நளனுன்னையல்லாது பிறமாதரைச்சேருதல்சந்திரனோத்தாமரைசேராது அல்லிசேருதல்போலிருக்குமென்பதாம். (எங)

மயிர்வாய்ச்சிறுகட்பிடிமென்னடைவாய்ந்தநல்லாய்
செயிர்தீர்விதியின்றிறம்யார்கொதெளிக்கத்தீரா
அயில்வேனளன்றனழகுன்னெழிலொத்தவாற்றுற்
பயிலேனுமின்பநினைக்கன்றிப்பயன்படாதால்.

(இ-ள்) மயிர்வாய்-மயிர்பொருந்திய—சிறுகண் - சிறியகண்களையுடையபிடி,பெண்யானைநடைபோலும் - மென்னடை, மெல்லியநடை-வாய்ந்த-பொருந்திய—நல்லாய்-தமயந்தியே— அயில்-கூர்மைபொருந்திய—வேல்-வேலையுடைய—நளன்-நளராஜனது—அழகு- அழகும்—உன்-உனது, எழில்-அழகும், ஒத்த(தம்மில்) லொத்திருக்கின்ற, ஆற்றால்-காரணத்தினால், பயில்-தங்கிய—நேயம்(ஒப்புடை)யன்பாலுண்டாகும், இன்பம்-இன்பமானது—நினைக்கன்றி-உனக்கல்லாமல் (மற்றொருத்திக்கு)பயன்படாது-கிடைப்பதில்லை—(அழகொத்திருந்தாலும் விதிசங்கற்பமிரதிகூலமாயிருந்தாலோவெனின்)செயிர்-குற்றத்தினின்றும்,தீர்ந்திய—விதியின்-விதியினது—திறம்-கருத்தை—தெளிக்க - அறிந்த—தீரார்-குணத்தையுடையவர்—யார்-எவர்—எ-று.(கருத்து)தமயந்தியேஉன்னழகும்நளனழகும்ஒத்திருக்கிறதால் அவனின்ப முனக்கேகிடைக்கும் வேறொருத்திக்குப்பயன்படாதுவிதிவசமெவ்வாறோ என்பதாம். ()சொற்பொருள்விளக்கம்-இன்பமெவ்வுயிர்க்குமியற்கைப்பொருட்குணம். (எச)

விரைசேர்கமலைமடந்தைமோதினில்வீற்றிருக்கும்
திருவோடுசெங்கட்டிருமாலினைச்சேர்த்தலாலும்
வரைமானைமுக்கட்பெருமானிடம்வைத்தலானு
மிரவோடுதண்ணென்கதிர்த்திங்களிசையத்தலாலும்.

(இ-ள்) விரைசேர்-வாசனைபொருந்திய—கமலம் - உந்திக்கமலத்துதித்த பிரமனுனவன்—நறும்போதினில்-நற்றுமணமலரின்—வீற்றிருக்கும்-எழுந்தருளியிருக்கும்—திருவோடு- திருமாதோடு—செங்கண் -செய்யகண்களையுடைய—திருமாலினை-விஷ்ணுவை—சேர்த்தலாலும் - கூட்டினமையாலும்—வரைமானை-பார்வதிதேவியை—முக்கண்-மூன்று கண்களையுடைய—பெருமானிடம்- கடவுளிடத்தே—வைத்தலாலும்- இருத்தினமையாலும்—இரவோடு- இராத்திரியோடு—தண்ணென்- குளிர்ச்சிபொருந்திய—கதிர்- கிரணங்களையுடைய—திங்கள்-சந்திரனை—இசையத்தலாலும்-பொருந்தினமையாலும்—எ-று. (விரைசேர்கமலைநறுமபோதினில்வீற்றிருக்கும்) எனப்பாடமோதிலுலக்குமிக்குமுடைமொழியாக்குவாருமுண்டு. அவ்வாறுஅடைமொழிகூறில் எழுவாயின்மையாற்பொருந்தாது இச்செய்யுளும்வருஞ்செய்யுளுமகுளகம். தண்டியலங்காரம்-குளகம்பலபாட்டொருவினைகொள்ளும்(கருத்து)பிரமதேவனுந்திருமகளையுந்திருமாலையும்பார்வதியையும்பரமசிவனையும்இரவையுஞ்சந்திரனையும் சேர்த்தமையாலும். (எரு)

குயின்மென்குதலைத்திருவேகினைக்கூடியின்ப
மயில்கொண்டவொள்வேனளற்காகமைத்திலானே
வினைபெண்ணியன்றிவிதிகூட்டலென்னவஞ்சிர்த்தி
பயனின்றிமாதிப்பழியாகப்பயக்குமன்றே.

(இ-ள்.) குயில்-குயிலிசைபோலும்—மென்குதலை-மெல்லியமழலைச்சொற்களையுடைய—திருவே-தமயந்தியே—நினை - நின்னை—கூடும்-அனுபவித்தநடைவதாகிய—இன்பம் - இன்பத்தை—அயில்கொண்ட-கூர்மைகொண்ட—ஒள்வேல்-ஒள்ளியவேலையுடைய—நளற்காக-நள

ராஜன்பொருட்டு—அமைத்திலாயேல்- படைத்திலையின்—இயைபுதகுதியை, எண்ணியன்றி- நினைத்தலில்லாமல்—விதி-நான்முகனானவன்—கூட்டலென்னும்- (ஒருவரோடொருவரைச்) சேர்க்கலென்கிற, சீர்த்தி-கீர்த்தியானது—பயனின்றி-பயனில்லாமல், மாறி-வேறுபட்டு, பழியாக-நிந்தையாக—பயக்கும்(அவனுக்கு)விளையும்—எ-று (கருத்து) தமயந்தியே. உன்னைநளனுக்காகப்படைத்திலனாகில் பிரமனுக்குப் பழிவிளையுமென்றன்னங்கூறிற்றென்பதாம். (௭௬)

போர்வேனளன்றன்புனைதாரகன்மார்புபுல்லு
மோரார்மகள்யாரெனயானயனோடுகேட்டக்
காரோதியின்பேர்கழறுற்றனன்போலுமாங்குத்
தேரோதைதன்னூற்றெளிவுற்றிடக்கேட்டிலேன்யான்.

(இ-ள்.) கார்-மேகம்போலும்—ஓதி- கூந்தலையுடையவளே—போர்-போர்செய்தற்குரிய—வேல் - வேலையுடைய—நளன்-நளராஜனது—புனை-சூடப்பட்ட—தார்-மாலையையுடைய—அகல்-பரந்த—மார்பு- மார்பை—புல்லும்-தழுவத்தகும்—ஏர்-அழகிஞல்—ஆர் - நிறைந்த—மகள்-மங்கையாரென-எவளென்று,யான்- நான்—அயனோடு-நான்முகனை, கேட்ப-வினவ, நின்-நினது,பேர்-நாமதேயத்தை,கழறுற்றனன்போலும்-(அவன்)சொன்னான்போலும்—ஆங்கு-அப்போது,தேர்- (அவனது) தேரினது—ஓதைதன்னால்-ஓசையினாலே—தெளிவுற்றிட- ஐயந்திர—யான்-நான்—கேட்டிலேன்- (அதைக்)கேட்டறிந்திலேன்—எ-று. அகத்தியம் - ஏழன்விபத்திமுன்னைப்ஆம்வன்கணமிகும்ப குவலயாநந்தம்-விபத்தியென்பதுவேற்றுமையெனப்படும்(கருத்து) நளனுக்கு மனைவியாரென்றுபிரமனையான்கேட்க, அவனுன்பேர்சொற்றனன்போலுமிருந்துதேரோசையாற்றெளிவுறக்கேட்டிலனென்பதாம். (௭௭)

கருந்தாரைவாய்வாள்பொருவுங்கயற்கண்ணிகேண்மோ
பொருந்ாதனயான்புகன்றேனலைவிற்கப்பூந்தாள்
வருந்தாவொதுக்கப்பிழைசெய்தனன்மாறவுள்ளம்
பரிந்தார்வமுற்றப்புரிவேனெனப்பணித்திசென்று.

(இ-ள்) கருந்தாரைவாய்-கருவிழிபொருந்திய—வாள்-வாளையும்—கயல்-கெண்டையையும்—பொருவும்-நிகர்க்கின்ற—கண்ணி-கண்களுடையவளே—கேள்-நீகேளு—யான்-நான்—பொருந்ாதன - இப்பேதைக்குவேண்டாதசொற்களை—புகன்றேன்.சொல்லினேன்—அலைவிற்க-அலைவிற்பதாக—பூ-மலர்போல (மெல்லிய) தாள்- உன்னடிகளானவை—வருந்தா-வருந்தி—ஒதுக்க-(என்பின்னே) நடந்துவரும்படியாக—பிழை-குற்றத்தை—செய்தனன்-(உனக்குச்) செய்தேன்—மாற-அதுதிர—உள்ளம்-உள்ளத்தில்—பரிந்து-அன்புற்று—ஆர்வம்,(உன்) விருப்பத்தை—முற்ற-நிறைவேற—புரிவேன்-செய்வேன்—என் -(அவ்விருப்பம்)யாது—பணித்தி(நீ)சொல்லு—என்று-என்றுசொல்லி—எ-று (மோமுன்னிலையசைச்சொல்)(கருத்து)தமயந்தியேவிருப்பமற்றசொற்களைச்சொன்னேன். அலைவிற்கட்டும்உன்விருப்பத்தைநிறைவேற்று



வேன்நீசொல்லென்றன்னஞ்சொல்லிற்று. திருக்கசங்கிரகம்-௨௧-ம் - குத்திரமடருவங்கவர்வதுகருமணிநானியது- கண்ணெனப்பெயரியத்தவபொறியென்பதாம். (௭௮)

தோளாமணியைநிரைத்தன்னமென்றூயமூரற்
கோளார்மதிவாண்முகத்தாளுட்குறிப்புநாடித்
தாளாண்மையுள்ளங்குறிப்பிற்றெரிதன்மையோரின்
வாளாவிருந்ததணிபொற்சிறைவாய்ந்தவன்னம்.

(இ-ள்) அணி-அழகிய—பொன்-பொன்மயமாகிய—சிறை- சிறைகள்—வாய்ந்த-பொருந்திய, அன்னம்- அன்னமானது,தோளா- துளைக்கப்படாத—மணியை - முத்துக்களை—நிரைத்தன்ன - ஒழுங்குபடுத்தல்போலும்—மெல்-மெல்லிய—தூய-பரிசுத்தமாகிய, மூரல்-பல்லொழுங்கையும்—கோளார்-பெருமைபொருந்திய—மதி -சந்திரன்போலும்—வாள்-காந்திபொருந்திய—முகத்தாள்-முகத்தையுமுடைய தமயந்தியினது—உட்குறிப்பு-உட்கருத்தை—நாடி-ஆராய்ச்சிசெய்துகொண்டு—ஆண்மை-ஆழமாகிய—உள்ளம்-(ஒருவர்) கருத்தை—குறிப்பின்-அறியின்—தாள்-தமதுமுயற்சியை—தெரி - (அதன்பின்பு) தெரிவிக்கும்—தன்மையோரின்-குணமுடையவர்போல்—வாளா- சும்மா—வதிந்தது-இருந்தது—எ-று·(கருத்து) அன்னமானதுதமயந்திஉட்கருத்தைஅறிந்துபேசாதிருந்தது என்பதாம். (௭௯)

இவ்வாறுசெங்கான்மடவன்னமிருந்தலோடு
மைவாளெனுங்கட்டமயந்திமனத்தினோர்ந்து
செவ்வாம்பலூறுஞ்செழுந்தேறலளித்தலின்றி
யொவ்வாதநீஞ்சொல்குயிலுணைவுரைக்கலுற்றாள்.

(இ-ள்) இவ்வாறு-இவ்விதமாக—செங்கால்-செய்யகால்களையுடைய—மடம்-இளமைபொருந்திய—அன்னம் - அன்னமானது—இருந்தலோடும்-இருந்தவளவில்—மை- அஞ்சனமெழுதப்பெற்ற—வாள்-வாள்போலும்—நெடு-நீட்சிபொருந்திய—கண்-கண்களையுடைய—தமயந்தி-தமயந்தியானவள், மனத்தின்-மனத்தின்கண்,ஓர்ந்து-ஆலோசித்து, செவ்வாம்பல்-செவ்வல்லிப்பூவிலிருந்து. ஊறும்-சுரக்கின்ற,செழுந்தேறல்-செழியதேனை, அளித்தலின்றி-சிந்துதல்(தன்னிடத்) திலலாமல்—ஒவ்வாத-நிகராகமாட்டாத—தீஞ்சொல் (தன்செவ்வாயிலிருந்துவருகிற)மதுரவார்த்தையை—குயில்- கோகிலமானது—நாண - வெட்கமுற—உரைக்கலுற்றாள்-சொல்லத்தொடங்கினாள்—எ-று (கருத்து) தமயந்திகுயிலும்நாணசொல்லத்தொடங்கினாள் என்பதாம். தொல்காப்பியம்-எஃகாறொற்றேமகடூஉவறிசொல். (௮0)

கலிவிருத்தம்.

பேதைநீர்மையிற்பெட்புறின்யாங்களு
மேதமெய்துறுமென்பர்சாதமே
யாதலாணிற்றெருடார்த்தருவாய்துறந்
திதிழைத்தனன்யானுன்றிறத்திலே.

(இ-ள்) பேதைகிர்மையில்-பேதமைக்குணத்தினாலே—யாங்கணும்-எல்லாவிடங்களினும்—பெட்புறின்-விரும்பினால்—ஏதம்-குற்றமும் (அதனால்விளைவதாகிய) துன்பமும்—எய்துறும்-அடையும்—என்பர்-என்றுசொல்லுவார் (பெரியோர்) சாதமே (அது) சத்தியமே—ஆதலால்-ஆகையால்—நின்-உன்னை—தொடர்ந்து-பின்சென்று—அனூர்-துன்பமானது—எய்துற-(என்னை) யடைய—யான்-நான்—உன்றிறத்தின்-உன்னிடத்தே—தீது-குற்றத்தை—இழைத்தனன்-செய்தேன்—எ-று. (கருத்து) தமயந்தியானவள் அன்னமே உன்னிடத்திற் குற்றஞ் செய்தேனென்றாள் என்பதாம். (௮௧)

பளிங்கிற் றுன்னியபல்பொருண்மற்றதில்
வளக்கித்தோன் றல்போல்யான்செய்தவெம்பிழை
களங்கமற்றவுன் னுள்ளத்திற்கண்டுகொற்
றுளங்கயான்பிழைத்தேனென்றுசொற்றதே.

(இ-ள்.) களங்கமற்ற-மாசற்ற—பளிங்கில்-கண்ணாடியிடத்து—துன்னிய-கிட்டியிருக்கின்ற—பல்பொருள்-பலபொருளும்—அதில்-அதனுள்—விளங்கித்தோன்றல்போல்-பிரதிபிம்பித்துத்தோன்றுதல்போல—(துன்னிய)-(உன்னிடத்துக்) கிட்டியிருக்கின்ற—யான்-நான், செய்த-(உனக்குச்) செய்த—வெம்பிழை-கொடியபிழையானது—களங்கமற்ற-மாசற்ற—உன்-உனது—உள்ளத்தில்-நெஞ்சுள்—கண்டுகொல்-பிரதிபிம்பித்துத்தோன்றியோ—யான்-நான்—துளங்க-நடுங்கும்படியாக—பிழைத்தேனென்று-(உனக்குக்) குற்றஞ்செய்தேனென்று—சொற்றது (நீ) சொல்லியது—எ-று. (கருத்து) கண்ணாடியானது தன்முன்னுள்ள பொருளைத் தான்காட்டுதல்போலவென் குற்றத்தை நீயே றுக்கொண்டெடுத்துக் காட்டினையென் றன்னத்தைச்சொல்லிற்றென்பதாம். (௮௨)

வேண்டல்செய்வலென்றாய்விழைவாவினைக்
காண்டலன்றியெவ் வேண்டுங்கதிர்மதி.
யீண்டுநோக்குநர் 0 கண்களிப்பெய் துறச்
சேண்டயங்குவதன் றியென்செய்யுமால்.

(இ-ள்) வேண்டல்-வேண்டப்பட்டதை—செய்வலென்றாய்-செய்வேனென்றுசொன்னாய்—விழைவால்-ஆசையினாலே—நினை-(அழகிய) உன்னை—கண்களிப்பு-நேத்திரானந்தத்தை—எய்துற-அடைய—காண்டலன்றி-காணுதலல்லாமல்—என்-யாது—வேண்டும்-(எனக்கு) வேண்டும்—கதிர்-கிரணத்தையுடைய—மதி-சந்திரனானவன்—ஈண்டு-இவ்விடத்திருந்து—நோக்குநர்-பார்ப்பவர்—கண்களிப்பு-நேத்திரானந்தத்தை—எய்துற-அடைய—சேண்-ஆகாயத்திலிருந்து—தயங்குவதன்றி-விளங்குவதல்லாமல்—என்-யாதுபயனை—செய்யும்-(அவர்க்குச்) செய்வான்—எ-று. () தொல்காப்பியம்-இளவியாக்கவியல்-௬௨-ஞ-கண்ணுற்றோருமுலையும் பிறவும்-பன்மைச்சுட்டியசினைநிலைக்கிளவி-பன்மைகூறுங் கடப்பாடிலவே-தம்வினைக்கியலுமெழுத்தலங்கடையே, (கருத்து) தமயந்தியானவள் அன்னமேயான் விரும்பியதைச்செய்வே



னென்றாய்நீயுன்னைக் கண்டதேயல்லாமல் எனக்கென்னவேண்டுமென்றாள்-எ-ம். (௮௩)

கொச்சகக்கலிப்பா.

விழையுமனத்தூமனத்தைவிட்டகல்வதெனினன்றே
தழையவுளாதருகாவரற்சாற்றலாந்தகைமைத்தா
பெழுபுவிவாழ்கன்னியரிவிருவிசும்பிற்றருவினுங்
கொழுகினைநல்குகிறொன் றுகூறுநருமுளர்கொல்லோ.

(இ-ள்) விழையும்-விரும்பப்படுகின்ற—மனத்தூ-மனத்திலுள்ளதொன்று—மனத்தை-அம்மனத்தை—விட்டகல்வதெனினன்றே-விட்டுவெளிப்படுவதாயினன்றே—தழைய-பெருக—உளாதரும்-பேசுகின்ற—காவரல்-நாவினாலே—சாற்றலாந்தகைமைத்தாம்-சொல்லப்படுந்தகுதியுடையதாகும்—எழுபுவி-எழுதிவுகளிலேயும்—வாழ்-வாழ்கின்ற,கன்னியரில்-பெண்களுள், இருவிசும்பில்-பெரியவானுலகத்துள்ள—தருவின்-கற்பகத்தருவினது—நறு-பரிமளம்பொருந்திய,கொழுநனை-செழியவரும்பை—நல்குதிகொன்று (கொணர்ந்து) கொடுவென்று—கூறுநரும்-சொல்வாரும்—உளர்கொல்-இருக்கின்றாரோ—(அப்படியே) தருவின்-கற்பகத்தருப்போலும்—நறு-நற்றுணம்பொருந்திய—கொழுநனை நல்கு , நல்குதிகொன்று-கொணர்ந்துகொடுவென்று—கூறுநரும்-சொல்வாரும்—உளர்கொல்-இருக்கின்றாரோ—எ-று. ஃ தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-எ-ம்-சூத்திரம்-ஒரோவொற்றுமைபகரவிரிதி—மாறைக்கிளவி யுளப்படமூன்று-நேரத்தோன்றும்பலரறிசொல்லே (கருத்து) தமயந்தியானவள் கொழுநனைத்தாவென்றுசொல்பவருமுண்டோவென்றுசிலேடையாகச்சொன்னாள் என்பதாம். (௮௪)

தழைசிறையமடவனமேசாற்றுதியென் றிவ்வாறு
குழைதிறிக்குமதர்நெடுங்கட்கொம்பர்மகிழ்நாணுமெனு
மொழிவதுகேட்டையுற்றுமுகிழ்நகைவாளுறநுள்ளத்தில்
விழைவதுநன்மொழிகள்சி[illegible]விளம்புமால்.

(இ-ள்) தழை-தழைத்த—சிறைய-சிறகுகளையுடைய—மடம்-இளமைபொருந்திய—அனமே-அன்னமே—சாற்றுதியென்று-சொல்லென்று—இவ்வாறு-இவ்விதமாக, குழை-குழையையுடைய (காதை)—திறிக்கும்-கிழிக்கின்ற—மதர்-மதர்த்த—நெடு-நீட்சிபொருந்திய—கண்-கண்களையுடைய—கொம்பர்-பூங்கொம்புபோல்பவள்—மகிழ்-மகிழ்ச்சியோடும்—நாணி-நாணும்-வெட்கத்தோடும்—மொழிவது-சொல்லுவதை—கேட்டு-(தான்) கேட்டு—ஐயுற்று-சந்தேகித்து—முகிழ்-முல்லையரும்புபோலும்—நகை-பற்களையும்—வாள்-காந்திபொருந்திய—நுதல்-நெற்றியையுமுடையவளது—உளத்தில்-உளத்திற்கனவிணை—விழைவது-விரும்பப்படும்—நன்மொழிகள்சில-சிலநல்லசொற்களை—மடவனம்-இளமைபொருந்தியவன்னமானது—விளம்பும்-அவளுக்குச்சொல்லும்—எ-று. (கருத்து) தமயந்திசொற்களைக்கேட்டன்னஞ் சொல்லியதென்பதாம். (௮௫)

தருவினுங்கொழுநனையார் தருகவெனவுரைப்பரெனு
மரியமறைப்பொருளதனையான்கேட்கலாகாதோ
தெரியவருமறைப்பொருளைச்செவிப்புலத்தினுறநான்காம்
வருணமுடையவர்கேட்கலாகாதவாறேபோல்.

(இ-ள்.) தருவின்-கற்பகத்தருவினது—நறு - பரிமளம்பொருந்திய—கொழுநனை-செழியவரும்பை—யார்-எவர்—தருகவென - கொடுவென்று—உரைப்பரெனும்- சொல்லுவாரென்றுசொல்லப்பட்ட—அரிய-அரிதாகிய—மறைப்பொருளதனை- இரகசியப்பொருளை—யான்-நான், கேட்கலாகாதா - கேட்கத்தகாதா, தெரியவரு - அறிதற்கரிய—மறைப்பொருளை-வேதப்பொருளை, செவிப்புலத்தில் - சுரோத்திரேந்திரியத்தினாலே— உற-பொருந்த—நான்காம்வருணமுடையவர்-சூத்திரர்—கேட்கலாகாதவாறேபோல்-கேட்கத்தகாதவிதம்போல்—எ-று.(கருத்து) அன்னமானது தமயந்தியே நீசொன்ன இரகசியப்பொருளை யான்கேட்கலாகாதோவென்றுசொல்லிற்றென்பதாம். (௮௬)

மனமுறுமோர்பொருளடைதலரியதோமனத்தாலு
நினைவரியபொருளினையுநிறையுடையோரடைகுவரால்
புனைமணிமேகலைதாங்கிப்புடையகன்றவல்குலொடு
கனியனையவந்திருசொற்கற்பகப்பூங்கொம்பனையாய்.

(இ-ள்) புனை-அலங்கரிக்கப்பட்ட—மணிமேகலை - இரத்தினமேகலையை—தாங்கி-சுமந்து—புடையகன்ற-புடைபரந்த—அல்குல் - பரப்பையும்—அல்குல்-அரைக்கீழிடத்தையும்—கனியனைய- முக்கனிபோலும்—அம்-அழகிய—இ-மதுரம்பொருந்திய—சொல் -சொல்லையுமுடைய—கற்பகப்பூங்கொம்பனாய்-கற்பகத்தின்மலர்க்கொம்புபோல்பவளே—மனம்-மனத்தின்கண்—உறும்-இருக்கின்ற—ஓர்பொருள் -ஒருபொருளை—அடைதல்-பெறுதல்—அரியதோ - (கற்பகவரும்பையடைதல்போல்) அரியதோ (அரியதன்று) அரியதென்றேன் சொல்லக்கூடாதெனின்—நிறையுடையோர்-யோகிகள்—மனத்தாலும் - அம்மனத்தினாலும்—நினைவரிய-நினைத்தற்கெட்டாத—பொருளினையும்-பரப்பிரமத்தையும்—அடைகுவர்-பெறுவார்-எ-று(கருத்து)தமயந்தியேநினைத்ததையடைதல் அரிதன்றென்றன்னஞ்சொல்லியது எ-ம் ✻ இலக்கணத்திரட்டு-ஒருமைபன்மைக்குறுக்குச்சாரியை. (௮௭)

பொய்ம்மைமொழிபுகன்றறியேம்புகலமனமெண்ணுகினு
மெய்ம்மையலதுரையாநாவேதநவில்பயிற்சியாற்
கொம்மைவருமுலைவாய்மையுடையோரைக்குறித்துரைப்பி
னெம்மைமுதலெடுத்துரைப்பர்தண்கமலத்திறைமுன்னும்.

(இ-ள்.) கொம்மை-இளமைபொருந்திய—வரு-வளர்கின்ற—முலை-முலைகளையுடையவளே—பொய்ம்மைமொழி - அசத்தியவார்த்தையை—புகன்றறியேம்-சொல்லியறியேம்—புகல - (ஒருசமயத்திலே) சொல்லுதற்கு—மனம்-மனமானது—எண்ணுகினும் - நினைத்தாலும்—நா-(ந



ம்முடைய) நாக்களானவை—வேதம்-வேதத்தை—நவில்- ஓதுகின்ற—பயிற்சியால்-பழக்கத்தினாலே—மெய்ம்மை(மொழி யல்லது)-சத்தியவார்த்தையையல்லாமல்—உரையா-சொல்லாவாம்—தண்கமலத்து -குளிர்ச்சிபொருந்தியதாமரைப்பூவிலுள்ள—இறைமுன்னும் -நான்முகக்கடவுண்முன்னும், வாய்மையுடையோரை-சத்தியத்தையுடையோரை-குறித்து—கருதி-உரைப்பின்-பேசின்—எம்மை -எம்மையே—முதல்-முதலில்—எடுத்து - குறித்து—உரைப்பர் - சொல்லுவார்—எ-று (கருத்து) தமயந்தியே பொய்வார்த்தைகள் சொல்லியறியோம் சொல்லநினைக்கில்வேதப்பயிற்சியால்நாக்கள் எழாவாம் எ-ம். ✻ தொல்காப்பியம்-அ-ஆ-வ-என-வருஉமிறுதி- யப்பான்மூன்றேபலவறிசொல்லே()

மாட்டுவரிக்கரும்புமுரல்பங்கயமெல்லரும்பேய்க்கு
மோட்டிளவெம்முலையெனக்குமுடியாதபொருளுளதோ
கூட்டரவின்மேற்கிடந்ததொடுகடன்ஞாலத்திடைநீ
வேட்டதுகூறுதிகொணர்வல்விரைவினெனக்கூறியதால்.

(இ-ள்) வரி-இரேகைகளையுடைய—கரும்பு -வண்டுகளானவை—மாட்டு-பாட்டை—முரல்-பாடப்பெற்றிருக்கின்ற—பங்கயம் - தாமரையினது—மெல்லரும்பு மெல்லியவரும்பை—ஏய்க்கும்- நிகர்க்கின்ற—மோட்டிளவெம்- உயர்ச்சியும்இளமையும்விரும்பப்படுங்குணம்பொருந்திய—முலை-முலைகளையுடையவளே—எனக்கு-என்றால்—முடியாத-முடிவுபெறாத—பொருள்-காரியமானது—உளதோ - இருக்கின்றதோ-கூட்டு-உச்சிக்கொண்டையையுடைய—அரவின்மேல் - ஆதிசேடன்மேல்—கிடந்த-தங்கிய—தொடு-தோண்டப்பட்ட—கடல்-கடலாற்சூழப்பட்ட—ஞாலத்திடை-பூமியின்கண்—வேட்டது (உன்னால்) விரும்பப்பட்டபொருளை—நீ-நீ—கூறுதி-சொல்லு—விரைவில் - சீக்கிரத்தில்—கொணர்வல்-(யான் அதனைக்)கொண்டுவருவேன், என- என்று—கூறியது(அன்னந்தமயந்திக்குச்)சொல்லியது—எ-று. (கருத்து) தமயந்தியே நீ இச்சித்ததைச்சொல்லுவிரைவில்கொண்டுவருவேனென்றன்னஞ்சொல்லிற்றென்பதாம். (௮௯)

மருவுபுரிநரம்பிசைக்குமாடகநல்யாழிசைகேட்
டுருகினளன்பால்வேட்கையுற்றனளொன்றறிகிலா
ளரியபசும்பொன்னிறத்தவாய்தூவிமடவனமே
தெருமராதுற்றேன்விழைவுசெப்புமாறெவனென்றாள்.

(இ-ள்) அரிய-பெறுதற்கரிய,பசும்பொன்-பசியபொன்னினது—நிறத்த-உருவமுள்ள—ஆய்-தோயத்தக்க—தூவி-சிறகுகளையுடைய, மடம்-இளமைபொருந்திய—அனமே-அன்னமே—மருவு-சேர்ந்த—புரி வலிக்கட்டுகளையும்—நரம்பு தந்திகளை—இசைக்கும் - இசைவிக்கின்ற—மாடகம்-முறுக்காணிகளையுமுடைய—நல்யாழ் - நல்லவீணையினிசை போல்கின்ற—இசை-(என்)சொல்லை—கேட்டு-(இவள்)கேட்டு—உருகினள்-மனங்குழைந்தவளாகிய—அன்பால்-ஆசையினாலே, வேட்கையு

ற்றனென்று (அச்சொல்லையே) கேட்கவேண்டுதலுற்றானென்று (இன்னுஞ் சிலேடையால்) உருகு-உளமுருகாநின்ற---இன் - இனிமை பொருந்திய---நளன்பால் - நளனிடத்தே---வேட்கையுற்றனனென்று-ஆசைமிகுந்தானென்று---அறிகிலாய்- அறியாயா---தெருமாலுற்றனை-மனக்கலக்கத்தையடைந்தனன்---விழைவு - அவ்வாசையை---செப்புமாறு(வெளிப்படையாகச்) சொல்லும்விதம்---எவன்-யாது---என்றாள்-என்றுசொல்லினாள்தமயந்தி---எ-று (கருத்து) அன்னமேயிசைகேட்டு நளன்பாலாசையுற்றனையென்றறியாயாஎன்பதாம். ⁂ நளனுக்கெவளென விறுவினைக்குறிப்பிழியிருபால். (௬௰)

வேட்கைதனை யுளத்தடக்கி மெய்க்காணன் மறைத்திகழும்
வாட்படைபோனெடுங்கண்ணுள் வழங்கியசொற்பொருடேர்ந்து
நாட்கமலவள்ளவாய்க்குரும்போதிலமர்செய்ய
தாட்பவளக்கொடிகைவாய்மடவன்னஞ் சாற்றுமால்.

(இ-ள்) நாள்-அன்றலர்ந்த---கமலம்-தாமரையினது---வள்ளம் - கிண்ணம்போலும்---வாய்-வாயையுடைய---குரும்போதில்-நல்லமலரில், அமர்-வாசஞ்செய்கின்ற---செய்ய-செம்மைநிறம்பொருந்திய---தாள் - அடிகளையும்---பவளக்கொடிகை-பவளத்துண்டம்போலும், வாய்-வாயையுமுடைய---மடம்-இன்மைபொருந்திய---அன்னம் - அன்னமானது---திகழும்-போர்செய்தற்குரிய---வாட்படைபோல்-வாளாயுதம்போலும்---நெடுங்கண்ணுள்-நெடியகண்களையுடையவள்---வேட்கை (நளன்மேலுண்டாகிய) வாஞ்சையை, தனது-தன்னுடைய---உளத்து- மனத்தின்கண்---அடக்கி-வெளிப்படாமல்வைத்து---நாணால் - வெட்கத்தினால்---மெய்-அவ்வாசைகொள்ளப்பட்டபொருளை---மறைத்து-(சிலேடையால்) மறைத்து---வழங்கிய-சொல்லிய---சொற்பொருள் - வாக்கியார்த்தத்தை---தேர்ந்து-அறிந்து---சாற்றும்-சொல்லும்---எ-று (கருத்து) தமயந்தி நளனிடத்திச்சைவைத்து மறைபொருளாகச் சொன்னசொல்லையறிந்தன்னஞ்சொல்லுமென்பதாம். (௬௧)

தருவினுநல்கொழுகனையார்தருகென்பாரென்றதுஞ்சீர்
மருவுபுரிநரம்பிசைக்குமாடகநல்யாழிசைகேட்
டுருகினளன்பால்வேட்கையுற்றனளெனாத்ததுயான்
கருதினனற்பலகலையுங்கற்றுணர்ந்ததெளிவினால்.

(இ-ள்) தருவின்-கற்பகத்தருவினது---நறும் - வாசனைபொருந்திய---கொழுகனை-செழியவரும்பை---யார்-எவர்---தருகென்பார்-தருகவென்று சொல்லுவார்---என்றதும்-என்றுசொன்னதும்---சீர் மருவும் - சிறப்புப்பொருந்தும்---புரி-கட்டுகளையும்---நரம்பு - தந்திகளை---இசைக்கும்-இசைவிக்கின்ற---மாடகம்-முறுக்காணிகளையுமுடைய---நல் - நல்ல---யாழ்-வீணையின்---இசைகேட்டு-இசையைக்கேட்டு ⁂ உருகினளன்பால், உருகினளன்பால்-உருகினளன்பால், வேட்கை - ஆசை---உற்றனளென்று - அடைந்தனளென்று---உரைத்ததும் - சொன்னதும்---யா



ன்-நான்---பல்கலையும்-பலவகை நூல்களையும், கற்றுணர்ந்த-கற்று (அவற்றின்பொருளை) யறிந்த---தெளிவினால் - தெளிவைக்கொண்டு---கருதினன் - (நளனைக்குறித்துச் சொல்லப்பட்டவையென்று) அறிந்தேன்---எ-று (கருத்து) தமயந்தியே சிலேடையாகச்சொன்னதை யானறிந்தேனென்றன்னஞ்சொல்லிற்று-என்பதாம் () சிலேடை. (௬௨)

மறங்கிளருமதர்நெடுங்கட் கன்னியர்) மனமொன்றிற்
செறிந்தாருடன்பிரியுமெனத்தெளிவுடையோர்செப்புதலா
னறுந்துணைபோன்றில்லோதிகைப்புறுமின்குறிப்புரைக
ளறிந்துமறியேன்போலவையுறவுற்றிருந்தனன்யான்.

(இ-ள்) நறுந்துணர்-நறியமலர்களையும்---ஒண்சில்-ஒள்ளியபொன் வட்டத்தகட்டணிகையுமணிந்த---ஓதி-கூந்தலையுடையவளே---மறம்-கொலைத்தொழிலால்---கிளரும்- விளங்காநின்ற---மதர்-மதர்த்த---நெடு-நெடிய---கண்-கண்களையுடைய---கன்னியர் - கன்னியர்களின்---மனம்-மனங்களானவை---ஒன்றில்-ஒருபொருளில்---செறிதும் - அழுந்தியும்---உடன்-விரைவில்---பிரியுமென- (அந்நிலையில்) நீங்குமென்று---தெளிவுடையோர் - அறிவுடையோர்---செப்புதலால் - சொல்லுதலினாலே---ஐயப்புறா-விரும்பப்படுகின்ற---நின் - உன்னுடைய---குறிப்புரைகள்-குறிப்புச்சொற்களின்பொருளை---யான்-நான்---அறிந்தும் - தெரிந்தும்---அறியேன்போல-அறிந்திலேன்போல---ஐயுறவுற்று - சந்தேகமடைந்தும்---இருந்தனன் - இருந்தேன்---எ-று(கருத்து). தமயந்தியேபெண்கள் மனங்கள் விரைவிற்பிரியுமென அறிவுள்ளோர்சொல்லுதலால் உன்குறிப்புச்சொற்களையறிந்தும் அறியாதுபோலச்சந்தேகித்தேனென்றது அன்னம் என்பதாம். ⁂ தொல்காப்பியம் - நாமென்கிளவி பன்மைகுறித்தே. (௬௩)

() உலகமெலாம்பொதுக்கியோராழிதனையுருட்டி
யலகில்புகழ்ப்படாம்போர்த்தவரசர்பிரான்றிருமுன்னர்
மலர்பொதுளஞ்சில்லோதிமையுற்றுமடநாணற்
சிலமொழிசொற்றனளென்றுச்செப்புவதுஞ்சீர்மைத்தோ.

(இ-ள்) உலகமெலாம்-பூமிமுழுதையும்---பொது(பலவரசர்க்கும்) பொதுமையினின்று---நீக்கி - நீங்குவித்து---ஓராழிதனை - ஒருசக்கரத்தை---உருட்டி-செலுத்தி---அலகில்- அளவில்லாத---புகழ்-புகழாகிய---படாம்-ஆடையை---போர்த்த- (அந்தபூமியின்மேற்)போர்த்தல்செய்த---அரசர்பிரான்-ராஜாதிராஜனது, திருமுன்னர்-சன்னிதானத்தில், மலர்-மலர்கள்---பொதுள்-நெருங்கப்பெற்ற---அம் - அழகிய---சில்-பொன்வட்டத்தகட்டணியணிந்த---ஓதி- கூந்தலையுடைய(தமயந்தி)---ஐயுற்று-சந்தேகித்து---மடம்- அறியாமையோடுகூடிய---நாணல் - வெட்கத்தினாலே---சிலமொழி- (உனைக்குறித்துச்) சிலசொற்களை, சொற்றனளென்று - சொல்லினளென்று---செப்புவதும் - சொல்லுவதும்---சீர்மைத்தோ-சிறப்புடைத்தாமோ---எ-று. () இலக்கணக்கொத்து-ஒழிபி

யல்-உக-ரு-வேற்றுமைவழியோடல்வழியன்றிய - மவ்விருவழியுமடுத் தும்பொருவழி-யப்புறன் றுன்னையடங்காவழியு-மெனாதன் னென்றேபி யம்புவர்சந்தி-இவ்விதியால் உலகம்-பேடு-தெய்வம்-அலி- இவற்றிற்குச் சொற்பொருடினைபால் தொடுக்கிற்சிறப்புமன்று பொருவுமன்று அடங்காவழினைக்கொள்க (கருத்து) தமயந்தியேகளாசன் திருக்கொலு வின்முன்னேபோய்அரசனேஉன்னைக்குறித்துத்தமயந்தி வெட்க த்தாற்சிலசொற்கள்சொன்னாள் என்றுசொல்லுவதுசிறப்பாகுமோ என்றன்னஞ்சொல்லிற்றென்பதாம். (கூ)

கந்தடுசிம்புரிக்கோட்டுக்களைபூகளியுங்கடாயானை
மந்தரத்தாற்பகைக்கடலைமதித்தடையும்வயவேந்தன்
சிந்தையைநின்பாற்பிணிப்பித்தென்னமுதத்திருவேயுன்
றந்தைபிறர்க்களித்திடினென்வாய்மைதவறாதோ.

(இ-ள்.) தென்னமுதம்-தென்னியபாற்கடலிற்பிறந்த—திருவே- திருமாதே—கந்து-கட்டுத்தறியை—அடு-ஒடிக்கின்ற—சிம்புரி- பூணையணிந்த—கோட்டு-கொம்புகளையுடைய—களை-கரும்புகளை—களியும்- பூரிக்கின்ற—கடாயானை-மதயானையாகிய—மந்தரத்தால் - மந்தரகிரி யிலே—பகை-பகைவராகிய—கடலை(சேனையாகிய)பாற்கடலை—மதித் து-கடைந்து—அடையும்-அடையப்பட்ட—வியம்-வெற்றித் (திருவை) யுடைய—வேந்தன்-நளராஜனது—சிந்தையை- மனத்தை—நின்பால்- உன்னிடத்தே—பிணிப்பின்(யான்)கட்டிவைத்தால்—உன்-உன்னுடை ய—தந்தை-தகப்பனாவன்—பிறர்க்கு-மற்றொருவனுக்கு—அளித்திடி ன்-(உன்னைக்)கொடுப்பானேயானால்—என்-என்னது—வாய்மை- வாய்ச் சொல்லின்றன்மையானது—தவறாதோ-வழுவாதோ—வீ-ம்(கரு த்து) தமயந்தியேகளன்மனதையான் உன்னிடத்திலேவசப்படுத்திவைத் தால்உன்பிதாஉன்னைப்பிறருக்குக்கொடுத்துவிட்டால் என்சொற்பழு தாமென்றன்னஞ்சொல்லிற்றென்பதாம். (கூ௰)

என்னுளத்தினையுரல்போல்யார்க்களிப்பான்றந்தையெனு
மென்னுளத்துமையமுளதாதலாலிஃதொழிக
அன்னவெங்கையுரைத்திடினுமுடிப்பபெனப்பேரெழில்கூ
ரன்னமடவாலுள்ளமறியுமாறுரைத்ததுவே.

(இ-ள்.) பேரெழில்-பெரியவழகினையுடைய—கூர்-மிகுந்த—அன்னம்-அ ன்னப்பறவையானது—என்னுளத்தில் - என்னுடைய மனத்திலும்—ஐயுறல் போல்-சந்தேகமிருத்தல்போல—தந்தை - தகப்பனானவன்—யார்க்கு- யாருக்கு—அளிப்பானென- கொடுப்பானோவென்று, உன்னுள்ளத்தும்- உன்னுமனதிலும்—ஐயம்- சந்தேகமானது—உளது - இருக்கின்றது —ஆதலால்-ஆகையினாலே—இஃது-இக்காரியம்—ஒழிக- நீங்கக்கடவ து—பின்னர்-அதுவன்றி—எங்கை- எந்தக்காரியங்களை—உரைத்திடினு ம்-(நீயெனக்குச்)சொன்னாலும், முடிப்பபென(யான்)முடிப்பேனென்று —மடவரல்-தமயந்தியினது—உளளம் - கருத்தை—அறியுமாறு- உணரு ம்படியாக,உரைத்தது-சொல்லிற்று—எ-று.*கருக்கசந்திரகம். உள-



று-விகம்பேகலாந்திசையோடாக்மா - மனமெனுமைந்துமிலேப்பொரு ளாங்கண்-முன்னேயதான் குறிறையுடையல்லே - இவ்விதியால்மனம் இ லேயுள்ளபொருளாம.(கருத்து) தமயந்தியேஎன்மனதிற்சந்தேகமிருக் கிறதுபோல உன்மனதிலுஞ்சந்தேகமிருக்கிறது இதுவேங்கேதுகாரிய மிருந்தாற்சொல்லிமுடிப்பேனென்றன்னஞ்சொல்லிற்றென்பதாம். ()

கன்னிமனக்குழுகிடக்கநாணென்னுங்கடியரணும்
மன்னமொழியெனும்படைகள்வழங்குதலுமழிந்ததால்
முன்னியுளத்தனிற்சிரிதுமுறுவலித்துமுகங்கோட்டி
யின்னமுதமுருவதுபோல்வெளிப்படையினியம்பினாள்.

(இ-ள்.) கன்னி-தமயந்தியானவள்—மனம்- மனத்தை—குழுகிடந்த-குழுந்துகிடந்த—நாணென்னும் - நாணமென்கிற—கடி- காவலாகிய —அரண்-மதிலானது—அன்னம் - அன்னத்தினது—மொழியெனு ம்-சொற்களென்கிற—படைகள்- ஆயுதங்கள்—வழங்குதலும்-மேற்செ ன்றவளவில்—அழிந்ததால்-கெட்டமையால்—சிறிது - சிறிதுபொழு து—உளத்தனில்(தன்)மனத்திலே,முன்னி- ஆலோசித்து—முறுவலித் து-சிரித்து—முகங்கோட்டி-முகங்கவிழ்த்து—இன்னமுதம்-இனியவ மிர்தத்தை—உருவதுபோல - சொரிவதுபோல்—வெளிப்படையின்- வெளிப்படையிலே—இயம்பினாள்- சொல்லுவாள்—எ-று(கருத்து) தமயந்தியானவள்வெளிப்படையாகச்சொல்லுவாளென்பதாம். (௬௭)

விரையுயிர்க்குந்தாமரைக்குவெய்யவனுஞ்சேதாம்பல்
மருவுயிர்க்குநாண்மலர்க்குமாமதியுமல்லாம
லுரைபெறுநற்றலைவர்க்குவேறுண்டோபொலஞ்சிறைய
வரசமடவன்னமேயுமன்னாரோவென்னுதியால்.

(இ-ள்.) பொலன்-பொன்மயமாகிய—சிறைய-சிறகுகளையுடைய— மடம்-இளமைபொருந்திய—அரசன்னம் - அரசவன்னமே—விரை-வா சனையை—உயிர்க்கும்-வீசுகின்ற—தாமரைக்கு - தாமரைப்பூவிற்கு— வெய்யவனும் - சூரியனும்—சேதாம்பல் - செவ்வல்லியினது—மரு- வாசனையை—உயிர்க்கும்-வீசுகின்ற—நாள் - பருவமுள்ள—மலர்க்கு- பூவிற்கு—மாமதியும் பெரியசந்திரனும்—அல்லாமல் - அன்றி—பி றர் - அன்னியர்களாகிய—உரைபெறு - புகழ்பெற்ற—நற்றலைவர் - நல்லநாயகர்—உளர்கொல்லோ- இருக்கின்றாரோ(இல்லை)எனையும்-என் னையும்—அன்னளாய்- அப்படிப்பட்டவளாய்—என்னுதி-(நாளையன்றி நாயகனில்லையென்)றெண்ணாதவாய்—எ-று. (கருத்து) அன்னமேதா மரைக்குச்சூரியனும்அல்லிக்குச்சந்திரனும் அன்றிவேறுநாயகனில்லா துபோலனக்கு நளனையன்றிநாயகனில்லையென் றெண்ணக் கடவாய் என்றாளென்பதாம். தொல்காப்பியம்-கொல்லேயையம். (௬௮)

ஐயமுறேன்னண்மார்பிலணியலணிகுவனன்றி
மெய்யல்புரிவேன்வரினுமன்றலர்த்தார்சூட்டுவனோ
செய்யொழுகுவேற்றந்தைபிறர்க்களிப்பரோகுவனேல்
வெய்யழலுப்புகுந்தாகிலிட்டுயிருமாறுவனால்.

(இ-ள்.) ஐயுறுதேல் (அன்னமே! நீ) சந்தேகப்படாதே—களன்-களங்கமற்றவனது—மார்பில்-மார்பின்கண்—அணியல் - மாலையை—அணிகுவனன்றி-சூட்டுவனல்லாமல்—மையல்புரி - மயக்கத்தைச்செய்கின்ற—வேள் - மன்மதனென்பவன்—வரினும் - வந்தாயினும்—மன்றல் - வாசனை பொருந்திய—அம் - அழகிய—தார் - மாலையை—சூட்டுவேனோ - (யான்) சூட்டுவேனோ—செய் - செய்யானது—ஒழுகு - ஒழுகப்பெற்ற—வேல் - வேலையுடைய—தாதை - என் தகப்பனானவன்—பிறர்க்கு - மற்றொருவனுக்கு—அளிப்ப - (என்னைக்) கொடுக்க—சேர்குவேனேல் - உடன்படுவேனாயின்—வெய்யதழல் - வெப்பம்பொருந்திய நெருப்பினுள்—புகுந்து - முழுகி—ஆவிவிட்டு - உயிரைவிட்டு—உன் - உனது—உரை - சொல்லை—நிறுத்துவன் (நளனிடத்தில்) நிலைபெறுவிப்பேன்—எ-று. (கருத்து) அன்னமே! யான் நளனுக்கே மாலையிடுவேன் என் பிதா பிறனுக்கு என்னைக் கொடுக்கவுடன்பட்டால் அக்கினியுள் வீழ்ந்திறந்து உன் சொல்லை நிலைநிறுத்துவேன் என்றாள் தமயந்தி என்பதாம். (௬௭)

உழுதியல்பிற்றிறல்வேந்தன்வேட்கைமுறுமென
வாழிடவனக்கூட்டல் வரிவெதன்மதித்திடேல்
செழுங்கமலத்தாமரையின்முகையிளவொளித்தண்ணேற்கலரா
தேழ்பரித்தேரவன்காணினலர்ந்திடுதலியல்பன்றே.

(இ-ள்.) மடம் - இளமைபொருந்திய—அனம் - அன்னமே—வாழி - வாழ்க்கடவாய்—ஊழ் - விதியினது—இயல்பின் - சம்பந்தத்தினால்—திறல் - வலிமையுள்ள—வேந்தை - நளராசனை—வேட்டு - விரும்பி—உள்ளமுருகும் - மனமுருகாநின்ற—எனை - என்னை—கூட்டல் - அவனுக்குமணமியாக்குதல்—அரிது - உனக்குப்பெரிது—என்னை - என்று—மதித்திடேல் - நினைத்திடாதே—செழும் - செழிப்புள்ள—கமலம் - தாமரையின் - தாமரையினது—முகை - அரும்புக்கு—கொள் - கிளர் - விளங்காநின்ற—ஒளித்தண்ணேற்கு - சீதளகிரணத்தையுடைய சந்திரனால்—அலராது - மலராமல்—ஏழ்பரித்தேரவன் - சூரியனை—காணின் - கண்டால்—அலர்ந்திடுதல் - மலர்தல்—இயல்பன்றே - சுபாவமன்றோ—எ-று. (கருத்து) அன்னமே! விதியின் சம்பந்தத்தினாலே நளனை விரும்பி மனமுருகும் என்னை அந்நளனோடு கூட்டுவித்தல் உனக்குப்பெரிய காரியமல்லவென்று சொன்னாள் என்பதாம். (௬௮)

காட்டிடுதல்சேர்வயவேந்தின்மணிப்புயத்தென்மாலைதனைப்பக்
கூட்டிடுவேனுயிர்வாழ்வல்கூட்டாயேலுலகறிய
மூட்டுழலிற்புகுந்தாவிமுடித்திடுவென் வினைச்செழுசெங்
குட்டமடவனமிவற்று வென்செய்வாளனனைத்தனையால்.

(இ-ள்.) ஒளிசெழு - காந்திபொருந்திய—செங்குட்டு - செய்யவுச்சிக்கொண்டையையுடைய—மடம் - இளமைபொருந்திய—அனம் - அன்னமே—வாள் - வாளினது—திறல் - பேரிலே—சேர் - சேர்ந்த—வயம் - வெற்றிபொருந்திய—வேந்தின் - நளராசனுடைய—மணி - அழகிய—புயத்து - தோள்களிடத்து—என் - என்னுடைய—மாலை - மாலைகளானவை



திளைப்ப - அழுந்தும்படியாக—கூட்டுதியேல் (என்னை அவனோடு) சேர்ப்பாயானால்—உயிர் - வாழ்வல்—உயிர் - வைத்திருப்பேன்—கூட்டாயேல் - சேர்க்காயானால், உலகறியத் - உலகத்தாரறிய, மூட்டு - மூட்டப்பட்ட அழலில் - நெருப்பினுள்—புகுந்து - முழுகி—ஆவி - உயிரை—முடித்திடுவல் - விட்டுவிடுவேன்—இவற்றுள் - (கூட்டலுங்கூட்டாமையுமாகிய) இவ்விரண்டினுள், என்செய்வான் - எதுசெய்யும்படியாக, துணிந்தனை (நீ) நிச்சயித்தாய்—எ-று (கருத்து) அன்னமே! நீ என்னை நளனோடு சேர்த்தால் உயிர்வைத்திருப்பேன் சேர்க்காவிட்டால் உயிரைவிட்டுவிடுவேன் என்றாள் என்பதாம். (௬௯)

உயிருதவிசெய்தவர்க்கொன்றுற்றக்காலுணர்வுடையோர்
செயிருதம்முயிரளித்துச்செய்கடன்றீக்கடன்கழிப்பார்
மயர்வறவென்னுயிரினுஞ்சீர்வாய்ந்தநளன்றனையளிப்பி
னயர்வறுமோவிமதற்குக்கைம்மாறேதறிகிலன்யான்.

(இ-ள்.) அயர்வறு (மனச்) சோர்வற்ற—ஓதிமம் - அன்னமே—உணர்வுடையோர் - அறிவுடையோர்—உயிருதவிசெய்தவர்க்கு (ஆபத்துவந்தபோது) - தம்முயிரைக்காப்பாற்றினவருக்கு—ஒன்று - ஓராபத்து—உற்றக்கால் - வந்ததாயின்—செயிர் - குற்றமற்ற—தம் - தம்முடைய—உயிர் - உயிரை—அளித்து - கொடுத்து—செய் - (அவரால்) செய்யப்பட்ட—நன்றி - உபகாரமாகிய—கடன் - கடனை—கழிப்பார் - தீர்ப்பார்—மயர்வு - மயக்கமானது—அற - நீங்க—என் - என்னுடைய—உயிரினும் - உயிரைக்காட்டிலும்—சீர்வாய்ந்த - சிறப்புப்பொருந்திய—நளன்றனை - நளராசனை—அளிப்பின் - கொடுப்பாயானால்—அதற்கு - அவ்வுபகாரத்திற்கு—கைம்மாறு - எதிருபகாரம், ஏது - யாது, யான் - நான், அறிகிலன் - (அதனை) அறியேன்—எ-று [யாது அறியேனென வேயில்லையென்றதாயிற்று] இதனாற்கூறியது - சொல்லதிகாரம் - இனவியாக்கம் - கூஅ - ஆம் - காலமுலக முயிரேயுடம்பே பால்வரை தெய்வம்வினைமே பூதம் ஞாயிறு திங்கள் சொல்லென வருஉ - மாயிரைக்காலும் பிறவுமன்ன - வாவயின்வருஉங் கிளவியெல்லாம் பால்பிரிக்கிசையா வுயர்திணைமேன (கருத்து) அன்னமே உயிர்க்குதவி செய்தவர்க்கு உயிர்க்குதவிசெய்வார்கள் உணர்வுடையவர்கள் என்னுயிரினுஞ் சிறந்தநளனை நீ எனக்குக்கொடுத்தால் உனக்கென்ன பிரதியுபகாரஞ்செய்வேன் என்றாள் என்பதாம். (௭௰)

கைம்மாறுகினக்காற்றலரிதெனினுக்களிப்பினளந்
செம்மாந்துன்செயிராறிரோவாதுசெப்புவல்யா
னெம்மாவியிறக்கப்படாதிருக்குமகொல்வினைவினிற்போய்த்
தெம்மாறுசுடர்வேலான்றிருவருள்பெற்றிடாயெனினே.

(இ-ள்) கைம்மாறு - பிரதியுபகாரத்தை—நினக்கு - உனக்கு—ஆற்றல் - செய்தல்—அரிதெனினும் - இல்லையாயினும்—களிப்பின் - மகிழ்ச்சியிலே—உளம் - உள்ளத்தில்—செம்மாந்து - இறுமாந்து—உன் - உனது—செயிர் - குற்றமற்ற—சீர் - குணத்தை—ஓவாது - இடைவிடாமல்—யான் - நான்—செப்புவல் - சொல்லுவேன்—(ஆறல்) அதுதன்றுத்

வாலோசித்து-விரையாமற் செய்வேனென்பாயாயின், விரைவினில்-சீக்கிரத்தில்—போய்-சென்று—தெம்-பகைவரும்—மாறு (கட்டினராய்) வேறுபடுதற்குக்காரணமாகிய—சுடர் - ஒளிபொருந்திய—வேலான்-வேலையுடையவனது—திரு-அழகிய—அருள்-அருளை—பெற்றிடாவெனின்-பெறுயாயின்—எம்-எமது—உடைய, ஆவி- உயிர்களானவை, இறவு அடைந்து-நீங்கிப்போகாமல்—இருக்குக்கோல் -; இருக்குமோ—எ-று. [தாய்மார்பாங்கிமாரையுஞ்சேர்த்துப்பன்மையாக எம்மாவி என்றான்] (கருத்து) அன்னமே நானுனக்குப்பிரதியுபகாரஞ்செய்ய வழிதெரியாது ம்மைப்புகழ்ச்சியாயிடைவிடாது சொல்லுவேன் நீவிரைவிற்போய்க்களவருளைப்பெறுவிடில் எங்களுயிர்களிருக்குமோ என்றான் என்பதாம்-இதுக்கச்சங்கிரகம்- அறிவிற்பண்பிற்றுனையாவது- விதையமுயிருமெனருயிருவகைத்தே.
(௯௬)

என்குறைநீவயவேந்தற்கியம்புதியேல்வடங்கிடந்து
பொன்பிதிர்மின்சுணங்கார்ந்தபொம்மன்முலையினர்பா
லன்புறுநல்லமயந்திலதையறகவறைகுதியே
ஏன்குறைதீர்க்காமவர்பாலெயப்புற்றதன்மையினால்.

(இ-ள்)என்-என்னது—குறை-குறையை—நீ-நீ—வயம்-வெற்றியையுடைய—வேந்தற்கு-நளராசனுக்கு—இயம்புதியேல் - சொல்லாயாயின்—வடம்-முத்துவடமானது—கிடந்து - தங்கப்பெற்று—பொன்பிதிர்-பொன்பொடிபோல்—மின்-விளங்குகின்ற—சுணங்கு-தேமலால்—ஆர்ந்த-நிறைந்த—பொம்மல்-பொலிவும்—இளமை - இளமைபொருந்திய—முலையினர்பால்-முலையினாரிடத்து—அன்பு - அன்புற்றிருக்கிற—நல்லமயதில்-நல்லசமயத்தில்—அறைதக-(அதனைச்) சொல்லாதே—அறைகுதியேல் - அப்போது சொல்வையேயாகில்—அவர்பால் - அவரிடத்தே—எயப்புற-இன்பமுற்ற—தன்மையினால் - குணத்தினாலே—என்குறை(யுடையது)நல்லசொல்லும்—இகழ்ந் (அவனுக்கு) குறமாயுள்ளதாகும்—எ-று (கருத்து) அன்னமே நீ என்குறைகளை அரசனிடத்திற்சொல்லுவையேயானால் அரசன் பெண்களிடத்தன்புள்ள சமயத்திற்சொல்லாதேசொன்றால் வல்லார்த்தையும் குற்றமாய்விடும் என்றான் என்பதாம்.
(௯௭)

வேற்றரசர்திறைகொணரும்வேலையினுஞ்சொல்லற்க
மாற்றரசர்பால்வெகுளுமயத்தும்வகுத்துரையேல்
தேற்றமுடைமதிவல்லோர்தேர்ச்சியினுந்தெரிந்துரையேல்
சாற்றினுரைத்தனவெல்லாந்தவறுதலறிதியே.

(இ-ள்.)வேற்றரசர்-பிறவரசருடைய—திறை-இறைப்பொருளை—கொணரும்-வருவிக்கின்ற—வேலையினும்-காலத்திலும்—சொல்லற்க-சொல்லாதொழிக—மாற்றரசர்பால் - பகையரசரிடத்து—வெகுளும்-கோபஞ்செய்கின்ற—அமயத்தும் - காலத்திலும்—வகுத்துரையேல்-சொல்லாதே—தேற்றம்-தெளிவை—உடை - உடைய—மதிவல்லோர்-



மந்திரிகளோடு—தேர்ச்சியினும்- ஆலோசனைசெய்யுங்காலத்திலும்—தெரிந்துரையேல்-சொல்லாதே—சாற்றின் (நீ)-சொல்லினை—உரைத்தவெல்லாம்- உன்றுற்சொல்லப்பட்டனவெல்லாம்—தவறுதல் - குற்றமுடையனவாதலை—அறிதி (நீ) அறிவாய்—எ-று. இலக்கணத்திரம்-எதிர்மறையேவற்கேழேவல்லேல், யன்மோவற்கவாகுமொருமைக்காமினன்மினர்பன்மை-இவ்விதியால் - அற்கவிகுதிருமையில்வந்தது(கருத்து) அன்னமே அரசர்திறைகரும்போதும்பகையரசரைக்கோபிக்கும்போதும்மந்திரிகள்மதிசொல்லும்போதும் என்வார்த்தைகளைச்சொல்லாதேயான்சொன்னவிதல்லாருங்கொல்லென்றான் என்பதாம்.()

பொறிசெறித்தமனம்பினராய்ப்பொருந்தலர்செற்றுநிதியந்
செறிகருமாறிட்டியருவினைவாக்குசெயலினரு
முறுபிழையுட்சிறியதொன்றியற்றிடினுமொறுத்திடுவர்வயவேந்த
ரதுதிபெறமொழியுமயமறிந்துரைத்தியால்.

(இ-ள்)பொறி ஐம்பொறிகளையும்—செறித்த-அடக்கிய—மனம்பினராய்-நற்குணமுடையவராகிய—பொருந்தலர்-பகைவரை—செற்று-வென்று—நிதியம்-அதிகதிரவியத்தை—செறிகருமாறு- செருங்குமாறு—கட்டி-சேர்த்து—அருவினை-பெரியதொழில்களை—வாக்கு (தம்மிடத்து)வாக்கிய—செயலினரும் - செய்கையையுடையவரும்—உறு (பலவா)யுமிக்க—பிழையுள்-குற்றங்களுள்—சிறிது-சிறியவொருகுற்றத்தை—இயற்றின்-செய்தாலும்—வயம்-வெற்றியையுடைய—வேந்தர்-அரசராயினோர்—அது இ-தம்பிழையை—பெற-அடைய—ஒறுத்திடுவர்(அப்படிப்பட்டவரையும்) தண்டிப்பார்(ஆதலால்) (நீ விவேகியாகிய)நீ—மொழியும்-சொல்லுதற்குரிய—அமயம் -காலத்தை—அறிந்து-தெரிந்து—உரைத்தி-சொல்லு—எ-று(கருத்து)அன்னமேபகைமன்னவரைவென்றுபாக்கியஞ்சம்பாதித்துத்தருமவல்லவர்களும் அற்பகுற்றஞ்செய்தால் அரசர் தண்டிப்பாராகையால்குற்றமின்றிக்காலமறிந்துசொல்லென்றான் என்பதாம்—இது விளக்கம் - இடவிடுமுதலிய [illegible]சொல்லே.
(௯௮)

உளத்தனவாண்முகத்தனவாயுதிக்குமவைகுறிப்பினாற்
றெளிந்துரைத்தல்சீர்மைத்தேதூதர்செயலிற்றுதும
விளக்கமுறநீயலதியாரறிவரிவைமெலியுமென்னை
யளித்திடுதிவிரைவினிற்போயாய்தூவியடலனமே.

(இ-ள்)ஆய்-மிகமெல்லிய—தூவி - இறகையுடைய—மடம் - இளமைபொருந்திய—அனமே-அன்னமே—உளத்தன(ஒருவர்)மனத்திலுள்ளகுணங்களானவை—வாள-ஒளியுள்ள—முகத்தனவாய் - முகத்திடத்தனவாகி—உதிக்கும்-தோன்றும்—அவை - அக்குணங்களை—குறிப்பினால்-அம்முகக்குறிப்பினாலே—தெளிந்து - அறிந்து—உரைத்தல்-சொல்லுதல்—சீர்மைத்தே-சிறப்புடைத்தாகும்—தூதர் - தூதரது—செயல்-தொழிலானது—இற்றும்-இத்தன்மைத்தாகும்—இவை - (உனக்கு மனத்துள்ள)வைகளை—விளக்கமுற-விளங்குதலுற—நீயலது-

நீயல்லாமல்—யார் (வேறு)யாவர்—அறிவார் - அறியவல்லவர்—விரைவினில் - சீக்கிரத்தில்—போய் - ராசனிடத்துப்போய்—மெய்யும் - வருந்துகின்ற—நானே - என்னை—அளித்திடு - காப்பாற்று—எ-று (கருத்து) அன்னமே அகத்திலுள்ளவை முகத்திற்காட்டும் முகக்குறிப்பறிந்து சொல்லுதல் தூதர்திறமாகும் ஆனமனத்துள்ளவை நீயல்லாமல் யார் அறிவார் சீக்கிரம்போய் என்னைக் காப்பாற்று என்றாளாம். (௱௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்னமாங்குவெளிப்படையிற் குயிலுநாணவின்மழிற்றின்
கன்னற்பாகிற்றேறற்கனியிற்கனிந்தமொழிகவிலும்
பொன்னைம்பாவையன்னாளுள்ளந்தேர்ந்துமகிழ்புரியா
கன்னலருந்துதல்போனோக்கிச்சிலசொல்லறையுமால்

(இ-ள்) அன்னம் - அன்னமானது—ஆங்கு - அந்தச்சோலையினிடத்து—வெளிப்படை - வெளிப்படையினாலே—குயிலும் - கோகிலமும்—நாண - வெட்கமுற—இன்மழிற்றின் - இனிதாகி உயிர்த்திலும்—கன்னற்பாகின் - சர்க்கரைக்குழம்பினும்—தேற்றேனின் - கொம்புத்தேனினும்—கனியின் - முக்கனியினும்—கனிந்த - சுவைமிகுந்த—மொழி - இந்தச்சொற்களை—கவிலும் - சொல்லிய—பொன் - பொன்மயமாகிய—அம் - அழகிய—பாவையன்னாள் - பாவைபோல்வளானது—உள்ளம் - கருத்தை—தேர்ந்து - அறிந்து—மகிழ்புரியா - மகிழ்ந்து—கன்னலருந்துதல்போல் - கண்களால் விழுங்குதல்போல—நோக்கி (அவளைப்)பார்த்து—சிலசொல் - சிலசொற்களை—அறையும் - சொல்லும்—எ-று. தாதுவிளக்கம் - சாரியைவிகுதிதாங்கெடலுரித்தே - இவ்விதியால் இன்புறுதலில் இகரச்சாரியையும் பு - விகுதியும் கெட்டன. (கருத்து) அன்னமானது தமயந்தியைப்பார்த்துச் சிலசொற்களைச் சொல்லும். (௱௮)

சுனைக்குப்பூத்துக்குவிகச்செப்பெனலாய்க்கருங்கிநுழைநுசுப்பு
வணக்கித்தேம்பவருமுலையாயுரைத்தமாற்றமெய்யாமேல்
இணைக்குவாயில்யார்வேண்டுநளற்குநினக்குமிதயத்துள்
அணங்குநோய்செய்தலராற்றுமநங்கனெனுவனிருக்கவே.

(இ-ள்) சுனைக்கு - தாமலரனது—பூத்து - பொலிவுபெற்று—குவிகச்செப்பெனலாய் - இக்குவிகத்தினையொத்த செப்புக்கொன்றதாகி, நுழை - நுண்ணிற—நுசுப்பு - இடையானது—வருந்தி - இளைத்து—வணங்கி - வளைந்து—தேம்ப - வருந்த—வரு - வளர்கின்ற—முலையாய் - முலைகளையுடையவளே—உரைத்த (உன்னால்) சொல்லப்பட்ட—மாற்றம் - சொல்லு சொல்லானது—மெய்யாமேல் - சத்தியமாயின்—நளற்கும் - நளராசனுக்கும்—நினக்கும் - உனக்கும்—இதயத்துள் - மனத்தின்கண்—அணங்கு - வருத்தஞ்செய்கின்ற—நோய் (காம) நோயை—செய்து - உண்டாக்கி—அலர் ஆற்றும் - பழிமொழியைப் பரப்புகின்ற—அநங்கனெனுவன் - மன்மதனென்னுவன்—இருக்க - உளாக—இணைக்கு



(... நம்மையும்) பொருந்துகைக்கு—வாயில் - சந்திசெய்வோர்—யார் - எவர்—வேண்டும் (உனக்கு) வேண்டும்—எ-று (கருத்து) தமயந்தியே நீசொன்னசொல் மெய்யானால் இருவரையுங்கூட்டிவைக்க இடையில் மன்மதனென்னுமொருவனிருக்க வேறொருவர் வேண்டுமோவென அன்னஞ் சொல்லிற்றென்பதாம். (௱௯)

* கடல்சூழ்புவியிற்பாதலத்திலமரருலகிற்சவின்றிகழுங்
கொடிநேரிடையாள்யாரென்னநின்னையாங்கள்கூறுதலும்
படியேழ்புரக்கும்வேந்துளத்துப்படைவேள்பகழிபுகும்வழிபோய்
மடமான்றாக்கியுறைதன்மறந்தாய்கொல்லோமறைத்தனையோ.

(இ-ள்) மடம் - இளமைபொருந்திய—மான் - மான் (கண்போலும்) நோக்கி - கண்களையுடையவளே—படியேழ் - ஏழுதீவுகளையும்—புரக்கும் - காக்கின்ற—வேந்து - நளராஜனானவன்—கடல் - கடலானது—சூழ் - சூழப்பெற்ற—புவியில் - பூலோகத்திலும்—பாதலத்தில் - நாகலோகத்திலும்—அமரருலகில் - தேவலோகத்திலும்—சவின் - அழகினாலே—திகழும் - விளங்காநின்ற—கொடிநேரிடையாள் - கொடிபோலிடையையுடைய மங்கை—யாரென்ன - எவளென்று வினவ—யாங்கள் - நாங்கள்—நின்னை - உன்னை—கூறுதலும் - சொல்லுதலும்—படை - படையையுடைய—வேள் - மன்மதனது—பகழி - பாணமானது—புகும் - சென்ற—வழி - வழியால்—போய் - சென்று—உளத்து (அவன்) மனத்தின்கண்—நீ - நீ—உறைதல் - இருக்கையை—மறந்தாய்கொல் - மறந்தாயோ—மறைத்தனையோ - (எனக்கு) ஒளித்தனையோ—எ-று (கருத்து) தமயந்தியே நளமகாராஜன் அழகுள்ள பெண்யாரென்று எங்களைக்கேட்க யாங்களுன்னைச்சொல்லுதலும் மன்மதபாணஞ்சென்ற வழியே நீபோயிருத்தலை மறந்தாயோ அல்லது மறைத்துச் சொல்லுகிறாயோ என்று சொல்லியது * தருக்கசங்கிரகம். ௰௧-கு- கடவியாறுதியவிடயமாகும். (௱௰)

சுட்டுமணிகள்பலதெளித்தன்னெழுதற்கரிய () திருவுருவங்
கோட்டுங்கிழிதான்முலைகோட்டப்பரப்பின்றென்னுங் கொடிமருங்குல்
தீட்டவணைத்தகோனுனியின்மையிலதென்னுந் தென்னதிசைக்குமுளம்
வேட்டுவெடுங்கணணிமையாமனோக்கித்தளரும்வேல்வேந்தே.

(இ-ள்) வேல் - வேற்படையையுடைய—வேந்து - நளராஜனவன்—உன - உனது—எழுதற்கரிய (சித்திரக்காரரா)லெழுதற்கரிதாகிய—திரு - அழகிய—உருவம் (உனது) வடிவத்தை—சுட்டு (தன்னால்) சம்பாதிக்கப்பட்ட—பல - பலவகையாகிய—மணிகள் - மணிகளை—தெளித்து—கோட்டும் - எழுதாநின்றான்—முலை - உன்முலைகளை—கோட்ட - எழுதற்கு—கிழி - படத்தில்—பரப்பு - அகலம்—இன்றென்னும் - இல்லையென்கிறான்—கொடி - பூங்கொடிபோலும்—மருங்குல் (உனது) இடையை—தீட்ட - எழுதற்கு—வணைகோல் - தூரிகைக்கோலினது—நுனியின்கண் - நுண்மைகூர்மையானது—இலதென்னும் - இல்லையென்

து—என்னை-நினைத்து—நினைக்கும்-நினைக்கின்றான்—உளம்- மனத்தி
ல்—வேட்டு-விரும்பி—நெடுங்கண் -நெடியகண்களானவை—இமையா
மல்-இமையாதிருக்க—நோக்கி(அவ்வடிவத்தைப்) பார்த்து—தளரும்-
வருந்துகின்றான்—எ-று. இலக்கணத்திரட்டு-கவைவினைவுகட்பொறிசெ
விப்பொறி-மெய்யனாள்னாகுமெய்வகைக்காட்சியும்- இவ்விதியால்சித்தி
ரக்காட்சிசொல்லப்பட்டது(கருத்து)நளமகாராசன் உனதுதிருவுருவக்
கைதொழுகின்றான் உள்கண் தனக்களையெழுதப்பட்டமையில்லை யென்கி
றான் உனதுடையவாழுதருகுத்தாரிகைக்கோல்கூர்மையில்லையென்
கிறான்உன்னுருவத்தைஇமையாதுநோக்கிவருந்துகின்றான் என்பதாம். ()

பருந்துங்கழுகுங்கொடியினமுமருந்தப்பகைஞருடறடிந்து
விருந்துசெய்யுஞ்சுடர்வடிவேல்வேந்தனுயிருநீயென்னும்
பொருந்துங்காமப்பிணிநீக்கிப்புலம்புதீர்த்தினுயிரளிக்கு
மருந்துநீயேயென்றெண்ணிமகிழ்நாகுளத்தோடிருந்தயரும்.

(இ-ள்.)பருந்தும்-சேனக்களும்—கழுகும்-எருவைகளும்—கொ
டியினமும்-காக்கைக்கூட்டங்களும்—அருந்த - தின்னும்படியாக—ப
கைஞர் - பகைவருடைய—உடல் - உடம்புகளை—தடிந்து - துணித்து
—விருந்துசெய்யும் - (அவற்றிற்கு) விருந்துசெய்கின்ற—சுடர் - ஒளியு
ம்—வடி-கூர்மையும்பொருந்திய—வேல்-வேலையுடைய—வேந்தன்-நள
ராஜனானவன்—உயிரும்-(தன்) உயிரும்—நீயென்னும்-நீயாக (வெண்
ணுகின்றான்)—பொருந்தும்-(தன்னைப்)பற்றிய—காமப்பிணி-காமநோயை
—நீக்கி- ஒழித்து—புலம்பு-(அதனாலாகின்ற) துன்பத்தை—தீர்த்து-
தீர்வித்து—இன - இனிதாகிய—உயிர் (தன்) உயிரை—அளிக்கும்-
காப்பாற்றும்—மருந்தும் - ஔஷதமும்—நீயேயென்று - நீயேயாக—
எண்ணி - இடைவிடாது நினைத்து—மகிழ்-மகிழ்ச்சியில்—நாகு-ப்ர
வசப்பட்டிருக்கின்ற—உளத்தோடு - மனத்துடனே—இருந்து- தங்கி
—அயரும்-வருந்துகின்றான்—எ-று. (கருத்து) தமயந்தியே நளமகாராஜ
ன் உன்னைத் தன்னுயிராகவினைக்கின்றான் - அன்றியும் தன்காமநோயைத்
தீர்த்துஉயிரைக்காப்பாற்றுமருந்தும்நீயே என்றெண்ணுகின்றான் என்று
சொல்லிற்று என்பதாம். (௫௰௨)

தேற்றாரொளிருமணிமௌலியிடறித்தேய்த்துவிளங்குநகக்
கூற்றமென்னுமால்யானைப்பிடரிற்றோன்றுமெழில்குறியா
வாற்றாராகியாடவரும்பெண்மைவிரும்புமடல்வேந்தன்
வேற்றோர்பொருளிலைம்புலனும்விழையானாக()மெலியுமால்.

(இ-ள்.) தேற்றார்-பகைவரது—ஒளிரும் - விளங்குகின்ற—மணி-
நவமணிகளாலாகிய—மௌலி-மகுடத்தில்—இடறி-தாக்குண்டு—தே
ய்த்து-தேய்தலால்—விளங்கு-விளங்குகின்ற—நகம்- நகங்களையுடைய
—கூற்றமென்னும்-(கொலையில்) யமனென்னப்படுகின்ற—மால்- பெ
ரிய—யானை-யானையினது—பிடரில்-கழுத்ததில்—தோன்றும்-காண
ப்படுகின்ற—எழில் (கள்) அழகை—குறியா - நினைத்து—ஆடவரும்-
புருஷரும்—ஆற்றாராகி-பொறுக்கமாட்டாதவராகி—பெண்மை - பெ



ண்வடிவத்தை—விரும்பும் - விரும்பப்பெறுகின்ற—அடல்வேந்தன்-
வெற்றிவேந்தனானவன்—வேற்றோர்பொருளில் (உன்னிடத்தன்றி) வே
றொரு பொருளிடத்து—ஐம்புலனும்-பஞ்சவிஷயங்களும்—விழையா
க-விரும்பப்படாதனவாக—மெலியும்-தளர்கின்றான்—எ-று. () கண்ணுத
ல்-பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் - சொல்லாதாகுஞ்செய
யுமென்முற்றே - இவ்விதியால் - மெலியும் என்றது மெலிகின்றானெ
ன்றாயிற்று(கருத்து) நளமகாராசனானவன் உன்னையல்லாமல் வேறொ
ருபொருளிடத்திலிச்சைவைத்திலன் என்றுசொல்லிற்று என்பதாம்.()

கார்க்கும்வெண்மையளித்திருண்டகரியகூந்தற்கனங்குழாய்
யார்க்குங்கரும்புமிசைத்தேனும் வண்டுஞ்சுழலுமைங்கணைவேள்
போர்க்குமெலிந்தோவெண்டிங்கள் பொழியுநிலவிற்றேம்பியோ
பார்க்குந்தோறும்புதிதாக() வுடலமெலியும்பார்வேந்தே.

(இ-ள்.)கார்க்கும்-மேகத்திற்கும்—வெண்மை-வெள்ளைநிறத்தை
—அளித்து - கொடுத்து—இருண்ட- கறுத்த—கரிய- பெரிய—கூந்த
ல் - கூந்தலையும்—கனம்- கனம்பொருந்திய—குழையாய் - குண்டலத்
தையுமுடையவளே—பார் - பூமியையுடைய—வேந்து- நளமகாராசன்
—ஆர்க்கும் - ஒலிசெய்கின்ற—கரும்பும்- பொறிவண்டுகளும்- இசை-
இசைபாடுகின்ற—தேனும் - தேன்வண்டுகளும்—வண்டும்-கருவண்டு
களும்—சுழலும் - சுழலப்பெறுகின்ற—ஐங்கணை- பஞ்சபாணத்தையு
டைய, வேள்-மன்மதனது—போர்க்கு-சண்டையிலும்—மெலிந்தோ-
இளைத்தோ—வெண்டிங்கள் - வெள்ளியசந்திரனது—பொழியும்-
சொரியப்பட்ட—நிலவின் - நிலாவினாலே—தேம்பியோ - வருந்தியோ
—பார்க்குந்தோறும்- காணுந்தோறும்—புதிதாக- அதனையானதாக—
உடலம்-உடம்பு—மெலியும் - இளைக்கப்பெறுகின்றான்—எ-று. ❀ தொல்
காப்பியம்-மெய்ப்பாட்டியல்-உஉ-கு. இன்பத்தைவெறுத்தல்துன்பத்துப்
புலம்பல் - எதிர்பெய்துபரிதலேதமாய்தல்- பசியடநிற்றல் பசலைபாய்
தல்- துன்னிபிற்குறைதலுடம்புநனிசுருக்கல் - கண்டுயின்மறுத்தல் கன
வொடுமயங்கல்-இவ்விதியால் உடல்மெலிவுகூறினர் (கருத்து) தமயந்
தியேநளமகாராசனானவன் மன்மதன்போரினாலேயோ சந்திரனொளிக்க
ளாலேயோ உடலிளைக்கப்பெறுகின்றான் என்றுசொல்லிற்றுதாம். ()

அலர்வார்பகழிதூர்ந்தூர்ந்தாக மெலிவித்திடுதலன்றிச்
சிலைவேள்வேந்தனியல்பனைத்துங் கவர்ந்தான்போலுந்தீங்கிழைத்தான்
மூலைமேற்கூட்டப்பெறுமெனிலோவதுவேயற்றமூதூர்க்குறையவற்
றுலைபார்க்காமக்கொடுந்துயரமுழந்தானிமிழக்குமால்.

(இ-ள்.)சிலை-கருப்புவில்லையுடைய—வேள் - மன்மதனானவன்—
வார்- நெடிய—அலர்- மலர்களாகிய—பகழி- பாணங்களை—தூர்ந்து-
தூர்ந்து- செலுத்திச்செலுத்தி—ஆகம். உடம்பை—மெலிவித்திடுதல
ன்றி- இளைப்பித்தலல்லாமலும்—வேந்தன்-அரசனுடைய—இயல்பனை
த்தும்-(பாவத்தையுந்தசல இழிதொழிலனைப்பலாகிய) பாவுகுணை
முழுதையும்—கவர்ந்தான்போலும்-வெளவிக்கொண்டானோ (எனின்

றால்" தீக்குபாவத்தைக—இழைத்து - செய்தவிடத்திலே—உன்முலைமேல்-உன்கொங்கைகளின்மேலே—கூடப்பெறுமெனிலோ - கூடப்பெறலாமென்றாலோ—அதுவும் - அப்பாவத்தையும்—இயற்றும் -(அஞ்சாது) செய்வான்—முதுகுறைவற்று - பேரறிவற்று—உலையா-கெடாத—காமம்-காமமாகிய—கொடு-கொடிய—துயரம் - துன்பத்தில்—உழந்து-வருந்தி—நாணும்-நாணத்தையும்—இழக்கும்-விட்டுவிடுகிறான்—எ-று. (கருத்து) தமயந்தியே ஒருவன்பாவஞ்செய்தாவதுன்னைக்கூடப்பெறுவானாகில் அதுவுஞ்செய்வான்பேரறிவிழந்து காமத்திலுழன்றுநாணத்தையும்விடுகிறானென்பதாம். (௬௰௫)

மின்றிருவுருவுவெளிப்படுதனோக்கிநோக்கிநிலைதளரு
மென்பூநகைவிளைமுலைமேற்புல்லுமுனிந்தாலெனவருந்து
மன்போடேதீர்த்தனன்போல நகைக்குமகன்றுவெனவெளியிற்
பின்போதருநல்லுணர்விழந்தபித்தர்போலப்பேதுறுமால்.

(இ-ள்) மின்-உனது—சீர் - சிறப்புப்பொருந்திய—உருவு - வடிவமானது—வெளிப்படுதல் - தோன்றுதலை—நோக்கிநோக்கி - பார்த்துப்பார்த்து—நிலை - (தன்னறிவு) நிலை—தளரும் - தளரப்பெறுகின்றான், என்பு - எலும்பும், ஊனுருக - உள்ளுருக, இள - இளமைபொருந்திய—முலைமேல் - (அவ்வடிவத்தின்) முலைகளின்மேல்—புல்லும்- தழுவுகின்றான்—முனிந்தாலென - வெறுத்தவள்போல்—வருந்தும்- வருந்துகின்றான்—அன்போடு - ஆசையினால்—ஊடல் - அவ்வூடலை—தீர்த்தனன்போல் - தீர்த்தவன்போல்—நகைக்கும் - சிரிக்கின்றான்—அகன்றுவென - நீங்கினதென்று—வெளியில் - வெறுவெளியில்—பின் - (அவ்வடிவத்தின்) பின்னே—போதரும்-போகின்றான்—நல்லுணர்வு - நல்லறிவை—இழந்த - துறந்த—பித்தர்போல-பித்தநோயினர்போல்—பேதுறும் - மறதியுற்றிருக்கின்றான்—எ-று. () இலக்கணவிளக்கம் - அகத்திணையியல், ௩௩-ஆ-காட்சிவேட்கையுள்ளுதன்மெலி-தலாக்கலுடனெப்பினுணர்வழுத்த - நோக்குபவெல்லாமவையேபோறல் - மறத்தன்மயக்கஞ்சாக்காடென்ற - வையிரண்டவத்தையும் மெய்யுறுதலைப் புகுமுகம்புரிதன்முதலவாகிக் - காட்சிமுதன் மூன்றையுங்கருதுங்காலாய்-மாட்சியினமைந்தவீராறுமெய்ப்பாடு- முறுக்கின முறுவனவும் பொருந்துவனுறினே - மெய்யுறுபுணர்ச்சியெய்துதற்குரித்தே- இவ்விதியால் மயக்கங்காண்க(கருத்து) தமயந்தியேயுன்னுடனுருவெளிதோற்றத்தைக்கண்டுநிலைதளருகிறான் உன்னுருவெளியைத்தழுவுகிறான்பிணக்கிலேபோன்றுவருந்துகிறான் பிணக்குத்தீர்ந்தவன்போல நகைக்கிறான் உருவெளியின்பின்போகிறான்நல்லறிவிழந்திருக்கிறான் என்றன்னஞ்சொல்லிற்று என்பதாம். (௬௰௬)

புலவுநாறும்வேல்வேந்தர்சேனைப்புணரிகடந்தெதிரற்
றுலவுதிடதக்கடாயானை யுனதுவிரகப்பேராற்றி
னலையினிலைகாண்பரிதாகிப்பதாழ்ந்துமயங்கியகாத்
திலைகொணுதலாய்பின்னர்வருமவத்தைசேராதருள்புரியாய்.

(இ-ள்) சிலை-வில்வடிவத்தை—கொள்-கொண்ட—நுதலாய் - நெற்றியையுடையவளே—புலவு-(பகைவ) புலால்—நாறும்-நாறுகின்ற—வேல்-வேலைத்தாங்கிய—வேந்தர்-அரசர்களுடைய—சேனை - சேனையாகிய—புணரி-கடலை—கடந்து-தாண்டி—எதிரற்று-எதிரியில்லாமல்—உலவும்-திரிகின்ற—திடதக்கடாயானை - பலமுள்ளகளிறானது—உனது-உன் சம்பந்தமாகிய—விரகம்-விரகமென்கிறபேர் - பெயரையுடைய, ஆற்றின்-ஆற்றினது, அலையின் - அலையில், நிலை-நிலையை, காண்பரிதாகி-காணமாட்டாததாகிய, ஆழ்ந்து-முழுகி, மயங்கியது-மூர்ச்சித்தது, அந்தோ-ஐயோ—பின்னர்வரும்-(அம்மயக்கத்தின்பின்) வருவதாகிய, அவத்தை-(சாக்காடாகிய) அவஸ்தையை—சேராது-அடையாமல்—அருள்புரியாய்-அருள்செய்வாயாக—எ-று. * தொல்காப்பியமெய்ப்பாட்டியல்-௩-சூ-நகையேயழுகையிளிவரன்மருட்கை-யச்சம்பெருமிதம்வெகுளியுவகையென் - றப்பாலெட்டேமெய்ப்பாடென்ப - இவ்விதியால்மயக்கமாகியமருட்கைவந்ததுமெய்ப்பாடென்க(கருத்து) தமயந்தியேநளனென்னும்யானையானதுஉனதுகாமக்கடலாற்றில்முழுகிமயங்கியது அதற்குமரணமாகிய பத்தாமவத்தைச்சாராதருள்புரிவாயாக என்றன்னஞ்சொல்லிற்றென்பதாம். (௬௰௭)

குடக்கையணையிற்பகைவேந்தர்துயிலுங்கொற்றமுற்றத்து
மடக்கலனையபோர்மீளியின்னவாறுமதிமயக்கித்
தடக்கொண்முலையாயெனைத்தூதுநின்பால்விடுத்தானனர்ந்திடேல்
முடிந்ததுவுமிருவீருமுன்னர்ச்செய்தவப்பேற்றால்.

(இ-ள்) தடம்-அகலவடிவத்தை—கொள்-கொண்ட—முலையாய்-முலைகளையுடையவளே—பகை(தன்னோடு) பகைத்த—வேந்தர் - அரசரானவர்—குடக்கை-உள்ளங்கையாகிய—அணையில் - தலையணையில்—துயிலும்-நித்திரைசெய்யப்பெற்ற—கொற்றம்-வெற்றிபொருந்திய, முற்றத்து-முற்றத்தையும்—மடங்கலனைய - ஆண்சிங்கம்போலும்—போர்-போர்த்தொழிலையுமுடைய—மீளி-அக்காளையானவன்—இன்னவாறு-இப்படிப்பட்டவிதமாக—மதிமயக்கி-அறிவுகலங்கி—நின்பால்-உன்னிடத்து—தூது-தூதாக—எனை-என்னை—விடுத்தான்-அனுப்பினான்—தடாந்திடேல்-(நீ)வருந்தாதே—இருவீரும் - நீங்களிருவரும்—முன்னர்-முற்பிறப்பிலே—செய்த-செய்துவைக்கப்பட்ட—தவப்பேற்றால்-தவங்களைப்பெற்றிருக்கையினாலே—அதுவும் - அக்காரியமும்—முடிந்தது-முடிவுபெற்றது—எ-று. * (கருத்து) தமயந்தியேநளமகாராசனுனை நினைந்து மதிமயங்கியுன்னிடத்தென்னையனுப்பினான் - நீவருந்தாதே முற்பிறப்பிலிருவருஞ்செய்யப்பெற்றதவத்தாலதுமுடிந்தது என்றன்னஞ்சொல்லிற்றென்பதாம். (௬௰௮)

முருகன்வேலுமுக்கண்ணனுடைமுடித்தபுனிற்றுப்பிறைக்கொழுந்துந்
திருவின்கொழுநன்பாயலுங்கண்டுமலைநுதல்போகலன்கு
லுருவமாகத்தனிக்கலந்தவுனக்குக்கலுழிமறலிமாமுநய
காடக்களிற்றுநளனுள்ளங்கவருமாறுவியப்பாமோ.

(இ-ள்) முருகன்-சுப்பிரமணியனது—வேலும்-வேலையும்—முக்கண்ணன்-பரமசிவனது—முடித்த-முடியிற்சூடப்பட்ட—புனிறு-புதியபிறைக்கொழுந்தும்-பிறைப்பிள்ளையையும், திருவின்கொழுநன்-திருமாலினது—பாயலும்-(பாம்பாகிய)சயனத்தையும்—கண்-கண்களினதும்—திலகம்-பொட்டையுடைய—நுதல்-நெற்றியினதும்—பேர்-பெரிய—அகல்-பரந்த—அல்குல்-அல்குலினதும்—உருவமாக-வடிவங்களாக—தனி-தனித்து—சுவர்க்க-வெளிய—உட்கு-அச்சத்தை—கழுதி-காணயாறுபோல்—மதம்-மதநீரானது—ஒழுகும்-இழியப்பெற்ற—கடாம்-கதுப்பையுடைய—களிறு-களிறும்பலும்—நளன்-நளராசனது—உள்ளம்-உள்ளத்தை—கவருமாறு-வெளவுமாறு—வியப்பாமோ-ஆச்சரியமாமோ-எ-று(கருத்து)தமயந்தியேநளராசனதுமனதைவெளவுதலுனக்காச்சரியமாமோ-என்றனளென்றுசொல்லிற்று-எ-ம்()

பொன்னேயமுதேமொழிக்கரும்பேபூந்தாமரையிற்றிருவேயின்
மின்னேரிடைமேதேய்ந்தறவருந்தவிம்முமுலைநல்லாய
வென்னேதொய்யிற்றொழிலனைத்துமெழுதலாமேயென்றென்னை
மன்னேயுரைக்குமெங்களுடன்மகிழ்வார்பொழிலினிடையிருந்தே.

(இ-ள்) பொன்னே-தங்கமே—அமுதே-அமிர்தமே, மொழி-சொல்லாகிய(சாரத்தை)யுடை—கரும்பே-கன்னலே—பூ-அழகிய—தாமரை-தாமரைமலரிடத்து—இல்-இல்லாத—திருவே-ஸ்ரீதேவியே—மின்-உனது—மின்னேர்-மினபோலும்—இடை-இடையானது—தேய்ந்து-இளைத்து—அற-மிகவும்—வருந்த-நோவ—விம்மும்-பருகின்ற—முலையினல்லாமல்-முலைகளிடத்தல்லாமல்—தொய்யில்-சந்தனக்கோலத்தினது—தொழிலனைத்தும்-வேலைமுழுவதும், என்னை-என்றனும—எழுதலாமோவென்று (மற்றொன்றில்) எழுதலாமோவென்று—எண்ணி-ஆலோசித்து—மன்னே-நளராசனே—மது-வண்டுகளானவை—ஆர்-ஒலிசெய்யப்பெற்றிருக்கின்ற—பொழிலினிடை-சோலையின்கண்—இருந்து-தங்கி—எங்களுடன் - எங்களோடு—உரைக்கும் (இனிச்) சொல்லுவான்-எ-று.(கருத்து) தமயந்தியேஉன்னைநளன்பணைத்துமுலைகளிற்றொய்யிலெழுதிப்பார்த்துவியந்துசொல்லுவானென்பதாம்.()

இன்பக்கலவிக்கரணங்கள்யாவுமியற்றிப்பரவிரு
மன்புற்றவசமுறுமேனியயர்தீரவதற்கோர்பொலஞ்சிறையான்
முன்புற்றுயர்வானதிப்புனலின்மூழ்கித்தண்ணென்குளிர்ந்திவலை
நனிசிற்றெறிப்பவீசுதற்குக்காலமணித்தாயன்னையமே.

(இ-ள்) இருவீரும்-நளராசனுநீயும்—இன்பம்-சுகத்தைத்தருகின்ற—கலவி-புணர்ச்சியினுடைய, கரணங்கள்யாவும்-கரணங்கள்யாவற்றையும்—இயற்றி-செய்து—அன்புற்று - (இருவருமேலொருவர்)அன்புமிகுந்து—அவசமுறும்-பரவசப்படுமாறுண்டாகும்—மேனி - (உங்கள்)உடம்பினுடைய—அயர்-தளர்ச்சியானது—தீர்வதற்கு- நீங்குதற்பொருட்டு—உயர்-உயர்வாகிய—வானத்-ஆகாயகங்கையினது—புனலின் - நீ



ரின்கண்—மூழ்கி-முழுகிவந்து—முன்புற்று-முனைவிருந்து—ஈரம்-ஈரமது—பொலன்-பொன்னுருவமாகிய—சிறையால்-சிறகுகளினாலே—தண்ணென்-குளிர்ச்சிபொருந்திய—குளிர்ந்திவலை-சிறியதுளிகள், நனி-நன்றாக—தெறிப்ப-படவீசுதற்கு-வீசுதல்செய்தற்கு, காலம்-காலமானது—அணித்தாய்-சமீபித்து—அணியது-வந்தது—எ-று.கலவிக்கரணங்களாவன-ஆலிங்கனம்—(௫)சும்பனம்(௰)ஆலிங்கனம் (௰) நகக்குறி(அ)பற்குறி(அ)குரல்(அ)சாடனம்(அ)ஆக (௬௪) கொக்கோகத்திற்காண்க (கருத்து) தமயந்தியேநீங்களிருவரும்புணர்ந்திளைப்புற்றதிருமேனியிலே - ஆகாசகங்கைதீர்த்துளிபொருந்தியசிறகுகளினால் வீசுதற்குக்காலஞ்சமீபமாயிற்றென்றதென்பதாம். (௱௨௪)

கொல்லும்வேலுங்கூர்வாளுங்கூற்றுங்கொடியகடல்விடமும்
வெல்லுநெடியகருங்கண்ணாய்வல்வேலேந்திடத்தியான்விரைவிற்
செல்லுமளவுநீவருந்தேல்செல்விற்றிகழ்பூண்வனமுலைகள்
புல்லும்வேட்கைத்தேர்ந்துவேந்தனகரம்புகுவானால்.

(இ-ள்) கொல்லும்-கொலைசெய்கின்ற—வேலும்-வேலையும்—கூர்-கூரிய—வாளும்-வாளையும்—கூற்றும்-யமனையும்—கடல்-கடலிற்பிறந்த—கொடிய-தீய—விடமும்-ஆலகாலத்தையும்—வெல்லும்-வெல்லுகின்ற—நெடிய-நீட்சிபொருந்திய—கரு-கரிய—கண்ணாய்-கண்களையுடையவளே—யான்-நான்—வேல்-வேலையுடைய—வேந்தனிடத்து-அரசனிடத்தே—விரைவில்-சீக்கிரத்தில், செல்லுமளவும்-போமளவும்—நீ-நீ—வருந்தேல்-வருந்தாதே—செல்லின்-போனால்—திகழ்-விளங்காநின்ற—பூண்-ஆபரணத்தையும், வனம்-சந்தனக்கோலத்தையுமுடைய—முலைகள்-முலைகளை—புல்லும்-தழுவுதலைக்குறித்துண்டாகிய—வேட்கை-ஆசையினாலே—வேந்து-அரசன்—தேர்-தேரின்மேலேறி—நகர்-உனதுநகரத்தில்—புகுவான் - வருவான்—எ-று (கருத்து) தமயந்தியேநீதுக்கப்படாதேநான்போனால்நளன் உன் நகரத்திற்குவருவானென்றது என்றுசொல்லிற்று-எ-ம். ()

மடைவாய்த்தலைமுந்துசங்கம்வனசப்பொகுட்டின்மணியுமிழப், பெடைநாரைகடகருவென்றடைசேர்நிடதப்பெருமானபால், விடைதாவென்னமடவன்னஞ் சிறகாவிவிசுப்பியெழுமே, படைவாள்வென்றுகட்டசந்தோகைமுகமதுரைகள்பணித்தனளால்.

(இ-ள்) மடைவாய்-மடையின்கண்—தலைமுந்து - சார்கின்ற—சூல்-கருப்பத்தையுடைய—சங்கம்-சங்குகளானவை—வனசம்-தாமரையினதுபொகுட்டில், மணி-முத்துக்களை—உமிழப்ப-ஈன்றிட—பெடைநாரைகள்-பெண்ணாரைகளானவை—தம் - தம்முடைய—கருவென்று-முட்டைகளென்று—அடைசேர்-அடைகாக்கின்ற—நிடதம்-நிடததேயத்தையுடைய—பெருமான்பால் - அரசனிடத்(தில்)—விடை-உத்தரவை, மடம்-இளமைபொருந்திய, அன்னம்-அன்னமானது, தா-வென்னா-கொடுவென்றுசொல்ல,சிறகா (அது) விரித்து—தேவி-தமயந்தி, விருப்பினொடும்-ஆசையோடும்,படைவாள்-வாட்ட

ளைடயேபோதும்—நெடுங்கண்-நெடியகண்களையுடைய—மங்கைதானை-ம ஞ்சைமயில்போல்பவள்—மூகையநுவைரகள் - உபசாரவார்த்தைகளை—ப ணிந்தனள் சொல்லினாள்—எ-று. (கருத்து) அன்னமானதானனிடத் தூசெல்லுதற்குதவுதாலென அதுகேட்டதமயந்தி உத்தரவுகொடுத்தாள் என்பதாம், (௱உ௩)

இவ்வாறிருந்தந்நன்மொழிக்கிளியம்பும்வேலையமுதநுந்து
செவ்வாய்மடந்தைசீறடியின்சுவடுநோக்கிச்சிலதியரு
மைவ்வாணெடுங்கட்டோழியருமவ்வாக்கண்டயிர்ப்பரிவரென்று
வெவ்வாய்வடிவேல்வேந்தன்பாலன்னமவிரைவின்வேகியதே.

(இ-ள்) இவ்வாறிருந்து-இவ்விதமாயிருந்து—தன்மொழிகள்-தன் வார்த்தைகளை—இயம்பும்வேலை-சொல்லிமுடித்தசமயத்தில்—அமுதம்-அமிர்தமானது—ஊறும்-சுரக்கின்ற—செவ்வாய்-செய்யவாயையுடைய—மடந்தை-தமயந்தியினது—சீறடியின் சிறியவடிகளது—சுவடு-சுவட்டை—நோக்கி-பார்த்துக்கொண்டு—சிலதியரும்-தாதிகளும்—மை-அஞ்சனமபொருந்திய—வாள்-வாள்போலும்—நெடு-நெடிய—கண்-கண்களையுடைய,தோழியரும்-பாங்கிகளும்—வர-(தேடிக்கொண்டு)வர—கண்டு-(அவர்களை)ப்பார்த்து—இவர்-இம்மங்கையர்—அயிர்ப்பரென்று-சந்தேகிப்பாரென்றறிந்து—வெவ்வாய்-வெவ்வியவாயின்கண்—வடி-கூர்மைபொருந்திய—வேல்-வேலையுடைய, வேந்தன்பால்-அரசனிடத்து—அன்னம்-அன்னமானது—விரைவில்-விரைவிலே—ஏகியது-போயிற்று-எ-று. (கருத்து) தமயந்தி இவ்வாறுசொல்லுகையில் பாங்கியரும்தோழியரும்வருதலைக்கண்டு அன்னமவர்கள்சந்தேகிப்பார்களென்று அரசனிடத்துச்சென்றது-எ-று. (௱உ௪)

அன்னமுரைத்தமொழியமுதமருந்தித்தெவிட்டாவார்முத்தி
கன்னற்குதலையிருகண்ணுங்கருத்துந்தன்பின்றொடர்ந்தேகப்
பொன்னம்பாவைதழற்பெய்தாலென்னவுருகிப்புலம்புகொண்டாங்
கின்னற்கடலின்கரைகாணதிருந்தாளிருந்தவேலைதனில்.

(இ-ள்) அன்னம்-அன்னத்தினால்—உரைத்த - சொல்லப்பட்ட—மொழி-சொல்லாகிய—அமுதம்-அமிர்தத்தை—அருந்தி - உட்கொண்டு—தெவிட்டா-வெறுக்காத—ஆர்-உண்டாகுகிற—அமுதம் - அமிர்தமும்,கன்னல்-சர்க்கரையும்போலும்,குதலை-மழலைச்சொற்களையுடையவள்—இருகண்ணும்(தன)இருகட்பார்வையும்—கருத்தும்-மனமும்—அதன்பின்-அவ்வன்னத்தின்பின்—தொடர்ந்து - பற்றிக்கொண்டு—ஏக-போக—பொன்னம்பாவை - பொன்மயமாகியபாவையை—தழல்-நெருப்பின்கண்—பெய்தாலென்ன-இட்டவாறுபோல, உருகி-கரைந்து—புலம்புகொண்டு-இரங்குதல்கொண்டு—ஆங்கு - அவ்விடத்து—இன்னல்-துன்பமாகிய—கடல்-கடலினது—கரை-கரையை—காணது-காணாமல்—இருந்தாள் - இருந்தனள்—இருந்தவேலைதனில் (அப்ப



டி) இருந்தசமயத்தில் எ-று (கருத்து) தமயந்திகருத்தும்கண்ணும் அன்னத்தின்பின்செல்லத் துன்பக்கடலின்கரைகாணாதிருந்தாள் இருந்தசமயத்தில்-எ-ம். (௱உ௫)

ஆயவெள்ளம்படையெய்தியனிச்சமலரின்றுதாளுறைப்பச்
சேயசிறமாஞ்சீறடிகள்கன்றச்செங்காலனந்தொடர்ந்து
போயதென்னமதிகொல்லோமுருகுவிம்மநறவுமிழுந்
தூயமலர்ப்பங்கயப்போதைத்துறந்தெம்மனையிற்புகுந்திருவே. ( )

(இ-ள்) ஆயவெள்ளம்-வெள்ளம்போலுமங்கையர் கூட்டமானது—படை-பக்கத்தில்—எய்தி-அடைந்து—முருகு-வாசனையானது—விம்ம-பெருக—நறவு-தேனை—உமிழும்-கக்குகின்ற—தூயமலர் -பரிசுத்தமலராகிய—பங்கயப்போதை-தாமரைப்பூவை—துறந்து-விட்டு—எம்மனையில்-எனதுவீட்டின்கண்—புகும்-வந்த—திருவே-சீதேவியே—அனிச்சமலரின் - அனிச்சப்பூவினது—தாது- மகரந்தமானது—உறைப்ப-உறுத்த—சேயசிறமாம்-சிவப்புநிறமாகின்ற—சீறடிகள்-சிறியவடிகள்—கன்ற-வாட—செங்கால் - செய்யகால்களையுடைய—அனம்-அன்னத்தை—தொடர்ந்து-(பிடிக்கும்படியாகப்) பின்செல்லு—போய அது-இங்கேயடைந்ததற்குக்காரணமாயது—என்னமதி - என்னவறிவு-எ-று, தொல்காப்பியம்-விளிமரபியல்-௰௬-அன்மைச்சொல்லேயியற்கையவாகும்-இவ்விதியாலிருவேனன்றதண்மைவிளியியல்வாயிற்று. (கருத்து) தமயந்தியே அன்னத்தைத்தொடர்ந்துசென்றதென்னமதியென்றார்கள்பாங்கிமார்கள்-எ-ம். (௱உ௬)

மையன்மதவெங்களியானைவீமன்வரத்தால்வருந்திருவே
கையுமுகமுமரிபரந்தகண்ணுமுருகுகொப்புளிக்கும்
செய்யகமலமெனவீழுமளிகளோச்சந்திரத்தாலோ
தொய்யிலெழுதுந்தடமுலைகள் சுமந்தோமேனி துவண்டதுவே.

(இ-ள்)மையல்-மயக்கத்தைச்செய்கின்ற—மதம்-மதத்தைக்கொண்டதிய—வெங்களி-வெவ்வியசெருக்கையுற்ற—யானை - யானையையுடைய—வீமன்-வீமராசனது—வரத்தால்-வரத்தினாலே—வரும்-(மகளாய்ப்)பிறந்த—திருவே-திருமாதே—கையும்-உன்கைகளையும்—முகமும்-முகத்தையும்—அரி-இரேகையானது—பரந்த-பட்டப்பெற்ற—கண்ணும்-கண்களையும்—முருகு-தேனை—கொப்புளிக்கும்- உமிழ்கின்ற—செய்யகமலமென-செந்தாமரைமலர்களென்று மயங்கி—வீழும்-(வந்து)வீழ்கின்ற—அளிகள்-வண்டுகளை—ஓச்சந்திரத்தாலோ - ஓட்டுஞ்செயலாலோ—தொய்யில்-சந்தனக்கோலத்தை—எழுத - எழுதப்பெற்ற—தடம்-மலைபோலும்—முலைகள்-முலைகளை—சுமந்தோ - தாங்கியோ—மேனி-உடம்பானது—துவண்டது-வாடியது—எ-று.(கருத்து) வீமராசன்பெற்றெடுத்ததமயந்தியே உனதுகைத்தாமரைகளில்வீழுகின்ற வண்டுகளை ஓட்டுமவளையிறோலோ உனதுதனங்களைச்சுமந்தோ இருவாறுவருந்தினாயென்றார்கள்-எ-ம். (௱உ௭)

அன்னத்தொடருமயர்வதுவோ வயலார்விழிபூவடைந்ததுவோ
பன்னும்பொழில்வாய்ப் பல்லவங்களெதிர்ந்தே மருட்டப்பயந்ததுவோ
பொன்னங்கிளியேமடமயிலேபுகல்வாய்க்குயிலேபூங்கமல
மன்னுந்திருமாதேயன்னவனங்குவாய்ந்தமரகதமே.

(இ-ள்) பொன்னங்கிளியே - அழகியபொற்கிளியே—மடமயிலே - இளமயிலே—புகல்-கூறும்—வாய் - வாயையுடைய—குயிலே - குயில்போல்பவளே—பூ-அழகிய—கமலம்-தாமரையில்—மன்னும்- நிலைபெற்றிருக்கும்—திருமாதேயன்ன-இலக்குமிக்கொப்பான, அனங்கு -அழகு—வாய்ந்த-பொருந்திய—மரகதமே-மரகதம்போல்பவளே—அன்னம்-அன்னப்பறவையைப்பற்றி—தொடரும்-தொடர்ந்த—அயர்வதுவோ-வருத்தமோ—அயலார்-அயலவர்களது—விழிபூ - கண்ணேறு—அடைந்ததுவோ - சேர்ந்ததுவோ—பன்னும் -சொல்லும்—பொழில்-சோலையின்—வாய்-இடத்து—பல்லவங்கள் - பலபேய்கள்—எதிர்ந்து எதிர்ப்பட்டு—மருட்ட - வெருட்ட—பயந்ததுவோ - பயமடைந்ததுவோ (அம்மேவி)—எ-து (கருத்து) தமயந்தியே அன்னத்தின்பின்சென்ற வருத்தமோ அயலார்கண்பட்டதோ பேயால்வந்ததோ என்பதாம். இக்கவிசிலபுத்தகங்களிலிருக்கின்றது ஆகையாற் சேர்த்துக்கொண்டனம். (௱௨௫)

காதகமழுமலர்த்திருவேயென்னச்செவிலித்தாயர்பலர்
பூதியணிந்தாங்கயினிநீர்சுழற்றித்தெய்வம்பராய்ப்போற்றிக்
காதன்மயிலைக்கொடுவந்துகடிமாமனையிற்பசுந்தேறற்
சீதமலர்மெல்லணைமீதுசேர்த்தாரவருஞ்செயலிழந்தாள்.

(இ-ள்) காது-மகரந்தமானது—கமழும் -மணக்கப்பெற்ற—மலர்-தாமரைப்பூவிலுள்ள—திருவே-திருமாதே—என்ன - என்றுசொல்ல—பலர்-பலராகிய—செவிலித்தாயர் - வளர்த்ததாய்மாரானவர்—பூதி-திருநீற்றை—அணிந்து-(நெற்றியில்)இட்டு—அயினிநீர்-ஆலாத்திநீரை—சுழற்றி-சுற்றி—தெய்வம்-குலதெய்வத்தை—பராய் - பிரார்த்தித்து—போற்றி-துதிசெய்து—காதல்-ஆசையைத்தருகின்ற—மயிலை - மயில்போல்பவளை—கொடுவந்து-கொண்டுவந்து—கடி - காவலையுடைய—மா-பெரிய—மனையில்-மாடத்தின்கண்—பசுந்தேறல் - பசியதேனையும்—சீதம்-குளிர்ச்சியையுமுடைய—மலர்-மலர்களாலாகிய, மெல் -மெல்லிய—அணைமீது-சயனத்தின்மேல்—சேர்த்தார் - கிடத்தினார்—அவரும்-அத்தமயந்தியும்—செயல்(தன்)செய்கைகளை—இழந்தாள் - இழந்தனள்—எ-று. தொல்காப்பியமெய்ப்பாட்டியல்-௩-ஞ-சூ-நகையேயழுகை யிளிவரன்மருட்கை-யச்சம்பெருமிதம்வெகுளியுவகையென்றப்பாலெட்டேமெய்ப்பாடென்ப-இவ்விதியால்செயலிழந்தாள்என்றது - மருட்கையாகியமெய்ப்பாடுவந்தவாறுணர்க (கருத்து) என்றுசொல்வளர்த்ததாய்மார்கள்தமயந்திக்குவிபூதியணிந்து ஆலத்திசுற்றிக்குலதெய்வத்தைப்போற்றிமனையிற்கொண்டுவந்து மலரணையிற்சேர்த்தார்கள் என்றதாம். (௱௨௬)



ஈங்கிவ்வாறிம்மயில்வருந்தியிருப்பவினவண்டிசைமிழற்றுந்
தேங்கொள்பொழில்வாய்முகையவிழ்ந்துசெந்தேனிறைக்குமலர்வாவி
பாங்கரமளிமிசைவிரித்தபனிமென்போதுகரியவளர் [விப்
போங்கற்றிணிதோள்வயவேந்தையன்னங்கண்ணுற்றுவந்ததால்.

(இ-ள்)மயில்-மயில்போல்பவள்—ஈங்கு -இக்குண்டினபுரத்தின்கண்—இவ்வாறு-இவ்வண்ணமாக—வருந்தி - (காமநோயால்)வருந்தி, இருப்ப-இருக்க—அன்னம்-அன்னமானது, இனம்-கூட்டமாகிய—வண்டு-வண்டுகளானவை—இசை-இராகத்தை—மிழற்றும் - பாடப்பெற்ற—தேம்-வாசனையை—கொள்-கொண்ட—பொழில்வாய்-சோலையின்கண்—முகை- அரும்புகளானவை—அவிழ்ந்து - விரிந்து—செந்தேன்-செய்யதேனினையே—நிறைக்கும் - நிறைக்கப்பெறுகின்ற—மலர் -மலர்களையுடைய—வாவி- தடாகத்தினது—பாங்கர் - பக்கத்தில்—அமளிமிசை - சயனத்தின்மேல்—விரித்த - பரப்பப்பட்ட—பனி - குளிர்ச்சிபொருந்திய—மெல்-மெல்லிய—போது-மலர்களும்—கரிய - கரும்படியாக—வளர் - [illegible]—ஓங்கல் - மலைபோலும்—திணி - திடமுற்ற—தோள் - தோள்களையும்—வயம் - வெற்றியையுமுடைய—வேந்தை - நளராசனை—கண்ணுற்று - பார்த்து—உவந்து-மகிழ்ந்தது—எ-று. தொன்னூல்விளக்கம்-சொல்லணியியல் - மதிநிலையுரிமைமாறணியாயனை - துணைமுதல்காரணக்குறிப்பொழுக்க மைந்தே-இவ்விதியால் மலர்வாவியென்றது முதற்பொருளாகிய தாமரையை நீக்கிச்சினைப்பொருளைக் காட்டினதால் முதன்மதி - நிலையலங்காரமாயிற்று(கருத்து)இவ்வாறுதமயந்திகுண்டினபுரத்தில்வருத்தமுற்றிருக்க அன்னமானது நளனைக்கண்டு மகிழ்ச்சியடைந்தது-எ-ம்-இதுபுராணிகர் கூற்று. (௱௨௭)

பொன்னஞ்சிறையமடவன்னம்போதுமுன்னர்வேல்வேந்து
தன்னந்தனியோதுணையென்னுந்தடங்கண்பொருந்தாதோவென்னு
மின்னுந்தேகியவன்னமீளாதிருந்ததென்னென்னு
மின்னினுருவுவெளிப்படுதனோக்கிநோக்கிவெய்துயிர்க்கும்.

(இ-ள்) வேல் - வேலையுடைய—வேந்து -நளராசனானவன்—பொன்-பொன்மயமாகிய—அம் - அழகிய—சிறைய - சிறகுகளையுடைய—மடம் - இளமைபொருந்திய—அன்னம் - அன்னமானது—போது முன்னர்-செல்லுதற்குமுன்—தன்னந்தனியோ - தன்னந்தனியாகவிருக்கவோ—துணையென்னும்-எனக்குத்துணையென்று சொல்லுவான்—தடங்கண் - விசாலம்பொருந்திய கண்களையுடையவள்—பொருந்தாதோவென்னும் - உடன்படாளோவென்று சொல்லுவான்—ஏதாக—ஏகிய-சென்ற—அன்னம்-அன்னமானது—இன்னும் - இதுவரையிலும்—மீளாதிருந்தது - திரும்பிவராமைக்குக்காரணம்—என்னென்னும் - யாதென்றுசொல்லுவான்—மின்னின் - மின்னல்போல்பவளது—உருவு - வடிவமானது—வெளிப்படுதல் - வெளியிலேதோன்ற [illegible]—நோக்கிநோக்கி - பார்த்துப்பார்த்து—வெய்துயிர்க்கும் - க

கொழுச்செறிவான்—எ-று. (கருத்து) அன்னம் போருமுன்னைப்போன்றுனை வணக்கத்துக்கும் நீ இருந்தலே நுனை தமயந்தியைக் கண்டபோது அன் னம்உருவாயிருந்ததென்னவனுமோவென்று உருவெளியையே நோக்கிக் கொழுச் செறிவானென்பதாம். (௱௨௧)

மீண்டதன்னமெனவெண்ணி விளைவுமொருக்குமணிமுத்தம்பூ ண்டபொம்மன்முலையென்றே புகன்றுதன்னுமருந்தாமற் காண்டல் செயினுங்கேட்பினுமென்னுள்ளமயக்குங்களிற்றனைத் தூண்டல்செ ய்யாமணிவிளக்கைக்கொணர்ந்தாய்கொல்லோவெனச்சேரும்.

(இ-ள்) அன்னம் - அன்னமானது—மீண்டதென - திரும்பிவந்த தென்று—எண்ணி - நினைத்து—வினவும் - வினவுவான்—மணி - அழகி ய—முத்தம் - முத்துக்களையுடைய—ஒருசாழ் - ஒருசரத்தை—பூண்ட - மேற்கொண்ட—பொம்மல் - பொலிவுபொருந்திய—முலை - முலைகளையு டையவள்—என்றே - என்னசெய்தியையோ, புகன்றது - சொல்லியதென் —என்னுடன் - என்றுசொல்வான்—அருந்தாமல் - உண்ணப்படாமலே— காண்டல்செயினும் - கண்டாலும்—கேட்பினும் - கேட்டாலும்—என் னை - உள்ளம் - மனத்தை—மயக்கும் - மயக்காநின்ற—களிற்றனைய தேனமுதத்தை—தூண்டல்செய்யா - தூண்டப்படாத—மணிவிளக் கை - இரத்தினதீபத்தை—கொணர்ந்தாய்கொல்லோவென - கொண்டுவ ந்தாயோவென்று—சேரும் - அருவான்—எ-று. * தொல்காப்பியமெ ய்ப்பாட்டியல் - எ - கு - புதுமை பெருமை சிறுமையாக்கமொடு-மதி மைசாலாமருட்கைநான்கே இவ்விதியால் சேருமென்றது மருட்கை யாகியமெய்ப்பாடாகும் (கருத்து) நளனவன் அன்னம்வந்ததென பா ன் தமயந்தியென்னசொன்னளென்பான் தமயந்தியைக்கொண்டுவந்தா யோவென்பானென்பதாம். (௱௨௨)

இருந்தார்மெனவிமனையுரிஞ்சித்திசழுங்குறக்காற்றேர்வேந்தே
வருந்தேல்வருந்தேனீவேண்டுவன வாராதனவுமுளகொல்லோ
முருந்தேர்முறுவல்முகம்பெற்றுவந்தேனென்னவுமூர்ச்சைதெளிந்
தருந்தாவமுதமருந்தினன்போற்பலகாற்கேட்டுமகிழும்.

(இ-ள்) இருந்தார்-பசையருந்தைய—மெனவி - மருடத்தின் உள்ள—மணி-நவமணிகளை—உரிஞ்சி-தேய்த்து—திசழும்-விளங்காநின்ற— நூல்-வீரக்கழலையுடைய—கால்-பாதத்தையும்—தேர் - மகாரதத்தைய முடைய—வேந்தே-அரசனே—வருந்தேல் வருந்தேல் - வருந்தாதே வருந்தாதே—நீ-(இப்படிப்பட்ட) நீ—வேண்டுவன - பெறவிரும்பினவ் —வாராதனவும்-(உனக்குக்) கிடையாதபொருள்களும், உளகொல்-(உலக த்தி) லுண்டோ—முருந்தேர்-மயிலிறகினடிபோலும்—முறுவல்-பற்க ளையுடையதமயந்தியினது—முகம்-முகத்தை—பெற்று-அடைந்து— வந்தேனென்னவும்-வந்தேனென்றவளவில்—அருந்தா-(முன்) உண்ணப் படாத—அமுதம்-தேவாமிர்தத்தை—அருந்தினன்போல் - உண் டவன்போல்—மூர்ச்சைதெளிந்து - மூர்ச்சைதீர்ந்து—பலகால்-பலத டவும்—கேட்டுக்-கேட்பான—அகம்-உள்ளத்தினகத்தே—மகிழும் - களிப்



பான்—எ-று. (கருத்து) சக்ரவர்த்தியேவருந்தாதேவருந்தாதேநீ வேண்டுவனவாராதபொருள்களுளவோ தமயந்தி திருமுகம்பெற்றுவந் தேனென்றன்னஞ்சொன்னவுடன்மூர்ச்சைதெளிந்தெழுந்து அவளைப்பல கால்கேட்டுமனமகிழுவானென்பதாம். (௱௨௩)

அன்னமுரைத்தவின்சொல்லினுவி தாங்கியதனோடு
பின்னுமடமான்போழ்குப்பெருகுதுயரும்வளையபிய்து
மின்னு * முரைத்தியுரைத்தியெனக்கேட்டிங்கிவ்வாறிவனிருப்ப
மின்னுண்மருங்குலயாவுமல்லினைந்தவாறுமிளம்புவாம்.

(இ-ள்) அன்னம்-அன்னத்தினால்—உரைத்த - சொல்லப்பட்ட— இன்சொல்லின்-இனியசொற்களால்—ஆவி- உயிரை—தாங்கிப்போத் திருந்து—பின்னும் - (அதற்குப்) பின்னும்—மடமான் - இளமைபொ ருந்தியமான்போல்பவளது—போழ்கும் - பெரியவழகையும்—பெரு கு துயரம்-(காமத்தாலவளிடத்தே) - வளர்கின்றதுன்பத்தையும்—விள ம்பியதும் - (தன்னைக்குறித்து அவளாற்) சொல்லப்பட்டசெய்தியையு ம்—இன்னும் - இன்னமும்—உரைத்தியுரைத்தியென - சொல்லுசொ ல்லென்று—கேட்டு - வினவிக்கொண்டு—அதனோடு - அவ்வன்னத் தோடு—இங்கு - இவ்விடத்தே, இவ்வாறு - இவ்விதமாக—இவன்- அரசனை—இருப்ப-இருக்கும்போது— (உண்டாகி, மின்-மின்போலு ம்—நுண் - நுண்ணிய—மருங்குல் - இடையையுடையவளாகிய தம யந்தியினது—அயாவும் - அப்பத்தையும்—மேல் - பின்பு—விளைந்த வாறும் - நடந்தசெய்தியையும்—விளம்புவாம் - (யாம்) சொல்லுவாம் —எ-று. * தொல்காப்பியம்-வினையியல்-உ௯-கு அவற்றுள்-முன்னிலை க்கிளவி - இ ஐயாவென-வரூஉமூன்று, மெய்ப்பத்தோன்று மொருவ ற்குமொன்றற்கும் - இவ்விதியால் உரைத்தியென்றது - முன்னிலையொ ருமையிகரவிகுதி (கருத்து) அன்னஞ்சொன்ன இனியசொற்களால் நளமகாராசனுனன் உயிரைவிடாதிருந்து தமயந்தியென்னசொன்னளெ ன்னஞ்சொல்லுசொல்லென்றுகேட்டுக்கொணிருக்கத் தமயந்தியின் அய ரத்தைச் சொல்லுவாமென்பதாம். இது புராணிகர் கூற்று. (௱௨௪)

அன்னத்தைத்தூதுவிட்டபடலம்-முற்றிற்று.

உ

# கைக்கிளைப்படலம்.

* கைக்கிளையென்பது ஒருதலைக்காமம். அது ஆண்பாற்கைக் கிளையும்பெண்பாற்கைக்கிளையுமென இருவகைப்படும்

அவற்றுள்-இது பெண்பாற் கைக்கிளையாம்.

கை-இழிவு, கிளை-உறவு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொங்குவிம்முகோதையோடு கோதைதாழவாண்முகம்
பங்கயத்தைமற்றொர்பங்கயத்துவைத்த பான்மைபோ
லங்கைசேர்த்திமைக்கணீலவாவிரித்தவாவிய
மங்கைமென்முலைத்தடத்துமாரன்வாளியெய்வினான்.

(இ-ள்) கொங்கு-வாசனையானது-விம்மு - விரியப்பெற்ற—கோதையோடு - பூமாலையோடு—கோதை - கூந்தலானது—தாழ- அவிழ்ந்து தொங்கவும்—பங்கயத்தை- ஒருதாமரைப்பூவை—மற்றொர்பங்கயத்து - மற்றொருதாமரைப்பூவிலே—வைத்தபான்மைபோல் - வைத்த தன்மைபோல்—வாள்-ஒளிபொருந்திய—முகம் - முகத்தை—அங்கை - உள்ளங்கையிலே—சேர்த்தி-வைத்து—இமை- இமையுமாகப்பெற்ற—கண்-கண்களினின்று—நீலம்-கரிய—ஆவி - நீர்த்துளிகளானவை—இரைத்தலுதிரவும்—அவிய-இருக்கின்ற—மங்கை - தமயந்தியுடைய, மென்முலைத்தடத்து - மெல்லியமுலைகளிடத்து—மாரன்-மன்மதனானவன்—வாளி-பூவம்பினை—எய்வினான் - செலுத்தினான்—எ-று. [* அகப்பொருள்விளக்கம் - அவற்றுள் - கைக்கிளையுடையதொருதலைக்காமம்] (கருத்து) தமயந்தி தனத்திடத்து மன்மதன் கணைதொடுத்தான் என்பதாம். (க)

செப்புநேர்முலைக்கண்வேனில்வே டொடுத்ததேமல
ரப்புமாரிகாமவெம்மைசெய்யவாற்றலாமையா
லெப்புவிக்கும்வேந்தெழிற்கடற்படிந்துமீண்டுமால்
வெப்புநோயர்நீரின்மூழ்கினவெம்மையாறுமேகொலாம்

(இ-ள்) வேனில் - வசந்தகாலத்திற்குரிய—வேள் - மன்மதனால்—தொடுத்த-செலுத்தப்பட்ட—தேமலர் - வாசனைபொருந்தியமலராகிய—அம்பு- (அம்பாகிய) ஈரினது—மாரி - மழையானது—செப்புநேர் - செப்புபோலும்—முலைக்கண் - முலைகளையுடையவளாகிய தமயந்தியிடத்து—காமவெம்மை - காமசுரத்தை—செய்ய - உண்டாக்க—ஆற்றலாமையால் - பொறுக்கமாட்டாமையால்—எப்புவிக்குமெல்லாத்தேசங்களுக்கும்—வேந்து - அரசனுயுள்ளோனுகியவனாகிய—எழி



ல்—அழகாகிய—கடல் - கடலுள்ளே—படிந்தும்-மூழ்கியும்—மீண்டும் (அக்காமசுரமான அது அவளுக்கு) மிகும்—வெப்புநோயர் - சுரவியாதியையுடையவர்—நீரில் - நீருள்—மூழ்கின் - முழுகினால்—வெம்மை-அழற்சுரமான அது—ஆறுமேகொல்-தீருமோ—எ-று. (கருத்து) தமயந்தியானவள் காமாக்கினியால் நளனுழைக்கேள்வுங் கடலிற்படிந்தும் அவளுக்குக்காமக்கனல்மிகும்-என்பதாம். (உ)

அல்லலுற்றழுங்கும்வாடுமாவிசோருமெல்லிதழ்ப்
பல்லவங்கடையுமாதுபாயலிற்படுத்திடு
மொல்லைவிற்பனைக்குநெட்டுயிர்ப்புயிர்க்கும்வாசறு
வில்லிவாளிதன்னையார்விலக்குவார்கொலென்னுமால்

(இ-ள்) அல்லலுற்று - துன்பமுற்று—அழுங்கும் - வருந்துவாள்—வாடும்-வாடுவாள்—ஆவிசோரும் - உயிர்சோர்வாள்—மெல்லிதழ் மெல்லியபூவிதழ்களும்—பல்லவங்கள் - தளிர்களும்—இயபுமாறு (தன் னுடலைவெப்பத்தால்) கருகும்படியாக—பாயலில் - சயனத்தின்கண்—படுத்திடும்-படுப்பாள்—தொல்லையில்-விரைவில், பனைக்கும் - நடுங்குவாள் —நெட்டுயிர்ப்புயிர்க்கும்- பெருமூச்செறிவாள், வாள்கனைழலில்-வெடு. மருப்புவில்லையுடையமன்மதனது—வாளி தன்னை - அம்பை—யார் யாவர்—விலக்குவார்- விலக்கவல்லவர்—என்னும்-என்றுசொல்லுவாள்—எ-று. * தொல்காப்பியம்- மூப்பேபிணியேவருத்தமென்மையோ டியாப்புறவந்தவிளிவரனுங்கே - இவ்விதியால் அழுங்கும் என்ற வருத்தமாகிய மெய்ப்பாடு (கருத்து) தமயந்தியானவள் மன்மதபாணத்தையார்விலக்குவார்கள் என்றுசொல்லுவாள் என்பதாம். (௩)

மைம்மறந்த * நீலவொண்கண்வார்புனற்சொரிந்தொழு
கைம்மறைத்தடவொண்ணிமெல்விரல்கள்கன்றின
மொம்மல்வெம்முலைத்தடங்கலந்துறந்தபூமறந்
தம்மெல்லோதிசோர்ந்த தன்னையார்வமோடழிந்ததே

(இ-ள்) நீலம்-கருங்குவளைமலர்போலும்—ஒண் - ஒள்ளிய—கண்-கண்களானவை—மை - மையை—மறந்த - மறந்தன—மறந்தனவாகி—வார் - நீர்மைபொழிகின்ற—புனல் - நீரை—சொரிந்து - பொழிந்து—மை - அஞ்சனத்தை—மறந்த - மறந்தன—கைகளானவை—யாழ் - வீணை (வாசித்தலை)—மறந்த-மறந்தன—கூடல் - கூடற் (சுழிக்கை)—என்னி (தொட்ட) டெண்ணி—மெல்-மெல்லிய—விரல்கள்-விரல்களானவை—கன்றின - வாடின—பொம்மல் - பொலிவுபொருந்திய—வெம் - விருப்பத்தைத்தருகின்ற—முலைத்தடம்-முலைகளிடங்களானவை—கலன் - ஆபரணங்களை—துறந்த- நீத்தன—அம்-அழகிய—மெல்-மெல்லிய—ஓதி - கூந்தலானது—பூ-மலர்களை—மறந்த-மறந்தது—சோர்ந்தது-தளர்ந்தது—உள்ளம் -நெஞ்சமானது—ஆர்வமோடு-ஆசையோடு (கூடி)—அழிந்தது-நிலைகெட்டது—எ-று. * தண்டியலங்காரம் - பண்புந்தொழிலும் பயனுமென்றிவற்றின் - ஒன்றும் பலவும்பொருளொடு பொருள்புணர்ந் - தொப்புமைதோன்றச்செப்புவதுவமை - இவ்விதியால் நீலவொண்கண் என்றதுபண்புவமையல

ந்தார் (கருத்து) தமயந்தி கண்கள்மைமறந்தன - கைகள்வளையை மறந்தன - விரல்கள்கூடற்குறியெண்ணிவாடின - முலைகள் ஆபரணங்களை நீத்தன - கூந்தல்பூமறந்துசோர்ந்து செந்தாமரையையிகழ்ந்தது என்றவாறு.

மழைமதர்க்கண்முலைகள் செய்யமார்பினைத் துமென்மையே
விழைபுகப்பெறா துவிம்மி யேற்பெறக்கலந்ததாற்
குழைகுழைத்துமாரவெய்ய கணையிலுள்ளநுழைபோய்
நுழைவதற்கிடம்பெறா துசெய் துதைத்துமீளுமால்

(இ-ள்) மழை - குளிர்ச்சிபொருந்திய — மதர் - செருக்கையுற்ற — கண் - கண்களையுடையவளது — முலைகள் - முலைகளானவை — செய்ய சிவப்பாகிய — மார்பினைத்துமை - மார்பிடமுழுதையும் — மென்மையே ர்-மென்மையுநேர்மையும்பொருந்திய — இழை-நூலும் — புக - நுழைதற்கு — பெறா துசெக்கிலேயாக — விம்மி-பருத்து — ஏற்பெற - அழகுபெற — கலந்ததால் - செறிந்ததால் — குழை - கருப்புவில்லை — குழைத்து-வளைத்து — மாரன்-மன்மதனால் — எய்த - செலுத்தப்பட்ட — கணையின் - அம்புகளால் — உள்ளம் - நெஞ்சமானது — நுழைபோய் - நுழைந்து — நுழைவதற்கு (அவ்விருமுலைகளுக்குமநடுவே) புகுந்து வெளிப்படுதற்கு — இடம்பெறா து-வழிபெறாமல் — செய்து - சிறிது — உதைத்து-(அவற்றினடியை) புதைத்து — மீளும் - திரும்பிவிடும் — எ-று. (கருத்து) தமயந்திமுலைகள்மிகவும்பூரித்ததால்மன்மதபாணங்களைத் தாக்காமற்றிரும்பும்-என்பதாம். (௮)

கழித்தகூடல்கூடுறாதுநீர் சொரிந்துகாலோடாது
மழித்தகண்கடுமிதுமலைணிதயங்குமார்பகத்
திழைத்தவாரமுலைதிளைப்பவெய்துபோழ்திலிறைவனை
விழித்துநீரடக்குமாயமென்சொலென்றுமெலியுமால்.

(இ-ள்) கழித்த-கழிக்கப்பட்ட — கூடல்-கூடற் (குழியானவை) கூடாமற்போக — நீர்-நீரை — சொரிந்து - பொழிந்து — காலோடாமல்-நினைக்குந்தோறும் — அழித்த - கெடுத்துக்கொண்டுவந்த — கண்கள் - கண்களே — துமிதும் - அலைப்பெறுகின்ற — வேலை-காலத்திலே — அணி-ஆபரணங்களால் — தயங்கும்-விளங்குகின்ற — மார்பகத்து - (என்) மார்பிலுள்ள — இழைத்த-தேய்க்கப்பட்ட — ஆரம்- சந்தனத்தையுடைய — முலை-என்முலைகளை — திளைப்ப-தழுவ — எய்துபோழ்தில் - அடைகின்றசமயத்தில் — விழித்து - இமைகளைத்திறந்து — நீர் - நீர்களை — இறைவனை-(என்னுடைய) தலைவனாகிய நளராஜனை — அடக்கும் - மறைக்கின்றதாகிய — மாயம் - வஞ்சவித்தையானது — என்சொலென்று காத்தன்மைத்தாகுமென்றுசொல்லி — மெலியும் - தளர்வாள் — எ-று. தொல்காப்பியம்மெய்ப்பாட்டியல்-௩-௬- இளிவேயிழவேயசவேவறுமை யென்றிவிவில் தோன்றுமழுகைநான்கே - இவ்விதியால்மெலியும்என்றது அழுகையாகிய - மெய்ப்பாட்டையத்துணர்க (கருத்து) கண்படைநித்திரையிலே நளனைக்கூடுஞ் சமயத்திலே விழித்துக்கொண்டு அந்நளனையடக்குமாறு நீரென்னவஞ்சனோ வென்பாள் என்பதாம் (௯)



வாட்டடங்கண்மானையாவி வாட்டமாரன்வார்சிலை
பூட்டியெய்தபகழிதைத்தபுழை நுழைந்துதென்றல்போய்
மீட்டுநின்றகாமவெந்தழற்பிழம்பையெரியெழ
மூட்டிமேலெழுந்ததாகுகெட்டுயிர்ப்புமுடிவிலே

(இ-ள்) கெட்டுயிர்ப்பு-பெருமூச்சானது — மாரன் - மன்மதனெனிய (வேட) னனவன் — வாள்-வாள்போலும் — தடம் - விசாலம் பொருந்திய — கண்-கண்களையுடையவளாகிய — மானை-மானை, ஆவி- உயிரினை — வாட்ட - வருத்துதற்கு — வார்சிலை - நெடியவில்லிலே — பூட்டி- தொடுத்து — எய்த - செலுத்தப்பெற்ற — பகழி - அம்புகளானவை — தைத்த - தைத்ததாலாகிய — புழை - துளைகளில் — நுழைந்து-(நுழைவறு மறியாமற்) புகுந்து — போய் - சென்று — மீட்டுநின்ற - (மீட்டாகச்)சேர்க்கப்படுகின்ற — காமம் - காமமாகிய — வெம் - வெப்பம்பொருந்திய — தழல் - நெருப்பினது — பிழம்பை - செறிவை — எரியெழ - எரிய — மூட்டி - மூள்வித்து — முடிவில் - (அச்செய்கை)முடிவில் — மேல் - புறத்தே — எழுந்தது-புறப்பட்டதாகிய — தென்றல் - தென்காற்றே — ஆகும்-ஆகும் — கெட்டுயிர்ப்பு-பெருமூச்சானது — எ-று. இலக்கணத்திரிபு-சொல்வினை மடக்கலே சொமடக்கணியாம். (கருத்து) தமயந்தி பெருமூச்சானது மன்மதபாணங்கைத்த புழையிலே தென்றற் காற்றானது நுழைந்தக்கினியை மூள்வித்து மேலெழுந்தது போலாகும் என்பதாம். (௰)

செயிர்ப்பின்மாரனெய்யவாளி யில்லையுன்றுசெறிதெறு
வயிர்ப்பவாடிவிரகவெம்மையழிவின்மூழ்கியருகுறும்
பயிர்ப்பில்கோதைநெஞ்சநோய்கள் பரிவிறுதுமழுநெட்
டுயிர்ப்புரைத்ததோகடுக்க முற்றதுத்தரீயமேல்.

(இ-ள்) மாரன் - மன்மதனென்பவன் — செயிர்ப்பின் - கோபத்தினால் — எய்ய-(அம்புகளைச்)செலுத்த — ஆவி - உயிரானது — இல்லை - இல்லையெனவும் — உண்டென்றுசெறிதெறு - சிறிதுண்டெனவும் — அயிர்ப்பு-ஐயங்கொள்ள — வாடி - தளர்ந்து — விரகம் - விரகமாகிய — வெம்மை-வெப்பம்பொருந்திய — அழலின் - நெருப்பினுள் — மூழ்கி - முழுகி — அருகுறும் - வருத்தத்தை — உறும்-அடைந்த — பயிர்ப்பில் - அருவருப்புக்குணமிகுந்திருக்கிற — கோதை - மங்கையினது — நெஞ்சம் - நெஞ்சத்திலுண்டாகிய — நோய்கள்-நோய்களை — பரிவிறுதும் - இரக்கத்தினுலே — அழுதும் - கூடுபொருந்திய — நெட்டுயிர்ப்பு - பெருமூச்சானது — உரைத்தது-சொல்லியதனால் — மேல் - (அந்நெஞ்சத்தின்) மேலிட்டதான — உத்தரீயம் - உத்தரீயமானது — கடுக்கம் - கடுக்கத்தை — முற்றதோ-அடைந்ததோ — எ-று. ஞாயிறு உத்தரத்திற் கூட்டப்பட்டது (கருத்து) தமயந்திநெஞ்சநோய்களை நெட்டுயிர்ப்பானது காட்டியது - எ-ம். ()

மையரிக்கண்வதன மங்கைவடிவைமந்திறடிச்
செய்யபங்கயங்களுண் டெமிழ்ந்தசெய்யதிரிகொலோ

தொய்யில்வெம்முலைத்தடஞ்சுமந்துசொந்துவாடிய
வையநுண்மருங்குன்மெய்யுறன் றெழுந்தவெம்மையே.

(இ-ள்) தொய்யில் - சந்தனக்கோலத்தினையுடைய—வெம்-விருப்பத்தைச்செய்கின்ற—முலை-முலைகளாகிய—தடம்-மலைகளை—சுமந்து - தாங்கி—சொந்து-வருந்தி—வாடிய - இளைத்த—ஐயம் -(உண்டோவில்லையோவென்று) ஐயத்தைத்தருகின்ற—நுண் - நுண்ணிய, மருங்குல்-இடையையுடையவளது—மெய் -உடம்பினிருந்து—அழன்று - சுட்டுக்கொண்டு—எழுந்த-புறப்படுகின்ற—வெம் - வெப்பமானது—மை-அஞ்சனத்தையும—அரி-இரேகைகளையுமுடைய—கண் - கண்களும்—வதனம்-முகமும்—அங்கை-உள்ளங்கைகளும்—வடிவு-அழகல்—அமைந்த-நிறைந்த—சீறு-சிறிய—அடி - அடி-சரணமாகிய—செய்யபங்கயங்கள்-செந்தாமரை மலர்களாலே—உண்டு - (அதற்குமுன்) உண்டுகொண்டு—உமிழ்ந்த- (அப்போது) கக்கப்படுகின்ற—செய்யகதிர்கொல்-சூரியகிரணமோ—எ-று. * தொல்காப்பியம் - இடைச்சொல்லியல் [illegible] இவ்விதியால் ஏகாரமீற்றசை (கருத்து) தமயந்தி உடம்பிலெழுந்த சூடானது இவளது அவயவத்தாமரைகள் உண்டுமிழ்ந்த சூரியகிரணமோ என்பதாம். (௪௯)

அலைத்தடக்கணருவிபாய வாரவண்டலுழ்புமென்
முலைத்தடத்திழிந்துதோளுறமுறைசெம்பொன்களுந்து
இலைத்தடங்கைமாரன்மாது இசைதமீதழுந்திட
வுலைத்துவிட்டகமலம்பொய்யவுற் றலத்தைபொத்தவே.

(இ-ள்) தடம்-விசாலம்பொருந்திய—கண்- கண்களிலிருந்து—அலை-அலைகளையுடைய—அருவி - வெள்ளமானது—பாய - பாய்தலினுலே-வாரம்-சந்தனத்தினது—வண்டல்-குழம்பானது—அழியும் - அழியப்பெற்ற—மெல்-மெல்லிய—முலைத்தடத்தினூடு - முலைப்பரப்பினுள்ளே—தோன்று - காணப்பட்ட—முகமும் - முகத்தினது—(நிழலும்)—கெம் - கருமைபொருந்திய—ஒள்-ஒள்ளிய—கணும் - கண்ணினது (நிழலும்)—சிலை - (கரும்பு)வில்லையுடைய—தடம் - பெருமைபொருந்திய—அகை கையையுடைய—மாரன் - மன்மதனுக்கு—மாது - மங்கையாகிய—சிங்கதயாது - நெருங்கின்—அழுந்திட - அழுந்த—உலைத்து-இழுத்து—விட்ட-விடப்பட்ட—கமலம் - தாமரைப்பூ—(வம்மையும்) பெய்ய-கொடிய,உற்பலத்தை-நீலோற்பலப்பூ(வம்மையும்)—ஒத்த-ஒத்திருந்தன—எ-று. (கருத்து) தமயந்திமுலையிலிடத்துத்தோன்று முகமுங்கண்களும் மன்மதனது தாமரைப்பூக்கணையையும் நீலோற்பலக்கணையையுமொத்திருந்தன-எ-ம். (௫௰)

வேயைவென்றபசியதோளணங்குகாமவெம்மையாற்
றீயின்மேயதளிரின்வாடியழிதல்கண்டுசிந்தியா
நேயநெஞ்சமழியமைக்கணீர்நிறைப்பநிலைதளர்ந்
* தாயவெள்ளம்விரகவெம்மையாற்றுவான் றணிந்ததே.



(இ-ள்) ஆயவெள்ளம்-வெள்ளம்போலும் மகளிர் கூட்டமானது—வேயை-மூங்கிலை—வென்ற-ஜயித்த—பசிய - பசுமைபொருந்திய—தோள் - தோள்களையுடைய—அணங்கு - தெய்வப்பெண்போல்பவள்—காமம் - காமத்தினது—வெம்மையால் - வெப்பத்தால்— தீயில்-நெருப்பில்—மேய - விழுந்த—தளிரின் - தளிர்போல்—வாடி -மெலிந்து—அழிதல் - வருந்துதலை—கண்டு - பார்த்து—சிந்தியா - (இதற்குநாஞ்செய்யக்கடவதியாதென்று) ஆலோசித்து—நேயம் - அன்பையுடைய—நெஞ்சம்-மனமானது—அழிய-வருந்தவும்—மை - மையையணிந்த கண்-கண்களானவை—நீர் - நீரை—இறைப்ப-பொழியவும்—நிலைதளர்ந்து - நிலைசோர்ந்து—விரகவெம்மை - விரகத்தாலாகிய—(அக்காம) வெப்பத்தை—ஆற்றுவான் - தணிக்கும்படியாக—துணிந்தது - நிச்சயித்தது—எ-று. * தொல்காப்பியம் -எச்சவியல் - உவமைத்தொகையே—[illegible] இவ்விதியால் - ஆயவெள்ளம் - இதில்போலுமென்னுமுவமையுருபுகுறைந்தது (கருத்து) தமயந்தியினது காமவெப்பத்தைத் தணிக்கும்பொருட்டுப்பெண்கள் கூட்டந்துணிந்துபுறப்பட்டதென்பதாம். (௫௧)

மதுப்பிலிற்றுசோலைவாயின் மணிதெளித்தகீரதாம்
புதுப்புனற்றடத்திலிந்துகாந்தவேதிகைப்புறத்
ததித்ததிங்கள்வாண்முகத் தணங்கைமாங்கொண்கணை
வெதுப்புகின்றதொழியவாசமெல்லணைக்கிடத்தினர்.

மயில்-வே

(இ-ள்) மது-தேனை—பிலிற்று-துளிக்கின்ற, சோலை[illegible]யிலின்கண்—மணி-முத்துக்களை—தெளித்த - தெளிந்தலாலாகிய—நீரதாம் - குணமுடையதுபோல்வதாகிய—புது-புதிய—புனல் - நீரையுடைய—தடத்தில் - குளக் (கரை) யில், இந்துகாந்தம் - சந்திரகாந்தத்தாலாகிய—வேதிகைப்புறத்து - மேடையின்மேல்—வாசம் - பரிமளம்பொருந்திய—மெல் - மெல்லிய—அணை - (பூ) வணையின்மேல்—உதித்த - உதயமாகிய—திங்கள்சந்திரன்போலும—வாள் - காந்திபொருந்திய—முகத்து - முகத்தையுடைய—அணங்கை - தெய்வமாதுபோல்பவளை—மாரன்-மன்மதனது—ஒள்-ஒள்ளிய—கணை - அம்பானது—வெதுப்புகின்றது - சுடுகின்றது—ஒழிய- நீங்கும்படியாக—கிடத்தினர்-படுக்கவைத்தார்கள்—எ-று.வீரசோழியம்-பொருளதிகாரம்-மெய்ப்பாட்டியல் வகைமேதகவிரிப்பின்-மெய்க்கப்பட்டு விளங்கிய தோறமுந் - செவ்விதிற்றெரிந்து செப்பின்மற்றதுவே சுப்பிரயோகம் விப்பிரயோகஞ் சோகமோகமரணமென்று-மைவகைகளையுணர்த்திய காமம் பையமுருகிடப் பட்டுமவற்றுட்-சுப்பிரயோகஞ்சொல்லுங்கிளைப்பும் விப்பிரயோகம் வெய்துயிர்ப் புறதல்-சோகம்வெப்புஞ்சோர்வுண்டமையு-மோகமயக்கமுமொழிபலபிதற்றலும்-மரணமணங்களுமாறுதுமென் பா-[illegible] இவ்விதியால்மோகத்தாற் கிடத்தப்பட்டாள் (கருத்து) பாங்கியர் தமயந்தியைச் சோலையிற்றடாகக்கரையில் சந்திரகாந்தமேடைமேற் பூவணையிற்கிடத்தினார்களென்பதாம். ()

மலயவெற்புயிர்த்தொர்காதம் வாசநாறுமாரமு
மலைகடற்பிறந்திலங்குமணிகொள்கோவையாரமு
முலையின்வெப்பினீறதாகி முழுமையும்புதைத்தலாற்
சிலைமதற்குவெருவியீசனுருவெடுத்தல்சிவனுமே.

(இ-ள்) மலயவெற்பு - பொதியமலையினுல் — உயிர்த்து - காப்பட்டு — ஓர்காதம் - ஒருகாதமளவாக — வாசநாறும் - வாசனைசெய்கின்ற — ஆரமும் - சந்தனமும் — அலை - அலைகளையுடைய — கடலின் - கடலின்கண் — பிறந்து - உண்டாகி — இலங்கு - விளங்காநின்ற — அணி - அழகு — கொள் - கொண்ட — கோவை - வடங்களிலுள்ள — ஆரமும் - முத்தாரமும் — முலையின் - முலைகளது — வெப்பின் - (காமசுர) வெப்பத்தினால் — நீறதாகி - சாம்பலாகி — முழுமையும் - (தமயந்தியின்) உடம்புமுழுதையும் — புதைத்தலால் - மறைத்தலால் — (தமயந்தியானவள்) சிலையையுடைய — மதற்கு - மன்மதனுக்கு — வெருவி - அஞ்சி — ஈசன் - ஈசனது — உருவு - வடிவத்தை — எடுத்தல்சிவனும் - எடுத்தவள் போலும் — எ-று. (கருத்து) சந்தனமும் முத்துக்களும் தமயந்திமுலைவெப்பத்தினாலே நீறாகித் திருமேனிமுழுதையும் மறைத்தலால் மன்மதனுக்குப் பயந்து சிவனைப்போல்வடிவெடுத்தாள் போலிருந்தது-எ-ம். ()

வளைத்தடக்கைவெம்மைதீரவாரமேல்வளைத்ததிற்
(ரு) பொறித்தவாசநீர்நிறைத்துமுத்தணிந்தசெவ்விமா
துள் ந்திங்கடாரகைக்குலங்களொடுமொய்த்துமா
நவேளையார்வமோடு காணவந்ததொத்ததே.

(இ-ள்) வளை - வளையல்களையணிந்த — தடம் - பெரிய — கை - கைகளையுடையவளது — வெம்மை - (காமசுர) வெப்பமானது — தீர - நீங்க — சந்தனத்தால் — மேல் - (மார்பின்) மேல் — வளைத்து - (கரை) கோலி — அதில் - அதன்மேல் — தெளித்த - தெளிந்த — வாசநீர் - பனிநீரால் — நிறைத்து - நிறைவித்து — முத்து - முத்துக்களை — அணிந்த செவ்வி - (சுற்றிலும்) அணிந்தமையாலுண்டாகிய அழகானது — மாது - தமயந்தியினது — உளத்து - நெஞ்சிலிருக்கின்ற — வேளை - மன்மதனை — ஆர்வமோடு - ஆசையோடு — காண - பார்க்க — வான் - ஆகாயத்திலே — முளைத்தெழுகிற — திங்கள் - சந்திரனானவன் — தாரகைக்குலங்களொடு - உடுக்கூட்டங்களுடனே — மொய்த்து - நெருங்கி — வந்தது - (அங்கே) வந்திருத்தலாலுண்டாகிய அழகை, ஒத்தது - நிகர்த்தது — எ-று. (கருத்து) தமயந்திமார்பில்சந்தனத்தைவளைத்து பனிநீரை விட்டு முத்துக்களையணிந்த அழகானது சந்திரன் நட்சத்திரங்களோடு தமயந்தியுள்ளத்து மன்மதனைக்காணவந்ததை ஒத்திருந்தது என்பதாம். ()

பூசசாந்தமெய்யினிற்பொருக்கெழுந்தெரிந்தன
வீசமாலவட்டநெஞ்சில் விரகவெம்மைமூட்டின
வாசம்வீசுகொட்டுயிர்ப்பின் மாலைதீந்துவாடின
வஞ்சகோயின்வெம்மைதன்னையாற்றலாகுமோகொலாம்.



(இ-ள்) பூச - பூசப்பட்ட — சாந்தம் - சந்தனக்குழம்பானவை — மெய்யினில் - உடம்பின்கண் — பொருக்கு - பொருக்காக — எழுந்து - எழும்பி — எரிந்தன - கரிந்தன — வீசம் - வீசப்பட்ட — ஆலவட்டம் - விசிறிகளானவை — நெஞ்சில் - நெஞ்சிலுள்ள — விரகம் - விரகத்தாலாகிய — வெம்மை - நெருப்பை — மூட்டின - மூள்வித்தன — மாலை - மாலைகளானவை — வாசம் - வாசனையை — வீசும் - வீசுகின்ற — கொட்டுயிர்ப்பின் - பெருமூச்சினாலே — தீந்து - கருகி — வாடின - புலர்ந்தன — ஆசைகோயின் - காமநோயினது — வெம்மைதன்னை - வெப்பத்தை — ஆற்றலாகுமோ — கொல் - (ஒருவரால்) ஆற்றலாமோ — எ-று. (தொல்காப்பியம் - வினையியல் - அ - ஆவ்வென வருஉமிறுதி - யப்பான்மூன்றே பலவற்றுப்படர்க்கை - இவ்விதியால் தீந்தன என்றதன் அகரவீறு பலவின்படர்க்கை) (கருத்து) சந்தனங்கள் தீந்தன - ஆலவட்டங்கள் தீயை மூட்டின - பெருமூச்சால் மாலைகள் வாடின - ஆகையால் காமாக்கினியை அவிக்கலாகுமோ - எ-று. ()

ஐயரிக்கண்மாதின்மெய்யழன்றவெம்மையாற்றலாத்
தொய்யில்வெம்முலைப்புதைத்தகோடவிழ்ந்ததாமரை
மையன்மாமதத்தயானை மன்னனின்றிவ்வாறுதன்
கையிலுற்றிடப்பனென்று காட்டுமாறுபோன்றவே.

(இ-ள்) ஐயரி - பஞ்சவரிகள்பொருந்திய — கண் - கண்களையுடைய — மாதின் - மங்கையினது — மெய் - உடம்பின்கண் — அழன்ற - கடுமையான — வெம்மை - (காம) வெப்பத்தை — ஆற்றலா - பொறுக்கமாட்டாமல் — தொய்யில் - சந்தனக்கோலத்தையுடைய — வெம் - விருப்பஞ்செய்கின்ற — முலை - முலைகளை — புதைத்த - கருக்கியமுக்கினவையும் — கோடு - இதழ்களானவை — அவிழ்ந்த - விரியப்பெற்றனவுமாகிய — தாமரை - தாமரைகள் — மையல் - மயக்கத்தைத்தருகின்ற — மா - பெரிய — மதத்த - மதம்பொருந்திய — யானை - யானையையுடைய — மன்னன் - நளன் — மணந்து - (உன்னை) விவாகஞ்செய்து — இவ்வாறு - இவ்வண்ணம் — தன்னுடைய — கையில் - கைகளாலே — பிடிப்பான் என்று — காட்டுமாறுபோன்ற - காட்டுந்தன்மையைப்போன்றன — எ-று. - வே - அசைநிலை. ஈற்றுப்பெற்று... தொடிவுருகண்ணிதொடுத்தியவெய்ப இவ்விதியால் ... (கருத்து) தமயந்தி முலைகளைப் பொத்தியதால் அழுக்கப்பட்ட தாமரைமலர்களானவை நளன் விவாகஞ்செய்து இவ்வாறு பிடிப்பானென்று காட்டல்போன்றிருந்தன என்பதாம். ()

குரவவிழ்ந்தகோதைவாண்முகத்துளிர்த்ததிங்களின்
மருங்கிலிக்ககாந்தநீருகுப்பவெய்யபுரைசெய்வா
ளிரவுதிங்களென்னும்பேர்மறைந்தெழுந்தவீரவியும்
வருதலின்றியிரவிகாந்தமழல்வதெனவாறெறு

(இ-ள்) அவிழ்ந்த - மலர்ந்த — குரவு - குராமலர்களைக்கொண்ட — கோதை - கூந்தலையுடையவளது — வாள் - காந்திபொருந்திய — முகம் -

மூகத்தை—குளிர்ந்த - சீதளம்பொருந்திய—திங்களொன்று-சந்திரனென்று(மயங்கி)—இந்துகாந்தம்-(தனக்கிடமாகிய)சந்திரகாந்தமானது,உருகி-உருகி—நீர்-நீரை—உகுப்பபொழிய—வெம்பி - வெந்து—இரவு-இரவில்—திங்களொன்று - சந்திரனென்றுசொல்லப்பட்டு—பேர்மறைந்து-(சூரியனென்கிறதன்னியற்)பெயரைமறைத்து—எழுந்த-உதயமாகிக்கொண்டிருந்த—இரவியும்-சூரியனும்—வருதலின்றி- வாராதிருக்க—இரவிகாந்தம்- இச்சூரியகாந்தமானது—அழல்வது- தீயைப்பொழிவது—என்னவாறு - என்னகாரணத்தினாலென்று—உரைசெய்வாள்-சொல்லுவாளானாள்—எ-று.(கருத்து)தமயந்தியானவள்காமமிகுதியால்சந்திரனைச்சூரியனென்றும் - சந்திரகாந்தத்தைச்சூரியகாந்தமென்றும் - நீர்பொழிதலைத்தீபொழிதலென்றுஞ்சொன்னாளென்பதாம். ()

உருவிலானெதிர்ந்துவெய்யகன்னல்விற்குனித்துடன்
அருணவெண்ணிறத்தசோகவனலம்பிறைத்தலும்
புரிநரம்பிரங்குசொல்லிபுருவவில்குனித்துநேர்
வருணவாளிவிடுதல்போன்மழைக்கணம்பிறைக்குமே.

(இ-ள்) உருவிலான் - மன்மதனானவன்—எதிர்ந்து-முன்னெதிர்த்து—வெய்ய -கொடிய—கன்னல்வில் - கருப்புவில்லை—குனித்து-வளைத்து—உடன்-உடனே—அருணவெண்ணிறத்து - சிவப்பாகியவெள்ளியநிறத்தையுடைய, அசோகம்-அசோகமலர்களாலாகிய, அனலம்பு - அக்கினியாஸ்திரத்தை—இறைத்தலும் - செலுத்தியவளவில்—புரி - கட்டையுடைய—நரம்பு-(வீணைநரம்பு)தங்கியானது—இரங்கு - இரங்கப்பெறுகின்ற—சொல்லி-சொல்லையுடையவள்—புருவவில் (தன்) புருவமாகியவில்லை—குனித்து-வளைத்து—நேர் - (அவ்வாக்கினேயாஸ்திரத்துக்கு) எதிராக—வருணவாளி-வருணாஸ்திரத்தை—விடுதல்போல்-செலுத்துதல்போல்—மழை-குளிர்ச்சிபொருந்திய—கண் - கண்களால்—அம்பு-நீரை—இறைக்கும்-பொழிவாளானாள்—எ-று. (கருத்து) மன்மதனக்கினியாஸ்திரத்தைத்தொடுத்தவளவில்தமயந்திபுருவமாகியவில்லைவளைத்துக்கண்ணீராகியவருணாஸ்திரத்தைத்தொடுத்தாளென்பதாம். ()

தூயதிங்கள்வெண்குடைக்கருப்புவில்லிதொடுமலர்ச்
சேயதேறல்வருணவாளிமுனிவினிற்செலுத்தலும்
வேயைவென்றதோளினள்வெதும்பியுள்ளம்விம்முறு
வாயுவாளிபோலநெட்டுயிர்ப்பெறிந்துவாடுமே.

(இ-ள்) தூய - பரிசுத்தமாகிய—திங்கள் - சந்திரனாகிய—வெண்குடை-வெள்ளைக்குடையையுடைய—கருப்புவில்லி-கருப்புவில்லையுமுடைய(மன்மதனால்)—தொடு-தொடுக்கப்பட்ட—மலர்-மலர்களது—சேயதேறல்-செந்தேனுடைய—வருணவாளி-வருணாஸ்திரத்தை,முனிவினில்-கோபத்தால்—செலுத்தலும்-செலுத்தியவளவில்—வேயை - மூங்கிலை—வென்ற-ஜயித்த—தோளினள் - தோள்களையுடையவள்—வெதும்பி-வெம்பி—உளம்-உள்ளத்தில்—விம்முறு - வருந்தி—வாயுவாளிபோல்-வாயுவாஸ்திரத்தைச்(செலுத்தல்)போல், நெட்டுயிர்ப்பு - பெருமூச்சை



—எறிந்து-விட்டு—வாடும் - சோர்வாளானாள்—எ-று (கருத்து)மன்மதனானவன்மலர்த்தேனாகியவருணாஸ்திரந்தொடுத்தபோது தமயந்தியானவள்பெருமூச்சாகியவாயுவாஸ்திரந்தொடுத்தாள்-எ-ம். (௰௯)

கூடுமன்னையீருளங்கொதித்துவெம்புகாமநோய்
தேறுகின்றிலீரிதென்கொல்தேவியைப்பிரிந்ததா
லாறணிந்தும்விரகவெம்மையழல்வெடித்ததன்றுகொ
ணீறணிந்தகடவுளுக்குநெற்றியிற்கணுளதே.

(இ-ள்) கூடு-(கண்ணிடத்தேதுயரைவைத்)தொல்லுகின்ற—மன்னையீர்-மாதரே—உளம்-(என்)உள்ளமானது—கொதித்து-கொதிப்புற்று—வெம்பு-வெம்புதற்குக்காரணமாகிய, காமநோய்-காமநோயின்(கொடுமையை)—தேறுகின்றிலீர் - அறிகின்றிலீர்—இது - இது—என்கொல்-என்னபேதைமை—நீறு-விபூதியை—அணிந்த - பூசிய—கடவுளுக்கு(பரமசிவனுக்கு)—நெற்றியில் - நெற்றியினிடத்து—கண்ணுளது(நெருப்புக்)கண்ணுளது—தேவியை-(தன்)மனைவியை—பிரிந்ததால்-நீங்கியதால்—ஆறு-கங்கையை—அணிந்தும்-முடியின்மேல் தரித்தும்—வெடித்தது - (அந்நெற்றியைப்)பிளந்துதோன்றியதானது—விரகம்-காமமாகிய—வெம்மை-வெப்பத்தையுடைய—அழலன்றுகொல்-நெருப்பன்றோ—எ-று. (கருத்து) பெண்களேகாமக்கனற்கொடுமையைநீங்களறியீர்;சிவனுமையைப்பிரிந்தகாலத்துக் கங்கையைத்தரித்தும் அக்காமாக்கினிநெற்றிக்கண்ணாகிவெடித்ததல்லவோவென்பதாம். (உ௰)

பண்ணமைந்ததீஞ்சொலீர்பழிப்பதென்னைமாநிலத்
துண்ணயந்ததலைவர்வீயினுயிரையன்னமாதரா
ரெண்ணுகின்றகாமமென்னுமெரியுறற்குவெந்தழ
றண்ணிதென்றுமூழ்கியந்தவெம்மையைத்தணிப்பரால்.

(இ-ள்) பண்-பாட்டிசைபோல்—அமைந்த-நிறைந்த—தீ-மதுரம்பொருந்திய—சொலீர்-சொற்களையுடையவரே, பழிப்பது-பழிப்பதற்குக்காரணம்—என்னை - யாது—மாநிலத்து - பெரியபூமியின்கண்—உள்-உள்ளத்தில்—நயந்த-விரும்பப்பட்ட—தலைவர் -(தங்)கணவரானவர்—வீயின்-இறந்துபோனால்—உயிரையன்ன- (அக்கணவ)ருயிர்போலும்—மாதரார்-மங்கையரானவர்—எண்ணுகின்ற-சிந்திக்கப்படுகின்ற—காமமென்னும்-காமமாகிய—எரியுறற்கு - நெருப்புக்கு—வெந்தழல்-வெப்பம்பொருந்தியநெருப்பானது—தண்ணிதென்று - குளிர்ச்சியதாயிருக்கின்றதென்றுநினைத்து—மூழ்கி - (இந்நெருப்பினுள்ளே) மூழ்கி—அந்தவெம்மையை-அக்காமநெருப்பின்வெப்பத்தை—தணிப்பர் - நீக்குவார்கள்—எ-று. (கருத்து) மாதர்களே உலகிற் பெண்கள்தங்கள் கணவர்களிறந்தபோது காமாக்கினிக்குப்பயந்தல்லவாதீப்பாய்கிறார்கள் ளென்பதாம். (உ௧)

என்றுகூறிநனைமுகைப்பிதுங்கொலென்னவினையாளிக்
குன்றுபோலெழுந்துவீங்குகொங்கைவெம்புலைத்தடம்

பொன்றயங்கு * பசலைபோர்ப்பமம்மர்நோய்போக்கலர்
மன்றலோதி துயருழக்குமதிமயக்குகாலையில்

(இ-ள்) என்றுகூறி-என்றுசொல்லி—நறுமுறி- நாண்மலிய—நாப்பு-இடையாளது—இறுமென்ன-ஒடியுமென்ன—இனம் - இனமாகிய—மணி-மணிகளின்மயமாகிய—குன்றுபோல- மலைபோல்—எழுந்து-உயர்ந்து—வீக்கு-பருத்திருக்கின்ற—கொம்மை - இளமைபொருந்திய—வெம்-விருப்பத்தைத்தருகின்ற—முலைத்தடம் - முலைகளினிடங்கள்—பொன்-பொன்போல்—தயக்கு-விளக்குகின்ற—பசலை - பசப்புநிறத்தினால்—போர்ப்ப-(தம்மை)மூடிக்கொள்ள—மம்மர்நோய்- காமநோயை—போக்கலா-பொறாமல்—மன்றல் - வாசனைபொருந்திய—ஓதி-கூந்தலையுடையவள்—துயர்-துன்பத்தில்—உழக்கு - வருந்தி—மதிமயக்கு-அறிவுகலங்கப்பெறுகின்ற—காலையில்-காலத்திலே—எ-று * இலக்கணத்திரட்டு-புணராக்காலைப்பொன்பசலையாயும் (கருத்து) தமயந்தியானவள்காமவிகாரத்தைச்சகியாமல் அறிவுகலங்குங்காலத்தில்- என்பதாம். (உஉ)

கையநுண்மருங்குல்காம * வெம்மைமாற்றுநாண்மலர்
கையிலேந்துவாண்முகக்கருந்தடங்கண்மெல்லடித்
தையபங்கயத்தொடிற்கடுக்கொலென்னவெண்ணியோ
வெய்யவன்கரஞ்சுருக்கிவேலைபுக்கொளித்ததே.

(இ-ள்) கையும்-தேய்கின்ற—நுண்-நுண்ணிய—மருங்குல்-இடையையுடையவளது—காமம்-காமத்தினது—வெம்மை - வெப்பத்தை—மாற்று-கொண்டிருக்கின்ற—கை-கைகளும்—இலக்கு - விளங்குகின்ற—வாள்-ஒளிபொருந்திய—முகம் - முகமும், கரு-கரிய, தடம்-விசாலம்பொருந்திய—கண்-கண்களும்—மெல் - மெல்லிய—அடி - அடிகளுமாகிய—நாண்மலர்- அன்றுபூத்த—தைய - பரிசுத்தம்பொருந்திய—பங்கயம் - தாமரைமலர்களை—தொடின் - தொட்டால்—கடுமென்னு-கடுமென்று—எண்ணியோ-நினைத்தோ—வெய்யவன்-சூரியனானவன்—கரம்-(தன்) கிரணமாகியகைகளை—சுருக்கி-அடக்கிக்கொண்டு—வேலை-மேற்கடலுள்ளே—புக்கு - புகுந்து—ஒளித்தது - மறைந்தது-எ-று * தொல்காப்பியம்-எச்சவியல்-ப௭-கு - அவற்றுள்வேற்றுமைத்தொகையேவேற்றுமையியல-இவ்விதியாலெவ்வேமையியற்றுதிதில் ஐயுருபுதொக்கது(கருத்து) சூரியனானவன் தமயந்தியினுடைய அவயவத்தாமரைகளைத்தொட்டால்கடுமென்றுநினைத்தோ அஸ்தமானமாயினனென்றுகவம் இஅபுராணிகர்கூற்று.

கைக்கிளைப்படலம்,

முற்றிற்று.

---

# மாலைப் படலம்.

இப்படலத்தால்முன்சொல்லப்பட்ட தமயந்தியின் காமநோயிற்குக்காரணமாகிய மாலையின்வரவுசொல்லப்படுகின்றது:

கலிநிலைத்துறை.

ஒற்றைநேமியான்படமெனவுறப்பகலிறைவன்
கற்றைவார்கதிர்க்கயிற்றினில்விடுதலுங்கதித்து
முற்றுமூலைகெட்டுயிர்ப்பெறிதலான்மொத்துண்
டற்றுவீழ்ந்தபோற்குடதிசைக்கடலுளாழ்ந்ததுவே

(இ-ள்) ஒற்றைநேமியான் -சூரியனுடையது—படமென - (தனக்குக்) காற்றாடியாக—உறு-மடைப்பெற்ற—பகல் - பகலாகிய—இறைவன்- சூரியனானவன்—கற்றை - திரளாகிய—வார்-நெடிய—கதிர் - கிரணமாகிய—கயிற்றினில்-கயிற்றைக்கொண்டு, விடுதலும்-ஆகாயத்தின்கண்விட்டவளவில்—கதித்து-விரைந்து—முற்று-முற்றின—முலை - முலைகளையுடைய தமயந்தியானவள்—கெட்டுயிர்ப்பு:- பெருமூச்சை—எறிதலான் - எறிதலினால்—மொத்துண்டு-தாக்குண்டு—அற்று-(அக்கயிறு) அற்று—வீழ்ந்தபோல் - வீழ்ந்ததுபோல்—குடதிசை - மேற்குத்திசையிலுள்ள—கடலுள் - சமுத்திரத்தினிலே—ஆழ்ந்தது - (அது)முழுகிற்று—எ-று. வீழ்ந்தன்றதில் அவ்விகுதிகுறைந்தது (கருத்து)பகலென்னுஞ்சூரியனைக் காற்றாடியாகக் கிரணமாகக் கயிற்றாற்கட்டிவிட்டவளவில்தமயந்தியின்பெருமூச்சால் அக்காற்றாடியற்று மேற்கடலில் வீழ்ந்து முழுகிற்று-எ-ம். (௩)

புதைத்தகாரிருட்படமொழித்திதுணைப்போது
முதித்தகீழ்த்திசைமகட்புணர்ந்தாயெனவூடிக்
கொதித்துமேற்றிசையணங்கலத்தகப்பதங்கொடுமே
லுதைத்ததாமெனச்சிவந்ததுவெய்யவனுடலம்.

(இ-ள்) புதைத்த -மறைத்த—காரிருள்- கரியவிருளாகிய—படம்-போர்வையை—ஒழித்து-களைந்து—இத்துணைப்போதும்-இவ்வளவுகாலமும், உதித்த (நீ) உதயஞ்செய்யப்பெற்ற—கீழ்த்திசை - கிழக்குத்திக்காகிய—மகள்-மாதை—புணர்ந்தாயென - கூடிக்கொண்டிருந்தாயென்று—மேற்றிசை-மேற்குத்திக்காகிய—அணங்கு - மாதானவள்—ஊடி - பிணங்கி—கொதித்து-வெப்புற்று—அலத்தகம்-செம்பஞ்சு குட்டப்பெற்ற—பதங்கொடு- அடிகளைக்கொண்டு—மேல் - வடிவத்தின்மேல்—உதைத்ததாமென - உதைக்கப் பெற்றதுபோல—வெய்யவன்-சூரியனது—உடலம்-வடிவம்—சிவந்தது-சிவப்படைந்தது-எ-று.

திருக்கைக்கிரகம்... [illegible] ... (கருத்து) ... [illegible] ... சூரியனைப்போலி லிருந்தது என்பதாம். (௩)

சகரர்தொட்டவெண்டிரை யெறிகடற்கடற்புறுதாம்
புகாரில்வந்துதித் [illegible] போத்திய [illegible]
[illegible]
[illegible] பெருந்தயூபகைவரோல்

(இ-ள்) சகரர் - சகரரென்னப்பட்ட அரசர்களாலே—தொட்ட தோண்டப்பட்டிருக்கின்ற—வெள்—வெள்ளிய—திரை - அலைகளை—எறி - வீசுகின்ற—கடல் - விசாலம்பொருந்திய—கடல் - கடலின்கண்—புகு ... புகாரில் ... [illegible] ... சூரியன் ... [illegible] (கருத்து) ... [illegible] ... என்பதாம். (௫)

மைபுண்கண்மாமையமதிவரின் வருத்துவென்றிக்கு
[illegible] பல்லவப்பலர்த்தகைவளர்
வெய்யவன்செறுங்கரங்கள் விழுதிவா வெந்தடிது
மையிருந்துறப்பிடித்தெலக்குவித்தகையவம்

(இ-ள்) மைபுண்கண்மாமைய - அஞ்சனத்தைத்தக்கொண்ட கண்களை யுடையவளாகிய தமயந்தியை—மதி - சந்திரனவன்—வரின் - வந்தால்—வருத்துமென்று ... [illegible] ... வெய்யவன் - சூரியனது—செறு ... கரங்களை - (கிரணங்களாகிய) கைகளை—விழுதி ... [illegible] ... தாமரை ... (கருத்து) தமயந்தியைச் சந்திரன் வரில் வருத்துவானென்று ... சூரியனைப்போகாதே ... கைபற்றிப்பிடித்தல்போலும் கமலங்கள் குவி ந்தன என்பதாம். (௬)

பொருவிலாழியோன் உருட்டிப்புவனமும் விளக்கு
யிரவிமன்னவனிறந்ததும் ந்தோன்றிப்புன்மாலை



பாலைவனமெலாமுழுவதும் பாப்பவனிதப்ப
விரவுவெவ்வினைக்குருவிலவேந்தபோன்றனதே

(இ-ள்) பொருவில் - ஒப்பில்லாத—ஆழியோன்று - ஒருசக்கரத் தை—உருட்டிச்செலுத்தி—புவனமும் - எல்லாவுலகங்களையும்— விளக்கும்-ஒளிர்விக்கின்ற—இரவிமன்னவன் - சூரியனென்னுமரசன்—இ றந்ததும் - இறக்கவில்—தோன்றிய - புன்மாலை - புல் லியமாலைக்காலமானது—பாலை - கடலையுடைய—மாலைமுழுவதும் பெரியவுலகமுழுவதையும்—பரப்பவன் - காப்பாற்றுதின்றவரசன்—இற ப்ப - இறத்தலைச்செய்ய—விரவு - (அக்காலத்திலே) வியாபிக்கின்ற —வெவ்வினைத்தொழில் - கொடியசெயல்களையுடைய—குறுநிலவேந்தபோ ன்றனது - சிறியநிலத்தையாளுமரசன் போலிருந்தது—எ-று. (கருத் து) சூரியன் சென்றவளவிலே மாலைக்காலம்வந்து சம்பவித்தது தனி ச்செங்கோலரசனிறந்தபின்பு குறுநிலவேந்தன் பெருநிலமாளவந் ததுபோலும் என்பதாம். (௱)

காலெனும்பேரியானிகன் மேலைக்குன்றுமாண்கல்லின்
[illegible] பரைவெக்கொண்டன்று
மேலுமாறுமாந்தெரியாளிர்செக்கர்வானிருண்ட
நீலமர்குழூஉஉயிர்கட்டெழுந்தெசங்கெருப்பேய

(இ-ள்) காலென்னும் பேரியானிகன் - காலமாகிய பெருமையுடைய [illegible] ... [illegible] (கருத்து) செக்கவானத்தோன்றி [illegible] ... [illegible]

செய்யவெங்கதிரிறந்ததுமவனுறைமுக்கிறந்த
மொய்கொண்பெரியவனிதைக்குமூட்டுசெந்தழலின்
வெய்யநீர்தாப்பார்தொளிர்செக்கர்வான்மெலிந்த
[illegible] கண் கொலையமையம்

(இ-ள்) செய்ய - செக்கிறம்பொருந்திய—வெங்கதிர் - சூரியனை ன்—இறந்ததும் - இறந்தவுடனே—[illegible] ... [illegible]

இடையாகிய—நுண்ணிடை—[illegible] நுண்ணியவிடையையுடைய—அணங்கி னுக்கு - தலைமகளுக்கு—காண்கொல்லாமையும் - [illegible] கும்—என்றவாறு (கருத்து) சூரியனிறந்தவுடனவன் மனைவிசாயாதேவிக்கு நேர்ந்திருப்பதுபோல் [illegible] செல்லாமையான [illegible] தமயந்திக்கெவ் வாறிருக்கும் என்பதாம். (௭)

> தனந்தலென்னிமெய்ப்தளர்வுறுசேகியம்பறவை
> புணர்த்தவந்நிலைப்புல்லுவிட்டேழியகெட்டுயிர்ப்பாற்
> றுணர்த்தமெலவல்லன் சேசினக்குண்மூன்றேறன்றிற்
> பணித்தமெய்ம்மூலைப்பாசிழைநுல்குவெனபடுமே.

(இ-ள்) தனந்தல் - பிரிவை—எண்ணி - நினைத்து—மெய்-உடம் பு—தளர்வுற - தளர்ச்சியடைகின்ற—சேகியப் பறவை - சக்கரவாகப்ப றவைகள்—கெட்டுயிர்ப்பால் - பெருமூச்சோடு—புணர்ந்த - கலந்த— அம் - அழகிய-நிலை - நிலைகளின்—புல்லு - தழுவுதலை—விட்டு - வி லகி [illegible] [illegible] துணர்த்த - [illegible] [illegible] [illegible] [illegible] முலைகளையும்—பசிழை - பசிய பசும்பொன்னாபரணத்தை உடையவளுமான—அல்குல்- அல்குலையுமுடைய தமயந்தியானவள் — [illegible] — [illegible] (கருத்து) சக்கரவாகங்கள் புணர்ச்சிவிட்டு நீங்கவும் [illegible] [illegible] மாலைக்காலமுதிக்குமாறு தமயந்தி [illegible] பட்டாள் [illegible]. (அ)

> ஆங்கண்வானகமுழுவது மணியொளி பரப்பிக்
> கங்குல்வாய்படர்தாரகையெழுந்தன கடலுட்
> பொங்குவெங்கதிர்மணி விழுந்தெனத் திசைபுரப்போர்
> செங்கையிற்றெடுத்தவங்கடவெனவிளையுடம்.

(இ-ள்) கங்குல்வாய் - இரவின்கண்—அங்கண் - அழகியவிடத்தையு டைய—வானகமுழுவதும் - ஆகாயத்தினிடமெங்கும்—ஆவிர் - விளங் காநின்ற—ஒளி - ஒளியை—பரப்பி - விரித்துக்கொண்டு—எழுந்தன - தோன்றினவையாகிய—படர் - நெருங்கிய—தாரகை - உடுக்களானவை —கடலுள் - சமுத்திரத்துள்—பொங்கு - விளங்காநின்ற—வெங்க திர் - சூரியனாகிய—மணி - மணியானது—விழுந்தென - விழுந்ததென்று —திசைபுரப்போர் - திக்குப்பாலகர்—எங்கும் - எவ்விடங்களிலும் —தேடுதற்கு - தேடுதற்பொருட்டு—எடுத்த - ஏந்திய—அங்கடவெனவு - அ ழகிய [illegible] போல—இலையும் - பொருந்தும்—என - ம.(கருத்து) நட் சத்திரங்களின் தோற்றங்களானவை சூரியனாகிய மணிகடலில் விழுந்த தென்று திக்குப்பாலகர் [illegible] எடுத்த தீபங்களைப்போன்றி ருந்தன என்பதாம். (௯)

> சுருதிநூல்விட்டுமூகாமமென்கொடுங்கனல்கனற்ற
> வருத்தியுற்றவராருயிர்க்குளிரிவையிவ்வா



> [illegible] ப்பகெறிக்குடுப்புகர்முகத்த
> விருட்கடாக்கிளிநிருநிலத்தினுந்ததையன்றே.

(இ-ள்) உடுப்புகர் - தாரகைகளாகிய புள்ளிகள்பொருந்திய—முக த்த - முகத்தினையுடைய—இருட்கடாக்களிறு - இருளாகிய யானை— உருத்து - கோபித்து—வெங்கதிர்ப்பாகு - சூரியனாகிய பாகனை—எறிந் தெவிக—கருதிநூலுடு - வேதநூலுடன், எழு - [illegible]—காமமென்கிற, கொடுங்கனல் - கொடியநீயானது—கனற்ற - சுடாநிற்க, அருத் தி - ஆசையை, உற்றவர் - பொருந்தினவருடைய—ஆர் - நிறைந்த—உயி ர்க்குளிகினை - உயிராகியதழையை, ஆயில்லாள் - [illegible] பொருட்டு இருநிலத்து - பெரியபூமியினிடத்து, இழுத்து - [illegible]—என - ம.(கரு த்து) இருளாகியமதயானையானது சூரியனாகிய பாகனைக்கொல்லுதலாலா யினருளு உயிராகியதழைகளைத் [illegible] பொருட்டுப் பூமியில்வந்தது என்பதாம். (௰)

> தோட்டுமென்மலர்ப்பூங்க [illegible] மெல்லணிகலன்
> பூட்டுபைங்கைநற்குளமுதீ [illegible] முகத்
> திட்டுதாரகையெழுதின் றனிநிறத்திடவணிவான்
> கூட்டுமைமென்சச்செறிந்ததுகூரிருட்பிழம்பே.

(இ-ள்) தோட்டு - இதழ்களையுடைய—மெல் - மெல்லிய—மலர்-பூக்க ளாகிய—பூங்களை - அழகியஅம்புகளை, துப்பு - செலுத்த—மெலு - மெ லிதாகிய—அணிகலன் - வடிவுகளையுடையவளை, பூட்டு - பூட்டிய—பைங் கை - பசியகருப்புவில்லை—குழைத்து - வளைத்து—எம் - எமக்கு [illegible] [illegible] மனமதனது—புகழ் - கீர்த்தியை—திட்டு - எழுதப்பட் ட—தாரகை - உடுக்களாகிய—எழுத்து - எழுத்துக்களினது—ஒளிநிற [illegible] - ஒளிவிளக்குத்தற்கு—அணிவான் - அழகியவாசபத்தால்—கூ ட்டு-கூட்டிய—மையினை - மையைப்போல—கூர் - மிகுந்த—இருள் - இருளி னது—பிழம்பு - திரட்சியானது—செறிந்தது - நெருங்கிற்று—என - ம. (தொல்காப்பியமரபியல் - அ,டு - ஆ - தோட்டுமடலே பெயர்மென் று கேட்டபிதழ்முமாலெயன்று—மீக்கெழுவென சேர்த்தனர் பிறவும் புல்லொடுகருபொனச்சொல்லினர்புலவர் - இவ்விதியால் தோடுஎய ன்றது புறக்காழுள்ளதும் (புல்லாம்) (கருத்து) இருட்கூட்டமானது மன்மதனது கீர்த்தியை எழுதப்பட்ட பட்டத்தையெழுத்தொளி சிறப்ப டைய ஆகாயத்திறுநீட்டியமைப்போல விருந்ததுஎன்பதாம். (௰௧)

> பட்டகாரிருட்கங்குல்போதரப்படர்நிசைக
> ளெட்டினுள்ளவெப்பொருள்களாற்றிநிலெனன்று
> விட்டிலங்கொளிவெய்யவன்றனையுமிழலிலாற்
> சுட்டியெங்கணும்பகாட்டல்போற்சுடர்வனசுடர்கள்

(இ-ள்) பட்ட - உண்டாகிய—கார் - கரிய—இருள் - இருளையுடைய— கங்குல் - இரவானது—போதர - வர, படர் - படர்ந்த—நிசைகளெட்டி ன் எட்டுத்திக்குகளிலும், உள்ள - இருக்கின்றனவாகிய—பொருள்பொ

ருள்களை—கவர்ந்து - அபகரித்துக் கொண்டு—ஏகிலனென்று - தான் போகவில்லையென்று—ஒளி - காந்தியை—விட்டு - வீசி—இலங்கு - விளங்குகின்ற—வெய்யவன் - சூரியனானவன்—தனது - தன்னுடைய, மெல்விரலால் - மெல்லியகிரணங்களினாலே, சுட்டி - குறித்து—எங்கணும் - எவ்விடங்களிலும், காட்டல்போல் - காட்டுதல்போல்—சுடர்கள் - தீபங்கள் சுடர்வன - விளங்குவன—எ-று. (கருத்து) சூரியன் எவ்விடத்திலுமுள்ள பொருள்களைக் கவர்ந்தேகிலனென்று தன் கிரணங்களாற் சுட்டிக் காட்டல்போல் பிரகாசிக்கின்றன தீபங்கள் என்பதாம். (௰௨)

## மாலைப் படலம்

முற்றிற்று.

# நிலாத்தோற்றுப் படலம்.

இப்படலத்தால் அம்மாலைக்குப்பின்வரும் நிலவினது தோற்றஞ் சொல்லப்படுகின்றது.

கலித்துறை.

வெவ்வராவினை விண்டொடர் மந்தரம் பிணித்துக்
கவ்வைமிக்கெழக் கடவுளர் கடைந்திடுங் காலைப்
பவ்வவெண்டிரை யுயிர்த்த செம்பதுமைவாண் முகம்போ
றெய்வவொண்கதிர் பரப்பிமீ தெழுந்தது திங்கள்.

(இ-ள்) கடவுளர் - தேவர்கள்—வெவ் - வெவ்விய—அராவினை - வாசுகியென்னும்பாம்பை; விண் - ஆகாயமுகட்டை—தொடர் - அளாவிய—மந்தரம் - மந்தரமலையின்கண், பிணித்து - சுற்றிக்கட்டி—கவ்வை - ஒலியானது—மிக்கெழ - அதிகரிக்க—கடைந்திடுங்காலை - மதிக்குங்காலத்தில்—வெண்டிரை - வெள்ளிய அலைகளையுடைய, பவ்வம் - பாற்கடலானது—உயிர்த்த - ஈன்ற—செம்பதுமை - செந்தாமரையில் வீற்றிருக்கின்ற இலக்குமியினது—வாள் - காந்திபொருந்திய, முகம்போல் - முகத்தைப்போல்—தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள—ஒண்கதிர் - ஒளிபொருந்திய கிரணங்களை—பரப்பி - விரித்து—திங்கள் - நிலவானது—மீது - ஆகாயத்தின்கண்—எழுந்தது - உதித்தது—எ-று. (கருத்து) திருப்பாற்கடலைக் கடையும்போது அதிற்பிறந்த திருமகள் திருமுகத்தைப்போலும் சந்திரனுதயமாயிற்று என்பதாம். (௧)



செறிந்தவாழ்கடற் செல்வனு மவனுழைச் சிறந்தாங்
குறைந்தவாருயிர்த் துணைவியர் பலருமுள் ளுவந்து
நிறைந்ததெண்டிரை நீர்குடைந் தாடலி னிகலி
யெறிந்தமென்மலர்ப் பந்தென வெழுந்தது திங்கள்.

(இ-ள்) செறிந்த - மிகுந்த—ஆழ் - ஆழ்ந்த—கடற்செல்வனும் - சமுத்திராசனும்—அவனுழை - அவனிடத்து—சிறந்து - சிறப்பையடைந்து—ஆங்கு - அச்சமுத்திரத்தின்கண், உறைந்த - தங்கிய—ஆர் - நிறைந்த—உயிர் - உயிர்போன்ற—துணைவியர்பலரும் - மனைவியரனைவரும்—உள்ளுவந்து - மனமகிழ்ந்து—நிறைந்த - நிறைவையடைந்த—தெண்டிரை - தெளிந்த அலைகளையுடைய—நீர் - நீரில்—குடைந்து - குளித்து, ஆடலின் - விளையாடற்கண்—இகலி - பகைத்து—எறிந்த - வீசிய—மென் - மெல்லிய—மலர்ப்பந்தென - பூச்செண்டுபோல—திங்கள் - நிலவானது—எழுந்தது - தோன்றிற்று—எ-று. இச்செய்யுள் [illegible]. (கருத்து) சமுத்திராசனு மவன்மனைவியருஞ் நீராடும்போது அவர்கள் பகைத்தெறிந்த பந்தைப்போலு மெழுந்தது சந்திரன் என்பதாம்.

கதிர்செய் சித்திலங் கறங்குதெண் டிரைக்கரத் தெறியு
முதிர்பனிக்கடன் முகட்டினின் முளைத்தொளிர் திங்கள்
விதியின்மாலையாந் துணைவியை வீக்கிருட் டலைவன்
வதுவையாற்றுவான் வைத்தபொற் குடமென வயங்கும்.

(இ-ள்) கதிர்செய் - கிரணத்தைச்செய்கின்ற—சித்திலம் - முத்துக்களை—கறங்கு - ஒலிக்கின்ற—தெண்டிரை - தெளிந்த அலைகளாகிய—கரத்து - கைகளால்—எறியும் - வீசுகின்ற—முதிர் - முதிர்ந்த, பனிக்கடல் - குளிர்ச்சியையுடைய கடலினது—முகட்டினில் - உச்சியில்—முளைத்து - தோன்றி—ஒளிர் - விளங்குகின்ற—திங்கள் - நிலவானது—விதியினில், மாலையாம் - மாலைக்காலமாகிய—துணைவியை - மனைவியை—வீக்கு - மிகுத்த—இருள் - இருளாகிய—தலைவன் - நாயகன்—வதுவையாற்றுவான் - மணஞ்செய்யும்பொருட்டு—வைத்த - வைக்கப்பெற்ற, பொற்குடமென - பொன்னாகிய குடத்தைப்போல்—வயங்கும் - விளங்கும்—எ-று. (கருத்து) சந்திரனுதயமானது இருளாகிய நாயகன் மாலைக்காலமாகிய மனைவியைக் கலியாணஞ்செய்யும்பொருட்டு வைத்தகுடம்போலிருந்தது என்பதாம். (௨)

தெள்ளுதெண்டிரைக் கருங்கட லெழுந்தவெண் டிங்கள்
புள்ளவாங்கணை மதனனைப் பூப்புனைவோட்ட
வள்ளிதழ்க்கருங் குவளைபெய் திரவெனு மடந்தை
வெள்ளிவெண்குட மேந்தினா ரென்ன விளங்கும்.

(இ-ள்) தெள்ளு - கொழிக்கின்ற, தெண்டிரை - தெளிந்தவலைகளையுடைய—கருங்கடல் - கரியகடற்கண்—எழுந்த - தோன்றிய, வெண்டிங்கள் - வெள்ளியசந்திரனானது, புள் - வண்டுகளானவை—அவாம் - விரும்புகின்ற—கணை - மலர்க்கணைகளையுடைய—மதனனை - மன்மதனுக்கு

பூம்புனல் - அழகியகாவிரிநீரை—ஆட்ட - அபிடேகஞ்செய்ய—இருளெ
னுமடங்கலை - இருளாகிய சிங்கத்தையானவன்—வள்ளிதழ் - கூரியவிதழ்
களையுடைய—கருங்குவளை - நீலோற்பலப்பூவை—பெய்து - மேலே
சூட்ட—வெள்ளி - வெள்ளியினாலாகிய—வெண்குடம் - வெள்ளியகு
டத்தை—ஏந்தினளாமென - ஏந்தினளென்றுசொல்லும்படியாக—வி
ளங்கும் - (என்கருத்தோடு) விளங்கும்—எ-று. இலக்கணத்திரட்டுமொ
ழிவியற்படலம்-நட-ஞ-அவற்றுளின்மையெய்வகையாகும் - இவ்விதி
யால் - கருத்தின்கண்ணில்லையென்றறி - இலக்கணக்கொத்திலு மிதுவே (கரு
த்து) சந்திரனுதயமானதும் இருளென்னும் பெண்ணொருவ ளம்மதனுக்
கபிஷேகஞ்செய்ய நீலோற்பலஞ் சூட்டி வெள்ளிக்குடத்தை யேந்தின
ளென்பதும் விளங்கும்-என்பதாம். (௬)

புலவுநாறுவெருக்கமலறிபொருதிரைமுகட்டிடை
யிலவுகொப்புளிக்குமரியகிரில்வெண்மதிய
மலகிறாகைமீன்பயிலரிநுட்கடவி
நிலமொழுக்குதுமெழுந்தப்புதவெனவொளிரும்

(இ-ள்) புலவுநாறு புலானாற்றமுறுகின்ற—வெம் - வெவ்விய—சுறவு
சுறாமீன்களின்—நாறி - நறியம்—பொரு - கரையின்மோதுகின்ற—திரை
அலைகளையுடைய கடலினது—முகட்டிடை - உச்சியில்—இலவு - சந்திரிகை
யை—கொப்புளித்து - உமிழ்ந்து—உயரிய - எழுந்த—கிரில் - ஒப்பில்
லாத—வெண்மதியம் - வெள்ளிய சந்திரனது—அலகில் - கணக்கில்
லாத—தாரகை - உடுக்களாகிய—மீன் - மீன்களாகிற—பயில் - சஞ்
சரிக்கின்ற—அரிநுள் - விசாலமாகிய—கடவில் - சமுத்திரத்
தில்—உலகமொழுக்கவும் - உலகமுழுதும் போக்கவும்—எழுந்த - அதிலிரு
ந்தெழுந்த—புற்புதமென - குமிழியைப்போல—ஒளிரும் - விள
ங்கும்—எ-று. * தொல்காப்பியமரபியல்- அடு - கூ - நிலநீர்தீவளிவிசு
ம்போடைந்தும் - கலந்தமயக்க முலகமாதலி னிருதிணையம்பாலியல்பினை
றிகழாமைக் - நிரல்படச்சொல்லோவெழுதா அவ்விகாரம், இவ்விதியால்
உலகமெம்பூதமுடைத்து (கருத்து) சமுத்திரத் திடத்துதித்த சந்திர
னானது இருட்கடலெழுந்த நீர்க்குமிழியை யொக்குமென்பதாம் (௭)

திரைநெடுங்கடலில்வழிதுலோர்ந்தின்றவெண்டிங்க
ளரிகைசெழுங்கதிர்க்கரக்களாலம்பரமே
விரவுநின்றபுன்மாலையாத்தெரிவையுள்வெள்கி
யருணவெங்கதிர்ச்சுடரினைபொளிமறவித்தாள்.

(இ-ள்) திரை - அலைகளையுடைய—நெடுங்கடல் - நெடியகடலானது
—வழிநலோர்த்து - வழிதொடர்ந்து—ஈன்ற - பெற்ற—வெண்டிங்கள் - வெ
ள்ளியசந்திரனானவன்—அரிகை - வரிசையாகிய—செழுங்கதிர் - செழுமையு
ள்ள கிரணங்களாகிய—கரங்களால்—கைகளால்—அம்பரம் - ஆகாய
மென்னுந்தானுடையை—நீவ - தடவ—விரவுநின்ற - கலந்தின்ற—பு
ல்-புல்லவியு, மாலையாம்-மாலைக்காலமாகிய, தெரிவை-பெண்ணானவ



ள்—உடன்-உள்ளத்தில்—வெள்கி - நாணி—அருணம் - சிவப்பாகிய—வெ
ங்கதிர் - சூரியனுடைய—சுடரினை - தீபத்தை—ஒளியற - ஒளிநீங்க—அவித்
தாள் - அவித்தனள் - எ-று. (கருத்து) சமுத்திரமீன்றசந்திரனானவன் கிர
ணங்களாகிய கரங்களால் மாலைக்காலமாகிய பெண்ணின் வஸ்திரத்தைத்தடவ அப்பெ
ண்வெட்கிச் சூரியனாகிய விளக்கை அவித்தாள் எ-ம். (௮)

துறைவில்வெண்மதிதோன்றலுமென்குமுதங்கண்முகையிற்
சிறைகள்வண்டொன்றாலுமுமிழ்ந்தெழுந்த
விறைவன்வார்திரைக்கடன்முகட்டெழுந்தனனென்று
மறையவந்தனர்கள்சொலிற்றோன்றியதன்றே

(இ-ள்) துறைவில் - களங்கமில்லாத—வெண்மதி - வெள்ளியசந்திர
னானவன்—தோன்ற - உதயமாக—மெல் - மெல்லிய—குமுதம் - ஆம்
பல்களுடைய—நாள் - புதிய—முகையில் - அரும்புகளில்—சிறைகள் - இற
குகளையுடைய—வண்டு - வண்டுகள்—பாண் - இசைகளை—முரலல் -
ஒலிசெய்தல்—நா - உம்முடைய—உயிரினில் - உயிரைக்காட்டிலும்,
சிறந்த-சிறந்திருக்கின்ற—இறைவன் - நாயகனானவன்—வார் - நெடிய,
திரை - அலைகளையுடைய—கடல்-கடலினது—முகட்டு-உச்சியில்—எ
ழுந்தனனென்று-புறப்பட்டானென்று—அறையவந்த - சொல்லவந்த,
அந்தணர் - அந்தணருடைய—சொலில் - சொல்லைப்போல—தோன்றிய
து-தோன்றியது—எ-று. (கருத்து) சந்திரனுதயமாக அல்லிமலரில்வண்
டுகளொலிசெய்தல் உங்கணாயகன் புறப்பட்டானென்று சொல்லவந்த
அந்தணர்சொல்லைப்போலிருந்ததென்பதாம். (௯)

தெண்பனிக்கடற்றிரையினி துயிர்த்தவெண்டிங்க
டண்புனற்றடத்தாம்பன்மெல்லிதழ்த்துகினலக்
கொண்கரத்திறுமெனிழுத்துதாண்மீநாரக்
கண்புதைத்தெனக்குவிந்தனகடிகமழ்கமலம்

(இ-ள்) தெண் - தெள்ளிய—பனி - குளிர்ச்சிபொருந்திய—திரை -
அலைகளையுடையகடல்-கடலானது—இனிது-இனிதாக—உயிர்த்த - ஈ
ன்ற—வெண்டிங்கள் - வெள்ளியசந்திரன்—தண் - தண்ணிய—புனல்-
நீரையுடைய—தடத்து - தடாகத்திலுள்ளவாம்பல் - அல்லியினுடை
ய—மெல் - மெல்லிய—இதழ் - இதழ்களாகிய—துகில் - ஆடையை—
நலக் - நல்லிய—கரத்திறுல்-கிரணமாகிய கைகளால்—தவக்கு - தடவி
—நெகிழ்த்தலும் - அவிழ்த்தவளவிலே—கடி - வாசனை—கமழ் - மணக்
கின்ற—கமலம் - தாமரை—நாணம் - அச்செய்கையைக் கண்டு நாணி
யதனம்—மீநார - அதிகரிக்க—கண்புதைத்தென - கண்களைமூடிக்
கொண்டதுபோல—குவிந்தன - மூடிக்கொண்டன—எ-று. (கருத்து)கடலீன்
ற சந்திரனானவன் கிரணக்கரங்களால் அல்லிகளிதழாகிய வஸ்திரங்க
ளை யவிழ்த்தவளவில் தாமரைகள் வெட்கங்கொண்டு கண்களை மூடிக்கொண்ட
தை போலுமாக குவிந்தனவென்பதாம். (௰)

களிசெய்காமநோய்விளைத்திடு மிரவெனுங்கன்னி
யளிகொள்வெண்மதிகலங்கிளர்வாண்முகமதனாற்
தெளிசிலாக்கதிர்த்தேறல்கொப்புளித்தலுஞ்சிறந்த
வொளிகொள்வான்மகிழ்பூத்தெனவிளங்கினவுடுக்கள்

(இ-ள்) களிசெய்-களிப்பினைச்செய்கின்ற—காமநோய் - காமமாகிய நோயை—விளைத்திடும் - உண்டாக்கும்—இரவெனுங்கன்னி - இரவென்னுங்கன்னியானவள்—அளிகொள் - குளிர்ச்சியைக்கொண்ட—வெண்-வெள்ளிய—மதி-சந்திரனாகிய—கலங்கிளர் - நன்மைவிளங்காநின்ற—வாள் - காந்திபொருந்திய—முகமதனால்- முகத்தைக்கொண்டு—தெளி தெளிந்த—சிலா-ஒளிபொருந்திய—கதிர்-கிரணமாகிய—தேறல் - மதுவை—கொப்புளித்தலும்-உமிழ்தலும்—சிறந்த - சிறக்கப்பெற்ற—ஒளிகொள்-ஒளியைக்கொண்ட—வான்-ஆகாயமாகிய—மகிழ் - மகிழமரமானது—பூத்தென - மலர்ந்ததுபோல—உடுக்கள்-தாரகைகள்—விளங்கின-ஒளிசெய்தன—எ-று. (கருத்து) இரவாகியபெண்ணானவள் சந்திரனாகியமுகத்தைக்கொண்டு கிரணமாகியதேனைக்கொப்புளிக்கச் சிறப்புற்றவாகாய மகிழமரங்கள்பூத்ததுபோலும் நட்சத்திரங்களுதயமாயினவென்பதாம். (௯)

கள்ளிருட்குழம்பெறிந்தெழுநளிர்மதிச்செல்வன்
விள்ளுமாம்பல்வாய்க்கங்குலாந்தெரிவையைவேட்ப
வள்ளிவான்மகள்சிதறு வெண்பொரியெனவமைந்த
புள்ளிமீனினமகலிருவிசும்பினிற்பொடித்த

(இ-ள்) அமைந்த-நிறைந்த—புள்ளி - பொறிகளாகிய—மீனினம் - தாரகைகளுடைய கூட்டங்களானவை—கள்-மிக்க—இருள்-இருளாகிய—குழம்பு-குழம்பினைமன்னனை—எறிந்து-அழித்து—எழு-தோன்றிய, நளிர்- குளிர்ச்சிபொருந்திய—மதி - சந்திரனாகிய—செல்வன் - அரசினாக்குமரனானவன்—விள்ளும்- மலர்கின்ற—ஆம்பல்-செவ்வல்லிப்பூவாகிய—வாய்-வாயையுடைய—கங்குலாம்-இரவாகிய—தெரிவையை - மங்கையை—வேட்ப - மணஞ்செய்ய—வான்-ஆகாயமாகிய—மகள்- மாதானவள்—அள்ளி - கைகளாலள்ளி—சிதறு -இறைத்த—வெண்பொரியென-வெள்ளியபொரிகளைப்போல—அகல் - அகன்ற—இருவிசும்பில் - பெரியவாகாயத்தின்கண்—பொடித்த -தோன்றின வென்பதாம்-எ-று.(கருத்து) சந்திரன்இரவென்னும் பெண்ணைமணஞ்செய்ய வாகாயமென்னும்பெண்ணானவள் அள்ளித்தூவிய பொரிகளைப்போல நட்சத்திரங்களுதயமாயினவென்பதாம். (௰)

திங்கள்வேந்துவெண்டாரகைத் துணைவியர்செறிய
வங்கண்வானகத்தெழுதலுமாரமுதுகுக்கும்
பொங்குவெண்கதிர்வெள்ளியம்பிரம்புபார்போர்த்த
அங்கவல்லிருட்குறுநிலவேந்தினைத்துரந்த



(இ-ள்) திங்கள்-சந்திரனாகிய—வேந்து - அரசனானவன்—வெண்டாரகை - வெள்ளியவுடுக்களாகிய—துணைவியர் - மனைவியர்—செறிய- தன்னோடுநெருங்கிவர—அங்கண் - அழகியவிடத்தையுடைய—வானகத்து - ஆகாயத்தின்கண்—எழுதலும் - தோன்றியவளவில்—ஆர் - நிறைந்த—அமுது - அமிர்தத்தை—உகுக்கும் - சிந்துகின்ற—பொங்கு-மிகுந்த—வெண்-வெள்ளிய—கதிர் - கிரணங்களாகிய—வெள்ளியம்பிரம்பு - வெள்ளிப்பிரம்புகளானவை—பார் - பூமியை—போர்த்த -மூடிய—அங்கம் - உயர்வுள்ள—வல்-வலிய—இருள் - இருளாகிய—குறுநிலவேந்தினை - குறுநிலமன்னனை—துரந்த- துரத்தின—எ-று. அம்சாரியை (கருத்து) சந்திரனாகியவரசன் நட்சத்திர மனைவிகளோடு வந்துதித்தவளவில் அவனதுகிரணமாகிய பிரம்புகள் இருளாகியகுறுநிலவரசனைத்துரத்தினவென்பதாம். (௰௧)

தாழும்வண்டிமிர்தண்மலர்த்தடஞ்சினைத்தருவி
னீழலெங்கணுந்துயல்வருகின்றனநெடுநீ
ராழிவெண்டிரைமுகட்டெழுமவிர்மதிக்கதிர்வாள்
போழும்வல்லிருட்டுணிபலபதைப்பனபோலும்.

(இ-ள்) வண்டிமிர்-வண்டுகளொலிக்கின்ற—தண் - குளிர்ச்சிபொருந்திய—மலர் - மலர்களையுடைய—தாழும் - தாழ்ந்த—தடம் - விசாலமுள்ள—சினை - கிளைகள்பொருந்திய—தருவின் - மரத்தினுடைய, நீழல் - நீழல்களானவை—எங்கணும் - எவ்விடத்தும்—துயல்வருகின்றன - அசைகின்றன—நெடுநீர் - நெடியநீரையுடைய—ஆழி-கடலின்—வெண்டிரைமுகட்டு - வெள்ளியவலைகளினுடைய வுச்சியில்—எழும் - தோன்றும்—அவிர் - காந்திபொருந்திய—மதி - சந்திரனுடைய—கதிர்வாள் - கிரணங்களாகியவாளினாலே—போழும் - பிளக்கப்பட்ட—வல் - வலிய—இருள் - இருளினது—துணி - துண்டங்கள், பல - அநேகம்—பதைப்பனபோலும் - பதைப்பனவற்றையொக்கும்—எ-று. (கருத்து) தருக்களினிழல்களசைவனவானவைபோல் வெள்ளிய சந்திரகிரணங்களென்னும் வாட்களால்வெட்டுப்பட்ட இருட்டுண்டங்கள் பதைப்பனபோலாம்-எ-ம். (௰௨)

செருவின்மாண்டவாரம்மையர்ச்சேர்குவரன்றே
பொருவில்வெண்மதிபொழிகதிர்வாளினாற்போழ்ந்த
விருளுமின்னகிற்கொழும்புகையுருவெடுத்தெழில்சே
ரரமடந்தையர்கருங்குழற்கற்றையென்றடைந்த

(இ-ள்) செருவில் - போரின்கண்—மாண்டவர் - இறந்தவர்—அரம்மையர் - அரம்மையரை—சேர்குவர் - அடைகுவர்—அன்றே-ஆகையால்—பொருவில் - ஒப்பில்லாத—வெண்மதி - வெள்ளியசந்திரனால்—பொழி-பொழிகின்ற—கதிர் - கிரணமாகிய—வாளினால் - கத்தியினால்—போழ்ந்த - வெட்டப்பட்ட—இருளும் - அந்தகாரமும், இன்-இனிய—அகில் - அகிற்கட்டைகளது—கொழும்புகை - கொழுமிய ஆரத்தினது—உருவெடுத்து - வடிவெடுத்து—எழில்சேர் - அழகு

பொருந்திய—அரமடந்தையர் - தெய்வமங்கையருடைய—கரும் - கரி
ய—குழற்கற்றை - மயிர்முடியை—சென்று - போய—அடைந்த-சேர்
ந்தன—எ-று.(கருத்து) பேரின்பமாண்டவரம்பையரைச் சேர்க்குவர் ஆ
கையால் சந்திரகிரணங்களால் வெட்டப்பட்ட இருட்களும் அந்தப்புகை
யுடு வெடித்த ரம்பையின் கூந்தலை யடைந்தன-எ-ம். (௰௧)

கனிமொழி வண்டு மாமடப் பல்சேர்த் திசைபயில் காட்சி
யொளிரும் வெண்மதி [illegible] த்த லுற்றடைந்தன இருள்போ
யளியின் மெல்லுருவொடு தலைகொண்டு அணைவியப்பா
லெளிமையின் னுழைவிரவி வீழ்க்கு திசைப்பணி லையும்

(இ-ள்) கனிமொழி - மழிழ்ச்சியைக் கொண்ட—அண்டிடமும் - வண்
டுக்கூட்டங்கள்—ஆம்பல்சேர்த்து - அல்லிமலர்களையடுத்து—இசைபயி
ல் - இராகத்தைப்பாடுகின்ற—காட்சி - தோற்றமான து—ஒளிரும் - விள
ங்காநின்ற—வெண்மதி - வெள்ளிய, சந்திரனுடைய—ஆரத்தனும் -
[illegible] —உடைந்த - இளைத்த—கரிய இருளானது
—போய - (தன் உருவை) நீங்கி—அளியின் - வண்டின் - உருவுடைய—மெல்லுரு
வெடுத்து - மெல்லிய உருவமெடுத்து—அணை - அச்சந்திரனுடைய—
அரும் - அருமையான—இணை வியப்பால் - மிக வியப்படைந்து—எளி
மை - எளிமையாகிய—இன்னுழை - இனிய சொற்களினால்—இரவி - புல
ம்பி—வீழ்ந்து - அடிபணிந்து—திசைப்பணிலையும் - சொல்லை வ
ற்றைகொள்ளும்—எ-று.(கருத்து) அல்லிமலர்களின் வண்டுகள் சோர்ந்
திசைபாடுங்காட்சியான து சந்திரன் ஆரத்தினால் உடைந்துபட்ட இரு
ட்களானவை வண்டுருக்கொண்டு அச்சந்திரனை வியந்து திரா
ணித் சொல்லைப் போலிருந்தது-எ-ம். (௰௨)

முன்னைச்செழுமுளரியுறுகு கொப்புளிக்கு
மன்னவண்டயத் தாமப் லுறுறவெனவடுக்கேத
கன்னுலா மலர்முகிழ்த்தலக்கடிமலர்க்கமலம்
பின்னைவண்டு னுக்கடிந்தேன் வெரிகளித் தகனுல்

(இ-ள்) கன்னுலாம்-தேன்நிறைந்த நின்ற—மலர் - அல்லிப்பூவானது
—முகிழ்த்த - குவிந்த—அக்கடிமலர்க்கமலம் - அப்படிப்பட்ட வாசனை
யன்ன தாமரைமலரினது—பின்னை வண்டினுக்கு - பின்னையாகிய வண்
டிற்கு—உடை - கரக்கின்ற—தேன் - தேனை—வெரிது - மிகவும்—அளி
த்த தனுல் - கொடுத்ததனால்—அன்னம் - செற்றையுடைய—அம் - அ
ழகிய—வயத்து - குளத்திலுள்ள—முளை - முட்களையுடைய—அலை
நீள் பொருந்திய—செழு - செழிய—முளரியும் - தாமரைப்பூவும்—மு
றுகு - தேனை—கொப்புளிக்கும் - உமிழுகின்ற—ஆம்பலும் - அல்லிப்பூ
வும்—உறவெனை - உறவுடையவென்று (எல்), அறிந்தேம் - அறிந்து
கொண்டோம்—எ-று.(கருத்து) அல்லிமலர்களானவை தாமரைகளி னு
ள்ளவண்டுகளுக்குத்தேன் கொடுத்தமையால் இரண்டுமுறவென் றறிந்
தோமென்பதாம். (௰௩)



கற்குலைப்பிய காரிருட்கருங்கடற்றெளியத்
திங்களொண்சுடர்த்தேற்றுறைத்தேற்றவுஞ்சிறந்த
பொங்குவெண்ணிலாத் தெளித்தகன்றிரைப்பொலிந்த
பங்கமென்னகீட குழுழ்ப்படியினிற்படிந்த.

(இ-ள்) கற்குல் - இரவில்—எய்திய - அடைந்த—கார் - கரிய—இருள் -
இருளாகிய—கருங்கடல் - கரியகடல்களானது—தெளிய - கலக்கந்தீர
—திங்களொண் - சந்திரனென்னும்—சுடர் - காந்தியையுடைய—தேற்றா
ன்ல் - தேற்றும் வித்திறாலே—தேற்றவும் - உரைத்துத்தெளிவித்தவ
ளவில்—சிறந்து - சிறப்புப்பெற்று—பொங்கு - விளங்குகின்ற—வெண்
ணிலா - வெள்ளியசந்திரிகைகள்—தெளிந்த - தெளிவையடைந்த—கன்
னிரை - கல்லைநீர்போல—பொலிந்த - பொலிவையடைந்தன, நீள் - செ
டிய—தருநிழல் - மரங்களுடைய நிழல்களானவை—படியினில் - பூமியி
ன்மேல் பங்கமென்ன - சேறுபோல, படிந்த - படிந்தன—எ-று.(கருத்து)
இருட்கடலானது தெளியச் சந்திரனென்னும் தேற்றும் வித்திறாலே உ
ரைத்துத் தெளிவித்தவளவில் அவன் கிரணங்களே நீர்போலிருந்தன
விருக்களின் நிழல்களானவை சேறுதைப் போலிருந்தன-எ-ம். (௰௪)

அகல்விசும்பெனுமாவின் மென்மடிபெனத்தோன்றித்
திகழும்வெண்மதியுமிழ்தருசெழுங்கதிர்த்திப்பான்
முகைவிரிழ்க்குதேனைப்பிலிற்றியமுல்லையம்புறவி
னுகன்புனிற்றினாக்கன்றெனச்சகோரநின்றுண்ணும்.

(இ-ள்) அகல் - அகன்ற—விசும்பெனும் - ஆகாயமென்கிற—ஆவின்
[illegible]—மெல் - மெல்லிய—மடிபென - மடியைப்போல—தோன
றி-உண்டாகி—திகழும் - விளங்காநின்ற—வெண்மதி - வெள்ளியசந்தி
ரன்—உமிழ்தரு - சொரிகின்ற—செழும் - செழிய, கதிர் - நிலாவாகிய,
பாலை—முகை - அரும்புகள், செறிந்து
விரிந்து—தேன் - தேனை—பிலிற்றிய - துளித்த—முல்லை - முல்லைக்கொ
டியையுடைய—அம் - அழகிய—புறவின் - முல்லைநிலத்தின்கண், சகோ
ரம் - சகோரப்பறவையானது, உகன் - அன்றுகின்ற, புனிற்றினம் - மிருக
ங்களின் இளமையையுடைய, கன்றென - கன்றுபோல்—நின்று - நின்றுபெற்று
உண்ணும் - குடிக்கும்—எ-று. (கருத்து) ஆகாயமெனும் பசுவினது ம
டியாகத் தோன்றுஞ் சந்திரனது கிரணமாகிய பாலை முல்லைநிலத்தின
கன்றைப்போற் சகோரங்களுண்ணும்—எ-ம். (௰௫)

கன்கனைந்தசாளரத்துழைநிலாக்கொழுந்தை
யனமிவிதிகள்வரம் [illegible] சகோரங்களருந்த
மின்செயவெள்ளிவெண்கம்பியைவினாத்துநாலச்செய்
பொன்செய்கம்பியர்குறட்டிலுல்வாங்குதல்போலும்.

(இ-ள்) நன்கமைந்த- அழகுபொருந்திய—சாளரத்து- பல்கணியினு ள்—உறு- அடைகின்ற, நகை- ஒளிபொருந்திய—நிலாக்கொழுந்தை-சு ந்திரனுடைய கிரணங்களை—அன்பின் - ஆசையோடு—நீடு-நீண்ட —கூர்வாயில்- கூரியவாயினால், சகோரங்கள் - சகோரப்பறவைகள்; அருந்தல்- உண்ணுதல்—வினைசெய் - காந்தியைச்செய்கின்ற—வெள்ளி வெள்ளியினாலாகிய, வெண்கம்பியை- வெள்ளிக்கம்பியை (மாட்டி) துளி ளங்கு- விளங்குகின்ற—நூலச்சில்- கம்பியச்செல்லுங் கருவியில், பொ ன்செய்கம்மியர்- பொன்வேலைசெய்யுங் கம்மாளர்—குறட்டினால் - குற ட்டினாற்பற்றி, வாங்குதல்போலும்- இழுத்தலையொக்கும்—எ-று. (கருத் து) பல்கணிபுட்பொருந்துஞ் சந்திரகிரணங்களைச் சகோரங்களுண் ணுதல் ஏறுபோலவரின் பொற்கொல்லர் வெள்ளிக்கம்பியைக் கம்பியச் சிற்குறட்டால் இழுத்தல்போலும்—எ-ம். (௰௯)

அலங்குவெண்மதிநாகிலாக்கதிரினிலங்கு
பொலங்கொண்மாடமேற்புதுகிலாமணிபுனல்மொழிந
னலம்பெய்கேழியம்புட்குலம்பிரிவுளைகியப்
புலம்புமாறுகண்மெள்ளிக்குருகுதல்போலும்

(இ-ள்) அலங்கு- விளங்குகின்ற—வெண்மதி - வெள்ளியசந்திரனது நூ-பரிசுத்தமாகிய—நிலாக்கதிரில் - சந்திரிகையில்—நின்று- நிலைபெற் று—இலங்கு- ஒளிர்கின்ற—பொலங்கொள் - அழகினைக்கொண்ட, மா டமேல்- உப்பரிகைமேற்பதித்த, புது-புதிய—நிலாமணி- சந்திரகாந்த ங்கள்—புனல்- நீரை—பொழிதல்- சொரிதலானது—நலம்பெய்- சுகத் தைத்தருகின்ற; கேழியம்புள்- சக்கரவாகப்பறவைகளது—குலம்-கூட் டத்தினது—பிரிவு- ஆண்பெண்களின் பிரிவானது, உளம்- அவற்றின் மனத்தை—நலிய- வருத்த, புலம்புமாறு- அலைவருந்தத்தன்மையை கண்டு- (அச்சந்திரகாந்தங்கள்) கண்டு—உள்ளம்-(தம) உள்ளம்—நெ கிழ்ந்துருகுதல்போலும்- கரைந்துருகுதல்போலும்—எ-று. (கருத்து) சந்திர கிரணங்களால் சந்திரகாந்தம் நீரைப்பொழிதலானது சகோரங்கள்பிரி தலைக்கண்டு உருகுதல்போலும்-எ-ம். (௨௰)

இன்னகாரிருட்கருங்கெல்லைகாண்கிலளாய்க்
கன்னலஞ்செழுங்கழனிசூழ்விதர்ப்பநாடனிக்கு
மன்னர்மன்னவனருந்தவப்பேறறிஞல்வந்த
பொன்னவாருஞ்சனகனிமூலப்பூங்கொடிசபுலம்பும்

(இ-ள்) கன்னல்- கரும்புகளையுடைய—அம- அழகிய—செழும்- செ ழுமையுள்ள, கழனிசூழ்-வயல்கள்சூழ்ந்த—விதர்ப்பநாடு- விதர்ப்பதேச த்தை—அளிக்கும் காக்கின்ற, மன்னர்மன்னவன - அரசர்க்கரசனுடைய மனது—அருந் தவப்பேறறிஞல் - அரியதவப்பயனுதிஞல், வந்த தோன்றிய, பொன்னவாம்- பொன்விரும்புகின்ற—கணங்கனி- தேம லனிந்த, மூலை - தனத்தினையுடைய—பூங்கொடி - மலர்க்கொடி போல்பவளாகிய (தமயந்தி) இன்ன-இந்தன்மைத்தாகிய—காரிருள் கா ரிருள-கரியவிருளையுடைய, கங்குலுக்கு-இரவிற்கு, எல்லைகாண்கில



ளாய்- அளவு காணுதவளாகி—புலம்பும்- புலம்புவாள்—எ-று. வீரசோ ழியம- பொருளதிகாரமேற்கோள் - கூ - அகமெய்ப்பாட்டையறையுங்கா லை- விளர்ப்பேபசப்பே மெலிவேவிதிர்ப்பே- துளக்கந்துயாதல் துன்ம ல்சோர்தல்- வியர்த்தல்வெருவுதல் விம்முதல்விரும்புதல்-ஒப்பிலாமை யுருநுகன்மயங்குதல், முரிப்புயிர்ப்புமூர்ச்சனைமுறுவல், காரிகைகிடந் தல் கழிகண்ணோட்ட, மிருக்அழியிராமை யாரமிழ்கமிழ்தல் வருந்திக் காட்டுதல் வாய்வெளியுறுதல், சிந்தனைகூர்தல் சோர்துயிலின்மை, கண்ட துமறுத்தல் காட்சிவிரும்ப, லுண்டிவிரும்பாமை யுரைத்துமறுதல் கண்ணீர்வழித்தல் கனவுகளிகாண்டலென்ன, வெண்ணுற்றுரையுமென் மஞர்புலவர், இவ்விதியாற்புலம்புவாள் (கருத்து) தமயந்தியானவள் இ வ்விராக்காலத்தள காணுதவளாய்ப் புலம்புத லுறுவாளாயினள்-எ-ம.

நிலாத்தோற்றுப்படலம்
முற்றிற்று.

——(*)——

உ

# சந்திரோபாலம்பனப்படலம்.

இப்படலத்தால் மேலுநித்தசந்திரனை விரகநோய்கொண்ட தமயந்தியானவள் நிந்தித்தல்சொல்லப்படுகின்றது

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிதெண்டிரைநீர்க்கருங்கடல்வான் முகட்டிலெழுந்தவெண்டிங்காள்
மருவுதிரைநீர்கவற்றுசிகையடவையிடத்தோயைவிளர்ப்பக்
கருகுங்கொடியவெவ்விடந்தின்கண்ணேதணந்தாருயிர்பருக
வெரிவெங்கதிராலுடல்வெதுப்பயாண்டுகற்றுப்பறியேமால்.

(இ-ள்) விரி-விரிந்த, தெள்-தெள்ளிய—திரை - அலைகளையுடைய நீர்- நீரையுள்ள—கருங்கடல்- கரியகடலினது—வான்- உயர்ந்த—முக ட்டில்-உச்சியில், எழுந்த-உதயஞ்செய்த—வெண்டிங்கள்- வெள்ளியச ந்திரனே—தணந்தார்- பிரிந்தவர்களுடைய, உயிர்பருக- உயிரைக்குடி க்க - எரி - எரிகின்ற—வெங்கதிரால் - வெவ்வியகிரணத்திஞல், உடல் வெதுப்ப- உடலைச்சுட—மருவு- பொருந்துகின்ற—திரைநீர்- அலையை யுடையநீரினை—கவற்று - கவறச்செய்கின்ற—சிகை - கொழுந்தினையு டைய—வடவை யிடத்தோ - வடவைத் தியிடத்தோ—மைவிளர்ப்ப

அஞ்ஞான்றும் வெள்ளிதாக, கருகும்-கருகிய, வெவ்விடத்தின் கண்ணே றை வெவ்விய விடத்தினிடத்தே-யாண்டு கற்றாய்-(இவ்விரண்டினுள்ள) தனிடத்துக் கற்றுக்கொண்டாய், அறியேம்-(யாம்) அதனை அறிகிலே ம்—எ-று. (கருத்து) சந்திரனே வெவ்விய கிரணங்களாலே பிரிந்தவரு டலைச்சுட வடவாமுகாக்கினியிடத்துக் கற்றாயோ விஷத்தினிடத்து க் கற்றாயோ எவ்விடத்திற் கற்றாய்-எ-ம். (௧)

செய்யகமலமலர்கூம்பச்சேர்ந்தகொடியவெண்டிங்காள்
வெய்யகதிர்வாள்வீசியுயிர்விட்டியகணைப்புகழ்பெறுக
பொய்யிறைந்தினிற்பயந்தபுணரிவேந்தின்குலம்வாழ்க
மையல்கூரென்றனைநாளும்வருத்தாதொழியல்வேண்டுமால்.

(இ-ள்) செய்ய-சிவந்த—கமலமலர்-தாமரைப்பூக்களானவை—கூம்ப-குவிய—சேர்ந்த-அடைந்த—கொடிய-கொடுமைபொருந்திய வெண்டிங்காள்-வெள்ளியசந்திரனே—மயல்கூர்-மயக்கமிகுந்த—என்றனை-என்னை, நாளும்-எந்நாளும்—வருத்தாது-வருத்தஞ்செய்யாமல் ஒழியல்வேண்டும்-தவிரல்வேண்டும்—வெய்ய-வெவ்விய—கதிர்வாள் வீசி-கிரணமாகியவாளை வீசி, உயிர்விட்டி-என்னுயிரைக்கொன்று-அத னால்-அக்கொலைத்தொளிலினாலே, புகழ்-கீர்த்தியை—பெறுக-பெறக்கடவாய—பொய்யில்-பொய்தவிர்ந்த—தலத்தின்-தலத்தினால் —சிறப்பயந்த-உன்னைப்பெற்ற—புணரிவேந்தின்-கடலரசனுடைய குலம்-மரபு—வாழ்க-வாழக்கடவது—எ-று. வீரசோழியம் பொருளதிகாரமேற்கோள-கு-புறமெய்ப்பாட்டி றனுளிப்புகலி-லாக ஜங்காயவக்காமந்தானே, காரணம்பற்றிக் கருத்துவேறுபட்டு, மற்று மோரெழாய் மெய்க்கண்டதனுடு, மெட்டாமெனப்படியல்புணர்ந்தோ ரே. இவ்விதியால் ஆணைவகாசிய துவருததம் இசைப்புற்றுள்(கருத்து) கொடுமையுள்ள சந்திரனே என்னைவருத்தா தொழிவாயாக, கிரணவா ளால்வெட்டிப் புகழ்பெறுவாயாக உன்னைப்பெற்ற வருணராஜன் குல மும் வாழ்கஎன்பதாம். (௨)

விரவுகரியகூரிருள்வாய்வெய்யோனென்னக்கதிர்பரப்பி
மருவுகொழுநர்ப்பிரிந்தாரைவருத்தாநிற்குமாமதியே [மு
திரைசெய்கடல்பொன்னுருக்கியபோற்செங்கேழ்தப்புலரியெ
மிரவிகிரணத்தவிமழுங்கியிருத்தல்யானேகாண்குவனால்.

(இ-ள்) விரவு-(உலகமெங்கணும்) கடந்த—கரிய-கறுத்த—கூரிருள்வாய்-மிகவிருளினிடத்தல்—வெய்யோனென்ன-சூரியனென்றுசொல்ல—கதிர்-கிரணங்களை—பரப்பி-விரித்து—மருவு-தம்மை மணந்த—கொழுநர்ப் பிரிந்தாரை-தலைவரைப்பிரிந்த மாதரை—வருத்தாநிற்கும்-வருத்துகின்ற—மாமதியே-பெரிய சந்திரனே—திரைசெய்-அலைகளையுண்டாக்குகின்ற—கடல்-கடலானது—பொன்னுருக்கியபோல்-பொன்னையுருக்கியதுபோல—செங்கேழ்த-செக்கிறமுடைய—புலரி-விடியற்காலத்தில்—எழும்-எழுகின்ற—இரவிகிரணம்-சூரியகிரணத்தினால்—தவிமழுங்கி-ஒளிகெட்டு—இரு



த்தல்-இருக்கையை—யானே-நானே—காண்குவன்-பார்ப்பேன்—எ-று. (கருத்து) மகிழ்நரைப்பிரிந்த மாதரைவருத்துகின்ற சந்திரனே நீ சூரியகிரணத்தால் ஒளிமழுங்கியிருத்தலையானே காண்பேன்-எ-ம். ()

கன்றுகுணிலாக்கனியுகுத்தோன் கடலினமுதங்கடைந்தெடுப்பக்
குன்றமிடலுங்கலையனைத்துந் தகர்ந்துள்ளாவிகுறைந்திலையே
துன்றுகதிர்வெண்கலைமதியே சுலவுதிரைநீர்க்கடல்குடித்த
வன்றுகலசமுனிவயிற்றி லற்றுயென்னிலழலாயே.

(இ-ள்) துன்று-நெருங்கிய—கதிர்-கிரணங்களையுடைய—வெள்-வெள்ளிய—கலைமதியே-கலைகளையுடையசந்திரனே—கன்று-பசுவின் கன்றை—குணிலா-குறுந்தடியாகக்கொண்டு—கனி-விளாங்கனியை —உகுத்தோன்-உதிர்த்தகாரணனவன்—கடலின்-பார்க்கடலிலே, கடைந்து-மதித்து, அமுதம்-அமிர்தத்தை, எடுப்ப-எடுத்தல்வேண்டி, குன்றம்-மந்தரமலையை—இடலும்-இட்டவளவில்—கலையனைத்தும்-பதினறுகலைகளும்—தகர்ந்து-உடைந்து—உள்ளாவி-உளளேயிருக்கின்றஉயிர்—குறைந்திலை-நீகுறைந்தாயில்லை—கடல்-கடலினுடைய—சுலவு-சுழல்கின்ற—திரை-அலைகளையுடைய—நீர்-நீர்முழுவதையும்—குடித்த-பானம்பண்ணின—அன்று-அந்நாளில்—கலசமுனி-அகத்தியமுனியுடைய—வயிற்றில்-வயிற்றினிடத்தில்—அற்றுயென்னில்-நீசீரணித்தாயானால்—அழலாய்-(இன்று) சுடமாட்டாய் —எ-று. (கருத்து)வெள்ளியசந்திரனே திருமாலானவர்திருப்பாற்கடலிலமுதங்கடைந்தெடுக்க மந்தரமலையையிட்டவளவில் கலைகள்கெட்டாவிகுறைந்திலை அந்நாளில் கடலைக்குடித்த அகத்தியர்வயிற்றிற்சீரணித்தாயென்னில் என்னைச்சுடாய்-எ-ம். (௪)

மட்டுவிரியுமலர்வாளிவருந்துந் தமியேனுயிர்சோரப்
பட்டபுழையிலழலுமிழுங்கதிர்கள் சுருக்கிப்பார்வேந்த
னெட்டுவரையுமிகழ்ந்துபொலங்கிரியோடிகலுமிருதடந்தோ
டொட்டகதிர்மென்கரத்தாலென்னுடலந்தொடுவாய்சுடர்திங்காள்.

(இ-ள்) சுடர்திங்காள்-ஒளியையுடையசந்திரனே—(நீ)வருந்தும்-(விரகத்தினால்) வருந்துகின்ற—தமியேன்-தமியேனாகிய (வென்னுடைய)—உயிர்சோர-ஆவிசோர—மட்டுவிரியும்-தேனொழுகுகின்ற—மலர்வாளி-மலர்ப்பாணங்கள்—பட்ட-தைத்த—புழையில்-துவாரத்தில்—அழலுமிழும்-அக்கினியையுமிழ்கின்ற—கதிர்கள்-கிரணங்களை—சுருக்கி-அடக்கிக்கொண்டு—பார்வேந்தன்-புவிக்கரசனாகிய வுளமகாராசனுடைய—எட்டுவரையும்-அட்டகுலகிரிகளையும்—இகழ்ந்து-இகழ்ச்சிசெய்து—பொலங்கிரியோடு-மேருமலையுடனே—இகலும்-பகைக்கின்ற—இரு-இரண்டாகிய—தடந்தோள்-பெரிய புயங்களை—தொட்ட-தீண்டிய—கதிர்-கிரணங்களாகிய—மென்கரத்தால்-மெல்லியகரங்களால்—என்னுடலம்-என்னுடையதேகமுழு

வளையும்—தொடுவாய் - தீண்டுவாயாக—எ-று. (கருத்து) சந்திரனே நளனைத்தொட்டகரத்தாலென்னைத் தொடுவாயென்றாள் என்பதாம். (௫)

அல்லினிருண்மாக்கடல்சுவற்றி யளியன்மூலைமேலழனூற்றிக்
கொல்லுங்கொடியவெண்டிங்காள் கொழிக்குநின துகதிர்சிறிது
புல்லும்பொழுதிலொழியாது புனல்கான் றிந்துகாந்தமெனுங்
கல்லுமுருகுமெனிலுலகி லெவரோயாவிகரையாதார்.

(இ-ள்) அல்லின்-இரவின்கண்—இருள் - இருளாகிய—மா-பெரிய—கடல்-கடலினை—சுவற்றி - சுவறச்செய்து—அளியன் - எளியவளாகியவென்னுடைய—மூலைமேல் - தனத்தின்கண்—அழனூற்றி - அக்கினியைச்சொரிந்து—கொல்லும் - கொல்லாநின்ற—கொடிய - கொடுமைபொருந்திய—வெண்டிங்காள் - வெள்ளியசந்திரனே—கொழிக்கும் - கொப்புளிக்கின்ற—நின துகதிர் - உன்னுடையகிரணங்கள்—சிறிது - கொஞ்சம்—புல்லும்பொழுதில் - பொருந்தும்பொழுதில்—ஒழியாது - ஓயாமல்—இந்துகாந்தமெனுங்கல்லும் - சந்திரகாந்தமென்னுங்கல்லும்—புனல்கான்று - நீரைக்கக்கி—உருகுமெனில் - கரையுமேயானால்—உலகில் - உலகத்தில்—ஆவிகரையாதார் - (மென்மையாகிய) உயிர்கரையாதவர்—எவர்-யாவர்—எ-று. (கருத்து) சந்திரனே உன்கிரணங்களால் கல்லுமுருகுமாறால் உலகத்தில் யார்தா முருகாதவர் என்றாள் என்பதாம். (௬)

பணந்தாழரவுண்டுமிழ்மதியே யமிழ்தினோடும்பலதேவ
கணந்தாம்வெருவும்விடத்தொடும்வந்தனைலன்றேகணவர்புய
மணந்தாருள்ளங்குளிர்ப்பேறத் தண்ணெண்கதிர்கள்வழங்குவதும்
தணந்தாருள்ளமிகவெதும்பத் தழல்போலுருக்குந்தன்மையுமே.

(இ-ள்) தாழ் - வளைந்த—பணம் - படத்தையுடைய—அரவு - சர்ப்பமானது—உண்டு-விழுங்கி—உமிழ்மதியே - உமிழுகின்றசந்திரனே—கணவர்புயம்-தலைவருடையபுயத்தை—மணந்தார் - சேர்ந்தவர்களது—உள்ளம் - மனமானது — குளிர்ப்பேற - குளிர்ச்சியையடைய—தண்ணெண்கதிர்கள் - குளிர்ச்சியாயிருக்கின்ற- கிரணங்களை—வழங்குவதும் - கொடுப்பதும்—தணந்தார் - பிரிந்தவர்களுடைய—உள்ளம்-மனமானது—மிகவெதும்ப-மிகவும்வாட—தழல்போல் - அக்கினியைப்போல்—உருக்கும் - உருக்குகின்ற—தன்மையும் - குணமும்—அமிழ்தினோடும் - அமிர்தத்துடனேயும்—பலதேவகணம் - பலவாகியதேவகூட்டங்கள்—வெருவும் - பயப்படுகின்ற—விடத்தோடும் - நஞ்சுடனும்—வந்தனைலன்றே - வந்தனைலன்றே—எ-று. (கருத்து) அரவுண்டுகக்கியசந்திரனே மணந்தார்க்குத் தண்கதிர்களும் தணந்தார்க்கு வெங்கதிர்களும் வழங்குவது அமிர்தத்துடனும் விஷத்துடனும் பிறந்தகுணமோ என்றாள் என்பதாம். (௭)

வடவானலத்தினுடன் பிறந்தாய்வளர் பூங்கலையொன்றெய்தியபின்
படர்வார்சடையோனழல்பரப்புநுதற்கணோடுபயின்றிருந்தாய்



சுடர்கால்கலைகணிறைந்துமுழுமதியாங்காலைத்தொடரரவின்
விடவாயுறைந்தாய்மதியேநீ*வெம்மைகால்வதரிதேயோ

(இ-ள்) மதியே-சந்திரனே—வடவானலத்தினுடன்-வடவாமுகாக்கினியுடனே—பிறந்தாய் - உதித்தாய்—வளர் - வளர்கின்ற—பூ-அழகிய—கலையொன்று-கலையொன்றினை—எய்தியபின் - அடைந்தபின்பு—படர்-படர்கின்ற—வார்-நெடிய—சடையோன் - சடையினையுடையபரமசிவனது—அழல்-அக்கினியை — பரப்பும் - விரிக்கின்ற —நுதற்கணோடு-நெற்றிக்கண்ணுடனே—பயின்றிருந்தாய்- பழகிக்கொண்டிருந்தாய்—சுடர் - கிரணங்களை—கால் - உமிழுகின்ற—கலைகணிறைந்து-பதினாறுகலையுநிறைந்து—முழுமதியாங்காலை - பூரணசந்திரனானபொழுது—தொடர் - தொடருகின்ற—அரவின் - பாம்பினுடைய—விடவாய் - விடமுள்ளவாயிலே — உறைந்தாய்-தங்கினாய்(ஆகையால்) —நீ- நீ —வெம்மைகால்வது - வெப்பத்தைத்தருவது—அரிதேயோ-அரிதாகுமோ—எ-று. தொல்காப்பியம் - பெயரில் - ௩௰௬-ஆ-நீயென்கிளவி யொருமைக்குரித்தே (கருத்து) சந்திரனேவடவாமுகாக்கினியுடன் பிறந்தாய் ஒருகலைபெற்ற பின்பரமசிவன் நெற்றிக்கண்ணோடு பழகியிருந்தாய் பாம்பின்வாயிலுறைந்தாய் நீ அக்கினியைக்கக்குதலரிதோ என்றாள் என்பதாம். (௮)

தொய்யின்மூலைகள்பசப்பூரத்துணைவர்ப்பிரிந்துதுயிறுறந்த
மையன்மடவாருயிர்கவர்வான் கூற்றம்போலவருமதியே
யையமிலையுன்னுடற்களங்கம்மழலுங்கொடியவிடமன்றே
வெய்யபகுவாயக்கரும்பாந்தள்விழுங்கியாற்றாதுமிழ்ந்ததுவே

(இ-ள்) துணைவர்ப்பிரிந்து- கணவனைப்பிரிதலினாலே—தொய்யில்-சந்தனக்கோலத்தையெழுதப்பெற்ற—மூலைகள் - தனங்களானவை—பசப்பூர - வேறுபட்டநிறத்தையுடைய — துயிறுறந்த-நித்திரையையொழிந்த—மையல் - மயக்கத்தையுடைய — மடவார்-மங்கையரது—உயிர்-ஆவியை—கவர்வான் - கொள்ளையிடும்பொருட்டு—கூற்றம்போல - கூற்றுவனைப்போல்—வருமதியே - வருகின்றசந்திரனே—ஐயமிலை-(அதற்குச்) சந்தேகமில்லை—உன்-உன்னுடைய — உடற்களங்கம்-உடலிலுள்ளகறையானது—அழலும்-சுடாநின்ற—கொடிய - கொடுமைபொருந்திய—விடமன்றே - நஞ்சமன்றே — வெய்ய-வெவ்விய—பகுவாய் - பிளப்பாகியவாயையுடைய — கரும்பாந்தள் - ராகுவென்னும்பாம்பானது—விழுங்கி-உண்டு—ஆற்றாது - தாங்கமாட்டாமல்—உமிழ்ந்தது-கக்கியது—எ-று. (கருத்து) மாதருயிரைக் கவரும்பொருட்டு யமன்போல்வந்த சந்திரனே உன்னுடற் களங்கம் கொடிய விடமென்றல்லவா கரும்பாம்புவிழுங்கியுமிழ்ந்ததுஎன்றாள்-எ-ம். (௯)

சுடர்கான்றெழுந்தவெண்டிங்காளென்னேசுதியாமுதத்
துடனீபிறந்தபாற்கடலின்றன்மையுணராயானலு
மடலார்கமலப்பொகுட்டுறையும்புத்தேள்காணுமறைக்கொழுந்தின்
படர்வார்சடையில்வீற்றிருக்கும்பான்மையேனுமறிந்திலையே

(இ-ள்) சுடர்-கதிர்களை—கான்று-வீசிக்கொண்டு—எழுந்த - உதித்த—வெண்டிங்காள்-வெள்ளியசந்திரனே—சுடுதி - சுடுகின்றாய்—என்னை-(இது) யாதாகவிருந்தது—ஆர் - நிறைந்த—அமுதத்துடன்-அமிர்தத்துடனே—நீபிறந்த-நீபிறக்கப்பெற்ற,பாற்கடலின்- பாற்கடலினுடைய—தன்மை-குணத்தை, உணராயாகுலும்;- அறியாயென்னினும்—மடலார்-இதழ்கணிறைந்த — கமலப்பொகுட்டு - தாமரைமலர்க்கொட்டையில்—உறையும்-தங்குகின்ற—புத்தேள்-பிரமன் — காணா-காணக்கூடாத—மறைக்கொழுந்தின்-வேதத்துச் சியிருக்கும்பரமசிவனுடைய—படர்- படர்ந்த — வார் - நெடிய—சடையில் - சடாபாரத்தில்—வீற்றிருக்கும்-வீறுடனேயிருக்கின்ற—'பான்மையேனும் - தன்மையையாகுலும்—அறிந்திலை- அறிந்தாயில்லை —எ-று. (கருத்து) சந்திரனே என்சுடுகிறாய் தேவாமிர்தத்தோடு திருப்பாற் கடலிற்பிறந்த தன்மையை யறிந்திலை ஆனாலும் சிவனது திருமுடியில்வீற்றிருக்குந்தன்மையுமறிந்திலையோ என்றாள்-என்பதாம். (௰)

> திருவுமணியுமிருநிதியுந்தண்ணங்கமலமலர்த்தவிசிற்
> றிருவுமுயிர்த்தபாற்கடலிற்றெள்ளாரமுதத்துடன்பிறந்தாய்
> பெருவெண்மதியேநீயுறைதல்பெம்மான்மௌலிகதிரமிழ்தி
> னுருவமநங்கனுறவொன்றும்விடுத்தியேன்மற்றுனைநிகரார்

(இ-ள்) பெரு-பெரிய—வெண்மதியே-வெள்ளியசந்திரனே—திருவும்-ஐந்தருவையும்—மணியும்-சிந்தாமணியையும்—இருநிதியும் - சங்கநிதிபதுமநிதியென்னுமிரண்டினையும்—தண்-குளிர்ந்த—அம்- அழகிய—கமலமலர் - தாமரைமலராகிய—தவிசில் - ஆசனத்திலிருக்கின்ற—திருவும் - திருமகளையும் — உயிர்த்த - பெற்ற—பாற்கடலில்-பாற்கடலினிடத்தே—தெள் - தெள்ளிய—ஆர் - நிறைந்த— அமுதத்துடன்-அமிர்தத்துடனே—பிறந்தாய்-தோன்றினாய்—நீயுறைதல் - நீவாசம்பண்ணுமிடம் — பெம்மான் - பரமசிவனுடைய—மௌலி-சடைமுடி—கதிர் - உன்னுடையகிரணங்கள் — அமிழ்தின்னுருவம்- அமிர்தத்தினுடையவடிவம் (ஆகையால்) அநங்கன் -மன்மதனுடைய—உறவொன்றும்-சம்பந்தமொன்றினையும் — விடுத்தியேல் - விட்டுவிடுவாயானால்— உனைநிகர்- உன்னைநிகராவார்—ஆர்-யாவர்—எ-று.(கருத்து) சந்திரனே ஐந்தருகௌத்துவ மணிஅருநிதி இமிர்துதிருமாது இவற்றோடு பாற்கடலிற்பிறந்தாய் நீவாசம்பண்ணுதல்சிவனது திருமுடி உனதுகிரணங்களமிர்தத்தினுருவம்- மன்மதனுற வொன்றும்விடுத்தாலுன்னை நிகர்ப்பவர்யாரென்றாள்என்பதாம். (௰௧)

> திங்கட்புலியைவீழ்த்துயிர்செகுப்ப*மடவீராமியத்திற்
> றங்கப்படிமக்கலன்சேர்மினதனுட்புகுதுந்தாழாமே
> துங்கக்கருந்தாதுகப்புடைக்குந்தொழிலோர்க்கூவிக்கூடமெடுத்
> தங்கைத்தலத்தாலறைதிரெனப்பணிப்பீராவியளிப்பீரே.

(இ-ள்) மடவீர் -* தோழியரே—திங்கட்புலியை - சந்திரனாகிய வியாக்கிரத்தை — வீழ்த்தி - வீழச்செய்து — உயிர்செகுப்ப-உயிரை



நீக்க—ஆரமியத்தில் - நிலாமுற்றத்தில்—தங்கப்படிமக்கலன் - தங்கத்தினால்வரம்புசெய்யப்பட்ட கண்ணாடியை—சேர்மின் - வையுங்கள்—அதனுள் - அக்கண்ணாடியினுள்—புகுதும் - திங்கட்புலிநுழையும்—தாழாமே - காமதியாமல்— துங்கம்-உயர்ச்சிபொருந்திய — கருந்தாது-இரும்பை—உக -உதிர—புடைக்கும் - அடியாநின்ற—தொழிலோர்-தொழில்செய்வோராகிய கொல்லரை — கூவி அழைத்து — கூடமெடுத்து-சம்மட்டியெடுத்து — அங்கைத்தலத்தால் - அழகியகையினாலே—அறைதிரென-அடியுங்களென்று —பணிப்பீர் - சொல்லுவீர்களானால்—ஆவி - எனதுயிரை — அளிப்பீர் - காப்பவராவீர்—எ-று.
*தொல்காப்பியம்-களவியல்-௩௪-சூ-தோழிதானேசெவிலிமகளே(கருத்து) தோழிமார்களேசந்திரனென்னும்புலியை நிலாமுற்றத்திற் றன்னிகண்ணாடியைச்சேருங்கள் அதற்குள்ளப்புலிவந்துபுகும் - கொல்லரைக் கூப்பிட்டுச்சம்மட்டியெடுத்தடிக்கச்சொல்லுங்கள் என்னுயிரைக்காப்பீர்களென்பதாம். (௰௨)

> சுடரும்வடவையுலகழலத்தோன்றாதமைத்திரையாழி
> யடருமழன்மாமதியதனையாற்றாதாற்றிவிடுத்ததெனிற்
> படருமிதழிப்புரிசடையெம்பரமனமருயிர்புரப்பான்
> கொடியவிடமுண்டதுபோலவுண்டாலதனாற்குறையுண்டோ.

(இ-ள்) சுடரும்-பிரகாசியாநின்ற—வடவை -வடவைத்தீயானது—உலகு-உலகத்தை —அழல - சுட—தோன்றாது - வெளிப்படாமல்—அமைத்த - (அதைத்) தன்னுளடக்கிய—திரை - அலைகளையுடைய—ஆழி - கடலானது — அடரும்-நெருங்கிய—அழல் - சுடாநின்ற—மா-பெரிய—மதியதனை - சந்திரனை—ஆற்றாது-பொறுக்காமல்— அாற்றி - அமுது—விடுத்ததெனில் - விட்டதானால்—படரும்-படராநின்ற—இதழி-கொன்றைமாலையையணிந்த—புரி - கட்டப்பட்ட—சடை-சடாபாரத்தையுடைய—எம்பரமன் - எம்முடையகடவுள் —அமரர்-தேவர்களினது—உயிர் - ஆவியை—புரப்பான் - காக்கும் பொருட்டு—கொடிய - கொடுமைபொருந்திய — விடம்-விடத்தை—உண்டதுபோல - புசித்ததுபோல—உண்டால் - (இதனையும்) புசித்தால்—அதனால்-அச்செய்கையால்—குறையுண்டோ - குறைபாடுளதோ—எ-று. (கருத்து) வடவாக்கினியுள்ள கடலும் - கனலாகிய சந்திரனைக்கக்கிவிட்டதுபரமசிவன் தேவர்களைக்காக்கும் பொருட்டு விடத்தையுண்டது போலச் சந்திரனையுண்டாற்குறைவுண்டோவென்றாள்-எ-ம். (௰௩)

> விரிந்ததிரைப்பாற்கடற்பிறந்தவிடமோரிரண்டிலோர்கடவுள்
> மருந்திதுகர்ந்தகரியவிடமிட்டுமூலகில்வந்ததோ
> பரந்துகனலுமதிக்கலையாம்வெள்ளைவிடத்தைத்தேவர்பல
> ரருந்தவருந்தநாளுளும்வளர்வதெவன்கொலறியேமால்.

(இ-ள்) விரிந்த-விரியப்பெற்ற—திரை - அலைகளையுடைய—பாற்கடல்-பாற்கடலிலே—பிறந்த - தோன்றிய—விடமோரிரண்டில் - விடமிரண்டில்—ஓர்கடவுள்-ஒப்பற்றபரமசிவனைவன்—மருந்தின் - அமிர்தத்தைப்போல—நுகர்ந்த - புசித்த—கரியவிடம் - கறுத்த விடமா

னது—மீட்டும் - மீளவும்—உலகில்-உலகத்திலே—வந்ததோ - தோ ன்றியதோ—பரந்து - பரவி—கனலும்-சுடாநின்ற — மதிக்கலையாம்- சந்திரனதுகலையாகிய —வெள்ளைவிடத்தை - வெண்ணிறத்தையுடை யவிடத்தை—தேவர்பலர் - தேவர்களனேகர் — அருந்தவருந்த - புசிக்கப்புசிக்க — நாளுநாளும் - நாடோறும் — வளர்வது-வளருகின்ற து—என்கொல் - என்னகாரணமோ—(யாம்)அறியேம் - அறிகிலே ம்—எ-று. (கருத்து) சிவனுண்ட விடமீண்டு முலகில்வந்ததோ வெள் ளைவிடத்தைத் தேவர்களருந்தவருந்த வளர்வதென் கொலோவென் றுள் என்பதாம்.

நிரைத்தண்டாளக்கோவையென நிலவுகாலும்வெண்ணகையீர்
விரைத்தண்கலவைச்செழுஞ்சேறென்றழலையிறைத்து மெய்வெதுப்பி
த், திருத்துமலர்ப்பூஞ்சேக்கையென வில்வேள்பிரிந் தாருயிர்செகுக்கு
மாத்தந்தோய்ந்தவாளியணைகிடத்தலென்மேலன்பேயோ

(இ-ள்) நிரை-வரிசையான—தண் - தண்ணிய—தாளக்கோவை யென - முத்துக்கோவையைப்போல—நிலவு-ஒளியை—காலும் - தரு கின்ற—வெள் - வெள்ளிய—நகையீர்-பற்களையுடைய மங்கையரே— விரை-வாசனைபொருந்திய—தண் - தண்ணிய—செழும் - செழிய—க லவைச்சேறென்று- கூட்டுவருக்கஞ்சேர்ந்தசேந்தனக்குழம்பென்று— அழலையிறைத்து - தீயைவீசி—மெய் - தேகத்தை —வெதுப்பி - சுட் டு —திருத்தும்,காம்புகளையப்பெற்ற,மலர் - மலரினாற்செய்யப்பட்ட— பூ-அழகிய—சேக்கையென - மெத்தையென்று—வில்வேள்- மன்மத னானவன்—பிரிந்தார் - பிரிந்தவர்களுடைய—உயிர்- ஆவியை—செகு க்கும் - போக்குகின்ற—அரத்தந்தோய்ந்த - உதிரந்தோய்ந்த — வாளி யணை - பாணமெத்தையின்மேல்—கிடத்தல் -படுக்கவைத்தல் - என் மேல்-என்னிடத்து—அன்பேயோ- அன்புதானோ—எ-று. (கருத்து) முத்துவரிசையொத்த பற்களையுடையபெண்களே கலவைச் சாந்தென் று கனலையிறைத்துடலைச்சுட்டு மலர்ச் சயனமென்று மன்மதபாணத் திலென்னைவளர்த்தல் அன்புதானோ வென்றுள் என்பதாம். (௫௫)

பணத்தாழல்குற்பைந்தொடியீர் பதுமத்திறைக்கும்வானவர்க்குங்
கணஞ்சேருலகின் மன்பதைக்குங்காலங்கணித்தகலைவல்லோர்
மணந்தார்தமக்கோரிமைப்பொழுதுமாறுக்காதன் மகிழ்நர்புயந்
தணந்தார்க்கூழியாகுமெனச்சாற்றுறிருந்ததகையென்னே.

(இ-ள்) பணம்-பாம்பின்படம்—தாழ்-வணங்குகின்ற—அல்குல்- அல்குலையுடைய—பைந்தொடியீர் - பசியபொன்னாற்செய்தவளையல் களையணிந்தமங்கையரே — பதுமத்திறைக்கும்-தாமரைமலரிலிருக்கி ன்றபிரமனுக்கும்—வானவர்க்கும் - தேவர்களுக்கும்—உலகின் -மண் ணுலகில்—கணம்-கூட்டமாக—சேர் - சேரப்பெற்ற—மன்பதைக்கு ம்-மனிதர்க்கும்—காலம் - வாழ்நாளை—கணித்த-நிச்சயித்த — கலைவ ல்லோர் - சோதிடநூல்வல்லோர்—மாறுக்காதல் - நீங்காதவிருப்புள் ள — மகிழ்நர்புயம் - தலைவர்புயங்களை — மணந்தார்க்கு-கூடினவர்க



ளுக்கு—ஓரிமைப்பொழுது - ஒருமாத்திரையாயிருந்தகாலம் — தணந் தார்க்கு-(அப்புயங்களைப்)பிரிந்தவர்க்கு—ஊழியாகுமென - ஊழிக்கா லமாகுமென்று,சாற்றுறிருந்ததகையென்ன - சொல்லாமலிருந்தமுறை யென்னகாரணம்—எ-று. (கருத்து) பெண்களே பிரமனுக்கும் தேவ ர்களுக்கு மக்களுக்குங் காலத்தைக்குறித்த கலைவல்லோர் மணந்தார்க் கிமைப்பொழுதானது தணந்தார்க்கூழிக்கால மாகுமென்று சொல்லா திருந்ததென்ன என்றுள்என்பதாம். (௫௬)

குதலைமொழியீர்மெய்வெதுப் புங்கொடுந்தீயாற்றவேண்டு திரேற்
பொதியவரையின் றுஞ்சாந்தம்பூசிமுலைமேற்புகைந்தழல
கதலியிளம்பூங்குருத்தத்தால்வீசிவீசிக்கனற்றுவதென்
மதியினழலையவிப்பதற்கோர்மருந்துண்டாகிற்செய்வீரே.

(இ-ள்) குதலைமொழியீர் - மழலைச்சொற்களையுடையமங்கையரே —மெய் - உடலத்தை—வெதுப்பும் - சுடுகின்ற—கொடுந்தீ - கொடி யவெப்பத்தை—ஆற்ற - தணிக்க—வேண்டுதிரேல் - விரும்புவீர்களா னல்—பொதியவரையின் - பொதியமலையிற்பிறந்த—நறு - பரிமளம் பொருந்திய—சாந்தம் - சந்தனத்தை—பூசி-பூசுதல்செய்து—முலைமே ல்-தனத்தின்மேல்—புகைந்தழல - புகைவிட்டெரிய—கதலி- வாழை யினுடைய—இளம்பூங்குருத்தத்தால் - அழகியவிளங்குருத்தால் — வீ சிவீசி - இடைவிடாமல்வீசுதல்செய்து— கனற்றுவது - சுடும்படிமூ ள்விப்பது—என் - என்னகாரணம்—மதியின்றழலை - சந்திரகிரணமா கியநெருப்பை—அவிப்பதற்கு - தணிப்பதற்கு—ஓர்மருந்து - ஒருமரு ந்து—உண்டு - உளது—ஆகில் - உம்மாற்செய்யக் கூடுமானல்— செய்வீர்-(அதனைச்)செய்வீர்களாக—எ-று.தொல்காப்பியம்- களவியல் -௩௰-கு.தோழியின்முடியுமிடனுமாருண்டே இவ்விதியால் உங்களாற் செய்யக்கூடுமானல்செய்யுங்களென்றுள்(கருத்து) பெண்களேகாமாக் கினியைநீக்க விரும்புவீர்களானல் முலைமேற் சந்தனத்தைப்பூசி வா ழைக்குருத்தால் வீசிச்சுடுவதென்னை சந்திரகிரணமாகிய நெருப்பைய விப்பதற்கோர் மருந்துண்டு உங்களாற் கூடுமாகிற் செய்யுங்கள் என்று ள்என்பதாம். (௫௭)

அந்தாமரையின்மடநல்லீர்மலயமுயிர்ப்பவலர் பொதுளுஞ்
சந்தாடவியிற்றவழ்ந்துநறுந்தண்ணென்னருவிதோய்ந்துமலர்ப்
பைந்தாதாடிமுருகுயிர்த்துப்பசும்பொற்சிறுசாள்ரநுழையு
மந்தாநிலமின்றழல்வதெல்லாந்தமியேயவிழைத்தவல்வினையே.

(இ-ள்) அம்-அழகிய—தாமரையின்-தாமரையிலிருக்கின்ற—மட நல்லீர் - இருமுகளையொத்தமங்கையரே —மலயம்-பொதியமலையானது —உயிர்ப்ப-பெற—அலர் - மலர்கள்—பொதுளும் - நிறைந்திருக்கின் ற—சந்தாடவியில் - சந்தனக்காட்டிலே — தவழ்ந்து-ஊர்ந்து—நறு- நல்ல—தண்ணென்னருவி - குளிர்ச்சியாயிருக்கின்ற வருவிநீரில்.—தோ ய்ந்து - படிந்து—மலர்-மலர்களினுடைய — பைந்தாதாடி - பசியமகரந் தங்களையளைந்துகொண்டு—முருகு - வாசனையை—உயிர்த்து -வீசி

— பசும்பொன்-பசியபொன்னாற்செய்த—சிறு-சிறிய—சாளரம் - பல்கணிவழியால்—நுழையும் - நுழைகின்ற—மந்தாநிலம் - தென்றற்காற்றானது—இன்று - இன்று—அழல்வதெல்லாம் - சுடுவதெல்லாம்—தமியேன் - தனிமையுடையேனாகியயான்—இழைத்த - செய்த—வல்வினையே-தீவினையே—எ-று, (கருத்து) இலக்குமிக்கொப்பான பெண்களே தென்றற்காற்றானது பலகணிவாயிலில் நுழைந்து என்னைச்சுடுவது யான்செய்தகொடுவினையாகும் என்றனளென்பதாம். (௰௮)

கொங்குவிரியுமலர்க்குழலீர்கொழுநர்ப்பிரிந்தார்வருந்துறவா
னெங்குங்குருதியிறைத்ததுபோற்குடபாற்றிசையினெழுஞ்செக்கர்,
பொங்குவடவைக்கொழுந்தீயேயதனலன்றேபூசுரர்க
ளங்கைநிறையப்புனல்வாரியிறைத்துநாளுமவிப்பதுவே,

(இ-ள்) கொங்கு-வாசனையானது—விரியும்-விரியப்பெற்ற—மலர்-மலரையணிந்த—குழலீர் - கூந்தலையுடையமங்கையரே — கொழுநர்-கணவரை —பிரிந்தார் - நீங்கினவர்கள்—வருந்துற - வருத்தத்தையடைய—வானெங்கும் - ஆகாயமுழுவதும்— குருதி - உதிரத்தை—இறைத்ததுபோல் வீசப்பெற்றதுபோல்— குடபாற்றிசையின் - மேற்குத்திசையிலே—எழு - எழுகின்ற— செக்கர் - செவ்வானமானது — பொங்கு-மிகுந்த—வடவை - வடவையென்னும் பெயரையுடைய—கொழு-செழிய—தீயே-அக்கினியை —அதனலன்றே - அதனலன்றே—பூசுரர்கள் - பிராமணர்கள்—அங்கைநிறைய - அழகியகைநிறைய—புனல் - சலத்தை—வாரி - அள்ளி—இறைத்து - சொரிந்து—நாளும் - நாடோறும் —அவிப்பது-அக்கினியையணைப்பது—எ-று(கருத்து)கூந்தலையுடையபெண்களே கணவரைப் பிரிந்தமாதரை வருத்தும் பொருட்டெழுந்த செவ்வானமானது வடவாமுகாக்கினியே அதனலல்லவா பிராமணர்கள் நாள்தோறும் நீரைவாரி இறைத்தவிக்கிறார்களென்றனளென்பதாம். (௰௯)

புனைமென்கொடியீர்நிலவருந்தென்புள்ளின் * பார்ப்பையருட்கலச
முனிவன்றன்பாலலைபுரட்டுமுந்நீர்குடிக்கும்வித்தையினை
யினிதினுணரவைத்திடுமின்வைத்தாற்குணபாலெழுந்துவெய்தாய்க்
கனலுங்கொடியவெண்டிங்கட்கதிர்வெங்கடலையருந்தாதோ.

(இ-ள்) புனை - அலங்கரிக்கப்பட்ட—மெல் - மெல்லிய—கொடியீர்-மலர்க்கொடிபோன்ற மங்கையரே— நிலவு - சந்திரிகை—அருந்து-புசிக்கின்ற —என் - என்னுடைய —புள்ளின் பார்ப்பை- சகோரக்குஞ்சினை—அருள் - கிருபையுடைய — கலசமுனிவன்பால் - கும்பத்திற் பிறந்த அகத்தியமுனிவனிடத்து — அலைபுரட்டும் - அலைகளைப்புரட்டுகின்ற—முந்நீர் - கடற்சலத்தை — குடிக்கும்-பானம்பண்ணுகின்ற—வித்தையினை - கல்வியை — இனிதின் - இனிதாக—உணர-அறியவைத்திடுமின் - வையுங்கள் — வைத்தால்-வைக்கப்பெற்றால்—குணபால்-கீழ்த்திசையில்—எழுந்து-உதயமாகி—வெய்தாய் - வெவ்வியதாய்—கனலும் - சுடுகின்ற—கொடிய-கொடுமைபொருந்திய — வெண்டி



ங்கள்-வெள்ளியசந்திரனுடைய—கதிர் - கிரணமாகிய—வெம் - வெய்ய—கடலை-சமுத்திரத்தை—அருந்தாதோ - (அது) குடியாதோ—எ-று.
* தொல்காப்பியமரபியல்-ச-சூ-அவற்றுள் பார்ப்பும்பிள்ளையும் பறப்பவற்றிளமை- இவ்விதியால்பறவைக்குஞ்சென்றறிக (கருத்து) பெண்களேயென்னது சகோரக்குஞ்சினை அகத்தியரிடத்துக்கடலைக்குடிக்கும் வித்தையைக்கற்பியுங்கள் கற்பித்தால்சந்திரகிரணக்கடலைக் குடியாதா வென்றனள் என்பதாம். (௨௰)

பதுமமலர்மெல்லணைகிடத்திப்பனிநீர்தெளித்துச்சாந்தணிந்து
முதிர்வெங்காமக்கனலவிப்பான்முயலாநின்றமொய்குழலீ
ரதிருங்கடல்வான்முகட்டிலெழுந்தழற்றுங்கொடியகதிர்பரப்பு
மதியங்குளிரமருந்தறிவீர்வடவைத்தழலுமவிப்பீரே.

(இ-ள்;) பதுமமலர் - தாமரைமலரிற்பரப்பிய—மெல்லணை-மெல்லியமெத்தையில்—கிடத்தி- படுக்கவைத்து—பனிநீர்-பனிநீரை—தெளித்து-இறைத்து—சாந்து-சந்தனத்தை—அணிந்து-பூசி—முதிர் - முதிர்ந்திருக்கின்ற—வெம்-வெவ்விய—காமக்கனல்-காமத்தீயை—அவிப்பான்-தணிக்கும்பொருட்டு—முயலாநின்ற -முயலுகின்ற—மொய்குழலீர்-மங்கையரே—அதிரும்-ஒலிக்கின்ற—கடல்-கடலினது—வான் - மேலாகிய—முகட்டில்-உச்சியிலே—எழுந்து-உதித்து—அழற்றும்- சுடுகின்ற—கொடிய-கொடுமைபொருந்திய—கதிர் - கிரணங்களை—பரப்பும்-விரிக்கின்ற—மதியம்-சந்திரன்—குளிர-குளிர்ச்சிபெற—மருந்து-மருந்தை—அறிவீர்-அறிவீர்கள்—வடவைத்தழலும் -வடவாமுகாக்கினியையும்—அவிப்பீர்-தணியச்செய்வீர்—எ-று. (கருத்து) தாமரையணையிற்கிடத்திப்பனிநீர் தெளித்துச் சந்தனத்தைப்பூசிக் காமாக்கினியையவிக்கும்பொருட்டு முயற்சிசெய்யும் பெண்களே சந்திரன் குளிர மருந்தறிவீர்கள் வடவாமுகாக்கினியையுமவிப்பீர்களென்றனளென்பதாம். (௨௧)

துணர்த்தாரளகமடநல்லீர்சுடுவெங் * காமக்கொடுந்தீயைத் [ள
தணிப்பானெண்ணிக்கொடுவந்த தண்ணென்கதிர்கால்வெண்டா
மணித்தாழ்வடமும்வியன்சினைத்தே மாவின்றளிருமெஞ்ஞான்
மணித்தாயிருந்தவடவையுந்தீவெங்கானிற்றீயுமமைந்தனவே. [று

(இ-ள்-) துணர் - பூங்கொத்துக்களையுற்றதார்- மாலையையணிந்த—அளகம் - கூந்தலையுடைய—மடம் - இளமைபொருந்திய—நல்லீர்-மங்கையரே—சுடு - சுடுகின்ற—வெம்- வெவ்விய—காமம் - ஆசையாகிய—கொடுந்தீயை - கொடியதீயை—தணிப்பான் - தணிக்கும்பொருட்டு—எண்ணி - கருதி—கொடுவந்த - கொண்டுவந்த— தண்ணென்குளிர்ச்சிபொருந்திய—கதிர் - கிரணங்களை—கால் - வீசுகின்ற—வெள்- வெள்ளிய—தாளமணி-முத்துக்களாலாகிய—தாழ் - தொங்கிய—வடமும்—கோவையும்—வியன்-பருத்த— சினை-கிளைகளையுடைய—தேம்-வாசனைபொருந்திய — மாவின்றளிரும் - மாங்கொழுந்தும்—எஞ்ஞான்றும்

அங்கராகம்—அணிந்தாயிருந்த - சமீபமாயிருக்கப்பெற்ற—வாடையும் - வடவாமுகாக்கினியாகவும்—வெம் - வெவ்விய—காளிற்றியும் - காட்டுத்தீயாகவும்—அமைந்தன - ஆயின - எ-று. * தொல்காப்பியம் - புறத்திணையியல் - உஅ-கு-சூ-காமப்பகுதிகடவுளும்வரையார - ரேனோர்பக்கமென்மனார் புலவர் - இவ்விதியால்காமமகிழ்வாளாயினன். (கருத்து) கூந்தலையுடையமாதர்களே காமாக்கினியைத்தணிக்கும்பொருட்டுக்கொண்டுவந்தாரங்களும்மாந்தளிர்களும்வாடைக்கினியைப்போலுங்காட்டுத்தீயைப்போலுமிருந்தனவென்றானென்பதாம். (உஉ)

மழலைச்சொன்மதர்நெடுங்கண்மடவீர் கொடுந்திங்கட்குறும்
சுழலைப்பகுவாய்கருவிப்பின்றுன்போன்றதக்கூர்க்குஞ்சி [வெ
யழலைக்கூற்றுமூழ்வந்துறையுந்தென்பாற்றிசை நின்றசைந்துவரு
குழவித்தென்றலாருயிரைக்குடியாதன்புகூராதே.

(இ-ள்.) மழலையம்பொருந்திய—மழலைச்சொல் - குதலைச்சொல்லையும்—மதர் - களிப்புப்பொருந்திய—நெடுங்கண் - நெடியகண்களையுமுடைய—மடவீர் - மங்கையரே—கொடுந்திங்கட்குறும் - கொடியசந்திரனிடத்தேனும்—வெம் - வெவ்விய—சுழலைக்கண் - சுழலுகின்றகண்களையும்—பகுவாய் - பிளப்பாகியவாயினையுமுடைய—கருவியும் - கருநிறமுடையனாகவும்—கார் - கரிய—இருள்போல் - இருளைப்போன்ற—திரந்த - திரண்டகுஞ்சியும்—குடர்க்குஞ்சி - செந்நிறச்சிகையையும்—அழலைச் - அழலைச்செய்கின்ற—கண் - கண்களையுமுடைய—கூற்றும் - யமனும்—உழந்து - மகிழ்ந்து—உறையும் - வசிக்கின்ற—தென்பாற்றிசை நின்று - தென்திசையிலிருந்து—அசைந்துவரும் - உலாவுகின்ற—குழவித்தென்றல் - இளந்தென்றலானது—ஆர் - நிறைந்த—உயிரை - விரகமுடையவுயிரை—குடியாது - பானம்பண்ணுமல்—அன்புகூராது - அன்புசெய்யாது—எ-று. (கருத்து) மங்கையரே திங்களுருவும்கொடியபார்வையுமுடைய யமனும்வாசஞ்செய்யுந் தென்றிசையிலிருந்துவரும் இளந்தென்றலானது என்னுயிரைக்குடியாதன்புகொள்ளாது என்றானென்பதாம். (உ௩)

விளரிச்சுரும்பர்பாண்முரலவிரிதண்படலைத்தூமாமார்ப
வெளிறுக்கதிரிச்சக்கரப்படையேந்தோராதுள்ளமவெருவியதோ
குளிர்வெண்மதியைத்துயிர்க்குங்கூர்முள்ளெயிற்றுக் கரும்பாம்
பொளிநிற்கவர்ந்தும்விழுங்காமலென்னேவாளாவுமிழ்ந்ததுவே [த

(இ-ள்) விளரி - விளரிராகத்தைப்பாடுகின்ற—சுரும்பர் - வண்டுகளானவை—பாண்முரல் - இசையைப்பாட—விரி - விரிந்த—தண் - தண்ணிய—துழாய்ப்படலை - துளபமாலையணிந்த—மார்ப - மார்பினையுடையகாரணனே—ஒளிரும் - பிரகாசியாநின்ற—திகிரி - சக்கரமாகிய—கடர்-காந்திபொருந்திய—படையென்று - ஆயுதமென்றெண்ணி—ஓராது - இன்னதென்றறியாமல்—உள்ளம் - மனம்—வெருவியதோ - பயந்ததோ—குளிர் - குளிர்ச்சிபொருந்திய—வெண்மதியை - வெள்ளி



91

யசந்திரனை—நஞ்சுயிர்க்கும் - விடத்தைத்தருகின்ற—கூர்முள் - கூரிய முட்கள்போன்ற—எயிற்று - பற்களையுடைய—கரும்பாம்பு - இராகுவென்னும்பாம்பானது—ஒளிநில் - ஒளியில் - இசைகை—கவர்ந்தும் - பற்றியும்—விழுங்காமல் - உட்கொள்ளாமல்—என் - என்னகாரணம்—வாளா - வீணே—உமிழ்ந்தது-உமிழ்ந்துவிட்டது—எ-று. (கருத்து) கரும்பாம்பானது சந்திரனைத் திருமாலின்சக்கரமென்றுபயந்தோ விழுங்கியும்உமிழ்ந்துவிட்டதுஎன்றான்என்பதாம். (உச)

முழைவாய்திறந்துதெழித்தடர்மூரியெருமைப்பெரும்பகடூர்ந்
தொழியாதுவரிசூழ்கிடந்தவுலகில்வாழ்பல்லுயிர்கவர்ந்து
பழிகூர்வெய்யகருங்கூற்றைத்தருமனெனப்பேர்பகர்ந்திடுவோர்க்
கழன்மாமதியைத்தண்மதியென்றுரைக்குமாற்றமரிதேயோ.

(இ-ள்.) முழை-குகையையொத்த—வாய்திறந்து - வாயைத் திறந்து—தெழித்து - பேரொலிசெய்து—அடரும் - போர்செய்கின்ற—மூரி-வலிமைபொருந்திய—பெரு - பெரிய—எருமைப்பகடு - எருமைக்கடாவை—ஊர்ந்து - செலுத்தி—ஒழியாது - நீங்காமல்—உவரி - கடலானது—சூழ்கிடந்த - சூழப்பெற்றிருக்கின்ற—உலகில் - உலகத்திலே—வாழ் - வாழ்கின்ற—பல்லுயிர் - பலவாகியவுயிர்களை—கவர்ந்து - வெவ்வி—பழிகூர் - நிந்தைமிகுந்த—வெய்ய - வெவ்விய—கருங்கூற்றை - கரியயமனை—தருமனென - தருமராஜனென்று—பேர்பகர்ந்திடுவோர்க்கு-பேர்சொல்லுவோர்க்கு—அழல் - வெம்மையைச் செய்கின்ற—மாமதியை - பெரியசந்திரனை—தண்மதியென்று - குளிர்ந்தசந்திரனென்று—உரைக்கும் - சொல்லுகின்ற—மாற்றம் - சொல்லானது—அரிதே - அரிதோ—எ-று. (கருத்து) உலகிற் பல்லுயிரைக் கொல்லும் யமனைத்தருமராசனென்று பேர்சொல்லுவோர் வெம்மதியைத்தண் மதியென்றுசொல்வதரிதோவென்றான்என்பதாம். (உ௫)

* அறுகான்முரலுநறுங்கூந்தற்சீதையொருத்தியாவியுய்யப்
பெறுவான்வரைகளனைத்துநெடுங்கடல்வாய்ப்பெய்தபெருங்கவிகள்
சிறுகாலுயிர்க்குந்தமிழ்வரையைமுந்நீரகத்திற்சேர்த்தியவே
லுறுகாதலனைத்தனைத்துறையுமடவார்பலருமுய்வாரோ.

(இ-ள்.) அறுகால்-வண்டுகளானவை—முரலும் - ஒலிக்கப்பெற்ற—நறும் - நறுவிய—கூந்தல் - அளகத்தையுடைய—சீதையொருத்தி-சீதையென்னுமொருமங்கையானவள் — ஆவியுய்யப்பெறுவான் - உயிர்பிழைக்கப்பெரும்பொருட்டு—வரைகளனைத்தும் - மலைகள்யாவையும்—நெடுங்கடல்வாய் - நெடியகடலினிடத்தே—பெய்த - இட்ட—பெருங்கவிகள் - பெரியவானரங்கள்—சிறுகால் - தென்றற்காற்றை—உயிர்க்கும் - பெறுகின்ற—தமிழ்வரையை - பொதியமலையை—முந்நீரகத்தில் - அக்கடலினிடத்து—சேர்த்தியவேல் - சேர்த்தனவாயின் - உறு-பொருந்தப்பெற்ற காதலனை - துணைவனை - தனைத்து-நீங்கி—உறையும் - வசிக்கின்ற—மடவார்பலரும் - பலராயுள்ளமாதர்களும்—உய்வார்-பிழைப்பார்கள்—எ-று. * இலக்கணக்கொத்து - தமிழிய

ல்-கூ அ - கு எழுத்துச்சொற்றிரி பிரண்டேயன்றிப் - பொருட்டிரியு ங்குப்பொருந்துமென்ப - இவ்விதியால்-ஆறுகால்-அறுகால்- என்றெரு த்துத்மரிந்தது (கருத்து) சீதையின்பொருட்டுமலை களைக்கடலிற்போட் டகுரங்குகள் பொதியமலையையுங்கடலிற் போட்டிருக்குமேல் கணவ ரைப்பிரிந்தமாதர்கள்பலருமுயிர்வாழ்ந்திருப்பார்களென்பதாம். (உசு)

சீதையொருத்திகாதலனைத்தணந்துளாரிற்சிறப்புடைய
ளாதலுணர்ந்தேமருகிருந்தோராக்கமாதாதலினாற்
காதலுளர்போற்றோழியர்சூழ்ந்திவ்வாறியற்றிற்கழிதுயரா
லேதமுழந்துள்ளுயிர்சோருமென்போலயர்வுற்றிருப்பாளே.

(இ-ள்.) சீதையொருத்தி - சீதையென்னு மொருத்தியாத்திரம் காதலனை - கணவனை—தணந்துளாரில் - நீங்கினவர்களில்— சிறப்பு டையளாதல் - சிறப்பையுடையளாதலை — உணர்ந்தேம் - அறிந்தேம் — அருகிருந்தோர் - பக்கத்திலிருந்தவர்கள்— அரக்கமாதாதலினால் - இராக்கதமங்கையராகையினாலே — தோழியர் - தாதியர்கள்—காதலு ளர்போல் - ஆசையுடையவர்களைம்போல்—சூழ்ந்து - சுற்றிக்கொண்டு —இவ்வாறு - இந்தப்பிரகாரம்—இயற்றில் - செய்தால்—கழி - மிகுந்த —துயரால் - துன்பத்தினாலே—ஏதமுழந்து - வருத்தமிகப்பொருந்தி —உள் - உள்ளே(யிருக்கின்ற)—உயிர் - ஆவி—சோரும்-சோர்வை யடை ந்திருக்கின்ற—என்போல் - என்னைப்போல்—அயர்வுற்று - துன்பத் தைப்பொருந்தி—இருப்பாள்-இருப்பாள்—எ-று. (கருத்து) கணவனை ப்பிரிந்தவரிற் சீதையொருத்தி காமச்சாந்தியால்வருத்தமடை யாதவள் தோழியர் எனக்குச்செய்தல்போலவளுக்குஞ்செய்யில் வருத்தமடைந் திருப்பாளென்பதாம். (உஎ)

கொங்கிற்பொலிந்துநறவுயிர்க்குங்கொன்றைத்தொடையலணிகுழகன்
றிங்கட்கலைகளைத்துமொளிர்செம்பொற்சடையிற்கரந்தனனே
வெங்கட்டுளைவாளெயிற்றரவம்விழுங்கியுமிழாதிருந்ததோ
கங்குற்பொழுதுந்தனியாழிசெலுத்தாநிற்குங்கதிரோனே

(இ-ள்.) கொங்கில்வாசனையினாலே—பொலிந்து - பிரகாசித்து— நறவு-தேனை—உயிர்க்கும் - துளிக்கின்ற— கொன்றைத் தொடையல் கொன்றைமலராற்செய்தமாலையை—அணி-தரிக்கப்பெற்ற, குழகன் - ப ரமசிவன்— திங்கட்கலைகளைத்தும் - சந்திரனுடைய பதினாறுகலையை யும்;ஒளிர்-விளங்காநின்ற, செம்பொன்-சிவந்தபொன்வடிவ மாயிருக்கி ன்ற—சடையில்-சடாபாரத்தில்—கரந்தனனே - ஒளித்து வைத்தானே —வெங்கண் - வெவ்வியகண்களையும்—வாள் - ஒளிபொருந்திய — து ளை-துளையுள்ள—எயிறு - பற்களையுமுடைய—அரவம் - பாம்பானது —விழுங்கி-உட்கொண்டு—உமிழாதிருந்ததோ - கக்காமலிருந்து விட் டதோ—கங்குல்பொழுதும் - இராத்திரிகாலத்திலும்—தனி - ஒப்பற் ற—ஆழி-சக்கரத்தை—கதிரோன் - சூரியனானவன் — செலுத்தாநிற்கு ம்-செலுத்துகின்றான்—எ-று. (கருத்து) இரவிலுஞ் சூரியனானவன் ச



க்கரத்தைச்செலுத்திநிற்கின்றான்சந்திரகிரணங்களனைத்தையுஞ்சிவன் சடையிலொளித்து வைத்தானோ கரும்பாம்புண்டு உமிழாதிருந்ததோ வென்றாள் என்பதாம். (உஅ)

வடுக்கண்டுயிலாதறவருந்துமடவார்தமையும்படைத்தவரைத்
துடைக்கும்படிவெவ்விடங்காலுஞ்சுடர்மாமதியுமமைத்தழலின்
விடுக்குங்கதிர்கடொடிற்கனற்றும்வெம்மைக்காற்றாதிதழ்க்கதவ
மடைக்குங்கமலத்திடையொளிக்குமருமாமறையோன்வாழியவே,

(இ-ள்.) வடு - மாவடுபோன்ற—கண்-கண்கள்— துயிலாது-நித்தி ரைசெய்யாமல்—அற - மிகவும்—வருந்தும் - வருந்தப்பெற்ற—மட வார்தமையும் - மகளிரையும்—படைத்து - உண்டாக்கி—அவரைத்து டைக்கும்படி - அம்மகளிரையழிக்கும்படி — வெவ்விடம் - வெவ் வியவிடத்தை—காலும் - கக்கப்பெற்ற—சுடர் - காந்திபொருந்திய— மாமதியுமமைத்து - பெரியசந்திரனையும்படைத்து—அழலின் - தீயை ப்போல—விடுக்கும் - அவனால்)விடப்பட்ட—கதிர்கள்-கிரணங்கள்— தொடில் - தொட்டால்—கனற்றும்-சுடுகின்ற—வெம்மைக்கு - வெப் பத்திற்கு—ஆற்றாது - தரிக்காமல்—இதழ்க்கதவும் - இதழாகியகதவு களை—அடைக்கும் - அடைக்கப்பெற்ற—கமலத்திடை - தாமரைவீட் டில்—ஒளிக்கும் - ஒளித்துக்கொள்ளும்—அரு-அரிய—மா - பெரிய —மறையோன், வேதநூற்குரியபிரமன்—வாழிய - வாழக்கடவன்— —எ-று. * நன்னூல்-வாழியவென்பதனீற்றிறுயிர்மெய் - யேகலுமு ரித்தஃதேகினுமியல்பே-இவ்விதியால் இயல்பாயிற்று - (கருத்து) பெ ண்களையும்படைத்து அவர்களையழிக்கச் சந்திரனையும் படைத்து அவ ன்கிரணம்படிற்சுடுமென்று தாமரையிலொளிக்கும் பிரமதேவன்வாழ க்கடவன் என்றாள் என்பதாம். (உகூ)

தண்ணங்கதிர்வெண்மதியென்பார்தழலாய்முடிந்ததென்னவும்
வண்ணவரிவின்மதன்பகழிமலரென்பாரவையுமுயி
ருண்ணுமரவக்கணைபோயுடற்றுகின்றவொருபாவிப்
*பெண்ணென்றயலார்தூற்றிடப்பிறந்தேற்கின்னுமேதாம்பேருலகே

(இ-ள்.) (சந்திரனை) தண் - தண்ணிய—அம்-அழகிய—கதிர் - கி ரணங்களையுடைய—வெண்மதியென்பார் - வெள்ளியசந்திர னென்று சொல்லுவார்—தழலாய்முடிந்தது - அது அக்கினியாய் விட்டது—எ ன்னவும்-என்மட்டும்—வண்ணம் - அழகிய—வரி நெடிய—வில்— கருப்புவில்லையுடைய—மதன்பகழி-மன்மதனுடையபாணங்கள்—மல ரமென்பார் - மலரென்றுசொல்லுவார்கள்— அவையும் - அம்மலர்க ளும்—உயிருண்ணும் - உயிரையுண்கின்ற—அரவக்கணைபோல் — சர் பபாணங்கள்போல—உடற்றுகின்ற - கொல்லுகின்றன—ஒரு - ஒப் பற்ற—பாவிப்பெண்ணென்று - பாவியாகியபெண்ணென்று — அய றூற்றிட - அயலார்தூற்ற—பிறந்தேற்கு - பிறந்தவெனக்கு—பேருல கு-பெரியவிவ்வுலகிலுள்ளவைகளில்—இன்னுமேதாம்-இனியெதுவெ துவாமோவறியேன்—எ-று.*குலயாகந்தம் - பல்பொருட்பெயரே

பெயர்ச்சொல்லாகும்—இவ்விதியால் உவகுபெயர்ச்சொல் * அகத்தியம்-பேயரின்பொருட்டுத்திணைவருக்கதுவே யென்றாகத்தியர் (கருத்து) சந்திரனைக்குளிர்ச்சியென்பார்கள் அஃதென்னளவில் நெருப்பாயிற்றுமன்மதபாணங்களை மலரென்பார் அவையென்னுயிரைக்கொல்லு மாவக்கணையாயின என்றாள்-எ-ம். (௯௰)

திரைசெய்கரியகடற்பிறந்த திங்கட்கொழுந்துந்தமிழ்ப்பொதிய
வரையில்வளர்ந்த நறுஞ்சாந்தும்வயவாள்வேந்தர்மார்பேற்குந்
தரளவடமுமுருகுயிர்க்குந்தண்ணென்மலருமபைந்தொடிதன்
விரகவனலைமேன்மேலுமூட்டும்விறகுபோன்றனவே

(இ-ள்) திரைசெய்-அலைகளைச்செய்கின்ற—கரிய - கருமைபொருந்திய—கடற்பிறந்த- கடலினிடத்தேதோன்றிய—திங்கட்கொழுந்தும்-பாலசந்திரனும்—தமிழ் - தமிழ்தோன்றிய—பொதியவரையில் - பொதியமலையில்—வளர்ந்த . வளரப்பெற்ற—நறுஞ்சாந்தும் - நறியசந்தனமும்—வயம் - வலிமைபொருந்திய — வாள் - வாட்படையையுடைய—வேந்தர் - அரசர்களது—மார்பு - மார்புகள்—ஏற்கும் - ஏற்றற்குரிய—தரளவடமும் - முத்துமாலையும்—முருகுயிர்க்கும் - வாசனையைத்தருகின்ற—தண்ணென்மலரும் - குளிர்ச்சியாயிருக்கின்றமலரும் —பைந்தொடிதன் - பசியவளையலணிந்ததமயந்தியினுடைய—விரகவனலை - விரகத்தாலாகிய தீயை —மேன்மேலும் - மேலுமேலும்—மூட்டும் - மூளச்செய்கின்ற—விறகுபோன்றன - விறகுகளைப்போலிருந்தன—எ-று. (கருத்து) சந்திரனும் சந்தனமும்முத்துவடமும் மலர்களும் தமயந்தி காமாக்கினியைமூட்டும் விறகுகளைப்போலிருந்தது-எ-ம். ()

நறைகொப்புளிக்குமலர் வாளிநலியவாற்றாதுயிர்ப்பொறைகொண்
டுறைதற்கரிதென்றிகல்வேழமுண்டகனிபோலுள்ளுடைந்து
மறுவற்றொளிருமதிமுகத்துமானேர்நோக்கிவிடுத்திடவும்
பெறுதற்கரியவுருவிதெனப்பிரியாதிருந்ததின்னுயிரே

(இ-ள்) நறை - தேனை—கொப்புளிக்கும் - உமிழ்கின்ற—மலர்வாளி-மலர்க்கணைகளானவை—நலிய-வருத்துதல்செய்ய—ஆற்றாது-பொறுதவளாகி—உயிர்ப்பொறைகொண்டு—உயிர்ப்பாரஞ்சுமந்து—உறைதற்கு - தங்குதற்கு—அரிதென்று - அருமையென்று—இகல் - பகைமைபொருந்திய—வேழமுண்டகனிபோல் - யானையுண்ட விளங்கனிபோல்—உள்ளுடைந்து - மனந்தளர்ந்து—மறுவற்று - களங்கமற்று, ஒளிரும், விளங்காநின்ற—மதி - சந்திரன்போன்ற—முகத்து - முகத்தையுடைய—மானேர் - மானையொத்த—நோக்கி - பார்வையையுடையதமயந்தி—விடுத்திடவும் - தன்னைவிட்டுவிடவும்—பெறுதற்கு - பெறுதற்கும்—அரியவுருவிதென - இஃதரியவடிவமென்று—இன்னுயிர் - (அவளை) அவளினியவுயிரானது—பிரியாதிருந்தது-விட்டுநீங்காமலிருந்தது—எ-று. (கருத்து) மலர்க்கணைவருத்துதல் செய்யதமயந்தி வேழமுண்டகனிபோலாகிப் பெறலரியதிருவுருவென்று உயிரைவிடாதிருந்தாள் என்றாள்-எ-ம். [வேழமென்றதுவைத்தியசாத்திரத் தின்ப



டிதூர்வியாதியாம் அதுமரத்திற் காய்த்திருக்கும்விளங்கனியையுக்குடுக்கையவ்வ்கும், பிரத்தியட்சபிரமாணமாக்விளாமரத்திற் குடுக்கைகாணலாம் ஆதலில் இக்கருத்தும் பொருந்தும். (௯௨)

தார்வாய்முரலுமினவண்டின் சிறைமெல்லியாலிடைதளர்ந்து
சோர்வாடிதலைபரந்தமூலத்துணையினஞ்சனமைதோய்ந்த
கூர்வாளனைய * னீர்வார்தல்கொற்றமாரன்விரகமெனு
மீர்வாள்கைக்கொண்டுயிர்போழ்தற்கெற்றுநூல்போன்றிருந்ததுவே

(இ-ள்.) தார்வாய் - மலர்மாலையினிடத்தில்—முரலும் - ஒலிக்கிற—இனம் - கூட்டமாயுள்ள—வண்டின் - வண்டுகளின்—சிறை-இறகினுடைய—மெல்லியால்-மெல்லியகாற்றால்—இடை—தளர்ந்து இடைய—வருந்தி— சோர்வாள் - சோர்பவளாகியதமயந்தியினது—திகைபரந்த - வேறுபட்டநிறைத்தையடைந்த—மூலத்துணையின் - இரண்டினங்களின்—காப்பண-கடுவே—மைஅஞ்சனமானது—தோய்த்த - கலந்த—கூர்வாள் - கூரிவாட்படையையொத்த —நெடுங்கண்-நெடியகண்களினின்றும்— நீர்வார்தல் - நீரொழுகுதல்—கொற்றம் - வெற்றிபொருந்திய—மாரன்-மன்மதனானவன்—விரகமெனும்- பிரிவென்கிற—ஈர்வாள் - அறிவாளை, கைக்கொண்டு - கையிற்கொண்டு— உயிர்-உயிரை—போழ்தற்கு - பிளத்தற்கு—ஏற்று நூல்போன்று - ஏற்றியநூலையொத்து—இருந்தது-இருந்தது—எ-று. (தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்-ருக-கூ-இளிவேஇழவேயசைவே வறுமையென விளியிற்கொள்கையழுகைநான்கேஇவ்விதியால் அழுகைவந்தவாறுணர்க(கருத்து)தமயந்தி இருகண்களின்றும் மைக்கண்ணின்நீரொழுகுதல் மன்மதனெனவன் வாளைக்கைக்கொண்டு உயிரைப்பிளத்தற்குநூலபோட்டதைதொத்திருந்ததுஎன்பதாம். (௯௩)

புலவுத்திரைசூழ்நிலவலயம்புரக்கும்வேந்தரயிப்பிறப்பி
னலமுற்றுறவிண்டணைவதற்குநவைதீர்தவமுன்னியற்றுதே
னிலவுத்துவர்வாய்மடநல்லீரின்னும்பிறந்துபுணர்வனென
நிலவுத்தழலிற்புகுந்திறப்பனையாநிற்குமேழையே

(இ-ள்) புலவு - புலால்நாற்றத்தையுடைய—திரைசூழ் - கடல்சூழ்ந்த—நிலவலயம்-பூமண்டலத்தை—புரக்கும்-காக்கின்ற—வேந்தரசனை—இப்பிறப்பில்-இந்தப்பிறப்பில்—நலம் - இன்பமானது—முற்றுற - நிறைவுபெற—கண்டு-இவ்விடத்தில்—அணைவதற்கு - தழுவுதற்கு—நவைதீர் - குற்றநீங்கிய—தவம் - தவத்தை—முன் - முற்பிறப்பில் — இயற்றுதேன் - செய்யாதயான்—இலவு - இலவிதழ்போன்ற—துவர் - சிவந்த—வாய் - வாயையுடைய—மடம்- இளமைபொருந்திய—நல்லீர் - மடவீர்—இன்னும் - இன்னமும்—பிறந்து - உதித்தாவது—புணர்வனென - கூடுவேனென்று—நிலவு - சந்திரிகையாகிய—தழலிற்புகுந்து - தீயின்மூழ்கி—இறப்ப-உயிரைநீங்க— ஏழைதமயந்தியானவள்—நினையாநிற்கும்-நினைக்கின்றாள்—எ-று. (கருத்து-)

னளனை இப்பிறப்பிற்கூடுதற்கு முற்பிறப்பிற் றவஞ்செய்யாத தமயந்தி யானவள் இனிப்பிறந்து நளனைப்புணர்வனென் றுசந்திரனைத் தனை விற்புகுத்திறக்கநினைக்கின்றாளென்பதாம். (௬௪)

மன்றற்குழலார்வளிவிலக்கிவயங்குசுடர்காத்தெனமாரன்
வென்றிக்கொடியினுருவமைந்தமடமான் முலையில்விசாமற்
குன்றிற்பிறந்துதாதளைந்துகுளிர்தூங்கருவிதோய்ந்துநறுந்
தென்றற்குழவிநுழைந்துவருஞ்சிறுசாளரங்கடாழ்செறித்தார்

(இ-ள்) மன்றல் - பரிமளம்பொருந்திய—குழலார்-கூந்தலையுடையமகளிர்—வளிவிலக்கி - காற்றினுண்டாகுமிடையூற்றைநீக்கி—வயங்கு - பிரகாசியாநின்ற—சுடர்-விளக்கை—காத்தென-காத்தாற் போல—மாரன் - மன்மதனுடைய—வென்றி - வெற்றிபொருந்திய—கொடியின் - கொடியைப்போல—உருவு -வடிவமானது—அமைந்த - அமையப்பெற்ற—மடமான் - தமயந்தியினுடைய—முலையில் - தனத்தில்—விசாமல் - மோதாமல்—குன்றில்- பொதியமலையில், பிறந்து-தோன்றி—தாது-மலர்ப்பொடியை—அளைந்து - பூசிக்கொண்டு - குளிர்தூங்கு-குளிர்ச்சிபொருந்திய—அருவி - அருவிநீரில்—தோய்ந்து - முழுகி—நறும்-நறிய—தென்றற்குழவி—இளந்தென்றல்—நுழைந்து- புகுந்து—வரும் - வருகின்ற—சிறு - சிறிய—சாளரங்கள் - பலகணிகளினுடைய—தாழ் - தாழை—செறித்தார் -பதித்தார்கள்—எ-று.(கருத்து) பாங்கிமார்கள் தென்றற்காற்றிநுழையும் சாளரவாயற்படங்களைச்சாத்தினர்களென்பதாம். (௬௫)

வெந்தீயதனிற்பெய்தளிர்போன் மெலிந்துவிளையாட்டயர் செழும்பூம்
* பந்தோடரியகழங்கணிகள்பலவுந்துறந்துமலர்மகளை
யந்தாரகலத்திருத்தியபோர்வேந்தன்பெயரேயறைதலாற்
செந்தார்ப்பசியகிள்ளையென் றுந்துறவாதிருந்தாள்சேயிழையே

(இ-ள்.) வெந்தியதனில் - வெவ்வியநெருப்பினில்—பெய்-போட்டப்பட்ட—தளிர்போல் - தளிரைபோல—மெலிந்து - விரக்தாக்கினியால்வாடி—விளையாட்டயர் - விளையாடுதற்குறிய—செழு-செழிய—பூ-அழகிய—பந்தோடு - பந்துடனே—அரிய-அரியவாகிய—கழங்கு - அம்மனைகளையும்—அணிகள்பலவும் - பலவாபரணங்களையு—துறந்து-நீக்கி—மலர்மகளை - திருமாதை—அம - அழகிய—தார் - மாலையணிந்த—அகலத்து-மார்பினிடத்திலே—இருத்திய- இருக்கச் செய்த— போர் - போரைவிரும்பிய—வேந்தன் - நளராசனதுன்பெயரே-பெயரினையே—அறைதலால் - சொல்லுதலால்—செம் - சிவந்த—தார் - இரேகையையுடைய— பசிய-பசுமைநிறத்தைப்பொருந்திய—கிள்ளையொன்றும்-கிளியொன்றனையும்—சேயிழை - தமயந்தியானவள்—துறவாது-நீக்காமல்—இருந்தாள் - இருந்தனள்—எ-று.[* அகத்தியம் பொருளை பதார்த்தத்திரவியமென்ப-திருஇணையாறு மியலுமற்றதுவே இவ்விதியால்பந்துமுதலியனசற்பதார்த்தம் (கருத்து) தமயந்தியானவள் தீயிற்போட்டதளிராப்போலமெலிந்துப்பந்துமுதலிய வாபரணங்களைநீக்கி நளன்பெயரைச்சொல்லுங்கிளியொன்றையே நீக்காதிருந்தாள்-எ-ம். ()



அலைவாய்விடத்தினுடன்றோன்றி யாவிகவரும்வெண்ணெருப்பே
யுலையாப்புவனமனைத்துமழலொருங்குகொளுத்துநுதற்கண்ணன்
றலைமேலுனதுகலையொன்றேதரித்தானென்றான்மிகவுமுயிர்க்
கொலைசூழ்கொடியோர்களின்போலுங்கொடியாருளரோகூறென்றாள்

(இ-ள்.) அலைவாய் - கடலினிடத்தே—விடத்தினுடன்றோன்றி - விடத்தினுடனேபிறந்து—ஆவி - உயிரை—கவரும் - வௌவுகின்ற—வெண்ணெருப்பே - (சந்திரனென்னப்பட்ட) வெள்ளியநெருப்பே—உலையா - கெடாத—புவனமனைத்தும் - உலகம்யாவையும்—அழல் தீயாய்—ஒருங்கு - ஒன்றாய்—கொளுத்தும் -கொளுத்துகின்ற—நுதற்கண்ணன் - நெற்றிக்கண்ணினையுடையபரமசிவன்—தலைமேல் - தலையிலே—உனதுகலையொன்றே - உன்னுடையபங்கொன்றினையே—தரித்தானென்றால் - தரிப்பானேயானால்—மிகவும் - அதிகமாக—உயிர் - உயிரை—கொலைசூழ்குநரில் - கொல்லக்கருதுவோர்களில்—நின்போலும் - உன்னைப்போலும்—கொடியார்-கொடுமையையுடையவர்கள்—உளரோ - இருக்கிறார்களோ—கூறென்றாள் - சொல்லென்றாள்—எ-று. (கருத்து) விஷத்துடன்பிறந்துஉயிரைக்கவரும்சந்திரனே உலகம்யாவையும் கொளுத்தும்பரமசிவன் தலைமேலுன்கலையொன்றைத்தரித்தானென்றால் உயிரைக்கொல்பவர்களிலுன்போலுங் கொடியவருண்டோ வென்றாளென்பதாம். (௬௭)

தென்றல்செக்கர்முதலியவற்றை வெறுப்பனவாகச்சில செய்யுளிருப்பினும்சந்திரனைநிந்தித்தல்பெரும்பான்மைபற்றிமுகக்தோட்டமென்றற்போல இப்படலத்திற்கு அப்பெயரிடப்பட்டது.

சந்திரோபாலம்பனப்படலம்

முற்றிற்று.

௨

# மன்மதோபாலம்பனப்படலம்.

முன்னேசந்திரனைநிந்தித்ததமயந்தியானவள்
இப்படலத்தால்மன்மதனைநிந்தித்தல்சொல்லப்படுகின்றது

கலிவிருத்தம்.

மங்குலூடுமறைந்துயிர்வாட்டுமித்
திங்கடன்னைவெறுத்ததுதிங்களை
வங்கழூடொளித்தாருயிர்கூட்டுணுந்
துங்கவேளைவெறுக்கத்தொடங்கினள்

௨௨

(இ-ள்.) (சுயம்பிரபையானவள்) மந்தரம் - மேகத்தினிடத்திலே — மறைந்து - ஒளித்திருந்து — உயிர் - ஆவியை — வாட்டும் - வாட்டுகின்ற, இத்திங்கடனை - இந்தச்சந்திரனை — வெறுத்தது - வெறுத்துப்பேசினது — தீங்கெனு - குற்றமென்றுநினைந்து — அங்கமூடு - தேகத்தினுள்ளே — ஒளித்து - மறைந்துநின்று — ஆர் - நிறைந்த — உயிர் - ஆவியை — கூட்டுணும் - கொள்ளைகொள்ளுகின்ற — ஆங்கம் - உயர்வுபொருந்திய — வேளை - மன்மதனை — வெறுக்க - வெறுத்தல்செய்ய — தொடங்கினாள் - ஆரம்பித்தாள் — எ-று. (கருத்து) சுயம்பிரபையானவள் சந்திரனை வெறுத்து குற்றமென்று மன்மதனை வெறுக்கத்தொடங்கினாள் இஃது புராணிகர்கூற்றுஎன்பதாம். (௧)

வையுமென் னுயிர் காமறப்பூங்கணை
யெய்யும்வேளொன் றியம்புவல்கேட்டியால்
வெய்யசெந்தழ லேந்திவெண்ணீறணி
யையன்முன்னுநீ யாண்டொழிற்காண்பனால்

(இ-ள்.) வையும் - வாட்டுகின்ற — என் னுயிர் - என்னுடைய உயிரினை — காமற - போற — பூங்கணையெய்யும் - பூவம்பையெய்கின்ற — வேள் - மன்மதனே — ஒன்றியம்புவல் - ஒன்றுசொல்வேன் — கேட்டி - கேட்பாயாக — வெய்ய - வெவ்விய — செந்தழல் - சிவந்த நெருப்பை — ஏந்தி - தாங்கி — வெண் - வெள்ளிய — நீறணி - விபூதியைத்தரித்திருக்கின்ற — ஐயன்முன் - பரமசிவனெதிரே — உநீ - அம்பெய்யப்பொருந்து வையாலு ம் — ஆண்டொழில் - நின்னுடைமசேவகத்தை — காண்பன் - காணுவேன் — எ-று. (கருத்து) என்னுயிர்ப்பெயர் நீங்கமலாக்கணையெய்யுமன்மதனே கேள் சிவனிடத்திற்சென்று கணைசெலுத்துவையேயானால் உன் சேவகத்தைக்காண்பேன் என்றாள்-எ-ம். (௨)

அலரின்மீதுறையந்தணனெய்திட
மலைவையன்றி நிவாடுங்கணைநல்குமேற்
சிலையெனக்கழைகொண்டதிறலினோய்
யுலகில்யாவருயிர்கொண்டிருப்பரே

(இ-ள்.) அலரின்மீது - தாமரைமலரின்மேல் — உறை - வசிக்கின்ற — அந்தணன் - பிரமனானவன் — எய்திட - எய்யும்படி — மலைவையன்றி பூக்களையல்லாமல் — வடி - வடிக்கப்பெற்ற — கணை - (இரும்புமுதலியவற்றலாகிய) பாணங்களை — நல்குமேல் - கொடுப்பானேயானால் — கழை - கரும்பினை — சிலையெனக்கொண்ட - வில்லாகக்கொண்ட — திறலினோய் - வலிமைபொருந்தியமன்மதனே — உலகில் - உலகத்தில் — யாவர் - எவர்கள் — உயிர்கொண்டு - ஆவியைக்கொண்டு — இருப்பர் - இருப்பார்கள் — எ-று. (கருத்து) மன்மதனே பிரமதேவன் மலர்க்கணையல்லாது வடிக்கணைகொடுப்பானாகில் உலகத்தில்யார் உயிர்வைத்திருப்பார்கள் என்றாள்-எ-ம். (௩)

அருவமாயணுவாய் * மனத்தையும்
வினைகொள்வாளிவிடுத்துப்பிளத்தலாற்



பொருவில்வேள்கட்புலனிற்புலப்படு
முருவுபோழ்தலுனக்கரிதன்றரோ

(இ-ள்) அருவமாய் - அரூபமாகியும் — அணுவாய் - அணுவடிவாயுமிருக்கின்ற — மனத்தையும் - மனத்தினையும் — வினைகொள் - வாசனையைக்கொண்ட — வாளி - மலரம்புகளை — விடுத்து - எய்து — பிளத்தலால் - பிளக்கின்றபடியால் — பொருவில் - ஒப்பில்லாத — வேள் - மன்மதனே — கட்புலனில் - நேத்திரேந்திரியத்திற்கு — புலப்படும் - விடயப்படுகின்ற — உருவு - வடிவங்களை — போழ்தல் - பிளத்தல் — உனக்கரிதன்று - உனக்கெளிதாம் — எ-று. * தொல்காப்பியம் - மரபியல் — உ௬ சூ - ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே-யிரண்டறிவதுவேயதனொடுநாவே-மூன்றறிவதுவேயவற்றொடுமூக்கே - நான்கறிவதுவேயவற்றொடுகண்ணே - யைந்தறிவதுவே யவற்றொடுசெவியேயாறறிவதுவே யவற்றொடுமனனே நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே - இவ்விதியால்மனமென்பது ஓரறிவுகரன். (கருத்து) மன்மதனே அருவத்தைப்பிளக்குமுனக்கு உருவத்தைப்பிளத்தல் அரிதோ என்றாள் என்பதாம். (௪)

மன்றற்றுறுமதுமலர்வாளிகொண்
டின்றென்னுயிரீருந்தகைமையாற்
குன்றவில்லிகொடுந்தழற்கண்ணில்வேள்
பொன்றினானெனல்பொய்யெனவேண்டுமால்

(இ-ள்.) மன்றல் - வாசனையானது — நாறும் - மணக்கின்ற — மது - தேனையுடைய — மலர்வாளிகொண்டு - மலரம்புகளைக்கொண்டு — இன்று - இப்பொழுது — என் - என்னுடைய — ஆர் - நிறைந்த — உயிர் - ஆவியை — ஈருந்தகைமையால் - அறுக்கின்றமுறைமையினாலே — குன்றவில்லி - மேருவில்லேந்தியபரமசிவனுடைய — கொடு - கொடிய — தழற்கண்ணில் - தீவிழியில் — வேள் - மன்மதனானவன் — பொன்றினானெனல் - இறந்தானென்றுசொல்வது — பொய்யெனவேண்டும் - பொய்யென்றுசொல்லவேண்டும் — எ-று. (கருத்து) மன்மதனானவன் பூவம்புகொண்டென்னுயிரைப் பிளந்தலால்சிவன்நெற்றிக்கண்ணாலெரிந்தானென்னல்பொய்யென்றாள் என்பதாம். (௫)

கூற்றமென்னக்கொலைபுரிவேனிலா
னூற்றிதழ்க்கமலத்திறைநோன்மைய
வாற்றல்சான்றமலர்க்கணையைந்தல
தேற்றநல்கினுலகினையென்செயான்

(இ-ள்.) கூற்றமென்ன - யமனென்னும்படி — கொலைபுரி - கொலைத்தொழிலைச்செய்கின்ற — வேனிலான் - வசந்தகாலத்திற்குரியமன்மதன் — நூற்றிதழ்க்கமலத்திறை - நூறிதழ்களையுடைய தாமரைமலரிலிருக்கின்றபிரமனானவன் — நோன்மைய - நுட்பமாகிய — ஆற்றல்சான்ற - வலிமையுள்ள — மலர்க்கணை - பூவம்புகளை — ஐந்தலது - ஐந்தன்றி — ஏற்றம் - அதிகமாக — நல்கின் - கொடுத்தால் — உலகினை - உலகத்தை —

என்செயான் - என்ன துன்மஞ்செய்யமாட்டான்—எ-று.(கருத்து)யமன்போற்கொலைசெய்யுமன்மதனனவன் பிரமனெங்களைமேலதிககளைத நின்உலகத்தைமென் செய்யமாட்டானென்றாள் என்பதாம். (௬)

அருவமாயுமென்னுவிபதைத் துளம்
வெறுவுமாறுவினைசெயும்வேனிலான்
கருமிடற் * றிறைகண்ணிவெறிந்திடா
துருவமெய்தி னுலகமுழுல்யுமே

(இ-ள்) அருவமாயும் - அருவமடைந்தும்—என் - என்னுடைய ஆவிபதைத்து - உயிர்பதைந்து—உளம் - மனம்—வெறுவுமாறு - பயங்கொள்ளும்படி,வினைசெயும் - மலர்க்கணைகளைத்தொடுக்கின்ற—வேனிலான் - வசந்தகாலத்திற்குரிய மன்மதனனவன்—கருமிடற்றிறை -நீலகண்டத்தையுடைய பரமசிவனது,கண்ணில் - நெற்றிககண்ணில்—எரிந்திடாது - எரிந்திடாமல்—உருவமெய்தில் - வடிவத்தைப்பெற்றிருப்பானுனல்—உலகரும், உலகமும் உய்யுமோ - பிழைக்குமா—எ-று. * திருக்கசங்கிரகம்-௯௯-௬- இறையேயீசன்முற்றறிவனோர்முதலே (கருத்து) அருவமடைந்திருந்தும்என்னுவிபதைக்கவம்பெய்யுமன்மதனனவன் உருவமனிந்தாலுலகம்பிழைக்குமா என்றாள்-எ-ம். (௭)

விரிந்தவேணிவிமலன்வெகுளியா
லெரிந்துளாரிற்பிழைத்தவர்யாவரோ
கரிந்தவேள்பிழைத்தெய்வதுகன்னியர்
புரிந்ததீவினையின்புணர்ப்பாகுமே

(இ-ள்.) விரிந்த - விரியப்பெற்ற—வேணி - சடையையுடைய—விமலன் - பரமசிவனது—வெகுளியால் - கோபத்தினல்—எரிந்துளாரில் - எரிக்கப்பட்டவர்களிலே—பிழைத்தவர் - பின்னும்பிழைத்தவர்கள்—யாவர் - எவர்கரிந்தவேள் - கரிந்துபோனமன்மதன்— பிழைத்து- பின்னும்பிழைத்து—எய்வது - பாணங்களைசெய்வது—கன்னிய - மாதர்கள்,புரிந்த - செய்த—தீவினையின் - பாவத்தினுடைய—புணர்ப்பாகும் - சம்பந்தமாகும் —எ-று. (கருத்து) சிவன்கோபத்தா லெரிந்தவரிற் பிழைத்தவர்யாவர்மன்மதன் பிழைத்தெய்வதுமாதர்கள்செய்த தீவினையின் சம்பந்தமாம் என்றாள்என்பதாம். (௮).

சடிலமன்றுடைத்தார்குழற்பின்னல்கார்
* மிடறுதோன்றல்விடமன்றுகானமே
யுடல்விளர்ப்புவெண்ணீறன்றுருவிலா
யடர்வதென்னையானலன்காண்டியால்

(இ-ள்.) உருவிலாய் -வடிவமில்லாதமன்மதனே—அடர்வதென்னைஎன்னுடன்போர்செய்வதென்ன—சடிலமன்று - சடையன்று—பைம- பசிய—தார் - பூமாலையையணிந்த—குழல் - கூந்தலினது—பின்னல்-வேணி—கார் - கருமை—மிடறு - கழுத்தினிடத்தில்—தோன்றல்தோன்றுதல்—விடமன்று - நஞ்சமன்று—கானமே -கஸ்தூரியாம்—வென் - வெள்ளிய—நீறன்று-விபூதியன்று— உடல்விளர்ப்பு - சரீரத்தினது வெண்ணிறமாம்—அரனலன்- (ஆதலால்)பரமசிவனல்லன்—காண்டி - (நீ) காண்பாயாக—எ-று. * குவலயானந்தம்-உறுப்பியல் -௰௩-கைகால்கண்செவிமார்பு புயமுலை - தலைமுகமிதழ் விரலிவைசினையாகும் - யிவ்விதியால்மிடறுசினைப்பொருள் (கருத்து) மன்மதனேசடையல்ல கூந்தலின்பின்னல் - கண்டக்கறுப்புவிஷமல்ல கஸ்தூரிபூசம் - வெண்ணீறல்ல-உடல்வெளுப்புஆகையால்நான்சிவனல்லஎன்னிடத்திலேன்போர்செய்கிறாய் என்றாள் என்பதாம். (௯)



கொண்டுசெய்வாளிகுளித்தசெம்புண்ணிடைத்
துன்பமெய்தத்தழல்சொரிந்தாலென
வன்பர்போலின்றிறைப்பரா
லென்செயாருயிர்த்தோழியரின்னுமே.

(இ-ள்.) உயிர்த்தோழியர்- உயிரையன்னதோழியராயிருந்தவர்கள்—அன்பர்போல - இப்பொழுதென்னிடத் தன்புடையவர்போல—நின்று -என்னைச்சூழ்ந்துநின்று—கொல் செய்- அச்சத்தைச்செய்கின்ற,வாளி-மன்மதபாணங்கள்—குளித்த - தைத்த—செம்-சிவந்த;—புண்ணிடை-புண்ணினிடத்திலே—துன்பமெய்த-யான்றுன்பத்தை யுடைய—தழல்சொரிந்தாலென - நெருப்பைச்சொரிந்ததுபோல— ஆரம்-சந்தனக்குழம்பை—இறைப்பர் - வீசுவார்கள்—இன்னும்-இன்னமும்—என்செயார் - யாதுசெய்யார்கள்-எ-று. (கருத்து) தோழிமார்கள்மன்மதபாணம்பட்டபுண்ணிடத்துத்தீயைபோலுஞ் சந்தனத்தையிறைக்கிறார்கள் இன்னுமென் செய்ய மாட்டார்களென்றாளென்பதாம், (௰)

தேற்றுவார்சிலர்தேங்கமழ்வாசநீர்
தூற்றுவார்சிலர்தொல்குலதெய்வதம்
போற்றுவார்சிலர்பூண்முலைச்சாந்தினு
லாற்றுவாரினழற்றுகின்றார்சிலர்.

(இ-ள்.) சிலர்-தோழிகளிற்சிலரானவர்—தேற்றுவார் - தேறச்சொல்லுவார்கள்—சிலர் - சிலரானவர்—தேம் - வாசனையானது— கமழ்-மணக்கின்ற—வாசநீர் - பனிநீரை—தூற்றுவார்-வீசுவார்கள் —சிலர் சிலரானவர்—தொல் - தொன்றுதொட்டா ராதித்துவருகின்ற — குலதெய்தவம்-குலதெய்வத்தை—போற்றுவார்- பிரார்த்தனை செய்வார்கள்—சிலர்-சிலரானவர்—பூண் - ஆபரணத்தையணிந்த—முலை- தனத்தின்வெப்பத்தை — சாந்தினல் - சந்தனக்குழம்பினல்—ஆற்றுவாரின் - தணிப்பவர்களைப்போல— அழற்றுகின்றார் - வெப்ப மிகச்செய்வார்கள் —எ-று. (கருத்து) சிலர்தேற்றுவார்கள் சிலர்பனிநீரை ஊற்றுவார்கள் சிலர்குலதெய்வத்தைப் போற்றுவார்கள் - சிலர்சந்தனத்தாலாற்றுவார்கள்போலச்சுடுகின்றார்கள்-எ-ம். (௰௧)

இன்னவாறுமகளிரியற்றவுங்
கன்னன்மாரன்கணைபுயிராவும்
பொன்னின்வார்முலைமுத்தம்பொரிந்திடத்
தன்னையும்மறந்தாடமயங்கியே.

(இ-ள்.) இன்னவாறு-இவ்விதமாய்—மகளிர்-தோழிகள்—இயற்றவும்-உபசாரஞ்செய்யவும்—கன்னல் - கருப்புவில்லேந்திய—மாரன்-மன்மதனுடைய—கணை - பாணங்கள்—உயிர்-ஆவியை—ஈரவும் -பிளக்கவும்—பொன்னின் - பொன்னாற்செய்த—வார் - கச்சையணிந்த—முலை - தனங்களின்மீதிற்றரித்த—முத்தம் - முத்துகள் — பொரிந்திட - நீறாகவும்—தமயந்தி - தமயந்தியானவள்—தன்னையுமறந்தாள் - தன்னையுமறந்துவிட்டாள்—எ-று. (கருத்து) இவ்வாறுபெண்கள்செய்ய வும் மன்மதன் பாணமெய்யவும்முத்துக்கள்பொரிந்திடத் துறந்தாள்தமயந்திதன்னையுமறந்தாளென்பதாம். (௰௨)

காவிமென்குழனன் னுதற்றோழியார்
காவியங்கட்கதிர்முலைக்கன்னியைப்
* பூவின்மெல்லணைசேர்த்திப்புடையிருந்
தாவியுண்டுகொலோவென் றழுங்குவார்.

(இ-ள்.) காவிகஸ்தூரியணிந்த—மெல்-மெல்லிய—குழல் - கூந்தலையும்—நன்னுதல்-நல்லநெற்றியையுமுடைய—தோழியர்-தோழிகள்-காவி-கருங்குவளைபோன்ற—அம் - அழகிய—கண்-கண்ணையும—கதிர்-காந்திபொருந்திய—முலை - தனங்களையுமுடைய—கன்னியை -தமயந்தியை—பூவின்-மலரினாற்செய்யப்பட்ட—மெல் - மெல்லிய—அணை-மெத்தையின்மேல்—சேர்த்தி - சேர்த்து—புடையிருந்து - பக்கத்திலிருந்து - ஆவி - உயிரானது—உண்டு கொலேவென்று-உண்டோவில்லையோவென்று— அழுங்குவார் - வருந்துவார்—எ-று, * தொல்காப்பியம்-மாபியல்-அகூ-ரு - இலையேமுறியேதளிரேதோடே-சினையேகுழையேபூவேயரும்பே- நனையுள்ளுறுத்தவனைபவையெல்லா - மரனொடுவருஉங்கிளவியென்ப - இவ்விதியால் - பூஎன்றது-மரனொடு வந்தது (கருத்து) தோழிமார்கள் தமயந்தியை மலரணையிற்கிடத்தி உயிருண்டோவில்லையோவென்றழுவார்களென்பதாம். (௰௩)

எண்ணியெண்ணியிரங்குவதென்னுயி
ருண்ணிகழ்ந்த துயிர் துறந்தாளவள்
வண்ணமென்றுவர்வாய் துடிக்கின்றது
கண்ணிமைத்தன காணுமென்பார்சிலர்.

(இ-ள்.) சிலர்-அத்தோழிகளிற்சிலர்—எண்ணியெண்ணி - நினைத்துநினைத்து—இரங்குவதென் - புலம்புவதென்ன—உள் - உள்ளே—உயிர்ப்பு - மூச்சு—நிகழ்ந்தது-அசைந்தது—உயிர் - ஆவி—துறந்தாளவள்-நீங்கினவளல்லள்—வண்ணம் - அழகிய—மென்-மெல்லிய—துவர்-பவளம்போன்ற—வாய்-வாயானது—துடிக்கின்றது - துடியாநின்றது—கண்-கண்களானவை— இமைத்தன- இமைத்தல்செய்கின்றன—காணுமென்பார்-பாருமென்பார்கள்—எ-று. (கருத்து) தோழிகளிற்சிலர் அழவேண்டியதென்ன உயிரிருக்கின்றது வாய்துடிக்கின்றது கண்களிமைக்கின்றனபாரென்பார்கள்-எ-ம். (௰௪)



மைந்தடங்கணீர்மாற்றுமின்சோர்ந்துவீ
* முந்தநீகமுயர்முலைசேர்த்துமின்
கொத்துநாண்மலரோடிங்குலைந்துசோர்
மொய்த்தகூந்தன்முடிமினென்பார்சிலர்.

(இ-ள்.) சிலர்-தோழிகளிற்சிலரானவர்—மை— - அஞ்சனத்தீட்டிய—தடம்-விசாலம்பொருந்திய—கணீர்-கண்களினீரை—மாற்றுமின் - மாற்றுங்கள்—சோர்ந்து-சோர்வையடைந்து—வீழ் - வீழ்கின்ற—உத்தரீகம்-மேற்போர்வையை—உயர் - உயர்ந்த—முலை - தனத்தின்மேல்—சேர்த்துமின் - சேருங்கள்—கொத்து-கொத்தாகிய—நாள்-அன்றலர்ந்த—மலரோடும் - பூக்களுடனே — குலைந்து - அவிழ்ந்து—சோர்-சோர்கின்ற—மொய்த்த - நெருங்கிய—கூந்தல்-குழலை—முடிமினென்பார் - முடியுங்களென்றுசொல்லுவார்-எ-று குவலயானந்தம்- உணுப்பியல்-௰௪-ரு - மண்ணினியலாற்கடமெனும்பொருளாய் - நூலினியலாற்படமெனும் பொருளாய்த்-திரிந்துவருதல் சமவாயமென்ப - இவ்விதியால் நூல் சமவாயமென்க அகத்தியம்-சமஞ்சமம்விசேடஞ் சமுதாயமுமுள இதுவுமறிய[ (கருத்து) தோழிகளிற்சிலர் கண்ணீரைத்துடையுங்கள்மேற்போர்வையால் முலையைமூடுங்கள் அவிழ்ந்தகூந்தலை முடியுங்களென்பார்களென்பதாம். (௰௫)

சுடருவெண்மதிதூற்றுந்தழல்சுட
விடரின்மூழ்கியிறந்துபடுமுன
மடவரற்கிடர்மாற்றுவன்யானெனக்
கடன்முகட்டிற்கதிரவன்றோன்றினன்.

(இ-ள்.) சுடரும்-பிரகாசியாநின்ற—வெண்-வெள்ளிய—மதி- சந்திரனானவன்—தூற்றும் - தூற்றுகின்ற—தழல்-தீயானது—சுட-சுடுதல்செய்ய—இடரில்-துன்பத்தில்—மூழ்கி - முழுகி—இறந்துபடுமுனம்-உயிர்நீங்குமுன்னே—மடவரற்கு-தமயந்திக்கு— இடர்-துன்பத்தை—யான்-நானே—மாற்றுவன் - நீக்குவன் — என - என்பவன்போல —கடன்முகட்டில் - கடலினுச்சியில்- கதிரவன் - சூரியன் —தோன்றினன்-உதயமானான்-எ-று. (கருத்து) சந்திரனுகிய நெருப்புச்சுடத்தமயந்தி துன்பத்திலழுந்தியிறக்குமுன் சூரியனுதயமாயினனென்பதாம். ( )

மன்மதோபாலம்பனப்படலம் - முற்றிற்று.

௨

# இந்திரப்படலம்.

இப்படலத்தால் தமயந்தியின் சுயம்வரத்திற்கு இந்திரன் முதலியதேவர்வரவு சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

இடுக்கணெய்தவிகந்துகளித்துளார்
நடுக்கமெய்தநலிதருவேந்தரின்
விடுத்ததண்கதிர்த்திங்கள்விளங்கொளி
கெடுத்துவெய்யவன்கீழ்த்திசைத்தோன்றினன்.

* (இ-ள்.) இடுக்கண்-துன்பத்தை—எய்த-அந்நாட்டிலுள்ளோரடைய—இகந்து - அதிக்கிரமித்து—களித்துளார் - செருக்கடைந்த குறுநிலமன்னர்—நடுக்கம் - நடுக்கத்தை—எய்த - அடைய—நலிதரு - வருத்துகின்ற—வேந்தரின் - அரசரைப்போல்—விடுத்த - (தமயந்திவருந்தும்படி.) விடுக்கப்பெற்ற—தண் - குளிர்ச்சிபொருந்திய—கதிர் - கிரணங்கள்நிறைந்த—திங்கள் - சந்திரனுடைய—விளங்கு - விளங்குகின்ற—ஒளி-காந்தியை—கெடுத்து - அழித்து—வெய்யவன் - சூரியனானவன்—கீழ்த்திசை - கீழ்த்திசையில்—தோன்றினன் - உதித்தான்—எ-று. [*குவலயானந்தம்-சிறப்புப்பாயிரம்-உ-கு - என்னசொல்லினு மியன்றமருங்கிற் - பன்னியுரைப்பதுபதப்பொருளாமே-இவ்விதியால்பதவுரை வந்தவாறிக] (கருத்து) குறுநிலமன்னர் துன்பமடையப்பொருநிலமன்னர்புறப்பட்டாற்போலச் சந்திரபிரகாசத்தைக் கெடுத்துச் சூரியனுதயமாயினன்-எ-ம். (க)

வையமேழுடைமன்னனிருத்தலும்
வெய்யபாசறைவிட்டகல்வேளிரி
னையசெங்கதிராதவன்றோன்றுமுன்
செய்யவான்விட்டகன்றதுதிங்களே

(இ-ள்.) வையமேழுடை - எழுதீபங்களையுமுடைய—மன்னன்-அரசனானவன்—இருத்தலும் - வந்துதங்கினமாத்திரத்தில்—வெய்ய-வெவ்விய—பாசறைவிட்டு - படைவீட்டைவிட்டு—அகல் - நீங்குகிற—வேளிரின் - குறுநிலவேந்தரைப்போல—ஐய-அழகிய—செங்கதிர் -சிவந்திரணங்களுள்ள—ஆதவன் - சூரியனானவன்—தோன்றுமுன்- உதிக்குமுன்னே—செய்ய - சிவந்த—வான்விட்டு - ஆகாயத்தைவிட்டு—திங்கள் - சந்திரனானது— அகன்றது நீங்கியது—எ-று. [இது உவமையணி] (கருத்து) சூரியனுதயமாகுமுன்னே சந்திரன்நீங்கினன் என்பதாம். (உ)

அன்னகாலையிலாய்வளைத்தோழியர்
சென்னல்வாட்டுநிலவுக்கதிர்மதி



யின்னுமெய்திலிறந்துபடுமென
வுன்னியன்னையொடுற்றவைகூறினர்

(இ-ள்.) அன்னகாலையில்-அப்பொழுதில்—ஆய் -ஆராய்ந்தெடுக்கப்பட்ட—வளை - வளையணிந்த—தோழியர் - தோழிகள்—சென்னல் - சேற்றைப்பொழுதில்—வாட்டு - வாட்டிய—நிலவு -பிரகாசம்பொருந்திய—கதிர்-கிரணங்களையுடைய—மதி -, சந்திரனானவன்—இன்னும் - இன்னமும்—எய்தில் - வந்தால்—இறந்துபடுமென - தமயந்திமரணத்தையடைவாளென்று—உன்னி - நினைத்து—அன்னையொடு - தாயுடனே—உற்றவை - அடைந்தகாரியங்களைகூறினர் - சொல்லினர்கள்—எ-று. * அகப்பொருள்விளக்கம்- அகத்திணையியல் - ௬அ-கு-தலைவிபாங்கிக்கறத்தொடுநிற்கும் - பாங்கிசெவிலிக்கறத்தொடுநிற்கும் - செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்கும் - நற்றாய்தந்தைதன்னையர்க்கறத்தொடுநிற்குமென்பநெறியுணர்ந்தோரே -இவ்விதியால்தோழிகள்கூறினர்(கருத்து) தோழிமார்கள்தமயந்திதாயாகிய காஞ்சனமாலையிடத்து நடந்தகாரியங்களைச்சொன்னார்கள்என்பதாம். (ங)

அத்திறந்தெரிந்தாய்மலர்க்கோதைவெண்
முத்தமூரன்முதுக்குறைந்தாளென
வுய்த்துரைத்தனடோடைப்புகர்முக
மத்தமால்கரிமன்னவர்மன்னற்கே.

(இ-ள்,) அத்திறந்தெரிந்து - அச்செவிலிசொல்லியதிறத்தைத்தெரிந்துகொண்டு—ஆய்- ஆராய்ந்தெடுக்கப்பட்ட—மலர் - மலர்களையணிந்த—கோதை - கூந்தலையுடையநற்றாயானவள்—வெள் - வெள்ளிய—முத்தம் - முத்துக்களையொத்த—மூரல் - பற்கள்பொருந்திய (தமயந்தியானவள்)—முதுக்குறைந்தாளென - பேரறிவடைந்தாளென்று—ஓடை - பட்டமணிந்த—புகர்முகம் - புள்ளிபெற்றமுகமுள்ள—மத்தம்-மதங்கொண்ட—மால்- பெரிய—கரி - யானையையொத்த—மன்னவர்மன்னற்கு - வீமராசனுக்கு—உய்த்து - அவ்விடத்திற்கருத்தைச்செலுத்தி—உரைத்தனள் - சொல்லினள்—எ-று.(கருத்து) காஞ்சனமாலையதையறிந்து தமயந்திபேரறிவடைந்தாளென்று தன்கணவனாகியவீமராஜனுக்குச்சொன்னாள்—எ-ம், (ச)

தடங்கொள்வெம்முலைசாற்றியமாற்றமு
நுடங்குசிற்றிடையாக்கமுநோக்கிய
மடங்கலேறனையான்மணநாட்டிய
முடங்கல்போக்கினன்மொய்கழல்வேந்தர்க்கே.

(இ-ள்,) தடங்கொள் - பருமையைக்கொண்டு—வெம் - விருப்பத்தைத்தருகின்ற—முலை - தனத்தைப்பெற்றதுணைவியானவள்—சாற்றிய- சொல்லிய—மாற்றமும் - சொல்லையும்—நுடங்கு - வளையாநின்ற—சிற்றிடை-சிறியவிடையையுடையதமயந்தியினது—ஆக்கமும்-பருவத்

றையும்—நோக்கிய - கண்ட—மடங்கலேறனையான் - ஆண்சிங்கத்தை யொத்தவீமராசனானவன்—மனம் - விவாகநாளை—காட்டிய - குறிக்கப் பெற்ற—முடங்கல் - ஓலையை—மொய் - நெருங்கிய—கழல் - வீரக்கழ லணிந்த—வேந்தர்க்கு - அரசர்க்கு—போக்கினான் - செலுத்தினான்-எ-று. (கருத்து) வீமராசன் தன்மனைவிசொன்னசொல்லையுந்தமயந்திபருவத்தையும்பார்த்துத் திருமணவோலையத்தேசத்துராசர்களுக் கனுப்பினான்-எ-ம். (௫)

வேலைசூழ்புவிமன்னர்க்குவேந்தர்கோ
னோலைபோக்கியதோர்ந்துயர்கர்ப்பக
மாலைதாழ்முடிவாசவற்கோதுவான்
ஞாலமேத்திசைநாரதன்போயினான்.

(இ-ள்.) வேந்தர்கோன் - வீமராஜனானவன்—வேலைசூழ் - கடல்சூழ்ந்த—புவிமன்னர்க்கு - பூமண்டலத்தையாளுகின்ற அரசர்க்கு—ஓலை - ஓலையை—போக்கியது - செலுத்தியதை—ஓர்ந்து - அறிந்து—உயர் - உயர்ந்த—கர்ப்பகமாலை - கர்ப்பகத்தினுடையமலர்மாலை—தாழ் - தாழ்கின்ற—முடி - மகுடமணிந்த—வாசவற்கு - இந்திரனுக்கு—ஓதுவான் - சொல்லும்பொருட்டு—ஞாலம் - உலகத்தார்—ஏத்து - துதிக்கின்ற—இசை - புகழ்பெற்ற—நாரதன் - நாரதமுனிவன்—போயினான் - போனான்—எ-று. (கருத்து) நாரதமுனிவனானவன் வீமராஜன் அரசருக்கோலைவிட்டதையறிந்து தேவேந்திரனுக்குச்சொல்லும் பொருட்டுப்போயினான்—எ-ம். (௬)

அறுசீர்க்கழிநெடில்யாசிரியவிருத்தம்

வானவரொண்சுடரெறிக்குமுடிதாழ்த்துவணைகழற் கால்வணங்கி யேத்தத், தேனிமிருங்கற்பகநாண்முகையுடைந்துபசியநறுந் தேறலூற்ற, மேனகைசாமரையிரட்டவுருப்பசி வெள்ளடையுதவவிளரித்தீந்தேசாற்; பாலைவங்கட்டிலோத்தமைமென்சதிமுறையிற்பதம்பெயர்க்கும் பாணிதூங்க.

(இ-ள்- வானவர் - தேவர்களுடைய—ஒள்-ஒள்ளிய—சுடர்-காந்தியை—எறிக்கும்வீசுகின்ற—முடி - மகுடங்களை—தாழ்த்து - தாழச்செய்து—வணைகழற்கால் - வீரக்கழலையணிந்தபாதத்தை—வணங்கி - தாழ்ந்து—ஏத்த - புகழவும்—தேன்-வண்டுகளானவை—இமிரும் - ஒலிக்கின்ற—கற்பகம் - கற்பகத்தினுடைய—நாள் - அன்றலர்ந்த—முகைஅரும்புகள்—உடைந்து - உடைபட்டு—பசிய - பசுமைபொருந்திய—நறும் - நறிய—தேறல்-தேனை—ஊற்ற -சொரியவும்—மேனகை-மேனகையானவள்—சாமரை - கவரிகளை—இரட்ட - அசைக்கவும்—உருப்பசி - உருப்பசியானவள்—வெள்ளடை - தாம்பூலத்தை—உதவ - கொடுக்கவும்—விளரி - விளரியென்னுமிசையையொத்த—தீ - மதுரம்பொருந்திய—சொல் - சொல்லையும்—பானல் - நீலோற்பலம் போன்றஅழகிய—கண் - கண்களையுமுள்ள—திலோத்தமை - திலோத்த



மையானவள்—மென் - மெல்லிய—சதிமுறையில் - தாளவொத்தின்முறைப்படி—பதம்பெயர்க்கும் - பதம்பெயர்த்தற்குரிய—பாணிதூங்க-அபிநயத்தைச்செய்யவும்—எ-று, * தொன்னூல்விளக்கம், இசைபிசை சொல்லுநுபீற்றிலொத்தாதலே - இவ்விதியால் - ஏத்த - ஊற்ற - என விற்றிலடுக்குவருதலால் இசையிசையலங்காரம் (கருத்து) தேவர்கள்வணங்கவுங்கற்பகத்தருக்கள்தேன்சொரியவும்மேனகைசாமரைபோடவும்உருப்பசிதாம்பூலங்கொடுக்கவுந்திலோத்தமையபிநயஞ்செய்யவும்-என்பதாம். இதுமுதல்ஐந்துங்குளகம், (௭)

தண்டரளமணிமுறுவலயிராணிவரிபரந்ததடங்காமர்,வண்டுபசுட்டெழின்மார்பின்மந்தாரநறுந்தெரியன்மலரில்வீழப், புண்டரிகச்செழுங்காடுபூத்ததெனவிழிமலர்கள்பொலிந்துதோன்றத்,தெண்டிரைவாயமுதமெனத்தெள்விளித்தேனரமகளிர்செவியினூற்ற,

(இ-ள்,) தண்-குளிர்ந்த—தாளம் - முத்துகள்போன்ற—மணி - அழகிய — முறுவல் - பற்களையுடைய—அயிராணி - இந்திராணியின்—வரி - இரேகைகளானவை—பரந்த - பரவப்பெற்ற—தடம் - விசாலம்பொருந்திய—கண் - கண்களென்னும்—காமர் - அழகிய—வண்டு - வண்டுகளானவை —பசும் - பசுமைபொருந்திய—எழில் - அழகிய—மார்பின் - மார்பிலணிந்த—மந்தாரம் - மந்தாரத்தினை—நறும் - நல்ல—தெரியல் - மாலையினுடைய—மலரில் - பூவில்—வீழ -மொய்க்கவும்—புண்டரிகம் - தாமரையாயின்—செழுங்காடு - செழுமையுள்ளவனம்—பூத்ததென -பூத்ததென்னும்படி—விழிமலர்கள் - நேத்திரகமலங்கள்—பொலிந்துபிரகாசித்து—தோன்ற - விளங்கவும்—தெள் - தெள்ளிய—திரைவாய் - கடலினிடத்துண்டாகிய —அமிழ்தமென - அமிர்தமென்றுசொல்ல,தெள்விளித்தேன் - தெள்விளியென்னுமிசைத்தேனை,அரமகளிர் - அரம்பையரானவர்கள், செவியின் - காதினிடத்திலே,ஊற்றசொரியவும்-எ-று, (கருத்து) இந்திராணிகண்கள்மந்தாரமாலைமலரில்விழவும் ஆயிரங்கண்கள்விளங்கவும்அரம்பையர்கள் பாடவும்என்பதாம்; (அ)

மருவுயிர்க்குநறுந்துணர்மென்மலர்பொதுளும்பொலன் தருவுமணியுமானும்நிருநிதியும்விழிக்கடையினருணோக்கிமுறைமுறைநின்றேவல்கேட்பக், கருதினர்கண்கவர்வனப்பிற்கந்தருவமடமகளிர்கனிந்தபாடற், சுருதிமுறையிறைமண்மாடகயாழ்நரம்புளருந்துழனி * யார்ப்ப,

(இ-ள்.) மரு- வாசனையை—உயிர்க்கும் - வீசுகின்ற—நறும்-நறிய—துணர் - கொத்தாகிய—மென் - மெல்லிய—மலர் - மலர்களானவை—பொதுளும் - நெருங்கிய—பொலன்- பொன்மயமாகிய—தருவும்ஒருதருவும் மணியும் - சிந்தாமணியும்—ஆனும் - காமதேனும்—இருநிதியும் - சங்கநிதிபதுமநிதியென்னுநிதிகளிரண்டும்—விழிக்கடையின் - கடைக்கண்களினுடைய—அருள் - அருளை—நோக்கி -பார்த்து—முறைமுறைநின்று - வரிசைவரிசையாகநின்று—ஏவல் - ஏவலை—கேட்ப-கேட்கவும்—கருதினர் - நினைத்தவர்களுடைய—கண் - கண்களை—கவர்

பற்றிக்கொள்கின்ற—வனப்பின் - அழகினைப்பொருந்திய—கந்தருவர் - கந்தருவருடைய—மடம் - இளமைபொருந்திய—மகளிர் - மாதர்கள்—கனிந்த - முதிர்ந்த—பாடல் - பாடல்களாலே— சுருதி - ஒலியினது—முறை - வரிசைகள்—பிறழாமல் - வேறுபடாமல்—மாடகம் - முறுக்காணியோடுங்கூடிய—யாழ் - வீணையின்—நரம்பு - நரம்பினை—உளரும் - தடவுகின்ற—துழனி - ஒலியானது—ஆர்ப்ப - ஒலிக்கவும்—எ-று. * குவலயானந்தம் - பலதொழிற்பெயரோவினைச்சொல்லென்ப (கருத்து) ஐந்தருவும் - சிந்தாமணியும் - காமதேனுவும் - சங்கநிதியும் - பதுமநிதியும் - ஏவல்கேட்கவும் சந்தருவமாதர்கள் வீணைவாசிக்கவும் என்பதாம்.

மருங்கிலொருபுடைவிசித்தகுற்றுடைவாள் வட்டுடையின்வயங்க வோர்பால், பொருங்குலிசப்படைகமஞ்சூன்முகிலினிடைவிளங்குமின்னிற்பொலிவுகாட்டச், சுரும்பிமிரஞ்சில்லோதிப்புலோமசைசெம்பஞ்சடிமென்சுவடுதோய்ந்து, விரிந்ததடம்புயம்பவளக்கொடி படர்ந்தகுலவரையின்விளங்கித்தோன்ற.

(இ-ள்.) மருங்கின் - இடையில்—ஒருபுடை - ஒருபக்கத்தில்—விசித்த - கட்டிய—குற்றுடைவாள் - குறியசுரிகையானது—வட்டுடையின் - அரைக்கவசத்தின்மீது—வயங்க - பிரகாசிக்கவும்—ஓர்பால் - ஒருபக்கத்தில்—பொரு - போர்செய்கின்ற—குலிசப்படை - வச்சிராயுதமானது—கமம் - நிறைவுபொருந்திய—சூல் - கருப்பத்தையுடைய—முகிலினிடைய - மேகத்தினிடத்திலே—விளங்கு - பிரகாசிக்கின்ற—மின்னில் - மின்னலைப்போல் - பொலிவு - காந்தியை—காட்ட - காண்பிக்கவும்—சுரும்பு - வண்டுகளானவை—இமிர் - ஒலிக்கின்ற—அம் - அழகிய—சில் - பொன்வட்டத்தகட்டினையணிந்த—ஓதி - கூந்தலையுடைய—புலோமசை - இந்திராணியினது—செம்பஞ்சு - செம்பஞ்சுக்குழம்பணிந்த—அடி - பாதங்களின்—மென் - மெல்லிய—சுவடு - தழும்பு—தோய்ந்து - பொருந்தி—விரிந்த - விரியப்பெற்ற—தடம் - விசாலம்பொருந்திய—புயம் - தோள்களானவை—பவளக்கொடி - பவளக்கொடிகள்—படர்ந்த - படரப்பெற்ற—குலவரையின் - குலகிரிகளைப்போல—விளங்கித்தோன்ற - பிரகாசித்துத்தோன்றவும்—எ-று. (கருத்து) ஒருபக்கத்திலுடைவாள் பிரகாசிக்கவும்மற்றொருபக்கத்தில்வச்சிராயுதம்பிரகாசிக்கவும் இந்திராணிபாதசுவடுபட்டபுயங்கள்பிரகாசிக்கவும் என்பதாம். (௰)

விஞ்சையர்கின்னரவுணருரகர்புவிமுழுதாளும்வேந்தர்யாரு, மஞ்சலிசெய்திருமருங்கும்புடைசூழமுனிவர்குழாமாசிகூற, வெஞ்சலில்பல்வளஞ்சிறப்பவரியணையில்வீற்றிருக்குமிமையோர்வேந்தைக், கஞ்சமலரயனளித்தமறைபயினாரதனிருகண்களிப்பக்கண்டான்.

(இ-ள்.) விஞ்சையர் - வித்தியாதரர்களும்— கின்னரர் - கின்னரர்களும்—அவுணர் - அசுரரும்—உரகர் - நாகரும்—புவிமுழுதாளும் - பூலோகமுழுதையுமாட்சிசெய்கின்ற - வேந்தர்யாரும் - அரசர்கள்யாவரும்—



அஞ்சலிசெய்து - வணக்கஞ்செய்து—இருமருங்கும் - இரண்டுபக்கத்திலும்—புடைசூழ - நெருங்கிச்சூழவும்—முனிவர்குழாம் - முனிவர்கூட்டங்கள், ஆசிகூற - ஆசீர்வதிக்கவும் எஞ்சலில் - குறைவில்லாத—பல் - பலவாகிய—வளஞ்சிறப்ப - வளங்களானவை மிக—அரியணையில் - சிங்காதனத்தில்—வீற்றிருக்கும் - வீற்றிருக்கின்ற — இமையோர்வேந்தை - இந்திரனை—கஞ்சமலர் - தாமரைமலரிலிருக்கின்ற—அயன் - பிரமதேவன்—அளித்த - பெற்ற—மறை - வேதத்தை—பயில் - பயிற்சிசெய்கின்ற—நாரதன் - நாரதமுனிவன்—இருகண் - தன்னிருகண்களும்—களிப்ப - களிப்பையடைய—கண்டான் - பார்த்தான்—எ-று. (கருத்து) விஞ்சையர்களும் கின்னரர்களும் அசுரர்களும் நாகர்களும் புவியரசர்களும்புடைசூழவும் முனிவர்களாசீர்வதிக்கவும் சிம்மாதனத்திலிருக்குமிந்திரனைநாரதன்கண்டானென்பதாம். (௰௧)

பொன்னகரந்தனிபுரக்கும்புரந்தரனாரதமுனிவன்புகுதலோடு
முன்னரியற்றியதவத்தினெய்துபயனிப்பிறப்பின்முடிந்ததாமென்
றன்னமுனிவானுவப்பவருக்கியபாத்தியமுதலாவனைத்துநல்கி (இன்
யின்னமுதமுகுவனபோலினிதுரைக்குமுகமனொடுமிருக்கை * யீந்தா

(இ-ள்.) பொன்னகரம் - அமராவதியை—தனிபுரப்ப—புரக்கும் - அளிக்கப்பெற்ற—புரந்தரன் - இந்திரனவன்—நாரதமுனிவன் - நாரதமுனிவன்—புகுதலோடும் - அடைந்தமாத்திரத்தில்—முன்னர் - முற்பிறப்பில்—இயற்றிய - யான்செய்த—தவத்தின் - தவத்தினாலே—எய்து - அடையவேண்டிய—பயன் - பிரயோசனம்—இப்பிறப்பில் - இந்தப்பிறப்பில்—முடிந்ததாமென்று - முற்றுப்பெற்றதாமென்று—அன்னமுனிவான் - அந்தநாரதமுனிவன் — உவப்ப - மகிழ்ச்சியடைய—அருக்கியபாத்தியமுதலா - அருக்கியபாத்தியமுதலாக — அனைத்தும் - யாவையும்—நல்கி - கொடுத்து—இன்னமுதம் - இனியவமிர்தமானவை—உகுவனபோல் - சொரிவனபோல்—இனிது - இனிதாக—உரைக்கும் - சொல்லுகின்ற—முகமனொடும் - உபசாரத்துடன்—இருக்கை - ஆசனத்தை—ஈந்தான் - கொடுத்தான்—எ-று. (* குவலயானந்தம் - உறுப்பியல் - ௰௯ - ஆம் பாடல்படித்தல்கொள்ளுதல்கொடுத்தலணிதல், புனைதலாம்பல்தொழிலு, முயர்திணைமுப்பாற்குரியவாகும், இவ்விதியால் கொடுத்தலறிக (கருத்து) தேவேந்திரன் நாரதன்வந்தமாத்திரத்தில் ஆசனங்கொடுத்தானென்பதாம். (௰௨)

உருகிபுளங்களிசிறப்பவாயிரங்கண்மலராலுமொருங்குநோக்கி
யருமறையோயிவணீங்கி நெடுங்காலமெவ்வுலகிலடைந்தாயென்னப்
பொருவரியநாரதமுனிவன்வானவர்கோன்முகநோக்கிப்புனைகுழற்
விருகலத்திற்கடவுணிப்பலாடியிருத்துணைநாளிறந்ததென்றான்

(இ-ள்.) உருகி - உளம் - மனமுருகி—களிசிறப்ப - களிப்புமிக—ஆயிரங்கண்மலராலும் - ஆயிரங்கண்களாகிய தாமரைமலராலும் — ஒருங்கு - ஒருமிக்க—நோக்கி - பார்த்து — அருமறையோய் - நாரதமுனியே—இவணீங்கி - இவ்விடம்விட்டு—நெடுங்காலம் - நெடுநாளாக—எவ்

வுலகில் - எந்தவுலகத்தில்—அடைந்தாயென்ன-போயினையென்றுகேட்க—பொருவரிய - ஒப்பில்லாத—தவமுனிவன்- தவத்தையுடைய நாரதமுனிவன்—வானவர்கோன் - இந்திரனது—முகநோக்கி-முகத்தைப்பார்த்து—புணரிசூழ்ந்த - சமுத்திரஞ்சூழ்ந்த—இருநிலத்தில்-பெரிய பூமியினிடத்தில்—கடவுள் - தெய்வத்தன்மையுள்ள—நதிப்புனலாடி-நதிதீர்த்தங்களிலேஸ்நானஞ்செய்து— இத்துணைநாள் - இவ்வளவுநாள்—இருந்தனென்றான் - கழித்தனென்றான்—எ-று. (கருத்து) தேவேந்திரன் நாரதனைப்பார்த்து இவ்வளவுநாளெங்கேபோனீ ரென்றுகேட்க நாரதன் பூலோகத்திற் றீர்த்தமாடப்போனே னென்றான்-எ-ம். (௰௩)

என்றுமுனிவரனுரைப்பக்கடல்புடை சூழ்நிலவலயத்திகல்வேன் மன்னர், துன்றுசமர்துறந்தனர்கொல் சுடர்க்கதிர்போழ்ந்தர மகளிர்துணைமென்கொங்கை, மன்றல்வீழ்ந்திங் கெமக்கோர்நல் விருந்தாய்வர வொழிந்தவாறேதென்றான், குன்றினிருஞ்சிறையரிந்த சுடர்வைரப்படை சுமந்ததுவவுத்தோளான்.

(இ-ள்.) என்று - இப்படியென்று—முனிவரன் - நாரதமுனிவன்—உரைப்ப-சொல்ல—குன்றின்-பர்வதங்களுடைய—இரும்-பெரிய—சிறை - இறகுகளை—அரிந்த - அறுத்த—சுடர் - பிரகாசம் பொருந்திய—வைரப்படை - வச்சிராயுதத்தை—சுமந்த தாங்கிய—துவவு - திரட்சிபொருந்திய—தோளான்-புயங்களையுடையவனாகிய விந்திரன்—கடல்புடைசூழ்-கடலாற்புடைசூழப்பட்ட—நிலவலயத்து- பூமண்டலத்தில்—இகல் -போர்செய்கின்ற—வேல்- வேற்படையேந்திய—மன்னர்-அரசரானவர்—துன்று-நெருங்கிய—சமர் - போரை—துறந்தனர் கொல் - விடுத்தனரோ—சுடர்க்கதிர்போழ்ந்து - சூரியமண்டலத்தைக்கிழித்துக்கொண்டு—அரமகளிர் - அரமங்கையர்களின்—துணை - இரண்டாகிய—மென் - மெல்லிய—கொங்கை-தனத்தினுடைய—மன்றல் -மணத்தை—வீழ்ந்து - விரும்பி—இங்கு - இவ்விடத்தில்—எமக்கு- எமக்கு—ஓர் - ஒப்பற்ற—நல்விருந்தாய் - நல்லவிருந்தாகி—வரல் - வருதலை—ஒழிந்தவாறு - நீங்கியவிதம்—ஏதென்றான் - என்னகாரணமென்றான்—எ-று. (கருத்து) இப்படிநாரதன்சொல்லத்தேவேந்திரன் உலகத்தரசர் யுத்தத்தைவிட்டார்களோ வீரசொர்க்கத் துக்குவாரா திருந்தவகையென்னவென்றான் என்பதாம். (௰௪)

கன்னல்கமுகெழில்காட்டுந்தண்பணைசூழ் விதர்ப்பநகர்காவல் பூண்ட, மன்னனருந்தவப்பேற்றா லுலகிலனைப்பனைத்துமொருவடிவமாகி, யன்னநடைவாய்ந்துமதர்விழியெனவாண்முகத்திளிரண்டயில் வேருங்கிப், பொன்னவிர்பூண்முலையென்னப்பொருப்பேந்தியிருநிலத்திற் பொலிந்ததன்றே.

(இ-ள்.) கன்னல் - கரும்புகளானவை—கமுகு-கமுகைப்போலும்—எழில்காட்டும் - அழகுண்டாய் வளர்ந்துகாட்டுகின்ற—தண்-தண்ணிய—பணைசூழ் - வயல்களாற்சூழப்பட்ட—விதர்ப்பநகர்-விதர்ப்பதேசத்தை—காவல்பூண்ட - காக்குந்தொழிலையடைந்த — மன்னன்



வீமராஜனுடைய—அருந்தவப்பேற்றால் - அரியதவப்பேறினாலே—உலகில் - உலகத்திலிருக்கின்ற—வனப்பனைத்தும்- அழகெல்லாம்—ஒருவடிவமாகி - ஓருருவாகி—அன்னநடை - அன்னத்தினடையை—வாய்ந்து - பொருந்தி—மதர் - மதர்த்த—விழியென - கண்களென்றுசொல்லும்படி — வாள் - ஒளிபொருந்திய—முகத்தின் - முகத்தினிடத்திலே—இரண்டயில்வேல் - கூரியவிரண்டுவேற்படைகளை — தாங்கி - தாங்கிக்கொண்டு—பொன் - பொன்னினாற்செய்யப்பட்டு—அவிர்-பிரகாசிக்கின்ற—பூண் - ஆபரணங்களையணிந்த - முலையென்ன -தனங்களென்றுசொல்லும்படி—பொருப்பு இரண்டுமலைகளை — ஏந்தி-தாங்கி—இருநிலத்தில்- பெரியபூவுலகில் — பொலிந்தது - பிரகாசித்தது—எ-று. (கருத்து) விதர்ப்பதேசத்ரசனாகிய வீமனதவத்தால் உலகத்தழகெல்லா மொருவடிவாகித்தமயந்தி-உதித்தாளென்பதாம். (௰௫)

ஆங்கவன்மேல்விழைவினராய்நின்னுலகிற்போகமுடின் * னமிழ்துமன்னாள், மாங்குயிலின் றீங்குதலை மொழிக்கிளையாச் சிறிதேனு மதிக்கவில்லார், பூங்கமலமுகையனையபொறிசுணங்கு காரிளமுலையின் பூசல்வேண்டு, வீங்குதடம்புயமெலியவிளைத்திருந்தமர்துறந்தார் வேந்தரெல்லாம்.

(இ-ள்) ஆங்கு-அவ்விடத்தில் - அவண்மேல்- அதுதமயந்தியென்னுமாதின்மேல்—விழைவினராய் - விருப்பமுடையவராகி — நின்னுலகி - உன்னுடையவுலகத்திலுள்ள—போகமும் - போகத்தையும் — இன்னமிர்தும் - இனியவமிர்தத்தையும்—அன்னாள் - அவளுடைய—மாங்குயிலின் - மாமரத்திலுள்ளகுயிலின்மொழியை யொத்த—தீம்-மதுரம் பொருந்திய—குதலைமொழிக்கு - மழலைச்சொல்லுக்கு—இளையா - ஒப்பாக—சிறிதேனும்-அற்பமாயினும்—மதிக்கவில்லார் - மதியாதவர்களாய், பூ-அழகிய—கமலமுகை - தாமரையரும்பையொத்த — பொறி-புள்ளிகள்போன்ற—சுணங்கு - [illegible]—ஆர்-நிறைந்த—இளமுலையின் - இளமைபொருந்திய தனங்களின்—பூசல் - போரை—வேட்டு-விரும்பி—வீங்கு - பருத்த—தடம்—விசாலம்பொருந்திய—புயம் -தோள்கள்—மெலிய-வாட—விளைத்திடு - செய்கின்ற — வாளமர் - வாட்புடையாற்செய்யும்போரை—வேந்தரெல்லாம் - அரசர்யாவரும — துறந்தார்-விட்டனர்கள்—எ-று. [* குவலயாநந்தம்-உருப்பியல்-௩௧-ஞ- காவாலமிவனசுவையுளபொருளே—இவ்விதியால் அமிழ்து சுவையுள்ள பதார்த்தம்.] (கருத்து) அரசர்கள் தமயந்தியின் கனதனப்போரை விரும்பி வாட்போரைவிட்டார்களென்றான் என்பதாம். (௰௬)

அத்தகையமடவாலோராண்டகையை * யுளத்தமைத்தாளவளையீன்ற, முத்தநெடுங்குடைவேந்தனிலவலயமினிதளிக்கு முதல்வர்க்கெல்லா, முய்த்துணர்ச்சுயம் வரமென்றோலைபோக்கினன் றனையுரைப்பானென்னனி, யித்தலையெய்தினனென்றுனின்னிசை துன்முறு துணர்த்தயாழ்வல்லோனே.

(இ-ள்) அத்தகைய - அப்படிப்பட்டகுணமுள்ள—மடவாள்-தமயந்தியானவள்ஓர் - ஒரு—ஆண்டகையை - ஆண்மகனிற் சிறந்தவனை

11667

—உளத்து - மனத்தின்கண்—அமைத்தாள் - வைத்தாள்—அவனையீன்ற - அவனைப்பெற்ற—மூத்தம் - முத்திறஞ்செய்த—நெடுங்குடை - நெடியகுடையையுடைய—வேந்தன் - வீமராஜனெனவன் — நிலவலயம் - பூமண்டலத்தை—இனிது - இனிதாக—அளிக்கும் - புரக்கின்ற—முதல்வர்க்கெல்லாம் - தலைமைபூண்டவரசரனைவர்க்கும்—உய்த்து - கருத்தைச்செலுத்தி—உணர - அறிய—சுயம்வர மென்று - சுயம்வரநாளின்னாளென்று—ஓலைபோக்கினான் - எழுதப்பட்டவோலையைச் செலுத்தினான்—அதனை - அச்செய்தியை— உரைப்பான் - உரைக்கும்படிக்கு—எண்ணி - நினைத்து—இத்தலை - இவ்விடத்தில்—எய்தினனென்றுரைன் - வந்தேனென்றுசொன்னான்—இன்னிசை நால் - இனியவிசை நால்முழுது - முழுவதையும்—உணர்ந்த - அறிந்த—யாழ்வல்லோன் - யாழின்வல்லநாரதமுனிவன்—எ-று. * குவலயாநந்தம் - உயர்திணை யஃறிணையிருதிணைதனிலும் - வரும்பொருள்பலவும் பொருளெனவறைப இவ்வியால் - உளம் - அஃறிணை—(கருத்து) அத்தமயந்தி நளனையிச்சித்தாள்-அவளைப்பெற்றவீமன் உலகத்தரசர்க்கெல்லாம் சுயம்வர மென்றோலைவிட்டான்-அதைச்சொல்லும்பொருட்டிங்குவந்தேனென்றான்-எ-ம்

* விண்ணகத்தும்பெறற்கரியவிழுப்பொருளைப்பெறவேண்டில் விரிநீர்சூழ்ந்த, மண்ணகத்துவருதியெனமகபதிவாண்முகநோக்கி மகிழ்ந்துகூறிப், பண்ணமைந்தகிளவிக்குதலைத்தமயந்திசுயம்வரத்திற்பாரில் வேந்தர், நண்ணியமர்விளைப்பரதுகாண்குவலென்றாசிபலநவின்றுபோனான்.

(இ-ள்.) விண்ணகத்தும்-தேவருலகத்தும்—பெறற்கரிய - பெறுதற்கருமையாகிய—விழுப்பொருள் - சிறப்புப்பொருளை — நீபெறவேண்டில்-நீபெறவிரும்பினையாயின்—விரிநீர்சூழ்ந்த-கடலாற்சூழப்பட்ட — மண்ணகத்து-பூவுலகத்தில்—வருதியென-வருவாயென்று — மகபதி - இந்திரனுடைய—வாள்-ஒளிபொருந்திய— முகநோக்கி - முகத்தைப்பார்த்து,பண்ணமைந்த-பண்பொருந்திய—கி-கிளிப்பிள்ளை—குதலை - மழலைச்சொல்லையுடைய— தமயந்தி தமயந்தியினது—சுயம்வரத்தில் - சுயம்வரநாளில்—பாரில்-பூமியிலிருக்கின்ற—வேந்தர்- அரசரானவர்கள், நண்ணி-அடைந்து,அமர்-போர்த்தொழிலை— விளைப்பர்-செய்வார், அது அப்போது—காண்குவலென்று-பார்ப்பேனென்று —ஆசிபல- அனேகஆசீர்வாதங்களை—நவின்று-சொல்லி—போனான்-நாரதமுனிவன் போயினான்—எ-று, அன்று-ஈ-அசைகள் * குவலயாநந்தம் - உயிர்ப்பொருளுயிரிலாப் பொருளிருவகைய-இவ்விதியால்விண்ணகமுயிரிலாப் பொருளென்றறிக.(கருத்து) விண்ணிற்பெறுதற் கரியபொருளை, மண்ணிற்பெறவிரும்புவையாகில் வாவென்றுவாழ்த்திப் போரைக் காண்பேனென்றுநாரதன்போனான் என்பதாம். (௰௮)

அருந்தவனேகலுமிறைவனாடன்மாரன்பகழிபொரவாற்றானாகிக், கருந்தடங்கட்டமயந்தி கதிர்முலையும்வார் காதுங்கழைமென்றோளும், * முருந்திளமுறுவலும்வாண்முகமதியு முருவொளியாய்முன்னர்த் தோன்ற, வருந்தியயிராணிமுதலரம்பையர் பாலுறுநலனும றந்தானன்றே,



(இ-ள்.) அருந்தவன் - நாரதமுனிவன்—ஏகலும் - போனவளவில்—இறைவன் - இந்திரனானவன்— அடல் - வலிமைபொருந்திய—மாரன்- மன்மதனது—பகழி-பாணங்கள்—பொர - போர்செய்ய—ஆற்றானாகி - பொறுக்கமாட்டாதவனாய்—கரு - கரிய—தடம் - விசாலம்பொருந்திய—கண் - கண்ணையுற்ற—தமயந்தி - தமயந்தியினுடைய—கதிர்முலையும் - காந்திபொருந்தியதனங்களும்—வார்காதும் - நெடியசெவிகளும்—கழை - மூங்கில்போன்ற—மென்றோளும் - மெல்லியதோளும்—முருந்திளம - மயிலிறகின்முதன்முள்போன்ற—முறுவலும் - பற்களும்—வாள் - ஒளிபொருந்திய—முகமதியும் - முகமாகியசந்திரனும்—உருவொளியாய் - உருவெளிதோற்றமாய்—முன்னர்- எதிரே—தோன்ற- தெரிய—வருந்தி - வருத்தப்பட்டு—அயிராணிமுதல்- இந்திராணிமுதலாகிய—அரம்பையர்பால் - அரமகளிரிடத்தில்—உறு - மிகுந்த—நலனும் - நலத்தையும்—மறந்தான்-மறந்துவிட்டான்—எ-று.(கருத்து) தேவேந்திரன் மன்மதபாணத்துக்குச்சகியாதவனாய்த்தமயந்தியுருவெளியாகத்தோற்றவருத்தப்பட்டிந்திராணிமுதலியோரின்பங்களைமறந்தான் என்பதாம். (௰௯)

மண்ணுலகின்மடவாலைவிழைந்தனனம்மிறைவனெனவருந்திமாழாந், தெண்ணினமதெழினலனுமிளமையுநன்றாயவென விகழ்ந்துகூறி, வெண்ணிலவுபொழிதரளமுறுவலயிராணிமுதல் விண்ணில்வாழு, மொண்ணுதன்மங்கையர்மடநாண்மீதூரவோவியம்போன் றுணர்வுதீர்ந்தார்.

(இ-ள்.) மண்ணுலகின் - பூவுலகத்திலிருக்கின்ற—மடவாலை -ஒருபெண்ணாகியதமயந்தியை—விழைந்தனன் - விரும்பினான் — நம்மிறைவனென - நம்முடையவரசனென்று—வருந்தி-வருத்தப்பட்டு—மாழாந்து-மயக்கமடைந்து—எண்ணின் - எண்ணுமிடத்தில்—நமது - நம்முடைய—எழினலனும் - அழகினுடையநன்மையாம்—இளமையும் - இளமைப்பருவமும்—நன்றாயவென - நல்லதாயவென்று—இகழ்ந்து கூறி-பழித்துச்சொல்லி—வெள் - வெள்ளிய—நிலவு - பிரகாசத்தை—பொழி - பொழிகின்ற—தரளம் - முத்தினையொத்த—முறுவல் - பற்கள் பொருந்திய—அயிராணிமுதல் - இந்திராணிமுதலாகிய—விண்ணில் வாழும், தெய்வலோகத்தில்வாழ்கின்ற—ஒள் - ஒள்ளிய—நுதல் - நெற்றியையுடைய—மங்கையர் - மாதர்கள்—மடம் - அறியாமையும்—நாண் - நாணும்—மீதூர - அதிகரிக்க—ஓவியம்போன்று - சித்திரத்தையொத்து—உணர்வுதீர்ந்தார் - அறிவுநீங்கினார்கள்—எ-று, (கருத்து) இந்திராணிமுதலான மங்கையர்கள்நமதரசன்தமயந்தியை இச்சித்தானென்றுசித்திரத்தையொத்தறிவிழந்தார்கள் என்பதாம், (௨௰)

மதாநெடுங்கணரமகளிரிவ்வாறுதுயருழப்ப மனத்தினோர்த்ததைமலர்க் * கற்பகநறுந்தார்மணிமார்பன் றுயர்கூர்ந்து தருமன்வய்ய,கதமெழரிப்புத்தேள்வருணனுடனேகக்கொடிஞ்சியந்தேர்கடிதிற் றூண்டிய திருநெடுந்திரையாழிசூழ்புவியினெல்லையில்வந்தடைந்தான் மன்றோ,

(இ-ள்.) மதர் - மதர்த்த—நெடுங்கண் - நெடியகண்களையுடைய—அரமகளிர் - அரம்பையரானவர்கள்—இவ்வாறு - இந்தப்பிரகாரம்—துயருழப்ப - துன்பப்பட—மனத்தின் - மனத்தினிடத்திலே—ஓரா - எண்ணுமல்—தகை - நெருங்கிய—மலர் - மலரையுடைய— கற்பகநறுந்தார் - நறியகற்பகமாலையணிந்த—மணிமார்பன் - அழகியமார்பையுற்றவிந்திரன்—துயர்கூர்ந்து - துயரமிகுந்து—தருமன் - யமனும்—வெய்ய - வெவ்விய—கதழ் - வேகம்பொருந்திய—எரிப்புத்தேள் - அக்கினிதேவனும்—வருணன் - வருணனும்—உடனேக - உடனுகவர—கொடிஞ்சி - மேன்மொட்டையுடைய—அம் - அழகிய—தேர் - இரதத்தை—கடிதில் - சீக்கிரத்திலே—தூண்டி - செலுத்தி—அதிரும் - *அதிர்கின்ற—நெடுந்திரை - நெடியஅலைகளையுடைய—ஆழிசூழ் - கடலாற்சூழப்பட்ட—புவியின் - பூவுலகில்—தொல்லையில் - விரைவில்—வந்தடைந்தான் - வந்துசேர்ந்தான்—எ-று. மன்-ஓ-அசை * குவலயாநந்தம் - ஊருதல் பறத்தலடத்தலெனவே - மூவகையாருமுயிர்ப்பொருளினமே இவ்விதியால்கற்பகம் உயிர்ப்பொருள் - (கருத்து) இந்திரன் அரம்பையர்முதலானவர்கள் துன்பப்படுகலையறியாமல் துன்பப்பட்டுயமன் - அக்கினிதேவன் - வருணன் - இவர்களுடன்தேரிலேறிப் பூமியில்வந்தான் என்பதாம். (உக)

இந்திரப்படலம்-முற்றிற்று-

உ

# நளன் றூதுப்படலம்.

இப்படலத்தால் இந்திரன்முதலியநால்வர்பொருட்டுத் தமயந்தியினிடத்துநளன் றூதுசென்றமைசொல்லப்படுகின்றது

(கலிவிருத்தம்.)

அண்டருலகத்திறைவனவ்வழியிருப்பம்
மண்டு * புனல்வாளைவளர்பூகமடல்கீறுந்
தண்டலையுடுத்தநிடதந்தனிபுரக்கு
மொண்டிறலுடைக்குரிசில்செய்திறமுரைப்பாம்

(இ-ள்,) அண்டருலகத்து - தேவருலகத்தையாளுகின்ற—இறைவன் - இந்திரன்—அவ்வழி - அவ்விடத்தில்—இருப்ப - தங்க—மண்டு - நெருங்கிய—புனல் - நீரிலிருக்கின்ற—வாளை-வாளைமீன்களானவை—வளர் - வளர்கின்ற—பூகம் - கமுகினுடைய—மடல் - பாளைகளை—கீறும் - கிழிக்கின்ற—தண்டலை - சோலைகளை—உடுத்த - உடுக்கப்பெற்ற—நிடதம் - நிடததேசத்தை—தனி - ஒப்பற—புரக்கும் - காக்கின்ற—ஒண் - ஒள்ளிய—திறலுடைய - வலிமையையுடைய—குரிசில் - நளமகாராசன்—செய்திறம் - செய்தகாரியத்தை—உரைப்பாம் - (யாம்)சொல்லுவோம்—எ-று. * குவலயாநந்தம் - இயற்கைசெயற்கை யிருவகையினுமுயிரிலாப்பொருளெனவுரைத்தனர்புலவர் - இவ்விதியால்புனல் உயிரிலாப்பொருளென்றறிக. (கருத்து) தேவேந்திரனவ்விடத்திருக்கநளன் செய்கையைச்சொல்லுவாம் என்பதாம். (க)



அன்னமுரைசெய்தவெழிலாயிழையைநெஞ்சத்
துன்னியயர்வோடுமுயிருண்டிலைகொலென்னக்
கன்னன்மதனைங்கணைகருத்திடைகுளிப்ப
மன்னவர்கண்மன்னன்மதிமாழ்கியயர்காலை

(இ-ள்.) அன்னம் - அன்னப்புள்ளானது—உரைசெய்த - சொல்லிய—எழில் - அழகிய—ஆயிழையை - தமயந்தியை—நெஞ்சத்து - மனத்தினிடத்து—உன்னி - நினைத்து—அயர்வோடும் - சோர்வுடனே—உயிர் - உயிரானது—உண்டிலைகொலென்ன - உண்டோவில்லையோவென்றுசொல்ல—கன்னல் - கருப்புவில்லேந்திய—மதன் - மன்மதனுடைய—ஐங்கணை - பஞ்சபாணங்களும்—கருத்திடை - கருத்தினிடத்து—குளிப்ப - தைக்க—மன்னவர்கண்மன்னன் - நளனெனவன்—மதிமாழ்கி - அறிவுமயங்கி—அயர்காலை - துன்பப்படுஞ்சமயத்தில்—எ-று. (கருத்து) நளன் தமயந்தியைநினைத்துவருத்தப்படுங்காலத்தில் என்பதாம் இதுமுதலிரண்டுங்குளகம். (உ)

பூகமடல்கீறியிளவாளைபுனல்காலு
மேகமிசைதாவிடும்விதர்ப்பநகர்மன்னன்
றோகையோடளித்தவுயிரோவியநிகர்க்குந்
தோகைமணவோலைகொடுதூதுவரடைந்தார்

(இ-ள்.) பூகமடல் - கமுகம்பாளையை—கீறி-கிழித்து— இளவாளை - இளமைபொருந்தியவாளைமீன்களானவை—புனல்காலும் - நீரைச்சொரிகின்ற—மேகமிசை - மேகத்தின்மீது—தாவிடும்-தாவுகின்ற. விதர்ப்பநகர் - விதர்ப்பதேசத்தையாளுகின்ற—மன்னன் - வீமராஜனெனவன்—தோகையோடு - மகிழ்ச்சியுடனே—அளித்த - பெற்ற—உயிர் - உயிரையுடைய—ஓவியம் - சித்திரத்தை—நிகர்க்கும் - ஒப்பாயிருக்கின்ற—தோகை - தமயந்தியினது—மணவோலைகொடு - கலியாணவோலையைக்கொண்டு—தூதுவர் - தூதர்கள்—அடைந்தார் - சேர்ந்தார்கள்—எ-று (கருத்து) தூதர்கள்தமயந்தி கலியாணவோலையைக் கொண்டுவந்தார்கள் என்பதாம். (ங)

மூடங்கவின் வரைந்தவுரைமுற்றுமுணராமுன்
றடம்புயம்வளர்ந்தனவளைக்குவளைசாலக்
குடங்கையினகன்றவிழிகோகரிசெல்வான்
மடங்கலனையாளுள்மகிழ்ச்சியொடெழுந்தான்

(இ-ள்.) முடங்கலின் - ஓலைச்சுருளில்—வரைந்த- எழுதப்பட்ட— உரை - சொல்லுகளை—முற்றும் - முழுவதும்—உணராமுன் - அறியாமுன்னே—தடம் -பெரிய—புயம் - தோள்களானவை—வரைக்கு - பர்வதங்களுக்கு—உவமைசால -உவமைபொருந்த—வளர்ந்தன - பருத்தன—குடங்கையின் - உள்ளங்கைபோல—அகன்ற - பரந்த—விழி - கண்களையுடையதமயந்தியினது—கோநகரி - குண்டினபுரத்துக்கு—செல்வான் - செல்லும்பொருட்டு—மடங்கலனையான் - சிங்கவேற்றினையொத்தநளமகாராஜன்—உளமகிழ்ச்சியொடு - மனக்களிப்புடனே—எழுந்தான் - எழுந்தனன்—எ-று. (கருத்து) நளன் திருமண வோலையின் செய்தியறியு முன்புயங்கள்பூரித்தன - விதர்ப்பதேசத்துக்குச்செல்லும் பொருட்டெழுந்தான் என்பதாம். (ச)

கொய்யுளைவயப்புரவிகோடியுழைபோத
மையன்மதவாரணமருங்குறநெருங்க
வெய்யதிறல்வாளுழவர்வேலைபுடைசூழ
மொய்திரையளக்கரினியம்பலமுழங்க

(இ-ள்.) கொய் - கொய்துகட்டிய—உளை - புறமயிரையுடைய—வயம் - வலிமைபொருந்திய—புரவிகோடி - கோடிகுதிரைகள்—உழைபோத - பக்கங்களிலேவரவும்—மையல் - மயக்கம்பொருந்திய—மதவாரணம் - மதயானைகள்—மருங்கும - பக்கத்திலே—நெருங்க - நெருங்கிவரவும்—வெய்ய - வெவ்விய—திறல் - வலிமைபொருந்திய—வாள் - வாட்படையையுடைய—உழவர்வேலை - காலாள்களாகியகடலானது,புடைசூழ - பக்கங்களிலேசூழ்ந்துவரவும்,மொய் - மொய்க்கப்பெற்ற, திரை - அலைகளுள்ள—அளக்கரின் - கடல்போல—இயம்பல- பலவாத்தியங்கள்—முழங்க - ஒலிக்கவும்—எ-று, (கருத்து) கோடிகுதிரைகள்சூழ, யானைகள்நெருங்க, சுத்தவீரர்கள்சூழக், கடல்போலவாத்திய முழங்கவென்பதாம், இதுமுதலிரண்டுங்குளகம். (ரு)

விரிகதிரெறிக்குமதி * வெண்குடைநிழற்றத்
தரளநகைமாதர்பலர்சாமரையிரட்ட
வெரிமணியிமைக்குமுடிமன்னவரிறைஞ்சத்
திருவளருமார்பனுயர்தேரின்மிசைபோனன்.

(இ-ள்.) விரி - விரியப்பெற்ற—கதிர் - கிரணங்களை—எறிக்கும் - வீசுகின்ற—மதி - சந்திரனையொத்த—வெண்குடை - வெள்ளியகுடைகள்—நிழற்ற - நிழலைச்செய்யவும்—தரளம் - முத்தினையொத்த—நகை - பற்களையுடைய—மாதர்பலர் - அநேகமகளிர்கள்—சாமரையிரட்ட - கவரிகள்வீசவும்—எரிமணி - காந்திபொருந்தியமணிகள்—இமைக்கும் - பிரகாசிக்கின்ற—முடி - மகுடத்தையுடைய—மன்னவர் - அரசர்கள்—இறைஞ்ச - வணங்கவும்—திரு - திருமாதானவள்—வளரும் - வளர்கின்ற—மார்பன் - மார்பையுடையவ - நிஷதநளமகாராசன்—உயர் - உயர்ந்த—தேரினமிசை - தேரின்மேல்—போனன் - போயினான்—எ-று

*[தொல்காப்பியமரபியல் - சஎ - சூ-படையுங்கொடியுங்குடையு(ம்)



முரசு - நடைநவில்புரவியுங்களிறுந்தேரும் - தாருமுடியுநேர்வனபிறவும் - தெரிவுகொள்செங்கோலரசர்க்குரிய - இவ்விதியால் கொடைமுதலிய களரசர்க்குரித்தே] (கருத்து) வெண்குடைபிடிக்க பெண்கள் சாமரைவீசமன்னவர்வணங்க நளன்தேர்மேற்சென்றான் என்பதாம். (சு)

தேர்நடவுகம்பலைசெவிப்புகுதலோடும்
வார்கடன்முழக்கொலிகொலோமழைமுழக்கோ
சார்வதெனவையமுறும் வானவர்கண்மு
னேர்கெழுமாடநிடத்திறையெதிர்ந்தான்.

(இ-ள்.) தேர்-தேரை—நடவு-செலுத்துகின்ற—கம்பலை - ஒலியானது—செவி - காதினிடத்து—புகுதலோடும் - நுழைந்தமாத்திரத்தில்—வார்-நெடிய—கடன்முழக்கொலிகொலோ - கடலொலியோ— மழைமுழக்கோ - மேகத்தினொலியோ —சார்வதென - அடைவதென்று—ஐயமுறும் - ஐயமடைகின்ற —வானவர்கண்முன் - தேவர்களுக்குமுன்னே—ஏர் - அழகானது—கெழுமு - பொருந்திய—மாடம் - மாளிகைகளையுடைய—நிடதத்திறை - நிடதேசத்தரசன்—எதிர்ந்தான் - எதிர்ப்பட்டான்—எ-று.(கொல்-ஐயப்பொருள்) (கருத்து) நளன்தேவர்களுக்குமுன்சென்றான் என்பதாம். (எ)

இதுவுங்கலிவிருத்தம்.

பொற்றடந்தேர்மிசைப்பொலிந்துதோன்றிய
மற்றடந்தோளினன்வனப்புநோக்கினா
ருற்றதோர்வியப்பினுக்குள்ளமீந்துதாம்
வெற்றுடம்பாயினார்விண்ணுளோரெலாம்

(இ-ள்.) பொன்-அழகிய—தடம் - பெரிய—தேர்மிசை-தேரின்மீது—பொலிந்து - பிரகாசித்து—தோன்றிய - வந்த—மல் - மற்போர்செய்கின்ற—தடம் - பெரிய—தோளினன் - தோள்களையுடையநளமகாராஜனது—வனப்பு - அழகை—நோக்கினார் - பார்த்தார்— உற்றது- அதனாலடைந்தாகிய—ஓர் - ஒப்பற்ற— வியப்பினுக்கு - ஆச்சரியத்துக்கு—உள்ளமீந்து - மனத்தைக்கொடுத்து—விண்ணுளோரெலாம்- இந்திரன்முதலியஎல்லாரும்—வெற்றுடம்பாயினார் - உயிர்நீங்கியவுடம்புபோலானார்—எ-று .(கருத்து) இந்திரன் முதலானவர்கள் தேரின்மேலேறிய நளனழகைக்கண்டு மனதைநளனிடத்திற்செலுத்தி வெறியவுடம்பினரானார்களென்பதாம். (அ)

மா * யிருஞாலத்துவந்துமன்னர்கோ
னேயபேரழகுகண்டிமைப்பிலாட்டமோ
ராயிரம்பெற்றபேறடைந்துளெனெனச்
சேயுயர்விசும்பினுக்கிறைவன்செப்பினான்.

(இ-ள்.) மாமகத்தாகிய—இரு-பெரிய—ஞாலத்துவந்து — பூமியில்வந்து —மன்னர்கோன் -நளனுடைய—ஏய - பொருந்திய — பேரழகு-பெரியஅழகினை—கண்டு - பார்த்து— இமைப்பில் - இமைத்தலில்

லாத—காட்டமோராயிரம் - ஆயிரங்கண்களை—பெற்றபேறு - பெற்ற பேற்றினை—அடைந்துளோமெனை - இன்றுஅடையப்பெற்றேனென்று—செய் - தாரமாக—உயர்-உயர்ந்த—விசும்பிறுக்கிறைவன் -சுவர்க்கத்துக்கரசனாகிய இந்திரன் — செப்பினான் - சொல்லினான் —எ-று [* அகத்தியம்-மாறு ன்னியிர் வயின்யகரமெய் தோன்றும்] (கருத்து) இந்திரன் பூமியிலனந்தனனனழகைக்கண்டுதான் ஆயிரங்கண்பெற்றதற்கு இன்றுபயன்பெற்றேனென்றான்-எ-ம். (௯)

மண்டமர்கடந்தவேன் மன்னர்மன்னனைக்
கண்டுமற்றொருவர் தோள்காமுற்றீர்ந்தோடை
தொண்டைவாய்மடமயில்சூட்டுமோவெனுத்
தெண்டிரைக்கடற்செல்வன்கூறினான்.

(இ-ள்.) மாண்டு - நெருங்கிய—அமர்-போரை—கடந்த - செயித்த—வேல்-வேற்படைபொருந்திய—மன்னர்மன்னனை - நளனை—கண்டு-பார்த்து—மற்றொருவர்தோள் - வேறொருவர்புயங்களை — காமுற்று-ஆசைப்பட்டு—தொண்டை - கோவைக்கனிபோன்ற—வாய் - வாயையுடைய—மடமயில் - தமயந்தியானவள்—ஈர்ந்தொடை - குளிர்ச்சிபொருந்தியமாலையை—சூட்டுமோவெனு - தரிப்பாளோ வென்று—தெள் - தெள்ளிய—திரை - அலைகளையுடைய—கடல் - ஒலிக்கின்ற—கடற்செல்வன்-கடலுக்கரசனாகியவருணன் — கூறினான்-சொல்லினான்—எ-று. (கருத்து) நளனைக்கண்ட தமயந்தியானவள் வேறொருவனுக்கு மாலையிடுவாளோவென்று சமுத்திரராசன்சொன்னான்என்பதாம். (௰)

பாந்தண்மேற்கிடந்தபார்பரிக்குந்திண்டிறல்
வேந்தனுக்கேதொடைவேய்ந்திலாளெனின்
சேந்திழையெழினலமென்கொலாமெனக்
காந்துவெங்கதழெரிக்கடவுள்சாற்றினான்.

(இ-ள்.) பாந்தண்மேல் - ஆதிசேடன்மீது—கிடந்த - இருந்த—பார்-பூமியை—பரிக்கும் - சுமக்கின்ற—திண் - திண்ணிய—திறல் - சௌரியத்தையுடைய—வேந்தனுக்கே - நளமகாராசனுக்கே — தொடை-மாலையை—வேய்ந்திலாளெனில் - சூட்டளேயானால்—சேந்திழை - தமயந்தியினது—எழில் - அழகினது—நலம்-நன்மை—என்கொலாமென - என்னபிரயோசனமாகுமென்று—காந்து - காந்துகின்ற—வெம் - வெவ்விய—கதழ் - வேகத்தையுடைய — எரிக்கடவுள் - அக்கினிதேவன்—சாற்றினான் - சொல்லினான்—எ-று.கொல் - அசைநிலை-(கருத்து) நளனுக்குத்தமயந்தி மாலையிடாளேயானால்இந்தமயந்தி அழகு என்ன பயன்படும் என்றக்கினிதேவன்சொன்னான்என்பதாம். (௰௧)

கழைகனிபுகர்முகக்களிநல்யானையா
னிழைசுடரெறிப்பவந்திருந்ததேந்திழை
விழைவினுக்காயின்யாமீண்டுபோதலே
யழகிதென்றந்தகனறைந்திட்டானரோ.



(இ-ள்.) கழைகரும்புகளை—களி - மறிக்கின்ற—புகர்முகம் - புள்ளிபெற்றமுகத்தையுடைய—களி - களிப்புப்பொருந்திய—நல் - நல்ல—யானையான் - யானையையொத்த (நளமகாராசன்)—இழை - ஆபரணங்கள்—சுடர் - காந்தியை—எறிப்ப-வீச—வந்திருந்தது - வந்திருந்தது—ஏந்திழை - தமயந்தியினது—விழைவினுக்காயின் - விவாகத்துக்கானல்—யாம் - நாம்—மீண்டுபோதலே - திரும்பிச் செல்லுதலே—அழகிதென்று -அழகையுடையதென்று—அந்தகன் - யமனானவன்—அறைந்திட்டான் - சொல்லினான்—எ-று. (கருத்து) நளன்தமயந்திக்கு நாயகனானல் நாம்மீண்டுபோதலுத்தமமென்று யமன்சொன்னான் என்பதாம். (௰௨)

போர்த்தொழில்வைரவாட்பொருவிலண்ணல்செந்
தார்ப்பசுங்கிளியனாட்பெறுதுபோய்க்
கார்க்குழலரம்பையர்கமலவாண்முகம்
பார்ப்பதெவ்வாறெனப்பரிவிற்கூறினான்.

(இ-ள்.) போர் - போர்செய்கின்ற—தொழில்-தொழிலையுடைய—வைரவாள் - வச்சிராயுதமேந்திய—பொருவில்-ஒப்பில்லாத— அண்ணல்-இந்திரனானவன்—செம் - சிவந்த—தார் - இரேகையை யுடைய—பசும் - பசுமைபொருந்திய—கிளியனாள் - கிளியைநிகர்த்தவளாகிய தமயந்தியினது—தார் - மாலையை—பெறாது - பெற்றுக்கொள்ளாமல்—போய்-சென்று—கார் - கரிய—குழல்-கூந்தலையுடைய — அரம்பையர் - அரம்பைமாதருடைய—கமலம் - தாமரைமலர்போன்ற—வாள் - ஒளிபொருந்திய—முகம் - முகத்தை—பார்ப்பது - நோக்குவது — எவ்வாறென - எவ்வாறென்று—பரிவில் - துன்பத்தினால்—கூறினான்-சொல்லினான்—எ-று. சந்தேகத்தா லிந்திரனிவ்வாறு கூறினான் (கருத்து) இந்திரன் தமயந்தி மாலையைப்பெறாதுபோய் அரம்பைமுதலியோர் முகத்தைஎப்படிபார்ப்பதென்றுசொன்னான்என்பதாம். (௰௩)

ஆரத்தமுண்டொளிரும்வாளவுணர்செற்றுநந்
திருத்தகுசெல்வமுஞ்சிறப்புநல்கிய
விரைத்துணரலங்கலான்வீரசேனன்போன்
றிருத்தலாலிவனளனென்னவேண்டுமால்.

(இ-ள்.) ஆரத்தம்-உதிரத்தை—உண்டு - பானம்பண்ணி — ஒளிரும்-பிரகாசிக்கின்ற—வாள் - வாட்படையையுள்ள —அவுணர் - அசுரர்களை—செற்று - கொன்று—நம்-நம்முடைய— திருத்தகு - திருவிற்குத்தக்க—செல்வமும் - செல்வத்தையும்—சிறப்பும்-சிறப்பையும் — நல்கிய-கொடுத்த—விரை - வாசனை பொருந்திய— துணர் - பூங்கொத்துக்களையுற்ற—அலங்கலான் - மாலையையுடையவனாகிய—வீரசேனன்போன்று - வீரசேனராஜனையொத்தவனாகி—இருத்தலால் - இருந்திடுதால்—இவன் - இவனைநளனென்னவேண்டும் - நளமகாராஜனென்று சொல்லவேண்டும்—எ-று. (கருத்து) அசுரர்களைக் கொன்று நமதுசெல்வ

த்தைக்கொடுத்த வீரசேனனை ஒத்திருத்தலால்இவன் அவன் மகனுகிய நளனெனச்சொல்லவேண்டுமென்றானிந்திரன் என்பதாம். (யச)

சேற்றிதழ்த்தாமரைமலரத்தெண்கட
ரேற்றுசெங்கதிரெனத்தோன்றுமின்னையா
மேற்றநல் * லோரையிலெழுந்ததாலன்றே
வாற்றெதிர்ப்பட்டனமலங்கல்வேலினய்.

(இ-ள்) அலங்கல் - வெற்றிமாலையணிந்த — வேலினய் - வேற்படையேந்திய நளமகாராஜனே — சேறு - சேற்றிருக்கின்ற — இதழ்-இதழ்களையுடைய — தாமரை - தாமரைகள் — மலர - விகசிக்க - தெள்-தெள்ளிய — கடல் - கடலினிடத்து — தோற்று - தோற்றுகின்ற — செங்கதிரென - சூரியனைப்போல - தோன்றுமின்னை - வந்தவுன்னை - யாம் - யாங்கள் — ஏற்ற-தக்க — நல் - நல்ல — ஐரையில் - இராசியில் — எழுந்ததாலன்றே புறப்பட்டபடியாலல்லவா — ஆறு-வழியில் — எதிர்ப்பட்டனம்-எதிர்ப்பட்டோம் — எ-று. அகத்தியம்-இறப்பெதிர் வுநிகழ்வோரையிருள்பகல்வாரம் - உடுதிதியோகம்வாரங்காலமே - இவ்விதியால் - ஓரைகாலத்தின்பாற்பட்டது (கருத்து) சூரியன் போலத்தோன்றுமுன்னை நல்ல இலக்கினத்திற் புறப்பட்டபடியால் வழியிற்கண்டனமென்றார்-எ-ம். (யரு)

இவனழற்கடவுண்மற்றிவன்வெங்கூற்றுவ
னுவனெறிகடற்கிறையொழிந்துநின்றயான்
கவனவாம்பரியுள * முணருங்காவல
வவிரொளிமணிமுடியமரர்வேந்தனே

(இ-ள்.) கவனம்-வேகத்தையுடைய — வாம்-தாவுகின்ற — பரியுளம்-குதிரையினதுகருத்தை — உணருங்காவல - அறியும்நளமகாராசனே — இவனழற்கடவுள் - இவனக்கினிதேவன் — இவன்வெங்கூற்றுவன்-இவன்வெப்பம்பொருந்தியயமன் — உவன்-அவன் — எறிகடற்கிறை-அலையெறிகின்றகடற்கரசனுகியவருணன் — ஒழிந்துநின்ற - இவரொழிகின்ற — யான்-யானேவெனில் — அவிர்-பிரகாசிக்கின்ற — ஒளி-காந்திபொருந்திய — மணி - மணிகளாலிழைக்கப்பட்ட. முடி-கிரீடத்தையுடைய — அமரர்வேந்தன - தேவர்க்கரசனுகிய விந்திரன் — எ-று. குவலயானந்தம் - உறுப்பியல் - நன்மைதுன்மைவேட்கைசினமன - முறவுவெறுப்புபுத்தியறிகுணம் - இவ்விதியால் - உணர்தல்புத்திக்குரித்து (கருத்து) குதிரைக்கருத்தையறியும்நளராஜனே இவன் அக்கினிதேவன்-இவன்யமன்-இவன்வருணராசன்-யான் இந்திரனென்றான்-எம். ( )

உன்னுழைவேண்டுவதொன்றுண்டாங்கது
பின்னர்யாங்கூறுதுமென்றுவெட்புறும்
பொன்னகர்க்கிறையவனிருந்தபோதினின்
மன்னவனவாடிவணங்கினனரோ



(இ-ள்.) உன்னுழை - உன்னிடத்தில் — வேண்டுவது-யாம் விரும்புவது — ஒன்றுண்டு - ஒருகாரியமுண்டு — அது-அதனை — பின்னர் - பின்பு — யாங்கூறுதுமென்று - யாம்சொல்லுவோமென்று — வெட்புறும் விருப்பமடைந்த — பொன்னகர்க்கிறையவன் - இந்திரனவன் — இருந்தபோதினில் - இருந்தபொழுதில் — மன்னவன் - நளமகாராஜன் — அவாடி - இந்திரன்முதலிய அந்நால்வர்பாதங்களையும் — வணங்கினன் - வணங்குதல்செய்தான் — எ-று. (கருத்து) உனனிடத்தில்வேண்டுவதொன்றுண்டு - அதைப்பின்னேசொல்வேனென்றிந்திரன்சொல்ல நளன் இந்திரனைவணங்கினன் என்பதாம். (யஎ)

உண்ணெகிழ்ந்திறைஞ்சியவுலங்கொடோளினன்
விண்ணுலகாள்பவர்க்கரியமேன்பொருண்
மண்ணுலகாள்பவர்மாட்டுவைகுமோ
வெண்ணினிமற்றிவருளம்யாவதாங்கொலோ.

(இ-ள்,) உள்-உள்ளம் — நெகிழ்ந்து-குழைந்து — இறைஞ்சிய-வணங்கிய — உலங்கொள் (திரண்டகல்லினுடையவலிமையைக்கொண்ட — தோளினன் - தோள்களையுடையநளமகாராஜன் — விண்ணுலகாள்பவர்க்கு - தெய்வலோகத்தையாளுகின்றவர்க்கு — அரிய - அருமையாகிய — மேன்பொருள் - மேன்மைப்பட்டபொருள் — மண்ணுலகாள்பவர்மாட்டு - மண்ணுலகாள்பவரிடத்து — வைகுமோ - இருக்குமோ — எண்ணில் - என்னுமிடத்தில் — இவருளம் - இவருடையமனம் — யாவதாங்கொலோ-யாதாகுமோ — எ-று,கொல்-ஐயம்-மற்று-அசைநிலை,(கருத்து) அவ்வாறுவணங்கிய நளன்விண்ணாட்டரசர்க்கரியபொருள்மண்ணாட்டரசர்க்குக்கிடைக்குமோ இவர் கருத்தென்னமோவென்றான் என்பதாம், (௫)

குறிப்பறிந் * தீதலேகொடைமற்றின்றென
மறுத்தலேகேட்டபின்வழங்கலாதலிற்
பெறற்கருமாவியும்பெட்பினீகுவன்
றிறப்படவிவருளந்தெரிந்ததில்லையால்.

(இ-ள்.) குறிப்பறிந்து-ஒருவர்குறிப்பினைத்தெரிந்து — ஈதலே-கொடுத்தலே — கொடை - கொடுத்தலாகும் — கேட்டபின்-கேட்டபின்பு — வழங்கல்-கொடுத்தல் — இன்றென - இல்லையென்று — மறுத்தலே - தடுத்தலேயாகும் — ஆதலின் - ஆகையினலே — பெறற்கரும் - பெறுதற்கரிய — ஆவியும் - உயிரையும் — பெட்பின் - அன்பினலே — ஈகுவன்-கொடுப்பேன் — திறப்பட - நிச்சயமாக — இவருளம் - இவருடையமனம் — தெரிந்ததில்லை - தெரியவில்லை — எ-று,உம்மைஉயர்வுசிறப்பு * அத்தியம் - குவலயானந்தம் - வினையேதொழிலெனவிளம்பப்படுமே - வினைப்பெயரேனைத்துந்தொழிலெனப்படுமே, இவ்விதியால் ஈதல்தொழிற்பெயர் (கருத்து) குறிப்பறிந்துகொடுத்தலேகொடையாகும் கேட்டபின்கொடுத்தல் மறுதலாகும்ஆதலால்என்னுயிரையுங்கொடுப்பேன் உண்மையாகஇவருள்ளத்தையறிந்திலேன் என்றான்-எ-ம், (யகூ)

ஒளிமுகமிழப்பவந்துற்றநாணமிக்
கிளர்தரவில்லெனக்கிளர்க்குமூர்ச்சனை
தெளிதரமுகத்தினிற்றெளித்தற்கன்றுகொல்
நளிபுனல்பொருளொடுநல்குகின்றதே.

(இ-ள்.) முகம்-முகமானது—ஒளிமிழப்ப -ஒளிவீசுக—வந்து - வந்து—உற்ற - மிகுந்த—நாணம் - நாணமானது—மீக்கிளர்தர - அதிகரிக்க—இல்லெனக்கிளர்க்கும் - இல்லையென்றுசொல்லும்—மூர்ச்சனை- மூர்ச்சையானது—தெளிதர - தெளியும்படி—முகத்தினில்- முகத்தினிடத்தில்—தெளித்தற்கன்றுகொல் - தெளித்தற்கல்லவா—நளி - குளிர்ந்த—புனல் - நீரை—பொருளொடு - திரவியத்துடனே—நல்குகின்றது - கொடுக்கின்றது—எ-று.(கருத்து) அகமலர்ந்துகொடுத்தல்முகமலரும் பொருட்டென்பதாம். (௨௰)

ஐந்தருநிழலினாசனைவகிப
விந்திரன்முதலினோரீகென்றென்னுழை
வந்துயர்பெரும்புகழ்வழங்கினாரிவர்
சிந்தனைமகிழ்வுறவென்கொல்செய்வதே.

(இ-ள்.) ஐந்தருநிழலின்-பஞ்சதருவினிழலினிடத்து, ஆசனைவகிப - ஆசிருக்கின்ற—இந்திரன்முதலினோர் - இந்திரனாதியோராகியவரால்—ஈகென்று - தருவாயென்று—என்னுழைவந்து - என்னிடத்தில்வந்து—உயர் - உயர்ந்த—பெரும்புகழ் - பெரியகீர்த்தியை—வழங்கினார் - கொடுத்தார்கள்—இவர் - இவர்களுடைய—சிந்தனை - மனங்கள்—மகிழ்வுற - மகிழ்ச்சிபொருந்த—என்செய்வது - யாதுசெய்வது—எ-று. (கருத்து) இந்திரன்முதலானவர்களென்னிடத்தில்வந்து ஈந்தருள் செய்யென்றார்கள்இவர்கள்மனமகிழும்படிஎன்செய்யலாமென்றானென்பதாம். (௨௧)

உரவுநீர்க்கருங்கடலுடுத்தமாநிலத்
தருளுடனிம்மையினளித்தவான்பொருண்
மருவியமறுமையில்வழங்குபான்மையா
லிரவலர்தமரினுமினியராவரோ.

(இ-ள்.) உரவு - ஒலிக்கின்ற—நீர் - நீரையுடைய—கருங்கடல் -கரியகடலை—உடுத்த - ஆடையாகத்தரித்த—மாநிலத்து - மகத்தாகியபூமியில்—அருளுடன் - கருணையுடனே - இம்மையில் - இப்பிறப்பில்—அளித்தகொடுத்த—வான்பொருள் - மேலாகியபொருளை—மருவிய - பொருந்திய—மறுமையில் - மறுபிறப்பில்—வழங்குபான்மையால் - கொடுக்கின்றதன்மையால்—இரவலர் - யாசகர்கள்—தமரினும் - தம்மவரினும்—இனியராவர் - இனிமையுடையவராவர்—எ-று. தம்மவர் - உறவோர் (கருத்து) இப்பிறப்பிற்கொடுத்தபொருள்மறுபிறப்பில்வருமாதலால் யாசகர்கள் உறவினரைப்பார்க்கிலும் இனிமையுடையவர்களாவார்கள் என்பதாம். (௨௨)



உடைப்பெரும்பொருளினையுலகிலூதியங்
கிடைப்பதற்களித்தலிற்கிளர்நிரப்பினா
லடுத்துவந்தேற்குநர்க்கார்வமீதுறக்
கொடுக்கிலொன்றேபலகோடியாகுமால்.

(இ-ள்.) உடை - தமதாகவுடைய—பெரும்பொருளை - பெரியதிரவியத்தை—உலகில் - உலகத்தில்—ஊதியம - இலாபம்—கிடைப்பதற்கு - கிடைக்கும்பொருட்டு—அளித்தலில் - கொடுப்பதிலும்—கிளர் -மிகுந்த—நிரப்பினால் - வறுமையினால்—அடுத்துவந்து - அநுசரித்துவந்து—ஏற்குநர்க்கு - யாசிப்பவர்க்கு—ஆர்வம் -ஆசை—மீதுற - அதிகரிக்க—கொடுக்கில் - கொடுத்தால்—ஒன்றே - ஒருபொருளே — பலகோடியாகும் - பலகோடிப்பொருளாகும்—எ-று.(கருத்து)தமக்குள்ளபொருளைஇலாபங்கிடைக்கும்பொருட்டுக் கொடுப்பதிலும் யாசகருக்குக்கொடுக்குமொன்றேபலகோடியாகும்-எ-ம். (௨௩)

என்றுமற்றினையனவெண்ணிவண்ணவான்
குன்றெனப்பணைத்துயர்குவவுத்தோளினான்
வன்றிறல்வாசவன்வதனநோக்கிமற்
றொன்றுநீகேட்டியென்றுரைத்தன்மேயினான்.

(இ-ள்.) என்று - இப்படியென்று—இனையன - இத்தன்மையவாக—எண்ணிநினைந்து—வண்ணம் - அழகிய—வான்மேலாகிய —குன்றென - மலையைப்போல—பணைத்து - பருத்து—உயர் - உயர்ந்த—குவவு - திரட்சிபொருந்திய—தோளினான் - தோளையுடையநளமகாராசன்—வன்றிறல் - மிகுந்தவலுமைபடைத்த—வாசவன் -இந்திரனுடைய—வதனநோக்கி - முகத்தைப்பார்த்து—ஒன்று - ஒருசெய்தி— நீகேட்டியென்று - நீகேட்பாயாகவென்று—உரைத்தன்மேயினான் - சொல்லத்தொடங்கினான்—எ-று. மற்றிரண்டும் அசைநிலைகள் (கருத்து) நளனிவ்வாறுநினைந்துதேவேந்திரன்முகத்தைப்பார்த்துச்சொல்லத்தொடங்கினான் என்பதாம். (௨௪)

என்னருந்தவத்தினன்றெனதுதொல்குல
முன்னையோரருந்தவமுயன்றபான்மையாற்
பொன்னகர்துறந்துநீர்போதப்பெற்றனன்
சொன்னவைமறுக்கிலன்சொல்கவென்றனன்.

(இ-ள்.) என்-என்னால்செய்யப்பட்ட—அருந்தவத்தின் - அரியதவத்தினாலே—அன்று - அன்றாகும்—எனது - என்னுடைய— தொல்குலம் - பழையகுலத்திற்றோன்றிய—முன்னையோர் -பெரியோர்கள்—அருந்தவம் - அரியதவத்தை—முயன்றபான்மையால் - முயன்றுசெய்தபடியினாலே—பொன்னகர் - தெய்வலோகத்தை—துறந்து - நீங்கி—நீர்போதப்பெற்றனன் - நீவிர்இங்குவரப்பெற்றேன் — சொன்னவைமறுக்கிலன் - சொல்லியசெய்திகளைமறுக்கமாட்டேன்—சொல்கவென்றனன் - சொல்லக்கடவீரென்றான்—எ-று. (கருத்து) என்றவந்தாலல்

ல என்குலத்தோர்செய்தவத்தால் நீங்களிங்கேவரப்பாக்கியம் பெற்றேன் தாங்கள்சொல்பவற்றைத்தடுக்கேன் சொல்லுங்களென்றான் என்பதாம். (உரு)

ஆங்கதுகேட்டவானரசன் * பொற்பினல்
வீங்குதோண்மாரனைவென் றநீயலால்
யாங்குளாவன்றொடுத்தெய்யுமின்னறாப்
பூங்கணையால்வருந்துயரம்போக்குவார்.

(இ-ள்.) ஆங்கு - அவ்விடத்தில்—அது - அம்மொழியை— கேட்டகேழ்விப்பட்ட—வானரசன் - இந்திரனைவன்—பொற்பினல் - அழகினல்—வீங்கு - மிகுந்த—தோள் - தோளையுடைய—மாரனை - மன்மதனை—வென்ற - வெற்றிக்கொண்ட—நீயலால் - நீயொருவனல்லாமல்—அவன் - அம்மன்மதனனவன்—தொடுத்து - நாரியிற்றொடுத்து — எய்யும் - பிரயோகஞ்செய்கின்ற—இன் - இனிய—நறா - தேனொழுகுகின்ற—பூங்கணையால் - மலரம்பால்—வரும் - வருகின்ற—துயரம் - துக்கத்தை—போக்குவார் - நீக்குவார்—யாங்குளார் - எவ்விடத்திலுளர்—எ-று. [* குவலயாநந்தம் வடிவுசிறங்குணம்வயவமீத - ஒளிதிகல்விவ்வியுவங்கருமம் - கருணைவாய்மையெனும்பதினொன்று - மாண்பாற்கெல்லாமணியும்புனைபொருள் இவ்விதியால்பொற்புஆண்பாற்புனைபொருள்] (கருத்து) அவ்வார்த்தையைக்கேட்ட இந்திரனைவன் உன்னையல்லாதும்மன்மதபாணத்தைநீக்குபவர்யார் என்றானென்பதாம். (உசு)

வெயில்விரிமணிமுடிவீமனல்கிய
மயிலியன்மதர்விழிவளைக்கைமங்கையர்
செயிரறுதூதுநீசெல்லவேண்டுமென்
றுயிரப்போரினுமுனையக்கூறினன்.

(இ-ள்.) வெயில்-பிரகாசம்—விரி - விரிகின்ற—மணி - மணிகள்பதித்த—முடி - முடியையுடைய—வீமனல்கிய - வீமராசன்பெற்ற—மயில் - மயிலையொத்த—இயல் - சாயலும்—மதர் - களிப்புமிக்க—விழி - கண்களும்—வளைக்கை-வளையலையணிந்தகைகளையும்பெற்ற—மங்கைபால் - தமயந்தியிடத்தில்—செயிரறு - குற்றமற்ற— தூதுநீசெல்லவேண்டுமென்று - நீதூதுபோகவேண்டுமென்று—உயிரப்போரினும் - உயிரைக்கொடுவென்டிரப்பவரைப்பார்க்கிலும்—உளைய - வருந்த— கூறினன் - சொல்லினன்— எ-று. (கருத்து) இந்திரன்நளனைப்பார்த்துத் தமயந்தியிடத்துத்தூதுசெல்லவேண்டுமென்றான் என்பதாம். (உஎ)

திருத்தகுசெவியிடைச்சிலையினூடுற
வுருக்கியசெம்பினைபூற்றினலென
மருத்துவன் றீமொழிகேட்டுமன்னர்கோன்
கருத்தழிந்தாருயிர்கலங்கினனரோ.

(இ-ள்.) திருத்தகு-அழகுபொருந்திய—செவியிடை - காதினிடத்திலே—சிலையினூடு - உலைமுகத்தில்—உற - பொருந்த—உருக்கிய - உருக்கப்பெற்ற—செம்பினை - செம்பை—ஊற்றினலென - ஊற்றியதுபோல—மருத்துவன் - இந்திரனது—தீமொழி - தீயையொத்தசொல்லை—கேட்டு - கேள்விப்பட்டு—மன்னர்கோன்-நளனனவன்— கருத்தழிந்து - நினைவுமறந்து—ஆர் - நிறைந்த—உயிர்-ஆவி—கலங்கினன் - கலக்கமுற்றான்—எ-று. (கருத்து) நளன்உருக்கியசெம்பினைக் காதிலூற்றினற்போலும் இந்திரன் கொடுமொழிக்கேட்டுக் கருத்தழிந்துஉயிர்கலக்கமடைந்தான் என்பதாம். (உஅ)



குருமணிமேகலைக்குவளைக்கண்கொலோ
பொருமதன்பகழியோ பொய்ம்மைதீதெனுந்
தருமமோவுயிர்நிலைதளர்ந்துவாடுமென்
மருமமீதூன்றியவாளிற்போழ்வதே.

(இ-ள்-) குரு-நிறம்பொருந்திய—மணி-இரத்தினங்கள்பதிக்கப்பெற்ற—மேகலை - மேகலாபரணமணிந்த தமயந்தியினது—குவளை - நீலோற்பலம்போன்ற—கண்கொலோ - கண்ணோ—பொரு - போர்செய்கின்ற—மதன் - மன்மதனுடைய—பகழியோ - பாணமோ—பொய்ம்மை - பொய்யுரை—தீதெனும் - குற்றமென்றுசொல்லும் — தருமமோ - அறமோ—உயிர்நிலை - சீவநிலையானது—தளர்ந்து - தளர்ச்சியடைந்து—வாடுமென் - மெலிவேறுகியவென்னுடைய—மருமமீது - மார்பினிடத்தில்—ஊன்றிய - தைக்கச்செய்த—வாளில் - வாளாயுதத்தைப்போல—போழ்வது - பிளக்கின்றது—எ-று, (மேகலை - எழுகோவையுள்ளது.) (கருத்து) தமயந்தியின்கண்ணோ மன்மதன் பாணமோ பொய்யுரைதீதென்னுந் தருமமோ என்னுடையமார்பில் வாளாயுதம்போலும் பிளக்கப்பட்டது என்றான்நளன் என்பதாம். (உகூ)

என்னும்விள்ளாதயர்ந்திருக்குமேழுறுந்
தன்னையும்மறக்குமெய்த்தருமநன்றெனப்
புன்னகைகோட்டுமெய்புழுங்கும்வெய்துயிர்த்
தன்னமுன்னுரைத்தவையனைத்துமெண்ணுமால்.

(இ-ள்) என்னும்- இப்படியென்றுசொல்லுவான்—விள்ளாது-பேசாமல்—அயர்ந்திருக்கும் - துன்பப்படுவான்—ஏழுறும் - மயங்குவான்—தன்னையுமறக்கும் - தன்னையுமறப்பான்—மெய்-உண்மை பொருந்திய—தருமம்-அறம்,நன்றெனு-நல்லதென்று—புன்னகை கோட்டும்-புன்சிரிப்புக்கொள்ளுவான்—மெய்புழுங்கும்-உடல்வெதும்புவான்—வெய்துயிர்த்து - அச்சமடைந்து—அன்னம் - அன்னப்புள்ளானது—முன்னுரைத்தவையனைத்தும்-(தூதுபோய்வந்து)முன்சொல்லியசெய்தியாவையும்—எண்ணும் - நினைப்பான்—எ-று. (கருத்து) இவ்வாறு சொல்லுவான-பேசாதுதுன்பப்படுவான்- மயங்குவான்-தன்னையுமறப்பான்-சிரிப்பான்வெதும்புவான், அன்னஞ்சொன்னவற்றை நினைப்பானென்பதாம். (௩௰)

மூற்றிழைவனமுலைமுயங்கு * நன்னலம்
பெற்றிலனெனினும்வேள்பெய்யும்வாளியான்

மற்றுயிர்றப்பினும்வானவேல்தொடு
சொற்றதுமறுக்கிலனென்றுசொல்லுவான்.

(இ-ள்.) மூற்றுமுற்றிய—இழை - ஆபரணங்களையணிந்ததமயந் தியின து—வனம் அழகிய—முலை - ஸ்தனங்களை—முயங்கும் - தழுவு கின்ற—நன்னலம் நல்லசுகத்தை—பெற்றிலனெனினும் - பெறுமந் திபாகேனுயினும்—வேள்- மன்மதனுனவன்—பெய்யும் - சொரிகின் ற—வாளியால் - பாணங்களினலே—உயிர்றப்பினும் - ஆவிமாயினும் —வானவேல்தொடு - இந்திரனுடன்—சொற்றது-சொல்லியதை— மறு க்கிலனென்று-தடுக்கமாட்டேனென்றுபிரதிஞ்சித்துக்கொண்டு —சொல் லுவான்-சொல்லுவான்—எ-று.மூற்றுதல்-வினைத்தல்- மற்று அசைநிலை [* குவலயானந்தம்-உருப்பியல், பொருளிடங்காலஞ் சினைகுணந்தொ ழிலெனா, வருவினைபாறுங் காரணப்பொதுவாய்த், திரிசொல்லெழு மெனச்செப்பினர்புலவர்-இவ்விதியால்நன்னலம் என்றதுபண்பித்திரி சொல்] (கருத்து) தமயந்தியின்பத்தைப்பெறேனுகினுமன்மதன்கணை யாலுயிர்போயினும் இந்திரனுெடு சொன்னதைமறுக்கிலேன் என்றுன் என்பதாம். (நக)

எப்பொருளாயினும்யாவருள்ளமுங்
கைப்படுநெல்லியங்கனியிற்காணுநீர்
துப்பிதழ்மடந்தைபாற்றூதுபோகெனச்
செப்பியதெவன்கொலென்சிந்தையோர்ந்துமே.

(இ-ள்.) எப்பொருளாயினும் - எந்தப்பொருளானுலும்— யாவரு ள்ளமும் - எவர்களுடையமனமும்—கைப்படு - உள்ளங்கையிற்பட்ட —நெல்லியங்கனியில் - நெல்லிப்பழத்தைப்போல—காணும்- அறிகின் ற—நீர் - நீவிர்—துப்பு-பவளம்போன்ற—இதழ் - அதரத்தையுடைய— மடந்தைபால் - தமயந்தியினிடத்து—தூதுபோகென-தூதுபோவென் று—என் - என்னுடைய—சிந்தை - மனதை—ஓர்ந்தும்-தெரிந்தும்— செப்பியது - சொல்லியது எவன்கொல் - என்னகாரணம்—எ-று, (கருத்து).எல்லாமறிந்தநீர் தமயந்தியிடத்துத் தூதுபோவென்று சொ ல்லியதென்னவோவென்றுன் என்பதாம். நெல்லிக்கனியுள்ளும் புற முந்தோற்றும். (நஉ)

வழங்கியநும்முரைமறுதுசென்றியான்
மொழிந்தனனுயினுமுன்னரேயெனை
விழைந்தவத்தளிரியல்வெள்குறுதுளங்
குழைந்துநம்பான்மணம்பொருந்தல்கூடுமோ

(இ-ள்.) வழங்கிய - சொல்லிய—நும்முரை-உம்முடையசொல்லை —மாறுது - மறுக்காமல்—யான்சென்று - யான்போய்— மொழிந்தனை னுயினும் - சொன்னேனுனுலு—முன்னரே-முன்னமே, எனைவிழை ந்த-என்னைவிரும்பிய—அத்தளிரியல் - அந்தமயந்தி — வெள்குறுது- நாணமல்—உளங்குழைந்து - மனங்கரைந்து—நம்பால் - உம்மிடத்தி



ல்—மணம் - விவாகத்திற்கு — பொருந்தல்கூடுமோ - சம்மதிப்பாளோ —எ-று. (கருத்து.) உமதுசொல்லை நான்சொன்னேனுனுலும் என்னை விரும்பிய தமயந்திஉம்மைவிரும்புவாளோவென்றுன் எ-ம். (நங)

என்னவேந்துரைத்தலுமிசைத்தசொன்மறு
மின்னைமெய்ப்பாதனைநிகரில்பார்த்தனை
முன்னினுநினைத்தவையனைத்துமுற்றுமா
லன்னதீயேகிலெதரியதாகுமே.

(இ-ள்.) இன்ன - இப்படியென்று—வேந்து - நளமகாராஜனுனவ ன்—உரைத்தலும் - சொல்லும்— இசைத்த - சொல்லிய — சொல்- சொல்லினை—மறு - மறுக்காத—நின்னை - உன்னையும் —மெய்- உண் மையையுடைய—பாதனை - பாதனையும் —நிகரில் - ஒப்பில்லாத —பார் த்தனை- அருச்சுனனையும்—உன்னினும் - நினைத்தாலும்— நினைத்தவை யனைத்தும் - நினைத்தகாரியங்களியாவும்—முற்றும் - முடியும்— அன் ன -அந்தன்மையையுடைய—நீ- நீயே—எகில் - போனுல்— எது - எந்த க்காரியம்—அரியதாகும்-அருமையையுடையதாகும்—எ-று, ஆல் - அ சைநிலை.(கருத்து) உன்னையும், பாதனையும், அருச்சுனனையும், நினைத் தால் நினைத்தகாரியமுடியும் - நீயேபோனுல் காரியமரிதோ என்றுனி ந்திரன் என்பதாம். (நச)

இனையனவாசவனியம்புமெல்லையின்
வினைமலர்க்கோதைதன்வயனுகியுந்
தனியறனிழுக்குறுத்தகையனுதலி
னனையதற்கியைந்தனனலங்கல்வேலினுன்

(இ-ள்.) வாசவன் - இந்திரனுனவன்—இனையன -இத்தன்மையா கியசொற்களை—இயம்புமெல்லையின் - சொல்லுகிறபொழுதில்—வனை- கட்டுகின்ற—மலர்க்கோதைதன் - மலரையணிந்த கூந்தலையுடையதம யந்தினது—வயத்தனுகியும் - வசப்பட்டவனுயிருந்தும் — தனி - ஒப்ப ற்ற—அறன் - தருமத்தினின்றும்—இழுக்குறு - கெடுதலடையாத—த கையனுதலின் - குணத்தையுடையவனுதலால், அனையதற்கு - அவ்வி ந்திரன்சொன்னதற்கு—அலங்கல் - வெற்றிமாலையைத்தரித்த— வேலி னுன் - வேற்படையேந்திய நளமகாராஜன், இயைந்தனன்-உடன்பட் டான்—எ-று. (கருத்து) நளன்தூதுபோகச்சம்மதித்தான்-எ-ம், (நரு)

பொருந்தியமன்னர்கோன்பொம்மல்வெம்முலைத்
திருந்திழைக்கடிநகர்ச்சேமமாகிய
வருந்திறல்வாயிலோர்திறவுபோய்
வருந்திறமயாதெனசசிந்துங்கூறினுன்,

(இ-ள்-) பொருந்திய - சம்மதிப்பட்ட—மன்னர்கோன்-நளன் — பொம்மல்- பொலிவுபொருந்திய—வெம்-விருப்பத்தைத்தருகின்ற — முலை - தனங்களையும்—திருந்திழை - திருந்தமாகிய—ஆபரணங்களையு மணிந்த தமயந்தியினுடைய—கடிநகர் - புதுமைபெற்றநகரம் — சே

மயாகிய-காவலரியை—அருந்திறல் - அரியவல்லமைபொருந்திய — வா யிலோர் - வாயில்காப்பவர்—அறிவுறுதுபோய் - அறியாமற்படி புகுந் து—வருந்திறம் - வருகின்றவிதம்—யாதென - எப்படியென்று — மறு த்தும் - மறுபடியும்—கூறினன் - சொல்லினன்—எ-று. (கருத்து) நள ன்தமயந்தியாண்மனைக்காவலாளர்அறியாதுபோய் வரும்விதமெப்படி யென்றனனென்பதாம். (ஙசு)

விட்புலந்தனிபுரந்தருளும்வேந்தர்கோ
னட்பொடுமினியசொன்னயாவர்க்குங்
கட்புலனுறுநக்காண்கிலாதகோர்
நுட்பநூல்விந்தைசையைநுவன்றிட்டானரோ

(இ-ள்.) விட்புலம் - விண்ணுலகத்தை—தனி-ஒப்பற்ற — புரந் தருளும் - காக்கின்ற — வேந்தர்கோன் - இந்திரனானவன்— நட்பொடும்- சிநேகத்துடனே—இனியசொல் - இனியசொற்களை—நவின்று - சொ ல்லியாவர்க்கும் - எவர்களுக்கும் — கட்புலனுறல் - கண்ணறிவினுல் — உருவடிவத்தை—காணகிலாத்து-அறியப்படாததாகிய — ஓர் - ஒரு— நுட்ப நூல் - நுண்ணிய நூலிற்சொல்லும்—விந்தையை - மந்திரத்தை —நுவன்றிட்டான்-சொல்லினன் —எ-று. விந்தை - மந்திரத்துக்காத லால் - ஆகுபெயர்—(கருத்து) இந்திரன்களனுக்குருவமறும்வித்தையை க்கற்பித்தான் என்பதாம். (ஙஎ)

பெறலருமவிந்தையும்பெற்றுவானவர்க்
கிறையவனிணையடியிறைஞ்சிவண்டயிர்
நறைமலர்கூந்தலாணகரிநண்ணுவா
னறைகழலிலங்குதாளரசனேகினன்

(இ-ள்) பெறலரும் - பெறுதற்கரிய —விந்தையும் - மந்திரத்தை யும்—பெற்று-பெற்றுக்கொண்டு—வானவர்க்கிறையவன் - இந்திரனது, இணையடி-இரண்டுபாதங்களையும்—இறைஞ்சி-வணங்கி—வண்டு - வண் டுகள்—இமிர்-ஒலிக்கின்ற—நறை-தேனொழுகுகின்ற — மலர் - மலரையணிந்த— கூந்தலாள் - அளகபாரத்தையுற்றதமயந்தியினது— நகரி -கு ண்டினபுரத்திலே—நண்ணுவான் - சேரும்பொருட்டு—அறை ஒலிக் கின்ற—கழல் - வீரக்கழலானது—இலங்கு - பிரகாசிக்கின்ற,— தாள் - பாதத்தையுடைய—அரசன்-நளன்—ஏகினன்-போனன்—எ-று (கருத் து) நளன்மந்திரத்தைக்கற்று இந்திரனைவணங்கிச்சென்றான்-எ-ம். ()

பன்னமைகூந்தன்மான் * தேரிற்பார்புக
ழன்னனுமிமையவராவம்பின்செல
மண்ணிடைவானவர்மகளிர்தம்மொடும்
விண்ணிழிந்திருந்தனநகரமேயினன்

(இ-ள்.) பன்னமை - கல்லணையமைந்த—கூந்தல்-புறமயிரை யுற் ற—மான் - குதிரைகட்டிய—தேரில் - இரதத்தில்—பார் - பூமியினுள் ளார்—புகழ்-புகழ்கின்ற - அன்னனும் - நளமகாராஜனும் — இமைய வர்-தேவர்களுடைய—ஆர்வம் - ஆசையானது—பின்செல - பின்னே தொடர—மண்ணிடை-மண்ணுலகத்தில்—வானவர்மகளிரொடும் - அரம்பையருடன்—விண் - சுவர்க்கமானது — இழிந்திருந்தன - இழிந் திருந்ததையொத்த—நகரம் - குண்டினபுரத்தை—மேயினன் - பொரு ந்தினன்—எ-று. * குவலயாநந்தம் - உறுப்பியல் - ச - கூ- அருந்துதல ணிதல்வாகனம்விருதோ - டாபுதமாடைகாதலிதோற்றம் - தந்தைதாய் கிளையாதிபஞ்செல்வ - மிசையெனவருமீரொழிவையாண்பாற் - கோட் பொருளென்வே கூறப்படுமே - இவ்விதிபால் தேர் ஆண்பாற்குங்கொ ள்பொருள் (கருத்து) நளன்குண்டினபுரத்திற்போயினன்.எ-ம். (ஙக)

வாம்பரித்தேரினின் றிழிந்துவண்டுளர்
தேம்பொதிநறுமலர்த்தெரியன்மார்பினன்
காம்புறழ்தோளினள்செவ்விகாண்குறு
மேம்பலிற்கோநகரெய்தினனரோ,

(இ-ள்.)வாம்- தாவுகின்ற—பரி - குதிரையையுடைய—தேரினின் றிழிந்து-தேரினின்றுமிறங்கி—வண்டு - வண்டுகளானவை— உளர்-ஒலி க்கின்ற—தேம்-வாசனை—பொதி - நெருங்கிய—நறும் -பரிமளம்பொரு ந்திய—மலர் - மலராற்றொடுத்த—தெரியல் - மாலையணிந்த—மார்பின ன் - மார்பையுடையவனுகியநளமகாராசன்—காம்பு -மூங்கிலை—உறழ் - ஒத்த—தோளினள் - தோளினையுடையவளாகிய தமயந்தியினது—, செவ்வி - அழகை—காண்குறும் - காணவேண்டுமென்கிற—ஏம்பலின் ஆசையினலே—கோநகர் - குண்டினபுரத்தை—எய்தினன் - அடைந் தான்—எ-று, (கருத்து) நளன் தமயந்தியைக்காண வாசையால் குண்டி னபுரத்தையடைந்தான் என்பதாம். (சய)

உரியதங்கொழுநர்பாலூடிநீத்தநல்
விரைகமழ்தெரியலுமின்செயாரமுங்
குருமணிக்கலன்களுங்குலவுவீதிவா
யெரிமணிப்பூணினனிடறியேகினன்.

(இ-ள்.) உரிய-உரிமையையுடைய—தம் - தம்முடைய—கொழுந ர்பால்-கணவரிடத்து—ஊடி - பிணங்கி—நீத்த - நீக்கிய—நல் -நல்ல— விரை-வாசனை—கமழ் - வீசுகின்ற—தெரியலும் - மாலையும்—மின்செ ய்-பிரகாசத்தைச்செய்கின்ற—ஆரமும் - பதக்கமும்—குரு - நிறம்பொ ருந்திய—மணிக்கலன்களும் - ரத்தினபாணங்களும்—குலவு- பிரகாசிக் கின்ற—வீதிவாய் - வீதியினிடத்தில்—எரி - ஒளிபொருந்திய—மணி - மணிகள்பதித்த—பூணினன் - ஆபரணத்தையுடையநளமகாராசன் — இடறி - காலினலிடறிக்கொண்டு—ஏகினன் - போனன்—எ-று.நளன் பூமாலைஇரத்தினபரணமிவற்றை இடறிநடந்தான் என்பதாம். (சக)

மணங்கவர்வனப்பமைவடிவினன்றியுங்
கனம்பயில்வாயிலோர்காண்குறுவகை

சினங்கொள்கூரிலைப்பவேற்செம்மல்போதலா
லனங்கனென் றுரைப்பதற்கையமில்லையே,

(இ-ள்.) மனம்-மனதை—கவர் - கவர்ந்துகொள்ளுகின்ற— வனப்பு-அழகு—அமை - அமைந்த—வடிவின் - வடிவினாலும்—அங்கியும் - ம் - வழியிலிருக்குங்காவலர்கள்—காண்குறுவங்க - காணுதலினும்— சினங்கொள்-கோபங்கொண்ட—கூர் - கூர்மைபொருந்திய—இலைய - இலை யையுடைய—வேல்-வேற்படையேந்திய—செம்மல் - நளமகாராசனே— போதலால் - செல்கின்றபடியால்—அநங்கனென்று - அநங்கனென்று உரைப்பதற்கு - சொல்வதற்கு—ஐயம்-சந்தேகம்—இல்லை-இல்லை—எ-று. இதுதற்குறிப்பணி (கருத்து) நளன் அவ்வழியே செல்லுதலால் மன்மதனென்றுசொல்லுதற்குச்சந்தேகமில்லை என்பதாம். (௪௨)

கன்னகன் மணிக்கடைக் காவலாளர்தா
மன்னவனெவனெனவெவனைநாடினுந்
தன்னறுந்தெரியலான் றன்னையாமென
வென்னணிவெம்படைநளனைவெருக்கொண்டிவன்,

(இ-ள்.) கன்னகல் - இடமகன்ற—மணி - அழகிய—கடை - வாயிலிலிருக்கின்ற—காவலாளர்தாம் - காவல்செய்வோர்—மன்னவர்-வருபவர்கள்—எவனென-யாவனென்று—எவனைநாடினும் - யாவனைநாடிப்பார்க்கினும்—நன் - நன்னிய—நறும் - பரிமளம்பொருந்திய—தெரியலான் - மாலையுடையவனாகிய நளமகாராசன்—தன்னையாமென - தன்னையாகுமென்று—என்னணி-நினைத்து—வெம் - வெவ்விய—படை - ஆயுதத்தையுடையவனை—எருத்தங்கோட்டும் - திரும்பிப்பார்ப்பான்—எ-று. (கருத்து) வாயில்காப்பார் யார்யாரென நளன்றன்னையென்றுதிரும்பிப்பார்ப்பான் என்பதாம். (௪௩)

மலர்பயில்வாவிதோய்மாதர் நுண்டுகி
லவபுனைநெனதலுமல்குறுன் றலாற்
கலைவலான்கண்முகிழ்த்தேகக்காண்குறுள்
முலைமுகடமுந்துறவொருத்திமுட்டினள்

(இ-ள்.) மலர்பயில்-மலர்மகள்நெருங்கிய—வாவி- தடாகத்தில் —தோய்-முழுகிய—மாதர் - மாதர்களுடைய—நுண் - நுண்ணிய, துகில் - ஆடையானது—ஆங்கு - அங்கேயிருக்கின்ற—புனல்-நீரிலே—நனைதலும்- நனைந்தவளவில்—அல்குல் - நிதம்பமானது—தோன்றலால் - தெரிதலால்— கலைவலான் - அறநூலில்வல்லவனாகிய நளமகாராஜன்—கண்முகிழ்த்து - கண்களைமூடிக்கொண்டுபோக—காண்குறுள் - காணுவாளாகிய—ஒருத்தி - எதிர்ப்பட்டவொருமங்கை—முலை - தனங்களினுடைய—முகடு - உச்சி—அழுந்துற - அழுந்தும்படி—முட்டினள் - முட்டினாள்—



—எ-று. (கருத்து) நளன்வாவியிலாடுமாதர் அல்குலைக்கண்டுகண்மூடிச்செல்லுதலால் எதிரில்வருமொருத்தி முலைமுகடமுந்தமுட்டினளென்பதாம். (௪௪)

காமுறுமொருத்திதன்வதனங்கண்டகண்
கோமகன்முகிழ்த்தலாற்கோதைமார்முக
மாமதியென்பதுமன்னன்செய்யகண்
டாமரையென்பதுந்தக்கவாயவே,

(இ-ள்.) காமுறும்-விரும்புதற்குரிய—ஒருத்தி - ஒருமங்கையினுடைய—வதனம் - முகத்தை—கண்டகண் - பார்த்தகண்களை—கோமகன் - நளமகாராஜன்—முகிழ்த்தலால் - மூடிக்கொள்ளுதலால்—கோதைமார்முகம் - மாதருடையமுகம்—மா - பெரிய—மதியென்பதும் - சந்திரனென்றுசொல்வதும்—மன்னன் - இந்நளமகாராஜனின்—செய்ய - சிவந்த—கண் - கண்கள்—தாமரையென்பதும் தாமரைமலரென்றுசொல்வதும்—தக்கவாய - தகுதியாயின—எ-று. * குவலயாநந்தம் - ஒருமொழிதொடர்மொழி பொதுமொழியெனவரு - மிருஇணைப்போருட்பெயர்க்கிதுகுறியாமே - இவ்விதியாலதாமரையென்றது பொதுமொழி இக்குறி (கருத்து) நளன் ஒருபெண்முகத்தைக்கண்ட கண்களைமூடலால்பெண்கள்முகஞ்சந்திரனென்பதுமநளன்கண்கள் தாமரையென்பதுஞ்சரியே என்பதாம். (௪௫)

செய்யகண்முகிழ்த்திடல்விழித்தறீதென
வையனுங்கடைக்கணேக்கவன்பிதென்
றெய்யும்வேள்கணைமலரிதயமோர்ந்துமால்
பொய்யெனவருச்சனைபுரிதல்போன்றதே.

(இ-ள்.) செய்ய-சிவந்த—கண்-கண்களை—முகிழ்த்திடல் - மூடிக் கொள்வதும்—விழித்தல் - விழிப்பதும்—தீதென-குற்றமென்றுநினைத்து—ஐயனும் - நளமகாராஜனும்—கடைக்கணேக்க- கடைக்கண்ணினாலேபார்க்க—அன்பிதென்று - இதுஆசையினாலேபார்ப்பதென்று— எய்யும் - பிரயோசனஞ்செய்கின்ற—வேள் - மன்மதனுடைய— கணைமலர் - பாணமலர்கள்—இதயம் - கருத்தை—ஓர்ந்து - அறிந்து— மால் மயக்கமானது—பொய்யென - பொய்யென்று—அருச்சனை - பூசை—புரிதல்போன்றது - செய்வதுபோலுமாயிற்று—எ-று. (கருத்து) நளன் கடைக்கண்ணாற்பார்க்க அன்பானபார்வையென்று மன்மதனறிந்துபாணங்தொடுக்க அப்பாணம் அருச்சனைசெய்தமலருக்கொப்பாயிற்று என்பதாம். (௪௬)

தெரிவையென்றுருவெளியோடுசெப்பிய
வாசனைதனாயசரீரியாமென
வெருவியமாதர்சொற்கேட்டுவெள்குறு
முருவெளியிதுவெனவுள்ளந்தேறினான்.

(இ-ள். தெரிவையென்று- தமயந்தியென்று—உருவெளியோடு-உருவெளித்தோற்றத்துடனே—செப்பிய - சொல்லிய—அரசனது - நளமகாராசனது—உரை - சொல்லை—அசரீயாமென- அசரீரிவாக்கென்று—வெருவிய - பயந்த—மாதர்- மாதருடைய—சொற்கேட்டு - சொல்லைக்கேட்டு—(அந்தநளனுனவன்) வெள்குறு-நாணி—உருவெளியிதுவென - உருவெளித்தோற்றமிதுவென்று—உள்ளம்-மனம்—தேறினன் - தெளிவையடைந்தான்—எ-று. (கருத்து) உருவெளியோடுசொல்லியநளன்சொல்லைமாதர்அசரீரிவாக்கென்றுசொல்லநளன் தெளிவடைந்தான் என்பதாம். (௬௭)

விழைவெனும்பாகெறிந்தமரர்விஞ்ஞையாந்
தழைமுகபடாததமைதருகண்வாரணங்
கழைமதனியற்றியகருங்கண்மங்கைய
ரழகெனுமபடுகுழியாழ்ந்ததில்லையால்.

(இ-ள்.) விழைவெனும்- ஆசையென்கிற—பாகு பாகனை—எறிந்து-தள்ளி—அமர்-தேவர்களுடைய—விஞ்ஞையாம் - மந்திரமாகிய—தழை - தழைந்த—முகபடாத்து - முகப்போர்வையினாலே—அமை-பொருந்திய—தருகண் - அஞ்சாமையையுற்ற—வாரணம் - யானையானது—கழைமதன் - கருப்புவில்லேந்தியமன்மதன்—இயற்றிய - செய்த—கருங்கண் - கரியகண்களையுடைய—மங்கையர் - மாதரது—அழகெனும் -அழகென்றுசொல்லும்—படுகுழி - பள்ளத்தில்—ஆழ்ந்ததில்லை - அழுந்தியதில்லை—எ-று. ஆல்-அசை- (கருத்து) நளனென்னும்யானை மாதரழகென்னும்படுகுழியில்வீழ்ந்ததில்லை-எ-ம். (௬௮)

அங்கலுழ்மேனிய * வணங்கைநாடொறு
மெங்கணுங்காண்குறுமயக்கமேனைய
பங்கயவாண்முகப்பாவைமாரையம்
மங்கையென்றெண்ணுறுமயக்கந்தீர்ந்ததே,

இ-ள்.) அம் - அழகானது—கலுழ் - ஒழுகுகின்ற—மேனிய-மேனியையுடைய—அணங்கை - தமயந்தியை—நாடொறும்- எந்நாளும்—எங்கணும் - எவ்விடத்திலும்—காண்குறும் - உருவெளித்தோற்றமாகக்காண்கின்ற—மயக்கம் - மயக்கமானது—ஏனைய - மற்றைய—பங்கயம் - தாமரைமலர்போன்ற, வாள்-ஒளிபொருந்திய,முகம்- முகமுள்ள—பாவைமாரை - மகளிரை—அம்மங்கையென்று-அத்தமயந்தியென்று—எண்ணுறும் - நினைக்கின்ற—மயக்கம் - மயக்கத்தை—தீர்ந்தது- நீங்கியது—எ-று. அழகுமிகுதிபற்றிக்கலுழெனப்பட்டது [ * அகத்தியம் - ளவ்வெற்றிகரமுகரமைகாரம் - பெண்பால்விகுதிபிறங்குமென்க,இவ்விதியால் - அணங்குஉகரவீற்றுப் பெண்பாற்சொல்] (கருத்து)நளனுக்குத்தமயந்தியென்கிய மயக்கமற்றதுஎன்பதாம். (௬௯)

கணங்குழைமுகத்தியர்கதிர்த்துவிம்மிய
சுணங்கவிரிளமுலைச்சுவடுதாக்கிய
மணிந்தகுங்குமமெழிலகலமூழ்கிய
மணந்தனர்போன்றனன்மன்னரேறனன்



(இ-ள்.)மன்னர் - அரசர்களுக்கு—ஏறனன்-ஆண்சிங்கத்தையொத்தநளன்—கணம் - கூட்டமாகியமணிபதித்த—குழை - குண்டலந்தரித்த—முகத்தியர் - முகத்தையுடையவராகியமாதர்—கதிர்த்து - காந்திபொருந்தி—விம்மிய - பருத்தசுணங்கு - தேமலானது - அவிர் - பிரகாசியாநின்ற—இளமுலை - இளமைபொருந்திய தனங்களுடைய—சுவடு - தழும்புகள்—தாக்கியும் - மோதப்பெற்றும் —அணிந்த - தரித்த—குங்குமம் - குங்குமக்குழம்புகள்—எழில்-அழகிய—அகலம் - மார்பினிடத்து—மூழ்கியும் - மூழ்கப்பெற்றும்—மணந்தனர் - கூடினவர்களை—போன்றனன் - ஒத்தனன்—எ-று. (கருத்து) நளன்மார்பில்மாதர்தனங்களழுந்தப்பெற்றும் குங்கும மூழ்கப்பெற்றும் புணர்ந்தவரை ஒப்பாயினன்என்பதாம். (௭௰)

விளங்கிழையொருத்திபோரணியில்வேந்தெழி
றுளங்கலுமதிசயந்தோன்றநோக்கினள்
வளங்கெழுபுகழினன்மறையக்காண்கிலா
ளுளம்புகுந்தொளித்ததவ்வுருவென்றெண்ணினள்

(இ-ள்)விளங்கு -பிரகாசியாநின்ற—இழை - ஆபரணத்தையணிந்த—ஒருத்தி - ஒருமாதானவள்—பேர் - பெரிய—அணியில் - தன்னுபரணத்தில்—வேந்து - அரசனுடைய—எழில் - அழகானது—துளங்கலும் - பிரகாசித்தலும்—அதிசயம்-ஆச்சரியம்—தோன்ற - உண்டாக—நோக்கினள் - பார்த்தாள்—வளங்கெழு-வளம்பொருந்திய —புகழினன்- கீர்த்தியையுற்றநளன்—மறைய - மறைந்துபோக—காண்கிலாள் - காணாதவளாகி—உளம் - மனத்தினிடத்து—புகுந்து - நுழைந்து—ஒளித்தது-ஒளித்துக்கொண்டது—அவ்வுருவென்று- அவ்வடிவமென்று—எண்ணினள் - நினைத்தாள்—எ-று. (கருத்து) ஒருத்திதன்னுபரணத்தில் நளன்வடிவுதோன்றப்பார்த்தாள் நளன்மறைய அவ்வடிவுதன்னுளத்துட்புகுந்ததென்றெண்ணினள்என்பதாம். (௭௧)

வாட்டிறன்மன்னவன்வனிதைபேரெழி
றீட்டியொண்கதிருமிழ்செய்யவார்வடந்
சூட்டினன்கலவிவ்வுருவுதோன்றயார்
கொட்டினரெனச்சிலர்குறிப்பினுடுவார்

(இ-ள்)வாள்-வாளாயுதத்திலே—திறல்-வல்லமைபெற்ற—மன்னவன்-நளமகாராஜனானவன்—வனிதை - தமயந்தியினது—பேர் - பெரிய—எழில் - அழகை—தீட்டி- எழுதி—ஒள் - ஒள்ளிய—கதிர்- கிரணங்களை—உமிழ் - உமிழ்கின்ற—செய்ய-சிவந்த —வார் நெடிய— வடம்-ரத்நமாலைகளை—சூட்டினன் - தரித்தனன்—அகல் நீங்க — இவ்வுருவுதோன்ற-இந்தவடிவந்தெரிய—யார்-எவர்கள்—கொட்டினரெனசெய்தாரென்று—சிலர் - சிலர்கள்—குறிப்பின் - குறிப்பினாலே— நாடுவார்-தேடுவார்கள்—எ-று.(கருத்து) நளன் தமயந்திவடிவத்தை யெழுதி இரத்நபரணஞ்சூட்டிப்போக வடிவத்தை யாரெழுதினரென்றுசிலர்தேடுவார்களென்பதாம். (௭௨)

ஏந்தறாளழுந்துமவ்விடங்கணோக்குறூஉ
பூந்துகள்செறிந்தகோமறுகிற்போகிய
மாந்தளிர்மேனியர்வையங்காவல்செய்
வேந்தர்தாளிலக்கணமேயதென்னென்பார்

(இ-ள்) பூந்துகள்-மகரந்தப்பொடிகள்—செறிந்த - நெருங்கிய—கோமறுகில் - அரசவீதியில்—போகிய - சென்ற—ஏந்தல் - நளமகாராசனின்—தாள் - பாதங்கள்—அழுந்தும் - அழுந்துகின்ற—அவ்விடங்கள்-அந்தவிடங்களை—நோக்குறூஉ - பார்த்து — மாந்தளிர் - மாந்தளிர் போன்ற—மேனியர்-வடிவத்தையுடையமாதர் — வையம் உலகத்தை—காவல்செய்-காத்தல்செய்கின்ற—வேந்தர் - அரசரின்—தாள் - பாதங்களிலிருக்கும்—இலக்கணம்-இலக்கணங்கள்—மேயது-இவ்வடிச்சுவட்டிற்பொருந்தியது—என்னென்பார்-என்னை ஆச்சரியமென்பார்கள்—எ-று. (கருத்து) மகாரதனிமைந்தனிராசவீதியில்நளனடிவைத்தவிடத்தைமாதர்கள்கண்டு அரசர்களடிச்சுவடுபொருந்தியதென்ன வென்பார்களென்பதாம். (௫௩)

கள்ளவிழ்கோதையரெறிந்தகந்துகம்
வள்ளன்மார்புற்றெதிர்மறிந்துவீழ்தலுந்
தள்ளருமதிசயமெய்தித்தத்தமில்
வெள்ளிடைப்பட்டிவண் * மீண்டதென்னென்பார்

(இ-ள்) கள்ளவிழ் - தேனொழுகுகின்ற—கோதையர்-மாலையையணிந்தமாதர்—எறிந்த - வீசிய—கந்துகம் - பந்துகள்—வள்ளல் - நளமகாராஜனையுடைய—மார்பு - மார்பினிடத்திலே—உற்று - பொருந்தி—எதிர் - எதிராக—மறிந்து - மறிபட்டு—வீழ்தலும் - வீழ்ந்தவளவில் தள்ளரும் - தள்ளுதற்கரிய—அதிசயம்-ஆச்சரியத்தை—எய்தி- அடைந்து—தத்தமில் - தங்கள்தங்களுக்குள்ளே—வெள்ளிடைப்பட்டு - வெளியிடத்திற்பட்டு—இவண்-இவ்விடத்தில்—மீண்டது - திரும்பியது — என்னென்பார் - என்னவென்றுசொல்லுவார்கள்—எ-று. (* குவலயானந்தம், வினைச்சொல்லினைத்துங்காரியச்சொல்லே—இவ்விதியால் மீண்டதுகாரியம்) (கருத்து) மாதர்களெறிந்தபந்துகள் நளன்மார்பில்பட்டெதிராக விழுந்தமாத்திரத்தில் பெண்களிதென்னவாச்சரிய மென்பார்களென்பதாம். (௫௪)

எதிர்முகமாயிருந்திருவர்பைந்துணர்ப்
புதுமலர்தொடுத்தலுநடுவட்புக்கவன்
கதுமெனவேகலுமறைப்பக்கன்னியர்
மதிமயக்குறமுகமறைத்ததென்னென்பார்

(இ-ள்) எதிர்முகமாயிருந்து - அபிமுகமாகவிருந்து—இருவர் - இரண்டுபேர்—பைந்துணர் - பசியபூங்கொத்துக்களிலிருக்கின்ற —புதுமலர் - அன்றலர்ந்தமலரை—தொடுத்தலும் - கட்டலும்—நடுவண் அவருக்கிடையில்—புக்கவன் - புகுந்தநளன்—கதுமென - விரைந்து



—ஏகலும் - போனவளவில்—மறைப்ப-மறைக்க—கன்னியர்- அம்மாலைதொடுத்தமாதர்கள்—மதி-புத்தி—மயக்குற—மயக்கத்தைப்பொருந்த—முகமறைத்தது-முகத்தைமறைத்துவிட்டது —என்னென்பார்-என்னஆச்சரியமென்று சொல்லுவார்கள்—எ-று. (கருத்து) மாலைகட்டுமாதரிருவர் நடுவேநளன்போனவளவில் அம்மாதர்கள் முகத்தை மறைத்துவிட்டதென்னவென்பார்களென்பதாம்.

அண்ணறன்மார்பகத்தணிந்தபேரணி
மண்ணியமணிவயின் வடிவுதோன்றலுங்
கண்ணுறநோக்குவாள்கன்னியாரொடும்
விண்ணிடையெனதுருவிளங்கலென்னென்பாள்

(இ-ள்) அண்ணறன் - நளமகாராசனுடைய—மார்பகத்து-மார்பினிடத்து—அணிந்த - தரித்த—பேர் - பெரிய—அணி - ஆபரணங்களிலுள்ள—மண்ணிய - தெளிந்த—மணிவயின் - மணியினிடத்தில்—வடிவு - உருவமானது—தோன்றலும் - தெரிதலும்—கண்ணுற - கண்களிற்பொருந்த—நோக்குவாள் - பார்ப்பாளாகியவொருத்தி — கன்னியாரொடும் - மாதர்களுடன்—விண்ணிடை - ஆகாயத்தினிடத்து எனதுரு - எனதுவடிவம் — விளங்கல் - பிரகாசித்தல்என்னென்பாள் - என்னஆச்சரியமென்று சொல்லுவாள்—எ-று. (கருத்து) நளனாபரணத்தில் ஒருத்திதன்வடிவுதோன்றியவளவில் என்வடிவுவெளியிற்றோன்றியதென்னென்பாள் என்பதாம். (௫௬)

வெற்பினையெழில்கெடவிளங்குதோளினன்
பொற்பொளிர்பித்திகைப்புறத்திற்றோன்றலு
மற்புதமிதுவெனநோக்கியன்பினுங்
கற்புடைமகளிருங்கலங்கினார்.

(இ-ள்) வெற்பினை - மலையினது—எழில் - அழகு—கெட - கெடும்படி—விளங்கு - பிரகாசியாநின்ற—தோளினன் - தோளினையுடையவனாகிய நளனானவன்—பொற்பு - அழகானது—ஒளிர் - பிரகாசிக்கின்ற—பித்திகைப்புறத்தில் - சுவர்த்தலத்தினிடத்து—தோன்றலும் - தோன்றுதலும்—அற்புதமிதுவென - ஆச்சரியமிதுவென்று—நோக்கி - பார்த்து—அன்பினும் - ஆசையினால்—கற்புடைமகளிரும் - கற்புடையமாதர்களும்—கலங்கினார்-மயங்கினார்கள்—எ-று. (கருத்து) நளன்வடிவுசுவரிற்றோன்ற கற்புள்ளமாதருமங்கலங்கினார்கள்-என்பதாம். (௫௭)

இழைவளர்முலையினொருவனோர்பெறு
நிழலினைநோக்கினனிவணதீங்கிளை
மொழிவனகேட்டனனெனவறிவாய்ப்புறத்
தழுவினனென்னவுந்தமிழ்கூறுவார்

(இ-ள்) இழை - ஆபரணத்தோடுகூடி—வளர் - வளர்கின்ற—முலையினார் - முலையையுள்ளமாதர்கள்—ஒருவன் - ஒருஆண்மகனுடைய—ஓர்பெறு - அழகைப்பெற்ற—நிழல் - நிழலை—இவண் - இவ்விடத்

தில்—நோக்கினனெனவும் -பார்த்தேனென்றும்—ஈண்டை-இந்நீண்ட விடத்தில்—மொழிவன் - பேசுவனவற்றை—கேட்டனெனவும்-கேட்டேனென்றும்—மொய்ம்புற - தோள்கள்பொருந்த — தழுவினனெனவும் - தழுவினேனென்றும்—தம்மில்-தங்களுக்குள்ளே— கூறுவார்-பேசிக்கொள்ளுவார்கள்—எ-று. (கருத்து) மாதர்கள் ஒருவனிடமிலைக்கண்டேனென்றும் ஒருவன் சொல்லைக்கேட்டேனென்றும்ஒருவனைத்தழுவினேனென்றும் சொல்லிக்கொள்ளுவார்களென்பதாம். (ருஅ)

இன்னிசையளிபயில்பொழிலினேந்தன்முன்
பொன்னவிர்முலைத்தமயந்திபோதலு
மன்னமுன்கூறியவற்றைநாண்முதல்
முன்னுறுமுருவெனமுன்னினனரோ

(இ-ள்.) இன் - இனிய—இசை -இசையைப்பாடும்—அளி-வண்டுகள்—பயில் - சஞ்சரிக்கின்ற—பொழிலின் - சோலையிடத்தில் — ஏந்தல் - நளமகாராஜன்—முன் - தன்னெதிரே, பொன்-பொன்னையொத்த—அவிர் - பிரகாசியாநின்ற—முலை - முலையையுடைய—தமயந்தி - தமயந்தியானவள்—போதலும் - வருதலும்—அன்னம் - அன்னப்புள்ளானது—முன்கூறிய - முன்சொல்லிய—அற்றைநாண்முதல் - அன்றையநாள்முதலாக—முன்னுறும் -எதிரேதோன்றுகிற—உருவென - உருவெளித்தோற்றமென்று—முன்னினன் - நினைத்தான்—எ-று. அரோ அசை (கருத்து) சோலையில்நளன் முன்னே தமயந்திவருதலும்அவ்வுருவெளியென்றெண்ணினன் என்பதாம். (ருகூ)

மடவரலுருவெளிமன்னன்றோண்மிசை
யிடையறுவிழைவுடனென்றுஞ்சூட்டல்போல்
மிடைமலர்ப்பூந்தொடைசூட்டமேவிய
சுடரிலைவேலினன்றோளில்வீழ்ந்ததே

(இ.ள்.) மடவரல் - தமயந்தியானவள்—உருவெளி-உருவெளியாய்த்தோன்றிய—மன்னன் - நளமகாராசனுடைய—தோண்மிசை-தோளின்மேல்—இடையறு-இடைவிடாத—விழைவுடன் - ஆசையுடனே—என்றும் - என்றைக்கும்—சூட்டல்போல்-சூட்டுதல்போல, மிடை-நெருங்கிய—மலர் - மலராற்றொடுத்த—பூந்தொடை - பூமாலையை — சூட்ட - தரிக்க—மேவிய - அங்கிருக்கின்ற—சுடர்-காந்தி பொருந்திய—இலைவேலினன் - இலைபோன்றவேற்படையுள்ள நளமகாராஜன் — தோளில் - புயங்களில்—வீழ்ந்தது - விழுந்தது—எ-று, (கருத்து) தமயந்தியானவள் உருவெளித்தோற்றமென்றுமாலைசூட அம்மாலை நளனுடையதோளில் விழுந்ததுஎன்பதாம். (சுய)

உருவெளியாகயான்கண்டவொண்ணுதன்
மருமலர்மாலிகைவனைந்ததென்னென
வாசனுமெண்ணினனவளுந்சூட்டிய
தெரியல்காண்கிலனெனத்திருமந்நாளரோ



(இ-ள்) உருவெளியாக - உருவெளித்தோற்றமாக—யான்கண்ட - என்னாற்காணப்பட்ட—ஒண்ணுதல்-ஒள்ளியநெற்றியையுடைய தமயந்தியானவள்—மருமலர்மாலிகை - வாசனைபொருந்தியபூமாலையை—வனைந்ததென்னென - சூட்டியதென்னகாரணமென்று—அரசனும் -நளமகாராசனும்—எண்ணினன் - நினைத்தான்—அவளும் - அத்தமயந்தியும்—சூட்டிய - தரித்த—தெரியல் - மாலையை—காண்கிலனென - கண்டிலேனென்று—திருமந்நாள் - மனஞ்சுழன்றாள்—எ-று. அரோ - அசைநிலை (கருத்து)உருவெளியாகக்காணப்பட்டதமயந்தி மாலைசூடியதென்னவென்றுநளன் எண்ணினன் தமயந்தியு மாலையைக்காணேனென்றுமயங்கினள் என்பதாம். (சுக)

முருகவிழ்குழலிணையுமுன்னுறு
முருவெளியெனவிளைவுவந்துபுல்லின
னரிவையுமன்னவாறெண்ணியாங்கெதிர்
* புரவலன்மார்புறப்புல்லினளரோ,

(இ-ள்.) முருகவிழ்- வாசனைவீசுகின்ற—குழலிணையும்-கூந்தலையுடையதமயந்தியையும்—முன்னுறும் - முன்னேதோன்றுகின்ற—உருவெளியென - உருவெளித்தோற்றமென்று— இறை - நளமகாராஜன்—உவந்து - மகிழ்ச்சியையடைந்து—புல்லினன் - தழுவினன்—அரிவையும் - தமயந்தியும்—அன்னவாறு - அந்தப்பிரகாரம்—எண்ணி - நினைத்து—ஆங்கு - அவ்விடத்திலே—எதிர் - எதிரேவந்த—புரவலன் - அரசனது—மார்புற - மார்புபொருந்த—புல்லினள் - தழுவினள்—எ-று. [*குவலயாநந்தம் - பெயர்ச்சொல்லைத்துங்காரணச்சொல்லே - இவ்விதியால்புரவலன்காரணச்சொல்] நளன் உருவெளித்தோற்றமென்று தமயந்தியைப்புணர்ந்தான் தமயந்தியுமப்படியே நினைத்துநளனைப்புணர்ந்தாள்-எ-ம், (சுஉ)

சொல்லருமின்பமீதூரத்தோன்றலும்
புல்லுவிட்டவ்வுருப்பொலிவுநோக்கினன்
மெல்லியலவ்வுருவிழியிற்காண்குறு
தல்லலுற்றணிவளையங்கைநீக்கினள்.

(இ-ள்.) சொல்லரும் - சொல்லுதற்கரிய—இன்பம்- இன்பமானது—மீதூர - அதிகரிக்க—தோன்றலும் - நளனும்—புல்லுவிட்டு, தழுவுதலைநீக்கி—அவ்வுரு - அந்தவடிவினுடைய—பொலிவு - காந்தியை—நோக்கினன் - பார்த்தான்—மெல்லியல் -தமயந்தியானவள்—அவ்வுரு- அந்தவடிவத்தை—விழியில் - கண்ணினால்—காண்குறுது - காணுதலாகி—அல்லலுற்று - பயத்தையடைந்து—அணிவளை- அழகியவளையலையணிந்த—அங்கை - அழகியகையை—நீக்கினள் - விடுத்தாள்—எ-று.(கருத்து) நளன் இன்பந்தோன்றப்புணர்ந்து தமயந்திவடிவத்தைப் பார்த்தான் தமயந்தி அவ்வடிவத்தைக்காணு துகையைவிட்டாள்-எ-ம்.

பொன்னடிப்பூஞ்சிலம்பொலிப்பமேகலை
யின்னரிக்கிண்கிணியிகலியார்ப்பெழ
மின்னடைகற்பதுபோன்றுமெல்லெனத்
தன்னமர்கோயிலுட்டையலெய்தினாள்,

(இ-ள்.) பொன்-பொன்னாற்செய்த—அடிப்பூஞ்சிலம்பு - பாதத்திலணிந்தஅழகியசிலம்புகள்—ஒலிப்ப - ஒலித்தலைச்செய்ய—மேகலை - மேகலையிலிருக்கின்ற—இன் - இனிய—அரி - பருக்கைக்கல்லையுடைய—கிண்கிணி - சதங்கைகள்—இகலி - ஒன்றோடொன்றுதாக்கப்பட்டு—ஆர்ப்பெழ - ஒலியெழுப்ப—மின் - மின்னல்—நடைகற்பதுபோன்று - நடத்தலைக்கற்பதொத்து—மெல்லென - மிருதுவாக—தன் - தனது—அமர் - அமர்கின்ற—கோயிலுள் - கன்னிமாடத்தில்—தையல்-தமயந்தியானவள்—எய்தினாள் - அடைந்தாள்—எ-று. (கருத்து) தமயந்திகன்னிமாடத்திற்சேர்ந்தாள் என்பதாம். (௬௪)

கருந்தடங்கண்ணியைக்கையிற்புல்லியும்
பொருந்தியவுருவெளியென்றுபோக்கிநல்
லருந்தனம்பெற்றிழந்தாரிலையனும்
வருந்திவெந்துயரொடுமதிமயங்கினான்.

(இ-ள்.) கரும்-கரிய—தடம் - விசாலம்பொருந்திய—கண்ணியை - கண்களையுடையதமயந்தியை—கையிற்புல்லியும் - கையினாலேதழுவியும்—பொருந்திய - பொருந்தப்பெற்ற—உருவெளியென்று - உருவெளித்தோற்றமென்று—போக்கி - விட்டு—நல் - நல்ல—அருந்தனம் - அரியதிரவியத்தை—பெற்று - எளிதிற்பெற்று—இழந்தாரில் - இழந்தவர்களைப்போல—ஐயனும் - நளமகாராஜனும்—வருந்தி-வருத்தமடைந்து—வெந்துயரொடு - வெவ்விய துன்பத்துடன்—மதிமயங்கினான் - புத்திமயங்கினான்—எ-று, (கருத்து) நளன்கைப்பொருளிழந்தவர்கள்போலத் தமயந்தியைப்புணர்ந்து துன்புற்றுமயங்கினான் என்பதாம். (௬௫)

பாணிகர்வண்டினம்பாடுஞ்சோலையுஞ்
சேணுறநிவந்தசெய்குன்றுந்தேடியுங்
காணலனாகியகளிநல்யானையான்
மாணிழையுறைதருமாடமெய்தினான்.

(இ-ள்.) பாண்-இசைப்பாட்டுக்கு—நிகர் - நிகராக—வண்டினம் - வண்டுக்கூட்டங்கள்—பாடும் - பாடுகின்ற—சோலையும் - சோலையிடத்திலும்—சேண் - ஆகாயத்தில்—உற - பொருந்த—நிவந்த - உயர்ந்த—செய்குன்றும் - கட்டுமலையினிடத்திலும்—தேடியும் - தேடுதல்செய்தும்—காணலனாகிய - காணாதவனாகிய—களிநல்யானையான் - நளமகாராசாவானவன்—மாணிழை - தமயந்தி—உறைதரும் -வசிக்கின்ற—மாடம் - கன்னிமாடத்தை—எய்தினான் - அடைந்தான்— எ-று. (கருத்து) நளன் தமயந்திகன்னிமாடத்திற்சேர்ந்தான் என்பதாம். (௬௬)



மின்னிடையம்பையர்குழாத்துண்மேவிய
வன்னமென்னடையயிராணியாமென
நன்னுதன்மடந்தையர்நாப்பணின்னகைக்
கன்னிவீற்றிருத்தல்கண்களிப்பநோக்கினான்.

(இ-ள்.) மின் - மின்னலையொத்த—இடை -இடையையுடைய—அம்பையர்குழாத்துள் -தெய்வமாதர்கள்கூட்டத்துள்—மேவிய-பொருந்திய—அன்னம் - அன்னநடைபோன்ற—மெல் - மெல்லிய — நடைநடையையுடைய — அயிராணியாமென - இந்திராணியாமென்று சொல்லும்படி—நல் -நல்ல—நுதல் - புருவத்தையுற்ற — மடந்தையர் - மாதர்களது—நாப்பண்-நடுவே—இன் - இனிய—நகை-புன்சிரிப்பையுடைய—கன்னி - தமயந்தியானவள்—வீற்றிருத்தல் -வீறுடனிருத்தலை கண்களிப்ப - கண்களிக்க—நோக்கினான் - பார்த்தான்—எ-று. அயிராணியாமெனவென்றமையால் - உவமையணி, (கருத்து) நளன் தமயந்தியைக்கண்டான் என்பதாம். (௬௭)

மண்டமர்கடந்தவேனளன்வந்தானென
தொண்டைவாய்மடந்தையர்நாளுஞ்சொல்வன
பண்டருமொழிக்கிளிபயின்றுகூறலுங்
கண்டதோவிதுவெனக்காளையெண்ணினான்

(இ-ள்.) மண்டு - நெருங்கிய—அமர்போரை—கடந்த -வென்ற—வேல் - வேற்படையையுள்ள—நளன்வந்தானென - நளமகாராஜன்வந்தானென்று—தொண்டைவாய்.கொவ்வைக்கனிபோன்றவாயையுடைய—மடந்தையர் -மாதர்கள்—நாளும் - நாடோறும்—சொல்வன- சொல்வனவற்றை—பண்டரும் - இசையைத்தருகின்ற—கிளி - கிளிப்பிள்ளை—பயின்று - பழகி—கூறலும் - சொன்னவளவில்—இது - இந்தக்கிளிப்பிள்ளை—கண்டதோவென - பார்த்ததோவென்று—காளை-நளமகாராசன்—எண்ணினான் - நினைத்தான் * (கருத்து) கிளிவழக்கமாக நளன்வந்தானென்றுசொல்ல நளன் இதுதன்னையறிந்ததென்றுசந்தேகித்தான் என்பதாம். * [☞ பொருளென நல்லோர் புகல்வது கருத்து - அதுவேதொகைவகையாகுமென்க - பிண்டப்பொருளாய்ப் பேசுவதே தொகை - கற்றோர்க்கினிதாக்காட்டுவதேவகை] என்பதாம். (௬௮)

ஒருத்தியானளனெனவிருப்பவுள்ளுறும்
விருப்பினாலொருத்தியான்வீமன்மாதென
மருக்கமழ்பூந்தொடைசூட்டமன்னவன்
பொருப்புறழ்தடம்புயம்புளகம்பூத்தவே.

(இ-ள்.) உள்ளுறும்-உள்ளேயிருக்கின்ற—விருப்பினால் - ஆசையினால்—யானளனென - நானளமகாராசனென்று—ஒருத்தியிருப்ப- ஒருமங்கையிருக்க—ஒருத்தி - ஒருமங்கையானவள்—யான் - நான்—வீமன்மாதென - தமயந்தியென்றுசொல்லி—மருக்கமழ் - வாசனைகமழ்

இன்ற—பூந்தொடை - மலர்மாலையை—சூட்ட - தரிக்க—மன்னவன் - நளமகாராசனுடைய—பொருப்புறழ் - மலையையொத்த—தடம் - பருத்த—புயம் - தோள்களானவை—புளகம்பூத்த - மயிர்க்குச்செறிந்தன—எ-று. (கருத்து) ஒருத்திநளனாகவும்மற்றொருத்தி தமயந்தியாகவும் மாலைசூட்டக்கண்டநளன் மகிழ்ந்தான் என்பதாம். (௬௯)

மலர்ந்தசெந்தாமரைமென் மடலின் மேற்றனக்
கிலங்கிழையுகிரினாலெழுதுபாசுர
நலம்பெறக்கண்டனுண்ணலார்புக
ழுலம்பொருதோளினனுவகையெய்தினான்.

(இ-ள்.) மலர்ந்த-விரிந்த,செந்தாமரைமென் மடலின்மேல் - சிவந்ததாமரையினுடையமெல்லியவிதழின்மேல், தனக்கு - தனக்கு, இலங்கிழை-தமயந்தியானவள்—உகிரினால் நகத்தினாலே—எழுதுஎழுதப்பட்ட—பாசுரம் ( வசனங்களை—நலம்பெற - நன்மைபெற—கண்டனும்-பார்த்தவளவில்—நண்ணலார் -பகைவரால்—புகழ் - புகழப்பட்ட—உலம்-திரள்கல்லை—பொரு-ஒத்த—தோளினன்-தோள்களையுடையநளமகாராசன்—உவகை - சந்தோஷத்தை—எய்தினன்- அடைந்தான்—எ-று. (கருத்து)தமயந்திதாமரைமடலிலேநகத்தினாலேநளன்றனக்கெழுதும்வசனங்களைப்பார்த்தவளவில் மகிழ்ச்சியடைந்தான் என்பதாம். (௭௰)

செழுமணிப்பித்திகைத்தலத்திற்றீதறு
மழவிடையனையவன்வடிவந்தோன்றலும்
கழையமைதோளினார்காளைபேரெழி
லெழுதியவுருவிலொன்றென்னவெண்ணினார்,

(இ-ள்.) செழுமணி-செழுமையுள்ளமணிகள்பதித்த— பித்திகைத்தலத்தில் - சுவர்த்தலத்தில்—தீதறு - குற்றமற்ற—மழ- இளமைபொருந்திய—விடையனையவன் - இடபத்தையொத்தநளமகா ராசனின்—வடிவம்-உருவம்—தோன்றலும் - தெரிந்தவளவில்—கழை - மூங்கில் போல—அமை - பொருந்திய—தோளினார்- தோளையுடையமாதர்கள்——காளை - நளமகாராசனது—பேர்-பெரிய—எழில்- அழகை—எழுதியதம்மாலெழுதப்பட்ட—உருவில் - வடிவத்தில்—ஒன்றென்ன - ஒருவடிவென்று—எண்ணினார் . நினைத்தார்—எ-று. (கருத்து) இரத்தினச்சுவரில்நளன்வடிவுதோன்றியவளவில்பெண்கள் எழுதியவுருவிலொன்றெண்ணினார்கள் என்பதாம்; (௭௧)

நாமவேல்வலனுயர்நளனுக்காங்கமர்
வாமமேகலையினர்நடுவணவைகுவா
டாமமார்குழற்றமயந்தியென்றவள்
காமருபேரெழில்காட்டுகின்றதே.

(இ-ள்.)நாமம்-அச்சத்தைத்தருகின்ற—வேல்- வேற்படையால்—வலனுயர் - வெற்றிமிகுந்த—நளனுக்கு - நளமகாராசனுக்கு—ஆங்கு-அவ்விடத்தில்—அமர் - அமர்ந்த—வாமம் - அழகிய—மேகலையினர்-



மேகலாபரணமுள்ளமகளிருடைய—நடுவண் - நடுவே—வைகுவாள்- இருப்பவள் — தாமம் -மாலைகள்—ஆர்-நிறைந்த—குழல்-கூந்தல்பொருந்திய—தமயந்தியென்று - தமயந்தியென்னும்பெயரையுடையவளென்று—அவள் - அவளது—காமர்-ஒளியுள்ள—பேர்-பெரிய—எழில்-அழகானது—காட்டுகின்றது - காண்பிக்கின்றது —எ-று, (கருத்து) அழகினால்தமயந்தியென்றறியப்பட்டதுஎன்பதாம். (௭௨)

ஏதமில்குணத்தினனிணையறைநுண்
டாதவிழ்பூங்குழற்றையல்பாற்றம
தாதரம்பெருகியவமரரேவிய
தூதியர்செய்திறஞ்சொல்லுவாமரோ

(இ-ள்.) ஏதமில் - குற்றமற்ற—குணத்தினன்-குணத்தையுடையநளமகாராசன்—இணையறக - இத்தன்மைபொருந்தியவறக — நுண்ணுட்பமாகிய—தாது - மகரந்தப்பொடிகள்—அவிழ் - உதிர்கின்ற—பூமலரணிந்த—குழல் - கூந்தலையுடைய—தையல்பால் - தமயந்தியினிடத்தில்—தமது-தமது—ஆதரம்-ஆசையானது—பெருகிய - மிருந்த—அமரர் - தேவர்களால்—ஏவிய - ஏவப்பட்ட—தூதியர் - தூதிகள்—செய்திறம் - செய்தவகையை—சொல்லுவாம் - சொல்லுவாம் —எ-று. அரோ - அசை, (கருத்து) நளனிப்படியிருக்கத் தேவர்கள்தமயந்தியிடத்து ஏவப்பட்டதூதிகள் செய்கையைச்சொல்லுவாம்-எ-ம்(௭௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கானமர்லங்கன் மாலைக்கடவுளர்விடுப்பவந்த
பானலங்கடந்தசொற்பணைமுலைப் பாவைநல்லா
ரூனுடைபழகிநெய்த்தோருமிழ்ந்துவெம்புலவுநாறு
மானவேல்வீமனீன்ற வனிதையையினிதுகண்டார்

(இ-ள்.) கான் - வாசனை—அமர் - பொருந்திய—அலங்கல்-அசைகின்ற—மாலை - மாலையையுடைய—கடவுளர் - தேவர்களால்—விடுப்ப-அனுப்பப்பட்டு—வந்த-வந்த—பால்- பாலினது—நலம் - நன்மையை—கடந்த-வென்ற—தீ-தித்திப்பொருந்திய—சொல் - சொல்லையும்—பணை-பருத்த—முலை-முலையையுமுடைய— பாவைநல்லார் - பாவைபோலுமிருக்கின்றமாதர்—ஊனொடு - மாமிசத்துடன்—பழகி - பழகுதல்செய்து—நெய்த்தோருமிழ்ந்து - உதிரத்தையுமிழ்ந்து —வெம்- வெம்மைபொருந்திய—புலவு - புலால்நாற்றம்—நாறு - நாறுகின்ற — மானஒப்பற்ற, வேல்-வேற்படையைப்பெற்ற,வீமனீன்ற-வீமராசன் பெற்ற—வனிதையை - தமயந்தியை—இனிது- இனிதாக—கண்டார்-கண்டார்கள்—எ-று. (கருத்து) தேவர்கள் விடுக்கப்பட்டதூதிகள் தமயந்தியைக்கண்டார்கள் என்பதாம். (௭௪)

பொருவருவனப்பின்மிக்கபுலோமிசைமுதல்வாய
வரிவிழிக்குமுதச்செவ்வாய்வானவர்மகளிர்தாமித்

தெரியிழைச் *செவ்விநோக்கிற்சேணிடைப்பொலிந்துதோன் று
மிரவிமுன்மதியமாவவொனவுளத்தெண்ணினாரால்.

(இ-ள்.) பொருவரு-ஒப்புச்சொல்லுதற்கரிய—வனப்பின் - அழகி
னாலே—மிக்க - மிகுந்த—புலோமிசைமுதல்வராய - இந்திராணிமுத
லியாகிய—வரி - இரேகையுள்ள—விழி - கண்களையும் — குமுதச்செ
வ்வாய் - அல்லிமலர்போன்றசிவந்தவாயினையுமுடைய— வானவர்மக
ளிர் - தெய்வமாதர்—இத்தெரியிழை - இந்தத்தமயந்தியினது— செவ்
வி - அழகை—நோக்கில் - பார்த்தால்— சேணிடை - ஆகாயத்திலிடத்
து—பொலிந்து - பிரகாசித்து—தோன்றும் - தோன்றுகின்ற—இரவிமு
ன் - சூரியன்முன்னே—மதியமாவவொன - சந்திரன்போலாமென்று—
உளத்து - மனதிலே—(அறியர்) எண்ணினார் - நினைத்தார்கள் — எ-
று. (தாம் - ஆல் - அசைகள்) [*குவ்வியாகத்தம்-உருப்பியல்-வடிவு நிறங்கு
ணமயவகடைநகை - பார்வைவசனமெனறு மிருநான்கும் - பெண்
பால்வதிமையணியும் புனைபொருள் - இவ்விறியால்செவ்வி பெண்பாற்
புனைபொருள்] (கருத்து) தமயந்தி அழகுக்குமுன்னே தேவமாதரழகு
சூரியன் முன்னேதோன்றுஞ்சந்திரன்போலுமென்றெண்ணினார்கள்
என்பதாம். (எடு)

எய்தியமகளிர்தம்மிலிமையவர்தலைவன்றூதி
யையரிநெடுங்கட்செவ்வாயணங்கிற்குமணங்குபோல்வாய்
கொய்துணர்த்தருவின்ஷற்கோமகன்பணியாற்போந்த
செய்திநீகேட்டியென்றுசீறடிவணங்கிச்சொல்வான்

(இ-ள்.) எய்திய - அடைந்த—மகளிர்தம்மில் - நாரியர்களல்வருள்
—இமையவர்தலைவன் - இந்திரனது—தூதி - தூதியானவள் — ஐ - அழ
கிய—அரி - இரேகைகளையுற்ற—நெடுங்கண் - நெடியகண்களையும்—செ
வ்வாய் - சிவந்தவாயினையுமுடைய—அணங்கிற்கும் - தெய்வ மங்கைக்
கும்—அணங்குபோல்வாய் - தெய்வமாதையொத்ததமயந்தியே—கொ
ய - கொய்கின்ற—துணர் - பூங்கொத்துக்களுள்ள—தருவின் நூல் - ஐந்
தருவின்ஷுலிருக்கின்ற—கோமகன் - இந்திரனது—பணியால் - ஏவலி
லே—போந்த - வந்த—செய்தி - செய்தியை—நீகேட்டியென்று - நீகே
ட்பாயாகவென்று—சீறடி - சிறியபாதங்களை— வணங்கி - வணங்குதல்
செய்து—சொல்வான் - சொல்லுவாள்—எ-று. (கருத்து) இந்திரன்றூ
தியானவள் தமயந்தியைவணங்கிச் சொல்லுவாளாயினள்-எ-ம். (எசு)

இருவிசும்பொருகோலோச்சியேதிலர்க்கடந்துதேவர்
பரவிநின்றிறைஞ்சநாளும்பனிமலர்த்தருவின் ஷ
லரியணைப்புறத்துவைகுமண்ணனுக்கமிர்தமன்ன
யுருவிலாவொருவன் செய்யுறுபகைகாத்தல்வேண்டும்

(இ-ள்.) இரு - பெரியவிசும்பு - வானுலகை — ஒருகோலோச்சி
ஒருசெய்கோல்செலுத்தி—ஏதிலர் - சத்துருக்களை—கடந்து - வென்று
—தேவர் - தேவர்கள்பரவிநின்று - துதிசெய்துநின்று - இறைஞ்ச -
வணங்க—நாளும் - நாடோறும்—பனி - குளிர்ச்சிபொருந்திய — மலர்-
மலராணிறைந்த—தருவின் நூல் - ஐந்தருவின்ஷுலில், அரியணைப்புறத்து-
சிங்காதனத்திலிடத்து—வைகும் - தங்கிய—அண்ணனுக்கு - இந்திர
னுக்கு—அமிர்தமன்னாய் - அமிர்தத்துக்கொப்பானவளே— உருவிலா
ன்-வடிவமில்லாதவனாகிய—ஒருவன்-மன்மதனானவன்—செய்யும்-செ
ய்கின்ற—உறு - மிகுந்த—பகை - பகையை — (நீக்கி) காத்தல்வேண்
டும்-(நீ) காக்கவேண்டும்—எ-று. (கருத்து) இந்திரனுக்கமிர்தம்போன்ற
தமயந்தியே நீமன்மத பாணத்தைநீக்கிக் காக்கவேண்டுமென்றாள்
என்பதாம். (எஎ)

எம்மிறையிளவற்காகவருக்கடல்கடைந்துவாசச்
செம்மலர்த்திருவையீந்ததேவர்வாசவற்குமின்னுங்
கைம்மலர்வருந்தவிக்குக்கடல்கடைந்துழலாவண்ணம்
பெம்மல்விம்முலையாயன்றேற்கின்னருள்புரிதல்வேண்டும்

(இ-ள்.) எம்மிறை-எங்களரசனது—இளவற்காக-உபேந்திரனுக்
காக—இரும் - பெரிய—கடல்கடைந்து - பாற்கடலைக்கடைந்து — வா
சம் - வாசனைபொருந்திய — செம்மலர்த்திருவை - செந்தாமரைமலரிலி
ருக்கின்றதிருமகளை —ஈந்த - தந்த—தேவர் - தேவதைகள் — வாசவற்
கும் - இந்திரனுக்கும்—இன்னும் - இன்னம்—கைம்மலர்வருந்த - கை
களாகியமலர்கள்வருந்த—இக்குக்கடல்கடைந்து - கருப்பிரதக் கடலைக்
கடைந்து—உழலாவண்ணம் - அலையாதவிதம்—பொம்மல் - பொலிவி
னையுடைய—வெம்-விரும்பத்தக்கதாகிய— முலையாய் - முலைகளுள்ள
தமயந்தியே—அன்றேற்கு - அவ்விந்திரனுக்கு—இன்னருள் - இனி
யவருளை—புரிதல்வேண்டும்-(நீ) செய்தல்வேண்டும்—எ-று. (கருத்து)
இந்திரனுக்கருள்செய்யவேண்டுமென்றாளென்பதாம். (எஅ)

மாயிருஞாலந்தன்னின்மகம்பலவியற்றிபெற்ற
மீயுயர்பசும்பொனாட்டின்மேதகுசெல்வமெல்லா
மேயினனின்பாலன்றேவிமையவர்க்கிறைவன்பானின்
சேயரிக்கடைக்கணோக்கஞ்சிறிதருள்புரியின்மாதோ

(இ-ள். மா - மகத்தாகிய— இரு - பெரிய—ஞாலந்தன்னின் — பூமி
யிலே—மகம்பலவியற்றி - நூறுவேள்வி செய்து—பெற்ற - பெற்றுக்
கொண்ட—மீ - மேலாக—உயர் - உயர்ந்த—பசு - பசுமை பொருந்திய
—பொன்னாட்டின் - பொன்னுலகத்தில்—மேதகு - மேன்மையுடைய
—செல்வமெல்லாம் - பாக்கியமெல்லாம் - நின்பால் - உன்னிடத்து—
ஏயினவன்றே-பொருந்தியனவல்லவா— இமையவர்க்கிறையன் பால்
இந்திரனிடத்தில்—நின் - உன்னுடைய—சேயரி - செவ்வரிபரந்த — க
டைக்கணோக்கம் - கடைக்கண்பார்வையானது —சிறிது-கொஞ்சம்—
அருள்புரியின்-அருள்செய்தால்—எ-று. (கருத்து) உன்கடைக் கண்பார்
வைசிறிதுஇந்திரனிடத்தில் வந்தால் அவன்செல்வ மெல்லாம் உன
க்குடையவாம் என்றூள்தூதியென்பதாம். (எகு)

* மன்னினிற்சிறர்துவாமுமன்பதைத்தொகுதிதன்னி
லெண்ணிடிற்சிறந்தாரன்றேவியக்காவ்வியக்காதம்மில்

விண்ணவர் சிறந்தா ரன்றே விண்ணவர் தலைமை யுமாணு
மண்ணவ னின்னே வல்கேட் பினதனி லுஞ்சிறந் ததுண்டோ

(இ-ள்.) மண்ணினில் - பூவுலகத்தில்—சிறந்து - சிறப்பைப்பொருந்தி — வாழும் - வாழ்கின்ற — மன்பதைத்தொகுதிதன்னில் - மக்கட்கூட்டத்துக்குள்—என்னிடல்-நினைக்குமிடத்தில்—இயக்கர், இயக்கரானவர்கள்—சிறந்தாரன்றே - சிறந்தவர்களல்லவா— அவ்வியக்கர்தம்மில் - அந்தவியக்கருக்குள்ளே—விண்ணவர்-தேவர்கள் — சிறந்தாரன்றே - சிறப்பைப்பொருந்தினவர்களல்லவா— விண்ணவர் தலைமையுமாணும் - அத்தேவர்களையுமாட்சிசெய்கின்ற — அண்ணல் - இந்திரனானவன்—நின்னேவல்கேட்பின் -உன்னுடையவுவதற்றொழிலைக்கேட்பானாயின—அதனினும் - அதைக்காட்டிலும்—சிறந்தது - சிறப்பைபுடையது—உண்டோ - ஒருபொருளுண்டோ இல்லை—எ-று, *குவலையாகத்தம்-உருப்பியல்-மக-கு- இம்மனைக்கிம் மனைவிசேடஞ்சித்திர- மிம்மணிக்கிம்மணி விசேடந்சோதி - யெனவேவழங்கும் விசேடத்தின்பொருள் - இவ்விதியால் ஒன்றற்கொன்றுவிசேடமறிக (கருத்து) இந்திரனுனக்கேவல்செய்தால்இதிலுஞ்சிறந்ததில்லை என்றான்-எ-ம்(அ௰)

தாதொடுநறவு தாற்றுங் கருங்குழ லிளந்தையே
மேதகுநிதியு மாறும் வேட்டன வுவந்து நல்க
வேதமிலரம்பைமாதர் முறைமுறையேவல் கேட்ப
நீதொழுமமரர்யாருநிற்றொழப்பணித்தியென்றான்.

(இ-ள்) தாதொடு - மகரந்தப்பொடியோடு—நறவு - தேனையும்—தூற்றும் - தூற்றுகின்ற—கருங்குழல் - கருங்கூந்தலில்—இனிது - இனிதாக—வைகும் - தங்கிய—மேதகு - மேன்மைபொருந்திய — நிதியும் - சங்கநிதிபதுமநிதிகளும்—ஆவும் - காமதேனும்—வேட்டன - விரும்பியவைகளை—உவந்து - மகிழ்ந்து—நல்க - கொடுக்க—ஏதமில் - குற்றமில்லாத—அரம்பைமாதர்-தெய்வமடவார்கள்—முறைமுறை - வரிசைவரிசையாக—ஏவல்கேட்ப-ஏவற்றொழிலைக்கேட்க—நீதொழும் - நீவணங்குகின்ற, அமரர்யாரும்-தேவர்கள்யாவரும்—நிற்றொழ - நின்னைவணங்க—பணித்தியென்றான் - செய்யென்றான்—எ-று-(கருத்து)நீவணங்கப்படுந் தெய்வங்களுனனை வணங்கச்செய்யென்றான்-எ-ம்.(அ௧)

இனையன வுரைத்தலோடும் யாவர் தம் முளமுந் தேரும்
பனிவிசும்பிற்றேவர் பரவவீற் றிருக்கும் வேந்தன்
மனநிலையுணரான் போலுமழைமதர் நெடுங்கணல்லாய்
புனைவிரைந்திங்கண் றூதுவிடுத்ததென்னுரைத்தியென்ன

(இ-ள்) இனையன - இத்தன்மையவாகியசொற்களை—உரைத்தலோடும்-சொன்னமாத்திரத்தில்—யாவர்தம் - எவர்களுடைய—உளமும் - மனமும்—தேரும்-தெரியாநின்ற, பனிகுளிர்ச்சி பொருந்திய — இரு - பெரிய—விசும்பில் - தெய்வலோகத்திலிருக்கின்ற—தேவர்-தேவர்கள்—பரவ-வணங்க—வீற்றிருக்கின்ற-அமர்ந்திருக்கின்ற—வேந்து-இந்திரனானவன்—என்மனநிலை - என்மனத்தினிலையை—உணரான் போலும் - தெரியாதவன்போல—மழை - குளிர்ச்சிபொருந்திய—மதர்-மதர்த்த—நெடுங்கண் - நெடியகண்களையுடைய—நல்லாய் - தூதியே—உனை - உன்னை—விரைந்து - சீக்கிரமாக—இங்கண் - இவ்விடத்தில்—தூதுவிட்டது - தூதாகவநுப்பியது—என் - யாதுகாரணமாக—உரைத்தியென்று - சொல்லென்று—எ-று, அறியான்போலு மென்றமையால்தற்குறிப்பணி (கருத்து) தமயந்தியானவள் *தூதியேஇந்திரனென்னுமனதையறியாதவன்போல உன்னையென்னகாரணமாகத்தூதுவிட்டானென்றுசொல்லி என்பதாம். (அ௨)

என்னுளத்தென்று நீங்காதிருப்பவனரசனே யாகும்
பொன்னகர்க்கிறைவன் றன் பாற்பொருந்துதியென்னுந் தூதுக்
கன்னவனிலையுங்கொல்லோ வெனமறைந்தயலேநிற்கு
மன்னவன் மகிழ்ச்சிகூறமடவாளினிது சொன்னாள்.

(இ-ள்.)என்னுளத்து - என்னுடையமனத்தில்—என்றும்- எக்காலும்—நீங்காதிருப்பவன் - பிரியாமனிலைபெற்பவன்—நளனேயாகும் - நளமகாராசனேயாகும்—பொன்னகர்க்கிறைவன்றன்பால் - இந்திரனிடத்து—பொருந்துதி - நீபொருந்தக்கடவாய்—என்னுந்தூதுக்கு - என்று சொல்லுந்தூதுக்கு—அன்னவன் - அந்தநளமகாராசன்—*இசையுங்கொல்லோவென - சம்மதிப்பானோவென்று—மறைந்து - ஒளித்து—அயலேநிற்கும் - பக்கத்திலேநிற்கின்ற—மன்னவன் - அரசன்—மகிழ்ச்சிகூர - மகிழ்ச்சியாக—மடவாள் - தமயந்தி—இனிது - இனிதாக—சொன்னாள்-சொல்லுகிறாள்—எ-று.(கருத்து) *என்னுள்ளத்திருப்பவனளனுடும் - இந்திரனுக்குப்பொருந்தவென்னுந் தூதுக்குநளனிசைவானோவென்றாள் என்பதாம். (அ௩)

கோற்றொடிநளன்மேலுற்றகாதலைக்குறித்துநோக்கி
மாற்றுதலரிதென்றெண்ணிவாசவன் றூதியேக
வாற்றல்வாசவற்குநேராவனைவர்க்கிசையுமென்னுந்
தேற்றமோடொருயார்மற்றைத்தேவர்தூதியரும்போனார்.

(இ-ள்) கோற்றொடி -தமயந்தியானவள்—நளன்மேல் - நளனிடத்தில்—உற்ற - வைத்த—காதலை - ஆசையை—குறித்துநோக்கி - குறித்துப்பார்த்து—மாற்றுதல் - அதனைநீக்குதல்—அரிதென்று - அரிதாகுமென்று—எண்ணி - நினைத்து—வாசவன்றூதி - இந்திரனுடையதூதி—ஏக - தன்னிடத்துக்குச்செல்ல—ஆற்றல் - வலிமைபெற்ற—வாசவற்கும் - இந்திரனுக்கும்—நேரா - உடன்படாத— அனைவர்க்கு - எவர்க்கு - யாவர்க்கு—இசையுமென்னும் - சம்மதிப்பா (ளொருவருக்கும்சம்மதியா)ளென்கிற—தேற்றமோடு - தெளிவுடனே—உரையார் - பேசாதவர்களாய்—மற்றைத்தேவர்தூதியரும் - மற்றைத்தேவர்கள்விடுத்ததூதிகளும்—போனார் - சென்றார்கள்—எ-று. உடம்மையிறந்தது

தழீஇப்பெச்சம் (கருத்து) தமயந்திகளன்மேல்வைத்தவாசையைக்கண்டு இந்திரன் ஆதிபோக மற்றனுதியரும்போனார்கள் என்பதாம். (௮௪)

அதியரேகக்கண்டோன் றல்செங்கமலக்கண்கள்
மேதருசெல்வமிக்கவிதர்ப்பர்கோன்றவத்திற்றோன்று
மாதர்மென்னோக்கினு ன்வடிவினிலழுந்திப்பின்னு
மாதரம்பெருகியின்பவாரியிலாழ்ந்தவன்றே

(இ-ள்.) அதியர் - தேவர்களாதிகள்—ஏக - தம்மிடத்துக்குப்போகலை—கண்ட - பார்த்த—தோன்றல் - நளமகாராசன்—செங்கமலக்கண்கள் - செந்தாமரைபோன்றநேத்திரங்கள்—மேதகு - மேன்பட்ட—செல்வம் - செல்வத்தினாலே—மிக்க - மிகுந்த—விதர்ப்பர்கோன் - வீமராஜனுடைய—தவத்திற்றோன்றும் - தவத்தினாலவதரித்த—மாதர் - அழகிய—மென் - மெல்லிய—நோக்கினுடன் - பார்வையையுற்றதமயந்தியினது—வடிவினில் - உருவகத்தில்—அழுந்தி - ஆழ்ந்து—பின்னும் - பின்னும்—ஆதரம்பெருகி - ஆசைமிகுந்து—இன்பவாரியின் - இன்பக்கடலினை—ஆழ்ந்த - அழுந்தினை—எ-று. (கருத்து) நளன்கண்கள் தமயந்தி உருவத்திலழுந்திப் பின்னுமின்பக்கடலில்மூழ்கின-எ-ம். (௮௫)

பாசிழைபரந்தவல்குற்பனிமொழிக்குமுதச்செவ்வாய்
மாசறுமதியமன்னவாண்முகத்தணங்கைநோக்கி
யாசையங்கடலுளாழ்ந்துகரைபெறுவாசனோக்க
மேசுவதொன்றுமில்லாமூலைவாயிவர்ந்தவன்றே.

(இ-ள்-) பாசிழை - பசம்பொன்னாற்செய்தவாபரணங்கள்—பரந்த - பரவப்பெற்ற—அல்குல் - அல்குலையும்—பனிமொழி - குளிர்ச்சிபொருந்தியசொற்களையும்—குமுதம் - அல்லிமலர்போன்ற—செவ்வாய் - சிவந்தவாயினையும்—மாசறு - குற்றமற்ற—மதியமன்ன - சந்திரனையொத்த—வாள் - ஒளிபொருந்திய—முகத்து - முகத்தையுடைய—அணங்கை - தமயந்தியை—நோக்கி - பார்த்து—ஆசையங்கடலுள் - ஆசையாகிய கடலுள்—ஆழ்ந்து - முழுகி—கரைபெறு - கரையைப்பெறுந—அரசனோக்கம் - நளராசனதுபார்வை—ஏசுவதொன்றுமில்லா - பழிப்பதொன்றுமில்லாத—மூலைவாய் - மூலைகளாகிய மலையின் மேல், இவர்ந்த - ஏறின—எ-று. (கருத்து) நளன்கண்கள் ஆசைக்கடலில்மூழ்கித்தமயந்திமூலைகளாகியமலைகள் மேலேறின என்பதாம். (௮௬)

போர்க்களிறனையவீமன்புரிந்தமெய்த்தவத்திற்றோன்றுங்
கார்க்கருங்கூந்தலாண்மைக்கண்வலையதனுட்பட்டோ
ரீர்க்கிடைபுகாதபொம்மலிளமுலைநெருக்கிற்புக்கோ
பார்த்தசெங்கமலக் * கண்கள்பறிப்பரியனவாய்நின்ற.

(இ-ள்.) போர் - போர்செய்கின்ற—களிறனைய - யானையையொத்த—வீமன் - வீமராசன்—புரிந்த - செய்த—மெய்த்தவத்தில் - உண்மையான தவத்தினாலே—தோன்றும் - அவதரித்த—கார் - மேகம்போன்ற—கருங்கூந்தலாள் - கரியவளக பாரத்தையுடைய தமயந்தியினது—மை - மையையணிந்த—கண்வலையதனுட்பட்டோ - கண்ணாகியவலையிலகப்பட்டோ—ஈர்க்கு - ஈர்க்கானது—இடை - மத்தியத்திலே—புகாத - நுழையாத—பொம்மல் - பொலிவுபெற்ற—இளமுலை - இளமைபொருந்தியஸ்தனபாரங்களின்—நெருக்கில் - நெருக்கத்தில்—புக்கோ - புகுந்தோ—பார்த்த - நோக்கிய—செங்கமலக்கண்கள் - செந்தாமரைமலர்போன்றநேத்திரங்கள்—பறிப்பரியனவாய் - பறிப்பதற்கரியவாகி—நின்ற - நின்றன—எ-று, [* அகத்தியம் - காரணமின்றிக்காரியந்தோன்றாது, காரியமின்றிக்காரணந்தோன்றாது, இவ்விதியால் - காமக்காரணமாகக்கண்கள்நின்றன ] (கருத்து) நளன்கண்கள் தமயந்திகண் வலையிற்பட்டோ பறிப்பதற்கரியவாகநின்றன என்பதாம். (௮௭)

விண்ணவர்மகளிர்யாருமெள்குறவனப்புவாய்ந்து
பெண்ணலங்கனியநின்றபேதைபோழகுமுற்றுங்
கண்ணெறுபிணித்தாலென்னவியப்புறக்களித்துநோக்கும்
புண்ணுறுபுலவுவேலோனுளத்தொடுபுகலலுற்றான்.

(இ-ள்.) விண்ணவர் - தேவர்களுடைய—மகளிர்யாரும் - மங்கையரெல்லாம்—எள்குற - நாணமடைய—வனப்புவாய்ந்து - அழகைப்பெற்று—பெண் - பெண்களுக்குரிய—நலம் - நற்குணங்கள்—கனிய - முதிர—நின்ற - நிற்கப்பெற்ற—பேதை - தமயந்தியினது—பேர் - பெரிய—அழகுமுற்றும் - அழகுமுழுவதும்—கண்ணெறு - கண்களுடனே—பிணித்தாலென்ன - கட்டினதையொப்ப—வியப்புற - ஆச்சரியமாக—களித்து - களிப்பையடைந்து—நோக்கும் - பார்க்கின்ற—புண்ணுறு - மாமிசத்தையொத்த—புலவு - நாற்றத்தையுடைய—வேலோன் - வேற்படையேந்தியநளமகாராசன்—உளத்தொடு - மனத்துடனே—புகலலுற்றான் - சொல்லத்தொடங்கினன்—எ-று. (உளத்தொடுபுகலல் - சிந்தித்தல்) (கருத்து) தமயந்தியழகைக்கண்டுநளன்தன்னுளத்தோடுசொல்வான்-எ-ம். (௮௮)

வடிவமைநூலிற்சொல்லும்வனப்பெலாமமைத்துவேதன்
கடிமலர்ச்செங்கைவண்ணங்காட்டியவுருவுகொல்லோ.
வடிகணைவேனிலோனின்னமுதுகோரேய்ந்துதீட்டும்
படிவமோவுயிரைவாட்டும்பாவைதன்வடிவந்தானே,

(இ-ள்) உயிரைவாட்டும் - என்னுயிரைவாட்டுகின்ற—பாவை - இப்பாவைபோல்வாளுடைய—வடிவம் - உருவமானது—வேதன் - பிரமனானவன்—வடிவமைநூலில் - சாமுத்திரிகநூலிலே—சொல்லும் - சொல்லாநின்ற—வனப்பெலாம் - அழகனைத்தும்—அமைத்து - அமையச்செய்து—கடி - புதுமைபெற்ற—மலர் - தாமரைமலர்போன்ற—செங்கைவண்ணம் - தனதுசிவந்தகைகளின்குணத்தை—காட்டிய - காண்பித்த—உருவுகொல்லோ - உருவமோ—அடு - கொல்லாநின்ற—கணை - பூக்கணையையுடைய—வேனிலோன் - மன்மதனானவன்—இன் - இனிய—அமுது - அமிர்தத்தில்—கோல் - தூரியக்கோலை—தோய்த்து-கனைத்

து—இட்டும் - எழுதப்பட்ட—படிவமோ - உருவமோ—எ-று. (கருத்து)நளன்தமயந்திவடிவம்பிரமன்கைத்திறமோ, மன்மதனெழுதியஉருவமோ என்றான் என்பதாம். (அகூ)

குழையெதிர்நடந்துபைம்பொற்குமிழ்மிசைமறிந்துநீண்ட
வுழை * பொருநெடுங்கணுடனுறுப்பினுக்குவமையாகச்
செழுமலர்முதலவாய்பொருள்களைத்தெரிந்துகூறி
னழகினுக்குவமைதீர்ந்தவவற்றினுக்கிகழ்ச்சியாமே.

(இ-ள்) குழை- குழையென்னுங்காதணிக்கு—எதிர்நடந்து-முன்பாகச்சென்று—பைம்பொன் - பசியபொன்போன்ற—குமிழ்-குமிழம்பூவினது—மிசை—மேற்பக்கத்தில்—மறிந்து-மீறிபட்டு—நீண்ட—நீட்சியடைந்த—உழைபொரு—மான்போன்ற—நெடுங்கணுடன்- நெடியகண்களையுடையதமயந்தியினது—உறுப்பினுக்கு - அவயவத்துக்கு—உவமையாக - உவமானமாக —செழும் - செழுமைபெற்ற—மலர்முதலவாய - தாமரைமலர்முதலாகிய—பொருள்களை - வஸ்துக்களை—தெரிந்துகூறின் - தெரிந்துசொல்லின்—அழகினுக்கு - அழகுக்கு—உவமைதீர்ந்த - உவமைநீங்கிய—அவற்றினுக்கு-அவ்வுறுப்புகளுக்கு—இகழ்ச்சியாம் - பழிப்பாகும்—எ-று; குமிழொண்பூ - அதுபோனமூக்கெனக்கொள்க [* அகத்தியம் - காரியமுந்தியுங்காரணம்பிந்தியும்-வருவன காரியகாரணச்சொல்லே - இவ்விதியால்பொருநெடுங்கண்காரிய காரணச்சொல்] (கருத்து) தமயந்தி அவயவங்களுக்குஉவமானப் பொருள்களிகழ்ச்சியவாம்என்றான் என்பதாம். (கூ௰)

குடைந்துவண்டிமிருஞ்செய்யகொழுமலர்த்திருவினோடுந்
தடஞ்சினைபொதுளுமென்பூந்தருநிழலுறையுந்தெய்வ
மடந்தையர்தம்மையெல்லாம்வைகலும்படைத்துச்செங்கை
படிந்தபினிந்தமாதைப்படைத்தனன்கமலத்தோனே.

(இ-ள்) வண்டு-வண்டுகளானவை—குடைந்து - மூக்கினுலேகிண்டி—இமிரும்-ஒலிக்கின்ற—செய்ய-சிவந்த—கொழு - செழுமைபெற்ற—மலர்-தாமரைமலரிலிருக்கின்ற—திருவினோடும்-இலக்குமியுடனே-தடம்-பருத்த—சினை-கிளைகள்—பொதுளும் - நெருங்கிய—மென் - மெல்லிய—பூ - மலர்களையுடைய—தருநிழல் - ஐந்தருநிழலில்உறையும்-வசிக்கிற—தெய்வமடந்தையர்தம்மையெல்லாம் - தெய்வமங்கையரனைவரையும்—வைகலும் - நாள்தோறும்—படைத்து - சிருஷ்டித்து—செங்கைபடிந்தபின்-தன்னுடையசிவந்தகைகள்பழகியபின்பு, இந்தமாதை-இந்தத்தமயந்தியை — கமலத்தோன் -பிரமனானவன்—படைத்தனன்-சிருட்டித்தான்—எ-று. எ-அசைநிலை - (கருத்து) பிரமன் இலக்குமியையும் தேவமாதர்களையும் படைத்துக்கைதோந்தபின் இவளைப்படைத்தான் என்றான் நளன்என்பதாம். (கூக)

விரிந்தசெங்கமலத்தண்பூம்பொகுட்டில்வீற்றிருக்குமேலோன்
முருந்திளமுறுவற்செவ்வாய்முகிழ்முலைக்கரியகூந்தற்



திருந்திழையழகுவாய்ந்ததிருமுகந்திங்களாகப்
புரிந்தனன்களங்கமன்றேபுருவமாவியற்றினனே.

(இ-ள்.)விரிந்த - விரியப்பெற்ற—செங்கமலம் - செந்தாமரையினது—தண் - குளிர்ச்சிபொருந்திய—பூம்பொகுட்டில்-மலர்க்கொட்டையின்மேல்—வீற்றிருக்கும் - அரசிருக்கின்ற—மேலோன்- பிரமனானவன்—முருந்து - மயிலிறகின் முதன்முள்போன்ற—இள- இளமைபொருந்திய—முறுவல் - தந்தங்களையும் —செவ்வாய் - சிவந்தவாயினையும்—முகிழ் - அரும்பையொத்த—முலை - முலைகளையும்—கரிய-கறுத்த—கூந்தல் - அளகாபாரத்தையுமுடைய—திருந்திழை -தமயந்தியினது—அழகுவாய்ந்த - அழகுபொருந்திய—திருமுகமாக- திருமுகமாக—திங்கள் - சந்திரனை—புரிந்தனன்- செய்தான்—களங்கமன்றே - அதன் களங்கத்தையல்லவா—புருவமா -புருவமாக— இயற்றினன் - செய்தான் எ-று. (கருத்து) பிரமனிவள் முகத்தைச்சந்திரனைகப்படைத்தானென்றான் என்பதாம். (கூஉ)

* மணிமுடியதனைக்கொம்மை முலையெனவமைத்துமாா
னணிமலக்கணைகளைந்திலான்றமூவுலகுமூன்று
கணைகளால்வென்றுமற்றைக் கணைகளுக்கெதிரில்லாமை
யிணைவிழியென்றுபேரிட்டிவண்முகத்திருத்தினனே

(இ-ள்.)மாரன்-மன்மதனானவன் —மணிமுடியதனை-தன்னுடையமணிகள்பதித்தகிரீடத்தை—கொம்மை - இளமைபொருந்திய —முலையென - ஸ்தனங்களென்றுசொல்ல—அமைத்து - பொருத்தி— அணி-அழகிய—மலர்க்கணைகளைந்தில் - பூவம்புகளைந்தினுள் — ஆன்ற - நிறைந்த—மூவுலகும் - திரிலோகங்களையும்—மூன்றுகணைகளால் - மூன்றுபாணங்களால்—வென்று-வெற்றிகொண்டு — மற்றை கணைகளுக்கு - மற்றையிரண்டுபாணங்களுக்கு—எதிரில்லா-எதிரில்லாத — மை-அஞ்சனந்தீட்டிய—இணைவிழியென்று-இரண்டுகண்களென்று—பேரிட்டு - பேர்வைத்து—இவண்முகத்து-இந்தத்தமயந்தியினுடையமுகத்தில்—இருத்தினன் - இருத்திவைத்தான்—எ-று. ( * அகத்தியம் காரணமுந்தியும் காரியம்பிந்தியும் - வருவனகாரணகாரியச்சொல்லே - இவ்விதியால் மணிமுடிகாரண காரியச்சொல்) (கருத்து)மன்மதன்தன் முடியை முலையாகவுங் கணைகளைக்கண்களாகவும் அமைத்தான் என்றான் என்பதாம். (கூ௩)

வெதிர்புரைபசியமென்றோள்வேனெடுங்கண்ணினுடன்
றிதலைவெம்முலைபோன்முத்தந்தெரிதரவணிந்திடாமன்
மதமழைகொழிக்கும்வேழ மருப்பிணைவெருவியன்றே
கதிர்மணிமுத்தமுள்ளேகரந்துவைத்திருக்குமாறே

(இ-ள்.) வெதிர்புரை - மூங்கிலையொத்த—பசிய - பசுமைபொருந்திய—மெல்-மெல்லிய—தோள் - தோளையும்—வேல்-வேற்படைபோன்ற—நெடு - நெடிய—கண்ணினுடன் - கண்களையுற்றதமயந்தியின் —திதலை - தேமலையுடைய—வெம்-விருப்பத்தைத்தருகின்ற — முலை

போல் - ஸ்தனங்களைப்போல்—முத்தம் - முத்துக்களை—தெரிதர - தெரியும்படி—அணிந்திடாமல் - தரித்துக்கொள்ளாமல்—மதமழை - மதமாகியமழையை—கொழிக்கும் - கொழிக்கின்ற—வேழம் - யானையின்—மருப்பினை-கொம்பிரண்டும்—வெருவியன்றே - பயந்தல்லவா—கதிர் - கிரணங்களையுடைய—மணி - அழகிய—முத்தம் - முத்துக்கள்—உள்ளே - தமக்குள்ளே—கரந்து - ஒளித்து—வைத்திருக்குமாறு - வைத்திருக்குமிதம்—எ-று. (கொழித்தல் - பெருக்குதல்) (கருத்து) தமயந்தி முலைகளைப்போல் முத்துக்களை வெளிப்படுத்தாமல் அம்முலைகட்குப்பயந்தல்லவா யானைக்கொம்புகள் முத்துக்களை உள்ளே, வைத்திருக்கின்றன என்றான் நளன் என்பதாம். (கசுச)

> மடலவிழ்கமலப்புத்தேள்வடிவினையமைத்துவெய்ய
> தடமுலையமைப்பமாதி னுறுப்பலாற்றாமின்றென்று
> விடையினுக்கமைத்தகூற்றை யெடுத்தெடுத்தமைத்தலாலோ
> கொடியெனத்தேய்ந்துதேய்ந்துகுறைந்ததுமருங்குறுனே.

(இ-ள்.) மடல்-இதழ்களானவை—அவிழ் - விரிந்த—கமலப்புத்தேள் - தாமரைமலரிலிருக்கும்பிரமனானவன்—வடிவினை- உருவத்தை—அமைத்து - முன்புசெய்து—வெய்ய-வெவ்விய—தடம் - பருத்த—முலை-ஸ்தனங்களை—அமைப்ப-பின்புசெய்ய—மாதின் - தமயந்தியினுடைய—உறுப்பலால் - அவயவமல்லாமல்—தாமின்றென்று - தகுந்த பொருளில்லையென்று—இடையினுக்கு-மருங்கிற்கு — அமைத்தகூற்றை-வைத்தபங்கை— எடுத்தெடுத்து - கொஞ்சங்கொஞ்சமாக வெடுத்துக்கொண்டு—அமைத்தலாலோ - செய்தபடியாலோ—கொடியென - கொடியென்றுசொல்ல—தேய்ந்துதேய்ந்து-தேய்ப்பட்டுத்தேய்பட்டு —மருங்குல்- இடையானது—குறைந்தது-குறைப்பட்டது—எ-று. (கருத்து) பிரமன் இடைக்கமைத்தபங்கையெடுத்து முலைக்கமைத்த படியினலல்லவோ இவளுக்கிடைசுருங்கிற்றுஎன்றான் நளன் என்பதாம்.

> மௌவலந்தெரியல்வேய்ந்துமணங்கமழ்கரியகூந்தற்
> கொவ்வையங்கனிவாய்ப்பேதைகுவிமுலைக்களிநல்யானை
> செவ்விதின்பிணித்தநீலச் செழுமணிவல்லிபோலு
> மவ்வயிறணிந்தகோலவணிமயிரொழுக்கந்தானே

(இ-ள்.)மௌவல் - முல்லையினுடைய—அம்-அழகிய— தெரியல் வேய்ந்து - மாலையைத்தரித்து—மணம் - வாசனை—கமழ் - கமழ்கின்ற—கரிய - கறுத்த—கூந்தல் -அளகாபாரத்தையும்—கொவ்வையங்கனி வாய்ப்பேதை-கொவ்வைக்கனிபோன்றவாயையுமுள்ள தமயந்தியின், குவி - குவிந்த—முலை - ஸ்தனங்களானவை—களி - களிப்பையுடைய, நல்யானை-நல்யானையை—செவ்விதின் - சோக,பிணித்த கட்டிய,நீலச்செழுமணிவல்லிபோலும்-செழுமையுள்ள நீலரத்தினக்கொடி போலும்— அவ்வயிறு - அந்தவயிறானது—அணிந்த-தரித்த—கோலம் - ஒப்பனையமைந்த அணி-அழகிய—மயிரொழுக்கம் - மயிரொழுங்கு— எ-று. தான்-ஏ- அசைகள் (கருத்து) மயிரொழுங்கானது தமயந்தி-முலைகளாகியயானைகளைக்கட்டியவல்லிபோலிருந்ததுஎன்றான்நளன் - எ-ம் ()



> ஐங்கணைக்கிழவன்வைகுமணியாசிருக்கைப்பாங்கர்
> தங்குறவமைத்தவாழைத்தண்கொற்றுகட்சீற்றத்
> துங்கவெம்பருயானைத்தடக்கைகொறுணித்தேற்றாஞ்
> செங்கயற்கருங்கட்செவ்வாய்த்திருத்திழைகுறங்குதாமே

(இ-ள்.) செங்கயல் - சிவந்தகயல்போன்ற—கருங்கண்-கரியகண்களையும்—செவ்வாய் - சிவந்தவாயினையும் —திருந்திழை - திருந்தமாகிய ஆபரணத்தையுமுடையதமயந்தியினது—குறங்கு - துடைகள்—ஐங்கணைக்கிழவன் - மன்மதன்—வைகும் - தங்குகின்ற—அணி- அழகிய அரசிருக்கை - அந்தாணியிடத்தின்—பாங்கர் - பக்கத்தில்—தங்குறதங்கும்படி—அமைந்த - செய்த—வாழைத்தண்டுகொல் - வாழைத்தண்டோ—தறுகண் - அஞ்சாத—சீற்றம் - கோபத்தையுற்ற— துங்கம் - உயர்ச்சிபொருந்திய—வெம் - வெவ்விய —பருவம்-ஒப்பனையமைந்த— யானை - யானையினது—தடம் - பருத்த—கைகொல்- துதிக்கையோ—துணிதல் - இன்னதென்று துணிதலை—தேற்றாம் (யாம்) தேறோம்—எ-று, (கருத்து) தமயந்தி துடைகள்மன்மதன் அந்தாணிமண்டபத்து வாழை ஸ்தம்பங்களோயானைத்துதிக் கைகளோ அறியோம் என்றான் நளன் என்பதாம். (கஎ)

> பைந்தருநீழல்வைகும்பாவையர்பதுமபீடத்
> திந்திரைக்கணங்குசெய்புமேந்திழையெழிற்குந்தோற்று
> வந்தடிபணியுந்தோறும்வாணுதல்கவினத்தீட்டுஞ்
> சிந்துரத்திலகந்தோய்ந்தோ சிறடிசிவந்தவாறே

(இ-ள்.) பைந்தருநீழல்-பசியவைந்தருநீழலில்—வைகும் - தங்கிய—பாவையர் - அரம்பையர்கள்—பதுமபீடத்து - தாமரைமலரிலிருக்கின்ற—இந்திரைக்கு - திருமாதுக்கு—அணங்குசெய்யும் - வருத்தத்தைச்செய்கின்ற—ஏந்திழை - தமயந்தியினது, எழிற்கு-அழகிற்கு — தோற்றுவந்து - தோல்வைபெற்றுவந்து—அடிபணியுந்தோறும் - அடிகளில்வணங்குந்தோறும்—வாள் - ஒளிபொருந்திய—நுதல் - நெற்றியினது—கவின - அழகுபெற—தீட்டும்-எழுதப்பட்ட—சிந்துரதிலகம்- சிந்துரப்பொட்டு—தோய்ந்தோ-தோயப்பற்றோ, சீறடி - சிறியபாதங்கள்—சிவந்தவாறு - சிவக்தவிதம்—எ-று. (கருத்து) தேவமாதர்கள் தமயந்தியழகுக்குத்தோற்று அடியைவணங்குதலால் அவர்கள் நெற்றித்திலகம்பட்டுப் பாதஞ்சிவந்ததோ என்றான்நளன் என்பதாம் (கஅ)

> இன்னவாறுளத்திலெண்ணி யெறுழ்வலிமடங்கலன்னான்
> மின்னவிர்குலிசவேந்தன் விஞ்சையின்புணர்ப்பனிந்தி
> பொன்னவிர்கணங்குபூத்த பொம்மல்வெம்முலையிறைவன்றன்
> கன்னமஞ்சிலைவேலொன்னகட்புலன்கதுவகின்றான்

(இ-ள்) இன்னவாறு-இந்தப்பிரகாரம்—உளத்தின்-மனத்திலே—எண்ணி - சிந்தித்து—எறுழ்வலி - மிகுந்தவலிமைபெற்ற—மடங்கலன்னான் - சிங்கத்தையொத்தவன்—மின்னவிர் - ஒளிவிளங்குகின்ற

—குலிசவேந்தன் - வச்சிரப்படையையுடையவிந்திரனது— விஞ்சையின்-வித்தையின்—புணப்பினீங்கி - சம்பந்தந் தின்னின்றுநீங்கி, பொன் - பொன்போலும்—அவிர்-பிரகாசியாநின்ற - சுணங்கு - தேமல் — பூத்த-உண்டாகிய—பொம்மல்-பொலிவினையுற்ற—வெம் - விருப்பத்தைத்தருகின்ற—முலையினுன்முன்-தனங்களையுள்ள தமயந்திக்குமுன்னுக—கன்னலஞ்சிலைவேளென்ன - கருப்புவில்லேலந்திய மன்மதன்போல—கட்புலன் - கண்ணறிவு—கதுவ-பற்றும்படி— நின்றான் -நின்றனன்—எ-று. (கருத்து) நளன் தமயந்திக்குமுன் அருவத்தைவிட்டு உருவமாய்நின்றான் என்பதாம். (௯௯)

விரைகமழ்நறியதண்டார்விதர்ப்பர்கோனளித்தபாவை
யரசிளங்குமாரன்றன்னையார்வமோடினிதுகண்டா
ளுருவெளிகண்டொறுமுவந்துளமயர்வாண்முன்னந்
தெருளுறக்காணிலெய்துமுவகையார்தெரிக்கற்பாலார்

(இ-ள்.) விரை-வாசனை—கமழ் - கமழ்கின்ற—நறிய—நல்ல —தண் - குளிர்ச்சிபொருந்திய—தார் - மாலையணிந்த — விதர்ப்பர்கோன் - வீமராசன்—அளித்த - பெற்ற—பாவை - தமயந்தியானவள்— அரசிளங்குமரன்றன்னை - நளமகாராஜனை—ஆர்வமோடு - ஆசையுடன்—இனிது-இனிதாக—கண்டாள் - பார்த்தாள்— உருவெளிகண்டு - உருவெளிதோற்றத்தைகண்டு—நாளும் - நாடோறும்—உவந்து - உவப்படைந்து—உளம் - மனம்—அயர்வாள்-வருந்துகின்றவள் — முன்னம்முன்னுக—தெருளுற - தெளிவுபொருந்த—காணில் - கண்டால் —எய்தும் - அப்போதடைகின்ற—உவகை-மகிழ்ச்சியை—யார் - எவர்கள்—தெரிக்கற்பாலார் - தெரியப்படுத்தவல்லவர்கள் — (ஒருவருமில்லை) —எ-று. (கருத்து) தமயந்திநளனை ஆசையோடுகண்டாள் அவள்மகிழ்ச்சியையார்சொல்லவல்லாரென்பதாம். (௱)

அங்கண்மாஞாலங்காக்கு மன்னன்மேலணங்கனுடன்
செங்கயங்கருங்கண்வாளிசிறிதுசென்றழுந்தாமுன்னம்
பைங்கழைதாங்கியாவம்பரித்திடம்பார்த்துநின்ற
துங்கவேள்விடுத்தவாளி தூவன்மட்டாழ்ந்தவன்றே

(இ-ள்.) அம் - அழகிய—கண் - இடமகன்ற—மா-மகத்தாகிய—ஞாலம் - பூமியை—காக்கும் - அளிக்கின்ற— மன்னன்மேல் - நளமகாராசன்மேல்—அணங்கனுடன் - தமயந்தியினுடைய— செங்கயல்-சிவந்தகயல்போன்ற—கருங்கண் - கரியகண்ணாகிய—வாளி - பாணங்கள்—சிறிதுசென்று - கொஞ்சம்போய்—அழுந்தாமுன்னம் - அழுந்துவதற்குமுன்னமே—பைங்கழை - பசியகருப்புவில்லை—தாங்கி-சுமந்துகொண்டு—ஆவம்பரித்து - அம்புறாத்தூணியைத்தாங்கிக்கொண்டு —இடம்பார்த்துநின்ற - இடநோக்கியிருந்த—துங்கம் - உயர்ச்சி பொருந்திய—வேள் - மன்மதனாலன்—விடுத்த - பிரயோகம் பண்ணின—வாளி - பாணம்—தூவன்மட்டு - குதைவரையும்—ஆழ்ந்த - அழுந்தின—எ-று.(கருத்து)தமயந்திகண்களை - யெய்யுமுன்னேநளன் மேல் மன்மதன்கணை யெய்தானென்பதாம். (௱௧)



கழிபெருங்காதலாள் * கட்கருவிளைமலர்கள்வெய்ய
மழுவிடையனையான்செய்யமணிப்புயவரையிற்பூத்த
விழைவொடுமகிழ்ச்சிகூறும்வேனில்வேளனையான்செங்கண்
முழுநெறிக்கமலமன்னாண்முலைத்தடத்தலர்ந்தமாதோ

(இ-ள்.) கழி-மிகுந்த—பெருங்காதலாள்- பேராசையுள்ளதமயந்தியின்—கண் - கண்ணாகிய—கருவிளைமலர்கள் - காக்கணம்பூக்கள்—வெய்ய - வெவ்விய—மழுவிடையனையான் - இளவேற்றையொத்தநளமகாராசனது—செய்ய-சிவந்த—மணி - அழகிய—புயவரையில் - தோளாகியமலையில்—பூத்த - மலர்ந்தன—விழைவொடும் - அன்புடனே—மகிழ்ச்சிகூறும் - மகிழ்ச்சியடைகின்ற—வேனில் வேளனையான் - நளமகாராசனுடைய—செங்கண் - சிவந்தகண்ணாகிய—முழுநெறி - முழுநெறிப்பையுடைய—கமலம் - தாமரைகள்—அன்னாள் - அத்தமயந்தியின்—முலைத்தடத்து - தனதடமாகியகுளத்தினிடத்து - அலர்ந்த - பூத்தன -எ-று.தடமென்பது மலையும்-குளமும்-மாது-ஓ-அசைகள் [ * அகப்பொருள்விளக்கம் - அரிவைநாட்டத்தகத்திகழ்வேட்கை, தெரியவுணர்த்துங்குறிசிறக்கென்ப; இவ்விதியால்ஆசைகொண்டதறிக] (கருத்து) தமயந்திகண்களாகிய நீலோற்பலமலர்கள் நளன்றோட்களிற்பூத்தன - நளன் கண்களாகியதாமரைமலர்கள் தமயந்திமுலைகளிற்பூத்தன என்பதாம். (௱௨)

படவரவல்குற்செவ்வாய்ப்பனிமொழிக்கொடியன்னாளை
மடலவிழ்கமலப்போதின்மடந்தையென்பதற்குவெற்றிக்
கடகளிறென்னநின்றகாமருகாளைதன்னை
யிடையறாதினிதுநோக்கியிமைப்புறுகுறையுந்தீர்ந்தாள்,

(இ-ள்,)படவரவல்குல் - அராப்படம்போன்றவல்குலையும்—செவ்வாய்-சிவந்தவாயையும்—பனிமொழி - குளிர்ந்தசொல்லையுமுடைய—கொடியன்னாளை-தமயந்தியை—மடலவிழ் - இதழ்விரிந்த—கமலப்போதின் - தாமரைமலரிலிருக்கின்ற—மடந்தையென்பதற்கு - இலக்குமியென்றுசொல்வதற்கு—வெற்றி - சயத்தைப்பெற்ற—கடகளிறென்ன-மதயானைப்போல—நின்ற - அருகிலிருந்த—காமர் - அழகிய—காளைதன்னை - நளமகாராசனை—இடையறாது -இடைவிடாமல்—இனிதுநோக்கி - இனிதாகப்பார்த்து— இமைப்புறு - (இதுவரையும்) இமைப்பினையடைந்த—குறையும் - குறைவையும்—தீர்ந்தாள் - நீக்கினாள்—எ-று. (கருத்து) தமயந்திநளனைப்பார்த்துக்கண்குறைதீர்ந்தாள் என்பதாம்.([illegible])

உண்ணிறைவுடையகாமமுருவெடுத்தென்னநின்ற
வண்ணலுமணங்கன்னாளுமழகெனுமினியதேற
லெண்ணருங்காதல்கூரவினிதினின்மாறிமாறிக்
* கண்ணினாற்பருகியின்பக்களிப்பெனுங்கடலுளாழ்ந்தார்.

(இ-ள்.) உள் - உள்ளே— நிறைவுடைய -நிறைவினையுடைய—காமம் - ஆசையானது—உருவெடுத்தென்ன - ஒருவடிவுகொண்டதுபோல

லை—கின்றவண்ணனும் - கின்றனனும்—அணங்கன்னளும் - தமயந்தியும்—அழகெனும் - அழகென்றுசொல்லும்—இனியம்தறல் - இனிப்புள்ளதேனை—எண்ணரும் - எண்ணுதற்கரிய—காதல்கூர - ஆசைமிக—இனிதினின் - இனிமையினாலே—மாறிமாறி - ஒருவர்க்கொருவராடிக் கடிமாறிக்கொண்டு—கண்ணினால் - நேத்திரேந்திரியங்களினால்—பருகி - உண்டு—இன்பம் - இன்பத்தைத்தரும்—களிப்பெனும் - களிப்பென்கிற—கடலுள் - கடலின்கண்—ஆழ்ந்தார் - அழுந்தினார்கள்—எ-று [ * குவலயானந்தம்-உறுப்பியல்-ஏன் -ரூ-கண்ணுறைநிறமொடுநெடுமைகுறுமைநாற்சமீபம்வழைவு, கூடல்பிரிதலைவயுள்பொருளே, இவ்விதியால் - கண்ணுற்கண்டுகளித்தனர் ] (கருத்து) நளனுந்தமயந்தியும்ஒருவரையொருவர்பார்த்துமகிழ்ச்சிக்கடலிலேமூழ்கினார்கள் என்பதாம்,()

இருதடம்புயமுமந்தாரகலமும்பைந்தாவென்
தெரிவருமாவியென்றுடெரிவையுமன்னன்றனு
முருகவிழ்குழலும்வெய்யமுகிழ்முலைத்துணையுந்தாங்கு
முருவுடைத்தாங்கொலென்றனுயிரெனவியந்துநின்றான்.

(இ-ள்.) தெரிவையும் - தமயந்தியும்—என் - எனது—தெரிவரும் - தெரிதற்கரிய—ஆவி - உயிரானது—இருதடம்புயமும் - பருத்ததோள்களிரண்டையும்—அம் - அழகிய—தார் - மாலையணிந்த—அகலமும் - மார்பையும்—இயைந்திதென்றாள் - பொருந்தியதென்றாள்—அன்னனும் - நளனும்—என்றனுயிர் - என்னுடையவுயிரானது—முருகவிழ் - தேனொழுகப்பெற்ற—குழலும் - கூந்தலையும்—வெய்ய - வெவ்விய—முகிழ் - அரும்பையொத்த—முலைத்துணையும் - இரண்டுஸ்தனங்களையும்—தாங்கும் - சுமக்கப்பெற்ற—உருவுடைத்தாமெனா - உருவுடைத்தாமென்று—வியந்து—அதிசயித்து—நின்றான்; - நின்றான்—எ-று. (கருத்து) தமயந்திநளன்றோட்களையுமார்பையும் தன்னுயிரென்றாள்நளன்கூந்தலையுந்தனங்களையுந் தன்னுயிரென்றான் என்பதாம், (௫௫)

மாதுபால்விழைவினோகுமனத்தினையல்லசெய்த
தூதினுக்கியல்பன்றென்னுத்தோன்றல்போழிவின்மீட்பக்
காதலினவன்பாற்செல்லுங்கருத்தினைக்கமலத்தண்பூம்
போதுறைமடந்தையன்னாட்பொருந்துநாணடுத்ததன்றே

(இ-ள்,) அல்லசெய்தல் - தூதுக்குரியவல்லவைகளைச்செய்தல்—தூதினுக்கு - தூதுக்கு—இயல்பன்றென்று - இயற்கையன்றென்று—தோன்றல் - நளமகாராசாவானவன்—மாதுபால் - தமயந்தியினிடத்து—விழைவின் - ஆசையினாலே—ஏகும் - செல்லுகின்ற—மனத்தினை - மனத்தைபோழிவின் - போழிவினால்—மீட்ப - மீட்க—கமலத்தண்பூம்போதுறை குளிர்ச்சிபொருந்தியதாமரைமலரிலிருக்கின்ற—மடந்தையன்னாள் - இலக்குமியையொத்ததமயந்தியை, பொருந்துநாண் - பொருந்தியநாணமானது—காதலின் - ஆசையினால்—அவன்பாற்செல்லுங் கருத்தினை - அந்நளமகாராசனிடத்திற்சென்றமனத்தை — தடுத்தது



தடுத்துவிட்டது—எ-று. (கருத்து) நளன்இச்செய்கை தூதற்குத்தகாதென்றுமனதைமீட்கத் தமயந்திநாணந்தன்மனதைத்தடுத்தது என்பதாம். (௫௬)

நாணமீதூரநின்றநகைமதிமுகத்தினாளும்
பூணினுக்கழகுசெய்யும்புணர்முலைத்தோழிமாரு
நீணகர்க்கடிகொள்வாயினீங்கிவந்தருகுநின்றான்
சேணுறையமரன்கொல்லோஇருந்தெழிலியக்கனேயோ,

(இ-ள்.) நாணம் - நாணமானது—மீதூரநின்ற - அதிகரிக்க விருந்த—நகை - ஒளிபொருந்திய—மதி - திங்கள்போன்ற—முகத்தினாளும் முகத்தையுடையதமயந்தியும்—பூணினுக்கு - ஆபரணங்களுக்கு—அழகுசெய்யும் - அழகைச்செய்கின்ற—புணர் - ஒன்றோடொன்றுசேர்ந்த—முலை - ஸ்தனங்களையுள்ள—தோழிமாரும் - தோழிகளும்—நீள்நீண்ட—நகர் - இந்நகரத்தினது—கடிகொள் - காவலைக்கொண்ட—வாயில் - வாயிலை—நீங்கிவந்து - கடந்துவந்து—அருகுநின்றான் - நம்மருகேநின்றவன்—சேணுறை - ஆகாயத்திலிருக்கின்ற— அமரன்கொல்லோ - தேவனோ—இருந்து - இருந்தப்பெற்ற—எழில் - அழகையுற்ற—இயக்கனேயோ, இயக்கனோ—எ-று. (கருத்து) தமயந்தியுந்தோழிமார்களும், இவன்தேவனோஇயக்கனோ என்பதாம். [இதுமுதல்மூன்றுங் குளகம்.] (௫௭)

கடிகமழ்கமலச்செல்விகண்கவர்வனப்புவாய்ந்த
வடிவுறுகுவவுத்திண்டோள்வண்டுழாய்மாயன்கொல்லோ
மிடல்கெழுவெள்ளிவெற்பின் விஞ்சையர்க்கிறைவன்கொல்லோ
முடியுடையமரர்போற்றுமொய்கழற்குமரன்கொல்லோ.

(இ-ள்.) கடி-வாசனை—கமழ் - கமழுகின்ற—கமலச்செல்வி- தாமரைமலரிலிருக்கின்றதிருமாதினுடைய—கண் - கண்களை—கவர் - கவர்கின்ற—வனப்புவாய்ந்த - அழகுபெற்ற—வடிவுறு - வடிவின்மிக்க—குவவு-திரட்சிபொருந்திய, திண்டோள் - திண்ணியபுயங்களையுள்ள—வண் - அழகிய—துழாய் - துளபமாலையணிந்த, மாயன்கொல்லோ - திருமாலோ—மிடல்கெழு - வலிமைபொருந்திய—வெள்ளிவெற்பின் - வெள்ளிமலைக்குற்ற—விஞ்சையர்க்கிறைவன்கொல்லோ - விஞ்சையர்க்காசனோ—முடியுடை - மகுடத்தையுடைய—அமரர்போற்றும் - தேவர்களால்வணங்கப்பட்ட—மொய் - நெருங்கிய—கழல்-வீரக்கழலையணிந்த—குமரன்கொல்லோ. குமாரக்கடவுளோ—எ-று. (கருத்து) விட்டுணுவோ, விஞ்சையர்க்கரசனோ, சுப்பிரமணியனோ, என்பதாம். (௫௮)

விரும்பியவனைத்துநல்குமேதகுதவத்தின்மாய்ந்தோர்
திருந்தெழில்யாக்கைபெற்றுத்திகழ்வனென்றுரைக்குநீராற்
கரும்புமழ்கிளவிபாகன்கட்டழறபாய்ந்துதுஞ்சி
யரும்பெறல்யாக்கைபெற்றகாமனோ * வறிகிலேமால்.

(இ-ள்.) விரும்பியவனைத்தும் - இச்சித்தவைகளெல்லாம்—நல்கும் - தருகின்ற—மேதகு - மேம்பட்ட — தவத்தின் - தவத்தினால்—மயா

ந்தோர் - இருந்தவர்கள்—திருந்து-திருத்தமாகிய—எழில்- அழகுபொரு ந்திய—யாக்கைபெற்று - தேகத்தைப்பெற்று—நிகழ்வதொன்று - விளங் குவார்களென்று—உரைக்குநீரால் - சொல்லுகின்றதன்மையால்—கரு ம்புறழ் - கரும்புரசத்தையொத்த—கிளவி - சொல்லையுடையவுமைமா தை—பாகன் - தன திடப்பாகத்திலவைத்தகடவுளது—கண் - நெற்றி க்கண்ணினுடைய—தழல் - நெருப்பிலே—பாய்ந்து-புகுந்து—துஞ்சி - இறந்து—அரும்பெறல் - பெறுதற்கரிய—யாக்கைபெற்ற - (அழகுள் ள) தேகத்தைப்பெற்ற—காமனை - மன்மதனை—அறிகிலேம்- (யாம்) அறியேம்—எ-று. [ ✻ அகத்தியம - கண்டவைகேட்டவைகண் முனட க்கின் றவை, பிறந்தபினிறந்தவைபிறங்குமார்த்தர்க்கே, இவ்விதியால் அறி யோமென்றார்கள்] (கருத்து) மன்மதனை அறியோமென்றார்கள் என்ப தாம். (௱௯)

மங்கையர்நிறையுநாணுங்கவர்ந்திடவனப்புவாய்ந்த
விங்கிவன்றன்னைஞாலமின்புறப்படைத்திலானேற்
றிங்களங்கண்ணிவேய்ந்தசெஞ்சடைக்கடவுளெங்ஙன்
பைங்கழைமதனைக்கொன்றபடுபழிதீருமாறே.

(இ-ள்) மங்கையர்-மாதர்களின்—நிறையும்-கற்பையும்—நாணும்- நாணையும்—கவர்ந்திட - கொள்ளையிடத்தக்க—வனப்புவாய்ந்த - அழகு பெற்ற—இங்கு - இவ்விடத்து—இவன்றன்னை - இப்புருடனை—ஞால ம் - உலகம்—இன்புற - இன்பத்தையடைய— படைத்திலானேல்- சி ருட்டியாதிருப்பானேல், திங்களங்கண்ணிவேய்ந்த-மூன்றாம்பிறையை த்தரித்த—செஞ்சடைக்கடவுள் - சிவந்தசடாபாரத்தையுற்ற பரமசிவன் —பைங்கழை -பசியகருப்புவில்லேந்திய—மதனைக்கொன்றமன்மதனை க்கொன்ற—படுபழி - கொலைபழி—தீருமாறு - தீரும்விதம்—எங்ஙன்- எப்படி—எ-று. உலகமென்பது அதிலிருக்கும் உயிருக்காதலால் ஆகு பெயர் (கருத்து) சிவன்மன்மதனைக்கொன்றபழிதீர இவனைப்படைத்தா ன்-எ-ம். (௱௰)

மாயிருஞாலத்தானேன்மண்ணினிற்பொலிந்ததில்லை
மீயுயர்விசும்புளானேல்விசும்பினிற்சிறந்ததுண்டோ
பாயொளிபரிதிவேலான்பாதலத்துள்ளானெனின்
மேய்கீழுலகேயெல்லாவுலகினுமேலதாமால்

(இ-ள்)பாய் - தாவுகின்ற—ஒளி - காந்திபொருந்தி—பரிதி - சூரிய னையொத்த—வேலான் - வேற்படையையுடையவிப்புருடன்—மா - மக த்தாகிய—இரு - பெரிய—ஞாலத்தானேல் - பூவுலகிலிருப்பவனாகில் —மண்ணினில் - அப்பூவுலகைவிட—பொலிந்தது - பிரகாசமுள்ளதா கியவுலகம்—இல்லை - இல்லை—மீ - மேலாக—உயர் - உயர்ந்த— விசும் புளானேல் - தெய்வலோகத்தானாகில்—விசும்பினில் - அத்தெய்வலோ கத்தைக்காட்டிலும்—சிறந்தது - சிறக்கப்பெற்றதாகியவுலகம்—உண் டோ - இல்லை—பாதலத்துள்ளானெனில் - கீழுலகத்திருப்பவனாகில், மே ய - பொருந்திய—கீழுலகே - பாதாளவுலகமே—எல்லாவுலகினும் - உ



லகங்களைத்தினுக்கும்—மேலதாம் - மேற்பட்டதாகும்—எ-று. (கரு த்து) இவனிருக்குமுலகமெதுவோ அதுவேஎவ்வுலகினுஞ் சிறப்புற்ற துஎன்பதாம். (௱௰௧)

யாவனோவிவனென்றெண்ணியிருநிலத்திலங்குபைம்பொற்
✻ சேவடிபொருந்துநீராற்றேவரினொருவனல்லன்
றூவியஞ்சிறையவன்னஞ்சொல்லியவனப்புவாய்ந்த
காவலனுங்கொலென்னக்கருதியொன்றுரைக்கலுற்றார்.

(இ-ள்)யாவனோவிவனென்று- இவ்னெவனோவென்று—எண்ணி- சிந்தித்து—இருநிலத்து - பெரியபூமியிடத்து—இலங்கு - பிரகாசிக்கி ன்ற—பைம்பொன் - பசியபொற்கழலணிந்த—சேவடி - சிவந்தபாதங் கள்—பொருந்துநீரால் - பொருந்துகின்றதன்மையால்—தேவரின் - தே வர்கூட்டத்துள்—ஒருவனல்லன் - ஒருத்தனல்லனாகும்—தூவி- தூவி யென்னும்பெயரைத்தரித்த—அம் - அழகிய—சிறைய - சிறகுள்ள— அன்னம் - அன்னப்புள்ளானது—சொல்லிய - முன்புசொல்லிய—வ னப்புவாய்ந்த - அழகுபெற்ற—காவலனுங்கொலென்ன - அரசனாகு மென்று—கருதி - நினைத்து—ஒன்று - ஒருவார்த்தை— உரைக்கலுற் றார் - தோழிகள்சொல்லத்தொடங்கினார்கள் —எ-று- ( ✻ அகப்பொரு ள்விளக்கம் - எழிதியல்லியுந்தொழில்புனைகலனும்-வாடியமலருங் கூ டியவண்டு - நடைபயில்அடியும் புடைபெயர்க்கண்ணும் - மச்சமும்பிறவு மவன்பாணிகளுங் - கச்சமில்லையங் கடிவரைவாகும் -. இவ்விதியால் நிலந் தோயும்பாதங்கண்டு தேவனல்லனென்னல்] (கருத்து) இவன்தேவனல் லனென்று சொல்லத்தொடங்கினார்களென்பதாம். (௱௰௨)

கலைநிலாத்தவழுமாடக்கடிநகர்கடந்துபோந்த
சிலைவலாய்நீயிங்கெய்தச்சிறப்புடைப்புவனந்தம்மிற்
பொலிவிழந்திருந்ததெந்தப்புவனநீபொருளதாக
நலனுறப்புனிதமாயதெப்பெயர்நவிற்றுகென்றான்

(இ-ள்) கலைநிலா - கலைகளையுடைய சந்திரன்—தவழும் - தவழுகின் ற—மாடம் - உப்பரிகைகளையுடைய—கடிநகர் - காவலைப்பெற்ற நகரத் தை—கடந்துபோந்த-கடந்து வந்த—சிலைவலாய் - விற்றொழிலில் வல் லவனே—நீயிங்கெய்த - நீயிங்கேவர—(அதனாலே) சிறப்புடை - சிறப் பினையுற்ற—புவனந்தம்மில் - தேசங்களுக்குள்ளே—பொலிவிழந்து- அழகிழந்து—இருந்தது - இருக்கப்பெற்றது—எந்தப்புவனம் - எந்தத் தேசம்—நீபொருளதாக - நின்னைப்பொருளாகவுடைய—நலனுற - நன்மைபொருந்திய—புனிதமாயது - பரிசுத்தமானது—எப்பெயர் - எ ந்தப்பெயர்—நவிற்றுகென்றார்- (தோழிகள்) சொல்லென்றார்கள்-எ-று (கருத்து) தோழிகள் நளனைப்பார்த்து உமது பேரென்ன ஊரென்ன எ ன்றார்கள் என்பதாம். (௱௰௩)

காளமர்கரியகூந்தற் கன்னியரிவ்வாறோதத்
தேளிமிர்தெரியல்வேய்ந்துசிலைத்தழும்பிருந்ததோளான்

பானலங்கடந்தின்சொற்பைந்தொடிவதுவைவேட்டு
வானவர்விடுத்ததூதன்யானெனவழங்கலுற்றான்.

(இ-ள்.) நாணமர் - வாசனைபொருந்திய—கரியகூந்தல் - கறுத்தகூந்தலையுடைய—கன்னியர் - மாதர்கள்—இவ்வாறோத-இப்படிச்சொல்ல—தேன்-வண்டுகள்—இமிர் - ஒலிக்கின்ற—தெரியல்-மாலையை—வேய்ந்து - தரித்து—சிலைத்தழும்பு - விற்றழும்பு—இருந்த-தங்கிய—தோளான் - தோளையுடையநளன்—பால் - பாலினது—நலங்கடந்த - நலத்தைச்செயித்த—இன்சொல் - இனியசொல்களுள்ள—பைந்தொடி - தமயந்தி—வதுவைவேட்டு - விவாகத்தையிச்சித்து—வானவர் - தேவர்களால்—விடுத்த - விடுக்கப்பட்ட—தூதன்யானென - தூதுவன்யானென்று—வழங்கலுற்றான் - சொல்லத்தொடங்கினான்—எ-று. (கருத்து) நளன்தேவர்கள்விட்டதூதன்யானென்றான் என்பதாம். (௩௰௪)

ஐந்தருநீழல்வேந்தனார்கலிக்கிறைவன்வெய்ய
செந்தழற்கடவுடென்பாற்றிசையுறைதருமனின்னோர்
பைந்தொடிநின்னைவேட்டுப்படைமதன்பகழிபாயச்
சிந்தனைபிறிதாய்மாழ்கித்தெருமரலெய்துகின்றார்.

(இ-ள்.) ஐந்தருநீழல்வேந்தன் - இந்திரன்—ஆர்கலிக்கிறைவன் - வருணன்—வெய்ய-கொடிய—செந்தழற்கடவுள் - அக்கினிபகவான்—தென்பாற்றிசையுறை - தெற்குத்திக்கிலிருக்கின்ற—தருமன்-யமன்—இன்னோர் - ஆகிய இந்நால்வரும்—பைந்தொடி - தமயந்தி—நின்னை வேட்டு - உன்மேல்விருப்புற்று—படை-சேனைகளையுடைய—மதன்பகழி - மன்மதபாணங்கள்—பாய - தங்கண்மேற்றைக்க—(அதனால்) சிந்தனை - மனம்—பிறிதாய் - வேறுபட்டு—மாழ்கி - மயங்கி—தெருமரல் - சுழற்சியை—எய்துகின்றார் - அடைகின்றார்கள்—எ-று. (கருத்து) இந்திரன் வருணன் அக்கினி யமன் இந்நால்வரும் தமயந்தியேஉன்னை விரும்பி மன்மதபாணத்தால் வருந்துகின்றார்கள் என்றான்நளன் என்பதாம். (௩௰௫)

இங்கிவர்தம்மையாசைக்கிறைவரென்றறைவதெல்லாந்
தங்கிய * திசையின்பேராற்சாற்றியமாற்றமன்றே
கொங்கவிழ்குழையிற்றாவிக்குமிழ்மிசைமறியும்வேற்க
ணங்கலுழ்மேனியாய்நின்னாசையால்வந்ததாமால்.

(இ-ள்.) இங்கு-இவ்விடத்தில்—இவர்தம்மை- இந்நால்வரையும்—ஆசைக்கிறைவரென்று - ஆசைக்கரசனென்று—அறைவதெல்லாம் - சொல்லுவதனைத்தும்—தங்கிய - இவர்களிருக்கின்ற—திசையின்பேரால்-திக்கினதுபெயரினாலே—சாற்றிய-சொல்லப்பட்ட—மாற்றமன்று - சொல்லன்றாகும்—கொங்கு-வாசனை—அவிழ் - விரிகின்ற—குழையில் - காதணியில்—தாவி-பாய்ந்து—குமிழ் - குமிழம்பூவினது—மிசை- மேற்பக்கத்தில்—மறியும் - மீளுகின்ற—வேற்கண் - வேல்போன்றகண்களையுற்ற—அம் அழகானது—கலுழ்-ஒழுகுகின்ற—மேனியாய் - வடிவையுடையதமயந்தியே—நின் - உன்மேல்வைத்த—ஆசையால்-ஆசையினால்—வந்ததாம் - வந்ததாகும்—எ-று. (* குவலயாநந்தம் - உறுப்பியல் - விண்மண்புனலனல்வாயுதிசைமனங் - கால்மோடான்மாவென்பதுபெகுளிடம்- இவ்விதியால்திசை இடப்பொருளென்றறிக) (கருத்து) தமயந்தியே இந்நால்வரும்உன்மேல் வைத்தஆசையினாலே ஆசைக்கிறைவரென்றுபேர்பெற்றார்கள் என்பதாம். (ஆசையென்பது-திசை-பொன்-அம்பு.) (௩௰௬)



பற்றியகாமத்தீயாற்பைம்பொனாட்டமரர்க்கெல்லாங்
கொற்றவன்வருந்தாவண்ணங்கொய்துகொய்தணையிற்சேர்த்தே
யுற்றவர்வறுமை தீர்க்குமுயர்சினைத்தருக்களோர்ந்து
நற்றளிரின்மையாகிநல்குரவடைந்தமாதோ.

(இ-ள்) பை-பசிய—பொன்னாடு - பொன்னுலகத்திலிருக்கின்ற—அமரர்க்கெல்லாம் - தேவர்களெவர்க்கும்—கொற்றவன்- அரசனாகிய இந்திரன்—பற்றிய - தன்னைப்பற்றிய—காமத்தீயால்-காமாக்கினியால்—வருந்தாவண்ணம் - வருந்தப்படாவிதம்—உற்றவர் தம்மையடைந்தவர்களுடைய—வறுமை - இல்லாமையை—தீர்க்கும் - நீக்கும்—உயர்-உயர்ந்த—சினை - கிளைகளையுற்ற—தருக்களோர்ந்தும் - பஞ்சதருக்களும்—கொய்துகொய்து - பறித்துப்பறித்து—அணையிற்சேர்த்து - படுக்குமெத்தையிற்சேர்த்து—(அதனால்)நல் - நல்ல—தளிர் - தளிர்களை—இன்மையாகி - இல்லாமையாய்—நல்குரவு - வறுமையை—அடைந்த - சேர்ந்தன—எ-று.(கருத்து) இந்திரன் உன்மேல்விருப்புற்றடைந்த காமந்தணிக்கும்பொருட்டைந்தருக்களுந்தளைகளிழந்தனவென்பதாம். ()

கடிமலர்க்கூந்தனின் மேற்காதன்மீதூர்கின்ற
வடுதொழிற்கூற்றுமஞ்சவடர்கின்றனங்கன்வெய்ய
வடவையோடிகலுமுந்நீர்க்கிறைவையும்வருத்தியாவுஞ்
சுடுதழற்கடவுண்மீதுஞ்சுட்டதுகாமத்தீயே.

(இ-ள்.) கடி - வாசனைபொருந்திய—மலர் -மலரையணிந்த—கூந்தல் - அளகபாரத்தையுற்றதமயந்தி—நின்மேல் - உன்னிடத்தில்—காதல்-ஆசை—மீதூர்கின்ற - அதிகரிக்கவிருக்க—அடுதொழில் - கொல்லுந்தொழிலையுடைய—கூற்றும் - யமனும்—அஞ்ச - பயங்கொள்ள—அநங்கன்-மன்மதனானவன்—அடர்கின்றான்-நெருங்குகின்றான்—வெய்ய - கொடிய—வடவையோடு - வடவைத்தீயுடனே—இகலும் - பகைகொள்ளும்—முந்நீர்க்கிறையையும் - கடற்கரசனாகிய வருணனையும்—வருத்தி - வருத்தப்படுத்தி—யாவும் - எவற்றையும்—சுடு - சுடுகின்ற—தழற்கடவுண்மீதும்-அக்கினிபகவான்மேலும்—காமத்தீ- காமாக்கினி—சுட்டது - சுட்டது—எ-று.(கருத்து)தமயந்தீ யைப்பார்க்கினும் காமத்தீகொடிதென்பதாம். (௩௰௮)

முருக்கிதழனையவாயின்முகிழ்முலைவேட்டனன்றே
செருக்கிளரநங்கன்வாளிற்செழுமலர்வருத்தவாடி.

யிருத்தலாற்பழிச்சுகின்றேரோட்டவிழ்நறியபோதா
லருச்சனைபுரியுந்தோறுமஞ்சுவரமரர்மாதோ.

(இ-ள்) முருக்கு-முருக்கும்மலரையொத்த—இதழ் - அதரத்தையு டைய—அணங்கனாய் - தமயந்தி—நின்-உன்—முகிழ் - அரும்பையொத்த—முலை - ஸ்தனங்களை—வேட்டனாய் - விரும்பியபொழுதே—செரு - போர்த்தொழிலில்—கிளர்-கிளர்ச்சியுள்ள—அநங்கன் - மன்மதனுடைய—வாளி - பாணங்களாகிய—செழுமலர் - செழுமையுள்ள மலர்கள்—வருத்த - வருத்தஞ்செய்ய—வாடி - அவைகளால் வாட்ட முற்று—இருத்தலால் - இருக்கையினால்—பழிச்சுகின்றார் - பரவுகின்றவர்கள்—ஏடவிழ் - இதழ்கள்விரிந்த—நறியபோதால் - நல்லமணமுள்ளமலரால்—அருச்சனைபுரியுந்தோறும் - பூசைசெய்யுந்தோறும்—அமரர் - (அருகிலிருக்குந்)தேவர்கள்—அஞ்சுவர் - பயங்கொள்ளுவார்கள் - எ-று. (கருத்து) இந்திரன் மன்மதபாணத்தால் வருந்தியிருத்தலால் அவனைக் காணவருபவர்மலரா லருச்சிக்குந்தோறும் அப்பாண மென்று தேவர் பயப்படுவர்என்பதாம். (௱௰௯)

இன்னணந்தேவர்மாழாந்திருநிலவரைப்பிற்போந்துன்
பொன்னவிர்நிலையார்ந்தபுணர்முலைப்போகம்வேட்ப
முன்னமெத்தவஞ்செய்தாய் கொலிவை வதேமுறைமை யென்று
கன்னல்வில்லொளித்துநின்றகாமனேயனையநீரான் [ன்

(இ-ள்.) இன்னணம் - இவ்விதம்—தேவர் - தேவர்கள்—மாழாந்து - மயங்கி—இரு - பெரிய—நிலவரைப்பிற்போந்து - பூவுலகத்தில்வந்து—உன் - உனது—போன் - பொன்போலும்—அவிர் - விளங்குகின்ற—நிலையார்ந்த - தேமலானிறையப்பெற்ற—புணர் - ஒன்றோடொன்று நெருங்கிய—முலை - ஸ்தனங்களினுடைய —போகம் - போகத்தை—வேட்ப - விரும்ப—முன்னம் - முற்பிறப்பில்—எத்தவஞ்செய்தாய்கொல் - என்னதவஞ்செய்தனையோ—இவைவதே - சம்மதிப்பதுவே—முறைமையென்றான் - கிரமமென்றான்—கன்னல்வில் - கருப்புவில்லை—ஒளித்துநின்ற - மறைத்துவைத்துநின்ற—காமனேயனைய - மன்மதனையொத்த—நீரான் - தன்மையுள்ளநளமகாராசன் —எ-று. (கருத்து) இந்திரன் முதலியோர் உன்னையிச்சிக்க நீமுன்னென்ன தவஞ் செய்தாயோ அவர்களுக்குச்சம்மதிப்பதே தகுமென்றான்-எ-ம். (௱௨௰)

என்றிவன்மொழிதலோடுமினையனேநளனென்றெண்ணி
மன்றலங்குழலாணாணிவருத்தமோடெருத்தங்கோட்டி
நின்றனள்மருங்குசூழ்ந்ததோழியர்நிடதங்காக்கும்
வென்றிகொள்சுடர்வேல்வேந்தற் கெதிர்மொழிவிளம்ப லுற்றார்.

(இ-ள்.)என்று -இப்படியென்று—இவன் -இந்நளன்—மொழிதலோடும்-சொல்லியவளவில்— இனையனே -இவனே, நளனென்றெண்ணி - நளனென்றுநினைத்து—மன்றலங்குழலாள் - தமயந்தி—நாணி - நாணமடைந்து—வருத்தமோடு -வருத்தத்துடனே —எருத்தங்கோட்டி - தலையைவளைத்துக்கொண்டு—நின்றனள் - நின்றாள்—மருங்கு - பக்கத்தில்—சூழ்ந்த - சுற்றியிருக்கின்ற—தோழியர் - தோழிகள்—நிடதங்காக்கும் - நிடததேயத்தைப்புரக்கின்ற—வென்றிகொள் - வெற்றியைக் கொண்ட—சுடர் - கிரணங்களையுடைய—வேல் - வேற்படையையேந்திய—வேந்தற்கு - நளமகாராசனுக்கு—எதிர்மொழி - எதிருத்திரத்தை—விளம்பலுற்றார் - சொல்லத்தொடங்கினார்கள்—எ-று. (கருத்து) தமயந்தி இவனேநளனென்று நாணிநின்றாள் நளனுக்குத்தோழியர்சொல்லத்தொடங்கினார்கள் என்பதாம். (௱௨௰௧)

ஆற்றல்சானளனேயன்றி யாருயிர்பிறிதின்றெண்ணும்
வேற்றடங்கண்ணினுடன் மெய்பதைத்தாவிசோரச்
சாற்றியமாற்றந்தன்னாற்றழலுமிழ்தறுகட்பேழ்வாய்க்
கூற்றுவன்றூதனென்றுகூறியதியற்கையாமே.

(இ-ள்) ஆற்றல்சால் - வலிமைமிக்க—நளனேயன்றி - நளமகாராசனையல்லாமல்—ஆருயிர் - நிறைந்தஆவியானது—பிறிதின்றெனினும் - வேறொன்றில்லையென்கின்ற—வேற்றடங்கண்ணினுடன் - தமயந்தியினது—மெய்பதைத்து - தேகநடுங்கி—ஆவி - உயிரானது—சோர - சோர்வையடைய—சாற்றிய - நீசொல்லிய—மாற்றந்தன்னால் - சொல்லினால்—தழலுமிழ - நெருப்பையுமிழ்கின்ற—தறுகண் - கொடியகண்களையும்—பேழ்வாய் - பெருவாயையுமுற்ற—கூற்றுவன்றூதனென்று - யமதூதனென்று கூறியது - (முன்) சொல்லியது—இயற்கையாம் - (உனக்குத்) தகுதியாகும்—எ-று. (கருத்து) நளனே தன்னுயிரென்றுநினைத்திருக்குந்தமயந்தி உயிர்சோரநீ சொல்லியசொல்லால் யமதூதனென்பதுசரியே என்றார்கள் என்பதாம். (௱௨௰௨)

வையகமொருகோலோச்சிவான்புகழ்*நிடதங்காக்கு
மையனைமணப்பதன்றியரிமதர்நெடுங்கட்செவ்வாய்த்
தையல்வேறொருவர்நாமஞ்சாற்றினுமாற்றளாகி
வெய்யசெந்தழலின்மூழ்கிவிளிவதற்கையமின்றே.

(இ-ள்.) வையகம் - பூவுலகத்தை—ஒருகோலோச்சி - தனிச்செங்கோல்செலுத்தி—வான்புகழ் - மிகுந்தபுகழையுடைய— நிடதங்காக்கு - நிடததேசத்தைப்புரக்கும்—ஐயனை -நளமகாராசனை—மணப்பதன்றி - விவாகஞ்செய்துகொள்வதல்லாமல்—அரி - செவ்வரிபரந்த—மதர் - களிப்பையுடைய—நெடுங்கண் - நெடியகண்களையும்—செவ்வாய் - சிவந்தவாயினையுமுடைய—தையல் - தமயந்தியானவள்—வேறொருவர் நாமம் - வேறொருவர்பெயரை—சாற்றினும் - சொல்லினும்—ஆற்றளாகி - பொறுக்கமாட்டாதவளாய்—வெய்ய - கொடிய—செந்தழலின் - நெருப்பினில்—மூழ்கி - முழுகி—விளிவதற்கு - இறப்பதற்கு—ஐயமின்று - ஐயமில்லை—எ-று. * குவலயானந்தம், ஒருபொருள்விளக்குமிடுகுறிகாரண - மாகிய வினைமுதல்விசேடியமாகும் - இவ்விதியால்நிடத

ங்காக்குமையன் விசேடியமாம் (கருத்து) தமயந்திதனனைவிவாகஞ்செய்வதன்றி வேறொருவர்பெயனைச்சொன்னாலுமக்கினியில் வீழ்ந்திறப்பான் என்பதாம். (௱௨௩)

என்றவர்மொழியவேந்தனியம்புவானெரியில்வீழ்ந்து
பொன்றிலெங்கனைவிதன்னைப்புணர்ந்ததாம்புகன்றசெந்தீ
யன்றிவார்புனலுள்வீழ்ந்துள்ளாருயிர்விடுத்தாலெனுந்
துன்றுசீர்வருணன்றன்னைத்தோய்ந்ததாய்விளையுமன்றே.

(இ-ள்) என்று - இப்படியென்று—அவர்மொழிய - அந்தத்தோழிகள்சொல்ல—வேந்தன்-நளமகாராசன்—இயம்புவான் - சொல்லுவான்—எரியில் வீழ்ந்துபோன்றில் - நெருப்பில்வீழ்ந்திறந்தால்—வெங்கனலிதன்னை - அக்கினிபகவானை, புணர்ந்ததாம் - கூடியதாகும், புகன்ற (இப்பொழுது) சொல்லிய—செந்தீயன்றி - அக்கினியல்லாமல்—வார் - நெடிய—புனலுள்வீழ்ந்து - நீரிலேவிழுந்து—உள் - உள்ளே—ஆர் - நிறைந்த—உயிர்விடுத்தாலெனும் - உயிரைவிட்டாளானாலும்—துன்று - நெருங்கிய—சீர்-சிறப்பையுடையை—வருணன்றன்னை - கடலரசனை—தோய்ந்ததாய்விளையும் - கலந்ததாகிவிளையும்—எ-று. (கருத்து) அக்கினியில்வீழ்ந்திறந்தால் அக்கினியைச்சேர்ந்ததாயிருக்கும் நீரில்வீழ்ந்திறந்தால் வருணனைச்சேர்ந்தாயிருக்கும்-எ-ம். (௱௨௪)

அன்றியுங்கனலிசான்றாயல்லதுவதுவையாற்றற்
கொன்றுமோவருணனொவ்வாது தகமோடளிக்குந்தூய
மன்றலவ்வாறுமுற்றும்வானவரருளில்லாமற்
றுன்றுநீர்ப்புவியில்யார்க்குஞ் சூழ்வினைமுடிக்கலாமோ.

(இ-ள்,) அன்றியும் - அப்படியல்லாமலும்—கனலிசான்றாயல்லது - அக்கினிசாட்சியல்லாமல், வதுவையாற்றற்கு - விவாகஞ்செய்வதற்கு—ஒன்றுமோ - பொருந்துமோ—வருணன் - கடலரசன்—ஒவ்வாது - சம்மதியாமல்—உதகமோடளிக்கும் - நீரோடுகொடுப்பதாகிய—தூய - சுத்தமாகிய—மன்றல் - விவாகம்—எவ்வாறுமுற்றும் - எவ்வழிமுடியும்—(ஆதலால்) வானவர் - தேவர்களுடைய—அருளில்லாமல் - கிருபையில்லாமல்—துன்றுநீர் - கடல்சூழ்ந்த—புவியில் - பூமியிலே—யார்க்கும் - எப்பேர்ப்பட்டவர்களுக்கும்—சூழ்வினை - நினைக்கப்பட்ட கருமங்களை—முடிக்கலாமோ - முடிக்கக்கூடுமோ—எ-று. (கருத்து) எப்படிப்பட்டவர்க்கும் தேவர்கருணையில்லாமல் விவாகமுடியாது இதற்கிவர்களருள்வேண்டுமென்றான் என்பதாம். (௱௨௫)

* வேயினைப்பழித்தமென்றோள் வேற்றடங்கண்ணினாடனையபோழகுமாந்தரிருகணானோக்கவற்றோ
தீயுமிழ்வைரவொள்வாளேந்தியதேவர்கோமா
னாயிரங்கண்களாலுநோக்குதற்கமைந்ததன்றே.

(இ-ள்) வேயினை - மூங்கிலை—பழித்த—நிந்தித்த—மெல் - மெல்லிய—தோள்-தோளையுடைய—வேற்றடங்கண்ணினாட்ன் தமயந்தியினுடைய



த்து—ஏய - பொருந்திய—பேழகு - மிகுந்த அழகானது—மாந்தர் - மனிதரின்—இருகணால் - இரண்டுவிழிகளால்—நோக்கவற்றோ - பார்க்கவல்லதா—தீயுமிழ் - நெருப்பையுமிழ்கின்ற—வைரவொள்வாள் - வச்சிராயுதத்தை—ஏந்திய - தாங்கிய—தேவர்கோமான் - இந்திரனானவன்—ஆயிரங்கண்களாலும் - ஆயிரம்விழிகளாலும்—நோக்குதற்கு - பார்க்கும்பொருட்டு—அமைந்தது - பொருந்தியதாகும்—எ-று. [* அகந்தியம் - பலவகையுவமமும்பண்புமுடையாய - கலனுறவுறைக்கி னாலையில்விசேடமாம் - இவ்விரியால்வேயினைப்பழித்தமென்றோள்விசேடமாம் (கருத்து) இந்திரன் ஆயிரங்கண்களாற்பார்த்தற்கமைந்த தமயந்தியழகை மனிதர்களிருகண்களாற்பார்த்தல் பயன்படாது என்பதாம்.

வெந்திறற்களிநல்யானைவிதர்ப்பர்கோனளித்தமாதை
தந்துயிரளித்தியென்னத்தனிப்பெருவிசும்புகாக்கு
மிந்திரன்கேட்டபோதிலெண்ணியவனைத்துநல்கு
மைந்தருவழங்கினும்மாலன்றெனமறுக்கலாமோ,

(இ-ள்) தனி - ஒப்பற்ற—இருவிசும்பு - பெரியவிண்ணுலகத்தை—காக்கும் - காக்கின்ற—இந்திரன் - இந்திரனானவன்—வெந்திறல் - வெவ்விய வலிமைபெற்ற—களி - களிப்புள்ள—நல் - நல்ல—யானையானையையுடைய—விதர்ப்பர்கோன் - வீமனானவன்—அளித்த - பெற்ற—மாதை - தமயந்தியை—தந்து - கொடுத்து—உயிர் - என்னுயிரை—அளித்தியென்ன - காப்பாற்றென்று—கேட்டபோதில் - கேட்டாலப்பொழுது—எண்ணியவனைத்தும் - நினைத்தவைகளையெல்லாம்—நல்கும் - தருகின்ற—ஐந்தரு - பஞ்சதருக்கள்—வழங்கின் - கொடுத்தால்—மால் - உங்களால்—அன்றெனா - அன்றென்று—மறுக்கலாமோ - மறுக்கக்கூடுமோ—எ-று. (கருத்து) இந்திரன் ஐந்தருக்களைக்கொடுத்துத் தமயந்தியைத்தாவென்றால் உங்களால் மறுக்கக்கூடுமோ-எ-ம்.

என்றிவன்புகன்றமாற்றமிருசெவிவெதுப்பக்கேட்டு
நின்றுளம்பதைப்பவாடிநெட்டுயிர்ப்போடுஞ்சோரு
மன்றலங்குழலினாடன்மதர்நெடுங்கயற்கணாலி
குன்றெனப்பனைத்துவீங்குங்குவிமுலைவார்ந்தவன்றே.

(இ-ள்) என்று - இப்படியென்று—இவன் - இந்நளனானவன்—புகன்றமாற்றம் - சொன்னசொற்கள்—இருசெவி - இரண்டுகாதுகளையும்—வெதுப்ப - கடுதலைச்செய்ய—கேட்டு - அவைகளைக்கேள்விப்பட்டு—நின்று - நின்று—உளம் - மனமானது—பதைப்ப-பதைப்பவடைய—வாடி - வாட்டமுற்று—நெட்டுயிர்ப்போடும் - பெருமூச்சுடனே—சோரும் - சோர்வையடைகின்ற—மன்றலங்குழலினாடன் - தமயந்தியின்—மதர் - விருப்பையுடைய—நெடுங்கயற்கண் - நெடியகயல்போன்றகண்களினின்றும்—ஆலி - நீர்த்துளிகள்—குன்றெனா - மலைபோன்றுசொல்ல—பனைத்து - பருத்து—வீங்கும் - வீங்கிய—குவிமுலை - குவிந்தஸ்தனங்களின்மேல்—வார்ந்த - ஒழுகின—எ-று. (கருத்து) நளன் சொன்னசொல்லைத்தமயந்திகேட்டு அவளிருகண்ணீர்த்துளிகளிருமுலைமேல் விழுந்தன என்பதாம். (௱௨௭)

மாதுகண்பனிப்பநோக்கித்தோழியர்மாழாந்துள்ளம்
பேதுறவெய்திநின்றபெய்வளைத்துயரமெல்லாம்
தூதுநாம்விடுத்தவன்னஞ்சொல்லியதென்னிற்சற்று
மாதரமின்றியிவ்வாறுரைக்குமோவரசனென்றார்,

(இ-ள்) மாது - தமயந்தியின்—கண் - கண்கள்—பனிப்ப - நீரைச்சொரிய—நோக்கி - பார்த்து—தோழியர் - தோழிகள்—மாழாந்து - மயங்கி—உள்ளம் - மனமானது—பேதுறவெய்தி - கவலையடைந்து—நின்றபெய்வளை - நிற்கின்றதமயந்தியின்—துயரமெல்லாம் - துன்பமனைத்தையும்—தூது - தூதாக—நாம்விடுத்த - நம்மால்விடுக்கப்பட்ட—அன்னம் - அன்னப்பறவையானது—சொல்லியதென்னில் - சொல்லியிருந்தாலும்—சற்றும் - கொஞ்சமும்—ஆதரமின்றி - ஆசையில்லாமல்—இவ்வாறு - இப்படி—அரசன் - நளனானவன்—உரைக்குமோவென்றார் - சொல்லுவானோவென்றார்கள்—எ-று. (கருத்து) தோழிகள் தூதுசென்றவன்னம்தமயந்திதுயரத்தைச்சொல்லியிருக்குமானால் நளனிப்படிச்சொல்வானோ வென்றார்கள் என்பதாம். (௱௨௯)

இன்னணமணங்கனுமாயமுமிரங்கவேக்கி
மன்னனும்றிவுதீர்ந்துமனஞ்சிறிதயரும்வேலைப்
பொன்னிறப்பவளச்செவ்வாய்ப்பொற்புறுபசியமென்கூட்
டன்னமும்விசும்பினீங்கியவ்வழியடைந்ததன்றே.

(இ-ள்) இன்னணம் - இப்படி—அணங்கனும் - தமயந்தியும்—ஆயமும் - தோழிகளும்—இரங்கவேக்கி - வருந்துவதைப்பார்த்து—மன்னனும் - நளனும்—அறிவுதீர்ந்து - மதிமயங்கி—மனம் - மனமானது—சிறிது - கொஞ்சம்—அயரும்வேலை - தளர்வடையும்போது—பொன்னிறம் - பொன்போன்றநிறத்தையும்—பவளம் - பவளம்போன்ற—செவ்வாய் - சிவந்தவாயையும்—பொற்புறு - அழகான்மிகுந்த—பசிய - பசுமைபொருந்திய—மென்கூட்டு - மெல்லியவுச்சிக்கொண்டையையுமுடைய—அன்னமும் - அன்னப்பறவையும்—விசும்பினீங்கி - ஆகாயத்தினின்று நீங்கி—அவ்வழி - அந்தவிடத்தில்—அடைந்தது - வந்தது—எ-று. (கருத்து) இப்படித்தமயந்திமுந்தோழிகளும்நளனும் அறிவுகலங்கியிருக்கும்வேளையில் அன்னம்வந்தது என்பதாம். (௱௩௰)

எய்தியதூவியன்னமின்னகைப்பவளச்செவ்வாய்
மையவாங்கரியகூந்தல்வாண்முகமினிதுநோக்கி
நெய்தவழ்புலவுவைவேலிடநர்கோளிவனேயுள்ளத்
தையுறேல்கமலைப்போதிலமர்ந்திருமணங்குபோல்வாய்.

(இ-ள்.) எய்திய - அங்குவந்த—தூவி - இறகையுடைய—அன்னவு - அன்னமானது—இன்னகை - இனியநகையையும்—பவளச்செவ்வாய் - பவளம்போன்றசெவ்வாயையும்—மை - மேகங்கள்—அவாம - விரும்புகின்ற—கரியகூந்தல் - கறுத்தகுழலையுமுடைய (தமயந்தியினது)—வாள் - ஒளிபொருந்திய—முகம் - திருமுகத்தை—இனிதுநோக்கி இனிதாகப்பார்த்து—கமலப்போதிலமர்ந்திருக்கும் - தாமரைமலரிலிருக்குந்திருமாதுக்கும்—அணங்குபோல்வாய் - திருமாதுபோன்ற தமயந்தியே—நெய்தவழ - நிணந்தவழ்கின்ற, புலவு - புலானாற்றம்பொருந்திய—வைவேல் - கூரியவேலையேந்திய—இடநர்கோளிவனே - இவனேநளமகாராசன்—உள்ளத்து - மனத்தில்—ஐயுறேல் - ஐயப்படவேண்டாம்—எ-று. * அகத்தியம் - அவனிவனென்பது விஞவுத்தரமே-இவ்விதியால்தமயந்திமுன்கேட்டதற்கு விஞவுத்தரமாகிக (கருத்து) அன்னமானதுதமயந்தியைப்பார்த்து இவனே நளமகாராசனென்றது-எ-ம். ( )

மழைமதர்நெடுங்கட்செவ்வாய்வளர்முலைமடந்தாய்நின்மேல்
விழைவுகந்துரைத்தானல்லன்விண்ணவர்க்கிசைந்தமாற்றம்
பழுதுறுமென்னுமாற்றாற்பகர்ந்தனன்பரிதிவேலா
னழுதகங்குழைந்திடேலென்றன்பினாலறைந்ததன்றே

(இ-ள்.) மழை - குளிர்ச்சிபொருந்திய—மதர் - களிப்பையுடைய—நெடுங்கண் - நெடியகண்களையும்—செவ்வாய் - சிவந்தவாயையும்—வளர்முலை - வளர்கின்றதனங்களையுமுடைய—மடந்தாய் - தமயந்தியே—பரிதிவேலான் - நளமகாராசன்—நின்மேல் - உன்னிடத்தில்—விழைவுகந்து - ஆசைநீங்கி—உரைத்தானல்லன் - சொன்னவனல்லனும்—விண்ணவர்க்கு - தேவர்களுக்கு—இசைந்த - (அதின்பொருட்டு) சம்மதித்த—மாற்றம் - சொல்—பழுதுறுமென்னுமாற்றால் - பழுதாகுமென்கிறபடியால்—பகர்ந்தனன் - (இவ்வாறு) பேசினான்—(அதனால்) அழுது - நீயழுது—அகங்குழைந்திடேலென்று - மனங்குழையவேண்டாமென்று—அன்பினால் இருப்பத்தினால்—(அன்னம்) அறைந்தது - சொல்லியது—எ-று. (கருத்து) தமயந்தியேநளன்மேல்ஆசையையாதுசொன்னவனல்ல தூதுக்குப் பழுதில்லாமற்சொன்னான் அழாதேயென்று சொல்லிற்றென்பதாம். (௱௩௨)

வடுவகிரனையவுண்கண்மடந்தையோடிவ்வாறோதிக்
கடகளிறென்னநின்றகாளைதன்முகத்தைநோக்கா
வுடையபோறிவாற்காமமுள்ளமைத்தின்னகூறிற்
கொடிநெடுந்தாளைவேந்தேகோற்றொடியாற்றுங்கொல்லோ.

(இ-ள்) வடு - மாவடுவினது—வகிரனைய - பிளப்பையொத்த—உண்கண் - மையுண்டகண்களையுற்ற—மடந்தையோடு - தமயந்தியுடனே—இவ்வாறோதி - இவ்விதமாகச்சொல்லி—கடகளிறென்னநின்ற - மதயானையென்னும்படிநின்ற—காளைதன்முகத்தை - அரசனதுமுகத்தை—நோக்கா - பார்த்து—கொடிநெடுந்தாளைவேந்தே - நளமகாராசனே—உடையபோறிவால் - பேரறிவுடைமையால்—காமம் - ஆசையை—உள்ளமைத்து - உள்ளேயடக்கி—இன்னகூறில் - இப்படிப்பட்டவார்த்தைகளைப்பேசினால்—கோற்றொடி - தமயந்தி—ஆற்றுங்கொல்லோ - பொறுப்பாளோ—எ-று. (கருத்து) அன்னம் நளனைப்பார்த்துத்தமயந்தி இவ்வாறு சொன்னாற்பொறுப்பாளோ என்றது என்பதாம். (௱௩௩)

மாங்குயிற்குதலைப்பேதைமனமுறீயிவையுந்வண்ணந்
தீங்குறவுரைத்தவாறுந்தேவர்மற் * துணராதல்லை

நீங்கினியுரைப்பதென்னை யிவ்வயினிகழ்ந்தவெல்லா
மாங்கவர்தம்பாலேகியறைதியென் றறைந்ததன்னம்.

(இ-ள்) மாங்குயில்-மாமரத்திலிருக்குங்குயிற்சொல்லையொத்த — குதலை - மழலைச்சொல்லையுடைய — பேதைமனமும் - தமயந்தியினது மனமும் — நீயிவையுரைத்தவண்ணம்-நீசம்பாஷித்துவந்தபடி — ஈங்கு-இங்கு நீங்க — உரைத்தவாறும் - சொல்லியவிதமும் — தேவர் - தேவர்கள் — உணராரல்லர் - அறியாதவர்களல்லர் — ஈங்கு - இவ்விடத்தில் — இனியுரைப்பதென்னை - இனிப்பேசவேண்டுவதென்ன — இவ்வயின் - இவ்விடத்தில் — நிகழ்ந்தவெல்லாம் - நடந்தவையனைத்தையும் — ஆங்கவர்தம் பால்-அந்தேவரிடத்துக்கு — ஏகி - போய் — அறைதியென்று - நீசொல்லுவாயாகவென்று — அன்னம்-அன்னப்பறவை — அறைந்தது - சொல்லியது — எ-று. (*அருந்தியம்-திரிகாலமறிந்தெய்வதிவ்வியற்கை - இவ்வியால் எல்லாந்தேவர்களறிவார்கள்) (கருத்து) இங்குநடந்தவையெல்லாந்தேவர்களறிவார்கள்நடந்தபடிபோய்ச்சொல்லென்றது என்பதாம்.

அவ்வுரைகேட்டலோடுமடையலர்ச்செருக்கும்வேலான்
மவ்வலங்குழலினுடன் மனவலியினிதிறைந்து
செவ்விதின்மனமுங்கண்ணுந் தெரிவைமேற்றிட்டமாறுக்
பவ்வைகொள்வாயினீங்கிவிஞ்சையிற்கரந்துபோனான்.

(இ-ள்) அவ்வுரை - அந்தவார்த்தையை — கேட்டலோடும்-கேட்டவளவில் — அடையலர் - சத்துருக்களை — செருக்கும் - கொல்லுகின்ற — வேலான் - வேற்படையையுடையவனான — மவ்வலங்குழலினுடன்- தமயந்தியினது — மனவலி- நெஞ்சினதுவலிமையை — இனிதிறைந்து- இனிதினீந்து — செவ்விதின்-செம்மையுற — மனமும் - தன்மனத்தையும் — கண்ணும் - கண்களையும் — தெரிவைமேற்றிட்ட - அத்தமயந்தியின்மேலிருக்கவைத்து — மாறு - நீங்காத — கொளைகொள் -ஒளித்தலைக்கொண்ட — வாயினீங்கி - வாயிலைக்கடந்து — விஞ்சையின்-மந்திரத்தினால் கரந்துபோனான் - ஒளித்துச்சென்றான் — எ-று.(கருத்து) நளன்கண்ணுமனமுந்தமயந்தியிடத்திருக்க வுருவமறைத்து அப்பாகப்போனான் என்பதாம். (௱௩௫)

காரிகையுளமுநாணுங்கவர்ந்தனன்கரந்துபோய
மூரிவெஞ்சிலைக்கைவீரன்கடவுளர்முன்னரேகி
நேரிழைதன்பாற்றூதுபோயபினிகழ்ந்தவெல்லாஞ்
சோர்வுறாதுரைத்தான்தேவர் தோன்றல்பால் மகிழ்ச்சி கூர்ந்தார்-

(இ-ள்.) காரிகை-தமயந்தியின — உளமும்-மனத்தையும் — நாணும் - நாணையும் — கவர்ந்தனன் - கொள்ளைகொண்டவனாகி, கரந்துபோய - மறைந்துசென்ற — மூரி - வலிமைபெற்ற — வெஞ்சிலைக்கைவீரன் - நளமகாராசன் — கடவுளர்முன்னர் - தேவர்களெதிரே — ஏகி - சென்று — நேரிழைதன்பால்-தமயந்தியினிடத்தில்-தூதுபோயபின்-தூதுபோனபின்பு — நிகழ்ந்தவெல்லாம்-நடந்தவைகளனைத்தையும் — சோர்வுறாது குறைவுபடாமல் — உரைத்தான்-சொல்லினான் — தேவர் - தேவர்கள் — தோன்றல்பால்- அந்தநளமகாராசனிடத்தில், மகிழ்ச்சி கூர்ந்தார் - உவகையடைந்தார்கள் — எ-று-(கருத்து) நளன்தேவர்கள் முன்சென்றுதமயந்தி சொன்னவையெல்லாம் சொன்னான் தேவர்கள்நளனிடத்தில்மகிழ்ச்சிகூர்ந்தாரென்பதாம். (௱௩௬)



# நளன்றூதுப்படலம்.

முற்றிற்று.

உ

# சுயம்வரப்படலம்.

சுயம்வரமாவது அரசமங்கையானவள் தனக்குழுந்தோர்கள்தனை விழைந்துவந்த அநேக அரசர்களை, ஒருகாலத்தில் வருவிக்க அவரிற்றனக்கிசைந்த ஒருவனுக்குத்தானே மாலையிட்டுத் தலைவனாகக்கொள்ளுதலாம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னவைநிகழும்வேலையெழுகடல்வளைப்பின்மேவு
மன்னவர்குழாமும்விண்ணோர்தொகுதியுமணிச்செஞ்சூட்டுப்
பன்னகநாட்டுவேந்தர்வெள்ளமும்பரித்தேர்வீமன்
கன்னியம்புரிசைசூழ்ந்தகடிநகர்க்கெழுந்தவன்றே.

(இ-ள்.)இன்னவை-இப்படிப்பட்டவைகள் — நிகழும்வேலை-நடக்கின்றபொழுது — எழுகடல்வளைப்பின்மேவும் - ஏழுகடல்சூழ்ந்த தீவுகளிலிருக்கின்ற — மன்னவர்குழாமும்-அரசர்கூட்டமும் — விண்ணோர்தொகுதியும் - தேவர்கூட்டமும் — மணி- இரத்தினங்களாகிய, செஞ்சூட்டு-சிவந்தசூட்டையுடைய — பன்னகநாட்டு - நாகலோகத்துள்ள — வேந்தர்வெள்ளமும் - அரசர்கள்கூட்டமும் — பரித்தேர் - குதிரை கட்டிய தேரோனும் — வீமன் - வீமராசனது — கன்னி - அழிவில்லாத — அம்-அழகிய — புரிசைசூழ்ந்த - மதிலாற்சூழப்பட்ட — கடிநகர்க்கு - காவலுள்ளகுண்டினபுரத்துக்கு — எழுந்த - எழுந்தன — எ-று. (கருத்து) அரசர் கூட்டங்களும் தேவர் கூட்டங்களும் நாகலோகத்தரசர் கூட்டங்களுங் குண்டினபுரத்திற்கெழுந்தன என்பதாம். (௧)

பண்ணமைகலின்பாய்மாபசியபொற்கொடிஞ்சித்திண்டேர்
கண்ணழற்சீற்றத்துப்பிற்கடாம்பொழிகளிநல்யானை
மண்ணமைமுழவுத்திண்டோள்வாகைவேலுழவரீட்ட
மெண்ணிடவிடமொன்றின்றியெங்கணும்பரந்தவன்றே

(இ-ள்.) பண்ணமை-கல்லணை பமைந்த—கலினம்-கடிவாளம்பெற்ற—பாய்-தாவுகின்ற—மா - குதிரைகளும்—பசியபொன் - பசியபொன்னாற்செய்த—கொடிஞ்சி-மேன்மொட்டையுடைய—திண் - வலிமைபெற்ற—தேர் - தேர்களும்—கண்-கண்களில்—அழல் - நெருப்பும்—சீற்றத்துப்பின் - மிகுந்தகோபத்தைப்பொருந்திய—கடாம்பொழி-மதம்பொழிகின்ற—களிநல்யானை - களிப்புள்ளநல்யானைகளும் — மண்ணமை - ஒப்பனையமைந்த—முழவு-மத்தளம்போன்ற—திண்டோள்-வலிமைபெற்றபுயங்களையும்— வாகைவேல் - வெற்றிபெற்றவேலையுமுடைய—உழவரீட்டம்-காலாள்களின்கூட்டமும்—எண்ணிட - எண்ணுதற்கு—இடமொன்றின்றி - வெற்றிடமொன்றுமில்லாமல்— எங்கணும்-எவ்விடங்களிலும்—பரந்த - பரவின—எ-று. (கருத்து) குதிரைகளும்-தேர்களும் - யானைகளும் - காலாள்களுமெங்கும்பரவின என்பதாம். (௨)

* கொய்யுளைக்கலினமாவின்குரத்துகளெழுந்துவிம்மி
வையகமுழுதுஞ்சூழ்போய்மறிகடற்கிடங்குதூர்த்து
மொய்பெருஞ்சலத்தோடுமுரணியெண்டிசையுங்காக்குந்
தொய்யின்மாமுகத்தயானைக்கவுட்குழிதூர்த்தவன்றே

(இ-ள்.) கொய்-கொய்யப்பட்டவுளை - புறமயிர்பொருந்திய — கலினமாவின் - கடிவாளம்பூண்டகுதிரைகளின்—குரத்துகள் - குளம்புபட்டுண்டாகும்புழுதிகள்—எழுந்து - எழும்பி—விம்மி-பரவி—வையகமுழுதும்-பூவுலகமுழுவதும்—சூழ்போய் - வளைந்துகொண்டு—மறிகடல் - மடங்குகின்ற அலைகளையுடையகடலாகிய—கிடங்கு - அகழை—தூர்த்து - தூர்த்துவிட்டு—மொய்பெருந்து-போர்பெருமல்— அசலத்தோடுமுரணி - குலகிரியுடன்மாறுகொண்டு—எண்டிசையுங் காக்கும்-திசைகளெட்டையும்பாதுகின்ற—தொய்யில் - சிந்தூரமெழுதப் பெற்ற—மா - மகத்தாகிய—முகத்தயானை-முகத்தையுடையயானைகளின்—கவுட்குழி-கன்னத்துளைகளை—தூர்த்த-தூர்த்தன—எ-று. * தொன்னூல்விளக்கம்-சாதிமிலவிலகிறந்தகுறாளிராசிகோ-ளோதினாறுமொவ்வொருபாவிற்றே, ☞ யாப்பருங்கல மேற்கோள் ஃ-வெண்பாமுதலா நால்வகைப்பாவு-மெஞ்ஞானற்பால் வருணைக்குறிய பாவினத்தியற்கை யுமதனோறற்றே - இவ்விதியால்இச்செய்யுளாசிரியவிருத்தம் - அரசசாதி (கருத்து) குதிரைகளின் குளம்பாலுண்டாகும் புழுதிகள் கடலையுந் தூர்த்து-அட்டகஜங்களின்கவுட்குழிகளையுந் தூர்த்தனவென்பதாம். (௩)

* மண்ணகவரைப்பின்வேந்தர்வரைப்புயத்தெழுசாந்தம்
விண்ணகத்தமரர்மார்பங்கமழ்ந்தனவிண்ணோர்வேய்ந்த
தண்ணறவொழுகுமன்றற்றருமலர்பசும்பொற்றுகள்
கண்ணகன்ஞாலங்காக்கும்வேந்தர்மெய்கமழ்ந்தமாதோ



(இ-ள்) மண்ணகவரைப்பின் - பூவுலகத்திடத்திருக்கின்ற—வேந்தர் - அரசர்களின்—வரைப்புயத்து - மலைகளையொத்ததோள்களில்—எழுது - தாரியக்கோலாற்றீட்டிய—சாந்தம் - சந்தனங்கள்—விண்ணகத்து - ஆகாயத்திடத்திருக்கின்ற—அமரர் - தேவர்களது—மார்பம் - மார்பிலே—கமழ்ந்தன - மணந்தன—விண்ணோர் - தேவர்கள்—வேய்ந்த-தரித்த—தண் - குளிர்ச்சிபொருந்திய—நறவொழுகு - தேனொழுகுகின்ற—மன்றல் - வாசனைபொருந்திய—தருமலர் -பஞ்சதருக்களினுடையமலர்களின்—பொற்றுகள் - மகரந்தங்கள்—கண்ணகல்-இடமகன்ற—ஞாலங்காக்கும்,- பூமியைப்பாதுகின்ற—வேந்தர்மெய் - அரசர்களுடேகத்தில்—கமழ்ந்த - மணந்தன—எ-று, * தருக்கசங்கிரகம்-கு-ரு-மண்ணைப்பற்றிவருநாற்றமுடைத்தாய் - நிலைநிலையில்லதென விருவகைத்தே - இவ்விதியால்மண்ணியல்பறிக (கருத்து) அரசர்கள்தோட்களிலணிந்தசந்தனங்கள் தேவர்கள்மார்பிற்பரிமளித்தனதேவர்களணிந்த கற்பகமலர்த்தாதுகளரசர்களுடலிற்பரிமளித்தன-எ-ம். (௪)

காந்தெரிகதுவுஞ்செங்கட்கரிமதக்கலுழியாறுங்
கூந்தன்மாவுமிழ்விலாழிப்பெருக்கும்வேற்குமரனன்ன
வேந்தர்திண்புயத்தில்வார்ந்தவிரைகமழ்நானச்சேறும்
பாந்தண்மேற்கிடந்தஞாலமெங்கணும்பரந்தவன்றே,

(இ-ள்) காந்து-மூள்கின்ற—எரி - தீயானது—கதுவும்- பற்றுகின்ற—செங்கண் - சிவந்தகண்களையுடைய—கரி-யானையினது,மதம்-மதநீராகிய—கலுழியாறும் - காட்டாறும்—கூந்தல் -புறமயிர்பொருந்திய—மா - குதிரைகள்—உமிழ் - சொரிகின்ற—விலாழிப்பெருக்கும் - நீர்ப்பெருக்கும்—வேல் - வேற்படையேந்திய—குமரனன்ன - குமரக்கடவுளையொத்த—வேந்தர் - அரசர்களுடைய—திண்புயத்தில் - வலிமையுள்ளதோள்களில்—வார்ந்த - ஒழுகிய—விரைகமழ் - வாசங்கமழ்கின்ற—நானச்சேறும் - கஸ்தூரிச்சேறும்—பாந்தண்மேல் - ஆதிசேடன்மேல்—கிடந்த- இருந்த—ஞாலமெங்கணும் - பூமியெங்கும்—பரந்த-பரவின—எ-று. (கருத்து) யானைகளின்மதநீரும் குதிரைகள்வாய்நீரும் அரசர்கள்புயத்தொழுகியகஸ்தூரிச்சேறும்பூமியெங்கும்பரவின என்பதாம்.

வெள்ளியங்கிரியின்மேயவிஞ்சையரியக்கர்விண்ணோ
ரொள்ளொளியெறிக்கும்பைம்பொன்விமானமுமுலகில்வேந்தர்
நள்ளிருள்சிக்குஞ்செய்யநகைமணிக்கொடிஞ்சித்தேருந்
தெள்ளிதினுணர்ந்துளோர்க்குந்தெரிவிலையங்குமன்றே,

(இ-ள்) வெள்ளியங்கிரியின் - கைலாசமலையில்—மேய - பொருந்திய—விஞ்சையர் - வித்தியாதரரும்—இயக்கர் -இயக்கர்களும்—விண்ணோர் - தேவர்களும்ஆகியவிவர்களுடைய—ஒள்ளொளி - மிகுந்தவொளியை—எறிக்கும் - வீசுகின்ற—பைம்பொன் -பசும்பொன்னாற்செய்த—விமானமும் - விமானங்களும்—உலகில்-பூவுலகிலிருக்கும்—வேந்தர் - அரசர்களுக்குரிய—நள்ளிருள்சிக்கும் -மிகுந்தவிருளினையோட்டுகி

ன்ற—செய்ய-இழைத்த, நகை - ஒளிபொருந்திய,மணி - இரத்தினங்கள்பதித்த—கொடிஞ்சி ; மென்மொட்டையுடைய—தேர் - தேர்களும்—தெள்ளிதின் - தெளிவாக—உணர்ந்தோர்க்கும் - அறிந்தவர்களுக்கும்—தெரிவில் - தெரிந்துகொள்ளக்கூடாமையாகி—மயங்கும் - ஒன்றோடொன்றுமயங்கும்—எ-று. (கருத்து) தேவர்கள் விமானங்களும் அரசர்கள்தேர்களும் பகுத்தறியப்படாவாம்என்பதாம். (௬)

சிற்பநூல்கூறியதுற்றோர்சித்திரித்தென்னவாய்ந்த
பொற்புறுநெடியவேற்கட்பூங்கொடிவதுவைவேட்டுப்,
பற்பலதேயவேந்தர் * தொகுதலிற்பாடைதேர்வா
னற்புடனெவருந்தேவபாடையினறைவர்மாதோ,

(இ-ள்) சிற்பநூல்- சிற்பசாத்திரத்தை—கூறிய - மிகவும்—கற்றோர்-படித்தவர்கள்—சித்திரித்தென்ன - சித்திரித்ததுபோல—வாய்ந்த - பொருந்திய—பொற்புறு - அழகான்மிக்க—நெடிய -நீட்சியுள்ள—வேற்கண்-வேல்போன்றகண்களையுடைய—பூங்கொடி -தமயந்தியினது—வதுவைவேட்டு - விவாகத்தைவிரும்பி —பற்பல -அனேகமாகிய—தேயவேந்தர் - தேயங்களிலிருக்கும்அரசர்கள்—தொகுதலில்-கூட்டங்கொண்டிருந்ததனால்—பாடைதேர்வான் - (எல்லோர்க்குந்) சொற்பொருள்தெரியும்பொருட்டு—அற்புடன் - அன்புடனே—எவரும் -எவர்களும்—தேவபாடையின் -கீர்வாணபாஷையால்—அறைவர்-பேசினவர்கள்—எ-று. * தொல்காப்பியம்வினையியல்-௩௧-ஆ-செய்துசெய்யூச்செய்புசெய்யெனச் - செய்யியச்செய்இயசெயின்செயச்செயற்கென - அவ்வகையொன்பதும்வினையெஞ்சுகிளவி - இவ்விதியால்தொகுதலில் என்றதுசெயின்னென்னும்வாய்பாட்டு வினையெச்சம் (கருத்து)யாவருந் தேவபாஷையிற் பேசுவார்கள் என்பதாம். (௭)

கழைகுளிகளிகல்யானைபிளிறுஞ்சிகமஞ்சூல்வான
மழையொலியவியப்பம்பும்வார்முரசோதைதேவர்
முழவொலிதடந்தேர்ச்சில்லிமுழக்கொலிபுடவிபோர்த்த
வெழுகடலொலியுமெஞ்சவெங்கணுமொலித்தவன்றே.

(இ-ள்)கழை - கரும்புகளை—களி - முதிக்கின்ற—களி - களிப்புள்ள—கல் - கல்வ—யானை - யானைகளினது—பிளிறு - ஆரவாரமாகிய—ஒலி-சத்தமும்—கமம் - நிறைந்த—சூல் - கருப்பத்தையுடைய—வானம் - ஆகாயத்திற்சஞ்சரிக்கும்—மழை - மேகத்தினது—ஒலி - சத்தமானது—அவிய - கெடும்படி—பம்பும்—நெருங்கிய—வார் - வாரிறுக்கிய—முரசோதை - பேரிகைகளின்சத்தமும்—தேவர்முழவொலி - தேவதுந்துபிகளின்சத்தமும்—தடம் - பருத்த—தேர்-தேரினுடைய—சில்லி-உருளைகள்—முழக்கொலி - முழக்குகின்றசத்தமும்—புடவிபோர்த்த-பூமியைச்சூழ்ந்த—எழுகடலொலியும் - எழுகடலிரைச்சையும்—எஞ்ச - குறையும்படி—எங்கணும் - எவ்விடத்தும்—ஒலித்த-சத்தித்தன—எ-று. (கருத்து) யானைகள்சத்தமும், பேரிகைகள்சத்தமும், தேவதுந்துபிகள்சத்தமும், தேவர்கள்சத்தமும், கடலொலிமயங்கவெங்குஞ்சத்தித்தன என்பதாம், (௮)



அகலிரு*விசும்புபோர்த்தவணிமதிக்கவிகைகீட்டம்
பகலொளிகரப்பவெங்கும்பாயிருள்பரப்புமன்னர்
நகைமணிமகுடகோடிநள்ளிருட்பிழம்பைநக்கி
யிகலிவானிரவியோடவிளவெயிலெறிக்குமாதோ.

(இ-ள்)அகல்-அகன்ற—இரு - பெரிய—விசும்பு - ஆகாயத்தை—போர்த்த-மூடிய—அணி - அழகிய—மதிக்கவிகை - சந்திரவட்டக்குடைகளின்—ஈட்டம் - கூட்டங்கள்—பகலொளி-சூரியப்பிரகாசம்—கரப்ப-மறைய—எங்கும் - எவ்விடத்தும்—பாய் - பரவிய—இருள் - இருளை—பரப்பும் - பரவச்செய்யும்—மன்னர் - அரசர்களது—நகை - ஒளிபொருந்திய—மணி-இரத்தினங்கள்பதித்த, மகுட கோடி - அனேகமகுடங்கள்—நள்ளிருட்பிழம்பை - மிகுந்தவிருட்பிழம்பை—நக்கிஉண்டு—இகலி - பகைத்து—வான் - ஆகாயத்திலிருக்கும்—இரவியோட - சூரியனைவென்றிடும்படி—இளவெயில் - இளங்கதிரை—எறிக்கும் - வீசும்—எ-று. * தருக்கசங்கிரகம்-அவற்றுள் ஓசைப்பண்பிற்றாகாயமே, இவ்விதியால்ஆகாயமோசையுடையது (கருத்து) குடைகள்கூட்டமிருளைக்கொடுக்கும் மகுடகூட்டம்ஒளியைக்கொடுக்கும் என்பதாம் (௯)

வெங்கதிர்நெற்றிதோய்ந்து விளங்குபொற்கொடியினீட்ட
மங்குல்வாணிழியுந்தெய்வமடந்தையர்வடிவுகாட்ட
கொங்கலர்த்தெரியல்வேந்தர்கொற்றவெண்கவிகையீட்டந்
திங்களினெழுதுகாட்டத்திருநகர்பொலிந்ததன்றே.

(இ-ள்) வெங்கதிர் - சூரியனது—நெற்றிதோய்ந்து - நெற்றியிற்படிந்து—விளங்கு - பிரகாசிக்கின்ற—பொற்கொடியின்— பொன்னாற்செய்தகொடிகளின்—ஈட்டம் - கூட்டங்கள்—மங்குல் - மேகங்களுலவும்—வாணிழியும் - ஆகாயத்தினின்றிழிகின்ற— தெய்வமடந்தையர் - தெய்வமாதர்களது—வடிவுகாட்ட-வடிவினைத்தெரிவிக்க—கொங்கு-வாசமிகுந்த—அலர்த்தெரியல் - மலர்மாலையையணிந்த—வேந்தர் - அரசர்களது—கொற்றம் - வெற்றிபொருந்திய—வெண்கவிகை - வெள்ளியகுடைகளினுடைய—ஈட்டம் - கூட்டங்கள்—திங்களின் - சந்திரனது—அழகுகாட்ட - அழகைத்தெரிவிக்க—திருநகர் - குண்டினபுரமானது—பொலிந்தது - பொலிவையடைந்தது—எ-று. (அன்று-ஏ- அசைகள்) (கருத்து) கொடிகள்கூட்டம்தேவ மாதர்கள்போலும்குடைகள்கூட்டம்சந்திரன்போலும் வடிவுகாட்டக்குண்டினபுரஞ்சிறப்புற்றது என்பதாம், (௰)

குருமணியிமைக்கும்பைம்பொற்குடைநிழல்வெயிலையோட்ட
மருமலிநறியமென்பூமாலைவாடாமையானுந்
திருநகர்ச்செவ்விநோக்கியிமைப்பிலர்திரிதலானு
மாசரோடமரர்தம்மையறிவரிதாயதன்றே,

(இ-ள்)குரு-நிறம்பொருந்திய—மணி-இரத்தினங்கள்—இமைக்கும்-பிரகாசிக்கின்ற—பைம்பொன் - பசியபொன்னாற்செய்த—குடைநிழல்-குடைகளினுடையநிழல்கள்—வெயிலையோட்ட - வெய்யிலைத்து

ரந்த—(அதனால்)மருமலி - வாசம்பொருந்திய—நறிய - நறியவாகிய—மென்பூமாலை - மெல்லியபூமாலைகள்—வாடாமையானும்- வாடாமையானும்—திருநகர் - குண்டினபுரத்தினது—செவ்விநோக்கி- அழகைப்பார்த்து—இமைப்பிலர் - கண்களிமையாதவர்களாய்—திரிதலானும் - திரிகின்றபடியாலும்—அரசரோடு - அரசர்களுடனே—அமரர்தம்மை- தேவர்களை—அறிவரிதாயது - பகுத்தறிதலரிதாயது—எ-று, (கருத்து) குடைகளினிழலால் மாலைகள்வாடாமையாலும்நகரத்தை இமையாதுபார்த்தலாலும் அரசர்களென்றுந்தேவர்களென்றுமறியப்படாதுஎன்பதாம்

மாங்குயிலனையதீஞ்சொல்வடுவகிர்பொருவும்வேற்கட்
பூங்கொடிவதுவைவேட்டுப்புவியினில்வேந்தரொல்லாந்
தேங்கமழ்தெரியல்வீமன்றிருநகரிருத்தறன்று
லாங்கவர்தேயம்யாவுமருப்பொறையுயிர்த்தவன்றே.

(இ-ள்) மாங்குயிலனைய - மாங்குயில்சொல்லையொத்த—தீஞ்சொல் - தித்திக்கின்றசொல்லையும்—வடுவகிர்பொருவும் - மாவடுவின்பிளப்பையொத்த—வேற்கண் - வேல்போன்றகண்களையுமுடைய—பூங்கொடி - தமயந்தியினது—வதுவைவேட்டு - விவாகத்தைவிரும்பி—புவியினில்வேந்தரெல்லாம் - பூவுலகத்திலிருக்கும் அரசர்களெல்லாரும்—தேங்கமழ் - வாசங்கமழ்கின்ற—தெரியல்- மலர்மாலையையணிந்த—வீமன் - வீமராசனது—திருநகர் - குண்டினபுரத்தில்—இருத்தறன்றால் - வந்துதங்கியபடியால்—அவர்தேயம்யாவும் - அவர்கள்தேசமெல்லாம்—அரும்பொறை - பொறுத்தற்கரியசுமையை—உயிர்த்த-நீங்கின—எ-று. (கருத்து)குண்டினபுரமொன்றேசுமைபெற்றதுமற்றத்தேசங்கள்சுமையற்றன என்பதாம். (யஉ)

இழைபரந்திமைக்குமல்குலின்கனித்துவர்வாயேழை
மழைமதர்நோக்கிற்கஞ்சிமறியுமானேறுமாதின்
விழைதருநகரிற்றூண்டவெருவிமீண்டேகுமாற்றாற்
கழிபெருங்காதல்கூர்ந்துங்காற்றிறைவரவுதீர்ந்தான.

(இ-ள்)இழை - ஆபரணங்கள்—பரந்து - பரவி—இமைக்கும்- பிரகாசிக்கின்ற—அல்குல் - அல்குலையும்—இன் - இனிய—கனி - (கொவ்வைக்) கனிபோன்ற, துவர்வாயேழை-செவ்வாயையுமுடையதமயந்தியினது—மழை - குளிர்ச்சிபொருந்திய—மதர் - களிப்புள்ள—நோக்கிற்கஞ்சி - பார்வைக்குப்பயந்து—மறியும் - மடங்குகின்ற—மானேறும்- ஆண்மானும்—மாதின்-அம்மங்கையினது—விழைதரும் - விரும்புகின்ற—நகரிற்றூண்ட - குண்டினபுரத்திற்குச்செலுத்த—வெருவி - பயந்து—மீண்டு-திரும்பி—ஏகுமாற்றால் - போகின்றபடியால்—கழிமிகுந்த—பெருங்காதல்கூர்ந்தும் - பேராசையையடைந்தும்—காற்றிறை வாயுவானவன்—வரவு - வருதலை—தீர்ந்தான் -நீங்கினான்—எ-று. (கருத்து) தமயந்திகண்ணைக்கண்டுகாமேறு மான்வாகனந்திரும்பிவிடுகின்றதுவாயுதேவன்வாராதிருந்தான்.எ-ம். (யங)



ஐயரிபரந்துமைதோய்ந்தமபலைத்திகலும்*வேற்கட்
டையலோர்பாதியாய தன்மையாற்றனதுபைம்பொற்
செய்யதாள்பெயர்ப்பவன்றுள் சீறடியெழாமையாலே
மையணிகண்டத்தோனு மன்றலுக்கெழுந்திலானே

(இ-ள்) ஐ-அழகிய—அரிபரந்து - செவ்வரிபரந்து—மைதோய்ந்து - அஞ்சனமணிந்து—அம்பலைத்து - அம்புகளையலையச்செய்து—இகலும்- பொருகின்ற—வேற்கண் - வேல்போன்ற கண்களையுடைய தையல் - உமைமாதானவள்—ஓர்பாதியாயதன்மையால்- வாமபாகத்திலிருக்கிறபடியால்—தனது - தன்னுடைய—பைம்பொன் - பசியபொன்போன்ற—செய்யதாள்-சிவந்தபாதங்களை—பெயர்ப்ப-தூக்க—அன்னாள் - அவ்வுமாதேவியினது—சீறடி - சிறியபாதங்கள்—எழாமையாலே- எழுதலில்லாமையால்—மையணி கண்டத்தோனும் - ஈசுரனும்—மன்றலுக்கு—(தமயந்தியின்) விவாகத்திற்கு—எழுந்திலான் - புறப்பட்டிலன்—எ-று. [*தருக்கசங்கிரகம்-நசு-கு- அறுநாற்பண்பி னுருவெனப்படுவது-விழிமாத்திரை யாற்கவரப்படுங்குணம் இவ்வியல்கண்ணியல்பறிக] (கருத்து)தன்னி லொருபங்காகிய உமையவள் பாதம் எழாமையாலேசிவன் வாராதிருந்தான்என்பதாம். (யச)

உருவுகண்டுவப்பதன்றியோடரித்தடங்கணல்லார்
திருவினுங்குலத்தினுஞ்செய்கிலார்வமென்று
மருவுதன்வடிவின்குற்றமனக் கொளாவயங்குமைம்பொற்
குணாகழலிலங்குநோன்றாட் குபோனும்வந்திலானே

(இ-ள்.) உருவுகண்டு - அழகுள்ளவடிவத்தைப்பார்த்து —உவப்பதன்றி - மகிழ்வதல்லாமல்—ஓடு - ஓடுகின்ற—அரி - செவ்வரிபரந்த—தடம்-விசாலம்பொருந்திய—கண் - கண்களையுடைய —நல்லார் - மங்கையர்கள் —திருவினும் - செல்வத்தினும்— குலத்தினும் - உயர்ந்தகுலத்தினும்—ஆர்வஞ்செய்கிலரென்று - ஆசைசெய்யமாட்டார்களென்று—தன்வடிவின் - தன்னுடையதேகத்தில்—மருவு- பொருந்திய—குற்றம் - குற்றத்தை—மனக்கொளா - மனதிலேகொண்டு — வயங்கும்-பிரகாசிக்கின்ற—பைம்பொன்-பசும்பொன்னாற்செய்த— குணாசத்தம்பொருந்திய—கழல் - வீரக்கழல்கள்—இலங்கு - விளங்குகின்ற—நோன்-பெருமைதங்கிய—தாள்-பாதங்களையுடைய—குபேரனும்- குபேரனும்—வந்திலான் - வந்திலன்—எ-று.(கருத்து)குபேரன் குருடுடைமையால் அக்குற்றத்தால் வாராதிருந்தான்என்பதாம். (யரு)

விரைகமழ்தருவினீழல் விண்ணவரிடத்துமார்வம்
புருகிலனனன்மேலன்புபூண்டனள்புலம்புகொண்ட
முருகவிழ்நறுமென்கூந்தன் முகிழ்முலைத்துவர்வாய்ப்பேதை
நிருதனைவிழையாளென்ன நிருதியும்போந்திலானே

(இ-ள்) விரைகமழ் - வாசங்கமழ்கின்ற — தருநீழல் - ஐந்தருவின்நிழலிலிருக்கின்ற—விண்ணவரிடத்தும் - தேவர்களிடத்தும்— ஆர்வ

ம்புரிகிலள் - ஆசைசெய்கிலள்—நளன்மேல்-நளனிடத்தில்— அன்பு பூண்டனள் - அன்புவைத்தவளாகி — புலம்புகொண்ட - இரங்குதலைக் கொண்ட—முருகவிழ் - தேனெழுகுகின்ற—நறு - நறிய — மென்கூந்தல் - மெல்லியகுழலையும்—முகிழ்முலை - அரும்பையொத்தமுலையையுடைய—துவர்வாய்-செவ்வாயையுமுடைய — பேதை - தமயந்தியானவள் —நிருதரை - இராக்கதரை—விழையாளென்ன - இச்சிக்கமாட்டாளென்று—நிருதியும் - நிருதியென்பவனும்—போந்திலான் - வந்திலன்——என்-று(கருத்து)தேவர்களைவிரும்பாதவள்இராக்கதர்களைவிரும்பாளென்று நிருதியும்வாராதிருந்தான் என்பதாம். (௰௬)

பொன்னகர்புரக்கும்வேந்தும் - பொங்கழற்கிறையுமுந்நீர்
மன்னனுந்தறுகட்பேழ்வாய்மறலியுமடமாதேறுக்கி
நன்னுதனளனுக்கன்றிநறுந்தொடைசூட்டாளென்ன
வன்னவனுருவுதாங்கி யணிநகர்மேயினரோ

(இ-ள்) பொன்னகர்புரக்குவேந்தும்-இந்திரனும் — பொங்கழற்கிறையும் - அக்கினிபகவானும்—முந்நீர்மன்னனும் - வருணனும்—தறுகட்பேழ்வாய்மறலியும்-யமனும்—மடமானேறுக்கி- இளமான்பார்வையையொத்த பார்வையையுடைய—நன்னுதல்- தமயந்தியானவள் — நளனுக்கன்றி-நளனுக்கல்லாமல்—நறுந்தொடை - நறியமலர் மாலையை — சூட்டாளென்ன-தரிக்கமாட்டாளென்று—அன்னவன் - அந்நளனுடைய—உருவுதாங்கி - (வடிவையொத்த) வடிவத்தைக்கொண்டு—அணிநகர்-அழகியநகரத்தில் — மேயினர் - பொருந்தினர்கள்—எ-று. தறுகண்-அஞ்சாமை—பேழ்வாய்-பெரியவாய்—* தருக்கசங்கிரகம்- உ-ஆ - அவற்றுள் - பொருளெனப்படுவது தெரிவுறக்கிளப்பின் - - மண்ணீரனல் கால் வெளிபொழுதாசை - யான்மாவுளமென் னொன்பது வகைத்தே- இவ்விதியால்அக்கினிநவபொருளிலொன்றும்(கருத்து)இந்திரன்-அக்கினி-வருணன்-யமன்-இவர்கள்நளனுருக்கொண்டு குண்டின புரத்திற்கு வந்தார்கள் என்பதாம். (௰எ)

கூற்றெனக்கொல்லும்வேழக்கொடியணிகொடிஞ்சித்திண்டேர்
பாற்றிரைக்கவரிநெற்றிப் பண்ணமைகலினப்பாய்மா
மாற்றருஞ்சீற்றத்துப்பின் வரிசிலையுழவரீட்ட
நாற்றிசைப்பரப்பும்போர்ப்பநாமவேன்னளனும்வந்தான்

(இ-ள்.)கூற்றென-யமனென்றுசொல்லும்படியாக—கொல்லும் - கொலைசெய்கின்ற—வேழம் - யானைகளும்—கொடியணி - கொடிகளணிந்த—கொடிஞ்சி-மேன்மொட்டையையுடைய — திண் - வலிமைபெற்ற—தேர் - தேர்களும்—பால் - பாலினுடைய—திரை - அலைகள் போன்ற— கவரி - சாமரைகள்கட்டிய—நெற்றி - நெற்றிவிளங்கிய—பண்ணமை - கல்லணையமைந்த—கலினம் - கடிவாளம்பூண்ட——பாய்-தாவுகின்ற—மா - குதிரைகளும்—மாற்றரும் - நீக்குதற்கரிய— சீற்றத்துப்பின் - கோவமிகுந்த—வரிசிலை - கொடியவில்லேந்திய — உழவரீட்



டம் - காலாள்கூட்டமும்—(ஆகியஇந் நான்வகைச்சேனைகளும்) நாற்றிசைப்பரப்பும் - நாலுதிசைகளின்பரப்பெல்லாம்— போர்ப்ப - மூடிக்கொண்டுவர—நாமம் - அச்சத்தைத்தருகின்ற—வேல் - வேற்படைதாங்கிய—நளனும் - நளமகாராசனும்—வந்தான்-வந்தான்——எ-று. (கருத்து) யானைகளும், தேர்களும், குதிரைகளும், காலாள்களும், சூழ்ந்துவர நளமகாராஜனும் வந்தானென்பதாம். (௰அ)

உலகொருமூன்றினுள்ளவொளிமுடிமன்னரெல்லா
மிலகுபொற்குடுமிவான்றோயெயிற்புறத்திருத்தாராக
வலகில்வெஞ்சேனைசூழவரும்பெறற்சுற்றத்தோடும் [னே
விலகிவில்லுமிழும்பைம்பூண் விதர்ப்பர்கோ னெதிர்கொண்டா

(இ-ள்.) உலகொருமூன்றினுள்ள-திரிலோகத்திலுமுள்ள—ஒளி-காந்தியையுடைய—முடிமன்னரெல்லாம் - மகுடத்தையணிந்தஅரசர்களெல்லாரும்—இலகு- பிரகாசிக்கின்ற— பொற்குடுமி - பொன்னுலர் இயசிகரம்—வான்றோய் - ஆகாயமளாவிய — எயிற்புறத்து - மதிற்புறத்திலே—இருத்தாராக - தங்கினராக—(அதுகேட்டு) அலகில் - அளவற்ற—வெம் - வெவ்விய, சேனைசூழ்-சேனைகள்சூழ்ந்துவர— அரும்பெறல் - பெறுதற்கரிய—சுற்றத்தோடும் - கிளைஞருடன்—விலகி - வீசி—வில்-ஒளியை—உமிழும்-உமிழ்கின்ற—பைம்பூண்-பசிய ஆபரணத்தையுடைய—விதர்ப்பர்கோன் - வீமராசன் — எதிர்கொண்டான் - எதிர்கொண்டவன்—எ-று. (கருத்து) திரிபுவனத் தரசர்களும் வந்திருக்கச்சிறந்தாரோடுவீமராசனெதிர்கொண்டுபோனன்-எ-ம். (௰௯)

விரைசெறியலங்கன்மாலைவிண்ணவர்விஞ்சைமன்ன
ருருகெழுமுரகவேந்தரோங்குநீருடுத்தஞாலத்
தரசிளங்குமரரோடுமளவளாய்முகமன்கூறி
வரிசையின்வழாமைநோக்கிவான்சிறப்பியற்றினனே

(இ-ள்) விரைசெறி -வாசமிகுந்த—அலங்கன்மாலை- மலர்மாலையையணிந்த—விண்ணவர் - தேவர்கள் — விஞ்சைமன்னர் - வித்தியாதரவேந்தர்— உருகெழும் - வடிவுள்ள—உரகவேந்தர் - நாகவேந்தர் — ஓங்கு-உயர்ந்த—நீருடுத்தஞாலத்து - கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள—அரசிளங்குமரரோடும் - இராசகுமாரரோடும்—அளவளாய் - கலந்து—முகமன்கூறி - உபசாரவார்த்தைகளைச்சொல்லி—வரிசையின் - கிரமத்தினில்—வழாமை - தப்பாமல்—நோக்கி- ஆலோசித்து—வான் - மேலாகிய—சிறப்பு-சிறப்பை—இயற்றினன் - செய்தான் —எ-று. (கருத்து) தேவர்கள்வித்தியாதரர் நாகலோகத்தரசர் பூவுலகத்தரசர் இவர்களுக்குவீமராசன் முறைப்படி சிறப்புச்செய்தானென்பதாம். (உ௰)

தோட்டலர்மாலைசூழ்ந்த துறக்கமோடுமழச்செய்த
வீட்டகந்தோறும்பைம்பொன் விளக்கிழைசெவ்விவாய்ப்பத்
* தீட்டியவுருவுநோக்கித் தேறல்கொப்புளித்துமாந்தும்
பாட்டளிக்தாயவேந்தர் பகற்பொழுதாற்றினரே

(இ-ள்.) தோடு - இதழ்களையுடைய—அலர் - மலராற்றொடுத்த—மாலை-மாலைகளை—நாற்றி-தொங்கக்கட்டி—துறக்கமோடு - தெய்வலோகத்துடனே—உறழ-ஒக்கும்படி—செய்த - செய்யப்பெற்ற—வீட்டகந்தோறும் - வீடுகளினிடந்தோறும்—பைம்பொன் - பசிய பொன்னினும்—விளங்கிழை - தமயந்தியினது—செவ்விவாய்ப்ப - அழகுபொருந்த—தீட்டிய - எழுதிய—உருவுகோக்கி - பதுமைகளின் வடிவங்களைப்பார்த்து—தேறல் - தேனை—கொப்புளித்து - கொப்புளித்து—மாந்தும் - உண்ணுகின்ற—பாட்டு - இசைகளைப் பாடுகின்ற—அளி - வண்டுகள்மொய்த்த—தாமவேந்தர் - மாலையையணிந்தவரசர்கள்—பகற்பொழுது—பகற்காலத்தில்—ஆற்றினர் - காமநோயைப் பொறுத்திருந்தார்கள்—எ-று. * தருக்கசங்கிரகம் - ௩௭-ரு - அதுவேவெண்மை கருமை பொன்மை செம்மை பசுமை புகைமை சித்திரமென்னும் பாகுபாட்டி னெழுவகைத்தாகி - நிலநீர்தீயிவிலை பெறுமன்னே - இவ்விதியால்தீட்டியவுருவாகிய சித்திரப்பண்புகட் புலவிடையமாக (கருத்து) சுவர்க்கத்திற்கொப்பாகிய வீடுகளினிடங்கள்தோறும் எழுதப்பட்டதமயந்தி திருவுருவத்தை அரசர்கள் பார்த்துப் பகற்பொழுது போக்கிக்காமத்தைப்பொறுத்திருந்தார்களென்பதாம். (உ௧)

> சேயுயர்விசும்பிற்றேவர்தென்றிரைப்பரவைசூழ்ந்த
> மாயிருஞாலங்காக்குமன்னவருரகருற்ற
> காயழற்காமவெந்தீக்கனற்றுமென்றஞ்சினன்போற்
> பாயிருளுலகம்போர்ப்பப்பகல்செய்வான்கடலுளாழ்ந்தான்

(இ-ள்.)சேயுயர் - மிகவுமுயர்ந்த—விசும்பில் - தெய்வலோகத்திலிருக்கும்—தேவர் - தேவர்களும்—தென்றிரைப்பரவைசூழ்ந்த - தெளிந்த அலைகளையுடைய கடலாற்சூழப்பெற்ற—மாயிருஞாலங் காக்கும் - மகத்தாகியபெரியபூமியைப்புரக்கின்ற—மன்னவர் - அரசர்களும்—உரகர் - நாகவேந்தர்களும்—உற்ற - (ஆகிய இவர்கள்) எய்தின—காய் - சுடுகின்ற—அழல் - வெப்பம்பொருந்திய—காமவெந்தீ - காமாக்கினி—கனற்றுமென்று - தன்னைச்சுடுமென்று—அஞ்சினன்போல் - பயந்தவன்போல்—பாய் - பாவிப்—இருள் - இருளானது, உலகம்போர்ப்ப - உலகத்தைமூடிக்கொள்ள—பகல்செய்வான் - சூரியனானவன்—கடலுள் - மேற்றிசைக்கடலுள்—ஆழ்ந்தான் - அழுந்தினன்—எ-று. (கருத்து) தேவர்களும் அரசர்களும் நாகவேந்தர்களும் அடைந்த காமாக்கினி தன்னைச்சுடுமென்று சூரியன் அஸ்தமயமானானென்பதாம். (உ௨)

> விரிகதிர்மௌலிவிண்ணோர்மெய்யொளிபரந்தலானு
> மரசிளங்குமரர்மார்பிலணிவெயிலுமிழ்தலானு
> முரகர்தஞ்சுடிகைச்சிகையொளிர்மணியிமைத்தலானும்
> பரிதிமேற்கடலுளாழ்ந்தும் பாயிருள்பரந்ததின்றே

(இ-ள்.) விரி - விரியப்பெற்ற—கதிர் - கிரணங்களையுடைய—மௌலி - மகுடங்களைத்தரித்த—விண்ணோர் - தேவர்களின்—மெய்யொளி - தேககாந்திகள்—பரந்தலானும் - பரவுதலானும்—அரசிளங்குமரர்மார்பில் - இராசகுமாரர்கள்மார்பிலிருக்கும்—அணி - ஆபரணங்கள்—வெயில் - ஒளியை—உமிழ்தலானும் - கொப்பளித்தலானும்—உரகர் - நாகவரசர்களுடைய—சுடிகைச்சிகை - முடியின்மேல்—ஒளிர் - விளங்குகின்ற—மணி - இரத்தினங்கள்—இமைத்தலானும் - பிரகாசித்தலானும்—பரிதி - சூரியனானவன்—மேற்கடலுளாழ்ந்தும் - மேற்கடலுளழுந்தியும்—பாய் - பாய்கின்ற—இருள் - இருளானது—பரந்தின்று - பரந்ததில்லை—எ-று. (கருத்து) தேவர்கள்சரீரகாந்தியாலும் அரசர்கள்மார்பிலாபரணங்களாலும் நாகவேந்தர்கள் சிரோரத்தினங்களாலும் சூரியன்மறைந்தும் இருள்தோற்றவில்லை-எ-ம். (உ௩)

> மைவரங்கரியகூந்தல் வாள்கிடந்தனையவுண்கட்
> பையராவல்குற்செவ்வாய்ப்பனிமொழிவதுவைவேட்டு
> வெய்யசெங்கதிரோனும்வெண்மதியுறைதறன்றா
> லெய்துமிக்*காலந்தன்னையிரவென்கோபகலென்கேனோ

(இ-ள்) மை-அஞ்சனமானது—அவாம்-விரும்புகின்ற—கரிய கூந்தல்-கருமையுள்ளகூந்தலையும்—வாள்கிடந்தனைய - வாள்கிடந்ததையொத்த—உண்கண் - மையுண்டகண்களையும்—பையரவல்குல்-அரவப்படம்போன்றவல்குலையும்—செவ்வாய் - சிவந்தவாயையும்—பனிமொழி-குளிர்ச்சிபொருந்தியசொல்லையுமுடைய—(தமயந்தியினது) வதுவைவேட்டு-விவாகத்தைவிரும்பி—வெய்ய—வெவ்விய—செங்கதிரோனும்-சூரியனோடும்—வெண்மதி-சந்திரன்—உறைதறன்றால்-(அங்காரத்தில்) தங்குகின்றபடியால்—எய்தும் - பொருந்திய—இக்காலந்தன்னை-இக்காலத்தை—இரவென்கோ-இரவென்று சொல்லுவேனோ—பகலென்கோ-பகலென்றுசொல்லுவேனோ(இன்னதென்றுசொல்லேன்)—எ-று. * தருக்கசங்கிரகம்-உ௯-ரு - இறப்பு முதல்வழக்கிற்கேதுக்காலம்-இவ்விதியால் காலம்நித்திய மானது (கருத்து) தமயந்திகலியாணத்தைவிரும்பிவந்த சூரியனுஞ்சந்திரனும் அங்காரத்தில்வாசம்பண்ணலால் இரவென்றுசொல்வேனோ பகலென்றுசொல் வேனோ என்பதாம். (உ௪)

> ததைமலர்த்தெரியல்வேந்தர் தளர்ந்துமெய்பதைத்துவாடப்
> புதையிருட்போர்வைமெய்யிற்பொலிவுறப்போர்த்துவெய்ய
> கதழெரிச்செக்கர்பேழ்வாய் திறந்துவெண்கதிர்குலாய
> மதிலெயிறுதோன்றவந்ததுமாலைகூற்றம்.

(இ-ள்.) ததை-நெருங்கிய—மலர்த் தெரியல்-மலர் மாலையையணிந்த—வேந்தர்- அரசர்கள்—தளர்ந்து - தளர்ச்சியடைந்து—மெய்பதைத்து-தேகம்பதைத்து—வாட-வாடும்படி—புதை-உலகத்தை மூடுகின்ற—இருட்போர்வை-இருளாகியபோர்வையை—மெய்யில் - தனதுடம்பில்—பொலிவுற - விளக்கமிக—போர்த்து-போர்த்துக்கொண்

டு—வெய்ய - கொடிய—கதழ் - வேகத்தையுடைய—எரி - நெருப்பைப் பெயர்த்த—செக்கர் - செவ்வானமாகிய—பேழ்வாய்திறந்து - பெரியவாயைத்திறந்து—வெண்கதிர் - வெள்ளியகிரணங்கள் — குலாய - விளங்கப்பெற்ற—மதி - சந்திரனாகிய - வகிர் - பிளப்பையுடைய—எயிறு - கோரைப்பல்லானது—தோன்ற - தோன்றும்படி—மாலை - மாலைப்பொழுதாகிய—கூற்றம் - இயமனானவன்—வந்தது - வந்தான் —எ-று. (கருத்து) - அரசர்கள்வாடும்படி மாலைக்காலமாகிய இயமனானவன் இருட்போர்வைபோர்த்துச் செவ்வானமாகியவாயைத்திறந்து சந்திரனாகிய வக்கிரதந்தந்தோன்றும்படி வந்தானென்பதாம். (உ௫)

விரிகதிர்பரப்பிவான்மீதெழுகுழவித்திங்க
ளெரிமணிப்பூண்செய்திண்டோளெழுபுவிவேந்தர்மேனும்
வரிசிலைகுழையவாங்கிமண்டமர்தொடங்குமாரன்
குணகடன்முரசமெற்றுங்குணிலெனச்சிறந்ததன்றே.

(இ-ள்.) விரிகதிர் - விரிந்தகிரணங்களை—பரப்பி - பரவச்செய்து—வான்மீது - ஆகாயத்தில்—எழு - எழுந்த—குழவித்திங்கள் - இளம்பிறையானது—எரி - விளங்குகின்ற—மணி - இரத்தினங்கள் பதித்த—பூண்செய் - ஆபரணங்களையணிந்த—திண்டோள் - வலிமையுள்ளதோளையுடைய—எழுபுவிவேந்தர்மேலும் - எழுதீவிலுள்ள அரசர்மேலும்—வரி - கொடிய—சிலை - வில்லை—குழையவாங்கி - வளையவளைத்து — மண்டு - நெருங்கிய—அமர் - போரை—தொடங்குமாரன் - ஆரம்பிக்கு மன்மதனது—குண - ஒலிக்கின்ற —கடன்முரசம் - கடலாகியபேரிகையை—எற்றும் - அடிக்கின்ற—குணிலென - குறுந்தடிபோல்—சிறந்தது - சிறந்திருந்தது—எ-று. (கருத்து) வானிலுதயமான இளம்பிறையானது மன்மதனதுகடலாகியமுரசக்குறுந்தடிபோலிருந்ததுவென்பதாம். (உ௬)

ஏர்குடியிருந்தகங்கையிளமுலைப்போகம்வேட்ட
சீர்மலிகடலந்தானைநெடுநிலவேந்தர்தம்மேல்
வார்சிலைத்தடக்கைமாரன்மண்டமர்புரியத்தூண்டுங்
கூர்நுனிவேழக்கோட்டினெழுந்ததுகுழவித்திங்கள்

(இ-ள்.) குழவித்திங்கள் - இளம்பிறையானது—ஏர் - அழகுகளானவை—குடியிருந்த - ஒருங்குபடத்தங்கியிருக்கப்பெற்ற—நங்கை - தமயந்தியினது—இளம் - இளமையாகிய—முலைக்கலசங்களின் — போகம் - அனுபவத்தை - வேட்ட - விரும்பிய—சீர்மலி - சீர்மிகுந்த—கடல் - கடலாகிய—அம் - அழகிய—தானை - ஆடையையுடைய — நெடுநிலம் - நெடியபூமியிலுள்ள—வேந்தர்தம்மேல் - அரசர்கள்மீது—வார்சிலை - நீண்டவில்லையேந்திய—தடக்கை - விசாலமாகியகையையுடைய — மாரன் - மன்மதன்—மண்டமர்புரிய - நெருங்கியயுத்தத்தைச்செய்ய — தூண்டும் - தூண்டப்பட்ட—கூர்நுனி - மிகுந்தகூர்மையாகிய—வேழம் - யானையினது—கோட்டின் - கொம்புபோல—எழுந்தது - உதித்தது—எ-று. (கருத்து) இளம்பிறையானது தமயந்தியை விரும்பிய அரசர்கள்



மேல்மதன்போர்செய்யநடத்தப்பட்ட இருளாகியயானையின்கோட்டைப்போலிருந்ததுவென்பதாம். (உ௭)

கள்ளுயிர்த்திணைவண்டார்க்குங்கமலம்வாய்முகிழ்ப்பச்செய்ய
வள்ளலங்கயத்துளாம்பலலர்த்தியகுழவித்திங்க [ள்
டெள்ளுசெங்கதிரோன்மாலைத்தெரிவைவெம்முலையிற்கோட்டு
வள்ளுகிர்குறியிற்றோன்றிப்பொலிவுறவயங்கிற்றன்றே.

(இ-ள்.) கள் - தேனை — உயிர்த்து - தந்து—இனம் - கூட்டமாகிய—வண்டு - வண்டுகள்—ஆர்க்கும் - ஒலிக்கின்ற—கமலம் - தாமரைமலர்கள்—வாய்முகிழ்ப்ப - குவிய—செய்ய - சிவந்த—அள்ளல் - குழைச்சேற்றையுடைய—அம் - அழகிய—கயத்துள் - தடாகத்துள் — ஆம்பல் - அல்லிகளை—அலர்த்திய - மலரச்செய்த— குழவித்திங்கள் இளம்பிறையானது—தெள்ளு - தெளிந்த—செங்கதிரோன் - சிவந்தகிரணங்களையுடையசூரியனானவன்—மாலை - மாலைப்பொழுதாகிய— தெரிவை - மங்கையினுடைய—வெம்முலையில் - விருப்பத்தைச்செய்யுங் கொங்கைகளில்—கோட்டும் - ஊன்றிய—வள் - கூரிய—உகிர்க்குறியின் - நகக்குறியைப்போல—தோன்றி - உண்டாய் — பொலிவுற - அழகுபொருந்த—வயங்கிற்று - விளங்கிற்று—எ-று. (கருத்து) தாமரைமலர்கள் குவியவும் அல்லிமலர்களைமலரச்செய்த இளம்பிறையானது சூரியனானவன் மாலைக்காலமாகிய மங்கையின் கொங்கைகளில் அழுத்தியநகக் குறிபோலிருந்தது-என்பதாம். (உ௮)

சேட்டிளம்பரிதிமார்பினளனுக்குத்தெரியலைச்
சூட்டிவடெரிவையென்னத் துலங்குகீட்டிசைமாதன்பிற்
காட்டியதிருந்தக்கையிற்கதிர்நிலவுமிழுந்தண்ணென்
கோட்டிளங்குழவித்திங்கள்குடபுலத்தெழுந்ததன்றே.

(இ-ள்) சேட்டிளம் - மிகுந்தவிளமையையுடைய — பரிதி - சூரியன்போன்ற—மார்பின் - மார்பினிடத்தில்—நளனுக்கு - அவ்வமகாராசனுக்கு—நாளை - நாளைப்பொழுதில்—தெரிவை - தமயந்தியானவள்— தெரியல்சூட்டிவளென்ன - மாலையைத்தரிப்பாளென்று—துலங்கு - விளங்குகின்ற—கீட்டிசைமாது - கிழக்குத்திக்காகியமங்கையானவள்— அன்பின் - அன்பினாலே—காட்டிய - காட்டப்பட்ட — திருந்தக்கையில் - அ பின்பக்கைபோல்—கதிர் - கிரணங்களாகிய—நிலவுமிழும் - ஒளியைக்கொப்பளிக்கின்ற—தண்ணென் - குளிர்ச்சிபொருந்திய—கோடு - வளைந்த—இளங்குழவித்திங்கள் - மிகுந்த விளமைபொருந்திய பிறையானது—குடபுலத்து - மேற்குத்திசையில் — எழுந்தது - உதயமாயிற்று—எ-று. (*வீரசோழியம்-எழுத்ததிகாரம் - நான்கொடு மூன்றெனப்படா தாமுயிரின்பின்புகவ்வருமேல். என்றஞகாரமதாம்பதினோர் தோடெண்ணிபண்டாய்க். தோன்றுமுடற்பின் றகாம்வரினிரண்டி னொருக்கால். ஆன்றவைந்தாமுடலாமுன்பிலொற்றுக்கழிவுமுண்டே. இவ்விதிபால் லழகாரமுந்தகாரமும் டகாமாயின்] (கருத்து) - நளனுக்குமாலையத்தின

ம் தமயந்திமாலை சூட்டுவாளென்று கீழ்த்திசைமாதானவள் காட்டப்பட்ட அபிநயத்தைப்போல இளம்பிறைமேற்குத் திசையில் உதித்தது என்பதாம். (௨௯)

கூன்பயில்குழவித்திங்கள்கொள்ளைவண்டிருந்துபாடக்
கான்பயின்மலரம்பேந்துங்கன்னலஞ்சிலைக்கைவேட
னூன்பயில்குருதிவேற்கணொண்ணுதன்மடவாருள்ள
மீன்கவர்தூண்டிலென்ன விசும்பிடைவிளங்கிற்றன்றே

(இ-ள்) கூன்பயில்-வளைவுபொருந்திய — குழவித்திங்கள் இளம்பிறையானது — கொள்ளை-மிகுதியாக — வண்டிருந்து - வண்டுகளிருந்து — பாட-பாடலைச்செய்ய — கான்பயில் - வாசம்பொருந்திய — மலரம்பேந்தும் -மலர்க்கணைகளையேந்திய — கன்னலஞ்சிலைக்கைவேடன்-மன்மதனது — ஊன்பயில்-தசைபொருந்திய — குருதி - உதிரந் தோய்ந்த — வேற்கண்-வேல்போன்றகண்களையும் — ஒண்ணுதல் - ஒளிபொருந்தியநெற்றியையுமுடைய — மடவார்-மாதரது — உள்ளம் - மனமாகிய — மீன் - மீனை — கவர்-கிரகிப்பதற்குப்போடப்பட்ட — தூண்டிலென்ன-தூண்டிலைப்போல — விசும்பிடை-ஆகாயத்தினிடத்து — விளங்கிற்று-பிரகாசித்தது — எ-று. (கருத்து) இளம்பிறை உதயமானது மன்மதன்-மாதர்கள் மனமாகிய மீனைக்கிரகிக்கப்போடப்பட்ட — தூண்டிலைப் போலிருந்ததுஎன்பதாம். (௩௰)

நீனிறத்தங்கண்வான * நீள்கடற்பரப்பிற்றூய
வானிலாக்கதிர்கள்வீசிவயின்வயின் விளங்குகின்ற
மீனெனுங்கதிர்கொண்முத்தவெண்மணியுயிர்த்துத்தோன்றுங்
கூன்முதுசிப்பியென்ன வெழுந்தது குழவித்திங்கள்

(இ-ள்.) குழவித்திங்கள்-இளம்பிறையானது — நீனிறத்து-நீலநிறம்பொருந்திய — அங்கண்-அழகியஇடத்தையுடைய — வானம் - ஆகாயமாகிய — நீள்-நீண்ட — கடற்பரப்பில்-கடலினதுபரப்பிலே — தூய-பரிசுத்தமாகிய — வால்-வெள்ளிய — நிலாக்கதிர்கள் - பிரகாசத்தையுடையகிரணங்களை — வீசி-எறிந்து — வயின்வயின்-இடங்கள்தோறும்விளங்குகின்ற-பிரகாசிக்கின்ற — மீனெனும்-மீனென்கிற-கதிர்கொள்-கிரணங்களைக்கொண்ட-முத்தவெண்மணி-வெள்ளியமுத்தங்களை, உயிர்த்து-ஈன்று, தோன்றும்-விளங்கும், கூன்முதுசிப்பியென்ன -வளைந்தமுதுகையுடையஇப்பியைப்போல — எழுந்தது-எழுந்தது — எ-று. * தருக்கசங்கிரகம்-௩௨-ரு-அளத்தல்வழக்கினகாரணவளவது - புண்மைபெருமைநெடில்குறிலென்னும், பாகுபாட்டினைல் வகைத்தாகும் - இவ்விதியால்-நீளம்காண்களவையிலொன்றும் (கருத்து) நட்சத்திரங்களோடு உதயமானஇளம்பிறையானது முத்துக்களையீன்ற இப்பகளைப்போலிருந்ததுஎன்பதாம். (௩௧)

ஓங்குயர்விசும்புபூத்த வுடுப்புகர்முகத்ததாய
வாங்குவிற்றடக்கைமாரன்மலர்நிலையுலகிற்றூண்டுந்



தூங்கிருட்களிநல்யானைதூரந்திடுந்தோட்டிபோலத்
திங்கதிர்க்குழவித்திங்கள்சேணிடைத்திகழ்ந்ததன்றே

(இ-ள்) திங்கதிர்-தித்திப்புப்பொருந்திய கிரணங்களையுடைய — குழவித்திங்கள்-இளம்பிறையானது — வாங்கு-வளைக்கப்பட்ட — வில் - கருப்புவில்லேந்திய — தடக்கை- விசாலம்பொருந்திய கையையுடைய — மாரன்-மன்மதனானவன் — மலர்தலையுலகில் - பரந்தஇடத்தையுடையவுலகத்தில் — தூண்டும்-செலுத்துகின்ற — ஓங்குயர்-மிகவுமுயர்ந்த — விசும்பு- ஆகாயத்தில் — பூத்த-உண்டாகிய — உடு - தாரகைகளாகிய — புகர்முகத்ததாய - புள்ளிபெற்றமுகத்தையுடையதாகிய — தூங்கு - தங்கிய — இருள் - இருளாகிய — களிநல்யானை - களிப்பையுடைய நல்லயானையை — தூரந்திடும் - ஓட்டும் — தோட்டிபோல-அங்குசம்போல் — சேணிடை - ஆகாயத்தினிடத்து — திகழ்ந்தது - பிரகாசித்தது — எ-று. (கருத்து) இளம்பிறைத்தோற்றமானது மன்மதன்செலுத்தும் இருளாகிய யானையையோட்டும் அங்குசம்போலிருந்தது என்பதாம். (௩௨.)

பிள்ளைமாமதியங்கான்றநிலவழற்பிழம்புபற்ற
வுள்ளநெக்குருகிமாழாந்துலம்பொருவைரத்திண்டோ
ளள்ளிலைவடிவேலேந்துமரசிளங்குமரர்பூண்ட
தள்ளருங்காதலெம்மாற்சாற்றலாந்தகைமைத்தன்றே,

(இ-ள்) பிள்ளைமாமதியம்-இளம்பிறையானது — கான்ற - வீசிய — நிலவு-சந்திரிகையாகிய — அழற்பிழம்பு - அக்கினித்திரட்சியானது — பற்ற-பிடிக்க — (அதனால்) உள்ளம்-மனமானது — நெக்குருகி- மிகவுமுருகி — மாழாந்து - மயங்கி — உலம்பொரு- திரள்கல்லையொத்த — வைரத்திண்டோள் - வச்சிரம்போன்றதிண்ணியதோளையுடைய — அள்ளிலை-தசையையள்ளிக்கொள்ளுகின்றஇலையையுடைய — வடிவேலேந்தும் - வடித்தவேலையேந்துகின்ற — அரசிளங்குமரர்-இராசகுமாரர்கள் — பூண்ட-அடைந்த — தள்ளருங்காதல் - தள்ளுதற்கரிய ஆசையை — எம்மால்-எம்மால் — சாற்றலாம் - சொல்லலாமாகிய — தகைமைத்தன்று-தகைமையையுடையதன்று — எ-று (கருத்து) இளம்பிறைக்கனலினால் அரசர்கள் மனமுருகியடைந்தகாதலை எம்மாற்சொல்லக்கூடுமோஎன்றார் புராணிகர் என்பதாம், (௩௩)

ஏற்றுரிமுரசந்துஞ்சாவிதர்ப்பர்கோனினிதினீன்ற
கோற்றொடிவதுவைவேட்டுக்கூரிருட்கங்குற்போதிற்
றூற்றிளம்பூகவேலித்தண்பணைநாடதங்காத்து
மாற்றல்சானளனுக்குற்றவருந்துயருரைக்கலுற்றும்.

(இ-ள்) ஏற்றுரி-இடபத்தின்றோலாற்செய்த — முரசம் - பேரிகையானது — துஞ்சா - உறங்காதவாயிலையுடைய — விதர்ப்பர்கோன் -வீமன் — இனிதினீன்ற - இனிமையினாற்பெற்ற — கோற்றொடி-தமயந்தியானது — வதுவைவேட்டு - விவாகத்தைவிரும்பி — கூரிருள்-மிகுந்தவிரு

லையுடைய—கங்குற்போதில் - இராப்பொழுதில்—தாறு - குலைகளையுடைய—இளம்பூகவேலி - இளமைபொருந்தியகமுகவேலிசூழ்ந்த—தண்-குளிர்ச்சிபொருந்திய—பணை- வயல்களையுடைய—விடதங்காக்கும்-கிட்டதேசத்தைத்தபாக்கின்ற—ஆற்றல்சால்- பொறுமைமிக்க—களனுக்கு - வீரமகாராசனுக்கு—உற்ற-பொருந்திய—அருந்துயர் - பொறுத்தற்கரியதுயரை—உனாக்கலுற்றும் - சொல்லத்தொடங்கினேம்—எ-று. (கருத்து) தமயந்தியின் விரகத்தைவிரும்பு களனுக்குப்பொருந்திய துன்பத்தைச்சொல்லத்தொடங்கினேம் என்பதாம். (௬௪)

கலிவிருத்தம்.

பனிமைக்கடலிற்படுமாரமிர்தோ
டினிதிற்றிருவோடெழுந்தனையென்
மனனுற்றவள்வாணுதல்போலுதியாற்
கனலத்தகுமோகலைவெண்மதியே.

(இ-ள்) கலை-கலையையுடைய—வெண்மதியே - வெள்ளியசந்திரனே—பனி- குளிர்ச்சிபொருந்திய—மை-கரிய—கடலிற்படும் - கடலிற்றோன்றிய—ஆர் - நிறைந்த—அமிர்தோடு - அமிர்தத்துடன்—இனிதில்- இனிமையுடைய—திருவோடும்-இலக்குமியுடன்—எழுந்தனை-தோன்றினாய்—என்மனனுற்றவள் - என்மனத்திலிருப்பவளாகிய தமயந்தியினது—வாள் - ஒளிபொருந்திய—நுதல்போலுதியால்- நெற்றிபோலிருக்கின்றாய்—கனலத்தகுமோ - (நீ) என்னைச்சுடத்தகுமோ—எ-று. (கருத்து.) களங்கலைகளையுடையசந்திரனே அமிர்தத்தினோடும், இலக்குமியோடும், பிறந்தாய் தமயந்திநெற்றியைப்போலிருக்கின்றாய் என்னைச்சுடத்தகுமாவென்றான் என்பதாம். (௬௫)

கொந்தார்குவளைக்குளிர்மென்மலரிற்
பைந்தாதுழைந்துபடிந்தாறுஞ்
சந்தாவியூடுதவழ்ந்துவரு
மந்தாநிலமேயுயிர்வௌவுதியோ.

(இ-ள்) கொந்தார்-திரளாகநிறையப்பெற்ற—குவளை - உற்பலத்தினது—குளிர் - குளிர்ச்சிபொருந்திய—மென்மலரில் - மெல்லியமலர்களிலிருக்கும்—பைந்தாது - பசியமகரந்தங்களில்—உழைந்து- நெருங்கி—படிந்து - முழுகி—நறும்-நறிய-சந்தாடவியூடு-சந்தனக்காட்டினிடத்தில்—தவழ்ந்துவரும் - தவழ்ந்துவருகின்ற—மந்தாநிலமே - இளந்தென்றலே—(நீ)உயிர் - என்னுயிரை—வௌவுதியோ - அபகரிக்கின்றனையோ—எ-று. (கருத்து) களங்தென்றற்காற்றே என்னுயிரைக்கிரகிக்கின்றாயோவென்றான் என்பதாம். (௬௬)

அயில்வாளிதுரந்தடல்வேள்பொரலாற்
செயலேதுமிலாதிளைத்தயர்வே
னுயிர்போலவளின்சொலுணர்த்திவரிக்
குயிலேயெனதாருயிர்கொல்லுதியோ.



(இ-ள்) அடல்-கொலைசெய்கின்ற—வேள்-மன்மதனானவன்—அயில் - கூர்மைபொருந்திய—வாளி - அம்புகளை—துரந்து - செலுத்தி—பொரலால் - பொருதலால்—செயலேதுமிலாது-ஒருசெய்கையுமில்லாமல்—இளைத்து-மயங்கி—அயர்வேன் - வருந்துவேனுடையனது—உயிர்போல்பவள் - உயிரையொப்பவளாகியதமயந்தியினது—இன்சொல்- இனியமொழியை—உணர்த்தி - அறிவித்து—வரிக்குயிலே - இசையையுடையகுயிலே—எனது-என்னுடைய—ஆர் - நிறைந்த—உயிர்-உயிரை—கொல்லுதியோ - கொல்லுகின்றனையோ—எ-று. * தருக்கசங்கிரகம்-ந-கூ-உயிர்தானுடற்றோறும் வெவ்வேறாகும் - இவ்விதியால் எல்லாவுயிரினுமக்கனுயிர்சிறந்தது (கருத்து) ஏ குயிலே என்னுயிரைக்கொல்கின்றாயோ என்றான்-எ-ம். (௬௭)

விண்ணோர்விடுதூதுவிளம்புதலாற்
பெண்ணாரமிர்தேபிழைசெய்தனனோ
வெண்ணாதுறுமிந்திரசாலமெனக்
கண்ணூடுபுகுந்துகரந்தனையே.

(இ-ள்) விண்ணோர்-தேவர்களால்—விடு-விடுக்கப்பட்ட—தூது—தூதினை— விளம்புதலால்-சொல்லுதலால்—பெண்ணாரமிர்தே - தமயந்தியே—பிழைசெய்தனனோ - குற்றஞ்செய்தேனோ—எண்ணாது - நினைக்கப்படாத.(அனைத்தும்)—உறும் - பொருந்துகின்ற— இந்திரசாலமென - இந்திரசாலவித்தைபோல—கண்ணூடு - என்கண்ணினிடத்தில்—புகுந்து-நுழைந்து—கரந்தனை-ஒளித்தாய்—எ-று.(கருத்து) நளன் தமயந்தியை உருவெளித்தோற்றமாகக்கண்டு தன்கண்ணில் இந்திரசாலமாகஒளித்துக்கொண்டாயென்றான்-எ-ம். (௬௮)

துஞ்சாதயர்வோடுயிர்சோர்தர வெங்
நஞ்சார்விழிவேலெறிகன்னுதலாம்
பஞ்சேரடியாயிழைபாலுறையு
நெஞ்சேயெனைநீயுநினைந்திலையே.

(இ-ள்) துஞ்சாது-உறங்காமல்—அயர்வோடு-துன்பத்தோடு—உயிர் - ஆவியானது—சோர்தர - தளர்ச்சியடைய—வெம் -வெப்பம்பொருந்திய—நஞ்சார் - விடநிறைந்த—விழிவேல் - கண்ணாகியவேலை—எறி - எறிகின்ற—கன்னுதலாம் - கல்லபுருவத்தையுடையவளாகிய—பஞ்சு-செம்பஞ்சுக்குழம்பணிந்த-ஏர் - அழகிய—அடி -பாதங்களையுடைய—ஆயிழைபால்-தமயந்தியிடத்து—உறையும் - தங்குகின்ற—நெஞ்சே - என்மனமே—எனை-என்னை—நீயும்- நீயும்—நினைந்திலை- நினைந்தாயில்லை—எ-று. (கருத்து) தமயந்தியினிடத்துத்தங்குகின்ற என்மனமே நீயும் என்னைநினைக்கவில்லை என்றான் என்பதாம். (௬௯)

என்றார்வமொடின்னபுலம்பியணிக்
குன்றார்புயன்மெய்த்துயர்கூர்தரலும்

பொன்றாழ்பிதிர்சிந்தியபொம்மன்முலைப்
பின்றாழ்குழலுற்றதுபேசிடுவாம்.

(இ-ள்) என்று-இப்படியென்று—ஆர்வமொடு - ஆசையோடு—இன்ன-இத்தன்மையவாக—புலம்பி-இரங்கி—மணி - அழகிய—குன்றார்புயன்-நளமகாராசன்—மெய் - உண்மையாகிய —துயர்கூர்தரலும்-அதிகதுன்பங்கொண்டவளவில்—பொன் - பொன்னனது— தாழ்-தாழும்படி—பிதிர்-தேமல்—சிந்திய - சிதறி—பொம்மல் - பொலிவுபெற்ற—முலை - முலைகளையும்—பின் - பிற்பக்கத்தில்—தாழ் - தாழ்கின்ற—குழல் - கூந்தலையுமுடையதமயந்தி—உற்றது - அடைந்ததுயரத்தை—பேசிடுவாம்-சொல்லுவாம்-எ-று. (கருத்து) இவ்வாறுநளன்புலம்பித்துன்பப்படுமளவில் தமயந்திதுன்பத்தைச்சொல்லுவாம் என்றார் புராணிகர் என்பதாம். (௬௰)

கணைவேணிகர்காமருகாளைபுயத்
தணையர்மலெலன்மார்பகலங்கவரா
விணைமால்வரையென்னவளர்ந்தனிராற்
பணைமாமுலைகாள்பயனென்னைகொலாம்

(இ-ள்) கணை - மலர்க்கணைகளையுடைய—வேணிகர் - மன்மதனையொத்த—காமர் - அழகிய—காளைபுயத்து -நளமகாராசனுடையதோள்களில்—அணையாமல் - அழுந்தாமல்—என் - என்னுடைய—மார்பகலம் - பார்பினிடமெல்லாம்—கவரா - கவர்ந்துகொண்டு—இணை -இரண்டாகிய—மால் - பெரிய—வரையென்ன - பர்வதங்களென்றுசொல்லும்படி—வளர்ந்தனிர் -வளர்வுற்றீர்கள்—பணை-பருத்த—மா-மகத்தாகிய—முலைகாள் - ஸ்தனங்களே—பயன் - (உமக்கும்) பயன்—என்னை-யாது—எ-று. (கருத்து) என்கனதனங்களேநளன்புயங்களையணையாவிட்டாலுங்களுக்குபபயனென்ன என்றாள்-எ-ம். (௬௧)

முனம்வானவர்தூதுமொழிந்திடுநாட்
புனைதாரவன்மார்பிடைபுல்லியுநீ
நினையாதுவிடுத்தனைநின்றுருகு
* மனனேயினியென்கொல்வருந்துவதே.

(இ-ள்)முனம்-முன்னே—வானவர்தேவர்களுடைய—தூது - தூதை—மொழிந்திடுநாள் - சொல்லியநாளில்—புனைதாரவன்-நளமகாராசனுடைய—மார்பிடை - மார்பினிடத்திலே—புல்லியும் - தழுவியும்—நீநினையாது - நீ எவ்வளவுஞ்சிந்தியாமல்—விடுத்தனை - அவனைவிட்டு—நின்று - நினைத்துநின்று—உருகும்-கரைகின்ற—மனனே - நெஞ்சமே—இனியென்கொல் - இப்போதுஎன்னகாரணமாக—வருந்துவது-வருத்தமடைவது—எ-று. * அகத்தியம் - நெஞ்சமுன்னிலையாய் இருத்திக்கூறுதல் - சஞ்சலமிகுந்தன்மையானே -இவ்விதியாலறிக (கருத்து) தமயந்திதன்மனதைக்குறித்துவன் வருத்தமடைகிறு யென்றாளென்பதாம். (௬௨)



நண்ணார்தொழுவேனளன்மார்பகலந்
தண்ணாரணையிற்றழுவுங்கனவி
லெண்ணாதுவிழித்துவிடுத்திடுமென்
கண்ணேயிஃதென்கொல்கலுழ்வதுவே.

(இ-ள்) நண்ணார்-பகைவர்—தொழு-துதிக்கின்ற—வேல் -வேலையேந்திய——நளன்-நளமகாராசனுடைய — மார்பகலம்-மார்பினை—தண்ணார்-குளிர்ச்சிபொருந்திய—அணையில்- மெத்தையில் — தழுவும்-தழுவுகின்ற—கனவில் - சொப்பனத்தில்—எண்ணாது-ஆலோசியாமல்—விழித்து-விழித்துக்கொண்டு— விடுத்திடும் - விட்டுவிடுகின்ற—என்கண்ணே-என்கண்களே—இஃதென்கொல்- இதுஎன்னகாரணமாக—கலுழ்வது - கலங்குவது —எ-று. (கருத்து) என்கண்களேநான்சொப்பனத்தில் நளனைக்கூடும்போது நீங்கள்விழித்தழுவதென்னென்றாளென்பதாம். (௬௩)

துதைநாண்மலர்வாளிதுரந்துதுரந்
தெதிர்வேளுயிர்கொல்லுதலெண்ணிலைநீள்
கதிர்வாணிலவ்வாரழல்கான்றெழுவெண்
மதியேயெனைநீயும்வருத்துதியோ.

(இ-ள்) துதை-நெருங்கிய—நாண்மலர் - புதியமலராகிய—வாளி-பாணங்களை—துரந்துதுரந்து- விடுத்துவிடுத்து—எதிர் - எதிர்க்கின்ற—வேள்-மன்மதனானவன்—உயிர்கொல்லுதல் - உயிரைக்கொல்லுதலை—எண்ணிலை-நினைத்தாயில்லை—நீள் - நீண்ட — கதிர்-கிரணங்களினுடைய—வாள்-ஒள்ளிய—நிலவு-பிரகாசமாகிய—ஆரழல் - மிகுந்த நெருப்பை—கான்று வீசிக்கொண்டு—எழு-தோன்றுகின்ற — வெண்மதியே-வெள்ளியசந்திரனே—எனை-என்னை—நீயும்-நீயும் — வருத்துதியோ-வருத்துகின்றனையோஎ-று. (கருத்து) சந்திரனே மன்மதன்பாணத்தாலென்னைக்கொல்லுதலை நினைக்கவில்லைநீயும் வருத்துகின்றாய் என்றாளென்பதாம். (௬௪)

வேளாண்மைசெலுத்தல்விலக்கிலையாய்
வாளாவுறைகின்றதுமன்னறமோ
தோளாண்மையின்மன்னர்தொழுஞ்சுடர்வேற்
காளாயெனதாருயிர்காவலனே.

(இ-ள்) தோளாண்மையின்-புயவலிமையினால்— மன்னர் தொழும்-அரசர்களால்வணங்கப்பட்ட— சுடர்வேற்காளாய் - ஒளிபொருந்திய வேலைத்தரித்தகாளையையொத்தவனே—எனது - என்னுடைய— ஆர்-நிறைந்த—உயிர்-உயிருக்குக்காவலனே- அரசனாகிய நளமகாராசனே—வேள்-மன்மதனானவன் — ஆண்மைசெலுத்தல் - (உனைவிழந்த-வென்னிடத்துப்) பராக்கிரமஞ்செலுத்துவதை — விலக்கிலையா

ய்-ஒழிக்காதவனும்—வாளாவுறைகின்றது-சும்மாவிருக்கின்றது — மா ன்னறமோ-அரசாதுதருமமோ—எ-று. (கருத்து) நளமகாராசனேமன் மதன்பாணஞ்செலுத்துதலைநீவிலக்காதிருக்கின்றது இராச தருமமோ வென்றுள்-என்பதாம் (சரு)

இடரோதவிராதிராவோவிடியர்
தடல்வேலவர்தாவருளோபுரியார்
குடவால்வளையேகுருகேதிரையே
கடலேகழியேயிதுவோகடனே.

(இ-ள்)குடவால்வளையே-குடம்போன்றவெள்ளியசங்கே— குரு கே-நாரையே—இரையே- அலையே—கடலே-சமுத்திரமே — கழியே-கழிநிலமே—இடரோ - துன்பமோ—தவிராது - நீங்காது — இரவோ-இராத்திரியோ—விடியாது-விடியமாட்டாது—அடல் - கொலைசெய்கி ன்ற — வேலவர்தாம்-வேற்படையையுடையநளமகாராசர்—அருளோ புரியார்-கருணைசெய்யார் (ஆதலால்) — இதுவோ - இப்படிவருந்துவ தோ—கடன்-என்கடன்—எ-று. ஓ-இரக்கப்பொருளிலும் - ஏ - எண் ணிலும்வந்தன (கருத்து)தமயந்திகழிக்கனாப் புலம்பல்என்பதாம். ()

கழலாவளையுங்கனலாமதியு
முழலாமனனும்பெறுநாளுளதோ
மழவேறனையான்மருவாவிரகத்
தழலாலுருகுந்தமியேனினியே.

(இ-ள்) மழவேறனையான் - இளவேற்றையொத்தநளமகாராசன் —மருவா - பொருந்தப்பெறாத—விரகத்தழலால் - விரகாக்கினியால்— உருகும்-கரைகின்ற—தமியேன்-தமியேனாகியநான்—இனி - இனி—க ழலாவளையும்-கழலாதவளையல்களையும்—கனலாமதியும் - சுடாதசந்தி ரனையும்—உழலாமனனும் - கவலைப்படாதமனத்தினையும் — பெறுநா ள்-பெற்றுக்கொள்ளுநாள்—உளதோ - உண்டாகுமோ —எ-று. (கருத் து) நான்கழலாத வளையல் களையும் சுடாதசந்திரனையுங் கவலைபடாத நெஞ்சையும்பெறுநாளுண்டோஎன்றுள்-எ-ம். (சஎ)

அள்ளிக்கொளலாமிருளூட்டடர்வேள்
கள்ளத்தெனதாருயிரோகவர்வான்
விள்ளற்கரிதாம்விரகந்தமியே
னுள்ளத்துறைவாயுணர்கிற்றிலையோ.

(இ-ள்) விள்ளற்கரிதாம்-சொல்லுதற்கரிதாகிய— விரகம்-விரகத் தையுடைய—தமியேன்-தமியேனாகிய என்னுடைய — உள்ளத்துறை வாய்-மனத்திலிருக்கின்றவளே—(நீ)அள்ளிக்கொளலாம்-(கையால்) அள்ளிக்கொளலாம்படியிருந்த—இருளூடு - இருளினிடத்தில்— அட ர்வேள் - அடர்கின்றமன்மதனானவன்—கள்ளத்து-களவினால்—என



து - என்னுடைய—ஆர்-நிறைந்த— உயிர்-ஆவியை—கவர்வான் - அப கரிப்பான்—உணர்கிற்றிலையோ -(அக்களவினை) யறிகின்றாயில்லையோ —எ-று.(கருத்து) என்னுள்ளத்திருக்கின்றவளே மன்மதன் என்னு யிரைஅபகரிப்பான்நீயறியாயோஎன்றுள்என்பதாம். (சஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றுவெந்துயருற்றிருகணீர்வாரவிள முலைத்துணைபசப்பூர; மி ன்றிகழ்மருங்குற்செய்யவாய்ப்பேதைமெலிவொடுவருந்துமெல்லையினி ல், மன்றலங்கமலமுகைமுறுக்கவிழ்த்துவரிச்சிறைத் தும்பி பாட்டய ரத், துன்றிருள்பருகும்விரிகதிர்பரப்பிச் சுடரவன்குணபுலத் ✻ தெழு ந்தான்.

(இ-ள்.)என்று-இப்படியென்று—வெந்துயருற்று-வெவ்விய துன் பத்தையடைந்து—இருகணீர்வார - இரண்டுகண்களினின்றும் நீரொ ழுக—இளமுலைத்துணை - இளமைபொருந்திய இரண்டுஸ்தனங்களும் —பசப்பூர-வேறுபட்டநிறத்தையடைய — மின் - மின்னல்போல— திகழ்பிரகாசிக்கின்ற—மருங்குல்-இடையினையும்—செய்யவாய் - சிவ ந்தவாயினையுமுடைய—பேதை-தமயந்தியானவள்—மெலிவொடு - இ ளைப்போடு—வருந்தும் - வருத்தப்படுகின்ற—எல்லையினில் - காலத்தி ல்—மன்றல்-வாசனைபொருந்திய—அம் - அழகிய—கமலமுகை - தா மரையரும்பினுடைய—முறுக்கவிழ்த்து-முறுக்குவிழச்செய்து— வரி- இரேகைகள்பொருந்திய—சிறை - சிறகையுடைய—தும்பி-வண்டுகள் —பாட்டயர-பாட்டைப்பாட—துன்று -நெருங்கிய — இருள்பருகும்- இருளையுண்ணும்—விரிகதிர்பரப்பி-விரிகின்றகிரணங்களைப் பரவச்செ ய்து—சுடரவன்-சூரியனானவன்— குணபுலத்து - கிழக்குத் திசையில் —எழுந்தான்-உதித்தான்—எ-று.✻ தருக்கசங்கிரகம்-ச.கு - எழும்பல் விழுதல்வளைதனிமிர்த-னடத்தலென்றுகருமமை வகைத்தே - இவ்வி தியால் எழுந்தானென்கருமத்தொன்று(கருதது) தமயந்திவருத்தப்படு ங்காலத்தில் சூரியனுதயமாகினானென்பதாம். (சசு)

தனிவருந்துயரிற்கண்படைபெறாது தளர்வொடுவருந்தி வெய்து யிர்க்கு, மணிபெழுவனையபொற்றடக்கிணிதோண்மன்னவர் மனமகிழ் சிறப்பப், பணியாவல்குற்கதிர்முலைத்துவர்வாய்ப்பைந் தொடிவதுவை யின்றென்று, வணிநகரணிகென்றரசர்கோன்பணியாலதிர்குரற்கடிமு ரசறைந்தார்.

(இ-ள்.) தனிவருந்துயரின்-ஆறுதற்கரியதுன்பத்தினால்—கண்ப டைபெறாது - நித்திரைசெய்யாமல் — தளர்வொடு - தளர்ச்சியுடன்— வருந்தி-வருத்தப்பட்டு — வெய்துயிர்க்கும்-பெருமூச்சுவிடுகின்ற — மணிபெழுவனைய—மணித்தூண்போன்ற—பொன்- அழகிய— தடம் பருத்த—திணி-வலிமைபொருந்திய—தோள் - தோளையுடைய—மன் னவர்-அரசர்கள்—மனமகிழ்சிறப்ப-மனமகிழ்ச் சிமிக — பணியாவல்

குல்-அராப்படம்போன்றவல்குலேயும்— கதிர்முலே - காந்தி பொருந்தியஸ்தனங்களேயும்—துவர்வாய்-செவ்வாயையும்—பைந்தொடி- பசியவளேயலேயுமுடையதமயந்தியினது—வதுவை - விவாகம்— இன்றென்ஞ-இன்றென்றுசொல்லி—அணி-அழகிய—நகாணிகென்று - நகரையலங்கரிக்கவென்று—அரசர்கோன்பணியால் - வீமராசனேவலினுல்—அதிர்குரல்-அதிர்கின்றவோசையையுடைய—கடி - பெருமைபெற்ற—முரசு-பேரிகையை—அறைந்தார்-(வள்ளுவ)ரடித்தார்கள் —எ-று. (கருத்து) அரசர்கள்மனங்களிக்கவீமராசன் கட்டளேயினுலே தமயந்திக்கு விவாகமின்றைக்கென்றுநகரை யலங்கரிக்கும்படிபேரி கையறைந்தார்களென்பதாம். (௫௰)

இமிழ்கடிமுரசங்கறங்குபேரோதையெழிலகர் மாந்தர்தஞ் செவி
யி, னமிழ்துகுத்தென்னத்தவழ்தலுமகிழ்வுற்றணிவிழவருத கோமறு
கிற், கமழ்நறுந்தாற்றுப்பாளேவாய்க்கமுகுங் கன்னலுங் கதலியுநடுவா,
ருமிழ்கதிரொறிக்கு மணிநெடுங்கொடிகளுயர் விசும்பகடுறநிரைப் பார்,

(இ-ள்.) இமிழ்-இனிமையையுடைய—கடி-புதுமைபெற்ற—முரசம் - பேரிகையானது—கறங்கும் - ஒலிக்கும்—பேரோதை - பேரொலியானது — எழிநகர் - அழகியநகரத்திலிருக்கும் — மாந்தர் தஞ்செவியின்-மனிதர்செவியில் — அமிழ்துகுத்தென்ன - அமிர்தத்தையுகுத்ததுபோல—தவழ்தலும்-தவழ்ந்தவளவில்—மகிழ்வுற்று - மகிழ்ச்சியடைந்து — அணி-அழகிய —விழவருத- திருவிழாநீங்காத—கோமறுகில் - இராசவீதியில்—கமழ்-பரிமளிக்கின்ற—நறு- நறிய—தாறு-குலேகளேயுடைய—பாளேவாய் - பாளேகள்வாய்ந்த—கமுகும்- கமுகமாமும்-கன்னலும்-கருப்பங்கழியும் — கதலியும் - வாழைமாமும்——நடுவார் - நடுவார்கள்—உமிழ்- கொப்புளிக்கின்ற — கதிரொறிக்கும்-கிரணத்தைவீசுகின்ற—மணி-இரத்தினங்கள்பதித்த — நெடுங்கொடிகள் - நெடியகொடிகளே—உயர்-உயர்ந்த—விசும்பகடுற— ஆகாயமுழுவதுநிறைய—நிறைப்பார்- வரிசையாகக்கட்டுவார்கள் — எ-று. (கருத்து)மனிதர்கள் மங்கலமுரசின் சத்தங்கேட்டவளவில்இராசவீதிகளில் பாக்குமரங்களும் கரும்புவாழையும் நடுவார்கள் ஆகாயமளாவக்கொடிகளுங்கட்டுவார்கள்—எ-ம். (௫௧)

சேணுயர்பரிதிதழும்புறநிவந்த செழுமணித்தோரணநடுவார், வா
ணிலவொழுகுமணிவடம்புனேந்துவயங்கு பொற்றசும்புக ணிரைப்பா
ர், பாணிகர்வரிவண்டுளர்ந்துதேனுகரும் பனிமலர்த்தாம நாற்றிடுவார்,
தாணுறைகழித்துவிரிகதிரொறிக்குஞ்சுடர்மணிச் செறிதுக டுடைப்பார்

(இ-ள்)சேணுயர்-மிகவுமுயர்ந்த—பரிதி-சூரியனுனவன் — தழும்புற - தழும்புபொருந்த—நிவந்த - உயர்ந்த— செழுமணி - செழுமையுள்ள மணிகள்பதித்த—தோரணம் - தோரணங்களே—நடுவார் - நடுவார்கள்—வாள் - ஒளிபொருந்திய— நிலவு-சந்திரிகை — ஒழுகும் வீசுகின்ற—மணிவடம்- முத்துமாலேகளே — புனேந்து - தரித்து—வயங்கு-பிரகாசிக்கின்ற—பொற்றசும்புகள் - பொற்குடங்களே — நிரைப்பார் - வைப்பார்கள்—பாணிகர்-பண்ணேயொத்த—வரி- பாட்டுகளேயுடைய—வண்டு - வண்டுகள்—உளர்ந்து - கடவி,தேனுகரும்-தேனுண்ணும்—பனிமலர் - குளிர்ச்சிபொருந்தியமலராற் -றெடுத்த—தாமம் மாலேகளே—நாற்றிடுவார் - தொங்கக்கட்டுவார்கள்—தூண் - தூண்களின்—உறைகழித்து-உறையைநீக்கி—விரிகதிரொறிக்கும்-விரியுங்கிரணங்களேவீசுகின்ற—சுடர்-பிரகாசிக்கின்ற,மணி-இரத்தினங்களில்— செறிபடிந்த—துகள்-புழுதியை—துடைப்பார்-துடைப்பார்கள்—எ-று. (கருத்து) சூரியன்தழும்படையைத்தோரணநடுவார்கள் முத்துமாலேகளணிந்து பொற்குடங்கள்வைப்பார்கள் பூமாலேகள்கட்டுவார்கள் தூண்களினுறைகளேக்கழற்றித்தூசைத்துடைப்பார்கள்.எ-ம். (௫௨)

மைந்தரோடியந்லார்பரிந்தமணிவடக்குப்பைகளகற்றிச்
சந்தமென்குழம்பானன்னிலமெழுகித்தண்முளேப்பாலிகை யமைப்பா,
ரிந்திரதனுவிற்றிகழ்தரச்சாந்துமெரிமணிச்சுண்ணமுமிறைப்பார், நந்த
லில்விளக்கமணிசெப்பொற்றகளிநறுநெய்பெய்தெளிருறவெடுப்பார்.

(இ-ள்) மைந்தரோடு - புருடருடன்—ஊடி-பிணங்கி—அந்லார்-அந்தமகளிர்கள்—பரிந்த-நீக்கிய—மணிவடக்குப்பைகள் - முத்துமாலேகளின்குவியல்களே—அகற்றி-நீக்கி—சந்தமென்குழம்பால்- சந்தனத்தினுடையமெல்லியகுழம்பினுல்—நன்னிலமெழுகி-நல்லபூமியைமெழுகி—தண்முளே - குளிர்ச்சிபொருந்தியமுளேகளேயுடைய—பாலிகை-பாலிகைகளே—அமைப்பார் - வைப்பார்கள்—இந்திரதனுவில் - இந்திரவில்லேப்போல—திகழ்தர - பிரகாசிக்க—சாந்தும் - சந்தனத்தையும்—எரி-காந்தியையுடைய—மணிச்சுண்ணம்- (அதன்மேல்) இரத்தினப்பொடிகளேயும்—இறைப்பார்-இறைப்பார்கள்—நந்தலில்-கெடுதலில்லாத—விளக்கம்-தீபங்களே—மணிசெய்பொற்றகளி-இரத்தினங்களிழைத்தபொன்னகல்களில்—நறுநெய்பெய்து - நல்லநெய்விட்டு—ஒளியுற-ஒளிபொருந்த— எடுப்பார்-ஏற்றுவார்கள்—எ-று. (கருத்து) புருஷர்களோடுபிணங்கிப் பெண்களெறிந்தமணிக்குப்பைகளேநீக்கிச் சந்தனக்குழம்பாலே நிலத்தைமெழுகி முளேப்பாலிகையைவைப்பார்கள் சந்தனக்குழம்பில்நவமணிப்பொடிகளே இறைப்பார்கள் நவமணிவிளக்கேற்றுவார்கள் என்பதாம். (௫௩)

ஐயரிசிதறுமழைமதர்நெடுங்கணஞ்சனமெழுதுவார்சாந்தத், தொய்யில்
வெம்முலேயினிலவுகொப்புளிக்குந்தாமணிப்பிறைவடமணிவார்
மையிருங்கூந்தல்வகிர்ந்துதேன்முரலுமட்டுவார்பூந்தொடை புனேவார்
கையுறுமருங்கிற்கதிரொளிபரப்புநகைமணிமேகலேபுனேவார்.

(இ-ள்) ஐயரிசிதறும்-அழகியசெவ்வரிபரந்த—மழை - குளிர்ச்சிபொருந்திய—மதர் - களிப்பையுடைய—நெடுங்கண் - நெடியகண்களில்—அஞ்சனமெழுதுவார்-மையெழுதுவார்கள்—சாந்தத்தொய்யில்- சந்தனக்கோலமெழுதப்பெற்ற—வெம்முலேயின்-விருப்பத்தைச்செய்யுந்தனங்களில்—நிலவு சந்திரிகையை—கொப்புளிக்கும் - உமிழ்கின்ற

—தா-பரிசுத்தமாகிய—மணி-இரத்தினங்களிழைத்த—பிறைவடம் -சந்திரஹாரத்தை—அணிவார்-அணிவார்கள்—மை-கரிய—இரும்-பெரிய—கூந்தல்—அளகபாரத்தை—வகிர்ந்து-கோதி—தேன்முரலும் - வண்டுகளொலிக்கின்ற—மட்டுவார்-தேனொழுகுகின்ற—பூந்தொடை-பூமாலைகள்—புனைவார்-சூடுவார்கள்—நையும்-நையுகின்ற—நுண் - நுண்ணிய—மருங்கில்-இடையில்—கதிர்-கிரணங்களினது— ஒளிபரப்பும்-ஒளியைவிரிக்கின்ற—நகை-காந்தியையுடைய—மணி- மணிகளிழைத்த—மேகலை-மேகலாபரணத்தை—புனைவார்-அணிவார்கள்—எ-று. (கருத்து) அங்கர்மாதர்கள் கண்களுக்குமையிடுவார்கள் கனதனங்களில் சந்திராரந்தரிப்பார்கள் கூந்தலில்மாலையயணிவார்கள் இடையில்மேகலாபரணந்தரிப்பார்கள் என்பதாம். (ருச)

சில்லரிச்சிலம்புபஞ்சிமேற்பணிக்குஞ்சீறடிகவின்செயப்புனைவா, ரொல்வளை திருத்தியாடமைபணைத்தோ ளெழில்பெறத்தொயில் வரைந்திடுவார்,அல்லியங்கமலமென்மலர்கவற்றுமடியினிலலத்தகமணிவார், வில்லுமிழொருகாழ்முத்தணியணிவார்விரைகமழ்தெரியல்கைபுனைவார்

(இ-ள்)சில்-ஆரவாரிக்கின்ற— அரி-பருக்கைக்கல்லையுடைய — சிலம்பு-சிலம்புகளை—பஞ்சிமேல்-பஞ்சின்மேல்மிதிப்பினும் — பனிக்கும்-வாடுகின்ற—சீறடி-சிறியபாதங்களில்—கவின்செய்- அழகுபொருந்த—புனைவார் - தரிப்பார்கள்—ஒல்-பிரகாசத்தையுடைய—வளை - வளையல்களை—திருத்தி- அணிந்து—ஆடமை-வெற்றியமைந்த, பணைத்தோள் - பருத்ததோள்களில்—எழில்பெற-அழகுபெறும்படி—தொயில்- சந்தனக்கோலத்தை—வரைந்திடுவார்-எழுதுவார்கள்—அல்லி- அகவிதழையுடைய—அம்- அழகிய—கமலமென்மலர்- தாமரையினதுமெல்லியமலரை—கவற்றும்-கவலைப்படுத்தும்—அடியினில்-பாதங்களில்— அலத்தகம்-செம்பஞ்சுக்குழம்பை—அணிவார் - பூசுவார்கள்—வில்- ஒளியை—உமிழ்-கொப்புளிக்கின்ற—ஒரு-ஒப்பற்ற—காழ்-தெறிய— முத்தணி-முத்துமாலைகளை— அணிவார்-அணிவார்கள்—விரைகமழ் - வாசனைகமழ்கின்ற—தெரியல்-மலர்மாலைகளை—கைபுனைவார் - அலங்கரிப்பார்கள்—எ-று.(கருத்து)பாதங்களிற்சிலம்பணிவார்கள் வளையல்களணிந்துதோள்களிற்சந்தனக்குழம்பாற்சித்திரமெழுதுவார்கள்- பாதங்களிற்செம்பஞ்சின்குழம்புபூசுவார்கள்-முத்தாரமணிவார்கள்- மலர்மாலைகளையலங்கரிப்பார்களென்பதாம் (ருரு)

கதிர்மதிதவழுமாடநீண்முகப்பிற்காழகிற்றீம்புகையிடுவார்முது மறைவாணர்க் ❋ இன்னமுதிடுவார்மொய்கதிர்வெயில்காந்தொழிய - மதிநிலவொழுகுநித்திலப்பந்தர்மாணுற வயின் வயினிரைப்பார்சதிமுறைதவறுதண்ணுமைகறங்கக்கூத்தியர்தனித்தனிநடிப்பார்.

(இ-ள்)கதிர்-கிரணங்களையுடைய—மதிதவழும்-சந்திரன் தவழ்கின்ற—மாடம்-உப்பரிகையினுடைய—நீண்முகப்பில் - நீண்டமுகப்பினில்—காழ் - வைரம்பொருந்திய—அகிற்றீம்புகை - அகிலினதினியபுகையை—இடுவார் - இடுவார்கள்—முதுமறைவாணர்க்கு - பிராமணர்களுக்கு— இன்னமுதிடுவார்- இனியஅமுதுசமைப்பார்கள்— மொய்-மொய்க்கப்பெற்ற—கதிர்வெயில்-சூரியனதுவெப்பமானது—காந்தொழிய - ஒளித்துநீங்க—மதிநிலவொழுகும் - சந்திரபிரகாசம்வீசுகின்ற—நித்திலப்பந்தர் - முத்துப்பந்தல்கள்—மாணுற - பெருமைபொருந்த—வயின்வயின்- இடங்கடோறும்—நிரைப்பார்-செய்வார்கள்—சதிமுறை - தாளவொற்றின்முறைப்படி—தவறு - தப்பாமல்—தண்ணுமை -மத்தளம்—கறங்க - ஒலிக்க—கூத்தியர் - நாடகக்கன்னியர் — தனித்தனி - வேறுவேறாக—நடிப்பார் - கூத்தாடுவார்கள்— எ-று.❋ தருக்கசங்கிரகம்-ம அ-சூ- சுவைத்திறங்கவர் வதுநாவினுனியது - நாவெனப்பெயரியதன்பொறியென்ப- இவ்விதியால் இன்னமுதுநாவின்விடையம்- (கருத்து) மாடங்களில்அகிற்புகையூட்டுவார்கள் பிராமணர்களுக்கமுதுசமைப்பார்கள் முத்துப்பந்தலிடுவார்கள் நாடகக்கணிகையர் நடனமாடுவார்கள் என்பதாம். (ருசு)

எழிறிகழ்கன்னிக்கமுகமென்மிடற்றினிசையெழீஇ யினிதுபாட்டயர்வார், செழுமலர்க்காந்தண்முகிழ்விரல்சேப்பத்திவ்வியாழின்னரம்புளர்வார்,முழுநெறிக்குமுத முகைநெரித்தேன்வாய்முகிழ்த்தருங் குரவைகள்புரிவார், கொழுமலர்வளைக்கைகொட்டிவே னெடுங்கட்கோதையர்குரவையாட்டயர்வார்.

(இ-ள்) எழில் - அழகானது—திகழ் - பிரகாசிக்கின்ற —கன்னி- இளமைபொருந்திய—கமுகமென்மிடற்றில் - கமுகையொத்தமெல்லியகண்டத்தில்—இசையெழீஇ - இசையையெழுப்பி—இனிது - இனிமையாக—பாட்டயர்வார் - பாட்டைப்பாடுவார்கள்— செழு-வளம்பொருந்திய—மலர்-மலரையுடைய—காந்தண்முகிழ்விரல் - காந்தளரும்பையொத்தவிரல்கள்—சேப்ப - சிவக்க—திவ்வு - வலிக்கட்டையுடைய—யாழ்-வீணையினுடைய—இன்னரம்பு - இனியநரம்பை—உளர்வார் —தடவுவார்கள்—முழுநெறி - முழுநெறிப்பையுடைய —குமுதமுகை- செவ்வல்லியரும்பை—நெரித்தென - நெரித்ததுபோல—வாயமுகிழ்த்து வாயைக்குவித்துக்கொண்டு—அரும் - அரிய—குரவைகள்புரிவார் - குரவைப்பாடலைப்பாடுவார்கள்—கொழுமலர்-செழுமையுள்ளதாமரைமலர்போன்ற—வளைக்கைகொட்டி -வளையலையணிந்தகைகளைக்கொட்டி—வேனெடுங்கண் - வேல்போன்றநெடியகண்களையுடைய— கோதையர் மாதர்கள்—குரவையாட்டயர்வார் - குரவைக்கூத்தாடுவார்கள்— எ-று. (கருத்து) பெண்கள்பாடுவார்கள் - வீணைவாசிப்பார்கள் - குரவைப்பாடல்பாடுவார்கள்-கைகளைக்கொட்டிக் குரவைக்கூத்தாடுவார்கள் என்பதாம். (ருஎ)

வெண்மதிக்கதிர்நூற்றனையவான்கவரிநெற்றிவெங்கனைவாம்புரவி, பண்ணுறுத்திடுவார்குருதிதோய் கோட்டுப்படுமதக்களிறு வெஞ்

சினத்த,வண்ணன்மால்யானைகவினுறப்பருமித்தணி விழாமறுகிடைக் கொணர்வார், மண்ணமைகொடிஞ்சிக்கூந்தன்மான் றடந்தேர்வானவரூர் தியிற்றருவார்.

(இ-ள்) வெண்மதி-வெள்ளியசந்திரனுடைய—கதிர் -கிரணங்களை—நூற்றனைய - நூற்றதையொத்த—வான் -மேலாகிய—கவரி-சாமரையணிந்த—நெற்றி-நெற்றியையுடைய—வெம்- வெய்ய—கலினம் - கடிவாளம்பூண்ட—வாம் - தாவுகின்ற—புரவி - குதிரைகளுக்கு—பண்ணுறுத்திடுவார் - கல்லணைசேர்ப்பார்கள்—குருதிதோய் - உதிரந்தோய்ந்த கோட்டு - கொம்பையுடைய—படு-உண்டாகின்ற—மதக்கலுழி - மதப்பெருக்கையும்—வெஞ்சினத்த - வெவ்வியகோபத்தையும்—அண்ணல்-பெருமையினையும்—மால் - மயக்கத்தையுமுடைய—யானை - யானையை—கவினுற-அழகுபொருந்த—பருமித்து அலங்கரித்து—அணி-அழகிய—விழா-திருவிழாவையுடைய—மறுகிடை-வீதியிலே—கொணர்வார்-கொண்டுவருவார்கள்—மண்மை- ஒப்பனையமைந்த—கொடிஞ்சி-மேன்மொட்டையும்—கூந்தன்மான் - புறமயிர்பொருந்தியகுதிரைகளையுமுடைய—தடந்தேர் - விசாலம்பொருந்தியதேர்களை—வானவரூர்தியில்-தேவர்விமானங்கள்போல்—தருவார்-கொண்டுவருவார்கள்—எ-று. (கருத்து) குதிரைகளுக்குக்கல்லணையிடுவார்கள் யானைகளையலங்கரித்துவீதியிற்கொண்டுவருவார்கள், தேர்களையலங்கரித்துக்கொண்டுவருவார்கள் என்பதாம். (ருஅ)

இருங்கடற்றோன்றுமழகதிரோய்க்கு மெரிமணிச்சிவிகையின்வருவார்; சுரும்புவீழ்ந்தாற்றமும்மதம்பொழியுஞ்சூழிமால்யானையிற்புகுவார், திருந்துமொண்சுழியகூந்தன்மான்றேரிற்சேட்டிளம் பருதியிற்செல்வார், பொருந்தமண்டோயாதகல்விசும்பகவும் பொங்குளைப்புரவியிற்போவார்.

(இ-ள்) இருங்கடற்றோன்றும் - பெரியகடலிலுதிக்கின்ற—மழகதிரோய்க்கும்- இளஞ்சூரியனையொக்கும்—எரிமணி-பிரகாசிக்கின்றஇரத்தினங்கள்பதித்த,சிவிகையின்-தண்டிகையில் — வருவார்வருவார்கள்—சுரும்பு - வண்டுகள்—வீழ்ந்து-விரும்பி—ஆர்ப்ப-ஒலிக்க—மும்மதம்பொழியும் - மும்மதங்களையும்பொழிகின்ற—சூழி - முகபடாத்தையுடைய—மால்-பெரிய—யானையிற்புகுவார்-யானையின்மேல்வருவார்கள்—திருந்தும்-திருந்தப்பெற்ற—ஒள்-விளங்குகின்ற—சுழிய - சுழிகளையுடைய—கூந்தன்மான்-புறமயிரினையுடையகுதிரைகட்டிய—தேரில்- இரதத்தில்—சேட்டிளம்பரிதியில்-மிகுந்தஇளமையுடையசூரியனைப்போல்—செல்வார்-செல்வார்கள்—பொருந்த-பொருந்தும்படி—மண்-பூமியிலே—தோயாது - தோயாமல்—அகல்விசும்பு - அகன்றஆகாயத்தில்—அகவும்-ஆடுகின்ற—பொங்கு-மிகுந்த—உளை-புறமயிரினையுடைய —புரவியில்-குதிரையின்மேல்—போவார்-போவார்கள்—எ-று. (கருத்து) சிலர்இரத்தினச்சிவிகைகளில்வருவார்கள்சிலர்யானைகளில்வருவார்கள் - சிலர்தேர்களிற்போவார்கள் - சிலர்குதிரைகள்மேற்போவார்கள் என்பதாம்- (ருகூ)



களிர்மதிதவழுமலையவெற்புயிர்த்தநறுங்குறடுரிஞ்சுபூந்தேய்வை தளர்கொடிமருங்குலலமரப்பணைத்ததாளமென்முலைமுகட்டணிவார் ளியினமோச்சிவள்ளவாய்த்தேறலமிர்தென நுகர்ந்துளங்களிப்பார் துளிமதுப்பிலிற்றிக்காவதங்கமழுந் தூமலர்ச்சிகழிகைபுனைவார்.

(இ-ள்) களிர்-குளிர்ச்சிபொருந்திய— மதிதவழும் - சந்திரன்றவழ்கின்ற—மலையவெற்பு - பொதியமலை—உயிர்த்த - பெற்ற—நறுங்குறடு - நறியசந்தனக்கட்டைகளால்—உரிஞ்சு - தேய்த்த—பூந்தேய்வை - அழகியகுழம்பினை—தளர் - தளரப்பெற்ற—கொடி - வல்லிபோன்ற—மருங்குல் - இடையானது—அலமர - சுழற்சியடைய—பணைத்த - பருத்த—தாளம் - முத்துவடமணிந்த—மென்முலைமுகட்டு - மெல்லியமுலைகளின்மேல்—அணிவார் - பூசுவார்கள்—அளியினமோச்சி - வண்டுக்கூட்டங்களையோட்டி—வள்ளவாய்த்தேறல் - கிண்ணத்திலிருக்குந்தேனை—அமிர்தென நுகர்ந்து - அமிர்தம்போலுண்டு—உளங்களிப்பார் - மனமகிழ்வார்கள்—துளி - துளிகளையுடைய—மதுப்பிலிற்றி- தேனையொழுக்கி—காவதம் - காததூரமளவும்—கமழும் - மணக்கும்—தூ -பரிசுத்தமாகிய—மலர் - மலராற்றொடுக்கப்பெற்ற—சிகழிகை - மாலைகளை—புனைவார் - தரிப்பார்கள்—எ-று. (கருத்து.) சிலபெண்கள்சந்தனங்களைக்கனதனங்களிற் பூசுவார்கள்சிலபெண்கள்தேனுண்டு களிப்பார்கள் சிலபெண்கள் மாலைகளைத்தரிப்பார்கள்-எ-ம். (சுo)

கிழலொடுகறுவிப்பாகெறிந்தூன் பெய் நினைத்தொடுபழகுகூன்பிறைக்கோட், டழிகவுட்கடாததறுகண்மால்யானையகற்றுமினெயிற்புறத்தென்பார், மறைமதர்நோக்கிமன்றல்செய்காலைவல்லவர்கன்னலிற்றெரிவார்; விழைவொடுமகிழ்வுற்றளவளாய்ப்புகுந்தோர் வியப்புறவிருந்தெதிர்கொள்வார்.

(இ-ள்) நிழலொடு-தங்கணிழலோடு—கறுவி - கோபித்து—பரு கெறிந்து - பாகனைவீசி—ஊன்பெய் - தசையைப்பெய்கின்ற—நினைத்தொடு - நினைத்தோடு—பழகு - பழகுகின்ற—கூன்பிறைக்கோடு-வளைவுபொருந்தியபிறைபோலுங்கொம்பினையும்—அழி - அழிக்கின்ற—கவுள் - கதுப்பினிலொழுகுகின்ற—கடாத்த - மததத்தினையுமுடைய—தறுகண்-அஞ்சாத—மால்யானை - பெரியயானையை,எயிற்புறத்து - மதிற்புறத்தில்—அகற்றுமினென்பார் - நீக்குங்களென்பார்கள்—மறைமதர்நோக்கி - தமயந்தியினது—மன்றல்செய்காலை -விவாகஞ்செய்யும்பொழுதை—வல்லவர் - (கணிதநூலில்) வல்லமையுடையவர்கள்—கன்னலில் - நாழிகைவட்டிலால்—தெரிவார் -தெரிந்துகொள்வார்கள்—விழைவொடு - விருப்போடு—மகிழ்வுற்று - மகிழ்ச்சியையடைந்து—அளவளாய் - கலந்து—புகுந்தோர் - அடைந்தவர்களை—வியப்புற - அதிசயிக்க—விருந்து-விருந்தாக—எதிர்கொள்வார் - எதிர்கொள்வார்கள்—எ-று. (கருத்து) யானைகளைக்கோட்டையின் புறத்தோட்டென்பார்கள் -க

ஸ்ரீதநூலில் வல்லவர்கள் தமயந்தி முகூர்த்த காலத்தளவைநாழிகைவட்டிலாலறிவார்கள் வந்தோரை விருந்துக்கழைப்பார்கள் என்பதாம்.()

விரைகமழ்முல்லைமுகைநிகரடிசில் வெள்ளியங்கிரியெனக்குவிப்
பார், * கருணையுங்கன்னற்கட்டியுந்தேமாங்கனிகளும்வயின்வயினிரைப்
பார், திரைபொருகடலினறுநெய்யும்பாலுந் தெருத்தொறும் பெருக்கெடு
த்தோட, வெரிபசும்பொன்னங் கலம்பலபரப்பியிரவலர்க்கின்னமுதளி
ப்பார்.

(இ-ள்) விரை-வாசம்—கமழ்-மணக்கின்ற—முல்லைமுகைநிகர்முல்லையரும்பையொத்த—அடிசில் - சோற்றை—வெள்ளியங்கிரியென-வெள்ளிமலைபோல—குவிப்பார் - குவிப்பார்கள்—கருணையும் -பொரிக்கறியும்—கன்னற்கட்டியும் -சருக்கரைக்கட்டியும்—தேமாங்கனிகளும் - தித்துப்புமாங்கனிகளும் - வயின்வயின் - இடங்கள்தோறும்—நிரைப்பார் ஒழுங்குபடவைப்பார்கள்—திரைபொரு - அலைமோதுகின்ற—கடலின் - கடல்போல்—நறுநெயும் - நறியநெய்யும்—பாலும் -பாலும்—தெருத்தொறும் - தெருக்கடோறும்—பெருக்கெடுத்தோட - அதிகரித்தோட—எரி - பிரகாசிக்கின்ற—பசும்பொன்னங்கலம் - பசியபொற்கலங்களை—பல - அநேகமாக—பரப்பி - வைத்து—இரவலர்க்கு - யாசகர்க்கு—இன்னமுது - இனியசுவையுள்ள அமுதை—அளிப்பார் -கொடுப்பார்கள்—எ-று. * தருக்கசங்கிரகம் -கூஅ ரு-சாவாற்கவருந்துணர்சுவையறுவே - இனித்தல்புளித்தல்கூர்த்தல்கார்த்தல் - கைத்தறுவர்த்தலென்றறுவகைத்தாகி - விலகீர்க்கண்ணதுவிலையுங்காலே - இவ்விதியால் பொரிக்கறி அறுசுவைநாவின் சம்பந்தம் (கருத்து) சாதங்களைவெள்ளிமலைபோற்குவிப்பார்கள் - பொரிககறிகளையும் வெல்லக்கட்டிகளையும் மாங்கனிகளையும் இடமெங்குமிரைப்பார்கள் - தெருக்களில்நெய்யும்பாலும் பெருக்கெடுத்தோடப் பொற்கலங்களில் யாசகருக்கமுதளிப்பார்கள் என்பதாம். (கூஉ)

வெள்ளியங்கிரியில்விஞ்சையர்தொகுவார் விண்ணவரெண்ணிலர்
புகுவா, ரள்ளிலைநெடுவேலரசர்வந்திருப்பாரந்தணரளப்பிலர்திரிவா,ரொ
ள்ளொளிவிரிக்கும் பருமணிச்செஞ்சூட்டுரகர் வெள்ளிடையறச்செறி
வார்பள்ளநீர்க்கடல்சூழெழுபெருந்தீவி லுறையுநர்பரிவினிற்றொகுவார்,

(இ-ள்) வெள்ளியங்கிரியில் -கைலாயத்திருக்கின்ற,விஞ்சையர்- வித்தியாதரர்கள்—தொகுவார்கள் - கூடுவார்கள்—விண்ணவர் - தேவர்கள்—எண்ணிலர் - அளவில்லாதவர்—புகுவார் - நுழைவார்கள்—அள்ளிலை - (மாமிசத்தை) அள்ளிக்கொள்கின்றஇலையையுடைய—நெடுவேல் - நெடியவேலையேந்திய—அரசர் - அரசர்கள்—வந்திருப்பார் - வந்து தங்குவார்கள்—அந்தணர் - பிராமணர்கள்—அளப்பிலர் - அளவற்றவர்கள்—திரிவார் உலாவுவார்கள்—ஒள்ளொளி - மிகுந்தவொளியை—விரிக்கும் - விரிக்கின்ற—பருமணி - பரியமணியினையுடைய—செஞ்சூட்டு - சிவந்தசூட்டினையுடைய—உரகர் - நாகர்கள்—வெள்ளிடையறக்கும்- வெளியிடமில்லாமல்—செறிவார் - நெருங்குவார்கள்—பள்ளம் ஆழம்பொருந்திய—நீர் - நீரையுடைய—கடல்சூழ் - கடலாற்சூழப்பெற்ற—எழுபெருந்தீவில் - சத்தீவில்—உறையுநர் - வசிப்பார்கள் —பரிவினில் - அன்பினால்—தொகுவார்- கூடுவார்கள்—எ-று. (கருத்து) வித்தியாதரர்கள் - கூடுவார்கள் அளவிலாததேவர்கள்வருவார்கள் - இராசாக்கள் தங்குவார்கள் - அளவிலாப்பிராமணர்கள் திரிவார்கள் - நாகவேந்தர்கள் நெருங்குவார்கள் - சத்ததீவாரும்கூடுவார்கள் என்பதாம். (கூங)

பொன்னவிர்திதலைபொம்மல்வெம்முலையார்புனைமணிமாடமுறுக்கி
யின்னரம்புளரும்பாடல்கேட்டுருகியேழிசைமகரயாழ்பண்ணிக்
கின்னரமிதுனம்பாடலுக்குடைந்துகீழ்ப்படுமிளிவரநோக்கி
மின்னுசுடர்வேல்விஞ்சையர்மகளிர்வியப் பொடுதலைபணித்திடுவார்,

(இ-ள்) பொன் - பொன்போல்—அவிர்-பிரகாசிக்கின்ற—திதலை-தேமல்பரந்த—பொம்மல் - பொலிவினையுடைய—வெம்- விருப்பத்தைச்செய்கின்ற—முலையார் - ஸ்தனங்களையுடையமாதர்கள்— புனைமணி -இரத்தினங்கள்பதித்த—மாடகம் - முறுக்காணிகளை—முறுக்கி - திருகி—இன்னரம்பு - இனியநரம்பை—உளரும் - தடவுகின்ற—பாடல்கேட்டு - பாடலைக்கேட்டு—உருகி - மனங்கரைந்து—ஏழிசை - ஏழிசைகளையுடைய—மகரயாழ் - மகரயாழை—பண்ணி - செய்து—கின்னரமிதுனம் - கின்னரமிதுனங்கள்—பாடலுக்குடைந்து - அப்பாட்டுக்குத்தோற்று—கீழ்ப்படும் - தாழ்வுபடுகின்ற—இளிவரல் - இழிவை—நோக்கி - பார்த்து—மின்னு - ஒளியைவீசுகின்ற—சுடர்வேல்- காந்திபொருந்தியவேலையேந்திய—விஞ்சையர்மகளிர் - விஞ்சையர்மாதர்கள்—வியப்பொடு - ஆச்சரியத்தோடு—தலை - தலையை—பணித்திடுவார் - சாய்ப்பார்கள்—எ-று. (கருத்து) கலதனங்களையுடையபெண்கள்வீணைவாசிக்கும்பாடலைக்கேட்டுருகி வித்தியாதரமாதர்கள்தலைவணங்குவார்கள் என்பதாம். (கூச)

முகிறவழ்குடுமிமாடநீள்கொடிகண் மொய்ம்மணிக்கதிர்பரப்புத
லா, னகர்வயிற்றுவர்வாயரிமதர்மழைக்கணன்னுதல் வதுவைவேட்டடைந்த, வகலிருவிசும்பிற்பாயிருள்பருகுமருக்கர்பன்னிரு வருந்தமது,
பகலிடைப்பரந்துதிரியுமின்மினியிற்படரொளிமழுங்கினர்திரிவார்,

(இ-ள்) முகில்-மேகங்கள்—தவழ் - தவழ்கின்ற—குடுமி - சிகரத்தையுடைய—மாடம் - உப்பரிகைகளின்—நீள்கொடிகள் - நீண்டகொடிகள்—மொய்ம்மணி - நெருங்கியஇரத்தினங்களினது—கதிர்பரப்புதலால் - கதிர்களைவிரித்தலால்—நகர்வயின் அந்நகரத்தில்—துவர்வாய்-செவ்வாயையும்—அரி - செவ்வரிபரந்த—மதர் - களிப்பையுடைய—மழை - குளிர்ச்சிபொருந்திய—கண் - கண்களையுமுடைய—நன்னுதல்-தமயந்தியினது—வதுவை - விவாகத்தை—வேட்டடைந்த - விரும்பிவந்த—

அகல் - அகன்ற—இரு - பெரிய—விசும்பின் - ஆகாயத்தில்—பாய் - பரவிய—இருள்பருகும் - இருளையுண்ணும்—அருக்கர்பன்னிருவரும்-சூரியர்கள்பன்னிரண்டுபேரும்—தமது - தம்முடைய—பகலிடை - பகற்பொழுதில்—பார்த்துதிரியும் - பார்த்துதிரிகின்ற—மின்மினியல் - மின்மினிப்பூச்சிகள்போல—படரொளி - படர்கின்றகாந்தியை—மழுங்கினர்-ஒழிந்தவராகி—திரிவார் - திரிவார்கள்—எ-று. (கருத்து) மாடங்களிற்கட்டியகொடிகளின் இரத்தினங்கள் அதிகப்பிரகாசங்களை விரித்தலால்தமயந்திவிவாகத்திற்கு வந்தபன்னிருசூரியர்களு மின்மினிபோலொளிமழுங்கித் திரிவார்களென்பதாம், (கூரு)

விண்ணகத்தமாரளப்பிலவொன்கோவிஞ்சையரளப்பிலவொன்கோ,
* மண்ணகத்தரசரளப்பிலவொன்கோவணிதையரளப்பிலவொன்கோ, பண்ணமைகளிறுகூந்தன்மான்றடந்தேர்பதாதிமற்றளப் பிலவென்கோ,
வெண்ணிமற்றுரைக்கினித்துணையென்னவெம்மனோர்க் கியம்புமாறரிதே.

(இ-ள்) விண்ணகத்தமரர்-விண்ணுலகத்திலிருந்துவந்த தேவர்கள்—அளப்பிலவொன்கோ -அளவிலவென்றுசொல்லுவேனோ—விஞ்சையர் - வித்தியாதரர்கள்—அளப்பிலவொன்கோ - அளவில்லவென்றுசொல்லுவேனோ—மண்ணகத்தரசர் - மண்ணுலகத்திலிருந்துவந்தஅரசர்கள்அளப்பிலவொன்கோ - அளவிலவென்றுசொல்லுவேனோ—வணிதையர்- மங்கையர்கள்—அளப்பிலவொன்கோஅளவிலவென்றுசொல்லுவேனோ—பண்ணமை-ஒப்பனையமைந்த—களிறு - யானைகள்—கூந்தன்மான்-புறமயிரினையுடையகுதிரைகள்—தடந்தேர் - விசாலம்பொருந்தியதேர்கள் பதாதி - சேனைகள்—(ஆகிய இவைகள்)அளப்பிலவென்கோ - அளவில்லையென்றுசொல்லுவேனோ—எண்ணி - சிந்தித்து—உரைக்கின் - சொன்னால்—இத்துணையென்ன - இவ்வளவென்று—எம்மனோர்க்கு - எம்போலியோர்க்கு—இயம்புமாறு - சொல்லுமாறு—அரிது- அரிதாகும்—எ-று. * தருக்கசங்கிரகம்-மகூ-கூ-மண்கன் முதலியவிடயமாகும்-இவ்விதியால் மண்விடயப்பொருளறிக (கருத்து) தேவர்கள்அளவில்லை, வித்தியாதரர்களளவில்லை-அரசர்களளவில்லை - மாதர்கள்அளவில்லை-நால்வகைசேனைகளும்அளவில்லை - இவ்வளவென்று சொல்லவெனக்கரிதென்றுரர்புராணிகர் என்பதாம். (கூசா)

எரிகதிர்ப்பசும்பொன்முகடுவேய்ந்தோங்கியெழிருகாவதமகன்ற;
கிளாமணிகுயிற்றிமணவினைக்கமைத்தநித்திலவிதானமண்டபத்திற்
புரிமுறுக்கவிழவண்டுபாண்முரன்றுபூந்துகள்குடைந்துதேனுகரும,
விரைகமழ்நறுந்தார்துயல்வருதடந்தோள்விதர்ப்பர்கோனினிதுவந்த தடைந்தான்.

(இ-ள்)எரி- ஒளிவிடுகின்ற—கதிர் - கிரணங்களையுடைய— பசும்பொன் - பசியபொன்னால்—முகடுவேய்ந்து - சிகரங்கூட்டி—ஓங்கி உயர்ந்து—எழிருகாவதம் - பதினலுகாதவழி—அகன்ற - பரந்தனிரை-ஒழுங்காக—மணிகுயிற்றி- இரத்தினங்கள்பதித்து—மணவினைக்கமைத்த - விவாகக்கிரியைக்குச்செய்த—நித்திலவிதானம் - முத்தினற்செய்தமேற்கட்டியையுடைய— மண்டபத்தில் - மண்டபத்தின்கண்—புரிமுறுக்கவிழ - கட்டினமுறுக்குவிரிய — வண்டு - வண்டுகள்—பாண்முரன்று - இராகங்களையிசைத்து—பூந்துகள்குடைந்து - மகரந்தங்களைக்குடைந்து—தேனுகரும் -தேனையுண்ணும்—விரைகமழ் - வாசனைகமழுகின்ற—நறுந்தார் - நறியமலர்மாலையானது—துயல்வரு - அசைகின்ற—தடந்தோள் - பருத்ததோள்களையுடைய— விதர்ப்பர்கோன் - வீமராசன்—இனிதுவந்து இனிதானமகிழ்ச்சிகொண்டு — அடைந்தான் - வந்தனன்—எ-று. * இலக்கணக்கொத்து-மகூ-கூ - ஏவுதலியற்றுதலிவையின்வேறுத - லெனவினைமுதன் மூவகையாமென்ப- இவ்விதியால் அடைந்தனனென்றது வேறுவினையாம் (கருத்து) செம்பொற்சிகரம் பொருத்தி இரத்தினங்கள்பதித்து முத்துமேற் கட்டிகட்டிப் பதினன்குகாதவழிவிஸ்தாரம்பொருந்தியபந்தலாகியகல்யாண மண்டபத்துள் வீமசேனமகாராசன் வந்துசேர்ந்தான்-எ-ம். (கூஎ)



குழவிவெண்டிங்கண்மணிவடங்கிடந்த குங்குமக்குலவரைத் தடந்தோண், மழகளிறனையவிதர்ப்பர்கோன்பணியால் வானகத்தமரர் தங்குழுவு, மொழுகொளிமணிச்சூட்டுரகருஞ் சேடியுறைதரு விஞ்சையர்கணமு, மெழுகடல்வளைப்பின் மன்னருந்தேன்வேட்டினைத் தெழுசுரும்பினவந்தடைந்தார்.

(இ-ள்.) குழவி - இளமையதாகிய—வெண்டிங்கள் - வெள்ளியதிங்கள்போன்ற—மணிவடம் - சந்திராரம்—கிடந்த - இருந்த— குங்குமம் - குங்குமமணிந்த—குலவரை - குலாசலம்போன்ற—தடந்தோள் - பருத்ததோளையுடைய—மழகளிறனைய - இளங்களிற்றையொத்த—விதர்ப்பர்கோன்பணியால் - வீமராசனேவலினால்— வானகத்தமரர் தங்குழுவும்-விண்ணுலகத்தேவர்கள்கூட்டமும்— ஒழுகொளி - ஒளிவீசுகின்ற—மணிச்சூட்டு - உச்சிமணியையுடைய—உரகரும் - நாகவேந்தரும்—சேடியுறைதரு - விஞ்சையருறைதருக்கும் — விஞ்சையர்கணமும் - வித்தியாதரர்கூட்டமும்—எழுகடல்வளைப்பின் - சத்தசமுத்திரத்துள்ள—மன்னரும் - அரசரும்—தேன்வேட்டு - தேனைவிரும்பி—இனைத்து-சத்தித்து—எழு - எழுகின்ற—சுரும்பின் - வண்டுகள்போல—வந்தடைந்தார் - வந்துசேர்ந்தார்கள்—எ-று. (கருத்து) வீமராசன் கட்டளையினல்தேவர்கூட்டமும் நாகர்கூட்டமும் வித்தியாதரர்கூட்டமும் அரசர்கூட்டமும்வந்துசேர்ந்தன-எ-ம். (கூஅ)

கொய்துணர்த்தருவின் றுவிறலைமந்த குளகமுல் விண்ணவர்க்கரசுஞ், செய்யகட்கயவெம்பகடைமேற்செந் தென்றிசைக் கடவுளுந் தனலும், வெய்யவாள் சிகைய செந்தழற் கிறையும்விரிதரைக் கனைகடல் வேந்து, நெய்துடைத்தொளிருமன்னிலைமருடேவனிடந்தரோ டொருங்கொருமேதருமடைந்தனர்.

(இ-ள்.) கொய்-பறிக்கின்ற—துணர் - பூங்கொத்துக்களையுடைய—தருவின்-ஐந்தருவினையுடைய—குளிமுல் - நறியநிழலின் கண்ணே—

அமர்ந்த-தங்கிய—குரை - ஒலிக்கின்ற—கழல் - வீரக்கழலை யணிந்த—விண்ணவர்க்கரசும் - இந்திரனும்—செய்யகண் - சிவந்த கண்களையும்—கயவாய் - பெரியவாயையுமுடைய—எருமையேறு- எருமைக்கடாவை—உகைக்கும் - செலுத்துகின்ற—தென் றிசைக்கடவுளும் - இயமனும்—கனலும - சுடுகின்ற—வெய்ய - வெவ்விய—வான் - மேலாகிய கைய - கொழுந்தையுடைய—செந்தழற்கிறையும் - அக்கினிபகவானும்—விரிதிரை - விரிகின்றவலைகளையும்—கனை - ஒலியையுமுடைய—கடல்வேந்தும் - சமுத்திரராசனாகியவருணனும்— செய்துடைத்து - உதிரத்தைத்துடைத்து—ஒளிரும்-விளங்குகின்ற—அள்ளிலை - மாமிசத்தையள்ளுகின்றஇலையையுடைய—நெடுவேல்-நெடியவேலையுடைய— விடர்க்கானுருவோடும் - (தாங்கொண்ட)நளனதுருவோடுடன்—அடைந்தார் - வந்தார்கள்—எ-று. (கருத்து) இந்திரனும் - இயமனும்-அக்கினிதேவனும்-வருணனும்-நளனுருக்கொண்டுவந்தார்கள் என்பதாம் (௬௯)

*மோட்டிளங்கயவாய்நெறி மருப்பெருமைமுலைவழி யொழுகிய தீம்பால்; சேட்டிளங்குருகின்பார்ப்பினமருந்துஞ் செழுவயலிடர் கோன்மருமான், பாட்டிளஞ்சுரும்பர் பேட்டொடு மூன்றுபருமுகைவிரிக்குநாண் முல்லைச், சூட்டணிந்தம்பொற்சுடர் முடிகவித்துத்தொடு கழனரலவீக்கினனல்.

(இ-ள்.) மோடு-உயர்வும்—இள -இளமையும்பொருந்திய—கயவாய்-பெரியவாயையும்,நெறிமருப்பு- நெறித்த கொம்புகளையுமுடைய, எருமை - எருமைகளின்—முலைவழி - முலைவழியாக,ஒழுகிய- வந்த — தீம்பால் - தித்திப்புப்பாலை--சேட்டிளம்-மிகுந்தயிளமைபொருந்திய—குருகின் - நாரைகளினுடைய—பார்ப்பினம் -குஞ்சுக்கூட்டங்கள்—அருந்தும் - உண்ணுகின்ற—செழுவயல்-செழுமைபொருந்திய வயல்கள் சூழ்ந்த—விடதர்கோன்மருமான - விடந்தேயத்தையாளுகின்ற நளமகாராசன்—பாட்டு - பாட்டுகளை—இளஞ்சுரும்பர்-இளவண்டுகள் — பேட்டோடும் - பேட்டைகளுடன்—மூன்று-பாடி—பருமுகை - பரியஅரும்புகளை—விரிக்கும் - மலர்த்துகின்ற—நாள் - புதிய— முல்லைச்சூட்டணிந்து - முல்லைமாலையையணிந்து—அம்-அழகிய—பொன் - பொன்னாற்செய்த—சுடர்முடி - கிரணங்களையுடையமகுடத்தை — கவித்து-கவித்துக்கொண்டு—தொடு-தொடுகின்ற—கழல்-வீரக்கழலை — நரல - ஒலிக்க—வீக்கினன் - கட்டினன்—எ-று.*தொன் னூல்விளக்கம்-௬௬-ரு-அடைசினைமுதன் முறைபடைதலு மீரடை - முதலோடாதலும் வழக்கியலீரடை-சினையொடுசெறிதலு மயங்கலுஞ்செய்யுட்கே-+இவ்விதியால் மணிமுடிசூட்டி வீரகண்டாமணிகாலிற்றரித்தான்-எ-ம். (௭௰)

கூற்றினைவென்னக்குருதிகொப்புளிக்குங் குற்றுடை வாண்மருங்கசைத்துப், பாற்றினஞ்சுழலநிணப்புலால் கமழும்பாயொளி பரிதிவேலேந்தி, நாற்றிதழ்கமலமுகைமுறுக்க விழநெறிப்பரித்தேரிளங் கதிரோன், றோற்றினனென்னவிழலுமிழ் கொடிஞ்சிச்சுடர் மணித்தேர்மிசைப்பொலிந்தான்.

(இ-ள்.) கூற்றினைவென்ன இயமனுடையநாவைப்போல்—குருதிகொப்புளிக்கும் - உதிரத்தையுமிழ்கின்ற—குற்றுடைவாள் - குறுகிய சுரிகையை—மருங்கசைத்து-பக்கத்திற்சொருகி—பாற்றினம் - பருந்துக்கூட்டங்கள்—சுழல-வட்டமிட—நிணப்புலால் - உதிரநாற்றம் — கமழும் - நாறுகின்ற—பாய்-பரவப்பெற்ற—ஒளி -காந்தியையுடைய—பரிதி-சூரியன்போன்ற—வேலேந்தி - வேற்படையைத்தாங்கி — நாற்றிதழ்-நாறிதழ்களையுடைய—கமலமுகை - தாமரையரும்புகள்— முறுக்கவிழ-கட்டவிழ—நெறில் - வேகத்தையுடைய—பரி-குதிரைகட்டிய—தேர் - தேரையுடைய—இளங்கதிரோன் - பாலசூரியன்—தோற்றினனென்ன - உதயமானானென்றுசொல்ல—கிழலுமிழ் - கிழலைக்கொப்புளிக்கின்ற—கொடிஞ்சி-மேன்மொட்டையை யுடையன்சுடர் கிரணங்களையுடைய—மணி - இரத்தினங்கள்பதித்த, தேர்மிசை-தேரின்மேல்(நளமகாராசன்) பொலிந்தான்-தோன்றினன் —எ-று. (கருத்து) நளமகாராசன் குற்றுடைவாள்பக்கத்திற்சொருகி வேலாயுதந்தாங்கிச் சூரியனைப்போலத்தேரிலேறினன்என்பதாம். (௭௧)

இன்னகைத்துவர்வாயிளமுலைமகளிரொரி மணிப் படியகமேந்தப், பொன்னவிர்திதலைப்பொம்மல்வெம்முலையார்பொழி கதிர்ச்சாமரை யிரட்ட, மின்னெனநுடங்கு மருங்குலார்மருங்கின்வெள்ளடையுதவினர் செல்லத், தென்வரைச்சாந்து நானமென்சேறுந் திசைதிசை காவதங் கமழ.

(இ-ள்.)இன்னகை-இனியநகையையும்— துவர்வாய்- செவ்வாயையும்—இளமுலை - இளமைபொருந்தியதனங்களையுமுடைய— மகளிர் - மாதர்கள்— எரிமணி - ஒளிவிளங்குகின்றமணிகளிழைத்த— படியகமேந்த-(தம்பலப்)படிக்கமேந்திவர— பொன்னவிர் - பொன்போலும் விளங்குகின்ற— திதலை - தேமலையுடைய—பொம்மல் - பொலிவுபெற்ற—வெம்முலையார் - விருப்பத்தைத்தருகின்ற முலைகளையுடைய மாதர்கள்—பொழிகதிர்கிரணங்களைவிசுகின்ற— சாமரையிரட்ட - சாமரைவீசிவர—மின்னென - மின்னல்போல—நுடங்கும் - அசைகின்ற—மருங்குலார் - இடையையுடையமாதர்—மருங்கின் - அருகிலிருந்து — வெள்ளடை - தாம்பூலத்தை— உதவினர்செல்ல- கொடுத்துக் கொண்டுவர—தென்வரைச்சாந்தும் - பொதியமலையிற்பிறந்த சந்தனக்கட்டையாற் சேர்க்கப்பட்டசந்தனமும்—நானமென்சேறும் - கஸ்தூரியினாது மெல்லியகுழம்பும்— திசைதிசை-எட்டுத்திக்குகளிலும்— காவதம் - காததூரமளவும்—கமழ -பரிமளிக்க —எ-று. (கருத்து) அந்நளமகாராசன்கனதனங்களையுடையசிலபெண்கள் நவமணியிழைத்த தம்பலப்படிக்கங்களேந்தவும், சிலபெண்கள் சாமரைகள்வீசவும், சிலபெண்கள் பஞ்சவாசங்கள்பொருந்திய பாக்குவெற்றிலைகள்மடித்துக்கொடுக்கவும், சந்தனக்கஸ்தூரிதிக்கெங்கும் பரிமளிக்கவும்,இதுமுதல்மூன்றுபாடலுங்குளகம் என்பதாம்.

குளிர்மதிபொருவிலவ் கொப்புளிக்குங்கொற்ற வெண்கவிகை மேனிழற்ற, வளியினம்புடைக்குந் தழைசெவிப்பரு உத்தாளரசவா ஷிருபுடைநெருங்க, முளரிமென்மலர்த்தா டொழப்புகுமரசர் முடியொடு முடிபொருதுகுத்தவொளிகிளர்பசும்பொற்றுகள் பரந்தவனியும் பாதலப்பதியினிற்சிறப்ப.

(இ-ள்) குளிர்மதிபொருவ - குளிர்ச்சிபொருந்தியசந்திரனை யொப்பு—நிலவுகொப்புளிக்கும் பிரகாசத்தையுமிழ்கின்ற—கொற்ற வெண்கவிகை - வெண்கொற்றக்குடை—மேல்-மேலே—நிழற்ற- நிழலைச்செய்ய—அளியினம் - வண்டினங்களை—புடைக்கும்- ஓட்டுகின்ற—தழைசெவி-தழைத்தகாதுகளையும்—பருஉத்தாள்-பருத்தகால்களையு முடைய—அரசுவர் - உத்தமயானைகள்— இருபுடைநெருங்க - இரண்டு பக்கத்திலும்நெருங்கிவர—முளரிமென்மலர்த்தாள் - தாமரையின் மெல்லியமலர்போன்றபாதங்களை—தொழப்புகும்-வணங்குதற்குவருகின்ற — அரசர் - அரசர்களுடைய —முடியொடுமுடிபொருது - மகுடங்களோடும் குடங்கள்தாக்கி—உகுத்த-உதிர்த்த— ஒளிகிளர் - ஒளிவிளங்குகின்ற—பசும்பொன்-பசியபொன்னுலாகிய— துகள்பரந்து - தூளிகள்பாவி—அவனி- பூமியானது—உம்பர்தம்பதியினில்-பொன்னகர்போல—சிறப்ப-சிறப்பையடைய—எ-று.(கருத்து) வெண்குடைபிடிக்கவும் யானைகளிருமருங்கு நெருங்கவும் அரசர்கள்வணங்கவுமென்பதாம். (௭௩)

உரவுநீர்த்தரங்கக்கடலுடைத்தென்னவொலிசெழுபல்லியந் துவைப்ப, மருவலர்க்கடந்தவொளிறு வாள்விசயமாகதரினி திசைத்தெடுப்பத், திருகுவெஞ்சினத்தவரிசிலைமுழவர்செட்டிளம் புலியெனச்சூழ, வெரிபசும்பொன்செய்மாடநீண்மறுகினிந்திரகுமாரனிற்புகுந்தான்.

(இ-ள்)உலவு-ஒலியையுடைய— நீர்-நீர்நிறைந்த—தரங்கம்-அலைவீசுகின்ற—கடலுடைந்தென்ன -சமுத்திரமுடைந்ததுபோல்— ஒலிசெழு-சத்தமிகுந்த—பல்லியந்துவைப்ப - நானாவித வாத்தியங்களை முழக்க—மருவலர்-சத்துருக்களை—கடந்த - வென்ற— ஒளிறு - பிரகாசிக்கின்ற—வாள்-வாட்படையினாது—விசயம் -(வீரமுதலிய)வெற்றியை—மாகதர்வந்தியர்கள்— இனிதின் - இனிமையினோடு—எடுத்தெடுப்ப - துதிசெய்ய—திருகு-மாறுபடுகின்ற—வெஞ்சினத்த-வெவ்விய கோபத்தையுடைய—வரிசிலை-நெடியவில்லேந்திய — உழவர்-காலாள்கள்—கேட்டிளம்புலியென-மிகுந்தஇளமைபொருந்திய புலிப்போத்துப்போல், சூழ-சூழ்ந்துவர—எரி-ஒளி வீடுகின்ற, பசும்பொன் செய்-பசியபொன்னாற்செய்த, மாடம்-ஒப்பரிகைகளையுடைய — நீண்மறுகில்நெடியவீதியில்—இந்திரகுமானில் - இந்திரகுமாரன் போல்— (நளமகாராசன்) புகுந்தான் - போயினான் —எ-று.(கருத்து) பலவாத்தியங்கள் முழங்கவும் புகழ்வோர்துதிசெய்யவும்சத்தவீரர்கள்சூழ்கவும்இராசவீதியில்இந்திரனைப்போலவந்தான்என்பதாம், (௭௪)

அலங்குளைப்புரவித்தேர்மிசைப்பொலிந்தவரசிளங்குமரனை நோக்கி,நலங்குடிருந்தநாகிளவேய்த்தோணங்கையர் பலருமவந்தீண்டி, விலங்கிவில்லுமிழுமொருபெருஞ்சேடி விஞ்சையர்குமரனே வென்பார் பொலங்குழைமடவாருளம்புகுந்துருக்கும் பூங்கணைக்குமரனே * வென்பார்.

(இ-ள்.) அலங்கு-அசைகின்ற—உளை - புறமயிரினையுடைய—புரவி-குதிரைகட்டிய—தேர்மிசை-தேரின்மேல்—பொலிந்த -விளங்கிய—அரசிளங்குமரனை-நளமகாராசனை—நோக்கி - பார்த்து—நலங்குடியிருந்த-நன்மைதங்கிய, நாகிளவேய்த்தோள்—மிகுந்தஇளமையுள்ள மூங்கிலையொத்ததோள்களையுடைய—நங்கையர்பலரும் - மாதர்களனைவரும்—வந்தீண்டி-வந்துசேர்ந்து—விலங்கி-தனித்தனியாக— வில்லுமிழும்-ஒளியைவீசுகின்ற—ஒரு-ஒப்பற்ற—பெரும்-பெரிய—சேடி - விஞ்சையருலகத்திருக்கின்ற—விஞ்சையர்குமரனேவென்பார் - விஞ்சையர்குமாரனேவென்பார்கள் ;— பொலங்குழை - பொற்குழைகளையணிந்தசெவிகளையுடைய—மடவார்-மங்கையர்களுடைய—உளம்புகுந்து - உள்ளத்தினுழைந்து—உருக்கும்-(அதைக்)கரைக்கின்ற — பூங்கணைக்குமரனேவென்பார் - மலரம்புகளையுடைய மன்மதனே வென்பார்கள் —எ-று.நன்னூல்பொதுவியல் ௬௪-ரு- பெயர்வினையும்மை சொற்பிரிப்பென-ஒழியிசை - யெதிர்மறையிசை யெனுஞ் சொல்லொழி பொன்பதுங்-குறிப்புந்தத்தமெச்சங்கொள்ளும்- இவ்விதியால் என்றது என்றுசொல்லுவார் என்னுஞ் சொல்லெச்சம் சொல்லொடுமுடிந்தது (கருத்து) மாதர்கள் பலருந்தேர்மேல்வரும் நளனைப்பார்த்து வித்தியாதரனேஎன்பார்கள்மன்மதனேஎன்பார்கள்என்பதாம். (௭௫)

வண்டுழாயலங்கறுயல்வருதடந்தோண்மணி நிறவண்ணனேவென்பார், தெண்டிரைக்கடல்வாய்ச்சூர்முதறடிந்த சினவுவேற் குமரனே, வென்பார், விண்டலத்தியங்குமந்திரமறந்துவீழ்ந்தியலியக்கனே,வென்பார், கெண்டையந்தடங்கண்பெற்றபேறின்றேகிடைத்தனம்யாமெ மனக்கிளப்பார்.

(இ-ள்) வண்டுழாயலங்கல்-வளம்பெற்றதுளபமாலை— துயல்வரு-அசைகின்ற—தடந்தோள் - பருத்ததோள்களையுடைய— மணிநிறவண்ணனேவென்பார் - நீலரத்தினத்தையொத்த மேனியையுடைய,நாரணனேவென்பார்கள்—தெண்டிரைக்கடல்வாய் - தெளிந்தஅலைமோதுகின்றகடலிடத்தே—சூர்முதறடிந்த - சூரபத்மனாகிய முதல்வனைக் கொன்ற—சினவுவேல் - கோபஞ்செய்கின்றவேற்படையையுடைய—குமரனேவென்பார் - குமாரக்கடவுளேயென்பார்கள் — விண்டலத்தியங்கும்-ஆகாயத்திற்சஞ்சரித்தற்குரிய, மந்திரம் - மந்திரத்தை—மறந்து-மறந்துவிட்டு—வீழ்ந்து-பூமியில் வீழ்ந்து—இயல் - பொருந்திய—இயக்கனேவென்பார் - இயக்கனேவென்பார்கள்—கெண்டையந்தடங்கண் - சேலையொத்தழகியவிசாலம் பொருந்தியகண்களை — பெற்றபேறு-பெற்றுக்கொண்டபேற்றை—இன்றே - இப்பொழுதே—யாம்- நாம்

—கிடைத்தனமெனா-பெற்றனமென்று— கிளப்பார் - சொல்லுவார்கள்—எ-று. (கருத்து) விஷ்ணுவோவென்பார்கள் ப்பிரமனியனோ வென்பார்கள் இயக்கனோ வென்பார்கள் கண்கள் பெற்றதற்குக் காட்சிப்பேற்றைப்பெற்றோம் என்பார்களென்பதாம். (எசு)

ஈர்க்கிடைபுகாமலடிபரந்தோங்குமேரிளவனமுலைத்துவர் வாய்த்
தாக்கணங்கனையார்நாணமுமடனுஞ்சங்கமுங்கலையுமுண்ணிறையும்
போக்கினர்புலம்பிக்கண்கவர்வனப்பிற்புரவலன்றடம்புயம்புல்லு
மேக்கறவதனுளுள்ளம்விட்டகலு*மின்னுயிர்தாங்கினர்மெலிவார்-

(இ-ள்.) ஈர்க்கிடைபுகாமல் - மிடையியீர்க்குநுழைதற்கிடமில்லாமல்—அடிபரந்தோங்கும்-அடிபரந்தோங்கிய — ஏரிளவனமுலை-அழகும் இளமையும் சந்தனக்கோலமும்பொருந்தியஸ்தனங்களையும்—துவர்வாய் - செவ்வாயையுமுடைய — தாக்கணங்கனையார் - இலக்குமியையொத்தமடவார்கள் — நாணமும் - நாணத்தையும்—மடனும் - மடமையையும்—சங்கமும் . வளையையும்—கலையும் - ஆடையையும் —உண்ணிறையும்-உள்ளேயிருக்கின்றகற்பையும்— போக்கினர் - ஒழித்தவராகி—புலம்பி - இரங்கி—கண் - கண்களின்பார்வையை — கவர்-தன்னிடத்தேயிழுத்துக்கொள்கின்ற—வனப்பின் - அழகையுடைய —புரவலன்-நளமகாராசனுடைய—தடம்-பருத்த — புயம்-தோள்களை—புல்லும்-தழுவவேண்டுமென்னும்—ஏக்கறவதனால் - ஏக்கத்தினால்—உள்ளம்விட்டகலும்-உள்ளத்தைவிட்டுநீங்கும்—இன்னுயிர் - இனியவுயிரை—தாங்கினர்-சுமந்தவராகி—மெலிவார் - வாடுவார்கள் —எ-று.
* தருக்கசங்கிரகம்-உசு-சூ-பிராணனுடலகத்தியங்குங்காற்றம். -தொன்றே செயற்கையிற்பலவெயர்பெறுமே-இவ்விதியால உயிர்செயற்கையிற்பலபெயர்பெறும்(கருத்து) இலக்குமிக்கொப்பான பெண்கள் நாணம் மடம்வளைகள் ஆடைகற்பு இவையிழந்தவர்களாய் நளனைக்கூடும் ஆசையாலுயிர்வைத்திருந்தார்கள் என்பதாம், (எஎ)

பாட்டளிதுதைந்துபரு முகையவிழ்க்கும்பைந்துணரத் தெரியல்சூழ்கூந்தற், சூட்டுடையுச்சிநாகமங்கையர்தந்துணைமுலைபசப் பவந்தெய்தி; வாட்டிறற்குரிசில்செயிரறவிளங்கும்வனப்பெலாம்வந்தியருனைப்பக், கேட்டகண்கண்டுகளிப்புறநோக்கக்கிடைத்ததெத்தவ மெனக்கிளப்பார்;

(இ-ள்) பாட்டளி-இசையைப்பாடுகின்றவண்டுகள் —துதைந்து-நெருங்கி—பருமுகை - பரியஅரும்புகளை, அவிழ்க்கும்-விரிக்கின்ற—பைந்துணர்-பசியபூங்கொத்துகளாற்செய்த— தெரியல்சூழ் - மாலைசுற்றிய—கூந்தல்-அளகபாரத்தையும்— சூட்டுடையுச்சி - உச்சிக்கொண்டையையுமுடைய—நாகமங்கையர் - நாகலோகத்துமாதர் — தம்-தம்முடைய—துணைமுலை-இரண்டுஸ்தனங்களும்—பசப்ப - வேறுபட்டநிறத்தையடைய—வந்தெய்தி - வந்துசேர்ந்து — வாட்டிறற்குரிசில்-நளமகாராசனது—செயிரற-குற்றமில்லாமல்—விளங்கும் - பிரகாசிக்கின்ற—வனப்பெலாம் - அழகனைத்தையும்—வந்தியருரைப்ப - புகழ்வோர்கள்சொல்ல—கேட்ட-கேள்வியுற்ற—கண்-கண்களானவை —கண்டு-பார்த்து—களிப்புற - களிப்பையடைய— நோக்கக்கிடைத்தது-பார்க்கக்கிடைத்தது—எத்தவமெனா - எப்பொழுதுசெய் ததவ மென்று—கிளப்பார்-சொல்லுவார்—எ-று. (கருத்து) நளனுடைய அழகைப்புகழ்வோரால் கேள்விப்பட்டகண்களாகிய செவிகளே இன்று நீங்கள்நளனைக் காணப்பெற்றது எக்காலஞ்செய்ததவமோ என்றார்கள் நாகமங்கையர்களென்பதாம். (எஅ)



அமைத்தடமென்றோ* ளரம்பையர்திதலையணிந்த பொற்றடமுலைப்பாரஞ், சுமக்கலாதொல்கிநுழைமருங்கொசியத்துகிற்கொடி மறுகின் வந்தெய்திச், சமர்த்தலையுடன்றோருயிர்பருகுந்தாமவேற்குரிசிலை நோக்கி, யிமைப்பிலாநாட்டம்பெற்றபேறின்றேயெய்தின மெனமகிழ்ந்திசைப்பார்.

(இ-ள்) அமை-மூங்கிலையொத்த—தடம்-பருத்த — மென்றோளரம்பையர்-மெல்லியதோள்களையுடைய-அரமங்கையர்கள் — திதலையணிந்த-தேமலையணிந்த—பொன்-அழகிய—தடம் - பருத்த —முலைப்பாரம்-முலைகளினுடையசுமையை—சுமக்கலாது - பொறுக்கமாட்டாமல்—ஒல்கி-துவண்டு—நுழை-நுட்பமாகிய —மருங்கு - இடையானது—ஒசிய-வருந்த—துகிற்கொடி-வஸ்திரக்கொடிகளையுடைய — மறுகின்-வீதியிலே—வந்தெய்தி- வந்துசேர்ந்து — சமர்த்தலை - யுத்தகளத்தில்—உடன்றோர்-பொருதவர்களுடைய—ஆர்-நிறைந்த — உயிர் - ஆவியை—பருகும்-உண்கின்ற—தாமம் - வெற்றிமாலையைத் தரித்த — வேல்-வேற்படையையுடைய—குரிசிலை-நளமகாராசனை—நோக்கி - பார்த்து—இமைப்பிலாநாட்டம்-இமையாவிழிகளை—பெற்றபேறு - அடைந்தபேற்றை—இன்றே - இப்பொழுதே—எய்தினமெனா - அடைந்தனமென்று—மகிழ்ந்து -மகிழ்ச்சியடைந்து—இசைப்பார் - சொல்லுவார்கள்—எ-று. இலக்கணக்கொத்து-மினை-சூ- வினைமுதலின்னும் விரிக்கிற்பெருகும்- இவ்விதியால்அரம்பையர்வினைமுதல் (கருத்து) அரம்பையர்கள் நளனைப்பார்த்து இமையாக்கண்கள்பெற்றதற்குப்பேறு இன்றேபெற்றோம்என்பார்களென்பதாம். (எகூ)

கலைவலானெஞ்சிற்காதன்மீதூர்ந்துகடிமணங்குறித்திவண் புகுதப், பலவுநாறழல்வேல்விதர்ப்பர்கோன் மடந்தைபுரிந்த தெத்தவமெனப்புகல்வா, ரிலைகுலாம்பைம்பூணரசிளங்குமரொண்ணிலர் விரும்பிமேவிடினுந், சிலைவலாற்கன்றிச் செழுமலர்த்தெரியல் சேயிழைபுனையுமோவென்பார்.

(இ-ள்) கலைவலான்-நளமகாராசனெனவன்—நெஞ்சில்- மனத்தில்—காதல்-ஆசை—மீதூர்ந்து-அதிகரித்து—கடிமணங்குறித்து - விவாகத்தைக்குறித்து—இவண்-இந்நகரில் — புகுத-வருவதற்கு — புலவுநாறு-புலானாற்றநாறுகின்ற—அழல்வேல் - தீயையொத்த வேற்படையையுடைய—விதர்ப்பர்கோன் - வீமராசன்பெற்ற—மடந்தை -தமயந்

தியானவள்—புரிந்தது-செய்தது—எத்தவமென-என்னதவமென்று—புகல்வார்-சொல்லுவார்கள், இலைகுலாம்-இலைவிளங்குகின்ற—பைம்பூண்-பசியஆபரணங்களையுடைய—அரசிளங்குமார் - இராசகுமாரர்கள்—எண்ணிலர்-அளவற்றபேர்—விரும்பி-இச்சித்து — மேவிடினும்-வந்தாலும்—இவனலாற்கன்றி - இவ்வரசனுக்கல்லாமல்—செழுமலர்த்தெரியல் - செழுமைபொருந்தியமலர்மாலையை—சேயிழை - தமயந்தியானவள், புனையுமோவென்பார்-தரிப்பாளோவென்பார்கள்-எ-று. (கருத்து) நளன்வருதற்குத்தமயந்தி என்னதவஞ்செய்தாளோ என்பார்கள் தமயந்திநளனுக்கன்றி மற்றையரசர்களுக்கு மாலையிடுவாளோ என்பார்கள்-எ-ம்.

(௮௰)

திரைகடலுடுத்தமாநிலநிழற்றுந் திங்களங்கவிகைமன்னவரு, மருக்கமழ்தருவினீழல்வீற்றிருக்கும்வானவர்தொகுதியும்வருகென், றரத்தமுண்டொளிருமள்ளிலைநெடுவேலரசர்கோ னழைத்தது குழைக், குங், கருப்புவில்லொழித்த காமனையனையான் கவினலங் காட்டுதற் கென்பார்.

(இ-ள்) திரை-அலைமோதுகின்ற—கடல்-கடலை—உடுத்த - ஆடையாகத்தரித்த—மா- பெரிய—நிலம் - பூமிக்கு—நிழற்றும்-நிழலைச்செய்கின்ற—திங்களங்கவிகைமன்னவரும்-சந்திரவட்டக்குடையையுடைய அரசர்களும்—மருக்கமழ்-வாசங்கமழ்கின்ற—தருவினீழல் - ஐந்தருவினீழலில்—வீற்றிருக்கும்-அரசிருக்கின்ற—வானவர்தொகுதியும்-தேவர்கூட்டமும்—வருகென்று-வரக்கடவீரென்று— அரத்தமுண்டு-உதிரத்தைப்புசித்து—ஒளிரும்-விளங்குகின்ற—அள்ளிலை - மாமிசத்தைஅள்ளிக்கொள்கின்றஇலையையுடைய—நெடுவேல் -நெடியவேற்படையையுடைய—அரசர்கோன், வீமராசன் — அழைத்தது- அழைப்பித்தது—குழைக்கும்-வளைக்கப்பெற்ற—கருப்புவில்லொழித்த - கருப்புவில்லைநீக்கிய—காமனையனையான் - மன்மதனையொத்தநளனுடைய—கவினலம் -அழகியநலத்தை—காட்டுதற்கென்பார்—காண்பித்தற்கென்றுசொல்லுவார்கள்—எ-று.(கருத்து) வீமன் அரசரையுந்தேவரையும்அழைப்பித்ததுநளனழகைக்காட்டவென்பார்களென்பதாம் (௮௧)

மண்ணளவன்றிம்மன்னவன் றிணிதோள் மணிவரைப் பணைப்பெனமகிழ்வார், கண்ணளவன்றுகாவலனகலங்காண்பதற்கெனமனங் கலுழ்வார், பண்ணளவன்றேயமிர் தினிற்றேனிற் பாகினிற்பழுத்தவந் தீஞ்சொல், பெண்ணளவன்றேயாணவாவுறுமிப்பேரெழிலென் றுபே சுறுவார்.

(இ-ள்) மண்ணளவன்று-பூமியைமாத்திரம்ஆளும் அளவுடையதன்றாகும்—இம்மன்னவன் - இவ்வரசனுடைய — திணிதோள் -வலிமைபொருந்தியதோளாகிய—மணி- அழகிய—வரைப்பணைப் பென-மலையினுடையபருவமென்று—மகிழ்வார் - மகிழ்ச்சியடைவார்கள்—கண்ணளவன்று - கண்களாலெட்டும்அளவன்றாகும்—காவலன்-அரசனுடைய—அகலம் - மார்பு — காண்பதற்கென - பார்ப்பதற்



கென்று—மனம்-மனமானது—கலுழ்வார்- கலங்குவார்கள்— பண்ணளவன்று - பண்களினுடையஅளவன்றாகும்—அமிர்தினில் - அமிர்தம்போலும்—தேனில்- தேன்போலும்—பாகினில் - பாகுபோலும்—பழுத்த-(சுவை) முதிர்ந்த—அம் - அழகிய—தீஞ்சொல் - மதுரம்பொருந்தியசொல்லென்பார்கள்—பெண்ணளவன்று - பெண்கள்மாத்திரமயங்கும் அளவினதன்றாகும்—ஆணவாவுறும் - ஆண்மக்களும்விரும்பும்—இப்பேரெழிலென்று - இப்பெரியஅழகென்று—பேசுறுவார் - அறிவுமயங்குவார்கள்—எ-று. (கருத்து) நளனதோளையுமார்பையுங்கண்டுமயங்குவார்கள்-எ-ம்.

(௮௨)

கருணையங்கடல்வாய்மடைதிறந்தொழுகுங்கண்களுங் கதிர்மதிமுகமும், முருகுகொப்புளிக்குஞ்செழுமலர்த்தொடைதாழ்முழவுறழ் திணிதடந்தோளும், பருகுவபோலநோக்குவானோற்றபடை நெடுங்கண்கள் போன்முலைகா, ளருவரையகலமின்புறத்தழுவவருந்தவம்புரிந்திலீரோ என்பார்,

(இ-ள்) கருணையங்கடல்வாய் - அருளாகிய அழகியகடலினுள்ள— மடைதிறந்தொழுகும் - மடைதிறந்துவருகின்ற—கண்களும்- நேத்திரங்களையும்—கதிர்மதிமுகமும் - கிரணங்களையுடைய—சந்திரன்போன்றமுகத்தையும்—முருகுகொப்புளிக்கும் - தேனையுமிழ்கின்ற—செழுமலர்த்தொடைதாழ் - செழுமையுள்ளமலர்மாலைதாழ்கின்ற— முழவுறழ் - மத்தளத்தையொத்த—திணி - வலிமைபொருந்திய—தடந்தோளும் - பருத்தபுயங்களையும்—பருகுவபோல-உண்பனபோல—நோக்குவான் - பார்க்கும்படி—நோற்ற-தவஞ்செய்த—படை - வாட்படையையொத்த—நெடுங்கண்கள்போல - நெடியகண்களைப்போல, முலைகாள், ஸ்தனங்களே—அருவரை - அரியமலையையொத்த—அகலம் - (இந்நளன்) மார்பை—இன்புற - இன்பமிக—தழுவ - அழுந்தத்தழுவுதற்கு—அருந்தவம் - செய்தற்கரியதவத்தை—புரிந்திலீர் - செய்தீரில்லை—என்பார் - என்பார்கள்—எ-று. (கருத்து) நளனுடையகண்களையுமுகத்தையும் தோள்களையும்பார்க்கத்தவம்பண்ணிய கண்களைப்போலஸ்தனங்களே அவன்மார்பைத்தழுவத் தவம்பண்ணிலீர் என்பார்கள் என்பதாம்,

(௮௩)

பணிமுடிக்கிடந்தபார்பொறுக்கிப்பரித்திடுமரசிளங்குமரன், மணிபெறுவலயமல்லலந்திணிதோள்வனப்பெலாங் கண்டுகண்டுவப்ப, விணர்விரிபசுந்தார்துயல்வரத்தொடுத்தவெரிமணிக் கொடிஞ்சியந்தேர்கொண், டணிகெழுமறுகின்மெல்லெனச்செல்கென் றலங்குளைப் புரவியைத்தொழுவார்.

(இ-ள்) பணிமுடிகிடந்த - ஆதிசேடன்றலைமேலிருந்த—பார் - பூமியை—பொறுக்கி - பலவரசர்க்கும்பொதுமையா யிருப்பதைநீக்கி—பரித்திடும் - (முழுவதும்தானொருவனே) சுமக்கின்ற— அரசிளங்குமரன் - நளனுடைய—மணிபெறுவலய - மணித்தாலையொத்த—மல்லல் - வளம்பொருந்திய—அம் - அழகிய—திணிதோள் - வலிமைபெற்ற

தோள்களினுடைய—வனப்பெலாம் - அழகனைத்தையும்—கண்டுகண்டு - நோக்கி நோக்கி—உவப்ப-மகிழ்ச்சியடைய—இணர்கிரி - பூங்கொத்துக்கள்விரித்த—பசுந்தார்-பசியமலர்மாலை,துயல்வர - அசைய—தொடுத்த - கட்டப்பெற்ற—எரிமணி - ஒளியையுடையமணிகள்பதித்த—கொடிஞ்சியந்தேர்கொண்டு - மேன்மொட்டையையுடையதேரைக்கொண்டு—அணிகெழுமறுகின் - அழகுபொருந்தியவீதியில்—மெல்லெனச்செல்கென்று - மென்மைபோகின்று—அலங்கு - அசைகின்ற—உளை - புறமயிர்களையுடைய—புரவியை-குதிரையை—தெரிந்துவார்-வணங்குவார்கள்—எ-று. (கருத்து) நளனைமுகக்கண்டு மகிழ்ந்தேறிற்கட்டியகுதிரைகளைமெல்லச்செல்லும்படி நடத்துவார்கள் என்பதாம். (அ௫)

* வேலெனமிளிர்ந்துகுமிழ்மிசைமறிந்து வேனிலாற்கரசியலளித்துச்,சேலெனப்பிறழ்ந்துகுழையெதிர்நடந்துசெவ்வரிபரந்துமைதோய்ந்து,காலனிற்சினவிக்கொலைத்தொழில்புரியுங்கருந்தடங்கண்ணினார்தமது, மாலுறவிடுத்தமனத்தினுங்கடிதோவுமான்றேரெனத்தொடர்வார்.

(இ-ள்) வேலென - வேற்படைபோல்—மிளிர்ந்து - விளங்கி—குமிழ்மிசை - குமிழம்பூவினையொத்தமூக்கின் மேற்பக்கத்தில்—மறிந்து - தடைபட்டு—வேனிலாற்கு - மன்மதனுக்கு—அரசியலளித்து-அரசாட்சியைக்கொடுத்து—சேலென - சேல்மீனைப்போல்—பிறழ்ந்து - ஒளிசெய்து—குழை - குழையெனப்படுங்காதணிக்கு—எதிர்-முன்பாக—நடந்து - சென்று—செவ்வரி-சிவந்தரேகைகள்—பரந்து - பரவப்பெற்று—மை - அஞ்சனத்திலே—தோய்ந்து - அமிழ்ந்து—காலனில் - யமன்போல்—சினவி - கோபித்து—கொலைத்தொழில் - கொல்லும்தொழிலை—புரியும் - செய்கின்ற—கருந்தடங்கண்ணினார் - கரியவிசாலம்பொருந்தியகண்களையுடையமாதர்கள்—தமது-தம்முடையமாலுற,மயக்கம்பொருந்த—விடுத்த - அனுப்பப்பட்ட—மனத்தினும்-மனத்தைக்காட்டிலும்—கடிதோ - கடுமையுடையதோ—வாவும் - தாவுகின்ற—மான் - குதிரைகட்டிய—தேரென - தேரென்று—தொடர்வார் - அந்தேரின்பின்செல்லுவார்கள்—எ-று. * தண்டியலங்காரம் -பொருளணியியல் - அதுவே-பொருள்குணஞ்சாதிதொழிலெனப்புலனும் - இவ்வியால் இதுதொழிற்றன்மையணி (கருத்து) பெண்கள்விடுத்த மனவேகத்தைப்பார்க்கிலுந்தேர் அதிகவேகமுடையதென்றுதொடருவார்கள் என்பதாம். (அ௬)

கண்டுகண்டுருகியினையாராய்மனனுங்கருந்தடங்கண்களுங்களிக்கும், வண்டிமிர்கூந்தல்வனிதையர்வருந்தமணிநெடுவீதிவாயகன்று, கொண்டல்கண்படுக்கும்வரையினின்றிழிபுங்கோளரியேறெனவிவந்த,விண்டொடுகொடிஞ்சித்தேரினின்றிழிந்துமேவருமவேந்தவைபுகுந்தான்.

(இ-ள்) இனையாராய் - இந்தன்மையுடையவராய்—கண்டுகண்டு - பார்த்துப்பார்த்து—மனனும் - மனமும்—கருந்தடங்கண்களும் - கரிய



பெரியகண்களும்—களிக்கும் - களிக்கின்ற—வண்டு - வண்டுகள்—இமிர் - ஒலிக்கின்ற—கூந்தல் - அளகத்தையுமுடைய—வனிதையர் - மங்கையர்கள்—உருகி - கரைந்து—வருந்த - துன்பமுற—மணி - அழகிய நெடுவீதிவாய் - நெடியதெருவின்கணின்றும்—அகன்று - நீங்கி—கொண்டல் - மேகங்கள் - கண்படுக்கும் - நித்திரைசெய்கின்ற—வரையினின் றிழியும்-மலையினின்றுமிறங்குகின்ற—கோளரியேறென - சிங்கவேற்றைப்போல்—இவந்த-உயர்ந்த—விண்டொடு - ஆகாயத்தையளாவிய—கொடிஞ்சி - மேன்மொட்டையையுடைய, தேரினின் றிழிந்து இரதத்தினின்றுமிறங்கி—மேவரும்-(ஒப்பனை) பொருந்திய—வேந்தவை - அரசர்சபையில்நளனென்பவன்—புகுந்தான், -புகுந்தான்—எ-று. கோள் - வலிமை- (கருத்து)மாதர்கள்வருந்தநளன்தேரைவிட்டிறங்கி இராசசபையிற் புகுந்தான் என்பதாம். (அ௬)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

தெரியல்சூழ்குவவுத்திண்டோட்சிலைவலானினிதினெய்த
வரசவையிருந்தசெவ்வியரசிளங்குமாரெல்லாங்
குரைகடன்முகட்டிற்றோன்றுங்குளிர்மதிகாண்டலோடும்
விரிகதிர்மழுங்கும்வானின்மீனினமென்னலானார்.

(இ-ள்) தெரியல்சூழ் - மாலைகள்சூழ்ந்த—குவவு - திரட்சிபொருந்திய—திண் - வலிமைபெற்ற—தோள்-புயத்தையுடைய — சிலைவலான் - நளமகாராசன்—இனிதின் - இனிமையால்—எய்த - அடைய—அரசவையிருந்த - (அப்பொழுது) இராசசபையிலிருந்த—செவ்வி-அழகிய—அரசிளங்குமாரெல்லாம் - இராசகுமாரர்களனைவரும்—குரை - ஒலியையுடைய—கடன்முகட்டிற்றோன்றும் - கடலுச்சியிலுதிக்கின்ற—குளிர்மதி - குளிர்ச்சிபொருந்தியசந்திரனை—காண்டலோடும் - கண்டவளவில்—விரிகதிர்மழுங்கும் - விரிந்தகிரணங்களின்ஒளிகெட்டப்பெற்ற—வானின் - ஆகாயத்திலிருக்கின்ற—மீனினமென்னலானார் - உடுக்களையென்றுசொல்லும்படியாயினார்கள்—எ-று (கருத்து) நளன்முன்னிருந்தஅரசர்களெல்லாம் சந்திரன்முன்னிருந்தநட்சத்திரங்கள்போலானார்கள் என்பதாம். (அ௭)

குருமணியிமைக்கும்பைம்பொற்கோபுரக்குடுமிக்குன்றம்
பொருவுமண்டபத்தினூடுபூண்சுடர்தவழப்புக்க
செருமலிதானைவேந்தன் றிருமுகத்திங்களாக
வரசர்வாண்முகங்களெல்லாமம்புயம்போன்றவன்றே.

(இ-ள்) குரு - நிறம்பொருந்திய—மணி-இரத்தினங்கள்—இமைக்கும் - பிரகாசிக்கின்ற—பைம்பொன்-பசியபொன்னாற்செய்த —கோபுர - உச்சிஉயர்ந்த—குடுமி - சிகரங்களையுடைய—குன்றம்- பொருவும் - மலையையொத்த—மண்டபத்தினூடு-விவாகமண்டபத்தில்—பூண் ஆபரணங்களின்—சுடர்தவழ - ஒளிவிளங்க—புக்க - புகுந்தசெருமலி தானைவேந்தன் - நளமகாராசனுடைய—திருமுகம் - திருமுகமானது

—திங்களாக-சந்திரனாக—அரசர் - அரசர்களுடைய—வாள் - ஒளிபொருந்திய—முகங்களெல்லாம் - முகங்களனைத்தும்— அம்புயம்போன்ற-தாமரைமலரையொத்தன—எ-று. (கருத்து)நளன்முகம் சந்திரனாகவும் அரசர்கள்முகந்தாமரைகளாகவுமிருந்தன என்பதாம். (அஅ)

கடிமலர்ப்பகழியேந்துங்காமனுநாணும்பொற்பி
னடல்கெழுபரிதிவைவேலையனையினிதினோக்கித்
தொடுகழலமரர்யாருந்துயரொடு* மழுக்காறெய்தி
வடிவினிற்சிறந்தானேனுமானிடனலனேவென்றார்.

(இ-ள்) கடி - வாசனைபொருந்திய—மலர்ப்பகழியேந்தும் - பூங்கணைகளையேந்திய—காமனும் - மன்மதனும்—நாணும் - நாணத்தக்க—பொற்பின் - அழகையுடைய—அடல்கெழு - வெற்றிமிகுந்த—பரிதி-சூரியன்போன்ற—வைவேல் - கூரியவேலையுடைய—ஐயனை - நளமகாராசனை—இனிதின் - இனிமையினால்—நோக்கி - பார்த்து—தொடுகழல்-கட்டப்பட்டவீரக்கழலையுடைய—அமரர்யாரும் - தேவர்களனைவரும்— துயரொடும் - துன்பத்துடன்—அழுக்காறெய்தி - பொறாமைகொண்டு—வடிவினில் - உருவத்தில்—சிறந்தானேனும் - இந்நளன்சிறந்திருந்தானேனும்—மானிடனலனேவென்றார் - மனிதப்பிறப்பையுடையவனல்லனேவென்றார்கள்—எ-று. * பெயர்வினையிடையுரி நான்கடியானும் பிறக்கும்வினையெனப்பேசுவர் புலவர்இவ்விதியால் அழுக்காறெய்தி பெயரடியாகப்பிறந்தவினை (கருத்து) தேவர்கள்நளன் அழகில்மிகுந்தாலுந் தேவனல்லமனிதன் தானென்றார்கள் என்பதாம்.(அக)

ஓவியரெழுதவொண்ணாவுலம்பொருவைரத்திண்டோள்
வாவுமான் றடந்தேரண்ணல்வனப்பினைநோராகித்
தேவரில்வையங்காக்குமரசரிற்செவ்விவாய்ந்த
காவலர் திருத்தநோக்கார்கடைக்கணானோக்கினாரால்

(இ-ள்.)ஓவியர் - சித்திரக்காரராலும்—எழுதவொண்ணா - எழுதக்கூடாத—உலம்பொரு - திரள்கல்லையொத்த—வைரம்- வச்சிரம்போன்ற—திண்டோள் - வலிமைபெற்றதோளையும்—வாவும் - தாவுகின்ற—மான்-குதிரைகட்டிய—தடம் - பருத்த—தேர் - தேரையுமுடைய—அண்ணல் - நளமகாராசனது—வனப்பினை - அழகை—நோராகி- ஒவ்வாதவர்களாய்—தேவரில்-தேவருக்குள்ளேயும்—வையங்காக்கும் - பூமியைப்புரக்கின்ற—அரசரில் - அரசருக்குள்ளேயும்—செவ்விவாய்ந்த - அழகுபொருந்திய—காவலர் - அரசர்கள்—திருந்த - நேராக—நோக்கார் - பாராராகி—கடைக்கணால் - கடைக்கண்ணினால்—நோக்கினார்- பார்த்தார்கள்—எ-று. (கருத்து) தேவர்களும் அரசர்களும் நளன் அழகுக்கொவ்வாதவர்களாகி அவனழகைநேராகப்பாராதுகடைக்கண்ணாற்பார்த்தார்கள் என்பதாம். (சஉ)

விரிகதிரெறிக்கும்பைம்பூண்விதர்ப்பர்கோனினிதினிட்ட
வரியினஞ்சுமந்தபைம்பொனணிமணித்தவிசின்மீது



குருதிகொப்புளிக்கும்வைவேற்குமரனிருந்தான்வெய்ய
செருமலிகடலந்தானைத்தீயுமிழ்வேலினானே.

(இ-ள்) விரிகதிர்-விரியப்பெற்றகிரணங்களை, எறிக்கும் - வீசுகின்ற—பைம்பூண்-பசும்பொன்னாற்செய்த ஆபரணங்களையணிந்த—விதர்ப்பர்கோன்-வீமராசனால்—இனிதினிட்ட- இனிமையினால் இடப்பட்ட—அரியினம் - சிங்கக்கூட்டங்கள்—சுமந்த - தாங்கிய— பைம்பொன்-பசியபொன்னாற்செய்த—அணி-அழகிய—மணித்தவிசின்மீது - இரத்தினாசனத்தின்மேல்—வெய்ய-வெவ்விய—செருமலி - போர்மலிந்த—கடலந்தானை-சேனாசமுத்திரத்தையும் —தீயுமிழ் - தீயையுமிழ்கின்ற—வேலினான்-வேற்படையுமுடையநளமகாராசன் — குருதி - உதிரத்தை—கொப்புளிக்கும் - உமிழ்கின்ற—வைவேல் - கூரியவேலையுடைய—குமரனில்-குமாரக்கடவுள்போல்—இருந்தான் - இருந்தனன்—எ-று. ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது (கருத்து) நளன்நவமணியிழைத்த சிங்காதனத்தின்மேல்சுப்பிரமணியன்போலவீற்றிருந்தான் என்பதாம். ()

கொங்கவிழுருவப்பைந்தார்க்குமரனையினிதினோக்கி
யிங்கிவன்வனப்புக்கொவ்வாதிழிவரலெய்திடாம
லைங்கணைக்கிழவன்வெய்யவழற்கணாலருவமாக்குந்
திங்களங்கண்ணிமுக்கட்டேவினைவியக்குமன்றே.

(இ-ள்) கொங்கு-வாசனை—அவிழ்-விரிக்கின்ற—உருவம்-உருவத்தையுடைய—பைந்தார் - பசியமாலையையணிந்த—குமரனை- நளனை—இனிதின்-இனிமையால்—நோக்கி- பார்த்து—இங்கு - இவ்விடத்தில்—இவன் - இவ்வரசனுடைய—வனப்புக்கு - அழகிற்கு— ஒவ்வாது-நிகராது—இழிவரல்-இழிதகவை—எய்திடாமல் - அடையாமல் - ஐங்கணைக்கிழவன்-மன்மதனானவன்—வெய்ய - வெவ்விய—அழற்கணால்- தீவிழியால்—அருவமாக்கும்- (தன்னை) அருவமாக்கிய — திங்களங்கண்ணி-மூன்றாம்பிறையைத்தரித்த—முக்கட்டேவினை - பரமசிவனை வியக்கும் - அதிசயிப்பான்—எ-று. (கருத்து) மன்மதன்நளன் அழகுக்குமுன் அவமானப்படாமல் சிவன்தன்னை அருபமாக்கினதற் காகமகிழ்ச்சியடைந்தான் என்பதாம். (சஉ)

*ஏழ்நிலவரைப்பில்வானிற்பாதலத்தினிதுவைகும்
பாழியந்தடந்தோள்வேந்தர்பலரும்வந்தமர்ந்தவாற்றாற்
கேழ்கிளர்மணிசெய்மாடங்கிளர்வெயிலெறிக்குஞ்செய்ய
வாழியந்தடங்கைமாயனகடுபொன் றிருந்ததம்மா

(இ-ள்) ஏழ்நிலவரைப்பில்-சத்ததீவுகளிலும் — வானில்-தேவருலகத்திலும்—பாதலத்து-நாகருலகத்திலும்—இனிதுவைகும் - இனிமையொடுதங்கிய—பாழி—அகலமாகிய—அம்-அழகிய—தடம்- பருத்த—தோள் - தோளையுடைய—வேந்தர்பலரும்- அரசரனைவரும் — வந்தம

ர்ந்தவாற்றால்-வந்தூதித்தியபடியால்—கேழ்கிளர்-ஒளிமிகுந்த — மணி செய்-இரத்தினங்கள்பதித்த—மாடம்-விவாகமண்டபமானது — கிள ர்-பிரகாசிக்கின்ற—வெயில்வெறிக்கும்-வெயிலைவீசப்பெற்ற — செய்ய-சிவந்த—ஆழி - சக்கரமேந்திய—அம்-அழகிய — தடக்கை - விசாலம் பொருந்தியகைகளையுடைய—மாயன்-திருமாலினது— அகடேபோன்று-வயிற்றையொத்து—இருந்தது- இருந்தது—எ-று. ✻ அணியியற்றூத்திர ம்-பண்புந்தொழிலும் பயனும்பொருளும்-வடிவுஞ்சுவையுமளவும் பல வு-மொப்புமைதோன்றச்செப்புவதுவமை-இவ்விதியால் - இஃதுபொ ருளுவமையணி(கருத்து) விவாகமண்டபமானது பிரளயகாலத்திலும் ச ராசரங்களடங்கிய திருமால்வயிற்றைப்போலிருந்தது-எ-ம். (௬௩.)

மாங்குயிற்குதலைச்செவ்வாய்வனமுலைப்போகம்வேண்டித்
தேங்கமழ்தருவினீழற்றேவருமிடதங்காக்கு
மோங்கெருவனையதோளாலுருவுகொண்டடைந்தாரென்னி
லாங்கவன்வனப்புசம்மாறதையலாந்தகைமைத்தன்றே.

(இ-ள்) மாங்குயில் -மாமரத்திலிருக்குங்குயிற்சொல்லையொத்த — குதலை-மழலைச்சொல்லையும்—செவ்வாய் - செவ்வையையுமுடைய தமய ந்தியினது—வனமுலை-அழகியஸ்தனங்களினுடைய — போகம்வேண் டி-போகத்தைவிரும்பி—தேங்கமழ் - வாசனைகமழுகின்ற — தருவினீ ழல்- ஐந்தருவினீழலிலிருக்கும்—தேவரும் - இந்திரன்முதலிய தேவ ர்களும்—இடதங்காக்கும் - இடதேயத்தையளிக்கின்ற— ஓங்கெருவ னையதோளால்-உயர்ந்தஎருதுஅனையொத்த தோளையுடைய நளம காராசனது— உருவுகொண்டு- வடிவைக்கொண்டு — அடைந்தாரென் னில்-வந்தாரேயானால்—ஆங்கவன்- அவ்வரசனுடைய — வனப்பு-அழ கு—சம்மால்-சம்மால்— அதையலாம் - சொல்லலாம — தகைமைத்த ன்று-தகைமையுடையதன்று—எ-று.எ-அசை (கருத்து) தேவர்களே நளனழகைக்கொண்டவையால் நளனழகைச்சொல்லமுடியாதுபோக வென்றார் புராணிகரென்பதாம். (௬௪)

வடிநெடுங்கண்ணிகொம்மைவருமுலைதிளைப்பவேண்டித்
தொடிகழலரசர்வெள்ளந்தொக்கொருங்கிருந்ததோற்ற
முடல்சினத்திகிரியாயுமுந்தியங்கமலம்பூத்த
கடவுடன்படைப்பின்வீக்கங்காட்டுதல்போன்றதன்றே.

(இ-ள்)வடி-மாவடுவையொத்த—நெடுங்கண்ணி - நெடியகண்ணை யுடையதமயந்தியினது—கொம்மை-இளமையுடைய—வரு - வளரப் பெற்ற—முலை-ஸ்தனங்களில்—திளைப்ப-அணைய— வேண்டி - விரும் பி—தொடி-கட்டப்பட்ட—கழல்-வீரக்கழலையுடைய — அரசர்வெள் ளம் - அரசர்கூட்டங்கள் — தொக்கு -கூடி—ஒருங்கிருந்ததோற்றம்-ஒருங்குசேரவிருந்ததோற்றமானது—உடல்-பொருகின்ற, சினம்கோ பத்தையுடைய—திகிரி - சக்கரப்படையையேந்திய— மாயன்- காரண னுடைய—உந்தியங்கமலம்பூத்த - நாபிக்கமலமானதுதந்த —கடவுள்-



பிரமதேவன்—தன்படைப்பின்வீக்கம்-தனதுசிருட்டியினுடைய விரி வை—காட்டுதல்-காண்பித்தல்— (அதை)போன்றது - ஒத்திருந்தது —எ-று. ✻ சொல்லாற்றெரிவினைபொருளாற் றெரிவினை-என்றிருதிற னேதம்பிறபொருவினை - இவ்விதியால்கமலம்பூத்தகடவுள் பொருளா ற்றெரிவினை (கருத்து) திரிலோகத்திலுமுள்ள பிரமசிருட்டியிலடங் கிய அனைவரும்வந்திருந்தார்கள் ஆதலால் பிரமசிருட்டி போலிருந்தது என்பதாம். (௬௫)

தனியுருத்தாங்கியீசன்றழல்விழிப்பட்டோமென்று
பனிமலர்ப்பகழிமாரன்பலவுருவெடுத்தல்போலக்
கனிபடுகிளவியாடன்கதிரிளமுலையிற்றோய்வான்
குனிசிலைத்தடங்கைவேந்தரொருவழிக்குழுமினாரே.

(இ-ள்)பனி-குளிர்ச்சிபொருந்திய—மலர்ப்பகழி - பூங்கணைகளையு டைய—மாரன்-மன்மதனானவன்—தனியுருத்தாங்கி- ஒருவடிவங்கொ ண்டு—ஈசன்-பரமசிவனுடைய—தழல்விழி - நெருப்புக் கண்ணினால் —பட்டோமென்று-இறந்தோமென்று—பலவுருவெடுத்தல் போல - ப லவடிவங்கொண்டதுபோல—கனிபடுகிளவியாடன் - தமயந்தியினது —கதிர்-காந்தியையுடைய—இளமுலையில்-இளமைபொருந்திய ஸ்தன த்தில் —தோய்வான்-கலக்கும்பொருட்டு—குனிசிலை - வளைந்த வில்லை யேந்திய—தடக்கை - விசாலம்பொருந்தியகையையுடைய — வேந்தர் அரசரானவர்கள்—ஒருவழி - ஓரிடத்தில்— குழுமினார் - கூடினார்கள் —எ-று. ஏகாரம் ஈற்றசைக்கண்வந்தது (கருத்து) அரசர்கள்- மன்மத னைநிகர்த்திருந்தார்களென்பதாம். (௬௬)

வேனிலானுயர்த்தவெற்றிக்கயலையும்வெருட்டிநீண்ட
மானினமருளுநோக்கின்மடவரல்வதுவைகாண்பான்
பானிறவன்னமூர்ந்தபழமறைக்கிழவனோடு
நீனிறச்செங்கண்மாயனெடுவிசும்படைந்தான்மன்னோ.

(இ-ள்-) வேனிலான் -மன்மதனானவன் —உயர்த்த-பிடித்த—வெ ற்றி - வெற்றிபொருந்திய—கயலையும்-கொடியாகியமீனையும் —வெரு ட்டி-அச்சமுறுத்தி—நீண்ட-நீண்ட—மானினம் - மான்கூட்டங்கள் —மருளும்-மயங்குகின்ற—நோக்கின் - பார்வையையுடைய — மடவ ரல் - தமயந்தியினது—வதுவை-விவாகத்தை— காண்பான் - காணும் பொருட்டு—பால்-வெள்ளிய—நிறம் - வன்னத்தையுடைய — அன் னமூர்ந்த - அன்னப்பறவையைச்செலுத்திய — பழமறைக் கிழவனோ டும் - பிரமதேவனோடும்—நீனிறம் -நீலவன்னத்தையும் — செங்க ண்-செய்யகண்ணையுமுடைய—மாயன் - நாராயணனானவன்— நெடுவிசு ம்பு - நெடியஆகாயத்தின்கண்—அடைந்தான்- வந்தான் ——— எ-று.(க ருத்து) பிரமனும்விஷ்ணுவுந் தமயந்தி கல்யாணத்திற்கு வந்தார்கள் என்பதாம்] (௬௭)

அவ்வழிசினம்வாய்ப்பிலிபழுப்பியுந்திரத்தந்தோய
செய்வழிபரிதிடையெவ்விதப்பரிதேசனிவைங்கட

செவ்வழியனையதீஞ்சொற்றெரிவையர் தம்மைநோக்கி
மைவழிகரியகூந்தன் மங்கையைக்கொணர்மினென்ருன்.

(இ-ள்) அவ்வழி-அப்பொழுது—நிணம்-நிணத்தை — வாய்ப்பில்கி-வாயாற்கொப்புளித்து—அழலுமிழுந்து - நெருப்பைக்கக்கி — இரத்தந்தோயும் - உதிரம்படிகின்ற—செய்வழி - நெய்யொழுகுகின்ற— பரிதி-சூரியனையொத்த—வைவேல்-கூரியவேலை யுடைய — விதர்ப்பர்கோன்-வீமராசனுனவன்—நீலம் - கருங்குவளைமலர்போன்ற—உண்கண்-மையுண்டகண்களையுடைய - செவ்வழியனைய - செவ்வழிப்பண்ணையொத்த—தீஞ்சொல்-மதுரம்பொருந்தியசொல்லையுடைய — தெரிவையர்தம்மைநோக்கி - மாதரைப்பார்த்து—மைவழி- மயிர்ச்சாந்தொழுகிய—கரியகூந்தல் - கரியகுழலையுடைய—மங்கையை - தமயந்தியை—கொணர்மினென்ருன் -அழைத்துக்கொண்டுவாருங்களென்ருன். எ-று நிணம்-கொழுப்பு-செய்-எண்ணெய் (கருத்து) வீமராசன் தமயந்தியைக்கொண்டுவரும்படிப்பெண்களுக்கு கட்டளையிட்டானென்பதாம் ()

உரையதுகேட்டலோடுமோரிடத்தடங்கணல்லா
ரொரிபரந்திமைக்கும்பைம்பூணின்னரிச்சிலம்பொடேங்கப்
புரிகுழன்மாலைசோரப் பூசலவண்டார்த்துப்பொங்க
விரைவினோகிப்பைம்பொன் விளங்கிழைகோயில்புக்கார்

(இ-ள்)உரையது-அச்சொல்லை—கேட்டலோடும் - கேட்டவளவில்—ஓடரி-செவ்வரிபரந்த—தடங்கணல்லார்- விசாலம்பொருந்திய கண்களையுடையமாதர்கள்—எரிபரந்து-ஒளிபரவி—இமைக்கும் - விளங்குகின்ற—பைம்பூண்-பசிய ஆபரணங்கள்—இன்னரிச்சிலம்பொடு -இனியகிண்கிணியையுடையபாதசாலத்தோடு—ஏங்க- ஒலிக்க—புரி - கட்டுப்பட்ட—குழல் - கூந்தலிலிருக்கின்ற—மாலைசோர - மலர்மாலைசோர்வையடைய—பூசல் - மிகுந்தவொலியையுடைய—வண்டு - வண்டுகள்—ஆர்த்து-ஒலித்து—பொங்க - எழும்ப—விரைவினர் - விரைவுகொண்டவராகி—ஏகி-போய் —பைம்பொன் - பசியபொன்ஞற்செய்த—விளங்கிழை - ஒளிசெய்கின்றஆபரணத்தை யுடைய தமயந்தியினது—கோயில் - கன்னிமாடத்தில்—புக்கார்-புகுந்தார்கள் —எ-று. (கருத்து) மாதர்கள் தமயந்திமாளிகையிற்சென்ருர்கள்-எ-ம். (கூக)

வாங்குவிற்றடக்கைவேந்தன்வதுவைமண்டபத்தின்வல்லே
கோங்கிளமுலையினளைக்கொணர்கவென்றுரைத்தானென்னத்
திங்கதிர்க்குழவித்திங்கள் சிறைகிடந்தனையநெற்றிப்
பூங்கொடிதன்னையீன்றபொற்றொடக்குரைத்தாரன்றே.

(இ-ள்)வாங்கு - வளைக்கப்பெற்ற—வில் - வில்லையுடைய—தடக்கை-விசாலம்பொருந்தியகையையுடைய—வேந்தன் -வீமராசனுனவன்—வதுவைமண்டபத்தின் -விவாகமண்டபத்தில் —வல்லே - விரைவிலே—கோங்கிளமுலையினளை-தமயந்தியை—கொணர்கவென்று - அழைத்துக்கொண்டுவாருங்களென்று —உரைத்தானென்ன - சொன்

றென்று—திங்கதிர் - மதுரம்பொருந்திய கிரணங்களையுடைய— குழவித்திங்கள் - இளம்பிறையானது—சிறைகிடந்தனைய - சிறையிருந்ததையொத்த—நெற்றி - நெற்றியையுடைய—பூங்கொடிதன்னையீன்ற - தமயந்தியைப்பெற்ற—பொற்றொடிக்கு - சுற்றுயாகிய சாருகாசினியென்னுங்காஞ்சனமாலைக்கு—உரைத்தார்-சொல்லினார்—எ-று- (கருத்து) மாதர்கள் வீமன்மனைவியாகிய சாருகாசினியிடத்து வீமன் சொன்னதைச்சொன்னார்கள் எ-ம். ☞ சாருகாசினிகாஞ்சனமாலை இவ்விருபெயரும் வீமன்மனைவிக்குண்டு, (எ)

களிமகிழ்வெய்தியாங்கண்களைத்துவண்டிமிரும்பைந்தார்த்
துளிமதுக்கோதைதன்னைத்துவரினும்விரையினுலு—
மொளிமணிகழீஇயதொப்பவுவப்பொடுதிமிர்ந்துபொங்குந்
தெளிதிரைசுருட்டுங்கங்கைத்தீம்புனலாட்டினாரே.

(இ-ள்.) களிமகிழ்வெய்தி - மிகுந்தமகிழ்ச்சியையடைந்து— ஆங்கண் - அவ்விடத்தில்—களைத்து - ஆரவாரித்து—வண்டிமிரும் - வண்டுகளொலிக்கின்ற—பைந்தார் - பசியமலர்மாலையையணிந்த—துளிமது - தேன்துளிக்கின்ற—கோதைதன்னை - கூந்தலையுடைய தமயந்தியை—துவரினும்-பத்துத்துவராலும்—விரையினும் - இருவகைவாசனைத்திரவியத்தாலும்—ஒளி - ஒளியையுடைய—மணிகழீஇயதொப்ப - மணியையொப்பமிட்டதையொப்ப,உவப்பொடும் - மகிழ்ச்சியுடன்—திமிர்ந்து-பூசி—பொங்கும் - பொங்குகின்ற—தெளிதிரை- தெளிந்த அலைகளை—சுருட்டும் - மடக்குகின்ற—கங்கை - கங்காநதியிலிருந்துவந்த—தீம்புனல் - இனியநீரைக்கொண்டு—(மாதர்கள்) ஆட்டினார் - முழுகப்படுத்தினர்கள்—எ-று.ஏ-அசை-(கருத்து)தமயந்திக்குநீராட்டினார்கள் எ-ம். (எக)

புரிகுழல்புலா ✻ வாசப்பூம்புகையூட்டிவிண்டு
முருகுயிர்த்தினவண்டார்க்குமுல்லையஞ்சூட்டுவேய்ந்து
வருமுலைமுகட்டிற்றெய்வமலையச்செஞ்சாந்துபூசி
யெரிமணிக்கலாபம்வீக்கி யிழைபலதிருத்தினரே.

(இ-ள்) புரி - கட்டப்பட்ட—குழல் - கூந்தலானது — புலா - ✻சாம்வாட—வாசப்பூம்புகை - வாசப்புகையை—ஊட்டி - ஊட்டுவித்து—விண்டு - விரிந்து—முருகுயிர்த்து - தேனைத்தந்து—இனவண்டு -வண்டுக்கூட்டங்கள்—ஆர்க்கும் - ஒலிக்கப்பெற்ற—முல்லையஞ்சூட்டு- முல்லைமாலையை—வேய்ந்து-சூடி—வருமுலைமுகட்டில் -வளர்கின்றஸ்தனங்களினுச்சியில்—தெய்வ - தெய்வத்தன்மையுள்ள—மலையம் - பொதியமலையிற்றேன்றிய—செஞ்சாந்து - செம்பிறமுள்ளசந்தனக்குழம்பை—பூசி - தடவி—எரிமணி - ஒளியையுடையமணிகளணிந்த—கலாபம் - கலாபத்தை—வீக்கி - தரித்து—இழைபல - இன்னும்அனேக ஆபரணங்களை—திருத்தி - அணிந்தார்கள்—எ-று. ஏகாரம்-ஈற்றசை✻ தருக்கசங்கிரகம்-டுரு-கு-சாற்றங்கவர்வது சாகிநனியதுமுக்கெனப்பெரியதுதவெபொழியென்ப - இவ்விதிப்பால் வாசாசிவிடயம (கருத்து) தமயந்தி

கூந்தலுக்கு அகிற்புகைகூட்டி மாலைசூட்டி கொங்கைகளிற்சந்தனம்பூசி மேகலாபரணங்கட்டிப் பலவாபரணங்களைத்தரித்தார்கள்-எ-ம். (௯௨)

வேற்றுருக்கொண்டமாதின் விளங்குவாண் முகத்திற்சேர்ந்த
கூற்றினைத்தடங்கணென்னவஞ்சனக்குலவத்தீட்டிக்
கீற்றிளந்திங்களென்று கிளரொளிநுதலேயென்று
தேற்றுவார்போலச்செய்ய திலகமுமெழுதினாரே.

(இ-ள்.) வேற்றுருக்கொண்டு - வேற்றுவடிவங்கொண்டு—மாதின் - தமயந்தியினது—விளங்கு - பிரகாசிக்கின்ற—வாள் - ஒளிபொருந்திய—முகத்திற்சேர்ந்த - முகத்திலடைந்த—கூற்றினை - யமனை—தடங்கணென்ன - விசாலம்பொருந்தியகண்களென்று—அஞ்சனம் - மையை—குலவத்தீட்டி-விளங்கவெழுதி—கீற்று - கீற்றாகிய— இளந்திங்களென்று- இளம்பிறையென்று—கிளரொளி - மிகுந்தவொளியையுடைய—நுதலேயென்று - நெற்றியேயென்று—தேற்றுவார்போல - தெளிவிப்பாரைப்போல—செய்ய - சிவந்த—திலகமும் - திலகப்பொட்டும்—எழுதினார் - எழுதினார்கள்—எ-று. எ-மென்னையதுதேற்றம் - பின்னையது-சிறப்பு (கருத்து) தமயந்திகண்ணிற்குமையும்நெற்றிக் குத்திலகமும் இட்டார்கள் என்பதாம். (௯௩)

வணங்கிடையிறுவதோரா வனமுலைகவர்ந்துகொண்ட
சுணங்கணியாகமூழுஞ்சுந்தரச்சுண்ணமாட்டிக்
கணங்குழைமுகத்துச்செவ்வாய்க்கன்னன்மென்றனையதீஞ்சொ
லணங்கினுக் * கணிசெய்வார்போலணியினுக்கழகுசெய்தார்.

(இ-ள்.) வணங்கு - வளைந்த—இடை - இடையானது—இறுவது - ஒடிவதை—ஓரா - எண்ணாது—வனமுலை - அழகியமுலைகளானவை—கவர்ந்துகொண்ட - கிரகித்துக்கொண்ட—சுணங்கு - தேமலையுடைய—அணி - அழகிய—ஆகமூழுழும் - மார்புமுழுவதும்—சுந்தரச் சுண்ணமாட்டி - அழகியபொற்றூளைத்தூவி—கணங்குழைமுகத்து - கூட்டமாகியமணிகள்பதித்தகுழையையணிந்தமுகத்தையும்—செவ்வாய்-செவ்வாயையும்—கன்னன்மென்றனைய - கரும்பைமென்றதையொத்த—தீஞ்சொல் - மதுரவார்த்தையையுமுடைய—அணங்கினுக்கு - தமயந்திக்கு—அணிசெய்வார்போல் - அழகுசெய்பவர்போல்—அணியினுக்கு - ஆபரணங்களுக்கு—அழகுசெய்தார் - அழகைச்செய்தார்கள்—எ-று. *குவலயானந்தம் - உறுப்பியல் - அருந்துதலணிதல் வாகனமாடை - கணவன்றேற்றந்தந்தைதாய்க்கிளை - செல்வமெனுமிவைபெண்பாற்கோட்பொருள் இவ்விதியால் அழகுசெய்தல்பெண்பாற்கோட்பொருள்(கருத்து) தமயந்தி அவயங்களுக்கு ஆபரணமணிந்தார்கள் அணியாவிடினும் அவளியற்கையழகேபோதும் என்பதாம். (௯௪)

அமிளிசீர்விளக்கமேந்தி யையவிசிதறிமுத்தந்
துயல்வருமுலையினார்தந்தொல்குலத்தெய்வம்போற்றி



மூயலறுமுழுவெண்டிங்கண்முகத்துவெண்முத்தமூரல்
மயிலியற்றிருவனளைவலஞ்செய்துகாப்புமிட்டார்

(இ-ள்) அமிளிசீர்விளக்கம் - ஆலாத்தியை—ஏந்தி - எதிரேயேந்தி—ஐயவி-ஐயவியை—சிதறி-வீசி—முத்தந்துயல்வரும் - முத்துவடமசைகின்ற—முலையினார் - ஸ்தனங்களையுடையமாதர்கள்—தம் - தம்முடைய—தொல்குலத்தெய்வம்போற்றி-தொன்றுதொட்டுவணங்குகின்ற தெய்வத்தைத்துதித்து—மூயலறு-முயற்களங்கமற்ற—முழுவெண்டிங்கள்வெள்ளியபூரணச்சந்திரனையொத்த—முகத்து-முகத்திடத்தில்—வெண்முத்தமூரல் - வெள்ளியமுத்தைப்போற்பற்களையும்—மயிலியல் - மயில்போன்றசாயலையுமுடைய—திருவனளை - தமயந்தியை—வலஞ்செய்து-வலமாகச்சுற்றி—காப்புமிட்டார் - திருநீறுந்தரித்தார்கள்—எ-று. (ஐயவிசிதறியென்பதுவெண்கடுகிறைத்தல்-இது அலகைநீங்கும்பொருட்டுச்செய்வது)(கருத்து) மாதர்கள்தமயந்திக்குஆலஞ்சுற்றித்திருநீற்றுக்காப்பணித்தார்கள் என்பதாம். (௯௫)

பந்தொடுகழங்கும்பொன்னம்பாவையுங்கிளியும்யாழுஞ்
சிந்தூரத்திலகநெற்றித்தெரிவையருடன்கொண்டேக
விந்திரகுமரனன்னானெழின்மணியகலம்பூட்டக்
கொந்தவிழலங்கன்மாலைகொண்டனர்மருங்குசெல்ல.

(இ-ள்) பந்தொடு-பந்தையும்—கழங்கும்-அம்மனையையும்—பொன்னம்பாவையும் - சொர்ணப்பதுமைகளையும்—கிளியும் - கிளிப்பிள்ளைகளையும்—யாழும் - யாழையும்—சிந்தூரத்திலகநெற்றி - சிந்தூரப்பொட்டணிந்தநெற்றியையுடைய—தெரிவையர்-மங்கையர்கள், உடன்கொண்டேக-உடன்கொண்டுசெல்ல—இந்திரகுமாரனன்னான்- நளமகாராசனுடைய—எழில் - அழகிய—மணி - இரத்தினாபரணம்பூண்ட—அகலம் - மார்பினிடத்தில்—பூட்ட - தரிக்க—கொந்தவிழ் - கொத்துவிரிகின்ற—அலங்கன்மாலை - மலர்மாலையை—கொண்டனர்- (ஏந்திக்) கொண்டவர்கள்—மருங்குசெல்ல-அருகேவர—எ-று. ஒடு - எண்ணொடு—(கருத்து) பெண்களைப்பந்தும் அம்மனையும் பொற்பதுமைகளையும் கிளிகளையும்வீணைகளையும் கொண்டுபக்கலில்வரவென்பதாம். [illegible] இதுமுதல்நான்குபாட்டுங்குளகம். (௯௬)

விரியிருள்சீக்குங்கற்றைவெண்ணிறக்கவரிவீச
வெரிமணியடைப்பைதாங்கியின்னகைமகளிர்போத
வரிசிலைதுணியொள்வாள்கேடகம்வளைக்கைபற்றிப்
புரிசரம்பிரங்குதீஞ்சொற்பொன்னனார்முன்னரேக

(இ-ள்.) விரியிருள் - விரிந்தவிருளை—சீக்கும் - ஓட்டுகின்ற—கற்றை-மயிர்த்தொகுதியாகிய—வெண்ணிறக்கவரி - வெண்ணிறத்தையுடையசாமரைகளை—வீச-(மாதர்களிருபாலும்)வீசவர—எரி - ஒளிவிடுகின்ற—மணி-மணிகள்பதித்த—அடைப்பைதாங்கி - அடைப்பையைச்சுமந்து—இன்னகை-இனியநகையையுடைய—மகளிர் - மாதர்கள், போத

ற-செல்ல—வரிசிலை-கொடியவில்லையும்—தூணி - அம்புக்கூட்டையும்—ஒவ்வாள் - ஒளியையுடையவாளையும்—கேடகம் - கேடகத்தையும்—வளைக்கை - வளையலையணிந்தகையில்—பற்றி - ஏந்திக்கொண்டு—புரிநரம்பு - (யாழிற்கட்டிய)நரம்புகள்—இரங்கு - வருந்தும்படியாகிய—தீஞ்சொல்-மதுரவார்த்தையையுடைய—பொருனர் - மங்கையர்கள்—முன்னரேக - முன்னேசெல்ல—எ-று. (கருத்து) சிலபெண்கள்சாமரைவீசவும்-சிலபெண்கள் அடைப்பையேந்திவரவும்- வில்லையும் அம்புக்கூட்டையும்கேடகத்தையும் கைபிற்றுக்கிச்சிலபெண்கள்முன் செல்லவும் என்பதாம். (௩௭)

தொல்குலமரபிற்றோன்றிச்சூழ்புலநெறியிற்காத்து
கல்வியின் றுறைகைபோயவிருத்தர்கஞ்சுகத்தின்மெய்யர்
வில்லுமிழ்மணியிற்செய்தவேத்திரக்கரத்தர்வேந்தர்
நில்லுமினின்மினென்றுநீக்கினர்தொடர்ந்துசெல்ல.

(இ-ள்) தொல்குலமரபிற்றோன்றி - தொன்றுதொட்டுவருகின்ற நல்லமரபிற்பிறந்து—சூழ்புலம் - ஒன்றைப்பற்றுகின்றபுலன்களைதையும்—நெறியிற்காத்து-புறம்போகவொட்டாமலடக்கி, கல்வியின்றுறை-கல்வியின்வழியில்—கைபோய - வல்லவராகிய—விருத்தர் - விருத்தரும்—கஞ்சுகத்தின்மெய்யர் - கவசம்பூண்ட தேகத்தையுடையவரும்—வில்லுமிழ் - ஒளியைக்கொப்புளிக்கின்ற—மணியிற்செய்த- மணியினாற்செய்த—வேத்திரக்கரத்தர் - பிரம்பைக்கையிலுடையவரும் (ஆகிய சேவகர்கள்)வேந்தர்- அரசர்களே—நில்லுமினின்மினென்று- நில்லுங்கள்நில்லுங்களென்று—நீக்கினர் - அவரைவிலக்கினராகி—தொடர்ந்துசெல்ல - தொடர்ந்துடன்செல்ல—எ-று. (கருத்து)கல்வியில்வல்லநற்குலவிருத்தசேவகர்கள் அரசர்களைநில்லுங்களென்றுபிரம்பால்விலக்கி உடன்செல்லவும் என்பதாம். (௩௮)

பாவிருள்மேயும்பைம்பொன்னிலத்திடைப்பராசைசேர்ந்த
தெய்வவயின்மெழுகிதுண்டுசேடுத்துமேற்றேன்கொள்வாசத்
தாய்மலரனிச்சப்போதுபரப்பியவணிகொள்வீதி
வெயுறழ்பசியதோளி * மெல்லடிபெயர்த்திட்டாளே.

(இ-ள்) பாவிருள் - பாவியவிருளை—மேயும் - மேய்கின்ற—பைம்பொன்னிலத்திடை - பசியபொன்பதித்தபூமியிலே—பராசை-பரியஅடியையுடைய—சாந்தம்-சந்தனமரத்திற்கொண்ட கட்டையாற்சேர்த்த—தெய்வையின்-குழம்பினுல்—மெழுகி - மெழுகி—துண்டுசே - மெல்லியவஸ்திரத்தை—உடுத்து - பரப்பி—மேல்-மேலே — தேன்கொள் - தேனைக்கொண்ட—வாசத்து - வாசனையோடுகூடிய—ஆய்-ஆய்ந்தெடுக்கப்பட்ட—மலர்-விரிந்த—அனிச்சப்போது - அனிச்சமலரை—பரப்பிய-பரப்பியிருக்கின்ற—அணிகொள் - அழகைக்கொண்ட—வீதி- வீதியிலே—வெயுறழ்-மூங்கிலையொத்த—பசியதோளி - பசிய தோள்களையுடையதமயந்தியானவள்—மெல்லடி - மெல்லியபாதத்தை—பெயர்த்திட்டாள் - தூக்கிவைத்துநடந்தாள் —எ-று.எ - சற்றுசைக்கண்வந்தது * இலக்கணக்கொத்து - இதுவிதியிதுமறையெனப் படாதிலிபர் - இவ்விதியால்தோளிமெல்லடியெனப்பெயரடுக்கியும்- வினையடுக்கியும் வருதல்வரம்பில்லை (கருத்து) சந்தனத்தால்மெழுகிமெல்லிய சீலைவிரித்துமலர்பரப்பியவீதியில்தமயந்திநடந்தாள்என்பதாம். (௩௯)

கலத்தொடுபழகுஞ்செம்பொற்கதிர்முலைக்களிநல்யானை
யுலப்பருமதத்தகாணிலுயிர்குடித்தன்றிகில்லா
நிலத்தலைகாக்கும்வேந்திர்நீங்குகநீங்குகென்று
வலத்தகமூட்டுஞ்செம்பொனடிச்சிலம்பார்த்தச்சென்றாள்

(இ-ள்) கலத்தொடு - ஆபாணத்தொடு—பழகும் - பழகுகின்ற—செம்பொன்-செம்பொற்பிரகாசம்பொருந்திய—கதிர் - கிரணமிருந்த—முலை-ஸ்தனங்களாகிய—களி - களிப்பையுடைய —நல்யானை - நல்லயானைகளானவை—உலப்பரும் - கெடுதற்கரிய—மதத்த - மதத்தையுடையன—காணில்-தும்மைக்கண்டால்—உயிர்குடித்தன்றி - உயிரைக்குடித்தாலல்லாமல்—இல்லா - நிற்றலைப்பெறமாட்டா—(ஆதலால்)நிலத்தலை-பூமியினிடத்து—காக்கும் - புரக்கின்ற — வேந்திர் - அரசர்கள்—நீங்குகநீங்குகென்று - நீங்கக்கடவீர்நீங்கக்கடவீரென்று —அலத்தகமூட்டும் - செம்பஞ்சக்குழம்பூட்டிய—செம்பொன் - சிவந்தபொன்னாற்செய்த—அடி - பாதத்திலிருக்கின்ற—சிலம்பு-சிலம்புகள்—ஆர்த்த-சத்திக்க—சென்றாள்-போனாள்—எ-று.(கருத்து)தமயந்திமுலைகளாகியயானைகள்கண்டால் அரசர்களேஉங்களைக் கொல்லும் நீங்கிப்போங்களென்றுசொல்லுவதுபோலச்சிலம்புசத்திக்கச்சென்றாளென்பதாம். ( )

வரிவளைக்குலமும்வள்வார்மங்கலமுரசுங்கன்னற்
பொருசிலைமதனன்வின்னாண்புடைப்பொடும்பொங்கியார்ப்ப
விரிதிரைப்பாலையீன்றவிளங்கிழையனையநங்கை
திருமணியிமைக்குஞ்செம்பொன்மண்டபத்தசென்றுசேர்ந்தாள்

(இ-ள்-)வரி-இரேகைகளையுடைய—வளைக்குலமும்-சங்குக்கூட்டமும்—வள்வார் - இறுக்கியவாரையுடைய—மங்கலமுரசம்- விவாகபேரிகையும்—கன்னற்பொருசிலை - பொருகின்றகருப்புவில்லேந்திய— மதனன்-மன்மதனுடைய—வின்னாண்புடைப்பொடும் - வில்லின துனாத்தொனியோடும் — பொங்கி - மிகுந்து—ஆர்ப்ப-சத்திக்க—விரி-விரிந்த—திரை-அலைகளையுடைய— பாலையீன்ற-பாற்கடல்பெற்ற—விளங்கிழையனைய - திருமாதை யொத்த—நங்கை - தமயந்தி—திருமணி-உயர்ந்தஇரத்தினங்கள்பதித்து—இமைக்கும் - பிரகாசிக்கின்ற—செம்பொன்மண்டபம் - சிவந்தபொன்னாற்செய்தமண்டபத்தில் —சென்று-போய்—சேர்ந்தாள்-சேர்ந்தனள்—எ-று.(கருத்து) தமயந்திசுயம்வரமண்டபத்திற்சென்றாளென்பதாம். (௪௧)

இழைசுடரெறிந்தவொளியும்விசும்புறைதரும்வானோர்
பொழிமலரிடைதவழ்தலும்பூசல்வண்டினர்தலும்
முழைபொருந்தடங்கட்பேதையுருவினைத்தெரியக்காணார்
விழைவொடுநோக்கும்வேந்தர்விழிநெருங்குறுமாதோ.

(இ-ள்) இழை-ஆபரணங்கள்—சுடர்-ஒளியை — எறிந்தவொளியும் விசும்பு-பெரியசுவர்க்கத்தில்—உறைதரும் - வசிக்கப்பெற்ற—வானோர் - தேவர்கள்—பொழி - பொழிகின்ற—மலர் - பூக்கள்—இடைதவழ்தலும் - நெருங்குதலும்—பூசல் - பூசலையுடைய—வண்டு-வண்டுகள்—இவர்தலும்-மொய்த்தலும் — உழைபொரு-மானையொத்த—தடங்கட்பேதை - விசாலம்பொருந்தியகண்களையுடைய தமயந்தியினது—உருவினை - வடிவை—தெரியக்காணார் - தெரியும்படி பார்க்காராகிய—விழைவொடு - விருப்பொடு—நோக்கும் - பார்க்கின்ற—வேந்தர் - அரசருடைய—விழி - விழிகளானவை — நெருங்குற-நெருக்கமடைந்தன—எ-று. (கருத்து) ஆபரணங்களொளியாலும் மலர்களாலும்வண்டுகளாலும் தமயந்திவடிவைக் காணுதலின்றி அரசர்கள் கண்கள்நெருங்குற்றனவென்பதாம். ([illegible])

அறற்குழங்கூந்தற்பேதையணிகளிற்கரியசோதி
யெறிக்குநன்மணியின்றேற்றமெறிதிரைக்கடலின்மொய்த்த
விறற்கதிர்வடிவேல்வேந்தர்விழைவொடுநோக்குங்கண்கள்
பறிப்பரியவாய்மெய்யிற்பதிந்தனபோலுமாதோ.

(இ-ள்) அறல்-கருமணலையொத்த—குழங்கூந்தல் - கரியகுழலையுடைய—பேதை - தமயந்தியினது—அணிகளில் - ஆபரணங்களுக்குள்ளே—கரியசோதி - நீலவொளியை—எறிக்கும்-வீசுகின்ற—நன்மணியின்றேற்றம் - நல்லநீலரத்தினக்காட்சியானவை —எறிதிரை அலைமோதுகின்ற—கடலின் - கடல்போல—மொய்த்த - நெருங்கப்பெற்ற—விறல்-பெருமைபொருந்திய — கதிர்-கிரணங்களையுடைய, வடிவேல்-வடித்தவேலையுடைய—வேந்தர் - அரசர்கள் — விழைவொடு - விருப்பத்தோடு—நோக்கும் - பார்க்கும்—கண்கள்-கண்களானவை — பறிப்பரியவாய் - வாங்குதற்கரியவாகி—மெய்யில் - தேகத்திலே — பதிந்தனபோலும்-அழுந்தினபோலுமிருந்தன—எ-று. மாது-ஓ-அசைகள். (கருத்து) தமயந்தி அணிந்தநீலரத்தினங்களின்காட்சியானவை அரசர்கள் கண்களைப்போலுமிருந்தன-எ-ம். ([illegible])

வஞ்சமொன்றின்றிவேறலரிதெனவதனைவாட்டி
விஞ்சையின்புணர்ப்பாற்கூற்றைவிளங்கிழைவடிவமாக்கி
யெஞ்சலிலுலகமன்னர்யாரையுமொருங்குகொல்வான்
செஞ்சுடர்வயவாள்வேந்தன்றீவினையிழைத்ததென்பார்

(இ-ள்) வஞ்சமொன்றின்றி-வஞ்சனையொன்றில்லாமல்—வேறலரிதென - நம்மால்வெல்லப்படுதலரிதென்றெண்ணி— வதனைவாட்டி-



சுயம்வரமென்றுநாட்டி—விஞ்சையின்புணர்ப்பால் - மந்திர வித்தையினுடையசம்பந்தத்தால்—கூற்றை-யமனை — விளங்கிழைவடிவமாக்கி-தமயந்திஉருவமாகச்செய்து—எஞ்சலில்- குறைவில்லாத — உலகமன்னர்யாரையும் - திரிலோகத்திலுமுள்ள அரசர்களெவரையும்—ஒருங்குகொல்வான் - ஒருசேரக்கொல்லும்படி—செஞ்சுடர் - செய்யகிரணத்தையுடைய—வயவாள் - வெற்றிபொருந்தியவாட்படையையுடைய—வேந்தன்-வீமனானவன்—இழைத்தது - செய்தது — தீவினையென்பார் - தீவினையாகுமென்பார்கள்—எ-று-(கருத்து) வீமன் இயமனைப்பெண்ணுருக்கி அரசர்களைக்கொல்ல நினைத்தது தீவினையென்பார்கள்எ-ம். ()

தொண்டைவாய்முத்தமூரற்றுடியிடையறன்மென்கூந்த
லொண்டொடிவனப்புவாய்ந்தவுருவுநங்கண்களாரக்
கண்டிடிவியந்துநெஞ்சங்களிப்புறவொற்றர்கூறப்
பண்டுநாங்கேட்டவாற்றிற்பதின்மடங்காயிற்றென்பார்

(இ-ள்) தொண்டைவாய்-கொவ்வைக்கனிபோன்றவாயையும்—முத்தமூரல் - முத்தையொத்தபல்லையும்—துடியிடை - உடுக்கையையொத்தஇடையையும், அறன்மென்கூந்தல்-கருமணலையொத்த மெல்லியகூந்தலையுமுடைய—ஒண்டொடி - தமயந்தியினது—வனப்புவாய்ந்த-அழகுபொருந்திய—உருவு - வடிவை—நம் - நம்முடைய—கண்களார-கண்ணிரம்பப்பெற—கண்டிடில் - கண்டவிடத்தில்—வியந்து - அதிசயித்து—நெஞ்சம்-மனமானது—களிப்புற-களிப்பையடைய—ஒற்றர்கூற-ஒற்றர்சொல்ல—பண்டு - முன்னே—நாம்-நாம் — கேட்டவாற்றில்-கேட்டவகையில்—பதின்மடங்கு - பத்துமடங்கு—ஆயிற்றென்பார்-மேலாயினதென்பார்கள்—எ-று. வியந்துபதின் மடங்காயிற்றென்பாரென(கருத்து) அரசர்கள்தமயந்தியழகைவியந்தார்கள்எ-ம். ()

வள்ளுறைகழித்தவொள்வாண்மாறிவைத்தனையவுண்க
ணள்ளிக்கொண்டுயிரையின்னே*யருந்திடாதொழியினன்றே
தெள்ளமிர்தனையதீஞ்சொற்சேயிழையுத்தரீகத்
துள்ளுறைகொடியகூற்றமுயிர்குடித்திடுவதென்பார்

(இ-ள்) வள்-கூர்மைபொருந்திய — உறைகழித்த - உறையினின்றுநீங்கிய — ஒள்வாள்-ஒளிபொருந்தியவாளை — மாறிவைத்தனைய-மாறிவைத்தால்(அதையொத்த)—உண்கண் - மையுண்ட கண்களானவை—உயிரை-ஆவியை—அள்ளிக்கொண்டு - கையிலள்ளிக்கொண்டு—இன்னே-இப்பொழுதே—அருந்திடாது-உண்ணாமல் — ஒழியினன்றே-நீங்கினநன்றே—தெள்ளமிர்தனைய - தெளிவுபொருந்திய அமிர்தத்தையொத்த—தீஞ்சொல் - மதுரம்பொருந்தியசொல்லையுடைய—சேயிழை - தமயந்தியினது—உத்தரீகத்துள்ளுறை-மேற்போர்வைக்குள்ளேயிருக்கும்—கொடியகூற்றம் - முலைகளாகியகொடியகூற்றம்—உயிர் - ஆவியை—குடித்திடுவதென்பார் - பருகுவதென்பார்கள்—எ-று* இலக்கணக்கொத்து - வினையியல்-ரு-கு - மறைமூவகையாய்.

வழங்குவர்புலவர் - இவ்விதியால் அருந்திடாதுஎன்றது எதிர்மறைவி னையெச்சம்(கருத்து) அரசர்கள்தமயந்திமுலைகளாகிய கூற்றம்உயிரை க்கொல்லுமென்பார்கள் என்பதாம். (௱௰௬

முருந்துறழினியமுரன்முகிழ்முலைப்பசியவேய்த்தோள்
கருந்தடங்கண்ணிசெவ்வாய்க்கமழ்திரையமிழ்தமாந்த
வருந்தவம்புரிந்தோர்மண்ணிலரசரோவமரரோயோ
தெரிந்திலமென்னமாழ்கித்தெருமரலெய்திநிற்பார்.

(இ-ள்.) முருந்து - மயிலிறகினடியை—உறழ் - ஒத்த—இனிய-இ னிமையையுடைய—முரல்-பற்களையும் — முகிழ் - அரும்பை யொத்த—முலை - ஸ்தனங்களையும்—பசியவேல் - பசியமூங்கிலையொத்த—தோள் - தோள்களையும்—கருந்தடங்கண்ணி - கரியபெரியகண்களையு முடையதமயந்தியினது—செவ்வாய் - சிவந்தவாயாகிய—கமழ் - வாசி க்கின்ற—திரை - பாற்கடலிற்றோன்றிய—அமிழ்தம் - அமிர்தத்தை—மாந்த-புசிப்பதற்கு — அருந்தவம்புரிந்தோர் - அரியதவத்தைச்செய்த வர்—மண்ணில்-பூமியிலிருக்கின்ற—அரசரோ - அரசருக்குள்ளொரு வரோ—அமரரோயோ - தேவர்க்குள்ளொருவரோ — தெரிந்திலமென் ன-(யாம்) அறிந்திலமென்று—மாழ்கி-மயங்கி—தெருமரலெய்தி - சுழ [illegible]டைந்து—நிற்பார்-நிற்பார்கள்—எ-று. (கருத்து) தமயந்தியை [illegible] ணுபவிக்கத்தவஞ்செய்தார்கள்தேவர்களோ அரசர்களோ என்பார்கள் என்பதாம். (௱௰௭)

அளியசீறடிகணோவவனிச்சமேலொதுங்கச்செய்த
விளைமதுத்துளிக்குந்தண்டார்வேந்தனேகொடியனென்பார்
வளர்முலைப்பாரங்கண்டும்வண்டிமிர்தெரியலென்பார்
தளரிடைக்கிடுக்கண்செய்ததாயரோகொடியரென்பார்

(இ-ள்) அளிய-அளிதலையுடையவாகிய—சீறடிகள்-சிறியபாதங்க ள்—நோவ - நோவையுடைய—அனிச்சமேல் - அனிச்சமலரின்மேல்—ஒதுங்கச்செய்த-நடக்கச்செய்த— விளை - விளைகின்ற—மதுத்துளி க்கும் - தேன்றுளிக்கின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய— தார் - மாலை யையுடைய—வேந்தனே - வீமாசனே—கொடியனென்பார் - கொடி யனென்பார்கள்—வளர்- வளரப்பெற்ற—முலை - ஸ்தனங்களினுடை ய—பாரங்கண்டும் - சுமையைக்கண்டும்—வண்டு - வண்டுகள—இமி ர்-ஒலிக்கப்பெற்ற—தெரியல்சூட்டி - மாலையைச்சூட்டி—தளர்-தளரப் பெற்ற—இடைக்கு-மருங்குலுக்கு—இடுக்கண்செய்த - வருத்தத்தை ச்செய்த—தாயரோ-தாய்மார்களே—கொடியரென்பார் - கொடியரென் பார்கள்—எ-று.(கருத்து) தமயந்தியைநடக்கச்செய்த - வீமனேகொடி யனென்பார்கள்முலைபாரத்தின்மேல்மாலைசூட்டிய தாய்மார்களே கொ டியரென்பாரகள்-எ-ம். (௱௰௮)

எழுறுமன்னர்யாருமினையனகூறப்பைம்பொன்
வாமமேகலைகளார்ப்பமணிச்சிலம்பொலிப்பச்செய்ய்



காமர்வாண்முகையசெவ்விக்காந்தளஞ்செங்கைகூப்பித்
தாமவேற்றடங்கணல்லாடாதையைத்தொழுதுநின்றாள்.

(இ-ள்) எழுறும் - இன்பமடைகின்ற—மன்னர்யாரும் - அரசரனைவரும்—இனையன-இப்படிப்பட்டவார்த்தைகளை—கூற-சொல்ல—பைம்பொன்-பசியபொன்னாற்செய்த—வாமம் - அழகுபொருந்திய—மேகலைகள் - மேகலாபரணங்கள்—ஆர்ப்ப - சத்திக்க—மணி-நவமணி களிழைக்கப்பெற்ற—சிலம்பு - பாதசாலங்கள்—ஒலிப்ப- ஒலிக்க—செய்ய-சிவந்த—காமர்-அழகுபொருந்திய—வாள் - ஒளியையுடைய—மு கைய-அரும்பையுடையனவாகிய—செவ்வி - செவ்வியையுடைய—கா ந்தளஞ்செங்கைகூப்பி - காந்தண்மலரையொத்தசிவந்தகைகளைக் குவி த்து—தாமம் - வெற்றிமாலையைத்தரித்த—வேல் - வேலையொத்த—த டங்கண்-விசாலம்பொருந்தியகண்களையுடைய—நல்லாள் - தமயந்தியா னவள், தாதையை-தந்தையை; தொழுதுநின்றாள்- வணக்கஞ்செய்துநி ன்றாள்—எ-று. (கருத்து) தமயந்திதன்பிதாவாகியவீமனைவணங்கிநின் றாள் என்பதாம். (௱௰௯)

சேவடிதொழுதுநின்றதெரிவையைமகிழ்ந்துநோக்கி
மூவுலகாளும்வேந்தரொருவழித்திரண்டுமொய்த்தார்
யாவரோயிவரையெண்ணியினையதொன்றுரைப்ப[illegible]
பூவைபோன்மேனியானைநினைந்தனன்புலவு[illegible]வலான்.

(இ-ள்) சேவடி - தன்னுடையசிவந்தபாத[illegible]களை— தொழுதுநின் ற-வணங்குகின்ற—தெரிவையை-தமயந்தியை—[illegible]மகிழ்ந்து-மகிழ்ந்து—நோக்கி-பார்த்து—மூவுலகாளும்வேந்தர் - திரிலோகத்திலுமுள்ள அரச ர்களும்—ஒருவழி-ஓரிடத்திலே—[illegible]—மொய்த்தார் - நெரு ங்கினார்கள்—யவர்-எவர்கள்—இவரை-இவ்வரசரை—எண்ணி-நினைத் து—இனையதொன்று-இத்தன்மையதொன்று—உரைப்பதென்ன- சொல் லுவதொன்று—பூவைபோன்மேனியானை-காயாமலரையொத்தவண்ண த்தையுடையநாரணனை—புலவுவேலான்-வீமாசன்—நினைந்தனன்-நி னைந்தான்—எ-று.எ-வினை (கருத்து) வீமாசன்விஷ்ணுவைநினைந்தான் என்பதாம். (௱௨௰

மன்னவனினைவையோர்ந்துவண்டுழாயலங்கன்மார்பன்
றன்னடிதொழுதுநின்றசதுர்முகத்தேவைநோக்கி
கன்னலிற்கனிந்தநின்சொற்கலைமகளன்றியாரோ
பின்னரொன்றிவரையெண்ணியெந்திழைக்கிசைக்குநீரார்.

(இ-ள்) மன்னவன்-வீமாசனுடைய—நினைவையோர்ந்து நினைப் பையறிந்து—வண்டுழாயலங்கல் - வளம்பொருந்திய துளபமாலையைய ணிந்த—மார்பன் - மார்பினையுடையநாரணனெனுமவன்—தன்னடி- தன துபாதங்களை—தொழுதுநின்ற :- வணங்கிநின்ற—சதுர்முகத்தேவை நோக்கி-பிரமதேவனைப்பார்த்து—கன்னலில் - கரும்பைக் * காட்டிலு

ம்—கனிந்த-சுவைமுதிர்ந்த, தீஞ்சொல்- மதுரவார்த்தையையுடைய—கலைமகளன்றி-நாமகளல்லாமல்—இன்னொன்று - இத்தேயத்தினொன்று—இவளா - இவ்வாசனா—என்னி - நினைக்கு—வந்திறைக்கு - தமயந்திக்கு—இசைக்கும் - சொல்லுகின்ற—நீரார்-தன்மையையுடையவர்—யார் -யாவர்— எ-று. எகாரம்வினா ✽ குவலயாநந்தம் - உறுப்பியல்-நின்றுகாட்டிலும்பிரித்தமின்னு-வமைந்தாமவேற்றுமையாகிவருமே- இவ்விதியாங்காட்டிலும் என்றஅஹந்தாம்வேற்றுமையுருபாம் (கருத்து) விஷ்ணுவிமராசன்றினைவையறிந்துபிரமனைப்பார்த்துச் சரஸ்வதியேதமயந்திக்கு இன்னாரின்னாரென்றுசொல்லவல்லவள்என்றார் என்பதாம். ()

என்றலுமலரின்மேலோனிளநிலாவெறிக்குமேனி
மன்றலங்கரியகூந்தல்வாணிவாண்முகத்தைநோக்கிச்
சென்றரசர்வெள்ளத்திரளினைவிதர்ப்பனீன்ற
பொன்றிகழ்முலையினுக்குரையெனப்புவியிற்போந்தாள்.

(இ-ள்) என்றலும்-இப்படியென்றுசொன்னவளவில்— மலரின்மேலோன் - பிரமதேவனானவன்—இளநிலா - இளமைபொருந்தியநிலவினொளியை—எறிக்கும் - வீசுகின்ற—மேனி - திருமேனியையுடைய—மன்றல்-வாசனைபொருந்திய—அம் - அழகிய—கரியகூந்தல் - கறுத்த [illegible]—வாணி-நாமகளுடைய—வாள் - ஒளிபொருந்திய, முகத்தைநோக்கி; முகத்தைப்பார்த்து—சென்று - போய்—அரசர்வெள்ளத்திரளினை - இராசகூட்டத்திரட்சியை—விதர்ப்பனீன்ற- வீமன்பெற்ற—பொன்றிகழ் - பொன்போன்றதேமல்விளங்கிய —முலையினுக்கு-தமயந்திக்கு—உரையென. - சொல்லென்றுசொல்ல—புவியில்-பூமியிலே—போந்தாள்—வந்தாள்—எ-று. (கருத்து) பிரமன்சரஸ்வதியைநோக்கித்தமயந்திக்கு அரசர்களை [illegible]விவியென்றுசொல்ல அவளும் வந்தாள் என்பதாம். (௫௨௨)

போந்தவள்வண்டுமூசாப்பொன்னரிமாலையோடும்
வார்ந்ததேமாலைதாழ்ந்தவதுவைமண்டபத்தின்மேவி
யேந்தெழிலெருத்தங்கோட்டிநாணொடுமிறைஞ்சிநின்ற
கூந்தலம்பிடிக்குவேந்தர்குலமுறைகிளக்கலுற்றாள்.

(இ-ள்) போந்தவள்-அப்படிவந்தநாமகள்—வண்டுமூசா - வண்டுகளால்மொய்க்கப்படாத—பொன்னரிமாலையோடும் - பொன்னரிமாலையுடனே—வார்ந்த - நீண்ட—தேம் - வாசனைபொருந்திய—மாலைதாழ்ந்த-மலர்மாலைகள்தாழப்பெற்ற—வதுவைமண்டபத்தின் - விவாகமண்டபத்தில்—மேவி - பொருந்தி—ஏந்து - தாங்கிய—எழில் - அழகுபொருந்திய—எருத்தங்கோட்டி-தலையைவணங்கிக்கொண்டு—நாணொடும் - நாணத்தோடும்—இறைஞ்சிநின்ற -தொழுதுநின்ற—கூந்தலம்பிடிக்கும் - தமயந்திக்கு—வேந்தர்குலமுறை - அரசர்மரபினை—கிளக்கலுற்றாள்-சொல்லத்தொடங்கினாள்—எ-று. (கருத்து) சரஸ்வதியானவள் தமயந்திக்கு அரசர்குலமுறைசொல்லத்தொடங்கினாள் என்பதாம். (௫௨௩)



சேயரிசிந்திநீண்டசெழுங்கடைமழைக்கட்செவ்வாய்
மாயிருஞாலம்விற்கும்வருமுலைத்தெரிவைகேட்டி
யாயிரங்கதிர்கள்வீசியங்கண்மாஞாலம்போர்த்த
பாயிருள்பருகுஞ்செங்கேழ்ப்பரிதியிவ்விருந்ததேவே.

(இ-ள்) சேயரி - செவ்வரிகள்—சிந்தி - சிதறப்பெற்று—நீண்ட-நெடிய—செழுங்கடை - செழுமைபெற்றகடையையுடைய—மழை-குளிர்ச்சிபொருந்திய—கண் - கண்களையும்—செவ்வாய் - சிவந்தவாயையும்—மா - மகத்தாகிய—இரு - பெரிய—ஞாலம்-பூமியை—விற்கும் -விலைசெய்யும்—வருமுலை - வளர்கின்றஸ்தனங்களையுமுடைய—தெரிவை - தமயந்தியே—கேட்டி - நீகேட்பாயாக—ஆயிரங்கதிர்கள்வீசி- ஆயிரங்கிரணங்களைவீசி—அங்கண் - அழகியஇடத்தையுடைய—மா-மகத்தாகிய—ஞாலம் - பூமியை—போர்த்த - மூடிய—பாயிருள்-பரவியவிருளை—பருகும் - குடிக்கின்ற—செங்கேழ்-செக்கிறத்தையுடைய —பரிதி - சூரியன்—இவ்விருந்ததேவு-இருத்தலையுற்றஇத்தேவன் — எ-று.ஏகாரம்-ஈற்றசை (கருத்து) தமயந்தியே இவன்சூரியதேவனானவன் -எ-ம்.

பண்ணமைஇனியதீஞ்சொற்படாமுலைப்பாவைகேண்மே
கண்வழுக்குறுதண்சோதிக்கலைநிலவெறிப்பவல்லான்
மண்ணியமணியிற்செய்தவாசனத்திருந்ததேவன்
விண்ணவர்க்கமிர்தமீந்தவெண்மதிக்கடவுளாமால்.

(இ-ள்.) பண்-இசை—அமை - பொருந்திய—இனிய-இனிய வார்த்தையையுடைய—தீஞ்சொல்-மதுரவார்த்தையையுடைய—படா-சாயாத—முலை-ஸ்தனங்களையுடைய—பாவை-தமயந்தியே—கேள்-கேட்பாயாக—கண்- கண்கள்—வழுக்குறு-கூசுகின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—சோதி-பிரகாசத்தையுடைய—கலை-சோடசகலைகளும்—நிலவெறிப்ப-ஒளிவீச—வல்லான்-வல்லவனும் - மண்ணியமணியிற்செய்த—மணியிற்செய்த-இரத்தினங்களாற்செய்யப்பட்ட—வாசன-பெரிய—தவிசு- ஆசனத்தில், இருந்ததேவன்-இருத்தலையுற்றதேவனானவன்—விண்ணவர்க்கு-தேவர்களுக்கு—அமிர்தமீந்த - அமிர்தத்தைக்கொடுத்த—வெண்கதிர்க்கடவுளாம்-சந்திரனும்—எ-று. மோலென்பதுமுன்னிலைக்கண்வந்த அசை (கருத்து) இவன்சந்திரனென்றுசொன்னபதாம். (௫௨௪)

உளர்கணைக்கனிந்துவிம்மியொழுகொளியாரஞ்சூடி
யோர்கனிக்கொழுதும்பொம்மலிளமுலையணங்குகேட்டி
தார்புனைமௌலிவேய்ந்துதனைப்பிளாதிருந்ததேவர்
மாரனில்வனப்புவாய்ந்தமருந்துயத்தலைவர்தாமே.

(இ-ள்) உளர்-பரவுகின்ற—கணைக்கனிந்து - தேமலையணிந்து—விம்மி-பருத்து—ஒழுகொளி -ஒளிவீசுகின்ற—ஆரம் - முத்துவடத்தை—சூடி - தரித்துக்கொண்டு—ஏர்-அழகானது—கனிந்து- முதிர்ந்து—ஒழுகும்-ஒழுகுகின்ற—பொம்மல் - பொலிவுபெற்ற,இளமுலை - இ

ளமைபொருந்தியஸ்தனங்களையுடைய—அணங்கு-தமயந்தியே, கேட்டி-கேட்பாயாக—தார் - மலர்மாலையை—புனை-தரித்த — மௌலி வேய்ந்து-கிரீடத்தையணிந்து—தணப்பிலாது-இணைபிரியாது—இருந்ததேவர்-(இங்) கிருத்தலையுற்றதேவர்கள்—மானில்-மன்மதனைக்காட்டினும்—வனப்புவாய்ந்த-அழகுபெற்ற—மருத்துவத்தலைவர் - அசுவனிதேவர்கள்—எ-று. ஏ-அசை (கருத்து) இவர்கள் அசுவனிதேவர்களென்றுன் என்பதாம். (ஙஉகூ)

வண்ணமேகலையாய்மற்றுன்வருமுலைப்போகம்வேண்டி;
யெண்ணிலாகியிப்பாலினிதுவீற்றிருந்தோரெல்லாம்
விண்ணவரப்பாற்பைம்பொன்வியன்றவிசிருந்ததேவர்
பண்ணமைதிவவினல்யாழ்பயின்றகாந்தருவவேந்தர்.

(இ-ள்)வண்ணமேகலையாய் - அழகுபொருந்தியமேகலாபரணத்தையணிந்ததமயந்தியே—உன் -உன்னுடைய—வரு-வளரப்பெற்ற—முலைஸ்தனங்களினுடைய, போகம்வேண்டி-போகத்தைவிரும்பி—எண்ணிலராகி - அளவற்றவராகி—இப்பால்-இப்புறத்தில்—இனிது - இனிமையோடு—வீற்றிருந்தோரெல்லாம் - வீறுடனிருத்தலையுற்றவர்களெல்லாம்—விண்ணவர் - தேவர்கள்—அப்பால் - அவர்க்கப்புறத்தில்—பைம்பொன்-பசியபொன்னாற்செய்த—வியன் - மேலாகிய— தவசிருந்ததேவர் - ஆசனத்திலிருக்கப்பெற்றதேவர்கள்—பண்ணமை-இசையமைந்த—திவவின்-வலிக்கட்டினையுடைய—நல்யாழ் - நல்லயாழை—பயின்ற-வாசிக்கின்ற—காந்தருவவேந்தர் கந்தருவவாசர்கள் —எ-று. மற்று-அசைநிலை (கருத்து) இவர்கள்காந்தருவவாசர்களென்றுன் எ-ம்.()

குழைமுகங்கிழிக்கும்வேற்கட்கொம்மைவெம்முலையாய்கேட்டி.
மழைவிடையன்னவாங்கண்மணித்தவிசிருந்ததேவ
ரிழுமெனவருவிச்சாரலினமணிவான்றித்தூங்கும்
விழைவுறுவெள்ளிவெற்பின்விஞ்சையர்கிறைவர்தாமே.

(இ-ள்) குழைமுகம்- காதணியினுடையமுகத்தை—கிழிக்கும்- கிழிக்கின்ற—வேற்கண் - வேல்போன்றகண்களையும்—கொம்மை - இளமையையுடைய—வெம்முலையாய் - விருப்பஞ்செய்கின்றஸ்தனங்களையுமுடையதமயந்தியே—கேட்டி - கேட்பாயாக— மழவிடையென்ன-இளவேற்றைப்போல்—ஆங்கண்-அவ்விடத்தில்—மணித்தவிசு- இரத்தினசனத்திலே—இருந்ததேவர் - இருத்தலையுற்றதேவர்கள்—இழுமென-இழுமென்னுமோசையோடு— அருவி-அருவியானது—சாரல்-மலைப்பக்கத்தினின்றும்—இனமணி-கூட்டமாகியமணிகளை—வரன்றி- வாரிக்கொண்டு, தூங்கும்-ஒழுகுகின்ற,விழைவுறு - விருப்பமடைகின்ற வெள்ளிவெற்பின்-கைலாசமலையிலிருக்கின்ற—விஞ்சையர்கிறைவர் - வித்தியாதாருக்காசர்-எ-று.[தாம்-ஏ-என்பன-இரண்டுஅசைகள்] (கருத்து) இவர்கள்வித்தியாதாருக்காசர்களென்றுன் என்பதாம். (ஙஉஅ)

முயற்கறையொழிந்தசெவ்விமுழுமதியதனினூடு
மயக்கியுள்ளுயிரையுண்ணும்வாள்விடந்தனையகண்ணுய்



பயக்கருஞ்சிறப்பிற்றேவர்பாவவீண்டிருந்தகாளை
யியக்கர்தம்பெருமானீன்றவெழில்புனைகுமரரேறே.

(இ-ள்) முயற்கறை-முயலினதுகளுப்பு—ஒழிந்த-நீங்கிய — செவ்வி-அழகுபொருந்திய—முழுமதியதனில் - பூரணசந்திரனையொத்தமுகத்தில்—நாளும் - நாடோறும்—மயக்கி - மயக்கஞ்செய்து—உள்ளுயிரை - உள்ளேயிருக்கின்றஆவியை—உண்ணும் - உண்கின்ற—வாள்விடந்தனைய-வாளிருந்ததையொத்த, கண்ணுய்- கண்ணையுடைய தமயந்தியே,பயக்கரும்-தோன்றுதற்கரிய—சிறப்பில்-சிறப்பினுல், தேவர்பாவ-தேவர்கள்வணங்கும்படி—ஈண்டிருந்த-இவ்விடத்திலிருத்தலைப்பெற்ற—காளை-அரசன்—இயக்கர்தம்பெருமானீன்ற - குபேரனுற்றரப்பட்ட—எழில்புனை - அழகுபொருந்திய— குமரரேறு - நளகூபரன்—எ-று. அசை(கருத்து)இவன்நளகூபரனென்றுன்-எ-ம், (ஙஉகூ)

காதளவோடிமீண்டுகடைசிவந்தாவியுண்ணு
மாதர்மென்னோக்கினுயிம்மணித்தவிசிருந்தவேந்தல்
பூதரவில்லினுணைப்புனிதனுக்கணியுமாகிப்
பாதலத்தின்பந்துய்க்கும்பஃறலைப்பாந்தள்வேந்தே

(இ-ள்.) காதளவோடி-காதுவரையுமோடி—மீண்டு- திரும்பி—கடைசிவந்து-கடைக்கண்சிவந்து — ஆவியுண்ணும்- உயிரையுண்கின்ற; மாதர்-அழகிய; மென்னோக்கினுய்-மெல்லியபார்வையையுடைய தமயந்தியே—இம்மணித்தவிசிருந்த - இந்தஇரத்தினசனத்தி லிருத்தலைப்பெற்ற—ஏந்தல்-அரசனுனவன்—புனிதனுக்கு-பரமசிவனுக்கு—பூதரவில்லின்-மேருவில்லில்—நாணும் - நாரியாகியும்—அணியுமாகி - ஆபரணமாகியும்—பாதலத்து - நாகருலகத்திலிருந்து— இன்பந்துய்க்கும்-சுகத்தையனுபவிக்கின்ற—பஃறலை-பலதலையையுடைய — பாந்தள் வேந்து-சர்ப்பாரசன்—எ-று.ஏ-சுற்றசை (கருத்து) இவன் ஆதிசேடனென்றுனென்பதாம். (ஙஙம)

இழைபரந்திமைக்குமல்குலின்னகைப்பவளச்செவ்வாய்
மழைமதர்நெடுங்கணல்லாய்மலர்க்கணைவேனில்வேளுந்
தொழுதகுவனப்புவாய்ந்துதோன்றுமித்தோன்றல்வெய்ய
பொழிமதக்களிநல்யானைப்புட்கரத்தீவில்வேந்தே

(இ-ள்) இழை-ஆபரணங்களால்—பரந்து-பரவப்பெற்று— இமைக்கும்-பிரகாசிக்கின்ற—அல்குல் - அல்குலையும்-இன்னகை - இனியநகையுள்ள—பவளச்செவ்வாய் - பவளம்போன்ற செவ்வாயையும் — மழை-குளிர்ச்சிபொருந்திய—மதர் - களிப்பையுடைய—நெடுங்கண்-நெடியகண்களையுமுடைய—நல்லாய் - தமயந்தியே—மலர்க்கணை - பூங்கணைகளையுடைய, வேனல்வேளும் - மன்மதனும்,தொழுதகு- வணங்கத்தக்க—வனப்புவாய்ந்து-அழகுபெற்று—தோன்றும்-தோன்றுகின்ற—

இத்தோன்றல்-இவ்வரசன்—வெய்ய - வெவ்விய—பொழிமதம் -பொழிகின்ற மும்மதத்தையுடைய—களிநல்யானை - களிப்புமிகுந்த நல்லயானைகளையுடைய—புட்கரத்தீவில் - புட்கரமென்னுந்தீவிலிருக்கின்ற—வேந்து-அரசன்—எ-று.(கருத்து)இவன் புட்கரனென்றுன் என்பதாம். (௬௩)

ஆற்றல்சான் மன்னராவி யருந்துவான் காந்துவெய்ய
கூற்றிருந்தனையவுண்கட் கோல்வளையினிதுகேட்டி
வேற்படைத்தானை சூழவியன் றவிசிருந்தகாளை
பாற்கடலுடுத்தசாகத் தீவுறைபரிதிவேலான்.

(இ-ள்) ஆற்றல்சால்-வலிமைமிக்க—மன்னராவி-அரசர்களுயிரை—அருந்துவான்-உண்ணும்படி—காந்து- மனமெரிந்து—வெய்ய - வெவ்விய—கூற்றிருந்தனைய - யமனிருந்ததையொத்த —உண்கண் - மையுண்டகண்களையுடைய—கோல்வளை-தமயந்தியே—இனிதுகேட்டி - இனிமையோடுகேட்பாயாக—வேற்படை-வேற்படையேந்திய— தானை-சேனைகள்—சூழ - தன்னைச்சுற்றும்படி —வியன் - அகன்ற— தவிசிருந்த-ஆசனத்திலிருக்கப்பெற்ற—காளை - அரசனாகியவன்—பாற்கடலுடுத்த-பாற்கடலையுடுத்த—சாகத்தீவுறை - சாகமென்னுந்தீவிலிருக்கின்ற—பரிதிவேலான் - சூரியன்போன்றவேற்படையையுடைய அரசன்—எ-று. (கருத்து) இவன் சாகத்தீவரசனென்றுன் என்பதாம். (௬௪)

தளரிடைமெலியவீங்கிச் சந்தனத்தேய்வைகொட்டி
வளரிளமுலையாயிங்கன் வைகியமணிசெய்பூணு
னிளவெயிற்பரிதிமான்றேரிடறுபொற்குடுமியோங்கிக்
கிளரொளிவிரிக்குமாடக் கிரவுஞ்சத்தீவின்வேந்தன்

(இ-ள்.) தளரிடை-தளர்கின்றஇடையானது—மெலிய-வாட—வீங்கி-பருத்து—சந்தனத்தேய்வை-சந்தனக்குழம்பினை— கொட்டி - அப்பி—வளர்-வளரப்பெற்ற — இளமுலையாய் - இளமைபொருந்தியஸ்தனங்களையுடையதமயந்தியே—இங்ஙன்-இவ்விடத்தில்—வைகிய-தங்கிய—மணிசெய்பூணன் - இரத்தினாபரணங்களையுடையஅரசன்— இளவெயில்-இளவெயிலையுடைய, பரிதிமான்றேர்-சூரியனுடைய குதிரைகட்டியதேரானது—இடறு - இடறுகின்ற—பொற்குடுமி - பொன்னாற்செய்தசிகரமானது—ஓங்கி - உயர்ந்து — கிளர் - மிகுந்த— ஒளிவிரிக்கும்-காந்தியைப்பரப்புகின்ற—மாடம்-உப்பரிகைகளையுடைய — கிரவுஞ்சத்தீவின்-கிரவுஞ்சமென்னுந்தீவையாளுகின்ற—வேந்தன் - அரசன் —எ-று.(கருத்து) இவன்கிரவுஞ்சத்தீவரசனென்றுன் என்பதாம். ([illegible])

புரிவடஞ்சுமந்துவீங்கும் புணர்முலையீங்குவைகுந்
திருகுவெஞ்சீற்றத்துப்பிற்றின் களியானையன்றுன்
விரைமதுவுயிர்க்குங்கைதை வேலிவாய்மணியும்பொன்னும்
வருதிரைகருட்டுங்கானல் வான்குசைத்தீவில்வேந்தன்

(இ-ள்) புரிவடம்-முத்துவடங்களை—சுமந்து - பொறுத்து—வீங்கும்-பருத்த—புணர்முலை - நெருங்கியஸ்தனங்களையுள்ள தமயந்தியே



—சக்குங்கால்-இங்கேயிருக்கின்ற—திருகு - மாறுபடுகின்ற—வெம்-வெவ்விய—சீற்றத்துப்பிற்றின்-மிகுந்தகோபத்தையும்—இன் - வலிமையையுமுடைய—களியானையன்றுன் - களிப்புமிக்கயானைகளையொத்த அரசனானவன்—விரை - வாசனைபொருந்திய—மதுவுயிர்க்கும் - தேனைத்தருகின்ற—கைதைவேலிவாய் - தாழைவேலியிடத்தில் — மணியும்-நவமணிகளையும்—பொன்னும்-பொன்னையும் — வருதிரை-வருகின்ற அலைகளை—கருட்டும்-மடக்கிவீசுகின்ற—கானல் - கடற்கரைச்சோலைகளையுடைய—வான் - மேன்மையாகிய—குசைத்தீவில்-குசையென்னுந்தீவிலிருக்கின்ற—வேந்தன்-அரசன்—எ-று.(கருத்து)இவன் குசைத்தீவரசனென்றுன் என்பதாம். (௬௫)

தெள்ளடைகாம்பானையின் றமிழ்தன்னயின்றாற்போலுஞ்
சொல்லடரும்பினியதீஞ்சொற் படைத்தபாவைகேண்மோ
விண்டலைப்பரிதிபோலவிளங்குமிச் சூரில்வாசத்
தண்டலைபுடைத்தகானற் சான்மலித்தீவில்வேந்தன்

(இ-ள்) தெள்ளடை - தெளிந்தஅடிசிலையுடைய—பாவையின்றடம்-தெள்ளிய—அமிழ்தன்னயின்றாற்போலும் - அமிழ்தத்தை இன்பத்தோடுண்டாற்போலும்—சொல்லடரும்பினிய—இனிய-இன்பத்தைத்தருகின்ற—பண்டைத்-பழைமையாகிய, தீஞ்சொல்-மதுரம்பொருந்தியசொல்லையும்—படைத்த-சாயல்நடைகளையுமுடைய—பாவை-தமயந்தியே—கேண்மோ - கேட்பாயாக—விண்டலைப்பரிதிபோல-ஆகாயத்திலிருக்கின்றசூரியன்போல—விளங்கும்-பிரகாசிக்கின்ற—இச்சூரில்-இவ்வரசனானவன்— வாசத்தண்டலைபுடைத்த-வாசனைமிக்கசோலைகளைப்புடைத்த—கானல்-கடற்கரைச்சோலைகளையுடைய—சான்மலித்தீவில்-சான்மலியென்னுந்தீவிலிருக்கின்ற—வேந்தன் - அரசன்—எ-று.தெள்ளடைகாம்பு-பொருளியல் மேல்கண்டு-அறுவகைத்தொகைநிலைத்தொடர் - பொன்மேனிமுதலாகிய பண்புத்தொகைநிலைத்தொடரும் - அன்மொழித்தொகைநிலைத்தொடரும் - உம்மைத்தொகைநிலைத்தொடரும் - உவமைத்தொகைநிலைத்தொடரும் - பொருந்தியதொடருமென்றோர் நீ இங்ஙனம்தொடுத்தல் - அறுபத்தொருவகைத்தொகைநிலைத்தொடரும்-ஆகியாப்பனை மன்றங்கூறார் புலவர்-இவ்வியாக்யானம்-இனியதீஞ்சொல் இதில் பிள்ளாக்குழல் தொகை. (கருத்து) இவன் சான்மலித்தீவரசனென்றுன்-எ-ம். (௬௬)

தேவர்கண்முதலாமற்றைத் தீவினில்வளம்படைக்குங்
காவலர்தம்மையொன்றாவுணர்த்தவனைக்கரியதந்தப்
பூவையன்னசொல்லாட்கட்டொண்மலர்வெண்முலையிரண்டுங்
காவலர்தீவின்வேந்தர்யாரையுமுணர்த்தினாள்

(இ-ள்) தேவர்கண்முதலா - தேவர்களைமுதலாக—மற்றைத்தீவினில்-மற்றைத்தீவுகளில்—வளம்படைக்கும்-அழகுபெற்ற—காவலர் - அரசர்கள்—இயல்பொன்று - இத்தன்மையின்று — உணர்த்து - சொல்லி—மைமைபோலும்—கரியஉந்தல் - கறுத்தகுழலையும் — பூவையன்ன

தீஞ்சொல் - பூவைப்புள்ளினிசையையொத்த இத்தித்த வார்த்தையையும்—வாட்கண் - வாள்போன்றகண்களையும்—பொம்மல்- பொலிவுபெற்ற—வெம்முலையினாட்கு - விருப்பத்தைச்செய்கின்ற ஸ்தனங்களையுடையதமயந்திக்கு—காவலூர்தியின்வேந்தர் - காவலந்திவிசேருக்கின்ற அரசர்கள்—யாரையும்-எவர்களையும்—கவிலலுற்றாள் - சொல்லத்தொடங்கினாள்—எ-று (கருத்து) காவலந்திவரசர்களைச்சொல்லத் தொடங்கினாளென்பதாம். (௱௩௬)

கொள்ளைவண்டிமிருங்கூந்தற்கோதையிவ்விருந்தவேந்தல்
வள்ளைவாய்க்கமலவாவிவாளையம்பகடுதாவிக்
கள்ளுலாம்பசியதாற்றுக்கமுகினம்பாளைகீறு
மள்ளலம்பழனஞ்சூழ்ந்தவவந்திநாடாளும்வேந்தே

(இ-ள்) கொள்ளை-கூட்டமாகிய—வண்டு - வண்டுகள் — இமிரும்-சத்திக்கின்ற—கூந்தல் - அளகத்தையுடைய—கோதை - தமயந்தியே—இவ்விருந்தவேந்தல்-இங்கிருந்தவிவ்வரசன்—வள்ளைவாய் - வள்ளைம்போன்றவாயையுடைய—கமலவாவி - தாமரைத்தடாகத்திலிருக்கும்—வாளையம்பகடு-ஆண்வாளைகள்—தாவி- பாய்ந்து—கள்ளுலாம் - தேனொழுகுகின்ற—பசிய-பசுமைபொருந்திய—தாறு - குலைகளுள்ள—கமுகினம்பாளை - கமுகமரத்தினம்பாளைகளை—கீறும் - கிழிக்கும்படியிருக்கின்ற—அள்ளல் - சேற்றினை—அம்-அழகிய—பழனஞ்சூழ்ந்த-கழனிகள்சூழ்ந்த—அவந்திநாடு - அவந்திதேயத்தை — ஆளும் ஆளுகின்ற—வேந்து-அரசன்—எ-று. (கருத்து) இவன் அவந்திநாட்டரசனென்றாள்-எ-ம். (௱௩௭)

கன்னலங்கனித்தேகோதாயிக்குறைநாமவேலான்
பொன்னவிரோடைநெற்றிப்பொழிமதக்களிறுமாய்க்குஞ்
செங்கெலங்குலையினூர்ந்துக்கிக்கொடைதவுகாவுங்
கன்னலங்கழனிசூழ்ந்தகௌடநாட்டரசரேறு

(இ-ள்) கன்னலம்-மிகுந்தகலைமைணந்து—கனிந்த - முதிர்ந்த—தேனாய்-தமயந்தியே—எந்குறை - இங்கேயிருக்கின்ற—நாமம் - அச்சத்தைத்தருகின்ற—வேலான்-வேலாயுதத்தையுடைய அரசன்— பொன்-பொன்னாற்செய்த—அவிர் - பிரகாசிக்கின்ற—ஓடை - முகபடாத்தையணிந்த—நெற்றி - நெற்றியையும்—பொழிமதம் - பொழிகின்றமதத்தையுமுடைய—களிறு - யானையை—மாய்க்கும் - மறைக்கின்ற—செந்நெல்-செந்நெற்பயிர்களுள்ளனவும்—அங்குலையில். அழகியகுலைகள் போல—ஊக்கும் - தங்குகின்ற—இட்-நித்தியமுடைய—தொடை - தேன்கூண்டானது—உகவு-தேனை—காவும் -துளிக்கின்ற—கன்னல்-கரும்புள்ளனவுமாகிய—அங்கழனி-அழகியகழனிகளால்—சூழ்ந்த - சூழப்பட்ட—கௌடநாடு - கௌடதேயத்தையாளுகின்ற—அரசர்- மன்னர்க்கு—ஏறு-ஆண்சிங்கத்தையொத்தவரசன்—எ-று (கருத்து) இவன் கௌடநாட்டரசனென்றாள்-எ-ம். (௱௩௮)



கஞ்சநாண்மலரைவென்றுகடைகுழையெறிந்துமீண்ட
நஞ்செனக்கொடியவாட்கண்ணங்கையிவ்விருந்தமீளி
வெஞ்சமங்காத்தலன்றிமணியெனவிடங்கச்செய்த
விஞ்சிசூழ்மதுரைமூதூரொதுகுலமன்னரேறு,

(இ-ள்) கஞ்சம்-தாமரையினுடைய—நாண்மலரை - [புதியமலரை] வென்று - வெற்றிக்கொண்டு—கடைகுழை - காதணியினுடையகடையை—எறிந்து-வீசி—மீண்ட - திரும்பிய—நஞ்செனவிடம்போல, கொடிய-கொடியவாகிய—வாட்கண் - வாள்போன்றகண்ணையுடைய—நங்கை - தமயந்தியே—இவ்விருந்தமீளி - இருக்கதலைப்பெற்ற இவ்வரசன்—வெம் - வெப்பம்பொருந்திய—சமம் - யுத்தத்திலே—காத்தலன்றி- காப்பதற்கல்லாமல்—அணியென - அலங்காரமாக— விளங்கச்செய்த-பிரகாசிக்கும்படிசெய்த—இஞ்சிசூழ் - மதில்சூழ்ந்த—மதுரைமூதூர்- மதுராபுரியையாளுகின்ற—ஏதுகுலமன்னர் - ஏதுகுலவரசர்க்கு—ஏறு - ஆண்சிங்கத்தையொத்தவன்—எ-று. (கருத்து) இவன்மதுராபுரியரசனென்றாள் என்பதாம். (௱௩௯)

* அமிழ்தினைமுனிந்துசாரலருவிதாழ்மலையமீன்ற
தமிழினுமினியதீஞ்சொற்றையலீண்டிருந்தகோமா
னிமிழ்திரைகொழித்தமுத்தமேழைநின்முறுவல்காட்டுங்
கமழலர்த்துறைசூழ்தெண்ணீர்க்கங்கைநாடாளும்வேந்தன்.

(இ-ள்) அமிழ்தினை-அமிர்தத்தை—முனிந்து - கோபித்து—சாரல்-பக்கங்களிலே—அருவிதாழ் - அருவியானதுதாழ்கின்ற—மலையம்-பொதியமலையிலிருக்கும்அகத்தியமுனிவனால்—ஈன்ற - தரப்பட்ட—தமிழினும் - தமிழைக்காட்டிலும், இனிய-இனிமையுள்ள, தீஞ்சொல்-மதுரம்பொருந்தியசொல்லையுடைய,தையல் - தமயந்தியே,ஈண்டிருந்த - இவ்விடத்திருந்த—கோமான் - அரசனைவன்— இமிழ்-பிரகாசிக்கின்ற—திரை - அலைகளானவை—கொழித்த - ஒதுக்கிய—முத்தம்-முத்துக்கள்—ஏழை-தமயந்தியே—நின்முறுவல் - உன்னுடையபல்வரிசையை—காட்டும்-காண்பிக்கும்—கமழ் - பரிமளிக்கின்ற—அலர்- அலமவினையுடைய—துறைசூழ் - துறைகள்சூழ்ந்த—தெண் - தெளிவுபொருந்திய—நீர்-நீரையுடைய—கங்கைநாடாளும்வேந்தன் - கங்கைநாடாளுமரசன்—எ-று[*இலக்கணக்கொத்துஒழிபியல்-௨-கு- பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு - மீரெழுத்தானுமிலக்குந்தமிழ்மொழி] இவ்விதியால் அமிழ்துசிறப்பெழுத்தான்வந்த தமிழ்மொழி (கருத்து) இவன்கங்கைநாட்டரசனென்றாள்-எ-ம் (௱௪௰)

வளைமலர்க்குழங்கன்மாலைவணிருங்கூந்தற்செவ்வா
யிளவளைமடந்தையிப்பா லெரிமணித்தவிசிற்றோன்று
நளைவிரியலங்கன்மார்ப னெள்வியுவருதவீதிக்
களைகுரான்முரசந்துஞ்சாக்காம்பிலிக்காவல்வேந்தன்.

(இ-ள்) விரைமலர் - மணமாறாதிருக்கின்ற—குழுங்கன்மாலை - அழகிய மாலையையணிந்த—வணர் - வளைந்த—இரும் - பெரிய—கூந்தல் - குழலையும், செவ்வாய் - செவ்வாயையும்—இளமுலை - கூட்டமாகியமுலையையுமுடையமடந்தை - தமயந்தியே—இப்பால் - இப்புறத்து—எரி-ஒளிவிடுகின்ற—மணித்தவிசில் - இரத்தினாசனத்தில், தோன்றும் - தோன்றுகின்ற—கனைவிரி - அரும்புகள்விரிந்த—அலங்கல்-மாலையையணிந்த—மார்பன் - மார்பையுடையவன்—நாளை - நடோறும்—விழவறாத-திருவிழாநீங்காத—வீதி - வீதியிலே—கனை-சத்திக்கின்ற—குரல் - குரலையுடைய—முரசம் - பேரிகையானது—துஞ்சா - ஓய்வில்லாத—காம்பிலிக்காவல்வேந்தன் - காம்பிலிதேயத்தையாளுகின்ற அரசன்—எ-று. (கருத்து) இவன்காம்பிலிதேசாதிபதியென்றுளனென்பதாம். (௱௪௧)

நுழைநொசி மருங்குற்றேம்ப நுண்ணெழின் மாமைவாய்ந்த
விழைவளர்முலையினாயிங் கினிதிருந்ததோன்றன்
மழலைவண்டுழலத்தூங்கு மழைமதப்புழைக்கைகால்வாய்க்
கழைகளிகளிநல்யானைக் கலிங்கநாடாளுமன்னன்.

(இ-ள்) நுழைநொசி - மிகுந்தநுட்பத்தையுடைய—மருங்குல்- இடையானது—தேம்ப - வாட—நுண் - நுட்பம்பொருந்திய—எழில்-அழகான—மாமைவாய்ந்த-பிரகாசம்பொருந்திய—இழை - ஆபரணத்தையணிந்த—வளர்முலையினாய் - வளர்ப்பெற்றமுலையினையுடையதமயந்தியே—இங்கு-இவ்விடத்தில்—இனிது-இனிதாக—இருந்த - இருக்கப்பெற்றதோன்றல் - அரசனானவன்—மழலை - இனிமைபொருந்தியவோசையுள்ள—வண்டு-வண்டுகள்—உழல - உழலும்படி—தூங்கும்-தங்கிய—மழைமதம் - மழைபோன்றமதத்தையும்—புழைக்கை - துவாரம்பொருந்தியதுதிக்கையையும்—கால்வாய் - தொங்குகின்றவாயையுமுடைய—கழைகளி-கரும்பைபுசிக்கின்ற—களிநல்யானை- களிப்பும்பொருந்தியநல்லயானைகளையுடைய—கலிங்கநாடாளுமன்னன் - கலிங்கநாட்டையாளுகின்ற அரசன்—எ-று. (கருத்து) இவன்கலிங்கதேசாதிபதியென்றுரை-ன-ம். (௱௪௨)

உளங்கனிந்துருகப்பைந்தார்க்காமனுமுலக்குஞ்சாய
றுளங்கொளிமுத்தமூரற்றோகையீங்கிருந்ததோன்றல்
விளங்கிழையினதுகண்போல்வேரியங்குவளைபூத்த
வளங்கெழுமருதவேலி வாரணவாசிமன்னன்

(இ-ள்) உளம்-மனமானது—கனிந்துருக - இளகியுருகும்படி—பைந்தார் - பசியமாலையையணிந்த—காமனும் - மன்மதனும்—உலக்கும்-விரும்புகின்ற—சாயல்-சாயலையும்—துளங்கு - அசைகின்ற—ஒளி-ஒளியையுடைய—முத்தமூரல் - முத்தையொத்தபற்களையுமுடைய—தோகை - தமயந்தியே—ஈங்கு - இங்கே - இருக்கலைப்பெற்ற—தோன்றல் - அரசனானவன்—விளங்கிழை - விளங்குகின்றவாபரணத்தையுடைய—நினது - உன்னுடைய—கண்போல் - கண்ணைப்போல்—



வேரியங்குவளை - தேனையுடைய அழகியகுவளைமலர்கள்—பூத்த - பூத்திருக்கின்ற—வளங்கெழு - வளம்பொருந்திய—மருதவேலி - மருதநிலத்தையுடைய—வாரணவாசிமன்னன் - காசிதேயத்தரசன்—எ-று. வாரணாசியென்பது வாரணவாசியெனமருவிற்று (கருத்து) இவன்காசிதேசாதிபதியென்றுரை-ன-ம். (௱௪௩)

குவட்டிளமுலையினாய்நின் குழைமுகத்திங்கணோக்கி
யுவட்டெடுத்துவகைவெள்ள மோங்கவீங்கிருந்ததோன்றல்
கவட்டடிக்கயவாய்மேதிகன்றுள்ளிப்பொழிந்ததீம்பா
றவிட்டவுண்டன்னந்துஞ்சுஞ் செழும்புனற்சிந்துவேந்தே.

(இ-ள்) குவடு-மலைபோன்ற—இளமுலை-இளமைபொருந்தியமுலைகளையுடையதமயந்தியே—நின் -உன்னுடைய—குழை - குண்டலத்தையணிந்த—முகத்திங்கணோக்கி - முகமாகியசந்திரனைப்பார்த்து—உவட்டெடுத்து - பெருக்கெடுத்து—உவகை - மகிழ்ச்சியென்னும்—வெள்ளம்-கடலானது—ஓங்க - மிகுந்தோங்க—ஈங்கிருந்த - இங்கிருந்த—தோன்றல் - அரசனானவன்—கவட்டடி - பிளப்பாகியகுளம்பையும்—கயவாய் -பெரியவாயையுமுடைய—மேதி - எருமை—கன்றுள்ளி-கன்றைநினைத்து—பொழிந்த-சொரிந்த—தீம்பால் - இனிமையுடையபாலை—தவிட்டவுண்டு-நிறையவுண்டு—அன்னந்துஞ்சும்-அன்னப்பறவைதுயில்கின்ற—செழும்புனல் - செழுமையுள்ளநீரையுடைய—சிந்துவேந்து - சிந்துதேயத்தையாளுகின்ற அரசன்—எ-று. வேகாரம்-அசை (கருத்து) இவன்சிந்துதேசாதிபதி யென்றுரை-ன-ம். (௱௪௪)

பகட்டிளமுலையாயீங்குப் படுதிரைபரவைவேலை
முகட்டெழுபரிதியொப்ப வீங்குறைமுழவுத்தோளான்
பொகுட்டுமென்கமலவாவிப் பூம்புனலுழக்கிக்கொண்ட
வகட்டுவில்வாளைதாவுமகன்பணைக்குருவேந்தே.

(இ-ள்) பகடு - யானைமத்தகம்போன்ற—இளமுலையாய் - இளமைபொருந்தியமுலையையுடையதமயந்தியே—ஈங்கு - இவ்விடத்தில்—படுதிரை - அலைகளையுடைய—பரவை - பரந்த—வேலைமுகட்டெழு - கடலினுச்சியிற்றோன்றிய—பரிதியொப்ப - சூரியனையொப்ப - ஈங்குறை இங்கிருக்கின்ற—முழவுத்தோளான் - மத்தளம்போன்றதோள்களையுடையவன்—பொகுட்டு-கொட்டையையுடைய—மென்கமல- மெல்லியதாமரைமலர்களையுடைய—வாவி-தடாகத்திலுள்ள—பூம்புனலுழக்கி - அழகுபொருந்தியநீரைக்கலக்கி—கொண்டவகட்டினில் - வெண்மையுடைய வயிற்றினிடத்தில்—வாளைதாவும் - வாளைமீன்கள்தாவுகின்ற—அகன்பணை - அகன்றவயலையுடைய—குருவேந்து-குருதேயத்தாருக்குச் சிங்கவேற்றையொத்த அரசன் எ-று. (கருத்து) இவன்குருதேசாதிபதியென்றுரைத்தென்பதாம். (௱௪௫)

வேலெனப்பிறழுங்கடைக்கண்ணுக்குவமைவருகவென்று
வோலைவிட்டிலவுங்கண்ணாய் யீங்குறையுமங்கொடோளான்

குலைந்தலறிப் பைந்தேன் றுளிக்குமென் *கமலப்போதின்
வால்வளை முத்தமீனும் வளவயன் மச்சர்கோவே.

(இ-ள்) வேலெள்ளப்பிறழ்ந்து-வேற்படைபோலொளியைச்செய்து, கூற்றை-யமனை—வெல்குவன் - வெற்றிகொள்ளுவேன்— வருக வென்று - நீவரக்கடவாயென்று—ஓலைவிட்டு - அந்தயமனுக்குஓலையெழுதிவிட்டு—உலவும் - உலாவுகின்ற— கண்ணாய் - கண்களையுடைய தமயந்தியே—ஈங்குறை - இங்கேயிருக்கின்ற—உலங்கொள் - திரள்கல்லின் வலிமையைக்கொண்ட—தோளான்-புயத்தையுடையவன், குலைந்து-கருப்பவாதைப்பட்டு—அலறி - ஒலித்து, பைந்தேன்-பசியதேனை—துளிக்கும் - தெறிக்கின்ற—மென்கமலப்போதின் - மெல்லிய தாமரைமலரில்—வால் - வெண்மைபொருந்திய— வளை-சங்கங்கள், முத்தமீனும்-முத்துக்களைப்பெறுகின்ற—வளம்-வளம் பொருந்திய, வயல்-கழனிகள்சூழ்ந்த—மச்சர்கோவே-மச்சதேயத்தாருக்கரசன்—எ-று [*இலக்கணக்கொத்து ஒழிபியல்-௯௬-பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானுமீரெழுத்தானுமியைந்துமொழிபெயர்ந்து, பொதுவெழுத்துள்ளும்பொதுவாய்த்திரிந்துந், தமிழ்சிறப்பெழுத்தைந்தானுந்திரிந்து, மொழிமுதலிடைகடையெனுமூன்றிடத்துந் - தோன்றன்முதலாவிகாரந்தோன்றியும், வருமேதமிழ்நூல்வடமொழியென்க, இவ்விதியால்கமலம்வடமொழி] (கருத்து) இவன்மச்சதேசாதிபதியென்றுள் என்பதாம். ()

குடங்கையினெடியவாட்கட் கொம்பனாயீங்கும்பைம்பொன்
மடங்கலாசனத்தின்மேயமணியெழுவனையதோளான்
முடங்குவண்டோட்டுக்கைதைமுருகுயிர்த்திரங்குந் தெண்ணீர்த்
தங்கடற்புலவுபோக்குந்தண்டுறைமகதநாடன்.

(இ-ள்) குடங்கையின்-உள்ளங்கைபோல்— நெடியவாட்கண் - நீண்டவாள்போலுங்கண்களையுடைய—கொம்பனாய்-தமயந்தியே— ஈங்கு - இங்கே—பைம்பொன்-பசும்பொன்னாற்செய்த— மடங்கலாசனத்தின்-சிங்காதனத்தில்—மேய - பொருந்திய—மணியெழுவனைய - அழகிய எழுத்தாணையொத்த—தோளான் - புயங்களையுடையவன், முடங்கு - வளைவினையுடைய—வெண்டோட்டு - வெண்மைபொருந்தியவிதழையுடைய—கைதை-தாழைகளானவை—முருகுயிர்த்து-வாசனையை வீசி—இரங்கும்-சத்திக்கின்ற—தெண்ணீர்-தெளிந்தநீரையுடைய, தடம்-விசாலம்பொருந்திய—கடற்புலவு - கடலினது புலால் நாற்றத்தை—போக்கும் - நீக்குகின்ற—தண்டுறை-குளிர்ச்சிபொருந்திய துறையையுடைய—மகதநாடன் - மகததேயத்தரசன்—எ-று- (கருத்து) இவன் மகதநாட்டரசன்-என்றுள்-என்பதாம். (௱௪௭)

கழையெனத்திரண்டமென்றோட்காமருகுவளையுண்கட்
பொழிகதிர்முத்தமூரற் பூங்கொடியீங்குவைகு
மழிகவுட்கடாத்தசீற்றத் தண்ணலங்களிறுபோல்வான்
மழையகடுரிஞ்சுமாடமலிகுருநாடர்கோவே,



(இ-ள்) கழையென-மூங்கில்போல்—திரண்ட- திரண்டிருக்கின்ற—மென்றோள்-மெல்லியதோள்களையும்—காமர் - அழகுபொருந்திய—குவளையுண்கண்-நீலோற்பலத்தழகையுண்டகண்களையும் — பொழிகதிர் - கிரணங்களைப்பொழிகின்ற—முத்தமூரல் - முத்தங்களையொத்தபற்களையுமுடைய—பூங்கொடி-தமயந்தியே—ஈங்குவைகும் - இங்கே தங்கிய—அழி-ஒழுகுகின்ற— கவுட்கடாத்த - மதமொழுகின்றகன்னத்தையும், சீற்றத்து-கோபத்தையுமுடைய, அண்ணல்- பெரிய—களிறுபோல்வான்-யானையையொத்தஅரசனானவன், மழையகடு - மேகத்தின் வயிற்றை, உரிஞ்சு-தேய்க்கின்ற, மாடமலி-உப்பரிகைகள்நெருங்கிய, குருநாடர்க்கோ-குருநாடர்க்கதிபதி—எ-று. கழையென்பது கருப்பெனினுமொக்கும் (கருத்து) இவன் குருநாட்டரசன் என்றுள் என்பதாம் (௱௪௮)

வடுநெடுங்கண்ணியீங்கு வைகியமடங்கலன்னான்
குடங்கர்செருத்தற்செங்கட் குவிமுலையெருமை தெண்ணீர்த்
தடவயலுழக்கவாளை தாவிமுப்புடைக்காய்த்தெங்கின்
படுபழமுதிர்க்குஞ்சூழற்பல்லவதேயவேந்தே

(இ-ள்) வடு-மாவடுபோன்ற—நெடுங்கண்ணி - நெடியகண்களையுடையதமயந்தியே—ஈங்கு-இங்கே—வைகிய - தங்கப்பெற்ற — மடங்கலன்னான் - சிங்கவேற்றையொத்தவன்—குடங்கர்- குடத்தையொத்த, செருத்தல்-மடியையும், செங்கண் - சிவந்தகண்களையும் — குவிமுலை-குவிந்தமுலையையுமுடைய—எருமை-எருமையானது — தெண்ணீர்-தெளிந்தநீரையுடைய—தடவயல் - விசாலம்பொருந்திய கழனிகளை—உழக்க-கலக்க—வாளை-அதனுலெழும்பியவாளைகள்—தாவி - பாய்ந்து, முப்புடைக்காய்-மூன்றுபக்கமுள்ள காயையுடைய—தெங்கின் - தென்னைமரத்தில்—படு-உண்டாகிய—பழம்-பழங்களை—உதிர்க்கும் - உதிர்க்கின்ற—சூழல்-இடத்தையுடைய—பல்லவதேயவேந்து - பல்லவதேயத்தையாளுகின்ற அரசன்—எ-று-ஏகாரம் ஈற்றசைக்கண்வந்தது — (கருத்து) இவன்பல்லவதேயத்தரசன்-என்றுள்—எ-ம். (௱௪௯)

பிள்ளைமானோக்கியீங்குவைகியபிறங்கற்றோளா
னள்ளிலைக்கமலப்போதி லரசிளவன்னங்காண
வள்ளுறைபிளிற்றுந்தண்கார்வரவெதிர்மயில்களாடக்
கிள்ளைபாட்டயருஞ்சோலைக் கேகயநாட்டுவேந்தன்

(இ-ள்) பிள்ளைமான்-இளமான்பார்வையையொத்த—நோக்கி-பார்வையுடையதமயந்தியே—ஈங்கு - இங்கே—வைகிய-தங்கப்பெற்ற, பிறங்கல்-மலையையொத்த—தோளான் - தோளையுடையவன், அள்ளிலை-நெருங்கியஇலையையுடைய—கமலப்போதில் - தாமரைமலரிலிருக்கின்ற—அரசிளவன்னங்காண் - இளமைபொருந்திய அரச வன்னம் பார்க்கும்படி, வள்-வளம்பொருந்திய—உறை - துளியை —பிளிற்றும்-து

ளிக்கின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—கார் - மேகங்களினுடைய—வரவெதிர்-வரவினையெதிர்ந்த—மயில்களாட - மயில்கள்கூத்தாட—கிளை-கிளிப்பிள்ளைகள்,பாட்டயரும்-பாட்டைப்பாடும்—சோலை - சோலைகள்சூழ்ந்த—கேகயநாட்டுவேந்தன் - கேகயநாட்டரசன்—எ-று(கருத்து) இவன்கேகயநாட்டரசன்-என்றுள்ளன்பதாம். (௱௫௰)

கொல்லுலைதேற்கணல்லா யீங்குறைகுவவுத்தோளான்
முல்லையம்புறவிற்சேதா முலைவழியொழுகும்தீம்பா
லல்லியங்கமலவள்ளத் தரசிளவன்னமாந்து
மல்லலம்பழனஞ்சூழ்ந்த மத்திரதேயவேந்தன்

(இ-ள்) கொல்லுலை-கொல்லனுலையிற்காய்ந்த— வேற்கண்- வேல்போன்றகண்களையுடைய—நல்லாய் - தமயந்தியே, ஈங்குறை - இங்கேயிருக்கின்ற—குவவு - திரட்சிபொருந்திய—தோளான் - தோள்களையுடையவன்—முல்லையம்புறவில் - முல்லைகளையுடைய அந்நிலத்தில்—சேதா-செவ்வியபசுக்களினுடைய—முலைவழி - முலையின்வழியே—ஒழுகுதீம்பால்-ஒழுகியதித்திப்புப்பாலை—அல்லியங்கமலவள்ளத்து - அகவிதழையுடையதாமரைமலராகியகிண்ணத்தில் — அரசிளவன்னம்-இளமைபொருந்திய அரசவன்னங்கள்—மாந்தும் - உண்ணுகின்ற—மல்லல்-வளம்பொருந்திய—பழனஞ்சூழ்ந்த -வயல்களாற்சுற்றப்பட்ட—மத்திரதேயவேந்தன் - மத்திரதேயத்தையாளுகின்றவரசன்.—(எ-று) (கருத்து)இவன்மத்திரதேயத்தரசனென்றுள்-எ-ம். (௱௫௰௧)

தாளதாமரையின்மேய தாக்கணங்கனையாயீங்குக்
கோளரியென்னவைகுங் குருதிகொப்புளிக்கும்வேலான்
பாளைவாய்க்கமுகிற்றுவிப் பலவின்முட்புறக்காய்சிந்த
வாளையம்பகடுதாவும் வங்கநாடாளும்வேந்தே.

(இ-ள்)தாள-தாளத்தையுடைய—தாமரையின் - தாமரைமலரிலே—மேய-இருக்கின்ற—தாக்கணங்கனையாய் - இலக்குமியையொத்த தமயந்தியே—ஈங்கு-இங்கே—கோளரியென்ன - சிங்கவேற்றைப்போல்—வைகும்-தங்கிய—குருதி-உதிரத்தை — கொப்புளிக்கும் - கொழிக்கின்ற—வேலான் - வேற்படையையுடையவன்—பாளைவாய் - பாளைகள்வாய்ந்த, கமுகிற்றுவி-கமுகமரத்தின்மேற்றாவி, பலவின்- பலாமரத்திற்காய்த்த—முட்புறக்காய்-முள்ளைப் புறத்திலேயுடைய காய்கள்—சிந்த-சிதற—வாளையம்பகடுதாவும் - ஆண்வாளைகள் தாவுகின்ற—வங்கநாடாளும்வேந்து - வங்கதேயத்தையாளுகின்ற அரசன் —எ-று. ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது (கருத்து) இவன் வங்கதேயத்தரசன் என்றுள்ளன்பதாம். (௱௫௰௨)

காம்புறழ்பசியமென்றோட்கதிர்முலைத்துவர்வாய்த் தீஞ்சொற்
பாம்படுமல்குலீங்குவைகிய பரிதிவேலான்
தேம்பொதிகமலமேயவால்வளை திங்களென்று
வாம்பல்வாய்மலரும்வாவி யங்காடாளும்வேந்தே



(இ-ள்) காம்புறழ் - மூங்கிலையொத்த— பசிய - பசுமையாகிய—மென்றோள்-மெல்லியதோள்களையும்— கதிர்முலை - பிரகாசம்பொருந்தியமுலைகளையும்—துவர்வாய் - சிவந்தவாயையும்—தீஞ்சொல் - மதுரம்பொருந்தியசொல்லையும்—பாம்படும் - பாம்பினைப்படுகின்ற—அல்குல்-அல்குலையுமுடையதமயந்தியே—ஈங்குவைகிய - இங்கேதங்கிய —பரிதிவேலான்-சூரியன்போன்றவேலையுடையவன் —தேம் - தேனைப்பொதி - நிறைந்த—கமலமேய-தாமரைமலரிலிருக்கின்ற — வால்வளை-வெண்சங்குகளை—திங்களென்று - சந்திரனென்று —ஆம்பல்-அல்லிமுகைகள்—வாய்மலரும்-விரியும்—வாவி - தடாகத்தையுடைய, அங்கநாடாளும்-அங்கதேயத்தையாளுகின்ற, வேந்து-அரசன் —எ-று ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது (கருத்து) இவன் அங்கதேயத் தரசனென்றுள்-எ-ம். (௱௫௰௩)

சிதாரிநெடுங்கணல்லாயீங்குறைதிணிபொற்றோளான்
கதிர்படுகழனியூடுகனைத்தினவண்டுந்தேனும்
புதிதுணக்கமலப்போதுபுரிமுறுக்கவிழ்ந்துமாறு
மதுமடைதிறந்துபாயும்வளங்கொள்பாஞ்சாலவேந்தே

(இ-ள்) சிதர்-பரவுகின்ற—அரி-செவ்வரிபரந்த— நெடுங்கணல்லாய்-நெடியகண்களையுடையதமயந்தியே—ஈங்குறை - இங்கேயிருக்கின்ற—திணி-வலிமைபொருந்திய — பொற்றோளான் - அழகியதோள்களையுடையவன் —கதிர்படு-கதிர்களானிறையப்பெற்ற—கழனியூடு - வயல்களிலே—கனைத்து-ஆரவாரித்து—இனம்- கூட்டமாகிய — வண்டும்-வண்டுகளும்—தேனும் - தேன்வண்டுகளும்—புதிதுண் - புதிதாகவுண்ண—கமலப்போது - தாமரைமலர்கள்—புரி-கட்டுப்பட்ட — முறுக்கவிழ்ந்து-முறுக்குடைந்து—மாறு - நீங்காத—மது-தேனானது— மடைதிறந்து-மடையைத்திறந்து—பாயும் - பாய்கின்ற—வளங்கொள்-வளத்தைக்கொண்ட — பாஞ்சாலவேந்து - பாஞ்சாலதேயத் தரசன் —எ-று.ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது (கருத்து) இவன்பாஞ்சாலதேயத்தரசனென்றுள்.என்பதாம். (௱௫௰௪)

இழைபுரைமருங்குலின்னேயிறுமிறுமென்னவீங்கி
யழகுவீற்றிருந்தபொம்மலணிமுலையாங்குவைகுந்
தொழுதிவண்டிமிருந்தாரான்கோணிலையிரிந்தனான்று
மழைவளஞ்சுரக்குஞ்செல்வமலிந்தகாந்தாரவேந்தே.

(இ-ள்)இழைபுரை- நூலிழையையொத்த,மருங்குல்-இடையானது —இன்னே-இப்பொழுதே—இறுமிறுமென்ன - ஒடியுமொடியுமென்ன—வீங்கி-பருத்து — அழகுவீற்றிருந்த - அழகானது அமர்ந்த—பொம்மல் - பொலிவுபெற்ற—அணி - ஆபரணங்களையணிந்த — முலை - ஸ்தனங்களையுடையதமயந்தியே— ஆங்குவைகும் - அங்கேதங்கிய—தொழுதி - மூக்கினூதும்—வண்டு-வண்டுகள் — இமிரும்-ஒலிக்கின்ற—தாரான் - மாலையையுடையவன் - கோள்-நவக்கிரகங்கள் —

நிலைதிரிந்தஞான்றும்-நிலைமாறியகாலத்தும்—மழைவளஞ்சுரக்கும் - மழைவளங்களுண்டாகின்ற—செல்வமலிந்த - செல்வமிகுந்த — காந்தாரவேந்து-காந்தாரதேயத்தரசன் —எ-று. (கருத்து) இவன் காந்தாரதேயத்தரசன் என்றாளென்பதாம். (௱௫௫)

அள்ளிலைவடிவேற்கண்ணாயிங்குறையலங்கற்றோளான்
முள்ளைமுளரிமேய்ந்துமுழிநெறிக்குவளையென்று
வள்ளைவாய்குதட்டிமேதிவளைமறுநீழற்றுஞ்சும்
வெள்ளநீர்ப்பழனஞ்சூழ்ந்தமிதிலைநாடாளும்வேந்தே

(இ-ள்) அள்ளிலை- மாமிசத்தையள்ளிக்கொள்கின்ற இலையையுடைய—வடிவேல் - கூரியவேல்போன்ற—கண்ணாய் - கண்களையுடையதமயந்தியே—ஈங்குறை - இங்கேயிருக்கின்ற—அலங்கற்றோளான்-மாலையையணிந்ததோள்களையுடையவன்—முள்ளை - முள்ளுகள்நிறைந்ததாளையுடைய—முளரிமேய்ந்து- தாமரைப்பூவைமேய்ந்து — முழுநெறி-முழுநெறிப்பையுடைய—குவளையென்று - குவளைமலரைமென்று—வள்ளை-வள்ளையிலையை—வாய்குதட்டி-மென்று —மேதி - எருமைகளானவை—வளை-புன்னைமரத்தினுடைய,நறுநீழல் - நறியநிழலிலே— துஞ்சும்-உறங்குகின்ற—வெள்ளநீர் - அதிகநீரையுடைய— பழனஞ்சூழ்ந்த-கழனிகளாற்சூழப்பட்ட—மிதிலைநாடாளும் - மிதிலைதேயத்தையாளுகின்ற — வேந்து - அரசன்—எ-று, ஏகாரம்ஈற்றசைக்கண்வந்தது(கருத்து) இவன்மிதிலைநாட்டுமன்னனென்றாள்-எ-ம். ()

வெதிர்புரைபசியமென்றோள் வேல்கிடந்தனையகண்ணா
யதிர்கழலரசர்போற்றவீங்குறையரியேறன்னான்
கதிர்வெயிற்கற்றைகான்று காசுகண்படுக்குமாட
மதியகடுரிஞ்சவோங்கு மாளவதேயவேந்தே.

(இ-ள்.)வெதிர்புரை-மூங்கிலையொத்த—பசிய-பசியவாகிய— மென்றோள் - மெல்லியபுயங்களையுடைய— வேல்கிடந்தனைய- வேற்படையிருந்ததையொத்த—கண்ணாய் - கண்களையுடையதமயந்தியே— அதிர்-அதிர்ச்சியையுடைய—கழலரசர் - வீரக்கழலையணிந்த அரசர்கள்—போற்ற-வணங்க—ஈங்குறை - இங்கேயிருக்கின்ற— அரியேறன்னான்-சிங்கவேற்றையொத்தவன்—கதிர் - கதிராகிய— வெயிற்கற்றை-வெயிற்றொகுதியை—கான்று - வீசி—காசு - இரத்தினங்கள்—கண்படுக்கும்-பதித்திருக்கின்ற—மாடம்-உப்பரிகைகள்—மதி - சந்திரனுடைய—அகடு-வயிற்றை—உரிஞ்ச - தேய்க்க— ஓங்கும் - உயர்ந்திருக்கின்ற—மாளவதேய வேந்து - மாளவதேயத்தரசன் —எ-று. (கருத்து) இவன் மாளவதேயத்துமன்னனென்றாளென்பதாம் (௱௫௭)

வடுவகிர்நெடுங்கணல்லாய்மடங்கலாசனத்தின் வைகும்
தொடுகடலுயிர்த்தமுத்தந்துயல்வருதடந்தோள்வீரன்
கடிமுறுக்கவிழ்ந்தசெவ்விக்கமலமென்பொகுட்டிலேறிக்
குடவளைமுத்தமீனுங்கோசலத்தரசரேறே.



(இ-ள்) வடுவகிர்-மாவடுவின்பிளப்பையொத்த—நெடுங்கண்- நெடியகண்களையுடைய—நல்லாய் - தமயந்தியே—மடங்கலாசனத்தின்-சிங்காதனத்திலே—வைகும்-தங்கிய—தொடுகடல்-சகரராற்றோண்டப்பட்டகடலானது—உயிர்த்த-பெற்ற—முத்தம் - முத்துவடங்களானவை—துயல்வரு- அசைகின்ற—தடம் - பருத்த—தோள்-புயத்தையுடைய—வீரன் - அரசனானவன்—கடி - வாசனைபொருந்திய—முறுக்கவிழ்ந்த - முறுக்குடைந்த—செவ்வி - அழகுபொருந்திய—கமலமென்பொகுட்டில்-தாமரைமலரினுடையமெல்லிய கொட்டைகளின்மேல்—ஏறி - ஏறிக்கொண்டு—குடவளை - குடம்போன்றசங்கானது—முத்தமீனும்-முத்துக்களைப்பெறுகின்ற—கோசலத்து - கோசலதேயத்தையாளுகின்ற—அரசரேறு - அரசரிற்சிங்கவேற்றையொத்தவரசன்—எ-று. ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது (கருத்து) இவன் கோசலநாட்டரசன் என்றாளென்பதாம். (௱௫௮)

மாவழமென்றோக்கியீங்குவைகியமானவேலான்
றாழைமுப்புடைக்காய்வீழ்ந்துதாறிளங்கமுகுசெற்று
வீழ்குலைவருக்கைபோழ்ந்துவெம்புலிமடியபைங்காய்க்
கோழரையாம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே.

(இ-ள்)மாவழ - மாம்பிஞ்சுபோன்ற—மென்னோக்கு-மெல்லியபார்வையையுடையதமயந்தியே—ஈங்கு - இங்கே—வைகிய-தங்கிய—மானவேலான்-பெரிய—வேலான்-வேற்படையையுடையவன்—தாழை-தெங்கினுடைய—முப்புடைக்காய் - மூன்றுபக்கங்களையுடையகாயானது—வீழ்ந்து-விழுந்து—தாறு-குலைகளையுடைய—இளங்கமுகு -இளமைபொருந்தியகமுகமரத்தை—செற்று-ஒடித்து—வீழ்குலை - வீழப்பட்டகுலையையுடைய—வருக்கைபோழ்ந்து - பலாவைப்பிளந்து—வெம்புலியடிய—வெப்பம்பொருந்தியபுலியினடியையொத்த— பைங்காய்-பசியகாயையுடைய—கோழரை-கொழுமையுள்ள அடியையுடைய—அரம்பை-வாழையை—சாய்க்கும் - சாயச்செய்யும்—குடகநாடு - குடகதேயத்தை—ஆளும் - ஆளுகின்ற—வேந்து-அரசன்—எ-று.(கருத்து)இவன்குடகநாட்டரசன் என்றாளென்பதாம். (௱௫௯)

ஏந்திளமுலையாயிப்பாலினிதுறைகுமரனன்னான்
றேந்துணருழ்ந்தபோதுந்தெரிவையரிழைத்தசிற்றிற்
காந்தெரிமணியும்பொன்னுங்காழகிற்றுணியும்வாரிப்
பூந்திரைசுருட்டுந்தெண்ணீர்ப்பொன்னிநாடாளும்வேந்தே.

(இ-ள்)ஏந்து-தாங்குகின்ற—இளமுலையாய்- இளமைபொருந்திய முலைகளையுடையதமயந்தியே—இப்பால் - இப்புறத்தில்—இனிதுறை-இனிமையுடனுறைகின்ற—குமரனன்னான் - குமாரக்கடவுளையொத்தவன்—தேந்துணர்-வாசனைபொருந்தியமகரந்தங்களை—உழ்ந்த-உதிர்ந்தபோதும்-மலரையும், தெரிவையர்-சிறுபெண்கள்,இழைத்த-செய்த,சிற்றில்-சிறுவீட்டினது—காந்தெரி-ஒளிமிகுந்த—மணியும்- மணிகளையும்

—பொன்னும்-பொன்னையும்—காழ் - வைரம்பொருந்திய—அகிற்றுணி யும் - அகிற்றுண்டுகளையும்—வாரி - வாரிக்கொண்டு—பூ - அழகுபொ ருந்திய—திரைகருட்டும் - அலைகளைமடக்குகின்ற—தெண்ணீர் - தெ ளிவுபொருந்தியநீரையுடைய—பொன்னிநாடு - காவிரிசூழ்ந்தசோணா ட்டை.—ஆளும்வேந்து-ஆளும்அரசன்—எ-று.(கருத்து) இவன்சோழ நாட்டரசன்என்றாள் என்பதாம். (௧௧௰)

மோட்டிளமுலையாய்பைம்பொன்மொய்ம்மணித்தவிசினுப்பண்
சேட்டிளம்பரிதிபோலவீங்குறைதிணிபொற்றோளான்
பாட்டளிபேட்டினோடும்பருமுகையவிழ்த்துத்தேற
கூட்டினுங்கமலவாவிகொற்கையம்பதிக்குவேந்தே.

(இ-ள்)மோடு-உயர்ச்சிபெற்ற—இளமுலையாய் - இளமைபொருந் தியஸ்தனங்களையுடையதமயந்தியே—பைம்பொன் - பசியபொன்னாற் செய்த—மொய்மணி-மணிகள்நெருங்கிய—தவிசினுப்பண் - ஆசனத்தி ன்மத்தியத்திலே—சேட்டிளம்பரிதிபோல - மிகுந்தஇளமைபொருந்தி யசூரியன்போல்—ஈங்குறை - இங்கேயிருக்கின்ற—திணி - வலிமை பெற்ற—பொற்றோளான் - அழகுபொருந்தியதோளையுடையவன்,— பாட்டளி - பாட்டையுடையவண்டுகள்—பேட்டினோடும் - பெட்டைக ளுடன்—பருமுகையவிழ்த்து - பரியஅரும்புகளைவிரித்து—தேறல் - தேனை—கூட்டினும் - கொள்ளைகொள்ளும்—கமலவாவி - தாமரைத்த டாகத்தையுடைய—கொற்கையம்பதிக்குவேந்து - சேரமான்—எ-று, வகாரம் - அசைநிலை (கருத்து) இவன்கொற்கைநாட்டரசன்என்றாள ன்பதாம். (௱௧௧)

என்னமற்றினையவாறேயெரிமணிமாடஞ்சேர்ந்த
மன்னவர்குலமும்பேரும்வரன்முறைவழாதுகூறி
மின்னகுபரிதிவைவேனளனுருக்கொண்டுமேய
வன்னவர்தமையுமற்றைநளனையுமறையலுற்றாள்.

(இ-ள்) என்ன-இப்படியென்று—இனையவாறு - இத்தன்மையப்ப டி—எரிமணி - ஒளிவீசுகின்றமணிகள்பதித்த—மாடஞ்சேர்ந்த - உப் பரிகைகள்சேர்ந்த—மன்னவர் - அரசர்களுடைய—குலமும்-மரபும்— பேரும்-நாமமும்—வரன்முறை - குலமுறைமையில்—வழாது - வழு வாமல்—கூறி - சொல்லி—மின்னகு - ஒளியையுடைய—பரிதி - சூரிய னையொத்த—வைவேல் - கூரியவேலையுடைய—நளனுருக்கொண்டுமே ய-நளனுருவங்கொண்டிருக்கின்ற—அன்னவர்தமையும் - இந்திரன்மு தலிய அந்நால்வரையும்—நளனையும்-நளமகாராசனையும் — அறையலுற் றாள் - சொல்லத்தொடங்கினள்—எ-று;மற்று-அசை (கருத்து) தேவர் களையும் நளனையும்சொல்லத்தொடங்கினள் என்பதாம். (௱௧௨)

கலைவளர்திங்களன்னகடிகமழ்கமலம்வாட்டும்
திலகவாண்முகத்தாயீங்குவைகியசினவேற்காளை
வல்லனுடைவைரவாளான்கற்பகமலர்ந்ததோளான்
பலபகைவரைமுன்செற்றபகட்டெழின்மார்பினனே.

(இ-ள்.) கலைவளர்-கலைகள்வளரப்பெற்ற—திங்களன்ன - சந்தி ரன்போல்—கடிகமழ் -வாசனைகமழுகின்ற—கமலம்வாட்டும் - தாமரை மலரைவாடச்செய்கின்ற, திலகவாண்முகத்தாய் - திலகப்பொட்டிட்ட ஒளிபொருந்தியமுகத்தையுடையதமயந்தியே—ஈங்குவைகிய - இங்கே தங்கிய—சினவேற்காளை - கோபம்பொருந்தியவேற்படையையுடைய வரசன்—வல்லனுடைவைரவாளான்-வலனைக்கொன்றவச்சிரப்படையை யுடையவன்—வெற்றிபொருந்தியகூரியவாளையுடையவன்) கற்பகமலர்ந் ததோளான் - கற்பகமலர்மாலைநெருங்கப்பெற்றதோளையுடையவனே— (மலையைப்பிளக்கும்படிவலிமைமிகுந்ததோளையுடையவன்)பலபகைவ ரைமுன்செற்ற - பலவாகியபகைகொண்டமலைகளைமுன்சிறகறுத்துச் சயங்கொண்ட—(பலசத்துருக்களைமுன்செயித்த) பகட்டெழின்மார்பி னன் - பெருமைபொருந்தியஅழகியமார்பையுடையஇந்திரன் (நளன்) —எ-று. ☞ இது இந்திரனுக்கும் நளனுக்கும் சிலேடை.(கருத்து) இவ ன் இந்திரன் என்றாள்-எ-ம். (௱௧௩)

நகைமதிமுகத்தாயீங்குவைகியகாமவேலான்
புகலருவெகுளியுள்ளத்தொகுவினன்பொங்கியார்த்த
பகையிருட்பிழம்புசீய்க்கும்பலசுடருமிழும்வாளான்
றகைமைசால்புலவரேத்துந்தலமேழுடையகோவே.

(இ-ள்) நகை-ஒளியையுடைய—மதிமுகத்தாய் - சந்திரன்போன் றமுகத்தையுடையதமயந்தியே,-ஈங்குவைகியஇங்கேதங்கிய—காமவே லான் - அச்சத்தைத்தரும்வேற்படையையுடையவன்—புகலரும்-சொ ல்லுதற்கரிய—வெகுளியுள்ளத்து - கோபமுள்ளமனத்தையுடைய— தொகுவினன்-ஆட்டுக்கடாவாகனத்தையுடையவன்—(புகலரும் - புகல ற்கரிய—வெகுளி-சினத்தை—உள்ளத்து - மனத்தின்கண்—தொகுவின ன்-நீக்கினன்)—பொங்கி - பொங்கி—ஆர்த்த - ஒலித்த—பகை-பகை யாகிய,இருட்பிழம்பு - இருட்பிழம்பை—சீய்க்கும் - ஓட்டுகின்ற—ப ல - பலவாகிய—சுடருமிழும் - ஒளியையுமிழ்கின்ற—வாளான் - சுவா லையையுடையவன்—பொங்கியார்த்த-மிகுந்தகர்ச்சித்த— பகையிருள்- இருளையொத்தபகைவராகிய-பிழம்புகூட்டத்தை—சீய்க்கும் - நீக்குகி ன்ற—பல-பலவாகிய—சுடருமிழும்-ஒளிவிடுகின்றவாளான் - வாட்ப டையையுடையவன்)—தகைமைசால் - அழகுமிகுந்த — புலவரேத்து ம் - தேவரால்துதிக்கப்பட்ட—தலமேழுடையகோ - ஏழுநாவுடையதீக் கடவுள்—(தகைமைசால் - பெருமைமிகுந்த—புலவரேத்தும் - வித்து வான்களால்துதிக்கப்பட்ட—தலமேழுடையகோ - சப்தத்தீவையுடை ய நளன்)எ-று. ☞ இது அக்கினிதேவனுக்கும்நளனுக்கும்சிலேடை.(க ருத்து) இவன் அக்கினிதேவன்என்றாள்என்பதாம். (௱௧௪)

அஞ்சனமொழுகமாற்றாகம்மவோவென்றுனையும்
வஞ்சிறன்னிடையாயீங்குவைகியகாமவேலா

னெஞ்சுமிறருமன்றெண்ணீரிருங்கடலுலகமெல்லாஞ்
செஞ்சவேயோசைபோயதீதறுஞ்செங்கோல்வேந்தே-

(இ-ள்) அஞ்சனம்-மையை—எழுதல்-எழுதலை—ஆற்றாது - சகியாது—ஓிவென்று-ஓிவென்று,நையும்-நைவையுடைகின்ற,-வஞ்சிநுண்ணிடையாய்-வஞ்சிக்கொடிபோல் நுட்பமாகிய இடையையுடையதமயந்தியே—ஈங்குவைகிய-இங்கேதங்கிய, நாமவேலான்-அச்சத்தைத்தருகின்றவேற்படையையுடையவன்,எஞ்சலில்-குறைவில்லாத,தருமன் - தருமனென்னும்பெயரையுடையவன் (தருமத்தையுடையவன்) தெண்ணீர் - தெளிவுபொருந்தியநீரையுடைய — இருங்கடலுலகமெல்லாம்-பெரியகடல்சூழ்ந்த உலகமுழுவதும்—செஞ்சவே - செவ்வையாக—ஓசைபோய - புகழ்பரவப்பெற்ற—தீதறு - குற்றமற்ற—செங்கோல்வேந்து-செவ்வியகாலகண்டத்தையுடையவன் (செங்கோல்செலுத்துமநளன்)—எ-று. ☞ இதுநளனுக்கும்இயமனுக்குஞ்சிலேடை[இலக்கணத்திரட்டு - ஒருபெயர்க்கிருபொருளுரைப்பதுசிலேடையாம், இவ்விதியால் இரண்டருத்தங்கொண்டதைக்காண்க(கருத்து) இவன் இயமனென்றுள் என்பதாம், (௱௬௫)

பாற்றிரையமிர்தமுறும்படவொளிப்பவளச்செவ்வாய்க்
கோற்றொடிமடந்தையீங்குவைகியகுவவுத்தோளான்
மாற்றருஞ்சிறப்பின்மிக்கவளங்கெழுபுவனவேந்த
னாற்றிசைப்பரப்புஞ்சூழ்போநலங்கெழுநேமிவேந்தே.

(இ-ள்) பாற்றிரை-பாற்கடலிற்பிறந்த, அமிர்தமுறும் - அமிர்தமுறுகின்ற,படர்-படரப்பெற்ற, ஒளி-ஒளியையுடைய, பவளச்செவ்வாய்-பவளம்போன்றசெவ்வாயையும்,கோற்றொடி - அழகியவளையலையுமுடைய—மடந்தை-தமயந்தியே—ஈங்குவைகிய -இங்கேதங்கிய—குவவுத்தோளான் - திரட்சிபொருந்தியதோளையுடையவன்,மாற்றரும்- ஒருவராலும்நீக்குதற்கரிய—சிறப்பின் மிக்க-சிறப்பினால்மிகுந்த — வளங்கெழு-வளம்பொருந்திய—புவனவேந்தன் - நிருக்கரசன்— (பூமிக்கரசன்) நாற்றிசைப்பரப்பும்-நான்குதிசைகளின்பரப்பினும்— சூழ்போம்- சூழ்ந்துபோகின்ற—நலங்கெழு-நன்மைபொருந்திய— நேமிவேந்து-கடலரசனுவருணன்—(சக்கிரவர்த்தியாகியநளமகாராசன்)—எ-று ☞ இதுவருணனுக்குநளனுக்குஞ்சிலேடை(கருத்து)இவன்வருணனென்றுள் என்பதாம். (௱௬௬)

போதரிநெடுங்கணல்லாய்பொருசிலைவேனிலானிற்
கோதையர்மனமுங்கண்ணுங்கூட்டுணுங்குவவுத்தோளான்
றாதவிழ்கமலப்போதுமலர்ந்தபூந்தடங்கடோறும்
மாதர்மென்முகங்கள்காட்டும்வளங்கெழுநிடதவேந்தே.

(இ-ள்)போதரி-அரிபரந்த—நெடுங்கண் - நெடியகண்களையுடைய—நல்லாய்-தமயந்தியே—பொருசிலை-பொருகின்றவில்லையுடைய, வேனிலானில் - மன்மதன்போல்—கோதையர் - மங்கையர்களுடைய—மனமும்-நெஞ்சையும்—கண்ணும் - விழிகளையும்—கூட்டுணும் - கொள்ளையிடுகின்ற—குவவுத்தோளான் - திரட்சிபொருந்திய தோளையுடையவன்—தாதவிழ்-மகரந்தப்பொடியுதிர்கின்ற—கமலப்போது - தாமரைமலர்கள்—மலர்ந்த-விரிந்த- பூந்தடங்கடோறும் - பொலிவுபொருந்தியதடாகங்கள்தோறும்—மாதர்-மடவார்களுடைய — மென்முகங்கள்காட்டும்-மெல்லியமுகங்களைக்காண்பிக்கின்ற—வளங்கெழு - வளம்பொருந்திய—நிடதவேந்து - நிடததேயத்தையாளும்நளமகாராசன்—எ-று.ஏ-அசை (கருத்து) கண்களையுடையதமயந்தியேமன்மதனைப்போலப்பெண்கள்கண்களையும் மனங்களையும்கொள்ளைகொள்ளும் அழகுபொருந்திய தோள்களையுடையநளமகாராசன் இவனே என்றுள் என்பதாம். (௱௬௭)

என்றியலணங்குகூறவிளையரிலன்னங்கூறு
மன்றலந்தெரியற்றிண்டோண்மன்னவன்யார்கொலென்றுப்
பொன்றிகழ்திதலைபூத்தபுணர்முலைப்பாவைபோல்வா
ளொன்றியவைய்த்தோடுமுள்ளநெக்குருகினின்றாள்.

(இ-ள்.)என்று-இப்படியென்று—இயலணங்கு-நாமகளானவள்—கூற-சொல்லியவளவில்—இளையரில்-இத்தன்மையையுடைய அரசர்களில்—அன்னங்கூறும் - அன்னப்பறவைமுன்புசொல்லிய— மன்றல்-வாசனைபொருந்திய—அம் - அழகிய—தெரியல் - மாலையையணிந்த—திண்டோள்-திண்மைபொருந்தியதோள்களையுடைய —மன்னவன்-நளமகாராசன்—யார்கொலென்று-எவனென்று—பொன் - பொன்போல்—திகழ்-விளங்குகின்ற—திதலைபூத்த- தேமல்பரவிய— புணர்முலை-நெருங்கியமுலைகளையுடைய—பாவைபோல்வாள் - பாவைபோல்பவளாகிய தமயந்தியானவள்—ஒன்றியவைய்த்தோடும் - பொருந்தியசந்தேகத்துடனே—உள்ளம்-மனமானது—நெக்குருகின்றாள் - மிகவுங்கரைந்துகின்றாள்—எ-று. (கருத்து) தமயந்திமனமுருகினின்றாள்-எ-ம்.

எள்ளுறவேனையோரைவிரட்டுறமொழிதலானும்
வள்ளன்மார்பணிந்ததாரில்வண்டுவீழ்ந்தரற்றலானு
முள்ளுறப்பிணிந்தவன்பினூழ்வினைத்தொடர்பினானு
நள்ளிருட்பருகும்பைம்பூணளனையேநளனென்றோர்ந்தாள்

(இ-ள்.) எள்ளுற,சந்தேகம்பொருந்த—ஏனையோரை - மற்றயோரை—இரட்டுறமொழிதலானும் - இரண்டுபொருள் படச்சொல்லுதலானும்—வள்ளன்மார்பணிந்ததாரில் - நளன்மார்பிலணிந்தமாலையில் —வண்டுவீழ்ந்தரற்றலானும் - வண்டுகள்வீழ்ந்தொலித்தலானும் — உள்ளுறப்பிணிந்த-உள்ளேபொருந்தக்கட்டிய—அன்பின் - அன்பினுண்டாகிய—ஊழ்வினைத்தொடர்பினானும் - ஊழ்வினையினுடைய சம்பந்தத்தினாலும்—நள்ளிருள்-மிகுந்தஇருளை—பருகும் - உண்கின்ற—பைம்பூண் - பசியபொன்னாற்செய்தஆபரணங்களையுடைய—நள

லையே-நளனென்னுமரசனையே—நளனென்று - நளமகாராசனென்னும் —ஓர்ந்தான்-அறிந்தான்—எ-று. * இலக்கணக்கொத்து [ அகப்புறமோர் உறுமையாகுங்கருவி - இவ்விதியாலோர்ந்தான் என்றது அகக்கருவி] (கருத்து) நளனையேநளனென்றறிந்தாளென்பதாம். (௱௬௯)

மாதர்மென்னோக்கிநாணிமதிமுகஞ்சிறிதுகோட்டிக்
காதன்மீதாரவுள்ளங்களிமகிழ்துளக்கநின்ற
கோதையர்மணிசெய்செம்பொற்கோடிகத்தினிதினேந்துந்
தாதுலாமலங்கன்மாலைத்தளிரியல்கரத்திற்கொண்டாள்

(இ-ள்) மாதர்-அழகுபொருந்திய—மென்னோக்கி - மெல்லியபார்வையையுடைய தமயந்தியானவள்—நாணி - நாணமுற்று— மதிமுகம்-மதிபோன்றமுகத்தை—சிறிதுகோட்டி - கொஞ்சமவணங்கிக் கொண்டு—காதல்-ஆசையானது—மீதார - அதிகரிக்க—உள்ளம்-மனமானது—களிமகிழ்துளக்க-களிப்புமிகுந்தமகிழ்ச்சிதங்க— நின்ற - அருகேநின்ற—கோதையர் - தோழிகள்—மணிசெய் -நவமணிகள்பதித்த —செம்பொற்கோடிகத்து - செம்பொன்னாற்செய்ததட்டில்—இனிதினேந்தும்-இனிமையிற்றாங்குகின்ற—தாதுலாம் - மகரந்தமுலாவுகின்ற—அலங்கன்மாலை - மலர்மாலையை—தளிரியல் - தளிரினதுசாயலையுடைய—கரத்திற்கொண்டாள் - கையிலெடுத்துக்கொண்டாள்—எ-று. (கருத்து) தமயந்திமாலையைக்கையிலெடுத்தாளென்பதாம். (௱௭௰)

இன்னரிச்சிலம்புசெம்பொற்கிண்கிணியார்ப்பவேகி
மன்னவர்மனமுங்கண்ணும்வண்டெனத்தொடர்ந்துவீழக்
கொன்னுனைவையொள்வாணிடதர்கோன்குவவுத்தோண்மேற்
பொன்னரிமாலைசூட்டிப்பூங்கழல்வணங்கினின்றாள்.

(இ-ள்) இன்-இனியவோசையைத்தருகின்ற—அரி - பருக்கைகளையுடைய—சிலம்பு-சிலம்புகளும்—செம்பொன் - சிவந்தபொன்னாற்செய்த—கிண்கிணி-சதங்கைகளும் — ஆர்ப்ப - ஒலிக்கும்படி—ஏகி-போய்—மன்னவர் - அரசர்களுடைய—மனமும்-நெஞ்சமும்—கண்ணும் - கண்களும்—வண்டென - வண்டுகள்போல்—தொடர்ந்துவீழ - தொடர்ந்துவிழ—கொல் - கொல்லுகின்ற—நுனை - நுனியையுடைய— வை ஒள்வாள் - கூர்மைபொருந்தியஒளிவீசுகின்றவாட்படையேந்திய—நிடதர்கோன் - நளமகாராசனுடைய—குவவு - திரட்சிபொருந்திய—தோண்மேல் - புயங்களின்மேல்—பொன்னரிமாலைசூட்டி - பொன்னரிமாலையையணிந்து—பூங்கழல் - அழகு பொருந்திய அவன் பாதங்களை—வணங்கினின்றாள்-பணிந்துநின்றனள்—எ-று. (கருத்து) தமயந்தியானவள் தோளில்மாலையணிந்து அவனது திருவடியை வணங்கினின்றாளென்பதாம். (௱௭௧

வடிமலர்நெடுங்கட்செவ்வாய்மடவரலினிதுசூட்டுந்
தொடையல்பொற்கிரியில்வீழுஞ்சுடர்மணியருவியேய்ப்ப



விடுகதிர்வலயத்திண்டோண்மன்னவன்விழைவுகூர்ந்து
பிடிதழீஇயுவகைபூத்தபெய்மதக்களிறுபோன்றான்

(இ-ள்) வடி-தேனையுடைய—மலர்-குவளைபோன்ற—நெடுங்கண்-நெடியகண்களையும்—செவ்வாய் - செவ்வாயையுமுடைய— மடவரல்-தமயந்தியானவள்—இனிதுசூட்டும்-இனிமையோடுசூட்டிய — தொடையல் - மாலையானது—பொற்கிரியில் - மேருமலையில்—வீழும் - ஒழுகுகின்ற—சுடர் - ஒளியையுடைய—மணி - இரத்தினங்களோடொழுகின்ற—அருவியேய்ப்ப-அருவியையொப்ப— விடுகதிர் - கிரணங்களைவீசுகின்ற—வலயம்-கேயூரமணிந்த—திண் - வலிமை பொருந்திய—தோள் - தோளையுடைய—மன்னவன்-நளமகாராசன்— விழைவுகூர்ந்து-ஆசைமிகுந்து — பிடிதழீஇ - பெட்டையானையைத்தழுவி—உவகைபூத்த-மகிழ்ச்சியுண்டாகிய — பெய்மதக்களிறு - மதம்பொழிகின்றயானையை—போன்றான்-ஒத்தான்—எ-று. பிடி - பெட்டையானை; களிறு - ஆண்யானை - இலக்கணக்கொத்து - கேளாதேற்றல் கேட்டேயேற்றல் - லேலாதேற்றல் வேறேற்ற - லுயர்ந்தே னேற்றலிழிந்தோனேற்ற - லொப்போனேற்றலுணர்வின்றேற்றல்-விருப்பாயேற்றல்வெறுப்பாயேற்ற - லாதியாய்ப்பலவுமறைந்தனர்கொள்வேன் -இவ்விதியால்நளன்மாலையைவிருப்பாயேற்றான் (கருத்து) நளன் மகிழ்ச்சியடைந்தான்-என்பதாம். (௱௭௨)

பூணுலாக்கிடந்தவல்குற்பொற்பெலாங்களிகொள் வண்டின்
பாணுலாக்கிடந்ததாரன்பருகுவான்போலநோக்க
நாணமீதாரப்பைம்பொன்னலத்தபூங்கொடியினொல்கி
வாணகையுயிர்த்தசெவ்விமதிமுகங்கோட்டிநின்றாள்.

(இ-ள்) பூண் - உலாக்கிடந்த - ஆபரணங்களைச்சூழ்ந்திடந்த— அல்குல்-அல்குலையுடைய தமயந்தியது — பொற்பெலாம் - அழகனைத்தையும்—களிகொள் - களிப்பைக்கொண்ட—வண்டின் - வண்டுகளுடைய—பாணுலாக்கிடந்த - இசையுலாவிக்கிடந்த— தாரன் - மாலையையணிந்த நளனானவன்—பருகுவான்போல-உண்ணுபவன்போல — நோக்க-பார்க்க—(அதனால்) நாணமீதார-நாணமதிகரிக்க—பைம்பொன்- பசியபொன்னாலாகிய—நலத்த - நன்மையுடைய—பூங்கொடியின் - பூங்கொடிபோல்—ஒல்கி-துவண்டு—வாள் - ஒளிபொருந்திய — நகையுயிர்த்த-புன்னகையைத்தந்த—செவ்வி - அழகுபொருந்திய — மதிமுகம்-சந்திரன்போன்றமுகத்தை—கோட்டிநின்றாள் -வணங்கிக்கொண்டுநின்றனள்—எ-று (கருத்து) நளன் தமயந்தியைப் பார்க்கத் தமயந்தி தலைவணங்கினாளென்பதாம். (௱௭௩)

அலைகடலுயிர்த்தபொன்னம்பாவையையலங்குசோதி
நிலவுமிழ்பளிக்குமாடவேதிகைகொணர்ந்துநீக்காச்
சிலதியருயிராயன்னதோழியர்செவிலித்தாயர்
விலைவரம்பறியலாகாமென்றுகிலெழினிசூழ்ந்தார்

(இ-ள்) அலைகடல்-பாற்சமுத்திரமானது—உயிர்த்த - பெற்ற—பொன்னம்பாவையை-இலக்குமியையொத்ததமயந்தியை — அலங்கு-அசைகின்ற—சோதிநிலவுமிழ - மிகுங்கவொளியைக்கொப் பளிக்கின்ற—பளிக்குமாடவேதிகை - பளிங்கினாற்செய்த - உப்பரிகையிலிருக்கு மேடையில்—கொணர்ந்து - அழைத்துக்கொண்டுவந்து வைத்து — நீங்கா-நீங்காத— சிலதியர்-ஏவல்செய்தோழிகளும் — உயிரனையன்னதோழியர்- உயிரையொத்ததோழிகளும் — செவிலித்தாயர் - வளர்த்ததாய்மாரும்—வில்லைவரம்பறியமாகா - விலையளவறியக்கூடாத — மென்றுகில்-மெல்லியசீலையாற்செய்த—எழினி-திரையை — வீழ்த்தார் - விடுத்தார்கள்—எ-று; சிலதியராதியர்-எழுவாய் ✱ இலக்கணக்கொத்து- எவுதலியற்றுதலிரைவயின்வேறாக - லெளவினைமுதன்மூவகையா மென்ப-இவ்விதியால் வீழ்த்தினார் தன்வினை (கருத்து) தாய்மார்களுந்தாதியர்களுந்தமயந்தியை உப்பரிகையின்மே லழைத்துக் கொண்டுபோய்வைத்துத்திரைப்போட்டார்கள்என்பதாம். (௱எ௪)

தாவருஞ்சீற்றத்துப்பிற்றறுகண்மால்யானையுன்ன
மேவலர்க்கடந்தவொள்வாள்வேந்தர்கோன்முழவுத்தோண்மேல்
மாவகிர்நெடுங்கண்சூட்டுமாலையேமாலையாகக்
காவலர்முகங்களெல்லாங்கமலமொத்திருந்தமாதோ.

(இ-ள்) தாவரும்-தாவுதற்கரிய—சீற்றத்துப்பின் - கும்பிந்தகோபத்தையும்—தறுகண் - அஞ்சாமையுமுடைய—மால்-பெருமைபொருந்திய—யானையுன்ன - யானையையொத்த —மேவலர்-சத்துருக்களை— கடந்த-வென்ற—ஒள்-ஒளிபொருந்திய—வாள் - வாட்படையையுடைய—வேந்தர்கோன்-களமகாராசனுடைய — முழவு-மத்தளத்தை யொத்த—தோண்மேல் - புயங்கள்மீது—மாவகிர் - மாவடுவின் பிளப்பையொத்த—நெடுங்கண் - நெடியகண்களையுடையதமயந்தியானவள்— சூட்டும்-தரித்த—மாலையே-பூமாலையே — மாலையாக - மாலைப்பொழுதாக—காவலர்-அரசருடைய, முகங்களெல்லாம் - முகங்களனைத்தையும்—கமலம்-தாமரைமலரை — ஒத்திருந்த - ஒத்திருந்தன—எ-று.மாது-ஓ-அசைகள்(கருத்து) நளன்தோளிலணிந்தமாலையே மாலைக்காலமாக - அரசர்கள்முகங்கள்-தாமரைகளாகவிருந்தன என்பதாம். (௱எரு)

## சுயம்வரப்படலம்.

முற்றிற்று.

---

உ

# பொர்புரிபடலம்.

இப்படலத்தால் சுயம்வரத்திற்குவந்த அரசர் தமயந்திநளனை விரும்பிமாலைசூட்டுதலால்தாம் அவளைக்கைப்பற்றும்பொருட்டு அவனைவெல்லவெண்ணிச்செய்யும்யுத்தம்சொல்லப் படுகின்றது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அழகினைச்சுமந்தபேறுபெற்றனளணங்கின்றென்று
வொழுகொளியாரமார்பருவாக்கடன்மெலிய்வார்ப்ப
பொழிகதிர்லவரவொள்வாட்புரவலன் புழுங்கிநெஞ்சம்
விழியழல்கதுவநோக்கிவேந்தனைவிளித்துச்சொல்வான்

(இ-ள்) அழகினை-சௌந்தரியத்தைசுமந்தபேறு - தாங்கியபேற்றினை—அணங்கு-தமயந்தியானவள்—இன்றுபெற்றனளென்று- இன்றுதான்பெற்றாளென்று—ஒழுகொளி-ஒளிவிளங்குகின்ற,ஆரம்- மணிவடமணிந்த,மார்பர்-(மார்பையுடையஅரசர்களனைவரும்)—உவாக்கடல்-பர்வகாலத்துக்கடலானது,மெலிய-ஒலியிற்குறையும்படி,ஆர்ப்ப-ஒலிக்க—(அதுகண்டு)பொழிகதிர்-கிரணங்களைவீசுகின்ற—வைரவொள் வாள்-ஒளிபொருந்தியவச்சிரவாளையுடைய—புரவலன் - இந்திரனுனவன்—நெஞ்சம்புழுங்கி - மனம்வெந்து—விழி - கண்களில் — அழல்கதுவ-நெருப்புப்பற்ற—நோக்கி-பார்த்து-வேந்தனை-அரசனை, விளித்து அழைத்து—சொல்வான்-இவ்வாறுசொல்வான்-எ-று. (கருத்து) இந்திரன்பொறாமைகொண்டரசனைப்பார்த்துச்சொல்வானென்பதாம். (௧)

விரிகதிர்ப்பரிதிமுன்னர்வெண்மதிமழுங்குமல்லாற்
பரிதியுமதியந்தோன்றிற்படரொளிமழுங்கலுண்டோ
வரசர்காணீவிர்வெய்யோனருங்குலத்துதித்துந்திங்கண்
மரபின்மன்னவற்குநுங்கண் மாமனைழிழ்மமுழுங்கினீரால்,

(இ-ன்.) விரிகதிர்-விரிந்தகிரணங்களையுடைய—பரிதிமுன்னர்- சூரியன்முன்னே—வெண்மதி - வெண்மைபொருந்தியசந்திரன் — மழுங்குமல்லால்-மழுங்கிப்போகுமல்லாமல்—பரிதியும்-சூரியனும் — மதியந்தோன்றில்-சந்திரனுதித்தால், படர்-விரிகின்ற — ஒளிமழுங்கலுண்டோ-ஒளிகெடுதலுண்டோ—(இல்லைஇவ்வாறிருக்க)— அரசர்காள்-அரசர்களே—நீவிர்-நீவிர்கள்—வெய்யோன்-சூரியனுடைய- அருங்குலத்துதித்தும்-கிடைத்தற்கரியமரபிலிற்பிறந்தும்— திங்கண்மரபின் மன்னவற்கு-சந்திரவம்சத்திற்பிறந்தஅரசனுக்கு—நுங்கள் - உங்களுடைய

—மான்-பெருமைபொருந்திய—எழில்-அழகு— மழுங்கினீர் - மறைந்துபோனீர்கள்— எ-று. சந்திரவம்சத்திற்பிறந்தவன்களென் (கருத்து) அரசர்களே நீங்கள் சூரியகுலத்திற்பிறந்தும் சந்திரகுலத்து நனை முருக்குத்தோற்றீர்களென்றான்-எ-ம். (உ)

உரிமையிற்புணர்ந்தமாத ரூடவுமறுத்திம்மாதின்
வரிமுலைப்போகம்வேண்டிமணவினைத் துணிந்துவந்தீர்
குருதிவேல்சுமந்துவாளா வீங்கியகுவவுத்தோளீர்
திருநகர்க்கினிநீர்போய்நுந்தெரிவையர்க்கென்சொல்வீரோ.

(இ-ள்) உரிமையில - கிழமையினால்—புணர்ந்த - கூடிய—மாதர்-மங்கையர்கள்—ஊடவும்-பிணக்கங்கொள்ளவும்—மறுத்து- அதைநீக்கி—இம்மாதின் - இந்தமங்கையின்—வரி -சந்தனக்கோலத்தையுடைய—முலைப்போகம்வேண்டி - ஸ்தனத்தினுடைய போகத்தைவிரும்பி—மணவினை-விவாகத்தொழிலை—துணிந்துவந்தீர் - நிச்சயித்துக்கொண்டுவந்தீர்கள்—குருதி - உதிரந்தோய்ந்த—வேல்சுமந்து - வேற்படையைச்சுமந்து—வாளா-வீணாக—வீங்கிய - பருத்த—குவவுத்தோளீர்-திரட்சிபொருந்திய தோள்களையுடைய அரசரோ— திருநகர்க்கு - உங்களுடையநகரத்திற்கு—இனி - இப்பொழுது —நீர்போய் - நீர்சென்று நுந்தெரிவையர்க்கு-உம்முடையமனைவிகளுக்கு—என்சொல்வீர் - யாதுசொல்வீர்கள்—எ-று (கருத்து) அரசர்களேஉங்கள்மனைவிகளுக்கென்னசொல்வீர்களென்றானென்பதாம். (ங)

சூழிருஞ்சடைகடாங்கிச் சுடர்முடி துறந்துகான்போய்
வீழ்சருகருந்திநீவிர் மெய்த்தவம்புரிதல்வேண்டுந்
தாழிருங்கூந்தலாளை விடதார்கோன் றழீஇயபோதே
யாழிசூழுலகமெல்லா மவனடிபடிக்குமன்றே.

(இ-ள்) சுடர்முடி-கிரணங்களையுடையகிரீடங்களை—துறந்து - விடுத்து—சூழ்-சுற்றுகின்ற—இரும்-பெரிய—சடைகடாங்கி - சடைகளைச்சுமந்து—கான்போய் - வனத்திற்சென்று—வீழ் - அங்கேயுதிர்கின்ற—சருகருந்தி - சருகைப்புசித்து—நீவிர் - (அரசர்களே)நீர் — மெய்த்தவம்-உண்மையாகியதவத்தை, புரிதல்வேண்டும்-செய்தல்வேண்டும்—(ஆகாதெனில்) தாழ்- தாழ்ந்த —இரும்-பெரிய—கூந்தலாளை - , அளகபாரத்தையுடையதமயந்தியை— விடதார்கோன்-களவன்—தழீஇயபோதே -தழுவியபோதே—ஆழிசூழ் - கடலாற்சூழப்பட்ட—உலகமெல்லாம்-பூவுலகமனைத்தும்—அவன் - அவ்வரசனுடைய—அடிபடிக்கும் - அடிபணிந்துகிடக்கும்—எ-று.(கருத்து)அரசர்களே தமயந்தியைகளவன் தழுவியபோதேநீங்கள்மணிமுடிநீக்கிச்சடை முடிதாங்கிக் காட்டிற்போய் தபசுபண்ணவேண்டுமென்றானென்பதாம். (ச)

கண்டவர்மனமுங்கண்ணுங் கவர்ந்திடவனப்புவாய்ந்த
வொண்டொடிமாலைவேய்ந்தோற்குரியளென்றென்ன வேண்டா
தொண்டிறல்விடதார்கோமான் செருவினிலிரியல்போக
மண்டமர்கடந்தவொள்வேன் மன்னவற்குரியளென்றான். (ரு)



(இ-ள்) கண்டவர் - தன்னைப்பார்த்தவர்களுடைய—மனமும்-மனத்தையும்—கண்ணும் - கண்களையும்—கவர்ந்திட - வாரிக்கொள்ளும்படி—வனப்புவாய்ந்த-அழகுபெற்ற—ஒண்டொடி - தமயந்தியானவள்—மாலைவேய்ந்தோர்க்கு-மாலைசூட்டினவனுக்கு—உரியளென்று-உரிமையுடையவளென்று—என்னவேண்டாம்- நினைக்கவேண்டாம்—திண்டிறல்-மிகுந்தவலிமையையுடைய, விடதார்கோமான்-விடதேயத்தரசன், செருவினில்-போரினில், இரியல்போக-ஓடிப்போக, மண்டு-நெருங்கிய, அமர்-யுத்தத்திலே, கடந்த-செயித்த—ஒள்வேல் - ஒளிபொருந்திய வேலையுடைய—மன்னவற்கு - அரசனுக்கு—உரியளென்றான் - உரிமையுடையவளாவளென்றான்—எ-று. (கருத்து) தமயந்திமாலையளித்தவனுக்குச்சொந்தமென்று எண்ணவேண்டாம் களவனைவெல்லுகின்றவர்களுக்கவள்சொந்தமென்றான்-எ-ம். (ரு)

என்றலுங்கடவுட்டிங்களிருங்குலமிழித்துகூற
லன்றுகன்றென்னகக்குநாமவேல்வழுதிச்சீறி
யுன்றலைதுணிப்பனென்றுவொளிருமவாளுறையினீக்கிக்
குன்றெறிவைவொள்வாட்குரிசின்மேற்கனன்றுசென்றான்.

(இ-ள்) என்றலும்-இப்படியென்றுஇந்திரன்சொன்னவளவில்—கடவுள் -தெய்வத்தன்மையுள்ள—திங்களிருங்குலம் - பெருமைபொருந்தியசந்திரவம்சத்தை—இழித்துகூறல் - இழிவுபடுத்திச்சொல்வல்—நன்றுகன்றென்ன-நல்லதுநல்லதென்று—நக்கு -நகைத்து—நாமவேல்-அச்சத்தைத்தருகின்றவேற்படையையுடைய—வழுதி - பாண்டியராசன்—சீறி - அதட்டி—உன்றலை-இப்படிச்சொல்லியஉனதுசிரத்தினை—துணிப்பனென்று - தறித்துவிடுவேனென்று—ஒளிரும் - பிரகாசிக்கின்ற—வாள்-வாளை—உறையினீக்கி- உறையினின்றுநீக்கி—குன்றெறி-மலைகளின்சிறகையறுத்த—வைவொள்வாள் - ஒளியையுடையவச்சிராயுதத்தையேந்திய, குரிசின்மேல் -இந்திரன்மேல்—கனன்று - கோபித்து சென்றான் -போனான்—எ-று. குன்றெறிபவன் என்பது அதன்சிறகினைக்காதலால் ஆகுபெயர் (கருத்து) பாண்டியன்வாளுருவி இந்திரன்மேற்போர்க்குச்சென்றான்-எ-ம். (சு)

வெகுளலையணங்கிற்காக நன்னுருக்கொண்டுமேய
வகல்விசும்பளிக்கும்வேந்தனிவனெனவமரர்கூறத்
துகளெழுமௌலிபண்டுதோற்றவன்றன்னேடென்கொ
லிகலெனப்புகையுமொள்வாளுறைசெறித்தேகினேனே.

(இ-ள்) வெகுளலை-கோபியாதே—அணங்கிற்காக - தமயந்திக்காக—நன்னுருக்கொண்டுமேய - கள்ளவடிவங்கொண்டுவந்த—அகல்விசும்பு-அகன்றதெய்வலோகத்தை—அளிக்கும்வேந்தன் - காக்குமிந்திரன்—இவனென-இவனென்று அமரர்கூற-தேவர்கள்சொல்ல -(அதுகேட்டு) துகளெழு-தூளியெழும்ப—மௌலி-கிரீடம்—பண்டு - முன்னே—தோற்றவன்றன்னொடு - தோற்றுப்போனவனோடு—என்கொலிக

லென-என்னபோலென்று—புகையும் - புகைகின்ற—ஒள்வாள் - ஒளி பொருந்தியவாட்படையை—உறைசெறித்து-உறையிவிட்டு—எகினன் -போனான்—எ-று. (கருத்து) தேவர்கள் இந்திரனென்று சொல்லப்பா ண்டியன்முற்காலத்திற்றோற்றவனேடுபோர்க்குச் செல்லலாகாதென் றுதிரும்பினன்—எ-ம். (எ)

கூற்றெனக்கனலியென்னக் குலவரைதிரிக்குமூழிக்
காற்றெனவுருமேறென்னக்கதிர்முடியரசரெல்லாம்
மாற்றருஞ்சீற்றத்தோடு மடங்கலந்தவிசினின்றும்
பாற்றினஞ்சுழலும்வைவாட் படையொடுநிலத்திற்பாய்ந்தார்

(இ-ள்) கூற்றென-யமன்போலவும்—கனலியென்ன-அக்கினிபோலவும்—குலவரை-சத்தகுலகிரிகளையும் — திரிக்கும் - சுழற்றுகின்ற—ஊழிக்காற்றென - முடிவுகாலக்காற்றுபோலவும் — உருமேறென்ன -இடியேற்றைப்போலவும், கதிர்முடி-கிரணங்களையுடைய கிரீடமணிந்த-அரசரெல்லாம்-அரசரனைவரும்-மாற்றரு-நீக்குதற்கரிய—சீற்றத்தோடும்-கோபத்துடன்—மடங்கலந்தவிசினின்றும்-சிங்காதனத்தி லிருந்தும்—பாற்றினம் - பருந்துக்கூட்டங்கள்—சுழலும் - வட்டமிடுகின்ற—வை-கூர்மைபொருந்திய—வாட்படையோடும் - வாளாயுதத்துடன், நிலத்தில்-பூமியிலே—பாய்ந்தார்-குதித்தார்கள் —எ-று. (கருத்து) அரசர்களெல்லாருங்கோபத்துடன்சிங்காதனம்விட்டு வாட்படை யோடு நிலத்திற்குதித்தார்கள் என்பதாம். (அ)

கொய்யுளைக்கலினப்பாய்மாகொடிஞ்சியந்தேரிற்பூட்டி
மையன்மாமதத்தயானை பருமித்துமறலியேனுஞ்
செய்யகண்புதைக்குஞ்சீற்றத்திறல்கெழுவயவர்சூழ
மொய்கழலரசரெல்லா முருகுலாந்தும்பைவேய்ந்தார்

(இ-ள்) கொய்யுளை-கொய்துகட்டியபுறமயிரினையுடைய—கலினம்-கடிவாளம்பூண்ட—பாய் - தாவுகின்ற—மா - குதிரைகளை —கொடிஞ்சியந்தேரில்-மேன்மொட்டையுடையஇரதங்களில்—பூட்டி - பூட்டுதல்செய்து—மையல்-மயக்கம்பொருந்திய—மா-பெரிய —மதத்த - மும்மதத்தையுமுடைய—யானை-யானைகளை—பருமித்து - அலங்கரித்து—மறலியேனும் - கூற்றுவனாயினும்—செய்யகண்புதைக்கும் - சிவந்த கண்களைமூடிக்கொள்ளத்தக்க—சீற்ற - கோபத்தையுடைய— திறல்கெழு-வலிமைபொருந்திய—வயவர்சூழ - காலாள்கள்தம்மைச்சூழ்ந்து வரும்படி—மொய்-நெருங்கிய—கழல்-வீரக்கழலையணிந்த — அரசரெல்லாம்-அரசரனைவரும்—முருகுலாம் - தேனொழுகுகின்ற— தும்பை-தும்பைமாலையை—வேய்ந்தார்-தரித்தார்கள்—எ-று. (கருத்து) அரசர்களியாவருந்தும்பைமாலைதரித்தார்கள்என்பதாம். (௯)

கொடுங்குணில்பொருதவெற்றிப்போர்ப்பறைகுளிறவெம் போர்க்
கடுந்திறல்வயவர்*வின்னாண்புடைப்பொலிகடலினார்ப்பச்
கடுங்கனல்குளிரவெய்தாச் சுடர்விழிபொறிகள்சிந்த
மடங்கலேறனையவேந்தர் வாளமராழுவத்துற்றார்.

(இ-ள்) கொடுங்குணில்-வளைந்தகுறுந்தடியால்—பொருத-அடிக்கப்பெற்ற—வெற்றி - சயத்தைத்தருகின்ற—போர்ப்பறை - யுத்தமுரசு—குளிற - ஒலிக்க—வெம்போர் - வெவ்வியபோர்செய்கின்ற—கடுந்திறல்-மிகுந்தசௌரியத்தையுடைய—வயவர் - படைவீரர்கள்—வில்-வில்லிலவளைத்துச்செய்யும்—நாண்புடைப்பொலி - குணத்தொனிகள்—கடலினார்ப்ப - கடல்போலொலிக்க—கடுங்கனல் - சுடுகின்றநெருப்பும்—குளிர-குளிரும்படி—வெய்தா-வெப்பமாக—சுடர்விழி - சிவந்தகண்கள்—பொறிகள் - நெருப்புப்பொறிகளை—சிந்த - சிதற—மடங்கலேறனைய-சிங்கவேற்றையொத்த—வேந்தர் - அரசர்கள்—வாளமர் - வாட்போர்செய்கின்ற—ஆழுவம் - யுத்தகளத்தில்—உற்றார் - அடைந்தார்கள்—எ-று. * தொல்காப்பியம்-மரபியல்-அக-சூ-"வில்லும்வேலுங் கழலுங்கண்ணியுந் - தாருமாரமுந்தேருமாவுமன்பெருமரபினேனோர்க்குரிய" இவ்விதியால் அரசர்க்குரியவில்லாதிபடைகளுஞ் சேனைகளுக்குரித்தாம் (கருத்து) அரசர்கள்போர்க்களத்தில் வந்தார்கள் என்பதாம். (௰)

மன்னவர்தருக்கும்வெம்போர் வைரவாள்சுமந்ததிண்டோட்
பொன்னகர்க்கிறைவன்சூழ்ந்த புணர்ப்புநாங்காண்டுமென்று
பொன்னலரகலமூழ்கி யூன்சுவைத்துதிரமாந்து
மின்னகுபரிதியொள்வேல் வேந்தர்கோன்சிறிதுநக்கான்

(இ-ள்) மன்னவர்-அரசர்களுடைய—தருக்கும் - கர்வமும்—வெம்போர் - வெவ்வியபோர்செய்கின்ற—வைரவாள்சுமந்த - வச்சிராயுதத்தைச்சுமந்த—திண்டோள் - வலிமைபொருந்தியதோள்களையுடைய—பொன்னகர்க்கிறைவன்-இந்திரனைவன்—சூழ்ந்த -எண்ணிய—புணர்ப்பும்-சம்பந்தமும்—நாங்காண்டுமென்று - நாங்காண்போமென்று—ஒன்னலர்-சத்துருக்களுடைய—அகலமூழ்கி - மார்பினிடத்திலேகுளித்து—ஊன்சுவைத்து-மாமிசத்தைமென்று—உதிரமாந்தும் - புண்ணீரைக்குடிக்கின்ற—மின்னகு-ஒளிவிடுகின்ற—பரிதி - சூரியன்போன்ற—ஒள்வேல் - ஒளிபொருந்தியவேற்படையையுடைய — வேந்தர்கோன்-உக்கிரமகாராசன்—சிறிது- கொஞ்சம்—நக்கான் - சிரித்தான்—எ-று. (கருத்து) அரசர்கள் செருக்கையும் இந்திரன்பெருக்கையு மறிவோமென்று நகைசிரித்தான்—எ-ம். (௰௧)

சிலைகுழைத்தரசர்சீற்றமுநிணைழ்வாய்ப்பிலிக்
கொலைபழுத்தொழுகும்வேலான் குவவுத்தோட்படைப்புநோக்கி
யிலைமுகப்பூணினன்மற் றென்கொலாய்விளையுமென்று
முலைமுகட்டலங்கல்வேற்கண் முத்துகவெருவிநின்றாள்.

(இ-ள்.) சிலைகுழைத்து - வில்லைவளைத்து—அரசர்சின்ற - அரசர்நிற்கப்பெற்ற—சீற்றமும்-கோபமும்—நிணம்-கொழுப்பை—வாய்ப்பி

ல்கி-வாவிற்கிகழி—கோலேயமூச்து - கொல்லுதல்மிகுந்த—நழுநும்-இழுகுகின்ற—வேலான்-வேலயடையுடையதனவனு குவவுத்தோள் - திரட்சிபொருந்தியதோள்களினுடைய—பனேப்பும் - பூரிப்பும்—நோக்கி - பார்த்து—இலேமுகப்பூணினுன் - தமயந்தியானவள்—என்னோலாய்விலேயுமென்று -யாதாய்முடியுமோவென்று—முலேமுகட்டுக்குதனங்களினுடையமுச்சியில்—அலங்கல் - ஒளிபொருந்திய—வேற்கண்-வேல்போன்றகண்களினின்றும்—முத்தக - முத்துப்போல்நீர்துளிக்க—வெருவி-பயந்து—நின்றுள்-நின்றனள்—எ-று. (கருத்து) தமயந்தியானது புயங்களைப்பார்த்துஇப்போரெப்படி முடியுமோவென்று ஏங்கியழுதாள் என்பதாம். (௰௨)

> செழுங்கடைமழைக்கணல்லாய் இன்னிலேகுழைத்துவெம்போர்க்
> கெழுந்தவிவ்வரசர்மார்பத்திழிபெருங்குருதியாக்கப்
> புழுங்குவெம்பகழிமாரி பொழிந்தமர்முறுக்கியாடி
> யுழுந்துருள்பொழுதின்மீள்வ லுள்ளங்கவலலென்றுன்.

(இ-ள்) செழுங்கடை- செழுமையுள்ளகடையையுடைய—மழைக்கணல்லாய் - குளிர்ச்சிபொருந்தியகண்களையுடையதமயந்தியே—இன்னிலே-வலிமையுடையவில்லே—குழைத்து-வளைத்து— வெம்போர்க்கு வெவ்வியயுத்தத்திற்கு—எழுந்த - புறப்பட்ட — இவ்வரசர்மார்பத்து-இவ்வரசர்மார்பினிடத்திலே—இழி - இழிகின்ற—பெருங்குருதி-அதிகவுதிரத்தை—ஆக்க - உண்ணும்படி—புழுங்கு-வெம்புகின்ற—வெம்பகழிமாரி-வெவ்வியபாணமழையை—பொழிந்து - சொரிந்து—அமர்-யுத்தத்திலே—முறுக்கி- கொன்று—ஆடி - விளேயாடி—உழுந்துருள்பொழுதின் -ஒருஉழுந்துருளுகின்றகாலத்திலே—மீள்வல் - திரும்புவேன்—நீ-நீயானவள்—உள்ளம் - மனத்தினிடத்து—கவலல் - கவலேப்படவேண்டாம்—என்றுன்-என்றுசொன்னுன்—எ-று. (கருத்து) நளன் தமயந்திக்கு அஞ்சாதேயென்று சொன்னுன் என்பதாம். (௰௩)

> விளேசமர்க்கெழுந்துசின்மிற மனேயினிநிறைக்கிக்
> களிமதக்களிறுந்தேருங் களப்படுத்திகலினேற்ற
> வுளேவயப்புரவித்தானே யொன்னலர்ச்செருப்பனீபோய்
> நளிகடற்றுனேசூழ நங்கையைக்காத்தியென்றுன்

(இ-ள்.) விளே-உண்டாகின்ற—சமர்க்கு -போர்செய்தற்கு—எழுந்துசென்ற- புறப்பட்டுகின்ற—வீமனே - வீமராசனே—இனிஇன் - இனிமையிறுல்—நோக்கி-பார்த்து—களி-களிப்பையுடைய மதக்களிறும்-மதயானையையும்—தேரும் -தேரையும்—களப்படுத்தி - யுத்தகளத்திலேவீழ்த்து—இகலின் -பகையிறுல்—ஏற்ற - எதிர்த்த—உளே - பிடரிமயிரினேயுடைய—வயப்புரவி- வலிமைபெற்றகுதிரைகளேயும்—தானே - சேனேயையுமுடைய—ஒன்னலர்-சத்துருக்களே—செருப்பன் - கொல்லுவேன்—நீபோய்-நீசென்று—நளி - குளிர்ச்சிபொருந்திய—கடல் - கடல்போன்ற—தானேசூழ - சேனேயுடனே—நங்கையை - தமயந்தியை—காத்தியென்றுன் - காப்பாயென்றுன்—எ-று. நளன்நங்கையைக்காத்



தியென்றுனென்க (கருத்து) நளன்வீமனேக்குறித்துத் தமயந்தியைக்காத்திரும் சத்துருவைச்செயித்துவருவேன் என்றுன்-எ-ம். (௰௪)

> உடல்சின வுருமேறென்னவயவனையொருங்குநோக்கிக்
> கொடியணிகொடிஞ்சித்திண்டேர் கொய்யுளைக்கலினப்பாய்மா
> கடன்மடைதிறந்ததென்னக் கடாமூற்றிருந்துபாயும்
> படிமதக்களிறல்யானேபண்ணுறுத்திடுமினென்றுன்.

(இ-ள்) உடல்-பொருகின்ற—சினம் - கோபத்தையுடைய—உருமேறென்ன - இடிபேற்றையொத்த—வயவனை - சேவகனை—ஒருங்கு நோக்கி-ஓரேதரம்பார்த்து—கொடியணி - கொடிகளேயணிந்த—கொடிஞ்சி-மேன்மொட்டையுடைய—திண்-வலிமைபொருந்திய—தேர் - தேரையும்—கொய்யுளே - கொய்துகட்டியபிடரிமயிரினேயுடைய—கலினம்-கடிவாளம்பூண்ட—பாய்மா - குதிரைகளேயும்—கடல் - கடலானது—மடைதிறந்ததென்ன-மடைதிறந்ததென்றுசொல்லும்படி—கடாம் - மதம்—ஊற்றிருந்துபாயும்-ஊற்றிருந்துபாய்கின்ற—படிமதம் -மதம்படிகின்ற—களிறல்யானே -களிப்பையுடையநல்லயானேகளேயும்—பண்ணுறுத்திடுமினென்றுன்-அலங்கரியுங்களென்றுன்—எ-று. (கருத்து) நளன்வீரனைநோக்கி-தேர்-குதிரை-யானே-இவைகளே யலங்கரிக்கச்சொன்னுன் என்பதாம். (௰௫)

> நீங்கருங்கவசமார்த்து நேர்லர்மௌலிதேய்க்கும்
> பூங்கழலலவீக்கிப் போரினிற்பொருப்புமஞ்ச
> வீங்கியகுவவுத்தோளில் வெங்கணேப்புட்டிறுங்கி
> வாங்குவிற்றடக்கையேந்தி மறலிகண்புதைப்பசென்றுன்.

(இ-ள்) நீங்கரும்-நீங்குதற்கரிய—கவசமார்த்து - கவசங்கட்டி—நேரலர்-சத்துருக்களுடைய—மௌலி-முடியை—தேய்க்கும் -தேய்க்கின்ற—பூங்கழல்-விளங்குகழலே—கால-ஒலிக்கும்படி—வீக்கி - கட்டி—போரினில் - யுத்தமென்றல்—பொருப்புமஞ்ச - மலேயுமஞ்சும்படி—வீங்கிய-பருக்க—குவவுத்தோளில் - திரட்சிபொருந்தியபுயத்தின்கண்—வெங்கணே-வெவ்வியபாணங்களேயுடைய—புட்டிறுங்கி - அம்புக்கூட்டைத்தாங்கி—வாங்கு-வளைக்கப்பட்ட—வில் - வில்லே—தடக்கையேந்தி-விசாலம்பொருந்தியகையிலேந்தி—மறலி - யமனும்—கண்புதைப்ப-கண்களேமூடிக்கொள்ளும்படி—சென்றுன்-சென்றனன்—எ-று. (கருத்து) நளன்கவசங்கட்டி வீரக்கழலணிந்து அம்புக்கூட்டைத்தாங்கிவில்லேந்திசென்றுன் என்பதாம். (௰௬)

> பொருசமர்தொடங்கின்ற புரவலர்மடவார்செய்ய
> வரிவிழிக்கண்ணுந்தோளும் வலந்துடித்திடனற்காட்டக்
> குருமணிமுடியிற்றுஞ்செம்பொற் கொடியர்கொடிஞ்சித்தேரி
> னருவரையிவருஞ்சீற்ற மடங்கலேறென்னவார்த்தான்.

(இ-ள்) பொரு-பொருகின்ற—சமர்யுத்தத்தை—தொடங்கின்ற-ஆரம்பித்துகின்ற—புரவலர் - அரசர்களுடைய—மடவார் - மாதர்—

செய்ய-சிவந்த—அரி - பாந்த—நெடுங்கண்ணும்-மாடியகண்களும் — தோளும் - தோள்களும்—வலந்துடித்து - வலப்பக்கம் துடித்து—இன்னல்காட்ட - துன்பக்குறிகாட்ட—குருமணி - நிறம்பொருந்தியமணியால் —குயிற்றும் - பதிக்கப்பட்ட—செம்பொன் - சிவந்தபொன்னாற் செய்த—கோடியர் - சிகரத்தினுயர்ந்த—கொடிஞ்சித்தேரின் - மேன்மொட்டையுடையதேரின்மேல்—அருவரை - அரியமலையின்மேல்—இவறும்-ஏறுகின்ற—சீற்றம் - கோபத்தையுடைய—மடங்கலேறென்ன-ஆண்சிங்கம்போல—ஆர்த்தான் - ஏறினன்—எ-று. நளன் தேரிலேறினனெனக்கூட்டுக (கருத்து) நளன்தேரேறினன் என்பதாம். (௰௭)

ஊன்பயில்வடிவேலேந்தியுடன்றுவெம்போரிலேற்ற
தேன்பயிறெரியல்வேந்தர்நடுக்குறத்திசையினின்ற
கூன்பிறைக்கோட்டுநால்வாய்க்குஞ்சரம்வெருவியோட
வான்பொதிரொலியத்தெய்வ * வலம்புரிமுழக்கியிட்டான்.

(இ-ள்) ஊன்பயில்-மாமிசந்தங்கிய—வடிவேலேந்தி - கூரியவேற்படையைத்தாங்கி—உடன்று-கோபித்து,வெம்போரில்-வெவ்வியயுத்தத்தில்—ஏற்ற-எதிர்த்த—தேன்பயில் - தேன்றங்குகின்ற—தெரியல்-மாலையையுடைய—வேந்தர் - அரசர்கள்—நடுக்குற - நடுக்கமடைய—திசையினின்ற-எட்டுத்திசையினுநின்ற—கூன் - வளைவுபொருந்திய—நீ-பிறைக்கோட்டு - பிறையையொத்தகொம்பினையும்—நால்வாய் - தொங்குகின்றவாயினையுமுடைய—குஞ்சரம் - யானைகள்—வெருவியோட - பயந்தோடும்படி—வான் - ஆகாயம்—பொதிரொலிய - நடுக்கமடைய—தெய்வலம்புரி-தெய்வச்சங்கம்,முழக்கியிட்டான் - தொனிசெய்தான் —எ-று.* அகத்தியம்-சங்குகுறித்துச் சமர்தொடலறிவே (கருத்து) நளன்சங்கத்தொனிசெய்தான்-என்பதாம். (௰௮)

கொன்னவில்பரிதிவைவாட்கூற்றுயிருண்ணுங்கூற்றின்
மின்னகுவரிவிலேந்தும்விடலையைநோக்கியேற்ற
மன்னவரளவன்றின்றேன்மணிவரைத்திணிதோள்வீக்க
மென்னினிச்செய்தோமென்றிந்திரனடுக்கலுற்றான்.

(இ-ள்) கொல்-கொலைத்தொழிலை—நவில் - சொல்லப்பட்ட—பரிதி சூரியன்போன்ற—வைவாள் - கூர்மைபொருந்தியவாட்படையையும்—கூற்றுயிர் - இயமனுயிரை—உண்ணும் - உண்ணப்பட்ட—கூற்றின்-ஒருஇயமன்போல்—மின்னகு-ஒளியைவீசுகின்ற — வரிவிலேந்தும்-நெடியவில்லையுமேந்திய—விடலையை-நளமகாராசனை — நோக்கி-பார்த்து—ஏற்ற-எதிர்த்த—மன்னவர்-அரசர்களது— அளவன்று - அளவுடையதன்று—இன்றேன் - இவ்வரசனுடைய—மணிவரை - அழகுபொருந்தியமலைபோன்ற—திணி-வலிமைபெற்ற—தோள் -புயங்களினுடைய—வீக்கம்-பாரிப்பு—(ஆதலினால்)என்னினிநாது- யாதையினைத்து—என்செய்தோமென்று யாதுசெய்தோமென்று—இந்திரன் - இந்திரனைவன்—நடுக்கலுற்றான்-நடுங்கினான்—எ-று (கருத்து)நளனை இந்திரன்கண்டுநடுங்கினான்—எ-ம், (௰௯)



கார்த்திரள்முழக்கமென்னக் கனைகுரன்முரசமார்த்த
தார்த்தனகடல்களேழுந் துரகதக்குரத்தின்றூளி
போர்த்தனவிசும்புபைம்பொற் கொடியொடுகுடையுமோங்கி
யார்த்தனவுவகைபொங்கித்துணங்கையிட்டலகையீட்டம்

(இ-ள்) கார்த்திரள் - மேகங்களினுடைய—முழக்கமென்ன - சத்தம்போல்—கனை-முழங்குகின்ற—குரல்-குரலையுடைய—முரசம்-பேரிகைகள் — ஆர்த்த-ஒலித்தன—கடல்களேழும் - ஏழுசமுத்திரங்களையும்— துரகதம் - குதிரைகளினுடைய — குரத்தின் றூளி - குளம்பினின்றெழுகின்றபுழுதிகள்—தூர்த்தன - தூர்த்துவிட்டன —விசும்பு-ஆகாயத்தை—பைம்பொற்கொடியொடு - பசியபொற்கொடிகளோடு—குடையும் - குடைகளும்—ஓங்கி-உயர்ந்து—போர்த்தன - மூடிக்கொண்டன—அலகையீட்டம்-பேய்க்கூட்டங்கள்—உவகைபொங்கி - மகிழ்ச்சிமிகுந்து—துணங்கையிட்டு - கூத்தாடி—ஆர்த்தன - சத்தித்தன —எ-று. துணங்கை-இருகைமுடக்கிப்புழுப்புடையொத்தியாடல் (கருத்து)முரசங்கள்சத்தித்தன, குதிரைப்புழுதிகள் கடலைத்தூர்த்தன, குடைகள்கொடிகள் ஆகாயத்தைமூடின,பேய்கள்சத்தித்தன-எ-ம். ()

கூற்றெனவுறியார்த்துக் கொல்சினவரியேறென்ன
வேற்றவர்வெருவநெய்த்தோரிடையறுகொழுங்கோட்டுச்
சீறமும்மதத்தினூழித் தீயையுமவிக்கும்வேகக்
காற்றுறழ்களிறுதூண்டிக்கட்கனல்கதுவச்செல்வார்.

(இ-ள்.) கூற்றென - இயமனைப்போல் — உரறி - ஆரவாரித்து—கொல்-கொல்கின்ற—சினம்- கோபத்தையுடைய — அரியேறென்ன சிங்கவேற்றைப்போல்— ஆர்த்து - கர்ச்சித்து—ஏற்றவர் - எதிர்த்தவர்கள்—வெருவ - அஞ்ச, நெய்த்தோர் - உதிரமானது—இடையறுகொழுங்-நீங்காதொழுகப்பெற்ற—கோட்டு- கொம்பையும் — சீற்ற-கோபத்தையுமுடைய—மும்மதத்தின் - மும்மதங்களால் — ஊழித்தீயையும்-வடவாமுகத்தையும்—அவிக்கும் - அவிக்கப்பட்ட —வேகக்காற்றுறழ் - சண்டமாருதத்தைகையொத்த— களிறுதூண்டி - யானையைச்செலுத்தி—கண் - விழிகளில்—கனல்கதுவ-;நெருப்புப்பற்ற — செல்வார் செல்வார்கள்-எ-று. (கருத்து) வீரர்கள் கோபத்துடனே போவார்கள் என்பதாம். (௨௧)

ஒள்ளழல்கண்ணிற்காலவுயிர்ப்புலியுண்ணுங்கூற்றின்
வள்ளுறைவடிவாளேந்திவாய்மடித்தெயிறுதின்று
கள்ளவிழ்* தும்பைசூடிக்கழுத்துக்கொட்டியார்ப்ப
வள்ளிலைவாய்பைம்பூணரச்சோடரசரேற்றார்.

(இ-ள்)ஒள் - பிரகாசம்பொருந்திய—அழல் - நெருப்பு — கண்ணில் - கண்களினின்றும்—கால் - கொப்புளிக்க—உயிர்ப்பலி - உயிராகியஉணவை—உண்ணும்-உண்ணுகின்ற—கூற்றின்-இயமன்போல—வள்ளுறை - நெருங்கியவுறையையுடைய—வடிவாளேந்தி - கூரியவா

னையேந்திக்கொண்டு,வாய்மடித்து-உதட்டை மடித்துக்கொண்டு — எயிறுதின்று - பல்லைக்கடித்து—கள்ளவிழ்-தேனொழுகுகின்ற — தும்பைசூடி - தும்பைமாலையைத்தரித்து— (இதுகண்டு) கழுது-பேய்கள், கைகொட்டி-கைகளைக்கொட்டி-ஆர்ப்ப-சந்தோஷிக்கும்படி — அள்ளில்-அள்ளிக்கொள்ளும்இலைபோன்ற—கவசம்பைம்பூண் - பசியபொன்னிறபதித்தவச்சிராயுதத்தையுடைய—அரசரோடு - அரசருடன்;—அரசர் - அரசர்கள்—ஏற்றார் - எதிர்த்தார்கள்—எ-று; * அகத்தியம்-போர்க்கோலத்திற் பூந்தும்பை புனைவர் (கருத்து) அரசர்களோடு அரசர்களெதிர்த்தார்களென்பதாம். (உஉ)

மண்ணிடைத்திரிவபோல மாதிரங்கடப்பதாவி
விண்ணிடைப்பறப்பவேழ மருப்பிடைமிதித்துமீள்வ
கண்ணிமைபொருந்திற்காணக்கடுப்பின கவினப்பாய்மா
வெண்ணிலவயவர்தூண்டவெதிரெதிர்மலைந்துநிற்பார்

(இ-ள்) மண்ணிடை - பூமியின்கண்ணே—திரிவபோல - திரிவன்போல—மாதிரம் - திசைகளை—கடப்ப-தாண்டுவன—தாவி - பாய்ந்து—விண்ணிடை - ஆகாயத்திலே—பறப்ப - பறப்பன—. வேழமருப்பிடை - யானைக்கொம்பின்கண்—மிதித்து - மிதித்து—மீள்வ - திரும்புவன ,கண்-கண்கள்— இமைபொருந்தில் - இமைக்கொட்டுமளவில்—காணக்கடுப்பின - காணக்கூடாதவேகத்தையுடையன — கவினப்பாய் மா-இத்தன்மையுள்ளகுதிரைப்பூண்டதாவுகின்ற குதிரைகள் — எண்ணில் - அளவற்றவைகளை—வயவர்தூண்ட - காலாள்கள்செலுத்தி—எதிரெதிர் - நேர்நேராக—மலைந்து - போர்செய்து—நிற்பார் - நிற்பார்கள்—எ-று; * அகத்தியம் எதிர்மறைப் பெயரெச்சத்திசை வழிவிய ல்பு-மீறுகெடுங்காண்மிகுதலுமாகும் - இவ்விதியால் - காணக்கடுப்பின இதுஎதிர்மறைப்பெயரெச்சமீறுகெட்டொற்று மிக்கது (கருத்து) வீரர்கள் குதிரையேறிப்போர்செய்தார்கள்-என்பதாம். (உங)

சூழ்சுடர்வைரவாளா லிந்திரன்றமிக்குமுன்னம்
பாழியங்குடிமிக்குன்றஞ் சிறகொடுபறப்பவென்னக்
கேழிளர்பரிதியேய்க்குங் கிளர்மணிக்கொடிஞ்சிமான்றே
ராழியோடாழிதாக்க வருஞ்சமர்தொடங்கிநிற்பார்.

(இ-ள்) சூழ்சுடர் ஒலிசூழ்கின்ற—வைரவாளால்-வச்சிராயுதத்தால்—இந்திரன்றமிக்குமுன்னம்-இந்திரன்றுமிப்பதற்குமுன்னே—பாழி-அகன்ற—அம்-அழகிய—குடுமிசிகரங்களையுடைய—குன்றம் - மலைகளானவை—சிறகொடு - இறகுடனே—பறப்பவென்ன-பறப்பன போல—கேழ்கிளர் -செந்நிறகுமிழ்ந்த—பரிதியேய்க்கும் - சூரியனையொத்த—கிளர்மணி-ஒளிவிளங்குகின்மணிகள்பதித்த — கொடிஞ்சி- மேன் மொட்டையுடைய—மான்தேர்- குதிரைகட்டியதேர்கள்—ஆழியோடாழிதாக்க-உருளையோடுருளைகள்முட்ட —அருஞ்சமர்-அரியயுத்தத்தை—தொடங்கி ஆரம்பித்து—நிற்பார்-நிற்பார்கள்;—எ-று. (கருத்து) வீரர்கள்தேரேறிப்போர்செய்துநிற்பார்கள்-என்பதாம். (உச)



மோட்டிளமுலைகள்பாய்ந்தமருமத்தின் மூரியானைக்
கோட்டிணையுழக்கவெம்போர்க்கோளரியென்னச்சீறித்
தோட்டுணைகொட்டியார்த்துச் சுடர்நெடுங்குருதிவாளாற்
பூட்டியவோடைநெற்றி மத்தகம்போழ்ந்திட்டாரே

(இ-ள்) மோடு-ஐசுவரியம்—இளமுலைகள் - இளமை பொருந்திய ஸ்தனங்கள்—பாய்ந்த-பாய்ப்பெற்ற—மருமத்தின் - மார்பின்கண் — மூரி-வலிமையையுடைய—யானைக்கோட்டிணை-யானையினிரண்டு கொம்புகளும்—உழக்க - குத்திக்கலக்க—வெம்போர் - வெவ்வியபோர்செய்கின்ற—கோளரியென்ன-சிங்கங்களைப்போல்—சீறி-கோபித்து—தோட்டுணை - இரண்டுதோள்களையும்—கொட்டி-தட்டி—ஆர்த்து - கர்ச்சித்து—சுடர் - ஒளியையுடைய—நெடும்-நெடிய—குருதி - உதிரந்தோய்ந்த—வாளால்-வாட்படையால்—ஓடைபூட்டிய- முகபடாத்தையணிந்த—நெற்றி - நெற்றியையுடைய—மத்தகம்-தலையை—போழ்ந்திட்டார்பிளந்தார்கள்—எ-று. (கருத்து) அரசர்கள் யானைகளோடு போர் செய்தார்கள்-எ-ம். (உரு)

கொலைத்தடங்கண்ணினல்லார் குறங்கின்மேற்குறங்குசேர்த்தி
முலைத்தடநெருங்கப்புல்லிக்கண்டுயின்முழவுத்தோளா
ரலைத்துமிழ்குருதிபொங்கவற்றுவீழ்புழைக்கையேற்றி
மலைக்கடாக்களிறுபுல்லிமண்ணிடைத்துஞ்சுகின்றார்

(இ-ள்.) கொலை-கொலைசெய்கின்ற—தடம்- விசாலம் பொருந்திய—கண்ணின் - கண்களையுடைய—நல்லார் - மாதர்களுடைய—குறங்கின்மேல் - துடைகளின்மேல்—குறங்குசேர்த்தி - துடைகளைச்சேர்த்துக்கொண்டு—முலைத்தடம்-ஸ்தனதடங்களை — நெருங்கப் புல்லி-அழுந்தத் தடவிக்கொண்டு—கண்டுயில் - நித்திரைசெய்கின்ற — முழவு-மத்தளம்போன்ற—தோளார் - தோளையுடைய அரசர்கள் — அலைத்துமிழ் - அலைத்துமிழுகின்ற —குருதிபொங்க-உதிரமொழுக— அற்றுவீழ் - அற்றுவிழுந்து—புழைக்கை- துதிக்கையின்மேல்—ஏற்றி - அடையையேற்றிக்கொண்டு—மலை-மலையையொத்த—கடாக்களிறு - மதயானையை—புல்லி - தழுவிக்கொண்டு—மண்ணிடை - பூமியிலே—துஞ்சுகின்றார்-நித்திரைசெய்கின்றார்கள்—எ-று (கருத்து) அரசர்கள் போர்க்களத்தில் வீழ்ந்தார்கள்-என்பதாம். (உசா)

கூற்றொடுங்கொம்மைகொட்டிக் குனிக்கும்வாளுழவர்வேகக்
காற்றினிற்பெண்ணையீன்ற கருங்கனியுகுவதேபோல்
வேற்றிறல்வயவர்சென்னிவீழத்துவெங்கரிகளூறிச்
சீற்றவெம்மடங்கலேற்றிற்செருக்களத்துழக்கியிட்டார்

(இ-ள்) கூற்றொடும் - இயமனுடனே—கொம்மைகொட்டி- கைதட்டிக்கொண்டு—குனிக்கும்- கூத்தாடுகின்ற — வாளுழவர்-வாள்வீரர்கள்—வேகக்காற்றினில்-சண்டமாருதத்தில்—பெண்ணையீன்ற - பனைமரந்தந்த—கருங்கனி - கரியபழம் — உகுவதேபோல் - உதிர்வதுபோல—வேற்றிறல்-வேற்படையிற்றிறலையுடைய—வயவர் - படைவீரர்கள்

—சென்னி - தலைகளை — வீழ்த்து-தள்ளி — வெங்கரிகள்-வெவ்விய யானைகளை — நூறி - கொன்று — சீற்றம் - கோபத்தையுடைய — வெம்மடங்கலேற்றில் - வெவ்விய சிங்கவேற்றைப்போல — செருக்களத்து - யுத்தகளத்தில் — உழக்கியிட்டார்-கலக்கினார்கள் — எ-று. (கருத்து) வீரர்கள் வீரர்களையும்யானைகளையுங்கொன்றார்களென்பதாம். (௨௭)

வயவரோரிருவர்தம்மில் வாளமர்விளைத்தலோடு
முயிர்துறந்தவற்குமாலைபுனைதுமென்றும்பர்போந்த
கயமலர்க்கண்ணிகாணக் காளையர்மாய்ந்துமண்ணிற்
புயலுறழ்கூந்தற்காகவானினும்போர்செய்கின்றார்

(இ-ள்) வயவர்-படைவீரர்கள் - ஓரிருவர் - இரண்டுபேர் — தம்மில்-தமக்குள்ளே — வாளமர் - வாட்போரை — விளைத்தலோடு - செய்தவளவில் — உயிர்துறந்தவற்கு-இவருள்ளிறந்தவனுக்கு — மாலைபுனைதுமென்று-மாலைதரிப்போமென்று — உம்பர்போந்த - சுவர்க்கத்தினின்றும்வந்த — கயமலர் - தடாகத்திற்பூத்தகமலமலரையொத்த — கண்ணி-கண்ணையுடைய அரம்பையானவள் — காண-காணும்படி — காளையர்-வீரர்கள் — மாய்ந்து-ஒருசேரவிறந்து — மண்ணில்-பூமியில் — புயலுறழ்-மேகத்தையொத்த — கூந்தற்காக - கூந்தலையுடைய பெண்ணிற்காக — வானினும் - ஆகாயத்தினின்னும் — போர் - யுத்தத்தை — செய்கின்றார் - செய்கின்றார்கள் — எ-று. (கருத்து) வீரர்களிருவர் போர் செய்கின்றார்களென்பதாம். (௨௮)

குருதிகொப்புளிக்கும்வேலான் குங்குமவளறுமூழ்கு
மருமத்தில்வாளிமூழ்க மயங்கினன்றெளிதலோடும்
விரைமொய்த்தகூந்தல்சூழ விண்ணினின்றாவத்தோடு
முருவத்தார்புனையவந்த வொண்டொடிமயங்கிநின்றாள்

(இ-ள்.) குருதி - உதிரத்தை — கொப்புளிக்கும் - உமிழ்கின்ற — வேலான்-வேற்படையையுடைய வாசஞனவன் — குங்குமவளறு - குங்குமச்சேற்றில் — மூழ்கு-மூழ்கப்பெற்ற — மருமத்தில் - மார்பினிடத்தில் — வாளிமூழ்க-பாணங்கள்புதைய — மயங்கினன் - மயக்கங்கொண்டவனாகி — தெளிதலோடும் - தெளிந்தவளவில் — விரைமொய்த்த-வாசனையையுடைய — கூந்தல்சூழ - குழலானது அவிழ — விண்ணினின்று-ஆகாயத்தினின்றும் — ஆவத்தோடும் - ஆசையுடன், உருவத்தார் அழகியமாலையை — புனையவந்த - தரிக்கவந்த — ஒண்டொடி - அரமங்கையானவள் — மயங்கிநின்றாள்-மயங்கிநின்றனள் — எ-று, (கருத்து) ஒருவன்பாணங்கள்பட்டு மயங்கினவனாகித்தெளிந்து நிற்கமாலைதரிக்கவந்த அரம்பையானவள் மயங்கிநின்றாளென்பதாம். (௨௯)

காண்படுமுருவப்பைந்தார் விதர்ப்பர்கோன்கன்னிவேற்க
ணூன்படாதுளையக்குத்தியுள்ளுயிர்பருகலாற்றேம்
வான்படாமின்னின்றேக்கம் வாளினன்மாய்துமென்றுத்
தேன்படுதெரியல்வேந்தர்செருமலைந்தாவிநீத்தார்



(இ-ள்) காண்படும்-காட்சியையுண்டாக்கிய — உருவம் - அழகிய — பைந்தார்-பசியமாலையையுடைய — விதர்ப்பர்கோன் - வீமராசன் — கன்னி-புத்திரியினது — வேற்கண் - வேல்போன்றகண்களானவை — ஊன்படாது-மாமிசம்படாமல்; உளைய-வருத்தும்படி, குத்தி-குத்தி, உள்ளுயிர்-உள்ளாவியை — பருகல் - உண்பதை — ஆற்றேம் - பொறுக்கமாட்டோம் — வான்படா - மேகத்திற்றோன்றுத — மின்னின் - மின்போல் — தேக்கம்-ஏறுகின்ற — வாளினல் - வாட்படையால் — மாய்துமென்று - மாய்வோமென்று — தேன்படு - தேனுண்டாகின்ற — தெரியல் - மலர்மாலையையணிந்த — வேந்தர்-அரசர்கள், செருமலைந்து-போர்புரிந்து; ஆவி-உயிரை — நீத்தார் - நீக்கினார் — எ-று. (கருத்து) அரசர்கள் தமயந்திகட்பட்டுக்கஞ்சி வாட்படையாலிறந்தார்கள்-எ-ம். (௩௰)

மழவுறழ்திணிதோள்வீரர் முழுமெயுமிருப்புண்மேய
வழிபெருங்குருதியாழ்கி யிளங்கதிர்ப்பரிதியேய்ப்ப
வழிகவுட்கடாத்தகால்வா யரசுவாவெருத்திற்றோன்றிப்
பொழிகணைமாரிசிந்தி யகன்விசும்புபோர்த்தார்.

(இ-ள்) மழவுறழ்-மத்தனையொத்த — திணி - வலிய — தோள்-புயத்தையுடைய — வீரர்-படைவீரர் — முழுமெயும் - தேகமுழுதும் — இரும்-பெரிய — புண்மேய - புண்ணைப்பொருந்திய — இழி - ஒழுகுகின்ற — பெருங்குருதியாழ்கி - பெரியவுதிரத்திலமுழ்கி — இளங்கதிர் - இளங்கிரணத்தையுடைய — பரிதியேய்ப்ப - சூரியனையொப்ப — கவுள்-கவுளினிடத்திலே — அழி - வீழுகின்ற — கடாத்த - மதத்தையும் — கால்வாய்-தொங்குகின்றவாயையுமுடைய — அரசுவா - அரசயானையின் — எருத்தில்-பிடரியின்மேல் — தோன்றி - ஏறி — பொழி - பொழிகின்ற — கணைமாரி-பாணவருஷத்தை — சிந்தி - சிதறி — அகல் - அகன்ற — இரு-பெரிய — விசும்பு-ஆகாயத்தை — போர்த்தார் - மறைத்தார்கள் — எ-று (கருத்து) படைவீரர்யானைமேலேறிக் கணைமழையாலாகாயத்தை மூடினார்கள் என்பதாம். (௩௧)

அருமருந்தனையாள்சூட்டு மலங்கலந்தோளிணைப்
பொருதிரைப்புணரிசூழ்ந்த புவியினி லரசெல்லா
மிணையுளையரிமானேற்றை நிழல்சுளிதறுகட்சீற்ற
வரைபுரைகளிற்றியானை வளைந்தன வளைந்துகொண்டார்.

(இ-ள்) அருமருந்தனையாள் - அரியதேவாமிர்தத்தையொத்ததமயந்தியானவள் — சூட்டும்-தரித்த — அலங்கலந்தோளிணை - மாலைவிளங்கும்புயத்தையுடையநளனை — பொருதிரை - மோதுகின்றவலைகளையுடைய — புணரிசூழ்ந்த - கடலாற்சூழப்பட்ட — புவியினில் - பூவுலகத்து — அரசெல்லாம் - அரசர்களெல்லாம் — இணை - வரிசைபெற்ற — உளை-புறமயிரையுடைய — அரிமானேற்றை - சிங்கவேற்றை — நிழல்சுளி-நிழலைக்கோபிக்கின்ற — தறுகண் - அஞ்சாமையையும் — சீற்ற - கோபத்தையுமுடைய — வரைபுரை - மலையையொத்த — களிற்றியானை - களிப்

யைப்புடையபல்லயானைகள்—வளைந்தென - வளைந்ததுபோல்—சூழ்ந்து கொண்டார் - சூழ்ந்துகொண்டார்கள்—எ-று. அகத்தியம் - பெரும் பெண்பூக்கொளப்புரிவர் போர்ப்புரவலர் (கருத்து) அரசர்கள் நளனைச் சூழ்ந்துகொண்டார்கள்—எ-ம். (௩௨)

கொறில்பரித்தடந்தேருந்தி நோன்சிலைகுழையவாங்கி
பொறியழற்பகழிதூவிப் பொங்குளைப்புரவியான்றேர்
செறுகதக்களிறல்யானை சிலைவுவாள்வயவரிட்டம்
குறைபடதாழிலாட்டிக் கூற்றெனவாசரித்தார்.

(இ-ள்) கொறில்-விரைவினையுடைய—பரி - குதிரைகட்டிய—தடம்-விசாலம்பொருந்திய—தேருந்தி - தேரைச்செலுத்தி—நோன்சிலை - பெரியவில்லை—குழையவாங்கி-வளையவளைத்து—பொறியழல் - [illegible] அப்பொறியையுடைய—பகழிதூவி - பாணங்களைவீசி—பொங்குளை - மிகுந்தபுறமயிரினையுடைய—புரவி - குதிரைகளும்—யான்றேர் - குதிரைகட்டியதேர்களும்—செறுகதக்களிறல்யானை - மிகுந்தகோபத்தையுங்களிப்பையுமுடையயானைகளும்—சிலைவுவாள்வயவரிட்டம் - கோபிக்கின்றவாட்படையையுமுடையபடைவீரர்கூட்டமும்—குறைபட - குறையும்படி—தாழிலாட்டி-தாழிலாட்டிச்செய்து—கூற்றென - இயமனைப்போல்—அரசர் - மன்னர்கள்—ஆர்த்தார் - ஆர்ப்பரித்தார்கள்—எ-று. (கருத்து) அரசர்கள் சந்தித்தார்கள்-எ-ம். [illegible] தாழிலாட்டல்-தன் மார்பிற்றைத்தவாயுதங்களைப்பிடுங்கிப்பகைவர்மேலெறிதல். (௩௩)

தெண்டிரைப்பரவையேழுஞ் சேறுபட்டொழியத்தெண்ணீர்
மொண்டுகொண்டெழுந்தோர்குன்றின் முகிற்குழாஞ்சொரிவதே
புண்டலைவடிவேன்மன்னர் பொறியழற்பகழிமாரி [ய்ப்பப்
மண்டமர்கடந்ததிண்டோண் மன்னன்மேற்பொழிந்திட்டாரே.

(இ-ள்) தெண்டிரை - தெளிவுபொருந்தியவலைகளையுடைய—பரவையேழும்-கடல்களேழும்—சேறுபட்டொழிய - சேறுபட்டுக்கெட—தெண்ணீர்மொண்டு - தெண்ணீரைமொண்டுகொண்டு—ஓர்குன்றில்-ஒருமலையில்—முகிற்குழாம் - மேகக்கூட்டங்கள்—சொரிவதேய்ப்ப - பொழிவதையொப்ப—புண்டலை - ஊனைத்தலையிலுடைய—வடிவேன்மன்னர்-கூரியவேற்படையையுடையவரசர்கள்—பொறியழல் -நெருப்புப்பொறிபறக்கின்ற—பகழிமாரி -பாணமழையை—மண்டு - நெருங்கிய—அமர்கடந்த -யுத்தத்திற்செயித்த—திண்டோள் - வலிமைபொருந்தியபுயத்தையுடைய—மன்னன்மேல் - நளமகாராசன்மேல்—பொழிந்திட்டார்-சொரிந்தார்—எ-று. (கருத்து) அரசர்கள்நளன்மேற்பாணமெய்தார்கள் என்பதாம். (௩௪)

கொள்ளைகொண்டோரியுண்ணக் குழாங்கொடிகவந்தமாட
வெள்ளழற்றறுகட்கூற்ற முயிருண்டுதெவிட்டிநிற்ப
வெள்ளவெங்குருதிபோர்ப்ப வியன்பனைவிட்டதாக்கும்
வள்ளறன்புருவத்தோடும் வரிசிலைகுனிந்ததன்றே.



(இ-ள்) கொள்ளைகொண்டு -கொள்ளையாகவாரிக்கொண்டு—ஓரியுண்ண-நரிகளுண்ண—குழாங்கொடி- கூட்டங்கொண்டு—கவந்தமாட- உடற்குறைகள்கூத்தாட—வெள்ளழல் - ஒளியையுடையநெருப்புப்பொறிபறக்கின்ற—தறுகண் - அஞ்சாமையையுடைய—கூற்றம் - இயமனானவன்—உயிருண்டு- உயிரையுண்டு—தெவிட்டிநிற்ப - உமிழ்ந்துநிற்க—வெள்ளவெங்குருதி - வெப்பம்பொருந்தியஉதிரவெள்ளமானது—போர்ப்ப-மூடிக்கொள்ள—வியன்-பெரிய—பனை - வயலையுடைய—விட்டதாக்கும் [illegible]—வள்ளறன் - நளனுடைய—புருவத்தோடும்-புருவத்துடன்—வரிசிலை- அவனதுகொடியவில்லானது—குனிந்தது-வளைந்தது—எ-று. அன்று-ஏ-இவ்விரண்டும் அசைச்சொற்கள் (கருத்து) நளன்வில்லைவளைத்தானென்பதாம். (௩௫)

கூன்பிறைக்கோட்டுவல்விற் குழைத்தலுங்குழைத்துத்தெவ்வ
ரூன்சுவைத்துண்ணும்வாளிவிடுத்ததுமொன்னலார்தங்
கான்படுதெரியன்மார்பம் போழ்ந்ததுந்தெரியக்காணார்
வான்படுபிணக்குன்றேங்கி வயின்வயின்விளங்கக்கண்டார்.

(இ-ள்) கூன் - வளைவுபொருந்திய—பிறை - பிறையையொத்த—கோட்டுவல்வில்-கொம்பினாலாகியவலியவில்லை—குழைத்தலும் - வளைத்ததையும்—குழைத்து-வளைத்து—தெவ்வர் - பகைவருடைய—ஊன்சுவைத்து-மாமிசத்தைமென்று—உண்ணும் - உண்ணுகின்ற—வாளிவிடுத்ததும் - பாணங்கள்விடுத்ததையும்—ஒன்னலார்தம் - சத்துருக்களுடைய—கான்படு-மணமுண்டாகிய—தெரியல் -மலர்மாலையையணிந்த—மார்பம் - மார்பை—போழ்ந்ததும் - பிளந்ததையும்—தெரியக்காணார் -ஒருவருந்தெரியக்கண்டிலர்—(பார்த்துகண்டனரெனில்) வான்படு-ஆகாயமளாவிய—பிணக்குன்றேங்கி- பிணமலைகளைப்பார்த்து—வயின்வயின் - இடங்கடோறும்—விளங்க-விளங்குதலை—கண்டார் - பார்த்தார்கள்—எ-று. (கருத்து) நளன்செய்கையைக்காணார்கள் பிணக்குவியலைக்கண்டார்கள்என்பதாம். (௩௬)

பொருசமர்த்துடன்றவீரர் பொன்றிடநின்றவேந்தர்
வெருவலுற்றிரியுமாறும் வேந்தர்கோன்வலியுநோக்கி
யெரிமணிப்பொன்செய்யோடை யிளங்களிப்பகடுசூழக்
கனைபொருகடலந்தானைக் கலிங்கர்கோனமரிலேற்றான்.

(இ-ள்) பொருசமர்த்து-பொருகின்றபோரில்—உடன்றவீரர்-கோபித்தெதிர்த்தவீரர்கள்—பொன்றிட - இறந்துவிட—நின்றவேந்தர் - நின்றமற்றையரசர்கள்—வெருவலுற்று -பயந்து—இரியுமாறும் - ஓடுந்தன்மையும்—வேந்தர்கோன் - நளமகாராசனுடைய—வலியும் - வலிமையினையும்—நோக்கி-பார்த்து—எரிமணி - ஒளியையுடையமணிகள்பதித்த—பொன்செய்யோடை - பொன்னாற்செய்த முகபடாத்தையுடைய—இளங்களிப்பகடுசூழ - இளமைபொருந்தியகளிப்பையுடையயானைகள்சூழ்ந்துவர—கனைபொரு - கனையோடுமோதுகின்ற—கடலந்தானை- சேனைசமுத்திரத்தையுடைய—கலிங்கர்கோன் - கலிங்கதேயத்தரசன்.

—அமரில்-யுத்தத்தில்—ஏற்றான் - எதிர்த்தான்—எ-று. (கருத்து) கலிங்கதேயத்தரசன் நளனுடனெதிர்த்தான் என்பதாம். (௩௭)

கந்தடுகறுகட் சீற்றக்கடாம்பொழிகளிநல்யானை
மந்தரகிரியாற்றானை வாரிதியுழக்கிவானத்
திந்திரகுமரனென்ன விகல்புரிகிடசர்கோமா
னுந்துமான்றேரின்மேலு மொருகணைதெரிந்துவிட்டான்.

(இ-ள்) கந்தடு-கட்டுத்தறியைமுறிக்கின்ற—கறுகண்-அஞ்சாமையையுடைய—சீற்ற - கோபத்தையுடைய—கடாம்பொழிகின்ற - மதம்பொழிகின்ற—களிநல்யானை - களிப்பையுடைய நல்லயானையாகிய—மந்தரகிரியால் - மந்தரமலையினால்—தானைவாரிதி - சேனைசமுத்திரத்தை—உழக்கி - கலக்கி—வானத்து - விண்ணுலகத்து — இந்திரகுமரனென்ன-இந்திரகுமாரனைப்போல்—இகல்புரி - போர்செய்கின்ற—நிடதர்கோமான-நளமகாராசன்—உந்து - செலுத்துகின்ற—மான்றேரின்மேலும் - குதிரைகட்டியதேரின்மேலும்—ஒருகணை - ஒருபாணத்தை—தெரிந்து-பார்த்து—விட்டான் - விடுத்தான்—எ-று. (கருத்து) நளனதுதேர்மேல் கலிங்கராசன் கணைதொடுத்தான் என்பதாம். (௩௮)

பைம்மலைத்துகளன்றவல்குற் பாவையர்க்கனங்கனன்ன
தெம்மலைச்சினவேற்காளை சிலைவளைத்தொருகோலுந்தக்
கைம்மலைக்கோட்டில்வீழ்ந்த கலிங்கர்கோனமரர்மாதர்
வெம்முலைக்கோட்டில்வீழ்ந்து விண்ணிடைவிளங்கினானே.

(இ-ள்.) பைம்மலைத்து-பாம்பின்படத்துடன்பொருது—அகன்று-விரிந்த—அல்குல்-அல்குலையுடைய—பாவையர்க்கு - மாதர்க்கு—அனங்கனன்ன-மன்மதனையொத்த—தெவ் - சத்துருக்களை—மலை - பொருகின்ற—சினவேற்காளை - கோபம்பொருந்தியவேலையுடையநளனாவன்—சிலைவளைத்து - விற்லைவளைத்து—ஒருகோலுந்த - ஒருபாணஞ்செலுத்த—கைம்மலைக்கோட்டில் - யானைக்கொம்பின்மேல்—வீழ்ந்த-விழுந்த—கலிங்கர்கோன் - கலிங்கதேயத்தரசனானவன்—அமரர்மாதர்-அரம்பையருடைய—வெம் - விருப்பஞ்செய்கின்ற—முலைக்கோட்டில்வீழ்ந்து - முலையாகியயானைக்கொம்பின்மேல்விழுந்து—விண்ணிடை-தெய்வலோகத்தில்—விளங்கினான் - பிரகாசித்தான்-எ-று. (கருத்து) நளன்கணையால் கலிங்கராசனிறந்தான் என்பதாம். (௩௯)

களத்திடைக்கலிங்கர்கோமான் கவிழதலுங்கடைக்கண்சேப்ப
வுளத்திடைவெகுளிபொங்க வூழிவெங்காலிநேடி
வளைத்தனன்சேனையோடும் வார்சிலைவணங்கிவெம்போர்
விளைத்தனன்கூற்றுமஞ்ச வெந்திறன்மகதர்கோவே.

(இ-ள்) களத்திடை - யுத்தகளத்திலே—கலிங்கர்கோமான் - கலிங்கதேயத்தரசன்—கவிழ்தலும் - இறந்தவளவிலே—கடைக்கண்சேப்ப-கடைக்கண்கள்சிவக்க—உளத்திடை - மனதில்—வெகுளிபொங்க-கோபமிக—ஊழிவெங்காலின் - யுகமுடிவிலுண்டாகிய வெவ்வியகாற்



றுப்போல—ஓடி-ஓடி—வளைத்தனன் - வளைத்தனனாகி, சேனையோடும் சேனையுடனே—வார்-நீடிய—சிலைவணங்கி - வில்லைவளைத்து—கூற்றுமஞ்ச-இயமனுமஞ்சும்படி—வெந்திறல் - வெவ்வியதிறலையுடைய—மகதர்கோ-மகததேயத்தரசன்—வெம்போர் - வெவ்வியபோரை—விளைத்தனன்-செய்தனன்—எ-று. (கருத்து) மகததேயத்தரசன் நளனுடனெதிர்த்தான் என்பதாம். * அகத்தியம் தனிக்குற்றனியை குறில்வழிய மூன்-மெலிவரிலொற்றுமிக்குமிருவழி. (௪௰)

முரிதிரைப்பாவைவேலை முகட்டெழுந்தகல்வான்மேய
விரிகதிர்மதியந்தீண்டும் வெள்ளெயிற்றரவமென்னக்
குருதிகொப்புளிக்கும்வேலான் கொற்றவெண்குடையின்மீது
வார்சிலைகுழைத்துவெய்யவடிக்கணையொன்றுவிட்டான்.

(இ-ள்) முரி-வளைந்த—திரை - அலைபொருந்திய—பாவை - பரப்பையுடைய—வேலைமுகட்டெழுந்து அகல்வான்மிசையினுதித்து — அகல்வான்மேய்-அகன்றவானத்தின்கணுள்ள—விரிகதிர்மதியம் - விரிகின்றகிரணங்களையுடையசந்திரனை—தீண்டும் - தொடுகின்ற—வெள்ளெயிற்றரவமென்ன - வெள்ளியபல்லையுடைய சர்ப்பம்போல — குருதிகொப்புளிக்கும்-உதிரத்தையுமிழ்கின்ற—வேலான் - வேற்படைதாங்கிய நளனானவன்—கொற்றம்-சயத்தைதருகின்ற — வெண்குடையின்மீது-தவளசத்திரத்தின்மேல்—வார்சிலைகுழைத்து - நெடிய வில்லைவளைத்து—வெய்ய-கொடிய—வடிக்கணையொன்று - கூரியகணையொன்றை—விட்டான் - விடுத்தனன்—எ-று. (கருத்து) நளன் மகததேயத்தரசன் மேல் கணைதொடுத்தான் என்பதாம். (௪௧)

சுரும்பியிர் தும்பைவேய்ந்த சுடர்முடிமகதர்கோமான்
விரும்பலர்செருக்கும்வேலான் விற்பழுத்துமிழும்வெய்ய
சரம்படவற்றுவீழ்ந்த தன்றுடைக்குறைநின்றாட
வரம்பையரோடுநோக்கி யணிமணிமுறுவல்பூத்தான்.

(இ-ள்.) சுரும்-வண்டுகள்—இமிர்-ஒலிக்கின்ற—தும்பைவேய்ந்த தும்பைமாலைதரித்துவந்த—சுடர்முடி - பிரகாசிக்கின்றகிரீடத்தையுடைய—மகதர்கோமான் - மகததேயத்தரசனானவன் — விரும்பலர்-சத்துருக்களை—செருக்கும்-கொல்லுகின்ற, வேலான் - வேற்படையையுடையநளனது—விற்பழுத்து-வில்லானதுபழுத்து — உமிழும் உமிழுகின்ற, வெய்யசரம்பட-வெவ்வியபாணங்கள்பட—(அவைகளால்) அற்றுவீழ்ந்த-துணிந்துவிழுந்த—தன்-தன்னுடைய—உடற்குறை-கவந்தமானது—நின்று-நின்று—ஆட - கூத்தாட—அரம்பையரோடு-தெய்வமாதரோடு—நோக்கி-பார்த்து—அணி - அழகிய—மணி - முத்தையொத்தநகைதோன்ற—முறுவல்பூத்தான் - நகைத்தான்—எ-று. (கருத்து) நளன்கணைபட்டுமகததேயத்தரசனிறந்தானென்பதாம். ( )

அன்புபருந்தறுகட்சீற்றத் தானரிசேர்றுபோல்வான்
சமர்த்தொலைவிலைத் தரியலர்சென்னிவீழ்த்

துமித்திடுக்குருதியொள்வாள்சுடரொழுகவிதிர்ப்பநோக்கி
யிமைத்தலும்வளைவர்கோனை வெருவலஞ்சேலுகென்றான்

(இ-ள்) அமைப்பரும் - அமைத்தற்கரிய—தறுகணை - அஞ்சாமையையும்—சீற்றத்து-கோபத்தையும் —ஆள் - ஆள்கின்ற — அரியேறு போல்வான்-சிங்கவேற்றையொத்தவனாகியவன்—சமர்த்தலை - யுத்தகளத்தில்—இகலினேற்ற-பகையினுலெதிர்த்த—தரியலர் - சத்துருக்களுடைய—சென்னிவீழ-தலைகள்விழும்படி—துமித்திடும்- தறித்திடுகின்ற—குருதி-உதிரத்தையுடைய — ஒள்வாள் - ஒள்ளிய வாட்படையை —சுடரொழு-ஒளிதுளும்ப—விதிர்ப்ப - அசைக்க—நோக்கி- அதுகண்டு இமைத்தலும் ; இமைக்கோட்டுமளவில்—வளைவர்கோனை - சோழனை —வெருவல்-அஞ்சாதே—நீ-நீ—எகுகென்றான்-போவென்றான்-எ-று (கருத்து) நளன்வாளைசலைக்கண்டு சோழன்பயந்து இமைக்கோட்டலளவுதக்கண்டநளன் சோழனை அஞ்சாதே புறவென்றான் என்பதாம்.

கொய்யுளைப்புரவிதூண்டிக்கொ[illegible]
வெய்யவெம்பகழிமாரி விண்ணகம்புதைப்ப[illegible]வி
யையன்மெய்க்கவசமீதுமைக்கணைசிதறியார்த்தான்
மையறுசிறப்பின்மிக்க வஞ்சியம்பதிக்குவேந்தே

(இ-ள்) மையறு-குற்றமற்ற—சிறப்பின்மிக்க - சிறப்பினலுயர்ந்த —வஞ்சியம்பதிக்கு-வஞ்சியென்னுநகரத்திற்கு — வேந்து - அரசனாகிய சேரமான் — கொய்யுளை - கொய்துகட்டிய புறமயிரினையுடைய—புரவி-குதிரையை—தூண்டி- செலுத்தி—கொடுமரம்-வில்லை, குழைய வளைத்து - வளையவளைத்து—வெய்ய-கொடிய—வெம்பகழிமாரி - வெவ்விய பாணமலழகளை—விண்ணகம் - ஆகாயமுழுவதும்—புதைப்ப - மூடும்படி—தூவி- இறைத்து—ஐயன்-நளனுடைய—மெய்க்கவசமீது- சீராவின்மேலும்—ஐங்கணை சிதறி ஐந்துபாணம்விடுத்து— ஆர்த்தான் - கர்சித்தான்—எ-று (கருத்து) சேரமான்நளன்மெய்க்கவசத்தின்மேலைங்கணைவிடுத்தான்-எ-ம். (௬௬)

சில்லியந்தடந்தேருந்தித் திண்சிலைகுழையவாங்கிக்
கொல்லியவெழுந்தகூற்றிற் கொடியவெம்பகழிதூவி
மல்லடுதோளுமார்பும் வழிபெருங்குருதியோடும்
வில்லவன்வெருவியோட வெஞ்சமருடற்றினனே.

(இ-ள்) சில்லி - உருளையுடைய—தடம் - விசாலம்பொருந்திய—தேருந்தி-தேரைச்செலுத்தி—திண்- வலிமைபொருந்திய—சிலை - வில்லை—குழையவாங்கி-வளையவளைத்து — கொல்லியவெழுந்த - கொல்லவெழுந்த—கூற்றில் - இயமன்போல்—கொடிய-கொடியவாகிய— வெம்பகழி-வெவ்வியபாணங்களை—தூவி - விட்டு—மல்லடு - மற்போர்செய்கின்ற—தோளும்-புயங்களிலும்—மார்பும் - மார்பிலும்—வழி - வழிகின்ற—பெருங்குருதியோடும்-அதிகஉதிரத்தோடும்—வில்லவன் - சேரமான் —வெருவியோட-அஞ்சியோடும்படி—வெஞ்சமர் - வெவ்விய



போரை—உடற்றினன்-செய்தான் —எ-று. (கருத்து) சேரமான்பயந்தோடநளன்போர்செய்தான் என்பதாம். (௬௭)

திறங்கிளர்வைரப்பைம்பூ ணிடதர்கோன்றொடுத்தகோலிற்
கறங்கெனத்திரியும்வெய்ய கவனமான்றடந்தேர்வீழ
மறங்கிளர்பரிதிவேலு மானமுந்துறந்துநாணுற்
புறங்கொடுத்திரியல்போனுன் புட்காத்திவில்வேந்தன்

(இ-ள்) புட்காத்திவில்வேந்தன்-புட்காத்திவையாளுமரசனானவன்—திறங்கிளர்-ஒளிவிளங்குகின்ற—வைரப்பைம்பூண்-வச்சிர பாணத்தையுடைய—இடதர்கோன்-நளமகாராசன்—தொடுத்த- பிரயோகஞ்செய்த—கோலில்-பாணத்தால்—கறங்கெனத்திரியும் - காற்றாடிபோலுத்திரிகின்ற—வெய்ய-வெவ்விய— கவனமான் - கடிவாளம்பூண்டகுதிரைகட்டிய—தடம்-விசாலம்பொருந்திய—தேர்வீழ-இரதம்வீழ— மறங்கிளர் - மறமிகுந்த—பரிதிவேலும்-சூரியனையொத்தவேற்படையையும்—மானமும்-அபிமானத்தையும்—துறந்து-விட்டு—நாணுல் - நாணத்தால் —புறங்கொடுத்து- முதுகுகாட்டி—இரியல்போனுன்-ஓடிப்போனான்—எ-று(கருத்து) புட்காசன் நளனுடனெதிர்த்தோடினன்—எ-ம்

கலிவிருத்தம்.

பாகடுவெந்திறற்பருமயானைமேல்
வேகவெங்கவினமாகளன்றூழ்வரச்
சாகத்திவுக்கிறைசமரிற்பாடு
தோகையர்கண்ணெனப்பகழிதூவினன்

(இ-ள்.) பாகு-பாகனை—அடு-கொல்லுகின்ற — வெந்திறல் - வெவ்வியதிறலையுடைய—பருமயானைமேல் - ஒப்பனைசெய்தயானையின்மேல்—வேக - வேகத்தையுடைய—வெங்கவினமாவன்னம் - வெவ்விய கடிவாளம்பூண்டகுதிரைக்கூட்டங்கள்—சூழ்வர - தன்னைச்சூழ்ந்துவரும்படி—சாகத்திவுக்கிறை - சாகத்திவுக்கரசனாவன் — சமரிற்பொரு - யுத்தத்திலெரவாரத்துடன்—தோகையர்கண்ணென- மாதர்விழிகள்போல்—பகழி-பாணங்களை—தூவினன்-சிந்தினன்—எ-று. உத்தியம் - உவமேமதனையுவமானமாக்கல் — விரோதவணியில் வீறுமென்க(கருத்து)சாகத்திவாசன்பாணந்தொடுத்தான்-என்பதாம். (௬௮)

அணைக்கைபிட்டலகைக்கிளிபார்த்தெழ
வணங்கையிற்றரவெனவழலும்வாளிகள
வணங்குவிற்கால்வளைத்தெய்துமாற்றிற
னிணைக்கமழ்குருதிவேலிடதர்வேந்தனே.

(இ-ள்) இணைக்கைபிட்டு -கைகளைக்கொட்டி—அலகைகள் - பேய்கள்—துள்ளி - குதித்து—ஆர்த்து-ஒலித்து—எழ - எழும்ப, அணங்கு-வருத்தத்தைச்செய்கின்ற—எயிறு-பல்லையுடைய— அரவென- சர்ப்பம்போல், அழலும்-சுடுகின்ற— வாளிகள்-பாணங்களை, வணங்குகின்ற-வில்-வில்லை— கால்வளைத்து-கால்நுனிவளைத்து, எய்து-

பிரயோகஞ்செய்து—மாற்றினான் - நீக்கினான், நிணங்கமழ் - கொழு ப்புநாறுகின்ற,குருதிவேல்- உதிரந்தோய்ந்தவேற்படையுடைய, கிடதர் வேந்தன்-நளமகாராசன்—என்-று, ஏகாரம்-ஈற்றசைக்கண்வந்தது (கருத் து)சாகத்திவாசன்பாணங்களை நளன்விலக்கினானென்பதாம். (௬௮)

பாற்றினக்கொடர்வதுபகைவருன்சுவைத்
தாற்றிருந்திடையறுதுதிரங்கால்வது
கூற்றொடுந்தொழுமைகொள்வதாயதோர்
மாற்றருங்கொடியவேன்மன்னன்வாங்கினான்

(இ-ள்) பாற்றினங்கொடர்வது - பருந்துக் கூட்டங்கள் தொடர்வ தும்—பகைவர்—சத்துருக்களுடைய—ஊன் - மாமிசத்தை — சுவை த்து-மென்று,ஊற்றிருந்து-ஊற்றுகளிருந்து,இடையறுது- ஒழியாமல், உதிரங்கால்வது-உதிரங்கக்குவதும்,கூற்றொடும்- இயமனுடன், தொழு மைகொள்வதாயது-சினேகங்கொள்வதாகிய,ஓர்-ஒரு,மாற்றரும் - தடுப் பதற்கரிய—கொடியவேல்-கொடியவேற்படையை—மன்னன் - நளரா சன்—வாங்கினான்-கைக்கொண்டான்—எ-று. (கருத்து) நளன்வே லாயுதத்தைக்கைக்கொண்டான்-எ-ம். (௬௯)

அயிலெடுத்தெறிதலுமடக்குமொன்னலார்
வயிறெரிதவழ்ந்ததுவைரவாட்படை
செயிறவேந்திடுசாகத்திவிறை
யுயிர்துறந்தந்தகனுலகம்புக்கதே;

(இ-ள்.) அயிலெடுத்தெறிதலும் - வேற்படையையெடுத்து வீசி யவளவில்—அடக்கும் பொருகின்ற—ஒன்னலார்-பகைவருடைய — வயிறு-வயிறுனது— எரி-நெருப்பிலைல்—தவழ்ந்தது - தவழ்ந்திடப்ப ட்டது—வைரவாட்படை-வச்சிரவாளை—செயிறு-குற்றமற — ஏந்திய -தாங்கப்பெற்ற—சாகத்திவிறை-சாகத்திவக்கரசனுடைய—உயிர் - உயி ரானது—துறந்து-அவனைவிட்டு—அந்தகனுலகம் - இயம லோகத்தில் —புக்கது-புகுந்தது —எ-று.ஃஅகத்தியம்-புறத்திணைப்படலம் - போரி னீல்நீராப் புறங்கொடுத்திட்டவன் - சாருமயமபுரிதவறுதலிலவே- இ வ்விதியால்போரில் வெந்கொடுத்தவனவ் சுவர்க்கம்புகாதுயமபுரியிற் புகுந்தது(கருத்து)சாகத்திவாசனுயிர்யமலோகஞ்சென்றது-எ-ம். (௭0)

தாம்புடைக்காமலைபெருக்கிற்றோன்றுபு
காம்பிலிக்காசன்வல்லாங்கிக்காயகனை
தேம்பொதிசெழுமலர்த்தெரியன்மார்பினன்
வாம்பரித்தேர்மிசைமழையிற்றாவினான்

(இ-ள்) தாம்புடை - துவாந்தையுடைய—காமலை-கைமையுடைய மலைபோன்றயானையின்து—எருத்தில் -பிடரியின்மேல் —தோன்றுபு- தோன்றி—காம்பிலிக்காசன்-காம்பிலிநாட்டுக்காசனானவன் — வில்வா ங்கி-வில்லைவளைத்து—கால்-கொல்லாகின்ற—கணை-பாணங்களை — தே ம்-வாசனை—பொதி- நெருங்கிய—செழுமலர்-செழுமையுள்ள மலராற்



தொடுத்த—தெரியல்-மாலையையணிந்த—மார்பினன் - நளனது—வா ம் - தாவுகின்ற—பரி - குதிரைகட்டிய—தேர்மிசை - தேரின்மேல்—ம ழையில்-மேகம்போல்—தூவினான்-பிரயோகித்தான்—எ-று (கருத்து) காம்பிலிதேயத்தரசன் நளனது தேர்மேற்கணைதொடுத்தான்-எ-ம். ()

சிலையுயிர்த்தவுயிர்ப்பலிகவருந்திண்கணை
கொலைவடிவேலினன் றூபடக்குஞ்சர
மலையெனக்கவிழ்தலுமடங்கலேறெனப்
புலவுவாளொடுமவன்புவியிற்பாய்ந்தனன்.

(இ-ள்) சிலையுயிர்த்த- வில்லால்விடப்பட்டு—உயிர்ப்பலிகவரும்- உயிராகியவுணவையுண்கின்ற — திண்கணை - வலிமைபெற்றபாணங்க ளை—கொலைவடிவேலினன் - நளனானவன்—தூபட- செலுத்த—குஞ் சரம்-(ஏறிவந்தவன்) யானையானது—மலையெனக்கவிழ்தலும்-மலைபோ ற்கவிழ்ந்துவிழுந்தவளவில்—மடங்கலேறென - சிங்கவேற்றைப்போல் —புலவு- புலாலுற்றத்தையுடைய—வாளொடும் - வாட்படையுடன்— அவன்- அவ்வாசனானவன்—புவியில் - பூமியிலே—பாய்ந்தனன்-குதி த்தான்—எ-று. (கருத்து) நளன்பாணம்விடுக்க யானைவிழவும் காம்பி லிதேயத்தாசன்நிலத்திற்குதித்தான்-எ-ம். (௭௨)

வார்மயிர்க்கேடகம்பற்றிவாள்விதிர்த்
தார்சினக்களிற்றணியுழக்கியொய்யெனப்
போர்முகத்தூறுவெம்புலியின்போத்தெனச்
சாரிகைதிரிந்தனனறழுகணனே.

(இ-ள்.) வார்-கெடிய—மயிர்க்கேடகம்-மயிரையுடையதோற்கேட கத்தை—பற்றி- பிடித்து—வாள்விதிர்த்து - வாளையசைத்து—ஆர் - ந டக்கின்ற—சினம் - கோபத்தையுடைய—களிற்றணி - யானைவகுப்பை —உழக்கி- கலக்கி—ஒய்யென - விரைவில்—போர்முகத்து - யுத்தமுகத் தில்—ஊறு - கர்ச்சித்து—வெம்புலியின்போத்தென-வெய்யபுலிப்போ த்துப்போல்—சாரிகைதிரிந்தனன் - வட்டமாகத்திரிந்தான்—தழுகணன் - அஞ்சத்தக்கவைகட்கு அஞ்சாதகாம்பிலிதேயத்தரசன்—எ-று. (கருத்து) காம்பிலிதேயத்தரசன் கேடகம்பற்றி வாளையசைத்து வட் டமிட்டுலாவினான் என்பதாம். (௭௩)

பாரினின்றவனமர்புரியப்பாய்பரி
தேரினின்றடுகணைச்செருவிளைத்திட
றுருடைவயவர்போர்த்தருமமன்றெனக்
கூர்துதிவாளுரிஇக்குப்புற்றனனோ.

(இ-ள்) பாரினின்று-பூமியிலிருந்து—அவனமர்புரிய - அவ்வரசன் போர்புரிய—பாய் - தாவுகின்ற—பரித்தேரினின்று- குதிரைகட்டியதே ரிலிருந்து—அடுகணை - கொல்லாநின்ற பாணங்களைக்கொண்டு—செரு

வினைத்திடல் - யுத்தஞ்செய்தல்—தாருடை - வெற்றிமாலையையணிந்த—வயவர் - படைவீரருடைய — போர்த்தருமமன்றெனை - யுத்தத்திற்குடைய தருமமன்றென்று—கூர் - கூரிய—துதி - - நுனியையுடைய—வாளாரி - வாளையுருவிக்கொண்டு—குப்புற்றான் - குதித்தான்—எ-று. அரோவென்பது-அசை * அகத்தியம்-புறத்திணைப்படலம் - தார்முடிமன்னவர்சமழ்ப்பவை-கொடு-பேர்முடிபெற்றற்பொருந்துரும்மதனே - இவ்விதியால் என் அறநெறிதவறாதெதிரிபோலாறுன் (கருத்து) என்வாளையெடுத்துத் தேர்விட்டிறங்கினான் என்பதாம். (௩௬)

மன்பெருங்கேடகந்திரித்துவானிடை
மின்பிறழ்ந்தென்னவாள் விதிர்த்துநோக்கினர்
என்புகெக்குளுடைந்திரியவேறவர்
வெம்பிறரறிவரத்திறல்கொள்வீரரோ.

(இ-ள்.) மன்-நிலைபெற்ற—பெருங்கேடகம் - பெரியபரிசையை—திரித்து-சுழற்றி—வானிடை - ஆகாயத்தின்கண்—மின்பிறழ்ந்தென்ன-மின்னலசைந்தாற்போல்—வாள்விதிர்த்து - வாட்படையையசைத்து—நோக்கினர்-பார்த்தவர்களுடைய—என்பு - எலும்புகள்—கெக்கு-கெக்குவிட்டு—உள் - உள்ளே—உடைந்திரிய - உடைந்துபோகும்படி—வெம்-தம்முந்துகை—பிறர்-பிறர்களால்—அறிவரா - அறியப்படாத—திறல்கொள்-வலிமையைக்கொண்ட—வீரர் - அரசர்கள்—ஏற்றனர்-எதிர்த்தனர்—எ-று. (கருத்து) அரசர்வெதிர்த்தார்கள் என்பதாம். ()

தெறுஞ்சினந்தலைக்கொளீஇச்செங்கண்டீயுகப்
பிறங்குபொற்கேடகம் பிறழவெற்றிய
மறந்திளர்வைவாள் வாளிறாகியுங்
கறங்கெனத்திரிந்தனர் காளைவீரரோ.

(இ-ள்) தெறும் - அழிக்கின்ற—சினம்கோபமானது—தலைக்கொளீஇ-அதிகரித்து—செங்கண்-சிறந்தகண்களினின்றும்—தீயுக-நெருப்புதிர—பிறங்கு-உயர்ந்த—பொற்கேடகம் - அழகியகேடகத்தை—பிறழ-சுழலும்படி—எற்றியும் - எறிந்தும்—மறந்திளர் - கொலைத்தொழில்மிகுந்த—வைரவாள் - வச்சிரவாளை—வாளிறாகியும் - வாளினாலெறிந்தும்—கறங்கென-காற்றாடிபோல—காளைவீரர் - அரசர்கள்—திரிந்தனர்-திரிந்தார்கள்—எ-று. (கருத்து) அரசர்கள்வாளினாற்போர்செய்தார்கள்-எ-ம். (௩௭)

கோட்புலிப்போத்தெனக்கடர்கோமகன்
நாட்பினுட் * காம்பிலிக்கிறைவனுமற
வாட்படையெறிந்துயிர் வவ்வினானவன்
சேட்புலத்தரம்பையர் தெரியல்சூடினான்

(இ-ள்) கோள்-கொலைசெய்கின்ற—புலிப்போத்தென - ஆண்புலிபோல—கடர்கோமகன்-சுளுனைவன்—நாட்பினுள் - யுத்தத்தின்கண்—காம்பிலிக்கிறைவன்-காம்பிலிநாட்டரசனுடைய—மற நமை டாயக-
பமைநும்படி—வாட்படை-வாளாயுதத்தால்—எறிந்து-வீசி—உயிர் - அவ்வுயிரை—வவ்வினான்-கொண்டான்—அவன் - அவ்வரசன்—சேட்புலத்து - விண்ணுலகத்தின்கண்—அரம்பையர் - தெய்வமகளிரால்—தெரியல்-மாலை—சூடினான்-சூட்டப்பட்டான்—எ-று. காமம்-காமமென்கடைகுறைந்தது * அகத்தியம்-புறத்திணைப்படலம் - வெற்றிபெற்றுத்தோன் வீரசுவர்க்கம்புகும் - இவ்விதியால் சுவர்க்கத்திற்குப் போனான். (கருத்து) சுளன்காம்பிலிதேயத்து வேந்தனைக்கொன்றான்-எ-ம். அப்போரின்மாய்ந்தோர்சுவர்க்கம்புகுவரென்பது புராணசித்தாந்தம்()

அறைகழல்வேந்தர்மே லலங்கல்வேலினு
னெறுழ்வலிக்களிற்றிடைத்தாவுமெண்ணிலா
நெறிபில் பரிதேர்மிசைப் பாயுமோன்கெழு
சிறையொடுந்திரிதோர் சீயமென்னவே.

(இ-ள்) அலங்கல்-வெற்றிமாலைதரித்த—வேலினான் - வேற்படையையுடையசுளனானவன்—தோள்கெழு-பெருமைபொருந்திய—சிறையொடுந்திரிவது - சிறகினுடன்றிரிவதாகிய—ஓர் - ஒரு—சீயமென்ன-சிங்கம்போல்—அறை-ஒலிக்கின்ற—கழல் - வீரக்கழலையணிந்த—வேந்தர்மேல் - அரசர்கள்மேலும்—எறுழ்வலி - மிகுந்தவலிமையையுடைய—களிற்றிடை - யானையின்மேலும்—தாவும் - தாவுவான்—எண்ணிலா-அளவில்லாத—நெறிபில்-ஒழுங்கையுடைய—பரி - குதிரைமேலும்—தேர்மிசை-தேரின்மேலும்—பாயும்-பாய்வான்—எ-று. (கருத்து) சுளன் அரசர்கள்மேலும் யானைகள்மேலும் குதிரைகள்மேலும் தேர்களின்மேலும் பாய்வான்—எ-ம். (௩௮)

இன்னணங்கொடுஞ்சமர்முருக்கிப்ேபர்திகழ்
மன்னவர்புறக்கொடைகண்டுமாலைதாழ்
கொன்னவில்குருதிவேற்றுவைத்தோளினான்
சென்னிவாணடவுபொற்றேரினேறினான்

(இ-ள்) இன்னணம்-இந்தப்பிரகாரம்—கொடுஞ்சமர் -கொடியயுத்தத்தில்—முருக்கி-கொன்று—ஏற்று எதிர்த்து—இகல் - பகைக்கின்ற—மன்னவர் - அரசர்கள்—புறக்கொடைகண்டு - முதுகுகொடுத்தோடச்செய்து—மாலைதாழ் - மாலைதாழ்கின்ற—கொன்னவில் - கொல்லுதலைச்சொல்லுகின்ற—குருதி - உதிரந்தோய்ந்த — வேல் - வேற்படையையுடைய, துவைத்தோளினான்-திரட்சிபொருந்தியதோள்களையுடையசுளனானவன்—சென்னி-தலையினால்—வான் - ஆகாயத்தை—நடவு-தடவுகின்ற—பொற்றேரின்- அழகியதேரின்மேல்—ஏறினான் - ஏறினான்—எ-று. (கருத்து) சுளன்வெற்றிகொண்டுதேர்மேலேறினான்-எ-ம். (

கொச்சகக்கலிப்பா.

புலந்தழுமடகல்லார் புலவிதீர்தாச்சூட்டு,
மலந்தகமலர்க்குஞ்சியழிகுருதிப்புனலலையப்

மலைத்தடந்திணிதோளார்வடிக்கணைமெய்யிற்போர்ப்பக்
கொலைத்தலைமுண்மாப்போற் கொடுஞ்சமரிற்கிடந்தனரோ.

(இ-ள்.) மடநல்லார்-மாதர்கள்—புலத்தலும் - ஊடியவளவில்—புலவி-அவ்வூடல்—தீர்தா - நீங்கும்படி—சூட்டும் - அணிவிக்கும்—அலத்தகம் - அவர்பாதங்களிலூட்டப்பெற்ற செம்பஞ்சுபடிந்த—மலர்-பூவையணிந்த—குஞ்சி - குடுமையை—அழி - அழிகின்ற—குருதிப்புனல்-உதிரநீரானது—அலைப்ப-அலைக்க—மலை - மலைபோல்—தடம்-பருத்த—திணி-வலிமைபொருந்திய—தோளார் - தோள்களையுடையவரசர்கள்—வடிக்கணை - கூரியபாணங்கள்—மெய்யிற்போர்ப்ப - தேகத்திலேமூட—கொலைத்தலை - கொல்லுகின்றதலையையுடைய—முண்மாப்போல் - முள்ளம்பன்றிபோல—கொடுஞ்சமரின் - கொடியயுத்தகளத்தில்—கிடந்தனர்-கிடந்தனர்—எ-று. (கருத்து) அரசர்கள் மெய்யிற்பட்டகணையோடு முள்ளம்பன்றிபோற் போர்க்களத்திற் கிடந்தார்கள் என்பதாம். (௬௰)

இகன்மிகுதிறல்வேந்த ரேதியாற்களப்படுத்த
புகர்முகக்கடாயானை பொழிகுருதிச்செழுஞ்சேற்றிற்
றிகிரியகொடிஞ்சிநெடுந் தேருழக்கத் துகளெழுந்தவ்
வகலிருவிசும்புபோர்த்தந்திவான்போன்றவே.

(இ-ள்) இகன்மிகு-பகைமைமிகுந்த—திறல் -வலிமைபொருந்திய—வேந்தர்-அரசர்கள்—ஏதியால் - வாட்படையால்—களப்படுத்த - யுத்தகளத்திற்கொன்ற—புகர்முகக்கடாயானை - புள்ளிபெற்றமுகத்தையுமதத்தையுமுடையயானைகள்—பொழி - ஊற்றிய—குருதிச்செழுஞ்சேற்றில் - செழுமைபொருந்தியவுதிரச்சேற்றில்—திகிரிய - உருளைகளையுடையனவும்—கொடிஞ்சி-மேன்மொட்டையுடையனவுமாகிய — நெடுந்தேர்-நெடியதேர்கள்—உழக்க-கலக்க—துகள்-தூளிகள்—எழுந்து-எழும்பி—அவ்வகலிருவிசும்பு - அந்தஅகலமுள்ளபெரியஆகாயத்தை—போர்த்து-மூடிக்கொண்டு—அந்திவான் - செவ்வானத்தை—போன்றது-ஒத்தது—எ-று. (கருத்து) போர்க்களமுதிரத்தாற் செவ்வானத்தையொத்திருந்தது-எ-ம். (௬௧)

ஒளிகிளர்மணியோடை சிதைந்தொழியவுடன்றபோர்க்
களிசினமால்யானைக் கதிர்மருப்புமிழ்ந்ததீ
முளிதடஞ்சினைமேயு முருங்கெரியெனப்பற்றி
விளிதருவயவருடல் வெந்தொழியப்பரந்ததே.

(இ-ள்) ஒளிகிளர்-பிரகாசமிகுந்த—மணியோடை - அழகியமுகபடாமானது—சிதைந்து-கெட்டு—ஒழிய-நீங்க—உடன்ற-வெகுண்ட—போர்-யுத்தத்தில்—களி-செருக்கையும்—சினம் - கோபத்தையுமுடைய—மால்-பெரிய—யானை-யானைகளுடைய—கதிர் - பிரகாசம்பொருந்திய—மருப்பு-தந்தங்கள்—உமிழ்ந்த-சொரிந்த—தீ - நெருப்பானது—முளி-காய்ந்த—தடம்-பருத்த—சினை-கிளைகளை—மேயும் - தகிக்கின்ற—முருங்கெரியென-அவியுந்தீயைப்போல்—பற்றி-பற்றிக்கொண்டு—



விளிதரு-இறந்த—வயவருடல் - படைவீரருடையதேகங்கள்—வெந்தொழிய-வெந்துபோகும்படி—பரந்தது - பரவியது—எ-று. ஆல் - அசை (கருத்து) யுத்தகளத்தில்யானைக்கொம்பிற்பிறந்த தீயானது அரசர்களுடல் வெந்தெரியும்படிபரவியதுஎன்பதாம். (௬௨)

பரிதிவடிவாள்பிடித்துப் பல்லினிதழ்துக்கித்
திருகுசினந்தலைக்கொளீஇச் செங்கண்கனல்பிழக்
குருதிபாயடுகளத்திற் குற்றுயிரிற்கிடந்தார்கண்
டருகணையக்கொடுங்கூற்றுமஞ்சிநின்றலறுமால்

(இ-ள்) பரிதி - சூரியன்போன்ற—வடி-கூரிய—வாள்-வாட்படையை—பிடித்து - கையிற்பற்றி—பல்லினால் - பற்களினால்—இதழ்துக்கி - உதட்டைக்கடித்து—திருகு - மாறுபட்ட—சினம்-கோபம், தலைக்கொளீஇ-அதிகரித்து—செங்கண்கள் - சிவந்தகண்களானவை—தீயுமிழ-நெருப்பைச்சொரிய—குருதிபாய் - உதிரம்பரவிய — அடுகளத்தில்-கொலைக்களத்தில்—குற்றுயிரில் - குற்றுயிருடன்—கிடந்தார்கண்டு-கிடந்தவர்களைக்கண்டு—அருகணைய - அவர்களருகேவருதற்கு —கொடுங்கூற்றும்-கொடியஇயமனும்—அஞ்சிநின்று- அச்சமுற்றுநின்று —அலறும்-அலறுவான்—எ-று, ஆல் - அசைநிலை-*அகத்தியம் - புறத்திணைப்படலம்-களத்திரண்மடியக்காணிலச்சமமே-இவ்விதியால்- இறந்தவனைக்கண்டலேயச்சம் இறவாது வீரக்குறியுற்ற வனைக்காணில்இயமனுக்கச்சந்தான்(கருத்து) வாளைக்கையிற்பிடித்துப் பல்லால் இதழைக் கடித்துக்கோபங்கொண்டு கண்ணிலே நெருப்புப் பொறிபறக்கக் குற்றுயிரோடு போர்க்களத்தி லிருக்கும் வீரரைக்கண்டு யமன் அருகிற் போகப்பயப்படுவான்-எ-ம். (௬௩)

சிலைபொருதிணிதடந்தோட்டேர்வேந்தர்செருமலைந்து
கொலைபுரியடுகளத்திற் குடர்பின்னிக்கிடந்தனைப்
புலவுநாறுடற்றசைவேட்டுண்ணவரும்புள்ளினங்கள்
வலைவளைந்ததெனவெண்ணிவானினிடைசுழலுமால்

(இ-ள்) சிலைபொரு - மலையையொத்த—திணி-வலிமை பொருந்திய—தடந்தோள - பருத்ததோள்களையுடைய— தேர்வேந்தர் - தேரையுடையவரசர்கள்—செருமலைந்து - போர்செய்து—கொலைபுரி - கொலைசெய்த—அடுகளத்தில்-யுத்தகளத்தில்—குடர் - குடர்கள் — பின்னிக்கிடந்ததனை-ஒன்றோடொன்றுபின்னிக்கிடந்ததை— புலவுநாறு - புலால்நாறுகின்ற—உடற்றசை-தேகத்தின்மாமிசத்தை—வேட்டு - விரும்பி—உண்ணவரும் - உண்பதற்குவந்த—புள்ளினங்கள் - பறவைக்கூட்டங்களானவை—வலைவளைந்ததென-வலையானதுவளைந்ததென்று — எண்ணி-நினைத்து—வானினிடை - ஆகாயத்தின்கண்—சுழலும் - வட்டமிடும்—எ-று-ஆல்- அசை- (கருத்து) ஊனுண்ணவந்த பறவைகள் குடல்கள் பின்னிக்கிடக்கின்றவற்றை வலையென் றெண்ணி ஆகாயத்தில் வட்டமிடுமென்பதாம். (௬௪)

சீற்றமிகுங்களியானைத் திறல்கெழுபோர்வயவேந்தர்
தாற்றாளக்குடைதுணிந்து களத்திடைக்கிடப்பனகா
ணேற்றதிருக்குடைபுனைந்த திருவெளிறத்தவிருக்கக்
கூற்றுமிடிப்பப்பேயக்கும் பொன்னடைப்போன்றிருந்தனவே.

(இ-ள்) சீற்றமிகும்-கோபமிகுந்த—களியானை-செருக்கினையுடைய யானைகள்போல—திறல்கெழு-வலிமைமிக்க—போர்-போர்செய்த—வயவேந்தர்-வெற்றியிற்சிறந்தவீரர்களுடைய—தாள்-பொருந்திய—தாளற்றுடை-முத்துக்குடைகளானவை—துணிந்து-துண்டுபட்டு—களத்திடை-யுத்தகளத்தில்—கிடப்பன-கிடப்பனகள்-இருப்பனவா... ஏற்றதிருக்குடை-எருமைப்போத்தை—உகைத்து-செலுத்தி—அடரும்-செருக்குடைய—இருணிறத்த-இருண்டநிறத்தையுடைய ... யமனுடைய உயிர்ப்பலியேற்கும்-உயிர்ப்பிச்சைசேற்கின்ற—பொன்னடைப்போன்று-பாத்திரத்தைப்போல—இருந்தன-இருந்தன—எ-று. ஏகாரம்-ஈற்றசை (கருத்து) அரசர்கள் குடைகளனைவரும் யமனுயிர்ப்பிச்சைபேறும் பாத்திரங்கள்போலிருந்தனவென்பதாம். (௯௫)

கலிவிருத்தம்.

இன்னகளத்தினிரிந்தவரல்லாற்
றுன்னியராகி யிறத்தலுமெய்க்கூற்
றன்னவனன்னமாறுறுகோக்காப்
பொன்னகரத்திறைபுந்தியிலோர்ந்தான்.

(இ-ள்) இன்னகளத்தில்-இப்படிப்பட்ட யுத்தகளத்தில்—இரிந்தவரல்லால்-ஓடிப்போனவரல்லாமல்—துன்னியோர்-எதிர்த்தவர்கள்—ஆவி இறத்தலும்-உயிர்விடுதலையும்—மெய்க்கூற்றன்னவன்-வெல்லிய யமனைப்போன்றவன்—மாறுபாட்டு போரை—ஆற்றலும்-செய்தலை—நோக்கா-பார்த்து—பொன்னகரத்திறை-இந்திரனானவன்—புந்தியில்-தன்புத்தியில்—ஓர்ந்தான்-சிந்தித்தான்—எ-று (கருத்து) முடிவை... எதிர்த்தவரிறத்தலையும் ... இந்திரன்கண்டு ஆலோசித்தானென்பதாம். (௯௬)

மன்றலணிமலர்த்தொடைமன்னனையெய்தி
வென்றிகொள்போரைவிலக்கிலமாயிற்
றன்றுதினொக்கடல்சூழுலகெல்லா
மின்றுமுடித்திடுமென்னநினைந்தே.

(இ-ள்) மன்றல்-வாசனைபொருந்திய—மலர்த்தொடை-மலர்மாலையையணிந்த—மன்னனை-அரசனை—எய்தி-அடைந்து—வென்றிகொள்-வெற்றியைக்கொண்ட போரை-யுத்தத்தை—விலக்கிலமாயின்-விலக்காமற்போவோமாகில்—தன்று-... கடல்சூழ்-கடலாற்சூழப்பட்ட உலகெல்லாம்-பூவுலகத்திலுள்ளாரெல்லாரையும்—இன்று-இன்று—முடித்திடுமென்ன-கொல்லுவா



னென்று—நினைந்து-(இந்திரன்முதலியபாலவரும்) கருதி—எ-று (கருத்து) இந்திரன்முதலியபாலவரும் அரசனிடத்திற்சென்று போரை விலக்காவிடுவோமாகில் உலகத்தை இன்றேகொன்றிடுவனென்று இவ்வாறு தம் இவ்விரண்டுகுளகம். (௯௭)

மழகளிறன்னவனம்மைநோக்கி
விழவொடுதம்முருமேகியவிண்ணோ
ரழுதுருகாலியாலுருவிட்டோர்
கிழவுருவெய்தியகண்மையையெய்தார்

(இ-ள்) மழகளிறன்னவன்-இளங்களிற்றைப்போன்றவனது—மாண்-பெருமைபொருந்திய—உரு-வடிவத்தை—நோக்கி-விட்டுநீக்கி—விழவொடு-விருப்போடு—தம்முருமேவிய-தங்கள் வடிவத்தைப்பொருந்திய—விண்ணோர்-தேவர்கள்—அழுது-அழுகின்ற—காலியர் ... அவ்வுருவிட்டு-அவ்வடிவத்தைவிட்டு—ஓர்கிழவுருவெய்தி-ஒருகிழவடிவத்தையடைந்த ... கண்மையர்-தன்மையாராகி—ஓர்ந்தார்—எ-று. (கருத்து) இந்திரன்முதலிய பாலவரும்நன்வடிவத்தைவிட்டு ஒவ்வொரு தலைவனிடமும்... தேவர்கள் தன்னருக்குமுன்னே வாலியர் விருத்தராகிப் போலகரானார்களென்பதாம். (௯௮)

முன்னுருமேவியமொய்கழல்விண்ணோர்
மன்னனையெய்தியுபாயமையிற்றும்
அன்னவலைத்துருசேர்வலியீர்த்
இன்னிலத்திடைசேர்பவர்யாரே

(இ-ள்) முன்னுருமேவிய - பழையவடிவினைப்பெற்ற—மொய்-நெருங்கிய—கழல்-வீரக்கழலையணிந்த—விண்ணோர்-தேவர்கள்—மன்னனையெய்தி-அரசனையடைந்து—உபாயமையிற்றும் ... அன்னவலை ... எதிர்த்துக்கொல்லுகின்ற—தோள்வலியாலும்-புயபலத்தினாலும்—இன்னிலத்திடை-பூமியில்—யார்-எவர் (ஒருவருமில்லை)—ஏகாரம் ஈற்றசைக்கண்வந்தது ... இவைகளைக்கொண்டு ... வெல்லத்தக்கவர் ... என்பதாம் ... பொருந்த (கருத்து) தேவர்கள் அரசனைக்கண்டு யுத்தம் ... மையிலும் உனக்குநிகரானவர் இவ்வுலகத்திலில்லையென்றார்களென்பதாம். (௯௯)

அன்றுகளத்தெதிர் துன்னலர்யாரும்
பொன்றமுருக்கியபோர்த்தொழிலின்க
ணென்றிகொள்வேலவனின்னினையாண்டு
மன்றன்முடித்தலையாழியவென்றே

(இ-ள்) வென்றிகொள்-வெற்றியைக்கொண்ட—வேலவ - வேற்படையையுடையவனே — துன்று - நெருங்கிய—களத்தெதிர் - யுத்தகளத்திலெதிர்த்த— அன்னவர்யாரும்-சத்துருக்களெல்லாம் — பொன்ற-இறக்கும்படி—முருக்கிய-கொன்ற—போர்த்தொழில் நீங்கி- போர்த்தொழிலைவிட்டு—மின்னனையாடன் - மின்னலையொத்த தமயந்தியினது—மன்றல் - விவாகத்தை—முடித்தனை -செய்துகொண்டவனகி — வாழியவென்றார்-(நீ) வாழக்கடவையென்றார்கள் —எ-று. (கருத்து) தேவர்கள்போனவிட்டு விவாகமுடித்துக்-கொண்டுதமயந்தியோடு நீ யிவர்முகவென்று நளனைவாழ்த்தினர்கள் என்பதாம். (எ0)

விண்ணவரின்னணம்வேண்டினர்கூறப்
புண்ணுறுவெய்யபுலால்கமழ்வைவே
லண்ணலமர்த்தொழிலாற்றிலனகிப்
பண்ணமைதேரினிழிந்துப்பணிந்தான்

(இ-ள்) விண்ணவர்-தேவர்கள் — இன்னணம் - இந்தப்பிரகாரம் —வேண்டினர்-வேண்டினவராகி—கூற- சொல்ல—புண்ணுறு - மாமிசத்தங்கிய—வெய்ய-வெவ்விய—புலால்-புலானாற்றம்—கமழ் - கமழுகின்ற,வைவேல்-கூரியவேற்படையையுடைய — அண்ணல்- நளனென்—அமர்த்தொழில் - யுத்தத்தை—ஆற்றிலனகி - செய்யாதவனகி—பண்ணமை - அலங்கரிப்பமைந்த—தேரினிழிந்து - தேரினின்றுமிறங்கி —பணிந்தான்-(அந்நால்வரையும்)வணங்கினன்—எ-று.(கருத்து)தேவர்களிப்படிவேண்டஎன்போர்செய்யாதவனாய்த்தேரைவிட்டிறங்கி அவர்களைப்பணிந்தான் என்பதாம். (எக)

கருணையினெய்தியகாளையைநோக்கி
யருமகமெவ்வழியாற்றினுமாங்க
ணுருவொடுவெந்தவிபுண்குவமென்று
மருவருநல்வரம்வாசவனீந்தான்

(இ-ள்)வாசவன்-இந்திரனனவன்—கருணையின் - அருளினல் —எய்திய-அடைந்த—காளையை-நளனை—நோக்கி-பார்த்து— அருமகம்-யரியயாக —எவ்வழி-எவ்விடத்தில்—ஆற்றினும்- நீ செய்தபோதிலும்—ஆங்கண்-அவ்விடத்தில்—உருவொடு - உருவுடனே வந்து அடைந்து—அவிர்-அவிர்ப்பாகத்தை—உண்குவமென்று- யாமுண்போமென்று—மருவரும்-அடைதற்கரிய—நல்வரம் - நல்லவரத்தை — ஈந்தான்-கொடுத்தனன்—எ-று.(கருத்து)இந்திரன்-நளனைப்பார்த்து நீயாகஞ்செய்தால்யாம்வந்து அவிர்ப்பாக முண்போமென்று வரங்கொடுத்தான் என்பதாம். (எஉ)

மிடல்கெழுமேழகமேற்கொளுமேலோ
னுடைதிரைவேலையினின்னமுதொப்ப
மடிதவில்வெங்கனலின்றியும்வாளா
வடிசிலடுந்தொழில்விஞ்சையளித்தான்



(இ-ள்) மிடல்கெழு-வலிமைபொருந்திய—மேழகமேற்கொளும்-ஆட்டுக்கடாவின்மேலேறும்—மேலோன் - அக்கினிதேவனனவன்—உடைதிரைவேலையின் - உடைகின்ற அலைகளையுடையகடலிற்பிறந்த—இன்னமுதொப்ப-இனியஅமிர்தத்தையொப்ப—மடிதவில்-கெடாத—வெங்கனலின்றியும்- வெவ்வியதீயில்லாமலும்—வாளா - சும்மா—அடிசில்-உணவை—அடுந்தொழில் - சமைக்குந்தொழிலாகிய—விஞ்சை-வித்தையை—அளித்தான் - வரமாகக்கொடுத்தான் —எ-று. (கருத்து) அக்கினிபகவான் நளனுக்குத்தீயில்லாமல் சமையல்செய்யும் வித்தையைக் கற்பித்தான் என்பதாம். (எ௩)

அல்லலுழந்தரு ளெய்தினுநெஞ்சி
னல்லறமெய்தவு நண்ணியஞாட்பில்
வெல்படைவேண்டுவ வெய்தவும்வென்றிக்
கொல்சினவெம்பக டீர்இகொடுத்தான்.

(இ-ள்) வென்றி-வெற்றியையும்—கொல்சினம் - கொல்லாநின்ற கோபத்தையுமுடைய—வெம்பகடேர் - வெவ்வியஎருமைக்கடாவாகனத்தையுடைய இயமனனவன்—அல்லலுழந்து - வருத்தப்பட்டு—அருளெய்தினும்- துன்பமடையினும்—நெஞ்சில் - மனத்தின்கண்—நல்லறமெய்தவும்-நல்லதருமமடையவும்—நண்ணிய - பொருந்திய—ஞாட்பில்-யுத்தத்தில்—வெல்படை - வெல்லத்தக்கஆயுதங்கள்—வேண்டுவ-வேண்டுவனவற்றை—எய்தவும் - அடையவும்—கொடுத்தான் - நளனுக்குவரங்கொடுத்தான் —எ-று. (கருத்து) யமன் நளனுக்கு சத்துருக்களைவெல்லு மாயுதங்களைக்கொடுத்தான் என்பதாம். (எச)

தார்புலரா து தயங்கவும்வேண்டி
னார்கலிவற்ற வமைக்கவுமல்லா
னீரறுபாலையி னெஞ்சினினைப்பின்
வார்புனலெய்தவும் வருணனளித்தான்.

(இ-ள்.) வருணன் -வருணனனவன்—தார் -மாலைகள்—புலராது-வாடாமல்—தயங்கவும்-விளங்கவும்—வேண்டின் - வேண்டினால்—ஆர்கலி-சமுத்திரமானது—வற்றவமைக்கவும்- வற்றும்படிச்செய்யவும் —அல்லால்-அவையன்றியும—நீரறுபாலையின் - நீரில்லாதபாலைநிலத்தில்—நெஞ்சினினைப்பின்-நெஞ்சிலேநினைத்தால்—வார் - நெடிய—புனலெய்தவும்-நீருண்டாகவும்—அளித்தான் - நளனுக்குவரங்கொடுத்தான்—எ-று. (கருத்து) வருணராஜன நளனுக்கு கடல்வற்றச்செய்யவும் நீரில்லாவிடத்தில் நீருண்டாக்ச்செய்யவும் வரங்கொடுத்தான்-எ-ம்()

ஆண்டகைக்கின்ன வளித்தரிவைக்கு
மாண்டருக்கற்பை வருத்துவமென்றுத்
தீண்டினராவி சிதைந்திடுமாறும்
வேண்டுருவெய்தவும் விண்ணவ ரீந்தார்.

(இ-ள்) விண்ணவர் - இந்திரன்முதலியதேவர்கள் — ஆண்டகைக்கு - நளனுக்கு — இன்னவளித்து - இவ்வரங்களைக்கொடுத்து — அரிவைக்கும் - தமயந்திக்கும் — மாண்டகு - மாட்சிமைபொருந்திய — கற்பை - கற்பினை — வருத்துவமென்று - வருத்துவோமென்று — தீண்டினோர் - தொட்டவர்களுடைய — ஆவி - உயிர் — சிதைந்திடுமாறும் - கெடுமாறும் — வேண்டிருவெய்தவும் - வேண்டியவைவந்தெய்தவும் — ஈந்தார் - வரங்கொடுத்தனர் — எ-று. [ * அகத்தியம் - சொற்பொருட்படலம் - வாமென்றது வேமந்திரமாயிடே யாக்கலுநித்தல் காந்தன் முதலொழில் செய்யும்] (கருத்து) இந்திரன்முதலிய தேவர்கள் நளனுக்கும் தமயந்திக்கும் வேண்டியவைகளும் பெறவும் தமயந்தியைப்பழியத் தீண்டினவர் உயிரவிடவும் வரங்கொடுத்தார்கள் என்பதாம். (௭௬)

கண்ணகன்ஞால மளித்தகழற்கா
லண்ணலையேத்தி யருந்ததியாளும்
பெண்ணமுதத்தை வியந்துபெருஞ்சீர்
விண்ணவர்தம்பதி மேவினரன்றே.

(இ-ள்) கண்ணகல் - இடமகன்ற — ஞாலம் - பூமியை — அளித்த - இரட்சித்த — கழற்கால் - வீரக்கழலையணிந்தகாலையுடைய — அண்ணலை - நளனை — ஏத்தி - துதித்து — அருந்ததியாளும் - அருந்ததியையொத்த — பெண்ணமுதத்தை - தமயந்தியை — வியந்து - அதிசயித்து — பெருஞ்சீர் - மிகுந்தசிறப்பையுடைய — விண்ணவர் - தேவர்கள் — தம்பதி - தம்முடையநகரங்களை — மேவினர் - அடைந்தனர் — எ-று. அன்று-ஏ - அசைகள் (கருத்து) இந்திரன்முதலியதேவர்கள் நளனைப்புகழ்ந்தும்தமயந்தியைக்கண்டதிசயித்தும் சுவர்க்கத்திற்குப்போனார்கள்-எ-ம். (௭௭)

கலிவிருத்தம்.

அங்கண்வானத் தமரரு * மாழியிற்
பொங்குதானை யரசரும்போயபின்
திங்கவேறனை யான்றிகழ்மாமணி
தங்குபைம்பொ னிருக்கையிற்சார்ந்தனன்.

(இ-ள்) அங்கண் - அழகியவிடத்தையுடைய — வானத்து - தெய்வலோகத்திலிருந்துவந்த — அமரரும் - தேவரும் — ஆழியின் - சமுத்திரம்போல் — பொங்கு - மிகுந்த — தானை - சேனையையுடைய — அரசரும் - அரசர்களும் — போயபின் - போனபின்பு — திகழ் - பிரகாசிக்கின்ற — மாமணி - மாணிக்கமணிகளிழைத்து — தங்கு - தங்கிய — பைம்பொன் - பசிய பொன்னாற்செய்த — இருக்கையில் - ஆசனத்தில் — சிங்கவேறனையான் - சிங்கவேற்றையொத்தநளனென்பவன் — சார்ந்தனன் - சேர்ந்தனன் - எ-று. * அகத்தியம் - ஆழமுதலாழியென்றேதாக (கருத்து) தேவர்களும் அரசர்களும் போனபின்புநளன் நவமணிபீடத்தி லிருந்தனன் - எ-ம். ()

## போர்புரிபடலம்

முற்றிற்று.

உ

# மணம்புரிபடலம்.

இப்படலத்தால் நளமகாராஜன் தமயந்தியை விவாகஞ்செய்தல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

சாந்தமுழ்கு தடமுலைக்கோதையர்
காந்துபைம்பொற் கவரியிரட்டுற
வாய்ந்தசெவ்வி மணவினைமாடத்தின்
வேந்தர்சூழ்வர வீமன்வந்தெய்தினான்.

(இ-ள்) சாந்தம் - சந்தனக்குழம்பினால் — மூழ்கு - முழுகப்பெற்ற — தடமுலை - பருத்தமுலையையுடைய — கோதையர் - மாதர்கள் — காந்து - பிரகாசிக்கின்ற — பைம்பொன் - பசியபொற்காம்பையுடைய — கவரி - சாமரைகளை — இரட்டுற - வீச — வாய்ந்த - பொருந்திய — செவ்வி - அழகிய — மணவினை - விவாகஞ்செய்யும் — மாடத்தின் - உப்பரிகையில் — வேந்தர் - அரசர்களனைவரும் — சூழ்வர - சூழ்ந்துவராநிற்க — வீமன் - வீமராஜன் — வந்தெய்தினான் - வந்துசேர்ந்தான் — எ-று. (கருத்து) வீமராசன் விவாகமண்டபத்திற்கு வந்தான்-எ-ம். (௧)

ஆற்றுவேழ்வி யருந்தவர்சூழ்வரப்
போற்றுநான்மறைக் கோதமன்போர்கெழு
வேற்றடங்கண் விளங்கிழைமன்றலுக்
கேற்றயாவையுங் கொண்டடைந்தெய்தினான்.

(இ-ள்) வேழ்வி - யாகங்களை — ஆற்று - செய்கின்ற — அருந்தவர் - முனிவர்கள் — சூழ்வர - சூழ்ந்துவர — நான்மறை - நாலுவேதங்களையும் — போற்று - போற்றுகின்ற — கோதமன் - கௌதமமுனிவன் — போர்கெழு - போரின்மிக்க — வேற்றடங்கண் - வேல்போன்றவிசாலம்பொருந்தியகண்களையுடைய — விளங்கிழை - தமயந்தியினது — மன்றலுக்கு - விவாகத்துக்கு — ஏற்றயாவையும் - ஏற்றதிரவியமனைத்தையும் — கொண்டு - வருவித்துக்கொண்டு — உடன் - அதனுடனே — எய்தினான் - வந்தான் — எ-று. (கருத்து) கௌதமரிஷி விவாகத்திற்கு வேண்டியவைகளைக் கொண்டுவந்தான்-எ-ம். (௨)

வேரியந்தொடை வீமனும்வேந்தருந்
தேரு * நான்மறைச் செல்வருமன்றலுக்
கோரையெய்திய தென்றுமையொற்றரா
லாரமார்பற் கறிவுணர்த்தினர்.

(இ-ள்.) வெரியந்தொடை - தேனொழுகுமலர்மாலையையணிந்த—வீமனும்-வீமராசனும்—வேந்தரும் - அரசர்களும்—தெருணான்மறைச்செல்வரும்-நாலுவேதங்களையுமறிந்தபிராமணர்களும்—மன்றலுக்கு-விவாகத்திற்கு—ஓரையெய்தியதென்று - முகூர்த்தகாலம்வந்ததென்று—உழை - அருகிலிருந்த—ஒற்றரால் - ஒற்றுவரால்—ஆரமார்பற்கு-நளமகாராசனுக்கு—அறிய-தெரியும்படி—உணர்த்தினர் - தெரிவித்தார்கள்—எ-று. [அகத்தியம் - மறைபொருளுணர்தலான் மறையெனப்படுமே] (கருத்து) வீமராசன் முதலானோர்முகூர்த்தலக்கினம்வந்ததென்று வேவுகாரராலே நளனுக்கறிவித்தார்கள்-எ-ம். (௩)

ஒற்றர்கூற வொளிமுடிவேந்தனை
கற்றைவார்சடைக் காசிபனாதியோர்
சொற்றநான்மறை நூல்வழித்தூமணிப்
பொற்றசும்பினிற்பூம்புன லாட்டினர்.

(இ-ள்) ஒற்றர்கூற-ஒற்றுவர்சொல்ல—(அவ்வளவில்) ஒளிர்முடி-விளங்குகின்றமகுடத்தையுடைய—வேந்தனை - (நளனை)—கற்றை - மயிர்த்தொகுதியாகிய—வார்சடை - நெடியசடையையுடைய—காசிபனாதியோர்-காசிபன்முதலியமுனிவர்கள்—சொற்றநான்மறைநூல்வழி-வேதநூலிற்சொல்லியவழிப்படி—தூ - பரிசுத்தமாகிய—மணி - நவமணிகள்பதித்த — பொற்றசும்பினில் - பொற்குடத்திற்கொணர்ந்த—பூம்புனல்-பொலிவையுடையதீர்த்தங்களில்—ஆட்டினர் -ஸ்நானஞ்செய்தார்கள்—எ-று. பூம்புனலெனலால்-கங்கையாகியதீர்த்தமெனக்கொள்க (கருத்து) காசிபர்முதலான முனிவர்கள் கொண்டுவந்தபுண்ணியதீர்த்தத்தினாலே நளனை ஸ்நானஞ்செய்வித்தார்கள் என்பதாம். (௪)

புனிற்றிளம்பிறைக் கண்ணியன் பூங்கழன்
மனத்திலெண்ணி வழிபட்டுமாமறை
யனைத்தும்வல்ல வறநெறியந்தணர்
நினைத்தயாவையு நீரொடுநல்கினான்.

(இ-ள்) புனிற்றிளம் - மிகுந்தவிளமைபொருந்திய—பிறைக்கண்ணியன் - பாலசந்திரனாகியமாலையணிந்தபரமசிவனுடைய—பூங்கழல்-அழகியபாதங்களை—மனத்திலெண்ணி - இதயத்திலேதியானித்து—வழிபட்டு - பூசித்து—மாமறையனைத்தும்வல்ல - வேதமுழுதுந்தெரிந்த—அறநெறி - தருமமார்க்கத்தினின்ற—அந்தணர் - பிராமணர்கள்—நினைத்தயாவையும்-நினைத்தவையனைத்தையும், நீரொடு-நீருடனே, நல்கினான்-கொடுத்தனன்—எ-று. (கருத்து) நளன்பிராமணர்கள்நினைத்தயாவையுந் தானமாகக்கொடுத்தான் என்பதாம். (௫)

அழகுவாய்ப்பவனைபவ ரன்னலைத்
தொழுதுநல்லருள்பூண்டு சுடர்விரி
மழவுநன்கதிர்மால்வரை சேர்ந்தெனச்
செழுமணிப்பொற் றிகழ்முடிசூட்டினர்.



(இ-ள்) அழகுவாய்ப்ப-அழகுபொருந்த — வனைபவர் - ஆபரணந்தரிப்பவர்கள்—அன்னலைத்தொழுது - நளனைவணங்கி — நல்லருள்பூண்டு -அவனுடையகிருபைபெற்று—சுடர்விரி - கிரணம்விரிக்கின்ற—மழவுநன்கதிர் - இளஞ்சூரியனானவன்—மால்வரைசேர்ந்தென-உதயகிரியில்வந்ததுபோல் — செழுமணி - செழுமையுள்ளமணிகள் பதித்து—பொன்-பொன்னாற்செய்து—திகழ்-பிரகாசிக்கின்ற— முடி - கிரீடத்தை—சூட்டினர் - தரித்தார்கள் —எ-று (கருத்து) நளனுக்குமுடிதரித்தார்கள்-எ-ம். (௬)

புயங்களென்னும்பொலங்கிரிமீதுவான்
தயங்குசோதிக்கதிர்கடவழ்ந்தெனக்
கயங்கொள்வள்ளைக்கவின்கவர்காதினில்
வயங்குபைம்பொன்மணிக்குழைசேர்த்தினர்.

(இ-ள்) புயங்களென்னும் - தோள்களென்கிற—பொலங்கிரிமீது-மேருமலையின்மேல்—வான்-ஆகாயத்தில், தயங்கு - தயங்குகின்ற—சோதி-ஒளியையுடைய—கதிர்கள்-சூரியர்கள்—தவழ்ந்தெனவே- தவழ்ந்தனபோல்—கயங்கொள் - தடாகங்கள்கொண்ட—வள்ளை - வள்ளையிலையினுடைய—கவின்-அழகை—கவர் - கொண்ட—காதினில்-செவிகளில், வயங்கு-பிரகாசிக்கின்ற—பைம்பொன் - பசியபொன்னாற்செய்த, மணிக்குழை-இரத்தினக்குண்டலங்களை, சேர்த்தினர்-தரித்தார்கள் —எ-று. (கருத்து)நளன் செவியில்குண்டலமணிந்தார்கள்-என்பதாம். (௭)

வண்ணமேகலையார்மனங்கூட்டுண்ணக்
கண்ணகன்றுகவின்செயுமார்பிடை
யண்ணன்மால்வரைதாழுமருவிபோற்
றெண்ணிலாமணியார்வடஞ்சேர்த்தினர்.

(இ-ள்) வண்ணமேகலையார்-அழகிய மேகலையைத்தரித்த மங்கையர்களுடைய—மனம்-நெஞ்சை, கூட்டுண்ண-கொள்ளைகொள்ள —கண்ணகன்று-இடமகன்று—கவின்செயும்-அழகைச்செய்யும்—மார்பிடை-மார்பின்கண்ணே—அண்ணல்-பெரிய—மால்வரை - மேருமலையில்—தாழுமருவிபோல் - தாழ்ந்தொழுகுமருவிநீரைப்போல் —தெண் - தெளிந்த—நிலா - ஒளியையுடைய—மணியார்வடம் - முத்து வடங்களை—சேர்த்தினர்-தரித்தார்கள்—எ-று. (கருத்து)நளன்மார்பில் முத்துமாலையையணிந்தார்கள் என்பதாம். (௮)

பூமலர்ச்செழுங்கற்பகம்புல்லிய
காமர்வல்லியெனக்கவின் செய்திடத்
தாமணிச்சுடர்தூங்குபொலங்கொடி
தேமலர்த்தொடைத்திண்புயஞ்சேர்த்தினர்

(இ-ள்) பூமலர் - பொலிவுபொருந்தியமலர்களையுடைய—செழும்-செழுமையுள்ள — கற்பகம்புல்லிய - கற்பகத்தைத்தழுவிய — காமர்வல்லியென- காமர்வல்லியென்னுங்கொடிபோல்— கவின்செய்திட- அழ

கைச்செய்ய—து-பரிகத்தமாகிய- மணிச்சுடர்-நவமணியின் கிரணங்கள்—அலங்கு-தங்கிய—பொலங்தொடி - தோள்வளையை, தேமலர்த்தொடை-வாசனைபொருந்தியமலர்மாலையையணிந்த—திண்புயம் - திண்ணியதோள்களில்—சேர்த்தினர்-தரித்தார்கள் —எ-று. (கருத்து) களன்தோள்களில்வாகுவலயந்தரித்தார்கள் என்பதாம். (௯)

துளங்குதெண்டிரைசூழ்கடல்வையக
மளந்துகோடற்கருவிலைப்பூந்துகில்
விளங்குபொன்னங்கிரியினைவெண்முகில்
வளைந்ததென்னமருங்கினிற்சாற்றினர்.

(இ-ள்) துளங்கு-அசைகின்ற—தெண்டிரைசூழ்கடல் - தெளிந்த அலைகளையுடைய கடலாற்சூழப்பட்ட—வையகம்- பூமியை — அளந்துகோடற்கு - அளவிட்டுக்கொள்வதற்கு—அருவிலை - அரிய விலையையுடைய—பூந்துகில் - அழகியஆடையை—விளங்கு - பிரகாசிக்கின்ற-பொன்னங்கிரியினை-மேருமலையை —வெண்முகில் - வெள்ளை மேகமானது—வளைந்ததென்ன-சூழ்ந்ததுபோல்—மருங்கினில் - அரையின்கண்—சாற்றினர்-தரித்தார்கள்—எ-று. (கருத்து) களனிடையில் ஆடைதரித்தார்கள் என்பதாம். (௰)

பார்தளேந்தியபார்*பொதுநீக்கிய
வேந்தல்சேவடிப்போதினெழில்பெற
வேந்தர்பொன்முடிதேய்த்துவிளங்கிய
காந்துபைம்பொற்கனைகழல்வீக்கினர்

(இ-ள்.) பார்தன் - ஆதிசேடனால்—ஏந்திய- சுமக்கப்பட்ட—பார்-பூமியை—பொதுநீக்கிய யாவருக்கும் பொதுவாதலைநீக்கிய — ஏந்தல்-களனது—சேவடிப்போதின்-சிவந்தவலப்பாதமலரில்—எழில் பெற-அழகுபெறும்படி—வேந்தர்-அரசர்களுடைய—பொன்முடி - சுவர்ணகிரீடங்களால்—தேய்ந்து-தேய்க்கப்பட்டு—விளங்கிய - பிரகாசித்த—காந்து-சொலிக்கின்ற—பைம்பொன்-பசும்பொன்னாற்செய்த — கனைகழல்-ஒலிக்கும்வீரக்கழலை—வீக்கினர்-கட்டினார்கள்—எ-று. (கருத்து) களன்வலப்பாதத்தில் வீரக்கழலணிந்தார்கள் என்பதாம். [*அகத்தியம் - பொதுநீக்கரசனுல் கொருங்குடையோன்] ஸ்ரீ * அகத்தியம்வெற்றிகொள்வேந்தர்விருதுவீரக்கழல், வலத்தாளொன்றில் வயங்குமெய்க்.

இன்னபோணியாவுமெழில்செயத்
துன்னியெங்குமுழவந்துவைத்திடப்
பொன்னங்குழிப்புகர்முகவெற்பின்மேன்
மன்னர்மன்னன்மகிழ்ச்சியொடேகினன்

(இ-ள்) இன்ன-இப்படிப்பட்ட—போணியாவும் - பெரிய விலையுள்ள ஆபரணங்களனைத்தும்—எழில்செய - அழகினைச்செய்ய — எங்கும்-எவ்விடத்தும்— துன்னி - நெருங்கி—முழவம்-பேரிகைகள் — துவைத்திட-ஒலிசெய்ய—பொன்-பொன்னாற்செய்த—அம்-அழகிய—குழி-முகப்படாத்தையுடைய, புகர் முக - புள்ளிபெற்றமுகத்தையுடைய—வெற்பின்மேல் -யானையின்மேல்—மன்னர்மன்னன்-களனானவன் —மகிழ்ச்சியோடு - மகிழ்ச்சியுடன்—ஏகினன் - சென்றான் —எ-று (கருத்து)களன்யானைமேறிச்சென்றான்—எ-ம். (௰௨)

நேமிசூழ்ந்தநெடுநிலமன்னவர்
தாம்வெண்குடைதாங்கினர்பின்வர
வாமமேகலைமங்கையாங்கையிற்
காமர்செம்பொற்கவரியிரட்டவே.

(இ-ள்) நேமிசூழ்ந்த - சமுத்திரஞ்சூழ்ந்த — நெடுநிலமன்னவர்-நெடியபூவுலகத்தரசர்—தாமம் - மாலையணிந்த — வெண்குடை-வெண்கொற்றக்குடையை—தாங்கினர் - சுமந்தவராகி—பின்வர - பின்னேவரவும்—வாமம் - அழகிய—மேகலை - மேகலாபரணத்தையுடைய—மங்கையர்-மாதர்கள்—அங்கையில்-அழகியகையிறல்—காமர் - அழகிய—செம்பொன்-சிவந்தபொற்காம்பையுடைய, கவரி-சாமரைகள் — இரட்ட-வீசிவரவும்—எ-று. (கருத்து) வேந்தர் குடைபிடிக்கவும் மாதர்சாமரைவீசவும்என்பதாம்[இதுமுதலிரண்டுங்குளகம்.] (௰௩)

தண்ணந்தாமரைத்தாக்கணங்கன்னவர்
கண்ணுநெஞ்சுமுவந்துகளிப்புற
வெண்ணில்வேதியராசியிலம்பிட
வண்ணமாமணிமண்டபத்தெய்தினன்

(இ-ள்) தண்ணந்தாமரை - குளிர்ச்சிபொருந்தியதாமரைமலரிலிருக்கின்ற, தாக்கணங்கன்னவர் - இலக்குமியையொத்தமங்கையர் — கண்ணுநெஞ்சம் - கண்ணுமனமும்—உவந்து-மகிழ்ச்சியடைந்து — களிப்புற-களிப்புமிக, எண்ணில்வேதியர் -அளவற்றபிராமணர்கள், ஆசியம்பிட - ஆசீர்வதிக்க, வண்ணமாமணி - அழகியமாணிக்கமணிகள்பதித்த,மண்டபத்து-மண்டபத்தில், எய்தினன்-வந்துசேர்ந்தான்-எ-று. (கருத்து) மாதர்கள்மகிழமறையவர்வாழ்த்த களன் விவாகமண்டபத்தில்வந்தான்-எ-ம். (௰௪)

வேனிலங்கணைவேள்புறங்காத்திடப்
பானுவன்கட்பனிமதிவாணுதற்
றேனவாங்குழற்றேமொழியைக்கொடு
மானிரேக்கின் மடந்தையெய்தினர்

(இ-ள்) வேனில்-வசந்தகாலத்திற்குரிய—அங்கணைவேள்- பஞ்சபாணங்களையுடைய மன்மதனானவன் —புறங்காத்திட- புறங்காத்துவர—பானுவன்கண்-கீழேவரற்பலம்போன்றகண்களையும்—பனிமதி- குளிர்ச்சிபொருந்திய சந்திரன்போலும் — வாணுதல் - ஒளிபொருந்தியநெற்றியையும்—தேனவாம்-வண்டுகள்விரும்புகின்ற—குழல் - கூந்தலையுமுடைய — தேமொழியைக்கொடு - தமயந்தியை யழைத்துக்கொண்டு—மானிரேக்கின் - மான்பார்வையைப்பார்த்தபார்வையை யுடைய—ம

டந்தையர்-மாநர்கள்—எய்தினர் - அடைந்தார்—எ-று. (கருத்து) மர்த்தர்கள் தமயந்தியையழைத்துக்கொண்டுவந்தார்கள்-எ-ம். (௰௫)

கள்ளறுமலர்காற்றியெண்காவத
முள்ளகன்றவொளிர்மணிமாடத்தின்
பிள்ளைமானிகர்நோக்கியைப்பெய்கழல்
வள்ளலோடுமணத்தவிசேற்றினர்

(இ-ள்) கள்ளறு-தென்றுறத—மலர்நாற்றி - மலர்மாலை தூக்கி—எண்காவதம்-எண்காததூரம்—உள்ளகன்ற - உள்ளேவிரிந்த—ஒளிர்- பிரகாசம்பொருந்திய,மணிமாடத்தின்-மணிகள்பதித்தஉப்பரிகையில்—பிள்ளைமானிகர் - இளமான்பார்வைபோன்ற— நோக்கியை - பார்வையையுடையதமயந்தியை—பெய்கழல்- வீரக்கழலையணிந்த, வள்ளலோடு-நளனுடன்—மணத்தவிசு - கல்யாணமேடையில்—ஏற்றினர் - ஏற்றினர்கள்—எ-று.(கருத்து) தமயந்தியைநளனோடுகல்யாண மேடையிலேற்றினர்கள்-எ-ம். (௰௬)

உதகநல்குநல்லோரையிஃதென
விதியினடிக்கணிதர்விளம்பலும்
பதலையார்த்தெழப்பாவையைநல்கிய
மதுமலர்த்தொடைமன்னெழுந்தனனரோ.

(இ-ள்) உதகநல்கும்-தாரைவார்க்கின்ற—நல்லோரை- நல்லமுகூர்த்தம்—இஃதென-இதுவென்று—விதியினடி - சோதிடவிதிப்படி பார்த்து—கணிதர-கணிதநூலோர்—விளம்பலும் - சொன்னவள்வில்—பதலை-வாத்தியங்கள்—ஆர்த்தெழ- மிகவொலிக்க —பாவையைநல்கிய-தமயந்தியைப்பெற்ற— மதுமலர்த்தொடை - தேனொழுகு மலர்மாலையையணிந்த—மன்னவீமன்—எழுந்தான் - எழுந்தனன்-எ-று.(கருத்து) சோதிடர்முகூர்த்தலக்கினமிதுவென்றுசொல்லவீமனெழுந்தான் என்பதாம். (௰௭)

கமலமீதுசெங்காந்தள்லர்ந்தெனக்
குமரனங்கையிற்கோல்வளைசெங்கைவைத்
திமயமாதுமிறைவனும்போலவாழ்ந்
தமைதிரென்னவரும்புனனல்கினன்

(இ-ள்) கமலமீது-தாமரைமலரின்மேல்— செங்காந்தளர்ந்தென- சிவந்தகாந்தண்மலர்பூத்ததுபோல, குமரனங்கையில்- நளனது அழகியகைம்மேல்—கோல்வளை-தமயந்தியினது—செங்கைவைத்து- சிவந்தகையைவைத்து—இமயமாதும்-பார்வதியும், இறைவனும்போல வாழ்ந்து-பரமசிவனும்போல்வாழ்ந்து—அமைதிரென்ன - பொருந்தி யிருமென்று—அரும்புனல்-அரியநீரை—நல்கினன்-வார்த்தான்—எ-று.(கருத்து)வீமன்நளன்கையில்தமயந்திகையைவைத்துவாழ்ந்திருங்களென்று தாரைவார்த்தான்-எ-ம். (௰௮)

சார்ந்தழூழ்குதடம்புயனாரழற்
கேய்ந்தயாவுமினிதுமுடித்தபி



னாய்ந்தநான்மறையின் வழியாயிழை
காந்தண்மெல்விரற் * கைபிடித்தானரோ.

(இ-ள்) சார்ந்தழூழ்கு - சந்தனக்குழம்பால்மூழ்கப்பெற்ற—தடம்புயன் -பருத்தபுயங்களையுடையநளனானவன்—ஆர் -பொருந்திய—அழற்கேய்ந்தயாவும் - அக்கினிகாரியத்துக்குப்பொருந்திய வினைத்தையும்—இனிதுமுடித்தபின் - இனிமையோடுசெய்துமுடித்தபின்பு—ஆய்ந்த- ஆய்ந்திருக்கின்ற—நான்மறையின்வழி - வேதமார்க்கப்படி—ஆயிழை-தமயந்தியினது—காந்தண்மெல்விரல் - காந்தளரும்புபோன்றமெல்லியவிரல்களை—கை-தன்கையால்—பிடித்தான் - பற்றினன்—எ-று.
* அகத்தியம்-இரண்டன் விபத்தியெஞ்சில் வலியியல்பாம் (கருத்து) நளன்தமயந்திகையைப்பிடித்தானென்பதாம். (௰௯)

பொங்குசெந்தழல் சூழ்வந்துபூம்பொரி
செங்கையாரச் சொரிந்துதிருமகள்
* பங்கயப்பதம் பைம்பொனம்மிவைத்
தங்கண்வானத் தருந்ததிகாட்டினன்.

(இ-ள்) பொங்கு-மிகுந்த—செந்தழல் - அக்கினியை—சூழ்வந்து-வலம்வந்து—பூம்பொரி- அழகியபொரியை—செங்கையார - சிவந்தகைநிறைய—சொரிந்து - அத்தீயிலிட்டு—திருமகள் - தமயந்தியினது—பங்கயப்பதம் - தாமரைமலர்போன்றபாதத்தை—பைம்பொனின் - பசிய பொன்னாற்செய்த—அம்மிவைத்து - அம்மியின்மீதுதூக்கிவைத்து—அங்கண்வானத்து- அழகியஇடத்தையுடையஆகாயத்திலிருக்கின்ற—அருந்ததி - அருந்ததிநக்ஷத்திரத்தை—காட்டினன் - காண்பித்தான்—எ-று. [* அகத்தியம் - பங்கத்துற்பவம்பங்கயமென்க] (கருத்து) அக்கினிவலம்வந்துபொரியிறைத்துத்தமயந்திபாதத்தை யம்மியின் மேற்றூக்கிவைத்து அருந்ததியைக்காட்டினனென்பதாம். (௨௰)

வினையுள்ளயாவு முடித்தபின்
மானினேக்கியோர் வல்லியினொல்கிப்போய்த்
தானையங்கடற்றாதைபொற்றாளினிற்
றேனவாங்குழற்றேமலர்சூட்டினள்.

(இ-ள்) வினையுள்ள-மற்றக்காரியங்கள்—யாவும் - எல்லாம்—முடித்தபின்-முடித்தபின்பு—மானினேக்கி-தமயந்தியானவள், ஓர்வல்லியின் - ஒருகொடிபோல்—ஒல்கிப்போய் - அசைந்துபோய்—தானையங்கடல் - சேனாசமுத்திரத்தையுடைய—தாதை - தகப்பனாகியவீமனது—பொற்றாளினில்-பொற்பாதங்களில்—தேனவாம் - வண்டுகளால்விரும்பப்படுகின்ற—குழல்-கூந்தலாகிய—தேமலர்-வாசனைபொருந்தியமலரை—சூட்டினள்-தரித்தாள்—எ-று. (கருத்து) தமயந்திதன்பிதாவின் காலில் விழுந்தாள்-எ-ம். (௨௧)

சென்னிதாழ்த்துவணங்கியதேமொழி
மின்னனையுவந்துவிதர்ப்பர்கோன்

பொன்னந்தாமரைப் பூவையுமாலும்போன்
மன்னர்கோனெடும் வாழ்கென வாழ்த்தினான்

(இ-ள்) சென்னி-தலையை—தாழ்ந்து - தாழச்செய்து—வணங்கி ய-பணிந்த—தேமொழி - தேன்போன்றசொல்லையுடைய—மின்னனை-தமயந்தியை—உவந்து-மகிழ்ந்து—விதர்ப்பர்கோன் -வீமராஜன்—பொன்னந்தாமரைப்பூவையும் - இலக்குமியையும்—மாலும்போன்-திருமாலையும்போல்—மன்னர்கோனொடும் - நளனோடும்—வாழ்கென-வாழக்கடவாயென்று—வாழ்த்தினான்-வாழ்த்தினான்—எ-று.(கருத்து) வீமன்தமயந்தியை நளனோடுவாழ்கவென்று வாழ்த்தினான்-எ-ம்.(உஉ)

முருகுவாய்மடுத் துண்டளிமூசுபூந்
தெரியன்மார்பினன் றேசிகர்தாடொழு
துருகுமன்பினுவந்துவிதர்ப்பர்கோன்
வரைகொண்மார்ப மகிழ்வுறப்புல்லினான்.

(இ-ள்.) முருகு-தேனை—வாய்மடுத்து - உண்டு—அளி-வண்டுகள்—மூசு-மொய்க்கப்பெற்ற—பூந்தெரியன்மார்பினன் - மலர்மாலையைத் தரித்தமார்பையுடையநளனானவன்—தேசிகர் - ஆசிரியரது—தாள்தொழுது-பாதத்தைவணங்கி—உருகும் - கரைகின்ற—அன்பின் - பத்தியினால்—உவந்து - மகிழ்ந்து—விதர்ப்பர்கோன் - வீமராசனுடைய—வரைகொண்மார்பம்-மலையினழகைக்கொண்டமார்பினை—மகிழ்வுற - மகிழ்ச்சியையடைய—புல்லினான்-தழுவினான்—எ-று. (கருத்து) நளன் குருவைவணங்கி வீமனைத்தழுவினான் என்பதாம். (உங)

கோதினான்மறை கோதமனாதியர்
மாதவத்து முனிவருமன்னருங்
காதல்வேலை கரையழிந்தோங்கிட
வாதரத்தொடு * மாசியியம்பினார்.

(இ-ள்) கோதில்-குற்றமற்ற—நான்மறை - நாலுவேதங்களையுடைய—கோதமனாதியர்-கௌதமமுனிமுதலாகிய, மாதவத்து - பெரியதவத்தைச்செய்யும்—முனிவரும்-தபோதனரும்—மன்னரும் - அரசரும்—காதல்-ஆசையாகிய—வேலை-கடலானது—கரையழிந்து - கரைகெட்டு—ஓங்கிட-உயர—ஆதரத்தொடும் - அன்புடனே—ஆசியியம்பினார்-ஆசீர்வதித்தார்கள்—எ-று. [ * தாதுவிளக்கம்-ஆசையோடுரைத்தலாலாசியென்றுரைக்க] (கருத்து) முனிவரும் அரசரும் நளனைவாழ்த்தினார்கள்-எ-ம். (உச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னவைநிகழ்ந்தபின்ன ரிறைவனுமணங்களுடும்
பொன்னரிமாலைநாற்றிப் பூம்புகைகமழவூட்டிப்
பன்னருஞ்சிறப்புவாய்ந்த பணியிருவிசும்புபாரின்
மன்னியதனையகோல மணவறையெய்தினாரே.



(இ-ள்) இன்னவை-இத்தன்மையானவை—நிகழ்ந்தபின்னர்-நடந்தபின்பு—இறைவனும்- நளனும்—அணங்குடனும் - தமயந்தியும்—பொன்னரிமாலை-பொன்னரிமாலைகளை—நாற்றி - தொங்கக்கட்டி—பூம்புகை-அழகியபுகையை—கமழ - பரிமளிக்கும்படி—ஊட்டி - ஊட்டுவித்து—பன்னரும்-சொல்லுதற்கரிய—சிறப்புவாய்ந்து - சிறப்புப்பொருந்தி—பணி-குளிர்ச்சிபொருந்திய—இரு - பெரிய—விசும்பு - பொன்னுலகம்—பாரில்-பூவுலகின்கண், மன்னியதனைய-பொருந்தியிருந்ததைப்போன்ற—கோலம்-அழகியமணவறை-படுக்கையறையை, எய்தினார்-அடைந்தார்கள்—எ-று. (கருத்து) நளனும் தமயந்தியும் பள்ளியறையில் சேர்ந்தார்களென்பதாம். (உரு)

பாயிருட் * பிழம்புசீத்துப் பகற்கதிருமிழும்வெய்ய
காயெரிமணியிற்செய்த கவின்திகழ்மஞ்சமீது
தூயமென்பஞ்சியன்னத் தூவியூறினியசெய்யு
மாயமயிர்முதலமைவைந் தடுக்கியவமளிசேர்ந்தார்.

(இ-ள்.) பாய்-பாயாநின்ற—இருட்பிழம்பு - இருளினதுதிரட்சியை—சீத்து-போக்கி—பகற்கதிர் -சூரியகிரணங்களை—உமிழும் - கொப்புளிக்கின்ற—வெய்ய-வெவ்விய—காய் - சுடுகின்ற—எரி - அக்கினிபோன்ற—மணியிற்செய்த-மணிகளாற்செய்யப்பெற்ற—கவின்திகழ் - அழகுவிளங்குகின்ற—மஞ்சமீது-கட்டிலின்மீது—தூய -சுத்தமாகிய—மென்-மெல்லிய—பஞ்சி-பஞ்சியினாலும்—அன்னத்தூவி -அன்னப்புள்ளின்சிறகாலும்—ஊறு-பரிசம்—இனிய-இனியவாக—செய்யும் - செய்கின்ற—ஆய்-ஆயாநின்ற—மயிர்முதல் - மயிர்முதலியவாக—ஐந்து-ஐந்தாக—அடுக்கிய - ஒன்றின்மேலொன்றுசேர்ந்த—அமளி-மெத்தையின்மேல்—சேர்ந்தார்-சேர்ந்தார்கள்—எ-று. [ * அகத்தியம்-குழைசேர்வனவாக்கூடிருள்பிழம்பே] (கருத்து) பதினைந்து பஞ்சணையமைந்திய கட்டிலின்மேல் சேர்ந்தார்கள் என்பதாம். (உசா)

போயிறுமருங்குலென்னப் புணர்முலைசுமக்கலாற்றுச்
சேயிழைபஞ்சியார்ந்த சீறடிக்கமலப்போதின்
மீயுயர்விசும்புபூத்த மின்னுருக்கொண்டதென்ன
வாயிரங்கோடிமாதரயினிசீர்சுழற்றிப்போனார்.

(இ-ள்) மருங்குல் - இடையானது—போயிறுமென்ன - இற்றுப்போய்விடுமென்னும்படி—புணர்முலை - நெருங்கியமுலைகளை—சுமக்கலாற்று-சுமக்கமாட்டாத—சேயிழை - தமயந்தியினுடைய—பஞ்சியார்ந்த-செம்பஞ்சுநிறைந்த—சீறடி - சிறியஅடிகளாகிய—கமலப்போதின்-தாமரைமலரின்மேல்—மீயுயர் - மேலாகவுயர்ந்த—விசும்புபூத்த - மேகத்திலுண்டாகிய—மின்-மின்னல்—உருக்கொண்டதென்ன-பெண்வடிவுகொண்டதென்னும்படியுள்ள—ஆயிரங்கோடிமாதர் - ஆயிரங்கோடிமங்கையர்கள்—அயினிநீர் - சோறிடப்பட்டமஞ்சள்நீரை—சுழற்றி-சுழற்றுதல்செய்து—போனார் - போயினார்கள்—எ-று. (கருத்து) ஆயிரங்கோடிபெண்கள் ஆலஞ்சுழற்றிப்போனார்களென்பதாம். (உஎ

அருப்புமென் முலையாரைந் நூற்றைம்பதிற்றெண்மர்பைம்பொற்
பொருப்புறழ்தோளினுக்கும் பொருகயற்கண்ணினுட்கு
முருக்கிளர்மணியிற்செய்த வொளிகிளர்பசும்பொற்றட்டிற்
கருப்புரத்தீபமேந்திக் கண்ணெச்சில்கழித்திட்டாரே.

(இ-ள்) அருப்பு-தாமரையரும்பையொத்த—மென்முலையார் - மெல்லியமுலைகளையுடையமங்கையர்கள் — ஐந்நூற்றைம்பதிற்றெண்மர் - ஐந்நூற்றைம்பத்தெட்டென்னுந்தொகையையுடையவர்கள்—பைம்பொன் - பசியபொன்மயமாகிய—பொருப்புறழ் - மேருமலையையொத்த—தோளினுக்கும் - புயங்களையுடையானுக்கும்—பொருகயற்கண்ணினுட்கும்-கயற்கெண்டையையொத்தகண்களையுடைய தமயந்திக்கும்—உருக்கிளர்-உருவிளங்குகின்ற—மணியிற்செய்த - நவமணிகளிற்செய்த—ஒளிகிளர்-ஒளிவிளங்குகின்ற—பசும்பொற்றட்டில் - பசியபொன்னாற்செய்தகட்டிலில் — கருப்புரத்தீபமேந்தி - கருப்பூரதீபத்தையேந்தி—கண்ணெச்சில் - திருஷ்டிதோஷத்தை—கழித்திட்டார்-போக்கினார்கள்—எ-று. (கருத்து) ஐந்நூற்றைம்பத்தெட்டு பெண்கள் நளனுக்குந்தமயந்திக்குங் கருப்பூரத்தீபத்தால் திருஷ்டிகழித்தார்கள் என்பதாம். (௨௮)

வாசனைகமழுஞ்சுண்ணம் வண்டிமிர்குழங்கன்மாலை
யோசனைநாறுஞ்சாந்த மொண்கருப்பூரம்பைங்காய்க்
காசறுசெப்பிலாய்ந்த கமழ்சுவையமிழ்திதேனுந்
தூசலோம்பருமவல்குல் * தோகையரேந்தினாரே.

(இ-ள்) வாசனை-பரிமளமானது—கமழும்-மணக்கின்ற—சுண்ணம்-பொடிகளையும்— வண்டிமிர்- வண்டுகளொலிக்கின்ற—குழங்கன்மாலை-அழகியமாலைகளையும்—யோசனை- யோசனைதூரம்—நாறும் - கமழ்கின்ற—சாந்தம்-சந்தனத்தையும்— ஒண்-ஒள்ளிய—கற்பூரம் - பச்சைக்கற்பூரத்தையும்—பைங்காய் - துவர்க்காயையும்—காசறு - குற்றமற்ற—செப்பில்-வட்டில்களில்—ஆய்ந்த-ஆய்ந்தெடுத்த—கமழ் - பரிமளிக்கின்ற—சுவை - சுவையையுடைய—அமிழ்திதேனும் - அமிர்தத்துடனே—தூசலாம் - ஆடைமேலசைகின்ற—பருமம்-பருத்த—அல்குல்-நிதம்பத்தையுடைய—தோகையர் - மங்கையர்கள்—ஏந்தினார் - தாங்கினார்—எ-று. (பருமம்-பதினெண்கோவையுள்ள) * அகத்தியம் - சொற்பொருட்படலம் - தோகைபோற்சாயலார் தோகையென்றேதுக (கருத்து) பெண்கள் வாசனைப்பொடி-மாலை-சந்தனம்-கருப்பூரம்-பாக்கு-அமிழ்து இவைகளையேந்தினார்கள்-எ-ம். (௨௯)

பண்ணமைதிவ்வின யாழ் பருமணியடைப்பைநோக்கிற்
கண்வழுக்குறுசெஞ்சோதிக் கதிர்மணிக்கால்செய்வட்டம்
வெண்ணிறக்கவரிசெம்பொற் படியகமினையவெல்லா
மண்ணியமணிசெய்பைம்பூண் மடந்தையர்மருங்குவைத்தார்.

(இ-ள்) பண்ணமை- இசையமைந்த—திவ்வின - கட்டுகளையுடைய—நல்யாழ் - நல்யாழும்—பருமணி - பரியமணிகள்தொத்த—அடைப்பை-தாம்பூலப்பையும்—நோக்கில்-பார்த்தால்—கண்வழுக்குறு - கண்கள்கூசுகின்ற—செஞ்சோதி - சிவந்தகாந்தியையுடைய—கதிர்மணி - கிரணங்களையுடைய மணிகள்பதித்த—கால்செய்வட்டம் -சாந்தாற்றியும்—வெண்ணிற-வெள்ளியநிறத்தையுடைய— கவரி-சாமரையையும் —செம்பொன்-சிவந்தபொன்னாற்செய்த—படியகம் -தம்பலப்படிக்கமும் இனையவெல்லாம்-ஆகியவிவைமுதலியவற்றையும்—மண்ணிய - கழுவிய—மணிசெய்-மணிகள்பதித்த—பைம்பூண் - பசியவாபரணங்களையுடைய—மடந்தையர்- மாதர்கள்—மருங்கு - அருகே—வைத்தார்-வைத்தனர்—எ-று. (கருத்து) மாதர்கள் - யாழ் - அடைப்பை - ஆலவட்டம்-சாமரைபொற்படிகம்-இவற்றைப்பக்கலில்-வைத்தார்கள்—எ-ம். ()

பாம்பினைப்படத்தைமானும் பங்கயப்பருமவல்குற்
காம்புறழ்பசியமென்றோட் காரிகைவிழைவுநாணு
மேம்பலோடினிதுநோக்கி யின்னுயிர்த்தோழிமார்கள்
பூம்புகைதவழ்ந்தாலன்ன பொருமுகவெழினிவீழ்த்தார்.

(இ-ள்) பாம்பின்-சர்ப்பத்தினது—படத்தை-படத்தினை — மானும்-ஒத்த— பங்கயம்-தாமரைமலரையொத்த,பருமம் - பருமத்தையுடைய—அல்குல்-அல்குலையும்—காம்புறழ்-மூங்கிலையொத்த—பசிய - பசுமையாகிய—மென்றோள் -மெல்லியதோளையுமுடைய—காரிகை - தமயந்தியினுடைய, விழைவும்-விருப்பத்தையும்—நாணும் -நாணத்தையும்—ஏம்பலோடு - ஆகமலர்ச்சியுடன்—இனிதுநோக்கி - இனிமையினோடுபார்த்து— இன்னுயிர்-இனியவுயிரையொத்த—தோழிமார்கள் - தோழிகள்—பூம்புகை - அழகியபுகையானது —தவழ்ந்தாலன்ன-தவழ்ந்ததையொத்த—பொருமுகவெழினி - பொருமுகவெழினியென்னுந்திரையை—வீழ்த்தார்-விடுத்தார்கள்—எ-று. பாம்பினைப்படத்தை யென்றவிடத்தில்-ஐகாரியையாகக்கொண்டு பாம்பினதுபடமெனக்கொள்க (கருத்து) தோழிமார்கள் திரையைவிடுத்தார்கள் என்பதாம். (௩௧)

வரிமுலையோடுந்தோன்றி வளர்தொறும்வளர்ந்துவீங்கிப்
பெருகுநாண்சுமக்கலாற்றாப் பெய்மலர்க்கொம்புபோல்வா
டிருமுகஞ்சிறிதுகோட்டிக் கயிற்புறமதனிற்றேங்கொள்
விரிமலர்க்கூந்தறாழ மின்னெனநடுங்கினின்றாள்

(இ-ள்) வரிமுலையோடுந்தோன்றி-சந்தனக்கோலத்தையுடையமுலைகளுண்டானபோதுண்டாகி — வளர்தொறும் - அவைகள்வளருந்தோறும்—வளர்ந்து-தானும்வளர்ந்து—வீங்கி - பருத்து —பெருகுநாண்-பெருகியநாணை —சுமக்கலாற்றா - சுமக்கமாட்டாத —பெய் - பெய்கின்ற—மலர்-மலரையுடைய—கொம்புபோல்வாள் - கொம்பையொத்ததமயந்தியானவள்—திருமுகம் - திருமுகத்தை —சிறிதுகோட்டி-கொஞ்சம்வணக்கி—கயிற்புறமதனில்-பிடரியின்மேல் — தேங்கொள்-வாசனைகொண்ட—விரிமலர்க்கூந்தல் - விரிகின்றமலரையணிந்த குழலானது—தாழ - சோர—மின்னென-மின்னலைப்போல—நடுங்கி - துவண்டு—நின்றாள்-நின்றனள்—எ-று (கருத்து) தமயந்திநாணிநின்றாள் என்பதாம், (௩௨)

* கூற்றுறழ்தடங்கணுவிரொளவினைகொண்டென்னைவௌவி
மாற்றமொன்றுரையாதிவ்வின் மதிமுகங்கோட்டிநின்றீர்
சேற்றிதழ்க்கமலப்போதிற் றிருந்திழையன்னீர்தக்கதோ
வெற்றுமாறென்கொலாசைக்கடற்படுமினியன்றனே.

(இ-ள்) கூற்றுறழ்-இயமனையொத்த—தடங்கண்-விசாலம்பொருந்திய கண்ணை—ஆவி-என்னுயிரை—கொண்டுகொண்டென்னை-கொண்டென்னைவிட்டிருந்த—ஆவி-அருகப்பி—மாற்றமொன்றுரையாது - ஒருபேச்சும்பேசாமல்—இவ்வின்- இவ்விடத்தில்—மதிமுகம் - சந்திரன்போன்ற முகத்தை—கோட்டிநின்றீர் - வளைத்துநின்றீர்—சேறு-சேற்றில்இருக்கின்ற—இதழ்க்கமலப்போதில்-இதழையுடைய தாமரைமலரில்இருக்கின்ற—திருந்திழையன்னீர்-இலக்ஷுமியையொத்தவரே—தக்கதோ - ஆசையை—ஆற்றுமாறு-சகிக்குமாறு—என்கொல்-எப்படி—ஆசைக்கடற்படும்-ஆசைக்கடலில்முழுகிய, அளியன்-எளியேன்—எ-று.[* அகத்தியம் பொற்பொருட்படலம்-கூற்றுமித்தவார்க்கற்றென்றுரையே (கருத்து) தமயந்தியேபேசாமுகங்கோணி நிற்கின்றாய் ஆசைக்கடலில் வீழ்ந்த வெளியேன் விரகதாபத்தைச்சகிக்கும்வழியாதென்றான் என்பதாம். (௧௩)

வாட்டடங்கண்கட்கூற்றை மலர்க்கையான்மறைத்திராவி
கோட்டுமென்கொண்டுவீங்குங் குவிமுலைக்களிறல்யானை
யாட்டுசாந்தகலம்போழா தளியனேனுடைந்தோட்கந்திற்
பூட்டிடுவன்றேமுன்னம் புரிந்தனுமளியதாமே.

(இ-ள்) வாள்-வாள்போன்ற—தடம்-விசாலம்பொருந்திய — கருங்கட்கூற்றை-கரியகண்ணாகிய இயமனை—மலர்க்கையால் - மலர்போன்ற கையினால்—மறைத்திர்-மூடிக்கொண்டீர்—ஆவி - உயிராகிய—கோட்டுமென் கனைபண்ணை—கொண்டு - கொண்டு—வீங்கும்-பருத்த—குவிமுலை-குவிந்தமுலையாகிய—களிறல்யானை - களிப்பையுடைய யானையை—ஆட்டுசாந்து-சந்தனம்பூசிய—அகலம்-மார்பினிடத்தில் — போழாது-பிளவாது—அளியனேன் -என்னுடைய—தடந்தோள் - பருத்த தோளாகிய—கந்தில்-தறியில் — பூட்டிடுவன்றே - பூட்டுவனன்றே —முன்னம்புரிவதும்-முதற்செய்வதும் — அளியதாம் - அன்பாகும் —எ-று.(கருத்து) தமயந்தியுடன் முலைகளாகியயானைகளைஎன்னுடை தோள்களாகிய கட்டுத்தறிகளில்கட்டுதல் வல்லையோ அன்பாகும்-எ-ம்.

* சுற்றமல்கூரவாழுநோக்கா முருகியர்போல
விற்றிடைமெலியச்செம்மாந் தெழுமுலைப்பாரம்பார்த்தும்
கற்றையங்குழலில்வீழ்ந்து மதுநுகர்களிவண்டீரின்
னற்றதுநமக்குமேலோ ரளியெனவளித்தபேறே

(இ-ள்) சுற்றம் - சுற்றத்தார்—கல்கூர - வறுமையடைய —வாழும்-வாழ்கின்ற—நோக்கா - குற்றத்தையுடைய—சிறியர்போல-சிறியவர்களைப்போல—இற்று - ஒடிந்து—இடை - இடையானது—மெலிய வாட—செம்மாந்து-அகமலர்ச்சியடைந்து— எழு - எழுகின்ற—முலைபாரம்- முலையினுடைய பாரத்தை—பார்த்தும் - கண்டும்—கற்றையங்



குழலில்-மயிர்க்கொத்தியாகியகூந்தலில் — வீழ்ந்து - விழுந்து — மது நுகர்-கள்ளையுண்கின்ற—களி-களிப்பையுடைய — வண்டீர் - வண்டுகளே—நமக்கு-உமக்கு—மேலோர்-பெரியோர்கள்—அளியென - அளியென்று—அளித்தபேறு-கொடுத்தநாமமானது—இன்று-இன்று — அற்றது-அற்றுவிட்டது—எ-று.[* அகத்தியம் - பொற்பொருட்படலம்- இகொள்ளாவிற்கொடுத்தலிற்கூடியோர்சுற்றம்] (கருத்து) வண்டுகளே தமயந்திமுலைப்பாரத்தைப்பார்த்தும் கூந்தலில்வீழ்ந்துமிருக்கின்றீர்கள் இடையொடிந்து பழிவரும் உங்களுக்கு அளியென்னும்பேரின்றேயழிந்தது-எ-ம். (௧௫)

பகைக்கடல்சுவற்றும்வைவேற் பகட்டெழின்மார்பினன்ற
னகத்திடைபெருகியோங்கு மாசையங்கடலையின்னே
முகைத்தெழுமுல்லைமாலை முருகுலாங்கோதைநாணு
நகைத்திடலரிதென்றெண்ணி தன்னுள்ளேமகிழ்ச்சிகூர்ந்தான்.

(இ-ள்) பகைக்கடல் - பகையாகியகடலை—சுவற்றும்-சுவறச்செய்கின்ற—வைவேல் - கூரியவேலையுடைய—பகட்டெழின் -பகட்டுகின்ற வழகையுடைய—மார்பினன்றன்-மார்பையுடையானது—அகத்திடை-மனத்தின்கண்—பெருகியோங்கும் - அதிகரித்துயர்கின்ற — ஆசையங்கடலை - ஆசையாகியசமுத்திரத்தை—இன்னே-இப்பொழுதே முகைத்து - அரும்பி — எழும் - எழுகின்ற— முல்லைமாலை - முல்லைமாலையினுடைய—முருகு-வாசனையானது —உலாம் - உலாவுகின்ற —கோதை-கூந்தலையுடையதமயந்தியானவள்—நாணுதல்-தனது நாணினால்— நகைத்திடல்-நீக்கிவிடுவது—அரிதென்றெண்ணி - அருமையென்றெண்ணித்து—தன்னுள்ளே - தன்மனத்தினுள்ளே — மகிழ்ச்சி - மகிழ்ச்சியை—கூர்ந்தான்-மிகுந்தான்—எ-று. (கருத்து) நளன் காமத்தைத் தன்னுற்றமெய்ப்ப தரிதென்று தன்னுள்ளே மகிழ்ச்சியடைந்தான்-எ-ம்.()

கழி* மடனாணமச்சம் பயிர்ப்பெனுங்காவல்வேலை
யழிதரவாசைவெள்ள மகத்திடையடங்காதாகி
வழிவதேபோலவின்பம் வடிவெடுத்தனையசங்கை
பொழிகதிர்நிலவுநாணப்புன்னகைகோட்டினாளே.

(இ-ள்) கழி-மிகுந்த—மடம்-மடப்பம்—நாணம் - நாணமும்—அச்சம்-பயமும்—பயிர்ப்பெனும்-அருவருப்புமென்றுசொல்லுகிற — காவல் - காவலையுடைய—வேலை - சமுத்திரமானது—அழிதர-அழியும்படி—ஆசைவெள்ளம்-ஆசையாகியவெள்ளமானது—அகத்திடை-மனத்தின்கண்—அடங்காதாகி-அடங்காததாய்—வழிவதேபோல் - வழிகிறதேபோல—இன்பம்-இன்பமானது ஓர் வடிவெடுத்தனைய - ஒருவடிவுகொண்டதையொத்த—சங்கை - தமயந்தியானவள் பொழிகதிர் - கிரணத்தைப்பொழிகின்ற—நிலவுநாண - சந்திரிகையும்நாணும்படி — புன்னகை-புன்சிரிப்பு—கோட்டினாள் - செய்தாள்—எ-று.[* தொல்காப்பியம்-களவியல் - அ-கு- அச்சமுநாணுமடனுமுந்துறுத்த - நிச்சமும் பெண்பாற்குரியவென்ப-இவ்விதியால்மகடூஉக்குணமறிக] (கருத்து) தமயந்திமடம் நாணம் அச்சம் பயிர்ப்பு இந்நாற்குணமும் கெடநகைத்தாள் என்பதாம். (௧௭)

குரும்பணிவலயமின்னுங் குங்குமக்குவவுத் திண்டோள்
முருகுலாந்தாமமார்பன் முறுவலின் குறிப்புநோக்கித்
* திருகலங்கனியின்ற செழுங்கடைமழைக்கட் பேதை
வருமுலையிறுகப்புல்லி மணவினைமயிலுற்றனே.

(இ-ள்) குரு-நிறம்பொருந்திய—மணி-மணிகளைப்பதித்த—வலயம்-கேயூரங்கள—மின்னும்-மின்னுகின்ற—குங்குமம்-குங்குமமணிந்த—குவவு-திரட்சிபொருந்திய—திண்-வலிமையுடைய—தோள்-புயத்தையும்—முருகுலாம்-வாசனைவீசுகின்ற—தாமம்-மாலையணிந்த—மார்பனும்-மார்பினையுமுடையவனாகிய நளன்—முறுவலின்-புன்சிரிப்பின்—குறிப்புநோக்கி-குறிப்பினைப்பார்த்து—திரு-இலக்குமிபோன்றவளும்-[-க்கமான து—அளியகின்ற-நீ-திருப்புமிகுந்த—செழுங்கடை-செழியகடை பொருந்திய—மழைக்கண்-குளிர்ச்சிபொருந்தியகண்ணையுடைய—பேதை-தமயந்தியின்—வருமுலை - வளர்கின்றமுலையை—இறுகப்புல்லி-அழுந்தத்தழுவி-மணவினை-மணவினைமேற்கொண்டவிடத்து — மயிலுற்றனன் - பொருந்தினன்—எ-று.(* தொல்காப்பியம்-களவியல்-சஅ - நாட்டமிரண்டும் அறிவுடம்படுத்தற்குக் கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும், இவ்விதியால் கலவிக்குறிப்புரைத்த) (கருத்து) நளன் தமயந்தியினது கலைக்குறிப்பை யறிந்துதழுவினன்-எ-ம். (௩௮)

ஆம்பலம்போதுநாறு மணிநிறப்பவளவாயின்
தேம்பொதிக்குழலிசைந்து செந்துவர்த்தேறன் மாந்திப்
பாம்பணிமல்குலாடன் பணைமுலைமணிக்கண்சேப்ப
வேம்பலுற்றினிதுபுல்லி யினாகலம்புகுவிற்றனே.

(இ-ள்) ஆம்பலம்போதுமாறும்-அல்லிமலரையொத்த — அணி-அழகு—இகழ-பிரகாசிக்கின்ற— பவளவாயில் - பவளம்போன்றவாயில்—தேம்-வாசனை—பொதிந்து-தங்கி—அழுந்தும் - அமிர்தமுறுகின்ற—செந்துவர்-செம்பவளம்போன்றஅதரத்திலுண்டாய—தேறல்-தேனை—மாந்தி-உண்டு—பாம்பணி-பாம்பின்படத்தையொக்கின்ற—அல்குலாடன் - அல்குலையுடையதமயந்தியினது—பணை- பருத்த—முலைமணிக்கண்-கரியகண்களாகிய கலைவு—சேப்ப - சிவக்க—ஏம்பலுற்று-இன்பத்தையடைந்து—இனிது புல்லி- இனிதாகத்தழுவி—இன்கலம்-இன்பகலத்தை—புகுவிற்றனன்-அனுபவித்தான்—எ-று. (கருத்து) தமயந்தியினது இதழ்களைவத்துக் கலைநுகர மகிழ்ந்துத்தழுவினன்-எ-ம். (௩௯)

கந்திகைக்குமன்கூந்தல் கவிழ்ப்புத்துக்கவிழ்ந்தவீழ
முத்தரிச்சிலம்புபைம்பொற்கிண்கிணிமுரன்றுபாடத்
தத்தரிநெடுங்கண்சேப்பத் தடமுலைதாங்கலாற்று
நெய்த்துநுண்மருங்குற்றேம்ப வேந்தலோடாடினனே.

(இ-ள்) கந்திகை-மலர்மாலையையணிந்த—கருமென்கூந்தல்- கரிய மெல்லியகூந்தலானது—கவிழ்ப்புத்து - பெரிசிவிட்டு — அவிழ்ந்து



வீழ-அவிழ்ந்துவீழவும்—முத்து - முத்துக்களாகிய—அரி-பரலையுடைய; சிலம்பு-சிலம்புகளும்,பைம்பொன்-பசியபொன்னாற் செய்த,கிண்கிணி-சதங்கைகளும்—முரன்று-ஒலித்து—பாட-பாடவும் —தத்து - நெருங்குகின்ற—அரி-செவ்வரிபரந்த,நெடுங்கண்- நெடியகண்களானவை—சேப்ப-சிவக்கவும்—தடமுலை - பருத்தமுலைகளை — தாங்கலாற்றது-சுமக்கமாட்டாது—எய்த்து - இளைத்து—நுண்மருங்குல்- நுண்ணிடையானது—தேம்ப-வருந்தவும், வேந்தலோடு-நளனோடு — ஆடினள்-புணர்ந்தாள்—எ-று.[* இலக்கணக்கொத்து-மசு-கூ - இருவினைமுதலா வொருவினையம்முள், இவ்விதியால்வினைவசப்படிபுல்லினள் (கருத்து) தமயந்தி கூந்தலவிழப்பாதசாஞ் சத்திக்கக்கண்கள் சிவக்க இடைதுவள நளனோடுசேர்ந்தாள்என்பதாம். (சஉ)

களிக்கயல்பொருதுநீண்டுகதுப்பினையளக்கும்வேற்கட்
டுளிப்புயன்மின்னினன்னாட் டொண்டைவாயமிர்தமாந்தித்
தளிர்த்தெழுமுவகைபொங்கத்தண்ணறுஞ்சாந்தமார்ப
னளப்பருங்களிகொள்காமக்கடலகத்தழுந்தினனே.

(இ-ள்) களி-களிப்பையுடைய—கயல்-கயற்கெண்டையை—பொருது-போர்செய்து—நீண்டு - நெடுகி—கதுப்பினையளக்கும் - கூந்தலையளக்கின்ற—வேற்கண்-வேல்போன்ற கண்ணையுடைய—துளி-துளிபொருந்திய—புயல் - மேகத்திற்றோன்றிய—மின்னினன்னாள்-மின்னலையொத்ததமயந்தியினது — தொண்டைவாய் - கொவ்வைக்கனியொத்தவாயிலுண்டாகிய—அமிர்தமாந்தி-அமிர்தத்தையுண்டு— தளிர்த்து-துளிர்த்து—எழும் - எழுகின்ற—உவகை - மகிழ்ச்சியானது—பொங்க-மிக—தண்- குளிர்ச்சிபொருந்திய—நறும்-நல்ல—சாந்தமார்பன்-சந்தனத்தையணிந்தமார்பினையுடையநளனென்பவன்—அளப்பரும்-அளத்தற்கரிய—களிகொள்-களிப்பைக்கொண்ட—காமக் கடலகத்து-காமசமுத்திரத்தில்— அழுந்தினன் - மூழ்கினன் —எ-று. (கருத்து) நளன்விரகவெள்ளத்தி லழுந்தினனென்பதாம். (சக)

அலங்கலங்குன்றமன்னான் மணிவரையகலமுழ்கி
நலங்கெழுகலவைச்சாந்துநானமுமழிதலோடு
மிலங்கொளிவைரப்பைம்பூணிளமுலைவடுக்கண்டேங்கிப்
பொலங்கொடிநாணிநோடும்பொய்த்துயில்கூர்ந்தாளன்றே.

(இ-ள்) அலங்கல்-மாலையணிந்த—அம்- அழகிய — குன்றமன்னான்-மலையையொத்தநளமகாராசனது—மணி-அழகிய—வரை - மலைபோன்ற,அகலமுழ்கி-மார்பினிடத்திலேமூழ்கி —நலங்கெழு-நன்மைபொருந்திய,கலவைச்சாந்தும் - கூட்டுவர்க்கஞ்சேர்ந்தசந்தனக்குழம்பும்,நானமும்-கஸ்தூரியும்,அழிதலோடும்-அழிந்தவளவில் —இலங்கொளி-மிகுந்தவொளியையுடைய, வைரப்பைம்பூண் - வச்சிராபரணத்தையுடைய,இளமுலை-இளமைபொருந்தியஸ்தனத்தினிடத்திலே, வடுக்கண்டேங்கி-வடுவைக்கண்டேங்கி,பொலங்கொடி- பொற்கொடிபோன்ற

தமயந்தியானவள்,நாணினேறும்-நாணத்துடனே— பொய்த்துயில்கூர்ந்தாள்-பொய்நித்திரையைச்செய்தாள்—எ-று.-அன்று-ஏ [அசைகள்] (கருத்து) தமயந்திதன்னுடைய கனதனங்களிலேநாயகனகக்குறிகண்டு வெட்கங்கொண்டுபொய்நித்திரைசெய்தாள்-எ-ம். (௪௨)

புலவியிற்றுயின்றாடண்டின்முனிந்திடும்பூவையென்று
மலரணைப்புறத்துத்தானுந்துயிறல்போற்கிடப்பவாய்ந்த
கலவியின் * வேட்கைதூண்டக்கனவினில்வெருவினாள் போல்
முலைமுகட்டழுந்தவேந்தன்முழவுத்தோள்புல்லினாளே

(இ-ள்) புலவியின்-பிணக்கினால்—துயின்றாள்- நித்திரைசெய்தாள்—திண்டின் - தொட்டால்—முனிந்திடும் - கோபஞ்செய்வாள்—பூவையென்று-தமயந்தியென்று—மலரணைப்புறத்து- மலரணையினிடத்தில்—தானுந்துயிறல்போல் - தானும்நித்திரை செய்தல்போல்—கிடப்ப-இருக்க—வாய்ந்த-பொருந்திய—கலவியின் -புணர்ச்சியினுடைய—வேட்கை-ஆசையானது—தூண்ட - தூண்டுதல்செய்ய—கனவினில்-கனவினிடத்திலே—வெருவினாள்போல்-பயந்தவள்போல—முலைமுகடு-முலையினுச்சி —அழுந்த-அழுந்தும்படி—வேந்தன் - ஸ்ரீமகாராசனுடைய—முழவுத்தோள்-மத்தளம்போன்றதோளை—புல்லினாள் - தழுவினாள்—எ-று. [*அகத்தியம்-சொற்பொருட்படலம்-வேட்கைக்குப்பகுதிவெணவாகும் (கருத்து) தமயந்திகனவிற்பயந்தாள் போலநளன் புயங்களிலே கனதனங்களழுந்தப்புணர்ந்தாள்-எ-ம். (௪௩)

புல்லலுமகிழ்ச்சிகூரப்புணர்முலைகுழையமோந்து
மெல்லிதழமுதமாந்திமேகலைநெகிழ்த்தலோடு
நல்லெழில்கனிந்தகோதைநகையுளத்தடக்கலாற்றாள்
முல்லைமென்முகையுநாணவரும்பிளமுறுவல்பூத்தாள்

(இ-ள்) புல்லலும்-தழுவிக்கொண்டவளவில்—மகிழ்ச்சி- சந்தோஷமானது—கூர-அதிகரிக்க—புணர்-நெருங்கிய—முலை - ஸ்தனங்கள்—குழையமோந்து-குழையும்படியுச்சியின்மோந்து —மெல் - மிருதுவாகிய—இதழ்-அதரத்தினுடைய—அமுதமாந்தி - அமிர்தத்தையுண்டு—மேகலை-மேகலாபரணத்தை—நெகிழ்த்தலோடும் - அவிழ்த்தவளவில்—நல்-நல்ல—எழில்-அழகானது—கனிந்த - முதிர்ந்த—கோதை-தமயந்தியானவள்—நகை-மகிழ்ச்சியை—உளத்தின் - மனத்தின்கண்—அடக்கலாற்றாள்-சகிக்காதவளாய்—முல்லை - முல்லையினுடைய—மெல்-மிருதுவாகிய—முகையும்-அரும்புகளும்—நாண- நாணும்படி—அரும்பு-உண்டாகாநின்ற—இள- இளமையாகிய—முறுவல் பூத்தாள்-தந்தங்கள்தோன்றநகைத்தாள் —எ-று (கருத்து)தமயந்திபுணர்ந்தவளவில் நளன்கனதனங்களைமோந்து அதரபானம் பண்ணிமேகலாபரணத்தை யவிழ்த்தவளவில்நகைத்தாள்-எ-ம். (௪௪)

புருவவிற்கோலியுள்ளம்போழ்ந்துகட் கணைகளோட
வுருவத்தாருடையவொற்றை*வலம்புரியொலிப்பவிம்மி



வரிமுலைக்களிநல்யானைமருமம்பாய்ந்துழக்கமன்றல்
விரிமலர்க்கோதைகாமவெஞ்சமம்விளைத்திட்டாளே

(இ-ள்) புருவம்-புருவமாகிய—வில்-தனுவை—கோலி - வளைந்து—உள்ளம்-மனத்தை—போழ்ந்து-பிளந்து—கண் - கண்களாகிய—கணைகள்-பாணங்கள்-ஓட-ஓடவும்—உருவ - வடிவம்பொருந்திய— தாருடைய-மாலையையுடைய—ஒற்றைவலம்புரி-ஒற்றைச்சங்கமாகிய மிடறு—ஒலிப்ப-சத்திக்க—விம்மி-பூரித்து—வரி-சந்தனக்கோலம்வரைந்த—முலை-ஸ்தனங்களாகிய—களி-களிப்பையுடைய—நல் - நல்ல—யானை- யானையானது—மருமம்பாய்ந்து-மார்பினிடத்திற்பாய்ந்து — உழக்க-கலக்க—மன்றல்-வாசனையை—விரி-விரியச்செய்கின்ற—மலர் - மலராற்றொடுத்த—கோதை - மாலையையணிந்ததமயந்தியானவள் —காமம்-காமமாகிய—வெஞ்சமம்-வெவ்வியயுத்தத்தை—விளைத்திட்டாள்-செய்தாள்—எ-று. * அகத்தியம்சொற்பொருட்படலம் - வலஞ்சுழி கொள்ளுதல்வலம்புரியென்க(கருத்து)தமயந்திபுருவவில்லைவளைத்துக் கண்ணென்னுமம்பையெய்து கண்டமாகிய வலம்புரிச்சங்கு சத்திக்க முலைகளாகிய யானைகள்நளன் மார்பிற்பாய்ந்து கலக்கக் காமப்போர் செய்தாளென்பதாம். (௪௫)

திருநுதற்பொடித்தவேர்வுந்தேங்கமழ்திலகந்தேயப்
புரிமுறுக்கவிழ்ந்துதாழ்ந்தபொலங்குழைதிருவில்வீச
மருமலர்க்கூந்தல்சோரவசமழிந்துருகிவேந்த
னெரிமணியாரமார்பினின்றுயில்பொருந்தினாளே

(இ-ள்) திரு-அழகிய—நுதல்-நெற்றியின்கண்—பொடித்த-உண்டாகிய—வேர்வின்-வேர்வையினாலே— தேம் - வாசனை—கமழ்-வீசுகின்றதிலகம்-சிந்தூரப்பொட்டு—தேய - அழியவும் — புரி -புரிந்த—முறுக்கு-முறுக்குகள்—அவிழ்ந்து-நீங்கி—தாழ்ந்த - தொங்கியகாதினிடத்து—பொலம்-பொன்னினாற்செய்த—குழை - குண்டலங்கள்—திரு-அழகிய—வில்-பிரகாசத்தை—வீச-வீசவும்—மருமலர் - வாசனைபொருந்தியமலர்களையணிந்த—கூந்தல்-அளகபாரமானது—சோர -சரியவும்—வசமழிந்து-பரவசப்பட்டு—உருகி - மனமுருகி—வேந்தன் - ஸ்ரீமகாராசனுடைய—எரி-பிரகாசிக்கின்ற—மணி - மணிகள்பதித்த—ஆரமார்பின்-பதக்கமணிந்த மார்பினிடத்தில்—இன்றுயில்-இனிதாகியநித்திரையை— பொருந்தினாள் - கொண்டாள்—எ-று. (கருத்து)தமயந்தி நெற்றிவேர்வையாற்றிலதமழியவும் குண்டலம் பிரகாசிக்கவும் கூந்தலவிழவும்மெய்சோர்ந்து மனமுருகிநளன்மார்பி னித்திரைசெய்தாளென்பதாம். (௪௬)

கலவியின்மயக்கந்தீர்ந்துகளிபடுகிளவியாட
னலர்முலையாகத்தைவச்சலிவடமணிந்துவாங்கு
சிலைநுதற்றிலதந்தீட்டித்தேங்கமழ்கூந்தல்கைசெய்
திலைமலர்க்கோதைசூட்டிக்கலையுடைதிருத்தினானே

(இ-ள்) கலவியின்-புணர்ச்சியிற்றோன்றிய—மயக்கம் - மயக்கமானது—தீர்ந்த-நீங்கிய—கனிபடு - பழம்போற்சுவைபொருந்திய— கிள்ளையாடன்-சொற்களையுடையதமயந்தியினது—அலர் - பரந்த—முலை-ஸ்தனங்களையுடைய—ஆகம்-மார்பை—தைவந்து - தடவி—அணி - அழகிய—வடம்-மணிவடங்களை—அணிந்து-தரித்து—வாங்கும்- வளைகின்ற—சிலை-விற்போன்ற—நுதல் - நெற்றியினிடத்து—திலகந் தீட்டி-சிந்தூரப்பொட்டிட்டு—தேங்கமழ்-வாசனைவீசுகின்ற—கூந்தல் - கூந்தலை—கைசெய்து-ஒழுங்குசெய்து—இலை - மருமுதலியவிலைகளோடு—மலர்க்கோதை-மலர்மாலையை—சூட்டி-தரித்து—இழைபல - பலவாபரணங்களை—திருத்தினான் - திருந்தச்செய்தான்—எ-று. * அகத்தியம்-சொற்பொருட்படலம் இழைக்குந்தொழிலா லிழையெனப்படுமே (கருத்து) நளன் தமயந்தியைத் தடவிக்கொடுத்து மணிவடஞ்சூட்டித் திலகமிட்டுக் கூந்தலைமுடித்து ஆபரணஞ்சூட்டினான்-எ-ம். (௪௭)

தெளியுமின்னமிழ்தமன்ன தேம்படுகிளவியாட
னொளிகிளர்முகத்துலாய வோடரித்தடங்கண்போலக்
களியிளஞ்சுரும்புகாணீர் கண்டனவுளவோசொல்லீர்
முளரிநாண்மலரிற்பூத்த முழுநெறிக்குவளைப்போதே.

(இ-ள்) தெளியும்-தெளிந்த—இன்-இனிதாகிய—அமிழ்தமன்ன-அமிர்தம்போன்ற—தேம்படு - மதுரம்பொருந்திய—கிளவியாடன்-சொற்களையுடையதமயந்தியினது—ஒளி-காந்தியானது—கிளர் - விளங்குகின்ற—முகத்துலாய-முகத்தினிடத்துலாவுகின்ற—ஓடு-காதளவுமோடாகின்ற—அரி-செவ்வரிபரந்த—தடம் - விசாலம்பொருந்திய—கண்போல்-கண்கள்போல—களி-களிப்பையுடைய—இளம்-இளமையாகிய—சுரும்புகாள்-வண்டுகளே—நீர்-நீங்கள்—கண்டன - பார்த்தவை—உளவோ-உண்டோ—சொல்லீர் - சொல்லுங்கள்—முளரி - தாமரையாகிய—நாள்-அன்றலர்ந்த—மலரின்-மலரின்மேல்—பூத்த - உண்டாகிய—முழுநெறி-முழுநெறிப்பையுடைய—குவளைப்போது - நீலோற்பலங்களை—எ-று. (கருத்து) நளன்வண்டுகளே தமயந்திகண்போலத்தாமரையிற்பூத்த நீலோற்பலத்தை நீங்கள் கண்டதுண்டோ சொல்லுங்களென்றான்-எ-ம். (௪௮)

தாமரைப்பொகுட்டின்மேய தாக்கணங்கனையாய்நெஞ்ச
மேமுறவரினுநின்னை யிம்மையிற் * பிரியேனென்ன
வாமமேகலையினாளு மறுமையிற்பிரிவையென்னாக்
காமருகுவளைபோலுங் கண்பனியுகுப்பநின்றாள்.

(இ-ள்) தாமரைப்பொகுட்டில் - தாமரைக்கொட்டையின்மேல்—மேய-பொருந்திய—தாக்கணங்கனையாய் - இலக்குமியையொத்தவளே—நெஞ்சம்-மனமானது—ஏமம்-வருத்தம்—உறவரினும், - பொருந்தவந்தாலும்—நின்னை-உன்னை—இம்மையில் -இப்பிறப்பில்—பிரியேனென்ன-பிரியேனென்றுசொல்ல—வாமம் - அழகிய—மேகலையினாளும்-மேகலையையணிந்ததமயந்தியும்—மறுமையில் - மறுபிறப்பில்—பிரி



வையென்று - நீபிரிவையேயென்று, காமரு-அழகிய— குவளைபோலும்-நீலோற்பலம்போன்ற—கண் - கண்களினின்றும்—பனியுகுப்ப-நீர்துளிக்க—நின்றாள்-வருந்திநின்றாள்—எ-று. * இலக்கணக்கொத்து வினையியல்-௰௨-சூ-நிலைமொழிமறையேவருமொழிமறையே - இருமொழிமறையெனமூவகைமறை-இவ்விதியால்பிரியேன் என்றதுநிலைமொழியெதிர்மறை (கருத்து) நளன் இப்பிறப்பிற் பிரியேனென்று சொல்லத்தமயந்தி மறுபிறப்பிற்பிரிவையென்றழுதாள்-எ-ம். (௪௯)

பெய்கொடிகலுழ்வதென்கொல் பிழைத்திலேனருளாயென்னி
லுய்குவன்கொல்லோவின்னே யுள்ளுயிர் துறப்பலென்று
வெய்துயிர்த்தனிச்சப்போதின் மிதிப்பினும்பனித்துவாடுந்
தெய்வமென்கமலப்போது சென்னிமேற்சூடினானே

(இ-ள்) பெய்கொடி-தமயந்தியே—கலுழ்வது- நீகலங்குவது—என்கொல்-என்னகாரணம்—பிழைத்திலேன் - நானொருகுற்றமுஞ் செய்திலேன்—அருளாயென்னில் - கிருபைசெய்யாவிட்டால் — உய்குவன்கொல்லோ-பிழைப்பேனோ—இன்னே-இப்பொழுதே—உள்ளுயிர்-உள்ளேயிருக்கின்றவுயிரை—துறப்ப லென்று - விடுவேனென்று—வெய்துயிர்த்து-பெருமூச்சுவிட்டு—அனிச்சப்போதில் - அனிச்சப்புட்பத்தில்—மிதிப்பினும் - நடந்தாலும்—பனித்து- கொப்புளித்து — வாடும்-வாடாநின்ற—தெய்வம் - தெய்வத்தன்மை பொருந்திய—மெல் - மிருதுவாகிய—கமலப்போது - பாதமாகியதாமரைப்பூவை —சென்னிமேல்-சிறத்தின்மீது—சூடினான் -தரித்துக்கொண்டான்—எ-று. (கருத்து) நளன் தமயந்தியே நீயழுவதென்னநான் ஒருகுற்றமுஞ்செய்யவில்லைகிருபைசெய்யாவிடி லுயிரைவிடுவேனென்று அவளடியை முடியில்வைத்துக்கொண்டான்-எ-ம். (௫[illegible])

குழுமிய*பறவையாவுங் கூட்டுணைப்பொதுவினல்கும்
பழுமரமனையதிண்டோட் பகட்டெழிற்றாமமார்ப
வழுவலன்போடுநின்னை யொருமையிற்புணர்வதன்றி
யெழுமையுந்தொடருமாதர் சீறடியிறைஞ்சுகென்றாள்.

(இ-ள்) குழுமிய - கூடிய—பறவையாவும் - பறவைக்கூட்டங்களைத்தும்—கூட்டுணை-கொள்ளைகொள்ள—பொதுவினல்கும் - பொதுவாகத்தரும்—பழுமரமனைய - ஆலமரத்தையொத்த—திண்டோள் - வலிமைபொருந்தியதோளையும்—பகட்டெழில் - பகட்டுகின்ற அழகையுடைய—தாமம்-மாலையணிந்த—மார்ப-மார்பினையுமுடைய நளமகாராஜனே—உழுவலன்போடு-இடையறாதவன்போடு—நின்னை-உன்னை—ஒருமையில்-இப்பிறப்பில்—புணர்வதன்றி - கூடுவதல்லாமல்—எழுமையும்-எழுபிறப்பிலும்—தொடரும்-தொடர்ந்துவருகின்ற—மாதர்-மங்கையருடைய—சீறடி - சிறியபாதத்தில்—இறைஞ்சுகென்று- வணங்குவாயென்றுசொல்லி—எ-று.* அகத்தியம் - சொற்பொருட்படலம்-பறத்தற்றொழிலாற்பறவையெனப்படும்- (கருத்து) தமயந்தியானவள்மாலையணிந்தமார்பா அன்புடனே உம்மை இப்பிறப்பிற் புணர்வ

தல்லாம லெழுபிறப்பிலும் புணரு மாதர் களினடியை வணங்கென் று சொல்லி-இதுமுதலிரண்டுங்குளகம். (௩௪)

கிளிபொருகிளவியாள்பொற் கிண்கிணிசிலம்போடார்ப்பத்
தளிநெருப்பிலிற்றுமென்பூந் தடம்புயத்துறைத்தலோடுங்
களிசெயப்பொடித்தரோமங் கண்டகத்துறுத்திலந்தோ
வளியசீறடிகணோமென் றல்லலுற்றழுங்கினானே.

(இ-ள்) கிளிபொரு-கிளியையொத்த — கிளவியாள் - வசனத்தை யுடையதமயந்தியானவள் — பொன்-பொன்னினாற்செய்த — கிண்கிணி -சிறுசதங்கைகள் — சிலம்போடு- சிலம்புடனே — ஆர்ப்ப-சத்திக்க — தளி-துளிதுளியாகிய — நறு-தேனை — பிலிற்றும் - துளிக்கின்ற — மென்-மிருதுவாகிய — பூம்-புட்பமாலையணிந்த — தடம் - விசாலம்பொருந்திய — புயத்து-புஜத்தினிடத்தில் — உதைத்தலோடும்-உதைத்த மாத்திரத்தில் — களிசெய-மகிழ்ச்சியைச்செய்ய — பொடித்த - புளகித்த — ரோமம்-மயிர்கள் — கண்டகத்து-முட்கள்போல — உறுத்தில் - உறுத்துமாகில் — அந்தோ-ஐயோ — அளிய-மிருதுவாகிய — சீறடிகள் - சிறியபாதங்கள் — நோமென்று-வாநந்துமேயென்று — அல்லலுற்று - துன்பமுற்று — அழுங்கினான்வருந்தினான் — எ-று (கருத்து) நளன்தோள்களிற்கா லாலுதைத்தவளவில் அங்ஙனன் சிற்றடிநோவுமென் றழுதான்-எ-ம். ()

உடைதிரைப்பரவைஞாலத் துயர்ந்தவர்தொழும்புபூண்ட
வடியவரிழைத்ததீமையருளொடும்பொறுப்பதல்லால்
கொடியவர்போலச்சீறி யாருயிர்குறைப்பர்கொல்லோ
மடலவிழ்கமலப்போதில் வாள்கிடந்தனையகண்ணாய்

(இ-ள்) உடை-கரையையுடைகின்ற,திரை - அலைகளை யுடைய — பரவை-சமுத்திரஞ்சூழ்ந்த — ஞாலத்து - பூமியினிடத்தில் — உயர்ந்தவர்-பெரியோர்கள்,தொழும்புபூண்ட-தொண்டுபெட்ட — அடியவர் - வேலைக்காரர்கள் — இழைத்த - செய்த — தீமை - குற்றத்தை — அருளொடும்-கிருபையுடனே — பொறுப்பதல்லால் - பொறுத்துக்கொள்வதேயல்லாமல் — கொடியவர்போல - தீயவர்போல — சீறி-கோபித்து — ஆருயிர் -பொருந்தியசீவனை — குறைப்பர்கொல்லோ-சேதிப்பார்களோ — மடலவிழ்-இதழ்கள்விரிந்த — கமலப்போதில்-தாமரைமலரில் — வாள்கிடந்தனைய-இரண்டுவாள்க ளிருந்ததையொத்த — கண்ணாய் - கண்களையுடையதமயந்தியே — எ-று.* அகத்தியம்-சொற்பொருட்படலம்- திணையப்படுதலிற்றிணையெனச்செப்புக (கருத்து) தமயந்தியே பெரியோர் அடியவர்செய்த குற்றமெல்லாம் பொறுப்பதல்லாம லுயிர்ச்சேதம் செய்வாரோ-எ-ம். (௩௫)

அள்ளிலைமணிப்பூங்கோதை யருளெனப்பணிதலோடுங்
கள்ளுவநறியகூந்தல் கலவியினுரைத்தயாவுங்
கிள்ளைகண்மிழற்றுமாறு கேட்டிளநிலவுகாலு
முள்ளெயிறிலங்கச்செல்வி முகிழ்நகைகோட்டினாளே.



(இ-ள்) அள்-நெருங்கிய — இலை-அரசிலைபோன்ற — மணிப்பூண்-இரத்தினாபரணமணிந்த — கோதை-தமயந்தியே — அருளென- கிருபை செய்யென்று — பணிதலோடும்-வணங்கினமாத்திரத்தில் — கள்- தேனானது — உலாம்-பெருகுகின்ற — நறியகூந்தல்-வாசனைபொருந்திய கூந்தலையுடையதமயந்தியானவள் — கலவியில்- புணர்ச்சியில் — உரைத்தயாவும்-சொல்லியதெல்லாம் — கிள்ளைகள்-கிளிப்பிள்ளைகள், மிழற்றுமாறு -சொல்லும்விதத்தை — கேட்டு-காதிற்கேட்டு — இளநிலவு-இளஞ்சந்திரிகையை — காலும்-கக்குகின்ற — முள்-முருந்துபோன்ற, எயிறு-தந்தங்கள் — இலங்க-பிரகாசிக்க — செல்வி-அழகு — முகிழ்- அரும்புகின்ற, நகை-புன்சிரிப்பை — கோட்டினாள்-செய்தாள் — எ-று (கருத்து) நளன் தமயந்தியே கிருபைசெய்யென வணங்கினவுடனே தமயந்தி புணர்ச்சியிற்சொன்ன சொற்களைக்கிளிகள் சொல்லக் கேட்டுநகைத்தாள்-எ-ம்.

இன்னமிழ்துயிர்த்தசெவ்வி யிளநிலாவுருவுவாய்ந்த
நன்னலங்கனிந்தகோதை நகைமுகவாயில்பெற்றுப்
பொன்னவிர்சுணங்குபூத்த புணர்முலைக்கோடுபுல்லிக்
கன்னவிற்றோளான்காமக் கடலகத்தழுந்தினானே.

(இ-ள்) இன்னமிழ்து - இனியவமிர்தத்தை — உயிர்த்த- ஈன்ற — செவ்வி-அழகுபொருந்திய — இளநிலா - இளமைபொருந்திய நிலவை யொத்த — உருவுவாய்ந்த-வடிவம்பொருந்திய — நன்னலம் - நல்லநலமானது — கனிந்த-முதிர்ந்த — கோதை - தமயந்தியினது — நகைமுகம்-புன்சிரிப்பையுடையமுகமாகிய — வாயில்பெற்று - தூதுபெற்று — பொன்னவர்-பொன்னைப்போலும்பிரகாசிக்கின்ற — சுணங்கு - தேமலானது — பூத்த-உண்டாகிய — புணர்-நெருங்கிய — முலை-ஸ்தனமாகிய, கோடு-கொம்பினை — புல்லி-தழுவி — கல்-மலைபோலும் — நவில்- சொல்லாநின்ற — தோளான்-தோளையுடையநளமகாராசன்,காமக்கடலகத்து-காமமாகியசமுத்திரத்தினிடத்தில் — அழுந்தினான் - முழுகினான் — எ-று. * இலக்கணக்கொத்து[தனக்குப்பயனே -பிறர்க்குப்பயனே தனக்கும்பிறர்க்குஞ் சாரிருபயனே,தனக்கும்பிறர்க்கும்பயன்சார்பிலவே, எனநால்வகையின்றேயிவைதாஞ், சிற்றறிவோர் வினை பேரறிவோர் வினை யெனவிருகூறுயெட்டாமென்பர்-இவ்விதியால் அழுந்தினான் தனக்குப்பயன் வினை (கருத்து) நளன் தமயந்தியைப் புணர்ந்து காமக்கடலிலே மூழ்கினான் என்பதாம். (௩௬)

எறிதிரைசுருட்டுமுந்நீ ரினியதெள்ளமிழ்தினோடும்
பொறையுயிர்த்துலகில்வந்தபொலங்கொடியனையநங்கை
கறைதெழுகுருதிவைவேற்கண்வலைப்பட்டுவெம்போர்த்
திறல்கெழுசிங்கவேறுசிமிழ்ப்புண்டுகிடந்ததன்றே.

(இ-ள்) எறி-வீசாநின்ற — திரை-அலைகளை — சுருட்டும்- மடக்குகின்ற — முந்நீர்-கடலானது — இனிய- இனிதாகிய — தெள்-தெளிந்த — அமிழ்தினோடும்-அமிர்தத்தினோடும் — பொறை யுயிர்த்து - பெறப்பெற்று — உலகில்வந்த-உலகத்தின்றோன்றிய,பொலங்கொடியனைய- பொ

ற்கொடியையொத்த—நங்கை - தமயந்தியினது—கறைகெழு - உதிரந்தோய்ந்த,குருதிவைவேல்-சிவந்த கூரியவேல்போன்ற—கண்வலைப்பட்டு-கண்ணின்வலையிலகப்பட்டு—வெம்போர்-வெவ்விய யுத்தத்தில்—திறல்கெழு-வலிமைமிக்க—சிங்கவேறு - நளனாகிய ஆண்சிங்கமானது, சிமிழ்ப்புண்டு-கட்டுப்பட்டு—கிடந்தது -இருந்தது—எ-று. அன்று-ஏ-அசை(கருத்து) தமயந்திகண்களாகியவலைகளில் நளனாகிய சிங்கங்கட்டுப்பட்டிருந்தது-எ-ம். (௫௬)

மல்லலந்தோளினானு மஞ்ஞமதர்நெடுங்கணாளும்
புல்லுவிட்டொழியிலாவி பொன்றிடுமென்னவெண்ணி
யல்லுநன்பகலும்விள்ளாதணிநலம்பருகியாங்குச்
செல்வுழிநிகழ்ந்தவெல்லாஞ்செப்புவான்றொடங்குகின்றேன்.

(இ-ள்) மல்லல்-வலிபொருந்திய—அம் - அழகிய — தோளினானும்-தோள்களையுடையநளனும்—மஞ்ஞை - குளிர்ச்சிபொருந்திய—மதர் -களிப்பையுடைய—நெடுங்கணாளும் -நெடியகண்களையுடைய தமயந்தியும், புல்லுவிட்டு-ஒருவர்க்கொருவர்தழுவுதலைவிட்டு,ஒழியில்-நீங்கில் — ஆவி-உயிரானது—பொன்றிடுமென்ன-இறக்குமென்று—எண்ணி-நினைத்து—அல்லும்-இராப்பொழுதிலும் —நன்பகலும் - பகற்பொழுதிலும்—விள்ளாது-நீங்காமல்—அணி - அழகினது—நலம்பருகி - கலைந்தையுண்டு—ஆங்கு-அவ்விடத்தில்—செல்வுழி-செல்லுமிடத்தில் — நிகழ்ந்தவெல்லாம்-நடந்தனவனைத்தும், செப்புவான்-சொல்லும்படி —தொடங்குகின்றேன் -ஆரம்பிக்கிறேன்—எ-று. (கருத்து)நளனுந்தமயந்தியுமனுபவித்தவிடத்து நடந்தவை யெல்லாஞ் சொல்லத்தொடங்குகின்றேன் என்றார் நூலாசிரியர் என்பதாம். (௫௭)

திருத்துயிலாரமார்பன் சேயரிக்கண்ணியோடு
மருத்தியினுவந்துபைம்பொன்னணிநகர்க்கேகவெண்ணி
விருப்பொடுவிதர்ப்பர்கோனுக் குணர்த்தலும்விதர்ப்பன்காதற்
புரிக்குழன்மடந்தையோடும் வதுவைமண்டபத்திற்புக்கான்.

(இ-ள்.) திருத்துயில்-இலக்குமிதங்குகின்ற—ஆரமார்பன்-பதக்கத்தையணிந்தமார்பினையுடைய நளமகாராஜன்—சேயரிக் கண்ணியோடும்-தமயந்தியோடும்—அருத்தியின் -ஆசையினால்—உவந்து - மகிழ்ந்து—பைம்பொன்-பசியபொன்மயமாகிய—அணிநகர்க்கு - அழகிய மாவிந்தமாநகர்க்கு—ஏகவெண்ணி-போகும்படிநினைத்து — விருப்பொடு ஆசையுடன் —விதர்ப்பர்கோனுக்கு - வீமராசனுக்கு — உணர்த்தலும்-அறிவித்தலும்—விதர்ப்பன்-வீமராசனானவன்—காதல் - ஆசையையுடைய—புரிக்குழல்-கட்டுப்பட்ட- கூந்தலையுடைய—மடந்தையோடும்-துணைவியுடன்—வதுவைமண்டபத்தில்- விவாகமண்டபத்தில், புக்கான்-புகுந்தான்—எ-று.(கருத்து) நளன்தமயந்தியுடனே தன் னூர்க்குப்போகவெண்ணிவீமனுக்கறிவிக்க வீமன்தன்மகளுடன் (கலியாணமண்டபத்துக்குவந்தான் )என்பதாம். (௫௮)



பொழிகதிர்மணியிற்செய்த புதவுடைக்கடிகொள்வாயில்
குழைமுகம்பொருதவேற்கட் கோதையர்விரைவினோடி
விழைவொடும்விதர்ப்பர்கோமான் போந்தமைவிளம்பலோடும்
மழவிடையனையான்போந்து மாமனைத்தழுவினானே.

(இ-ள்) பொழிகதிர் - கதிர்களைவீசுகின்ற—மணியிற்செய்த-இரத்தினங்களாற்செய்த—புதவுடை-கதவையுடைய, கடிகொள்-காவல்கொண்ட—வாயில்-வாசற்படியில்—குழைமுகம் - காதின்முகத்தை—பொருத-மோதிய—வேற்கண் - வேல்போன்ற கண்களையுடைய—கோதையர்—மாதர்கள்—விரைவினோடி-விரைந்துபோயி—விழைவொடும் - விருப்பத்தோடும்—விதர்ப்பர்கோமான்-வீமராசன், போந்தமை-வந்ததன்மையை—விளம்பலோடும் -சொன்னவளவில்—மழவிடையனையான்-இளவேற்றையொத்தநளமகாராசன்—போந்து-வந்து, மாமனை- மாமனை—தழுவினான் - தழுவிக்கொண்டான்—எ-று. (கருத்து) வீமன்வந்ததைப்பெண்கள்சொல்ல நளன்வீமனைத்தழுவினான்-எ-ம் (௫௯)

மழையுறழ்தடக்கைவேந்தன்மனைப்பெருங்கிழமைபூண்ட
தொழுதகுகற்பினாளைச்சுடர்மணிக்கொம்பினொல்கி
யெழில்குவிந்தனையநங்கையிறைஞ்சலுமெடுத்துமோந்து
விழைவொடுகுறங்கில்வைத்து மெய்யுறத்தழுவிக்கொண்டாள்.

(இ-ள்) மழையுறழ்-மேகத்தையொத்த—தடக்கை - விசாலம்பொருந்தியகையையுடைய—வேந்தன்- வீமராசன்—மனை-வீட்டுக்கு—பெருங்கிழமைபூண்ட-பெரியவுரிமையைக்கொண்ட—தொழுதகு-வணங்கத்தக்க—கற்பினாளை - கற்பையுடையதாருகாசனியை—சுடர்- காந்தியையுடைய—மணிக்கொம்பின் - இரத்தினக்கொம்புபோல்—ஒல்கி - வளைந்து — எழில்குவிந்தனைய - அழகெல்லாமொன்றாய்க்குவிந்ததையொத்த—நங்கை-தமயந்தியானவள்—இறைஞ்சலும் - வணங்கலும்—எடுத்து-எடுத்து—மோந்து -மோந்து—விழைவொடு - ஆசையோடு—குறங்கில்வைத்து-துடையின்மேல்வைத்துக்கொண்டு—மெய்யுற -மெய்யிலேபொருந்த — தழுவிக்கொண்டாள் - அணைத்துக்கொண்டாள்—எ-று. (கருத்து) தமயந்திதன்தாயைவணங்கினவுடன் தாயாகியதாருகாசனி மகளையெடுத்து முத்தமிட்டுத் தொடையில்வைத்துத் தழுவிக்கொண்டாள்-எ-ம். (௬௰)

அன்னைதாடொழுதுபின்னரலத்தகக்குழம்புதோய்ந்த
பொன்னிதழ்க்கமலஞ்சேப்பப் புணர்முலைநாங்கலாகா
மின்னுறழ்மருங்குதேம்ப மெல்லெனவொதுங்கிப்போந்து
தன்னுடைத்தாதைபைம்பொற் றாளிணைவணங்கினாளே.

(இ-ள்) அன்னை-தாயினது—தாடொழுது - பாதத்தைவணங்கி—பின்னர்-பின்பு—அலத்தகக்குழம்புதோய்ந்த- செம்பஞ்சுக்குழம்புபடிந்த—பொன்-பொன்னையொத்த—இதழ் - இதழ்களையுடைய—கமலம்-

பாதகமலங்கள்—சேப்ப-சிவக்க—புனை-நெருங்கிய—முலை - ஸ்தனங்களை—தாங்கலாகா-தாங்கமாட்டாத—மின்னுறழ் - மின்னலையொத்த—மருங்கு-இடையானது—நோவ-வருந்த—மெல்லென - மிருதுவாக—ஒதுங்கி-நடந்து—போந்து-வந்து, தன்னுடை-தன்னுடைய, தாதை-வீமராசனுடைய—பைம்-பசிய—பொன் - பொன்னையொத்த—தாளிணை-உபயபாதங்களை—வணங்கினள்-இறைஞ்சினள்—எ-று. (கருத்து) தமயந்திதன் பிதாவாகிய வீமனை வணங்கினள்-எ-ம். (௩௧)

வணங்கிநுண்மருங்குநோவ வல்லியினொல்கிநின்ற
சுணங்கிளமுலையஞ்சாயற் சுடர்க்கொடிதனையும்வேந்தர்
கிணங்கமழ்குருதிவைவே லாளனையுநோக்கிநேரா
ருணங்கியமுன்றில்வேந்த னுவகையங்கடலுளாழ்ந்தான்.

(இ-ள்) வணங்கி-தொழுது—நுண்-நுட்பமாகிய—மருங்கு-இடையானது—நோவ-வருந்த—வல்லியின்-கொடிபோல—ஒல்கி - அசைந்து—நின்ற-எதிர்நின்ற—சுணங்கு-தேமல்பூத்த—இள-இளமையாகிய—முலை-ஸ்தனங்களையும்—அம்-அழகிய—சாயல்- தோற்றத்தையுமுடைய—சுடர்க்கொடிதனையும் - மின்னற்கொடிபோன்றதமயந்தியையும்—வேந்தர்-சத்துருக்களாகிய அரசர்களது—கிணம் - மாமிசம்—கமழ் - நாறுகின்ற—குருதி-உதிரந்தோய்ந்த—வைவேல் - கூரியவேலையுடைய—ஆளனையும்-நளமகாராசனையும்—நோக்கி-பார்த்து—நேரார் - பகைவர்—உணங்கிய- வாடியிருக்கின்ற—முன்றில் - முற்றத்தையுடைய—வேந்தன்-வீமராஜன்—உவகையங்கடலுள் - சந்தோஷமாகியகடலினிடத்தில்—ஆழ்ந்தான்-முழுகினன்—எ-று. (கருத்து) வீமராசன் மகளையுமருமகனையும் பார்த்து மகிழ்ந்தான்-எ-ம். (௩௨)

பண்ணமைகலினமான்றே ராயிரமிரட்டிபாய்மா
வண்ணலங்களிகல்யானை யாயிரத்தறுபத்தொன்பான்
கண்ணகன்விசும்புபூத்த கற்பகத்தருவினோடு
மண்ணிழிந்தனையபேரூ ரைம்பதும்வழங்கினானே.

(இ-ள்) பண்ணமை - சேணமைந்த—கலினம் - கடிவாளத்தையுடைய—மான்-குதிரைகட்டிய—தேராயிரம் - ஆயிரந்தேர்களும்—இரட்டிபாய்மா-இரண்டாயிரங்குதிரைகளும்—அண்ணல் - பெருமையினையும்—அம்-அழகினையும்—களி-செருக்கினையுமுடைய—கல் - கல்ல—யானையாயிரத்தறுபத்தொன்பான் - ஆயிரத்தறுபத்தொன்பதுயானைகளும்—கண்ணகன்-இடமகன்ற—விசும்பு-தெய்வலோகம்—பூத்த- மலர்ந்த—கற்பகத்தருவினோடும் - கற்பகவிருட்சங்களுடனே—மண்- பூமியினிடத்து—இழிந்தனைய - வந்ததையொத்த—பேரூரைம்பதும் -ஐம்பதுபெரியகிராமங்களையும்—வழங்கினான் - கொடுத்தான்—எ-று. ஏ-அசை (கருத்து) வீமராசன் மகளுக்குத் - தேர் - ௲ குதிரை - ௨௲ யானை- ௲௬௯-ஊர்-௫௰-கொடுத்தான் என்பதாம். (௩௩)

பொருதிரைப்புணரியீன்ற பொலன்கொடியனையசெவ்வி
யரிவையரிருபத்தையா யிரவர்கல்லாக்கிலாடும்



வருமுலைப்பவளச்செவ்வாய் வனிதையரெழுநூற்றெண்ம
ரிருபதுகோடிசெம்பொ னினிதினில்வழங்கினானே.

(இ-ள்) பொரு-மோதுகின்ற—திரை - அலைகளையுடைய—புணரி-திருப்பாற்கடலானது—ஈன்ற - பெற்ற—பொலன்கொடி - இலக்குமியை—அனைய- ஒத்த—செவ்வி-அழகையுடைய—அரிவையரிருபத்தையாயிரவர்-இருபத்தையாயிரந்தோழிகளும்—கல்-கல்ல—ஆக்கில்-சபையில்—ஆடும்-ஆடுகின்ற—வரும் - வளர்ந்துவருகின்ற—முலை - ஸ்தனங்களையும்—பவளம்- பவளத்தையொத்த—செவ்வாய் - சிவந்தவாயினையுமுடைய—வனிதையரெழுநூற்றெண்மர் - எழுநூற்றெட்டுநாட்டியப்பெண்களும் — இருபதுகோடிசெம்பொன் - இருபதுகோடிசெம்பொன்னையும்—இனிதினில்-இன்பமாக—வழங்கினான் - கொடுத்தான்—எ-று. (கருத்து) வீமராசன்தோழிகள்-௨௫௲-நாட்டியப்பெண்கள்-௭௱௮-பொன்-௨௰-கோடி-கொடுத்தான் என்பதாம். (௩௪)

பொழிகதிர்மணிசெய்கட்டில் புனைமலர்ப்பாயல்பைம்பொ
னிழைபயில்வண்ணப்பேழை யினியசாந்தாற்றியோடு
கிழிதவழ்மணிக்கண்ணாடி சித்திலமுகடுவேய்ந்த
வொழுகொளிக்கவரியின்ன வுலப்பிலநல்கினானே.

(இ-ள்) பொழிகதிர்-கிரணங்களைப்பொழிகின்ற—மணிசெய - இரத்தினங்களாற்செய்த—கட்டில்-கட்டிலும்—புனைமலர்ப்பாயல் - புட்பசயனமும்—பைம்பொன்-பசியபொன்னாற்செய்த—இழைபயில்- ஆபரணங்கள்வைக்கின்ற—வண்ணப்பேழை - அழகியபெட்டிகளும்—இனிய- இனிமையையுடைய—சாந்தாற்றியோடு - ஆலவட்டத்துடன்—கிழிதவழ் - ஒளிதவழ்கின்ற—மணிக்கண்ணாடி-இரத்தினத்தால்விளிம்புசெய்தகண்ணாடிகளும்—சித்திலம் - முத்துக்களால்—முகடுவேய்ந்த - முகடுசெய்யப்பட்ட—ஒழுகொளி - மிகுந்தஒளியையுடைய—கவரி-சாமரைகளும்—இன்ன- ஆகியவிவைகளை, உலப்பில-அளவற்றவைகளை—நல்கினான்-கொடுத்தான்—எ-று. ஏ-அசை. (கருத்து) வீமராஜன் கட்டில்கள், புட்பசயனம், பெட்டிகள், ஆலவட்டம், கண்ணாடி, சாமரை இவைமுதலிய பலவுங்கொடுத்தான் என்பதாம். (௩௫)

அல்லியங்கமலம்விட் டரசினிற்புகுந்துவாழு
மெல்லியல்பிரியலாற்றா ளிழைவொடுபலகாற்புல்லி
மல்லலந்தெரியல்வீமன் மனைவியர்பலருமாற்றி
யெல்லையிறுயரினோடுந் தனித்தனியிரங்கினாரே.

(இ-ள்) அல்லி-அகவிதழையுடைய—அம்- அழகிய—கமலம் - தாமரைமலரை—விட்டு-விட்டு—அரசினில்-இராசமனையில்—புகுந்து - சேர்ந்து—வாழும்-வாழுகின்ற—மெல்லியல் - இலக்குமியாகியதமயந்தியை—பிரியலாற்றா-பிரியமாட்டாத—இழைவொடு - ஆசையுடனே—பலகால்-பலதரம்—புல்லி- அணைந்துக்கொண்டு—மல்லல் - வளப்பத்தையுடைய—அம்-அழகிய—தெரியல் - மாலையணிந்த—வீமன் - வீமராசனுடைய—மனைவியர்பலரும்-தேவிமார்பலரும்—மாற்றி - மயங்கி—எல்லையில்-அளவில்லாத—துயரினோடும் - துன்பத்தோடும்—தனித்தனி-

தனித்தனியாக—இரங்கினர்-அழுதார்கள்—எ-று. ஏ-அசை. (கருத்து) வீமன்மனைவிகள் பலரும்தமயந்தி பிரிவைச்சகியாய லாசையோடு அழு தார்கள் என்பதாம். (௬௬)

பெருந்துயருழந்துவாடும் பிணையனார்தம்மைநோக்கி
விரிந்தபூந்துளவினோன்பின் விராமலர்க்கோதையேக
வருந்திமுன்னுயிர்த்ததெண்ணீர் மறிகடல்வருந்திற்றேவென்
றருந்தவர்க்கிறைவனான கோதமனாற்றினனே.

(இ-ள்) பெருந்துயருழந்து - மிகுந்ததுன்பத்திலலைந்து—வாடும் வருந்துகின்ற—பிணையனார்தம்மை - மானையொத்தமங்கையரை—நோக்கி-பார்த்து—விரிந்த - மலர்ந்த—பூம் - புட்பத்தையுடைய—துளவினோன்பின்-துளபமாலையையுடையமகாவிஷ்ணுவின் பின்னே—விரா-வாசனைபொருந்திய—மலர் - தாமரைமலரில்வாசமாயிருக்கின்ற—கோதை-இலக்குமியானவள்—ஏக-போக— வருந்தி - வருத்தப்பட்டு—முன்னுயிர்த்த-முன்னேபெற்ற—தெண்ணீர்-தெளிந்த நீரையுடைய—மறி-புரளாநின்ற—கடல்-சமுத்திரமானது—வருந்திற்றோவென்று - வருத்தமுற்றதோவென்று—அருந்தவர்க்கு - அரியதவத்தையுடையவர்க்கு—இறைவனான்-அரசனான—கோதமன் - கௌதமன்—ஆற்றினன்-தேற்றினன்—எ-று. (கருத்து) கௌதமர் வீமன் மனைவிகளைத்தேற்றினர்-எ-ம. (௬௭)

அன்னையாம்மெலோதித் * தோழியையருளினோக்கி
யுன்னினுமிவண்மேற்காதலுளமெனவுரைக்கிலேமா
லென்னினுமின்றுதொட்டுமின்னுயிர்த்தோழியல்லை
மின்னனாட்கன்னைநீயேவேண்டுவபுரிதியென்றார்.

(இ-ள்) அன்னையர்-தாய்மார்கள்—அம-அழகிய—மெல் - மிருதுவாகிய—ஓதி-கூந்தலையுடைய—தோழியை - உயிர்ப்பாங்கியை —அருளின்-கிருபையினால்—நோக்கி-பார்த்து—உன்னினும் - உன்னைப் பார்க்கிலும்—இவண்மேல்-இந்தத்தமயந்தியின்மீது —காதல்-ஆசை—உளமென-உண்டோமென —உரைக்கிலேம்-சொல்லுகின்றிலேம்—என்னினும்-ஆனாலும்—இன்றுதொட்டும்-இன்றுமுதலாகவும்— இன் - இனிதாகிய—உயிர்த்தோழியல்லை-உயிர்ப்பாங்கியல்லை—மின்னனாட்கு - மின்னலையொத்ததமயந்திக்கு—அன்னைநீயே - நீயேதாய் — வேண்டுவ-வேண்டியனவைகளை—புரிதியென்றார் - செய்யென்றுசொன்னார்கள்—எ-று. [* அகத்தியம்-சொற்பொருட்படலம்-தோழமை கொள்ளலாற்றோழியெனச்சொல்லே (கருத்து) தாய்மார்களனைவரும் தமயந்திதோழியைப்பார்த்து இன்றுதொடங்கித் தமயந்திக்குத் தோழிநீயல்ல நீயேதாய் இவளுக்குவேண்டுவனவற்றைச்செய்யென்றார்கள்-எ-ம. (௬௮)

# மணம்புரிபடலம்

முற்றிற்று.

உ

# மீட்சிப்படலம்.

இப்படலத்தால் நளமகாராஜன் தமயந்தியோடுந் தன்னகரத் திற்குப் போகுதல் சொல்லப்படுகின்றது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மற்றிவைநிகழும்வேலை மகிழ்வொடுமாமன்றன்பால்
வெற்றிகொள்குருதிவைவேல் வேந்தர்கோன்விடைகொண்டேகி
யற்றமில்கேள்விசான்றவமைச்சரையினிதினோக்கி
* யிற்றைநாளெழுச்சியென்னவிமிழ்முரசறைகவென்றான்

(இ-ள்) மற்றிவை - பின்பிக்காரியங்கள்—நிகழும்வேலை-நடக்கும் பொழுது—மகிழ்வொடு-சந்தோஷத்துடனே—மாமன்றன்பால்- வீமராஜனிடத்தில்—வெற்றிகொள்-சாதித்தைக்கொண்ட —குருதி- இரத்தந்தோய்ந்த—வை-கூர்மைபொருந்திய—வேல் -வேலையுடைய—வேந்தர்கோன்-நளமகாராஜன்—விடை கொண்டேகி- உத்தரவுபெற்றுக்கொண்டுபோய்—அற்றமில்-சோர்வில்லாத—கேள்வி- கல்விகள்—சான்ற-பொருந்திய—அமைச்சரை-மந்திரிகளை—இனிதினோக்கி- இன்பமாகப் பார்த்து—இற்றைநாள்-இன்றையதினம்—எழுச்சியென்ன-புறப்படுதலென்று—இமிழ்-சத்தியாநின்ற—முரசு - பேரிகையை—அறைக வென்றான்-அடியுங்களென்றுசொன்னான்—எ-று* நன்னூல்-ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே(கருத்து)நளன் வீமனிடத்துவிடைபெற்றுக்கொண்டுமந்திரிகளைப்பார்த்து இன்று புறப்படுதலென்று முரசறையச்சொன்னான்-எ-ம். (௧)

கலிவிருத்தம்.

அண்ணலங்குருதிவேலரசனேவலிற்
கண்ணகன்முரசெழு கடலின்ஆர்த்தெழ
வெண்ணிடமிடமிலை யென்னநேமிசூழ்
மண்ணகவளாப்பெலா மலிந்ததானையே.

(இ-ள்) அண்ணல் - பெருமைபொருந்திய—அம் - அழகிய—குருதி-இரத்தந்தோய்ந்த—வேல்-வேலாயுதமேந்திய— அரசன்- நளமகாராஜனுடைய—ஏவலில்-உத்தரவினால்—கண்ணகன்-இடமகன்ற—முரசு-பேரிகையானது—எழுகடலின்-ஏழ்கடலின் ஒலியைப்போல,ஆர்த்தெழ-மிகுந்தொனிக்க,என்ன-என்னே—இடம்-இதற்குஇடமிலையென்ன-இடமில்லையென்றுசொல்ல,நேமிசூழ்-சமுத்திரஞ்சூழ்ந்த,மண்ணகம்-பூமியினுடைய,வளாப்பெலாம்-எல்லையெல்லாம், மலிந்த-நிறைந்தன—

தானையே-சேனைகள்—எ-று.(கருத்து) நளனேவலால் முரசறையச்சே
னைகள் நிறைந்தனவென்பதாம். (௨)

* நிலவுவெண்கவிகைமே னிழற்றத்தண்மதிக்
கலைநிலாக்குவிந்தன கவரிகால்செய
மலர்தலையுலகெலாம்புரக்குமன்னவன்
அலையுலாந்தமனியத் தேரின்மேலேறினான்.

(இ-ள்) நிலவு-பிரகாசியாநின்ற—வெண்கவிகை - வெண்கொற்றக்
குடையை—மேல்-மேலே—நிழற்ற- பிடிக்க—தண் - குளிர்ச்சிபொ
ருந்திய—மதி-சந்திரனுடைய—கலை- சோடசகலைகளின்—நிலா - பிர
காசம்—குவிந்தன - குவிந்ததோற்றம்போல்—கவரி - சாமரைகள்—கா
ல்செய - காற்றைச்செய்ய — மலர்தலையுலகெலாம் - பரந்தவிடத்தையு
டைய உலகமுழுதும்—புரக்கும்-இரட்சிக்காநின்ற—மன்னவன்-அரச
ன்—அலை-மலைபோல்—உலாம் - உலாவுகின்ற—தமனியம்-பொன்னாகி
ய—தேரில் - இரதத்தின்மேல்—ஏறினான்-ஏறிக்கொண்டான் —எ-று.
*அகத்தியம் குறிற்கீழாவே குறுகியுகரம் பெறும் (கருத்து) நளன்தேரி
லேறினான்-எ-ம். (௩)

கலிகெழுமுரசகண் கறங்குமோதையாற்
பொலன்முகடுடைந்துமேற் போயிற்றில்லையேல்
அலர்தலைவிசும்பினி லடங்கலாவதே
நிலமிசையெழுந்துமே னிமிர்ந்ததூளியே.

(இ-ள்) கலிகெழு-சத்தம்பொருந்திய—முரசகண் - பேரிகையின்
கண்ணானது—கறங்கும்-ஒலிக்கும்—ஓதையால் - சத்தத்தினால்—பொ
லன்-அழகுபொருந்திய—முகடு-அண்டமுகடானது—உடைந்து - உ
டைவுபட்டு—மேற்போயிற்றில்லையேல்- மேலண்டங்களிற் போகாமற்
போனால்—அலர்தலை- பரந்தவிடத்தையுடைய — விசும்பினில்- ஆகா
யத்தில் அடங்கலாவதே;- அடங்குவதாவதா—நிலமிசை - பூமியின்மீ
தே—எழுந்து-எழும்பி—மேல்-மேலே—நிமிர்ந்த-உயர்ந்த—தூளி - பு
ழுதிகள்—எ-று.(கருத்து)புழுதிகள்பேரிகைச்சத்தத்தாலண்டமுடை
ந்து அப்பாற்போகாவிடிற்பூமிகொள்ளுமோவென்பதாம். (௪)

இருங்கடற்றுறையி னெழுந்தநுண்டுகள்
பொருங்களி றுமிழ்மதம் பொழிந்ததில்லையேற்
கருங்கடலளறெழப் பருகிக்கார்க்குலம்
ஒருங்குவான் பொழியினு மொழிக்கவொண்ணுமே.

(இ-ள்) இரும்-பெருமைபொருந்திய—கடற்றுறையின் - சேனாச
முத்திரத்தில்—எழுந்த - எழும்பிய—நுண்டுகள் - நுண்ணியபொடிக
ள்—பொரும்-சண்டைசெய்யாநின்ற—களிறு-யானைகள்—உமிழ் - கக்
காநின்ற—மதம்-மும்மதத்தையும்—பொழிந்ததில்லையேல் - பொழியா
மற்போனால்—கரும் - கருத்த— கடல் - சமுத்திரசலத்தை — அளறெ
ழ-சேறுபட—பருகி-குடித்து—கார்க்குலம் - மேகக்கூட்டங்கள்—ஒரு



ங்கு-ஒருமுகமாய்—வான்-ஆகாயத்தினின்று—பொழியினும் - சொரிந்
தாலும்—ஒழிக்கவொண்ணுமோ-போக்கக்கூடுமோ—எ-று. (கருத்து)
யானைகள்மதம்பொழியாவிடில் மேகங்கள் கடலை முற்றுங் குடித்துப்
பொழியினும்புழுதிகளை ஒழிக்கக்கூடுமோவென்பதாம். (௫)

சுடர்விடுபருமணிச்சூட்டராவின்மே
னெடுநிலந்துளக்குறநின்றவாற்றினாற்
படர்இருவிசும்பினிற்பாய்ந்தவல்லது
புடவிமேன்மிதித்திலபுரவிவெள்ளமே.

(இ-ள்) சுடர்-பிரகாசத்தை—விடு - வீசாநின்ற—பருமணி - பரு
த்தஇரத்தினங்கள்பொருந்திய—சூட்டு-சுடிகையையுடைய, அராவின்
மேல்-ஆதிசேஷன்மீது—நெடுநிலம்-நெடியபூமி — துளக்குற-அசை
வுற—நின்றவாற்றினால்-இருந்தபடியால்—படர்-விரிந்த—இரு - பெரு
மைபொருந்திய—விசும்பினில் - ஆகாயத்தில்—பாய்ந்தவல்லது -தாவி
ச்சென்றனவல்லாமல்—புடவிமேல்-பூமியின்மீது—மிதித்தில- நடக்க
வில்லை—புரவிவெள்ளம்-குதிரைக்கூட்டங்கள்—எ-று. வெ-அசை(கருத்
து) குதிரைக்கூட்டங்கள் ஆகாயமார்க்கமாகப்போயினவென்பதாம்(௬)

புதையிருள்சீத்தொளிபொழியுஞ்செங்கதி
ருதயமால்வரையெழுவொளியிழந்தலான்
மதிபலவாய்வெயின்மறைத்தல்போலுமாற்
கதிர்நிலாமுத்தவெண் கவிகையீட்டமே.

(இ-ள்.) புதை -நிறைந்த—இருள் - இருளை—சீத்து-கெடுத்து-ஒ
ளி-பிரகாசத்தை—பொழியும்-சொரியாநின்ற—செங்கதிர் - சூரியன்—
உதயமால்வரையெழு-உயர்ந்தவுதயகிரியிலுதிக்க—ஒளியிழந்தலால் -
பிரகாசத்தைநீத்ததனால்—மதி-சந்திரனானவன்—பலவாய் - அநேக
ரூபமாய்—வெயில்-சூரியனை—மறைத்தல்போலும் - மறைத்தலையொக்
கும்; கதிர்நிலா-நிலவுபோற்கிரணத்தைவீசுகின்ற, முத்தம் - முத்தினாற்
செய்த—வெண்-வெண்மைபொருந்திய—கவிகையீட்டம் - குடையின்
கூட்டங்கள்—எ-று. ஆல்-ஏ-அசைகள் (கருத்து) குடைக்கூட்டங்கள்
அநேகசந்திரனையொத்திருந்தன-எ-ம். (௭)

மழலையங்கிள்ளையும் வளர்த்தபூவையுங்
குழைபொருதடங்கணார் கொண்டுசூழ்வர
இழைவளர்முலையினாரினிலக்கதர்
பொழிமணிச்சிவிகையிற் போயினாரரோ.

(இ-ள்) மழலை-மழலைச்சொல்லையுடைய—அம்-அழகிய— கிள்ளை
யும்-கிளிகளும்—வளர்த்த-தாம்வளர்த்த, பூவையும் - நாகணவாய்ப்புள்
ளும்—குழை-குண்டலமணிந்காதுடன்—பொரு-போர்செய்யாநின்
ற—தடம்-விசாலமாகிய—கணார்-கண்களையுடையதாதியர்கள்— கொண்
டு-கையிற்கொண்டு—சூழ்வர-சூழ்ந்துவர—இழை - ஆபரணங்களைய
ணிந்த—வளர்-வளர்ந்துவாராநின்ற — முலையினள் - ஸ்தனங்களையுடை

யதமயந்தி—இளநிலா - இளஞ்சந்திரன்போல,கதிர்-கிரணங்களை, பொழி - சொரியாநின்ற—மணிச்சிவிகையில் - ரத்நப் பல்லக்கின்மீது—போயினள்-போனாள்—எ-று.அரோ - அசை—(கருத்து) தமயந்தி பெண்கள்சூழ்ந்துவர ரத்நச் சிவிகையின்மேற்போயினாளென்பதாம். (அ)

கதிர்மணியடைப்பையுங்காள்செய்வட்டமுந்
ததைமயிர்க்கவரியுந்தாங்கிமெல்லென
வதிர்குரற்கிண்கிணிசிலம்பொடார்ப்பெழ
மதாரிநெடுங்கணார் மருங்குபோயினார்

(இ-ள்) கதிர் - கிரணங்களையுடைய—மணி-இரத்தினத்திழைத்த—அடைப்பையும்-தாம்பூலப்பையும்—கால்செய்வட்டமும்-விசிறிகளையும்—ததை-நெருக்கிய—மயிர்-மயிரையுடைய,கவரியும் - சாமரைகளும்—தாங்கி-சுமந்து—மெல்லென-மெதுவாக,அதிர்-உதிர்ந்த — குரல்-சத்தத்தையுடைய—கிண்கிணி- கிண்கிணிகள்—சிலம்பு - சிலம்புகளுடனே—ஆர்ப்பெழ-ஆரவாரிக்க— மதர்-மதர்த்த—அரி - செவ்வரிபரந்த—நெடுங்கணார்-நீண்டகண்களையுடைய மாதர்கள்— மருங்கு - பக்கத்தில்—போயினார் - போயினார்கள்—எ-று. (கருத்து)பெண்கள். அடைப்பை-ஆலவட்டம்-சாமரை-இவைகளைத்தாங்கிப்பின்சென்றார்கள் எ-ம்

சாந்தணிந்தோங்கியதடங்கொள்வெம்முலை
யேந்திழைத்தோழியரெண்ணின்மங்கையர்
பூந்தருநீழலிற்பொன்னனாரெனக்
கூந்தலம்பிடிமிசைக்குழாங்கொடேகினார்

(இ-ள்)சாந்து-சந்தனத்தை அணிந்து-தரிக்கப்பெற்று—ஓங்கிய-உயர்ந்த—தடங்கொள்-விசாலத்தைக்கொண்ட—வெம்- விருப்பத்தைத்தரும்—முலை-ஸ்தனத்தினிடத்தில்—ஏந்திழை - ஆபரணங்களைத்தாங்கிய—தோழியர்-பாங்கியர்களும்—எண்ணில் - எண்ணிக்கை யில்லாத—மங்கையர்-பெண்களும்—பூ-பூவினையுடைய—தரு- கற்பகவிருட்சத்தினது—நீழலில்-நிழலில்வாசம்பண்ணுகிற,பொன்னனாரென -இலக்குமியையொத்த அரம்பைமாதர்கள்போல — கூந்தல் - புறமயிரினையுடைய—அம்-அழகிய—பிடிமிசை-பெட்டையானையின்மேல்— குழாங்கொடு-கூட்டங்கொண்டு—ஏகினார் - போயினார்கள்——எ-று, (கருத்து)தோழிமார்களும்பெண்களும் யானைமேலேறிப்போனார்கள்-எ-ம். ()

கான்மையின்மரைமலர்ச்செல்விகாமுறு
மான்பயிறோக்கியர்மகரயாழிடைத்
தேன்பயிறென்விளிபாடத்தேரையிற்
கூன்களுஞ்சிந்தொடுகுறளுஞ்சென்றவே,

(இ-ள்) கான்-வாசனை—பயில்-பொருந்திய—மரைமலர் - தாமரைமலரில்வாசம்பண்ணுகின்ற—செல்வி-இலக்குமியானவள் —காமுறும் -இச்சியாநின்ற—மான்-மான்கள்—பயில்-கற்காநின்ற—நோக்கியர்-பார்வையையுடையமாதர்கள்—மகரயாழிடை - மகவீணையினிடத்தில்—



தேன்பயில் - தேன்போல்மதுரம்பொருந்திய—தென்விளிபாட - தெள்விளியென்னும்இராகத்தைப்பாட—தேரையில் - தேரைப்போல்—கூன்களும்-கூனரும்—சிந்தொடு-அவயவமற்றவருடன், குறளும்-குள்ளரும்—சென்ற - போயினர்—எ-று. (கருத்து) பெண்கள்மகரயாழ்பாடக் கூனரும் அவயவமிலரும் குள்ளரும்போனார்கள்.எ-ம். (௰க)

கொடிகளுங்குடைகளுங்குழூஉப்பல்லியங்
கடலுடைந்தாலெனக்கறங்கியார்த்தெழ
வடிகெழுகுருதிவேன்மன்னர்சூழ்வர
விடந்தாடடைந்தனனேமிவேந்தனே.

(இ-ள்) கொடிகளும்-துவசங்களும்—குடைகளும் - கவிகைகளும்—குழூஉ-திரள்வர—பல்லியம்-பலவிதவாத்தியங்கள்—கடலுடைந்தாலென-சமுத்திரமுடைத்துவருதல்போல்,கறங்கியார்த்தெழ-குமுறி யாரவாரிக்க—வடிகெழு - வடித்தல்பொருந்திய—குருதி - இரத்தந்தோய்ந்த—வேல்-வேலாயுதத்தையுடைய—மன்னர்-அரசர்கள்—சூழ்வர-சூழ்ந்துவர—விடந்தாடடைந்தனன் - விடநதேயத்தைச்சேர்ந்தான்—நேமி உலகத்தையுடைய—வேந்தன்-நளமகாராசன்—எ-று. (கருத்து)நளன் அரசர்கள்புடைசூழ்ந்துவர விடநாட்டைச்சேர்ந்தான்—எ-ம். (௰உ)

அருமறைமுனிவருமமைச்சர்வெள்ளமுங்
குணகடற்றானையுங்குரவரீட்டமு
முரசொலியதிர்குரன்முகிலினார்த்தெழ
விருநிலக்கிழவனையெதிர்கொண்டாரரோ

(இ-ள்) அரும்-அரியதாகிய—மறை-வேதத்தையுடைய—முனிவரும் - வேதியரும்—அமைச்சர்வெள்ளமும்-மந்திரிகளின்கூட்டமும்—குணகடற்றானையும்—சேனாசமுத்திரமும்—குரவரீட்டமும்-பெரியோர்கள்கூட்டமும்—முரசொலி -பேரிகையின்சத்தமானது—அதிர்குரல் - அதிர்கின்றகுரலையுடைய—முகிலின் - மேகம்போல—ஆர்த்தெழ- ஆரவாரிக்க—இரு-பெரிய—நிலக்கிழவனை - பூமிக்குரியநளமகாராசனை—எதிர்கொண்டார் - எதிர்கொண்டார்கள்—எ-று.அரோ அசை (கருத்து) முனிவர்களும் மந்திரிகளும்,சேனைகளும், பெரியோர்களும் நளனுக்கெதிர்வந்தார்கள் என்பதாம். (௰௩)

அகழியங்கடல்புடையணிந்தகன்றிற
முகிறவழ்முடிதயின்முற்றியின்னதிற
புகைகயமெறிமணிப்பொன்செய்மாடத்தி
னகநிலாமதிதவழ்நகரமெய்தினான்.

(இ-ள்) அகழி-இடங்காகிய—அம்-அழகிய—கடல் - சமுத்திரத்தை—புடை-பக்கத்தில்அணிந்து—அகன்ற-விசாலமான—திறம்-நிலைமைபொருந்திய—முகில் தவழ்-மேகந்தவழாநின்ற—முடி தயில் - உச்சியையுடைய—முற்றி - சூழ்ந்து—இன்னதில் - இனிய அதிலின்று—புகையான அ

—கமழ்-பரிமளியாநின்ற—எரி-பிரகாசம்பொருந்திய—மணி - இரத்தினத்தினலும்—பொன்செய்-பொன்னுற்செய்த,மாடத்தின். உப்பரிகையின்மீது—கலைக்-கிரணமாகியாநின்ற—நிலா-சந்திரிகையையுடைய—மதி தவழ்-சந்திரன்தவழாநின்ற—நகரம் -மாவிந்தநகரத்தை—எய்தினன்-சேர்ந்தான்—எ-று. (கருத்து) நளன்மாவிந்தநகரத்தைச்சேர்ந்தானென்பதாம். (௩௪)

பொருவருங்கங்கைநீர்நிறைத்துப்பூசுர
ரெரிமணிப்பொற்கும்பேந்திமுன்வர
விரைகமழ்செழுந்தொடைவீமன்மாதொடுந்
திருவளர்கோயிலிற்செல்வனெய்தினன்.

(இ-ள்) பொருவரும்-ஒப்பில்லாத—கங்கைநீர்-கங்காஜலத்தை—நிறைத்து-பூரித்து—பூசுரர்-வேதியர்கள்—எரிமணி - பிரகாசம்பொருந்திய இரத்தினமழுத்திய—பொற்கும்பு - பொன்னுற்செய்தபூரணகும்பத்தை—ஏந்தி-தாங்கி—முன்வர-எதிர்வர—விரை-வாசனை—கமழ் - பரிமளியாநின்ற—செழும்-செழுமையாகிய—தொடை - மாலையையணிந்த—வீமன்மாதொடும்-தமயந்தியினுடனே—திருவளர் - இலக்குமிவாசம்பண்ணுகின்ற—கோயிலில்-அரண்மனையில்—செல்வன் - நளமகாராசன்—எய்தினன்-சேர்ந்தான்—எ-று. (கருத்து) பிராமணர்கள் கங்கையைப்பொற்குடத்திற் கொண்டெதிர்வர நளமகாராசன் தமயந்தியுடனே அரண்மனையிற்சேர்ந்தான்-எ-ம். (௩௫)

மீட்சிப்படலம்-முற்றிற்று.

௨.

## கலிதோன்றுபடலம்.

இப்படலத்தால் தமயந்தியின் விவாகத்தைக்கருதிவந்தகலி அவளை நளன் விவாகஞ்செய்தானென்னும் பொருமையால் அவனை வருத்துதற்கு அவனது நகரத்திற் றோன்றிக்காலம் பார்த்திருத்தல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

சங்கிவளின்னண மிருப்பவானிடைப்
பூங்கழல்விண்ணவர் போருமேல்வையிற்
றீங்குறுபடிபழி திதுசூழ்வா
வாங்கவர்முன்கலியடைந்ததோதுவாம்.

(இ-ள்) சங்கு-மாவிந்தமாநகரத்தில்—இவன் -இந்தனளமகாராஜன்—இன்னணம்- தமயந்தியோடெகிழ்ந்து—இருப்ப - இருக்க—வானிடை-ஆகாயத்தினிடத்தில்—பூ-அழகிய—கழல் - வீரகண்டாமணியையணிந்த—விண்ணவர் -தேவர்கள்—போருமேல்வையில் - போகுந்சமயத்தில்—தீங்குறு-குற்றம்பொருந்திய—படிபழி - படிபழியும்—தீதுசொல்லாக்கும்—சூழ்வா - சுற்றிக்கொண்டுவா—அவர்முன் - அந்தத்தேவர்களுக்கெதிரில்—கலி -கலிபுருஷனானவன்—அடைந்தது—வந்ததை—ஓதுவாம்-சொல்லுவோம்—எ-று. ஆங்கு-அசை. (கருத்து) நளன் மாவிந்தமாநகரி லிருக்கத்தேவர்கள் போகும்போது அவர்களெதிர் கலிபகவான் வந்ததைச்சொல்லுவோம் என்பதாம். இஃது -புராணிகர் கூற்று. (௧)

வந்தவெங்கொடுங்கலி தன்னைவான்பட
ரிந்திரன் யாண்டுநீ யேகின்றாயெனச்
சந்தணிமுலைத்தமயந்திமன் றல்கேட்
டந்தமில்வேட்கையா லடைந்துளேனென்றான்.

(இ-ள்) வந்த-எதிரில்வந்த—வெம் -வெவ்விய—கொடும் - கொடுமையையுடைய—கலிதன்னை - கலிபுருஷனை—வான் - தெய்வலோகத்தைநோக்கி—படர்-போகின்ற—இந்திரன் - தேவேந்திரன்—யாண்டு-எவ்விடத்துக்கு—நீ-நீ—ஏகின்றாயென - போகின்றாயென்றுகேட்க—சந்தணி-சந்தனத்தையணிந்த—முலை- ஸ்தனங்களையுடைய—தமயந்தி-தமயந்தியினது—மன்றல்-கலியாணத்தை—கேட்டு-கேள்விப்பட்டு—அந்தமில்-முடிவில்லாத—வேட்கையால் - ஆசையினால்—அடைந்துளேனென்றான்-வந்தேனென்றான்—எ-று. (கருத்து) இந்திரன்கலிபுருஷனை எங்கே போகின்றாயெனக்கேட்க அச்சனிபகவான் தமயந்தி விவாகத்திற்குப்போகின்றேனென்றான்-எ-ம். (௨)

என்றலுமமரர்கோன் முறுவலெய்திஅம்
மன்றலுக்கோதனி வந்ததீங்கெனு
வென்றிவேலிடர்கோன் றனக்குமென்றெடை
துன்றிருக்கூந்தலாள்சூட்டினளென்றான்.

(இ-ள்)என்றலும் - இப்படியென்றுசொன்னவளவில்—அமரர்கோன் - தேவேந்திரன்—முறுவலெய்தி-சிரித்து—அம்மன்றலுக்கோ-அந்தக்கலியாணத்திற்கோ—தனி-தனியாய்—வந்ததீங்கெனு-இவ்விடத்திலவந்தனென்று —வென்றி - வெற்றிபொருந்திய—வேல் - வேலையுடைய—இடர்கோன்றனக்கு-நளமகாராசனுக்கு—மென்றொடை-மிருதுவாகியமாலையை,துன்று-நெருங்கிய, இரும்-பெருமைபொருந்திய,கூந்தலாள்-கூந்தலையுடையதமயந்தி —சூட்டினளென்றான் - அணிந்தாளென்று சொன்னான்—எ-று. (கருத்து) இந்திரன் தமயந்தி நளனுக்கு மாலையிட்டாளென்றான்-எ-ம். (௩)

விண்ணவரனைவருமவெள்கப்பூந்தொடை
மண்ணகத்தரசனுக்கவளியுராணிறை
யெண்ணமுங்கெடுத்தவட் பிரிப்பனென்றெனைக்
கண்ணமுல்கதுவவெங்கலியுங்கூறினன்.

(இ-ள்) விண்ணவரனைவரும்-தேவர்களியாவரும்—வெள்க-வெட்கப்பட—பூந்தொடை-புட்பமாலையை—மண்ணகத்தரசனுக்கு - பூலோகத்தரசனுக்கு—அணியும் - தரித்த—மாணிழை - மாட்சிமைபொருந்தியவாபரணங்களையுடைய பெண்ணினது— எண்ணுறுவெழுத்து - நினைப்பும்புலவெடச்செய்து—அவனை - அவனை—பிரிப்பன் - பிரித்துவிடுவேன்—என்றெடுஞ- இவ்விடத்தின்று—கண்ணழுலகத்துவ-கண்களில் நெருப்புப்பொறிபறக்க—வெங்கலியும் - வெவ்வியகலிபுருடனும்—கூறினன்-சொன்னன்-எ-று. (கருத்து) தேவர்கள்வெட்க நளனுக்கு மாலைதரித்ததமயந்தியை பிரிப்பேனென்றுசனிபகவான் சொன்னன்-எ-ம.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருந்ததிகற்பினல்லா ளரசிளங்குமரன்றன்னைப்
பிரிந்திடவியற்றிப்பின்னர் பெறுவதுதீமையன்றே
விரிந்தநூற்கேள்வியென்னும்பிறர்பனைவிழையவுள்ளம்
பொருந்தியதெவன்கொல்கல்லாப் புல்லரிற்புகழின்மிக்கோய்.

(இ-ள்) அருந்ததி-அருந்ததியையொத்த.கற்பின் - பதிவிரதத்தையுடைய—நல்லாள்-தமயந்தி—அரசிளங்குமரன்றன்னை - இளமைபொருந்தியராசகுமாரனுகளானைகளாசனை — பிரிந்திடவியற்றி - நீக்கும்படிசெய்து—பின்னர்-பின்பு—பெறுவது - அந்தமாதைப்பெற்றுக்கொள்வது—தீமையன்றே - குற்றமல்லவே—விரிந்த - பரந்த—நூற்கேள்வி - நூல்விசாரணை—என்னும் - யாதுபயனைத்தரும்—பிறர்மனைவிழைய-பிறர்மனைவியைவிரும்ப— உள்ளம்பொருந்தியதெவன் - மனதுசம்மதித்ததுஎன்னகாரணம்—கல்லா - படியாத—புல்லரில் - மூடரைப்போல்—புகழின்மிக்கோய்-கீர்த்தியின்மிக்கவனே—எ-று. கொல்-அசை (கருத்து) இந்திரன் நளனைவிட்டுத் தமயந்தியைப் பிரித்தலேதப் பெறுவதுகுற்றமல்லவாபிறன்மனைவியையிச்சிப்பதென்னவென்றான்-எ-ம.

இனையனவமரர்கூற விருகையும்புடைத்துக்கொட்
புனைமலர்க்கோதைநல்லார் புணர்முலைகுழையப்புல்லி
வனைதுகிநெகிழ்க்குமின்ப வாழ்வினையன்றிமற்றோர்
வினைவருமின்பமுண்டேலிகழ்த்துதிர் கேளொன்றான்.

(இ-ள்) இனையன-இப்படிபட்டவைகளை— அமரர்கூற - தேவர்கள் சொல்ல—இருகையும்-இரண்டுகைகளையும்—புடைத்து- கொட்டி—கொட்டிசிரித்து—புனைமலர்க்கோதைநல்லார் - மலரால் அலங்கரிக்கப்பெற்ற கூந்தலையுடையமாதரது—புணர்முலை-நெருங்கியமுலைகளை — குழையப்புல்லி-குழையும்படி தழுவி—வனை-கட்டியிருக்கின்ற—துகில் - ஆடையை—நெகிழ்க்கும்-அவிழ்க்கின்ற —இன்பவாழ்வினையன்றி - காமவின்பவாழ்வினையல்லாது — மற்றோர்-வேறுமொரு வினைவருமின்பமுண்டேல்-வினைத்தறியவின்பமுண்டாயின்—இகழ்த்துதிர் - சொல்லுங்கள்—கேளொன்றான்-கேட்கவென்றுசொன்னான் —எ-று. (கருத்து) தேவர்களிவ்வாறுசொல்லச் சனிபகவான் பெண்களின்பத்தைப் பார்க்கிலும் வேறின்பமுண்டானுற் சொல்லுமென்றான்-என்பதாம். (௬)



மறைநெறிபிறழக்கூறுமிவனெடும்வாய்மைகூறி
லறநெறிதிறம்புமென்று வமரரும்விசும்பிற்போனார்
தெறுதொழிற்கலியுங்காமம் சிறைகடந்துமீதூரவேத
நெறிமுறைவழுவல்செல்லா நிடதநாடதனிற்சென்றான்.

(இ-ள்) மறைநெறி-வேதவழி—பிறழ-மாறுபட—கூறும் - சொல்லும்—இவனெடும்-இக்கலியினேடும்,வாய்மைகூறில் - உண்மைபேசில்—அறநெறி-தருமவழி—திறம்புமென்று - கெடுமென்று — அமரரும்-தேவர்களும்—விசும்பிற்போனார் - சொர்க்கத்தைச்சேர்ந்தார்கள் —தெறு-கொல்லாநின்ற—தொழில்-செய்கையையுடைய—கலியும் - கலிபுருஷனும்—காமம்-விரகமானது—சிறைகடந்து - வரம்புகடந்து—மீதூர-அதிகரிக்க—வேதநெறிமுறை - வேதவழியின்முறை யானது —வழுவல் செல்லா-மாறுபடாத—நிடதநாடதனில் - நிடததேயத்தில்—சென்றான்-போனான்—எ-று. (கருத்து) தேவர்களிவனுடன்பேசிற் றருமங்கெடுமென்று சுவர்க்கத்திற்குப்போனார்கள் சனிபகவான் நிடதநாட்டிற்குப்போனான்-எ-ம. (௭)

மல்லலம்பழனவேலிவளங்கெழுநிடதநாட்டி
னல்லலுற்றரிதிற்செல்லுங் கொடுங்கலியமரர்வேட்ப
வெல்லையில்வேள்வியாற்றி யருமறைபயில்வோரெங்குந்
சொல்லியபதங்கள்கேட்டுத்துணைப்பதம்பெயர்த்திலானே.

(இ-ள்) மல்லல்-வளம்பொருந்திய—அம்-அழகிய—பழனம் -கழனிகளையே—வேலி-வேலியாகவுடைய—வளங்கெழு -செல்வம்பொருந்திய—நிடதநாட்டின்-நிடததேயத்தில்—அல்லலுற்று-துன்பமுற்று—அரிதிற்செல்லும்-அருமையாகப்போகாநின்ற —கொடுங்கலி - கொடியகலியானவன்—அமரர்வேட்ப - தேவர்கள்விரும்ப—எல்லையில் - அளவில்லாத—வேள்வியாற்றி- யாகத்தைச்செய்து—அரும்- அரிதாகிய—மறைபயில்வோர்-வேதப்பிராமணர்கள்—எங்கும் - எவ்விடத்திலும்—சொல்லிய-சொன்ன—பதங்கள்கேட்டு- வேதப்பதங்களைக் காதிற்கேட்டு—துணைப்பதம் - தன்னுடையவுபயபதங்களை—பெயர்த்திலான்- எடுத்துவைக்கவில்லை—எ-று.(கருத்து)சனிபகவான் நிடதநாட்டில்வேதப்பிராமணர்கள் சொல்லும்வேதப் பதங்களைக்கேட்டுத் தன்னிருபதங்களையெடுத்துவையாதிருந்தான்-எ-ம. (௮)

செம்மையிற்றிறம்பல்செல்லா மறைபயில்சிறுவனங்கோர்
கைம்மையைக்கலத்தனைக்கிக் களிமகிழ்சிறந்துசெல்வான்
வம்மினென்றமரர்தம்மை மறையிறைக்கூறக்கேளா
வம்மவோமகமென்றந்தி யலைக்கனுற்றகன்றுபோனான்.

(இ-ள்) செம்மையில் - தன்னெறியில்—திறம்பல்செல்லா-மாறுபடாத—மறைபயில்-வேதம்படிக்கின்ற—சிறுவன்-ஒருபிரமசாரி —ஆங்கோர்-அங்கொரு—கைம்மையை - கைம்பெண்ணை—கலத்தனைக்கி-புணர்தலைப்பார்த்து—களி - செருக்கையுடைய—மகிழ்-சந்தோஷம்—சிறந்து - அதிகரித்து —செல்வான்-போகின்றவன்—வம்மினென்று - வா

ருங்கவென்று — அமரர்தம்மை - தேவர்களை — மறையினன் - வேதத்தி னிலே — கூற - அழைக்க — கேளா - கேட்டு — அம்மவோ - ஓ அம்ம — மக மென்றயாகமென்று — அஞ்சி - பயந்து, அலக்கணுற்று - துன்பமுற்று, அகன்றுபோனன் - அப்புறம்போயினன் — எ-று. (கருத்து) பிரமசாரி கைம்பெண்ணைக்கலந்ததைக்கண்டு செல்லுஞ்சனிபகவான் வேதத்தினி லே தேவர்களைவருகவென்று அழைக்கக்கேட்டு ஓர்யாகமென்று அஞ்சிப் போனன் என்பதாம். (௯)

அருமறைமுனிவர்யாரு மோர்கலத்தார்வமொடும்
பருகியவாறுநோக்கித் தீவினைபயந்ததென்னு
விரைவினிற்சேரவோடு மறைமொழிகூறும்வேள்விக்
குரியதுசோமபான மெனவுளமுடைந்துபோனன்.

(இ-ள்) அரும் - அரியதாகிய, மறைமுனிவர்யாரும் - வேதியர்களெல்லாரும் — ஓர்கலத்து - ஒருபாத்திரத்தில் — ஆர்வமொடும் - ஆசையுடன் — பருகியவாறுநோக்கி - பானம்பண்ணுகின்றநெறியைப்பார்த்து — தீவினைபயந்ததென்னு - தீமையுண்டாயிற்றென்று — விரைவினில் - சீக்கிரத்தில் — சேரவோடும் - போனமாத்திரத்தில் — மறைமொழி - வேதவசனத்தை — கூறும் - சொல்லும் — வேள்விக்கு - யாகத்துக்கு — உரியது - உரித்தானது — சோமபானமெனு - சோமபானயாகமென்று, உளமுடைந்து - மனங்கலங்கி — போனன் - போயினன் - எ-று. (கருத்து) சனிவேதியர் யாவருமோர்கலத்திற்பானம்பண்ணுவதைக்கண்டு செல்பவன் யாகத்திற்குரியது சோமபானமென்றஞ்சிப்போனன் - என்பதாம் (சோமபானம் மதுபானம்.) (௰)

கீழல்சினக்களிகல்யானைவிடதர்கோன் மகிழ்ச்சிகூர்ந்து
பழமறைக்கிழவர்யாரும் பரிவொடுகவர்ந்துகொள்ள
விழுநிதிப்பழனநாடு வேண்டுபவெறுப்பநாளும்
பொழிதருபுனலீந்திடப் போக்கரிதென்னநின்றான்.

(இ-ள்) கீழல் - தன்னிழலை — சினி - கோபிக்கிற — களி - செருக்கைப் பொருந்திய — கல்யானை - கல்லயானையையுடைய — விடதர்கோன் - நளமகாராஜன் — மகிழ்ச்சிகூர்ந்து - சந்தோஷமிகுந்து; பழமறைக்கிழவர்யாரும் - பழமையாகியவேதப்பிராமணர்களெல்லாரும் — பரிவொடு - ஆசையுடன் — கவர்ந்துகொள்ள - பெற்றுக்கொள்ள, விழுநிதி - மேன்மையாகியதிரவியமும் — பழனம் - கழனிகளும் — நாடு - ஊர்களும் — வேண்டிப - வேண்டியவைகளை — வெறுப்ப - வெறுக்கும்படியாக, நாளும் - நாள்தோறும் — பொழிதரு - தத்தம்பண்ணுகின்ற — புனலை - சலத்தை, நீந்திடைந்து — போக்கரிதென்ன - போகக்கூடாதென்றுநின்றான் - இருந்தான் — எ-று. (கருத்து) சனிபகவான் நளன்பிராமணர்களுக்குத் தத்தம் பண்ணுநீரை நீந்திப்போகக்கூடாமனின்றான் - எ-ம். (௰௧)

கல்வலானொருவன்பொய்மை கட்டுரையாடனோக்கிக்
கொலைபழுத்தொழுகுநெஞ்சங்குழைந்தனன்மகிழ்ந்துசெல்வா



னலர்முலைசுமக்கலாற்று னைநன்மருங்குற்றபேதை
புலவிதீர்ப்பதற்குக்கூறும் பொய்யெனப்புலர்ந்துபோனன்.

(இ-ள்) கல்வலானொருவன் - வித்தைகளில்வல்லவனொருவன் — பொய்மை - பொய்ச்சொல்லை — கட்டுரையாடன் - உறுதிமொழியாகச் சொல்லுதலை — நோக்கி - அறிந்து — கொலை - கொல்லுதல் — பழுத்தொழுகுநெஞ்சம் - முதிர்ந்துபெருகாநின்றமனம் — குழைந்தனன் - குழைந்தவனாய் — மகிழ்ந்து - சந்தோஷித்து — செல்வான் - போகின்றசனியானவன் — அலர் - பாரத்த — முலை - ஸ்தனங்களை — சுமக்கலாற்று - சுமக்கமாட்டாத — ஐயம் - சந்தேகத்தைத்தரும் — நுண் - நுட்பம்பொருந்திய — மருங்குல் - இடையையுடைய — பேதை - மடந்தையது — புலவி - பிணக்கை - தீர்ப்பதற்கு - போக்குதற்கு — கூறும் - சொல்லும் — பொய்யென - பொய்யென்று புலர்ந்து - மனம்வாட — போனன் - போயினன் — எ-று. (கருத்து) கல்வியில் வல்லோனொருவன் பொய் சொல்லுதலைக்கண்டு செல்லுஞ் சனிபகவான் ஸ்திரீபிணக்கைத் தீர்க்கும்பொய்யென்று வாடிப்போனன் - எ-ம். (௰௨)

கடிமனைவிடங்கடோறுங் கற்புடைமகளிரீட்டங்
கொடிநெடுவீதியெல்லாங் கடவுளர்விழவுதுன்று
செடிபடுகானமுற்றுந் துறந்துளோர்நெருக்கமியாண்டு
மடியிடலரிதென்றெண்ணி யல்லலுற்றகன்றுபோனன்.

(இ-ள்) கடி - காவலையுடைய — மனைவிடங்கடோறும் - வீட்டுவிடங்களெல்லாம் — கற்புடை - பதிவிரதத்தன்மைபொருந்திய — மகளிரீட்டம் - மகளிர்கூட்டங்கள் — கொடி - கொடிகளையுடைய — நெடும் - நீண்ட — வீதியெல்லாம் - தெருக்களனைத்திலும் — கடவுளர்விழவு - தேவர்திருவிழா — துன்றும் - நெருங்கியிருக்கும், செடி - சின்னவனங்கள் — படு - உண்டாகிய — கானமுற்றும் - காடுமுழுவதும் — துறந்துளோர் - முனிவர்களது கூட்டம் — நெருக்கம் - கூட்டங்களுள்ளன (ஆதலால்) யாண்டும் - எவ்விடத்தும் — அடியிடல் - அடியெடுத்துவைத்தலரிதென்று - அருமையென்று — எண்ணி - நினைத்து — அல்லலுற்று - துன்பமுற்று — அகன்றுபோனன் - நீக்கிப்போனன் — எ-று. (கருத்து) மனைகளெங்குங்கற்புள்ளமாதருங் கூட்டத்தாலும், வீதியெங்குந்தேவர் திருவிழாவாலும், காடெங்கும் முனிவர்கூட்டத்தாலும், அடிவைக்க விடமில்லையென்று சனியன் போனன் - எ-ம். (௰௩)

இந்நகர்வரைப்பில்யாண்டு மெய்துதற்கரிதென்றெண்ணி
சென்னிவான்றடவுதெய்வச் செழுமலர்ச்சோலைபுக்கு
மன்னவன்பிழைக்குந்தீமை யாதெனமனத்தினேர்ந்து
அன்னருந்துன்பமீந்தங் குழைச்சியோடிருந்தானால்

(இ-ள்) இந்நகர் - இந்நகரத்திலுடைய — வரைப்பில் - இடத்தில் — யாண்டும் - எவ்விடத்தும் — எய்துதற்கரிதென்றெண்ணி - போகுதற்குக்கூடாதென்றுநினைத்து — சென்னி - தலையானது — வான்றடவும் - ஆகாயத்தைத்தடவுகிற — தெய்வ - தெய்வீகமாகிய — செழும் - செழித்த — மலர் - புஷ்பங்களையுடைய — சோலைபுக்கு - சோலையையடைந்து — மன்ன

வன்-நளமகாராஜன்—இழைக்குந்தீமை-செய்யுங்குற்றம் — யாதெனை-என்றுவென்று—மனதிலேயோர்ந்து-மனதிலாராய்ந்து—அன்னரும்-சேரப்படாத—தான்றிமிலிடைதான்றிவிருட்சத்தின்மீது — சூழ்ச்சியோடு ஆலோசனையுடனே—இருக்குநாளில்-இருக்கின்றகாலத்திலே—எ-று. தான்றி-விஷீத்தகம்—(கருத்து) சனிபகவான் சோலையிற்புகுந்து நளன்செய்யுந்தீமை யெதுவென்று நினைந்து தான்றிமரத்தின்மே லிருக்கின்ற காலத்தில் என்பதாம். (௫௪)

கலிநீதான்றுபடலம்-முற்றுப்பெற்றது.

உ

# இளவேனிற்படலம்.

இப்படலத்தால் பற்பலவிலைக்குரியஇளவேனிற் காலத்தினது சிறப்புச்சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

நமதுசெங்கரங்கடோயி னகைமுகவிருந்துசெய்யுங்
கமலகான்மலரைவாட்டும் பனியினைமுழுதுங்காய்வா
னிமயமால்வரையின்வெம்போர்க் கெழுந்தெனவுலகம்போர்த்தி
நிமிரமெய்ந்துலவும்வெய்யோன்சென் றனன் வடபான்மன்னோ.

(இ-ள்)நமது-நம்முடைய—செங்கரங்கள்-சிவந்தகிரணங்கள்—தோயின்-பொருந்தினால்—நகை-பிரகாசியாநின்ற—முகம்-முகத்துடனே, விருந்துசெய்யும்-விருந்துசெய்யாநின்ற—கமலம்-தாமரையினது—கான்-புதிய—மலரை - புஷ்பத்தை—வாட்டும்-வாடப்பண்ணும்— பனியினை-பனியை—முழுதும்-முழுமையும்—காய்வான்- அழிக்கும்பொருட்டு—இமயமால்வரையின்-இமயபர்வதத்தில், வெம்போர்க்கெழுந் தென-வெவ்வியதாகியயுத்தத்திற்கெழுந் தவன்போல—உலகம்போர்த்த-உலகத்தைமூடிய— நிமிரமெய்ந்து-இருளையுண்டு—உலவும் வெய்யோன்-உலவுகின்றசூரியன் —வடபால்-வடதுபக்கத்தில்,சென்றனன்-போயினன்—எ-று. மன்-ஓ-அசைகள்- உத்தராயணம்பிறந்ததென்பதாம்—காய்வான்-எழுந்தெனா-என்றவற்றிற்குறிப்பணி (கருத்து) சூரியன் உத்தராயணமாயினன் என்பதாம். (க)

இன்றுணைக்கணவர்நீங்கி யிடருறுமடவார்சோர
மன்றலில்*கொழுநர்ப்புல்லு மடந்தையர்மகிழ்ச்சிகூரக்
குன்றிடைப்பிறந்ததென்றற்கொழுந்துமுன்போர்த்ததேமா
மென்றளிர்ப்போர்வைபோர்த்து வேனில்வந்திறுத்தலன்றே.

(இ-ள்)இன்றுணை-இனியதுணையாகிய—கணவர் - கொழுநரை—நீங்கி-பிரிந்து—இடருறும்-துன்பத்தையடைகின்ற—மடவார்-மாதர்கள்—சோர-சோர்வையடையவும்—மன்றலில்-விவாகத்தின்கண், கொழுநர்ப்புல்லும்-கணவரைத்தழுவும்—மடந்தையர் - மாதர்கள்—மகிழ்ச்சிகூர-மகிழ்ச்சியடையவும்—குன்றிடைப்பிறந்த - பொதியமலையிலுற்பவித்த—தென்றற்கொழுந்து-இளந்தென்றற்காற்றை—முன் - முன்னே—போர்த்த-போர்த்துக்கொண்ட—தேமா -தித்திப்புப்பொருந்தியமாமரத்தினது—மென்றளிர் - மெல்லியதளிராகிய—போர்வைபோர்த்து - வஸ்திரத்தைப்போர்த்து—வேனில் - வேற்னிகாலமானது—வந்திறுத்தது-வந்துதங்கியது—எ-று. அன்று-ஏ - அசைகள் * அகத்தியம்-ஞநவிடைக்கிளவி நன்னைதுமுளவே (கருத்து) தணந்தவாதுன்புறமணந்தவரின்புற வேனிற்காலம்வந்தது என்பதாம். (உ)

கள்ளுயிர்த்தலருமுல்லைக் கடிமுகைமுறுவறோன்ற
வள்ளிதழ்க்குவளையுண்கண் மலர்ந்துமாந்தளிர்மென்கையார்
கிள்ளைமென்குதலைசாற்றிக் கிளரொளிவண்டுபாணுத்
தெள்விளிபாடவேனிற் றிருமகள்சிறந்தாளன்றே.

(இ-ள்) கள்ளுயிர்த்து-தேனைத்தந்து—அலரும் - மலருகின்ற—முல்லை-முல்லையினது—கடி-வாசனைபொருந்திய—முகை - அரும்புகளாகிய—முறுவல்றோன்ற-பற்கள்தோன்ற—வள்ளிதழ் - கூர்மையாகியஇதழையுடைய—குவளை-நீலோற்பலங்களாகிய—உண்கண் - மையுண்டகண்கள்—மலர்ந்து - விழித்து—மாந்தளிர் - மாந்துளிர்கள்—மென்-மிருதுபொருந்திய—கை-கையாக—ஆர் - ஆர்ந்த—கிள்ளை - கிளிப்பிள்ளையின்மொழிகளாகிய—மென்-மிருதுபொருந்திய—குதலை - குதலைச்சொற்களை—சாற்றி- பேசி—கிளரொளி - விரிந்தவொளியையுடைய—வண்டு-வண்டுகளே—பாணு-பாணர்களாக—தெள்விளிபாட - தெள்விளியென்னுமிராகத்தைப்பாட—வேனிற்றிருமகள் - - வேனிற்காலமாகியபெண்—சிறந்தாள் - பொலிவையடைந்தாள்—எ-று. அன்று-ஏ-அசைகள் (கருத்து) இளவேனிலென்கிறபெண் சிறப்பையடைந்தாள் என்பதாம். (ங)

பூசல்வண்டார்ப்பவேனில் போந்தமைகுயில்கள்கூறப்
பாசிலையுகுத்ததேமா பைந்தளிரீன்றதோற்றம்
மாசறுதுகிலைநீத்து * மகிழ்நர்தம்வரவுகேட்டுக்
கோசிகச்செம்பொன்னுடை கொம்பனாரசைத்தல்போலும்.

(இ-ள்) பூசல்-போர்செய்தலையுடைய—வண்டு - வண்டுகள்—ஆர்ப்ப-ஆரவாரிக்க—வேனில்-வேனிற்காலம்—போந்தமை - வந்ததன்மையை—குயில்கள்கூற கோகிலங்கள்சொல்ல—பாசிலை - பழுப்பிலைகளை—உகுத்த-உதிர்த்த—தேமா - தித்திப்புமாமரங்கள்—பைம் - பசுமைபொருந்திய—தளிர்-தளிர்களை—ஈன்றதோற்றம் - பெற்றகாட்சியானது—மகிழ்நர்தம்வரவுகேட்டு - புருஷர்களுடையவ்ரவுகேட்டு—மாசறு-குற்றம்பொருந்திய—துகிலை-வஸ்திரத்தை—நீத்து - நீக்கி—கோசிகம்-பட்டாகிய—செம்பொன் - சிவந்தபொன்னாற்செய்த— ஆடை-வஸ்திரத்தை—கொம்பனார்-பெண்கள்—அசைத்தல்போலும் - கட்டிக்கொ

ளுதலையொக்கும்—எ-று. ஈதொன்னூல்விளக்கம்-ஞனவிடைப்படு படுநன்னனுநெறியே (கருத்து) வேனில்வந்ததைக் குயில்களறிவிக்க மாமரந்தளிர்த்த காட்சிகணவர்வருதலைக்கேட்டுப் பெண்கள் பொற்சேலைதரித்தாற்போலும்-எ-ம். (௪)

வானுயர்சோலைதோறு முருகுவாய்மடுத்துவீழுந்
தேனொடுசுரும்புவண்டும் புதிதுண்டுதெவிட்டியார்ப்பக்
கனமர்குழலினார்தங் கணவர்பாற்புலவிதீர
வேனில்வேட்குலகம்யாவும் விழவயர்ந்திட்டவன்றே.

(இ-ள்) வான் - ஆகாயத்தில்—உயர் - உயர்ந்த—சோலைதோறும் - தோப்புகள்தோறும்—முருகு-தேனை—வாய்மடுத்து - வாய்வைத்து—வீழும்-விரும்பும்—தேனொடு - தேன்வண்டுடனே—சுரும்பு - ஆண்வண்டும்—வண்டும்-பெட்டைவண்டுகளும்—புதிதுண்டு - விருந்துண்டு—தெவிட்டி-தெவிட்டெடுத்து—ஆர்ப்ப-ஆரவாரிக்க—கான் - வாசனை—அமர்-பொருந்திய—குழலினார்-கூந்தலையுடையமாதர்கள்—தம் - தங்கள்—கணவர்பால்-புருஷர்களிடத்தில்—புலவிதீர - பிணக்குகள்நீங்க—வேனில்-வேனிற்காலத்துக்குரிய—வேட்கு-மன்மதனுக்கு—உலகம் யாவும் - உலகங்களெல்லாம்—விழவயர்ந்திட்ட—திருவிழாவைச்செய்தன—எ-று. அன்று-ஏ-அசைகள் (கருத்து) மன்மதனுக்கு உலகங்கள் யாவுந் திருவிழாச்செய்தன—எ-ம். (௫)

குன்றிடைப்பிறந்ததென்றற் கொழுந்துமேற்படர்ந்ததன்மை
துன்றிருட்பிழம்புசீக்குங் கனைகதிர்ச்சுடரோனுய
தன்றுணைக்கேள்வனீங்கி வடபுலஞ்சார்தலோடுந்
தென்றிசையணங்குமாழ்ந் துயிர்த்ததுசிவனுமாதோ.

(இ-ள்.) குன்றிடை-பொதியமலையினிடத்திலே—பிறந்த-உண்டாகிய—தென்றற்கொழுந்து - இளந்தென்றற்காற்று—மேற்படர்ந்ததன்மை-பூமியின்மீதுபரவியதன்மையானது—துன்று - நெருங்கிய—இருட்பிழம்பு-இருட்கூட்டத்தை—சீக்கும்-கெடுக்கும்—கனை - மிகுந்த—கதிர்-கிரணங்களையுடைய—சுடரோனுய-சூரியனாகிய—தன்றுணை - தனக்குத்துணையாகிய—கேள்வன்-புருஷன்—நீங்கி - தன்னைநீங்கி—வடபுலம்-வடதிசையாகிய (பெண்ணை)—சார்தலோடும் - அடைந்தமாத்திரத்தில்—தென்றிசையணங்கு-தெற்குத்திக்காகியபெண்—மாழ்ந்து - மயங்கி—உயிர்த்தது-பெருமூச்சுவிட்டதை—சிவனும் - ஒக்கும்—எ-று. தென்றிசையணங்கென்றமையால் வடபுலவணங்கென்றுங் கொள்ளப்பட்டது (கருத்து) தென்றல்வீசியது சூரியன் வடதிசைப்பெண்ணிடத்திற்போனனென்று தென்றிசைப்பெண் பெருமூச்சுவிட்டதுபோலும் என்பதாம், (௬)

பன்மணிவான்றிச்சாரற் பானிறமருவிதாழுந்
தென்வரையினிதினீன்ற புனிற்றிளங்குழவித்தென்றல்
கன்னலஞ்சிலைக்கைமாரன் காதலர்ப்பிரிந்தமாத
ரின்னுயிர்பபிப்ப வேண்டி யியற்றிய பார்வை யாமால்.



(இ-ள்) பன்மணி-பலஇரத்தினங்களை—வான்றி - வாரிக்கொண்டு—சாரல்-பக்கத்தில்—பானிறம் - வெள்ளைநிறமாகிய—அருவிதாழும்-அருவிகள்பாயப்பெற்ற—தென்வரை - பொதியமலை—இனிதினீன்ற-இன்பமாகப்பெற்ற—புனிற்றிளம் - மிகவுமிளமைபொருந்திய—குழவித்தென்றல்-இளந்தென்றற்காற்றனது—கன்னல்-கரும்பாகிய—அம்-அழகிய—சிலைக்கை-வில்லைப்பிடித்தகையையுடைய—மாரன் - மன்மதனானவன்—காதலர்-நாயகர்களை—பிரிந்த-நீங்கிய— மாதர்-மாதர்களின்—இன்னுயிர்-இனியஉயிர்களை—படுப்பவேண்டி -பிடிக்கவிழைந்து—இயற்றிய-வாவிட்ட—பார்வையாம் - பார்வையாகும்—எ-று. பார்வையென்பது மிருகங்களைப்பிடிக்க அவ்வினத்தில் ஒன்றைவளர்த்துவைப்பதாம் (கருத்து) தென்றல்வீசியதுமன்மதன் நாயகனைநீங்கியமாதருயிரைப்பிடிக்கவிட்ட பார்வைபோலாம்—எ-ம். (௭)

விண்டொடர்பொதும்பர்தோறும் விரைகமழ்போதில்வீழ்ந்து
வண்டினங்குடைந்துபாட மகரந்தமெழுந்ததோற்றங்
கொண்டல்கண்படுக்குந்தேமாங் குயிலினமழைப்பத்தோன்றுந்
திண்டிறலநங்கன்சேனு பராகமொத்திருந்ததன்றே.

(இ-ள்) விண்டொடர் - ஆகாயத்தையளாவுகின்ற—பொதும்பர்தோறும்-சோலைகள்தோறும்—விரை - வாசனை—கமழ்-பரிமளியாநின்ற—போதில்வீழ்ந்து-புட்பத்திலிறங்கி—வண்டினம் - வண்டுக்கூட்டங்கள்—குடைந்து-மூக்கினுலுடைந்து—பாட -பண்ணைப்பாட—மகரந்தம்-மகரந்தப்பொடிகள்—எழுந்ததோற்றம் - எழும்பியகாட்சியானது—கொண்டல்-மேகங்கள்—கண்படுக்கும்-நித்திரைசெய்யும்—தேமா - தித்திப்புமாமரத்திலிருக்கிற—குயிலினம் - குயிற்கூட்டம்—அழைப்ப-கூப்பிட—தோன்றும்-வந்த—திண்டிறலநங்கன் - மிகுந்தவலிமையையுடையமன்மதனது—சேனுபராகம் - சேனையினின்றெழும்புகிறபுழுதியை—ஒத்திருந்தது - ஒப்பாயிருந்தது—எ-று. (கருத்து) மகரந்தமெழுந்த காட்சியானது மன்மதன்சேனைகளின் றெழும்பும்புழுதியையொத்திருந்தன-எ-ம். (அ)

காயெரிமணியிற்செய்த கதிர்முலைமகளிர்கூந்த
லாய்மலருகுத்தல்போலக் குயில்குடைந்தாடவீழ்ந்த
சேயமென்போதுபோர்த்த திருவநீணிலங்கள்யாவும்
பாயலிற்படுத்தசெம்பொற் படாமெனவிளங்குமன்றே.

(இ-ள்) காய்-கொளுத்தாநின்ற—எரி - நெருப்பையொத்த—மணியிற்செய்த-இரத்தினத்தினுற்செய்தஆபரணத்தினது, கதிர் - பிரகாசம்பொருந்திய—முலை-ஸ்தனங்களையுடைய-மகளிர்-மாதர்களது, கூந்தல்-அளகபாரமானது—ஆய் - ஆராய்ந்த—மலருகுத்தல்போல - புஷ்பத்தைஉதிர்த்தல்போல—குயில்-கோகிலங்கள்—குடைந்தாட - கூத்தாட—வீழ்ந்த-விழுந்த—சேய-சிவந்த—மென் - மிருதுவாகிய—போது-புஷ்பங்கள்—போர்த்த - மூடப்பெற்ற—திருவ - சிறப்புற்ற—நீணிலங்கள்யாவும்-நீண்டநிலங்களெல்லாம்—பாயலில் - சயனத்தில்—படுத்த-வி

ரித்த—செம்-சிவந்த—பொற்படாமென—பொன்வஸ்திரத்தைப்போல—விளங்கும் - பிரகாசிக்கும்—எ-று. அன்று-வ-அசைகள் (கருத்து) மலர்கள்விழுந்தநிலங்களியாவும் பொற்சீலை விரித்தாற்போலும் விளங்கும் என்பதாம். (௬௰)

தாழ்சினைபூத்தமென்பூந் தண்ணறுஞ்சுண்ணமாடி
வீழ்துணைவருதனோக்கிப் புதுக்கடிமேயதென்றூ
யாழிசைமிடற்றசெங்கட் கருங்குயிலினிதினூடிக்
கோழைக்குமரிவாழைக் குருத்திடையொளித்ததன்றே.

(இ-ள்) தாழ்-வளைந்த—சினை-கிளைகளில்—பூத்த - புஷ்பித்த—மென்-மிருதுவாகிய—பூம் - புஷ்பத்தினது—தண் - குளிர்ச்சிபொருந்திய—நறும் - வாசனையாகிய—சுண்ணமாடி - மகரந்தப்பொடியில் வீழ்ந்து—வீழ் - விரும்பாநின்ற—துணை - புருஷனாகிய ஆண்குயிலானது—வருதனோக்கி-வருகிறதைப்பார்த்து—புதுக்கடி - புதுமணத்தை—மேயதென்று-அடைந்ததென்று நினைந்து—யாழிசை - வீணையினிசையையொத்த—மிடற்ற-கண்டத்தினையும்—செங்கண் - சிவந்தகண்களையுமுடைய—கரும்-கறுத்த—குயில் - பெட்டைக்குயிலானது— இனிதினூடி-இன்பத்தினுலேபிணங்கி—கோழ் - செழிப்பாகிய—அரை - அரையையுடைய—குமரிவாழை-இளவாழையினது—குருத்திடை - குருத்தினிடத்தில்—ஒளித்தது-ஒளித்துக் கொண்டது—எ-று, புதுக்கடியென்பதில்-நூதனவிவாகமென்பதும்புதியவாசனையென்பதும்சிலேடையால் பெறப்பட்டமையால் அதுகண்டு பெட்டைக்குயில் ஊடியதாம் எனக்கொள்க) (கருத்து) ஆண்குயில்வருதலைக்கண்டு பெண்குயில்வாழைக்குருத்திலொளித்ததுஎன்பதாம். ஆ தொன்னூல் விளக்கம்-வசந்தத்துரிமைவசந்தத்தேரோனுந்-தென்றலேவண்டினங்கிறுகிளிபூவை-யன்றிலேகுயிலிவைமகிழ்ந்தார்த்தலே - மாங்கனியுதிர்தலே தேங்கியமலரொடு-வகுளந்தாழைவழைசண்பகம்பிற - மூகிழினிதவிழ்த்தலே முன்காரிடைக்களி - மிகுவனமயின்முதன்மெலிதலேயென்ப (இ-ள்) வேனிற்பருவத்துரிமையாவது, மன்மதன்றேராகியதென்றல் வீசலும், பலவண்டினமுங்கிளியும பூவையுமன்றிலுங் குயிலுமெனவிவை மகிழ்தலும்,மாங்கனிமிகுதலும் - நீர்மலரன்றி மகிழ்தாழைபுன்னை சண்பகம் பலவு மலர்தலுங்காற்பருவத்து மகிழ்ந்தகோபங்கேகயப்புண்மயிலிவையெமெலிதலும் மிளவேனிற்பருவத்துரிமையெனப்படும். (௰)

இளவேனிற்படலம்-முற்றுப்பெற்றது.

---

உ

# போதுகொய்படலம்.

[-*-) ❊ (-*-]

இப்படலத்தால் அந்நகரத்திலுள்ள ஆடவரும் மாதரும் விலையோடு மலர்களைக்கொய்தல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

இன்னதன்மையவின்னிளவேனில்வா
யன்னபொன்னக ராடவர்யாவருந்
பென்னவாமுலைப் பூவையர்தம்மொடுந்
துன்னுநாண்மலர்ச்சோலைசென்றெய்தினர்.

(இ-ள்.) இன்னதன்மைய-இத்தன்மையவாகிய—இன் - இனிமையாகிய—இளவேனில்வாய்-வசந்தகாலத்தினிடத்தில்— அன்னபொன்னகர்-அந்நகரத்திலுள்ள—ஆடவர்யாவரும் - புருஷர்களெல்லோரும்—பொன்-தேமலானது—அவாம்-விரும்புகின்ற—முலை - ஸ்தனங்களையுடைய—பூவையர்தம்மொடும் - தங்கள்மங்கையரோடுங்கூட—துன்னும்-நெருங்கிய—நாண்மலர்-அன்றலர்ந்த புஷ்பத்தையுடைய, சோலை பூஞ்சோலையை—சென்று-போய்—எய்தினர்- அடைந்தார்கள்—எ-று. (கருத்து) மாவிந்தநகரத்துப்புருஷர்களும் பெண்களும் பூங்காவனத்திலெய்தார்களென்பதாம். (க)

உள்ளங்கொண்டாரிவரொன்றுணர்ந்திடப்
புள்ளவாங்கணை வேளிடைப்போதல்போ
லள்ளிலைச்செழுஞ் சோலையின்பனைக்
கள்ளுன்கோதையர் கைப்பிடித்தேகினர்.

(இ-ள்). உள்ளம்-எங்கள்மனத்தை, கொண்டார்- அபகரித்துக்கொண்டார்கள்—இவரொன்று-இவர்களென்று—உணர்ந்திட- அறிவிக்க—புள் - வண்டுகள்—அவாம்-விரும்புகின்ற—கணை - புஷ்பபாணத்தையுடைய—வேளிடை-மன்மதனிடத்தில்—போதல்போல் -செல்வதுபோல—அள்-நெருங்கிய—இலை - இலைகளையுடைய—செழும்-செழித்த—சோலையில்-சோலையினிடத்தில்—அன்பனை - கணவர்களை—கள்ளுண்-தேன்பொருந்திய—கோதையர்-மாலையையணிந்தமங்கையர்கள் —கைப்பிடித்து -கையிற்பிடித்துக்கொண்டு—ஏகினர் - போனார்கள்—எ-று. (கள்ளரை அரசனிடத்து பிடித்துக்கொண்டு போயவனுக்கிலக்காக்குவதுபோல ஆடவரைக்காமனுக்கிலக்காக்குதற்கென்க)(கருத்து) பெண்கள் புருஷர்கள்கையைப் பிடித்துக்கொண்டு சோலையிற்போனார்கள்-எ-ம். (உ)

அணங்குநோய்செயுமைந்துமலரொளிற்
கணங்கொள்போதுகநிலபொங்கர்வாய்

மணந்துசெல்வதையன்றிமணந்தவர்த்
தணந்துசெல்லுந் தருக்கினர்யாவரோ.

(இ-ள்) ஐந்துமலர்-ஐந்துபுஷ்பங்களே—அணங்கு-வருத்தமாகிய; நோய்-துன்பத்தை—செயுமெனில்-செய்யுமேயாகில் — கணங்கொள்-கூட்டங்கொண்ட—போது-புஷ்பங்கள்—கஞலிய-நெருங்கிய, பொங்கர்வாய்-சோலையினிடத்தில்—மணந்து-கூடி — செல்வதையன்றி-போவதையல்லாமல்—மணந்தவர்-கூடினவர்களை — தணந்து-பிரிந்து, செல்லும்-போகின்ற—தருக்கினர்-செருக்கையுடையவர்கள் — யாவர்-எவர்கள் (ஒருவருமில்லை) —எ-று. ஏ அசை.(கருத்து) புணர்ந்துபோவதல்லாது புணர்ந்தவரைப் பிரிந்துபோவாரில்லையென்பதாம். (௩)

திருவனார்தங்குழாத்தொடுசென்றதன்
னரிவைபஞ்சூரடியிற்றென்றறிகிலான்
வரைகொண்மார்பினுதைத்தமலரடி
புரைவதீதெனநோக்கினன்போகின்றான்.

(இ-ள்) திருவனார்தம்-இலக்குமியையொத்த பெண்களுடைய—குழாத்தொடு-கூட்டத்துடன்—சென்ற-நடந்த—தன்-தன்னுடைய—அரிவை-நாயகியினது—பஞ்சி-செம்பஞ்சுக்குழம்பூட்டிய—அடி-பாதமானது—இற்றென்று-இன்னதென்று—அறிகிலான்-அறியாதவொருவன்—வரை-மலையை—கொள்-உவமைகொண்டிருக்கின்ற—மார்பின்-தனதுமார்பினிடத்தில்—உதைத்த-உதைத்த—மலரடி-தாமரைமலர்போன்றபாதக்குறியை—புரைவது-ஒத்திருப்பது—ஈதென-இந்தஅடிக்குறியென்று—நோக்கினன்-பார்த்தவனாய்—போகின்றான்-போயினான் - சென்றான்—எ-று. (கருத்து) தன்மனைவிஅடி இஃதென்றறியாதவன் தன்மார்பிலுதைத்தவடிக்காப்பிஃதென்றுபார்த்துப்போனான்-எ-ம். (௪)

மையகூந்தலோர்மங்கை * யசோகினி
லெய்துறாதுயர்போதினையேறுபு
கொய்துமென்றுகுறித்தடிவைத்தலுஞ்
செய்யபோதுகிளைதொறும்பூத்தவே.

(இ-ள்) மையகூந்தல்-கறுத்தகூந்தலையுடைய — ஓர்மங்கை-ஒருமங்கையானவள்—அசோகினில்-அசோகமரத்தினிடத்தில் — எய்துறாது-அடையக்கூடாமல்—உயர்-உயரத்திலுள்ள—போதினை-புஷ்பத்தை—ஏறுபு-ஏறி—கொய்துமென்று-பறிப்போமென்று—குறித்து-நினைத்து —அடிவைத்தலும்-பாதத்தைவைத்தமாத்திரத்தில்—செய்ய-சிவந்த—போது-புஷ்பங்கள்—கிளைதொறும்-கிளைகள்தோறும் — பூத்த-மலர்ந்தன —எ-று. * தருக்கசங்கிரகம்-உரு-௬ - விடயமாமுதலதைத் தற்கேது-இவ்விதியால் மாத்தியல்பறிக- (கருத்து) ஒருத்தி அசோகமரத்திலேறிக் காலடிவைத்தமாத்திரத்தில் மலர்கள்மலர்ந்தன-எ-ம். (௫)

கோத்தமேகலைகோதையர்நோக்கலிற்
பூத்தொசிந்ததிலகமென்போதினிற்



தேத்துளிக்கமர்தெள்விளிவண்டினம்
பார்த்தகண்ணிழல்பாய்ந்தனபோலுமே.

(இ-ள்) கோத்த-கோர்வையிட்ட—மேகலை-மேகலாபரணத்தையுடைய—கோதையர்-மங்கையர்கள்—நோக்கலின்-பார்த்தவளவில் — பூத்து-மலர்ந்து—ஒசிந்த-வளைந்த—திலகம் - மஞ்சாடிமரத்தினுடைய—மென்-மிருதுவாகிய—போதினில்-புட்பத்தில்—தேத்துளிக்கு - தேனினதுதுளிக்கு—அமர்-பொருந்திய—தெள்விளி - தெள்விளிராகத்தைப் பாடுகின்ற—வண்டினம்-வண்டுக்கூட்டங்கள்—பார்த்த - பார்த்ததாகிய—கண்-கண்களினுடைய—நிழல்-சாயல்கள்—பாய்ந்தனபோலும்-பரவினபோலும்—எ-று. (கருத்து) மஞ்சாடிமலரைப்பெண்கள் பார்த்தமாத்திரத்தில் வண்டுகள்பார்வைபாய்ந்தாற்போலும்-எ-ம். (௬)

காசுலாமுலைக் கன்னியர்புல்லலும்
பாசிலைக்குரவீன்றபைம்போதினின்
மூசுவண்டினமொய்த்ததுவெம்முலைப்
பூசுநானம்பொறித்ததுபோலுமால்.

(இ-ள்) காசுலா-இரத்தினாபரணங்கள்தங்கிய—முலை-ஸ்தனங்களையுடைய—கன்னியர்-மங்கையர்கள்;புல்லலும்-தழுவினவளவில்—பாசிலை-பசுமைபொருந்தியவிலைகளையுடைய—குரவு - குராமரமானது — ஈன்ற-பெற்ற—பைம்-பசிய—போதினில்-புஷ்பத்தில்—மூசு - நெருங்கிய—வண்டினம்- வண்டுக்கூட்டமானது—மொய்த்தது - மொய்த்துக்கொண்டது—வெம்-விருப்பத்தைக்கொடுக்கின்ற,முலை- ஸ்தனங்களில்—பூசு-பூசப்பட்ட—நானம்-கஸ்தூரி—பொறித்ததுபோலும் - பூசியதுபோலும்—எ-று.(கருத்து)பெண்கள் குராமரத்தைத்தழுவினவளவில் அம்மரமலர் வண்டுக் கூட்டமார்பில் மொய்த்தது முலைமேற் கஸ்தூரி பூசியதுபோலும்-எ-ம். (௭)

வஞ்சிநுண்ணிடைமாதர்மிதித்தலிற்
செஞ்சவேதளிரீன்றசெயலைக
ளஞ்செஞ்சீறடிதோய்ந்தவரக்கெறி
பஞ்சியுண்டொளிர்பான்மைகடுக்குமே.

(இ-ள்) வஞ்சி - கொடியையொத்த—நுண்-நுட்பமாகிய—இடை-மருங்கையுடைய—மாதர்-மடவார்—மிதித்தலில் - மிதித்ததினால்—செஞ்சவே-செம்மையாக—தளிர்-தளிர்களை—ஈன்ற - தந்த—செயலைகள்-அசோகவிருட்சங்கள்—அம்-அழகிய—செம்-சிவந்த—சீறடி - அம்மடவார்சிற்றடியில்—தோய்ந்த-பூசிய—அரக்கெறி - செந்நிறத்தைவீசாநின்ற—பஞ்சி-செம்பஞ்சியை—உண்டு-தம்மிடத்திற்கொண்டு—ஒளிர் - பிரகாசிக்கின்ற—பான்மை-தன்மையை—கடுக்கும்-ஒக்கும்—எ-று. (கருத்து) அசோகமரங்கள்பெண்களடிகளின் செம்பஞ்சுக்குழம்பு உண்டாற்போலிருக்கும்-என்பதாம். (௮)

ஆரவமேகலையாயிழையார்க்குயர்
குரவம்பாவைகொடுத்த கொழுதிமென்

முருகுலாமளிமொய்த்தகடம்பினம்
பரிவினுடனவெண்பந்துகொடுத்தவே.

(இ-ள்) அரவம் - சத்தியாநின்ற—மேகலை - மேகலாபரணத்தை யுடைய—ஆயிழையார்க்கு-மாதருக்கு—உயர்-உயர்ந்த—குரவம் - குரா விருக்ஷம்—பாவை-காய்களாகிய பதுமைகளை—கொடுத்த - கொடுத்த, கொழுதி-கோதி—மென்-மிருதுபொருந்திய —முருகு - தேனினிடத்தி ல்—உலாம்-உலாவுகின்ற—அளி- வண்டுகள்—மொய்த்த - நெருங்கிய, கடம்பினம்-கடப்பவிருக்ஷங்கள்—பரிவின் - விருபத்துடனே—ஆட -ஆட—வெண்- வெண்மையாகிய—பந்து-காயாகியபந்தை—கொடுத்த- கொடுத்தன—எ-று.(கருத்து) குராமரங்கள் மாதருக்குகாய்களைப் பது மைகளாகக்கொடுத்தன-கடப்பமரங்கள்காய்களைப்பந்துகளாகக் கொடு த்தன என்பதாம். (௯)

மாங்குயிற்குரல்கேட்டுமலருறுக்
கோங்கமாதர் குதலையைக்கேட்டலுந்
தேங்கொள்போது சினைதொறும்பூத்தலா
லாங்கதற்கிணையோகுயிலார்ப்பதே.

(இ-ள்) மா-மாமரத்திலிருக்கிற, குயிற்குரல்-குயிலின்குரலை, கேட் டு கேட்டு—மலருறு-மலராத—கோங்கம் - கோங்கவிருக்ஷமானது— மாதர் - மடவாருடைய—குதலையை - குதலைச்சொல்லை—கேட்டலும் - கேட்டவளவில் — தேங்கொள்-தேனைக் கொண்டபோது - புஷ்பங்க ளை—சினைதொறும்-கிளைகள்தோறும் — பூத்தலால் - புஷ்பித்தலால்— ஆங்கு- அவ்விடத்தில்,அதற்கு-அம்மடவார்சொல்லுக்கு — குயிலார்ப் பது-குயில்கூவுவது—இணையோ-ஒப்பாகுமோ ஆகாது—எ-று. (கருத் து) குயிலோசையால்மலராதகோங்குமாதர் குரலோசையால் மலர்த லால்இவர்கள்குரலுக்குக்குயிலோசை யொவ்வாது—எ-ம். (௰)

காவிலன்புடைக்காளையோர்தார்குழற்
பூவைகண்ணுறுபூந்துகண்மாற்றலு
யாவியென்னவருகுறைமாற்றவள்
காவியங்கட்கடைகள்சிவந்தவே.

(இ-ள்) காவில்-பூஞ்சோலையில், அன்புடை-ஆசையையுடைய, கா ளை-புருஷனானவன்-ஓர்-ஒரு,தார்-மாலையணிந்த, குழல் - கூந்தலையுடை ய—பூவை-மனையாளது—கண்ணுறு - கண்ணிலேபடிந்த—பூந்துகள்- மகரந்தப்பொடியை—மாற்றலும் - துடைத்தமாத்திரத்தில்— ஆவியெ ன்ன-தன்னுயிரைப்போல்—அருகுறை-பக்கத்திலிருந்த — மாற்றவள்- சக்களத்தியினுடைய — காவிநீலோற்பலத்தையொத்த—அம் - அழகி ய—கட்கடைகள்-கடைக்கண்கள்,சிவந்த - சிவந்தன—எ-று.(கருத்து) நாயகன் ஒருநாயகிகண்ணில் விழுந்த மகரந்தத்தைத் துடைத்தவளவி ல்மற்றொருநாயகி கண்கள் சிவந்தன-என்பதாம். (௰௧)

வாங்குவிற்கைவரைபுரைதோளினன்
றேங்கொள்வண்டுதிளைப்பவடிவுறுங்



கோங்கரும்பினை நோக்கியோர்கோல்வளை
வீங்குவெம்முலை நோக்கலும்வெள்கினள்.

(இ-ள்) வாங்குவில்-வளைந்தவில்லை—கை - கையிலேயுடைய—வ ரைபுரை-மலையையொத்த—தோளினன் - தோளையுடைய ஒருபுருஷன் —தேங்கொள் - தேனையுண்ணுகிற—வண்டு - வண்டுகள்—திளைப்ப- பொருந்த—வடிவுறும்-வடிவுண்ட—கோங்கு -கோங்குமரத்தினது—அ ரும்பினை-அரும்பை—நோக்கி-பார்த்து—ஓர்-ஒரு—கோல்வளை - மடந் தையினது—வீங்கு-பருத்த—வெம் -விருப்பத்தைத்தருகின்ற—முலை- ஸ்தனங்களை—நோக்கலும்-பார்க்குமளவில்—வெள்கினள்- அவள்வெ ட்கப்பட்டாள்—எ-று. (கருத்து) ஒருபுருஷன் கோங்குமலரில்வண்டுக ள்கிண்டிய வடிவைக்கண்டு ஒருபெண்முலையைப் பார்த்தவளவில் அவ ள்வெட்கமடைந்தாள் என்பதாம். (௰௨)

கோதைமார்பனோர் கோல்வளைகாதினின்
மாதர்நீலம் புனைதலுமாற்றவள்
கோதகும்படி நோக்கியநோக்கவள்
காதணிம்புனை காவிநிகர்த்தவே.

(இ-ள்) கோதை-மாலையணிந்த—மார்பன்-மார்பையுடையவன்— ஓர்-ஒரு—கோல்வளை-மாதினது—காதினில்-காதிலே—மாதர் - அழகி ய—நீலம்-நீலோற்பலத்தை—புனைதலும் - சூட்டியவளவில்—மாற்றவ ள்-சக்களத்தி—கோதகும்படி-கோதகும்படி—நோக்கிய -பார்த்த—நோக் கு-பார்வையானது—அவள்- அச்சக்களத்தியினது—காதிலும் - காதி லேயும்—புனை-சூடிய—காவி-நீலோற்பலத்தை—நிகர்த்த - ஒத்திருந்த ன—எ-று. (கருத்து) கணவன் ஒருநாயகிகாதில் நீலோற்பலந்தரித்தவ ளவில் அவள்சக்களத்திபார்த்தபார்வைகள் காதிற்புனைந்த நீலோற்பல த்தை ஒத்திருந்தன என்பதாம். (௰௩)

கோலநாண்மலர் கொய்பவளங்கையி
லோலிடுஞ்சுரும் போச்சவும்போகில
மாலுழந்து மறிந்துவிழுவன
நீலவொண்கழங்காடலிகர்க்குமால்.

(இ-ள்) கோலம்-அழகுபொருந்திய—நாண்மலர் - புதியபுஷ்பங்க ளை—கொய்பவள்-பறிக்கின்றவளது—அங்கையில் -உள்ளங்கையில்— ஓலிடும்-சத்திக்கின்ற—சுரும்பு - வண்டுகள்—ஓச்சவும் - ஓட்டவும்— போகில-போகின்றிலவாய்—மாலுழந்து-மயக்கமுற்று—மறிந்து - மறி பட்டு—விழுவன-அக்கையில்விழுகின்றனவாகி—நீலம் - கறுத்து—ஒ ள்-பிரகாசம்பொருந்திய—கழங்காடல் - அம்மனையாடலை—நிகர்க்கும்- ஒக்கும்—எ-று.-(கருத்து) மலர்கொய்பவள்கையில் வண்டுகள் வீழ்ப வை நீலம்பந்துகள் ஆடலையொப்பாகுமென்பதாம். (௰௪)

போதுகொய்படலம்-முற்றிற்று.

# புனல்விளையாட்டுப்படலம்.

இப்படலத்தால் போதுகொய்தவர்கள்பின்பு அக்காலத்துக்கேற்கப் புனலில்விளையாடல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

இணரவிழ்பொதும்பரி னிளைஞர்யாவரும்
புணர்முலைமகளிரும் போதுகொய்தபின்
துணையொடுமடவன மிரியத்தூநிற
மணிதெளித்தனையநீர் வாவியெய்தினார்.

(இ-ள்) இணர்-பூங்கொத்துகள்—அவிழ்-விரியாநின்ற—பொதும்பரின் - சோலையில்—இளைஞர்யாவரும் - யௌவனபுருஷர்களெவர்களும்—புணர்-நெருங்கிய—முலை-ஸ்தனங்களையுடைய—மகளிரும் - மாதர்களும்—போது-புஷ்பங்களை—கொய்தபின் - பறித்தபின்பு—துணையொடும்-பெட்டையுடனே—மடவனம்-இளவன்னங்கள்—இரிய-ஓட—தூ-வெண்மையாகிய—நிறம்-நிறத்தையுடைய—மணி - முத்தை—தெளித்தனைய-பரப்பியதையொத்த—நீர் - சலத்தையுடைய—வாவி-தடாகத்தை—எய்தினார்-அடைந்தார்கள்—எ-று. (கருத்து) வாலிபர்களும்மாதர்களும் தடாகத்திற்சேர்ந்தார்களென்பதாம். (௧)

வாணெடுங்கண்ணியர் வாவியெய்தலுஞ்
சேணிடைநேமியப் புட்கள்செல்வன
யாணர்மென்கோங்கரும் பிடையவீங்கிய
பூண்முலைக்குடைந்தயல் போதல்போன்றவே.

(இ-ள்) வாள்-வாளையொத்த—நெடுங்கண்ணியர்- நீண்டகண்களையுடையமாதர்கள்—வாவி-தடாகத்தில்—எய்தலும் - அடையவும்—சேணிடை-ஆகாயத்தின்கண்—நேமியப்புட்கள் - சக்கரவாகப்பட்சிகள்—செல்வன-போதலானவை—யாணர்-புதுமைபொருந்திய—மென் - மிருதுவாகிய—கோங்கரும்பு - கோங்கரும்புகள்—இடைய - தோற்றுப்போக—வீங்கிய-பருத்த—பூண்-ஆபரணத்தையணிந்த—முலைக்கு - ஸ்தனங்களுக்கு—உடைந்து-தோற்று—அயல்-புறத்தே—போதல் -போய்விடுதலை—போன்றன-ஒத்திருந்தன—எ-று. (கருத்து) பெண்கள்குளத்துட்சென்றவளவில் சகோரங்கள்பறப்பவை அப்பெண்கள்முலைக்குத்தோற்றுப்போவனபோலு மிருந்தன என்பதாம். (௨)

மங்கையர்செறிதலு மல்குநீரிடைப்
பங்கயச்செழுமலர் தாழ்தல்பாவையர்
திங்கள்வாண்முகத்தெழிற் குடைந்துதேங்கமழ்
பொங்குதண்புனலிடை யொளித்தல்போலுமால்.



(இ-ள்) மங்கையர்-மாதர்கள்—செறிதலும்- அடைதலும்—மல்கு-நிறைந்த—நீரிடை-சலத்தினிடத்தில்—பங்கயம் - தாமரையினது—செழுமலர்-செழித்தபுஷ்பங்கள்—தாழ்தல்-மூழ்குதல்—பாவையர் - மாதர்களுடைய—திங்கள்-சந்திரனையொத்த—வாள் - பிரகாசம்பொருந்திய—முகத்தெழிற்கு-முகத்தினது அழகிற்கு—உடைந்து - தோற்று—தேம்-வாசனை—கமழ்-பரிமளியாநின்ற—பொங்கு-மிகுந்த, தண்புனலிடை-குளிர்ந்தநீரினிடத்தில்—ஒளித்தல்போலும் - ஒளித்தலையொக்கும்—எ-று. (கருத்து) தாமரைநீரிற் முழுதல்பெண்கள் முகத்துக்கஞ்சி ஒளித்தல்போலும் என்பதாம். (௩)

வடுவகிர்நெடுங்கணார் வார்கொள்வெம்முலை
குடைபுனல்வாவியுட் குளித்தலிந்திரன்
படர்சிறையரிவதற் கஞ்சிப்பாய்திரைக்
கடலிடைமால்வரையொளித்தல்காட்டுமால்.

(இ-ள்) வடுவகிர்- மாவடுவினது பிளப்பையொத்த—நெடுங்கணார்-நெடியகண்களையுடையமாதர்களது—வார்கொள் - கச்சையையணிந்த—வெம்-விருப்பத்தைத்தரும்—முலை-ஸதனங்கள்—குடை - ஆடாநின்ற—புனல்-சலத்தையுடைய—வாவியுள் - தடாகத்தினுள்—குளித்தல்-மூழ்குதல்—இந்திரன்-தேவேந்திரன்—படர்-விரிந்த—சிறை - இறகை—அரிவதற்கு அறுத்தற்கு—அஞ்சி - பயந்து—பாய் - பாயாநின்ற—திரை - அலையையுடைய—கடலிடை - சமுத்திரத்தினிடத்தில்—மால்வரை-உயர்ந்தமலைகள்—ஒளித்தல்-ஒளித்தலை—காட்டும் - காண்பிக்கும்—எ-று. ஆல்-அசை (கருத்து) பெண்கள் முலைகள் நீரிலிருத்தல் மைநாகபருவதமொளித்தல்போலும்—எ-ம். (௪)

விரைகமழ்சுண்ணமெய் திமிர்ந்துமென்குழற்
றெரியலின்வீக்குபு தெய்வச்சாந்தணி
வரிமுலைதோன்றிட மகளிர்நீந்துத
னிரைமணிக்குடத்திற னீந்தல்போலுமால்

(இ-ள்) விரை கமழ்-வாசனைபரிமளியாநின்ற—சுண்ணம் - கந்தப்பொடிகளை—மெய்திமிர்ந்து-சரீரத்திற்பூசி—மென்குழல் - மிருதுவாகியகூந்தலை—தெரியலின்வீக்குபு-மாலையினாலேகட்டி—தெய்வம் - தெய்வீகமாகிய—சாந்தணி-சந்தனத்தையணிந்த—வரி - கோலத்தையுடைய—முலை-ஸதனங்கள்—தோன்றிட-தோற்ற—மகளிர் - மாதர்கள்—நீந்துதல்-நீந்துதலானது—நிரை-வரிசையாகிய—மணிக்குடத்தினல் - இரத்தினகும்பத்தினல்—நீந்தல்போலும்-நீந்தலையொக்கும்—எ-று. (கருத்து) மாதர்கள் முலைதோன்றும்படி நீந்துதல்குடங்கொண்டு நீந்துதல்போலும்—எ-ம். (௫)

படவரவல்குலார் முலையிற்பாய்புன
லுடைதிரைக்கரத்தினற் பொருதலொண்டிறற்
குடமுனிகருங்கடல் குடித்தவாற்றினைற்
புடைதிரண்மணிக்குடம் புடைத்தல்போன்றதே.

(இ-ள்) படவரவல்குலார்-பாம்பின்படத்தையொத்த நிதம்பத்தையுடையமாதரது—மூலையில்-ஸ்தனங்களின்மீது—பாய் -பாயாநின்ற—புனல்-சலமானது—உடை-உடையாநின்ற—திரைக்காத்திறுல் - அலையாகியக்கையினுல்—பொருதல்-மோதுதல்—ஒண்டிறல் - பிரகாசமாகிய வல்லமையையுடைய—குடமுனி-அகஸ்தியர்— கருங்கடல் - கருங்கடலை—குடித்தவாற்றினுல்-பானம்பண்ணியநெறியினுல்—புடை -பக்கங்களில்—இரள்- இரண்டாபணிக்குடம் - இரத்தினக்குடத்தை — புடைத்தல்போன்றது-அடித்தலையொத்திருந்தது —எ-று. (கருத்து) மாதர்கள்முலை அகஸ்தியர்க மண்டலத்தைஒத்திருந்தது-எ-ம். (௬)

சிற்றிடையொருத்திதன் றிலகவாண்முகத்
தெற்றுநீர்காதலனிறைப்பக்காண்டலு
மற்றதுபொறுக்கலாணீ துயிர்த்துமாழ்கிய
முற்றுழைமழைக்கணீர்முகநிறைந்ததே.

(இ-ள்.) சிற்றிடை-சிறியஇடையையுடைய—ஒருத்திதன் - ஒருமாதினது—திலகம்-திலகப்பொட்டையணிந்த — வாண்முகத்து-பிரகாசம்பொருந்தியமுகத்தினிடத்து—எற்று - மோதுகின்ற—நீர் - சலத்தை—காதலன்-புருஷன்—இறைப்ப - இறைக்க—காண்டலும்- பார்த்தவளவில்—அது-அதை—பொறுக்கலாது - பொறுக்கமாட்டாமல் — உயிர்த்து-பெருமூச்சுவிட்டு—மாழ்கி - மயங்கிய— முற்றிழை - சக்களத்தியினது—மழைக்கணீர் - குளிர்ச்சிபொருந்தியகண்ணீரானது—முகம் - முகத்தில்—நிறைந்தது-ரம்பியது—எ-று. மற்று-ஏ - அசைகள் (கருத்து) நாயகன் ஒருநாயகிமுகத்திலேநீராயிறைக்கக்கண்டவளவில்மற்றொருநாயகியழுதாள்-எ-ம். (௭)

நாள்விழவயர்த்தவனணிக்காதலன்
றோள்ணிசாந்தநீர் தோய்த்துநீக்கலும்
வாளுகிர்நுதமெய்வடுக்கண்டேங்குறு
மீளவுமுளகனிவெள்கினளரோ.

(இ-ள்) நாள்-புதிதாக —விழவயர்த்தவன் - கலியாணம்பண்ணப்பட்டவள்—நாணி-வெட்கப்பட்டு—காதலன்-புருஷனது—தோளணி-தோள்களினின்றுமணிந்த—சாந்தம்-சந்தனத்தை—நீர்தோய்த்து - நீரிற்குளித்து—நீக்கலும்-போக்கியவளவில்—வாள் - வாள்போன்ற—உகிர் நகங்கள்—உழுத-கிழித்த—மெய்-சரீரத்தில்—வடுக்கண்டு - குறிகளைப்பார்த்து—ஏங்குறு-இரங்கி—மீளவும்-மறுபடியும்—உளம் - மனதில்—நனி-மிகவும்—வெள்கினள்—வெட்கமுற்றுள்—எ-று அரோ-அசை (கருத்து) புதுமணப்பெண்முழுகிச் சந்தனத்தை நீக்கினவளவில் கணவன் நகக்குறி தன்மெய்யிற்கண்டு வெட்கினுள்-எ-ம். (௮)

இன்னணமாடுதனேக்கியெய்திய
மன்னவர்மன்னது மருங்குதேய்த்துயர்
பொன்னவிரிளமுலைப் பூவைதன்னெடுந்
துன்னுநீர்ப்போர்த்தொழிற் றெடங்கினனரோ.



(இ-ள்) இன்னணம் - இத்தன்மையவாக —ஆடுதல்- விளையாடுதலை—நோக்கி-பார்த்து — எய்திய - அத்தடாகத்தினிடத்திலேவந்த—மன்னவர்மன்னனும் - அரசர்க்கரசனுகியநளமகாராஜனும் — மருங்குதேய்த்து-இடையைத்தேய்த்து—உயர்-உயர்ந்த—பொன்னவிர் - தேமல்பிரகாசியாநின்ற—இளம்-இளமைபொருந்திய—முலை- ஸ்தனங்களையுடைய—பூவைதன்னெடும்-தமயந்தியினுேடும்— துன்னு - நெருங்கிய —நீர்ப்போர்த்தொழில்-சலக்கிரீடையை—தொடங்கினுன் - ஆரம்பித்தான்—எ-று. அரோ-அசை (கருத்து) நளன்தமயந்தியுடன் நீர்விளையாடத்தொடங்கினுன்-எ-ம், (௯)

சுண்ணமென் *சிவிறிநீர் தூக்குமெந்திர
மெண்ணில்தாங்கிவேளையவேந்தலைப்
பெண்ணலங்கனிந்தொளிர்பேதைதன்னெடு
மண்ணியமணியனர்வளைந்திட்டாரரோ.

(இ-ள்) சுண்ணம்-கந்தப்பொடிகளையும்—மென் - மிருதுவாகிய—சிவிறி - துருத்தியையும்—நீர்தூக்குமெந்திரம் - நீரிறைக்குங் குழல்களையும்—எண்ணில்-அளவில்லாமல்— தாங்கி - எடுத்துக் கொண்டு,வேளைய-மன்மதனையொத்த—ஏந்தலை-நளமகாராஜனை — பெண்ணலம்-பெண்டன்மை;கனிந்து-பழுத்து—ஒளிர்-பிரகாசியாநின்ற —பேதைதன்னெடும்-தமயந்தியோடுகூட—மண்ணிய-கழுவிய—மணியனர்- இரத்தினத்தையொத்தபெண்கள்—வளைந்திட்டார்- வளைந்துகொண்டார்கள்-எ-று. *இலக்கணக்கொத்து-ஒழிபியல்-தோன்றுறிரிதல் கெடுதலின்மாறுந-லெனநான் காகும்புணர்ச்சியில் விகாரம்-இவ்விதியால் இக்காலத்துசிவிறி விசிறி எனநிலைமாற்றித்து—(கருத்து) பெண்கள் நீர் துருத்தியெடுத்துத்தமயந்தியோடு நளனைச்சூழ்ந்தார்கள் என்பதாம். (௰)

துன்னிருங்கூந்தலார் தூர்ந்ததாரைகண்
மன்னவன்றோள்களிற் பாய்தல்வானிடை
மின்னினங்காரொடு மிடைந்துமென்புனல்
பொன்னெடுங்குன்றின்மேற்பொழிதல்போன்றதே.

(இ-ள்) துன்னு-நெருங்கிய—இரும் - பெருமைபொருந்திய—கூந்தலார்-கூந்தலையுடையமாதர்கள்—தூர்ந்த - தூவிய—தாரைகள் - சலதாரைகள்—மன்னவன்-நளமகாராஜனுடைய—தோள்களில் - புஜங்களில்—பாய்தல்-வீழ்தலானது—வானிடை -ஆகாயத்தினிடத்தில் — மின்னினம்-மின்னற்கூட்டம்,காரொடும்- மேகத்துடனே — மிடைந்து-நெருங்கி—மென்-மிருதுவாகிய— புனல் - சலத்தை — பொன்னெடுங்குன்றின்மேல்-செடியமகாமேருவின்மீது—பொழிதல்போன்றது - பொழிதலையொத்திருந்தது—எ-று(கருத்து)பெண்கள்நளன் தோள்மேல் நீரிறைத்தல் மேகம்மலைமேற் பொழிதல்போலும்—எ-ம். (௰௧)

அரசர்கோன்குவிகநீர்த்தாரையாயிரந்
சுரிகுழன்மடந்தையர்முகத்திற்றூவுதன்

முருகவிழ்தாமரை மலரின்மேற்ட்டிளம்
பரிதிச்செங்கதிர்க்குழாம்பாய்தல்போன்றதே

(இ-ள்) அரசர்கோன்-இராஜாதிராஜனாகியநளமகாராஜன் — குவிக தீர்-இங்குவிக்கின்றது—தாரையாயிரம் - ஆயிரந்தாரைகளை — சுரி - சுழித்த—குழல்-கூந்தல்பொருந்திய—மடந்தையர் - மாதருடைய — முகத்தில்-முகங்களில்— தாவுதல் - இறைத்தலானது—முருகு-தேன் — அவிழ்-விரியாநின்ற —தாமரைமலரின் - தாமரைப்புஷ்பத்தினிடத்தில்— மேற்ட்டிளம்-மிருந்தவிளமைபொருந்திய—பரிதி- சூரியனுடைய—செங்கதிர்க்குழாம்-சிவந்தகிரணக்கூட்டங்கள் — பாய்தல் - வீழ்தலை, போன்றது-ஒத்திருந்தது—எ-று.ஏ-ஈற்றசை(கருத்து) நளன்பெண்கள்முகத்தில் நீர்த்தாரை தாவுதல்தாமரை மலரில்சூரியகிரணம் பாய்தல்போலுமென்பதாம். (௯௨)

விரைகமழுசுண்ணமும் வீசசாந்தமு
மாசனாண்டெறிதலுமாற்றலாமையாற்
குரைகடல்குளித்திடுமின்னிற்கோதைய
ருரவுநீர்வாவியிலொளித்திட்டாரரோ.

(இ-ள்) விரை-வாசனை—கமழ்-பரிமளியாநின்ற—சுண்ணமும்-கந்தப்பொடிகளையும்— வீசு-வாசனையைவீசாநின்ற—சாந்தமும்-சந்தனத்தையும்—அரசன்-நளமகாராசன்—ஆண்டு-அவ்விடத்தில் — எறிதலும்-வீசவும்—ஆற்றலாமையால் - பொருக்கமாட்டாமையினால்—குரை-சத்தியாநின்ற—கடல் - சமுத்திரத்தில்—குளித்திடும் - முழுகின்ற—மின்னில்-மின்னலைப்போல்—கோதையர்-மாதர்கள்— உரவு-விரிந்த—நீர்-சலத்தையுடைய—வாவியில்-தடாகத்தில்—ஒளித்திட்டார் - ஒளித்துக்கொண்டார்—எ-று, அரோ-அசை- (கருத்து) நளன் கந்தப்பொடியையுஞ்சந்தனத்தையு மெறிதலுக்குச் சகியாமல் பெண்கள் வாவியிலொளித்தார்கள்-எ-ம். (௯௩)

வாமமேகலையினர் வளர்ந்தவெம்முலை
நேமியம்புள்ளென நீருட்காட்டுவார்
காமர்வாண்முகத்தினைக் கமலஞ்சேர்த்திதன்
டாமரையென்மணித் தடத்தின்முழ்குவார்.

(இ-ள்) வாமம் - அழகுபொருந்திய —மேகலையினர் - மேகலாபரத்தையுடையமாதர்கள்—வளர்ந்த-வளர்ந்த—வெம் - விருப்பத்தைத்தராநின்ற—முலை-ஸ்தனங்களை—நேமியம்புள்ளென - சக்கிரவாகப்பக்ஷியென்று—நீருட்காட்டுவார்-சலத்துக்குள்ளே காட்டுவார்கள் — காமர்-அழகிய—வாள் - பிரகாசம்பொருந்திய—முகத்தினை - முகத்தை —கமலஞ்சேர்த்தி-தாமரைப்புஷ்பத்துடனேசேர்த்து, தண் - குளிர்ச்சிபொருந்திய,தாமரையென-தாமரைப்பூவென்று சொல்ல—மணி - முத்தையுடைய,தடத்தின்-தடாகத்தில்—முழ்குவார்-முழ்குவார்கள்—எ-று.(கருத்து)பெண்கள்முலைகளைச் சகோரம்போலக்காட்டுவார்கள்-முகத்தைத் தாமரையெனச்சேர்த்துமுழ்குவார்கள்-எ-ம். (௯௪)



தோற்றதன்பெரும்படை துளங்கினுமினி
யாற்றலமெனமலரடியிற்சேர்தலுங்
கோற்றொடியலங்கலங் குன்றன்னானெதி
மேற்றெனவெரிமணிச் சிவிறியேந்தியே.

(இ-ள்)தோற்ற-தோற்றுப்போன—தன் - தன்னுடைய — பெரும்படை-பெரியசேனைகள்—துளங்கினும்-நடுங்கினோம்,இனி-இனிமேல்—ஆற்றலமென-பொறுக்கமாட்டோமென்று—மலரடியில்- தாமரைமலரினையொத்தபாதத்தில்—சேர்தலும் - அடையுமளவில்— கோற்றொடி-தமயந்தியானவள்—அலங்கல்-மாலையணிந்த—அம் - அழகிய— குன்றன்னானெடும்-மலையையொத்தநளமகாராசனுடனே — எரி - பிரகாசியாநின்ற,மணி,இரத்தினத்தாற்செய்த, சிவிறி-நீர்தூற்றுந் துருத்தியை —ஏந்தி-தாங்கி—ஏற்றனள்-எதிர்த்தாள் — எ-று,(கருத்து) தமயந்தி நீர்வீசுந்துருத்திகொண்டு நளனோடெதிர்த்தாளென்பதாம். (௯௫)

ஓவியமெழுதருமுருவப்பூங்கொடி
கோவைவார்மணிவடக்கொம்மைவெம்முலைத்
தாவிறேறுறுமெனச்சுடர்செய்பூணினு
ளாவியந்துகில்கரந்தமையத்தாவினான்

(இ-ள்) ஓவியர்-சித்திரக்காரராலே—எழுதரும்-எழுதற்கரிய — உருவம் - வடிவத்தையுடைய—பூங்கொடி - தமயந்தியினது — கோவை-கோத்திருக்கின்ற—வார்-நீண்ட—மணிவடம் - முத்துமாலையணிந்த— கொம்மை-இளமைபொருந்திய—வெம் - விருப்பத்தைத் தருகின்ற— முலை-ஸ்தனங்களில்—தாவில்-நீரைத்தாவில்—ஏறுமென - வருத்துமென்று—சுடர்செய்-பிரகாசிக்கின்ற—பூணினன் - ஆபரணத்தையுடையநளமகாராஜன்—ஆவி-பாலாவியையொத்த—அம் - அழகிய— துகில்-வஸ்திரமானது—கரந்தமைய- மறையும்படி, தாவினான் - இறைத்தான்—எ-று.(கருத்து)நளன்-தமயந்தியின் மேல்நீரிறைத்தான்-எ-ம்.

அந்துகிலனைதல லல்குலோன்றுதல்
கந்தடுகளிற்றினான் காணவெள்குறச்
சுந்தரச்சுண்ணநீர் முகத்திற்றூயவன்
சந்தணிதடம்புயந்தழுவினாளரோ

(இ-ள்.)அந்துகில்-அழகியவஸ்திரம்—நனைதலல்-நனைந்தவிடத்து—அல்குல் - நிதம்பமானது—தோன்றுதல்-தோன்றுதலை—கந்தடு - கட்டுத்தறியைமுறிக்காநின்ற—களிற்றினான்-யானையையுடையநளன்—காண-பார்க்க—வெள்குற-வெட்கமுற்று—சுந்தரம்-அழகிய,சுண்ணநீர்-கந்தப்பொடிகலந்தநீரை—முகத்திற்றூய்-முகத்திலேயிறைத்து —அவன்-அவ்வரசனுடைய—சந்தணி- சந்தனமணிந்த—தடம்புயம்-பருத்ததோள்களை தழுவினாள் - தழுவிக்கொண்டாள் —எ-று, (கருத்து) சேலைநனைதலால் அல்குலைநளன்காணத்தமயந்தி வெட்கப்பட்டு அவன் முகத்தில் நீரையிறைத்துப் புயத்தைத்தழுவினாளென்பதாம். (௯௭)

அலர்முலையம்மருங்ககறுநாமெனக்
கலுழ்வபோற்றண்டுளிகாலுமேகலை
நிலவுமிழ்பூணினணீக்கியேர்பெற
விலகிவில்லுமிழ்கலைவீக்கினாளரோ,

(இ-ள்) அலர்முலை-தமயந்தியினது—அம்மருங்கு - அழகியஇடையை—அகறும்-நீங்குவோம்—நாமென-நாமென்றுகலுழ்வபோல்- அழுகின்றதுபோல்—தண்டுளி-தண்ணிய துளிகளை—காலும் - சொரியும், மேகலை-மேகலாபரணத்தை—நிலவு- பிரகாசத்தை—உமிழ் - உமிழாநின்ற—பூணினள்-ஆபரணத்தையுடையதமயந்தி—நீக்கி - அகற்றி—ஏர்பெற-அழகுபெற—விலகி-விட்டுவிட்டு—வில் - பிரகாசத்தை—உமிழ்-கக்காநின்ற—கலை - ஆடையை—வீக்கினள்-கட்டிக்கொண்டாள்—எ-று-பூணினள்மேகலையைநீக்கிக் கலைவீக்கினளெனக் கூட்டுக(கருத்து)தமயந்திமேகலையைநீக்கி ஆடையுடுத்திக்கொண்டாளென்பதாம்.(

நகைநிலாத்தவழ்ந்தென நானங்கோட்டிய
முகிழ்முலைமுன்றிலின் முத்தந்தாங்கின
ளகிலினறுந்தாமமென் குழலிலம்மலர்ச்
சிகழிகைவேய்ந்தன டிலகந்தீட்டினள்.

(இ-ள்)நகை-ஒளியையுடைய— நிலா-சந்திரிகை — தவழ்ந்தென-தவழ்ந்ததுபோல—நானங்கோட்டிய-கஸ்தூரியப்பிய—முகிழ் - அரும்பையொத்த—முலைமுன்றிலில்-ஸதனப்பிரதேசத்தில்— முத்தம் - முத்துவடத்தை— தாங்கினள்-தரித்தாள்— அகில் - அகிலினுடைய—நறுந்தாமம்-நறியப்புகையூட்டிய—மென் குழல் - மெல்லியகூந்தலில்— அம்-அழகிய—மலர்ச்சிகழிகை - மலர்மாலையை— வேய்ந்தனள் - தரித்தாள்—திலகம்-திலகப்பொட்டை,தீட்டினள்-எழுதினள்—எ-று. (கருத்து) தமயந்தி முத்துவடமணிந்தாள் மாலைதரித்தாள் திலகமிட்டாள்-எ-ம் ()

களிச்சுரும்பரற்றுதார்க்காளைகாமநோய்
தளிர்த்தெழமடமயிற்சாயறன்னொடுந்
துளிப்புயல்கண்படுசோலைகாப்பணோர்
பளிக்குமேனிலைமலர்ப்பள்ளிமேவினன்.

(இ-ள்) களி-களிப்பையுடைய—சுரும்பு - வண்டுகள் — அரற்றுதார் - சத்திபாநின்ற மாலையையுடைய—காளை- நளமகாராஜனைவன், காமநோய்-விரகநோயானது—தளிர்த்தெழ-அதிகரிக்க — மடமயிற்சாயறன்னொடும்-தமயந்தியுடனே—துளிப்புயல்-துளியையுடையமேகங்கள்—கண்படு-நித்திரைசெய்யாநின்ற—சோலைகாப்பண் - சோலைக்குமத்தியில்—ஓர்பளிக்குமேனிலை - ஒருபளிங்கினால்செய்த மேலுப்பரிகையில்—மலர்ப்பள்ளி-புட்பசயனத்தில்—மேவினன்-சேர்ந்தான் -எ-று. (கருத்து)நளன் விரகமதிகரிக்கத் தமயந்தியுடன் சோலையிற்பளிங்குமேன்மாடத்துமலர்ப்பள்ளியுட்சேர்ந்தான்-எ-ம். (௨௰)

அரிக்குரற்கிண்கிணிசிலம்பொடார்த்தன
புரிக்குழன்மலர்மழைபொழிந்துபொங்கிய



வரிச்சிறைத்தும்பிபாட் டயர்ந்தமங்கைதன்
திருக்கிளர்முலைநலஞ் செம்மலுண்ணவே,

(இ-ள்) மங்கைதன் - தமயந்தியினது—திருக்கிளர் - அழகுமிகுந்த—முலைநலம் - ஸ்தனத்தின் இன்பத்தை—செம்மல் - நளமகாராஜன்—உண்ண-அநுபவியாநிற்க—அரி-தவளையினது—குரல்-குரலையொத்த—கிண்கிணி-சதங்கைகள்—சிலம்பொடு - சிலம்புடனே—ஆர்த்தன-ஆரவாரித்தன—புரி-கட்டுப்பட்ட—குழல்-கூந்தல்—மலர்மழை-புஷ்பவருஷத்தை—பொழிந்து-சொரிந்து—பொங்கிய-மிகுந்தன—வரிகொண்ட—சிறை-இறகையுடைய—தும்பி - வண்டுகள்—பாட்டயர்த - பாட்டைப்பாடின—எ-று. (கருத்து) நளன் தமயந்தியையநுபவிக்கக்காலில் கிண்கிணிசிலம்புகள் சத்தித்தன கூந்தலில் வண்டுகள் பாடினவென்பதாம்.

ஏந்திளவனமுலை சாடவீர்ங்குஞ்
சாந்துதிர்ந்தெழிறவழ் மார்பினான்
பூந்துணர்பொதுளிய பொதும்பர்காப்பணோர்
வாய்ந்தபூங்கொடியொடு மணந்துவைகினான்.

(இ-ள்) ஏந்து-ஏந்திய—இளம் - இளமைபொருந்திய—வனமுலை-அழகியஸ்தனங்கள்—சாட - மோத—ஈர்-குளிர்ச்சியும்—நறும் - வாசனையும்பொருந்திய—சாந்துதிர்ந்து-சந்தனமழிந்து—எதிர் - தோற்ற—எழில்தவழும்-அழகுபொருந்திய—மார்பினான் - மார்பையுடையநளன்—பூந்துணர்-பூங்கொத்துக்கள்—பொதுளிய - நெருங்கிய—பொதும்பர்-சோலையினுடைய—காப்பண்-மத்தியத்தில்—ஓர் - ஒப்பற்ற—வாய்ந்த-தனக்குக்கிடைத்த—பூங்கொடியொடு-தமயந்தியினுடனே—மணந்து-கூடி—வைகினன்-இருந்தான்—எ-று, (கருத்து) தமயந்தியுடன் கூடியிருந்தான் என்பதாம். (௨௨)

புனல்விளையாட்டுப்படலம் - முற்றுப்பெற்றது.

௨

# சூதாடுபடலம்.

இப்படலத்தால் குறைவின்றியசெல்வத்தை யநுபவிக்கும் நளன் விதிவழியால் அளவிறந்ததுன்பமநுபவித்தற்குக் காரணமாகிய சூதாடல் சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

வாம்பரித்தேரினை மாமழையொண்கண்ணி னொடு
மேம்படவோட்டினனபுஷ்கர யிடைவிடாதொருநாளி

ருக

வரம்பலம்போதுகாட்டு மணிநிகழ்பவளச்செவ்வாய்
காம்புறழ்தோளிநுட்குக் கருப்பமம்வந்துற்றதன்றே.

(இ-ள்) வரம்-நாவாகின்ற—பரித்தேரினும் - குதிரைகட்டியதேரையுடையதசரதமகாராசனும்—மாறை - மாவடுவையொத்த—ஒள்-பிரகாசம்பொருந்திய—கண்ணினளும் - கண்ணையுடையதமயந்தியும்—அயலோடு-அகமலர்ச்சியுடனே—இனிதுபுல்லி - இனிமையாகப்புல்லி—இடைவிடாது-நீங்காது—ஒழுகுநாளில் - நடக்குநாளிலே—அம்பலம்போது-செவ்வல்லிமலரை—காட்டும்-காட்டுகின்ற—அணிதிகழ் - அழகுபிரகாசியாநின்ற—பவளம்-பவளத்தையொத்த—செவ்வாய் - சிவந்தவாயையும்—காம்பு-மூங்கிலை—உறழ்-ஒத்த—தோளினுட்கு - தோளையுடையதமயந்திக்கு—கருப்பம்வந்துற்றது - கர்ப்பமுண்டாயிற்று—எ-று. (கருத்து) தமயந்திகருப்பமடைந்தாள் என்பதாம். (௬)

மெலியுநுண்மருங்குதோன்ற வேயிளந்தோள்கடேம்ப
நலனுறுசெய்யமேனி பாசொளிகாம்புகாட்ட
வலர்தனக்கணிந்துவீங்கி யழகுவீற்றிருந்தபொம்மல்
முலைமுகங்கருகிச்செவ்வி முகமதிவிளர்த்ததன்றே.

(இ-ள்) மெலியும்-வாடாநின்ற—நுண்-நுட்பமான—மருங்கு - இடையானது—தோன்ற-காண—வேய்-மூங்கிலையொத்த—இளம் - இளமையாகிய—தோள்கள்-தோள்கள்—தேம்ப-வாட—நலனுறு - நன்மைபொருந்திய—செய்யமேனி-சிவந்தவுடம்பு—பாசொளி - பசியவொளியையுடைய—காம்புகாட்ட-காம்புகளைத்தோற்றுவிக்க—அலர் - பரந்த—தனக்கு-தேமலை—அணிந்து-தரித்து—வீங்கி - பருத்து—அழகுவீற்றிருந்த - அழகான துதங்கியிருந்த—பொம்மல் - பொலிவுபொருந்திய—முலைமுகம்-ஸ்தனங்களின் முகங்கள்—கருகி-கறுத்து—செவ்வி - அழகையுடைய—முகமதி-முகமாகியசந்திரன்—விளர்த்தது - வெண்மையடைந்தது—எ-று. அன்று-ஏ-அசைகள் (கருத்து) தமயந்தியிடைதோன்றதோள்கள் வாடப்பசியகாம்புகாண முலைகருகி முகம்வெளுத்தது என்பதாம். (௭)

குழைமுகமிழித்தநீண்ட கொழுங்கடைமழைக்கட்பேதை
பொழிசுடர்த்திங்கள்காட்டும் வலம்புரிவருந்திப்பொங்கி
யொழுகொளிநிலவுகாலு நித்திலமுயிர்த்ததென்ன
மழகளிறனையதோற்ற மைந்தனைக்குழவியீன்றாள்.

(இ-ள்) குழைமுகம் -காதின்முகத்தை—இழித்து - இழித்து—நீண்ட-நீண்டிருக்கின்ற—கொழும்-செழுமையாகிய—கடை-கடையையுடைய—மழைக்கண் - குளிர்ச்சிபொருந்தியகண்ணையுடைய— பேதை-தமயந்தியானவள்—பொழி-சொரியாநின்ற—சுடர் - கிரணங்களையுடைய—திங்கள்-சந்திரனை—காட்டும்-தோற்றுவிக்கும்—வலம்புரி - வலம்புரிச்சங்கமானது—வருந்தி-வருத்தமுற்று—பொங்கி - பிரகாசித்து—ஒழுகு-மிகுந்த—ஒளி-காந்தியையுடைய—நிலவு - சந்திரிகையை—காலு-கக்காநின்ற—நித்திலம்-முத்தை—உயிர்த்ததென்ன - பெற்றதுபோ



ல—மழ-இளமைபொருந்திய—களிறனைய - யானையையொத்த—தோற்றம் - காட்சியையுடைய—மைந்தன்-மாட்சிமையாகிய—இளங்குழவி-இளங்குழந்தையை—ஈன்றாள்-பெற்றாள்—எ-று. (கருத்து) தமயந்தி ஆண்பிள்ளைபெற்றாள்-எ-ம். (௮)

மழகளிறனையநம்பி பிறையெனவளருநாளிற்
கழைபுரைதோளிபின்னோர் கன்னியையுயிர்த்தாண்மக்கள்
குழலினுங்கனிந்தவந்தீங் குதலைகேட்டுருகிவெய்ய
முழைபுகுசீயமன்ன னுவகையின்மூழ்கினானே.

(இ-ள்) மழ-இளமைபொருந்திய—களிறனைய-யானையையொத்த—நம்பி-பிள்ளையானவன்—பிறையென-மூன்றாம்பிறைபோல,வளருநாளில் - வளர்ந்துவருங்காலத்தில்—கழைபுரை - மூங்கிலையொத்த—தோளி-தோளையுடையதமயந்தி—பின் - பின்பு—ஓர்கன்னியை - ஒருபெண்ணை—உயிர்த்தாள்-பெற்றாள்—மக்கள் - இரண்டுகுழந்தைகளுடைய—குழலினும்-வேய்க்குழலினும்—கனிந்த - கனிவாகிய—அம்-அழகிய— தீங்குதலை - தித்திப்புப்பொருந்தியமழலைச்சொல்லை—கேட்டு-கேட்டுருகி—வெய்ய - வெவ்வியதாகிய—முழை - குகையில்—புகும்-நுழையாநின்ற—சீயமன்னன் - சிங்கத்தையொத்தநளமகாராசன்—உவகையில்-சந்தோஷத்தில்—மூழ்கினான்-அழுந்தினான் - எ-று. (கருத்து) பிள்ளைவளர்ந்துவருங்காலையில் தமயந்திபெண்பிள்ளையைப்பெற்றாள் - என்பதாம். (௯)

நிழலுமிழ்ந்துதிரங்காலும் வைவாளனிடதர்கோமா
னெழுபுவிவேந்தர்யாரு மிடுதிறைகொணர்ந்தெந்நாளுந்
தொழுதனரேத்திநிற்பத் தொடுகடலுடுத்தஞால
முழுவதுமொருகோலோச்சி முறைவழாதளித்தானன்றே.

(இ-ள்) நிழல்-பிரகாசத்தை—உமிழ்ந்து-சொரிந்து—உதிரங்காலும்-இரத்தத்தைக்கக்கும்—வைவாள் - கூரியவாளையுடைய—நிடதர்கோமான்-நளமகாராஜன்—எழுபுவி - சப்தத்வீபங்களிலுமுள்ள—வேந்தர்யாரும்-அரசரெல்லாரும்—இடுதிறை - இடாநின்றகப்பங்களை—கொணர்ந்து-கொண்டுவந்து—எந்நாளும் - எந்நாளும்—தொழுதனர்- வணங்கினவராய்—ஏத்தி-துதித்து—நிற்ப-நிற்க—தொடு- தோண்டிய—கடல்-உடுத்த- சமுத்திரஞ்சூழ்ந்த—ஞாலமுழுவதும் - உலகமுழுமையையும்—ஒருகோலோச்சி-ஒருசெங்கோலைச்செலுத்தி—முறைவழாது - கிரமந்தப்பாது—அளித்தான்-இரட்சித்துக்கொண்டுவந்தான்—எ-று. அன்று-ஏ-அசை (கருத்து) நளன் அரசர்திறைகொடுக்க உலகத்தையாண்டுவந்தான் என்பதாம். (௰)

கோவடுகுருதிவேலான் கொழுஞ்சுடர்பட்டகாலைச்
சேவடிகழுவவின்நீர் செய்கடன்கழித்தவெல்லைக்
காவலந்தேருங்காலங் கருதுபுபன்னிரண்டு
மேவருந்தான்றியுற்ற வெங்கலிபோயினானே.

(இ-ள்) கோ-சத்துருக்களாகியஅரசர்களை—அடு - கொல்லாநின்ற—குருதி-இரத்தத்தோய்ந்த—வேலான் - வேலாயுதத்தையுடையனளன்—கொழும்-செழித்த—சுடர் - சூரியன்—பட்டகாலை - அஸ்தமித்த பொழுது—சேவடி - சிவந்தபாதங்களை—கழுவவின்றி - கழுவாமல்—செய்கடன்-செய்யத்தக்கநித்தியகருமத்தை—கழித்தனேக்கி - செய்து முடிந்தலைப்பார்த்து—காவலன்-அரசனை—சேருங்காலம் - அடையுங்காலம்(எதுவென்று)—கருதா - நினைத்து—பன்னிரண்டு-பன்னிரண்டுவருஷம்—மேவரும்-அடைதற்கரிய—தான்றியுற்ற- தான்றிமரத்தின் கண்ணிருந்த—வெங்கலி -வெவ்வியகலியன்—மேயினன் - சேர்ந்தான்—எ-று. (கருத்து) நளன் திருவடிகழுவாது செய்கருமத்தைக்கண்டுதான்றிமரத்திருந்தசனிபகவான் அந்நளனைச் சேர்ந்தான்-எ-ம். (௬)

கலிவிருத்தம்.

விட்புலத்தரசரு மேனைவேந்தரும்
மட்கவிம்மன்னவன் மல்லன்மார்பகம்
பெட்புறுமடந்தையைப் பிரிப்பன்யானெனப்
புட்கரன்பாற்கலி போயினனரோ.

(இ-ள்) விட்புலத்து-தெய்வலோகத்திலிருக்கும்—அரசரும் - இந்திராதிதேவரும்—ஏனைவேந்தரும்-பூலோகத்தரசரும்—மட்க - நாணமடைய—இம்மன்னவன்-இந்நளனுடைய—மல்லல் - வலிமைபொருந்திய—மார்பகம்-மார்பினிடத்தே—பெட்புறும் - விரும்பும்—மடந்தையை-தமயந்தியை—பிரிப்பன்-பிரித்துவிடுவேன்—யானென-நானென்று—புட்கரன்பால்-புட்கராசனிடத்தில்—கலி - கலிபுருஷன்—போயினன்-போனான்—எ-று. அரோ-அசை (கருத்து) சனிபகவான்நளனைவிட்டுத் தமயந்தியைப்பிரிப்பேனென்று புட்கரனிடத்திற்போனான்-எ-ம்,

வருகலிபுட்கரன் வதனநோக்குறாக்
குரைகழனளனெனுங் கொற்றவேந்தனே
யொருகுடைநீழலி னுலகங்காத்திட
விருநிலக்கிழமைநீ யிழந்ததென்கொலோ.

(இ-ள்) வருகலி-வந்தகலியனவன்—புட்கரன்- புட்கராசனது—வதனம்-முகத்தை—நோக்குறா-பார்த்து—குரைகழல் - சத்தியாநின்றவீரக்கழலையணிந்த—நளனெனும் - நளனென்றுசொல்லப்பட்ட—கொற்றம்-வெற்றியையுடைய—வேந்தனே -அரசனே—ஒருகுடைநீழலின் -ஏகச்சக்கிராதிபதியாய்—உலகங்காத்திட-இவ்வுலகத்தைஆட்சிக்க—இரு-பெருமைபொருந்திய—நிலக்கிழமை- அரசாட்சியை—நீ-நீ—இழந்தது-கைவிட்டது—என்கொலோ-யாதுகாரணமோ—எ-று. (கருத்து) சனிபுட்கரனைப் பார்த்து உலகெலாம்நளன் ஆள நீ அரசாட்சியிழந்ததென்னவென்றான் என்பதாம். (அ)

வாட்டிறல்வேந்தனை மடந்தைதன்னொடுங்
காட்டிடைப்புகுத்திமண் காக்குமன்னருன்



றாட்டுணைதொழுநறுந்தாமநீண்முடி
சூட்டுவனினக்கெனச்சொல்லினனரோ.

(இ-ள்.) வாட்டிறல் - வாட்போரில்வெற்றியையுடைய—வேந்தனை அரசனை—மடந்தைதன்னொடும் - மனைவியுடனே—காட்டிடைப்புகுத்தி-காட்டினிடத்திற்போகச்செய்து—மண் - உலகத்தை—காக்கும்-ரட்சிக்கின்ற—மன்னர்-அரசர்கள்—உன் -உன்னுடைய—தாட்டுணை-உபயபாதங்களை—தொழ -வணங்க—நறும்- வாசனைபொருந்திய—தாமம்-மாலையணிந்த—நீண்முடி-நீண்டகிரீடத்தை—நினக்கு- உனக்கு-சூட்டுவன்-தரிப்பேன்,என-என்று,சொல்லினன்-சொன்னான்-எ-று(கருத்து) நளனையுந்தமயந்தியையுங் காட்டிற்றுரத்தி உனக்கு முடிசூட்டுவேனென்றான்-எ-ம். (கூ)

சொல்லலுங்களிமகிழ் தூங்கிப்புட்கரன்
கொல்லியவருதிறற்கூற்றுமஞ்சுறு
மல்லடுதிண்புயமன்னர்மன்னனை
வெல்லுமாறெங்ஙனம் விளம்புவாயென்றான்.

(இ-ள்) சொல்லும் - இப்படிச்சொன்னவளவில்—களிமகிழ்தூங்கில்-மிகுந்தமகிழ்ச்சியடைந்து —புட்கரன்- புட்கராஜன்—கொல்லிய-கொல்ல—வரும்-வராநின்ற—திறல் -வெற்றியையுடைய —கூற்றும்-இயமனும்—அஞ்சுறும்-பயப்படும்படியாகிய —மல்லடு - மற்போர்செய்கின்ற—திண்புயம்-திண்ணியபுயத்தையுடைய—மன்னர்மன்னனை-நளமகாராஜனை —வெல்லுமாறு-வெல்லுநெறி,எங்ஙனம்-எவ்விதம் — விளம்புவாயென்றான்- சொல்லென்றுசொன்னான்—எ-று. (கருத்து) புட்கரன்நளனைவெல்லும்வழிசொல்லென்றான்-எ-ம். (ய)

என்னலையாதுநானிழைத்தவஞ்சனை
விண்ணவராயினும் விலக்கற்பாலரோ
வண்ணலைச்சூதினிற்படுப்பலஞ்சலி
கண்ணுறும்யான்கொடுங்கலியென்றனரோ.

(இ-ள்) யாதும்எண்ணலை-எவ்வளவும் ஆலோசிக்கவேண்டாம்—நானிழைத்த-நான்செய்த—வஞ்சனை - கபடத்தை —விண்ணவராயினும்-தேவர்களானாலும்—விலக்கற்பாலரோ - நீக்குந் தன்மையையுடையவர்களோ—அண்ணலை-நளனை—சூதிற்படுப்பன் - சூதினாற்செயிப்பேன்—நீஅஞ்சல்-நீபயப்படவேண்டாம்—கண்ணுறும் - எதிரேவந்த, யான் -நான்—கொடும் - கொடிய—வெங்கலி யென்றான்-வெவ்விய கலியனென்றுசொன்னான்—எ-று. (கருத்து) சனிநளனைச்சூதினால்வெல்லுவேனென்றான்-எ-ம். (யக)

மூறையுறைகொடுவரி யனையமொய்ம்பினு
னுறைபுயினிற்போதுமென் றுரைத்துவெங்கலி
மழவிடையுருக்கொடிம்பவனகட
நிறைதவழ்மார்பினனிவர்ந்துபோயினன்.

(இ-ள்)முழை-குகையினிடத்தில்—உறை - இருக்காநின்ற—கொடுவரியனைய-புலியையொத்த —மொய்ம்பினன் - வலியையுடையநளம

காராசனத்து—உறைமயினில் இடத்தில்—போதுமென்று - பேசவேமெ ன்று—உரைத்து-சொல்லி—வெவ்வலி - வெவ்விய வலியானுடையவன் — மழ விடை-இளவேற்றின்—உருக்கொடு-உருவத்தைக்கொண்டு—நீடிய - நீ ண்ட—வன்-வன்மையமாகிய—கடா-காக்கிசையுடைய—இறைகவழ் - ஆ பரணமசையாநின்ற—மார்பினன் - மார்பையுடைய புஷ்கரராஜன்—இ வர்ந்து-ஏறிக்கொண்டு—போயினான்-சென்றான் ——எ-று. (கருத்து) சனி இடபமாய்த்தோன்றியதனைக்கண்டு மிக்கபுட்கரன் அதன்மேலேறிச்சென் றான்-எ-ம். (௰௨)

உரவுநீர்க்கருங்கடலுலகுகாவலன்
குரைகழல்பணிந்தங்குறைகள்சாற்றுவா
னரசர்கண்டுயில்மைமுகில்நெருங்குமுன்
முரசகண்டுயில்கிலாவாயின்முன்னினான்.

(இ-ள்) உரவுநீர்-விரிந்தநீரையுடைய—கருங்கடல் - கரியகடலாற் சூழப்பட்ட—உலகுகாவலன் - உலகுக்கரசனாகியநளனது—குரைகழ ல்பணிந்து-சத்திக்கின்றவீரக்கழலையணிந்தபாதத்தைவணங்கி—தங்கு றைகள்சாற்றுவான் - தமதுகுறைகளைச்சொல்வதற்கு—அரசர் - அரசர் கள்—கண்டுயில்-(சமயமின்மையால்)நித்திரைபண்ணவை—மைமுகிலென -கறுத்தமேகத்தைப்போல—ஆர்ப்புறும்-சப்திக்கின்ற—முரசு - பே ரிகையானது—கண்டுயில்கிலா-நித்திரைசெய்யாத—வாயில் - அரண்ம னைவாசலின்—முன்னினான்-அடைந்தான் புஷ்கரராஜன்-எ-று. (கருத் து) புட்கரன்நளன் அரண்மனையைநீஙகிசென்றான்என்பதாம். (௰௩)

மன்னவற்கொல்லவந்நாதிலவாயிலோ
யென்னையுமாங்கவனெய்திக்கூறுமென்
றென்னவில்வேலினன் கொணர்கவென்றன
னன்னவன்வருகெனவவையின்எய்தினான்.

(இ-ள்) வாயிலோய்-வாயிற்காவலாளனே—மன்னவற்கு- நளமகா ராஜனுக்கு—எம்வாவுநாதந்தி - எம்முடைவரவைச்சொல்லு —என்னையும் என்றுசொல்லவும்—அக்கவன் - அக்காவலாளன்—எய்திக்கூறவும் போய்சொன்னவளவில் [illegible] னவில்-சொல்லுதலைச்செய்யாநின்ற —வேலினன்-வேலையுடையவாசன்—கொணர்கவென்றனன்-அழைத் துவாவென்றுசொன்னான்—அன்னவன்வருகென-அக்காவலாளன்வா வென்றுசொல்ல—அவையினெய்தினான் - சபையில்வந்தான் புஷ்கரரா ஜன்—எ-று.(கருத்து) புட்கரன் காவலாளனுக்குச் சொல்ல அவன் நள னுக்குச்சொல்ல நளன் அழையென்றுசொல்ல அவனழைக்க இவன் வந்தான்-எ-ம். (௰௪)

கன்னகணைதாங்கியோர்கவிகைநீழலின்
வன்னகடலுலகெலாம்புரக்குமன்னவன்
றன்னயனிழ்தாமரைத்தாளில்வீழ்ந்தெழு
மின்னவலோடளவளாயிருக்குமெல்லையில்.



(இ-ள்) கன்னகணைதாங்கி-ஆதாரமாகி— ஓர் - ஒரு—கவிகை - வெண் கொற்றக்குடையினது—நீழலில்-நிழலிலிருந்து —வன்னகடல் - சமுத்தி ரஞ்சூழ்ந்த—உலகெலாம் - பூவுலகமுழுவதையும்—புரக்கும்- காப்பாற்றுகி ன்ற—மன்னவன்-நளமகாராஜனுடைய—தனியவிழ்தாமரைத்தாளில் வீழ்ந்து—தாமரை-தாமரைப்பூவையொத்த — தாளில்-பாதத்தில்—வீழ்ந்து- வணங்கி—எழும்-எழுகின்ற, இளவலோடு - இளையோனாகியபுஷ்கர ரா ஜனுடனே—அளவளாய் - ஒருவர்க்கொருவர் கலந்து பேசிக்கொண்டு இருக்குமெல்லையில்- இருக்குஞ்சமயத்தில்-எ-று. (கருத்து) நளனும் பு ஷ்கரனுங் கலந்திருக்குஞ்சமயத்தில் - என்பதாம், இதுமுதலிரண்டும் ருளகம். (௰௫)

கொல்சினவாகைவேற் குரிசின்மல்லலேற்
றெல்லுமிழ்மணிகொடியுயர்த்தகென்னென
வல்லசூதினிலேற்றமன்னனை
வெல்கொடிநீதெனவிளம்பினானரோ.

(இ-ள்) கொல்-கொல்லுகின்ற—சினம்-கோபத்தையுடைய—வா கை-வெற்றிபொருந்திய—வேல்-வேலாயுதத்தையுடைய—குரிசில் நள மகாராஜனானவன்—மல்லல் - பலம்பொருந்திய — ஏற்று - ரிஷபத்தின் மேல்—எல்-பிரகாசத்தை—உமிழ்-கக்காநின்ற—மணிக்கொடி - அழ கியகொடியை—உயர்த்து-பிடித்தது —என்னென - என்னவென்று கேட்க—வல்-சொக்கட்டானுடைய ஆடு - பொருகின்ற—சூதினில் - சூதா ட்டத்தில்—ஏற்றமன்னனை - எதிர்த்தவேந்தனை —வெல் - செயிக்கின் ற,கொடி-துவசம்—ஈதென - ஈதென்று—விளம்பினான் - சொன்னான் ——எ-று.(கருத்து) நளன் இடபத்தின்மேற்கொடி பிடித்த தென்னவெ ன்றுகேட்க புஷ்கரன் சூதாட்டத்தி லெதிர்த்தமன்னரை வெல்லுங் கொடியீதுவென்றான்-எ-ம். (௰௬)

சொல்லியவவ்வுரைகேட்டுத்தூமணிக்
கல்லெனபடணைத்துயர்கலைவத்தோளினன்
வெல்கொடியுயரியவிடைஞ்சூதினில்
வல்லையேலாடுதும்வருகென்றேநினான்.

(இ-ள்) சொல்லிய - சொன்ன—அவ்வுரை - அந்தவசனத்தை— கேட்டு-செவியிற்கேட்டு—தூ - பரிசுத்தமாகியமணி - இரத்தினங்களை யுடைய—கல்லென-மலையைப்போல—பணைத்து-பருத்து—உயர்- உய ர்ந்த—கலவை-சந்தனமணிந்த—தோளினன் - தோள்களையுடைய நள ன்—வெல்கொடியுயரிய-வெல்லாநின்றகொடியைப்பிடித்த — விடையே- புஷ்கரனே—சூதினில் - சூதாட்டத்தில்—நீ வல்லையேல் - நீ வல்லமையு யுடையவனானால்—ஆடுதும்-ஆடுவோம்—வருகென்றேநினான் - வாவெ ன்றுசொன்னான்—எ-று.(கருத்து) நளன் சூதாட்டத்தில்வல்லவனாயா னால்ஆடுவோம்வாவென்றான்-எ-ம். (௰௭)

கருசினத்கொடியவன்புணர்ப்பினைமிறை
வஞ்சகச்சூதினின்மனமலைத்தவென

வஞ்சினாமைச்சரவ்வரசர்கோமகன்
செஞ்சரண்டொழுதிவைசெப்பன் மேயினர்.

(இ-ள்-) நஞ்சினில்-விஷத்தைப்பார்க்கிலும்—கொடியவன்-பொல்லாதவனுகியபுஷ்கரனது—புணர்ப்பின்-சம்பந்தத்திறைல்—நம்மிறைவன்-நம்முடையவாசன்—வஞ்சகம்-கபடமாகிய—சூதினில்-சூதில்—மனம் வைத்தானென-சித்தம்வைத்தானென்று—அஞ்சினார்-பயந்தவராய்—அமைச்சர்-மந்திரிகள்—அவ்வரசர்கோமான்—அந்தநளமகாராஜனது—செஞ்சரண்டொழுது-சிவந்தபாதங்களைவணங்கி—இவைசெப்பன்மேயினர்-இவைசொல்லத்தொடங்கினர்கள்—எ-று. (கருத்து) மந்திரிகள் நளமகாராஜனுக்குச் சொல்லத்தொடங்கினர்கள்-எ-ம். (௰அ)

சீலநற்றருமமெய்சிதைக்குந்தெண்டிரை
வேலைமுற்றிருநிலக்கிழமைவீழ்த்திடும்
மாலுறுத்திடுங்கவறாடன்மன்னர்கேள்
கோலிழுக்கரசர்தங்கொள்கைத்தென்பவே.

(இ-ள்) மன்னர்கேள் - அரசனேகேளாய்—கவறாடல் - சூதாடலானது—சீலம்-ஒழுக்கத்தையும்—நற்றருமம் - நல்லதருமத்தையும்—மெய்-சத்தியத்தையும்—சிதைக்கும் - கெடுக்கும்—தெண்டிரை - தெள்ளியவலையையுடைய—வேலைமுற்று - கடலினுற்சூழப்பட்ட—இரு-பெருமைபொருந்திய—நிலக்கிழமை- அரசாட்சியை — வீழ்த்திடும் - தள்ளிவிடும்—மாலுறுத்திடும் - மயக்கஞ்செய்விக்கும்—கோலிழுக்கரசர்தம்-கொடுங்கோலைச்செலுத்துகிற அரசர்களது,கொள்கைத்தென்ப - கோட்பாட்டையுடையதென்று(பெரியோர்கள்)சொல்லுவார்கள்—எ-று.(கருத்து)நளச்சக்கிரவர்த்தியே சூதாடுதல் ஒழுக்கத்தையும் தருமத்தையும் சத்தியத்தையும்கெடுக்கும் அரசாட்சியையுந்தள்ளும் - மயக்கந்தரும் இதுகொடுங்கோல்வேந்தர்செய்கையென்பார்கள்-எ-ம். (௰௯)

கள்ளுணவிரும்புதல்கழகஞ்சேர்தன்மா
றுள்ளுறாப்பிறர்மனைநயத்தலொன்னலர்க்
கெள்ளருநட்பினுளிரியல்செய்திடல்
வள்ளியோயறநெறிவழுக்குமென்பவே

(இ-ள்) கள்ளுணவிரும்புதல்-மதுவைக்குடிக்கஇச்சித்தாலும்—கழகஞ்சேர்தல்-சூதாடுமிடத்தைச்சேர்தலும்—மாலுள்ளுறா - உள்ளமயக்கமடைய—பிறர்மனைநயத்தல் - பிறர்மனையாளை விரும்புதலும்—ஒன்னலர்க்கு-சத்துருக்களுக்கு—எள்ளரும்-இகழ்ச்சியில்லாத, நட்பினுள்-அமர்க்களத்தில்—இரியல்செய்திடல்-பின்னிட்டோடலும்(ஆகியஇவைகளால்)வள்ளியோய்-வரையாதுகொடுக்குமரசனே—அறநெறி - அறத்தின் வழி—வழுக்குமென்ப-பிறழுமென்று(பெரியோர்கள்)சொல்லுவார்கள்—எ-று.(கருத்து) அரசனேகள்ளையிச்சித்தல்- சூதாடுமிடத்தைச்சேர்தல்-பிறன்மனையாளை யிச்சித்தல் யுத்தத்திலோடுதல்--இவைதருமவழிக்குஇழுக்கென்பாரென்பதாம். (௨௰)



ஐயநீயாடுதற் கமைந்தசூதுமற்
றெய்துநல்குரவினுக் கியைந்ததூதுவெம்
பொய்யினுக்கருந்துணை புன்மைக்கீன்றதாய்
மெய்யினுக்குறுபகை யென்பர்மேலையோர்.

(இ-ள்) ஐய-ஐயனே—நீயாடுதற்கு-நீயாடுகிறதற்கு—அமைந்த-சம்மதித்த—சூது-சூதாட்டமானது—எய்துநல்குரவினுக்கு - தானேவருதற்குரியதரித்திரத்துக்கு—இயைந்ததூது - நல்லதூதாகும்—வெம்பொய்யினுக்கு-வெவ்வியபொய்க்கு—அருந்துணை - நல்லசகோதரமாகும்—புன்மைக்கு-கீழ்த்தொழிலுக்கு—ஈன்றதாய் - பெற்றதாயாகும்—மெய்யினுக்கு-சத்தியத்துக்கு—உறுபகையென்பர்- மிகுந்தபகையென்றுசொல்லுவார்கள்,மேலையோர்-பெரியோர்கள்—எ-று. (கருத்து) அரசனேசூதானதுவறுமைக்குத்தூதும்,பொய்க்குதவியும்,இழிதொழிலுக்குத்தாயும், மெய்க்குப்பகையும்,ஆகுமென்பார்பெரியோர்கள்-எ-ம். (௨௧)

எள்ளுகசூதினை யிகலிவென்றதூஉங்
கள்ளமேற்கொடுவலை கரந்துவேட்டுவ
ருள்ளுறவமைத்திடு முணவையோர்கிலாப்
புள்ளினமருந்தின போலுமென்பவே.

(இ-ள்) எள்ளுக-இகழக்கடவாய்—சூதினை-சூதாட்டத்தை—இகலி-பகைத்து—வென்றதூஉம்-செயித்ததும்—கள்ளம் - கபடத்தை—மேற்கொடு-மேற்கொண்டு—வலைகரந்து - வலையைமறைத்து—வேட்டுவர்-வேடர்கள்—உள்ளுறவமைத்திடுமுணவை - உள்ளேவைத்திருக்கின்றஇரையை—ஓர்கிலா-அறியாத—புள்ளினம் - பறவைக்கூட்டங்கள்—அருந்தின-உண்டவை—போலும் - ஒக்கும்—எ-று. (கருத்து) அரசனேசூதாட்டத்தை இகழ்வீராகவென்றார்கள்-எ-ம். (௨௨)

கலைக்கடல்கடந்துளார் கழறுங்கட்டுரை
சிலைத்தழும்பிருந்ததோட் செம்மல்கேட்டுயி
ருலப்பினுமறுக்கில னுரைத்தவாய்மைநீர்
விலக்குவதென்னென விளம்பினனரோ.

(இ-ள்) கலைக்கடல் - அறுபத்துநாலுகலைகளாகியசமுத்திரத்தை—கடந்துளார்—ஆராய்ந்தமந்திரிகள்—கழறும் - சொல்லுகிற—கட்டுரை - சொல்லை—சிலைத்தழும்பிருந்ததோட்செம்மல் - சிலையின்தழும்புபொருந்தியபுயத்தையுடையநளமகாராசன்—கேட்டு - கேட்டு— உயிருலப்பினும்-உயிரிறந்துவிட்டாலும்—உரைத்தவாய்மை - யான்சொன்னசொல்லை—மறுக்கிலன் - தடுக்கமாட்டேன்—நீர்விலக்குவதென்னென-நீங்கள்விலக்குகிறதென்னென்று,விளம்பினன்-சொன்னான்-எ-று. (கருத்து)நளன்மந்திரிகளைவிலக்கவேண்டாமென்றான்என்பதாம். (௨௩)

மன்னவனியைந்தவை மறுக்கலாமெனா
வின்னலுற்றமைச்சரான் டிருப்பவெங்கலி

று

துன்னியதாஅனுமூழ் துரந்தவாற்றினு
முன்னருஞ்சூதினின் முயல்கின்றனனோ.

(இ-ள்) மன்னவன்-அரசன்—இயைந்திலை - சம்மதித்திலை—மறுக்கலானெனை-தடுக்கமாட்டானென்று - இன்னலுற்று-வருந்தமடைந்து—அமைச்சராண்டிருப்ப - மந்திரிகளவ்விடத்தில் பேசாதிருக்க—வெங்கலி துன்னியதாஅனும்-வெவ்வியகலி சேர்ந்ததுமன்றியேயும்—ஊழ்-ஊழ்வினையானது—துரந்தவாற்றினும் -செலுத்தலினாலும்—உன்னருஞ்சூதினில் நினைத்தற்கரியசூதாட்டத்தில்—முயல்கின்றான் - முயற்சிபடுகின்றான்—எ-று. (கருத்து) நளன்ஊழ்வினையின்படி சூதாடமுயற்சி செய்கின்றான் என்பதாம். (௨௪)

நிழலுமிழ்வைரவா ணிடதர்கோமக
னொழுகொளிப்பூணினா யொட்டம்யாதென
மழவிடையதனையான் வைப்பனீயுமு
னெழுகடன்ஞாலமு மியைகவென்றனன்.

(இ-ள்) நிழல்-பிரகாசத்தை—உமிழ்-கக்காநின்ற—வைரவாள்-கூரியவாளையுடைய—நிடதர்கோமகன் - நளமகாராசனை வென்—ஒழுகொளிப்பூணினாய் - மிகுந்தபிரகாசம்பொருந்தியஆபரணத்தையுடையபுஷ்கரனே—ஒட்டம்யாதென - பந்தயம்யாதென்றுகேட்க—மழவிடையதனை-என்னுடையஇளவேற்றை—யான்-நான்—வைப்பன்-பந்தயமாகவைப்பேன்—நீயும் - நீயும்—உனெழுகடன்ஞாலமும்-உனது ஏழுசமுத்திரஞ்சூழ்ந்தஉலகத்தையும்—இயைக- வைத்தற்குச்சம்மதி—என்றனன்-புஷ்கரன்சொன்னான்—எ-று (கருத்து) நளன்பந்தயம்யாதெனக்கேட்கநான் இடபத்தை வைக்கிறேன்நீ உலகத்தைவையென்றான் என்பதாம். (௨௫)

சூழ்வினைப்புணர்ப்பினாற் சொன்னவாறியைந்
தாழ்கடற்புவிதொழு மரசனாட வெங்
காழ்மனக்கொடுங்கலி கவற்றின் வண்ணமாய்
வீழ்தலும்புட்கரன் வென்றிட்டானரோ.

(இ-ள்) சூழ்-சூழ்ந்த—வினை-ஊழ்வினையின்—புணர்ப்பினால்-சம்பந்தத்தினால்—சொன்னவாறியைந்து -அவன்சொன்னபடிசம்மதித்து—ஆழ்-ஆழ்ந்த—கடற்புவிதொழும்- கடலாற்சூழப்பட்டவுலகம்வணங்கும்—அரசன்-நளமகாராசன்—ஆட-சூதாட—வெம் - வெவ்விய—காழ் - வைரம்பொருந்திய—மனம் - மனத்தையுடைய—கொடுங்கலி-கொடியகலியானவன்—கவற்றின்வண்ணமாய்- சூதின்வடிவமாய்—வீழ்தலும்-புரளவும்—புட்கரன்-புட்கராஜன்—வென்றிட்டான் -செயித்தான்—எ-று. (கருத்து) ஊழ்வினைப்படிநளனுடைப்புட்கரன்வென்றான் என்பதாம். (௨௬)

கழைசுளிபுகர்முகக் களிறுதேர்பரி
யிழைதவழிளமுலை மகளிரீட்டிய



விழுநிதிக்குப்பைகள் வேலைசூழ்புவி
முழுவதுந்தோற்றனன் முழவுத்தோளினன்.

(இ-ள்) கழைசுளி-கரும்பைமுறிக்கின்ற—புகர்முகம் - புள்ளிபொருந்தியமுகத்தையுடைய—களிறு-யானையும்—தேர் - இரதமும்—பரி-குதிரையும்—இழை-ஆபரணமானது—தவழ் - அசையாநின்ற—இள- இளமைதங்கிய—முலை-ஸ்தனங்களையுடைய—மகளிர் - மாதர்களும்—ஈட்டிய-சம்பாதித்த—விழு - மேன்மையாகிய—நிதிக்குப்பைகள்-திரவியக்குப்பைகளும்—வேலைசூழ்- சமுத்திரஞ்சூழ்ந்த—புவி - பூமியும்—முழுவதும்-ஆகியவனைத்தையும்—முழவுத்தோளினன் - மத்தளத்தையொத்ததோளையுடைய நளமகாராஜன்—தோற்றனன் - தோற்றுவிட்டான்—எ-று. (கருத்து) நளன்யாவுந்தோற்றுப்போனான் என்பதாம். ()

அனைத்தையுந்தோற்றனை யருவிபாய்கவுட்
சினக்களிமால்களி றனையசீற்றத்தோய்
மனத்திடைநினைக்குவ தென்னைவல்லைநின்
புனக்கொடிக்கியைந் தினிப் பொருதும்யாமென்றான்.

(இ-ள்) அனைத்தையும்-முழுமையும்—தோற்றனை - தோற்றுவிட்டாய்—அருவி - மதசலவருவியானது—பாய் - பாயாநின்ற—கவுள்-கபோலத்தையுடைய—சினம்-கோபம்பொருந்திய—களி - செருக்கையுடைய—மால்- பெருமைபொருந்திய—களிறனைய - யானையையொத்த—சீற்றத்தோய் -கோபத்தையுடையநளனே—மனத்திடை- மனத்தினிடத்தில்—நினைக்குவதென்னை - ஆலோசிப்பதென்னை—வல்லை-சீக்கிரத்தில்—நின்-உன்னுடைய—புனக்கொடிக்கு-மனையாளுக்கு—இயைந்து-பந்தயத்துக்கியைந்து—யாம்-இருவரும்—இனிப்பொருதும் - இனி ஆடுவோம்—என்றான்- என்றுசொன்னான்—எ-று. (கருத்து) புட்கரன்நளனே உன்மனையாளையும்வைத்தாடுகவென்றான் என்பதாம். (௨௮)

சூதாடுபடலம்-முற்றிற்று.

# நகர்நீங்குபடலம்.

இப்படலத்தாற் சூதிற்றோல்வியடைந்த நளன்தான்பழகிய அந்நகரத்திலுள்ளாரோடும் வறியனாய்க் கூடியிருப்பதில் விழையாமல் அந்நகரைவிட்டு நீங்கல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

என்றலுமுறுவலுற் றிசைக்கலாதனை
வொன்றுயிர்புரைத்திட லுலங்கொடோளினாய்

வென்றகின்னகர்வயின் மேவலேனெனாத்
துன்றுகானகஞ்செலத் துணிதன்மேயினான்.

(இ-ள்) என்றனும்-என்றுசொன்னவளவில்—முறுவலுற்று -சிரித்து—இசைக்கலாதன - சொல்லப்படாதவைகளை—நீயொன்றுமுரைத்திடல்-நீயொன்றுஞ்சொல்லாதே—உலங்கொடோளினாய் - திரண்டகல்லையொத்ததோளையுடையபுட்கானே—வென்ற - செயித்த—நின்னகர்வயின்-உன்னூரினிடத்து—மேவலேனென்று - இருக்கமாட்டேனென்று—துன்று-நெருங்கிய—கானகஞ்செல - காட்டினிடத்திலேபோக—துணிதன்மேயினான்-நளமகாராஜனிச்சித்தான்—எ-று. (கருத்து) நளன்காட்டிற்செல்லத் துணிந்தான்-எ-ம். (௧)

வாட்டிறன்மன்னவன் கமலவாண்முக
மீட்டருமரசிய மிழந்தபோதினும்
பாட்டளிக்கூந்தல்வேந் தவையிற்பைந்தொடை
சூட்டியஞான்றினுந் துலங்குகின்றதே.

(இ-ள்) வாள்-வாட்போரில்—திறல்- வல்லமையையுடைய—மன்னவன்-நளமகாராசனது—கமலம்-தாமரைப்பூவையொத்த—வாள் - ஒளிபொருந்திய—முகம்-முகமானது—ஈட்டரும் - சம்பாதித்தற்கரிய—அரசியல்-அரசாட்சியை—இழந்தபோதினும் - இழந்தகாலத்திலும்—பாட்டு-இராகங்கள்பாடாநின்ற—அளி - வண்டுகண்மொய்க்கின்ற—கூந்தல்-அளகபாரத்தையுடைய தமயந்தியானவள்—வேந்தவையில் - இராசசபையிலே—பைந்தொடை - பசியபூமாலையை—சூட்டியஞான்றினும்-சூட்டியநாளிற்பார்க்கிலும் — துலங்குகின்றது - பிரகாசிக்கின்றது—எ-று. (கருத்து) நளன்முகம்பொலிவையடைந்தது என்பதாம் (௨)

சாமரையிரட்டுநரடைப்பைதாங்குநர்
தீமுகத்துமிழும்வா ளேந்திச்செல்குந
ரேமுறயாரையும் விலக்கியேந்தறுன்
கோமகளினிதுறை கோயிலெய்தினான்.

(இ-ள்) சாமரையிரட்டுநர் - சாமரைவீசுகிறவர்களையும்—அடைப்பைதாங்குநர்-தாம்பூலப்பையையேந்தப்பட்டவர்களையும்—தீ- அக்கினியை—முகத்து - தன்முகத்தில—உமிழும் - கக்குகின்ற—வாள் - கத்தியை—ஏந்தி-தாங்கி—செல்குநர்-வருகின்றவர்களையும்—ஏமுற - மயக்கமுற—யாரையும்-மற்றவர்களையும்—விலக்கி - நீக்கி—ஏந்தறுன் - நளமகாராஜன்—கோமகள்-தமயந்தி—இனிது - இனிமையாக—உறை-வாசம்பண்ணுகிற—கோயில் - அரண்மனையை—எய்தினான்-சேர்ந்தான்—எ-று. (கருத்து) நளன் ஒன்றியாசந் தமயந்தியரண்மனைக்குப்போனான் என்பதாம். (௩)

கற்றையங்கவரியுங் கால்செய்வட்டமுங்
கொற்றவெண்கவிகையுமின்றிக்கோதைவேன்
மற்றடந்தோளினான் வருதல்காண்டலு
முற்றதுவென்கொலென் றுள்ளத்தெண்ணினாள்.



(இ-ள்) கற்றை-தொகுதியாயிராநின்ற—அம் - அழகிய—கவரியும்-சாமரையும் — கால்செய்வட்டமும் - சாந்தாற்றியும்—கொற்றவெண்கவிகையும்-வெண்கொற்றக்குடையும்—இன்றி-இல்லாமல்—கோதைவேல்-மாலையணிந்தவேலையுடைய—மல்-வலிமைபொருந்திய — தடம் பருத்த—தோளினான் - தோளையுடைய நளமகாராஜன்—வருதல்காண்டலும்-வருதலைப்பார்த்தவளவில்—உற்றது - இப்படிக்கு ஆனது—என்கொல்-என்ன காரணமென்று—உள்ளத்தெண்ணினாள்-மனதில் ஆலோசித்தாள் —எ-று. (கருத்து) தமயந்தி நளன் தனிதது வந்ததைக்கண்டாலோசித்தாள்-எ-ம். (௪)

எண்ணிவந்திறைஞ்சியவெழிற்கொம்பன்னவள்
மண்ணியமதிநிகர்வதனநோக்குறாப்
புண்ணுழைவேலெனப்புகுந்தயாவையும்
நண்ணலர்கடந்தவேலநம்பிகூறினான்

(இ-ள்) எண்ணிவந்து-இப்படியாலோசித் தெதிர்வந்து — இறைஞ்சிய-வணங்கிய—எழில் - அழகுபொருந்திய—கொம்பன்னவள்- பூங்கொம்பையொத்த தமயந்தியினது—மண்ணிய-கழுவிய—மதிநிகர் - சந்திரனையொத்த—வதனம்-முகத்தை—நோக்குறா- பார்த்து—புண் - புண்ணினிடத்தில்—நுழை - நுழைகின்ற—வேலென-வேலைப்போல—புகுந்தயாவையும்-தானடந்தவைகளையெல்லாம் — நண்ணலர் - சத்துருக்களை—கடந்த-செயித்த—வேல்- வேலையுடைய — நம்பி-நளமகாராஜன்; கூறினான்-சொன்னான்—எ-று. (கருத்து) நளன் தமயந்திக்கு நடந்தவற்றைச்சொன்னான்-எ-ம். (௫)

தாழ்தடங்கையினின்னசாற்றலும்
வீழிவாய்மடமயில்வெய் துயிர்ப்பொடு
மாழ்கினள்வருந்தினள்மழைக்கணீருகுத்
தூழ்வலியிதுவெனவுள்ளந்தேறினாள்

(இ-ள்) தாழ்-முழந்தாளமட்டுநீண்ட—தடம்-விசாலமாகிய —கையினான்-கைகளையுடையநளமகாராஜன்—இன்ன - இவைகளை—சாற்றலும்—சொன்னவளவில்—வீழி-வீழிக்கனியையொத்த—வாய்- அதரத்தையுடைய—மடமயில்-தமயந்தியானவள்— வெய்துயிர்ப்பொடு - வெவ்வியபெருமூச்சுடனே—மாழ்கினள்-மயங்கினாள்—வருந்தினள் -வருத்தமுற்றாள்—மழைக்கண்-குளிர்ந்தகண்ணினின்றும்— நீருகுத்து - நீரைச்சொரிந்து—ஊழ்-ஊழ்வினையினது—வலி-வலிமை—இதுவென-இதுவென்று—உள்ளந்தேறினாள்-மனந்தெளிந்தாள் —எ-று.(கருத்து) தமயந்தி ஊழ்வினையென்று நினைத்தாள்-எ-ம். (௬)

இந்திரசேனனென்றிசைக்கும்பேருடை
மைந்தனுமழலைவாய்க்கொடியுமாமுறு
தய்ந்திடக்கொண்டுபேரோசைபோயபின்
றந்தைதன் வளநகர்சார்கவென்றனன்.

(இ-ள்) இந்திரசேனனென்று-இந்திரசேனனென்று—இசைக்கும்-சொல்லுகின்ற—பேருடை-நாமத்தையுடைய—மைந்தனும்-பிள்ளையும்—மழலை-மழலைச்சொற்பொருந்திய—வாய்-வாயையுடைய—கொடியும்-புதல்விகளாயினியும்—மாழ்குறாது-வருத்தமுறாது—உய்ந்திட-பிழைத்திருக்க—கொண்டு-உடன்கொண்டு—பேரொளிசேர்-பெருங்கீர்த்தியையுடைய—நின்-உன்னுடைய—தந்தைதன்-தகப்பனுடைய—வளம்-வளப்பம்பொருந்திய—நகர்-பட்டணத்தை—சார்கவென்னுநன்-அடையக்கடவையென்று நளமகாராஜன்சொன்னான்—எ-று. (கருத்து) நளன் பிள்ளைகளையழைத்துக்கொண்டு தமயந்தியைத் தன்பிதாவின் வீட்டிற்குப்போவென்றான் என்பதாம். (௭)

உயிர்நிகர்மக்களோ டுலங்கொடோளினான்
செயிறுதந்தைபாற்செல் கென்றேதலும்
புயனறுங்கூந்தலாள்புண்ணினூடெரி
யயினுழைந்தாலெனவலமந்தேங்கினாள்.

(இ-ள்) உயிர்நிகர்-உயிரையொத்த—மக்களோடு-பிள்ளைகளுடனே—உலங்கொள்-திரண்டகல்லினழகைக்கொண்ட—தோளினான்-தோள்களையுடைய நளமகாராஜன்—செயிறு-குற்றமற்ற—தந்தைபால்-தகப்பனிடத்தில்—செல்கென்றேதலும்-போகவென்று சொல்லலும்—புயல்-மேகத்தையொத்த—நறும்-வாசனைபொருந்திய—கூந்தலாள்-அளகபாரத்தையுடைய தமயந்தியானவள், புண்ணினூடு-புண்ணினுள்—எரி-எரியாகின்ற—அயில்-வேலானது—நுழைந்தாலென-நுழைந்தாற்போல—அலமந்து-மனங்கலங்கி—ஏங்கினாள்-அழுதாள்-எ-று. (கருத்து) தமயந்திமனங்கலங்கினாள்-எ-ம். (௮)

கொடிபடுகானிடைத்தமியைநீங்கிப்போய்ப்
படுபரலமளிமேற்பள்ளிகொள்ளவெங்
கடிநகரடைந்துமெல்லணையிற்கண்படி
லடியனேற்கிதனினுமறனுண்டாங்கொலோ

(இ-ள்) கொடி-கொடிகளையுடைய—கானிடை-காட்டினிடத்தில்—தமியை-தனியாகியவென்னை, நீங்கிப்போய்-விட்டுநீங்கிப்போய்—படு-உறுத்தாநின்ற—பரல்-பரற்கல்லுகளாகிய—அமளிமேல்-அணையின்மீது—பள்ளிகொள்ள-நித்திரைசெய்ய—வெம்-குரூரமாகிய—கடி-காவலையுடைய—நகர்-பட்டணத்தை—அடைந்து-சேர்ந்து—மெல்-மிருதுவாகிய—அணையில்-சயனத்தில், கண்படில்-(நான்) நித்திரைசெய்யில்—அடியனேற்கு-அடியேனுக்கு—இதனினும்-இதைப்பார்க்கிலும்—அறனுண்டாங்கொல்-தருமமுண்டோ—எ-று. (கருத்து) தமயந்தி நீ காட்டிற்போக நான் வீமனிடத்திற் போகுதல் தருமமோ என்றாள்-எ-ம். (௯)

என்றவளுரைத்தலு மடங்கலேறனான்
மென்றளிர்கவற்றுநின்மெல்லென்சீறடி



கன்றவெம்பரல்படுகானிலேகுதற்
கொன்றுமேலெனதுயி ருய்யுமோவென்றான்.

(இ-ள்) என்று-இப்படியென்று—அவள்-அந்தத்தமயந்தியானவள்—உரைத்தலும்-சொன்னவளவில்—மடங்கலேறனான்-ஆண்சிங்கத்தையொத்த நளமகாராஜன்—மென்றளிர்-மெல்லியதளிரை—கவற்றும்-வருத்தச்செய்யும்—நின்-உன்னுடைய—மெல்லென்-மிருதுவாகிய—சீறடி-சிற்றடிகள்—கன்ற-கன்றிப்போக—வெம்-குரூரமான—படுபரல்-மணிபருக்கைக்கல்லுண்டாகிய—கானின்-காட்டில்—ஏகுதற்கு-போகுதற்கு—ஒன்றுமேல்-பொருந்துமாகில்—எனதுயிர்-என்னுடையபிராணன்—உய்யுமோவென்றான்-பிழைக்குமோவென்றுசொன்னான்—எ-று. (கருத்து) நளன் தமயந்தியேயுன்னடி காட்டில்நடக்க என்னுயிர் பிழையாதென்றான்-எ-ம். (௰)

பொற்பினுக்குறையுளாம்பொன்னங்கொம்பனா
யற்பினிற்பயந்தநம்மக்களாயிடை
யெற்பிரிந்துறைகுநரேனுமெங்ஙன
நிற்பிரிந்தாற்றுவர்நிகழ்த்துவாயென்றான்

(இ-ள்) பொற்பினுக்கு-அழகினுக்கு—உறையுளாம்-இருப்பிடமாகிய—பொன்னங்கொம்பனாய்-அழகுபொருந்திய பொற்கொம்பையொத்த தமயந்தியே—அற்பினில்-ஆசையினாலே—பயந்த-பெற்ற—நம்மக்கள்-நம்முடையபிள்ளைகள்—ஆயிடை-அந்தவீமன்வீட்டில்—எற்பிரிந்து-என்னைவிட்டுநீங்கி—உறைகுநரேனும்-இருப்பாராயினும்—எங்ஙனம்-எந்தவண்ணமாய்—நிற்பிரிந்து-உன்னைவிட்டுநீங்கி, ஆற்றுவர்-பொறுத்திருப்பார்கள்—நிகழ்த்துவாயென்றான்-சொல்லென்றுசொன்னான்—எ-று. மக்கட்குத் தந்தையினும் தாயாதிகமென்பதாம் (கருத்து) தமயந்தியேபிள்ளைகளென்னைவிட்டிருந்தாலும் உன்னைவிட்டிரார்கள்-எ-ம். (௰௧)

கூற்றுறழ்குருதிவேற்குரிசின்மக்களா
மாற்றினுமாற்றலாதலின்மூழ்கினு
மாற்றருங்கற்பினோர்மகிழ்நர்கான்செல
வேற்றுநாடுறைவதுவிழுமிதோவென்றாள்

(இ-ள்) கூற்றுறழ்-இயமனையொத்த—குருதி-உதிரந்தோய்ந்த—வேல்-வேலாயுதத்தையுடைய—குரிசில்-அரசனே—மக்கள்-பிள்ளைகள்—ஆற்றினும்-பொறுத்தாலும்—ஆற்றலாது-பொறுக்காமல்—அலரில்-துக்கத்தில்—மூழ்கினும்-மூழ்கினாலும்—மாற்றரும்-மாற்றுதற்கரிய—கற்பினோர்-பதிவிரதா தருமத்தையுடைய பெண்கள், மகிழ்நர்-புருஷர்கள், கான்செல-காட்டிற்போக—வேற்றுநாடுறைவது-வேறுதேசத்திற்போயிருப்பது—விழுமிதோவென்றாள்-மேன்மையுடையதோவென்று தமயந்திசொன்னாள்—எ-று. (கருத்து) கற்புள்ளபெண்கள்நாயகரைவிட்டிருத்தல்சிறப்பல்லவென்றாள்-எ-ம். (௰௨)

விரிகடலமிழ்தமும்வேலைஞாலமுஞ்
செருமுகத்தழ லுமிழ்சிறுகண்யானையு
மெரிமணிக்குப்பையுமெளிதினெய்தலா
மருமகப்பெறுதன்மற்றரியதென்பவே.

(இ-ள்) விரி-பரந்த—கடல்- திருப்பாற்கடலினுண்டாகிய— அமிழ்தமும்-தேவாமிர்தத்தையும்—வேலை-சமுத்திரஞ்சூழ்ந்த — ஞாலமும்-பூமியையும்—செருமுகத்து-யுத்தத்தினிடத்திலே—அழலுமிழ் - நெருப்பையுமிழ்கின்ற— சிறுகண்யானையும் - சிறியகண்களையுடையயானைகளையும்—எரி-பிரகாசிக்கின்ற—மணிக்குப்பையும்- இரத்தினக்குப்பைகளையும்—எளிதினெய்தலாம் - எளிதிலேயடையலாம்— அருமகப்பெறுதல்-அரியபிள்ளைகளைப்பெறுதல்—அரியதென்ப - அரியதென்றுசொல்வார்பெரியோர்கள் -எ-று.மற்று-ஏ-அசை (கருத்து) எல்லாஞ்சம்பாதிக்கலாம்பிள்ளைகளைச்சம்பாதித்தலரிதென்றான்-எ-ம். (௰௩)

விம்மிமின்னுழைமருங்கொசியவீங்கிய
கொம்மைவெம்முலையினுங்குதலைமென்மொழிச்
செம்மையவருமகப்பெறாததீமையோர்க்
கிம்மையுமறுமையுமின்பமில்லையால்

(இ-ள்) விம்மி-பருத்து—மின்-மின்னலையொத்த—நுழை - நுட்பமாகிய—மருங்கு- இடையானது— ஒசிய-ஒடிந்துபோகும்படி — வீங்கிய-பூரித்த—கொம்மை- இளமைபொருந்திய—வெம் - விருப்பத்தைச்செய்கின்ற—முலையினும்-ஸ்தனங்களையுடையதமயந்தியே— குதலை -மழலையாகிய—மென்மொழி - மிருதுவாகியசொல்லையும்—செம்மைய -நல்லகுணத்தையுமுடைய—அருமக-அரியபிள்ளைகளை—பெறாத - பெற்றுக்கொள்ளாத—தீமையோர்க்கு - குற்றத்தையுடையோர்க்கு — இம்மையும்-இப்பிறப்பிலும்—மறுமையும் - மறுபிறப்பிலும் — இன்பமில்லை-சுகமில்லை—எ-று. ஆல் - அசை (கருத்து) நற்பிள்ளைகளைப்பெறாதார்க்கு இருபிறப்பிலுமின்பமில்லையென்பதாம். (௰௪)

என்னலும்வணரிருங்கூந்தலேந்திழை
மன்னவமழலைவாய்மக்கடம்மொடு
மின்னகுபரிதிவேல்வீமன்மாநகர்
துன்னுதும்யாமெனச்சொல்லினளரோ.

(இ-ள்) என்னலும்- இப்படியென்றுஅரசன்சொல்லவும்—வணர்-வளைந்த—இரு-பெரிய—கூந்தல் -அளகபாரத்தையுடைய— ஏந்திழை-தமயந்தியானவள்—மன்னவ-அரசனே—(நம) - நம்முடைய—மழலைவாய்-மழலைச்சொல்பொருந்தியவாயையுடைய—மக்கடம்மொடும் - பிள்ளைகளுடனே—யாம்-நாமிருவரும், மின்னகு- மின்னலைப்பழிக்கின்ற—பரிதி-சூரியனையொத்த—வேல் - வேலாயுதத்தையுடைய—வீமன்-வீமராஜனுடைய—மாநகர்-பெரியநகரில்— துன்னுதும் - சேர்வோம்—என-என்று—சொல்லினள்-சொன்னாள்— எ-று.(கருத்து) தமயந்திநளனைத்தன்தகப்பன்வீட்டுக்குவாவென்றாள்-எ-ம். (௰௫)



கோற்றொடிசெல்வர்பாற் குறையிரந்துநின்
றேற்றயின்றுயிர் சுமந்திருத்தலீறிலா
வாற்றலுமானமு மறிவுங்கல்வியு
மாற்றருஞ்சீர்த்தியு மாற்றுமென்பவே.

(இ-ள்) கோற்றொடி-தமயந்தியே—செல்வர்பால் - செல்வத்தையுடையவர்களிடத்தில்—குறையிரந்துநின்று - குறையைச்சொல்லியிரந்துநின்று—ஏற்று-வாங்கி—அயின்று - உண்டு—உயிர்சுமந்திருத்தல்-உயிரைத்தாங்கியிருத்தலானது—ஈறிலா - முடிவில்லாத—ஆற்றலும்-வலிமையையும்—மானமும்-அபிமானத்தையும்—அறிவும் - அறிவையும்—கல்வியும்- வித்தையையும்—மாற்றரும் - நீக்கப்படாத—சீர்த்தியும்-கீர்த்தியையும்—மாற்றுமென்ப - போக்குமென்றுபெரியோர்சொல்லுவார்கள்—எ-று.(கருத்து)நளன்இரந்துண்டலிழிவென்றான் -எ-ம்.

மிக்கவெஞ்சமத்திடை வெருவியோடின
ரொக்கலுண்புறத்தனி யுலகில்வாழுநர்
புக்குவேட்டகத்தினி லுண்ணும்புன்மையோர்
மக்களுட்பதடியென் றுரைக்கும்வையமே.

(இ-ள்) மிக்க-அதிகரித்த—வெஞ்சமத்திடை - வெவ்வியயுத்தத்திடத்தில்—வெருவியோடினர்-பயந்தோடினவர்களும்—ஒக்கல் - சுற்றத்தார்—உண்புற-வருத்தமடைய—தனி-தனித்திருந்து—உலகில் - உலகத்தில்—வாழுநர்-செல்வத்துடன்வாழ்கின்றவர்களும்—புக்கு - போய் —வேட்டகத்தினில் - மாமனார்வீட்டில்—உண்ணும் - புசிக்கின்ற—புன்மையோர்-இழிமக்களும்—மக்களுள்-மனிதருக்குள்—பதடியென்று-பதரென்று—வையம்-உலகம் — உரைக்கும் - சொல்லும்—எ-று. (கருத்து) போரிலோடினவர், இனம்வருந்தமுறவாழ்பவர், மாமனார்வீட்டிலுண்ணுங்கீழோர், இவர்கள்மக்கட்பதரென்பாரென்றானென்பதாம். (௰௭)

என்றலுந்திருவுள மின்னதாகுமேன்
மன்றலந்தெரியலாய் மக்கடம்மைநம்
மின்றிகழ்மானவேல் விதர்ப்பன்மாநகர்
சென்றிடப்பணித்தரு ளென்றுசெப்பினாள்.

(இ-ள்) என்றலும்-இப்படியென்று அரசன்சொன்னவளவில்—திருவுளம்-உம்முடையசித்தம், இன்னதாகுமேல் - இத்தன்மையதாகுமானால்—மன்றல்-வாசனைபொருந்திய—அம்-அழகிய— தெரியலாய் - மாலையையுடையஅரசனே—மக்கடம்மை -பிள்ளைகளை—நம்-நம்முடைய—மின்றிகழ்-மின்போலும்பிரகாசிக்கின்ற—மானம்-பெருமைபொருந்திய—வேல்-வேலாயுதத்தையுடைய—விதர்ப்பன் -வீமராசனுடைய—மாநகர்-பெரியநகரத்தில்—சென்றிட - போக—பணித்தருள்-உத்தரவுகொடு—என்று- இப்படியென்று—செப்பினாள் - தமயந்திசொன்னாள்—எ-று. (கருத்து) தமயந்திபிள்ளைகளைத் தன்தகப்பன்வீட்டிற்கனுப்பிவிடென்றாளென்பதாம். (௰௮)

தண்டவிற்பாகனை நோக்கித்தாதுசேர்
வண்டுமிழ்தெரியலான் வருந்திமக்களை
விண்டொடுபுரிசைசூழ் விதர்ப்பன்றன்னுழை
கொண்டனைபோகெனக் கூறினன்ரோ.

(இ-ள்) தண்டவில்-கீங்குதலில்லாத—பாகனை - தேர்ப்பாகனை—நோக்கி-பார்த்து—தாதுசேர்-மகரந்தஞ்சேர்ந்த—வண்டுமிழ் - வண்டுகளைச்சிந்துகின்ற—தெரியலான் - மாலையையணிந்த நளமகாராசன்—வருந்தி - வருத்தமுற்று—மக்களை - பிள்ளைகளை—விண்டொடு-மேகத்தையளாவாநின்ற—புரிசைசூழ் - மதில்சூழ்ந்த,விதர்ப்பன்றன்னுழை-வீமராசனிடத்தில் — கொண்டனைபோகென - கொண்டுபோகென்று—கூறினன் - உத்தரவுகொடுத்தான்—எ-று அரோ-அசை (கருத்து) நளன்தேர்ப்பாகனைப்பார்த்துப் பிள்ளைகளையழைத்துக்கொண்டு வீமராசனிடத்திற்போவென்றான் என்பதாம். (௧௯)

தழுவியதாதைதன் முகமுந்தாயர்த
முழுமதியனையவாண் முகமுநோக்குறா
விழிவழிநீருக விம்மிவிம்மின்
றழுதனர்கண்டுளோ ரலக்கணெய்தவே.

(இ-ள்) தழுவிய- தங்களைத்தழுவிக்கொண்ட—தாதைதன்முகமும்-தகப்பனுடையமுகத்தையும்—தாயர்தம் - தாயாருடைய—முழுமதியனைய-பூரணசந்திரனையொத்த—வாண்முகமும் - ஒளிபொருந்திய முகத்தையும்—நோக்குறா - பார்த்து—விழிவழி - கண்ணினின்வழியிலே—நீருக-நீர்சிந்த—விம்மிவிம்மின்று - தேம்பித்தேம்பிநின்று—கண்டுளோர் - பார்த்தவர்கள்—அலக்கணெய்த - துன்பமுறும்படி—அழுதனர்-அழுதார்கள்—எ-று. (கருத்து) பிள்ளைகள்தாய்தகப்பனைப்பார்த்து அழுதார்கள் என்பதாம். (௨௰)

அலமருமக்கட்ம் மாகமெங்கணு
முலைவழியொழுகுபாலனைப்பமோந்துவாய்
புலர்தரப்பற்பலகாற் புல்லிக்கொண்டுகண்
கலுழ்தருபுனலினாற் கழுவினாளரோ.

(இ-ள்) அலமரு-மனங்கலங்காநின்ற—மக்கட்ம் - பிள்ளைகளுடைய—ஆகமெங்கணும்-சரீரமுழுமையும்—முலைவழி - முலையின்வழியால்—ஒழுகு-ஒழுகாநின்ற—பால்-பாலானது—நனைப்ப - நனைக்கும்படி—மோந்து - உச்சிமோந்து—வாய்புலர்தர-வாயுலர—பற்பலகால்-அனந்தந்தரம்—புல்லிக்கொண்டு - தழுவிக்கொண்டு—கண்கலுழ்தரு-கண்ணினின்றுமொழுகாநின்ற—புனலினால் - சலத்தினால்—கழுவினாள் - கழுவினாள்— எ-று. அரோ-அசை-(கருத்து) தமயந்திபிள்ளைகளைக்கண்ணீரற்கழுவினாள்-எ-ம். (௨௧)

மடவாறன்னையும்மதுகைவேந்தையும்
படுதுயரொழிகெனவாற்றிப்பாகனுந்



உடலுயிர்பிரித்தெனவுவகைமக்களைக்
கொடிநெடுந்தேர்மிசை கொண்டுபோயினான்.

(இ-ள்) மடவாறன்னையும் - தமயந்தியையும்—மதுகை - வலிமையுடைய—வேந்தையும்-நளனையும்—படு - உண்டாகாநின்ற—துயரொழிகென- துக்கநீங்கக்கடவதென்று—ஆற்றி-தணிந்து—பாகன்-தேர்ப்பாகன்—ஆங்கு - அவ்விடத்தினின்று—உடலுயிர்பிரித்தென - உடலையுமுயிரையும்வேறுபிரித்ததுபோல்—உவகையக்களை - சந்தோஷத்தைச்செய்யும்பிள்ளைகளை—கொடி- கொடியையுடைய—நெடுந்தேர்மிசை- நெடியதேரின்மீது—கொண்டுஏற்றிக்கொண்டு—போயினான் - சென்றான்—எ-று. (கருத்து)பாகன்பிள்ளைகளைத்தேர்மேற் கொண்டுபோனான்-எ-ம். (௨௨)

மிகைப்படுதுன்பமும்விழைவுமின்பமு
மகத்திடைநிகரெனநோக்குமையனுந்
தகைப்பருந்துயரொடுதளர்ந்துசாம்புமேன்
மகப்பிரிவினுந்துயர்வலிதியாவதே.

(இ-ள்) மிகைப்படு-அதிகரித்த—துன்பமும் - துயரத்தையும்—விழைவும் - இச்சிக்கப்பட்ட—இன்பமும்- இன்பத்தையும்—அகத்திடை-மனதில்—நிகரென - ஒப்பாக—நோக்கும் - பார்க்கின்ற—ஐயனும்-நளனும்—தகைப்பரும் - தடுத்தற்கரிய—துயரொடு - துன்பத்துடன்—தளர்ந்து-வருந்தி—சாம்புமேல்- சேர்வானேயானால்—மகப்பிரிவினும்-மக்கட்பிரிவினும்—துயர்-துயரில்—வலிது-வலிமையுடையது, யாவது-(எது) ஒன்றுமில்லை—எ-று. (கருத்து) பிள்ளைகளைப்பிரிதலைவிடத் துன்பமில்லை என்பதாம். (௨௩)

சிலதியர்பரப்பிய தேங்கொண்மெல்லிதழ்
மலர்மிசைமிதிப்பினும் வருந்துசீறடி
நிலமிசைபடியர வுறைப்பநேரிழை
புலவுவேற்காளைபின் றொடர்ந்துபோயினாள்.

(இ-ள்) சிலதியர்-தோழிகள்—பரப்பிய-பரவச்செய்த—தேங்கொண்-வாசனைகொண்ட—மெல்லிதழ் -மெல்லியவிதழையுடைய—மலர்மிசை-புஷ்பத்தின்மீது—மிதிப்பினும்-அடிவைத்தாலும்—வருந்து - வருந்துகின்ற—சீறடி-சிறியபாதங்களில்—நிலமிசை - பூமியின்மீது—படி-உண்டாகிய—பரல்-பருக்கைகள்—உறைப்ப-உறுத்தும்படி, நேரிழை-தமயந்தியானவள்—புலவுவேல் - புலாலநாற்றத்தையுடையவேலையேந்திய—காளை-நளனது—பின்றொடர்ந்து - பின்னேதொடர்ந்து—போயினாள்-சென்றாள்—எ-று. (கருத்து) தமயந்திநளன் பின்னேபோனாள் என்பதாம். (௨௪)

மடவாறன்றொடு மதுகைவேந்தனைக்
கடிமுரசறுதகோ மறுகிற்காண்டலு
மிடிபுரைமாவென வேங்கியேங்கிநின்
றுடல்வெதும்பிருக வுழல்கின்றார்சிலர்.

(இ-ள்) மடவரறன்னொடு-தமயந்தியுடன்—மருதவேந்தனை - வலிமையுடையநளனை—கடி-சிறந்த—முரசு - பேரிகையினொலி—அருகு தீங்காத—கோமறுகில் - அரசர்வீதியில்—காண்டலும் - பார்த்தவளவில்—இடியுறு-மேகத்தினிடியைக்கேட்ட—அரவென - சர்ப்பத்தைப் போல—ஏங்கியேங்கி-மிகவுமேக்கமுற்று—நின்று- திகைத்துநின்று—உடல்வெறுத்து-தேகத்தைவெறுத்து—உயிருக -உயிர்நீங்கும்படி—சிலருழல்கின்றார்-சிலருழல்கின்றனர்—எ-று. (கருத்து) கண்டவர்வருந்தினர்-எ-ம். (௨௫)

மன்னியமணிவரை யனையமார்பினன்
பெண்ணலங்கனிந்தவிப் பேதைதன்னொடு
நண்ணருங்கானிடை நடத்தல்காணவோ
கண்ணிணைபடைத்தனன் கமலத்தோனென்பார்.

(இ-ள்) மன்னிய-தழுவிய—மணிவரை-இரத்தினபர்வதத்தை—அனைய-ஒத்த—மார்பினன் - மார்பினையுடையமகாராசன்—பெண்ணலங்கனிந்த- பெண்டன்மைமுதிர்ந்த— இப்பேதைதன்னொடும்-இந்தமயந்தியுடனே—நண்ணரும்-போகப்படாத—கானிடை- காட்டினிடத்தில்—நடத்தல்காணவோ-போதலைப்பார்க்கவோ—கமலத்தோன் - பிரமன்—கண்ணிணை-இரண்டுநேத்திரங்களை—படைத்தனன்-(எங்களுக்கு)அமைத்தனன்—என்பார்-என்று(சிலர்)சொல்லுவார்கள்—எ-று.(கருத்து) சிலர்இந்தத்துன்பத்தைக்காணவோ பிரமன்கண்ணிணைப்படைத்தான்-எ-ம். (௨௬)

மல்லடுதிணிபுய மன்னர்மன்னவ
னெல்லையிறுயருழந் தேகக்காண்டலு
மொல்லையில்வெடித்துயி ரொழிந்ததில்லையாற்
கல்லினும்வலியதோர் கவலுநெஞ்சென்பார்.

(இ-ள்) மல்-மல்லர்களை—அடு-கொல்லாநின்ற—திணி-பலம்பொருந்திய—புயம்-புயத்தையுடைய—மன்னர்மன்னவன் - அரசர்க்கரசனாகியநளன்—எல்லையில்-அளவில்லாத—துயருழந்து - துன்பமுற்று—ஏக-போக—காண்டலும்-பார்க்கவும்—ஒல்லையில் - சீக்கிரத்தில்—வெடித்து-மார்புவெடித்து—உயிர் - பிராணனானது—ஒழிந்ததில்லை - நீங்கியதில்லை (ஆதலால்) கல்லினும்-கல்லைப்பார்க்கிலும்—வலியதோ - வலியதோ—கவலும்-துன்பப்படும்—நெஞ்சு-மனமானது—என்பார் - என்றுசொல்லுவார்கள்—எ-று. (கருத்து) சிலர்தங்கள்மனதைக் கல்லினும் வலிதென்பார்கள் என்பதாம். (௨௭)

தாயினுமருள்புரி தாணிமன்னவன்
போயினன்கானிடை யென்றபோழ்தினின்
மாய்வுறப்பெற்றிலே மன்னர்மன்னன்பா
லேயபோன்பின ரெம்மில்யாரென்பார்.

(இ-ள்) தாயினும்-தாயைப்பார்க்கிலும்—அருள்புரி - உயிர்களிடத்திற்கிருபையைச்செய்கின்ற—தாணிமன்னவன் - உலகத்தையாளுந



ன்—கானிடை- காட்டினிடத்தில்—போயினன்-சென்றான்—என்றபோழ்தினில் - என்றுசொன்னபொழுதிலே—மாய்வுறப்பெற்றிலேம்-இறக்கப்பெறவில்லை (ஆதலால்)—மன்னர்மன்னன்பால்-இராசாதிராசனிடத்தில்—ஏய-பொருந்திய—போன்பினர் - போன்பையுடையவர்கள்—எம்மில்-எங்களைப்பார்க்கிலும்—யார் - யாவர்(உளர்)—என்பார்-என்றுசிலர்சொல்லுவார்கள்—எ-று. (கருத்து) சிலர்இறக்கவிசனப்படுவார்கள்என்பதாம். (௨௮)

அடிதொழுமரசருமமைச்சர்வெள்ளமு
மடவியரனைவருமைந்தரீட்டமுங்
[redacted]டிநெடுவீதிவாய்க்குறுகியெங்கணுங்
கா[redacted]ன்மடைதிறந்தெனக்கலுழ்ந்திட்டாரோ.

(இ-ள்) அடிதொழும்-பாதத்தைவணங்காநின்ற—அரசரும் - இராசாக்களும்—அமைச்சர்வெள்ளமும் - மந்திரிக்கூட்டங்களும—மடவியரனைவரும்-மாதர்கூட்டங்களும்—மைந்தரீட்டமும் - புருஷர்களீட்டமும்—கொடி-கொடிகளையுடைய—நெடுவீதிவாய் - நீண்டவீதியினிடத்தில்—குறுகி-வந்து—எங்கணும் - எவ்விடத்தும்—கடன்மடைதிறந்தென-கடல்மடைதிறந்ததுபோல—கலுழ்ந்திட்டார் - அழுதார்கள்-எ-று. (கருத்து) பலரும் கடலுடைந்தாற்போல அழுதார்கள்-என்பதாம். (௨௯)

பொய்புகுதீமொழிபுகல்கிலேனென
வையநீ[redacted]மையிங்கருளில்வேந்துதன்
கையகப்படுத்தனைகா[redacted]லேகினின்
மெய்யினும்பொய்மையேவிழுமிதாமென்பார்,

(இ-ள்) பொய்புகு-பொய்யாகிய—தீமொழி - தீயசொல்லை—புகல்கிலேனென-சொல்லமாட்டேனென்று — ஐய - ஐயனே—நீ-நீ—எம்மை-எங்களை—இங்கு-இப்பட்டணத்தில்—அருளில் - கிருபையில்லாத—வேந்துதன்-அரசனுடைய —கையகப்படுத்தினை - கையிற்சேர்த்தனை—கானிலேகின்-காட்டினிடத்துக்குப்போனால்—நின்- உன்னுடைய—மெய்யினும்-சத்தியத்தைப்பார்க்கிலும்—பொய்மையே - பொய்யுரையே—விழுமிதாம்-மேன்மையுடையதாம்—என்பார் - என்றுசொல்லுவார்கள்—எ-று.(கருத்து) அரசனே நீகாட்டிற்போகில்நாட்டில் மெய்யினும்பொய்பிரதானிக்குமென்றார்கள்-எ-ம். (௩௰)

இன்னுயிருய்யுமீங்கென்றபோழ்தினும்
பொன்னவிர்முலையினர்புலர்ந்தகாலையு
முன்னருஞ்சூதினும்பொய்மைமுரிவேற்
கன்னவிரேறினுங் கழறலாமென்பார்.

(இ-ள்) ஈங்கு - இவ்விடத்தில்—இன்னுயிர்- இனியவுயிரானது—உய்யும்-பிழைக்கும்—என்றபோழ்தினும்-என்றுசொல்லிய காலத்திலும்—பொன்-தேமல்—அவிர்-பிரகாசிக்கின்ற—முலையினர் - முலையையுடையமடவார்—புலர்ந்தகாலையும்-பிணங்கினகாலத்திலும்—முன்னரு-நினைக்கப்படாத—சூதினும் - சூதாட்டத்திலும்,—பொய்மை-பொய்

புனையா—புரி-பலம்பொருந்திய—வேல் - வேலாயுதத்தை யேந்திய கன்னைகளில்-மலைபோன்ற—தோளினை-தோளையுடைய அரசனே—அழகு நலம்-சொல்லலாம்—என்பார்-என்றுசொல்லுவார்கள் — எ-று. (கருத்து) உயிர்தப்புவிக்கவும் பெண்களிணக்கியமுதாட்டத்திலும் பொய்சொல்லலாமென்பார்கள்-எ-ம். (௩௧)

எண்டிசைத்தலைவரும்மெழில்கண்டேமுறத்
தொண்டைவாய்மடமயின்மாலைசூட்டினாள்
புண்டருகோட்டுவெங்களிற்றிற்போதரல்
கண்டகணிவற்றையுங்காணுமோவென்பார்.

(இ-ள்) எண்டிசைத்தலைவரும் - அஷ்டதிக்குப்பாலகரும் — எதிர்க்கண்டு- இத்தனை மூகைப்பார்த்து — ஏமுற (இவ்வளவு அழகுதமக்கில்லையென்று) மயக்குமுறுகிற்க — தொண்டைவாய் - கோவைக்கனியை யொத்த அதரத்தையுடைய — மடமயில்- தமயந்தியானவள் — மாலைசூட்டினாள்-சுயம்வரமாலையைச்சூட்டியதினத்தில் — புண்டரு - மாமிசம் பொருந்திய — கோட்டு - தந்தங்களையுடைய — வெம்-குரூரமான — களிற்றில்-யானையின்மீது, போதரல்- (நீர்வரும்) கோலம்வருதலை, கண்டகண்-பார்த்தகண்கள் — இவற்றையும்- இக்கொடியசெய்கையையுங் காணுமோவென்பார்-பார்க்குமோவென்று சொல்வார்கள் — எ-று. (கருத்து) நளன் சிறப்பைக்கண்டகண்கள் சிறப்பில்லாமையுங் காணுமோவென்பார்கள்-எ-ம். (௩௨)

மன்னவனேகுதற்கிரங்கிமாழ்குநர்
துன்னருங்கானிடைத்தொடர்ந்துசெல்குந
ரின்னுயிர்செகுப்பலென்றிசையில்புன்மையோ
னந்நகரிடைமுரசறைவித்தானரோ.

(இ-ள்) மன்னவன்-நளமகாராஜன் — ஏகுதற்கு - காட்டிற்போவதற்கு — இரங்கி- அருகி—மாழ்குநர் - துன்பப்படுகின்றவர்களையும் — துன்னரும்-போகக்கூடாத—கானிடை-காட்டினிடத்தில்— தொடர்ந்து- பின்னேதொடர்ந்து—செல்குநர் - போகின்றவர்களையும்—இன்னுயிர்-இனியவுயிர்களை—செகுப்பலென்று - கொல்லுவேனென்று—இசையில்-புகழில்லாத—புன்மையோன் - அற்பனாகிய புஷ்கரன், அந்நகரிடை-அந்நகரத்தினிடத்தில்—முரசு-பேரிகையை—அறைவித்தான் - அடிப்பித்தான்— எ-று. (கருத்து) புஷ்கரன் நளனுக்கிரங்கினவரையும் - அவன்பின் சென்றவரையுங்கொல்வேனென்று பறையறைவித்தான்-எ-ம்.

வசைபடுமன்னவன்வாய்மையாலறை
விசிமுரசொலிசெவிசெதும்பக்கேட்டலு
மிசைபடுமன்னவற்கிரங்கினோரெலா
மசுணமென்புள்ளெனவலமந்தேகினார்.

(இ-ள்) வசைபடு-அபகீர்த்தியையுடைய— மன்னவன் - புஷ்கராஜனது— வாய்மையால்-ஆக்கினையால் — அறை - அடிக்கப்பெற்ற — விசி - வாரினால்கட்டிய—முரசொலி - முரசினுடைய சத்தத்தை—செவி



செதும்ப-காதுகள்வெப்பமுற—கேட்டலும்-கேட்டவளவில்—இசைபடுமன்னவற்கு-புகழையுடைய நளமகாராஜனுக்கு — இரங்கினோரெலாம்-அழுதவர்களெல்லாரும்— அசுணமென்புள்ளென - அசுணமென்னும் பட்சியைப்போல—அலமந்து-மனநொந்து—ஏகினார் - நீங்கப்பட்டார்கள்—எ-று. (கொடியதொனிகேட்கில் இறப்பது அசுணப்பறவையின் இயல்பாதலின் அதுபற்றி அவர்களிவர்க்கு உவமானமாய்க் கூறப்பட்டது (கருத்து) பறையறைவிப்பைக்கேட்டவர்கள் எல்லாரும் விசனமடைந்தார்கள்-எ-ம். (௩௩)

வருந்திமுன்போதருமமைச்சர்வாண்முகம்
புரிந்தனனோக்கியபொருவில்வாய்மையான்
விரிந்தநூற்கேள்வியீரறத்தைவேரொடு
மரிந்தனீரெற்பிரிந்தாற்றலாமையால்

(இ-ள்) வருந்தி-வருத்தமுற்று—முன்போதரும் - முன்னேபோகும்—அமைச்சர்-மந்திரிகளுடைய—வாண்முகம் - ஒளிபொருந்தியமுகத்தை—புரிந்தனன்-விரும்பினவனாய்—நோக்கிய - பார்த்த—பொருவில்-ஒப்பில்லாத—வாய்மையான் - சத்தியத்தையுடைய நளமகாராஜன்—விரிந்த-பரந்த—நூற்கேள்வியீர் - சாஸ்திரவிசாரணையுடையவர்களே—எற்பிரிந்து; என்னைப்பிரிந்து—ஆற்றலாமையால்- பொறுக்கமாட்டாமையினால்—அறத்தை-தருமத்தை—வேரொடும் - வேருடனே—அரிந்தனீர்- அறுத்துவிட்டீர்கள்—எ-று. வாய்மையானென்னுமெழுவாய் மேல்வரும்பாட்டில் என்றானென்னும் பயனிலைகொண்டது (கருத்து) நளன் மந்திரிகளைப்பார்த்துப் பிரிவாற்றாமையால் அறத்தைவிட்டீர்கள் என்றான்-எ-ம். (௩௪)

மேவருந்துறைநின்றேற்றமேதினி
யாவதும்வென்றலதாளவென்னுதல்
கோவியல்பன்றவனாணைமேற்கொடு
நீவிரென்வாய்மையைநிறுத்துவீரென்றான்

(இ-ள்) மேவரும்-பொருந்துதற்கரிய—துறையில்- சூதாட்டத்தினிலே—தோற்ற-தோற்றுப்போன—மேதினியாவதும் - உலகமெல்லாவற்றையும்—வென்றலது-(நான்)வெற்றிகொண்டல்லாமல்—ஆள- ஆளுதற்கு—என்னுதல் -நினைத்தல்—கோ - அரசர்களுக்கு—இயல்பன்று-தருமமன்று(ஆதலால்)—அவன் - அந்தபுஷ்கரனுடைய—ஆணை-ஆக்கினையை—மேற்கொடு-ஏற்றுக்கொண்டு—நீவிர்-நீங்கள்—என் - என்னுடைய—வாய்மையை-சத்தியத்தை—நிறுத்துவீர் - நிலைநிறுத்துங்கள்—என்றான்-என்றுசொல்லினன்— எ-று. (கருத்து) நளன் மந்திரிகளைப் புஷ்கரன்சொற்படிகேளுங்களென்றான்-எ-ம். (௩௫)

மூளரியால்வெந்தவெங்கானின்மொய்த்துக
ளாளியொடுபுலம்பினரழுதகட்கடைத்
துளியினிலவித்தனர்தொட்டவெந்நிறத்
களிமதக்களிற்றினன்காவிலேகினான்

(இ-ள்) பூரணியால்-அங்கியினால்—வெந்த - நிருபட்ட—வெங் கானில்-வெவ்விய காட்டினிடத்து—மெய்-இறைந்த—துகள் - தூட்க ளை—அளியொடு-இரக்கத்துடன்—புலம்பினர் - புலம்பினவராய்—அ ழுத-அழுத,கட்கனத - கண்ணின்கடையிலிருந்து வராநின்ற—துளியி னின்-நீர்த்துளியினால்—அவித்தனர்-அவித்தவர்களாய்—தொடர - பி ன்றொடர—வெந்திறல்-குரூரமான வலிமையும்—களி - செருக்கையும், மதம்-மும்மதத்தையுமுடைய—களிற்றினை-யானையை நிகர்த்த நளம காராஜன்—கானில்-காட்டினிடத்தில்—ஏகினான் - சென்றான்—எ-று. (கருத்து) நளன் அழுவார்கண்ணீர் வெப்புழுதியை நனைக்கக்காட்டில் நடந்தான்-எ-ம். (ஙஎ)

திருநுவெஞ்சினக்களிசெல்வன்பின்றொடர்
பரிசனம்யாவுமெய்ப்பனதத்துமீட்டா
முருகுறழ்பொற்பினன்முன்னரேகிய
வருநெறிதெரியுறுவஞ்சமாற்றினன்.

(இ-ள்) திருநு-மாறுபாட்டையும்—வெம் - வெவ்விய—சினம்-கோபத்தையுமுடைய—களிகலிபுருஷனானவன்—செல்வன் - நளனு டைய—பின்றொடர்-பின்னேபோகின்ற—பரிசனம்யாவும்-எவ்வெல்லோரும்—மெய்பனதத்து-சரீரந்துடித்து—மீடா - திரும்பு படி—முருகுறழ்-சுப்பிரமணியரையொத்த—பொற்பினன் - அழகை யுடைய நளமகாராஜன்முன்னரேகிய - முன்னேபோன — அருநெறி-அரியவழியானது—தெரியுறு-தெரியாத—வஞ்சமாயையை— ஆற்றி னன் - செய்தான்—எ-று.(கருத்து) கலியன் சனங்களுக்கு வழிதெரி யாமற்செய்தான்-எ-ம். (ஙஅ)

ஆற்றுவஞ்சனையினலழகுவாய்ந்தபொற்
கோற்றொடிதன்னொடுங்கொற்றமன்னவன்
தோற்றுதல்காண்கிலாத்துயரமெய்தினின்
றூற்றெழுகண்ணினருள்ளமாழ்கினர்.

(இ-ள்) ஆற்று-கலிசெய்த—வஞ்சனையினால்- மாயையினால்— அழகுவாய்ந்த-அழகுபொருந்திய—பொற்கோற்றொடிதன்னொடும்- தம யந்தியோடும்—கொற்றமன்னவன் - வெற்றிபொருந்திய நளமகாராசன் —தோற்றுதல்-தெரிதலை—காண்கிலார் - பார்க்காதவர்களாய், துயரம்-துக்கத்தை—எய்தி-அடைந்து—நின்று-நின்று— ஊற்று - சுரப்பான து—எழு-தோன்றுகின்ற—கண்ணினர்-கண்களையுடையபரிசனங்கள் —உள்ளமாழ்கினர்-உள்ளத்தில்மயங்கினார்கள்—எ-று. (கருத்து) கலி பகவான்மாயத்தால் சனங்கள் நளனையுந் தமயந்தியையுங் காணாதவர்க ளாய்ப் புலம்பினார்கள்என்பதாம். (ஙகூ)

ஆயினுமினிதருள்புரிபுமெம்பிரான்
தூயமென்மலரடிச்சுவடுகாண்கிலேம்
போயினன்யாண்டெவர்புணர்ப்பிதுயாதிம்
மாயமென்றருநெறி மருங்கிற்றேடுவார்.



(இ-ள்) ஆயினும்-தாயைக்காட்டினும்—இனிது- இனிதாக—அரு ள்-கிருபையை—புரியும்-செய்யாநின்ற—எம்பிரான் - எங்களரசனாகிய நளமகாராசனது—தூய-பரிசுத்தமாகிய—மென்-மெல்லிய—மலர் - தா மரைமலர்போன்ற—அடிச்சுவடு - அடிக்குறியை—காண்கிலேம் - நாங் கள்காணவில்லை—யாண்டு- எவ்விடத்தில்—போயினன் - போயினான் —இம்மாயம்-இந்தவஞ்சனையானது—எவர்புணர்ப்பிதுயாது -யார்சம்ப ந்தத்தினாலுண்டாகியது—என்று -என்றுபேசிக்கொண்டு—அருநெறி- அரியவழியை—மருங்கில் - பக்கங்களில்—தேடுவார் - தேடுவார்கள்— எ-று.(கருத்து) சனங்கள்நளனைத்தேடுவார்கள்என்பதாம். (சய)

தேடினர்புகுமிடந்தெரிகிலாமையில்
வாடினரருநெறிமருங்கினோர்வழி
கூடினரின்னுயிர்கூற்றங்கைக்கொள
வீடினராமெனவீழ்ந்துவிம்மினார்.

(இ-ள்) தேடினர்- தேடினவர்கள்—புகுமிடம்- அரசன்போனவி டம்—தெரிகிலாமையில் - அறியாதபடியால்—வாடினர் - வாடினார்கள் —அருநெறி - அரியவழியினது—மருங்கில்- பக்கத்தில்—ஓர்வழி-ஒருவ ழியை—கூடினர் - அடைந்தார்கள்—இன்னுயிர் -இனியவுயிரை—கூற் றங்கைக்கொள-இயமன்கொண்டுபோக—வீடினராமென - இறந்தவர் போல—வீழ்ந்து - (நிலத்திலே) வீழ்ந்து—விம்மினர் - அழுதார்கள் —எ-று.(கருத்து) சனங்கள்நளனைத்தேடிக்காணாது நிலத்தில் வீழ்ந்த ழுதார்கள்என்பதாம். (சக)

கொன்னுனையலங்கல்வேற்குவவுத்தோளினன்
சென்னெறிகண்களிற்றெரியக்காண்கில
ரின்னலுற்றழுதழுதேங்கியேங்கியத்
தொன்னகரடைந்தனர்தொடர்ந்துளோரெலாம்.

(இ-ள்) கொல்- கொல்லாநின்ற—நுனை - கூர்மையாகிய—அலங்க ல்-வெற்றிமாலையணிந்த—வேல் - வேலையுடைய—குவவுத்தோளினன்- திரண்டதோளையுடையநளமகாராசன்—சென்னெறி - போனவழியை —கண்களில் நேத்திரங்களில்—தெரிய- அறிய—காண்கிலர் - காணாத வர்களாய்—இன்னலுற்று-துன்பமுற்று—அழுதழுது- புலம்பிப்புலம் பி—ஏங்கியேங்கி-மிகவுமேக்கமுற்று—தொடர்ந்துளோரெலாம் - பின் றொடர்ந்துபோனவர்களெல்லாரும்—அத்தொன்னகர்- தங்கள்பழைய நகரை—அடைந்தனர் - சேர்ந்தார்கள்—எ-று.(கருத்து) சனங்கள் நள னைக்காணாமல்நகரத்தில்வந்தார்கள்என்பதாம். (சஉ)

பறவைகள்குடம்பையுட்பார்ப்பருத்தில
கறவைகள்புனிற்றிளங்கன்றுகூட்டில
நறவுயிர்த்தலர்கிலமலர்களுமைவேல்
இறைவனேகினன்வனத்தென்றபின்னரோ.

(இ-ள்) காமம்-அச்சத்தைத்தருகின்ற—வேல்-வேலையுடைய—இறைவன்-நளமகாராசன்—வனத்து-காட்டினிடத்தில்—ஏகினனென்று பின்னர்-போயினனென்றபின்பு—பறவைகள்-பக்ஷிகள்—குடம்பையுள்-கூண்டுக்குள்ளே—பார்ப்பு-தங்குஞ்சுகளை—அருத்தில-இரையூட்டவில்லை—கறவைகள்-பசுக்கள்—புனிற்றிளங்கன்றுக்கு-மிகுந்தவிளங்கன்றுகளுக்கு—ஊட்டில-பாலூட்டக்கொடுத்தில—மலர்கள்-புஷ்பங்கள்—நறவுயிர்த்து-தேனைத்தந்து—அலர்கில-மலரவில்லை-எ-று. (கருத்து) நளன்காட்டிற்போனனென்றபின்பறவைகள் குஞ்சுகளுக்கிரைதரவில்லைபசுக்கள்கன்றுகளுக்கூட்டவில்லைமலர்கள்மலர்வில்லை என்பதாம். (௬௩)

வான்மறந்தன துளிவழங்கலின்னிசைத்
தேன்மறந்தன மடமகளிர்தேங்குழல்
பான்மறந்தனபசுங்குழவிபாய்கவுட்
கான்மதமறந்தன களிநல்யானையே.

(இ-ள்) வான்-மேகங்கள்—துளிவழங்கல்-மழைபெய்தலை—மறந்தன-மறந்துவிட்டன—இன்னிசை-இனியஇசையையுடைய—தேன்-வண்டுகள்—மடமகளிர்-இளமைபொருந்தியஸ்திரீகளுடைய—தேங்குழல்-வாசனைபொருந்தியகூந்தலை—மறந்தன-மறந்துவிட்டன—பசுங்குழவி-இளங்குழந்தைகள்—பால்-பாலுண்ணலை—மறந்தன-மறந்துவிட்டன—களி-செருக்கையுடைய—நல்-நல்ல—யானை-யானைகள்—பாய்-பெருகாநின்ற—கவுள்-கன்னத்தினுண்டாகிய—கான்மதம்-வாசனைபொருந்தியமதத்தை—மறந்தன-மறந்துவிட்டன—எ-று. ஏ-அசை (கருத்து) மழைபெய்யவில்லை-வண்டுகள்பெண்கள்கூந்தலைமறந்தன-குழந்தைகளபால்மறந்தன-யானைகள்மதம்பொழிதலொழிந்தன என்பதாம். (௬௪)

மலர்ப்பசுந்தார்க்குழன்மகளிர்கேள்வர்பாற்
புலத்தலுங்கலத்தலும்பொருந்துறுமையா
லலத்தகமிழந்தன குஞ்சியன்னவார்
முலைச்சுவடிழந்தன முழவுத்தோள்களே.

(இ-ள்) மலர்-புட்பங்களையணிந்த—பசும்-பசுமையாகிய—தார்-கீண்ட—குழல்-கூந்தலையுடைய—மகளிர்-மாதர்கள்—கேள்வர்பால்-கணவரிடத்தில்—புலத்தலும்-பிணக்கத்தையும்—கலத்தலும்-புணர்ச்சியையும்—பொருந்துறுமையால்-அடையாமையால்—குஞ்சி-குடுமி அன்னவார்-அத்தமாதருடைய—முலைச்சுவடு-ஸ்தனத்தின்குறியை—முழவு-மத்தளம்போன்ற—தோள்கள்-புயங்கள்—இழந்தன-நீங்கின—எ-று. (கருத்து) ஆண்பாலுக்கும்பெண்பாலுக்கும் புலவியுங்கலவியுமற்றன என்பதாம். (௬௫)

அள்ளிலைவேற்கணாங்கைமீதுவைத்
தெள்ளருமின்மொழிபயிற்றலின்மையால்
வள்ளவாயாரமுதுண்ணும்வன்சிறைக்
கிள்ளையுந்தேன்மொழிகிளக்கலற்றதே.

(இ-ள்) அள்-கூர்மைபொருந்திய—இலை-இலைபோன்ற—வேல்-வேலாயுதத்தையொத்த—கணார்-கண்களையுடையபெண்கள்—அங்கைமீது-அழகியகையின்மீது—வைத்து-வைத்துக்கொண்டு—எள்ளரும்-இகழ்ச்சியில்லாத—மென்-மிருதுவான—மொழி-சொற்களை—பயிற்றலின்மையால்-கற்பிக்காதபடியால்—வள்ளவாய்-கிண்ணத்தினிடத்தில்—ஆர்-நிறைந்த—அமுது-பாலை—உண்ணும்-குடிக்கும்—வன்-வளப்பம்பொருந்திய—சிறை-இறகையுடைய—கிள்ளையும்-கிளிப்பிள்ளையும்—தேன்-மதுரமாகிய—மொழி-சொற்களை—கிளக்கலற்றது-பேசுதலொழிந்தன—எ-று. (கருத்து) கிளிகள் பெண்கள்கற்பிக்காமையால்பேசுதலற்றன என்பதாம். (௬௬)

வாம்பரியிழந்தனவாவுமைங்கதி
யேம்பலின்விழவணியிழந்தகோமறுக்
காம்பல்வாயிழந்தனமுறுவலாகிற்
றீம்புகையிழந்தனசெம்பொன்மாடமே.

(இ-ள்) வாம்-தாவுகின்ற—பரி-குதிரைகள்—வாவும்-தாவுகின்ற—ஐங்கதி-ஐவகைநடையினையும்—இழந்தன-நீங்கிவிட்டன—ஏம்பலின்-வருத்தத்துடன்—விழவணி-உச்சவாலங்காரத்தை—கோமறுகு-இராசவீதிகள்—இழந்த-நீங்கிவிட்டன—ஆம்பல்-செவ்வல்லிமலர் போன்ற—வாய-(பெண்களுடைய) வாய்கள்—முறுவல்-புன்சிரிப்பை—இழந்தன-நீங்கிவிட்டன—ஆர்-நிறைந்த—அகில்-அகிற்கட்டையினது—தீம்-இனிமையாகிய—புகை-புகையை—செம்பொன்-சிவந்தபொன்னாற்செய்த—மாடம்-உப்பரிகைகள்—இழந்தன-நீங்கின—எ-று. (கருத்து) குதிரைகள்கதியிழந்தன-இராசவீதிவிழாவிழந்தன-மாதர்வாய்நகையிழந்தன மாடங்கள்புகையிழந்தன என்பதாம். (௬௭)

பாவலரிழந்தனர்பரிசிலுண்பலி
தேவருமிழந்தனர்கலியின்றீமையாற்
காவலனெடிபடுகானிலேகலால்
யாவருமிழந்தனரின்பமென்பவே.

(இ-ள்) பாவலர்-புலவர்கள்—பரிசில்-தியாகத்தை—இழந்தனர்-நீங்கினர்கள்—உண்-உண்ணப்பட்ட—பலி-அவியை—தேவரும்-தேவர்களும்—இழந்தனர்-இழந்துவிட்டார்கள்—கலியின்-கலிபுருஷனுடைய—தீமையால்-பொல்லாங்கினால்—காவலன்-நளமகாராசன்—நெடிபடு-சின்னவண்டையுடைய—கானில்-காட்டில்—ஏகலால்-போனதினால்—யாவரும்-எல்லோரும்—இன்பமென்ப-இன்பமென்பனவற்றை—இழந்தனர்-நீங்கினார்கள்—எ-று. (கருத்து) பாவலர்தியாகமிழந்தார்கள்-தேவர்களவியிழந்தார்கள்-யாவருமின்பமிழந்தார்களென்பதாம். ( )

அறந்தலைமயங்கினபொய்மையார்த்தன
மறந்தலையெடுத்தன தீமைமல்கின

திறம்பினமநுநெறிதவங்கடீர்ந்தன
நிறைந்தனவஞ்சனைநேமியெங்குமே.

(இ-ள்) நேமியெங்கும்-உலகமெங்கும்—அறம்- தருமம்—தலைமாய்ந்தன-கலைதடுமாறின—பொய்மை-அசத்தியம்—ஆர்ந்தன - நிறைந்தன—மறம்-பாவங்கள்—தலையெடுத்தன-வளர்ந்தன—திமை - துர்நடத்தைகள்—மல்கின -நெருங்கின—மநுநெறி-இராஜகருமம்—திறம்பின-கெட்டன—தவங்கள்-தபசுகள்—தீர்ந்தன - நீங்கின—வஞ்சனை-வஞ்சனைகள்—நிறைந்தன - நிறைம்பின—எ-று. (கருத்து) தருமநீங்கின பொய்நிறைந்தன - பாவங்கள்வளர்ந்தன - துன்மார்க்கநிறைந்தன இராசதருமங்கெட்டன தவங்கள்நீங்கின வஞ்சனைநிறைந்தனஎன்பதாம்.()

நகர்நீங்குபடலம் - முற்றிற்று.

௮.

# கான்புகுபடலம்.

இப்படலத்தால் தன்னகரைவிட்டு நீங்கியநளமகாராசன் பிறர்நகரில்
தன்னிலைதப்பிச் செல்வதில் விருப்பமின்றிக்
கானகம்புகுதல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

களிமயில்குனித்திடக்காலமன்றியுந்
துளிமுகில்பிலிற்றின துணர்த்தபூங்கொடி
முளிசினைதளிர்த்தன முகைத்தபைந்தரு
நளிர்கடற்றனையானடந்தகானமே.

(இ-ள்) நளிர்-குளிர்ச்சிபொருந்திய—கடல்- சமுத்திரத்தையொத்த—தானையான் - சேனையையுடையநளமகாராசன்—நடந்த-சென்ற—கானம்-காட்டினில்—களி- களிப்பையுடைய—மயில்-மயில்கள்—குனித்திட-கூத்தாட—காலமன்றியும்-கார்காலமல்லாமலும்—துளி- நீர்த்துளிகளை—முகில்-மேகங்கள்—பிலிற்றின-பெய்தன, பூ-பொலிவுபொருந்திய—கொடி-கொடிகள்—துணர்த்த - பூங்கொத்துகளைச்செய்தன—முளிசினை-உலர்ந்தகிளைகள்—தளிர்த்தன - துளிர்த்தன—பைம்-பசுமையாகிய—தரு-விருக்ஷங்கள்—முகைத்த-அரும்பின—எ-று. (கருத்து) நளனடந்தகாட்டில் மழைபெய்தன கொடிகள் தளிர்த்தன-பட்டமரம்வளர்ந்தனஎன்பதாம். (க)

விள்ளருமதரிடைவெதும்பும்வெம்பால்
கள்ளவிழ்மலரெனக்குழைந்துகாட்டின



வொள்ளழற்கதிர்சுடவுலரும்வெஞ்சுரம்
வள்ளவாய்மலர்விரிமருதம்போன்றதே.

(இ-ள்) விள்ளரும்-சொல்லுதற்கரிய—அதரிடை - வழியிலே—வெதும்பும்-சுடாநின்ற—வெம்-வெப்பமான, பால் - மணியாம பருக்கைகள்—கள்-தேனுடனே, அவிழ்-விரியாநின்ற— மலரென - புஷ்பம்போல—குழைந்து-மிருதுவாய்—காட்டின - காண்பித்தன —ஒள்-பிரகாசம்பொருந்திய—அழல்-அழற்றுகின்ற —கதிர்-சூரியகிரணங்கள், — சுடதகிக்க—உலர்-காய்ந்த—வெம்-வெப்பமாகிய—சுரம் - பாலைநிலமானது—வள்ளம்-கின்னம்போல—வாய்-முகத்தையுடைய— மலர் - புஷ்பங்கள்—விரி - விரியாநின்ற—மருதம்-மருதநிலத்தை— போன்றது - ஒத்திருந்தது—எ-றுஎ-அசை(கருத்து) பருக்கைக்கற்கள் மலரெனவிருந்தன-பாலைநிலம் வயலினிலம்போலிருந்தன-எ-ம். (உ)

ஊறுசெய்தான் சுவைத்துடம்புவீக்கிய
வாறலைகள்வருமளியராயினார்
வேறினியுரைப்பதென்வெருவுமாவொடு
மாறுகொளுழுவையுமாற்றந்தீர்ந்தவே.

(இ-ள்) ஊறுசெய்து-கொலைசெய்து—ஊன்-மாமிசத்தை—சுவைத்து-புசித்து—உடம்பு - சரீரத்தை—வீக்கிய - பருக்கச்செய்த—ஆறலை-வழியினிடத்திற்பறிக்கின்ற—கள்வரும் - திருடரும் —அளியராயினார்-கிருபையுடையவராயினார்கள்—வேறு-வேறாக—இனி - இனிமேல்—உரைப்பதென்-சொல்லுவதென்னை—வெருவும் - அஞ்சாநின்ற—ஆவொடு-பசுக்களுடனே—மாறுகொள்-பகைகொண்ட— உழுவையும் - புலியும்—மாற்றம்-பகையை—தீர்ந்த-நீங்கின—எ-று. (கருத்து) திருடர்கள் கிருபையுள்ளவர்களானார்கள்—புலியும்பசுவும்பகைநீங்கின -எ-ம்.(

ஆயிடையுயிர்கிளைகளொடு
மேயதன்னகர்வயின்விசும்புபோழ்ந்துலாங்
காய்கதிர்நுழைகலாக்காவினூடுபோய்ப்
போயினனழலுமிழ்புலவுவேலினான்.

(இ-ள்) ஆயிடை - அந்தப்பாலைநிலத்தில்—உயிர்கிளை - தன்னுயிரையொத்த—அணங்குகளொடும்-தெய்வப் பெண்ணையொத்த தமயந்தியுடன்—மேய-பொருந்திய—தன்-தன்னுடைய—நகர்வயின் - பட்டணத்தினகண்—விசும்பு-மேகங்களை—போழ்ந்து - பிளந்துகொண்டு—உலாம்-உலாவுகின்ற, காய்-காயாநின்ற, கதிர்-சூரியகிரணமானது, நுழைகலா-நுழையக்கூடாத—காவில்-சோலையில்—ஆடல்போல் .. விளையாடல்போல் — அழல்-அக்கினியை—உமிழ்,கக்காநின்ற—புலவு-புலால்நாற்றம்பொருந்திய—வேலினான் - வேலையுடையநளமகாராஜன்—போயினன்-நடந்தான் —எ-று. (கருத்து) நளன்பாலைவியுடனே சோலையில் விளையாடல்போலப்பாலைவிற்போனான்-எ-ம். (௩)

அள்ளிலைப்பூவிளைனைகுமாற்றிடைக்
கொள்ளைவண்டினமிழிதரவுகூட்டுனும்

வள்ளைவாய்மலர்விழ்வாவியங்கரைப்
புள்ளுருக்கொடுகலிபோயினனரோ

(இ-ள்) அள்-நெருங்கிய—இலை-இலைபோன்ற—பூணினன்- ஆபரணங்களையணிந்தநளமகாராஜன்—ஏகும் - போகாநின்ற—ஆற்றிடை- காட்டுவழியிலே—கொள்ளை-மிகுதியாகிய — வண்டினம்-சுரும்புக்கூட்டங்கள்—இழி - பெருகாநின்ற—நறவு - தேனை—கூட்டுணும் - கொள்ளைகொள்ளும்படியிருக்கின்ற—வள்ளம் - கிண்ணம்போன்ற—வாய்முகத்தையுடைய—மலர்-புஷ்பங்கள் — அவிழ்-விரியாநின்ற—வாவி-தடாகத்தினது—அம்-அழகிய—கரை - கரையினிடத்து,புள்ளுருக்கொடு-அன்னத்தினுருவைக்கொண்டு—கலி-கலியன்—போயினன் - சென்றான்—எ-று. (கருத்து)சனிபகவான் அன்னத்தின்வடிவுகொண்டுபோனான் என்பதாம். (௫)

வாவியின்மருங்குநன்மணிகள்கோத்தெனத்
தூவியம்பொற்சிறைமென்புட்டோன்றலும்
மேவியவெழுதருமுருவப்பைங்கொடி
காவியங்கண்ணிணைகளிப்பநோக்கினாள்

(இ-ள்) வாவியின்-தடாகத்தினது—மருங்கு-பக்கத்தில்—நல் -நல்ல—மணிகள்-முத்துக்களை—கோத்தென - கோவையிட்டதுபோல—தூவி-தூவியென்னப்பட்ட, அம்-அழகிய, பொன் - பிரகாசம்பொருந்திய—சிறை-இறகையுடைய—மென் மிருதுவாகிய—புள் - அன்னப்புள்ளானது—தோன்றலும்-காணலும் — ஓவியர் - சித்திரக்காரர்கள்—எழுதரும்-எழுதுதற்கரிய—உருவம்-வடிவத்தையுடைய, பைம் - பசுமையாகிய—கொடி-கொடிபோன்றதமயந்தியானவள்—காவி - நீலோற்பலத்தையொத்த—அம்-அழகிய—கண்ணிணை-இரண்டு நேத்திரமும்—களிப்ப-சந்தோஷிக்கும்படி, நோக்கினாள் - பார்த்தாள்—எ-று (கருத்து) தமயந்தி அன்னத்தைக்கண்டாளென்பதாம். (௬)

பன்மலர்கஞலியபனிகொள்வாவியிற்
பொன்னவிர்கொடுஞ்சிறைப்புள்ளைநோக்குறு
மன்னநம்மணநிலைமுடித்தவண்சிறை
யன்னமென்புள்ளினழகுவாய்ந்ததே.

(இ-ள்) பல் நானாவிதமான—மலர்-புஷ்பங்கள்—கஞலிய -நெருங்கிய—பனிகொள்-குளிர்ச்சியைக்கொண்ட, வாவியில் - தடாகத்தில்—பொன்-பொன்போல—அவிர்-பிரகாசியாநின்ற—கொடுஞ்சிறை - கொடுமையான இறகையுடைய—புள்ளை- அன்னத்தை, நோக்குறு- பார்த்து, மன்ன-அரசனே—நம்-நம்முடைய—மணநிலை-விவாகத்தை— முடித்த-நிறைவேற்றின—வண்சிறை-வளப்பமாகிய இறகையுடைய—அன்னமென்புள்ளின்-தெய்வ அன்னத்தைக்காட்டிலும்—சது - இப்பறவை, அழகு-அழகை—வாய்ந்தது-பொருந்தியது—எ-று. (கருத்து) தமயந்தி இருவரையுங்கூட்டிய அன்னத்தைப்பார்க்கிலும் இது அழகுள்ளதென்றாள் என்பதாம். (௭)



மற்றுமோருயிரெனவளர்த்தபூவையுஞ்
சொற்றருகிள்ளையுமறப்பத்தூமணிப்
பொற்றடந்தோளிணைப்பொன்னம்புள்ளினைப்
பற்றிநீதருகெனப்பணிந்துகூறினாள்

(இ-ள்) மற்றுமோர்-மற்றொரு—உயிரென-உயிர்போல — வளர்த்த-வளர்த்த—பூவையும்-நாகணவாய்ப்புள்ளையும்—சொல் - மொழிகளை —தரு-சொல்லாநின்ற—கிள்ளையும்-கிளிப்பிள்ளைகளையும்—மறப்ப - மறக்கும்படி—தூ-பரிசுத்தமாகிய, மணி- இரத்தினவடமணிந்த, பொன் -அழகிய—தடம்-விசாலமாகிய—தோளிணை - புயத்தையுடைய அரசனே—பொன்-பொன்போன்ற—அம்-அழகிய— புள்ளினை - அன்னத்தை—பற்றி - பிடித்து—நீ தருகென - நீகொடுப்பாயாகவென்று — பணிந்து-வணங்கி—கூறினாள்-சொல்லினாள்—எ-று (கருத்து) தமயந்தி நளனை அன்னத்தைப்பிடித்துத்தரச்சொன்னாள்-எ-ம். (௮)

ஓர்துகிலிருவருமுடுத்துமற்றையோர்
காரகிற்றீம்புகைகமழ்சீவிகொண்
டேர்குடியிருந்தெனவிலைகொள்பூணினாய்
வார்சிறைப்புள்ளினைவளைத்துமென்றனள்.

(இ-ள்) ஓர் துகில்-ஓராடையை—இருவரும் - நாமிருவரும்—உடுத்து - தரித்துக்கொண்டு—மற்றையோர்-மற்றொரு—கார் - கறுத்த, அகில்-அகிற்கட்டையினது — தீம்-இனிமையாகிய —புகை - தூமம்—கமழும்-பரிமளியாநின்ற—சீவிகொண்டு-ஆடையைக்கொண்டு — ஏர்-அழகு—குடியிருந்தென-வாசஞ்செய்வதையொத்த, இலைகொள் - தழைத்தலைக்கொண்ட—பூணினாய்-ஆபரணங்களையுடைய அரசனே — வார் சிறை-நீண்ட இறகையுடைய—புள்ளினை-அன்னத்தை — வளைத்துமென்றனள்-பிடிப்போமென்றுசொன்னாள்—எ-று. (கருத்து) ஒருவஸ்திரத்தை இருவருந்தரித்துக்கொண்டு மற்றொருவஸ்திரத்தாலன்னத்தைப்பிடிப்போமென்றாள்-எ-ம். (௯)

கருந்தடங்கண்ணிதன்னுள்ளங்களூறத்
திருந்துவேற்றடக்கையான்றுகிலிற்சேர்த்தலும்
பொருந்தியதுகிலொடும்வஞ்சமபூண்டெதி
ரிருந்தபுள்ளந்தெழுந்துபோயதே.

(இ-ள்) கரும்-கறுத்த—தடம்-விசாலமாகிய—கண்ணிதன்-கண்களையுடைய தமயந்தியினது—உள்ளம்-மனது — களூற - இரங்க—திருந்து-திருத்தமாகிய—வேல்-வேலையேந்திய—தடம்-பருத்த — கையான்-கையையுடைய அரசன் — துகிலில்-ஆடையில்—சேர்த்தலும் - சேர்த்தவளவில்—பொருந்திய-தனைமேற்சேர்த்த, துகிலொடும் - ஆடையோடும்—வஞ்சம்-கபடத்தை—பூண்டு- கொண்டு—எதிரிருந்த - எதிரிலிருந்த—புள்-அன்னம்—அந்தரத்து- ஆகாயத்தில்—எழுந்து - எழும்பி—போயது-போயிற்று—எ-று. (கருத்து) நளன் சீலையை அன்னத்தின் மேற்போட அன்னஞ்சீலையைக்கொண்டுபோயிற்று-எ-ம். (௰)

புனைதுகில்கவர்ந்துபைம்பொன்னிறத்தபுள்
பனியிருவிசும்பினிற்பறத்தல்கண்டுறு
மனைவிதனருந்துயர்நோக்கிமாழ்கினன்
வினைவலியிதுவெனமெலிவுநீக்கினான்.

(இ-ள்) புனை-தரித்திருந்த—துகில்-ஆடையை—கவர்ந்து-கிரகித்துக்கொண்டு—பைம்-பசுமையாகிய—பொன்-பொன்போன்ற—நிறத்த-நிறத்தையுடைய—புள்-அன்னமானது—பனி-குளிர்ந்த—இரு-பெருமைபொருந்திய—விசும்பினில்-ஆகாயத்தினில்—பறத்தல்-பறந்துபோதலை—கண்டுறும்-கண்டவளவில்—மனைவிதன்-மனையாளது—அருந்துயர்-அரிதான துக்கத்தை—நோக்கி-பார்த்து—மாழ்கினன்-வருந்தினான்—வினை-ஊழ்வினையினது—வலி-உறுதி—இதுவென-இதுவென்று—மெலிவு-துன்பத்தை—நீக்கினான்-போக்கினான்—எ-று. (கருத்து) நளன் விதிவசமிதுவென்று எண்ணினான்-எ-ம். (௯௧)

கல்லதர்நடந்துபூக்கமலம்வாட்டிய
மெல்லடிசிவப்புறல்வீழிவாய்மயிற்
கொல்லுமேயெனமனமுருகியுந்தையூர்
செல்லுநீணெறியிதுவென்றுசெப்பினான்

(இ-ள்) கல்லதர்-மலைவழியில்—நடந்து-நடந்து—பூ-அழகிய—கமலம்-தாமரைமலரை—வாட்டிய-கெடுத்த—மெல்லடி-மிருதுவானபாதமானது—சிவப்புறல்-சிவத்தல்—வீழி-வீழிப்பழம்போன்ற—வாய்-அதரத்தையுடைய—மயிற்கு-மயில்போன்ற தமயந்திக்கு—ஒல்லுமே-கூடுமோவென்று—மனம்-மனது—உருகி-இளகி—உந்தை-உன்தகப்பனது—ஊர்-குண்டினபுரத்துக்கு, செல்லும்-போகாநின்ற—நீள்-நீண்ட—நெறி-மார்க்கம்—இதுவென்று-இதுவென்று—செப்பினான்-சொன்னான்-எ-று. *இலக்கணக்கொத்து-வினையியல், ௯-சூத்திரம்-அவைதா-மனமொழிமெய்யிவாவியகாலொருவகையவாகிப் பல்வகையின்றியுநல்வினைதீவினையிருவினையெனநடந்து, செய்வினையதியாதுசெய்வினை, பசேதனத்துச்செய்வினையெனவேயமாந்து, தீவினைநல்வினைசிலமுறைதிறம்பிச் செய்யாவிருவினைசெய்வினையாகிச், செய்யிருவினையே செய்யாவினையா, யின்னும் பலவாமிலக்கணம் பெறுமே இவ்விதியால் செப்பினான்-என்பது அசைத்தவினை(கருத்து)நளன் தமயந்திக்குஉன்தகப்பனூருக்குப்போகும்வழியிதுவென்றான்-எ-ம். (௯௨)

ஆங்கதுகேட்டலுமழுதுமாழ்கிநொந்
தீங்குநின்னடியனேன்பிழைத்ததியாதுகொல்
பூங்கழற்குரிசிலோய்பொறியிலேன்றனை
நீக்கவோவிவ்வுரைநிகழ்த்தினையென்றாள்.

(இ-ள்) ஆங்கு-அவ்விடத்தில்—அது-அந்தச்சொல்லை—கேட்டலும்-கேட்டவளவில்—அழுது-புலம்பி—மாழ்கி-வருந்தி—நொந்து-மனநொந்து—ஈங்கு-இவ்விடத்தில்—நின்-உனக்கு—அடியனேன்-அடிமைத்திறம்பூண்டயான்—பிழைத்தது-குற்றஞ்செய்தது யாதுகொல்



ஏது—பூ-அழகிய—கழல்-வீரக்கழலையணிந்த—குரிசிலோய்-அரசனே—பொறியிலேன்றனை-அறிவில்லாதவென்னை—நீக்கவோ—பிரியவோ—இவ்வுரை-இந்தவசனத்தை—நிகழ்த்தினை-சொன்னாய்—என்றாள்-என்று (தமயந்தி) சொல்லினாள்—எ-று. (கருத்து) தமயந்தி என்னைவிட்டுநீங்கவோ இப்படிச்சொன்னீரென்றாள் என்பதாம். (௯௩)

செயிரறுமதிமுகம்பசப்பச்சிந்தைநொந்
தயர்வொடுகண்பனித்தவலங்கோடலை
மயிலியற்பேதைநிற்பிரிந்துவாழ்வெனோ
வுயிர்பிரிந்தாலுடலுய்யுமோவென்றான்.

(இ-ள்) செயிரறு-குற்றமற்ற—மதி-சந்திரன்போன்ற—முகம்-வதனமானது—பசப்ப-பசந்துபோக—சிந்தைநொந்து-மனம்நொந்து—அயர்வொடு-சோர்வுடனே—கண்பனித்து-கண்ணீர்விட்டு—அவலங்கோடலை-துன்பத்தைக்கொள்ளாதே—மயில்-மயில்போலும்—இயல்-சாயலையுடைய—பேதை-தமயந்தியே—நிற்பிரிந்து-உன்னைப்பிரிந்து—வாழ்வெனோ-வாழ்வேனோ—உயிர்பிரிந்தால்-உயிர்நீங்கினால்—உடல்-தேகம்—உய்யுமோ-பிழைக்குமோ—என்றான்-என்று (நளமகாராசன் சொன்னான்—எ-று. (கருத்து) நளன் தமயந்தியே உன்னைப்பிரிந்து வாழ்வெனென்றான்-எ-ம். (௯௪)

முருகுயிர்த்தளியினமூசுபூங்குழற்
கருதருபெருந்துயர்காண்கிலேனெனப்
பரிநெடுந்தேரொடும்பரிதிவானவ
னுரவுநீர்க்கருங்கடலொளித்திட்டானரோ

(இ-ள்) முருகு-தேனை—உயிர்த்து-பெற்று—அளியினம்-வண்டுக்கூட்டங்கள்—மூசு-மொய்க்காநின்ற—பூ-பூவையணிந்த—குழல்-கூந்தலையுடையதமயந்தியினது—கருதரும்-நினைத்தற்கரிய—பெருந்துயர்-பெரிதாகியதுன்பத்தை—காண்கிலேனென-பார்க்கமாட்டேனென்று—பரி-குதிரைகட்டிய—நெடும்-நெடிய—தேரொடும்-இரதத்துடனே—பரிதிவானவன்-சூரியதேவன்—உரவுநீர்-உவர்நீரையுடைய—கருங்கடல்-சமுத்திரத்தில்—ஒளித்திட்டான்-மறைந்தான்-எ-று (கருத்து) சூரியன் அஸ்தமானமாகினான்-எ-ம். (௯௫)

மாயிருஞாலமும்வானுநுங்கிய
பாயிருட்கங்குலிற்பாவைதன்னொடும்
போயரின்முற்றியபொலிவின்மண்டப
மேவினனரசர்கோன்விதியின்கொட்பினால்.

(இ-ள்) மா-மகத்தாகிய—இரு-பெரிய—ஞாலம்-பூமியையும்—வானும்-ஆகாயத்தையும்—நுங்கிய-விழுங்கிய—பாய்-பாவிய—இருள்-இருளையுடைய—கங்குலில்-இராத்திரியில்—பாவைதன்னொடும்-தமயந்தியுடனே—போய்-சென்று—அரில்-தூசுகள்—முற்றிய-நிறைந்த—

பொலிவில்-சிறப்புற்ற—மண்டபம் - ஓர்மண்டபத்தை—அரசர்கோன்-இராஜாதிராஜனுகியனளமகாராஜன்—விதியின் - விதியினது —கொட்பினுல்-வலுமையினுல்—மேயினன் - அடைந்தான் — எ-று. (கருத்து) நளன் தமயந்தியுடன் ஓர்மண்டபத்தைச்சார்ந்தான்-எ-ம். (௰௬)

இன்னகிற்புகைதவழ்ந்தினிதின்மென்மைய
பன்மலரமளிமேற்பள்ளிகொள்பவர்
புன்னுனிபரந்தவெம்பொடிகொள்பார்மிசை
மன்னினரூழினும்வலியதியாவதே.

(இ-ள்) இன்-இனிதாகிய—அகிற்புகை-அகிற்றூபம்— தவழ்ந்து-ஊர்ந்து—இனிதின் -இன்பமாய்—மென்மைய- மிருதுவாகிய—பல்-நானுவிதமான—மலர்புஷ்பம் பரப்பிய — அமளிமேல்- படுக்கையின்மீது—பள்ளிகொள்பவர் -சயனிப்பவராகிய (தமயந்திநளனிருவரும்) புல்-புல்லினது—நுனி-நுனிகள்—பரந்த-பரவிய—வெம்-வெவ்விய — பொடிகொள்-புழுதியைக்கொண்ட—பார்மிசை-பூமியின்மேல்— மன்னினர்-படுத்தார்கள்—(ஆதலால்)ஊழினும்-ஊழினைக்காட்டினும் — வலிது-வன்மையையுடையது—யாவது-யாது —எ-று. (கருத்து) மெல்லணையிற்படுத்தநளனுந்தமயந்தியும்புல்லணையிற்படுத்தார்களென்பதாம். (௰௭)

அனிச்சமென்புதுமலரமளிமேயினும்
பனித்திடுமெய்யெனப்பதைத்துவாடுவேன்
கனிப்படுகிளவிவெம்பொடியிற்கண்படில்
இனித்தமியேனுயிரெங்ஙனுய்யுமே.

(இ-ள்) அனிச்சம்-அனிச்சவிருட்சத்தினது—மென் - மிருதுவாகிய—புதுமலர் - புதியமலரையுடைய—அமளி - மெத்தையிலே—மேயினும்-படுத்தாலும்—மெய்-சரீரமானது—பனித்திடுமென - வருந்துமென்றுபதைத்து-துடித்து—வாடுவேன் - சோர்வேன் — கனிப்படு-பழுச்சுவைபொருந்திய—கிளவி-வசனத்தையுடையதமயந்தி — வெம்பொடியில்-வெவ்வியபுழுதியில்—கண்படில் - நித்திரைசெய்யில்—இனி-இனிமேல்—தமியேனுயிர்-தனியாகியஎன்னுயிர்—எங்ஙன் -எப்படி —உய்யும்-பிழைக்கும்—எ-று. (கருத்து) நளன்தமயந்திபுழுதியிலேநித்திரைசெய்யஎன்னுயிரெப்படி பிழைக்குமென்றானென்பதாம். (௰௮)

கண்ணகல்புவிக்கெலாங்களைகணுகிய
தண்மதிநெடுங்குடைவிதர்ப்பன்றார்க்குழ
லெண்ணருமித்துயருழந்துகண்ணுமே
லெண்ணின்மற்றியார்துயரெய்தடாரென்றான்.

(இ-ள்) கண்ணகல்-இடமகன்ற—புவிக்கெலாம் - பூமிக்கெல்லாம்—களைகணுகிய-ஆதாரமாகிய—தண்குளிர்ந்த—மதி - சந்திரன்போன்ற—நெடும்-நீண்ட—குடை-குடையையுடைய—விதர்ப்பன் - விதர்ப்பதேயத்தையாளும் வீமராசனின்ற — தார்க்குழல்-தமயந்தியானவள்—எண்ணரும்-பொறுத்தற்கரிய—இத்துயர் - இந்தத்துன்பத்தை — உழந்து-வருந்தி—கண்ணுமேல்-அடைவாளானுல்—எண்ணின்- நினைக்குமிடத்தில்—யார்-எவர்கள்—துயர்-துன்பத்தை—எய்திடார் - அடையார்கள்—என்றான்-என்றுசொன்னான்—எ-று. (கருத்து) நளன் துன்படையாதவர்களென்றானென்பதாம். (௰௯)



வினைகடலுலகினின்மன்னர்தாடொழ
வுளையரிப்பைந்தவிசுறையுமெம்பிரான்
முளரியாலெங்கணுமுற்றமண்டபத்
தெளியர்போலிருந்தியோவென்றுவிம்மினன்.

(இ-ள்) வளைகடல்-சமுத்திரஞ்சூழ்ந்த—உலகினில்-உலகத்தில் —மன்னர்-அரசர்கள்—தாடொழ-பாதத்தில்வணங்க—உளை - பிடரிமயிரையுடைய—அரி-சிங்கந்தாங்கிய—பைம்-பசுமைபொருந்திய—தவிசு - ஆசனத்தில்-உறையும்-இருக்கும்—எம்பிரான் - என்கருத்தன்—முளரியால்-முட்செடிகளால்—எங்கணும்-எவ்விடத்தும்—முற்றும்- நிறையப்பெற்ற—மண்டபத்து - மண்டபத்தில் — எளியர்போல் - வறியோர்போல்—இருந்தி-இருக்கிறாய்—என்று -என்றுசொல்லி—விம்மினன்-அழுவான்—எ-று. கொல்-அசை (கருத்து) தமயந்திநளனைப்பார்த்து ஏழைகளைப்போலிருக்கிறாயென்றழுதாள்-எ-ம். (௨௰)

தடங்கணீர்துடைத்துமெய்தைவந்தாயிழை
நடுங்கலென்றுற்றிடநள்ளியாமத்து
மடங்கல்போன்மொய்ம்புடைமன்னர்மன்னவன்
கொடுங்கைமேற்றுயின்றனன்பொன்னங்கொம்பனாள்.

(இ-ள்) தடம்-விசாலமாகிய—கண்-கண்ணினின்றுவரும்—நீர்-ஜலத்தை—துடைத்து-துடைத்து—மெய்-தேகத்தை—தைவந்து - தடவிக்கொடுத்து—ஆயிழை-பெண்ணே— நடுங்கலென்று - அஞ்சாதேயென்று— ஆற்றிட-தேற்ற — நள்ளியாமத்து-அர்த்தராத்திரியில்—மடங்கல்போல்-சிங்கம்போல்—மொய்ம்புடை-பலத்தையுடைய — மன்னர்மன்னவன் - அரசர்க்கரசனானநளமகாராஜனுடைய—கொடுங்கைமேல்-வளைந்தகையின்மீது—பொன்னங்கொம்பனாள் - அழகியபொற்கொம்பையொத்தமயந்தி—துயின்றனள் -நித்திரைசெய்தாள் — எ-று. (கருத்து)தமயந்திநளன்கைமேல்சிரசைவைத்துநித்திரைசெய்தாள்-எ-ம். ()

காண்புறுபடலம் - முற்றுப்பெற்றது.

உ

# பிரிவுறுபடலம்.

இப்படலத்தால் கானிடத்துச்சென்ற நளமகாராசன் அவ்விடத்தில் தமயந்திபடுமபெருந்துன்பத்தைக்கண்டு சகிக்காதவனாய் அதற்குக் காரணந்தானாகையால் தான்பிரிந்தால் அவள் சிறுதுயருடன் அருகிலுள்ள தன்தாய்வீட்டை யடைவாளென் றெண்ணிப் பிரிவுறல் சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

விண்படுமின்னெனமிளிருமாகமு
மண்டபத்துயரொருவடிவுகொண்டெனக்
கண்டுகோதையைநோக்கிக்காவலன்
புண்படுநெஞ்சொடும்புலம்பியெண்ணினான்.

(இ-ள்) விண்படு-மேகத்திலுண்டாகிய—மின்னென - மின்னல்போல—மிளிரும்-பிரகாசிக்கும்—ஆகமும் - சரீரமும்—மண்படம்-புழுதியடைய—துயர் - துன்பம்—ஒருவடிவு - ஒருவடிவத்தை—கொண்டென - கொண்டதுபோல—கண்டு - சித்திரைசெய்யாநின்ற—கோதையை-தமயந்தியை—நோக்கி - பார்த்து—காவலன் - நளமகாராசன்—புண்படு-புண்பட்ட—நெஞ்சொடும்-மனதுடனே—புலம்பி - ஆற்றி—எண்ணினான்-ஆலோசித்தான்-எ-று (கருத்து) நளன் தமயந்தியைப்பார்த்து அழுது எண்ணினானென்பதாம். (க)

நண்ணருங்கானெலாந்தொடர்ந்துநன்னுமேற்
கண்ணினிவடுயர்காணலாவதோ
பெண்ணருங்கலத்தினைப்பிரியிற்றந்தையூ
ரண்ணியதவ்வழியடைந்துவைகுமால்.

(இ-ள்) நண்ணரும்-பொருந்துதற்கரிய—கானெலாம்-காடுமுழுதும்—தொடர்ந்து - பின்றொடர்ந்து—நன்னுமேல்-அடையுமானால்—கண்ணினால்-கண்களினால்—இவள்-இத்தமயந்தியினது—துயர் - துன்பத்தை—காணலாவதோ - பார்க்கக்கூடுமோ — பெண்ணருங்கலத்தினை-பெண்களுக்குரியஆபரணம்போன்றவிவளை—பிரியில்- நீங்கில்—தந்தை-பிதாவினுடைய—ஊர்-நகரமானது—அண்ணியது - சமீபமாயது—அவ்வழி - அந்நகரத்தினிடத்து—அடைந்து - சேர்ந்து—வைகும்-இருப்பாள்—எ-று. ஆல்-அசை-(கருத்து) இவளைப்பிரிந்தால் இவள் தாய்வீட்டுக்குப்போவாளென்பதாம். (௨)

விரிமலர்ப்பூங்குழல்விழிக்கிலீங்கிவட்
பிரிகுவதரிதினிப்பிரியவெண்ணிலோ



வொருதுகிலாயதித்துகிலையூறுசெய்
கருவியிங்கேதெனக்கருத்திலெண்ணினான்.

(இ-ள்) விரி - மலர்ந்த—மலர் -புட்பத்தையணிந்த—பூ - பொலிவுபெற்ற—குழல்-கூந்தலையுடையதமயந்தி—விழிக்கில் - கண்விழித்துக்கொண்டால்—ஈங்கு-இவ்விடத்தில், இவள்-இவளை—பிரிகுவது -நீங்குவது—அரிது-கூடாது—இனி-இனிமேல்—பிரிய - இவளைநீங்க —எண்ணிலோ - ஆலோசிக்கிலோ—ஒருதுகிலாயது. (இருவர்க்கும்) ஓராடையாயிருக்கின்றது — இத்துகிலை-இவ்வஸ்திரத்தை—ஊறுசெய - அறுக்கின்ற—கருவி-ஆயுதம்—இங்கு-இவ்விடத்தில்—ஏதென -யாதென்று—கருத்தின்-மனதில்—எண்ணினான்-ஆலோசித்தான்—எ-று(கருத்து) தமயந்திவிழித்தால் பிரிதலரிது வஸ்திரமொன்று இதையறுக்கக் கருவியில்லையென்றெண்ணினான்-எ-ம். (௩)

எண்ணியதுணர்ந்திவர்ப்பிரிப்பமுன்னமே
நண்ணியவஞ்சகக்கலியும்வாளதாய
கண்ணிமுன்கிடந்ததுமெடுத்துகாமவே
லண்ணலுந்துகிலைநடுவரிந்திட்டானரோ

(இ-ள்) எண்ணியது-ஆலோசித்ததை—உணர்ந்து - அறிந்து—இவர்-இவ்விருவரையும்—பிரிப்ப-பிரிக்க—முன்னமே - முன்னமே—நண்ணிய-கருதிய—வஞ்சக-மடத்தையுடைய—கலியும் - கலிபுருஷனும்—வாளதாய்-வாளாகி —நண்ணி-பொருந்தி—முன் - எதிரில்—கிடந்தலும்-இருந்தவளவில்—எடுத்து-கையிலெடுத்து—காமம் - அச்சத்தைத்தரும்—வேல்-வேலையுடைய—அண்ணலும்-நளனும்—துகில் - வஸ்திரத்தை—நடு-மத்தியில்—அரிந்திட்டான்-அரிந்தான்—எ-று. (கருத்து) சனி வாள் போலெதிர்கிடக்கநளன் அதையெடுத்து வஸ்திரத்தை யரிந்தான்-எ-ம். (௪)

சில்லரிநெடுங்கணெட்ருளுருவதை
மெல்லெனக்கொடுங்கையினீக்கிவெய்துயிர்த்
தொல்லையிலுயிர்விடுமுடம்புபோன்மென
வல்லங்கடவிடையழுந்தினானரோ.

(இ-ள்) சில்-சிவப்பாகிய—அரி-அரிபரந்த—நெடும்-நீண்ட — கணள் - கண்களையுடையதமயந்தி—தெருளுருவதை-விழிக்காவிதமாய்—மெல்லென-மிருதுவாக—கொடுங்கையின் - வளைந்தகையினின்றும்—நீக்கி-அகற்றி—வெய்துயிர்த்து-பெருமூச்சுவிட்டு—ஒல்லையில் - சீக்கிரத்தில்—உயிர்-பிராணனை—விடும்-நீங்கும்—உடம்புபோன்மென-தேகத்தைப்போல— அல்லல்கடலிடை - துக்கசமுத்திரத்தில் — அழுந்தினான்முழுகினான்—எ-று.அரோ-அசை (கருத்து) நளன் தமயந்தியைக் கையைவிட்டுநீக்கியழுதான்—எ-ம். (௫)

எழுமகன்றலினியென்கொலாமென
வழுமுயிர்தழங்கெதவைசமேற்கொளா

விழுமிவட் காக்கெனமெய்ந் துதெய்வரத்
தொழுதினையன பலதுன்பமெய் துமால்

(இ-ள்) எழும்-எழுந்திருப்பான்—அகன்றால்—நீங்கினால்—இனி இனிமேல்—என்கொலாமெனா—என்னவாகுமோவென்று—அழும்-புலம்புவான், உயிர்துறந்தென-உயிர்நீங்கினவன்போல, அவசமேற்கொளா-பரவசத்தைமேற்கொண்டு—விழும்-விழுவான்—இவள்-இவளை—காக்கென-இரக்ஷிக்கவென்று—மெலிந்து-வாடி—தெய்வதம்-வனதேவதைகளை—தொழும்-வணங்குவான்—இனையன-இவைபோன்ற—பல-அனேகமான—துன்பம்-துயரங்களை—எய்தும்-அடைவான்—எ-று. (கருத்து) நளன் எழுவான் அழுவான் விழுவான் தமயந்தியைக்காக்கவெனதெய்வங்களைத்தொழுவானென்பதாம். (௬)

செல்லும்வெந் துயரொடுஞ்செல்லக்காலெழா
தொல்லையின்மீளு வெய்துயிர்க்குமொள்ளுதல்
கல்லதரிடைத்தனியெறிபேய்க்கணம்
கொல்லுமென்றுருகியூழ்ந்துசாம்புமால்.

(இ-ள்) செல்லும்-நடப்பான்—வெந்துயரொடும்-வெவ்விய துக்கத்துடன்—செல்ல-நடக்க—காலெழாது-அடியெழும்பாமல்—ஒல்லையில்-சீக்கிரத்தில்—மீளும்-திரும்புவான்—வெய்துயிர்க்கும்-பெருமூச்சுவிடுவான்—ஒண்ணுதல்-ஒள்ளியநெற்றியையுடைய தமயந்தி—கல்லதரிடை-மலைவழியில்—தனி-தனியேயிருக்கையில்—பேய்க்கணம்-பிசாசுக்கூட்டங்கள்—கொல்லுமென்று-கொன்றுவிடுமென்று—ஆருயிர்-சிறந்தவுயிர்—குழைந்து-குழைவுற்று—சாம்பும்-வாடுவான்—எ-று. ஆல்-அசை-இது தன்மைநவிற்சியணி (கருத்து) நளன் நடப்பான் திரும்புவான் பெருமூச்செறிவான் தமயந்தியைப்பேய்கொல்லுமென்றுதளர்வான்-எ-ம. (௭)

ஆயிடையின்னணமன்புகூர்
வேயுறழ்தோளியைப்பிரிந்துவெஞ்சின
மாயவெங்கொடுங்கலிவயத்ததுதலிற்
போயினன்பித்தரிற்பொருவில்வாய்மையான்.

(இ-ள்) ஆயிடை—அவ்விடத்தில்; இன்னணம்-இப்படியாக—வருந்தி-துன்புற்று—அன்புகூர்-ஆசைமிகுந்த—வேயுறழ்-மூங்கிலையொத்த—தோளியை-தோளையுடையதமயந்தியை—பிரிந்து-நீங்கி—வெஞ்சினம்-வெவ்வியகோபத்தையும்—மாயம் வஞ்சனையையும்—வெம்-குரூரமான—கொடும்-கொடுமையையுமுடைய—கலி-கலியனுக்கு—வயத்ததுதலில்-செப்பட்டவனதலால்—பொருவில்-ஒப்பற்ற—வாய்மையான்-சத்தியத்தையுடையநளன்—பித்தரின்—பித்தனைப்போல்—போயினன்-போயினான்-எ-று (கருத்து) நளன்பித்தனைப்போலப்போனான்-எ-ம

கள்ளிருட்போதுவெங்கானிடைவே
லள்ளிலைப்பூணினன்கன்பிரிபோதலும்



பின்னருந்துயரொடுமெலிந்துவம்பின்
மின்னைமானேநிந்தன்செய்கைபேசுவாம்.

(இ-ள்) கள்ளிருட்போது-நடுராத்திரியில்—வெங்கானில்-வெவ்விய காட்டில்—நாமவேல்-அச்சத்தைத்தரும்—அள்-கூர்மைபொருந்திய—இலை-தொங்கலையுடைய—பூணினன்-ஆபரணத்தையுடையமகாராஜன்—அகன்று-நீங்கி—போதலும்-போனவளவில்—பின்னரும்-பின்னுக்கு—துயரொடு-துன்பத்துடனே—மெலிந்து-வாடி—கண்படும்-நித்திரைசெய்கின்ற, மின்னைமான்-மான்கன்றுபோன்ற, நோக்கினள்-கண்களையுடையதமயந்தியினது—செய்கை-நடக்கையை—பேசுவாம்-சொல்லுவாம்—எ-று (கருத்து) புராணிகர் தமயந்தி செய்கையைச்சொல்லுவாமென்றார்-எ-ம. (௮)

நீடியதுயில்சிறிதுணர்ந்துநேரிழை
யாடகத்தொடிக்கையாலணைக்கக்காண்கிலள்
தேடினள்பதைத்தனளுயிர்ப்புவீங்கினள்
டேடினள்காந்தனைச்செய்கைநீட்டியே.

(இ-ள்) நீடியதுயில்-மிகுந்தநித்திரை—சிறிதுணர்ந்து-கொஞ்சந்தெளிந்து—நேரிழை-தமயந்தி—ஆடகத்தொடி-பொன்னாற்செய்தவளையலணிந்த—கையால்-கைகளால்—அணைக்க-தழுவ—காண்கிலள்-காணாதவளாய், தேடினள்-பிணங்கினள்—பதைத்தனள்—துடித்தாள், உயிர்ப்புவீங்கினள்-பெருமூச்சுவிட்டாள்—காந்தன்-காந்தன்பலனா யொத்த—அம்-அழகிய, செய்கை-சிவந்தகையை—நீட்டி-நீட்டி—தேடினள்-தேடினாள்—எ-று. (இது தன்மைநவிற்சியணி) (கருத்து) தமயந்தி தன்கைகளால் நளனையணைக்கக்காணாதவளாய்-பிணங்கினள்-துடித்தாள்-பெருமூச்சுவிட்டாள்-கையால் தடவினாள்-எ-ம். (௯)

* ஆயிடைக்காண்கிலர் தழுங்கிச்செங்கடை
பாயரிநெடுங்கணீர் பாய்தரத்
தூயமென்மலர்க்காநெரித்துத்துண்ணென
வாய்வெரீஇசால்வயிறதுக்கிமாழ்கினள்.

(இ-ள்) ஆயிடை-அவ்விடத்தில்—காண்கிலாது (நளனைக்) காணாமல், அழுங்கி-வருந்தி, செங்கடை-சிவந்தகடைக்கண்ணையுடைய, பாய்-பாவி—அரி-அரிகளையுடைய, நெடும்-நீண்ட, கண்-கண்ணினின்றும்—நீர்—அருவி-நீர்வெள்ளம்—பாய்தர-ஒழுக—தூய-பரிசுத்தமாகிய—மென்-மிருதுபொருந்திய—மலர்க்கரம்-தாமரைமலர்போன்ற—கைகளை—நெரித்து-நெரித்து—துண்ணென-திடுக்கென்று—வாய்வெரீஇ-கூச்சலிட்டு—ஆல்-ஆலிலைபோன்ற—வயிறு-வயிற்றை—அதுக்கி-பிசைந்து—மாழ்கினள்-மயங்கினள்—எ-று. *எகாரவிறுமுச்சீர்முன்னே-குவிரும்பகாரமுமெய்தினவவ்வும்-பிறவினையுமாக்கிறசுட்டு நீளின்யகாரமுந்தோன்றுதனெறியே இவ்விதிபால் சுட்டுநீண்டது (கருத்து) தமயந்திநளனைக்காணாதுகண்ணீரொழுகக் கைகளைநெரித்துக் கூச்சலிட்டு வயிற்றைப்பிசைந்தழுதாள்-எ-ம். (௰)

தெளித்தபூம்பள்ளியிற்சிறிதுநீங்கினு
மளப்பருந்துயரொடும்வல்லமெய்துவேன்
றளிப்பெயர்கங்குலிற்றமியன்மாழ்குற
வொளித்துநீதனிவிளையாடிலுய்வனே.

(இ-ள்) தெளிந்தபூ - புஷ்பங்களைப்பரப்பிய—பள்ளியில் - சயன த்தில்—சிறிது-கொஞ்சம்—நீங்கினும் - விலகினாலும்—அளப்பரும் - அளவிடுதற்கரிய—துயரொடும்-துன்பத்துடன்—அவலம் - வருத்தத் தை—எய்துவேன்-அடைகின்றயான்—தளிப்பெயர் - பனித்துளிதுளி க்காநின்ற—கங்குலில்-இராத்திரியில்—தமியன் - தனித்தவனாய் —மா ழ்குறவலிந்த—ஒளித்துநீ -நீமறைந்து, தனி - தனியாய்—விளையாடில்- விளையாடினால்,உய்வனோ-யான்பிழைப்பனோ-எ-று (கருத்து)மலரணை யிற்பிரியிற்சகியாதநான் நீயொளித்துவிளையாடினாற்பிழைப்பனோ என் றுளனென்பதாம். (௰உ)

கொச்சகக்கலிப்பா.

கான்றருயிரொழுகக்கண்ணீர்கவுளலைப்ப
வூன்றேய்கணைபட்டுழலும்பிணையொத்தேன்
மான்றேரரசர்முடிபுழுதவார்கழற்காற்
றேன்றலெனகண்களிப்பவின்னமுமென்றோன்றிலையே.

(இ-ள்) கான்று-வெளிப்பட்டு—ஆருயிர்-பொருந்தியஉயிர் —ஒழு க - நீங்க—கண்ணீர்-கண்ணீரானது—கவுள்-கன்னத்தை, அலைப்ப-அ லைக்க—ஊன்றேய்-தசைபடிந்த,கணைபட்டு-அம்புபட்டு—உழலும் - சு ழலாநின்ற—பிணையொத்தேன்-மானுக்கொப்பானேன்—மான்றேர்-கு திரைகட்டியதேரையுடைய—அரசர் - அரசருடைய—முடி-கிரீடங்கள் —உழுத-படிந்த—வார்-நெடிய—கழல்-வீரக்கழலைத்தரித்த—கால் -பா தத்தையுடைய—தோன்றல்-அரசனே—என்-என்னுடைய —கண்க ளிப்ப-கண்மகிழ்ச்சியடைய,இன்னமும்-இந்நேரமட்டும்,என் - என்ன காரணத்தினால்—தோன்றிலை-காணப்படவில்லை —எ-று (கருத்து) த மயந்தி அரசனே என்கண்களுக்கின்னமுந்தோற்றவில்லை என்னகார ணமென்றுள் -எ-ம். (௰௩)

நேரலார்போரேறேவிடதத்தார்கோமானே
யாரவரைமார்பாவளியேனுயிர்க்குயிரோ
காரிருள்வாயான்புலம்பக்கானகத்துவிட்டகன்றுஞ்
சாரலையாலின்னுமிதுவோநின்றண்ணளியே.

(இ-ள்) நேரலார்-பகைவர்க்கு—போரேறே-'போர் செய்கின்றசிங் கமே—விடதத்தார்-விடதேசத்தார்க்கு—கோமானே-அரசனே — ஆர முத்துமாலையணிந்த—வரைமார்பா - மலைபோன்றமார்பையுடையவ னே — அளியேனுயிர்க்கு-ஏழையாகியஎன்னுயிருக்கு —உயிரே - உயிர் போன்றநளமகாராஜனே,காரிருள்வாய்-கரியவிருளினிடத்தில் —யான் நான்—புலம்ப-புலம்பும்படி—கானகத்து - காட்டினிடத்தில்—விட்ட கன்றும்-என்னைநீங்கியும்-இன்னும்-இவ்வளவுகாலஞ்சென்றபின்பு— சாரலை-சேர்ந்தாயில்லை—ஆகலால்)இதுவோ- இதுதானோ—நின் - உன்



னுடைய—தண்ணளி-குளிர்ந்தவருள் —எ-று. ஆல்-ஏ-அசைகள் (கரு த்து) தமயந்திநளனைக்குறித்து இதுதானோதயையென்றுள்-எ-ம். (௰௪)

நெஞ்சமெலிவேனினதுகடந்தோளும்
கஞ்சமலர்முகமுங்காணாதுகண்பனிப்ப
மஞ்சுதவழ்வெற்பெறிந்தவச்சிரத்தோனுன்றளித்த
விஞ்சைபயின்றுவிளையாட்டயருதியோ

(இ-ள்) நெஞ்சமெலிவேன் -மனம்வாடுகின்றயான்—நினது-உன் னுடைய, தடந்தோளும்-விசாலமாகியதோள்களையும்,கஞ்சமலர் - தாம ரைமலர்போன்ற—முகமும்-வதனத்தையும்—காணாது - பாராமல்—க ண்பனிப்ப-கண்ணீர்விடும்படி—மஞ்சுதவழ் -மேகங்கள்தவழ்கின்ற— வெற்பு-மலைகளின்சிறகை—எறிந்த-அறுத்த—வச்சிரத்தோன் - வச்சி ராயுதத்தையேந்தியஇந்திரன்—அன்று - அதுசென்றவன்று—அளித் த-கொடுத்த—விஞ்சை-வித்தையை—பயின்று-பழகி— விளையாட்டய ருதியோ -விளையாடுகின்றாயோ—எ-று. (கருத்து) தமயந்திநளனைக்கு றித்துஇந்திரன்கொடுத்தவித்தையால் விளையாடுகின்றாயோ ; என்றாள் என்பதாம். (௰௫)

ஞாலத்திருண்டப்பாட்கமலம்வாய்நெகிழ
வேலைத்திரைமுகட்டில்வெய்யோனெழுந்தனனால்
மாலைக்கதிர்வடிவேன்மன்னர்பெருமானே
காலைக்கடவகடன்கழிக்கவாராயோ.

(இ-ள்) ஞாலத்து-பூமியிலுள்ள—இருள் -அந்தகாரமானது—கட ப்ப-செல்லவும்—நாள்-புதிய—கமலம்-தாமரைமுகைகள் — வாய்நெகி ழ-மலரவும்—வேலை-கடலினது—திரை-அலைகளினது—முகட்டில்-உ ச்சியில்—வெய்யோன் - சூரியன்—எழுந்தனன்-உதித்தான்—(ஆதலா ல்) மாலை-வெற்றிமாலையணிந்த—கதிர்-ஒளிபொருந்திய—வடி - கூரிய —வேல்-வேலாயுதத்தையேந்திய—மன்னர்பெருமானே - அரசர்க்கரச னாகியமகாராஜனே—காலை-உதயத்தில்—கடவ - செய்யத்தக்க—க டன்-நித்தியகருமத்தை—கழிக்க - செய்துமுடிக்க—வாராயே - வாரா யா—எ-று. ஆல்-அசை (கருத்து) சூரியனுதயமாகின்றன் காலைக்கருமஞ் செய்யவாராயோவென்றுள்-எ-ம். (௰௬)

மன்னவனேயிப்பிறப்பிற்கண்டுமணந்திலனேல்
இன்னமொருபிறப்பிலாஞலுமேழையேன்
றன்னந்தனியேயிருந்துதவமாற்றியுமுன்
பொன்னகலமுள்ளுநுகப்புல்லாதொழிவேனோ.

(இ-ள்) ஏழையேன்-ஏழையாகியயான் —மன்னவனே-நளமகாரா சனே—இப்பிறப்பில்-இந்தசனனத்தில்—கண்டு -உன்னைக்கண்டு— மணந்திலனேல் - சேராமற்போவேனானால்—இன்னம்-இனிமேல்(வரு ஞ்சனனங்களுள்) —ஒருபிறப்பினாலும் - ஒருசனனத்திலாவது—த ன்னந்தனியேயிருந்து-தனித்திருந்து—தவமாற்றியும் - தவத்தைச்செய்

காவலா—உன்-உன்னுடைய—பொன்னகலம் - அழகுபொருந்தியமார்படை—உளருகுய-உள்ளுருகும்படி—புல்லாது - தழுவாமல் — ஏதிர்வேனோ-நீங்குவேனோ—எ-று. (கருத்து) இப்பிறப்பிற் புணராவிடினும் மறுபிறப்பிற் புணருவேனென்றாளென்க. (௰௭)

வாழுமிளமான்காண் மயில்காண் மடப்பிடிகாள்
கூவுங்கரியகுயில்காண் மென்புள்ளினங்காள்
ஆவியனைய மேவியகலேமெனவகன்ற
காவலன்றன்போனவழியெனக்குக் காட்டீரோ

(இ-ள்) வாழும்-தாவாநின்ற—இளமான்காள் - இளமைபொருந்திய மான்களே—மயில்காள்-மயில்களே—மடப்பிடிகாள் - அழகியபெட்டையானைகளே—கூவும்-கூவுகின்ற—கரியகுயில்காள் - கருங்குயில்களே—மென் -மென்மையாகிய—புள்ளினங்காள் - புறவைக்கூட்டங்களே—ஆவியனை-உயிரைப்போல—மேவி-பொருந்தி—அகலேமென-பிரியோமென்றுசொல்லி—அகன்ற-(இப்பொழுது) நீங்கிய—காவலன்றன்-நளமகாராஜன்—போனவழி-சென்றவழியை—எனக்கு-நாயகனுக்கு—காட்டீரோ - நீங்கள்காட்டமாட்டீரா—எ-று. (கருத்து) மான்களே, மயில்களே, யானைகளே, குயில்களே, புறவைக்கூட்டங்களே, நளமகாராசன்போனவழியைக்காட்டீர்களாவென்றாளென்பதாம். (௰௮)

என்றுவுருகியிருகண்ணீராகியுகுத்
தன்றுத்தழும்பப்புலம்பித்தமியளாய்
மின்றுரிடைநடக்கச்செல்வான்விறல்வேந்தன்
பொன்றாட்கோக்கிப்பூங்கொடிபோல்வீழ்ந்தழுதாள்.

(இ-ள்) என்று-இப்படியென்று—உருகி -மனமுருகி—இருகண்-இரண்டுகண்களினின்றும்—நீராகி - நீர்த்துளிகள்—உக - உதிர—தன்று-தன்னுடையநாவானது—தழும்ப-தழும்புறும்படி—புலம்பி - அரற்றி—தமியளாய்-தனித்தவளாய்—மின்னையொத்த இடையினை—நடக்க—இடை-இடையானது—நடக்க-துவள—செல்வான் - கடந்தமயந்தியானவள்—விறல் - வெற்றிபொருந்திய—வேந்தன் -நளமகாராசனது—பொன்றாள்-அழகுபொருந்திய—அடி - பாதக்குறியை—நோக்கி-பார்த்து—பூங்கொடிபோல் - புஷ்பக்கொடிபோல் — வீழ்ந்து-அங்கேவீழ்ந்து—அழுதாள்புலம்பினாள்—எ-று. (கருத்து) தமயந்திநளனடியைக்கண்டுவீழ்ந்து அழுதாளென்பதாம். (௰௯)

ஐயன்கமலவடிச்சுவடுகொண்டுமே
வெய்யதுயரவிடமீதாரவாய்புலாச்
செய்யகமலமலரிற்றிருவனையாள்
கையறவாநெஞ்சங்கலங்காவுயிர்சோர்ந்தாள்

(இ-ள்) ஐயன்-நளமகாராசனுடைய—கமலவடிச்சுவடு- தாமரைமலர்போன்றபாதக்குறியை—கண்டும் - கண்டவளவில் — வெய்ய-கொடிய—துயரவிடம்-துன்பமாகியவிஷம்—மீதார- அதிகரிக்க — வாய்புலா-வாயுலர்த்து—செய்ய-சிவந்த —கமலமலரில் - தாமரைப்பூவி

ற்றிருக்கின்ற—திருவனையாள் - இலக்குமியையொத்ததமயந்தியானவள்—கையறவா-செயலெற்று—நெஞ்சங்கலங்கா-மனங்கலங்கி—உயிர்சோர்ந்தாள்-மூர்ச்சித்தாள்—எ-று. (கருத்து) தமயந்திமூர்ச்சையடைந்தாளென்பதாம். (உ௰)

இவ்வாறுதுன்பக்கடலினிடைமூழ்கும்
மைவார்தடங்கண்மடமாதின்செவ்விமுகந்
செவ்வான்மதியமெனச்செங்கட்டுளையெயிற்று
வெவ்வாயரவமுருத்துவிழுங்கியதே.

(இ-ள்) இவ்வாறு-இவ்விதமாய்—துன்பக்கடலினிடை - துன்பக்கடலில்—மூழ்கும்-அழுந்திய—மை-அஞ்சனமெழுதிய—வார் - நெடிய—தடம்-விசாலமாகிய—கண்நேத்திரங்களையும்—மடம் - அறியாமையையுமுடைய—மாதின்தமயந்தியினது—செவ்வி - அழகுபொருந்திய—முகம் - முகத்தை — செவ்வான் - சிவந்தயாகத்தில்(உலவும்)—மதியமென-சந்திரனென்று—(எண்ணி)செங்கண் -சிவந்தகண்களையும், துளையெயிற்று- துவாரம்பொருந்தியபற்களையுமுடைய,வெவ்வாய்- வெவ்வியவாயையுமுடைய—அரவம்-மலைப்பாம்பு.உருத்து - கோபித்து,விழுங்கியது-விழுங்கிற்று எ-று. சண்டமதிக்குச்செவ்வை சிறைவெனக்கொள்க. ஏ-அசை (கருத்து) தமயந்தியைமலைப்பாம்புவிழுங்கியதுஎன்பதாம்

செய்த்தோரின்மூழ்கிசினம்பருகும்வைவேலோய்
பைத்தோர்கொடுந்தறுகட்பாந்தள்விழுங்கியதா
லெய்த்தேனுயிர்காத்தற்கெய்தாயெனவழுதாண்
மைத்தோய்குவளைமதர்நெடுங்கண்வாணுதலே.

(இ-ள்) செய்த்தோரில் - உதிரத்தில்—மூழ்கி-குளித்து — சினம்-மாமிசத்தை—பருகும் - புசிக்காநின்ற—வை-கூர்மைபொருந்திய—வேலோய் - வேலாயுதத்தையுடையநளமகாராஜனே—பைத்து -படத்தையுடையதாகிய—ஓர் -ஒரு - கொடுந்தறுகண் - கொடியகோபத்தையுடைய—பாந்தள்-மலைப்பாம்பானது—விழுங்கியது - என்னைவிழுங்கியது—எய்த்தேன்-இளைத்தஎன்னுடைய— உயிர்காத்தற்கு - உயிரைக்காப்பதற்கு—எய்தாய்-வாராயோ—என-என்று—மைத்தோய் - அஞ்சனந்தோய்ந்த—குவளை-கருநெய்தல்போன்ற—மதர்நெடுங்கண் - குளிர்ச்சிபொருந்தியநெடியகண்களையுடைய—வாணுதல் - தமயந்தியானவள்—அழுதாள் - புலம்பினாள்—எ-று. (கருத்து) தமயந்திநளனைக்குறித்துப்புலம்பினாளென்பதாம் (உஉ)

பொங்கழல்வெங்கானகத்துப்பூவையழுகுரல்கேட்
டங்கோர்சிலைக்கையடல்வேடன்வந்தணுகி
வெங்கணரவெயிற்றுவெவ்வாயிடைநின்றுங்
கொங்கவிழுமென்கூந்தற்கோதைதனைநீக்கினனால்.

(இ-ள்) பொங்கழல்-மிகுந்தவெக்கினையுடைய—வெம் - வெம்மையாகிய—கானகத்து-காட்டினிடத்தில்—பூவை - தமயந்தியானவள்—அழும்-புலம்புகின்ற—குரல்கேட்டு-சத்தத்தைக்கேட்டு—அங்கு - அவ்

விடத்தில்—ஓர்-ஒரு—சிலைக்கை-வில்லைக்கையிலேந்திய, அடல் - பலம் பொருந்திய—வேடன்-வேடனானவன் — வந்தணுகி -வந்துசேர்ந்து—வேங்கண்-வெவ்வியகண்களையுடைய—அரவு - மலைப்பாம்பை —எறிந்து-பிளந்து—வெவ்வாயிடைநின்றும் - வாயிலிருந்தும்— கொங்கவிழ்-வாசனைவீசாநின்ற—மென்கூந்தல் - மென்மையாகியகூந்தலையுடைய —கோதைதனை - தமயந்தியை—நீக்கினன்-விடுவித்தான் —எ-று.ஆல் அசை (கருத்து) வேடன்தமயந்தியைப் பாம்பினிருந்து விடுவித்தான் என்பதாம். (௨௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெய்யவரவின் பகுவாயின் விடுத்தமானெழில்நோக்கி
மையல்கூர்ந்தநெஞ்சினனாய்வரிவிற்றடக்கைவயவேடன்
றெய்யின் முலைமேற்புல்லுதற்குத் தொடரத்துஞ்சாவருங்கற்பிற்
றையமுனிந்துநோக்குதலுஞ்சாம்பராயிற்றவனுடலே.

(இ-ள்)வெய்ய-கொடித்தாகிய—அரவின்-மலைப்பாம்பினது—பகுவாயின்-பிளப்பாகியவாயினின்றும்—விடுத்த-விடுக்கப்பட்ட— மடமான்-தமயந்தியினது—எழில்-அழகை—நோக்கி-பார்த்து — மையல்கூர்ந்த-மோகித்த—நெஞ்சினனாய்-மனமுள்ளவனாய்—வரிவில் - கீண்டவில்லையேந்திய—தடக்கை-விசாலமாகியகையையுடைய—வயம்- வெற்றிபொருந்திய—வேடன்-வேடனானவன்—தெய்யில் - சந்தனக்கோலமணிந்த—முலைமேல் - ஸ்தனத்தின்மேல்—புல்லுதற்கு - அணைதற்கு—தொடர-பின்றொடர—துஞ்சா-கெடாத—அரும - அருமையாகிய—கற்பின்-கற்பினையுடைய—தையல்-தமயந்தியானவள்—முனிந்து - கோபித்து—நோக்குதலும்-பார்த்தமாத்திரத்தில்—அவனுடல் - அவ்வேடனுடலம் — சாம்பராயிற்று-நீறாயிற்று —எ-று. ஏ-அசை(கருத்து)வேடன்தமயந்தியைப் புணரத்தொடர்ந்தவளவில் தமயந்திபார்க்க வேடனெரிந்துபோனான்-என்பதாம். (௨௪)

கற்பினழலாற்கொடுஞ்சிலைக்கைவேடனுடலங்கரியாக்கிப்
பொற்பினறுறைபோய்நலங்கனிந்த பொன்னம்பாவைபுலம் பெய்தி
வெற்பினுயர்தோள்வேந்துவெங்கானுழுநவியேகுதலு
மற்பின்முனிவர்தவமியற்றுஞ்சாலைநோக்கியருகணைந்தாள்.

(இ-ள்) கற்பினழலால்-பதிவிருத்தியாக்கினியால்— கொடுஞ்சிலைக்கை-கொடியவில்லைக்கையிலேந்திய—வேடனுடலம் - வேடன்சரீரத்தை—கரியாக்கி-சாம்பராக்கி— பொற்பின்றுறைபோய் - அழகிற்சிறந்து—நலங்கனிந்த-நன்மைமிகுந்த—பொன்னம்பாவை-தமயந்தியானவள்— புலம்பெய்தி, அழுதுகொண்டு—வெற்பின் - மலைபோல்—உயர்-உயர்ந்த—தோள்-புயத்தையுடைய—வேந்து - நளமகாராசன்—செலும்-செல்லாநின்ற—வெங்கான் - வெவ்வியகாட்டினில், துருவி -தேடிக்கொண்டு—ஏகுதலும்-போகுமளவில்— அற்பின் - அன்பினையுடைய—முனிவர்-முனிவர்கள்—தவமியற்றும்- தவஞ்செய்யாநின்ற — சாலை-பர்ணசாலையை—நோக்கி - பார்த்து —அருகு அதனருகில்—அணைந்த



ள்-சேர்ந்தாள்—எ-று (கருத்து) தமயந்திமுனிவர்கள்தவச் சாலையிற் சார்ந்தாளென்பதாம். (௨௫)

அடைந்தமாதின்முகநோக்கியாரைநீவெவ்வழற்கானி
னடந்துதனியேயிந்தலையிற்போந்ததென்னைநளினமலர்த் (ஞ
தடங்கண்கலுழ்ந்துபுலம்பெய்துந்தன்மையெவனென்றொல்சாற்று (ஜெ
மடந்தைபுகுந்தவாறனைத்துமுனிவர்கேட்கவுரைத்தாள்.

(இ-ள்) அடைந்த -தம்மிடத்துவந்த—மாதின் - தமயந்தியினது முகம்-வதனத்தை—நோக்கி-பார்த்து—யாரை - நீயார்— வெவ்வழல் வெவ்வியஅழல்பொருந்திய—கானில்-காட்டினில்—நடந்து-காலால் நடந்து—தனியே - தனிமையாகி—இந்தலையில் - இவ்விடத்தில்—போந்ததென்னை - வந்ததென்னகாரணம்—நளினமலர்-தாமரைமலர்போன்ற—தடங்கண்-விசாலமாகியகண்கள்—கலுழ்ந்து - கலங்கி—புலம்பெய்துந்தன்மை-துன்பப்படுதல்—எவன்கொல் - என்னகாரணம் —சாற்றுகென -சொல்லென்று—முனிவர்கேட்ப-முனிவர்கள்கேழ்க்க — மடந்தைதமயந்தியானவள்—புகுந்தவாறனைத்தும் - நடந்தவையெல்லாம், வகுத்து-பிரித்து—உரைத்தாள்(அவர்க்குச்) சொல்லினள் —எ-று (கருத்து) முனிவர்கள் கேழ்க்கத் தமயந்தி நடந்தவையெல்லாஞ் சொன்னாள்-எ-ம். (௨௬)

கேட்டவளவிலுளமுருகிக்கிள்ளைமருட்டும்பனிமொழியாய்
வாட்டமொழிநின்பிரிந்தவடிவேனளனைச்சின்னாளி
னாட்டங்களிப்பக்கண்டுமுன்போனலம்பெற்றிருத்தியெனநவிலா
வீட்டுந்தவத்தோர்மறைக்கிழவரிருக்கைநோக்கியேகினரால்.

(இ-ள்) கேட்டவளவில்(இச்செய்தியைக்) கேள்வியுற்றமாத்திரத்தில்—உளமுருகி-மனமுருகி—கிள்ளை-கிளிப்பிள்ளைதனை — மருட்டும் வெருட்டாநின்ற—பனிமொழியாய் - குளிர்ந்தசொற்களையுடைய தமயந்தியே—வாட்டம் - சோர்வை—ஒழி-ஒழித்துவிடு —நிற்பிரிந்த - உன்னைப்பிரிந்த—வடிவேல்-கூர்மையுடையவேலேந்திய—நளனை -நளமகாராஜனை—சின்னாளில்-சிலநாளிலே—நாட்டங்களிப்ப - கண்களிக்க, கண்டு-பார்த்து—முன்போல-முன்போல—நலம்பெற்று - நன்மையையடைந்து—இருத்தியென - இருப்பாயாகவென்று—நவிலா - ஆசீர்வதித்து—ஈட்டுந்தவத்து-தவஞ்செய்கின்ற—ஓர்-ஒப்பற்ற — மறைக்கிழவர்-அந்தணர்கள்—இருக்கைநோக்கி (தாங்க)ளிருக்கு மாச்சிரமத்தைக் குறித்து—ஏகினர்-சென்றார்கள்—எ-று.ஆல்- அசை(கருத்து) முனிவர்கள் ஆசீர்வதித்துப்போனார்கள்-எ-ம் (௨௭)

பிதிர்ந்தபசும்பொற்றிதலைமுலைப்பெய்பூங்கோதைபிணைபோல்வா
ளெதிர்ந்தவணிகர்வழித்துணையாவேகிக்கதிர்மாமணிவான்றி
றதிர்ந்துபுனல்பாய்பேராற்றங்கரையினுறையுமனையிருளின்
முதிர்ந்தசினத்துப்பிறைக்கோட்டுமுரிக்களிறொன்றணுகியதால்.

(இ-ள்) பிதிர்ந்த-உதிர்ந்த—பசும்பொன்- பசியபொன்போன்ற—திதலை - தேமலையுடைய—முலை-ஸ்தனங்களையும்—பெயபூங்கோதை-ம

லர்மாலையணிந்தகூந்தலையுமுடைய—பிணைபோல்வாள் - மான்போன்றதமயந்தியானவள் —எதிர்ந்த - எதிர்ப்பட்ட—வணிகர்-வர்த்தகர்—வழிந்துணையா-வழித்துணையாக—எதி - போய்—கதிர்மாமணி - ஒளிபொருந்தியசிறந்தமணிகளை—வயன்றி - வாரிக்கொண்டு—அதிர்ந்து- இரைந்து—புனல்-சலமானது—பாய் - பெருகாகின்ற—போரூறு கரையில்-பெரியஆற்றங்கரையினிடத்தில்—உறையும் - வாசஞ்செய்கின்ற—அளவிறுதியின்-அர்த்தராத்திரியில்—முதிர்ந்த-மிகுந்த—சினத்து - கோபத்தையுடையதும்—பிறைக்கோட்டு பிறைபோன்ற கொம்புகளையுடையதுமாகிய—முரி-வலிமையுடைய—[illegible]—ஒருயானையானது—அணுகிப்படி வந்துநெருங்கிற்று—எ-று. ஆல்-அசை. (கருத்து) தமயந்தியினிடத்து யானைவந்தது-எ-ம். (௨அ)

அணுகிபோங்குப்புலம்பெய்துமலர் பூங் கோதை மயிலொழிய வணிகமாக்களியாவரையு மதலால்யானை கொன்றேகத் துணைவந்தடைந்தோர்யாவரையுந்தொலைத் துடைந்த பருஉத்தடக்கை யினை வெண்கொடுயகளிறென்னையென்கொல்லாதெனக் கவழுந்தாள்.

(இ-ள்) ஆங்கு-அவ்விடத்தில்—அணுகி - வந்தடைந்து — புலம்பெய்தும்-புலம்பாநின்ற—அலர்பூங்கோதை-மலர்ந்தபூமாலையை யணிந்த அளகபாரத்தையுடைய—மயில்-தமயந்தியானவள்—ஒழிய - நீங்கலாக—வணிகமாக்களியாவரையும் - வர்த்தகர்களாயவரையும்—மதம்-மும்மதம்பொருந்திய—மால்யானை-பெரியயானையானது—கொன்று - கொலைசெய்து—ஏக-போகாநிற்க—துணை-துணையாக—வந்தடைந்தோர் - வந்தடையப்பட்ட—யாவரையும் அனைவரையும்-தொலைத்து - கொன்று—நடந்த-சென்ற—பருஉத்தடக்கை-பருத்த நீண்ட துதிக்கையும் — இணை-இரண்டாகிய—வெண் - வெளுமைபொருந்திய—கோட்டு-கொம்புகளையுமுடைய —களிறு-யானையானது—என்னை- துன்பப்படுகின்ற- என்னை—என்-என்னகாரணத்தால்—கொல்லாதது - கொல்லாமற்போயது—என் என்று — அழுந்தாள் புலம்பினாள்—எ-று. (கருத்து) வியாபாரிகளைக்கொன்றயானைதன்னைக் கொல்லவில்லையென் றாற்றினாள் என்பதாம். (௨௯)

சாதலொழிந்துவழிச்செல்வோர் துணையாவுள்ளந்தளர்வெய்திப்
பாதமலர் கொப்புளமெய்திப்பனிக்கப்பால்வெங்கானிறந்து
கோதைவடிவேல்வலனேந்து குவவுத்திணிதோள்சுவாகுவெனுஞ்
சேதுபதிதன்வளநகரிற்சென்றாள்விதர்ப்பன்சேயிழையே.

(இ-ள்) சாதலொழிந்து-இறக்காமல்செழித்துநின்று — வழிச்செல்வோர் - வழியிற்செல்லுகின்றபிராமணர்கள்—துணையா - சகாயமாகக்கொண்டு —உள்ளந்தளர்வெய்தி- மனங்கலங்கி—பாதமலர் - மலர்போன்றபாதங்கள்—கொப்புளமெய்தி-கொப்புளித்து—பனிக்க - நீரொழுக—பால்-பருக்கைக்கற்களையுடைய—வெங்கான்- வெவ்வியவனத்தை—இறந்துவிட்டுநீங்கி—கோதை-வெற்றிமாலையணிந்த —வடிவேல் - கூர்மைபொருந்தியவேலாயுதத்தை—வலன்-வலதுபுறத்தில்—ஏந்து - தா



ங்குகின்ற—குவவு-திரட்சியையும்—திணி - வலிமையையுமுடைய—தோள்-புயங்களையுமுடைய—சுவாகுவெனும்- சுவாகுவென்னும் பெயரையுடைய—சேதுபதிதன்-சேதுதேசத்தரசனது—வளநகரில் - வளப்பம்பொருந்தியபட்டணத்தில்—விதர்ப்பன்சேயிழை — தமயந்தியானவள்சென்றாள்-சேர்ந்தனள் —எ-று.(கருத்து)தமயந்திசேதுபதிநகரத்தைச்சேர்ந்தாளென்பதாம். (௩௦)

துணிபட்டெழுந்தமென்றுகிலுந்துடர்விட்டொளிரமணிநுதல்
பணியிற்றென்றுமாசடைந்தவடிவுமவிழ்ந்தவார்குழலும்
பிணியுற்றழுதுநெஞ்சழுவாய்ப்பித்தேறினர்போற்கோமறுகி
லணுகச்சேதுபதிதாய்கண்டார்கொலிவளென்றையுற்றாள்

(இ-ள்) துணிபட்டெழுந்த துண்டுபட்ட — மென்றுகிலும்-மெல்லியஆடையும்—சுடர்விட்டொளிர - ஒளிவிட்டுவிளங்கும்படி—மணிநுதல்-நெற்றியாகிய—மணியின்-இரத்தினம்போலத்தோன்றி- காணப்பட்டு—மாசடைந்த-அழுக்கடைந்த—வடிவும்-உடம்பும்—விரிந்த - அவிழ்ந்த—வார்குழலும்-நீண்டகூந்தலும் — பிணியுற்று-துன்பப்பட்டு—அழுதும்-கலங்காநின்ற—நெஞ்சமும்-மனமும்—ஆய் - (ஆகிய இவைகளையுடைய)வளாய்—பித்தேறினர்போல்-பித்தர்போல் — கோமறுகில்-இராஜவீதியில்—அணுக-தமயந்திவர—சேதுபதி - சுவாகுவரசனது—தாய்-தாயானவள்—கண்டு - தமயந்தியைக்கண்டு—ஆர்கொலிவள் -இந்தப்பெண்யாரோ—என்று - என்று—ஐயுற்றுச்சந்தேகித்தாள்—எ-று. (கருத்து) சேதுபதிதாயார் தமயந்தியைக்கண்டு ஐயமுற்றாள்-எ-ம். (௩௧)

பொன்னம்பாவையுடன்முழுதும்புகையுண்டென்னச்சவி மழுங்கி
மின்னுண்மருங்குற்சிலம்பொதயனந்தேவசரம்பமகளோ
வென்னத்தெருளேனிங்கிவளையீண்டுக் கொணர்திரெனமருங்கின்
மன்னுமகளிர்தமைப்பணிப்பவிடைகொண்டவருமருகணைந்தார்.

(இ-ள்)பொன்னம்பாவை -பொற்பதுமையானது-உடன்முழுதும்-உடம்புமுழுமையும்-புகையுண்டென்ன-புகையுண்டதுபோல-சவிமழுங்கும்-ஒளிமழுங்கிய—மின்-மின்னலையொத்தன் நுண் - நுட்பமாகிய—மருங்குல்-இடையையுடைய சிலம்பொதி - இப்பெண்,— அனங்கோதெய்வப்பெண்ணோ - அரசர்மகளோ — இராஜகுமாரத்தியோ—என்ன-என்று—தெருளேன்-தெளியேன்—ஈங்கு- இவ்விடத்தில் — இவளை-இப்பெண்ணை—ஈண்டு—சீக்கிரத்தில்—கொணர்திர்-கொண்டுவாருங்கள்—என் என்று—மருங்கின்பன்னும் — அருகிலுள்ள—மகளிர்தமைத்திரிகளை—பணிப்ப-அவ்வரசன்றாயானவள் சொல்ல விடைகொண்டு-உத்தரவுபெற்றுக்கொண்டு—அவரும் - அம்மாதர்களும் — அருகு-தமயந்திசமீபத்திலே—அணைந்தார்-வந்தார்கள் -எ-று. (கருத்து) சேதுபதிதாய் இவளையழைத்துவென்றுசொல்லப் பெண்களழைக்கப்போனார்களென்பதாம். (௩௨)

அடைந்தமாதர்தனிப்போக்கு வனங்கின்கயலுண்கோதிக்
கடைந்தமன்னிச்செப்பெனப்புடைத்துக்கதித்துவிக்குவல்முலையாய்

படங்கொளரவின்முடிகிடந்தபார்தங்கிறைவன் றனையீன்ற
மடந்தைவருகென்றனளென்னவான்றேய்மாடத்தினிதடைந்தாள்.

(இ-ள்) அடைந்தமாதர்-வந்த ஸ்திரீகள்—தனிப்போந்த - தனித்து வந்த—அணங்கின்-தமயந்தியினது—கமலமுகநோக்கி - தாமரைமலர் போன்ற முகத்தைப்பார்த்து—கடைக்க-கடைதலிடப்பட்ட—மணிச்செப்பென-இரத்தினகும்பங்களைப்போல, புடைத்து-அருபாந்து—கதித்த-பருத்த—வீங்கும்-வளராநின்ற—வனமுலையாய்-அழகியஸ்தனங்களையுடையபெண்ணே—படங்கொள்-படத்தைக்கொண்ட—அரவின்-ஆதிசேடனுடைய—முடி-முடியின்மேல்—கிடந்த-இருந்த—பார்-பூமியை—தாங்கு-தரிக்காநின்ற—இறைவன் றனை-அவராஜனை—ஈன்ற-பெற்ற—மடந்தை-அவனதுதாயானவள்—வருகென்றனள்-உன்னைவரச்சொன்னாள்—என்ன-என்றுசொல்லாநிற்க—வான்றோய்- ஆகாயமளாவிய—மாடத்து-உப்பரிகையில்—இனிது- இன்பத்தோடு, அடைந்தாள்-தமயந்தியானவள்சேர்ந்தாள்—எ-று (கருத்து) பெண்கள் அழைக்கத்தமயந்திவந்தாளென்பதாம். (௫௧)

வந்தமடமான் முகநோக்கிவரிவண்டேகப்பொதியவிழ்ந்த
வந்தண்கமலமலர்கவற்றி யழகுவாய்ந்தமுகம்பசப்பச்
சிந்தைதளர்ந்துதனியபோதற்குற்றதெவன்கொல்சேயிழையா
யுந்தையாருன் றலைவனெவனுன்பேர்யாதிங்குரையென்றான்.

(இ-ள்) வந்த-தன்னிடத்துவந்த—மடமான்-தமயந்தியினது —முகநோக்கி-முகத்தைப்பார்த்து—சேயிழையாய் - பெண்ணே—வரிவண்டு-இசைப்பாட்டினையுடையவண்டுகள்—ஊத-ஒலிக்க—பொதியவிழ்ந்த—கட்டவிழ்ந்த—அந்தண்கமலமலர் - அழகியகுளிர்ந்த தாமரைமலர்களை—கவற்றி-கவலைச்செய்து—அழகுவாய்ந்த - அழகுபொருந்திய—முகம்-வதனமானது—பசப்ப-பசலைநிறமடைய—சிந்தைதளர்ந்து - மனந்தளர்ந்து—தனிப்போதற்கு-தனித்துவருதற்கு— உற்றது - பொருந்தியது—எவன்-யாது—உந்தை-உன் தகப்பன்—யார் - எவன்—உன் றலைவன்-உன்கணவன்—எவன்யார்— உன்பேர் - உன்னுடையநாமதேயம்—யாது-எது—இங்கு-இவ்விடத்தில்—உரையென்றான் - அரசன்றாய் சொல்லென்றாள், எ-று ॥ இலக்கணக்கொத்து-வினையியல்-உக-ஞ-வேதிலயுண்டியார்வேண்டுந்தரும்படும்-வினைபெயரெச்சம் வியங்கோள் பத்துந் திணைபாலிடமெலாஞ்சொல்லுமென்ப - இவ்விதியால்யார் என்பது திணைபாலிடங்களினுயாதினைக்குறித்து(கருத்து) சேதுபதிதாய்தனியே போவதென்ன உன் தகப்பனூர்-உன் கணவனூர்உன்பேரென்ன சொல்லென்றாளென்பதாம். (௫௪)

வீமன்புதல்வீபுகழ்படைத்தவேந்தர்கோமான்மனைக்கிழத்தி
நாமம்பகரிற்றமயந்தியென்பாடன்கோனன்னலற்குக்
காமர்திருவும்வளநாடுஞ்சூதினிழந்துகானிடைப்போ
யாமந்தனின்மற்றவட்பிரியவவனைத்தேடியீண்டணைந்தேன்



(இ-ள்) வீமன்புதல்வி-வீமராஜன்மகள்—புகழ்-புகழப்பட்ட—பி டதவேந்தர்கோமான்-நளமகாராசனது—மனைக்கிழத்தி - மனையாள்—நாமம்பகரில்-பேர்கூறுமிடத்தில்—தமயந்தியென்பாள் - தமயந்தியென்றுசொல்லப்படுவாள்—தன்கோன் - அவளதுகணவனுனவன்—நன்னலற்கு-பகைவனுக்கு—காமர்திருவும் - விரும்பப்படுகின்ற தனங்களையும்—வளநாடும்-செழித்தநாட்டையும்—சூதில் - சூதினில்—இழந்து-தோற்றுவிட்டு—கானிடைப்போய்-வனத்திற்சென்று — யாமந்தனில்-இராத்திரியில்—அவட்பிரிய -அவளைப்பிரிய—அவனை - அத்தமயந்தியை—தேடி-தேடிக்கொண்டு—ஈண்டு-இந்நகரில்—அணைந்தேன் - வந்தேன்—எ-று. (கருத்து) நளன்சூதிலேநாடிழந்து தமயந்தியைக்காட்டிலேவிட்டுப்பிரிய அவனைத்தேடிநான் வந்தேனென்றானென்பதாம். ()

அனையமடமானுயிர்த்தோழியானென் றுரைப்பவகமகிழ்ந்து
தனியளாகிக்கொடுங்காட்டிற்றலைவன்பிரியத்தளர்ந்தேங்கும்
கனைவண்டிமிருங்கருங்குழலைக்காணுமளவுமிந்நகரி
லினையல்வாழியிருத்தியெனவிசைந்தாங்கவளுமிருந்தனளால்.

(இ-ள்) அனையமடமான் - அத்தமயந்தியினுடைய—உயிர்த்தோழி-உயிரையொத்ததோழி—யான்-நான்—என்றுரைப்ப - என்றுதமயந்திசொல்ல—அகமகிழ்ந்து-சந்தோஷித்து—கொடுங்காட்டில் - கொடியகாட்டினில்—தலைவன்-கணவன்—பிரிய-பிரிந்தேக—தனியளாகி--தனித்தவளாகி—தளர்ந்து-தளர்ச்சியடைந்து—ஏங்கும் - துன்பப்படாநின்ற—கனை-கனைக்கின்ற—வண்டு- வண்டுகள்—இமிரும் - சத்தியாநின்ற—கருங்குழலை-கரியகூந்தலையுடையதமயந்தியை—காணுமளவும் - பார்க்குமளவும்—இந்நகரில்-இந்நகரத்தில்—இருத்தி - இருப்பாயாக—இனையல்-வருத்தப்படாதே—வாழி-வாழக்கடவை—என - என்றுஅரசன்றாய்சொல்ல—இசைந்து-அவள்சொல்லுக்கிசைந்து—ஆங்கு- அந்நகரத்தில்—அவளும்-அத்தமயந்தியும்—இருந்தனள்-இருந்தாள்—எ-று. (கருத்து) தமயந்திதோழிதானென்றுசொல்ல சேதுபதிதாய் தமயந்தியைக்காணுமளவும்நீ இவ்விடத்திலிருப்பாயென்ன இருந்தாள்-எ-ம். ()

காதல்கூர்ந்துதன்மகளாஞ்சுனந்தைக்கதிர்வாண்முகநோக்கி
மாதர்நோக்கிம்மடவரலைவருந்தாதளித்தியெனவோடு
மேதமின்றியவள்காப்பவிருந்தாண்மற்றிங்கிதுநிற்க
கோதைவடிவேண்டற்குற்றசெய்தியனைத்துங்கூறுவாம்.

(இ-ள்) காதல்கூர்ந்து-அன்புகூர்ந்து—தன்மகளாஞ்சுனந்தை- தன்னுடையமகளாகியசுனந்தையினது —கதிர்வாள் - மிகுந்தவொளி பொருந்திய—முகம்-முகத்தை—நோக்கிபார்த்து—மாதர்நோக்கு - அழகியபார்வையையுடைய — இம்மடவரலை-இப்பெண்ணை—வருந்தாது-துன்பப்படாமலிருக்கும்படி—அளித்தி - காப்பாய்—எனவோடு - என்று(அரசன்றாய்)சொல்லியவளவில்—ஏதமின்றி - பழுதின்றி—அவள்-அச்சுனந்தையானவள்—காப்ப-இரக்ஷிக்க—இருந்தாள் - தமயந்தி இருந்தனள்—இங்கு-இவ்விடத்தில்—இது-இச்செய்தி—நிற்க - இருக்க,

கோதைகவடிவேல் - வெற்றிமாலையணிந்தகூரியவேலையேந்திய—நளற்கு-நளமகாராஜனுக்கு—உற்ற-பொருந்திய— செய்தியனைத்தும் - செய்கையனைத்தையும்—கூறுவாம்-சொல்லுவாம்—எ-று. மற்று - அசை (கருத்து) நூலாசிரியர்தமயந்தி இவ்வாறிருக்கநளன்செய்தியைச் சொல்லுவோமென்றார்-எ-ம். (௩௪)

பிரிவுறுபடலம் - முற்றுப்பெற்றது.

உ

# வேற்றுருவமைந்தபடலம்.

இப்படலத்தால் நளமகாராசனுக்குநாட்டிற் செல்லினும்பிறரறியா திருக்கும்படிவேற்றுருவமைந்தமை சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தத்துறை

கள்ளுயிர்க்குமென்மலர்க்குழற்காமர்பூங்கொடியை
கள்ளிருட்பொழுதகன்றனனண்ணருங்கானிற்
றன்னுதற்கருந்துயரொடுபோதலுந்தழலு
மொள்ளெழிற்புகைக்கொழுந்தெழக்கண்டனனுரவோன்.

(இ-ள்) உரவோன்-நளமகாராஜன்—கள்ளுயிர்க்கும்- தேனைத்தருகின்ற—மென்மலர்-மெல்லியமலர்களையணிந்த—குழல் - கூந்தலையுடைய—காமர்-அழகுபொருந்திய—பூங்கொடியை-தமயந்தியை —நண்ணரும்-அடைதற்கரிய—கானில்-வனத்தில்—நள்ளிருட்பொழுது - நடுராத்திரியில்—அகன்றனன் - விட்டுப்பிரிந்தவனாய்—தன்னுதற்கரும்-ஒழிதற்கரிய—துயரொடும் - துன்பத்துடனே—போதலும - செல்லுமளவில்—தழலும்-தகிக்காநின்ற—ஒள்ளழல் - ஒளிபொருந்தியதீயினது—புகைக்கொழுந்து - தூமக்கொழுந்து—எழ - எழும்பாநிற்க—கண்டனன்-அதைப்பார்த்தான்—எ-று. (கருத்து) நளன் அக்கினிவளர்ந்தெழக்கண்டான்-எ-ம். (௧)

செஞ்சுடர்ச்சிகைவளைதலிற்றெருமாலெய்தி
நெஞ்சுயிர்க்கும்வாளரவொன்றுநாமவேலிறைவ
தஞ்சநீயெனையளித்தியென்றுரைத்தலுந்தாழா
தஞ்சலஞ்சலென்றடைந்தனன்றடங்கலேறனையான்.

(இ-ள்)செஞ்சுடர்ச்சிகை-அக்கினிச்சுவாலையானது— வளைதலின் சுற்றிக்கொண்டமையால்—தெருமாலெய்தி - மனங்கலங்கி— நஞ்சுயிர்க்கும்-விஷத்தைத்தருகின்ற—வாளரவொன்று - ஒளிபொருந்திய ஒரு கார்க்கோடகனென்னுநாகமானது—நாமவேல் - அச்சத்தைத்தருகின்ற

றவேலையேந்திய—இறைவ-நளமகாராசனே—நீ - நீயே—தஞ்சம்-இரக்ஷகன்—எனை-என்னை—அளித்தி - காக்கவேண்டும் — என்றுரைத்தலும்-என்றுசொல்லியவளவில்—தாழாது-தயங்காது — அஞ்சலஞ்சல் - பயப்படாதேபயப்படாதே—என்று - என்றுசொல்லியவனாய் — மடங்கலேறனையான் - நளமகாராசன்—அடைந்தனன் - அருகிலடைந்தான்—எ-று.(கருத்து) பாம்புதன்னைக்காப்பாற்றென்ன நளன்பயப்படாதேயென்றான்—எ-ம். (௨)

கனைசெழுஞ்சுடர்க்கொழுங்கனல்படர்தலிற்கரிந்து
பனைமறிந்தெனக்கிடந்ததோர்பாந்தளைநோக்க
வனைபொலன்கழற்குரிசிலோர்மறையவன்முனிவா
னினைவினுந்தனிப்பெயர்ந்திடுமிலைமையொன்றிலனால்.

(இ-ள்) கனை-சத்தியாநின்ற—செழுஞ்சுடர் - செழித்தசுவாலைகளையுடைய, கொழுங்கனல்,மிகுந்தகாட்டுத்தீயானது,படர்தலில் - சுற்றிக்கொள்வதினால்—கரிந்து-கருகி—பனை - பனைமரமானது— மறிந்தென - விழுந்துகிடந்ததுபோல—கிடந்தது-கிடந்ததாகிய — ஓர்பாந்தளை-(கார்க்கோடகனென்னும்) ஒருபாம்பினை—நோக்க-(நளமகாராஜன்) பார்க்க—வனைபொலன்கழல்-கட்டப்பட்டபொன்னாற்செய்தவீரக்கழலையணிந்த—குரிசில்-நளமகாராசனே—ஓர்மறையவன் - அநாகசனென்னும் ஒருபிரமஇருஷியினது—முனிவால்-சாபத்தினால் —நினைவினும் - நினைப்பினும்—தனி-தனியாக—பெயர்ந்திடுமிலைமை-நடக்கலாமென்னும் நிச்சயத்தை—ஒன்றிலன்-அடைந்திலேன்—எ-று. ஆல்-அசை (கருத்து) பாம்பானது நளனை அநாகச ரிஷி சாபத்தால்கடைபெற்றிலேனென்றது-எ-ம். (௩)

அழலினின்றெடுத்தையிரண்டடிப்புறத்தகற்றின்
முழுவலன்பொடுநன்கிழைக்குவலெனமொழிந்து
தழற்கட்பாம்புடல்சுருக்கலுந்தழலருள்வரத்தா
லெழுவினீள்கரத்தாலெடுத்தழற்புறத்திட்டான்.

(இ-ள்) அழலினின்றெடுத்து - அக்கினியினின்றெடுத்து—ஐயிரண்டடிப்புறத்து-பத்தடிக்குப்புறத்தில் —அகற்றில் - நீக்கிவிடுவையானால்—முழுவலன்பொடு-நிறைந்தவிலியஅன்புடனே — நன்கிழைக்குவல்-உனக்குநன்மையைச்செய்வேன்—எனமொழிந்து - என்றுசொல்லி—தழற்கண் - அக்கினிபொருந்தியகண்களையுடைய—பாம்பு - கார்க்கோடகமானது—உடல்சுருக்கலும் - உடம்பைச்சுருக்கிக் கொண்டவளவில் (நளமகாராசனானவன்) தழலருள் வரத்தால் - அக்கினிதேவன்கொடுத்தவரத்தினால்— எழுவில் - தூண்போன்ற —நீள்கரத்தால்-நீண்டகரத்தினால்—எடுத்து-எடுத்து—அழற்புறத்து - தீயினுக்குவெளியில்—இட்டான்-விடுத்தான்—எ-று. (கருத்து) நளன்பாம்பையெடுத்து தீக்கப்புறம்விடுத்தான்-எ-ம். (௪)

கதவெழரிக்கனின்றகற்றலுங்கடுவொளிவிரிக்கு
மதிர்பொலன்கழலரசர்கோன்மெய்புகத்தீண்டி

முதிர்சினத்தவ்வாளரவுதன் முன்னுருவெடுப்ப
விதுகுலத்துயர்வேந்தனும்வேற்றுருவமைந்தான்

(இ-ள்) கதமெழிக்கனின்று - சொலிக்கின்றதீயினின்றும் — அகற்றலும்-நீக்கிவிட்டவளவில் — கதிரொளிவிரிக்கும் - கிரணவொளிவீசாநின்ற — அதிர்-சத்திக்கும் — பொலன்கழல் -பொன்னாற்செய்யப்பட்டவீரக்கழலையணிந்த — அரசர்கோன்-நளமகாராசனது — மெய் - சரீரத்தில் — உற-பொருந்தும்படி — தீண்டி-கடித்து — முதிர்சினத்த- மிகுந்தகோபத்தையுடைய — வாளரவு - ஒளிபொருந்திய கார்க்கோடக நாகமானது — தன்-தன்னுடைய — முன்னுரு-பழையவுருவத்தை — எடுப்ப-எடுக்க — விதுகுலத்து-சந்திரவமிசத்தில் — உயர்-உயர்ந்த — வேந்தனும் - நளமகாராசனும் — வேற்றுருவமைந்தான் - வேற்றுருவடைந்தான் — எ-று. (கருத்து) பாம்புகடிக்கநளன் வேற்றுருவானானென்பதாம். (௫)

கருணைசெய்தெனைப்புரந்தநிற்கடித்தது முன்னை
யுருவுகண்ணுறிலொன்னலர்செகுப்பரொன்பதனாற்
பொருவிலோயினிவாகுவனெனும்பெயர்புனையா
விருதுபன்னன்வாழயோத்திமாநகரினேகுதியால்.

(இ-ள்) கருணைசெய்து-கிருபைசெய்து — எனை- என்னை — புரந்த இரக்ஷித்த — நிற்கடித்தது- உன்னைக்கடித்தது — (ஏனெனில்) முன்னையுருவு-பழையவுருவமானது — கண்ணுறில் - காணப்படுமானால் — ஒன்னலர்-சத்துருக்கள் — செகுப்பர்-கொல்லுவார்கள் — எப்பதனால் - என்னுமினையதால் — பொருவிலோய்-ஒப்பற்றநளமகாராசனே — இனி - இனிமேல் — வாகுவனெனும் - வாகுவன் என்றுசொல்லப்பட்ட — பெயர் புனையா-பெயரைத்தரித்துக்கொண்டு — இருதுபன்னன் - இருதுபன்னமகாராசன் — வாழ் அரசாட்சிசெய்யாநின்ற — அயோத்திமாநகரில் - அயோத்தியென்னப்பட்ட பெருமைபொருந்தியபட்டினத்தில் — ஏகுதி-போவாயாக-எ-று. ஆல் - அசை (கருத்து) பாம்புநளனை அயோத்தியில் இருதுபன்னனிடத்திற்போகும்படிசொல்லிற்றென்பதாம். (௬)

ஏந்தலேயியமன்னவன் சூதனுவிசையத்
தூந்தன்மாவுளந்தெரிதருவிஞ்சைநீகொடுப்பி
னாய்ந்தசூதுவெல்விஞ்சையின் பாலவனளிக்குந்
சாந்தவெம்முலைத்தமயந்திதன்னொடுஞ்சார்வாய்.

(இ-ள்) ஏந்தல்-நளமகாராசனே — ஏகி -அந்நகரத்திற்சென்று — அம்மன்னவன் -அந்தவிருதுபன்னனுக்கு — சூதனு - தேர்ப்பாகனை — இசைந்து-பொருந்தி — தூந்தல்- புரவியினையுடைய — மா-குதிரைகளினது — உளம்-மனதை — தெரிதரும்-அறிகின்ற — விஞ்சை - வித்தையை — நீகொடுப்பின்-நீ (அவ்வரசனுக்கு) உபதேசிப்பையானால் — ஆய்ந்த-பரிசோதிக்கப்பட்ட — சூது-சூதினில் — வெல்- வெற்றியைத்தராநின்ற — விஞ்சை-வித்தையை — நின்பால்-உன்னிடத்தில் — அவன் - அவ்வரசன் — அளிக்கும்-கொடுப்பான் — (அதன்பிறகு) சாந்தம்- சந்தனக்கோலமணிந்த — வெம்முலை - மிருதுவாகியஸ்தனங்களையுடைய — தமயந்திதன்னொடும்-தமயந்தியோடும் — சார்வாய் - கூடுவாய் — எ-று. (கருத்து) பாம்புநளனே குதிரைகளுள்ளமறியும் வித்தையை நீ இருதுபன்னனுக்குக்கொடுத்தால் அவன் சூதுவெல்வித்தையை உனக்குக்கொடுப்பானென்றது-எ-ம். (௭)



பின்னர்மன்னநின்பெருநிலக்கிழமையும்பெறுதி
முன்னைமானுருவெளிதினிற்பெறுதிமுன்னி
லின்னபூந்துகில்புனைதியென்றிருதுகிலளித்துத்
தன்னுருக்கொடுபோயது தழல்விழிப்பாந்தள்.

(இ-ள்) பின்னர்-பின்பு — மன்ன-நளமகாராஜனே — நின் -உன்னுடைய — பெருநிலக்கிழமையும்-அரசாட்சியையும் — பெறுதி — அடைவாய் — முன்னை-முற்பட்ட — மானுரு- மாட்சிமைபொருந்திய வுருவத்தை — எளிதினில்-வருத்தமின்றி — பெற்றி, முன்னில்- பெறுவினைப்பயாகில் — இன்னபூந்துகில்-இந்தஅழகியவஸ்திரத்தை — புனைதியென்று-தரித்துக்கொள்ளென்றுசொல்லி — இருதுகில் - இரண்டுவஸ்திரங்களை — அளித்து-கொடுத்து — தன்னுருக்கொடு - தன்பழையவுருவத்தையெடுத்துக்கொண்டு — தழல்விழி - அக்கினிபொருந்தியகண்களையுடைய — பாந்தள்-கார்க்கோடகநாகமானது — போயது - மறைந்துபோயது — எ-று. (கருத்து) பாம்புநளனே உன்வடிவுகொள்ளவேண்டில் இந்த வஸ்திரத்தைத் தரியென்று இரண்டுவஸ்திரங் கொடுத்துப் போயிற்று என்பதாம். (௮)

அதிர்பொலன்கழலரசர்கோனவ்வயினீங்கிப்
பிதிர்சுணங்கணிவெம்முலைப்பெய்வளைத்தடந்தோன்
மதர்வைநோக்கிதன்வாணகையேயுயிர்வருத்துங்
கதிர்செய்நித்திலம்வாரன்றெறிதிரைக்கண்டான்.

(இ-ள்) அதிர்-சத்தியாநின்ற — பொலன்கழல் - பொன்னாற்செய்தவீரக்கழலையணிந்த — அரசர்கோன்-நளமகாராஜனானவன் — அவ்வயினீங்கி -அவ்விடம்விட்டுப்புறப்பட்டு, பிதிர்-பிதிர்ந்த — சுணங்கணி-தேமலையணிந்த — வெம்முலை-விருப்பத்தைச் செய்கின்ற ஸ்தனங்களையும் — பெய்வளை-வளையலையணிந்த — தடந்தோள்- பருத்ததோள்களையுடைய — மதர்வைநோக்கிதன்-தமயந்தியினது — வாணகையென - ஒளிபொருந்தியதந்தங்கள்போல — உயிர்-உயிரை — வருத்தும் - வருத்துகின்ற — கதிர்செய்-ஒளிபொருந்திய — நித்திலம் - முத்துக்களை — வாரன்று வாரிக்கொண்டு — எறி-வீசாநின்ற — திரை - அலைகள்பொருந்திய — கடல்-சமுத்திரத்தை — கண்டான் (நளமகாராஜன்) பார்த்தான் — எ-று. (கருத்து) நளன்சமுத்திரத்தைக்கண்டானென்பதாம். (௯)

வஞ்சர்நெஞ்சினுங்கழியநேர்மடநடையன்ன
மஞ்சிறைப்புறத்தாருயிர்ப்பெடையினையணைத்துக்
கஞ்சநாண்மலர்ச்சேக்கையிறகண்படநோக்கி
நெஞ்சமாழ்குறநெடிதுயிர்த்தயர்வொடுநின்றான்.

(இ-ள்) வஞ்சர்-வஞ்சகாது—நெஞ்சின் - மனம்போல—ஆழ்-ஆழ்க்க கழியின்-கழிநிலத்தில், ஓர்மடநடையன்னம்-ஒரு அன்னமானது அழ்-அழுந்திய—சிறைப்புறத்து-சிறகின்புறத்திலுல் — ஆருயிர்-நிறைக்தவுயிரையொத்த—பெடையினை-பெட்டையன்னத்தை— அணைத்து-தழுவிக்கொண்டு—கஞ்சம்-தாமரையினது—நாண்மலர் - புதியமலராகிய—சேக்கையில் - படுக்கையில்—கண்படல் - நித்திரைசெய்வதை—நோக்கி-பார்த்து—நெஞ்சம்-மனமானது—மாழ்குற - வருத்தமடைய, நெடிதுயிர்த்து-பெருமூச்சுவிட்டு—அயர்வொடும் - சோர்வுடனே—நின்றான் (நளமகாராசன்) நின்றனன்—எ-று.(கருத்து) நளன் அன்னம்புணர்தலைக்கண்டு சோர்வுடனின்றான் என்பதாம். (௰)

சுடர்செய்முத்தமுநேமியம்புள்ளுமென்றுகிரு
நெடிதுநோக்கிநேரிழைமூரலுமுலையும்
வடிவமைந்தமென்விரலுமென்றெய்தியவாற்றாற்
கடலில்வீழ்ந்துயிர்துறந்தெனவெனமனங்கலுழ்ந்தான்.

(இ-ள்) சுடர்செய்-ஒளிவிடுகின்ற —முத்தமும் - முத்துக்களையும்—நேமியம்புள்ளும்-சக்கிரவாகப்பட்சியும்— மென்-மிருதுவாகிய, துகிரும்-பவளத்தையும்—நெடிது-நெடுங்காலம்—நோக்கி-பார்த்து — நம்முடைய—நேரிழை-தமயந்தியினது—மூரலும் - தந்தவரிசைகளும், முலையும்-ஸ்தனங்களும்—வடிவமைந்த-அழகுபொருந்திய—மென்விரலும்-மெல்லியவிரல்களும்—கந்து-இக்கழிநிலத்தில் — எய்தியவாற்றால்-பொருந்தியபடியால்—கடலில்-சமுத்திரத்தில்—வீழ்ந்து - (தமயந்தியானவள்) விழுந்து—உயிர்துறந்தனள்-இறந்தாள்; என-என்றெண்ணி—மனங்கலுழ்ந்தான்-நளமகாராசன்மனங்கலங்கினன் —எ-று. (அக்கழிநிலத்தில் காணப்பட்ட முத்துமுதலிய உவமானவஸ்துக்களை உவமேயமாக மயங்கினமையால் மயக்கவணி (கருத்து) நளன் தமயந்தி அவயவங்களுக்கு உவமானப்பொருள்கள் கடலிற்கண்டான் என்பதாம். ()

ஆவியன்னவோரணங்கினையனையிருணீத்த
பாவியேன்முகநோக்குறிற்பழிவருமென்றே
மேவுசேக்கையிற்குருகினம்பேட்டினம்வெருவிச்
சேவலோடகன்றேகுவதெனமனந்திகைத்தான்.

(இ-ள்) ஆவியன்ன-உயிரையொத்த—ஓரணங்கினை- ஒப்பற்றதமயந்தியை—அனையிருள்-அர்த்தராத்திரியில்—நீத்த-(தனியாக) விடுத்த—பாவியேன்-பாவியாகியவென்னுடைய—முகம் - முகத்தை —நோக்குறில்-பார்த்தால்—பழிவரும் - பாவம்வரும்—என்றே - என்றுநினைத்தோ—மேவு-பொருந்திய—சேக்கையில் - படுக்கையிலுள்ள, குருகு-பறவைகளினுடைய—இனம்-இளமைதங்கிய—பேட்டினம்- பெட்டைகளானது—வெருவி-பயந்து —சேவலோடு - ஆண்பறவைகளோடும்—அகன்று-அவ்விடத்தைவிட்டுநீங்கி—ஏகுவது-போவது,என - என்று—மனந்திகைத்தான்-மதிமயங்கினான்-எ-று.(பறவைகள் இயல்பாய்ப் பறந்ததைக்கண்டே கிளம்ப அதற்குநளன் தன்குற்றத்தை ஏதுவாக்கினு



ன்னகஇது தற்குறிப்பணி(கருத்து)பறவைகள் நீங்குதலைநளன் கண்டு தன்குற்றத்தையெண்ணினான் -எ-ம். (௰௨)

கவ்விநோக்கிநகைமதிமுகமெனச்சிறந்த
தெய்வநாண்மலர்ப்போதவிழ்பூந்துகடிமிர்ந்து
கவ்வைவெண்டிரைத்துளியெறிதென்றலங்கன்று
தைவருந்தொறுமெய்பதைத்தாருயிர்தளர்ந்தான்.

(இ-ள்) கவ்வி-மான்போன்ற—நோக்கி-கண்களையுடைய தமயந்தியினது—நகை-பிரகாசம்பொருந்திய—மதி - சந்திரனையொத்த—முகமென-முகம்போல—சிறந்த - சிறப்பையடைந்த—தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள—நாண்மலர்-புதிதாகமலர்கின்ற,போது - புஷ்பத்தில்—அவிழ்-விரிந்த—பூந்துகள்-மகரந்தப்பொடிகளை—திமிர்ந்து - பூசிக்கொண்டு—கவ்வை-ஒலிபொருந்திய—வெண்டிரை - வெளுத்தசமுத்திர அலைகளினுடைய—துளி-திவலைகளை—எறி-வீசுகின்ற —தென்றலங்கன்று-இளந்தென்றலானது—தைவருந்தொறும் - மேல்வீசுந்தோறும், மெய்-சரீரமானது—பதைத்து-துடித்து—ஆர்-நிறைந்த—உயிர் - உயிரானது—தளர்ந்தான்-தளரப்பெற்றான்-எ-று. (கருத்து) நளன் தென்றல் வீசலால் தளர்ச்சியடைந்தான்-எ-ம. (௰௩)

இன்னதன்மையன்வைகலீரைந்துபோயிறப்பக்
கன்னல்வேலியங்கழனியிற்களிச்சுரும்பார்த்தும்
பொன்னந்தாமரைப்பொகுட்டின்மேன்மடப்பெடைபுல்லி
யன்னங்கண்படுவெள்ளநீரயோத்திகடைந்தான்.

(இ-ள்) இன்னதன்மையன் - இத்தன்மையாகியநளமகாராசன்—வைகலீரைந்து-பத்துநாள்—போயிறப்ப - நீங்கிப்போக—கன்னல்வேலி-கருப்பம்வேலியிடப்பட்ட—அங்கழனியில்-அழகியவயல்களில் —களிச்சுரும்பு-களிப்பினையுடையவண்டுகள்—ஆர்த்தும் - சத்தியாநின்ற—பொன்னம்-பொன்போலழகிய—தாமரைப்பொகுட்டின்மேல் - தாமரைப்பூங்கொட்டையில்—மடப்பெடை- இளமைதங்கிய பெட்டையன்னங்களை—புல்லி-தழுவிக்கொண்டு—அன்னம்-அன்னப்பறவைகள்—கண்படு-நித்திரைசெய்கின்ற—வெள்ளநீர்- மிகுந்தநீர்வளமுள்ள—அயோத்திகடு-அயோத்திநகரத்தை —அடைந்தான்-சேர்ந்தான் —எ-று (கருத்து) நளன் அயோத்தியைச்சேர்ந்தான்-என்பதாம். (௰௪)

இருதுபன்னனைக்காண்டலுமெற்றொழில்வல்லை
மருவுநாமமென்கூறெனவாகுவனென்பே
ருருவவாம்பரித்தேரினிதூர்குவனும்ப
ரருமருந்தெனவடுக்கொழில்புரிவனென்றறைந்தான்.

(இ-ள்) இருதுபன்னனை-இருதுபன்னராசனை—காண்டலும்-நளன்கண்டவுடனே —எற்றொழில்-எச்செய்கையில் —வல்லை - நீதிறமையுள்ளவன் —மருவும்-பொருந்திய—நாமமென்-உன்பெயரியாது — கூறெனசொல்லென்று இருதுபன்னன் கேட்க—வாகுவன் - வாகுவனென்பது—என்பேர்-எனதுபெயராம்—உருவ-சிறந்தவுருவுடைய—வாம்-

தாவாநின்ற—பரி-குதிரைகட்டிய—தேர் இரதத்தை—இனிது - நன்று க—ஊர்குவன்-நடத்துவேன் -(அன்றியும)—உம்பர்-தேவர்களின து—அருமருந்தனை-அரிய அமுதம்போல—அடுந்தொழில்-சமையலை — புரிவன் -செய்வேன்—என்றுரைத்தான்-என்று நளமகாராஜன் சொன்னான் — எ-று (கருத்து) நளன் இருதுபன்னனைக்கண்டு தன்னைச் சாரதிஎன்றான் என்பதாம். (௰௫)

வேந்தனவ்வுரைகேட்டலும்வியன்மணிநெடுந்தேர்
கூந்தன்மாவுளமறிந்தினைகுறிப்பினூர்குதியே
லாய்ந்தசெம்பொனோராயிரம்வைகலுமளிப்ப
லேந்தலென்னிருபாகரோடிருந்தியென்றிசைத்தான்

(இ-ள்) வேந்தன்-இருது-பன்னராசன்—அவ்வுரை-அந்நளன்சொல்லை—கேட்டலும்-கேட்டமாத்திரத்தில்—வியன்-பருத்த—மணி-நவரத்தினங்கள்பதித்த—நெடும்-நீண்ட—தேர்-தேரிற்கட்டப்பட்ட—கூந்தல்-புறமயிரினையுடைய—மா-குதிரையினது—உளமறிந்தனை - மனதையறிந்தவனுகி—குறிப்பின்-குறிப்பினால்—ஊர்குதியேல் - நடத்துவையானால்—ஆய்ந்த-குற்றமற்ற—செம்பொனோராயிரம் - ஓராயிரம்பொன்—வைகலும்-நாள்தோறும்—அளிப்பல்-கொடுப்பேன்—ஏந்தல் - வீரனே—என் - என்னுடைய—இருபாகரோடு-இரண்டுசாரதிகளோடுங் கூட—இருந்தி-இரு—என்றிசைத்தான் - என்றுசொன்னான்—எ-று. (பொன்னென்பது இருபதுசின்னபணத்துக்குப்தொகைப்பெயர்) இது சேர சோழ பாண்டியர்நாட்டுவழக்கு (கருத்து) இருதுபன்னன் நளனை காவொன்றுக்கு ஆயிரம்பொன் சம்பளத்தில்வைத்தான்-எ-ம். (௰௬)

அன்னவாறுநேர்ந்தலங்குளைப்புரவிமான்றேர்க்கு
மன்னனுகியிடதர்கோன்வைகலும்புலம்பித்
துன்னுகானிடைநீத்தவடுயரமீக்கூர
வென்னளாயினளோவெனவிரங்கிவெய்துயிர்ப்பான்.

(இ-ள்) அன்னவாறு-அப்படியே—நேர்ந்து-சம்மதித்து — அலங்கு-அசைகின்ற—உளை-புறமயிரினையுடைய—புரவிமான் - குதிரைகட்டிய—தேர்க்கு-இரதங்கட்கு—மன்னனுகிய-அதிபனுகிய—நிடதர்கோன்-நளமகாராசனுனவன்—வைகலும்-நாள்தோறும் —புலம்பி மனமிரங்கி—துன்னுகானிடை-நெருங்கியகாட்டினில்—நீத்தவள் - விடப்பட்டதமயந்தியானவள்—துயரம்-துன்பம்—மீக்கூர-அதிகரிக்க — என்னளாயினளோ-எத்தன்மையாளுனோ—என்-என்று—இரங்கி - புலம்பி வெய்து-கொடியதாக—உயிர்ப்பான்-பெருமூச்சுவிடுவான் —எ-று (கருத்து) நளன் தமயந்தியைநினைத்து விசனப்படுவான்-எ-ம். (௰௭)

உயிர்த்துமெய்தளர்ந்துருகியவேந்தனையுளத்தி
லயிர்த்தொர்சாரதியுற்றதையெவன்கொலென்றுரைய
வெயிற்கொடுங்கதிர்மறைந்துழிவெவ்வழற்கானிற்
பயிற்பிற்கோதையைத்தீர்ந்தனன்பரிவிலேனென்றான்.

(இ-ள்) உயிர்த்து-பெருமூச்சுவிட்டு—மெய்தளர்ந்து - சரீரம்வாடி—உருகிய- மனமுருகிய—வேந்தனை -நளமகாராசனை—உளத்தில்-மனத்தில்—அயிர்த்து-சந்தேகித்து—ஓர்சாரதி - சீவலனென்னுமொரு தேர்ப்பாகனுனவன் —உற்றதை - நாள்தோறும்அடைந்ததுன்பத்தை —எவன்கொலென்றுரைய - என்னவென்றுகேட்க—வெயில்-வெய்யிலைச்செய்கின்ற — கொடுங்கதிர்-சூரியன்—மறைந்துழி- அஸ்தமித்தபின்பு—வெவ்வழல் -கொடியஅழல்பொருந்திய—கானில் - காட்டினில் —பயிற்பில்- பரிசுத்தமாகிய—கோதையை- பெண்ணை—பரிவிலேன்-அன்பில்லாதநான்—தீர்ந்தனன்-விடுத்தேன்—என்றான்-என்றுநளன் சொன்னான்—எ-று. (கருத்து) ஓர்சாரதிநளனை ஏன்விசனப்படுகிறு யெனநளன்தன்மனைவியைக்காட்டில்விட்டேனென்றான்-எ-ம். (௰௮)

வேற்றுருவமைந்தபடலம் - முற்றிற்று.

௨

# வீமன்தேடவிட்டபடலம்

இப்படலத்தால்வீமராசன் தமயந்தி நளன் இருவரையும் தேடுதற்கு அதற்கு உரியோரைவிடுத்தல் சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

இனையனுகியமன்னவனவ்வுழியிருப்ப
வனைகருங்கழல்விதர்ப்பர்கோன்மறையவர்க்கூயென்
றனையைதன்னெடுநளனையுந்தேடிநீர்தந்தா
லினைவயாவையுந்தருகுவனெனவவர்நேர்ந்தார்

(இ-ள்) இனையனுகிய- இத்தன்மையனுகிய—மன்னவன் -நளமகாராசன்—அவ்வுழி-அவ்வயோத்தியில்—இருப்ப-இருக்க — வனைகருங்கழல்-சிறந்தவீரக்கழலையணிந்த — விதர்ப்பர்கோன் - வீமராசன்—மறையவர்-பிராமணர்களை—கூய்-அழைத்து — என்றனையைதன்னொடும்-எனதுபெண்ணுகியதமயந்தியோடும்—நளனையும் - நளமகாராசனையும்—தேடி-தேசங்களிற்றேடி—நீர்-நீவிர்—தந்தால் - கொடுப்பீராயின் —நினைவயாவையும் - நீர்நினைத்தவையனைத்தையும் — தருகுவன்-நகொடுப்பேன்—என-என்றுசொல்ல—அவர்-அம்மறையவர்கள் —நேர்ந்தார் - (அதற்குச்) சம்மதித்தார்—எ-று. (கருத்து) வீமன்தன்மகளையும் மருமகனையுங்கண்டு பிடித்துக்கொடுத்தவர்களுக்கு நினைத்தயாவையுங்கொடுப்பேனென்றான் என்பதாம். (௧)

தாங்கவாரிதிருழ்தருதகைமைசாலுலக
மொருங்குதேடியுங்காண்கிலாரிரிய
வரங்கொள்கேள்வியன்சுதேவனென்னுமோர்மறையோன்
கருங்கட்பேதையைச்சேதிபன்மனையிற்கண்டான்

(இ-ள்) தாங்கவாரிதி - அலைகளையுடைய சமுத்திரமானது — சூழ்தரு - சூழ்ந்த — தகைமைசால் - மேன்மைபொருந்திய — உலகம் - பூவுலகம் — ஒருங்கு - ஒருங்குபட — தேடியும் - தேடியும் — காண்கிலார் - காணுதலை ஈய — உடையிலார் - அலைவுறுபோர்கள் — இரிய - திரியாநிற்க — வரங் கொள் - வரத்தைக்கொண்ட — கேள்வியன் - (சாஸ்திரக்) கேள்வியையுடைய — சுவேதனென்னும் - சுவேதனென்னுசொல்லப்பட்ட — ஓர்மறையோன் - ஒருபிராமணன் — கருங்கட்பேதையை - கரியகண்களையுடைய தமயந்தியை — சேதிபன்மனையில் - சேதிபதேயத்தரசனுடைய மாளிகையினிடத்தில் — கண்டான் - பார்த்தான் — எ-று. (கருத்து) சுவேதனென்னும் ஓர்பிராமணன் தமயந்தியைசேதி பதியரண்மனையிற்கண்டானென்பதாம். (௨)

மாசபூக்கொளிமழுங்குமன்னுமணியிற்
றேசழிந்தெரிவைதன்றிருமுகநோக்கி
யேசலில்லிவட்கோவிலைபெய்துமற்றென்று
வாசில்கேள்வியோன்கலுழ்ந்தனன்றுயர்க்கடலாழ்ந்தான்

(இ-ன்) மாசபூத்து - அழுக்கடைந்து — ஒளிமழுங்கு - ஒளிமழுங்கி — மன்னுமணியில் - சாணையிடாதமணிபோல — தேசழிந்த - அழகழிந்த — தெரிவைதன் - தமயந்தியினது — திருமுகம் - அழகிய முகத்தை — நோக்கி - பார்த்து — ஏசலில் - பழிப்பில்லாத — இவட்கோ - இப்பெண்ணுக்கோ — இலைபெய்தும் - இவ்வருத்தங்கள்பொருந்தும் — என்று - என்று — ஆசில் - குறைவற்ற — கேள்வியோன் - கேள்வியையுடைய சுவேதன் — கலுழ்ந்தனன் - கலங்கினவனாகி — துயர்க்கடல் - துயர்க்கடலில் — ஆழ்ந்தான் - மூழ்கினான் — எ-று. மற்று-அசை (கருத்து) சுவேதன் தமயந்தியைக்கண்டழுதான்-எ-ம். (௩)

அழுவதென்கொலென்றாயிழைவினவினின்றந்தை
முழுவலன்புடைத்தோழன்யான்மொய்த்தநின்றமரும்
குழுவுநின்னிருகுரவருந்தீங்கிலரென்னத்
தொழுதுமைக்கணீர்முலைத்தடம்பெருகமெய்சோர்ந்தாள்

(இ-ன்) அழுவதென்கொல் - துன்பப்படுவதென்னகாரணம் — என்று - என்றுசொல்லி — ஆயிழை - தமயந்தியானவள் — வினவ - கேட்க — நின்றந்தை - உன் தந்தைக்கு — முழுவலன்புடை - நிறைந்தஅன்புடைய — தோழன் - தோழமையுள்ளவன் — யான் - நான் — மொய்த்த - நெருங்கிய — நின் - உன்னுடைய — தமரும் - உறவினரும் — குழுவும் - கூட்டமும் — நின் - உன்னுடைய — இருகுரவரும் - தாய்தகப்பன் மாரிருவரும் — தீங்கிலர் - கேடிலராயுள்ளார் — என்ன - என்றுசொல்ல — (அவனைத்) தொழுது — மைக்கணீர் - மைபொருந்தியகண்ணீர் — முலைத்



தடம் - முலையினிடத்தில் — பெருக - ஒழுக — மெய் - உடம்பு — சோர்ந்தாள் - மெலிந்தாள் — எ-று. (கருத்து) தமயந்திசுவேதனை ஏனழுகிறாயெ னசுவேதன் நான் உன் தகப்பனுடைய தோழனென்றான் தமயந்தியழு தாள்-எ-ம். (௪)

கந்தவார்குழற்காரிகையழுதல்கேட்டிவட்குத்
தந்தையாரெவற்குரியளித்தனியளெனித்து
வந்தவாறெவனிவளைநீயுணர்ந்ததெவ்வாறென்
றந்தணாளனைவினவினள்சுவாகுவையளித்தாள்.

(இ-ன்) கந்தம் - வாசனைபொருந்திய — வார் - நீண்ட — குழல் - கூந்தலையுடைய — காரிகை - தமயந்தியானவள் — அழுதல் - துன்பப்படுதலை — கேட்டு - (சுநந்தையால்) கேள்விப்பட்டு(வந்து) — இவட்கு - இப்பெண்ணினுக்கு — தந்தையார் - தகப்பன்யார் — இத்தனியள் - இப்பெண்ணானவள் — எவற்குரியள் - எவனுக்குமனையாள் — தனித்துவந்தவாறு - தனித்துவந்திரமம் — எவன் - யாது — இவளை - இப்பெண்ணை — நீயுணர்ந்தது — நீயறிந்தது — எவ்வாறென்று - இப்படியென்று — அந்தணாளனை - சுவேதனை — சுவாகுவையளித்தாள் - சேதிதேயத்தரசனைப் பெற்ற தாயானவள் — வினவினள் - கேட்டாள் — எ-று. (கருத்து) சேதுபதிதாய் தமயந்தி அழுதலைக்கேட்டு இவட்குத் தகப்பனார் கணவனார் என்றுபிராமணனைக்கேட்டாளென்பதாம். (௫)

மாதுகேட்டியிம்மடவரல்விதர்ப்பர்கோன்புதல்வி
காதலாயகனிடதர்கோனவனிமுழுதுஞ்
சூதினாலிழந்திவளையுங்கானிடைத்துறந்தா
னாதலாலிவட்டேடெனவிதர்ப்பர்கோனறைந்தான்

(இ-ன்) மாது - அரசனதுதாயே — கேட்டி - கேள் — இம்மடவரல் - இப்பெண் — விதர்ப்பர்கோன் - வீமராசனது — புதல்வி - குமாரத்தி — காதல் - அன்பினையுடைய — நாயகன் - (இவட்குக்) கணவன் — நிடதர்கோன் - நளமகாராசன் — (அவன்) அவனிமுழுதும் - பூமிமுழுவதும் — சூதினால் - சூதாட்டத்தால் — இழந்து - தோற்றுவிட்டு — இவளையும் - இத்தமயந்தியையும் — கானிடை - காட்டில் — துறந்தான் - விடுத்தான் — ஆதலால் - ஆகையால் — இவள் - இவளை — தேடென - தேடுவீரென்று — விதர்ப்பர்கோன் - வீமராசன் — அறைந்தான் - உத்தரவுகொடுத்தான் — எ-று. (கருத்து) பிராமணன் அரசியே, இப்பெண்வீமராசன் மகள் - இவள்கணவன் நளன் - அவன் சூதாட்டத்தால்நாடிழந்து மனைவியைக்காட்டில் விடுத்தான் - இவளைத்தேடென வீமனுத்தரவுகொடுத்தான்-எ-ம். (௬)

தேண்டியெங்கணுங்கண்டிலன்றிருவையின்மனையிற்
காண்டல்செய்தனனகன்மலர்ப்பழுத்தமென்மொழியாள்
மாண்டவேலெழில்வாணுதல்வயங்கியமறுவால்
மீண்டுணர்ந்தனன்யானெனமறையவனிசைத்தான்

(இ-ன்) எங்கணும் - எவ்விடத்திலும் — தேண்டி - தேடி — திருவை - இலட்சுமியையொத்ததமயந்தியை — கண்டிலன் - காணாதவனாய் — நின் ம

னையில்-உன்மாளிகையில்—காண்டல்செய்தனன்-கண்டேன்—கன்னல்-கரும்பினும்—பழுத்த-முதிர்ந்த—மென்மொழியாள் - இனியவசனத்தையுடையஇந்தமயந்தியினது—மாண்ட - மாட்சிமைப்பட்ட — பேரெழில் - மிகுந்தஅழகுதங்கிய—வாணுதல் - ஒளிபொருந்தியநெற்றியில்—வயங்கிய-விளங்கிய—மறுவாம்-மச்சையினால்—கண்டு - இவ்விடத்தில்—யான்-நான்—உணர்ந்தனன்-(இன்னவளென்று)அறிந்தேன்—என்-என்று—மறையவன்-சுதேவனென்னுமறையவன்—இசைத்தான் -சொன்னான்—எ-று. (கருத்து) சுதேவன் தமயந்தியை நெற்றிமச்சையினாலறிந்தேனென்றான்-எ-ம். (எ)

அதுவிளத்தலுமணிநுதன்மாசினையகற்ற
கதிரொறித்தவிற்கண்வழுக்குற்றனகூச
மதிநுதற்புறத்திலகியமறுவினைநோக்கித்
ததைமலர்க்குழற்றமயந்தியிவளெனவுணர்ந்தாள்.

(இ-ள்) அது-அச்செய்தியை—விளத்தலும்-சொன்னவளவில்—அணிநுதல்-அழகியநெற்றியிலுள்ள—மாசினை - அழுக்கை—அகற்ற-போக்க—கதிரொறித்தவில்-ஒளிவிடுகின்றமையால்—கண் - நேத்திரங்கள்—வழுக்குற்றன-பிறழ்ந்தனவைகளாகி—கூச-அஞ்ச — மதிநுதற்புறத்து-பிறைபோன்றநெற்றியினிடத்து—இலகிய - பிரகாசித்த—மறுவினை-மறுவை—நோக்கி-பார்த்து—இவள்- இப்பெண்—ததைமலர்க்குழல்-நெருங்கியமலர்களையணிந்தகூந்தலையுடைய—தமயந்தி- தமயந்தியே—என்-என்று—உணர்ந்தாள்-(அரசனன்னை) அறிந்தாள்—எ-று. (கருத்து)அரசன்தாய் மறுவினாலேதமயந்தியென்றறிந்தாள்-எ-ம். (அ)

விணைமலர்க்குழன்மங்கைநின்னனையும்யானும்
புணைகருங்கழற்சுதாமன்றன்புதல்வியராவே
மெனவுமன்னைதனிணைமலர்ச்சிறடிமிசைதஞ்சிக்
கனைகருங்கடல்கடைபுரண்டாலெனக்கலுழ்ந்தாள்.

(இ-ள்) விணைமலர்க்குழல் - பூமாலையணிந்தகூந்தலையுடைய— மங்கை-தமயந்தியே—நின்னன்னையும்-உனதுதாயும்—யானும்- நானும்—புனை-தரிக்கப்பட்ட—கரும்-பெருமைதங்கிய — கழல்-வீரக்கழலையணிந்த—சுதாமன்றன்-சுதாமாசனுடைய—புதல்வியராவோம் - புத்திரிகளாவோம்—எனவும்-என்று(அரசனன்னை)சொன்னவளவில் —அன்னைதன் -அப்பெரியதாயினது—இணை-இரண்டு—மலர் - தாமரைமலரையொத்த—சிறடிகளில்—இறைஞ்சி-காலைப்பிடித்து—கனை - சத்தியாநின்ற—கருங்கடல்-கறுத்தகடலானது —கரைபுரண்டாலென-கரைபுரண்டதுபோல—கலுழ்ந்தாள்-(தமயந்தி) அழுதாள்—எ-று. (கருத்து) சேதிபதிதாய் தமயந்தியுடனாயுன்தாயுமென்னுடன்பிறந்தவளென்றழுதாள்-எ-ம். (கூ)

இன்னனென்றெனையுணர்வதன்முன்னமீன்ற
வன்னையாமெனவளித்தனையன்புமீக்கூர



மன்னுமென்னுயிர்மக்களைக்காண்பதற்கெந்தை
பொன்னகர்க்கெனைவிடுத்தியென்றின்னுரைபுகன்றாள்.

(இ-ள்)எனை-என்னை—இன்னளென்று-இத்தன்மையளென்று—உணர்வதன்முன்னமும் - அறிவதற்குமுன்பும்—ஈன்ற-பெற்ற—அன்னையாமென-தாயானவளென்னும்படி—அன்புமீக்கூர -ஆசைமிக — அளித்தனை-இரக்ஷித்தாய்—மன்னும் - அவ்விடத்திற்பொருந்தியிருக்கின்ற—என்னுயிர்மக்களை-என்னுடையஉயிர்போன்றபிள்ளைகளை— காண்பதற்கு-பார்ப்பதற்கு—எந்தை-என்பிதாவினது—பொன்னகர்க்கு- அழகியகுண்டினபுரத்திற்கு—எனைவிடுத்தி - என்னையனுப்பு — என்று-என்று—இன்னுரை-இனியசொற்களை —புகன்றாள்- (தமயந்தி)சொன்னாள்—எ-று. (கருத்து) என்னைஇன்னளென்றறியுமுன்னமே அன்னையைப்போலுங்காப்பாற்றினைஎன்மக்களைக்காணவேண்டுமென்பிதாவினிடத்துக்கனுப்புளன்றாள்.எ-ம். (ய)

உரைசெய்மாற்றமோர்ந்தாளுயிருருகுறத்தழுவிக்
கரைசெய்வேலையிற்கருந்தடங்கண்கணீருகுப்ப
வெரிமணிப்பொலஞ்சிவிகையினிருள்கனிந்தொழுகும்
விரைசெய்கோதையைவிதர்ப்பர்கோனகர்வயினவிடுத்தாள்,

(இ-ள்)உரைசெய்மாற்றம்- (தமயந்தி)சொல்லியவசனத்தை—ஓர்ந்து-அறிந்து — உள்-உள்ளில்—உயிர் -பிராணனை—உருகுற -உருகும்படி—தழுவி- அணைத்துக்கொண்டு —கரைசெய் - கரையைச்செய்யாநின்ற—வேலையில்-சமுத்திரம்போல—கரும்-கறுத்த—தடம் - விசாலமாகிய—கண்கள்-நேத்திரங்கள்—நீர்-நீரை —உகுப்ப-சொரிய—எரி -பிரகாசிக்கின்ற — மணி-இரத்தினங்கள்பதித்தபொலன்சிவிகையில்- பொற்பல்லக்கின்மீது—இருள்கனிந்து - இருள்முதிர்ந்து—ஒழுகும் ஒழுகாநின்ற—விரைசெய் - வாசனைபொருந்திய—கோதையை - அளகபாரத்தையுடைய தமயந்தியை, விதர்ப்பர்கோன்-வீமராஜனது —நகர்வயின்-குண்டினபுரத்தில் — விடுத்தாள்-அனுப்பினாள்—எ-று (கருத்து)பெரியதாயானவள் தமயந்தியை முத்துச்சிவிகையிலேற்றிக்குண்டினபுரத்—துக்கனுப்பினாள்-எ-ம். (யக)

கொள்ளைவண்டினங்கூட்டுணுநறுமலர்க்கோதை
யள்ளலங்குழுச்சேற்றிடையாக்கிதழ்விரித்த
வள்ளவாய்ச்செழுங்கமலமேயமடவனத்துயில்கூர்
வெள்ளநீர்வயல்விதர்ப்பர்கோனகாமேயினளால்.

(இ-ள்)கொள்ளை-மிகுந்த—வண்டினம்-வண்டுக்கூட்டங்கள்—கூட்டுணும் (தேனைக்)கொள்ளையிடும்படியாகிய—நறுமலர் - வாசனைபொருந்திய மலர்களையணிந்த— கோதை - கூந்தலையுடையதமயந்தியானவள் —அள்ளல்-குழைந்த— அம்-அழகிய—கரு-கரிய—சேற்றிடை - சேற்றிலுண்டாகிய —அரக்கிதழ் - செவ்விதழ்கள்—விரித்த- மலர்ந்த—வள்ளவாய் -கிண்ணம்போன்ற வாயையுடைய—செழும்- செழித்த—கமலமேல்-தாமரைமலரின்மேல் —மடவனம் - இளவன்னங்கள்— துயில்

கூர்-மிக்கிறைசெய்கின்ற—வெள்ளநீர் - நீர்ப்பெருக்கையுடைய—வயற் கழனிகளையுடைய—விதர்ப்பர்கோன் - விதர்ப்பதேயத்தரசனாகியவீமராசனது—நகரம்-குண்டினபுரத்தை, மேயினள் அடைந்தாள்—எ-று. (கருத்து) தமயந்தி குண்டினபுரத்தைச்சார்ந்தாள்—எ-ம். (௰௨)

அழுதவுண்கணுமற்றமெல்லாடையுமலங்கற்
கழுமச்சூட்டுபுகைசெயாக்கருங்குழற்காடும்
விழியினுக்கலும்விதர்ப்பர்கோன்வெய்துயிர்த்தயர்ந்தான்
றழுவியன்னையருறுதுயர்சாற்றலாந்தகைத்தே

(இ-ள்) அழுத-அழுகையுற்ற—உண்கணும்-தமயந்தியினது மையுண்ட கண்களையும்—அற்ற - அறுபட்ட—மெல்லாடையும் - மென்மை பொருந்தியவுடைவையும்—அலங்கல் - மலர்மாலைகளை—கழும - நிறைய—சூட்டுபு-சூட்டி—கைசெயா-முடிக்காத,கருங்குழற்காடும் - கரியகூந்தற்காட்டையும்—விதர்ப்பர்கோன்-வீமராசனானவன் — விழியினுக்கலும்-கண்களாற்கண்டமாத்திரத்தில்—வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு—அயர்ந்தான்-சோர்ந்தான்—அன்னையர்- தாய்மார்கள்— தழுவி-தமயந்தியைத்தழுவிக்கொண்டு—உறுதுயர்-அடைந்த துன்பமானது, சாற்றலாம்-நம்மாற்சொல்லும்படியல்ல,தகைத்தே - தன்மையையுடையதோ—எ-று. (கருத்து) தமயந்தியைவீமராசன்கண்டுசோர்ந்தான் - தாய்மார்கள் தழுவியழுதார்கள்-எ-ம். (௰௩)

காட்டினள்ளிருட்காலையிற்காவலனீத்த
திட்டொணாவெழிற்றெரிவையைத்தேடினன்கொணர்ந்து
மூட்டுமுத்தழன்முறைமையின்வளர்த்திடுசுதேவன்
வேட்டயாவையுங்கொள்கெனவளித்தனன்வீமன்

(இ-ள்) காட்டில்-வனத்தில், நள்ளிருட்காலையில்-நடுராத்திரிகாலத்தில்—காவலன்-நளமகாராஜன்—நீத்த-விடுத்த—தீட்டொணா - எழுதக்கூடாத—எழில்-அழகுபொருந்திய,தெரிவையை-தமயந்தியை—தேடினன்-தேடி—கொணர்ந்த-கொண்டுவந்த—மூட்டு - மூட்டப்பட்ட—முத்தழல்-மூன்றக்கினிகளை—முறைமையில்-கிரமத்தினால் — வளர்த்திடும்-வளர்க்காநின்ற,சுவேதன் - சுவேதனென்னும்மறையவன்,வேட்ட-விரும்பிய,யாவையும்-எல்லாவற்றையும்,கொள்கென- பெற்றுக்கொள்ளென்று—வீமன்-வீமராசன்—அளித்தனன்-கொடுத்தான் — எ-று. முத்தழலாவது-தக்ஷிணாக்கினி-காருகபத்தியம்-ஆகவனீயம்-எ-ம்(கருத்து) வீமராஜன்சுவேதனுக்கு வேண்டியனகொடுத்தான்.எ-ம். (௰௪)

மக்கள்வாண்முகநோக்கியுமடவரனெஞ்சம்
நெக்குவாடுதல்கண்டநற்றாயுளநெகிழ்ந்து
கக்குசெந்தழற்காலவேற்காதலற்குறுகி
நக்கபூங்கழனளனையுநாடுகென்றுரைத்தாள்.

(இ-ள்) மக்கள்-பிள்ளைகளினது—வாண்முகம் - ஒளிபொருந்திய முகத்தை—நோக்கியும்-பார்த்தபின்பும்—மடவரல்- தமயந்தியினது— நெஞ்சம்-மனமானது—நெக்குவாடுதல்-நெகிழ்ந்துவாடுதலை— கண்ட-



பார்த்த—நற்றாய்-சனநதாயானவள்— உளநெகிழ்ந்து - மனமுருகி—கக்கு-கக்கப்பட்ட—செந்தழல்-சிவந்தஅக்கினிபொருந்திய —கால - இயமனையொத்த—வேல் - வேலாயுதத்தையேந்திய—காதலற்கு - தன்னாயகனாகியவீமராசனை—குறுகி-கிட்டி—நக்க—நக்கபூங்கழல்-விளங்குகின்ற அழகியவீரக்கழலையணிந்த—நளனையும்-நளமகாராசனையும் — நாடுகென்று-தேடுகவென்று—உரைத்தாள்-சொல்லினாள்—எ-று. (கருத்து) சாருகாசனிகளனையும் தேடும்படி வீமனுக்குச்சொன்னாள்-எ-ம். (௰௫)

ஓடரிக்கணாளுரைத்தலுமொற்றரைக்கூவி
யாடகப்பசும்பொலன்கழனளனைநீராய்ந்து
தேடுமின்னென்றரசர்கோன்றிசைதொறுஞ்செலுத்த
நாடினாரவர்கடல்வரைப்பெலாநடந்தே.

(இ-ள்) ஓடரிக்கணாள்-நீண்ட அரிபரந்த கண்களையுடையதமயந்தியானவள்—உரைத்தலும் - சொன்னமாத்திரத்தில் — ஒற்றரை-வேவுகாரரை—கூவி-அழைத்து—ஆடகம்-பொன்னாலாகிய, பசும் - பசுமையாகிய—பொலன்-அழகிய— கழல்வீரக்கழலையணிந்த — நளனை-நளமகாராசனை—நீர்-நீங்கள்—ஆய்ந்து-ஆராய்ந்து—தேடி - திரிந்துபார்த்து—என்மின்-வாருங்கள்—என்று-என்றுசொல்லி — அரசர்கோன்-வீமராஜன்—திசைதொறும்-எட்டுத்திக்கிலும்—செலுத்த - அவர்களை அனுப்ப—அவர்-அவ்வேவுகாரர்—கனி - குளிர்ச்சிபொருந்திய—கடல் வரைப்பெலாம்-சமுத்திரஞ்சூழ்ந்தபூமண்டல முழுமையும்—நடந்து - திரிந்து—நாடினார் - தேடினார்கள்—எ-று. (கருத்து) வீமராஜன் நளனைத் தேடும்படிவேவுகாரர்களுக்குக் கட்டளையிட்டான்-எ-ம், (௰௬)

அருகுமொற்றரிலொருவன்மீண்டணங்கின்முன்றோன்றி
யரிவைமூதெயிலயோத்திமாநகரினிலடைந்தேன்
புரிகருங்குழன்மனைவியைப்போக்கினன்புலம்பு
மொருவனிவ்வழியுண்டுகொலெனவினவினனால்.

(இ-ள்) அருகும்-தேடுகிற—ஒற்றரில்-வேவுகாரருள்—ஒருவன்-பருணாதனென்னுமொருவேவுகாரன்—மீண்டு-திரும்பிவந்து — அணங்கின்முன்-தமயந்தியின்முன்னிலையில்— தோன்றி-நின்று — அரிவை-இராஜகுமாரத்தியே—மூது-பழைய—எயில்-மதில்சூழ்ந்த—அயோத்திமாநகரில்-அயோத்தியாபுரியில் —அடைந்தேன்-சென்றேன்—புரி - விரும்பப்பட்ட—கருங்குழல்-கரியகூந்தலையுடைய— மனைவியை - மனையாட்டியை—போக்கினன்-விடுத்தவனாகி—புலம்பும் - அன்பப்படுகின்ற—ஒருவன்-யாவனாயினுமொருவன்—இவ்வழி- இத்தப்பட்டணத்தில், உண்டுகொல்-உண்டோ—என-என்று—வினவினன்-விசாரித்தேன்—ஆல் அசை (கருத்து) பருணாதனென்னும்வேவுகாரன் தமயந்திமுன்வந்து அயோத்தியில் மனைவியை நீங்கினவனுண்டாவெனக் கேட்டேன் எ-ம். (இதுமுதல்மூன்றுபாட்டுங் குளகம்.) (௰௭)

ஓகையோடெனக்கொருவனங்குளங்கவிழ்ந்துநின்று
வாகைவெஞ்சிலையிருதுபன்னன்றுயர்மான்றேர்ப

பாகன்கொய்யுளைப்பரியுள்தேர்பவனொருவன்
றோகையைப்பிரிந்தாருருழப்பவன்சோர்வான்.

(இ-ள்) ஓகையோடு-அன்புடனே — எனக்கு-எனக்கு — ஒருவன் ஒருமனிதன் — ஆங்கு-அவ்வயோத்திநகரில் — உளங்கனிந்து - மனங்கனிந்து — ஆருதி-கனிந்து — வாகை-வெற்றிமாலையணிந்த — வெஞ்சிலை-வெவ்வியவில்லையேந்திய — இருதுபன்னற்கு-இருதுபன்னவரசனுக்கு — உயர்மான்தேர்-உயர்ந்தகுதிரைகட்டியதேரைநடத்துகின்ற — பாகன்-சாரதியும் — கொய்யுளை-கொய்துகட்டிய புறமயிரினையுடைய — பரி-குதிரைகளினது — உளம்-மனதை — தேர்பவன் - அறிபவனும் — ஒருவன்-தனித்தவனும் — தோகையை-மனையாளை — பிரிந்து - பிரிவுற்று — ஆறாருழப்பன்-மிகுந்ததுன்பப்படுகின்றவனும் — சோர்வான்- சோர்வையடைகின்றவனும் — எ-று. (கருத்து) அங்கொருவன் இருதுபன்னனுக்குத்தேர்ப்பாகன்மனைவியைப் பிரிந்துசோர்பவன்-எ-ம். (௰அ)

அழலிலாதுணவமிர்தெனவடுந்தொழில்புரிவோன்
மழுகளிற்றினன்னடையினன்வாகுவனென்போ
னெழுவுலாந்திணிதோளினனீங்குளனென்ன
வொழுகுபூங்கொடிமருங்குலாயுணர்ந்தனன்வந்தேன்.

(இ-ள்) அழலிலாது-நெருப்பில்லாமல் — உணவு-உண்டியை — அமிர்தென-அமுதமென்னும்படி — அடுந்தொழில் - சமைத்தலை,புரிவோன்-செய்வானும் — மழுகளிற்றின்-இளமைதங்கியயானைபோல — நன்னடையினன்-நல்லநடையையுடையவனும் — வாகுவனென்போன்-வாகுவனென்னும்பெயரையுடையவனும் — எழுவுலாம் - தூண்போலுலாவுகின்ற — திணி-வலிமைபொருந்திய — தோளினன் - தோள்களையுடையவனுமாயொருவன் — ஈங்கு-இந்நகரத்தில் — உளன் - இருக்கின்றான் — என்ன-என்றுசொல்ல — ஒழுகு-தேனொழுகுகின்ற — பூங்கொடி-புஷ்பக்கொடியையொத்த — மருங்குலாய் - இடையையுடைய தமயந்தியே — உணர்ந்தனன்-இச்செய்தியறிந்தவனாகி,வந்தேன் - இவ்விடம்வந்தேன் என்றான் — எ-று.(கருத்து)அக்கினியில்லாதுசமைப்பவன் இருக்கிறானென்றுகேட்டுவந்தேனென்றான் என்பதாம். (௰௯)

வீமன்தேடவிட்டபடலம் - முற்றுப்பெற்றது.

உ

# கலிநீங்குபடலம்.

இப்படலத்தால் நளனிடத்தில்பொருந்திவருத்தியிருந்த கலியன் நளன் அக்ஷவித்தையறிந்தபின் னவனிடத்தில் நில்லாது விட்டுநீங்குதல் சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

என்றுகூறியவந்தணற்கிருநிதிவழங்கி
நன்றுநின்னுரையின்னமுமயோத்தியினண்ணி
மன்றன்மாலைவேலிருதுபன்னற்குளமகிழ்வ
தொன்றுகூறுவதுளதெனவுரைத்தனன்மயிலனாள்.

(இ-ள்) என்றுகூறிய-இப்படியென்றுசொல்லிய — அந்தணற்கு-ஒற்றனாய்ச்சென்றபருணாதனென்னும்பிராமணனுக்கு — இருநிதி- மிகுந்தநிதிகளை — வழங்கி-கொடுத்து — நின்னுரை-உன்சொற்கள் — நன்று நல்லது — இன்னமும்-மறுபடியும் — அயோத்தியினண்ணி-அயோத்திநகரத்திற்பொருந்தி — மன்றல்-வாசனைபொருந்திய,மாலை - பூமாலையையணிந்த — வேல்-வேலாயுதமேந்திய — இருதுபன்னற்கு-இருதுபன்னமகாராஜனுக்கு — உளமகிழ்வது-மனங்களிப்பதாகிய — ஒன்றுகூறுவது-ஒன்றுசொல்லத்தக்கது — உளது-உண்டு — என-என்று — உரைத்தனன்மயிலனாள் - சொல்லினாள் — எ-று. (கருத்து) தமயந்தி பிராமணனுக்குப்பொருள் கொடுத்துஇருதுபன்னனுக்குச்- சொல்லவேண்டியதொன்றுண்டென்று சொல்லத்தொடங்கினாள் என்பதாம். (௧)

நாட்டமூன்றுடைநாயகன்வரத்தினானங்கை
மீட்டுங்கன்னிகையாயினள்சுயம்வரம்விழைந்தாள்
கேட்டுமாநிலக்கிழவருமவ்வழியிறுத்தார்
பூட்டுவார்சிலைமன்னநீபோதியேற்போவாய்.

(இ-ள்) நாட்டமூன்றுடை-திரிநேத்திரந்தரித்த — நாயகன் - பரமசிவனது — வரத்தினால்-அனுக்கிரகத்தினால் — நங்கை - தமயந்தியானவள் — மீட்டும்-மறுபடியும் — கன்னிகையாய்-கன்னிகாப்பெண்ணாகி — சுயம்வரம்-சுயம்வரத்தை — விழைந்தாள்-விரும்பினாள் — கேட்டு - அச்செய்திகேட்டு — மாநிலக்கிழவரும்-அரசர்களும் — அவ்வழி - அவ்விடத்தில் — இறுத்தார்-வந்தடைந்தார்கள் — பூட்டு-நாணேற்றப்பட்ட — வார்சிலை-நீண்டவில்லையேந்திய — மன்ன -இருதுபன்னவரசனே — நீபோதியேல்-நீபோவையானால் — போவாய்-(வினாவிற்) போவாய் — எ-று.(கருத்து) இருதுபன்னனே தமயந்திஇரண்டாவது சுயம்வரத்தை யிச்சித்தாள்நீபோவையாகிற்போ என்பதாம். இதுமுதலிரண்டுங்குளகம் ()

நாளைநன்மணம்புணர்வு நீடு நாடளிக்குங்
காளையாருயிருளன்கொலோகழிந்தனன்கொல்லோ
ஆளிமொய்ம்பிறையென்னுநீயறைகெனவறைந்தாள்
வாளைவென்றரிபரந்துமைதோய்ந்தகண்மடவாள்

(இ-ள்) நாளை-நாளைத்தினத்தில்—நல்-நல்ல—மணம்-விவாகமானது—புணர்வது—செய்யப்படுவதாம்—நீடு நாடு-நீடநேயத்தை—அளிக்கும்-இரக்ஷிக்கானின்ற—காளை-நளமகாராசனென்கின்ற—ஆர்-நிறைந்த—உயிர்-பிராணனானது—உளன்கொலோ-இருக்கப்பெற்றதோ—கழிந்தனன்கொல்லோ-நீக்கப்பெற்றதோ—ஆளி-சிங்கத்தையொத்த—மொய்ம்பிறை-பலத்தையுடைய இருதுபன்னனே—என்று-என்று சொல்லி—நீயறைகென-நீசொல்லென்று—வாளை-வாளாயுதத்தை—வென்று-ஜயித்து—அரிபரந்து-செவ்வரிபரந்து—மைதோய்ந்த-அஞ்சனம்பொருந்திய—கண்-கண்களையுடைய—மடவாள்-தமயந்தியானவள்—அறைந்தாள்-சொன்னாள்—எ-று. (கருத்து) நாளை விவாக மெனச் சொல்லென்று சொன்னாள்-எ-ம். (ங)

சுருதிநூற்றுறைபோயவன் நனிவினிலெய்தி
யிருதுபன்னனையடைந்திவையாவையுமியம்ப
மருமலர்க்குழன்மன்றல்கேட்டுளமகிழ்வுற்
றுருவவாம்பரித்தேர்விடுவாகுவற்குரைப்பான்.

(இ-ள்) சுருதிநூல்-வேதசாஸ்திரங்களினது—துறை-மார்க்கத்தில்—போயவன்-சிறந்தவனாகியவேதியன்—நனிவினில்-சீக்கிரத்தில்—எய்தி-(அயோத்தியை)அடைந்து—இருதுபன்னனை-இருதுபன்னனென்னும் மகாராஜனை—அடைந்து-நெருங்கி—இவையாவையும்-இவையனைத்தையும்—இயம்ப-சொல்ல—மருமலர்-வாசனைபொருந்திய மலரையணிந்த—குழல்-கூந்தலையுடைய தமயந்தியினது—மன்றல்-விவாகமானதை—கேட்டு-கேள்வியுற்றமாத்திரத்தில்—உளம்-மனமானது—மகிழ்வுற்று-களிப்புற்று—உருவவாம்-வேகத்தையுடைய—பரி-குதிரைகட்டிய—தேர்விடும்-தேரைச்செலுத்தாநின்ற—வாகுவற்கு-வாகுவனென்னுஞ்சாரதிக்கு—உரைப்பான்-சொல்லுவான்-எ-று. (கருத்து) இருதுபன்னன் தேர்ப்பாகனுக்குச்சொல்லுவான்-எ-ம். (ச)

தளருநுண்ணிடைத்தமயந்திசுயம்வரநாளை
புனைவயப்பசும்புரவியினுள்ளமோர்ந்தனையேற்
றெளியுங்கேள்வியாய்விரைவினிற்செலுத்துகதேரொன்
றளிமுரன்றுறைபைந்தேனுகர்தாரினானுரைத்தான்.

(இ-ள்) தளரும்-தளர்ச்சியடையாநின்ற—நுண்ணிடை-நுட்பமான இடையையுடைய—தமயந்தி-தமயந்தியினது—சுயம்வரம்-சுயம்வரமானது—நாளை-நாளையதினத்தில் (நடக்கின்றது)—புனை-புறமயிரினையும்—வயம்-வெற்றியையுமுடைய,பசும்-பசுமையாகிய—புரவியின்-குதிரையினது—உள்ளம்-மனதை—ஓர்ந்தனையேல்-அறிவாயானால்—தெளியுங்கேள்வியாய்-தெளிவுபொருங்கேள்வியையுடையயாகுவனே—விரைவினில்-சீக்கிரத்தில்—தேர்-இரதத்தை—செலுத்துக-நடத்துக—என்று-என்றுசொல்லி—அளி-வண்டுகள்—முரன்று-சத்தித்து—பைந்தேன்-பசியதேனை—நுகர்-உண்ணும்படியான—தாரினான்-மாலையணிந்த இருதுபன்னமகாராசன், அறைந்தான்-சொன்னான்—எ-று (கருத்து) இருதுபன்னன் தேர்ப்பாகனை நாளை தமயந்திக்குச் சுயம்வரமாதலால் சீக்கிரந்தேரைச்செலுத்தென்றான்-எ-ம். (ரு)



கேட்டவாகுவன்கிளியெனமிழற்றுதீங்கிளவி
காட்டினீத்ததுநினைத்தனளாயினுங்கற்பு
நாட்டுகின்றவளித்திறம்புரியுமோநம்மை
கூட்டுதற்கிஃதிழைத்தனளாமெனக்குறித்தான்

(இ-ள்) கேட்ட-அச்சொல்லைக்கேட்ட—வாகுவன்-வாகுவனென்னும்பெயரினையுடையநளன்—கிளியென-கிளிபோல—மிழற்று-சொல்லப்பட்ட—தீங்கிளவி-மதுரமானசொற்களையுடைய தமயந்தியானவள்—காட்டின்-காட்டினுள்—நீத்தது-விடுத்ததை—நினைத்தனளாயினும்-(விரோதமாக)நினைத்தாளாயினும்—கற்பு-பதிவிரதத்தை—நாட்டுகின்றவள்-நிலைநிறுத்துகின்ற அவள்—இத்திறம்-இவ்வண்ணமாக—புரியுமோ-செய்வாளோ (செய்யாள்) ஆயினும்—நம்மை-நம்மை—கூட்டுதற்கு-சேர்த்தற்கு—இஃதிழைத்தனள்-இதுசெய்தாள்—என-என்று—குறித்தான்-கருதினான்—எ-று. (கருத்து) நளன் தன்னைவரவழைக்க இவ்வாறுசெய்தாளென்றுநினைத்தான்-எ-ம். (சு)

கொறில்வயப்பரித்தேர்பண்ணிகொய்தினிற்கொணரா
வெறுழ்வலித்தடந்தோளினைத்தேர்மிசையிவரி
னறுமலர்ப்பசும்பூந்தொடைவிதர்ப்பர்கோனாட்டி
லுறுவலிப்பகல்கழிவதன்முன்னெனவுரைத்தான்.

(இ-ள்) கொறில்-வேகமும்—வயம்-வெற்றியும்பொருந்திய—பரி-குதிரைகட்டிய—தேர்-இரதத்தை—பண்ணி-அலங்கரித்து—கொய்தினில்-சீக்கிரத்தில்—கொணரா-(வாகுவன்)கொண்டுவந்து—எறுழ்வலி-மிகுந்தவலிமைபொருந்திய—தடந்தோளினைய-பருத்ததோட்களையுடைய இருதுபன்னவரசனே—தேர்மிசை-தேரின்மேல்—இவரில்-ஏறிக்கொள்வையாகில்—நறுமலர்-வாசனைபொருந்திய மலர்களைத்தொடுத்த—பசும்-குளிர்ந்த—பூந்தொடை-அழகியமாலைகளையணிந்த—விதர்ப்பர்கோன்-வீமராசனது—நாட்டில்-தேசத்தில்—இப்பகல்-இன்றையதினம்—கழிவதன்முன்-நீங்குவதற்குமுன்னமே—உறுவல்-அடைவேன்—என-என்று—உரைத்தான்-சொன்னான்—எ-று. (கருத்து) தேர்ப்பாகனாகியநளன் தேரைக் கொண்டுவந்து அரசனே நீ ஏறினால் பொழுது போமுன் விதர்ப்பதேசத்தில் கொண்டுபோய்விடுவேனென்றான் என்பதாம். (எ)

என்றுகூறலுமினக்கதிர்ப்பரிதிபோலிறைவன்
குன்றுபோலுயர்கொடிஞ்சியந்தேர்மிசைக்கொள்ள

நின்றயாவரும்வியப்புறநினைவருங்கடுப்பின்
மன்றல்தொடைவாகுவன்வாம்பரிவிடுத்தான்.

(இ-ள்.) என்றுகூறலும்-இப்படிசொன்னமாத்திரத்தில்—இளங்கதிர்ப்பரிதிபோல்-பாலசூரியன்போல—இறைவன் - இருதுபன்னவரசன்—குன்றுபோல்-மலைபோல்—உயர்-உயர்ந்த—கொடிஞ்சி-மேற்பாப்பையுடைய—அந்தேர்மிசை-அழகியதேரினில்—கொள்ள - ஏறிக்கொள்ள—நின்றயாவரும்-பார்த்திருந்த அனைவரும்—வியப்புற - ஆச்சரியப்பட—நினைவரும்-எண்ணுதற்கரிய—கடுப்பின் - வேகத்தினால்—மன்றல்-வாசனைபொருந்திய—அந்தொடை-அழகியமாலையணிந்த — வாகுவன்-பாகுகனென்பவன்—வாம்பரி-தாவாநின்ற குதிரைகளை — விடுத்தான்-நடத்தினான்—எ-று. (கருத்து) இருதுபன்னன்தேரிலேற வாகுகன் தேரைவிடுத்தான்-எ-ம். (அ)

விடுத்தவாம்பரிவருந்தலுமெய்த்தவர்தனக்குக்
கொடுத்தவிஞ்சையைக்கொய்யுளைப்பரியொடுங்கூறக்
கடுப்பையாவருமுணர்ந்திலர்கால்விசைத்தோடி
யடுத்தவார்கழல்விதர்ப்பர்கோனணிகெழுநாட்டில்.

(இ-ள்) விடுத்த-செலுத்தப்பட்ட—வாம்பரி-தாவாநின்ற குதிரைகள்—வருந்தலும்-வருந்துவளவில்—மெய்த்தவர் - முனிவர்கள்—தனக்குக்கொடுத்த-தனக்குபதேசித்த—விஞ்சையை-மந்திரத்தை — கொய்-கொய்துகட்டிய,உளை-பிடரிமயிரினையுடைய,பரியொடும்-குதிரையோடும்—கூற-உபதேசிக்க—கடுப்பை(தங்கள்)வேகத்தை—யாவரும் — எவரும்—உணர்ந்திலர்-அறிந்திலர்—(அப்படி) கால்விசைத்து-கால்களைவீசி—ஓடி-சென்று—வார்கழல் - நீண்டவீரக்கழலையணிந்த — விதர்ப்பர்கோன்-வீமராசனது—அணிகெழும் - அழகுபொருந்திய— நாட்டில்-தேயத்தில்—அடுத்த-சேர்ந்தன—எ-று. (கருத்து) குதிரைகள் விதர்ப்பதேயத்தைச்சேர்ந்தன-எ-ம். (௯)

கூர்ந்தமாவுளமறிதலிற்சாலிகோத்திரனோ
வாய்ந்தகேள்வியின்மாதலியோவன்றிநளனோ
வேந்தல்வேற்றுருவெடுத்தனனோவெனவெண்ணி
வேந்தர்வேந்தனுமணிமுடிதுளக்கினன்வியந்தான்.

(இ-ள்) கூர்ந்த-மா-புரவியினையுடைய குதிரைகளினது—உளம்-மனத்தை—அறிதலின்-உணர்வதில்—சாலிகோத்திரனோ - சாலிகோத்திரமுனிவனோ—(அன்றி)வாய்ந்தகேள்வியின் - பொருந்தியகேள்வியையுடைய—மாதலியோ-இந்திரசாரதியோ—அன்றி - அல்லவாகில் — நளனோ-நளமகாராசனோ—ஏந்தல்-அரசன்—வேற்றுருவெடுத்தனனோ—எனவெண்ணி - என்றுநினைத்து—வேந்தர்வேந்தனும்-இருதுபன்னராசனும்—மணிமுடி - இரத்தினகிரீடத்தை—துளக்கினன்-அசைத்தவனாய்—வியந்தான் - சந்தோஷித்தான்—எ-று. (கருத்து) இருதுபன்னன் சாலிகோத்திரனோ இந்திரசாரதியோ நளனோ என்றெண்ணி யதிசயித்தான்-எ-ம். (௰)



முத்தவெண்குடைவேந்தர்கோன்முழவுறழ்தடந்தோ
ளுத்தரீயமந்நெறியிடைவீழ்தலுமுணர்ந்து
தத்துவாம்பரிநிறுவியத்துகிறருகென்னப்
பத்தியோசனைகடந்ததுதேரெனப்பகர்ந்தான்.

(இ-ள்) முத்தவெண்குடை - முத்தினாற்செய்த வெள்ளைக்குடையைத்தரித்த—வேந்தர்கோன்-இருதுபன்னவரசனானவன் — முழவுறழ்-மத்தளத்தையொத்த—தடந்தோள் - பருத்ததன்தோள்களினின்று—உத்தரீயம்-அங்கவஸ்திரமானது—அந்நெறியிடை - அந்தமார்க்கத்தில்—வீழ்தலும்-வீழ்ந்தமாத்திரத்தில்—உணர்ந்து - தெரிந்துகொண்டு—தத்துவாம் - தாவியோடுகின்ற—பரி-குதிரைகளை — நிறுவி-நிறுத்தி—அத்துகில்-அந்தஅங்கவஸ்திரத்தை,தருகென்ன - தாவென்றுகேட்க—தேர் - இரதமானது—பத்தியோசனை-பத்துயோசனைதூரம்—கடந்தது - கடந்துவந்தது—என-என்று—பகர்ந்தான் (பாகுகன்)சொன்னான்—எ-று.(கருத்து) இருதுபன்னன் அங்கவஸ்திரம்விழுந்ததுஎடுவென. சாரதிபத்துயோசனைசென்றதுஎன்றான்-எ-ம். (௰௧)

இன்னவாய்மைகேட்டரசனும்வியப்புடனேகப்
பின்னுமையிருகாவதமகன்றதற்பின்னர்
முன்னர்த்தோன்றியதளியினம்பெடையொடுமூசப்
பொன்னெனத்தாதுகுநறுணர்ப்பொரியரைத்தான்றி

(இ-ள்) இன்னவாய்மை-இந்தஉண்மையானவசனத்தை—கேட்டு-கேள்விப்புற்று—அரசனும் - இருதுபன்னவரசனும்— வியப்புடன்-ஆச்சரியத்துடனே—ஏக-போக—பின்னும்-பின்பும்—ஐயிருகாவதம் - பத்துக்காதவழி—அகன்றதற்பின்னர்-சென்றபின்பு—அளியினம் - வண்டுக்கூட்டங்கள்—பெடையொடும் - பெட்டைவண்டுகளுடனே—மூச-மொய்க்கப்பெற்ற—பொன்னெனம்-பொன்போலழகிய—தாது-மகரந்தப்பொடிகள்—உகு-உதிரப்பெற்ற—நறுணர் - புஷ்பக்கொத்துக்களையும்—பொரியரை-பொருக்கெடுத்த அரையையுமுடைய — தான்றி-தான்றிமரமானது—முன்னர் - எதிரில்—தோன்றியது-காணப்பட்டது—எ-று(கருத்து)தான்றிமரமொன்றுகாணப்பட்டது-எ-ம். (௰௨)

தான்றிமாமரந்தோன்றலுந்தெரிந்திரதந்தகைத்துத்
தோன்றுமிம்மரத்திலைகளுங்கொக்கமென்பழனு
மூன்றுகோடியேமுப்பதிற்றிரண்டெனமொழிய
வான்றகேள்வியோனெண்ணியுற்றுமெனவியந்தான்.

(இ-ள்) தான்றிமாமரம்-பெரியதான்றிமரமானது—தோன்றலும்-காணப்பட்டவளவில்—தெரிந்து-இரதத்தை—தகைத்து-இருதுபன்னவாசனிறுத்தி—தோன்றும்-காணப்படுகின்ற—இம்மரத்து - இந்தமரத்தில்—இலைகளும்-இலைகளும் — கொக்கமென்பழனும்-நெருக்கியமென்மையான பழங்களும்—மூன்றுகோடியே முப்பதிற்றிரண்டென-இரண்டுதொகைவிட்ட முப்பதைமேற்கொண்ட மூன்றுகோடியென — மொழிய - சொல்ல—ஆன்றகேள்வியோன் - நிறைந்தகல்வியையுடை

யாளமகாராசன் — என்னவி - ஆம்மரத்தைத்தனிலே முதலியவற்றைக்கணக் கிட்டு — அற்றும்-சொல்லுமத்தன்மைத்தாம் — என-என்று கூறி- வியந்தான்-(அக்கணக்காிவினி-லாச்சரியப்பட்டான் — எ-று. (கருத்து) இருடபன்னன் தான் மரத்தினிலைகளுக்களைக் கூறுகோடியும் அறுபத்தாறும் என்று சொல்ல சாரதியெண்ணிய திசயித்தான்-எ-ம். (௰௩)

இனையவித்தைசயத்தெனக்குநீயளித்தனையென்னின்
றுனைவயப்பரிபுளமுணர்வித்தைசயான்சொல்வன்
வனைபொலன்கழன்மணிமுடிமன்னனென்றுளைப்ப
வனையவித்தைசையவ்வாகுகற்களித்தனனென்றே.

(இ-ள்) இனையவித்தைசை - இத்தன்மையாகியவித்தையை — எனக்கு-என்றனக்கு — நீயளித்தனையென்னின்-நீகொடுப்பாயானால் — துனைவேகம்பொருந்திய — வயம்-வெற்றியையுடைய — பரி - குதிரைகளின் — உளம்-மனதை — உணர்வித்தைசை-அறியும்வித்தையை — வனை-கட்டப்பட்ட — பொலன்கழல்-பொன்னாற்செய்த வீரக்கழலையும் — மணிமுடி - நவரத்தினம்பதித்த கிரீடத்தையும் தரித்த — மன்னன - இருடபன்னவரசனே — யான்-நான் — சொல்வன்-(உனக்குச்) சொல்வேன் — என்றுரைப்ப-என்றுவாகுகன்சொல்ல — அனையவித்தையை - அந்தவித்தையை — வாகுகற்கு-பாகுகனுக்கு — அளித்தனன் (இருடபன்னவரசன்) கொடுத்தான் — எ-று. அந்தவித்தையானதுஎணிக்கும் வித்தைக அறுபதிலொருவித்தையாம் (கருத்து) சாரதி இந்தவித்தையை எனக்குக் கொடும் குதிரைகளுளத்தையறியும்வித்தையை உனக்குக்கொடுப்பேனென்றான் இருடபன்னன்சாரதிக்குக்கொடுத்தான்-எ-ம். (௰௪)

இருதுபன்னனவ்வித்தைசையைவாகுகற்கீய
மருவிநின்றவன்கலிதனைக்கிடவிவாளரவின்
னெரிசெய்வெவ்விடங்கான்றவினிதயகெக்குருவி
வெருவிவாய்விடாவிடத்தினையுமிழ்ந்தனனன்றே.

(இ-ள்) இருதுபன்னன்-இருதுபன்னவரசன் — அவ்வித்தைசையை-அக்கணக்குவித்தையை — வாகுகற்கு- வாகுகனெனியவனுக்கு — ஈய-கொடுக்க — மருவிநின்ற-(நளனை) மருவியிருந்த — வன்கலி - வலிமையுள்ளகலியனெனவன் — தனைக்கிடவி-(நளமகாராசனை) விட்டுநீங்கப்போய — வாளரவு - ஒளிபொருந்தியகார்க்கோடகநாகமானது — எரிசெய்-தகிக்கின்ற — வெவ்விடம்-கொடியவிடத்தை — கான்றவில் (நளனிருந்தவிடத்தில்)கக்கினமையால் — இதயம்-மனமானது — நெக்குருகி - கரைந்துருகப்பெற்று — வெருவி-பயந்து — வாய்விடா வாய்விட்டு — விடத்தினை-(கார்க்கோடகனது) விஷத்தை — உமிழ்ந்தனன்ன - கக்கினான் — எ-று. அன்று-எ - அசைகள்-இன் - சாரியை (கருத்து) இருதுபன்னன் வித்தையைப் பாகுகனுக்குக் கொடுக்கச்சனிநளனைவிட்டுநீங்க விஷத்தைக்கக்கினன்-எ-ம். (௰௫)

தணந்தவெந்திறற்கலியனைச்சபித்துவனென்றுக்
கணங்கொளவண்டிமிர்தாரினனுளத்திடைக்கருத



லுணர்ந்தவெங்கலிதமயந்தியுரைத்தசாபத்தா
லணங்காரவுமிழ்விடத்தினலின்றளவயர்ந்தேன்.

(இ-ள்) தணந்த-தன்னைப்பிரிந்துநின்ற — வெந்திறல் - வெவ்வியபலத்தையுடைய — கலியனை-கலிபுருஷனை — சபிக்குவனென்று - சபிப்பேனென்று — கணங்கொள்-கூட்டங்கொண்ட — வண்டு - வண்டுகள் இமிர்-சத்தியாநின்ற — தாரினன் - மாலையையணிந்த நளமகாராஜன் — உளத்திடை-மனத்தினில் — கருதல் - நினைந்தலை — உணர்ந்த - அறிந்த — வெங்கலி-கொடியகலியனெனவன் — தமயந்தியுரைத்த-தமயந்திகொடுத்த — சாபத்தால்-சாபத்தினால் — அணங்கு-அச்சத்தைத்தருகின்ற — அரா-கார்க்கோடகநாகமானது — உமிழ்-உமிழ்ந்த — விடத்தினால் - விஷத்தால் — இன்றளவு-இன்றையமட்டும் — அயர்ந்தேன்-சோர்வையடைந்தேன் — எ-று.(கருத்து)தன்னைச்சபிக்கநினைத்தானென் கருத்தையறிந்த கலி தமயந்திசாபத்தால் நாகம் உமிழ்ந்த விஷத்தால்சோர்வையடைந்தேன்-எ-ம் (இதுமுதலிரண்டுங்குளகம்). (௰௬)

இழைத்ததீவினைதணந்தனனின்றுதொட்டுன்பேர்
வழுத்தினாரையுமருவலன்மன்னவென்றேத்த
வழற்கொழுஞ்சினந்தணித்தனனுடல்வேலரசன்
குழைத்ததான்றியிலேறினன்கொடியவெங்கலியே.

(இ-ள்) இழைத்த - செய்யப்பட்ட — தீவினை -கொடுஞ்செய்கைகளை — தணந்தனன்-விட்டுநீங்கினேன் — இன்றுதொட்டு - இன்றையதினமுதற்கொண்டு — உன்பேர் - உன்னுடையநாமத்தை — வழுத்தினாரையும்-துதித்தவரையும் — மருவலன்-சேரேன் — மன்ன - நளமகாராசனே — என்றேத்த-என்றுஸ்துதிக்க — அடல் - போர்செய்கின்ற — வேல்-வேலையேந்திய — அரசன்-நளமகாராசனெனவன் — அழற்கொடும் - அக்கினிபோற்கொடிய — சினம்- கோபத்தை — தணித்தனன் -விடுத்தான் — குழைத்த-தளிர்த்த — தான்றியில்-தான்றிமரத்தில் — கொடிய - குரூரமுள்ள — வெங்கலி - வெவ்வியகலியனெனவன் — ஏறினன்-ஏறிக்கொண்டான் — எ-று. ஏ - அசை (கருத்து) இன்றுதொடங்கிஉமதுபேரைச்சொன்னவரையும் பிடித்திலேன் என்றுதுதிக்க அரசன் கோபந்தீர்த்தனன், சனி தான்றிமரத்திலேறினன்-எ-ம். (௰௭)

கலிநீங்குபடலம்முற்றுப்பெற்றது.

உ

# தேவியைக்கண்ணுற்றபடலம்.

—— ※ ——

இப்படலத்தால் கலி நீங்கியபின்பு நளமகாராசன் வீமனது குண்டினபுரத்தில்வந்து மூன்றுவருடம் பிரிவுற்ற தனதுதேவியாகிய தமயந்தியைக்காண்டல் சொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை.

விண்டமென்மலர் நறவினைவிளரியஞ்சுரும்ப
ருண்டுதுஞ்சுதார் நிடதர்கோன்றேர்கடிதோட்டி
மண்டுதீம்புனலகழிசூழ்மாமதிற்குடுமிக்
கொண்டல்கண்படுகுண்டினபுரத்தில்வந்தடைந்தான்.

(இ-ள்) விண்ட-மலர்ந்த—மென்மலர் - மெல்லிய புஷ்பங்களின் நறவினை-தேனை—விளரி - விளரியென்னும் பண்ணைப்பாடுகின்ற—அஞ்சுரும்பர்-அழகியவண்டுகள்—உண்டு-குடித்து— துஞ்சும்- நித்திரைசெய்யும்படியுள்ள—தார்-மாலையையணிந்த— நிடதர்கோன்- நளமகாராஜன்—தேர்-இரதத்தை—கடிது-விரைவினில்—ஓட்டி - செலுத்தி—மண்டு-நிறைந்த—தீம்புனல்-மதுரமான நீரையுடைய — அகழி அகழியானது—சூழ்-சூழப்பெற்ற—மாமதில் - பெரியமதில்களுடைய—குடுமி-சிகரத்தில்—கொண்டல் - மேகங்கள்—கண்படு - நித்திரைசெய்யும்படியுள்ள—குண்டினபுரத்தில் - வீமராசன் பட்டணத்தில்—வந்தடைந்தான் - வந்துசேர்ந்தான்—எ-று.(கருத்து) நளன் தேரோட்டிக்குண்டினபுரத்தில்வந்தான்-எ-ம். (௧)

செல்வியந்தடந்தேர்வருகம்பலையேனா
வொல்லையித்திறந்தேர்விடநளனலாதொருவர்
வல்லரோவெனமனத்திடையெண்ணிமற்றனையோ
னல்லனேலுயிர்துறப்பனென்றுன்னினளணங்கே.

(இ-ள்) செல்வி-வண்டிலையுடைய—அந்தடந்தேர் - அழகியவிசாலமாகியதோானது—வரும்-வருகின்ற — கம்பலை-சத்தத்தை — கேளா- கேட்டு—ஒல்லை-சீக்கிரத்தில்—இத்திறம்- இவ்வண்ணம் — தேர்விட -தேரைச்செலுத்த—நளனலாது-நளனையல்லாமல் — ஒருவர் - மற்றொருவர்—வல்லரோ-திறமையுள்ளவரோ—என - என்று—மனத்திடை-மனத்தில்—எண்ணி-சிந்தித்து— அனையோன்-இவன், அல்லனேல்-நளனல்லனானால்— உயிர்துறப்பன் - உயிரைவிடுவேன், என்று - என்று—அணங்கு-தமயந்தியாளவள்—உன்னினள் - எண்ணினாள் — எ-று. (கருத்து) தமயந்தி தேர்வருஞ் சத்தங்கேட்டு நளனல்லாவிடில்உயிர்விடுவேனென்றாள்-எ-ம். (௨)



மருவுபாகனைத்தேரொடும்வாயலினிறுவி
யிருதுபன்னனவ்வீமன்மாட்டேகலுமெதிராப்
புரிவயாவையும்புரிந்துபல்காவதம்போக்கி
யுருவப்பூணினாய்வந்தமையெவன்கொலென்றுரைத்தான்.

(இ-ள்)மருவுபாகனை-பொருந்தியசாரதியை—தேரொடும் - இரதத்தோடும்—வாயலில்-அரண்மனைவாசலில்—நிறுவி-நிறுத்தி — இருதுபன்னன்-இருதுபன்னவாசனானவன் — அவ்வீமன்மாட்டு - அந்தவீமராசனிடத்து— ஏகலும்-சென்றவளவில்—எதிராப்புரிவயாவையும் - எதிர்வந்துசெய்யத்தக்கமரியாதையனைத்தையும்—புரிந்து - செய்து—பல்காவதம்போக்கி-பலகாதவழியைக்கடந்து—உருவப்பூணினாய் - அழகியஆபரணத்தையுடையஇருதுபன்னவாசனே—வந்தமை-(நீ) இவ்விடம்வந்ததன்மை—எவன்கொல்-என்னகாரணமோ—என்றுரைத்தான்-வீமராசன்சொன்னான்—எ-று. (கருத்து) இருதுபன்னன்வீமனிடத்திற்சென்றவளவில் வீமனெதிர்வந்து உபசாரஞ்செய்து வந்தகாரியமென்னவென்றுகேட்டானென்பதாம். (௩)

ஈங்கடைந்ததுமன்னநிற்காணியவெனலும்
வீங்குதோளினனினியநன்மொழிபலவிளம்பிப்
பாங்குளார்தமையுறையுளொன்றமைக்கெனப்பணிப்ப
வாங்குவிண்ணவர்நகரினும்விழுமிதொன்றமைத்தார்.

(இ-ள்) மன்ன-வீமராசனே—ஈங்கு-இங்காத்தில் — அடைந்தது வந்தது—நிற்காணிய-உன்னைக்காண்பதற்கு—எனலும் - என்றுசொல்லியமாத்திரத்தில்—வீங்குதோளினன் - பருத்தபுயத்தையுடைய வீமராசனானவன்—இனிய-இனிமையான—நன்மொழி-நல்லசொற்களை—பலவிளம்பி-பலவாகச்சொல்லி—பாங்குளார்தமை - அருகிலுள்ளஏவலாளரைப்பார்த்து —உறையுளொன்று - ஒருவிடுதிவீட்டை—அமைக்கென-செய்யுங்களென்று—பணிப்ப-உத்தரவுகொடுக்க—ஆங்கு - அவ்விடத்தில்—விண்ணவர்நகரினும - சொர்க்கத்தைக்காட்டிலும் — விழுமிது-மேன்மையதாகிய—ஒன்று-ஒருவிடுதிவீட்டை—அமைத்தார் - ஏவலாளர்கட்டஞ்செய்தார்கள் —எ-று. (கருத்து) வீமராசனே உம்மைக்காணவந்தேனென்றவளவில் வீமன்ஏவலாளரை ஓர் வீடொன்று அமைக்கச்சொன்னான் அவர்களமைத்தார்கள் என்பதாம், (௪)

இருதுபன்னன்வேந்தருளினாலவ்விலெய்தி
யரசர்யாவருந்தொக்கிலார்மலைப்பணைத்தோள்
விரைசெய்கோதைதன்சுயம்வரமென்னவேதியன்முன்
னுரைசெய்மாற்றமற்றென்கொலென்றயிர்த்தனனுறைந்தான்

(இ-ள்) இருதுபன்னன்-இருதுபன்னவாசன்—வேந்தருளினால்- வீமனுதவியினால்—அவ்வயின்-அந்தவீட்டில்—எய்தி - அடைந்து— அரசர்யாவரும் - அரசர்களெவரும்—தொக்கிலர் - வந்துசேர்ந்திலரில்லை—ஆய்மலை-சிறந்தமலையையணிந்த—பணைத்தோள் - மூங்கிலையொத்ததோள்களையும்—விரைசெய்-பரிமளிக்கின்ற—கோதைதன் - கூந்த

ளையுமுடையதமயந்தியினது—சுயம்வரமென்ன - சுயம்வரமென்று—வேதியன்-பருணாதனென்னும்பிராமணன்—முன் - முந்தியதினத்தில்—உரைசெய-சொல்லப்பட்ட—மாற்றம்-வார்த்தை—யென்சொல்-எப்படிப்பட்டதோ—என்று-என்று—அயிர்த்தனன் - சந்தேகித்தவனாகி—உறைந்தான்-வாசஞ்செய்தான்—எ-று. மற்று-அசை (கருத்து) இருதுபன்னன் பருணாதனென்னும் பிராமணன் சுயம்வரமென்று சொன்னதைக்குறித்துச் சந்தேகித்தான்-எ-ம். (௫)

சாந்தமென்முலைத்தமயந்திதோழியைநோக்கிப்
போந்தமன்னவன்பொற்றடந்தேரிடைப்பிணித்த
கூந்தன்மாவிடுசாரதிகொற்றவேனளனும்
வேந்தனோவெனவுணர்ந்திவண்வருகெனவிடுத்தாள்

(இ-ள்) சாந்தம்-சந்தனக்கோலமணிந்த—மென்முலை - மெல்லிய முலைகளையுடைய—தமயந்தி-தமயந்தியானவள்—தோழியை - கேசினியென்னுந்தனதுபாங்கியை—நோக்கிபார்த்து—போந்தமன்னவன் - வந்தவிருதுபன்னவரசனது—பொன்-அழகிய—தடம்-விசாலமாகிய—தேரிடை-இரதத்தில்—பிணித்த-கட்டிய—கூந்தன்மா - புறமயிரினையுடையகுதிரைகளை—விடும்-நடத்துகின்ற—சாரதி - தேர்ப்பாகனானவன்—கொற்றம்-வெற்றிபொருந்திய—வேல் - வேலாயுதந்தரித்த—நளனும்-நளனாகிய—வேந்தனோ - அரசனோ—(அல்லனோ)—என-என்று—உணர்ந்து-அறிந்துகொண்டு—இவண்-இவ்விடத்தில் — வருகென-வாவென்றுசொல்லி—விடுத்தாள்-அனுப்பினாள்—எ-று. (கருத்து) தமயந்தி கேசினியாகியபாங்கியைச்சாரதி நளனோ வென்றறிந்து வாவென்றாள்-எ-ம். (௬)

கொங்குவாய்மடுத்தினவண்டுகட்டுணுங்கூந்தற்
றிங்கள்வாண்முகத்தெரிவைதன்னேவலிற்றிறம்பா
மங்கையெய்திமற்றியாவனீயெத்தொழில்வல்லை
யிங்குவந்தவாறென்னெனவாகுகனிசைப்பான்.

(இ-ள்) கொங்கு-தேனை—வாய்மடுத்து-வாயைவைத்து—இனவண்டு-கூட்டமாகியவண்டுகள்—கட்டுணும் - கொள்ளைகொண்டுண்ணப்பெற்ற—கூந்தல்-அளகத்தையும்—திங்கள் - சந்திரன்போன்ற — வாண்முகம்-ஒளிபொருந்தியமுகத்தையுமுடைய—தெரிவைதன் - தமயந்தியினது—ஏவலில்-உத்தரவினின்றும்—திறம்பா-தவறாத — மங்கை-கேசினியானவள்—எய்தி - அவ்விடத்திற்சென்று—யாவனீ -நீயார்—எத்தொழில்-எந்தத்தொழில்களில்—வல்லை-வல்லமையுள்ளவன் — இங்கு-இவ்விடத்தில்—வந்தவாறு-வந்ததன்மை—என்னென - எப்படிப்பட்டதென்றுகேட்க—வாகுகன் - வாகுகனென்னப்பட்டநளன்—இசைப்பான்-சொல்லுவான்—எ-று.(கருத்து) தோழிசென்று - நீயாவன் எத்தொழில்வல்லவன் நீ இங்குவந்தவகையென்னவென வாகுகன் சொல்லுவான்-எ-ம். (௭)

விரிமலர்க்குழற்றமயந்திசுயம்வரம்வேட்ட
விருதுபன்னன்மான்றேர்விடும்வாகுகனென்பேர்



புரிவல்வெந்தழலின்றியுமடைத்தொழில்புனலற்
றுருகுபாலையிற்றீம்புனறருவலென்றுரைத்தான்.

(இ-ள்) விரி-மலர்ந்த—மலர்-மலர்களையணிந்த—குழல்- கூந்தலையுடைய—தமயந்தி-தமயந்தியினது—சுயம்வரம்-சுயம்வரத்தினில்— வேட்ட-விருப்பமுற்றஇருதுபன்னராசனது—மான்றேர்- குதிரைகட்டிய தேரை—விடும்-நடத்துகின்ற—வாகுகன் - பாகுகன்(என்பது)—என் பேர்-என்பெயராம்—வெந்தழல்-வெவ்விய அக்கினி—இன்றியும் - இல்லாமலும்—மடைத்தொழில்-சமையலை—புரிவல் - செய்வேன்—புனலற்று-நீரில்லாமல்—உருகு-உருகுகின்ற—பாலையில் - பாலைநிலத்தில்—தீம்புனல்-மதுரமானசலத்தை—தருவல்- (உண்டுபண்ணிக்) கொடுப்பேன்—என்றுரைத்தான்-என்றுசொன்னான்—எ-று. (கருத்து) தமயந்திசுயம்வரத்தை யிச்சித்தவிருதுபன்னன் தேர்விடுஞ்சாரதி அக்கினியில்லாமற்சமைப்பேன் நீரில்லாதபாலையில் நீர் உண்டாக்குவேன் என்றான் என்பதாம். (௮)

இன்னவித்தைகணளனலாதறிகுநரில்லை
யன்னவன்றாக்கொண்டனைபோலுமவ்வரசன்
மன்னிவாழ்வதெந்நகர்வயின்வகுத்துரையென்றாள்
பொன்னவாஞ்சுணங்கரும்பியபுணர்முலைப்பூவை

(இ-ள்) பொன்னவாம்-பொன்போலாகிய—சுணங்கு- தேமல்—அரும்பிய-உண்டாகிய—புணர்முலை - நெருங்கியஸ்தனங்களையுடைய—பூவை-கேசினியானவள்—இன்னவித்தைகள் - இத்தன்மையவித்தைகள்—நளனலாது-நளனல்லாமல்—அறிகுநர் - அறிந்தவர்கள்—இல்லை-(ஒருவரு)மில்லை—அன்னவன்-அந்தநளமகாராசன், தா-கொடுக்க—கொண்டனைபோலும்- பெற்றுக்கொண்டாய்போலும் — அவ்வரசன்-அந்நளமகாராசன்—எந்நகர்வயின்-எந்தப்பட்டினத்தில் — மன்னி-பொருந்தி—வாழ்வது-சுகித்திருப்பது—வகுத்து-பகுத்து—உரை - அதைச்சொல்லு—என்றாள்-என்றுவினவினாள்—எ-று. (கருத்து) கேசினியானவள் இவ்வித்தையைநளனிடத்தாக்கற்றுக்கொண்டாய் போலும் அந்நளன் எங்கேயிருக்கிறான் சொல்லென்றாள்-எ-ம். (௯)

மேவியவித்தையோர்நளனிடங்கற்றிலன்விறல்வேற்
சேயனினிதுறைவதிவ்விடமெனத்தெருளேன்
றூயகற்பினர்காதலர்துறப்பினுமற்றோர்
காயகற்பெறநினைவர்கொலோவெனநவின்றான்

(இ-ள்) மேவிய-பொருந்திய—வித்தை-வித்தைதனை—ஓர்- ஒப்பற்ற—நளனிடம்-நளமகாராசனிடத்தில்—கற்றிலன் - நான்கற்கவில்லை—விறல்-வெற்றிபொருந்திய—வேல்-வேலேந்திய—சேயனும் - சுப்பிரமணியனையொத்தநளமகாராசன்—இனிதுறைவது - இனிமையோடிருப்பது, இவ்விடம்-இன்னவிடம்— என-என்று—தெருளேன்-அறியேன்—தூய-பரிசுத்தமாகிய—கற்பினர் - கற்பினையுடையமாதர்கள்—காதலர்-கணவர்கள்— துறப்பினும்-துறந்துவிட்டாலும்— மற்றோர் - வேறொரு—நாயகற்பெற-கணவனையடைய—நினைவர்கொலோ - நினைப்பா

ரோ—என-என்று—நவின்றான்-(நளமகாராஜன்)சொன்னான்-எ-று. (கருத்து) நான் நள்ளிடத்தில் வித்தைகற்றிலன்கற்புள்ளமாதர்நாயகர் நீங்கினும் வேறுநாயகரை இச்சிப்பார்களோ-எ-ம். (ம)

இன்னகூறலுமடவால்கதுமெனவேகி
மின்னனோடுடன்கேட்டனயாவையும்விளம்பி
யன்னவன்றனதுருவலான்மொழிகுவதனைத்து
முன்னினம்மிறைமொழிவதேபோன்மெனமொழிந்தாள்.

(இ-ள்) இன்ன-இத்தன்மையாக—கூறலும்-சொன்னவளவில்—மடவால்-கேசினியானவள்—கதுமென-சீரெலென்று—ஏகி - சென்று—மின்னனோடுடன்-தமயந்தியுடன்—கேட்டனயாவையும் - கேள்வியுற்றசங்கதிகளையெல்லாம்—விளம்பி-சொல்லி—அன்னவன்றனது - அந்நளமகாராசனது—உருவலான்-வடிவமில்லாதஇப்பாகன்—மொழிகுவதனைத்தும்-சொல்லுவதெல்லாம்—உன்னில் - யோசிக்குமிடத்தில்—நம்மிறை-நமதுநளமகாராசன்—மொழிவதேபோன்மென - சொல்வதைப்போலிருக்கின்றதென்று—மொழிந்தாள்-சொன்னாள்—எ-று(கருத்து) தோழி கேட்டவையெல்லாந்தமயந்திக்குச் சொல்லி நம்முடைய அரசனைப்போலவே பேசுகிறானென்றாள்-எ-ம். (மக)

மொழிதல்கேட்டலும்மொய்குழல்வாலரியுதவி
யழலிலாதிவையடுவதுகாண்டியென்றறையக்
குழைகொள்வாண்முகக்கொம்பனாளவனுழைக்குறுகி
யிழைகொள்பூண்முலைசொற்றவாறிசைத்தனளீந்தாள்.

(இ-ள்) மொழிதல்-கேசினிசொல்லியவைகளை—கேட்டலும் - கேள்வியுற்றமாத்திரத்தில்—மொய்குழல்-தமயந்தியானவள்—வால் - வெள்ளிய—அரி-அரிசியை—உதவி-கொடுத்து—அழலிலாது - நெருப்பின்றி—இவையடுவது-இவ்வரிசிகளைச்சமைப்பதை—காண்டியென்று-பார்த்துவாவென்று—அறைய-கூற—குழைகொள் - குண்டலமணிந்த—வாண்முகம்-ஒளிபொருந்தியமுகத்தையுடைய—கொம்பனாள் - பூங்கொம்பையொத்தகேசினியானவள்—அவனுழை - அப்பாகனிடத்து—குறுகி-சென்று—இழைகொள்-நூலிழைகொண்ட—பூண்- ஆபரணங்களையணிந்த—முலை - ஸ்தனங்களையுடையதமயந்தி—சொற்றவாறு சொல்லியபடி—இசைத்தனள்-சொல்லி—ஈந்தாள் - அவ்வரிசியைக் கொடுத்தாள்—எ-று. (கருத்து) தமயந்திதோழிக்கு அரிசிகொடுத்து தீயில்லாமற் சமைப்பதைக்காணென்றுசொல்ல அவள் அவனிடத்துச்சென்று அரிசியைக்கொடுத்தாள்-எ-ம். (மஉ)

ஈய்ந்தவாலரிபெய்தபொற்குழிசிதீயின்றி
யாய்ந்தகேள்வியான்றொடுதலுமடிசிலாயமைய
வேய்ந்தபூங்குழல்கண்டுபோய்வெம்முலைப்பொறையாற்
சாய்ந்தநுண்ணிடைத்தமயந்திதன்னொடுமொழிந்தாள்.

(இ-ள்) ஈய்ந்த - கொடுத்த—வாலரி-வெள்ளிய அரிசியானவை—பெய்த - பாடப்பட்ட—பொற்குழிசி - பொன்குடத்தை—ஆய்ந்தகேள்வியான்-நளமகாராஜன்—தொடுதலும் (கையால்) தொட்டமாத்திரத்



தில்—தீயின்றி - நெருப்பில்லாமல்—அடிசிலாயமைய - சாதமாயமைய—வேய்ந்த-தரிக்கப்பட்ட—பூங்குழல்-பூமாலையணிந்த கூந்தலையுடையகேசினியானவள்—கண்டு - அதைப்பார்த்து—போய்-சென்று—வெம்முலை - விருப்பத்தைத்தருகின்ற ஸ்தனங்களினுடைய;—பொறையால்-பாரத்தினால்—சாய்ந்த- வணங்கிய—நுண்ணிடை - நுட்பமான இடையையுடைய—தமயந்திதன்னொடும்-தமயந்தியுடனே—மொழிந்தாள்- (இவ்விசேஷத்தைச்) சொன்னாள்—எ-று. (கருத்து) அரிசிபோட்ட பொற்பாத்திரத்தை நளன் தொட்டவளவில் சாதமாகத் தோழிகண்டு தமயந்திக்குச்சொன்னாள்-எ-ம். (மங)

அழலுநீருமின்றமிழ்தெனவடுதொழில்கேட்டு
குழையுநெஞ்சினளின்னுயிர்க்கொழுநனென்றெண்ணி
விழைவினோடுதன்மக்களையவனுழைவிடுத்தாள்
மழலைமென்மொழிமக்களுமன்னவன்மாட்டடைந்தார்.

(இ-ள்) குழையுநெஞ்சினள் - குழைந்தநெஞ்சத்தளாகிய தமயந்தியானவள்—அழலும்-நெருப்பும்—நீரும்-தண்ணீரும்—இன்று - இல்லாமல்—அமிழ்தென-அமிர்தம்போல—அடுதொழில் - சமைத்தலை—கேட்டு-கேள்வியுற்று—(இவன்) இன்னுயிர்க்கொழுநன்-இனியவுயிரையொத்த(நமது)கணவன்—என்றெண்ணி-என்றுகருதி—விழைவினோடு-ஆசையோடு—தன்மக்களை-தன்புதல்வரை—அவனுழை - அவனிடத்து—விடுத்தாள்-அனுப்பினாள்—மழலைமென்மொழி - மெல்லியமழலைமொழிகளையுடைய—மக்களும்-பிள்ளைகளும்—மன்னவன்-மாட்டு - நளமகாராசனிடத்தில்—அடைந்தார்-சேர்ந்தார்கள்—எ-று. (கருத்து) தமயந்தி நாயகனென்றெண்ணிமக்களையனுப்பினாள் அவர்கள் அரசனிடத்திற்சேர்ந்தார்கள்-எ-ம். (மச)

அடைந்தமக்களைக்காண்டலுமழலிடுமெழுகி
னுடைந்துள்ளநீருற்றிருந்தொழுகினநெடுங்கண்
டொடர்ந்தமும்மலமுருக்கிவெம்பவக்கடற்றொலையக்
கடந்துளோர்களுங்கடப்பரோமக்கள்மேற்காதல்.

(இ-ள்) அடைந்த - தன்னிடத்துவந்த—மக்களை - புதல்வரை—காண்டலும் - பார்த்தமாத்திரத்தில்—அழலிடும் - தீயிலிட்ட—மெழுகின்-மெழுகுபோல—உள்ளம்(நளமகாராஜன்)மனமானது— உடைந்தது-நெகிழ்ந்தது—நெடுங்கண்-நெடியகண்கள்—நீருற்றிருந்து - நீர்சொரிந்து—ஒழுகின-சொரிந்தன—தொடர்ந்த - சன்மங்கடோறுமனுசரித்த—மும்மலம்-ஆணவம்மாயைகர்மமென்னும் மூன்றுமலத்தையும்—உருக்கி-கெடுத்து—வெம் - கொடிய—பவக்கடல்-ஜனனசாகரத்தை—தொலைய-நீங்க—கடந்துளோர்களும் - நீத்தோரும்—மக்கண்மேல்—பிள்ளைகள்மேல்வைத்த—காதல்-ஆசையை— கடப்பரோ - ஒழிப்பரோ (ஒழியார்)—எ-று. (கருத்து)மக்களைநளன்கண்டு அழுதான்-எ-ம். ()

மழலைமென்மொழிமக்களைக்காண்டலுமன்
னெழுதுஅன்புறவாய்வலைதந்தோழிகண்டேகித்

தொழுதுவிசொற்றனுங்கொழுகளுமென்பதுதுணிந்து
முழுவலன்புடைத்தாயெடுத்தபரங்மொழிந்தான்

(இ-ள்) [illegible]

[illegible]



[illegible]

த்தில்—எய்துவான்-உன்னைச்சேரும்பொருட்டு—மணவினை - சுயம்வ ரமென்பதை—இழைத்தனன் - செய்தேன்—கருத்தில் - மனதில்—அடியனேன்றனை-அடியாளாகியவென்னை— ஐயுறேலென - சந்தேகப்படாதேயென்று—மொழிந்து - சொல்லி—அழுதாள்-(தமயந்தி)புலம்பினாள்—எ-று. (கருத்து) தமயந்திஉம்மைக்காணும்பொருட்டிவ்வாறு செய்தேன் சந்தேகப்படாதேயென்றாள்-எ-ம். (உக)

முன்னைநல்லுருக்காட்டெனமுற்றிழைமொழியப்
பன்னகத்திறையுதவியபூந்துகில்பரிவால்
மன்னரேறனைப்புனைதலுமானுருவெய்திக்
கன்னல்வேளினுங்கவினலங்களித்திடநின்றான்.

(இ-ள்) முன்னை-பழைய—நல்லுரு-நல்லவுருவத்தை — காட்டென-காட்டுவாயென்று—முற்றிழை-தமயந்தியானவள்—மொழிய -சொல்ல—பன்னகத்திறையாகாராஜனாகியகார்க்கோடகன்—உதவிய- கொடுத்த—பூந்துகில்-அழகியவஸ்திரங்களை —பரிவால் - ஆசையோடு—மன்னரேறனை-இராஜசிங்கமாகியநளமகாராஜன் —புனைதலும் —தரித்த மாத்திரத்தில்—மானுரு - மாட்சிமைப்பட்ட வுருவத்தை—எய்தி-அடைந்து—கன்னல்-கருப்புவில்லைதரித்த—வேளினும் - மன்மதனைக் காட்டிலும்—கவின் - அழகினது—நலம்-நன்மையானது— களித்திட-மகிழ—நின்றான்-(நளமகாராஜ)னிருந்தான்—எ-று. (கருத்து) தமயந்தி முன்னுருவைக்காட்டெனநளன்காட்டினான்-எ-ம். (உஉ)

நின்றமன்னனைநிரைவளைக்கைம்மலர்கூப்பி
மன்றலங்குழன்மடவரல்வணங்கினளிறப
வென்றிவேலுடைவிதர்ப்பர்கோன்விளைந்தமைகேட்டுத்
துன்றுதன்கிளைமன்னவர்சூழ்வரப்புகுந்தான்.

(இ-ள்) நின்ற-எதிரில்நின்ற—மன்னனை-நளமகாராசனை—நிரை, வரிசையாயணிந்த—வளை-வளையலையுடைய— கைம்மலர் - மலர்போன்றகைகளை—கூப்பி-குவித்து—மன்றல்-வாசனைபொருந்திய —அம் - அழகிய—குழல்-கூந்தலையுடைய—மடவரல் - தமயந்தியானவள்—வணங்கினள்-வணங்கி—இற்ப-இருக்க— வென்றி-வெற்றிபொருந்திய—வேலுடை-வேலையுடைய—விதர்ப்பர்கோன்-வீமராசனானவன் — விளைந்தமை-நடந்தசெய்திகளை—கேட்டு - கேள்வியுற்று—துன்று-நெருங்கிய—தன்-தன்னுடைய—கிளை-பந்துக்களாகிய— மன்னவர் - அரசர்கள், சூழ்வர - சூழ—புகுந்தான் - அவ்விடம்வந்துசேர்ந்தான்—எ-று. (கருத்து)நளனைத்தமயந்திவணங்கிற்கவீமராசன்வந்தான்-எ-ம். (உஙு)

அன்னகாலையிலகலிருவிசும்பிலோர்வாணி
மன்னகேட்டியிம்மடவரறன்னைமூவாண்டு
மின்னலின்றியாமளித்தனஞ்சுயம்வரமென்று
வுன்னையிவ்வழிக்கூட்டுதற்கொண்டொடியிழைத்தாள்

(இ-ள்.) அன்னகாலையில்- அந்தச்சமயத்தில்—அகல் -அகன்ற—இரு-பெருமைபொருந்திய—விசும்பில் - ஆகாயத்தில்—ஓர்வாணி - ஒரு அசரீரிவாக்கு—மன்ன நளமகாராசனே—கேட்டி-கேள் — இம்மட



வரறன்னை-இத்தமயந்தியை—மூவாண்டும் - மூன்றுவருஷமளவும்—இன்னலின்றி-தீங்கில்லாமல்—யாம்-நாம்—அளித்தனம் -இரக்ஷித்தோம்—சுயம்வரமென்று-சுயம்வரமென்றுசொல்லப்பட்டதை— உன்னை-உன்னை—இவ்வழி- இவ்விடத்தில்—கூட்டுதற்கு - சேர்த்தற்கு—ஒண்டொடி-தமயந்தியானவள்—இழைத்தாள்-செய்தாள்—எ-று. (கருத்து) அப்பொழுது ஆகாயவாணி அரசனேசந்தேகப்படாதே தமயந்திஉன்னைக் காணுதற்குச்சுயம்வரஞ்செய்தாள்என்பதாம். (இதுமுதலிரண்டு ங்குளகம்.) (உச)

வடபுலத்தினிலோக்குநர்மாசறவிளங்கும்
கடவுண்மீனினுந்தொழுதகுகற்பினர்க்கரசாங்
கொடிமருங்குலையையுறாதருளெனக்கூர்வே
விடதர்கோமகன்மகிழ்வுறவிசும்ந்ததையன்றே.

(இ-ள்) வடபுலத்தினில்-வடதிசையில்—நோக்குநர் -காண்கின்றவரது—மாசற-குற்றமற—விளங்கும் - பிரகாசியாநின்ற—கடவுண்மீனினும்- தெய்வத்தன்மையுள்ள அருந்ததியைக்காட்டிலும்— தொழுதகு-மேன்மையாகிய— கற்பினர்க்கு-பதிவிரதைகட்கு அரசாம்-அரசாகிய—கொடிமருங்குலை - தமயந்தியை—ஐயுறாது - சந்தேகியாமல்—அருளென-கிருபைசெய்யென்று—கூர்வேல் - கூர்மைபொருந்தியவேலேந்திய—விடதர்கோமகன்-நளமகாராசன்—மகிழ்வுற-மனங்களிக்க, நிகழ்ந்தது-ஆகாசவாணிஉண்டாயிற்று—எ-று. ஐ-அன்று ஏ - அசைகள் (கருத்து) அருந்ததிக்குமேலான கற்புள்ளவள் சந்தேகப்படாமல் கிருபைசெய்யென அவ்வசரீரிவாக்குப்பிறந்தது-எ-ம். (உரு)

தமரவேலையினந்தரதுந்துமிதழங்க
வமரர்யாவரும்பூமழைபொழிந்துநின்றார்த்தா
ருமிழ்செழுங்கதிர்மணிமுடிவீமனுமுவந்தான்
குமரனன்னவன்கோல்வளைத்தோளியையடைந்தான்.

(இ-ள்) தமரம்-பேரொலியையுடைய—வேலையின்-சமுத்திரம்போல—அந்தரம்-ஆகாயத்தில்—துந்துமி-துந்துமிவாத்தியமானது— தழங்க-சத்திக்க—அமரர்யாவரும்-தேவர்களனைவரும் — பூமழை - புஷ்பவருஷத்தை—பொழிந்து - சொரிந்து—நின்று - நிலைபெற்று—ஆர்த்தார்-துதித்தார்கள் — உமிழ் -கக்கப்பட்ட—செழும்-செழுமையாகிய — கதிர்-கிரணங்களையுடைய—மணிமுடி-இரத்தினகிரீடத்தையுடைய — வீமனும்-வீமராசனும்—உவந்தான்-சந்தோஷித்தான்—குமரனன்னவன் -முருகனையொத்தநளமகாராசன்—கோல்வளை-அழகியவளையலையணிந்த—தோளியை-புயத்தைபுடைய,தமயந்தியை— அடைந்தான் - சேர்ந்தான்—எ-று. (கருத்து) அந்தரதுந்துமிசத்திக்கத்தேவர்கள் பூமாரிபெய்துதுதித்தார்கள் வீமன்மகிழ்ந்தான் தமயந்தியை நளனடைந்தான் என்பதாம். (உசு)

மண்களித்தனமாதிரங்களித்தனமலர்மேற்
பெண்களித்தனள்போறங்களித்தனகண்டோர்
கண்களித்தனகளித்தனகலைவலோர்நெஞ்சம்
விண்களித்தனகளித்ததுவீமன்மாநகரம்.

(இ-ள்) மண்-பூமியானது—களித்தன-களிப்புற்றது— மாநிரம்-மலைகள்—களித்தன-களிப்புற்றன—மலர்மேற்பெண்-இலட்சுமி —களித்தனள்-களிப்புற்றனள்—பேரநம்-மகத்தான தருமங்கள்— களித்தன-களிப்புற்றன—கண்டோர்-பார்த்தவர்களது—கண்-நேத்திரங்கள் — களித்தன-களிப்புற்றன—கலைவலோர்-வித்துவான்களுடைய — நெஞ்சம்-மனங்கள்—களித்தன-களிப்புற்றன—விண்-விண்ணுலகங்கள்—களித்தன-களிப்புற்றன—வீமன்-வீமராசனது—மா-பெரிய—நகரம்-பட்டினமானது—களித்தது - களிப்புற்றது—எ-று.(கருத்து)சராசரங்களெல்லாமகிழ்ந்தன-எ-ம். (உ௭)

உருவவொண்கழனிட தர்கோன் வெளிப்படலோரா
விருதுபன்னனுக்கதிக்கனெவனுழையெய்தி
யரசநின்னையானறிந்திடா தியற்றியவினைத்துங்
திருவுளங்கொளாதருளெனச்சேவடிதொழுதான்.

(இ-ள்) உருவம்-அழகையுடைய—ஒண்கழல்-ஒளிபொருந்தியவீரக்கழலையணிந்த—நிட தர்கோன்-நளமகாராசன்—வெளிப்படல்-1(மறைவினின்றும்)வெளிப்பட்டதை—ஓரா-ஆராய்ந்து — இருதுபன்னன்-இருதுபன்னராசன், ஆங்கு-அந்தகாத்தில், அறிந்தபின் - தெரிந்துகொண்டபின்—அவனுழையெய்தி-அந்நளனிடத்துவந்து, அரச - நளமகாராசனே—நின்னை-உன்னை—யான்,நான்—அறிந்திடாது-அறியாமல், இயற்றியவினைத்தும்-செய்தகுற்றங்களனைத்தையும், திருவுளங்கொளாது - மனதிற்கொள்ளாமல், அருளெனி-கிருபைசெய்யவேண்டுமென்று, சேவடி-சிவந்தபாதங்களில்— தொழுதான்-வணங்கினன்—எ-று. (கருத்து) இருதுபன்னனனளனிடத்திற் சேர்ந்துயான்செய்த குற்றத்தைப்பொருத்தருளுமென்றான்-எ-ம். (உஅ)

செய்யதாடொழுமன்னனைச்செங்கையாற்றழுவிக்
கொய்யுளைப்பரியுளமறிவிஞ்சையுங்கொடுத்து
மையின்மாமதிமுகமலர்ந்தின்னுரைவழங்கி
யையனேவவவ்வரசனுமயோத்திநாடடைந்தான்.

(இ-ள்) செய்யதாடொழும்-சிவந்தபாதத்தில்வணங்கிய — மன்னனை-இருதுபன்னராசனை—செங்கையால் - சிவந்தகைகளால்—தழுவி-அணைத்துக்கொண்டு—கொய்யுளை - கொய்துகட்டியபுறமயிரினையுடைய—பரி - குதிரைகளினது—உளம்-மனதை—அறி-அறிவிக்கின்ற—விஞ்சையும்-வித்தையையும்—கொடுத்து-உபதேசித்து—மையில்-களங்கமில்லாத—மா-பெருமைதங்கிய—மதி-சந்திரன்போன்ற— முகமலர்ந்து—முகமலர்ச்சியடைந்து—இன்னுரை-இனியசொற்களை—வழங்கி-சொல்லி—ஐயன்-நளமகாராசன்— ஏவ-விடைகொடுக்க—அவ்வரசனும் - அவ்விருதுபன்னராசனும்—அயோத்திநாடு - அயோத்திதேயத்தை—அடைந்தான்-சேர்ந்தான்—எ-று.(கருத்து) இருதுபன்னனை - நளன்தழுவிக்குதிரை மனமறியும வித்தையையுங் கொடுத்து ஆரசன்விடைகொடுக்க அவ்விருதுபன்னன் அயோத்திநகரத்தைச் சேர்ந்தான் என்பதாம். (உகூ)

தேவியைக்கண்ணுற்றபடலம் - முற்றிற்று.

உ

# அரசாட்சிப்படலம்.

இப்படலத்தால் நளன்தமயந்தியை யடைந்தபின்பு அவளொடுகன்று நிடததேயத்திற்சென்றுபுட்கரனை வென்று அரசாட்சிசெய்தல்சொல்லப் படுகின்றது.

கலிநிலைத்துறை.

கொங்குண்வார்குழற்கொம்மைவெம்முலைநலம்பருகித்
திங்களொன்றவணிருந்தபின்றெண்டிரையுடுத்த
வங்கண்மாநிலம்புரந்திடுமாமனோடாய்ந்து
பொங்குதானையோடெழுந்தனன்புலவுவேற்குரிசில்.

(இ-ள்) புலவு-புலால்நாற்றம்நாறுகின்ற—வேல்- வேலையுடைய—குரிசில்-நளமகாராசனென்பவன்—கொங்குண்-வாசனைபொருந்திய — வார்-நீண்ட—குழல்-கூந்தலையும்—கொம்மை-திரட்சிபொருந்திய — வெம்-விருப்பத்தைத்தருகின்ற—முலை- ஸ்தனங்களையுமுடைய தமயந்தியினது—நலம்-இன்பத்தை—பருகி-அனுபவித்து—திங்களொன்று-ஒருமாதம்—அவண்-அக்குண்டினபுரத்தில்—இருந்தபின் - வாசஞ்செய்தபின்—தெண்டிரை-கடலை — உடுத்த-ஆடையாகவுடுத்த—அங்கண் -அழகியவிடத்தையுடைய—மா-பெரிய—நிலம்-பூமியை—புரந்திடும் - இரட்சியாநின்ற—மாமனோடு - மாமனாகியவீமராசனோடு—ஆய்ந்து - ஆலோசித்து—பொங்கு-பிரகாசியாநின்ற— தானையோடு - சேனையோடு—எழுந்தனன்-பிரயாணப்பட்டான்—எ-று(கருத்து) நளன் ஒருமாதம் குண்டினபுரத்தி லிருந்து சேனையோடுபுறப்பட்டான்-எ-ம். (க)

மழைமதக்களியானையுங்கலினவாம்பரியுஞ்
செழுமணித்தடந்தேர்களும்வயவருஞ்செறிய
வெழுகடற்புவிமன்னருமிறைஞ்சினர்செல்ல
வழலுமிழ்க்கும்வேலரசனுநிடதநாடடைந்தான்.

(இ-ள்) மழை-மழைபோன்ற—மதம்-மதசலத்தையும்—களி-களிப்பையுமுடைய—யானையும்-யானைகளும்—கலினம் - கடிவாளத்தையுடைய—வாம்-தாவுகின்ற—பரியும்-குதிரைகளும்—செழும் - செழித்த—மணி - இரத்தினங்களிழைத்த—தடம் - விசாலமாகிய—தேர்களும்-இரதங்களும்—வயவரும்- படைவீரர்களும்—செறிய-நெருங்கவும் —எழுகடல்-ஏழுசமுத்திரங்கள்சூழ்ந்த—புவி-சப்ததீவுகளிலுள்ள — மன்னரும்-அரசர்களும்—இறைஞ்சினர்-வணங்கினவராகி—செல்ல - நடக்கவும்—அழலுமிழ்க்கும் - அக்கினியைக்காக்காநின்ற — வேல்-வேலையுடைய—அரசனும்-நளனும—நிடதநாடு நிடததேயத்தை— அடைந்தான்-சேர்ந்தான் —எ-று. (கருத்து) நளமகாராசன் நிடததேயத்தைச்சேர்ந்தான்-எ-ம். (உ)

மூதெயிற்புறத்திறுத்தபின்மொய்யமர்தொடங்கப்
போதல்செய்கவெம்போர்த்தொழிற்கஞ்சினையாயிற்
காதலிற்கவறுடுவான் வருகெனக்கழறித்
தூதுபோக்கினன்புட்கரன்றனக்குவேற்கோன்றல்.

(இ-ள்) மூது-பழைய—எயிற்புறத்து-மதிலின் துபுறத்திலே— இறுத்தபின்-இறங்கியபின்பு—மொய்ம்-நெருங்கிய—அமர் - போரை—தொடங்க-ஆரம்பிக்க—போதல்செய்க-வருவாயாக—வெம் - வெவ்விய—போர்த்தொழிற்கு - யுத்தஞ்செய்கைக்கு—அஞ்சினையாகில்-பயப்படுவையாகில்—காதலின்-ஆசையோடு — கவறுடுவான் - சூதாடுதற்கு—வருக-வருவாயாக—என என்று—கழறி- சொல்லி—புட்கரன்றனக்கு-புட்கராசனுக்கு—வேல்-வேலையுடைய—தோன்றல் - நளன்—தூது-தூதனை—போக்கினன்—விடுத்தான்—எ-று. (கருத்து) நளமகாராசன் போர்செய்யவருவாயாகிற்போருக்குவா போர்செய்ய வஞ்சுவாயாகிற்சூதாடவாவென்று புட்கரனுக்குச்சொல்லிவிட்டான்-எ-ம். (௩)

போயதூதுவர்புட்கரற்கித்திறம்புகல
வாயுங்கேள்விநூலமைச்சொடும்வேறிருந்தாய்ந்து
காயும்போரினில்வேறன்மறறரிதெனக்கருதி
மாய்வெங்கவறுடுவான்வருகென விடுத்தான்

(இ-ள்) போயதூதுவர்-நளனிடத்திருந்து போனதூதுவர் — புட்கரற்கு-புட்கரனுக்கு—இத்திறம்-இவ்விதங்களை—புகல - சொல்ல—ஆயும்-ஆராய்ச்சிசெய்யத்தக்க—கேள் - கேள்வியையும்—நூல்-தருமசாஸ்திரத்தையுமுடைய—அமைச்சொடும்-மந்திரியோடும் — வேறிருந்து-தனியேயிருந்து—ஆய்ந்து-ஆலோசித்து—காயும் - கொல்லும்—போரினில்-யுத்தத்தில்—வேறல்-வெல்லுதல்—அரிதென - அரியதென்று—கருதி-நினைத்து—மாயம்-வஞ்சனையோடுங்கூடிய — வெம்-வெவ்விய—கவறுடுவான்-சூதாடுதற்கு —வருகென - வருவாயாகவென்று சொல்லி—விடுத்தான்-அனுப்பினான்—எ-று. (கருத்து) தூதுவர்புட்கரனுக்கு இச்செய்தியைச் சொல்ல புட்கரன்நளனைச் சூதாடவரச்சொன்னான்-எ-ம். (௪)

விட்டதூதுவருரைத்தசொற்கேட்டலும்விரிந்து
மட்டலாந்தொடைமார்பினன்மாநகரெய்திக்
கட்டுவார்கழற்புட்கரகவறுநாமாடற்
கொட்டம்யாதெனவுரைத்தனனுலங்கொழுந்தோளான்.

(இ-ள) விட்டதூதுவர்-அனுப்பப்பட்டதூதர்கள்—உரைத்தசொல்-சொல்லியசொற்களை—கேட்டலும்- கேட்டமாத்திரத்தில்—விரிந்து-மலர்ந்து—மட்டலாம்-தேனொழுகுகின்ற—தொடை- மாலையையணிந்த—மார்பினன்-மார்பையுடையநளன்—மா - பெரிய—நகர் - பட்டினத்தில்—எய்தி-அடைந்து—கட்டு-கட்டப்பட்ட—வார்- நீண்ட—கழல்-வீரக்கழலையுடைய—புட்கர-புட்கரனே—கவறு-சூதை — நாமாடற்கு-நாமாடுவதற்கு—ஒட்டம்யாதென-பந்தயம்யாதென்றுகேட்க — உலங்கொழுந்தோளான்-திரள்கல்லையொத்ததோள்களையுடையவரசன் — உ-



ரைத்தனன்-சொன்னான்—எ-று. (கருத்து) நளன் பட்டினத்தில்வந்துபுட்கரனே சூதாடுதற்குப்பந்தயம் யாதெனச்சொன்னான்-எ-ம். (௫)

வயிரவாட்படைமன்னவர் மன்னநீதோற்பின்
முயலிலாமதிபூத்திடு முழுநெறிக்குவளை
யயாநீண்டகட்டேவியை யளித்தியான்றோற்பி
னுயிரிேனாடுநின் னுலகெலாந் தருவனென் றுரைத்தான்.

(இ-ள்) வயிரம் - கூர்மைபொருந்திய—வாட்படை - வாளாயுதத்தையுடைய—மன்னவர்மன்ன -அரசர்க்கரசனாகிய நளமகாராசனே—நீதோற்பின்-நீதோற்றால் - முயலிலா - முயற்கறையொழிந்த—மதி-சந்திரனிடத்தில்—பூத்திடும் - புஷ்பித்த—முழுநெறி - முழுநெறியையுடைய—குவளை-நீலோற்பலங்கள் — அயா - சோர்வையடைய—நீண்ட கண் - நீண்டகண்களையுடைய —தேவியை - தமயந்தியை—அளித்தி-கொடு—யான்தோற்பின் - நான்தோற்றால்—உயிரினோடு - என்னுயிரோடு—நின்னுலகெலாம் - உனதுஉலகமுழுவதையும்—தருவனென்று-கொடுப்பேனென்று—உரைத்தான்-சொன்னான்—எ-று (கருத்து) புட்கரன்நளனேநீதோற்றால்உன் பெண்சாதியைக்கொடு நான்தோற்றால்என்னுயிரோடு உன்னுலகமெல்லாங்கொடுப்பேனென்றான்-எ-ம் (௬)

அன்னவாறியைந்தாடலும்புட்கரன்றோற்ப
மன்னமுன்னநீவென்றதும்கொடுங்கலியுத்தா
லின்னதாருயிர்நேர்ந்தனை மெய்பிழைத்திலை
னென்னகாக்கினிதேகெனப்பணித்தனன்றோன்றல்.

(இ-ள்) அன்னவாறு - அத்தன்மையாகவே—இயைந்து - சம்மதித்து—ஆடலும் - ஆடுமளவில்—புட்கரன் - புட்கராஜன்—தோற்ப-தோற்க—மன்ன-புட்கராசனே—முன்னம்-முன்பு—நீ-நீ—வென்றதும்-செயித்ததும்—கொடும்-கொடிய—கலி[illegible]த்தால் - கலியினதுவசத்தினல் (அன்றிவேறல்ல)எமபிழைபாதலினல் - த[illegible]பிழைகளினலே—இன்னது-உன்னுடைய—ஆர் - நிறைந்த—உயிர்-உயிரை—நேர்ந்தனன்-கொடுத்தேன்—தொன்னகர்க்கு - பழமையாகியஉனதுநகரத்திற்கு—இனிது - இனிதாக—ஏகென - போவென்று—தோன்றல் - நளன்—பணித்தனன் - ஆக்ஞாபித்தான்—எ-று (கருத்து)புட்கரன்தோற்கநளமகாராசன்வென்றான் நளனுத்தரவால் புட்கரன் தன்னூருக்குப் போனான்-எ-ம். (௭)

பணிதலைக்கொடுபுட்கரன்போதலும்பன்னூற்
கணிதர்சொற்றநல்லோரையிற்கடிநகரெய்தி
யணிபொலன்கழன்மன்னவர் [illegible]ர்ப்பர்கோனளித்த
மணிசெய்மேகலைவாணுதற்கொற்றனை விடுத்தான்.

(இ-ள்)பணி-அந்தவாக்கினை—தலைக்கொடு - சிரசின்மீதுகொண்டு,புட்கரன்-புட்கராசன்,போதலும் [illegible] போயினபின்பு,பன்னூல் அநேகசாஸ்திரங்களையுணர்ந்த,கணிதர் - சோதிடர்களாலே,சொற்ற,சொல்லப்பட்ட, நல்லோரையில்-நல்லலக்கினத்தில், கடி - காவலையுடைய—நகர் - பட்டினத்தை—எய்தி - அடைந்து—அணி - அணியப்பட்ட—

பொலன்-பொன்னாற்செய்யப்பட்ட—கழல்-வீரக்கழலையுடைய—மன்னவன் - நளன்—விதர்ப்பர்கோனளித்த - வீமராசன்பெற்ற—மணிசெப்-இரத்தினங்களாற்செய்யப்பட்ட—மேகலை-மேகலாபரணத்தையுடைய—வாணுதற்கு - ஒளிபொருந்தியநெற்றியையுடையதமயந்திக்கு—ஒற்றரை - வேவுகாரரை—விடுத்தான் - அனுப்பினான்—எ-று. (கருத்து)நளன்தன்னையடைந்ததமயந்திக்குத்தூதைவிட்டான்-எ-ம.

ஒற்றரேகியவ்விதர்ப்பர்கோன் றன்னுழையுரைப்ப
வற்றமில்லெலாவரும்பொருளவர்க்களித்துக்
கற்றைவார்குழன்மதர்நெடுங்கண்ணியைக்கணிதர்
சொற்றவோரையில்விடுத்தனன்றேன்றன்மாநகரில்.

(இ-ள்)ஒற்றர் - வேவுகாரர்—ஏகி - போய்—அவ்விதர்ப்பர்கோன் றன்னுழை - அவ்வீமராசனிடத்தில்—உரைப்ப - சொல்ல—அற்றமில்லெலா - மிகுதியான—அரும் - அரிய—பொருள் - பொருளை—ஆங்கு - அவ்விடத்தில்—அவர்க்கு - அவர்களுக்கு—அளித்து - கொடுத்து—கற்றை-கூட்டமாகிய—வார் - நீண்ட—குழல் - கூந்தலையும்—மதர்-மதர்த்த—நெடும் -நெடிய—கண்ணியை - கண்களையுமுடையதமயந்தியை—கணிதர் - சோதிடர்கள் — சொற்ற - சொல்லிய—ஓரையில் - சமயத்தில்—தோன்றல் -வீமராசன்—மா - பெரிய—நகரில் - நளனதுபட்டணத்தில்—விடுத்தனன் - விட்டான்—எ-று (கருத்து)வீமராசன்தன்மகளை நளமகாராசன்மாளிகைக்குஅனுப்பினான் - என்பதாம். (கூ)

வெள்ளத்தானையுமகளிருஞ்சூழ்வரவேந்த
னுள்ளத்தாமரைமலருறையோட்ரிக்கண்ணாள்
வள்ளத்தாமரைப்பொருட்டின்மேல்வண்டினம்படுக்கு
மள்ளறீம்புனற்கழனிசூழ்நிடதநாடடைந்தாள்.

(இ-ள்)வெள்ளத்தானையும் - பிரவாகம்போன்ற சேனையும்—மகளிரும் - மாதர்களும்—சூழ்வர - சூழ்ந்துவரும்படி—வேந்தன் - நளமகாராசனது—உள்ளம் - மனமாகிய—தாமரைமலர் - தாமரைப்பூவில், உறை-வாசஞ்செய்கின்ற — ஓட்ரி - செவ்வரிபரந்த—கண்ணாள் - கண்களையுடைய தமயந்தியானவள்—வள்ளம் - கிண்ணம்போன்ற—தாமரைப்பொருட்டின்மேல் - தாமரைமலரின்மேல்—வண்டினங்கள்—கண்படுக்கும்-நித்திரைசெய்யாநின்ற, அள்ளல் சேற்றையும்—தீம்புனல் -மதுரமானசலத்தையுமுடைய—கழனி-வயல்களால்—சூழ் - சூழப்பட்ட—நிடதம் - நிடதத்தை—அடைந்தாள் — சேர்ந்தாள்—எ-று.(கருத்து)தமயந்திநிடதநாட்டைச்சேர்ந்தாள் எ-ம (௰)

நவ்விநோக்கியர்சூழ்வரநகைநிலாவெறிக்குங்
கொவ்வைவாய்மலர்ப்பூங்குழற்குவிமுலைமடந்தை
தெய்வநாண்மலர்த்தவிசிழிதிருமகளென்ன
வெவ்வமில்பெருமணிச்சிவிகையினிழிந்தாள்.

(இ-ள்)நவ்வி- மான்போன்ற—நோக்கியர்- பார்வையையுடைய மங்கையர்,சூழ்வர-சூழ்ந்துவர—நகை -பற்கள்—நிலா- நிலவைப்போல—



எறிக்கும்-பிரகாசிக்கின்ற—கொவ்வை - கொவ்வைப்பழம்போன்ற—வாய் - அதரத்தையும்—மலர்-புஷ்பத்தையுடைய—பூம் - அழகிய—குழல் - கூந்தலையும்—குவி -குவிந்த—முலை-ஸ்தனங்களையுமுடைய—மடந்தை- தமயந்தியானவள், தெய்வம்-தெய்வத்தன்மைபொருந்திய—நாள் - அன்றலர்ந்த, மலர்த்தவிசு-புஷ்பாசனத்தினின்றும்—இழி - இழிகின்ற—திருமகளென்ன - இலக்குமிபோல்—எவ்வமில்லது-குற்றமில்லாததாகிய,பெரு—ஏரி-பிரகாசிக்கின்ற—மணிச்சிவிகையின்று - இரத்தினச்சிவிகையினின்றும்—இழிந்தாள்-இறங்கினாள்-எ-று. (கருத்து) தமயந்தி இரத்தினச்சிவிகையிலிருந்திழிந்தாள்-எ-ம. (௰க)

பரிதிவானவனெதிர்தலும்பனியிதழ்விரிந்த
முருகுலாநறுந்தாமரைபோன்முகமலரா
வருகுநுண்ணிடையின்னுயிர்க்காதலனடிபொற்
றிருவநாண்மலர்ச்சேவடிசென்னியிற்றொழுதாள்

(இ-ள்) பரிதிவானவன் - சூரியனானவன்—எதிர்தலும் - தோன்றினவளவில், பனியிதழ்-குளிர்ச்சிபொருந்தியவிதழ்கள்—விரிந்த- மலர்ந்த—முருகுலாம் - வாசனைவீசுகின்ற—நறும்-நல்ல, தாமரைபோல்-தாமரைமலர்போல, முகமலரா-முகமலர்ச்சியடைந்து, அருகு - சிறுத்த—நுண்ணிடை - நுட்பமான இடையையுடையதமயந்தி, இன்னுயிர்-இனியவுயிர்போன்ற — காதலன்-கணவனாகியநளனது—அடி-அழகிய—பொன்-பொன்போன்ற, திருவ-செல்வத்தையுடைய, நாள்-புதிய—மலர்ச்சேவடி-தாமரைமலர்போன்றபாதங்களை—சென்னியில் - சிரசினால், தொழுதாள்-வணங்கினாள்—எ-று.(கருத்து)தமயந்தி நளன் பாதத்தைவணங்கினாள். (௰உ)

தொழுதமங்கையைச்சுடர்மணித்தடக்கையாலெடுத்துத்
தொழுதிவண்டினங்கட்டுணுந்தெரியனுழ்மார்பி
னுழுதவெம்முலைக்குங்குமச்சேற்றிடைவொளிப்பத்
தழுவினனவட்டேம்பியவின்னுயிர்தளிர்த்தாள்.

(இ-ள்) தொழுத-வணங்கிய—மங்கையை- தமயந்தியை—சுடர்மணி - பிரகாசம்பொருந்திய ஆபரணத்தையுடைய—தடம் - நீண்ட—கையால் - கரங்களால்—எடுத்து - எடுத்து—தொழுதி-கோதி—வண்டினம்-வண்டுக்கூட்டங்கள்—கட்டுணும் - கொள்ளைகொள்கின்ற—தெரியல்-மாலையானது—தாழ்-தொங்குகின்ற—மார்பின் - மார்பினிடத்திலே—உழுது-உழுது—வெம்- விருப்பத்தைத்தருகின்ற—முலை - ஸ்தனங்கள்—குங்குமச்சேற்றிடை - குங்குமச்சேற்றில்— ஒளிப்ப-ஒளிக்கும்படி—தழுவினன் - ஆலிங்கனஞ்செய்தான்—அவள் அத்தமயந்தி—தேம்பிய—மெலிந்த—இன்னுயிர்-இனியவுயிர்—தளிர்த்தாள் - தளிர்த்தாள்—எ-று.(கருத்து)நளன் தமயந்தியைக்கையாலெடுத்து மார்பிலணைத்துத்தழுவினான்-எ-ம. (௰௩)

திருந்துமாமணிச்செய்குன்றுந்தெளிபுனற்றடமும்
விருந்துவேனிலாற்கெதிரியவிளமலர்க்காவும்

முருந்துவாணகைமுகிழ்முலைமடந்தையோடாடிப்
பொருந்தவிண்ணிடைப்போகதுண்டுவந்தனர்போன்றான்.

(இ-ள்) திருந்து-திருத்தமாகிய—மா-பெரிய—மணி-இரத்தினங்கள்பதித்த—செய்குன்றும் - விளையாட்டுமலைகளிடத்தும்—தெளி- தெளிந்தபுனல் - சலத்தையுடைய — தடமும் - வாவிகளிடத்தும்—விருந்து-விருந்தாக—வேனிலாற்கு-மன்மதனுக்கு—ஏ்திரிய - தோன்றிய—விரை-வாசனையையுடைய, மலர்-புஷ்பங்களையுடைய, காவும்-சோலைகளிடத்தும்—முருந்து - மயிலிறகினடியையொத்த,வாள்-ஒளிபொருந்திய—நகை - பற்களையும்—முகிழ்-கோங்கரும்பையொத்த—முலை-ஸ்தனங்களையுமுடைய—மடந்தையோடு-தமயந்தியுடனே—ஆடி - விளையாடி—பொருந்த-அமைய—விண்ணிடை - தெய்வலோகத்தில்—போகம்-இன்பத்தை—உண்டு-அனுபவித்து—உவந்தனர் - மகிழ்ந்தவர்களை—போன்றான்-ஒத்திருந்தான்—எ-று. (கருத்து) நளன்தமயந்தியோடுபுணர்ந்து இந்திரபோகமனுபவித்தவனைஒப்பானான்-எ-ம் (௰௪)

ஆழிசூழ்புவிமுழுதுமாழியொன்றுருட்டி
வாழிநல்லறம்புரிந்தருமகப்பலவாற்றிச்
சூழிமால்வரைப்பிடருறுசுவையொழித்தாறப்
பாழியம்புயத்துலகெல்லாம்பரித்தினிதிருந்தான்.

(இ-ள்)ஆழிசூழ் - சமுத்திரஞ்சூழ்ந்த—புவிமுழுவதும் - பூமிமுழுமையும்—ஆழியொன்று - ஏகச்சக்கரத்தை —உருட்டி-நடத்தி—நல்லறம்-நல்லதருமத்தை,புரிந்து-செய்து—அரும் - செய்தற்கரிய—மகம் பல-பலயாகங்களை—ஆற்றி-செய்து—சூழி - முகபடாமணிந்த - மால்-பெரிய—வரை - மலையையொத்தவெட்டுத்திக்கு யானைகளும் — பிடர்-பிடரியிற்றங்கிய—உறு-மிகுந்த—சுமை-பூமிபாரத்தை — ஒழித்து - நீக்கி—ஆற-இளைப்பாறும்படி—பாழி-வலிபொருந்திய—அம் - அழகிய—புயத்து-தோளிடத்தில்—உலகெலாம் - உலகமுழுவதையும்—பரித்து-தாங்கி — இனிது-இனிதாக—இருந்தான் - நளமகாராசனிருந்தான்— எ-று. வாழி-அசை. (கருத்து) நளச்சக்கிரவர்த்தி மகாராசன், நற்றருமங்களையும் யாகாதிதருமங்களையுஞ்செய்து, உலகமெல்லாம் ஒருகுடையிலாண்டு,இன்பமடைந்திருந்தான் என்பதாம். [நளமகாராசன்-தோன்றஎழுவாய்-இருந்தான்பயனிலை-சக்கரம்-அறம் - மகம் - சுமை எலாம்-இவைசெயப்படுபொருள்.] (௰௫)

# அரசாட்சிப்படலம்

முற்றுப்பெற்றது.

ஆக படலம்-உ௮ இ விருத்தம்-௲௭௨

# நைடதமூலமுமுரையும்

முற்றுப்பெற்றன.

116609
2341